V211,31'N5
N58.411
(12-04

[23rd July 1957

SRI M. JAGANNATHAN : சென்னையில் இருக்கிற ஷா வாலெஸ் மாவுமில், செஞ்சுரி மாவு மில், தென் இந்தியா மாவு மில் இந்த மூன்று மில்களிலும் ஏறக்குறைய 45 ஆயிரம் மூட்டை மைதா மாவு தயாரிக்கப்படுகிறது. ஆனால் சென்னையில் இருக்கிற பேக்கரிகளுக்கு 6,000 மூட்டை மைதா கூட கிடைப்பதில்லை. அதே சமயத்தில் கள்ளச் சந்தையில் ஒரு மூட்டை ரூ. 50-க்கு கிடைக்கிறது. இந்த விலைக் கட்டுப்பாடு வந்த பிறகு பேக்கரிகளுக்கு குறைந்த விலையில் போதிய அளவில் மைதா ட கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த நெருக்கடியை தீர் தற்கு தக்க நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு கூறியது போல் மில்களிலிருந்து மைதா மாவு சுலபமாகக் கிடைப்பதற்கும் குறைந்த விலைக்குக் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு ஆட்டா சொஜ்ஜி போன்றவைகளுக்கு பம்பாயிலிருந்து இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, is it not a fact that the Government of India have come forward to supply five thousand tons of flour to South India?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there should be no difficulty about the quantity that is required. Any amou-

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 20th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : முதலில் கேள்விகள், பதில்கள். இன்று மொத்தம் 20 கேள்விகள் இருக்கின்றன. ஆகையால் முக்கியமான கேள்விகளுக்குத் தான் உப கேள்விகள் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் ஸ்ரீ. கே. சட்டநாத கரையாளர் நோட்டீஸ் கொடுத்துள்ள கேள்வியாகிய 153-வது கேள்வியை எடுத்துக்கொள்ளலாம். ஸ்ரீ ஆதிமூலம் அந்தக் கேள்வியைப் போடுகிறார்.

### *Block Advisory Committee*

* 153 *Q.*—SRI D. S. AUTHIMOOLAM (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any non-official member is associated with the Block Advisory Committee;

(*b*) if so, to what extent;

(*c*) whether there is any proposal for giving non-officials greater measure of responsibility in the Planning and Development of the Community Development Scheme;

(*d*) if so, the details thereof; and

(*e*) whether this Government have received any advice to this effect from the Union Community Development Ministry?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) Four non-official members are appointed to serve as members of each National Extension Service Block Advisory Committee. The M.L.As. representing the area are also appointed to serve as members of such Committees. In respect of Community Development Blocks six non-officials including the M.L.A. or M.L.As. representing the area are appointed as non-official members.

(*c*) Yes. There is a proposal to appoint non-official as Chairman or Vice-Chairman of these Committees.

(*d*) The details are under consideration of Government.

(*e*) Yes.

SRI A. R. SUBBIAH MUDALIAR : எம். எல்.ஏக்களும், எம்.எல்.சி.க்களும் இந்தக் கமிட்டிகளில் 'நான் அபிஷியல்' மெம்பர்களாக நியமிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சட்டசபை கூடும்போது இந்த advisory கமிட்டிகளும் கூட்டப்படுகின்றன. ஆகவே, சட்டசபை கூடும் சமயத்தில்

A1 NS7 58-(15)



இந்த advisory கமிட்டிகளின் கூட்டங்களைப் போடக்கூடாது என்றும், அந்த சமயத்தில் வரக்கூடிய கமிட்டிகளின் கூட்டங்களை ஒத்திவைக்க வேண்டும் என்றும் சர்க்கார் ஏதாவது உத்தரவு அனுப்பியிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றி முன்பே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது கவனிக்கப்படும்.

SRI S. LAZAR : இதுபோன்ற குழுக்களில், ஐந்தாண்டுத் திட்டத்திலோ சமுதாய அபிவிருத்தித் திட்டத்திலோ நம்பிக்கையில்லாத கட்சிகளின் சார்பில் இருக்கும் அங்கத்தினர்களும் அங்கம் வகிப்பார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பிரதேசங்களில் உள்ள எம்.எல்.ஏ.க்களை கட்டாயம் அங்கத்தினர்களாக எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் திட்டத்தில் நம்பிக்கை இல்லாத எந்தக் கட்சியும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

SRI A. A. RASHEED : Sir, will the Hon. Minister introduce the Block Development Scheme in Tiruppattur taluk?

THE HON. SRI C. SUBRAMANIAM : This supplementary does not arise out of the main question.

MR. SPEAKER : There is no relation between the supplementary and the main question.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : நிர்மாண வேலைத் திட்டங்கள் நிறைவேற்றி வரும் தாலூகாக் காங்கிரஸ் கமிட்டிக் காரிய தரிசிகளும் இந்தக் கமிட்டிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : காங்கிரஸ் கமிட்டிக் காரிய தரிசிகள் என்பதற்காக யாரும் இந்தக் கமிட்டிகளில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். இந்த அபிவிருத்தித் திட்டங்களில் அக்கறை எடுத்துக்கொள்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைப் சேர்த்துக்கொள்வதற்கு விதிகளில் இடம் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : Sir, may I know on what basis the members are selected for the block advisory committees?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கு முன்பே பதில் சொன்னேன். அப்போது தமிழில் சொன்னேன். மறுபடியும் ஆங்கிலத்தில் பதில் சொல்ல வேண்டுமா என்று கனம் அங்கத்தினரைக் கேட்க விரும்புகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : சமுதாய அபிவிருத்தித் திட்டத்திற்கு எந்த அடிப்படையில் பிளாக்குகள் எடுக்கப்படுகின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கும் முன்பே பதில் சொன்னேன்.

61204

*Southern Regional Seminar of Key Village Officers*

MR. SPEAKER : Question No. 154. I find the hon. Member Sri K. N. Palaniswami Gounder is not in his seat.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I put the question.

MR. SPEAKER : The hon. Member must be alert. Otherwise I will pass on to the next question.



* 154 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri K. N. Palaniswami Gounder) : Will the Hon. the Minister for Home be pleased to state the expenditure incurred towards travelling allowances and other expenses in respect of officials who participated in the First Southern Regional Seminar of Key Village Officers organized by the Animal Husbandry Department of the Government of Madras held on the 18th, 19th and 20th May 1957 at Coimbatore?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : An expenditure of Rs. 1,175 was incurred on the travelling allowance of the officers of the Madras Animal Husbandry Department who attended the Seminar. The State Government also incurred a further expenditure of Rs. 1,371 in connection with the arrangements made for the conduct of the Seminar.

*Increase of prices on account of introduction of decimal coinage*

* 155 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is rise in the prices of articles on account of the introduction of decimal coinage and if so, what steps have been taken to check such rise in prices?

THE HON. SRI C. SUBRAMANIAM : There has been a slight increase in the prices of certain articles due to the tendency on the part of the merchants to put up the prices slightly when they are converted into decimal system by rounding off the actual price generally to the next higher naya paise. It is not possible to take any action to check this small rise in prices.

SRI S. PAKKIRISAMI PILLAI : தசாம்ச நாணயங்கள் வந்த பிறகு அரசாங்கத்தின் ஆதரவில் உள்ள ஸ்தாபனங்களிலெல்லாம், அந்த ஸ்தாபனத்தார் பல விவகாரங்களில் நயா பைசா பின்னங்களை முழு நாணயமாகத் திருத்திக்கொண்டு மதிப்பை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குச் சாதகமான விவகாரங்களில் அப்படித் திருத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்கப்படும்போது அவர்கள் அப்படி செய்துகொள்ளவில்லை; குறைவாகவே கொடுக்கிறார்கள்; உதாரணமாக 3 அணா பஞ்சப்படி கொடுக்கும் விஷயத்தில் குறைவான கணக்கையே எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் மற்ற விவகாரங்களில் எடுத்துக்கொள்ளும் நாணய மதிப்பைப் போலவே தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்கும்போதும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தார் கட்டளை இடுவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : I may refer the hon. Member to my colleague in charge of Industries who will certainly look into the matter.

SRI M. P. SUBRAMANIAM : இந்தமாதிரி ஒவ்வொரு சாதாரணப் பொருள்களின் விலையிலும் புதிய காசின் பின்னம் ஒரு காசாக மதிக்கப்பட்டு, அந்த அளவுப்படி பணம் பொருள்களை வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இதன் காரணமாக பல அத்தியாவசியமான பொருள்கள் விலை உயர்ந்திருக்கின்றன. இதன் விளைவாக வாழ்க்கைச் செலவுப் புள்ளி எவ்வளவு உயர்ந்திருக்கின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று திட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால், வாழ்க்கைச் செலவுப் புள்ளி இரண்டு சதவிகிதம் உயர்ந்திருக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that the prices of some magazines and newspapers have been raised?

THE HON. SRI C. SUBRAMANIAM : Of course they have increased the prices. But that does not cause us any concern. We are concerned really with the increase in price of articles which are absolutely essential to the community.

### *Mental Hospital, Madras*

* 156 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to relieve congestion in the Mental Hospital, Kilpauk, Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : In March last the Government have increased the bed-strength of the Mental Hospital, Madras, from 888 to 1800. An expenditure of Rs. 74,900 has been sanctioned towards certain additions and alterations to the buildings of the hospital.

Proposals for the opening of a Mental Hospital at Madurai, the establishment of a Mental Jail to accommodate separately criminal mental patients and for the transfer of civil and criminal mental patients belonging to the Andhra State to the Mental Hospitals in Andhra Pradesh are also under the consideration of Government.

SRI M. S. SELVARAJAN : குற்றாலத்தில் ஒரு தனியார் "மெண்டல் ஹாஸ்பிடல்" இருக்கிறது. இயற்கையாகவே மனோ வியாதியைக் குணப்படுத்தக்கூடிய சூழ்நிலை குற்றாலத்தில் இருப்பதால், குற்றாலத்திலுள்ள அந்த ஆஸ்பத்திரியை தானே எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது, தென்காசி தாலுகாவில் ஒரு இடத்தில் "க்ரிமினல் மெண்டல் பேஷண்ட்ஸ்"-க்காக ஒரு ஆஸ்பத்திரியை அரசாங்கத்தார் ஏற்படுத்தப்போகிறார்கள். அதை வேண்டுமென்று எடுத்துக்கொள்ள யாராவது முன்வந்தால் பிறகு இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

SRI S. B. ADITYAN : ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளிகளும் கேரள ராஜ்யத்தைச் சேர்ந்த நோயாளிகளும் இப்போது சென்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள் அல்லவா? அந்த நோயாளிகளை அந்த ராஜ்யங்களுக்கு மாற்றுவதுபற்றி அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த ராஜ்யங்களுக்கு அவர்களை அனுப்பி, இங்குள்ள நெருக்கடியை அரசாங்கம் குறைக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்விக்கு பதிலளிக்கையில் கடைசியில் இந்த உப கேள்விக்கான பதிலையும் சொன்னேன். இங்குள்ள ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த நோயாளிகள் சுமார் 102 பேர்கள். அவர்களை ஆந்திர ராஜ்ய ஆஸ்பத்திரியில் எடுத்துக்கொள்வதற்கு அந்த அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நோயாளிகளை அங்கே அனுப்புவது அமலுக்கு வர வேண்டும்.





SRI V. K. KOTHANDARAMAN : மெண்டல் ஹாஸ்பிடலில் உள்ள நோயாளிகள் அனேகமாக சுய அறிவு இல்லாதவர்கள். அவர்கள் தவறு செய்வது சகஜம். அப்படிப்பட்டவர்களை ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அரசாங்கம் இதைக் கவனிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் இன்றைன்றும் கேள்விபட்டேன். அதாவது, சுய அறிவு இல்லாதவர்கள் ஆஸ்பத்திரி சிப்பந்திகளையும் கொடுமைப்படுத்துகிறார்களாம்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த மூளைக் கோளாறினால் அவஸ்தைப்படும் சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கு தனியாக அந்த ஆஸ்பத்திரியில் இடம் ஒதுக்கியிருக்கிறார்களா ? அப்படி இருந்தால் அவர்களை மற்ற பெரியவர்களிடம் இருந்து பிரித்து தனியாக வைத்து அனுதாபத்தோடு சிகிச்சை செய்ய என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்குத் தனியாக "சில்ட்ரன் ஆஸ்பத்திரி" என்று கிடையாது. கூடியவரையில் அவர்களைத் தனியாக வைத்துத்தான் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN: மூளைக் கோளாறு படைத்தவர்களுக்கான ஆஸ்பத்திரியில் அவர்கள் கூட்டமாக வாழும் முறையில் வைத்து சிகிச்சை அளிக்கிற காரணத்தால் மூளைக் கோளாறு குணமாவதற்குப் பதிலாக அதிகமாகவே ஆகும் நிலைமை விளைவதால் அவர்களுக்குத் தனித்தனியாக வாழ வழி செய்து கொடுத்து அநுதாபத்தோடு, மனோதத்துவ அடிப்படையில் சிகிச்சை அளிக்க வசதி செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடியவரையில் புதுப்புது முறைகளைக் கையாண்டுதான் வருகிறார்கள். இப்போது எலெக்ட்ரிக் ஷாக் என்று இருக்கிறது. சைகியாட்ரிக் ட்ரீட்மெண்டு வேறு அதிகமாக வற்புறுத்தப்படுகிறது. முன்பு மூளைக் கோளாறுக்கு கொடூரமாக சிகிச்சை அளிக்கும் முறை இருந்திருக்கலாம். இப்போது எவ்வளவு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்படவேண்டுமோ அவ்வளவு நல்லமுறையில் அளிக்கப்படுகிறது.

SRI A. GOVINDASAMY : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரையில் வேறு ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியைத் திறப்பதாக ஒரு திட்டம் போட்டார்களே ? அது நடைமுறைக்கு வருகிறதா அல்லது கைவிட்டுவிட்டார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைக் கைவிட வேண்டிய அவசியம் இல்லை. 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இடமும் குறித்திருக்கிறார்கள். கூடியசீக்கிரம் வேலை துவங்கும்.

SRI M. P. SUBRAMANIAM : இந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வந்து சேருகின்ற நோயாளிகளில் யாரும் வெளியில் பைத்தியம் தெளிந்து போவது இல்லை என்று நான் கேள்விப்படுகிறேன். காரணம் சாதாரண நோயாளிகளைப்போல அவர்களுக்குச் சிகிச்சை அளிக்காமல் ஆடுமாடுகளைப் போல அடித்து கொடுமைபடுத்தி சிகிச்சை அளிக்கப்படுவதால் பைத்தியம் யாருக்குமே தெளிவது இல்லை. பைத்தியம் தெளிந்து யாரும் வெளியே போவது இல்லை என்பதாக அறிகிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட நோயாளிகள் எத்தனை, அதில் பைத்தியம் தெளிந்து வெளியே போயிருக்கிறவர்கள் எத்தனை என்கிற புள்ளிவிவரத்தைக் கொடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பைத்தியம் தெளிந்தும் சிலர் போகிறார்கள். தெளியாமலும் போகக்கூடும். ஐரோப்பியர்கள், அதுவும் ராணுவம் போன்றவைகளில் உயர்ந்த உத்தியோகம் வகிப்பவர்களும் இருக்கிறார்கள். கடந்த மூன்று வருஷப் புள்ளிவிவரம் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால்தான் பதில் சொல்லக்கூடும்.

[20th July 1957

*Paper mill*

*157 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given on 24th October 1956 to a supplementary question under question No. 338 whether the proposal to start a paper mill in the State had materialised?

The Hon. Sri R. VENKATARAMAN: Yes, Sir. A private industrialist has been granted a licence to start a paper mill in the Ambasamudram taluk of Tirunelveli district. An application from another concern for licence to start a paper mill at Mettur Dam is under the consideration of the Central Government.

Sri K. SATTANATHA KARAYALAR: இந்த ப்ரைவேட் ஏஜென்ஸி ஆர். வி. கன்சர்ன் அல்லவா என்று சொல்லமுடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: ஆர். வி. கன்சர்ன் என்றவுடன் என்னுடைய கன்சர்ன் என்று கேட்கிறார் என நினைத்துவிட்டேன் (சிரிப்பு) எனக்கு இல்லை. மேட்டூர் இண்டஸ்டிரியல் பேப்பர் தொழிற்சாலை, மேட்டூர் கெமிகல் ஸ்தாபனத்தாருக்கு லைசென்சு கொடுக்கும்படியாகச் சர்க்கார் சிபார்சு செய்திருக்கிறது.

Sri A. GOVINDASAMY: பேப்பர் உற்பத்திக்கு மூங்கில் அதிக அவசியமாதலால் கள்ளக்குறிச்சியில் மூங்கில் மிகுதியாக விளைகிறது. அங்கே ஒரு பேப்பர் ஆலையை ஆரம்பிக்க முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: நமது ராஜ்யத்தில் பேப்பர் மில்களை எந்த எந்த இடத்தில் ஆரம்பிக்கலாம் என்பதற்காக ஜெர்மன் நிபுணர்களும், இட்டாலியன் நிபுணர்களும் இங்கே வந்து பரிசீலனை செய்தார்கள். 1956-ம் வருஷம் மே மாதத்தில் ஊட்டியில் ஒரு மகாநாடு நடந்தது. அந்த மகாநாட்டில் நம்முடைய ராஜ்யத்தில் மூன்று இடங்களில் பேப்பர் மில் ஆரம்பிக்க முடியும் என்று தீர்மானித்தார்கள். அதில் கள்ளக்குறிச்சி ஒன்று இல்லை.

Sri S. B. ADITYAN: அம்பாசமுத்திரம் தாலுக்காவில் பேப்பர் மில் ஆரம்பிக்க லைசென்சு கொடுத்திருப்பதாக மந்திரியவர்கள் தெரிவித்தார்கள். கடந்த 10 ஆண்டுகளாக இப்படிப் பல லைசென்சுகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தொழிற்சாலை எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே உடனே வேலையைத் துவக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வற்புறுத்துமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: இண்டஸ்டிரீஸ் டெவலெப்மெண்ட் அண்டு ரெகுலேஷன் ஆக்ட் பிரகாரம் லைசன்சு வழங்கப்பட்டு 6 மாதத்திற்குள் பூர்வாங்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும். 18 மாதங்களுக்குள் மெஷினரி முதலியவைகள் வாங்கப்பட்டாகவேண்டும். இப்போது லைசென்சு வழங்கப்பட்டவர் அம்மாதிரி நடந்து கொள்ளவில்லை.

Sri K. S. ARDHANAREESWARA GOUNDER: மேட்டூரில் ஆரம்பிக்கப்போகிற காகிதத் தொழிற்சாலையை சர்க்கார் எடுத்து நடத்த முன்வருவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN: ந்யூஸ்ப்ரிண்டு பேப்பர் உற்பத்தியை சர்க்கார் தரப்பில் வைத்துக்கொண்டு எழுதுகின்ற இதர பேப்பர்களை தனியார் துறைக்கு விடுவது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.



20th July 1957]

Sri A. VEDARATHNAM PILLAI: கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது ஊட்டியில் நடந்த மகாநாட்டில் நம்முடைய ராஜ்யத்தில் மூன்று இடங்களில் பேப்பர் மில்களை ஆரம்பிப்பதாக முடிவு செய்திருக்கிறார்கள் என்று சொன்னார். அந்த மூன்று இடங்கள் எவை எவை ?

The Hon. Sri R. VENKATARAMAN: பாபநாசம் ஒன்று, மேட்டூர் ஒன்று, பாவானி சாகர் ஒன்று. இந்த இடங்களில் வசதி இருக்கிறதென்று சொல்லும்போதே அங்கே யாரும் ஆரம்பிக்க முன் வரவில்லை என்றால் வசதி இல்லாத இடங்களில் பேப்பர் மில்களை ஆரம்பிக்க யார் வருவார்கள் ?

Sri V. K. KOTHANDARAMAN: சர்க்காரால் ஆரம்பிக்கப்படும் பேப்பர் மில்களில் கிளேஸ் பிரிண்டு உற்பத்தி செய்யப்போவதாகத் தெரிகிறது. நமது நாட்டுக்கு மிக அத்தியாவசியமான பேப்பர் நியூஸ் பிரிண்டுதான். கரும்புச் சக்கையைக்கொண்டு நியூஸ் ப்ரிண்டு உற்பத்தி செய்யமுடியும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆகவே கரும்புச் சக்கையைக் கொண்டு நியூஸ் ப்ரிண்டு உற்பத்தி செய்ய சர்க்கார் முன் வருமா?

The Hon. Sri R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. சர்க்கார் நியூஸ் பிரிண்டு தான் உற்பத்தி செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். தனியார் கருத்துக்குத்தான் கிளேஸ் ப்ரிண்டு முதலியவைகள் உற்பத்தி செய்ய அனுமதி கொடுக்கப்படுகிறது.* [யூகலிப்டஸ், ஆஸ்திரேலிய சவுக்கு (wattle), ஈடா நாணல் (eta reed), மூங்கில் போன்ற கச்சாப் பொருள்களின் மாதிரிப் பொருள்கள்தான் பரிசோதனைக்காக இத்தாலிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இப்பரிசோதனையின் விளைவுபற்றிய அறிக்கை இத்தாலியிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.] அவர்களுடைய ரிப்போர்ட் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

Sri S. B. ADITYAN: கரும்புச் சக்கையில் இருந்து தயாரிக்கப்பட்ட நியூஸ் பிரிண்டு பேப்பர் இப்போது பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் ஆந்திராவில் அந்தக் கட்டத்தைத் தாண்டி இப்பொழுது கரும்புச் சக்கையில் இருந்து பேப்பர் உற்பத்தி செய்ய தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறதென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே இங்கு இன்னும் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லிக்கொண்டிராமல் சர்க்கரை ஆலைகள் அநேகம் அதிகமாக இருக்கக்கூடிய நம்முடைய ராஜியத்தில் அந்த ஆலைகளையொட்டி நியூஸ் பிரிண்ட் பேப்பர் மில்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: நம்முடைய ராஜ்யத்தில் எவ்வளவோ சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளவில்லை, மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. நான் சொல்வது எல்லாம் மூங்கில், பரங்கிப்பட்டை, வாட்டில் போன்றவைகளில் இருந்து நல்ல அருமையான நியூஸ் பிரிண்டு செய்யமுடியும் என்பதாகச் சொன்னார்கள். அதுதான் இட்டாலிக்கு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றேன்.

Sri M. S. SELVARAJAN: அம்பாசமுத்திரம் தாலுகாவில் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் பேப்பர் மில்லுக்கு பக்கத்தில் மணிமுத்தாறு பகுதியில் இருக்கும் கட்டிடங்களை உபயோகப்படுத்திக்கொள்வதற்கு அந்த ப்ரைவேட் கம்பெனியாரோடு பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: அம்பாசமுத்திர மில் சம்பந்தமாக இன்னமும் பூர்வாங்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னேன்.

---

*The original answer was as follows: "சர்க்கார் இப்பொழுது பரீட்சார்த்தமாகத் தயாரித்துள்ள நியூஸ் பிரிண்டு சாம்பிளாக இட்டாலிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது." This was later corrected as indicated in the portion asterisked by the Hon. Minister for Industries—vide proceedings, dated 6th November 1957.

[20th July 1957

SRI S. NAGARAJA MONIAGAR : சர்க்கார் நியூஸ் பிரிண்டு செய்வதற்கு ஆரம்பிக்கப்போகும் தொழிற்சாலை எந்த இடங்களில் அமையும் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பவானி சாகர், நீலகிரி ஏரியாவில் அமையும்.

SRI M. P. SUBRAMANIAM : சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணையின் பக்கத்தில் நியூஸ் பிரிண்டு தயாரிப்பதற்கு தனியார் ஒருவருக்கு லைசென்சு வழங்கப்படுவது பரிசீலனையிலிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு அரசாங்கமே நடத்தபோவதாகச் சொன்னார்கள். இப்போது தனியாருக்கு கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து அரசாங்கமே நடத்த ஏற்பாடு செய்யுமா ? தனியாருக்காவது இந்த ஆண்டு துவங்கும் வகையில் லைசென்ஸ் உடனே கொடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் பதில் சொன்னதில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டுவிட்டதோ என்னவோ தெரியாது. சர்க்கார் நடத்துவதாக மேட்டூரில் எந்தவிதமான திட்டமும் இல்லை. எழுதும் பேப்பர்தான் தனியாருக்கு ஒதுக்கப்படுகிறது. நியூஸ் பிரிண்டை சர்க்காரே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

SRI D. S. AUTHIMOOLAM : அம்பாசமுத்திரம் பகுதியில், பாபநாசத்தில் ஆரம்பிக்கப் போகும் பேப்பர் மில்லுக்கு அப்ளிகேஷன் போட்ட தனிப்பட்டவரின் பெயர் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தியாகராஜ செட்டியார்தான் அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்.

### *Railway line from Coimbatore to Chamrajnagar*

* 158 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have any information as to when the re-survey for the construction of a railway line from Coimbatore to Chamrajnagar (via) Satyamangalam will take place?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Chamrajnagar-Satyamangalam - Mettupalayam-Coimbatore Railway Project has been included by the Government of India in the list of new surveys proposed to be undertaken by them during 1957–58.

SRI P. G. MANICKAM : சார், இந்த இரண்டு ராஜ்யங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தக்கூடிய ரெயில்வே திட்டத்தை 1958-வது வருஷத்திலாவது நிறைவேற்றுவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி சில நல்ல ரெயில்வே திட்டங்கள் நமக்கு வேண்டியிருக்கின்றன. மத்திய அரசாங்கத்திற்கு பொருள் வசதி கிடைப்பது அரிதாக இருக்கிறது. இருந்தாலும் கூடிய வரை பூர்த்தி செய்கின்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

SRI N. S. RAMALINGAM : தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை ரெயில்வே லைன் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை ரெயில்வே லைனை அவ்வளவு அவசியமாக மத்திய அரசாங்கம் கருதவில்லை. அங்கே நல்ல ரோடு இருக்கிறது. ஆகையால் இந்த ரெயில்வே லைனைப் போடும் விஷயம் வெகுசீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.



20th July 1957]

SRI P. G. KARUTHIRUMAN : சபாநாயகர் அவர்களே, சாமராஜநகர் சத்தியமங்கலம் இடையே உள்ள பகுதி மலைபிரதேசமானது. தாளவாடி பிர்காவிலே மிகவும் பிற்போக்கான மக்கள் இருக்கிறார்கள். அங்கு போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மத்திய சர்க்கார், மிகவும் பிற்போக்கான பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சொல்வதினாலும், இந்த பிற்போக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்பதனாலும், உடனடியாக இந்த ரெயில்வே லைனை எடுத்து வேலை ஆரம்பிக்கவேண்டும் என்று நமது சர்க்கார் கண்டிப்பாக, குறிப்பாக மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புதிய ரெயில்வே லைனை எடுத்துக் கொள்வதற்கு பூர்வாங்கமாக அதை எவ்வாறு அமைப்பது, எத்தகைய பலன் கிடைக்கும் என்று சர்வே செய்ய வேண்டும். இந்த லைனைப் பொறுத்த வரை சர்வே செய்வது என்று முடிவு செய்திருக்கின்றனர். இதை விட அதிகமாக இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI M. D. RAMASAMI : விருதுநகர் - மானாமதுரை ரெயில்வே லைன் சர்வே செய்வதற்கு இந்த வருஷத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM ; அதுவும் முக்கியமான ஒரு லைன். எடுத்துக்கொள்ளவேண்டும், என்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கின்றோம் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்வதற்கில்லை.

SRI A. VEDARATHNAM PILLAI : நம்முடைய ராஜ்யத்தில் இன்னும் வேறு எந்த எந்த லைன்களை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது, எந்த எந்த லைன்களை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நமது அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது என்பதை அறிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த எந்த லைன்களை எடுத்து நடத்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி தனியாக ஒரு கேள்வி போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

17 லைன்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது. முக்கியமாக 6 லைன்களை அவசரமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சமீபத்தில் வற்புறுத்தியிருக்கிறது. எந்த லைனை மத்திய அரசாங்கம் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளும் என்று சொல்வதற்கில்லை. பொருள் வசதி அதிகம் கிடைத்தால் ஏதாவது சிலவற்றை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று தெரிகிறது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் புதிய ரெயில்வே லைனை போடுகிறபோது ஒரு வட்டத்தில் தேவையை அறிந்து செய்கிறது என்பது ஓரளவு உண்மையானால், தென் நாட்டில் நம்முடைய சென்னை மாகாணத்தில் புதிய லைன்களை ஏற்று போடுவதற்குமிகவும் காலதாமதமாகிறது என்பதை சர்க்கார் கருதுகிறதா ? அப்படி காலதாமதம் ஏற்படும்போழுது இதர மாகாணங்களில் எத்தனை மைல் நீளம் ரெயில்வே லைன் போடப்படுகின்றதோ அத்தனை மைல் நீளம் நம் மாகாணத்திலும்போட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் வற்புறுத்திக் கேட்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் ராஜ்யத்தில் பல லைன்களைப் போடவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. சமீபத்தில் எல்லா ராஜ்ய முதல் அமைச்சர்களும் சேர்ந்து டில்லியில் நடந்த ஒரு மகா நாட்டில் ஒவ்வொரு ராஜ்யமும் அவரவர் இடங்களில் ரெயில்வே லைன் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். எந்த ராஜ்யத்திலும் புதிய ரெயில்வே லைனை இந்த ஆண்டில் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ளப்போவது இல்லை.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிவரை போக்கு வரத்து சாதனம் சரியாக இல்லாதபடியால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு பிரயோசனப்படும்படியாக திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி வரை ரெயில்வே லைன் போடுவதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றியும் அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, சென்னை கடற்கரைப் பகுதியிலே திருவொற்றியூரிலிருந்து தெற்கே மற்றப் பகுதிகளை இணைத்து மின்சார ரயில் போடுவதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி திட்டம் ஒன்றும் இல்லை

SRI P. S. K. LAKSIMPATHI RAJ : தென் இந்தியாவிலேயே, எழும்பூருக்கு அடுத்தபடி, பிரயாணிகள் அதிகமாக வந்து போகின்ற இடம் பழனி ஸ்டேஷன் ஆகும் எனவே பழனி திருப்பூர் ரெயில் லைன் அமைக்க சர்க்காருக்கு ஏதாவது குறி இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு போட்டால் நலம் தான். ஆனால் சமீபத்தில் அது போடப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

SRI S. RAMALINGA PADAYACHI : சார், அரியலூரிலிருந்து சேலத்திற்கு ரயில் இணைப்பு போட வேண்டும் என்று ஜில்லா போர்டு ஒரு தீர்மானம் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியது. அதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்கள் ஜில்லாவைப் பற்றி கேட்க வேண்டும் என்றால் தனிக் கேள்வியாகக் கேட்கலாம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் முக்கியமான இடங்களில் ரெயில் பாதை போடுவது அவசியம்தான். ஆனால் நான் முன்பு சொன்னபடி இவைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

a

*Cancer centres*

* 159 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of cancer centres existing at present in the State; and

(b) whether there is any proposal to open new cancer centres during 1957–58?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Two. The Barnard Institute of Radiology, Government General Hospital, Madras, in collaboration with the Government Hospital for Women and Children, Madras, forms one centre for treatment of cancer cases. The other is a private Cancer Institute at Adyar.

(b) None at present.

*Photo Film Manufacturing Factory*

* 160 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given on 10th

* Expunged on a motion adopted by the House—vide page 27 infra.





August 1956 to a supplementary question under question No. 24 whether the proposal to start a photo film manufacturing factory in the Nilgiris district has been finalised?

THE HON. SRI R. VENKATARAMAN : No decision has been taken by the Government of India so far on the proposal to establish a factory for the manufacture of raw photographic film in the Nilgiris district.

*Kodaikkadu Reserve Forests*

* 161 Q.—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have received any report from the Forest Officer Kodaikkadu, regarding unauthorized hunting in the Kodaikkadu Reserve Forests; and

(b) if so, the action taken on the report?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A few instances of poaching at night in the Kodaikkadu Forest Reserve which has been closed to shooting for three years have recently been reported by the District Forest Officer. Following this the Government sanctioned the proposal of the Chief Conservator of Forests to appoint four extra Forest Guards for Special Protection to prevent poaching and ensure protection of wild life in the reserve.

SRI A. A. RASHEED : What are the wild animals that are protected in these forests?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முக்கியமாக " பிள்ளரய் ", " பிளாக்பக் " மான்கள் ரகத்திலேயே ரொம்பவும் அபூர்வம். அதுவும் மறைந்து கொண்டே போகின்றது. அது முக்கியமாக பாதுகாக்கப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் கவலை.

SRI A. VEDARATHNAM PILLAI : இந்தக் காட்டில் ஏராளமாக இருந்த மான்கள் அனைத்தும் இம்மாதிரி திருட்டு வேட்டைக் காரர்களால் அழிக்கப்பட்டன. இன்னும் சில இருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்க இம் மாதிரி திருட்டு வேட்டைக்காரர்களுக்கு அளிக்கப்படும் துப்பாக்கி லைசென்ஸை ரத்து செய்து இந்த மிருகங்களை காப்பாற்ற முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி நான் முன்பே சொன்னேன். இந்த மான் ரகம் குறைந்துகொண்டு வருகிறது. இதைப் பாதுகாக்கவும், மேலும் வளர்க்கவும் வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகின்றது.

SRI P. G. KARUTHIRUMAN : இந்த மான்களின் மாமிசம் மிகவும் ருசியாக இருக்கும். மாமிச பக்ஷிணியாகிய மனிதர்களே இதை சுட்டுக் கொன்று விடுகிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக மான்களின் மாமிசம் ரொம்ப ருசியாக இருக்கும். கனம் அங்கத்தினர் அவர்கள் கூட இதை ருசி பார்த்திருப்பார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் போன்றவர்கள் இந்த " பிளாக் பக் " என்ற மான் வகையை கொன்றுவிடுகிறார்களோ என்று அஞ்சுகிறேன்.

[20th July 1957

*Milking of cows*

* 162 Q.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have issued any orders prohibiting the milking of cows in front of hotels and residential houses in the City; and

(b) if so, the reasons therefor?

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) No, Sir.

(b) Does not arise.

*South Indian Silk Mills, Gudiyatham*

* 163 Q.—Sri V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware of the closure of the South Indian Silk Mills, Gudiyatham; and

(b) whether there is any proposal to re-open and run the mills again?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) The South Indian Silk Mills, Limited, Gudiyatham, was closed on 1st October 1952.

(b) No, Sir.

Sri S. PAKKIRISAMI PILLAI: எந்தக் காரணத்திற்காக இந்த ஆலை மூடப்பட்டது ?

The Hon. Sri R. VENKATARAMAN: நஷ்டம் வந்த காரணத்திற்காக.

Sri V. K. KOTHANDARAMAN: இந்த மில் முதலாளிகளுக்கிடையே உள்ள தகராறு காரணமாக அது மூடப்பட்டது. அவர்கள் வெளியிட்ட 'பாலன்ஸ்ஷீட்டையும்' அவர்களிடையே ஏற்பட்ட தகராறின் காரணமாக வெளியிடப்பட்டிருக்கக்கூடிய ரிகார்டுகளையும் அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்து இந்தத் தகராறை தீர்த்து, மீண்டும் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: 1952-ம் வருஷத்திய கணக்குப்படி ரூ. 63,599 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது அந்த மில்லை நடத்தியதால். அப்படி நஷ்டம் வரக்கூடிய மில்லை எடுத்து நடத்துவது என்பது சாத்தியமில்லை.

Sri S. LAZAR: இப்பொழுது நமது நாட்டில் "ஆர்டிபிஷியல் ஸில்குக்கும், நைலான் ஸில்குக்கும்" தேவை அதிகமாக ஏற்பட்டிருப்பதால் இந்த ஸில்குக்களை உற்பத்தி செய்வதற்கான கொள்கை அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: Sir, a separate question may be put.

Sri M. P. SUBRAMANIAM: சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு அரசாங்கம் ஏதாவது நிதி உதவியாக கடன் கொடுத்திருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: I am afraid I must ask for notice.



20th July 1957]

Sri V. K. KOTHANDARAMAN: 1952-வது வருஷத்திய "பாலன்ஸ் ஷீட்டுப்படி" ரூ. 60,000 நஷ்டம் என்பது உண்மை. ஆனால் ரூ. 60,000 எப்படி நஷ்டம் ஏற்பட்டது என்பதை அவர்களே வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு முன்பு ஒவ்வொரு வருஷத்திலும் லாபம் கிடைத்திருக்கிறது. இந்தியாவிலேயே இது மிகச் சிறந்த மில், அருமையான ஸில்க் துணிகளை தயாரிக்கக்கூடிய மில் என்று அதற்கு கிடைத்திருக்கக்கூடிய "சர்டிபிகேட்" மூலமாக தெரிந்துகொண்டிருக்கிறேன். கொள்ளேகால் மில் மைசூர் ராஜ்யத்திற்கு போய்விட்ட காரணத்தினாலே, இந்த மில்லை சர்க்கார் எடுத்து நடத்துவதற்கு முன்வருவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN: அது தனியார் தொழில் நடத்தக்கூடிய துறை. சர்க்கார் அதை எடுத்து நடத்துவதற்கு ஆலோசனை இல்லை.

*Executive Officers under the Madras Hindu Religious and Charitable Endowments*

* 164 Q.—Sri T. T. DANIEL: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of persons that applied for the posts of Executive Officers under the Madras Hindu Religious and Charitable Endowments with reference to the advertisement made therefor in December 1955;

(b) the number of appointments made so far; and

(c) whether anybody has been appointed from the Kanyakumari district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) 770.

(b) 75.

(c) No.

Sri T. T. DANIEL: May I know whether there were applications from the Kanyakumari district and whether Government will be pleased to go into the desirability of taking some persons from that district preferably those belonging to the Harijan and Backward communities?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: There were applications from the Kanyakumari district. All these applications were received and considered when that district was part of Travancore-Cochin State. Therefore they were not considered for selection. But when appointment are to be made in the Kanyakumari district fresh applications will be called for. These people may apply again. Then they will be considered for appointment.

Sri A. VEDARATHNAM PILLAI: "எக்ஸிகியூடிவ் ஆபீசர்களை" வைத்து நிர்வகிப்பதற்கு போதிய வருமானம் இல்லாத ஆலயங்களிலும்கூட, இம்மாதிரி ஆபீசர்கள் நியமிக்கப்படவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறதா ? அதனால் கோவில் இதர செலவுகளுக்கு பணம் இல்லாமல் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறதா ? அது பற்றி அரசாங்கம் என்ன யோசனை செய்கிறார்கள் என்பதை தயவு செய்து அறிவிக்க முடியுமா ?

[20th July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிர்வாக அதிகாரிக்கு அவசியம் உண்டு என்று கருதப்படும் அவருடைய சம்பளத்தைக் கொடுக்கக் கூடிய சக்தி தேவஸ்தானத்திற்கு இருக்கிறதா என்று பரிசீலனை செய்த பிறகுதான், குறிப்பிட்ட "கிரேடிலே" அதிகாரியை நியமிக்கவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துகிறது.

SRI R. SRINIVASA IYER : Is there any proposal to recruit executive officers by direct recruitment ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM · That is exactly what I have said in reply to the main question. Applications were called for and about 75 were selected by direct recruitment.

SRI K. SATTANATHA KARAYALAR: இப்படி பொறுக்கி எடுக்கப்பட்ட "எக்ஸி கியூடிவ் ஆபீசர்களில்" யாருமே ஹரிஜனங்கள் எடுக்கப்படவில்லை என்று பொதுவாகத் தெரிகிறது. அது உண்மைதானா ? அப்படி எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், எத்தனை பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice Sir.

SRI A. VEDARATHNAM PILLAI : இந்த நிர்வாக அதிகாரிகளில் சிலர் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களாகவும், அதற்கு விரோதமான பிரசாரம் செய்கின்ற மனப்பான்மை படைத்தவர்களாயும் இருக்கிறார்களா? அப்படியிருந்தால் அவர்களை தவிர்ப்பதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா? அவர்களுக்கு ஏதாவது மத சம்பந்தமான அறிவு, தகுதி, படிப்பு இருக்க வேண்டுமென்று அரசாங்கம் ஒரு திட்டம் வகுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு தகுதியின்மை எப்பொழுது இருந்தாலும், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : தீண்டாமைக்கு ஆதிகாரணமாக இருக்கிற வேதபுராணங்களும், அதற்கு ஆதாரமாக இருக்கிற கடவுளும் இருக்கின்ற இடத்திலே தீண்டாதவர்கள் போகக்கூடாது என்ற ஒரு பரம்பரை பழக்கம் இருக்கும் காரணத்தினால், அதிகமான ஆதித்திராவிட "எக்ஸிகியூடிவ்" ஆபீசர்களையும் மேலும் அந்தக் கோவில்களில் மற்ற வேலைகள் செய்வதற்கும் அதிகமாக ஹரிஜனங்களையும் நியமிப்பதற்கும் சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹரிஜன சமூகத்திலிருந்து பலர் நிர்வாக அதிகாரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றனர். ஆனால் அவர்களை விசேஷமாக அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

SRI M. P. SUBRAMANIAM : கோவில்களுக்கு நியமிக்கப்படும் "எக்ஸிகியூட்டிவ்" ஆபீசர்களுக்கு கடவுள் பக்தி இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கு கோவில் நிர்வாகத்திற்கு வேண்டிய திறமை அவசியமா அல்லது பக்தி அவசியமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிர்வாகத் திறமையோடு கூட, கடவுள் பக்தியும் ஓரளவுக்கு வேண்டும். அதற்காக "செருப்பு போட்டுக் கொண்டு கடைசி வரையில் போவேன்" என்று ஒருவர் சொன்னால் அவர் நிர்வாக அதிகாரியாக இருப்பதற்கு லாயக்கு இல்லை.

SRI K. B. S. MANI : கடவுள் பக்தி உள்ளவர்களாக இருந்துகொண்டு, இது வரையில் கோவிலில் சேவை செய்துகொண்டிருந்தவர்கள், உண்மையான வேத புராணங்களை படித்து நல்ல தேர்ச்சி பெற்றவர்களில் பலர்



20th July 1957]

கோவில் சொத்துக்களை கொள்ளையடித்து அதற்காக தண்டனை பெற்றது அரசாங்கத்திற்கு ஞாபகம் இருக்கிறதா ? (சிரிப்பு.) ஆகையால் இத்தகைய ஆபிசர்களுக்கு அம்மாதிரி ஒரு குறிப்பிட்ட எண்ணம் இருக்கவேண்டும என்பதை வற்புறுத்தாமல், நேர்மையையும் திறமையையும் மட்டும் கவனித்து அவர்களிடம் அந்தப் பொருப்பை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இதுபற்றி முன்பே சொன்னேன். நிர்வாகத் திறமையும் வேண்டும், நேர்மையும் வேண்டும், பக்தியும் வேண்டும் இவைகளெல்லாம் இதற்கு வேண்டிய தகுதி என்று அரசாங்கம் கருதுகிறது.

SRI K. ANBAZHAGAN : இத்தகைய கோவில் நிர்வாகத்தை நடத்துவதற்கு கடவுள் பக்தி தேவை என்பதை ஒப்புக்கொள்ளுவதாக இருந்தாலும், செருப்புப் போட்டுக்கொண்டால் கடவுள் பக்தி இருக்காது என்ற கருத்தை அரசாங்கத்தைச்சார்ந்த அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். புராணங்களில் கண்ணப்பநாயனார் செருப்பு அணிந்துகொண்டிருந்த காலை சிவபெருமான் கண்ணில் ஒத்தினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பக்திக்கும் செருப்புக்கும் தொடர்பு இல்லையென்பதை அரசாங்கம் உணருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கொள்கையைக் கேட்ட கனம் அங்கத்தினர் நன்றாக இலக்கியம் படித்து தத்துவத்தை உணர்ந்தவர்கள் என்றும் நான் நினைக்கிறேன். கண்ணப்ப நாயனார் அம்மாதிரி செய்தார் என்பதற்காக நாமும் செருப்பு போட்டுக்கொண்டு கோவிலுக்குள் போகலாம் என்பதை யாரும் ஒப்புக்கொள்ளமுடியாது.

SRI R. CHIDHAMBARA BHARATHI : மதசார்பற்ற நமது சர்க்கார் ஆஸ்தீக உணர்ச்சியோடு கோவில் நிர்வாகத்தை நடத்துவதற்கு முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோவில் நிர்வாகத்திற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமோ அவைகளெல்லாம் வற்புறுத்தப்பட்டு வருகிறது என்று முன்பே சொன்னேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஆஸ்திகத்திற்கும் நாஸ்திகத்திற்கும் அப்பாற்பட்ட அறம் என்று சொல்லப்படும் வழியிலே அறநிலைய அமைச்சர் நல்ல நேர்மையான பாதையிலே அறச்சாலைகளை நிர்வாகம் செய்ய முற்படுவார்களா ?

MR. SPEAKER : I am afraid that the supplementary question is going far away from the main question.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அறம் வேறு, தேவஸ்தான நிர்வாகம் வேறு என்பதை கனம் அங்கத்தினருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

### *Influenza*

* 165 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9-40 a.m.

(a) whether there has been an outbreak of influenza in the State during May 1957;

(b) the number of people affected; and

(c) the steps taken by the Government to arrest the spread of the disease?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Three thousand nine hundred and one cases were reported in Madras City during May 1957. The total number of cases affected up to 18th June 1957 was 62,056 in Madras City and 195,473 in the moffussil districts.

(*c*) The Government have declared 'Epidemic Influenza' a notifiable infectious disease under the Madras Public Health Act. The Collector of Madras and other Collectors in the infected areas have taken action under section 76 of the Madras Public Health Act and conferred the necessary powers upon the Health Officers to enable them to take preventive measures. Isolation and treatment of cases, hospitalization of severe cases, disinfection, closure of schools, and restrictions on cinema shows and educative propaganda, were the other measures taken to bring the epidemic under control.

SRI A. A. RASHEED : Sir, has the Minister's attention been drawn to the threatened second attack of influenza?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. Being aware of that, the Government are preparing to meet it and drive it away.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, இந்த விஷ ஜுரம் இந்தியா பூராவும் பாதிக்கப்பட்டதாகவும் அதில் 16 லட்சம் பேர்கள் பாதிக்கப்பட்டதாகவும் அதில் சென்னையில் 5 லட்சம் பேர்கள் பாதிக்கப்பட்டதாகவும் மத்திய சுகாதார மந்திரி கர்மார்க்கர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது மந்திரி அவர்கள் சென்னையில் பாதிக்கப்பட்டவர்கள் மூவாயிரத்தி சொச்சம் என்று குறிப்பிட்டார்கள். எப்படியிருந்தபோதிலும் சென்னையில் மாத்திரம் அதிகமாக இருந்ததற்கு காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் இப்போது குறிப்பிட்டது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள்தான். மே, ஜுன் மாதங்களில் அதிகமாக இருக்கலாம். இங்கு அதிகமாக வந்ததற்கு காரணம் இங்கு துறைமுகத்தில் ரஜுலா என்ற கப்பல் வந்தது. அதனால் சென்னையில் முதலில் வந்தது. இதனால் அது வேகமாக பரவியது. பின்னால் குறைந்து போயிற்று.

SRI V. SUBBIAH : ஸார், நமது ஸ்டேட்டில் எத்தனை கிராமங்களில் எத்தனை பேர்கள் இந்த விஷ ஜுரத்தால் பாதிக்கப்பட்டார்கள் என்கிற விவரத்தை தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கிராமங்கள் வாரியாக சொல்லுவதற்கு என்னிடம் இப்போது விவரங்கள் இல்லை. மொத்தமாக எண்ணிக்கையை சொன்னேன். அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இப்போது பொதுமக்களுக்கு ஏற்பட்ட இன்ப்லுயென்ஸாவை விட கடுமையான இன்னொரு நோய் பரவக்கூடும் என்ற ஐயம் இந்த நாட்டிலுள்ள சுகாதார அறிஞர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே இங்கு இந்த காய்ச்சல் வந்ததற்கு காரணம் சென்னை துறைமுகத்தில் ஓர் கப்பல் காய்ச்சலாக இருந்த பிரயாணிகளை கொண்டு வந்ததாகவும் அது 5 மைல் தொலைவு அளவிலேயே நிறுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கிறார்கள். இம்மாதிரி கப்பல் குறைந்தது 40, 50 மைல் தூரத்தில் நின்றால் தான் காற்றின் மூலமாக பரவும் இந்த காய்ச்சல் பரவாமல் இருக்க முடியும் என்று நிபுணர்கள் கூறுகின்





றனர். ஆகவே இனிமேல் இம்மாதிரி காய்ச்சல் பரவியிருக்கிற கப்பல் ஏதாவது பர்மா, மலையா போன்ற கீழ்நாடுகளிலிருந்து வருவதாக தெரிவித்தால் அவைகளை கரைக்கு அருகே வராதபடி 40 மைலுக்கு அப்பால் தடுத்து நிறுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரியாக கப்பல் வருவதாக இருந்தால் அதில் அந்தமாதிரி நோய் வருவதாக தெரிந்தால் அதைப்பற்றி நிபுணர்கள் ஆலோசித்து என்ன முடிவு செய்கிறார்களோ அதன்படி வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI N. R. THIYAGARAJAN : வடநாட்டில் வருகிற நோய்கள் எல்லாம் தென்னாட்டில் வருவதில்லை. உதாரணமாக ஆஸாம் ராஜ்யத்தில் வரக்கூடிய மலை காய்ச்சல் இங்கு வருவதில்லை. ஆகவே இதை விகிதாச்சாரப்படி கொண்டுவருவதற்கு மந்திரி அவர்கள் முயற்சி எடுப்பார்களா ? (சிரிப்பு)

SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, கிராமங்களில் இந்த விஷ ஜுரம் கண்டவர்களுடைய புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்கு அரசாங்கம் கையாண்ட முறைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முறை என்னவென்றால், யாருக்கு எல்லாம் ஜுரம் கண்டதோ அவர்களை சேர்த்து கணக்கெடுக்கப்பட்டது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, the Director of Medical Services, Government of India, made an announcement recently in which he had stated that the second attack of influenza was expected very soon and that the attack would be more virulent than the first one. If the statement should prove true, may I know what are the steps taken by Government to stock adequate quantities of medicine as there is a strong rumour that on account of the announcement all the medicines are going underground?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தமாதிரி இரண்டாவதாக நோய் வருவதாக சொல்லுவது வெறும் ஹேஷ்யம்தான். அதற்கும் முன்னெச்சரிக்கையாய் வேண்டிய மருந்துகள் ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : முதலில் இந்த இன்ப்ளுயென்ஸா காய்ச்சல் பரவினதற்கு காரணம் ரஜுலா என்ற கப்பல் என்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின் இந்த கப்பலை 5 நாட்கள் "க்வாரண்டைன்"-ல் வைத்திருந்ததாக தெரிகிறது. ஆனால் இந்த காய்ச்சல் 24 மணி நேரத்திற்குள் பரவி விடும் என்று தெரிந்தும் சீக்கிரமாகவே அதிலுள்ள பிரயாணிகளை கீழே அனுப்பினார்கள். ஆனால் இத்தனை காலத்திற்கு "க்வாரண்டைன்"-ல் வைத்திருக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறதா ? இதனால் பெருவாரியாக காய்ச்சல் வராமல் தடுத்திருக்க முடியும். ஆதலால் இதைப்பற்றி விளக்கமாக பதில் சொன்னால் உதவிகரமாக இருக்கும்.

SRI K. SATTANATHA KARAYALAR : I rise on a point of order, Sir. The hon. Member is putting her question from a seat other than her own. Is this in order?

[20th July 1957

MR. SPEAKER: The idea in asking hon. Members to be in their seats is that the Speaker must be able to know who they are. Dr. Srimathi T. S. Soundaram Ramachandran is too well known to all. Therefore there is no harm in her putting the question from the seat from which she has put it. Of course, when divisions take place, hon. Members must be in their seats. But as long as the Speaker is able to identify them, there is no difficulty, though it is desirable that hon. Members should remain in their own seats.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த அளவுக்கு விளக்கமாக பதில் சொல்லுவதற்கு தனி கேள்வி வேண்டும். " க்வாரண்டைன் " விதிகள் எல்லாம் இருக்கிறது. அதைக்கொண்ட ஓரளவு அவர்களை இங்கே இறங்காமல் தடுப்பதற்கு இயலும்.

SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, இந்த விஷஜுரத்தை போக்குவதற்கு உதவி அளிப்பதற்கு அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்தது என்பதை திட்டவட்டமாக மந்திரி அவர்கள் விளக்கி சொல்லுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப்பற்றி முன்னே விளக்கி சொன்னேன். இதில் கிராம மக்கள் என்றும், நகர மக்கள் என்றும் வித்தியாசம் இல்லாமல் ஒரேமாதிரியாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

SRI A. GOVINDASAMY : இந்த வியாதியை தடுப்பதற்காக அரசாங்கம் எவ்வளவு செலவு செய்தது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி கணக்கெடுத்துதான் சொல்லவேண்டும்.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த இன்ப்ளூயென்ஸா மூலம் இந்த
சட்ட சபை அங்கத்தினர்கள் எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதை
அறிய விரும்புகிறேன். ஏனென்றால் பாதிக்கப்பட்டவர்களில் நான் ஒரு
வன். ஆதலால் இங்கே இருக்கக்கூடியவர்களில் எத்தனை பேர்கள் பாதிக்
கப்பட்டார்கள் என்பதை அறிய சிரத்தை இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர்
அவர்கள் தனியாக நிற்க வேண்டியதில்லை. வேறு சில அங்கத்தினர்களும்
பாதிக்கப்பட்டார்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, இந்த இன்
ப்ளூயென்ஸா வியாதியுள்ளவர்கள் எஸ். எஸ். ரஜுலா கப்பல் மூலமாக
வந்ததாகவும், ஆகவே அந்த கப்பலை " க்வாரண்டைன் " செய்ததாகவும்
மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அதற்கு முன்னால் " ஸ்டேட்
ஆப் மெட்ராஸ் " என்ற கப்பலிலும் இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டவர்
கள் வந்ததாகவும் அதில் வந்த வெள்ளைக்காரர் ஒருவர் இந்த வியாதி
யினால் பாதிக்கப்பட்டு அவர் இங்கே வந்து முறையிட்டதாகவும் அதைப்
பற்றி மேல் நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டதாகவும், அந்த கப்பலை
நிறுத்தியிருக்க வேண்டியது அவசியம் என்றும் அவ்விதம் செய்யாமல்
போனது தவறு என்றும் மக்களிடத்தில் கருத்து இருந்து வருவது
தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மக்களிடத்தில் அந்த
கருத்து இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. இந்தவிதமான
வியாதி ரஜுலா கப்பல் மூலமாக வருகிறது என்று அறிந்தவுடன் அதை
நிறுத்தி வைக்கப்பட்டது. " ஸ்டேட் ஆப் மெட்ராஸ் " என்ற கப்பலில்
இந்த வியாதி வந்ததாக தகவல் கிடையாது.



20th July 1957]

### *Influenza*

* 166 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any new anti-influenza vaccine was used to prevent the new type of influenza from spreading;

(b) if so, whether it is made available to the public;

(c) whether the Pasteur Institute, Coonoor, has been of any assistance in preventing the spread of this disease; and

(d) if so, how?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

(c) & (d) The Government of India Influenza Centre at Coonoor has issued a press release regarding the simple methods to be adopted for the prophylactic treatment of influenza. The centre is engaged in research work on different influenza virus strains and the production of vaccines. They are, at present reported to be working on the isolation of the Singapore strain of virus and the production of vaccine. This Government have addressed the Government of India to give top priority for the production and supply of influenza vaccine to this Government from the Madras strain of virus and their reply is awaited.

SRI K. S. G. HAJA SHERIFF : May I state for the information of the House that it is not entirely correct to say that " Rajula " or " State of Madras " brought influenza; if sufficient precaution is taken to control influenza on board the steamer itself; it is possible to control the spread of the disease. When the " State of Madras " arrived she did not bring in any influenza due to the preventive measure taken and it can be verified from the Government department.

MR. SPEAKER : The hon. Member is only giving information. It is not necessary to give any answer.

SRI K. ANBAZHAGAN : இந்த இன்ப்ளூயென்ஸாவைத் தடுப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற மருந்தோ அல்லது இந்த அரசாங்கத்தினரால் தயாரித்து அளிக்கப்படக்கூடிய வாக்ஸின் மருந்தோ நீண்ட நாள் ஸ்டாக்கில் வைக்கமுடியாது என்று தெரிகிறது. ஆகவே அந்த மருந்தை அவ்வப்போது தயாரித்துக்கொள்ளக்கூடிய விதத்தில் அதற்கேற்ற முன் ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்துகொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : புதிதாக வரும் இன்ப்ளூயென்ஸாவின் virus எப்படி வருமோ, அது எப்படி வரும் என்று அதற்கு மாற்றி மாற்றி தயாரிக்க வேண்டியிருக்கும். அது இன்னும் முடிவாகவில்லை. அது முடிந்த பிற்பாடு, அதை அடிக்கடி தயார் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த இன்ப்ளூயென்ஸா காய்ச்சலானது வெளிநாட்டிலிருந்து கப்பல் புறப்பட்டு எந்த வேகத்தில் வந்ததோ, கப்பல் நெருங்குகிற நேரத்தில் எவ்வளவு குறைவாக போகிறதோ அந்த அளவில் போய்விடும் என்று சொன்னார். ஆனால் இந்த நாட்டில்

வயிற்றுக்காய்ச்சல் என்பது வளர்ந்துகொண்டே இருப்பதால் அதைப் போக்க என்ன நடவடிக்கைகள் அமைச்சரவர்கள் எடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு வாக்கின் வேண்டியதில்லை. வேறுவிதமான முறையைத்தான் அனுசரிக்க வேண்டும்.

### *Madras Shops and Establishments Act*, 1947

* 167 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any amendment to the Shops and Establishments Act to regulate the overtime work in private companies in this State is under consideration?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

* 168 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri S. Pakkirisami Pillai) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Special Officer appointed for the revision of the Madras Shops and Establishments Act, 1947, has submitted his report?

THE HON. SRI R. VENKATARAMAN : No special officer was appointed for the revision of the Madras Shops and Establishments Act, 1947. A Special Officer appointed in 1952 to survey and report about the working of the Madras Shops and Establishments Act, 1947, with special reference to the question of launching prosecutions for offences and granting exemptions, has submitted his report.

SRI V. K. KOTHANDARAMAN : 1953-வது ஆண்டிற்கு முன்னால் ஒரு தொழிலாளியாக இருந்தாலும் அதற்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும் ஷாப் சட்டத்தில் இருக்கக்கூடிய சலுகைகள் இருந்து வந்தது. 1953-க்கு பிறகு நான்கு தொழிலாளர்களுக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும்தான் அந்த சட்டம் என்ற முறை வந்த பிறகு இப்பொழுது 6, 7 பேர்கள் வேலை செய்யக்கூடிய இடத்திலே 1, 2, 3 என்கிற அளவிற்கு கணக்கு எழுதிவருவதினால் தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதை சென்ற சட்டசபையில் கேட்டபோது, மத்திய சர்க்கார் இதை பரிசீலனை செய்து வருகிறது என்றும் விரைவிலே பழையபடி சட்டம் கொண்டுவரப்படும் என்றும் சொல்லப்பட்டது. ஆகவே இப்பொழுது உடனடியாக ஒரு தொழிலாளி இருந்தாலும் பல பேர்கள் இருந்தாலும் ஷாப் சட்டப்படி உள்ள சலுகைகள் பெறக்கூடிய அளவில் மீண்டும் சட்டம் கொண்டுவரப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் பல கேள்விகளை சேர்த்து போட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கொண்டு வருகிற சட்டம் வேண்டுமா வேண்டாமா என்று இரு சட்டத்தையும் பரிசீலனை செய்துபார்த்து அபிப்பிராயம் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் சட்டத்திலுள்ள சலுகைகளை விட நம் மாகாண ஷாப் அண்ட் எஸ்டாப்பிளிஷ்மெண்ட் ஆக்டில் இருக்கிற சலுகைகள் அதிகமாக இருக்கிறது. அடுத்தபடியாக சட்டத்தை மீறி யாராவது 6, 7 பேர்கள் இருக்கிற இடத்தில் ஒன்று இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று பொய் கணக்கு வைத்துக்கொண்டு இருந்தால் அதைப்பற்றி புகார் செய்தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும்.





SRI G. GOMATHISANKARA DIKSHITAR : பாங்க் எம்பளாயீஸ்ஸிக்கு இருப்பது போலுள்ள சர்வீஸ் கண்டிஷனும், சாலரியும் commercial employee-க்கு அளிக்க சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த மாதிரி யோசனை இப்பொழுது ஒன்றும் இல்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI : திருவாளர் சுப்பிரமணியம் அவர்களைக் கொண்டு ஒரு கமிஷனால் இந்த ஷாப் அண்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஆக்ட் திருத்தியமைக்கப்பட்டது. அதை அமலுக்குக் கொண்டுவர இப்போது அவசியம் இல்லை. மத்திய அரசாங்கத்திலிருந்து வேறு ஒரு ரூபத்திலே புதிதாக இந்தியா முழுவதற்கும் ஒரு சட்டம் வரப்போகிறது என்ற சாக்குப் போக்குச் சொல்லி இந்த திருத்தியமைக்கப்பட்ட ஷாப் அண்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஆக்ட் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது என்பது நம் அமைச்சரவர்களுக்குத் தெரியும். இருந்தும்கூட அதை இன்னும் காலதாமதப்படுத்துவதற்கு என்ன அவசியம் ? மத்திய அரசாங்கத்தின் சட்டம் எப்போது அமுலிற்கு வரும், ஏதாவது நம்பிக்கை இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்கார் கொண்டு வருகிற சட்டப்படி ஓவர்டைம் அலவன்சு ஒன்றரை மடங்கு. ஆனால் சென்னை மாகாண சட்டப்படி இரண்டு மடங்காகும். மத்திய சர்க்கார் கொண்டு வருகிற சட்டத்தில் 20 நாட்களுக்கு ஒரு நாள் லீவ். சென்னை ஷாப் அண்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஆக்ட் படி 12 நாள் காஷுவல் லீவ், 12 நாள் ஸிக் லீவ், 12 நாள் எர்ண்ட் லீவ் இவ்வளவும் இருக்கிறது. தொழிலாளிப் பிரதிநிதிகள் இதை எல்லாம் படித்துப் பார்த்துவிட்டு தொழிலாளர்களுக்கு எது நன்மையைத் தருகிறதோ அதைச் செய்யத் தயார்.

SRI A. VEDARATHNAM PILLAI : அரசாங்க காரியாலய விடுமுறை நாட்களும் இந்த ஷாப் விடுமுறை நாட்களும் ஒரே தினத்தில் அமைவதால் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், தொழிற்சாலை ஊழியர்கள் இவர்கள் சாமான்கள் வாங்குவதற்கு சிரமம் ஏற்படுவதால் இதை வேறு வேறு தினங்களுக்கு இந்த விடுமுறை நாட்களை மாற்றியமைக்கும்படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : என்ன என்ன தினங்களில் விடுமுறை விடவேண்டுமென்று சர்க்கார் விதிக்கவில்லை. அதை ஷாப் நடத்துகிறவர்களும் அங்குள்ள ஊழியர்களும் சேர்ந்து முடிவு செய்கிறார்கள்.

### *Devaswom Board for Kanyakumari district*

* 169 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have taken any steps to constitute a separate Devaswom Board for the Kanyakumari district and Shencottah taluk as contemplated in section 112 of the States Reorganization Act, 1956?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes. The Travancore-Cochin Hindu Religious Institutions Act, 1950, is being adapted in a comprehensive way for the establishment of a separate Devaswom Board, a Devaswom Fund, etc., for the transferred areas. After the Act is so adapted, steps will be taken to constitute the Devaswom Board for the transferred areas.

MR. SPEAKER : I shall give five more minutes for question time.

[20th July 1957

SRI T. T. DANIEL: Sir, in view of the fact that under section 112, a separate Devaswom Board has to be constituted, will the Government please state when the Board would be constituted? I would also like to draw the attention of the Hon. Minister to sub-section (2) of section 112 where it is stated:—" The assets as on the appointed day of the Devaswom Surplus Fund constituted by section 26 of the Travancore-Cochin Hindu Religious Institutions Act, 1950, shall be divided into two parts in the ratio of 37·5 to 13·5 in such manner as the Central Government may by order direct the smaller part shall as from appointed day be transferred to the Fund mentioned in sub-section (1)." May I know what exactly are the funds that we have got when the Assets and Liabilities were settled?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: About the last question I would like to have notice. As for other questions, Government have under consideration the constitution of Devaswom Board as per the provisions of the States Reorganization Act; as soon as adaptation of laws is completed the Board would be constituted and then there would be separate Devaswom Fund also.

### *Reorganization of districts*

* 170 *Q.*—SRI C. MUTHIAH PILLAI: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have any proposal for the bifurcation and reorganization of districts?

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, the question is being examined by a Cabinet Sub-Committee.

SRI C. MUTHIAH PILLAI: ஒவ்வொரு ஜில்லாவிலும் 30 லக்ஷம் ஜனத் தொகைக்கு மேல் இருப்பதன் காரணமாக, கீழே இருக்கின்ற அதிகாரிகள் என்ன உத்தரவு போடுகிறார்களோ அதைத்தான் கார்ப்பன் காப்பியாக மேலே இருக்கும் அதிகாரிகளும் உத்தரவிடுகிறார்கள். அதனால் பொதுமக்களுக்கு அதிக சங்கடங்கள் ஏற்படுவதன் காரணமாக இந்த விஷயத்தில் சர்க்கார் இந்த வருடமே ஜில்லாவைப் பிரிக்க உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: என்ன உத்தரவிடவேண்டுமென்று கனம் அங்கத்தினர் கேட்கிறார் என்று தெளிவாகத் தெரியவில்லை. ஜில்லாக்களைத் திருத்தியமைக்கும் விஷயத்தை இந்தக் காபினட் சப்-கமிட்டி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் தலைநகரங்களாக இருந்து பின்னர் ஏற்பட்ட சில மாறுதல்களினால் அந்தத் தகுதியை இழந்துவிட்ட பெரிய நகரங்கள் மறுபடியும் தலைநகரங்களாக வரக்கூடிய விதத்தில் இந்த ஜில்லா அமைப்பு விஷயத்தை அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதையும் சப்-கமிட்டியார் கவனிப்பார்கள். அரசாங்கமும் கவனித்து வருகிறது.

SRI P. M. MUNUSAMI GOUNDER: கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஜில்லாக்களைப் பிரிக்கும் விஷயத்தை சப்-கமிட்டி ஆலோசனை செய்யுமென்று குறிப்பிட்டார்கள். ஆதலால், சேலம் ஜில்லாவானது ஒரு பரந்த ஜில்லாவாக இருப்பதாலும், ஜனத்தொகை சம்பந்தப்



20th July 1957]

பட்டமட்டிலும் நமது ராஜ்யத்திலேயே மிகவும் அதிக ஜனத்தொகை கொண்டதாக இருப்பதாலும், தற்போது கலெக்டர் அவர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் அங்கு எல்லாவிதமான வேலைகளையும் கவனிப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருப்பதாலும், ஜில்லாவை இரண்டாகப் பிரிப்பதற்கு ஏதாவது ஆலோசனை உண்டா என்று கேட்க விரும்புகிறேன். அப்படி இல்லாவிட்டாலும், அதை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வார்களா ?

MR. SPEAKER: Hon. Members when asking questions should not introduce arguments.

தயவுசெய்து கேள்வி கேட்கும்போது "ஆர்குமெண்ட்" உபயோகப்படுத்த வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: சேலம் ஜில்லா நம்முடைய ராஜ்யத்திலே தான் இருக்கிறது. ஆகையால் சேலம் ஜில்லாப் பிரச்னையும் மற்ற எல்லா ஜில்லாப் பிரச்னையும் பரிசீலனை செய்யப்படுகின்றன.

SRI A. GOVINDASAMY: டீ ஜூர் இணைப்பு ஆன பிறகு புதுச்சேரியைத் தென்னாற்காடு ஜில்லாவோடு இணைப்பதற்கு சப்-கமிட்டி ஆலோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்தப் பிரச்னை இதில் எழாது. இது இதர ஜில்லாக்களைப் பற்றியது. அது டீஜூர் ரெஜிம் ஆன பிற்பாடு அதைக் கவனிக்கலாம்.

SRI N. S. RAMALINGAM: காரைக்காலைப்பற்றி அதே கேள்வியைத் தான் கேட்க விரும்புகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, this matter has been talked over and over again even during Budget debate when the Revenue Demand came up for discussion, that a Committee had been constituted and it has made its report long ago. It is not known why there is still delay. I want an assurance from the Hon. Minister when exactly the Government would be implementing the recommendations of the Committee.

THE HON. SRI M. A. MANICKAVELU: Committees sometimes make more than one report. A small report on a particular issue referred to it has been given. Other aspects of the question will be examined and reported on later.

SRI S. NAGARAJA MONIAGAR: ஜில்லாக்களும் தாலூக்காக்களும் அளவுக்கு மீறி பெரியவையாக இருந்துவருவதால், முன்னேற்றத் திட்டங்களுக்காக நாம் எவ்வளவு பணம் செலவு செய்தாலும், அதற்கு தகுந்த நன்மையை மக்கள் அடைய முடியவில்லையென்பது வாஸ்தவமா ? அதன் காரணமாக எவ்வளவு சீக்கிரமாக அவைகளைப் பிரிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அவைகளைப் பிரித்தால் நன்மை என்று சொல்லிக்கொள்ளலாமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: எவ்வளவு சீக்கிரமாக இதைப் பற்றி யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் நினைப்பதுபோல் நானும் நினைக்கிறேன்.

SRI M. KARUNANITHI: புதுக்கோட்டை தனி மாவட்டமாக ஆகவேண்டுமென்ற கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்தப் பிரச்னை இந்தக் கேள்வியில் எழாது என்று நான் முன்பே சொன்னேன்.

[20th July 1957

SRI K. ANBAZHAGAN: மாவட்டங்களின் தலைநகரங்கள் அந்தந்த மாவட்டத்திற்கு உள்ளாகவேதான் இருக்கவேண்டும். வெளியில் இருக்கக் கூடாது. மாவட்டத் தலைமைக் கார்யாலயங்கள் அந்தந்த மாவட்டத்திலே நிறுவப்பட வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்தாரால் வலியுறுத்தப் படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: எல்லாப் பிரச்னைகளும் கவனிக் கப்படுமென்று நான் முன்பே சொன்னேன். அந்த சப்-கமிட்டியிலே இருப்ப வர்களும் இங்கிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் சொல்லியதையும் அவர் கள் கவனித்திருப்பார்கள்.

## *Unemployment among the educated*

* 171 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have taken any statistics in regard to the educated unemployed in the State?

THE HON. SRI R. VENKATARAMAN: No survey has been undertaken by the Government in regard to educated unemployed in the State. The figures available with the District Employment Offices show that the number of educated unemployed who registered their names in District Employment Offices in the State for the period from 1st October 1956 to 31st March 1957 is 19,811.

SRI S. PAKKIRISAMI PILLAI: படித்தவர்களின் எண்ணிக்கை வருஷா வருஷம் அதிகப்பட்டுகொண்டிருப்பதாலும், அவர்களுக்குப் போது மான அளவு வேலையில்லாத நிலைமை நீடித்துக் கொண்டு போகும்படியான சூழ்நிலை இருப்பதன் காரணத்தாலும் அப்டே ர்ப்பட்ட படித்த வாலிபர்கள் மிகவும் கேவலமான நிலையில் போகாமல் இருப்பதற்காக, அவர்களுக்கு வேலையில்லாத அலவன்ஸ் கொடுப்பதற்கு ஏதாவது யோசனை அரசாங்கத் தாரிடம் இருக்கிறதா? அப்படியில்லையானால், அதைப்பற்றி ஆலோசனை செய்வதற்கு திட்டம் வகுக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: வேலையில்லாத் திண்டாட்ட நிவாரணம் அளிப்பது (அன்எம்ப்ளாய்மெண்ட் இன்ஷூரன்ஸ்) என்பது மிகவும் அதிகச் செலவு ஆகக்கூடியது. அதை ஏற்றுக்கொண்டு நடத்த சர்க் காரால் இப்போது இயலாது. ஆகையால், கனம் அங்கத்தினர் படித்த வேலையில்லாதவர்களுக்கு மாத்திரம் இந்த மாதிரி இன்ஷூரன்ஸ் திட்டம் வகுக்க வேண்டுமென்று சொன்னால், அதை ஒரு "டிஸ்கிரிமினேஷன்" என்று கருதி, அரசாங்கம் அதை ஏற்க மறுக்கிறது.

## *Khadi centres*

* 172 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of centres organized by the Government for the production and sale of Khadi in each district with their location;

(*b*) the staff employed in the depots for production and sale; and

(*c*) the total value of the sales during 1956–57?



20th July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) A statement [a] showing the number of centres organized by the Government for the production and sale of Khadi in each district with their locations is placed on the table of the House.

(*b*) For production centres—

| | |
|---|---|
| Staff in main centres ... ... ... | 45 |
| Staff in sub-centres ... ... ... | 140 |

For sales depots—

(For City sales depots.)

| | |
|---|---|
| Managers ... ... ... ... ... | 3 |
| Assistant Managers ... ... ... | 2 |
| Sales Assistants ... ... ... ... | 3 |
| Boy Attendants ... ... ... ... | 3 |
| Watchman ... ... ... ... ... | 3 |
| Total ... | 14 |

(For the mufassal sales depots.)

| | |
|---|---|
| I Grade Assistants ... ... ... | 5 |
| II Grade Assistants ... ... ... | 5 |
| Total ... | 10 |

Number of persons employed in the Sales depots ... ... ... ... ... ... ... 24

(*c*) Rs. 49,16,529.

SRI V. K. KOTHANDARAMAN: சர்க்காரின் அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டின்படி 1953–54ஆம் ஆண்டிலே நூல் நூற்பவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு முக்கால் ரூபாயும் தறி நெய்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 16 ரூபாயும் கூலி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு மோசமான கூலி கொடுத்தும் ரூ. 4 லக்ஷம் நஷ்டம் ஏற்பட்டுள் ளது. ஆகவே, இது ஏழைகளைக் காப்பாற்றக்கூடிய திட்டம் இல்லையென் பதை உணர்ந்து ஏழைகளைக் காப்பாற்றக்கூடிய அளவுக்கு இந்தப் பணத்தை குடிசைத் தொழிலுக்கு உபயோகப்படுத்தி, அதை அபிவிருத்தி செய்வதற்கு சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM: கதர் தொழில் குடிசைத் தொழில்களில் தலை சிறந்தது என்று அரசாங்கம் கருதுகிறது. இதனால், நான் ஏற்கனவே விளக்கியதுபோல் வேறு வேலை செய்ய முடியாத வர்களுக்கு வேலை கிடைக்கிறது. அவர்களுடைய ஜீவனத்திற்கும் வழி ஏற்படுகிறது. சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கும் கதர் திட்டத்தினால் சுமார் 90,000 பேருக்கு வேலை கிடைத்து அவர்களுக்கு ஊதியம் கிடைக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் வேலையில்லாமல் திண்டாடுவார்கள். 1954–55-ஆம் ஆண்டில் கதர் திட்டத்திற்காகச் செலவு ரூ. 69,37,000. அம்பர் சர்க்காவுக்காக செலவு ரூ. 1,52,000. இரண்டுக்கும் சேர்த்து ரூ. 70,89,000. விற்பனையால் நமக்குக் கிடைப்பது ரூ. 49,24,000. மீதி ரூ. 21,65,000-க்கு ஸ்டாக்கு இருக்கிறது. ஆகையால், இப்பொழுது நிர்வகிக்கப்படுகின்ற திட்டத்தால் நஷ்டம் ஒன்றுமில்லை. இதனால் 90,000 பேருக்கு வேலை கிடைக்கிறது.

[a] Printed as Appendix I on pages 84–85 infra.

[20th July 1957

## UNSTARRED QUESTIONS.

### *Minimum Wages Board*

1 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a meeting of the Minimum Wages Board was held in March this year; and

(*b*) whether a statement showing the recommendations and the decisions of the Government thereon will be placed on the table of the House?

*A.*—(*a*) Yes, Sir.

(*b*) A paper [a] furnishing the information is placed on the table of the House.

### *Rates of wages fixed for various industries*

2 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to place on the table of House a statement showing the names of the industries and the rates of wages fixed for each?

*A.*—A statement [b] is placed on the table of the House.

### *Ministers Travelling Allowance Rules*

3 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state whether a copy of the rules pertaining to the Ministers Travelling Allowance, etc., will be placed on the table of the House?

*A.*—A copy [c] of the rules issued under sections 7, 8, 9 and 10 of the Madras Payment of Salaries and Removal of Disqualification Act, 1951, is placed on table of the House.

### *Chief Minister's tour*

4 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the expenditure incurred in connexion with the tour of the Hon. the Chief Minister in January, February and March 1957 respectively and the places he visited and the purposes of the visits; and

(*b*) the expenditure towards Police bandobust during these visits

---

[a] Printed as Appendix II on page 86 infra.
[b] Printed as Appendix III on pages 87–102 infra.
[c] Printed as Appendix IV on pages 103–109 infra.



20th July 1957]

*A.*—(*a*) The Chief Minister did not perform any official tour in January, February and March 1957 except the journey performed by him in January 1957 for declaring open the bridge across the Cauvery river in Pallipalayam village in Salem district. The expenditure incurred in this connexion was Rs. 159·12.

(*b*) An expenditure of Rs. 2,296·62 was incurred towards Police bandobust arrangements made during the Chief Minister's official and unofficial visits to various places in the State in January (Rs. 48·55), February (Rs. 1,680·93) and March 1957 (Rs. 567·14).

### *Assignment of lands to the landless poor*

5 *Q.*—SRI M. MUNI REDDY: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of landless poor that have applied for assignment of lands in the State—talukwar;

(*b*) the number of applications that were sanctioned and the number rejected—talukwar;

(*c*) the number that have appealed against the rejection orders; and

(*d*) the authorities to deal with such appeals?

*A.*—(*a*) to (*d*) The particulars are not readily available. The time and labour involved in getting the particulars will not be commensurate with the object to be served thereby.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—EXPUNCTION OF OBJECTIONABLE MATTER.

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது விவாதத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, ஒரு அங்கத்தினர் சற்று முன்பு தங்களைப் பற்றி கூறியதைக் குறித்து கீழ்கண்ட பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்:—

"That the portions containing the objectionable statement made regarding the Speaker be expunged from the records."

MR. SPEAKER: The question is—

"That the portions containing the objectionable statement made regarding the Speaker be expunged from the records."

The motion was put and carried and the objectionable portions expunged.

## III.—CHANGE IN THE ALLOTMENT OF TIME FOR DISCUSSION ON DEMANDS.

MR. SPEAKER: நேற்று ஒரு கனம் அங்கத்தினர் ஹரிஜன மான்யத்தைப்பற்றி விவாதிப்பதற்கு நே[illegible] போதாது என்று சொன்னார். அதை முன்னிட்டு கொஞ்சம் நேரம் அதிகம் இந்த டிமாண்டிற்குக் கொடுக்க கனம் மந்திரி அவர்கள் மூவ் பண்ணுவார்.

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I move—

"That two more hours be given for Demand XXII—Harijan uplift and corresponding decrease by one hour in Demand XXVI—Civil Works—Grants-in-Aid and one hour in Demand XX—Co-operation be made."

சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மான்ய விவாதத்திலே இன்னும் அதிகமாக அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள். ஆகையினால் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் போதாது என்று உங்களிடத்திலே சொல்லப்பட்டது. அது என் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. இங்குள்ள மற்ற கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசித்து, ஹரிஜன மான்யத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்தை 2 மணி நேரம் அதிகப்படுத்தலாம் என்று தீர்மானித்தோம். அதாவது இன்றைக்கு பூராவும், 2 மணி வரை இந்த ஹரிஜன மானியத்தை விவாதிக்கலாம், இதை சரிக்கட்ட அடுத்த மான்யத்திற்கு 3 மணி நேரம் ஒதுக்கியிருப்பதை 2 மணியாக குறைத்தும், கூட்டுறவு மான்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 2 மணி நேரத்தில் 1 மணி நேரம் குறைத்தும், நேரத்தை சரி செய்ய ஒத்துக் கொண்டிருக்கிறோம். இந்த முறையிலே அந்த கால அட்டவணையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The question is—

"That two more hours be given for Harijan Uplift Demand and corresponding decrease by one hour in Demand XXVI—Civil Works—Grants-in-Aid and one hour in Demand XX—Co-operation be made."

The motion was put and carried.

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### DEMAND XXII—HARIJAN UPLIFT—*cont.*

MR. SPEAKER: **We shall now proceed with the discussion on the Harijan Demand.**

10-12 a.m. SRI V. CHINNIAH: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது தாழ்த்தப்பட்ட சமுதாய மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்போது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை முன்னேற்ற கல்வித் துறையில் அதிக ஈடுபாடு கொண்டு அரசாங்கம் முன்வந்திருக்கிறது. ஹரிஜனங்கள் படிப்பதற்காக பல ஹாஸ்டல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நம் ராஜ்யத்திலுள்ள ஹாஸ்டல்களில் நூற்றுக்கு 75 பேர் பிலினலாக எண்ணி சேர்க்கக்கூடிய வருமானத்தை அதில் படிக்கக்கூடிய பையன்களுக்கு இல்லாது சொந்த உபயோகத்திற்கு சேர்த்துக்கொள்கிறார்கள். இப்போது இருக்கும் ஹாஸ்டல்களில் நூற்றுக்கு 25-ஐ அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு எண்ணம் இருக்கிறது. இருக்கக்கூடிய எல்லா ஹாஸ்டல்களையும் அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டுமென்று ஹரிஜன இலாகா அமைச்சரவர்களையும் மற்ற அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு குடித்தண்ணீர் விஷயமாக ஆங்காங்கு கிணறுகள் வெட்டப்படுகின்றன. இப்படி வெட்டப்படுவதானது மூன்று வகையிலே வெட்டப்படுகிறது. ஒன்று ஹரிஜன் வெல்பேர் டிபார்டுமெண்டால் வெட்டப்படுகிறது. மற்றொன்று ரெவின்யூ டிபார்ட்மெண்டால் வெட்டப்படுகிறது. இன்னொன்று பிர்க்கா டெவலப்மெண்டால் வெட்டப்படுகிறது. மூன்று டிபார்ட்மெண்டுகளும் சரியாக வேலை செய்யவில்லை. ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டை கேட்டால், ரெவின்யூ டிபார்ட்மெண்ட் என்கிறார்கள்; ரெவின்யூ டிபார்ட்மெண்டை கேட்டால், பிளாக் டெவலப்மெண்டு



என்கிறார்கள்; இப்படியாக திட்டம் கைவிடப்படுகிறது. ஹரிஜனங்களுக்கு இதுபோன்ற கஷ்ட நிலை இருப்பதால் ஒரே டிபார்ட்மெண்டாரால் கிணறு வெட்டவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல் தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்கள் விவசாயத்தை நம்பி வாழும் நிலையில் இருக்கிறார்கள். பெரும்பாலும் மிராசுதார் நிலங்களை குத்தகைக்கு பேசிக்கொள்கிறார்கள். அரசாங்கம் 60, 40 சட்டம் இயற்றிய பிறகு மிராசுதார்கள் விதைகள் தகுந்த உரங்கள் வாங்க முன்வருவது கிடையாது. வெறும் நிலத்தை வைத்துக்கொண்டு ஹரிஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். குத்தகை நிலத்தை உழுகிறவர்கள் அதில் என்ன வருவாய் வருகிறதோ அதை நம்பித்தான் வாழவேண்டியிருக்கிறது. ஆகையால் கோவாபரேட்டிவ் ஸொஸைட்டி மூலமாக உரம், விதை முதலியவை வாங்கிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு தற்சமயம் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. அதாவது 750 ரூபாயில் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. 750 ரூபாயில் பச்சை செங்கல்களை அறுத்து போலி வீடுகள் கட்டப்படுகிறது. ஒரு புறம் கட்டிக்கொண்டு வரும்போது மறுபுறம் கறையான் பச்சை செங்கல் கல்மூலமாக மேலே ஏறி மரத்தில் எல்லாம் நாடிக்கொள்கிறது. அதனால் ஒரு வீட்டுக்கு 750 ரூபாய் போதாது. 1,500 ரூபாய் வீதம் ஒதுக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று, ஹரிஜனங்களுக்கு தற்சமயம் புதுக்கோட்டை பிரதேசத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 25 குடிகள் ஜாதி ஹிந்துக்கள், 10 குடிகள் ஹரிஜனங்கள் ஷை பிரதேசத்தில், அதாவது கானட்டாம்பட்டி என்ற இடத்தில் ஹரிஜனங்களுக்கு 25 வீடுகள் கட்டப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த ஹரிஜனங்கள் ஜாதி ஹிந்துக்களிடத்திலே அடிமை வேலை பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கிறவர்களாகையால் கட்டிய வீடுகள் ஜாதி ஹிந்துக்களுக்கு கொடுக்கப்படுகிறது. இந்த வீடுகளை ஹரிஜனங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஜாதி ஹிந்துக்கள் 10 குடிகள்தான் இருக்கிறார்கள். இவ்வளவும் ஏன் என்று கேட்டால், பையன் டி.வி.எஸ்.-ல் ட்ரைவராக இருக்கிறார் அவருக்கு என்கிறார்கள். பெண் பக்கத்து ஊரில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள் அவளுக்கு என்கிறார்கள். இம்மாதிரி தவறான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்ட் தகுந்த ஏற்பாடு செய்து ஹரிஜனங்களுக்கு கொடுத்தது போக மீதி இருந்தால் ஜாதி ஹிந்துக்களுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மயானக்கரைக்கு பாட்டை போடுகிற விஷயத்தைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பெரும்பாலான கிராமங்களில் பிரேதத்தை எடுத்துச்செல்ல சரியான வழி கிடையாது. மிராசுதார்களின் நிலங்கள் வழியாக போகவேண்டியிருக்கிறது. அடிமைகள் என்ற காரணத்தால் அதன் வழியாக கொண்டு போகக்கூடாது என்று மறியல் செய்கிறார்கள்: புரட்சிகள் செய்து மயானக்கரைக்கு எடுத்துச்சென்று அடக்கம் செய்துவருகிறோம். பட்டா நிலங்களை வாங்கி பாட்டை போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அநேக கீழ்தரப்பட்ட வகுப்பினர்கள் இருக்கிறோம். ஆனால் அவர்களுக்குள் ஒன்றுமை கிடையாது. ஜாதி ஹிந்துக்களோடு சமமாக இருக்க வேண்டுமென்பதில் மாறுபாடு கிடையாதே தவிர ஒற்றுமை கிடையாது. ஹரிஜனங்களுக்குள் பாகுபாடு இல்லாமல் ஒற்றுமை இருக்கவேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும். கருத்து வேறுபாட்டை வைத்துக் கொண்டு சமமாக வாழவேண்டுமென்று சொல்வது வருந்தத்தக்க விஷயம். அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்குள்ளவர்களில் 12 பேர் Pls. இருக்கிறோம். 32 பேர் Prs. இருக்கிறோம். நல்ல முறையில், ஜனநாயக முறையில் நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. S. SAHAJANANDA: கனம் தலைவர் அவர்களே, எனக்கு முதன் முதலாக முதலிடம் கொடுத்ததற்கு என்னுடைய வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். முதன் முதலில் ஹரிஜனங்களுக்கு 10-20 a.m.

[Sri A. S. Sahajananda] [20th July 1957

ஒரு கோடி நாலு லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். அதன் பிறகு ஒரு கோடி ஒன்பது லட்சம் ஒதுக்கினார்கள், அதன் பிறகு ஒரு கோடி நாலு லட்சம் ஒதுக்கினார்கள். இப்படி பல வருஷங்களாக பல விதமாக ஹரிஜனங்களுக்கு என்று பணத்தை ஒதுக்கி வந்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஒரு வருஷம் ஹரிஜனங்களுக்கு என்று குறைவான பணத்தை ஒதுக்கியபோது அப்பொழுதுள்ள மந்திரியை கூட நான் திட்டினேன். உங்களுடைய காலத்தில் கூடவா இப்படி ஹரிஜனங்களுக்கு குறைவாக பணத்தை ஒதுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் பணம் ஒதுக்க கிடைக்கவில்லை என்று சமாதானம் சொன்னார். அப்படிச் சொல்லி விட்டு ராஜினாமா செய்து விடுவதாகக் கூட சொன்னார். அதைப் போலவே நாங்கள் கேட்டு வந்ததற்கு இந்த வருஷம் ஹரிஜனங்களுக்கு 90 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கி இருப்பதை கண்டு நான் சந்தோஷம் அடைகிறேன். அதற்காக கனம் நிதி மந்திரி அவர்களுக்கு எனது மனமார்ந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் கனம் கக்கன் அவர்கள் இந்த ஹரிஜன வெல்பேர் இலாகாவை ஏற்றுக் கொண்டதற்கும் முதன் முதலாக அவர் இந்த இலாகாவிற்கு 9 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருப்பதற்கும் அவருக்கு என்னுடைய வந்தனத்தை தெரிவித்துக் கொண்டு அவர் மேல் பூரண நம்பிக்கையுடன் அவருடன் ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஹரிஜனங்களுடைய நலனுக்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கினாலும் போதாது. இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் சமுத்திரத்தில் பெருங்காயத்தை கரைத்தது போல்தான் இருக்கும். அந்த அளவில்தான் இப்பொழுது ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற பணம். ஹரிஜனங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டும் என்றால் மாகாணத்தில் ஹரிஜனங்கள் ஐந்தில் ஒரு பங்கு இருக்கிறார்கள். அதனால் மாகாண வரும்படியில் ஐந்தில் ஒரு பங்கை ஹரிஜனங்களுடைய நலனுக்கு செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி செலவழித்தால் தான் ஹரிஜனங்கள் கூடிய சீக்கிரத்தில் முன்னுக்கு வரலாம். அப்படிச் செய்யாவிட்டால் அவர்கள் தீவிரமாக முன்னுக்கு வர முடியாது. இப்பொழுது ஐந்தாண்டு திட்டம் என்று போட்டு காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். அதைப் போலவே ஹரிஜனங்களுக்கு ஒரு திட்டம் வகுத்து அதன்படி அவர்களுக்கு நலனைச் செய்து வந்தால் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் முன்னுக்கு வருவதற்கு முடியும். இல்லாவிட்டால் அவர்கள் ஒரு நாளும் முன்னுக்கு வரமுடியாது. இருக்கின்ற நிலையிலேயே தான் இருந்து கொண்டிருப்பார்கள். ஹரிஜனங்களுக்குள்ள பங்கை ஒதுக்கி அவர்களுக்கு என்று பிரத்யேகமாக செலவு செய்தால்தான் அவர்கள் முன்னேற்றமடைய வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, அவர்களுக்கு அதிகப்படியாக 9 லட்சம் ரூபாய் ஒதுக்கினாலும் போதாது. இன்னும் அதிகப்படியாக ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடிக்கடி திராவிடஸ்தான் வேண்டும் என்று பேச்சுக்கள் கிளம்புகிறது. நாங்கள் ஏற்கனவே ஆதி திராவிடஸ்தான் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். ஆதி பழங்குடி மக்கள்தான் ஹரிஜனங்கள். அவர்களுக்கு சுதந்தரம் வர வேண்டும் என்று நாங்கள் பாடுபட்டோம். ஆனால் அந்தக் காலத்தில் காந்திஜி என்ன சொன்னார் என்றால் ஹரிஜனங்களுக்கு நாங்கள் சுதந்தரம் வாங்கிக் கொடுக்கிறோம், நீங்கள் கஷ்டப்பட வேண்டாம் என்று சொன்னார். அதே மாதிரி பிரிட்டிஷ் காலங்களில் ஹரிஜனங்களுக்கு சுதந்தரம் வழங்கும் அளவில் அவர்களுக்கு உத்தியோகங்களில் முதல் சலுகைகளும், இன்னும் இதர விஷயங்களிலும் அவர்களுக்கு முதல் சலுகைகள் காட்டிக் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது ஹரிஜனங்களுக்கு என்று பத்து அல்லது பன்னிரெண்டு கோடி ரூபாய் வரையில் செலவுசெய்யப்பட்டு வந்தது. அப்பொழுது ஆதி திராவிடஸ்தான் வேண்டும் என்று கேட்டு வந்தோம். அவ்விதமே இப்பொழுது செலவு செய்து வசதிகள் செய்து கொடுத்தால் தான் ஹரிஜனங்கள் சமூகம் சீக்கிரத்தில் முன்னுக்கு வர முடியும்.



20th July 1957] [Sri A. S. Sahajananda]

நான் சிதம்பரம் தாலூகாவிலிருந்து வந்திருக்கிறேன். அங்கே 300 கிராமங்கள் இருக்கின்றன. அவைகளில் புவனகிரி, திம்மத்தூர், பழைய கோட்டை என்று மூன்று கிராமங்களில்தான் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்த மூன்று கிராமங்களுக்கும் இப்பொழுது சுமார் 40 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இப்படி மூன்று கிராமங்களுக்கு 40 பள்ளிக்கூடங்கள் இருப்பதை கண்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். ஆனால் 40 பள்ளிக்கூடங்கள் 40 கிராமங்களுக்குப் போனாலும் பாக்கி இருக்கக் கூடிய 260 கிராமங்களுக்கு இப்பொழுது பள்ளிக்கூடங்கள் கிடையாது. இதைக் கண்டால் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே சிதம்பரம் தாலூகாவிற்கு இன்னும் அதிகப்படியான பள்ளிக்கூடங்களை அமைத்துக் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

காங்கிரஸ் சர்க்கார் ஹரிஜனங்களுக்கு நல்ல சலுகைகளைக் காட்டிக் கொண்டு வருகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அதாவது சில வருஷங்களில் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்து காலேஜ்களில் படிக்க வசதி செய்து கொடுக்கிறார்கள். அப்படி வசதி செய்து கொடுத்தபடி 1920-ம் வருஷத்தில் இரண்டு கிராஜுவேட்கள் பாஸ் செய்து விட்டு வந்தார்கள். கிராஜுவேட்கள் வேண்டும் என்று கவர்ன்மெண்ட் விளம்பரம் செய்தார்கள். அப்படி விளம்பரத்தை பார்த்து விட்டு இரண்டு பேர்கள் மனுச் செய்து கொண்டார்கள். அவர்கள் ராமச்சந்திரன் என்பவரும், சி. என். சிவராஜ் என்பவரும். சி. என். சிவராஜ் என்பவர் புத்த மதத்தை சேர்ந்த பௌத்தர் என்று அவரை தள்ளிவிட்டார்கள். ராமச்சந்திரன் பறையன் என்று அவருக்கு வேலை கொடுத்து அவர் சீனியர் டெபுடி கலெக்டராக இருந்து ரிடயர் ஆனார். அப்பொழுது நிலைமை அப்படி இருந்தது. ஆனால் இரண்டு வருஷங்களுக்கு முன்பு விளம்பரம் செய்தார்கள். 400 பேர்கள் மனுச் செய்து கொண்டார்கள். அவர்களில் 100 பேர்கள் நந்தனார் பள்ளிக்கூடத்தில் படித்து விட்டு காலேஜுகளில் படித்து மனுச் செய்து கொண்டவர்கள். இப்பொழுது இவ்வளவு பேர்கள் வருகிறார்கள். இப்பொழுது அதிகப்படியாக படிக்க வேண்டும் என்று முன் வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் சகஜமாக கிடைக்கவில்லை. ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் வேண்டும் என்று கேட்டால் அது செண்ட்ரல் கவர்ன்மெண்டிலிருந்து ஸாங்ஷன் ஆகி வர வேண்டும் என்று சொல்லிதட்டிக் கழித்து விடுகிறார்கள். ஆனால் பிற்போக்கு இனத்தவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றால் இந்த அரசாங்கமே கொடுத்து விடுகிறார்கள். ஆனால் அப்படி ஹரிஜனங்களுக்கு கொடுக்காமல் கவர்ன்மெண்டிலிருந்து வரவேண்டும் என்று சொல்லி அப்படியே காட்டி விடுகிறார்கள். மற்றும் அவர்கள் 500 ரூபாய் கொடுத்தால் இவர்கள் 300 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். இதைப்பற்றி நான் டைரக்டரிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே ஹரிஜனங்களுக்கு என்று கொடுக்கப்படும் சலுகைகளை தாராளமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமீபத்தில் மலையப்பன், முத்திருளாண்டி என்று இரண்டு ஆபீசர்கள் இருந்தார்கள். இவர்கள் பிற்போக்கு இனத்தவர்களைச் சேர்ந்தவர்கள். இங்கு பெயரைச் சொல்லக்கூடாது. அவர்களுடைய காலத்தில் ஹரிஜன இலாகாவிற்கு என்று ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து பிற்போக்கு இனத்தவர்களுக்கு செலவு செய்து நல்ல சலுகைகள் கிடைத்து வந்தன. இதைப் பற்றி சொல்லும்போது மற்றவர்கள் ஹரிஜனங்களுக்கு சலுகைகள் காட்டவில்லை என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்வதும் தப்பு. அனுபவத்தில் தான் சொல்லுகிறேன். ஆகையினால் டைரெக்டர்களை நியமிக்கும்போது அந்த இலாகாவின், அந்த சமுகத்தின் அனுதாபத்தைப் பெற்றவர்களாகவும் அனுதாபம் காட்டக்கூடியவர்களாகவும் இருப்பவர்களை ஹரிஜன டைரெக்டர்களாக நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜனங்களுக்கு எவ்வளவு உரிமைகள் வழங்கவேண்டும் என்று நினைக்கிறார்களோ அவைகளை தாராளமாக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹரிஜனங்களில் யார் யார் அறிவாளிகளாக இருக்கின்றார்களோ அவர்கள் பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற இடங்களில் தங்களுடைய சொந்த

[Sri A. S. Sahajananda] [20th July 1957

முயற்சியினால் ஹாஸ்டல்களை அமைக்கிறார்கள். அப்படி அமைக்கும்போது தங்களுடைய ஜில்லாக்களிலேயே அமைக்கிறார்கள். அரும்பாடுபட்டு அமைக்கிறார்கள். அதேமாதிரி ஆந்திரா மந்திரி கனம் கூர்மையா மந்திரியாக இருந்த காலத்தில் ஆந்திராவில் சுமார் 40 அல்லது 50 ஹாஸ்டல்களை ஏற்படுத்தினார். ஆனால் தமிழ் நாட்டில் அப்பொழுது நாலைந்து ஹாஸ்டல்களைத் தான் அமைத்தார். அப்பொழுதுள்ள அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டைப் பார்த்தால் இது தெரியவரும். கனம் பரமேஸ்வரன் ஹரிஜன மந்திரியாக இருந்தபோது இதைப்பற்றி சொன்னேன். அதாவது தமிழ் நாட்டில் நாலைந்து ஹாஸ்டல்கள் தான் இருக்கின்றன, இன்னும் அதிகப்படியாக ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவர் பயந்துகொண்டு அதிகமாக ஏற்படுத்தவில்லை. ஆகவே தமிழ் நாட்டில் அதிகப்படியான ஹாஸ்டல்களை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹாஸ்டல்கள் சம்பந்தமாக இப்பொழுது ஒரு புது விதமான குண்டு நோய் வந்திருக்கிறது. எல்லா ஹாஸ்டல்களையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். முப்பது பேர்கள் படித்துக்கொண்டிருந்தாலும் அந்த ஹாஸ்டல்களை சர்க்கார் எடுத்து நடத்துகிறார்கள். ஆனால் சர்க்கார் எடுத்து நடத்தும் ஹாஸ்டல்களில் ஊழல்கள் அதிகமாக இருக்கிறது. அப்படி தனிப்பட்டோர் நடத்தும் ஹாஸ்டல்களில் இல்லை. பிரைவேட் ஹாஸ்டல்களில் அப்படி அதிகமான ஊழல்கள் இல்லை என்பதை நான் திடமாகச் சொல்கிறேன். பிரைவேட் ஹாஸ்டல்களுக்கு சர்க்கார் 15 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆனால் சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்களுக்கு 18 ரூபாய் செலவழிக்கிறார்கள். சேலம் ஹாஸ்டலை எடுத்துக்கொண்டால் அங்கே 18 ரூபாய் செலவழிக்கிறார்கள். சிலேட்டர் ஹாஸ்டலுக்கு 20 ரூபாய் செலவழிக்கிறார்கள். இன்னும் சில ஹாஸ்டலுக்கு 25, 30, 40 ரூபாய் என்று செலவு செய்கிறார்கள். ஆனால் அப்படி சர்க்கார் ஹாஸ்டல்களுக்கு செலவு செய்வதில்லை. தனிப்பட்டோர் நடத்தும் ஹாஸ்டல்கள்தான் நன்றாக நடைபெறுகிறது. அவர்கள் தான் பயந்துகொண்டு நன்றாக நடத்துகிறார்கள். பாடுபட்டு வேலைக் செய்கிறார்கள். நாலைந்து வருஷங்கள் நடத்தினாலும் ப்ரைவேட் ஹாஸ்டல்களுக்கு சர்க்கார் அங்கீகாரம் கொடுப்பது இல்லை. ஸ்ரீமுஷ்ணத்தில் ஒரு ஹாஸ்டலை ஏற்படுத்தினார்கள். அதில் 30 பேர்கள் இருந்தபோது அங்கீகாரம் வேண்டும் என்று கேட்டதற்கு கொடுக்காமல் அதன் பிறகு பத்தாயிரம் ரூபாய் செலவு செய்த பின் எட்டுப் பேர்கள் இருக்கும்போது அதற்கு சர்க்கார் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தி இப்பொழுது 27 பேர்கள் இருக்கிறார்கள். இப்பொழுதும் அதற்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே ஹாஸ்டல்களையெல்லாம் சர்க்காரே நடத்தவேண்டும் என்ற அந்த எண்ணத்தை மறந்துவிட்டு, "ப்ரைவேட்" ஹாஸ்டல்கள் நடக்கும்படியாகச் செய்வது நலம் என்று நான் சொல்கிறேன்.

மேலும், சர்க்கார் நியாய வார மசோதாவைக் கொண்டு வந்தார்களே அது நாட்டிலே அனுபவத்திற்கு வரவொட்டாமல் சில மிராசுதார்கள் தப்பு பண்ணுகிறார்கள். எங்கள் ஊரில் இருக்கும் தாசில்தார் நியாயம் செய்கிறவர். வக்கீல் வைத்துப் பேசி, அவருடைய புத்தியையும் கலக்கும்படியாக மிராசுதார்கள் செய்கிறார்கள். நியாய வார மசோதா அமுலில் நடக்கும் போது சர்க்கார் சில திருத்தங்கள் செய்யப்போகிறோம் என்றும், சிறு நிலச் சுவாந்தார்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்போகிறோம் என்றும் சொல்வ தால், ஆயிரம் காணிக்கு மேல் நிலம் வைத்துக்கொண்டிருந்தவர்களெல் லாம் சிறு நிலக்காரர்களாக, ஐந்து எக்கர் நிலமுடையவர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைக்கு, பெண்ணுக்கு, பெண்ஜாதிக்கு, பேரனுக்கு பேத்திற்கு என்று இப்படியாக நிலத்தைப் பிரித்துவிட்டு எல்லோரும், சிறு நிலச்சுவாந்தார்களாக மாறிவிடுகிறார்கள். ஆகவே, பெரிய நிலச்சுவாந் தார்களாக இருந்தாலும் சிறிய நிலச்சுவாந்தார்களாக இருந்தாலும் எல்லோரும் ஒன்று தான். "சிறு நிலச்சொந்தக்காரர்களுக்குப் பாதுகாப்பு" என்று சொல்வதினால் பெரு நிலச்சுவாந்தார்களும் தங்களுக்குள் நிலத் தைப் பிரித்துக்கொண்டு சிறு நிலச்சொந்தக்காரர்களாக போய்விடுவதனால் உழைப்பாளிக்கு நஷ்டம் உண்டாகிறது. சிறு நிலக்காரர்களுக்கு அனுதாபம் காட்டுவது கூடாது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.



20th July 1957] [Sri A. S. Sahajananda]

மேலும், நிலங்களைக் குத்தகைக்கு விடக்கூடாது. வாரத்திற்குத்தான் விடவேண்டும் என்று நான் சொல்வேன். பயிரிடுபவனும் ஏமாறாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதுதான். நிலத்தில் நன்றாக விளைவை உண்டாக்கி, உலகம் க்ஷேமம் அடையவேண்டும். ஆகையால், இதுவிஷயத்தில் சர்க்கார் நல்ல விதமான நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

சர்க்கார் மாடுகள் வாங்கிக் கொடுக்கிறார்கள். வீடுகள் கட்டிக்கொடுக்கிறார்கள். இது கடலில் கரைத்த பெருங்காயமாகத்தான் இருக்கிறது. சிதம்பரம் தாலூகாவிலே 100 கிராமங்கள் இருந்தும், 70 பேர்களுக்குத் தான் இந்த உதவி அளித்தார்கள். அதனால், எல்லோருக்கும் கொடுத்தது ஆகுமா ? எல்லோரும் அந்த நன்மையை அடையும்படியாகச் சர்க்கார் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, Sir, on a point of order. The hon. Member who just spoke mentioned that Sri Muthirulandi and Sri Malayappan being representatives of the backward classes might be partial in awarding scholarships to Harijans. It is an insinuation against the officers of Government. The Hon. Minister has said that the amount allotted for Harijans can be given only to the Harijans and the amount allotted for the backward classes can be given only to the backward classes. In view of this statement it will be fair on the part of the hon. Member to withdraw the insinuation.

MR. SPEAKER : So far as officers of Government are concerned, it has been the custom in this House to allow criticism of their actions in the House because the Hon. Minister can reply on their behalf. Criticism of persons who are not Members of this House or of persons who through this House are not able to reply, such criticism is prohibited. That is the custom followed by previous Speakers also in this House. But so far as officers of Government are concerned, every hon. Member is allowed to criticise their actions. The Hon. Minister while replying to the debate will defend their actions.

SRI M. JAGANNADHAN : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஹரிஜன மான்யத்தின் மேல் கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரரேபணையை ஆதரித்துச் சில உண்மைகளை மறைக்காமல் உரைப்பதற்கு நான் முன் வந்துள்ளேன். 10-33 a.m.

நம்முடைய சென்னை மாகாணத்திலே ஹரிஜனங்களுடைய வாழ்க்கைத் தரம் கிஞ்சித்தேனும் உயரவில்லை என்ற உண்மையை எல்லோரும் ஒத்துக் கிறார்கள்.

SRI P. S. K. LAKSHMIPATHIRAJ : On a point of order, Sir "இந்தச் சபையில் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்" என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார். நாங்கள் யாரும் ஒத்துக்கொள்ளவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

MR. SPEAKER : "ஒத்துக்கொள்கிறார்கள்" என்று அந்த கனம் அங்கத்தினர் சொல்கிறார். "ஒத்துக்கொள்ளவில்லை" என்று சொல்ல வேண்டுமானால், நீங்கள் பேசும்போது சொல்லலாம். ஆனால், நீங்கள் இப்பொழுது எழுப்பியது On a point of order ஆகாது.

SRI M. JAGANNADHAN : ஹரிஜனங்களுடைய வாழ்க்கைத்தரம் இன்னும் எந்த அளவுக்கும் உயரவில்லை என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், இந்தச் சபையின் முன்னால், "ஹரிஜனங்கள் இப்பொழுது தங்க நகைகளை, வாங்கி அணியவும், வெள்ளிப் பாத்திரங்கள் உபயோகப்

[Sri M. Jagannadhan] [20th July 1957

படுத்தவும், அந்த அளவுக்கு அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டது" என்று ஆளும் கட்சியின் சார்பிலே அன்றொரு நாள் அறிவிக்கப்பட்டது. இன்றைக்கும் கிராமப் பகுதிகளிலே வாழ்கின்ற லட்சக்கணக்கான ஹரிஜன மக்கள் கால் வயிற்றுக் கஞ்சிக்கும், கட்ட கந்தைக்கும், குந்த குடிசைக்கும் கதியற்றவர்களாக, நடைப்பிணங்களாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற அவல நிலைமையை நாம் கிராமங்களில் சென்று பார்த்தால் நன்றாக விளங்கும். நம் மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் இந்த உண்மையை எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைமையில் தான் நாம் இன்று இருக்கிறோம்.

நகரப்புறங்களிலே தீண்டாமை ஓரளவுக்கு ஒழிந்து வருகிறது. ஆனால்; கிராமப் புறங்களிலே இந்தத் தீண்டாமை இன்னும் கையாளப்பட்டுதான் வருகிறது. இந்தக் காட்டுமிராண்டித் தனமான கொள்கை ஹரிஜனங்களைப் புழுக்களைவிட கேவலமான நிலைமையில் தள்ளிவிட்டது. சமுதாயத்திலே அவர்கள் படு பாதாளமான நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் தீண்டாமையை கிராமப் பகுதிகளிலும் ஒழிப்பதற்காக தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால், இப்பொழுது மத்திய சர்க்காரால் 1955-வது ஆண்டிலே கொண்டுவரப்பட்ட 22-வது சட்டமாகிய தீண்டாமைக் குற்றங்கள் சட்டம் அமுலுக்கு வந்திருந்தபோதிலும் அந்தச் சட்டமானது தகுந்த முறையிலே அமுலாக்கப்படவில்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சட்டங்கள் சில தீட்டப்பட்டிருக்கலாம். ஆனால், அவை நடைமுறையிலே மக்களுக்கு பயன் விளைவிக்கக்கூடிய முறையிலே அமுலாக்கப்படுகின்றனவா என்றால், இல்லை. உதாரணமாக, மதுவிலக்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்தச் சட்டம் சரியாக அமுலில் நடைபெறவேண்டுமென்ற காரணத்தால், அதற்குவேண்டிய சிப்பந்திகளைச் சர்க்கார் நியமனம் செய்து, இன்னும் போலீஸ் இலாகாவின் மூலமாகவும்கூட வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்க, வீதி வீதியாக, கிராமம் கிராமமாக இந்தப் போலீஸ் அதிகாரிகள் எப்படித் திரிந்து அலைகிறார்களோ, அதைப்போல, ஏன் தீண்டாமைக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காகவும் போலீஸ்காரர்களுக்கோ, இன்னும் அதற்காக நியமனம் செய்யப்பட்ட தனிப்பட்ட சிப்பந்திகளுக்கோ உத்தரவு இடக்கூடாது ? உண்மையிலேயே இந்தச் சர்க்காருக்குத் தீண்டாமையைக் கூடியசீக்கிரத்தில் ஒழிக்கவேண்டும் என்ற அக்கறை இருக்குமானால், அவர்கள் இம்மாதிரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

ஆளும் கட்சியின் தரப்பிலே சில வாதங்கள் கூறப்படுகின்றன. "இம்மாதிரி நாம் இந்த ஒரு சமுதாய சீர்திருத்தத்தை உடனடியாக இந்த நாட்டில் கொண்டுவர முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் இதைச் செய்ய முடியும். மக்களிடத்திலே மன மாற்றம் ஏற்படவேண்டும்" என்று அவர்கள் கூறுகிறார்கள். இதைப்பற்றி அமெரிக்காவிலுள்ள சமுதாய சாஸ்திரியான திருவாளர் ஸ்காட் நேரிங் என்பவர் "சமுதாய திருத்தப்பாடு" Social Adjustment என்ற தாம் எழுதிய நூலில் குறிப்பிடுகையில் "ஒரு தேசத்தின் சமுதாய ஊழலை—ஒரு சமூகத்தின் ஆசார ஊழலை தேசத்தின் சட்டம் மூலமாகத்தான் அகற்ற முடியுமே தவிர வேறு விதங்களால் அகற்ற முடியாது" என்று குறிப்பிட்டிருக்கிறார், ஆகவே, வெறும் சட்டம் மாத்திரம் கொண்டுவந்தால் போதாது ; அந்தச் சட்டத்தை அமுலாக்குவதற்கு நடைமுறையிலே தகுந்த நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள முன்வரவேண்டுமென்று நான் அவர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கார் ஹரிஜனங்களுக்காக எவ்வளவோ நன்மைகளைச் செய்வதாகப் புள்ளி விவரங்களோடு அவர்கள் பேசுகின்றார்கள். ஆனால், நாம் அந்தப் புள்ளி விவரங்களை நன்றாகக் கவனிப்போமானால் நமக்குச் சில உண்மைகள் நன்றாக விளங்கும். உதாரணமாக, ஹரிஜனங்களுக்கு ஏராளமான குடிமனை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது. நமக்குக் கிடைத்திருக்கிற ஹரிஜன க்ஷேம நல இலாகாவின் நிர்வாக அறிக்கையிலிருந்து சில புள்ளி விவரங்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தில்



20th July 1957] [Sri M. Jagannadhan]

கொடுக்க விரும்புகிறேன். தென்னாற்காடு ஜில்லா சுமார் 6·90 லட்சம் ஹரிஜன ஜனத்தொகை கொண்டது. ஆனால், 1954–55-ம் ஆண்டிலே அந்த ஜில்லாவிலே ஒரு செண்ட் புறம்போக்கு நிலம்கூட குடிமனையாக எவருக்கும் வழங்கப்படவில்லை. தஞ்சை ஜில்லா 6·57 லட்சம் ஹரிஜன ஜனத்தொகை கொண்டது. ஆனால், அங்கே 1954–55-ல் ஒரு செண்ட் புறம்போக்கு நிலம்கூட அவர்களுக்கு குடிமனையாக வழங்கப்படவில்லை. செங்கற்பட்டு ஜில்லா 5·26 லட்சம் ஹரிஜனங்களைக்கொண்ட ஒரு ஜில்லா. அந்த ஜில்லாவில் ஒரு செண்ட் புறம்போக்கு நிலம்கூட ஹரிஜனங்களுக்கு குடிமனையாக வழங்கப்படவில்லை. இவைகளெல்லாம் அந்த நிர்வாக அறிக்கையில் காணப்படுகின்றன. அதைப்போலவே இராமநாதபுரம் ஜில்லா 2·98 லட்சம் ஹரிஜன ஜனத்தொகை கொண்டது. நமக்குக் கொடுத்திருக்கும் latest administration report-ல் இருந்துதான் நான் குறிப்பிடுகிறேன். அதிலுள்ள புள்ளி விவரங்களைத்தான் நான் எடுத்துக் கூறுகிறேன். இராமநாதபுரம் ஜில்லாவில் 2·98 லட்சம் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கு இருக்கிறது. ஆனால், அந்த ஜில்லாவிலே ஒரு செண்ட் புறம்போக்கு நிலம் கூட ஹரிஜனங்களுக்குக் குடிமனையாக வழங்கப்படவில்லை. மதுரை ஜில்லாவிலே 4·36 லட்சம் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்திருப்பதெல்லாம் 90 செண்ட் நிலம்தான். அதுவும் பள்ளத்தாக்கான இடத்திலே. திருநெல்வேலி ஜில்லாவில் இன்றைக்கு 3·72 லட்சம் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்திருப்பதெல்லாம் 1·56 ஏக்கர் நிலம்தான்—குடிமனையாக. வடாற்காடு ஜில்லாவில் 5·4 லட்சம் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். ஆனால், அங்கு 91·5 ஏக்கர் நிலம்தான் குடிமனையாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையிலே, இந்தப் புள்ளி விவரங்களைப் பரிசீலனை செய்து பார்த்தால், ஹரிஜனங்களுக்குக் குடிமனை வழங்கும் விஷயத்தில் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் அக்கறை நன்றாக விளங்குகிறது. ஹரிஜனங்கள் குடியிருப்பதற்குக்கூட வசதி இல்லாமல் மிகவும் கேவலமான நிலைமையிலே, தெருக்களில் அவர்கள் திரிந்துகொண்டிருக்கிற காரணத்தால், ஹரிஜன மக்கள் வாழ்வதற்கு, அவர்கள் குடியிருப்பதற்குத் தகுந்த ஒரு வசதியைத் தேடிக்கொடுக்கும் கடமையும் பொறுப்பும் அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிறது. அந்தக்கடமையிலிருந்து இதுவரை அரசாங்கத்தார் நழுவிக்கொண்டிருப்பதால் உண்மையிலேயே அந்தக் கடமையை நிறைவேற்றியவர்களாக நான் கருத முடியாமலிருக்கிறது.

அடுத்தபடியாக, நில ஆர்ஜிதம் செய்து, ஹரிஜனங்களுக்குக் குடிமனைகள் வழங்குகிற விஷயத்திலே ஒன்றை மாத்திரம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நில ஆர்ஜிதம் செய்யும் விஷயத்தில் ஏராளமாக காலதாமதம் ஏற்படுகிறது. ஒன்றை மாத்திரம் எடுத்துக்காட்டாகக் கூறுகின்றேன். என்னுடைய தாலூகாவாகிய திண்டிவனம் தாலூகாவில் சுமார் பத்து வருஷங்களாக பனிச்சமேடு என்னும் கிராமத்தில் ஹரிஜனங்களுக்கு 5 செண்ட் நிலம் குடிமனைக்காக வழங்கவேண்டும் என்று அங்குள்ள ஹரிஜனங்கள் விண்ணப்பம் சமர்ப்பித்தார்கள். மந்திரிகளை வரவழைத்து மகாநாடு நடத்தினார்கள். பிறகு அந்தத் தொகுதி சட்டசபை அங்கத்தினர் மூலமாகவும் இந்தச் சபையில் பிரச்னை எழுப்பப்பட்டது. பல விதங்களில் அரசாங்கத்தின் கவனம் இந்தப் பிரச்னையின்பால் இழுக்கப்பட்டு கடைசியாக அவர்களுக்கு அந்தக் குடிமனை பத்து வருஷங்களுக்குப் பின்னால் தான் கிடைத்திருக்கிறது.

மனைகட்டுகள், ஆர்ஜிதம் செய்து ஹரிஜனங்களுக்கு வழங்குவதில் ஏராளமான காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இந்த காலதாமதத்தை குறைப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிகொடுக்கப்பட்டுவருகிறது, சர்க்காருடைய கொள்கை சேரிகளை ஒழிக்கவேண்டுமென்பதுதான். கட்டப்படும் வீடுகள் எல்லாம் சேரிகளில்தான் கட்டுகிறார்கள். இது அவர்களுடைய (சர்க்காருடைய) கொள்கைக்கே மாறாக இருப்பதினால் ஹரிஜனங்களுக்கு ஊர்ப்புறங்களிலேயே மனைகள், கட்டிக் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri M. Jagannadhan] [20th July 1957

கல்வித்துறையில், ஹரிஜனங்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். 1954–55 ஆண்டில் ஹரிஜனங்களுக்கு பொது கல்விக்காக செலவிடப்பட்டிருக்கும் தொகை, ஆள் ஒன்றுக்கு 5 நயா பைசா; உயர்தர படிப்புக்காக செலவிடப்படும் தொகை ஆள் ஒன்றுக்கு 2 நயா பைசா. கல்லூரி படிப்புக்காக செலவிடப்படும் தொகை 5 நயா பைசாவும், தொழிற் கல்விக்காக 2 நயாபைசா செலவிடப் பட்டிருக்கிறது. இந்த தொகை, பெரிய தொகை என்று சொல்லமுடியாது. உண்மையில் கல்வி துறையில் முன்னேற்றம் அடையவேண்டுமானால், இன்னும் அதிகமான பணத்தை ஒதுக்கி, அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை செய்து தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி கணக்கு போட்டு சொல்வது, விபரீதமாகவும் வியப்பாகவும் இருக்கலாம். ஆனால் தேசபக்தர் லாலா லஜபத்ராய் அவர்கள் "துரதிர்ஷ்ட இந்தியா" என்று அவர் எழுதிய புஸ்தகத்தில், அவர் கையாண்ட முறையைத்தான் நானும் பின்பற்றியிருக்கிறேன்.

Mr. Speaker sounded the gong to indicate that the hon. Member's time was up.

SRI M. JAGANNADHAN : I want two minutesmore, Sir.

MR. SPEAKER : I am sorry I cannot allow two more minutes. I rang the bell when the hon. Member had two mihutes more. Let him finish his speech.

SRI M. JAGANNADHAN : அவர் அதில் கூறியது "இந்தியாவிலுள்ள 50,000 ஐரோப்பிய மாணவர்களுக்காக இந்திய சர்க்கார் வருமானத்திலிருந்து வருஷந்தோறும் 50 லட்ச ரூபாய், அதாவது நபர் ஒன்றுக்கு 100 ரூபாய், செலவழிக்கப்படுகின்றது." இந்தச் செலவினத்தை இந்தியாவில் வாழும் சுமார் 2 லட்சம் ஐரோப்பியர்களுக்கும் வீதம் போட்டுப் பார்த்தால் நபர் ஒன்றுக்கு 25 ரூபாய் ஆகிறது. இந்தியர் விஷயத்திலோ நபர் ஒன்றுக்கு 4 அணுதான் செலவு செய்யப்படுகிறது. "25 ரூபாய்க்கும் 4 அணுவுக்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்." இதே முறையைதான் நானும் அனுஷ்டித்து, இந்த நயா பைசா விகிதத்தை குறிப்பிட்டிருக்கிறேன். சர்க்கார் அவர்கள் நன்ருக ஆலோசனை செய்து, மேலும் கல்வி அபிவிருத்திக்கு, வேண்டிய பணத்தை ஹரிஜனங்களுக்கு செலவு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களின் வேலையில்லா திண்டாட்டத்தைப்பற்றி . . .

MR. SPEAKER : I thought the hon. Member would finish his speech with the particular idea which he was elaborating. I now see that he is starting a new idea. I am sorry I cannot allow him to speak further. Sri P. Urkavalan will now speak.

SRI P. URKAVALAN : சபாநாயகர் அவர்களே ஹரிஜனமான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள்கூட, சர்க்கார் ஹரிஜன நலனைப்பற்றி கவனிக்கவில்லை என்று கூறினார்கள். ஆயிர ஆயிரக்கணக்கான ஹரிஜன பையன்கள் படித்துவருகிருர்கள். கல்லூரிகளிலும் எவ்வளவுவோ பையன்கள் படிக்கிருர்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் அவர்களுக்காக பல ஹாஸ்டல்கள் திறக்கப்பட்டும், வீடுகள் கட்டப்பட்டும் வந்திருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் வீடுமனைகள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், அங்கேயும் அவர்களுக்கு வீடு மனைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்காக சர்க்கார் பலவிதமான நன்மைகள் செய்துகொண்டு வருகிருர்கள்.

ஹரிஜன ஹாஸ்டல்களையும்பற்றி சிலர் குறை கூறினார்கள் அது ஓரளவு வாஸ்தவம்தான். தனியார் நடத்தும் ஹாஸ்டல்களை சர்க்காரே எடுத்துக்கொண்டு நடத்துவது மிக அவசியம் என்று நான் கருதுகிறேன். தனியார் ஹாஸ்டலில் மாணவன் ஒருவனுக்கு ரூபாய் 15 கொடுக்கப்படுகிறது. ஒன்று



20th July 1957] [Sri P. Urkavalan]

சர்க்காரே இந்த ஹாஸ்டல்களை எடுத்துக்கொண்டு நடத்தவேண்டும், அல்லது சர்க்கார் மாணவன் ஒருவனுக்கு ரூபாய் 15 லிருந்து ரூபாய். 20 ஆக உயர்த்தவேண்டும். சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்களில் வார்டனுக்கு சம்பளம், சமையல்காரருக்கு சம்பளம், இன்னும் மற்ற சிலவுகளும் செய்யப்படுகின்றன. ஆனால் தனியார் நடத்தும் ஹாஸ்டல்களுக்கு சர்க்கார் அளிக்கும் ரூபாய் 15-க்குள் இவ்வளவு சிலவுகளையும் அவை செய்யவேண்டுமானால் மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆகையால் இவைகளை சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமாய்க்கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கார் ஹரிஜனங்களுக்கு மாடு வாங்குவதற்கும், கிணறுகள் வெட்டுவதற்கும் பணம் கொடுக்கிருர்கள். இந்தப் பணமானது யாருக்காக செலவழிக்கிறேமோ அவர்களுக்கு பூராவும் போய்சேருவது கிடையாது. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்குபாயுமாபோல் என்பதுபோல ஹரிஜனங்களுக்கு சர்க்கார் செலவு செய்யும் பணம் சிறிதுதான் போய்ச் சேருகிறது. அந்தந்த ஜில்லாவிலுள்ள Welfare Officer-கள் நேரடியாக இந்தப் பணத்தைப் ஹரிஜனங்களுக்கு கொடுத்தால் நலமாய் இருக்கும். தாசில்தார்கள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், விசாரணை செய்கிறேம், விசாரணை செய்கிறேம் என்று சொல்லி அதிக காலதாமதம் செய்து மார்ச் மாதக்கடைசியில் அவசர அவசரமாக யார்கையிலோ இப்பணத்தைக் கொடுத்துவிடுகிருர்கள். ஆதலால் அந்தந்த ஜில்லா Welfare Officer-களே தகுந்தபடி விசாரணை செய்து நேரடியாக இப்பணத்தை விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்யவேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணை அமைத்துக் கொடுத்தால் மிக நலமாய் இருக்கும். ஹரிஜனங்கள் விவசாயிகளாக இருப்பதால், இப்படிச் செய்து கொடுத்தால் அவர்களுக்கு மிக்க நன்மை பயக்கும்.

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்து கொடுப்பது மிக கஷ்டமாய் இருக்கிறது. கிராம கர்ணம், கிராம முன்சீப் இவர்கள் புறம்போக்கு நிலங்கள் எங்கெங்கே இருக்கிறது என்கிற புள்ளி விவரங்களை, கலெக்டர் கேட்டும்கூட சரியானபடி கொடுப்பதில்லை. இந்நிலைமை சர்க்கார் ஆவனசெய்யவேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ரிஸர்வ் பாரஸ்டு காடுகளில் தரிசாக உள்ள நிலங்களை ஹரிஜனங்களுக்கு விவசாயம் செய்வதற்கு கொடுக்கத்தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அக்காடுகளில் உள்ள மரங்கள் அழியாதபடி பார்த்துக்கொண்டு அங்குள்ள நிலங்களை ஹரிஜனங்களுக்கு ஜாரிசெய்து கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இதையும் கூட்டுறவு முறையில் அமைத்துக்கொடுத்தால் அவர்கள் ஏலக்காய் முதலியவை பயிர் செய்ய நன்மையாய் இருக்கும் என்று சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI V. VEDAYYAN: அவைத்தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய ஒரு கனம் அங்கத்தினர், தாழ்த்தப்பட்டவர்களிலேயே சில வித்தியாசங்கள் இருப்பதாகச் சொன்னார். இந்த வித்தியாசங்களை பயன்படுத்தி ஆதாயம் அடைய நினைப்பவர்களே இதுமாதிரியான வித்தியாசங்களை எல்லாம் உண்டாக்குகிருர்கள். இந்த வித்தியாசங்கள் மானசீகமானவையே தவிர உண்மையானவை அல்ல. தலைக்கு மேல் சாண்போனால் என்ன, முழம்போனால் என்ன என்று சொல்வது போல், இந்த வித்தியாசங்களை எல்லாம் பாராட்டக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். 10–49 a.m.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்டவர்களுக்காக வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது, ஜாதி ஹிந்துக்கள் இருக்கும் இடங்களிலும், அங்கே காலி இடங்கள் இருந்தால், கட்டிக்கொடுத்தால் நல்லது. அல்லது, தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் காலனிகள் கட்டிக்கொடுக்கும் இடங்களில் மேல் ஜாதிக்காரர்களுக்கும் (பார்வர்ட் கம்யூனிடீஸ்) மொத்தம் ஐம்பது வீடுகளானால் குறைந்தது ஐந்து வீடுகளாவது கட்டிக்கொடுக்கவேண்டும் ; குறிப்பாக பிராமணர்களுக்கும் அங்கே வீடுகள் கட்டிக்கொடுக்கலாம். பிராமணர்களிலும்

ஏழைகள் இருக்கிறார்கள். நான் சொல்லும் யோசனைப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தால், சமுதாயத்தில் நல்ல பண்பு ஏற்படும் ; சேரி என்ற பெயரின் புழக்கமும் மறையும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்டவர்களுக்காக நடத்தப்படும் ஹாஸ்டல்களில் இப்போது மற்ற பிற்பட்ட வகுப்பினர் (Backward Community) தான் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அங்கெல்லாம் உயர்ந்த ஜாதிக்காரர்களையும் சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்கும். குறிப்பாக பிராம்மணர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். காரணம், எல்லா மாணவர்களும் அங்கே நன்றாகப் படிப்பதற்கு அவர்கள் உதவியாக இருப்பார்கள். மேலும், அங்கே நல்ல பண்பும் இருக்கும். பிராம்மணர்கள், அனேகமாக, ஜாதி வித்தியாசம் பாராட்டுவதில்லை. அவர்கள் எல்லோருடனும் நல்ல முறையில் பழக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் ஜாதி வித்தியாச மனப்பான்மை இல்லை. உதாரணமாக, பிராம்மணர்கள் ஹோட்டல்களுக்கு எல்லோரும் ஹரிஜனங்களுக்கோ மற்றவர்களுக்கோ எவ்வித தடையும் இல்லை—சென்று சாப்பிடலாம். ஆனால் மற்ற உயர் ஜாதிக்காரர்கள் நடத்தும் ஹோட்டல்கள் பலவற்றில் கட்டுப்பாடு இருக்கிறது. அந்த ஹோட்டல்களுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் சென்றால், ஹோட்டல்காரர்கள் " நீ யார் ? நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன் ? " என்று கேட்டு, அவர்களை, கைக் கூண்டில் அடைப்பதுபோல், தனி இடத்தில் ஒதுக்கி, தனி கிளாஸ்களையும் மற்றப் பொருள்களையும் கொடுத்து உணவளிக்கிறார்கள். இப்படிப்பட்ட தீண்டாமை ஒரு மனப்பிராந்திதான். இந்த மனப்பிராந்தியை ஒழிப்பதற்காக, ஹரிஜனங்கள் ஹாஸ்டல்களில் முற்பட்ட சமூகத்தினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலங்களை ஆர்ஜிதம் செய்துகொடுக்கும் விஷயத்தைப் பொறுத்தவரையில் (arable lands) விலை மதிப்புள்ள நிலங்கள் ஹரிஜனங்களுக்கு ஆர்ஜிதம் செய்துகொடுக்கப் படுவதில்லை. போர்டின் " ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் " படி அந்த நிலங்களை கலெக்டர்கள் ஏலம் போடுகிறார்கள். அப்படி ஏலத்திற்கு விடப்பட்டு அதிக விலை கொடுப்பவர்களுக்கு அவைகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, இது சம்பந்தமான விதிகளைத் திருத்தி, இனிமேல் அப்படிப்பட்ட நிலங்களை முதலில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் தாம் பதிலளிக்கும் போது எவ்வளவு நேரம் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

THE HON. SRI P. KAKKAN : நான் பதிலளிப்பதற்கு 40 நிமிஷங்கள் கொடுக்க வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

10–53 a.m. SRI A. V. P. ASAITHAMBI : கனம் அவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காகக் கோரப்படும் மானிய தொகையில் சிறிது குறைக்கவேண்டும் என்று வெட்டுப் பிரேரணையை திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாங்கள் ஆதரித்துப் பேசுவதைக் கண்டு, ஆதித் திராவிடர்களுக்காக கோரப்படும் மானியத் தொகையையும் குறைக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கோருகிறார்கள்' என்ற தவறான பிரசாரத்தை யாரும் செய்யமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். வெட்டுப் பிரேரணை என்பது ஜனநாயக சம்பிரதாயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது என்பது அனைவருக்கும் தெரியும் என்று நான் நம்புகிறேன்.

இந்தியா பூராவையும் எடுத்துக்கொண்டு, இந்த நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தால் என்ன காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று பார்க்கும்போது, சென்னை மாநில அரசாங்கம் ஓரளவுக்கு பல நல்ல காரியங்களைச் செய்திருப்பது தெரிகிறது என்பதை நான் தைரியமாகக் கூறுகிறேன். நல்ல பல காரியங்களைச் செய்ததற்காக சென்னை அரசாங்கத்தாரையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் இதற்கெல்லாம் காரணம் யார் என்று பார்க்கும்போது, இங்கேயுள்ள திராவிட முன்னேற்றக்





கழகம் என்ற கட்சிதான் என்பது தெரிகிறது' என்றும் நான் கூற விரும்புகிறேன். காந்தியடிகளைப்பற்றியோ காங்கிரஸைப் பற்றியோ குறைகூறவேண்டும் என்ற எண்ணத்தால் நான் இப்படிச் சொல்கிறேன் என்று யாருமே கருத வேண்டாம். தாழ்த்தப்பட்டவர்களுக்காக, காந்தியடிகளும் காங்கிரசும் சாதித்ததைவிட, தென்னாட்டில் நாங்கள் சாதித்திருக்கிறோம் என்பதை இந்த சபையில் கனம் சபாநாயகர் மூலம் எல்லோருக்கும் தெரிவிக்க நான் ஆசைப்படுகிறேன். காந்தியடிகள் " இந்த தேசத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள் கிடைக்கும்வரையிலும் எல்லோருக்கும் உரிமைகள் கிடைக்காது " என்று கூறினார்கள். நாங்கள் அதே கருத்தைத்தான் 1917-ஆம் ஆண்டிலிருந்து சொல்லி வந்திருக்கிறோம். " தாழ்த்தப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைத்தாலொழிய, இந்த நாட்டிற்குக் கிடைக்கும் விடுதலை உண்மையான விடுதலையாக இருக்காது " என்ற கருத்தைத்தான் நாங்கள் 1917-ஆம் ஆண்டிலிருந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

முன்பு தீண்டாமை என்பது மிகக் கொடுமையாக இருந்தது. தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டவர் என்று இன்று போற்றப்படும் காந்தியடிகளை தென்னாட்டில், கன்னியாகுமரியில், ஆலயத்திற்குள் வரக்கூடாது என்று தடுத்திருக்கும் அளவுக்கு இந்த நாட்டில் அப்போது தீண்டாமை இருந்தது. அப்படிப்பட்ட தீண்டாமையையும், ஜாதி வித்தியாசக் கருத்துக்களையும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று வித்தியாசம் பாராட்டப்படும் நிலைமையையும் ஒழிக்கவேண்டும் என்பதற்காக, அவைகளைப்பற்றி இந்தநாட்டு மக்களிடம் எடுத்துச்சொல்லி, எடுத்துச் சொல்லி அதன் காரணமாக நாஸ்திகர்கள் என்றும், தேசத் துரோகிகள் என்றும், வகுப்புவாதிகள் என்றும் பெயரெடுத்த கட்சியினர் இந்த நாட்டில் இருப்பார்களேயானால், அவர்கள் நாங்கள்தானே தவிர வேறு யாரும் இல்லை. " ஆலயங்களில் ஹரிஜனங்களை அனுமதிக்காது ஏன் ? கட்டாயம் ஹரிஜனங்களை ஆலயங்களில் அனுமதிக்கவேண்டும் " என்று சொன்ன காரணத்தினால்தான் எங்களை எல்லோரும் நாஸ்திகர்கள் என்று அழைத்தார்கள்.

" முதன் முதலாக ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை நடத்தியவர்கள் நாங்கள் தான் " என்று சொன்னால், " நீங்கள் ஆலயப் பிரவேசத்திற்குக் கிளர்ச்சி செய்தீர்கள், தோற்றுப் போனீர்கள் " என்று மதுரையிலிருந்து வந்திருக்கும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ பி. எஸ். கே. லட்சுமிபதிராஜ் அவர்கள் கூறினார்கள். " வெற்றி பெற்றுவிட்ட இறுமாப்பினால் அப்படிச் சொல்கிறார் " என்று நான் அவருக்கு பதில் சொல்ல முடியும். ஆனால் நான் அப்படிச் சொல்ல விரும்பவில்லை. கனம் அங்கத்தினரின் ஊரான பழனியில் 1922 அல்லது 1923-ல் என்று நினைக்கிறேன்—கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்கக்கூடாது என்ற நிலைமை இருந்தது. ஆனால், அதே ஊரில், எங்கள் முன்னாள் தலைவர் திரு. வி. எஸ். கண்ணப்பரும், திரு. சுப்பிரமணியமும் ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு இருந்த தடைகளை உடைத்தெறிந்து, ஆலயத்தினுள்ளே சென்று, உதையும் பட்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. மதுரையில் ஆலயப் பிரவேசத்தை நடத்திக் காட்டியவர்களும் நாங்கள்தான். அந்த அளவிற்கு, 1917-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை, முதலில் திராவிடக் கழகத்தினராகவும், பிறகு சுயமரியாதைக் கட்சியினராகவும், அதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தினராகவும் இருந்து, நாங்கள் தாழ்த்தப்படவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வந்திருக்கிறோம்.

ஜாதி மத பேதத்தை ஒழித்து நாட்டில் நல்ல நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தவர்கள் நாங்கள்தானே தவிர, காங்கிரஸ்காரர்கள்கூட அல்ல. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக காங்கிரஸ்காரர்கள் எதையாவது தாங்களாக செய்திருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டுமென்றால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஹரிஜனங்கள் என்ற பெயரைக் கொடுத்து, அதற்கு ஒரு புது அர்த்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தான் சொல்லலாம். நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரொம்ப நல்ல பெயரைக் கொடுத்திருக்கிறோம். அவர்களை திராவிடர்கள் என்று அல்ல, ஆதித்திராவிடர்கள் என்று அழைக்கிறோம். அவர்களுக்கு

[Sri A. V. P. Asaithambi] [20th July 1957

1917-ல் அந்தப் பெயரைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே அவர்களை நாங்கள் திராவிடர்களுக்கு முந்தியவர்கள் என்று கருதுகிறோம். அவர்களுக்கு ஆதித்திராவிடர்கள் என்ற பெயரைச் சூட்டிய பெருமை பெரியார் ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கருக்குத் தான் உண்டேதவிர, வேரு யாருக்கும் கிடையாது. மேலும், ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளில் "பிராமணர்களுக்கு மட்டும்" என்று எழுதப் பட்டிருந்த போர்டுகளை, கிளர்ச்சி செய்து ஒழித்துக்கட்டியவர்கள் நாங்கள் தானே தவிர வேறு யாரும் இல்லை. இவைகளை யெல்லாம் நான் என் இங்கே சொல்கிறேன் ? தீண்டாமை ஒழிப்பில், காந்தியடிகளுக்கும் காங்கிரசுக்கும் இருக்கும் பெருமையை விட ஏராளமான பெருமை எங்களுக்கும் இருக்கிறது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இவைகளையெல்லாம் நான் இங்கே சொல்கிறேன்.

காங்கிரஸ்காரர்கள் தீண்டாமை ஒழிப்பிற்காக எவ்வளவு பாடுபட்டார்கள் என்றும், காங்கிரஸ் கட்சியில் தீண்டாமை ஒழிப்பு எவ்வளவு தூரம் பின்பற்றப் பட்டது என்றும் பார்த்தால், காங்கிரஸ்காரர்கள் வெட்கப்பட வேண்டியிருக்கிறது. இதற்கு நான் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். நமது முதல் அமைச்சர் கனம் ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்களின் சொந்த ஊராகிய விருது நகரில் முதன் முதலாக காங்கிரஸையும் கதரையும் புகுத்தியவர் ஸ்ரீ கோவிந்தசாமி நாடார் என்பவர் ஆவார். அவர் அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சியிலிருந்து நாட்டிற்காக உழைத்தார். அவர் திருநெல்வேலியில் நடந்த தீண்டாமை ஒழிப்பு மகாநாட்டிற்குச் சென்றிருந்தார். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் உட்பட பல மாபெரும் காங்கிரஸ் தலைவர்கள் அந்த மகாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அப்போது அங்கே அறு வகைக் காய்கறிகளும் கொண்ட சாப்பாடுடன் விருந்து நடந்தது. எல்லோரும் சாப்பிடுவதற்கு உட்கார்ந்திருந்த போது, ஸ்ரீ கோவிந்தசாமி நாடார், மதிப்பிற்குரிய ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் உட்கார்ந்துகொண்டிருந்த இடத்திற்கு சாப்பிடுவதற்குப் போனார். அங்கே அவர் சென்றவுடன் அங்கிருந்த பிராமணத் தலைவர்கள் " நாடாரே இங்கே சாப்பிடுவதற்கு உங்களுக்கு இடம் இல்லை. அங்கே செல்லுங்கள் " என்று சொன்னார்கள். அதைக் கேட்டவுடன் ஸ்ரீ கோவிந்தசாமி நாடார் விருதுநகருக்கு வந்து, தாம் அணிந்திருந்த கதரைத் தீயிட்டுக் கொளுத்தினார். இந்த விஷயம் கனம் அமைச்சர் ஸ்ரீ கக்கன் அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம் ; அவர்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகத் தான் நான் இதைச் சொன்னேன். எதற்காக இவைகளை நான் சொல்கிறேன் என்றால் நாங்கள் தான் அத்தகைய காரியங்களைச் செய்தோம் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் செய்து காட்டினோம். இந்த விஷயத்தில் ஹரிஜனங்கள் என்று சொல்லப்படுகிற தாழ்த்தப்பட்டவர்களுக்கு பொருளாதாரத் துறையில் மாத்திரம் உயர்வு கொடுப்பது என்ற கொள்கை போதாது. அவர்களுக்குச் சமுதாயத்தில் சம உரிமை வேண்டும். அவர்களை மதித்து மற்றவர்கள் நடக்க வேண்டும். அவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கிற மனப்பான்மை மாறி, அவனைப் பார்த்து " அடே எட்ட நில்லுடா " என்று சொல்வதற்கு உயர் சாதிக்காரர்கள் அஞ்சவேண்டும். இந்த நிலைமையை உண்டாக்க உண்மையிலேயே பாடுபட்டவர்கள் நாங்கள் தான் என்று சொல்கிறோமே தவிர வேறு யாரும் இல்லை. ஐயருடைய ஹோட்டலுக் சென்று இரண்டு இட்டிலி கொடு என்று கேட்பதற்கு அஞ்சி வாழ்ந்துக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட மகன் ஒருவன், எங்கள் கட்சியின் பிரசாரம் வலுக்க வலுக்க "ஐயரே இரண்டு இட்டிலி கொடு" என்று துணிந்து அவர்களும் நாமும் ஒன்று தானே என்கிற மனப்பான்மையில் கேட்க மாத்திரம் ஆரம்பிக்கவில்லை. எங்கள் கட்சிப் பிரசாரம் மேலும் மேலும் வலுக்க, அவர்களோடு ஒரு உறவு முறைக்கு வருகிற நிலைமையில் " மாப்பிள்ளை இரண்டு இட்டிலி கொடு " என்று கேட்கிற நிலைமைக்கு வந்துவிட்டார்கள் (சிரிப்பு). இதற்குக் காரணம் வேறு யாரும் இல்லை, நாங்கள் தான் என்று சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுக்கு இந்தச் சர்க்கார் உண்மையாகவே நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் காந்தி சொன்ன பாதை என்று சொல்வதிலே தவறு உண்டு. காந்திஜி இராம ராஜ்யத்தை உண்டாக்கக்



20th July 1957] [Sri A. V. P. saithambi]

கனவு கண்டார். வருணாசிரம தர்மத்தை அமைக்க முயன்றார். வருணாசிரம தர்மத்தில் உயர்ந்தவர்களுக்கு ஒரு நீதி, தாழ்த்தவர்களுக்கு ஒரு நீதி என்கிற வேறுபாடு அடிப்படையிலேயே உண்டு. இராமாயணத்திலும் இராமனுக்கு ஒரு நீதியாகவும், மற்றவர்களுக்கு ஒரு நீதியாகவும் இல்லையா. அடிப்படையிலேயே இப்படி வேறுபாடுடைய இராம ராஜ்யத்தை, வருணாசிரம தர்மத்திற்குப் புத்துயிர் கொடுக்கவே காந்தியார் கனவு கண்டார். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மதிப்பு ஏற்படவேண்டுமென்றார். வருணாசிரம கருத்தை உணர்ந்தவர்கள் நிச்சயமாக இதை எதிர்க்கத்தான் எதிர்ப்பார்கள்.

மாயவரம் தொகுதி காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஸ்ரீ நாராயணசாமி நாயுடு அவர்களே—இந்தத் தடவை அல்ல, கடந்த தடவை—சட்டமன்றத்தில் பேசிய பேச்சு எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. "இன்றைக்கு இந்த அரசாங்கம் நல்ல பல காரியங்களைச் செய்து வந்தபோதிலும் கூட ஆலயத்தில் ஹரிஜனங்கள் அர்ச்சகர்களாக அனுமதிக்கப்படுகிற அளவுக்கு இந்தத் சட்டம் பயன்படாது" என்று அவர் சொன்னார்.

ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவனுக்குத் தொண்டு செய்யக் கூடிய யோக்கியதாம்சங்கள் ஹரிஜனங்களிடத்தில் இல்லையா ? எல்லோரும் ஆண்டவனுடைய பிள்ளைகள் தானே ? இதர தொழில்களுக்கு மற்ற சாதியாருக்கு இத்தனை விகிதம், ஹரிஜனங்களுக்கு இத்தனை விகிதம் என்பதாக விகிதாசாரக் கணக்குப் போட்டு வேலை ஒதுக்கும் இந்த அரசாங்கம் ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்யும் கைங்கர்யத்திலும் கூட ஹரிஜனங்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்பதாக நாற்பது சத விகிதமோ, நாற்பத்தைந்து சத விகிதமோ ஒதுக்கிவைக்கக்கூடாதா ? என் நியமிக்கக்கூடாது இவர்களுக்கு அதிகாரம் இல்லையா ? மக்களுடைய சர்க்கார் நடக்கிறது. வெள்ளைக்காரன் போய்விட்டான். இங்கிருப்பது நாம் தான். அதை என் இந்தச் சர்க்கார் செய்யக்கூடாது என்று கேட்கிறேன். அதைச் செய்வதற்கு இந்தச் சர்க்காருக்கு சக்தி இல்லையா ? முடியாதா ?

சக்தி இருக்கலாம். ஆனால் செய்வதில்லை. குறிப்பாக தீண்டாமை ஒழிப்புக்காக பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து போஸ்டர்கள் போட்டார்கள். அதில் என்ன இருக்கிறது ? ஒரு உருவம் வாடி வதங்கி நிற்கிறது. இன்னொரு உருவம் அதைப் பார்த்து "போ எட்டி, நீ தீண்டாதவன்" என்று சொல்கிறது. இப்படிச் சொன்ன உருவம் அடுத்து கீழே சிறையில் இருப்பது போல் தீட்டப்பட்ட போஸ்டர்கள் அவை. இந்தப் படத்தில் உண்மைக்குப் புறம்பாக என்ன இருக்கிறது ? நாட்டு உண்மை நிலவரத்தை அப்படியே சித்திரம் காட்டுகிறது. இதை ஒட்டினால் என்ன ? யாரோ சிலர் எதிர்த்தார்கள். நாங்களும் அதை ஒட்டவேண்டாம் என்று சொல்லிவிட்டோம் என்றால் பத்தாயிரம் நஷ்டம். இந்த நாட்டில் உள்ளவர்கள் எல்லாம் விற்பனை வரியை எதிர்க்கிறார்கள். என்றாலும் வரி வசூலிக்கப்படுகிறதே தவிர உடனே வாபஸ் பெறப்படுகிறதா ? அப்படி சிலர் எதிர்த்தாலும் கூட அந்த போஸ்டர்களை ஒட்டுவதற்கு என்ன ? சமுதாயத்தில் மனமாற்றத்தைத் உண்டாக்குவதற்கு அப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் இவர்கள் செய்யாமல் "படிப்பு வசதி கொடுக்கிறோம். வேலை கொடுக்கிறோம்" என்று சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி தீண்டாமை நீங்கும் என்று கேட்கிறேன். ஏதோ ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்கிவைத்து அதையும் தவறான வழியில் மற்ற காரியங்களுக்குச் செலவிடுவது போலவே செலவிட்டு வருவதனால் பயன் இல்லை. ஒரு சில தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயர்ந்த உத்தியோகம் கிடைக்கலாம். தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகன் மதிப்பிற்குரிய ஸ்ரீ கக்கன் மந்திரியாக இருக்கலாம். ஸ்ரீ கக்கனுடைய முன்னேற்றம் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் முன்னேற்றமாகக் கொள்ள முடியாது. உண்மையிலேயே இன்றைய தினம் மந்திரி கக்கனார் அமைசசராக இங்கு வீற்றிருப்பதைவிட நந்தனை ஆட்கொண்ட பெருமான் நர்த்தனமிடும் ஆலயத்திலே ஓர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டார் என்று சொன்னால் நான் இதையும் விட மகிழ்ச்சி கொள்வேன் என்று சொல்லிக்கொண்டு, இந்த அளவுக்குத் தீவிரமாகத் திட்டம் தீட்ட முன்வரவேண்டும் என்பதை எங்கள் கட்சியில் சார்பிலே பிரேரிக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

[20th July 1957

SRI R. SRINIVASA IYER: Sir, I desire to mention to the House that in Pallathur village of Pattukkottai taluk the pujars is a Harijan, the Vellala gives sandal paste, the Yadava gives betels and an Ambalagaran gives sambrani. This is going on even to-day. Let the hon. Member Sri Asaithambi. . . .

SRI T. P. ELUMALAI: On point of information: கனம் தலைவர் அவர்களே, சற்று முன்பு பேசிய அங்கத்தினர் ஹரிஜனங்களுக்கு தாங்கள் தான் ஏதோ பெருத்த நன்மை செய்து வருவதாகப் பேசிக் கொண்டு ஹரிஜனங்களுக்கு எல்லாம் ஆலய அர்ச்சகர் தொழில் கொடுக்க வேண்டுமென்பதாகப் பேசினார்கள். நாங்கள் அர்ச்சகர்களாகப் போகத் தயாரில்லை. சட்டமன்றத்தினுலே மந்திரியாகவும், நாட்டை ஆளும் நல்ல சட்டங்களை வகுப்பவர்களாகவும், உயர்ந்த பல பதவிகளுக்குப் போகத் தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

11-07 a.m. SRI R. KANDASAMI: கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜன மானியத்தை ஆதரித்து நான் சில விஷயங்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் படித்தவர்களாகவும், எம்.ஏ., பி.ஏ., பட்டம் முதலியவைகளை வாங்கிக் கொண்டு உயர்ந்த உத்தியோகங்கள் வகிப்பவர்களாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மகாத்மா காந்தி அவர்களுடைய தலைமையில் போடப்பட்ட திட்டங்களை எல்லாம் சாத்தியமான வரையில் செய்ய இந்தச் சர்க்கார் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுவருவதற்காக நான் பெருமைப்படுகிறேன். சர்க்காருக்கு நன்றி செலுத்துகிறேன்.

அதுமாத்திரம் அல்ல. இன்றைக்கு ஆதித்திராவிடர்களில் பலர் இந்த சட்ட சபை உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள் என்றால் அதற்குரிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது காங்கிரஸ் கட்சி தான் என்பதை நினைந்து யாரும் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியாது.

ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக சர்க்கார் பல ஹாஸ்டல்கள் நடத்தி வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. அதே மாதிரி இன்னும் ஹரிஜன இலாகாவில் ஏற்படுத்தவும் வேண்டும். ஹரிஜன இலாகாவில் இருக்கிற ஸ்ரீ முத்திருளாண்டி அவர்கள் எங்களுடைய மக்களிடத்தில் இனிமையாகப்பேசி அவர்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை எல்லாம் செய்துகொடுத்துவருவதைக் கருதி நான் பாராட்டுகிறேன்.

ஹரிஜனங்ளுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கும் பல ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். இனிமேல் இம்மாதிரி காலனிகள் அமைக்கும் நேரத்தில் உயர்ந்த சாதிக்காரர்கள் வாழ்கிற தெருக்களிலேயே மனைகள் இருந்தால் அவற்றில் ஹரிஜனங்களை வசிக்கச் செய்ய வேண்டும். ஊரிலுள்ள தெருக்களில் இவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தால் தான் தீண்டாமை ஒழிப்புக்கு வசதியாக இருக்கும். சர்க்காரை வேண்டுகிறேன் தனியாக ஹரிஜனங்களுக்கென்று சேரிகள் அமைத்துக் கொடுப்பதனால் அவர்கள் இன்னமும் ஒதுங்கியே வாழ்க்கை நடத்தும்படி நேரிடும். ஆகவே ஹரிஜனங்களுக்கு வீடுகள் ஊருக்குள்ளேயே கட்டித் தந்தால் தான் அவர்கள் முன்னுக்கு வர முடியும்.

தீண்டாமை ஒழிய வேண்டும், ஒழிய வேண்டும் என்று இன்றைக்கு நாட்டில் பேசிக் கொண்டிருக்கிறவர்கள் வெறும் வாய் அளவில் பேசிக் கொண்டிருக்காமல் காங்கிரஸ் கட்சியினரைப் போல என்ன செய்தார்கள் என்று கேட்கிறேன். ஏதோ இப்படி எல்லாம் பேசினால் பேப்பர்களில் வரும் என்பதற்காக வேண்டுமானால் பேசலாம்.

சினிமாப் படம் ஆடுகிறார்களே, அதில் சேரவேண்டும் என்பதற்காக ஒரு தாழ்த்தப்பட்ட மகன் வேலூர் என்ற இடத்தில் பாடி, பேசி எல்லாம் காட்டினான். சரி நாளைக்கு வா என்று சொல்லிப் போனார்கள். மறு



20th July 1957] [Sri R. Kandasami]

நாள் போனவுடன் "நீ என்ன சாதி?" என்று கேட்டார்களாம். "ஹரிஜன்" என்று சொன்னவுடனே, "அப்போ நீ நடிக்க முடியாது அப்பா. நடிப்பதாய் இருந்தால் யார் யாரோ கழுத்தில் கை போட்டுக் கொண்டு நடிக்கும்படி வரும். அவர்கள் அப்படி நடிப்பார்களா?" என்று சொல்லி அனுப்பிவிட்டார்களாம். சினிமாப் படத்தில் கூட தீண்டப்படாதவன் என்கிற நிலைமை தான் இருக்கிறது. வாயினால் சொல்லி கொண்டிருந்தால் போதுமா என்று கேட்கிறேன். என்னுடைய தொகுதியாகிய திருச்செங்கோட்டிலே 20,000 ஜனத்தொகை இருக்கிறார்கள். அவர்கள் தண்ணீர் இல்லாமல் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். திருச்செங்கோட்டுக்கு அருகாமையில் 7 மைல்களுக்கு அப்பால் காவேரி நதி இருக்கிறது. அங்கிருந்து குழாய் வழியாக கொண்டு வந்து இவர்களுக்கு தண்ணீர் சப்ளை செய்ய வேண்டிய நடவடிக்கைகளை இந்த இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தாலாவது செய்து கொடுக்கவேண்டும் என்று நான் சர்க்காரை வற்புறுத்துக் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRIMATHI A. S. PONNAMMAL: மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளை சொல்ல ஆசைப்படுகிறேன். 11-12 p.m.

சில வருஷங்களுக்கு முன்னால் ஹரிஜனங்கள் இருந்த நிலையைப் பற்றியும், இப்போது அவர்கள் வாழ்கையில் எவ்வாறு உயர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் புள்ளி விவரங்களோடு முன்பு சுட்டிக் காட்டினேன். ஆகையால் அதைப் பற்றி மீண்டும் சொல்ல விரும்பவில்லை.

இப்போது பேசிய சில அங்கத்தினர்கள், ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காகவும் தீண்டாமையைப் ஒழிப்பதற்காகவும் தாங்கள் மிகவும் பாடுபட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களை நான் மிகமிக பாராட்டுகிறேன். இம்மாதிரி வேலைகளில் அவர்கள் தளர்ச்சி அடையாமல் மேலும் பாடுபடவேண்டும் என்று அவர்களைக் கேட்டுச்கொள்ளுகிறேன். ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி காலத்திலே ஏழை ஹரிஜனங்களுக்கு இவர்கள் என்ன என்ன காரியங்களை சாதித்திருக்கிறார்கள் என்று புள்ளி விவரங்களுடன் கொடுப்பார்களானால் அதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

நேற்று பேசிய அங்கத்தினர்களில் சிலர் தீண்டாமை ஒழிப்பில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் முறை தவறு என்று கூறினார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்பு இவர்களின் நிலை மிகவும் கேவலமாக இருந்தது. நாயைக் கூட முத்தம் கொடுப்பதற்கு தகுந்த மிருகம் என்று கருதினார்கள். ஆனால் மனிதனை மனிதன் தொடக்கூடாது என்ற திட்டம் இருந்தது. இந்த நிலைமை கண்ணுற்ற மகாத்மா காந்தி அவர்கள் தான் ஒரு புறத்தில் வெள்ளைக்காரனை வெளியேற்றுவதற்காகவும் மறு புறத்தில் மனிதர்களாக பிறந்த ஹரிஜனங்களை மனிதர்களாக மதிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் தம்முடைய வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்டிருந்தார். இது ஒரு பெரிய தவறு?

1937-ம் ஆண்டு நமது காங்கிரஸ் கட்சி மந்திரிசபை ஏற்றபோது மதிப்பிற்குரிய அமரர் வைத்தியநாதய்யர் அவர்கள் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் 4 ஹரிஜனங்களை அழைத்துக்கொண்டு சென்ற போது, ஜாதி ஹிந்துக்கள் அவரை நன்றாக அடித்தார்கள். அது மட்டுமா. சாணியைக் கரைத்துக் கொட்டினார்கள். அப்படி தடியடி பட்டு கஷ்டப்பட்டவர்களில் நமது கனம் கக்கன் அவர்களும் ஒருவர், என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மற்ற கோயில்களில் நுழையும்போது ஜாதி ஹிந்துக்கள் அவரைக் கொல்வதற்கும் சதி செய்தார்கள். அப்போது முதல் மந்திரியாக இருந்த கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரே நாளிலேயே "ஹரிஜன கோவில் நுழைப்பு தடை நீக்கும் சட்டம்" என்ற சட்டத்தை கொண்டு வந்து, ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று உத்தரவிட்டார். ஒரு பெரிய தவறு?

[Srimathi A. S. Ponnammal] [20th July 1957

இன்று தமிழ் நாட்டில ஒரு பிற்போக்கான ஜாதியைச் சேர்ந்த கனம் கக்கன் அவர்களைத் தலைவராக நியமித்தது ஒரு தவறா ?

இன்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களிலும், அதற்கு மாற்றுக் கட்சிகளிலும், தாழ்த்தப்பட்டவர்கள் அங்கத்தினர்களாக வந்து இந்தச் சட்ட மன்றத்தில் உட்கார்ந்திருப்பது ஒரு பெரிய தவறா ?

அடுத்தபடியாக ஹரிஜன தின விழா கிராமங்களில் கொண்டாடப்படுவதால் எந்த விதமான பலனும் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். பழனியில் இந்த ஹரிஜன விழா ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிறது. கடந்த 4 ஆண்டுகளாக நான் அதில் கலந்துகொண்டிருக்கிறேன். இது ஒரு "பெஸ்டிவல்" மாதிரியாகவே இருக்கும். ஹரிஜன தினம் அனுஷ்டிப்பதன் காரணமாக ஹரிஜனங்களும், ஜாதி ஹிந்துக்களும் கலந்து கொண்டு ஒரு பெரிய திருவிழா மாதிரியாகவே இருக்கும். இதில் ஜில்லா கலெக்டர், ஹரிஜன் வெல்பேர் ஆபீசர், ரெவினியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் முதலியவர்கள் கலந்துகொண்டு ஹரிஜனங்களுக்காக காந்தி அவர்கள் சாதித்த சாதனைகளைப் பற்றியும், ஹரிஜனங்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைப் பற்றியும் விளக்கக்கூறி பிரசங்கம் செய்வதன்மூலம், இரு சாராரும் ஜாதி வேற்றுமைகளை மறந்து ஓரளவுக்கு ஒற்றுமை ஏற்பட ஏதுவாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். ஹரிஜன "**Sevaks**" பிரசாரம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியைப்பற்றித்தான் பிரசாரம் செய்கிறார்கள் என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நேற்று பேசிய ஸ்ரீ சுப்ரமண்யம் இதற்குப் பதில் சொல்லி விட்டபடியால் நான் இதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. அரசாங்க சிப்பந்தியாக இருக்கும் ஒருவர் எந்த விதமான அரசியல் கட்சியிலும் ஈடுபடக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. அப்படி அவர்கள் அரசியல் கட்சிகளில் ஈடுபடுவதாகத் தெரிந்தால் அவர்களின் மேல் நடவடிக்கை எடுத்து வேலையை விட்டே நீக்கவும் ஒரு சட்டம் இருக்கிறது. உண்மையில் அங்கத்தினர்கள் இதையெல்லாம் தெரிந்துகொண்டு இந்தமாதிரி சொல்லுவது எனக்கு வியப்பாகவே தோன்றுகிறது. அதே முறையில் இந்த ஹரிஜன "**Sevaks**" களும் அரசியல் கட்சிகளில் ஈடுபட்டிருப்பது உண்மையானால் வேலையை விட்டே நீக்கி இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு வசதி இல்லை என்று பட்ஜட் பொது விவாதத்தின்போது சிலர் சொன்னார்கள். இந்தச் சேரிகள் மீண்டும் அதிகப்படியாக விஸ்தரித்துக்கொண்டே வருகின்றன என்று சிலர் குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் ஹரிஜனங்கள் நிலையை மாற்றுவதற்கு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு குடியிருக்க மாடி வீடுகள் கட்டிக்கொடுத்திருப்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனே சில அங்கத்தினர்கள் "கால் வயிற்று கஞ்சிக்கு கதி இல்லாத ஹரிஜனங்களுக்கு வீடு எதற்கு" என்று சிலர் சொன்னார்கள். இதைப் பார்த்து நான் மிகவும் வருந்துகிறேன். காக்கை , குருவி கூட இரையைத் தேட வெளியில் சென்று பின்னால் தங்குவதற்கு ஒரு இடம் வேண்டு என்று கூண்டைக்கட்டிக்கொண்டிருக்கும்போது அவைகளை விட ஹரிஜன மக்கள் கேவலமாய்ப் போய்விட்டார்களா, வீடு தேவையில்லை என்று சொல்வதற்கு ?

ஹரிஜன மக்களுக்காக கிணறு வெட்டிக்கொடுப்பதைப் பற்றி சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டு கிராமங்களிலுள்ள ஹரிஜன மக்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்றும் சொன்னார்கள். கிராமங்களிலுள்ள மக்கள் கிணறுவெட்ட யாருக்கு "பெடிஷன்" போடவேண்டும் என்று தெரியாமல் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் நான் சென்றுகொண்டிருந்த சமயத்தில், கிராம மக்கள் என்னிடம் ஒன்றிரண்டு **petition**-கள் கொடுத்தார்கள். அவர்களை என்ன என்று கேட்டதற்கு "ஹரிஜன இலாகா ஒன்றுமே செய்யவில்லை" என்று புகார் கூறினார்கள். பக்கத்தில் இருந்த ஒருவர் "இதற்குப் பணம் **sanction**" ஆகி விட்டது, ஆனால் இதை எடுத்து நடத்தும் "**Contractor**"கள்



20th July 1957] [Srimathi A. S. Ponnammal]

சரியாக இல்லாதபடியால் , சாங்கிஷன் ஆன பணத்தை நாங்கள் எடுத்துக்கொள்ளாமலேயே விட்டு விட்டோம்" என்றார். இம்மாதிரி நிலையில் ஹரிஜன மக்கள் இருக்கிறார்கள். இம்மாதிரிக் குறைகளை நீக்க மக்களுக்குத் தேவையான வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க, அங்கத்தினர்கள் உதவியாக இருந்தால், குடி தண்ணீர் வசதி முதலியவைகள் செய்துகொடுப்பதற்கு சௌகரியமாக இருக்கும். அரசாங்கத்தார் தாழ்த்தப்பட்டவர்களுக்காக, பதவிகளில் ஒரு பகுதியை ஒதுக்கியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழிற்சாலைகளிலும் 100க்கு 25 என்ற விகிதப்படி ஹரிஜனங்களுக்கு என்று பதவிகள் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று பல லட்சக்கணக்கான ஹரிஜன மக்களின் சார்பில் மிகமிகப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"லேபர் ஸ்கூலில்" படிக்கும் ஹரிஜனக் குழந்தைகளுக்கு மத்தியயான உணவு கொடுக்கப்படுகிறது. உதாரணமாக தென் ஆற்காடு ஜில்லாவில் 300 "லேபர் ஸ்கூல்கள்" இருக்கின்றன. அந்த 300 பள்ளிகளில் படிக்கும் ஹரிஜனக் குழந்தைகளுக்கு, பிற்போக்கான வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மத்தியான உணவு அளிக்கப்படுகிறது. மதுரையில் 18 "லேபர் ஸ்கூல்கள்" தான் இருக்கின்றன. சேலத்தில் 6 ஸ்கூல்கள் இருக்கின்றன. இம்மாதிரி எங்கெங்கே ஹரிஜனக் குழந்தைகள் படிக்கிறார்களோ அந்தக் குழந்தைகளுக்கு பகல் உணவு கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ரூ. 100-க்கு மேல் சம்பளம் வாங்கும் ஹரிஜன மக்களுடைய குழந்தைகளுக்கு எந்தவிதமான சலுகைகளும் கொடுக்கப்படவில்லை என்று கேள்விப்படுகிறேன். ரூ. 99 வாங்கக்கூடிய ஒருவருக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குழந்தைக்குச் சலுகை கொடுக்கப்படுகிறது. ஆனால் ரூ. 101 சம்பளம் வாங்கும் ஒரு நபருக்கு 4 குழந்தைகள் இருந்தாலும் அந்தக் குழந்தைகளுக்குச் சலுகை கொடுக்கப்படவில்லை. எப்படி அந்த நபர் 4 பிள்ளைகளையும் படிக்கவைக்க முடியும் என்பதை உணர்ந்து, குறைந்தது 150, 200 ரூபாய் சம்பளம் வாங்கும் ஹரிஜனங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கு ஒரு தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். ......(மணி அடிக்கப்பட்டது) ஒரு நிமிஷம்.........

**MR. SPEAKER :** தயவு செய்து உட்காருங்கள்.

**SRI S. R. MUNUSAMI :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போழுது தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் மான்யத்தின்பேரில் அம்மையார் அவர்கள் கொண்டுவந்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் பேசுகிறேன். இந்த மான்யத்தில் பேச எனக்கு அதிகமாக விருப்பம் இல்லை. காரணம், மற்றவர்கள் தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றி என்ன பேசுகிறார்கள், அவர்கள் கருத்து என்ன என்பதை பரிசீலனை செய்யவேண்டுமென்று இருந்தேன். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த விவாதத்தில் கொஞ்சம் அதிகமாக நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்ட பொழுது, இந்தச் சபையிலே கூடியிருப்பவர்கள் சிலரிடையே முணுமுணுப்பு ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். அவை இந்த நாட்டிலே தாழ்த்தப்பட்டவன் கொஞ்சம் முன்னேறினால். அதைக் கண்டவுடனே முணுமுணுப்பு ஏற்படுகிறதே ? அப்படித்தான் சர்க்காரும் நடந்துகொள்ளுறது என்பதைக் கண்டிக்கிறோம். தாழ்த்தப்பட்ட சமூகம் இந்த நாட்டில் முன்னேறவேண்டும் என்ற உண்மை உள்ளம் படைத்தவர்களுக்குத் தான் அது படும். ஒரு குண்டுமணி அளவு தாழ்த்தப்பட்ட மனிதன் முன்னேறிவிட்டான் என்றால் ஒரு முணுமுணுப்பு ஏற்படுகிறது. நாட்டை ஆளும் சர்க்காரும் அப்படித் தான் நடந்துகொள்ளுகிறது. இந்த அவையிலும் அப்படித் தான் நடக்கிறது . . . .

* **SRI K. VINAYAKAM :** Sir, as long as the hon. Member was remarking about the Public and about the Government, I have

[Sri K. Vinayakam] [20th July 1957

no objection. But he is insinuating against the entire House that we are against the uplift of Harijans, it amounts only to casting aspersions against the Members of this House.

Mr. SPEAKER : Yes, I heard the hon. Member say that. But that is his view. In the speech of the hon. Member, Sri Vinayakam can say that the other hon. Member is wrong.

Sri K. VINAYAKAM : But the hon. Member should be made to understand that we are all for the uplift of Harijans.

* Sri S. R. MUNUSAMI : நான் பேசுவதை தவருக கருதிவிடக்கூடாது. இருக்கிற நிலையைத் தான் எடுத்துச் சொன்னேன். தவறு என்று சொல்லுவது பொறுத்தமில்லை.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்டவர்களின் சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட மான்யத்தின் பெயர் ஹரிஜன மான்யம். ஹரிஜனம் என்பவன் யார் என்பதை பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. யார் ஹரிஜன் ? எங்கிருந்து வந்தான் அவன் ? அவன் இந்த நாட்டின் பிரஜையா ? இல்லையா? இதில் கூட அரசாங்கத்தின் உள்ளம் செலுத்தப்பட வேண்டும். அந்த நிலையில் இந்த மான்யத்திற்கு ஹரிஜன மான்யம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி வரையற்று, திக்கற்று கிடைக்கும் ஒரு பிள்ளையை தாய் கண்டு, " அப்பா நீ கடவுள் பிள்ளையாக இரு " என்று சொல்லுவது போல், தந்தை காந்தியார் வாயற்ற ஹரிஜனங்களுக்கு கடவுள் பிள்ளைகள் என்று பெயர் வைத்துவிட்டார்கள். ஆனல் இதை சமுதாயம் ஏற்றுக் கொள்ளவில்லை. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் ஒரு சிலர் ஏற்றுக் கொண்டாலும் மற்ற சமுதாயம் கடவுள் பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இந்த நிலையிலே நான் ஹரிஜன மான்யத்தின்மீது கொண்டுவரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் இந்த மான்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 1 கோடி 94 லட்சம் ரூபாய் தொகை போதாது என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர் உயர்த்தப்படவேண்டும், தீண்டாமை ஒழிக்கப்படவேண்டுமென்று அமைச்சர் கூறினர்கள். இதற்காக சட்டங்கள் இருக்கின்றன. ஆனல் இந்த சட்டங்கள் அமுல் நடத்தப் படுகின்றதா ? எத்தனை இடங்களில் தீண்டாமை குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லமுடியுமா ? சட்டம் இருந்து என்ன பிரயோசனம ? சட்டம் ஏட்டிலிருந்தால் தீண்டாமை ஒழிந்து விடுமா ? ஒரு வகுப்பினரை மற்ற வகுப்பினர் கலியாணம் செய்துகொள்ளவேண்டும். அதை அரசாங்கம் ஆதரித்து கௌரவ மான்யம் கொடுக்கவேண்டும். கொள்வினை கொடுப்பினையில் ஜாதி வித்தியாசம் இருக்கக்கூடாது. அரசாங்கம் அளிக்கக்கூடிய சலுகைகளோடு இந்தச் சலுகையையும் அளித்தால் சீக்கிரத்திலே தீண்டாமை ஒழியும். பணக்காரர்களைப் பற்றி நான் பேசவில்லை. பணம் இருந்தால் அவர்களோடு இருக்கட்டும். ஏழை கவுண்டர்களும் ஹரிஜனும் தங்கள் வகுப்பினருக்குள் ஆணும் பெண்ணும் கலியாணம் செய்து கொள்ளலாம். அதற்கு அரசாங்கம் கௌரவ மான்யம் ஒதுக்கியிருக்க வேண்டும். அதற்காகத்தான் எங்களுக்கு அதிகமாக மான்யம் ஒதுக்க வேண்டுமென்று சொன்னேன். ஒதுக்கப்பட்டிருக்கும் மான்யம் போதாது. அது பிரயோசனமே இல்லை. அங்கத்தினர் ஒருவர் சர்க்கார் எவ்வளவோ பேர்களுக்கு உயர்ந்த உத்தியோகம் கொடுத்திருக்கிருர்கள், எத்தனையோ பேர் கலெக்டராகவும், டாக்டராகவும் வந்திருக்கிருர்கள் என்று சொன்னர். டாக்டர் அம்பேத்கார் எந்த சர்காரின் ஆட்சியின்போது படித்தார்? சிவராஜ் அவர்கள் எந்த அரசாங்க சலுகையில் படித்தார் ? அமைச்சர் எந்த சர்க்காரின் கீழ் இருந்த பள்ளிக்கூடத்தில் படித்தார் ? கலெக்டர் ஸ்ரீ வெங்கடேசன் எந்த சர்க்கார் பள்ளிக்கூடத்தில் படித்தார்? இவர்களெல்லாம் அன்னிய ஆட்சியின் கீழ் இருந்த பள்ளிக்கூடங்களிலே படித்தார்கள். மக்கள் சர்க்கார் என்று சொல்லக்கூடிய இந்த சர்ச்காரின் ஆட்சியில் ஹரிஜன மக்களுக்கு ஏதாவது விமோசனம் பிறந்திருக்கிறதா ? ஓரளவுக்கு ஏறினல் உடனே முணுமுணுப்பு. இப்படித்தான் இருக்கிறது சர்க்காரிலும், அவையிலும். ஆகவே இந்த மான்யத்தை ஆதரிப்பதைவிட இது எங்களுக்கு " போதாது போதாது " என்று கேட்கிறேம்.



20th July 1957] [Sri S. R. Munusami]

வீடுகள் கட்டிக்கொடுக்கிருர்கள் ஆதிதிராவிடர்களுக்கு. வீடுகள் கட்டிக் கொடுப்பது எப்படி இருக்கிறது ? குட்டிச்சுவராகிறது மூன்றுவது நாள். ரூ. 250 பொருமான வீட்டை கட்டிவிட்டு, ரூ. 750 கணக்கு கொடுத்து பணக்காரர்கள் வளர்கிருர்கள். வேகாத பச்சை கல்லை வைத்து கட்டுகிருர்கள். மூன்றுவது நாளில் தவுடு பொடியாவதைப் பார்க்கிறேம். பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. ரூ. 250 பொருமான வீடுகள் கட்டப்பட்டு ரூ. 750 செலவானதாக கணக்கில் காட்டப்படுகிறது. பணக்காரர்கள் வளர்கிருர்கள், ஏழைகள் அல்ல.

எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டுமானல், எங்களுக்குள்ளேயே ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டும். மற்றவர்களால் அது நடத்தப்படக்கூடாது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த அமைச்சர் அவர்கள் தலைமையிலே எங்களுக்குள்ளே கமிட்டி நடக்கவேண்டும். மற்றவர்கள் யோசனை கூறக்கூடாது. நாங்களே திருத்திக்கொள்ளுவோம். நாங்களே கேட்டுக்கொள்ளுவோம். இந்த மான்யத்தை எப்படி செலவு செய்வது, எப்படி எங்கள் சமூகத்தினரை முன்னுக்குக் கொண்டுவருவது என்பதையெல்லாம் நாங்களே தீர்மானித்துக்கொள்ளுவோம். இதற்காக அரசாங்கத்தில் ஒரு அதிகாரியை நியமிக்கிருர்கள். கேரளாவிலிருந்து ஒரு மலையாளியைக் கொண்டுவந்திருக்கிருர்கள். இவர் என்ன செய்கிருர் ? டூர் போகிருர். டூர் செலவு எடுத்துக்கொள்ளுகிருர். கார் செலவு எடுத்துக் கொள்ளுகிருர். படிச்செலவு எடுத்துக்கொள்ளுகிருர். இவருக்கு காலணு செலவு கிடையாது. போன இடங்களிலெல்லாம் நல்ல சாப்பாடு நடக்கிறது. ஆனல் எங்களுடைய பேப்பர்கள் கவனிக்கப்படுவதில்லை. 10 ஆண்டுகள் ஆனலும் கவனிக்கப்படுவதில்லை. உண்மையாகவே இது மக்கள் சர்க்காராய் இருந்தால் நாங்கள் வரவேற்போம். எங்களுக்கு மான்யம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று எந்த விதத்தில் நாங்கள் பெருமைப் பட்டுக்கொள்ளுவது ? இந்த நிலையைப் பார்த்து நாங்கள் வருத்தப் படவேண்டியதாகத் தான் இருக்கிறது ? நாங்கள் எதிர்க்கிறேம் எதிர்க்கக் கூடிய நிலை இருக்கிறது. நாங்கள் எதிர்த்தால் எங்களை விரோதமாக நினைக்கிருர்கள். ஒரு சிலர் எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்றும் சொன்னர்கள். தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தைச் சார்ந்த நாங்கள் ஏதாவது ஒரு பேப்பர் கொடுத்தால் அதை அமைச்சர் ' சாங்ஷன் ' செய்வதில்லை. காங்கிரஸ் மெம்பர்கள் ஒரு பேப்பர் கொடுத்தால் அது உடனே ' சாங்ஷன் ' ஆகிவிடும். இந்த நிலையிலே நாங்கள் ஒற்றுமையாகத்தான் இருக்கிறேம். ஆனல் சர்க்கார் எங்களை நடத்தும் முறை சரியல்ல. சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத்தில் தீவிர கவனம் செலுத்தி சரியான முறையிலே திறமையான ஹரிஜன உத்தியோகஸ்தர்களை நியமித்து இந்த ஹரிஜனநல இலாகாவை நன்ருக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Dr. Srimathi SATHIYAVANIMUTHU : **Sir, on a point of order** தலைவர் அவர்களே, ஆளும் கட்சியிலுள்ள அம்மையார் அவர்கள் பேசும்பொழுது நான் பட்ஜெட் பொதுவிவாதத்தில் குறிப்பிட்ட ஒன்றிரண்டு விஷயங்களைப்பற்றி குறிப்பிட்டு பேசினர்கள். அதில் நான் கூறினது என்னவென்றல் ஹரிஜனங்களுக்கு மாடமாளிகை கட்டிக்கொடுப்பதால் மாத்திரம் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிடாது என்றும் ஹரிஜனங்களுக்கு . : . .

Mr. SPEAKER : இது பாயிண்ட் ஆப் ஆர்டராக கருத முடியாது. **Point of explanation** என்று தான் கருத முடியும்.

* Dr. Srimathi SATHIYAVANIMUTHU : . . . அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதால் மாத்திரம் அவர்கள் முன்னேற்றம் அடைந்து விட முடியாது என்று தான் கூறினேனே தவிர அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க

[Dr. Srimathi Sathiyavanimuthu] [20th July 1957

வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கூறவில்லை. அதோடு அம்மையார் அவர்கள் எதிர்கட்சியில் நீங்கள் வந்திருப்பது கூட எங்களால் தான் என்று சொன்னார்கள். அதையும் நான் ஆட்சேபிக்கின்றேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் நடத்திய தனித் தொகுதி போராட்டத்தினால் அரசியல் திட்டத்திலே ரிசர்வ் சீட் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. காங்கிரஸ் சர்க்காரால் அல்ல.

MR. SPEAKER : " நீங்கள் சொன்னது தவறு " என்று மாத்திரம் மற்ற அங்கத்தினருக்குச் சொல்லி அதை விளக்கவேண்டுமே தவிர திரும்பியும் அதைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்யக்கூடாது.

THE HON. SRI P. KAKKAN : காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு பின்னால்தான் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு தேர்தலில் வோட்டு வாங்க முடிந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Hon. Ministers have always the right of interfering at any stage of the debate. Bust, I expected the Hon. Minister would deal with this in his reply.

SRI V. SANKARAN : தலைவர் அவர்களே . . . . (Interruptions from some hon. Members).

MR. SPEAKER : Let not the hon. Member be answering interruptions. He would be losing valuable time.

If hon. Members raise points of orders and interruptions, they would be losing time and some Members will be denied the privilege of speaking. In their own interest, I wish they should not raise points of orders often.

11-33 a.m. * SRI V. SANKARAN : தலைவர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்காகக் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரிக்கும் முறையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சற்று நேரத்திற்கு முன்னால் பேசிய ஆசைத்தம்பி அவர்கள் தாங்கள் தான் மதுரையில் ஆலயப்பிரவேசம் நடத்தி வைத்ததாகச சொன்னார்கள். ஒரு வேளை இந்தச சபையில் மதுரையில் ஆலயப்பிரவேசம் நடந்த போது அங்கு பங்கு எடுத்துக் கொண்டவர்கள் யாரும் இங்கு இல்லை என்ற தைரியத்தில் தான் அவர்கள் இவ்வாறு தப்பாக பேசினார்கள் என்று நினைக்கிறேன். ஒரு பழமொழி சொல்லுவார்கள், அதாவது " தட்டிக்கேட்க ஆள் இல்லையென்றால் தம்பி சண்டப்பிரசண்டன் " என்று, இது இங்கு சட்டசபையில் உண்மையாகவேத்தான் இருந்தது. (கைதட்டல்) உண்மையில் அங்கு அந்த ஆலயப் பிரவேசத்தில் இங்கு சபையில் இருக்கின்ற அமைச்சர் கனம் கக்கன் அவர்களும் நானும் பங்கு எடுத்துக் கொண்டோம். அந்த சமயத்தில் அங்கு ஆசைத்தம்பியோ அல்லது அவர்களது ஆட்களோ அங்கு வந்து ஒரு ஆள்காட்டி விரலை கூட அசைக்கவில்லை என்பதை அறைகூவிச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே இம்மாதிரி தப்பாக கூற வேண்டாம் என்று அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அன்று கனம் அமைச்சர் அவர்களும் . . .

SRI K. ANBAZHAGAN : பாயிண்ட் ஆப் ஆர்டர், தப்பாக கூறினதாக கருத்துபடும்படி சொல்லுகிறார்கள், இவற்றையெல்லாம் தப்பாக சொல்லவில்லை, சரியான விவரங்கள் இருக்கிறது. தலைவர் அவர்கள் சரியான விவரங்களை சொல்ல வேண்டும் என்று தெரிவித்தால் சரியான விவரங்களை கூறுவதற்கு தயாராக இருக்கிறோம். ஆகவே....

MR. SPEAKER : இவ்விதம் தனித்தனியாக பேசக்கூடாது. அவ்விதம் ஏதாவது உண்டுமானால் அந்தந்த கட்சிகளின் தலைவர்கள் மூலமாக பதில் சொல்லிக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



20th July 1957]

SRI A. R. SUBBIAH MUDALIYAR : எதிர் கட்சியிலுள்ளவர்கள் ஏதாவது சொன்னால் அது சரியில்லை என்றால் அதை எதிர்த்து கூறுவதற்கு மற்றவர்களுக்கும் உரிமையுண்டல்லவா ?

SRI K. VINAYAKAM : I am affraid there is no provision to punish any hon. Member if he points out any disorder.

MR. SPEAKER : I thank the hon. Member.

* SRI V. SANKARAN : அங்கு ஆலயப்பிரவேசம் நடந்த சமயத்தில் கனம் அமைச்சர் அவர்களும் நானும் பங்கு கொண்டு அங்கு கூட இருந்தோம். ஆகையால் அமைச்சர் அவர்கள் இது பற்றிய பூரண விவரங்களையும் கூறுவார்கள் என்று நம்புகிறேன். அடுத்தபடியாக நமது எதிர்க்கட்சி அம்மையார் அவர்களும் ஆசைத்தம்பி அவர்களும் பேசும்போது சொன்னார்கள், யாரோ சிலர் ஆட்சேபித்ததற்காக போஸ்டர்களை ஏன் வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும்? யார் அந்தச் சிலர் என்று திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கேட்டார்கள். நான் பதில் சொல்லுகிறேன். அதை ஆட்சேபித்தது என்னைச் சேர்ந்த சமூகத்தினர் தான் என்பதை கூறிக்கொள்ளுகிறேன். இம்மாதிரி ஒரு சமூகத்தை மாத்திரம் அவமதிப்பாக சித்தரிக்கப்பட்டிருந்ததால்தான் ஆட்சேபித்தார்கள். அவர்களுக்கு மாத்திரம் மரியாதை கிடையாதா ? அவர்களுக்குத் தன்மானம் கிடையாதா ? அம்மையார் அவர்கள் அமரும்போதும், எழும்போதும், மரியாதை செலுத்தும் சபாநாயகர் கனம் கிருஷ்ணாராவை உருப்பாகக் கொண்ட சமூகத்தினர் ஆட்சேபித்தனர்.

MR. SPEAKER : Does the hon. Member want to dragin the Speaker in his speach ? I would request him not to drag the Speaker into any controversy. He can cite anybody else except the Speaker.

* SRI V. SANKARAN : கனம் மந்திரி வெங்கட்ராமன் அவர்களையும் கொண்ட சமூகத்தினர் இதை ஆட்சேபித்தார்கள். இவ்விதமாக ஒரு சமூகத்தினரை மாத்திரம் அவமரியாதையாகக் குறிப்பிடுவதை இவர்கள் எல்லாம் ஆட்சேபித்தார்கள் என்பதை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்கிறேன். ஊருக்கு எல்லாம் உபதேசிக்கிறார்கள் தன்மானம் வேண்டுமென்று. எல்லோருக்கும் தன்மானம் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மாத்திரம் அவமானம் அடைவதில் ஏன் இந்த தனி ஆனந்தம் என்று அம்மையார் அவர்களையும் ஆசைத்தம்பியையும் கேட்கிறேன். ஊருக்கு எல்லாம் சமதர்மம் இருக்கவேண்டும் என்று பேசப்படுகிற நேரத்தில் ஏன் ஒரு பிரிவினருக்கு மாத்திரம் அதே சமதர்மம் இருக்கக்கூடாது என்று கேட்கிறேன். ஆளும் கட்சிக்கு ஆதரவு தேடிக் கொள்ள ஹரிஜன க்ஷேம நல அதிகாரிகள் அமைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவ்விதம் ஒருக்காலும் இல்லை. புதிதாக அதிகார அரசியலில் புகுந்துள்ள கட்சிகள் வேண்டுமானால் தங்களுடைய அரசியல் நோக்கத்திற்காக அரசியல் லக்ஷியத்திற்காக ஹரிஜன சேவையை சாதனமாகக் கொள்ளலாம். காங்கிரஸை எடுத்துக்கொண்டால் . அது தோன்றுதொட்டு ஹரிஜனங்களுக்காக தொண்டு செய்வதை ஒரு லட்சியமாகவே கொண்டு அது திட்ட வட்டமாக வேலைகளை நடத்தி வந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதும் இல்லாதபோதும் அதிகாரத்தில் இருந்தபோதும், இல்லாதபோதும்கூட அது தொடர்ந்து ஹரிஜனங்களுக்காக வேலை செய்து வந்திருக்கிறது, மேலும் சேவை செய்து வரும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக ஹரிஜன மான்யம் சம்பந்தப்பட்ட விஷயத்திற்கு வந்தால் இன்று ரிசர்வ் சீட்டுகளில் "ஆனர்ஸ்" படிப்புக்கு **Post Graduate Course**-க்கு ஹரிஜனங்களுக்கு ஸீட் ரிசர்வ் செய்து ஒதுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அவர்களுக்கு

[Sri V. Sankaran] [20th July 1957

மற்ற கோர்ஸ்கள் போல ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக ஹரிஜன மாணவர் விடுதிகளை எடுத்துக்கொண்டால் ஹரிஜனங்களில் பல பிரிவுகள் இருக்கிறது. அதில் பறையர்கள், குறவர்கள் முதலியவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சரியானபடி கல்வி விழிப்பு இன்னமும் அடையவில்லை. ஆகையால் இவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தால் சற்று தகுதி குறைந்தவர்களாய் இருந்தாலும் அவர்களுக்கு விதிகளை சற்று தளர்த்தியாவது அவர்களுக்குப் போதிய இடம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக "ஸ்காலர்ஷிப்" விஷயமாக இந்தத் தொகை வருஷ ஆரம்பத்தில் கொடுக்கப்படவேண்டும். அவர்களுக்குத் தகுந்த நேரத்தில் கொடுத்தால்தான் அவர்களுக்கு பொருளாதார சிரமம் அதிகம் இருக்காது. இதற்கு தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக "பாவர்ட்டி ஸர்டிபிகேட்" கொடுப்பதில் 100 ரூபாய்க்கு குறைவான வருமானம் உள்ளவர்கள், 200 ரூபாய்க்கு குறைவான வருமானமுள்ளவர்கள் என்று ஸர்டிபிகேட் கொடுக்கும் விஷயத்தில் சரியாக பரிசீலிக்கப்பட வேண்டும். இல்லையானால் பணக்காரர்களும் இம்மாதிரியான ஸர்டிபிகேட்டை கொண்டுவந்து சலுகை பெறுகிறார்கள். ஆதலால் இந்த சர்டிபிகேட் விஷயத்தில் பூரணமான விவரத்தையும், அதாவது இதில் எவ்வளவு ஆஸ்தி இருக்கிறது எவ்வளவு நிலங்கள் சொத்துக்கள் இருக்கிறது, வருமான வழிகள் என்ன, என்கிற விபரங்கள் எல்லாம் இருக்கவேண்டும். அவ்விதம் விபரமாக இருந்தால்தான் உண்மையான ஏழை மக்கள் பலன் பெற முடியும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிணறு வெட்ட, மாடுகள் வாங்க போன்ற காரியங்களுக்கு சப்ஸிடி கொடுக்கிறார்கள். அதற்குத் தகுந்த அவகாசம் கொடுத்து முன்னாலேயே அதை வெளிப்படுத்த வேண்டும். என்ன என்ன மானியங்கள் கொடுக்கப்படும், எப்போது கொடுக்கப்படும் என்பதை எல்லாம் காலாகாலத்தில் அறிவிக்கவேண்டும். தாசில்தார் போன்றவர்களே கிராமங்களுக்குச் சென்று யார் யார் ஏழைகள், யார் யாருக்கு கொடுக்கப்படவேண்டும் என்று அறிந்து கொடுக்கவேண்டும். அவர்கள் கிராமங்களுக்கு நேரில் சென்று கூட்டம் கூட்டிக் கேட்டால் யார் யார் ஏழைகள் என்பதை மிகச் சுலபமாகக் கண்டு பிடித்துவிடலாம். அவசர கோலத்தில் அள்ளித் தெளிப்பது போல் இந்தக் காரியங்களை செய்யக்கூடாது. உதாரணமாக, வீடு கட்டும் திட்டம் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் தாசில்தாரே நேரில் சென்று பார்த்து யார் யார் ஏழைகள், யார் யாருக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று நிச்சயித்து காரியங்களைச் செய்யவேண்டும். (பெல்) அடுத்தபடியாக இந்த ஸ்காலர்ஷிப் விஷயமாக நடுவில் எக்ஸாமின் செய்யப்பட வேண்டும். அதாவது, நடுவில் நடுவில் இருந்து அப்ளிகேஷன்களை எடுத்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தகுதி உள்ளவர்களுக்கு இந்த ஸ்காலர்ஷிப் அளிக்கப்பட வேண்டுமே தவிர, தகுதி இல்லாதவர்களுக்கும், பணக்காரர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கக்கூடாது. அவ்வாறு அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் அதைத் திரும்ப வாங்கவேண்டும். ஏனெனில் இதனால் உண்மையான ஏழை மக்கள்தான் அவதிப்படுகிறார்கள். அடுத்தபடியாக, ஹரிஜன் வெல்பேர் ஆபீசருக்கு கன்வேயன்ஸ் ஒன்றும் கிடையாது. ஆகவே, அவர்களுக்குக் காலாகாலத்தில் செல்ல வேண்டிய இடங்களுக்குச் சென்று இந்த மான்யத் தொகைகளை தகுந்த ஆட்களுக்கு வினியோகிக்க முடியாது. ஆகவே அவர்களுக்கு வேண்டிய கன்வேயன்ஸ் கொடுத்தால்தான் அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்குச் சென்று தகுந்த ஆட்களைத் தேர்ந்தெடுத்து காலாகாலத்தில் இத்தொகையைக் கொடுத்து உதவி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளமுடியுமென்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். அது மட்டுமல்ல, இந்த மானியத் தொகைகள் வாபஸ் ஆகி விடாமல், அதைத் தகுந்த காலத்தில் தகுந்த ஆட்களுக்குக் கிடைக்கும்படி வினியோகிக்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI : On a point of personal explanation, Sir,** என்னுடைய பேச்சை தவறாக சொல்கிறார்கள். கனம் அங்கத்தினரின் தந்தை வைத்தியநாத அய்யரும், கனம் ஸ்ரீ கக்கன் அவர்களும்



20th July 1957] [Sri A. V. P. Asaithambi]

1936-37-ம் வருஷத்தில் வேண்டுமானால் ஆலயப் பிரவேசம் போராட்டத்தை நடத்தியிருக்கலாமே தவிர எங்கள் கட்சி 23-ம் வருஷத்தில் போராட்டத்தை மதுரையில் நடத்தியிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு படுத்த ஆசைப்படுகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN :** ஆசைத் தம்பி அவர்கள் சொன்ன புள்ளி விவரம் தப்பிதமானது. 38-ல் ஆலயப் பிரவேசம் நடந்தது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER : No Further discussion please.**

**Sri N. R. THIAGARAJAN :** ஆசைத்தம்பி அவர்கள் பிறந்ததே 1923-ல் தான்.

**Mr. SPEAKER :** அடுத்தபடியாக பெரியண்ணன் அவர்கள் பேசுவார்கள்.

**Sri K. PERIANNAN :** கனம் தலைவர் அவர்களே, . இன்று 11-45 a.m. ஹரிஜன இலாகா மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால், முதலாவதாக கல்வி மிகவும் முக்கியமானது. கல்வித் துறையில் ஹரிஜனங்களுக்கு இன்று பல சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படி இருந்தும் கூட, இன்னும் கூடுதல் உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்காலர்ஷிப் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த ஸ்காலர்ஷிப்கள் ஹரிஜன மாணவர்களுக்கு காலாகாலத்தில் கிடைப்பதில்லை. குறிப்பாக, இம்மாதம் 15-தேதி எங்கள் ஜில்லாவில் உள்ள வெல்பேர் ஆபீஸர்க்கு சென்ற காலத்திலே அதற்குள்ள அப்ளிகேஷன் பாரம்ஸ் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் 15-ம் தேதி தான் ஸ்காலர்ஷிப் பாரம் கொடுப்பதற்கு கடைசி நாள் என்று இருக்கிறது. ஆனால் 15-ம் தேதியிலும் அந்த பாரம் கிடைப்பதில்லை. ஆகவே, இந்த 15-ம் தேதி என்பதை 25-ம் தேதி என்றோ அல்லது இம்மாதம் 30-ம் தேதி என்றோ அதிகப்படுத்தவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, அரசாங்கம் நடத்தும் கல்லூரிகளிலும் மற்ற மானேஜ்மெண்டார் நடத்தும் கல்லூரிகளிலும் ஸீட்ஸ் ரிசர்வ் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. மானேஜ்மெண்டார் நடத்தும் கல்லூரிகளில் ஹரிஜன மாணவர்களுக்கு போதிய இட வசதி கிடைப்பதில்லை. அடுத்தபடியாக, எனக்கு முன் பேசிய ஒரு அங்கத்தினர் சொன்னார், ரோட் பெர்மிட்டைப் பற்றி, அதேமாதிரி கண்ட்ராக்ட், ரோடு பெர்மிட், இன்னும் தொழில் துறை போன்றவற்றில் ஹரிஜனங்களுக்கு போதிய ஆதரவு கொடுத்து அவர்களை ஆதரிக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களையும், அரசாங்கத்தையும் வேண்டிக்கொள்கிறேன். இரண்டாவதாக, கிராமங்களில் உள்ள விவசாயிகள் சர்க்காரிலிருந்து கொடுக்கும் இலவச லோனை வாங்க மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்குத் தனிப் பட்டா கிடையாது. தனி பட்டா இருந்தால் தான் கடன் கொடுக்க முடியும் என்று அவர்களை ரெவினியூ அதிகாரிகள் துன்புறுத்துகிறார்கள். பட்டா கிடைப்பதற்கு கிராம கர்ணம், கிராம முன்சிப் போன்றவர்களின் ஒத்தாசை வேண்டும். அப்படி கிராம முன்சிப், கர்ணம் இவர்கள் ஒத்தாசை செய்ய மறுக்கும் காலத்தில் அம்மக்கள் சர்க்கார் கொடுக்கும் கடனை அடைய முடியாமல் போகிறது. ஆகவே கருணை நிறைந்த கவர்ன்மெண்டார் அவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களின் அந்தஸ்தில் ஹரிஜனங்களுக்கு போதிய பிரதிநிதித்வம் கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, ஹரிஜன ஹாஸ்டல்கள் பல நடந்து வருகின்றன என்று பல நண்பர்கள் சொன்னார்கள். அவைகளைச் சர்க்காரே ஏற்று எடுத்து நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒரு யோசனை

[Sri K. Periannan] [20th July 1957

கூற விரும்புகிறேன். நான் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு ஹாஸ்டல் நிர்வாகியாக இருந்ததை முன்னிட்டு ஒரு சிறிய யோசனை கூற விரும்புகிறேன். அந்த ஹாஸ்டல் 1943-ம் ஆண்டு நமது மதிப்புற்குறிய கக்கன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்பொழுது அங்கு 22 மாணவர்கள் தான் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு 130 மாணவர்களும், 50 மாணவிகளும் கொண்ட ஒரு ஹாஸ்டலாக அந்த ஹாஸ்டல் விளங்குகிறது. அந்த விடுதிக்கு நமது மதிப்புற்குரிய மாகாண டைரக்டர் அவர்களும் அந்த விடுதித் திறப்பாளராக வந்து அதைத் திறந்து வைத்தார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று கேட்டால், 20 பையன்களுக்கு கிராண்ட் கொடுத்தால் அது 20 வருஷமாக அவர்களுக்கு மட்டும் தான் கிடைக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். மேலும், தனிப்பட்ட மானேஜ்மெண்ட் நடத்தும் ஹாஸ்டல்களில் ஊழல்கள் பல நடக்கலாம். நடந்து கொண்டு தான் வருகிறது. ஆனால் சர்க்கார் நடத்தினால் அடுத்தவர்களுக்கு குறை சொல்ல முடியாது. யாராவது ஒரு வார்டனைப் போடலாம். அவர்கள் இஷ்டப்படி நடத்தலாம். ஆனால் அம்மாதிரி செய்யாமல், நல்ல திறமையோடு நடத்துகிறவர்களின் கையில் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக ஹரிஜன அபிவிருத்தி இலாகா என்று ஒரு தனி இலாகா இருக்கிறது. அப்படி இருந்தும் அவர்களுக்கு ஏதாவது உரிமை கொடுக்கப்பட்டால் அதை தாசில்தார் அல்லது ரெவினியூ இன்ஸ்பெக்டர் முதலியவர்களைக் கொண்டு தான் பெறவேண்டியிருக்கிறது. டிவிஷன் வெல்பேர் ஆபீஸரைக் கேட்டால் அவர் தாசில்தாரரையோ அல்லது டெப்டி கலெக்டரையோ தான் கேட்கவேண்டியிருக்கிறது. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், இந்த ஹரிஜனங்களுக்கு கொடுக்கக்கூடிய சலுகைகள் முதலியவைகளை ஹரிஜன இலாகா அதிகாரிகளைக் கொண்டே கொடுக்கச் செய்யவும், அவர்களுக்குள்ள குறைகளை ஹரிஜன இலாகா அதிகாரிகளைக் கொண்டே நிவர்த்தி செய்வதற்கும் உள்ள வழி வகைகளைச் செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், ஹரிஜனங்களுக்காகப் பல இடங்களில் காலனிகள் கட்டி வருகிறார்கள். அக்காலனிக்காக சர்க்கார் கொடுக்கக்கூடிய கிராண்டு போதாது. சர்க்கார் கொடுக்கும் கிராண்டைக் கொண்டு கட்டக்கூடிய கட்டிடம் அவ்வளவு கெட்டியாகவோ அல்லது நல்ல முறையிலோ இருக்காது. ஆதலால், அவைகளுக்காகக் கொடுக்கும் மான்யத்தை அதிகரிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இத்துடன் எனது சிற்றுரையை நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

11-50 a.m. **Sri T. S. RAMASWAMY PILLAI :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தவெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூறிக்கொண்டு நான் என் பேச்சை முடித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். இந்த இலாகா முக்கியமாக தலைமுறை தலைமுறையாக ஒடுக்கப்பட்டு வந்த ஒரு சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு முயற்சி செய்யக்கூடிய ஒரு இலாகா. அந்த இலாகாவுக்காக ஒதுக்கப்பட்ட தொகையைப் பற்றி பல நண்பர்கள் பேசினார்கள். அத்தொகையைப் பல மடங்கு அதிகரித்தாலும், இப்போது நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை எவ்வளவு சீக்கிரம் சமாளிக்கவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் சமாளித்து விட முடியாது. ஆகையால், இந்த இலாகாவைப் பொறுத்த மட்டில், கண்ணும் கருத்துமாயிருந்து கவனிக்கவேண்டுமென்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, இப்பொழுது அளிக்கப்படும் சலுகைகளைப் பிரயோஜனப் படுத்திக்கொண்டு பல ஹரிஜன மாணவர்கள் படித்து வருகிறார்கள். எனக்கு முன்பு பேசிய பல நண்பர்கள் குறிப்பிட்டது போல, ஹரிஜனங்கள் என்ற பட்டியலில் அவர்களுடைய ஜாதிப் பெயர் இருக்கிறதென்று ஜாதி சர்டிபிகேட் பெறுவதற்கு அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக அவர்கள் படும் இன்னல்களைத் தீர்க்க வேண்டுமென்று அரசாங்கத்தாரிடம் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.



20th July 1957] [Sri T. S. Ramaswamy Pillai]

உயர் நிலைப் பள்ளிகளிலிருந்து ஹரிஜன மாணவர்கள் மேல் படிப்புக்காகக் கல்லூரிக்குச் செல்கிறார்கள். அவ்வாறு கல்லூரிகளுக்குச் செல்லும் ஹரிஜன மாணவர்களுக்கு ஹாஸ்டலில் இடம் கிடைத்தால் தான் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. ஹாஸ்டலில் இடம் பெறாத மாணவர்களுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கவில்லையென்று நான் மிகவும் வருத்தத்துடன் கூற ஆசைப்படுகிறேன். வேறு பல ராஜ்யங்களில் அவர்களை ஊக்குவிப்பதற்காக, அவர்கள் ஹாஸ்டலில் சேர்ந்தாலும் சேரா விட்டாலும், மாதம் ஒன்றுக்கு ரூ. 45 இலவசமாகக் கொடுத்து வருகிறார்கள். ஹாஸ்டலில் சேருவதும் சேராமல் இருப்பதும் அவர்களுடைய இஷ்டம். அதே முறையை இங்கே பின்பற்றவேண்டுமென்று நான் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன மாணவர்களுக்கு ஹாஸ்டலில் இடம் கிடைக்கவில்லை யென்றால், அவர்களுக்கு இடம் கிடைக்காத குறை வேறு, அவர்கள் படிப்பையே நிறுத்திவிட வேண்டிய நிலைமையிலிருக்கிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள பல மாணவர்கள் சென்ற வருஷம் சென்னை ராஜ்யத்துடன் சேர்ந்த பின்னர், ஹாஸ்டலில் இடம் கிடைக்காமல், வேறு இடங்களில் இருந்துகொண்டு பல அல்லல்களுக்கு உட்பட்டிருப்பது எனக்குத்தெரியும். அவர்களுக்கு ரூ. 45 சலுகை முன்பிருந்த அரசாங்கம் கொடுத்துக்கொண்டு வந்தது. அது இடைக்கப் பல மாதங்கள் ஆகிவிட்டன. அதனால் அவர்கள் திணறி விட்டார்கள். இந்த வருஷம் அதுவும் கொடுக்கப்படவில்லை. கன்னியாகுமரி ஜில்லாவில் மாத்திரமல்ல, சென்னை ராஜ்யம் முழுவதிலுமே கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஹாஸ்டலில் செலவாகும் மாதாந்திரத் தொகையாகிய ரூ. 40 அல்லது ரூ. 50-ஐக் கொடுத்து உதவினால், நன்றாக இருக்கும். இதை அரசாங்கம் உடனடியாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். இதில் காலதாமதம் ஏற்பட்டால் பல மாணவர்கள் கல்லூரியில் படிக்க மாட்டார்கள், கல்லூரிப் படிப்பையே நிறுத்திக்கொண்டு விடுவார்கள் என்று கூற ஆசைப்படுகிறேன்.

காலனிகள் ஏற்படுத்துவதற்கு இடம் ஏராளமாக இருக்கிறது. அதைச் சுட்டிக்காட்டியாகி விட்டது. ஆனால், அது விஷயத்தில் சென்னை ராஜ்யத்தைப் பாராட்ட வேண்டும். சென்னை ராஜ்யத்தில் சில இடங்களில் காலனி அமைப்பதற்கு, நிலத்தை "அக்வயர்" செய்வதற்கு ஹரிஜன இலாகா அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்டு சந்தோஷப்படுகிறேன். இது அவர்கள் விரிவான நிலங்களை "அக்வயர்" செய்வதற்கும் காலனிகள் அமைப்பதற்கும் வசதியாக இருக்கும். என்னுடைய தொகுதியில் மருப்பூர், ஆத்தேரி, ஷண்முகம் போன்ற கிராமங்களில் நிலவுடமைக்காரர்கள் தாங்களே நிலங்களைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மேலும், இவ்வளவு பணம் கொடுத்த பிறகும் கூட, கால தாமதம் ஏற்படுவது மிகவும் வருந்தத்தக்கது. ஆதலால், காலனிகள் அமைக்கும் விஷயத்திலும் கண்ணுங்கருத்துமாயிருந்து, எவ்வளவு சீக்கிரம் காலனிகளை அமைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அவைகளை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசும் பல நண்பர்கள் இப்பொழுதும் கூட ஜாதி வித்தியாசம், வகுப்பு முதலியவைகளைப் பற்றி பேசுவது மிகவும் வருந்தத்தக்கது. ஆனால், ஒரு விஷயத்தைப் பாராட்டுகிறேன். கலப்பு மணம் செய்து வைக்கக்கூடிய ஹரிஜனத் தொண்டர்களுக்கு மெடல்களும் பரிசுகளும் கொடுப்பதற்கு அரசாங்கம் பணம் ஒதுக்கியிருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன். ஜாதி என்ற எல்லைக்கோடு இருக்கும் வரையில் ஜாதி வித்தியாசம் இருக்கத்தான் செய்யும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஜாதி என்ற எல்லைக் கோடு என்று மறைகிறதோ அன்று தான் இந்த ஜாதி வித்தியாசம் மறையும். ஆகையால் கலப்பு மணத்தை ஊக்குவிப்பதற்கு, கலப்பு மணம் செய்துகொள்கிறவர்களுக்கு ஸ்காலர்ஷிப் மாத்திரமல்ல, உத்தியோகங்களிலும் கல்லூரியிலும் முதலிடம் என்று சொன்னால், ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு கலப்பு மணம் செய்துகொள்வார்கள். அப்பேற்பட்ட நிலைமை வரும்போது, ஜாதியில் உயர்வு தாழ்வு என்பது மறையும்.

[Sri T. S. Ramaswamy Pillai] [20th July 1957

கல்லூரி மாணவர்கள் விஷயத்தைக் கவனிக்கவேண்டுமென்று மீண்டும் ஒரு முறை கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

Mr. Speaker called on Sri V. S. Arunachalam, Sri Chinnasami and Sri Lazar to speak. But they were not in the House.

MR SPEAKER: When hon. Members desiring to speak tell me that they want to speak, they will please remain in their seats and wait for their chances. Or they should tell me if they are going out so that I can adjust the speakers. Otherwise, it upsets the whole discussion.

11-58 a.m. SRI M. K. SOMASUNDARAM: கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற முன் வந்துள்ளேன். ஹரிஜன மக்களின் பொருளாதார நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. ஆகவே, ஹரிஜன மக்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தினால் தான் அவர்கள் நல்வாழ்வு வாழ முடியும் என்பது என்னுடைய கருத்து. ஆதலால், ஹரிஜன மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற வழி வகைகள் செய்ய வேண்டுமென்று நான் அரசாங்கத்தாரை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில், ஹரிஜன மக்கள் படும் கஷ்டங்கள் எல்லோருக்கும் தெரியும். விவசாய முன்னேற்றத்திற்காக அரசாங்கம் அளித்துள்ள சலுகைகள் அவ்வளவும் ஒழுங்கான முறையில் அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். கொடுக்கப்படும் மான்யத்தைச் சரியான முறையில் உபயோகித்துக்கொள்வதற்காக, அந்தந்த இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆங்காங்குள்ள சட்ட சபை மெம்பர்களையோ முக்கியஸ்தர்களையோ கலந்துகொண்டு மான்யத்தை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

படிப்பு விஷயத்தில் ஹரிஜன மாணவர்களுக்குக் கொடுக்கும் சலுகைகளை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இருந்தபோதிலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகள் சரியானபடி அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லையென்பது மாணவர்களுடைய புகார். ஹாஸ்டல்களில் சேரும் மாணவர்களுக்குத் தகுந்த காலத்தில் அந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை என்பது என்னுடைய கருத்து. ஆகையால், ஹாஸ்டல்களில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது, கஷ்டப்படுகிற ஏழை ஹரிஜன மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக செலக்ஷன் கமிட்டியில் அந்தத் தொகுதி ஹரிஜன எம்.எல்.ஏ.-க்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அப்போது தான் ஏழை ஹரிஜன மாணவர்கள் யார் என்று தேர்ந்தெடுப்பது சுலபமாக இருக்கும்.

அடுத்தபடியாக மாணவர்களுக்கு அட்வான்ஸாக 200 ரூபாய் கொடுக்கலாம் என்று சட்டம் இருக்கிறது என்று எதிர்க்கட்சி அங்கத்தினர் அம்மையார் பேசினார்கள். அப்படி 200 ரூபாய் அட்வான்ஸ் கொடுப்பதாயிருந்தால் அந்தந்த பிள்ளைகளுடைய தலைமை ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்தி, முன்கூட்டியே அந்தப் பணத்தை மாணவர்கள் கையில் கொடுக்காமல் சேர்த்துக் கழித்துக் கொள்வார்களானால் மாணவர்கள் சேர்வதற்கு வசதியாக இருக்குமென்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக வீடு கட்டிக்கொடுக்க மானியம் ஒதுக்கப்பட்டிருப்பது எனக்கு சந்தோஷம். ஆனால் அவர்கள் எந்தெந்த இடங்களில் இருக்கிறார்களோ ஆங்காங்கு கட்டவேண்டுமென்பதை சொல்லிக்கொண்டு



20th July 1957] [Sri M. K. Somasundaram]

கிராம அதிகாரிகளும், வெல்பேர் ஆபீசர்களும் பார்வையிட்டு ஏழை ஹரிஜனங்களுக்கு அதை ஒதுக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் மாடு வாங்க ரூபாய் கொடுக்கப்பட்டது. சரியான ஏழை ஹரிஜனங்களுக்கு போய்ச் சேரவில்லை என்று புகார் இருக்கிறது. அப்படியில்லாமல் அந்த மாடு வாங்கக் கொடுக்கப்படும் பணத்தை மாடு இல்லாத ஏழை ஹரிஜனங்களுக்கு கிடைக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு ஊரிலே 3 கிராமங்கள் சேர்ந்து இருக்கின்றன. ஒருவர் இறந்து போனால் புதைக்க, அதாவது பரியல் கிரௌண்டு, ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குப் போகவேண்டியிருக்கிறது. மற்றொரு கிராமத்தில் அனுமதிக்கமாட்டேனென்று சொல்லுகிறார்கள். இம்மாதிரி அனுமதிக்க மறுப்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதுடன், வசதி இருந்தால் அந்த இடத்திலேயே பரியல் கிரௌண்டு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் கிராமங்களில் சுகாதார விதிகளை முறைப்படி சுகாதார அதிகாரிகள் கவனிப்பதில்லை என்று எனக்கு அநேக புகார்கள் வந்திருக்கின்றன. என் கிராமத்தில் சில வருஷங்களுக்கு முன்பு காலராவால் பாதிக்கப்பட்டு அநேகர் மரணமும் அடைந்திருக்கிறார்கள். நானும் நேரில் புகார் செய்தும் எந்த அதிகாரியும் வந்து நடவடிக்கை எடுக்கவில்லை. நான் படித்து விட்டு அந்த டிபார்ட்மெண்டிலேயே வேலை பார்த்தும், நான் கொடுத்த புகாரில் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அந்த டிபார்ட்மெண்டு என்ன நிலையில் இருக்கிறது என்று நான் உணருகிறேன்; அரசாங்கமும் உணரும். அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் குறைவாக இருக்கிறது. கிராமங்களில் போக்குவரத்து வசதியில்லாததால் அவர்கள் வருவதற்கும், வந்து நடவடிக்கை எடுக்கவும் ஏதுவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். பிர்க்கா ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு ரூ. 29-10-0 F.T.A.-ஆக கொடுக்கப்படுகிறது. ஒரு தாலூகாவில் 5 பிர்க்கா இருக்கிறது. ஹெல்த் இன்ஸ்பெக்டருக்கு ரூ. 33 F.T.A. கொடுக்கப்படுகிறது. இந்த மாதிரி சம்பளம் இருப்பதால் அவர்களால் உற்சாகமாக வேலை பார்க்க முடியவில்லை. இப்படி ஏற்படும் குறைகளை அரசாங்கம் நிவர்த்திக்கும் என்றும் நம்புகிறேன்.

ஹரிஜனங்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் இந்த இலாகாவில் இருக்கும் அதிகாரிகள் எந்த மானியத்திலிருந்து சம்பளம் பெறுகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் சொல்லும் முறையில் பதில் சொல்லும்போது சொல்லுவார்கள் என்று நம்புகிறேன். ஹரிஜன டிபார்ட்மெண்டில் ஏற்படுத்தியிருக்கும் அதிகாரிகளுக்கு ஹரிஜன மானியத்திலிருந்து சம்பளம் கொடுக்கப்படுமானால், அதே அதிகாரிகள் **Backward Classes** சம்பந்தப்பட்ட வேலையையும் பார்ப்பதால் அதற்காக ஒரு தொகையை அந்த மானியத்திலிருந்து கொடுக்கவேண்டும். இரண்டு டிபார்ட்மெண்டிலிருந்தும் கொடுக்கப்பட வேண்டும். ஒரே டிபார்ட்மெண்டிலிருந்து கொடுக்கப்படாது என்பது தான் என் கருத்து.

ஹரிஜன இலாகா 1,300 ரூபாய் வாடகைக்கு ஒரு கட்டிடத்தை அமர்த்தி அதில் ஹரிஜன இலாகா இருக்கிறது. எல்லா டிபார்ட்மெண்டுகளும் சர்க்கார் கட்டிடங்களில் வைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. ஹரிஜன மானியத்திலிருந்து இவ்வளவு ரூபாய் வெட்டியாக செலவழிக்கவேண்டுமா என்று கேட்கிறேன். வேண்டுமானால் ஹரிஜன மானியத்திலிருந்து ஒரு புதுக் கட்டிடம் கட்டி அதில் நடத்திக்கொள்ளலாம். ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை வீண் விரயம் செய்யாமல் செலவழிக்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹரிஜன மாணவர்களுக்கு **Income Certificate** என்று ஒன்று இருக்கிறது. கிராமங்களில் கிராம முன்சீப்பைக் கேட்டால் கணக்குப் பிள்ளையை கேட்கச் சொல்கிறார். கணக்குப்பிள்ளையைக் கேட்டால் கிராம

[Sri M. K. Somasundaram] [20th July 1957

முன்சீபைக் கேட்கச் சொல்கிறார். ஆகையினால் **Income Certificate** கொடுப்பதற்குத் தகுதியான ஏற்பாடுகள் செய்து ஹரிஜன மாணவர்கள் கேட்டால் தடையின்றி கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவு போடவேண்டும்.

சேரி என்ற வார்த்தையை மாற்றி காலனி என்று தெரிவிக்கவேண்டுமென்று பல அங்கத்தினர்கள் பேசினார்கள். காலனி என்று எழுத்தில் இருந்தால் போதாது. டெபுடி சேவக்குகள் மூலம் பிரசாரம் செய்து காலனி என்ற வார்த்தையை மக்களுக்கு எடுத்துரைத்தால் நலமாக இருக்குமென்று நம்புகிறேன்.

இன்றையதினம் ஒரு அங்கத்தினர் பேசினார், லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்ததென்று. லஞ்சம் ஏன் கொடுக்கவேண்டும்? தன் காரியத்தை செய்து முடித்துக்கொள்வதற்காக லஞ்சம் கொடுக்கிறார்கள். டிப்பார்ட்மெண்டிலே ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்றால் கிளார்க் எழுதி வைத்து மேலே போய் ஆபீஸர் கையெழுத்துப் போட்டு வரவேண்டும். காரியம் சீக்கிரம் முடியவேண்டுமென்று இருப்பவர்கள் கொடுக்கிறார்களே தவிர அவர்கள் கேட்கவில்லை என்று சொல்லுகிறேன். மனோதைரியமும், நன்றாக நடக்கும் என்றும் நினைத்தால் லஞ்சம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. கேட்கிறார்கள், கேட்கிறார்கள் என்று சொல்லக்கூடாது என்பதுதான் எனது கருத்து.

ஹரிஜன மானியத்தை ஆதரித்து இன்னும் அதிகப்படி மானியம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

12-08 p.m. SRI T. V. SANNASI : அவைத்தலைவர் அவர்களே! மதிப்புக்குரிய அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட மான்யங்களில் எல்லாம் தலைசிறந்த மானியமாகக் கருதி மனப்பூர்வமாக இம்மான்யத்தை வரவேற்கிறேன்.

ஜாதி சமயபேதமற்ற சர்க்காரில் ஒரு தனிப்பட்ட சமூகத்தின் பெயரால் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்குவது சரிதானா? என்ற பிரச்னை எழுவதற்கு இடம்கூட இருக்கலாம். என்றாலும், என் கருத்து என்னவெனில் மற்ற வகையறாகளுக்கு ஒதுக்கப்படும் மானியங்களை விட இதற்கு ஒரு வருட பட்ஜட்டின் மொத்தத்தொகையில் சரிபாதி ஒதுக்கப்படவேண்டுமென்பதே என் எண்ணம்.

காரணமென்னவெனில், மற்றவகையில் ஒதுக்கப்பட்ட மானியங்களெல்லாம் பொதுவாக நாட்டின் முன்னேற்ற அடிப்படையில் மக்களது வாழ்க்கைத் தரமானது இப்போதுள்ளதைவிட ஒவ்வொரு துறைகளிலும் இனியும் உயர்வதற்கான வகையில் அமைந்துள்ளது. ஆனால், இம்மானியமானது அம்முறையிலல்ல. பல்லாண்டுகாலமாக மதத்துறையிலும் சமூகத்துறையிலும் ஆட்சிமுறையிலும் நசுக்கப்பட்டு இந்நாட்டின் அவமானச்சின்னமாக நலிந்து கிடக்கும் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்காக என்பதை கட்சிபேதமின்றி அங்கத்தினர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

ஒதுக்கப்பட்ட தொகையில் ஒவ்வொரு துறையிலும் பலன் காணும் முறையில் ஒழுங்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்கும் பூரண பொறுப்பும் போதிய வாய்ப்பும் அரசாங்கத்திற்கே இருந்துவருகிறது. அதிகப்பணத்தை வருடாவருடம் ஒதுக்கிவைத்தாலும் அவதி குறைந்தபாடில்லை. ஆகவே, கண்காணிக்குமளவுதான் கருதிய பயன் கிடைக்குமென்பதை ஓரளவு தெளிவுபடுத்துவதாயிருக்கிறது.

இந்நிலையில், காங்கிரஸ் அரசாங்கமானது எவ்வளவோ நன்மைகளைச் செய்துவந்தும் ஹரிஜனங்களிடத்தில் சிறிதும் நன்றியில்லையென்று காங்கிரஸ்காரர்களாலும் சொல்லப்படுகிறது. இவ்வாறு சொல்லப்படுவதிலும் தவறில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளத்தில் எழும் நன்றி நிலைத்திருக்காமைக்கு அவர்கள் மேலும் தப்பு சொல்வதற்கில்லை. "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்," என்ற நோக்கிற்கிணங்க, சிறிய தெருச்சந்துகளிலெல்லாம் கவிஞர்களும், கலைஞர்களும், அறிஞர்களும்



20th July 1957] [Sri T. V. Sannasi]

பெருகிக்கிடக்கும் இந்நாளிலும் கூட அவர்கள் போதிய கல்வியறிவு பெறுவதற்குரிய வாய்ப்பில்லை. பிறர் தாழ்த்தும் தன்மையால் இன்னும் தாழ்ந்தவர்களாகவேதான் இருந்துவருகிறார்கள்.

வடக்கு வளர்கிறது, தெற்குத் தேய்கிறது என்று சிலரால் சொல்லப்பட்டு வருவதை அடிக்கடி கேட்பதின் காரணமாக மிகவும் மனம் வருந்தி உலகம் தோன்றிய முதற்கொண்டு இருந்துவரும் நான்கு திசைகளில் தெற்கு மட்டும் தினம் தேய்ந்து கொண்டே போனால், முழுதும் தேய்ந்து உலகில் மூன்று திசைகள் தான் மீதப்படுமோ என்ற ஐயமும் ஆட்சியினரால்தான் இந்த கோளாறு என்ற ஆத்திரமும் கொண்டு அடுத்தவர்களைக் கேட்டும் அப்பாவிகளும் இருந்துவருகிறார்கள். நன்று தீதறியும் சிந்தனைக்குரிய நற்கல்வி அடையும் நிலையில் அவர்கள் இல்லாதிருப்பது தான் காரணம்.

இந்நிலையில், நாகரீகமும், கல்வி அறிவும் பெற்ற சிலர் "கொழுத்த காளை ஊரார் பயிரை அழிப்பதுபோல்" தந்நலத்திற்காக அவர்களை அணுகி நன்றி கொன்றவர்களாகி விடுகிறார்கள். ஆகவே, நன்றியற்றவர்களென்று அவர்கள்மேல் குற்றம் சுமத்தக்கூடாது.

அதுநிற்க, பிற்போக்குடைய இனத்தவர் என்ற பெயரால் தனித்து மானியம் ஒதுக்கவேண்டுமென்று கேட்பதற்கிணங்க தனிமானியம் ஒதுக்கப்பட்டுவருகிறது. மானியம் பெறும்நிலையில் பிற்போக்குள்ளவர்களாயிருந்தும் தாழ்த்தப்பட்டவர்களை ஒடுக்கி வதைக்கும் முறையில் முற்போக்குடையவர்களாயிருத்தல் கூடாது. பொதுவாகவே, தாழ்த்தப்பட்டவர்களின் கஷ்டங்களுக்கெல்லாம் பிராமணர்கள்தான் பொறுப்பு என்று சொல்லப்பட்டு வருகிறது. இது தவறு. எந்த பிராமணரும், எந்தத்தாழ்த்தப்பட்டவர்களையும் அடித்து வதைத்தார்கள்என்றோ அல்லது, கொன்றார்களென்றோ சரித்திரத்திலும் கிடையாது. நாட்டு நடைமுறையிலும் கிடையாது. எல்லையற்ற கஷ்டங்களை என்றும் கொடுத்துவருவது இதர சமூகத்தவர்களாகத்தான் இருந்து வருகிறது. வேறு எந்த இதர நாட்டவர்களாகவும் இல்லை.

(Deputy Speaker in the Chair.)

சென்ற தேர்தலில் எனது தொகுதியில் சிலர் ஓட்டுப்பிச்சை கேட்க ஊருக்குள்புகுந்து தாழ்த்தப்பட்டவர்களுக்குள்ளாகவே ஜாதிபேத வெறியை கிளப்பிய தரத்தையும், முறையையும் என்னவென்று கூறுவது; இன்று நினைத்தாலும் இருதயம் துடித்து வெடித்து விடும்போலிருக்கிறது. அறிவுடையோர் எவரும் வெட்குறத்தகுந்த முறையில் இவ்வித அக்கிரமத்தைச் செய்து கொண்டே நாட்டுக்கு நல்லோர் செய்த உண்மைச் சேவைகளையும், உயர்ந்த தியாகங்களையும் மற்றும் அற ஒழுக்கங்களையும் உதாசீனப்படுத்துவதற்காக அழகிய சொற்சாதுரியங்களும், அகங்கவர் நடிப்புகளும் பயன்படுமானால் தெற்கு தேயாமல் என்ன செய்யும். இம்முறை வளர்ந்து கொண்டு போனால் தெற்கு தேய்ந்துகொண்டுதான் போகும். நீதி தரும் கல்வியும், அறிவும் தீதளிக்கும் ஜாதி மனப்பான்மையில் செல்லாமல் எல்லோரும் ஓரினம் என்ற கொள்கை அடிப்படையில் ஜாதிக்கு இடமில்லாத வகையில் சமுதாயத்தைச் சீர்திருத்தவேண்டும். இதில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இல்லையேல், மானியத்தில் பல லட்சங்கள் இடம் பெற்றாலும் மக்கள் மனதில் சமத்துவ லட்சியம் இடம்பெறவில்லையானால் எந்த நற்பயனும் ஏற்பட்டுவிடாது. கட்சிபேதமின்றி இந்த லட்சியத்தில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.

திருச்சி ஜில்லாவில் தேர்தல் காலத்தில் ஜில்லா ஹரிஜன வெல்பேர் ஆபீசைச் சேர்ந்த வெல்பேர் இன்ஸ்பெக்டர் ஒருவர் லீவ் எடுத்துக்கொண்டு எனது தொகுதியில் கோழிப்பெட்டிக்கு தனது ஆளை நிறுத்தி பகிரங்கமாக வேலை செய்துவந்தார். இவ்விஷயத்தைச் சிலர் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஜில்லா கலெக்டர் அவர்களும் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஜில்லா கலெக்டர் திரு. மலையப்பன் அவர்கள் ஹரிஜனங்கள்மீது மாறாக்கருணை உடையவர். இவ்வித

உயரிய கருணையை உத்தியோகத்திலிருக்கும் ஹரிஜன வகுப்பைச் சார்ந்த ஒரு சிலர் தங்களுடைய தவருன போக்கிற்குப் பயன்படுத்திக்கொண்டு அரசாங்கத்திடமிருந்து மாதாமாதம் சம்பளம் பெற்றுக்கொண்டே அரசாங்கத்திற்கு மனதாரத் துரோகம் செய்துவருகிருர்கள். அவர்கள் எந்தக் கட்சிச் சின்னமும் அணிந்துகொள்ளவில்லை. இம்மாதிரி ஒழுங்கீனங்கள் மற்ற ஜில்லாக்களில் இருக்காதென்றே நினைக்கிறேன்.

திருச்சி ஜில்லாவிலுள்ள ஹரிஜன வெல்பேர் இலாகா சம்பந்தப்பட்ட உபாத்தியாயர்களை மாற்றுவதற்கும், மாற்ருமலிருப்பதற்கும் இவ்வளவு தொகையென்று பேரம் பேசிக்கொண்டு வாங்கப்படுகிறது. இதில் ஆபீஸ் ஹெட்கிளார்க் உட்பட சம்பந்தம் இருப்பதாகத் தெரிகிறது. இவ்வித காரியங்களுக்காக மேலினத்தைச் சேர்ந்த இரண்டொரு உபாத்தியாயர்களை டவுன் ஸ்கூல்களிலேயே நிரந்தரமாக வைத்துக்கொண்டு அவர்களைக் கையாளாகவும் கங்காணிகளாகவும் பயன்படுத்திவருகிருர்கள். ஆகவே, அரசாங்கத்தின் நோக்கத்திற்கும், சட்டத்திற்கும் முரண்பாடான இவ்வித கொடுமைகளை உடனடியாக அகற்றவேண்டியது மிகமிக அவசியமெனத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இது நிற்க, ஒவ்வொரு வருடத்திலும் நடைபெறுகின்ற ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்களுக்குரிய குறைகளை எடுத்துச்சொல்லுவதை அச்சடித்துப் புத்தக ரூபமாக கொடுக்கப்படுகிறதே தவிர தெரிவித்த குறைகளுக்கு என்ன பரிகாரம் செய்யப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளுவதற்கு எவ்வித மார்க்கமும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இனியாகிலும் அங்கத்தினர்கள் கூறிய குறைகள் அவரவர்கள் ஏரியாவில் எந்த அளவு உள்ளது என்பதை அறிந்து அதற்கான பரிகாரம் எந்த அளவு அரசாங்கம் செய்திருக்கிறது என்கின்ற விபரத்தையும் அச்சிட்டுப் புத்தகமாக அங்கத்தினர்களுக்குக் கொடுத்தால் யாவருக்கும் திருப்தியாயிருக்கும். அரசாங்கத்திற்கும் நல்ல புகழ் உண்டாகும். ஆகவே, இதற்காவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இச்சபை ஆரம்பித்து 24வது நாளிலாவது எனக்குப் பேச சந்தர்ப்பமளித்த பொறுப்புடையோர்களின் பாரபட்சமற்ற மாபெருங் கருணைக்கு எனது ஆழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

12-20 p.m. *SRI N. S. ARUNACHALAM: மதிப்பிற்குரிய உப சபாநாயகர் அவர்களே, தற்போது நம் மத்தியிலே ஹரிஜன முன்னேற்ற மான்யக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்ததை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் நான் பேச ஆசைப்படுகிறேன். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டுக்கு 60 லட்ச ரூபாய் அதிக மான்யம் கேட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதோடும்கூட, மத்திய அரசாங்கமும் ஹரிஜன முன்னேற்றத்திற்காக உதவ முன்வந்திருப்பதற்காக அவர்களையும் நான் போற்றுகிறேன்.

ஹரிஜனங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி சதா சிந்தித்து, அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று அரும்பாடு பட்ட உலகம் போற்றும் காந்தியடிகள் இந்த மக்கள் மீது கொண்ட அன்பின் காரணமாகத்தான் இவர்கள் படிப்படியாக முன்னேறி வந்துகொண்டிருக்கிருர்கள் என்பது என்னுடைய நம்பிக்கை. பத்து வருஷங்களுக்கு முன்பு அவர்கள் இருந்த நிலைமையையும், பத்து வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது இருக்கும் நிலைமையையும் எல்லோரும் சிந்தித்தோமாளுல், அதனுடைய உண்மை விளங்கும். அதிகமாக நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

அனேக அன்பர்கள் அவரவர்களுடைய அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் சொல்லிவிட்டார்கள். நான் நீண்ட நேரம் வளர்த்துவதற்கு ஆசை இல்லை. ஆனல், இந்த வருஷத்திலே 60 லட்சம் ரூபாய் அதிகப்படியாக



ஒதுக்குவதற்குக் காரணமாக இருக்கும் நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சமயத்தில் நன்றியைச் செலுத்துகிறேன். இந்த 60 லட்சம் ரூபாயை அவர் அதிகமாக ஒதுக்காவிட்டால் அவரையும் நாம் சொல்ல ஒன்றும் முடியாது. இருந்தாலும் அவர்கள் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்தை நினைவில் வைத்துக்கொண்டு, அவர்களை இந்த ஆண்டு மிகவும் கைதூக்கிவிடவேண்டும் என்ற பெரியதொரு நோக்கத்தைக்கொண்டு 60 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு அதிகமாக மான்யத்தில் சேர்த்திருப்பதற்காக அவருக்கு நான் மறுமுறையும் நன்றியைச் செலுத்துகிறேன்.

ஹரிஜன மக்களுக்காக இப்போது அரசாங்கம் நல்ல முறையிலே ஒரு சில நன்மைகளைச் செய்து கொண்டு வருகிருர்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமாளுல், ஆரம்பத்திலே அவர்களுக்குக் குடியிருக்க அவசியமாக இடம் தேவை. குடியிருப்பதற்கு இடம் தேவையாளுலும், ஒரே சமயத்தில்—ஒரே மாதத்திலோ ஒரே வருஷத்திலோ—எல்லோருக்கும் அந்த இட வசதிகள் செய்து கொடுத்துவிட முடியாது. என்னுடைய தொகுதியிலே சென்ற பத்து வருஷ காலங்களிலே எத்தனையோ சேரிகளுக்கு இட வசதி அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. செய்துகொண்டும் வருகிறது. இப்போதும் ஒருசில் சேரிகளிலே இட விஸ்தரிப்பைச் செய்துகொண்டுதான் வருகிறது. தங்குவதற்கு இடம் கொடுப்பதோடு, அதிலே அநேக இடங்களிலே வீடுகளும் கட்டிக்கொடுத்து வருகிருர்கள். சென்ற வருஷத்தில் 115 வீடுகள் என்னுடைய தொகுதியிலே கட்டியிருக்கிருர்கள். ஆனல், அதிலே குற்றங்குறைகள் சொல்லலாம். திட்டத்தின்படி 750 ரூபாயில் நல்ல வீடாக அமைக்க முடியாது. கல், மரம் முதலிய 'வீடு கட்டுவதற்கான சாமான்களின்' விலை உயர்ந்திருக்கும் இந்தச் சமயத்தில், ஆட்களுக்குக் கூலி அதிகரித்திருக்கும் இந்தச் சமயத்தில் இந்த 750 ரூபாய்க்குள் ஒரு வீடு கட்டுவது என்பது சிரமமான காரியம். சர்க்கார் ரூ. 550 இனமாக ஒரு நபருக்கு கொடுக்கிறது. மீதி தொகையை அவர்கள் உழைப்பின் மூலமாக செலுத்த வேண்டும் என்பது திட்டம். ஆகவே, ரூ. 750-லே அந்த வீடுகளை அமைக்க வேண்டும். மார்ச்சு மாதத்திற்குள் அந்த வீடுகளை அமைக்கவேண்டுமென்ற நோக்கத்தில், செங்கற்பட்டு ஜில்லா வெலபேர் ஆபீசர் ஒரு மாத காலமாக சேரி சேரியாக, உண்பதற்குக்கூட நேரமில்லாமல், படுக்கக்கூட ஒய்வில்லாமல் அலைந்தார்கள். வீடு கட்டும் திட்டத்தை எப்படியாவது அமுல் நடத்திவிடவேண்டும். அதுவும் மார்ச் 31-ம் தேதிக்குள் ஒரு பெரிய திட்டத்தை முடித்துவிடவேண்டுமென்று அலைந்தார். தேர்தல் காலத்திலே நான் வேலை செய்வதை விட்டுவிட்டு, அவருடன் நானும் ஒத்துழைத்து, அவருடன் சேரிகளுக்கெல்லாம் போய், சேரிஜனங்களைக் கொண்டே ஒரு கமிட்டியை அமைத்து, "நீங்களே சூளை போட்டுக்கொள்ளுங்கள், நீங்களே வீடுகள் அமைத்துக் கொள்ளுங்கள்" என்று நாங்கள் சொல்லியும், நாங்கள் நேரில் சென்று பார்த்தபோது அந்தக் குறுகிய காலத்திலே அவர்களால் செய்யமுடியாமல் போய்விட்டது. அதற்காக வேண்டி ஆங்காங்கு பணவசதி உள்ளவர்களை அணுகி, "24 வீடுகளை நீங்கள் கட்டிக்கொடுத்து விடுங்கள், ரூ. 200-ஐ உழைப்பாலோ பணமாகவோ கொடுத்து விடுவார்கள், அரசாங்கம் ரூ. 550 கொடுக்கும்" என்று திட்டம் போட்டுச் சொல்லி, நபர்களை முன்வரச் செயது, ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் அவர்களும், ஹரிஜன நல அதிகாரி அவர்களும், நானும் சேர்ந்து அந்தத்திட்டங்களை அமுல் நடத்தி, 115 வீடுகளை இப்பொழுது கட்டி முடித்திருக்கிருர்கள். பாகல்மேடு கிராமத்திலே நமது மாகாண முதல் அமைச்சர் அவர்கள் 18 வீடுகளைத் திறந்து வைத்தார். கொடுத்த தொகைக்குத் தகுந்த மாதிரிதான் அந்த வீடுகள் இருக்கும். நல்ல முறையில் இல்லை என்ருல் எப்படி இருக்க முடியும்? நான் இப்பொழுது அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது என்னவென்ருல், இப்பொழுது சர்க்கார் கொடுக்கும் ரூ. 550-யோடு இன்னும் ரூ. 200 அதிகப்படுத்தி ரூ. 750 ஆக சர்க்கார் கொடுத்தால் ரூ. 250-க்குள்ளதை அந்த மக்கள் உழைப்பாகவோ அல்லது, பணமாகவோ சேர்த்து ரூ. 1,000 திட்டத்திலே ஒரு வீடு அமைத்தால் ஒரு குடும்பத்துக்குத் தகுதியாக இருக்கும் என்பது என்னுடைய முழு நோக்கம். அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய சிபார்சுகளைச் செய்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

*Sri S. LAZAR : சபைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் நான் பேச ஆசைப்படுகிறேன். நேற்றைய தினம் அம்மையாரும், இன்னும் மற்றவர்களும் பேசக்கூடிய நேரத்தில் "ஏதோ தீண்டாமையை ஒழிப்பதற்காக காங்கிரஸ் 70 ஆண்டுகளாகப் பேசி வந்தும்கூட, அந்தத் திட்டம் வெற்றி அடையவில்லை", என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் சொல்ல ஆசைப்படுகிறேன்—காங்கிரஸ் ஆட்சி பத்து ஆண்டுகளாகத் தான் நடந்து வருகிறது. அதற்கு முன்னாலே இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும்கூட, அரசாங்கம் அப்பொழுது நமது கையிலே இருக்கவில்லை. ஆனால், அதற்கான சூழ்நிலை தான் ஆரம்பிக்கப்பட்டது.

12-27 p.m. உள்ளபடியே இந்தத் திட்டம் நமது நாட்டிலே வெற்றிகரமாக நடந்து வருகிறதா இல்லையா என்பதற்கு ஓரளவு மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். அந்த முறையிலே பார்க்கும்போது, அப்ரஹாம் லிங்கன் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட நிறவெறிப் போராட்டம் இன்றையதினம் வரைக்கும் —ஐசன்ஹோவர் ஆட்சி நடத்தக் கூடிய இன்றைய தினம் வரைக்கும்—தாண்டவம் ஆடிக்கொண்டு வருகிறது. இன்னும் அவர்கள் பூரண வெற்றியைக் கண்டு கொள்ள முடியவில்லை. அது மட்டும் அல்ல. ஆட்சி பீடத்தில் இருக்கும் ஐசன்ஹோவர் கட்சியிலே இந்த அடிப்படையிலே சில அபிப்பிராய பேதங்கள் இன்றையதினம் ஏற்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக, அந்தக் கட்சியிலே ஒரு குழப்பம் ஏற்படக் கூடுமோ என்ற நிலைமை இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆகவே, ஏதோ நாகரீகத்திலே 100, 150 ஆண்டுகளாக நாங்கள் முன்னேறிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடிய நாட்டில் இன வெறி இன்றைய தினம் வரைக்கும் தாண்டவம் ஆடுகிறது. இன்னும் அதுபோல் இலங்கையில் இனவெறி எந்த அளவு இருக்கிறதென்றால், அங்கே இருக்கும் இந்தியர்கள் எல்லாம் வெளியேற்றப்படுகிறார்கள். இன்னும், காந்தி மகான் எந்த இடத்திலே ஒரு போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்களோ, அதே ஆப்பிரிக்க நாட்டிலே, இன்னும் இனவெறி தாண்டவம் ஆடுவதை கண்கூடாகப் பார்க்கிறோம். மற்ற நாடுகள் இந்த நிலையிலே இருக்கும் போது, நம் நாட்டிலே நல்லதொரு முன்னேற்றம் கணிசமான அளவு ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னால், அதற்குக் காங்கிரஸ் அரசாங்கம் பொறுப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, காங்கிரஸ் அரசாங்கம் நடைமுறையிலே மக்களுக்கு, அதிலும் முக்கியமாக ஹரிஜன மக்களுக்கு, பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு கட்டத்திலும் வசதிகள் செய்துகொடுத்து அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவதற்காகச் செய்திருக்கும் காரியங்கள் அனேகம், அனேகம். அப்படிப் பார்க்கும் பொழுது, காங்கிரஸ் அரசாங்கமாகப்பட்டது, இவர்களுக்கு ஏராளமான சலுகைகள் நல்ல அடிப்படையில் கொடுப்பதை பார்க்கிறோம். பல சட்டங்கள் கொண்டுவந்ததின் காரணமாக, "தாழ்த்தப்பட்டவர்" என்று சொல்லும் நிலைமை மாறிவிட்டது. இந்த சமயத்தில், அவர்களை "தாழ்த்தப்பட்டவர்" என்று சொல்வது பொறுத்தமல்ல. இன்றைய நிலையில் அவர்கள் "தாழ்ந்த ஜனங்கள்" என்றுதான் சொல்லவேண்டும். இந்த நேரத்தில் அவர்களை "தாழ்த்தப்பட்ட மக்கள்" (Depressed Classes) என்று சொன்னால், அவர்களை மற்றொரு சக்தி அழுத்திக்கொண்டிருக்கிறது என்று தான் பொருள்படும். இன்று, இந்த நாட்டில் எத்தனையோ அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஆனால் எல்லா கட்சிகளும், "ஹரிஜனங்கள் முன்னேற வேண்டும், அவர்கள் அமுக்கப்படக்கூடாது" என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை இருக்கின்ற நேரத்திலே, 'தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள்' என்று சொல்வது பொறுத்தமல்ல.

அரசாங்கமாகப்பட்டது, தாழ்ந்த மக்களுக்கு—அதாவது ஹரிஜன மக்களுக்கு—கொடுக்கக்கூடிய சலுகைகளை மதம் மாறிய ஹரிஜனங்களுக்கும் கொடுக்க முன்வந்தது பாராட்டத்தக்கது. மதம் மாறி இருந்தபோதிலும் கூட, ஸ்ரீ காமராஜ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட அரசாங்கமானது ஹரிஜன கிருஸ்தவர்களுக்கும் சலுகைகளை காட்ட முன்வந்திருப்பதைக் குறித்து சந்தோஷம் தெரிவித்துக்கொள்கிறேன். தற்சமயம், ஹரிஜன கிருஸ்தவர்களுக்கு கல்வி சலுகைகளும், இன்னும் மற்ற வகைகளிலும்





சலுகைகளை கொடுப்பது பற்றி, சர்க்காரை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். இந்த சந்தர்ப்பத்தில், அகில இந்திய கதோலிக சங்கத்தின், ஒரு உறுப்பினன் என்ற முறையில் கிருஸ்தவ மக்களின் சார்பாக, அரசாங்கத்திற்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம், அரசாங்கமானது எப்படி ஹரிஜன மக்களுக்கு கல்விச் சலுகைகள் கொடுத்துவருவதோடு, மற்ற துறைகளிலும், உத்தியோகங்களிலும் சரி, ஏனைய துறைகளிலும் சரி, சலுகைகள் அளித்துக்கொண்டு வருகின்றார்களோ, அதேமாதிரி மதம் மாறாதவர்களுக்கும் சலுகைகளை காட்டவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏதோ மதம் மாறி இருந்தபோதிலும்கூட அவர்களுடைய நிலைமை—பொருளாதாரத்துறையில்—எந்தளவும் முன்னேற்றமடையவில்லை. ஆகவே மதம் மாறினவர்களுக்கும் சமஉரிமை அளிக்கப்பட வேண்டும்.

பிற்பட்ட வகுப்பினர்களுக்கு இப்பொழுது சலுகை கொடுக்கிறார்கள். அப்படி கொடுப்பது, அவர்கள் அமுக்கி வைக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்பதற்காக அல்ல. பொருளாதார துறையில் அவர்கள் பிற்பட்டவர்கள் என்ற காரணத்திற்காகத்தான். பிற்பட்ட நிலையிலுள்ளவர்கள் எந்த சமூகத்தை சேர்ந்தவராயிருந்தாலும்சரி, எந்த ஜாதியை சேர்ந்தவராயிருந்தாலும்சரி, பொருளாதார துறையில் யார் யார் பிற்பட்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு சலுகைகள் காட்டவேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தவேண்டும். பொருளாதார துறையில் யார் பிற்போக்காகயிருந்தாலும் சரி—அவர்கள் மேல் ஜாதியாராக இருந்தாலும் சரி, கீழ் ஜாதியாராக இருந்தாலும் சரி—அவர்களுக்கெல்லாம் சலுகை அளிப்பது நியாயம் என்பதை எடுத்துச் சொல்ல, இந்த சமயத்தில் ஆசைப்படுகிறேன்.

சர்க்கார், ஹரிஜனங்களுக்கு பல சலுகைகளை கொடுத்து, அவர்கள் முன்னேறும்படி செய்திருக்கிறார்கள். அவர்களும் தங்கள் கடமைகளை உணரவேண்டும். இந்தமாதிரி தரும் சலுகைகளை பயன் படுத்திக் கொண்டு வாழ்க்கையில் நல்ல நிலைமைக்கு வந்த பல ஹரிஜன சகோதரர்கள் தங்கள் சமூகத்தினரை திரும்பியும் பார்ப்பதில்லை. அவர்களுடன் பழகுவதுமில்லை. அவர்களுடன்கூட இருந்து அவர்களையும் பொருளாதாரத் துறையிலும் மற்ற ரீதியிலும் முன்னேறச்செய்வதில் இன்றும் அதிகமாக அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அப்பொழுதான் அரசாங்கத்தின் நோக்கமும், எண்ணமும் நல்ல முறையிலே நிறைவேர முடியும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜன மக்களின் முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்கிற நோக்கத்துடன் சர்க்கார் ஏராளமான பணத்தை செலவழிக்கும் இந்த நேரத்திலே, உள்ளபடியே அவர்களுடைய வாழ்க்கை முன்னேறவேண்டுமானால், அவர்களுடைய படிப்பிற்காக மட்டும் ஏராளமாக பணம் செலவழித்தால் மட்டும் போதாது. அவர்கள் தொழில்துறையில் ஈடுபடும் முறையில் நிறைய கைத்தொழில்களையும், சாகுபடிசெய்ய போதுமான நிலங்களையும் கொடுத்தால் தான் அவர்கள் உண்மையிலேயே நல்ல முன்னேற்றம் அடையமுடியும். அவர்களுக்காக கைத் தொழில்களை அதிகமாக ஆரம்பித்து அவர்களுக்கு போதிய கடன் வசதி செய்து தந்து அத்தொழில்களில் அவர்களை ஈடுபடும்படி செய்வதன் மூலம், அவர்களுக்கு அதிகப்படியான நிலங்களைக் கொடுத்து சாகுபடி செய்ய வசதி செய்து கொடுப்பதன் மூலமும்தான் உண்மையிலேயே அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும்.

Sri P. S. ELLAPPAN : உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டு 12-26. p.m.
தினங்களாக இங்கு ஹரிஜன சமூகத்தின் முன்னேற்றத்திற்காக சர்க்கார் எவ்வளவு பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள், அது எந்த எந்த முறையிலே செலவிடப்படுகிறது என்றெல்லாம் இங்கு பேசப்பட்டது. இதுபற்றி சொல்ல முடியாத, அளவுமீறிய சந்தோஷப்படுகிறேன். இந்த சமூகத்தினருடைய கஷ்டம் எனக்கு அனுபவம் காரணமாக நன்கு தெரியும். எங்களுக்காகவே எங்கள் கஷ்டங்களையும் சொல்லி அதிகப்பணம் ஒதுக்கவேண்டுமென்று மற்ற எம்.எல்.ஏ.-க்கள் அதிகமாக பேசியிருக்கிறார்கள். நாங்கள்கூட அதிகமாக பேசவேண்டாத அளவுக்கு மற்றவர்கள் பேசியிருக்கிறார்கள். இது

எப்படி இருக்கிறதென்றால், சந்தைக்கு தன் குழந்தையை அழைத்துக் கொண்டு ஒரு தாய் போகிறாள். கூட்டத்திலே அந்தக் குழந்தை தாயை விட்டு பிரிந்து விடுகிறது. அந்தக் குழந்தை தாயைக்காணாமல் "அம்மா எங்கே, அம்மா எங்கே" என்று அழுதுகொண்டு அதன் தாயைத் தேடி அலைகிறது. அப்பொழுது அந்தக்குழந்தையைப் பார்ப்பவர்கள் எல்லாம் "குழந்தை நன்றாக கண்ணும், மூக்குமாக அழகாக இருக்கிறதே. பாபம் யாரோ பாவி விட்டுவிட்டு போய்விட்டாளே" என்று சொல்லி அக்குழந்தைக்கு அழாமல் இருப்பதாக பொரி, கடலை இவைகளை வாங்கித்தருகிறார்கள். அக்குழந்தையானது இவர்கள் தரும் பொரி, கடலை இவைகளைச் சாப்பிட்டுவிட்டு, தன் தாயை நினைத்துக்கொண்டு அவளைக்காணாமல் மறுபடி "அம்மா எங்கே அம்மா எங்கே" என்று சொல்லி அழ ஆரம்பித்துவிடுகிறது. இந்த நிலையில் அந்தக்குழந்தையை எடுத்து தாயிடம் சேர்க்க யாரும் முன்வருவதில்லை. குழந்தையைப் பிரிந்த தாய் பல இடங்களிலும் குழந்தையைத் தேடிவிட்டு எங்கும் காணாமல் குழந்தை இருந்த இடத்திற்கு வந்ததும், குழந்தை தாயைப்பார்த்து 'அம்மா' என்று சொல்லிக்கொண்டு அவளிடம் போய்விடுகிறது. அந்தமுறையிலே மஹாத்மா காந்திஜீ அவர்கள் எங்களுக்கெல்லாம் தாய்போல் இருந்து எங்கள் உண்மையான முன்னேற்றத்திற்கான வழிகளை ஆரம்பித்து வைத்தார். அந்த ரீதியில்தான் இன்று முன்னேற்றம் அடைந்துவருகிறோம்.

நானும் கீழண்டைவீட்டுக்காரன்தான். மேலண்டைவிட்டுக்காரன் இல்லை. 1938-ம் ஆண்டு மே மாதம் 13-ம்தேதி நானும் அமைச்சரும் மற்றும் சிலரும் திருவாங்கூர் யாத்திரைக்கு சென்னையின் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டு நாங்கள் 13 நாட்கள் யாத்திரை செய்து 216 கோவில்களை பார்த்தோம். அந்தக்காலத்தில் இது எல்லாம் ரொம்ப சங்கடமான நிலை தான். அந்தக் காலத்தில் இருந்த நிலையேதான். தற்சமயம் சர்க்கார் சில விதமான சலுகைகளை கொடுத்துக்கொண்டுவருகிறார்கள். இந்த காரியங்களை எல்லாம் நல்ல முறையில் செய்யவேண்டும் என்றுதான் பல அங்கத்தினர்களும் பேசினார்கள்.

ஹரிஜனங்களின் நலன்களைக் கவனிப்பதற்காக, ஜில்லா ஹரிஜன நலக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான் மதுராந்தகம் தாலூகாவில் இருக்கிறேன். ஜில்லா ஹரிஜன நலக் கமிட்டியில் நான் பல வருஷங்களாக அங்கத்தினராக இருந்துவருகிறேன். ஆனால் அதில் அங்கத்தினராக இருந்தும் ஒன்றுதான், இல்லாமலும் ஒன்றுதான். (சிரிப்பு.) ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு ஹரிஜன நல அதிகாரி தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒரு அதிகாரி அந்த ஜில்லா பூராவிலும் ஹரிஜன நல விஷயங்களை கவனிக்க முடியுமா? ஜில்லா ஹரிஜன நல ஆபீசர் பல வாரங்கள் 'காம்ப்' போய்விடுகிறார். அப்போது, அந்த ஆபீசில் எந்தப் பேப்பரையும், பைலையும், தேடியெடுக்க முடிவதில்லை. அந்த ஆபீஸ் கிளார்க்குகளோ மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்பட்டு விடுகிறார்கள். ஆபீஸர் 'காம்ப்' போயிருக்கும்போது புதுக் கிளார்க்கு பைல்களையோ கடிதங்களையோ தேடியெடுக்க முடிவதில்லை; எந்தக்கடிதம் எங்கே இருக்கிறது என்று தெரிவதில்லை; எந்த பைல் எங்கே இருக்கிறது என்று தெரிவதில்லை.

ஹரிஜனங்களின் முன்னேற்றம் உண்மையாகவே ஏற்பட வேண்டுமென்றால், எங்கள் ஜில்லா ஹரிஜன நல ஆபீசுக்கு ஒரு ஜீப் கார் கொடுக்க வேண்டும் என்று 1948-லேயே நான் கேட்டேன். "ஒரு ஜீப் கார் கொடுத்தால்தான் உடனுக்குடன் ஆங்காங்கே சென்று ஹரிஜனங்களின் குறைகளைத் தீர்க்க முடியும். ஹரிஜனங்களுக்கு நன்மை செய்ய முடியும். ஆகவே எங்கள் ஜில்லா ஹரிஜன நல ஆபீசுக்கு ஒரு ஜீப் கார் கொடுங்கள்." என்று 1948-லேயே நான் கேட்டேன். ஆனால் அப்போது அரசாங்கத்தார் "உங்கள் ஜில்லா ஆபீசுக்குக் கொடுத்தால், அதே மாதிரி எல்லா ஜில்லா ஆபீசுகளுக்கும் கொடுக்க வேண்டியிருக்கும். அவ்வளவு ஜீப்களுக்கு சர்க்காரிடம் பண வசதி இல்லை. ஆகவே உங்கள் ஜில்லாவிற்கும் ஜீப் கிடையாது" என்று சொல்லிவிட்டார்கள்.





ஹரிஜன முன்னேற்றக் காரியங்கள் உண்மையாக நடக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டு ஹரிஜன நல அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான், ஒரு ஆபீசர் 'காம்ப்' போயிருந்தாலும், ஊரில் மற்றவர் ஹரிஜன நல வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பார். மேலும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஹரிஜன நல ஆபீஸ் கிளார்க்குகளை மாற்றுவது கூடாது.

ஹரிஜன நலக் காரியங்கள் சரியாக நடைபெறுவதில்லை. பல கண்டிராக்டர்கள் வந்துபோகிறார்கள். கிணறு வெட்டுவதற்குக் கண்டிராக்டர்கள் வந்துபோகிறார்கள். வீடுகள் கட்டுவதற்குக் கண்டிராக்டர்கள் வந்துபோகிறார்கள். ஆனால் ஒரு காரியமும் நடப்பதில்லை. நான் எதுவும் குற்றம் சொல்லவில்லை. குற்றம் சொன்னால் ஒரு காரியமும் நடக்காது. "நீ தானப்பா நல்லவன். எங்களைக் காப்பாற்றுவதற்கு காந்திக்கு இரண்டாவதாக வந்திருக்கிறாய். நாங்கள் நாராயணனுடன் சம்பந்தப்பட்டவன். எங்களுக்கு உதவி செய்" என்று சொன்னால்தான் காரியங்கள் நடக்கும் போல் இருக்கிறது, நடந்துவருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டு ஹரிஜன நல் ஆபீசர்களை நியமிக்கவேண்டும் என்றும், ஹரிஜன முன்னேற்றத்திற்கு எல்லாக் காரியங்களையும் சரிவரச் செய்யவேண்டும் என்றும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு எனக்கு அவகாசம் கொடுப்பீர்களோ கொடுக்க மாட்டீர்களோ என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஏதோ நான் சொல்லவேண்டிய விஷயங்களைச் சொல்லிவிட்டேன். அவ்வளவுதான் என் சமாசாரம். (சிரிப்பு.)

*SRI P. VEDAMANICKAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 12.43 p.m.
கனம் ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்கள் பிரேரேபித்துள்ள ஹரிஜன முன்னேற்றத்திற்காக மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்கு சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ரூ. 60 இட்சம் அதிகமாக ஒதுக்கியிருப்பதற்காக கனம் நிதி அமைச்சர் அவர்களையும் அரசாங்கத்தாரையும் நான் பாராட்டுகிறேன்.

ஹரிஜன முன்னேற்றத்தில் மிக முக்கியமானது தீண்டாமை ஒழிப்பு ஆகும். தீண்டாமை ஒழியவேண்டுமென்றால் சமூகத்தில் பெரியதொரு புரட்சி ஏற்படவேண்டும். நமது அரசாங்கம் ஹரிஜன நலனுக்காக குழுக்களை அமைத்து, அவைகளுக்காக ஒரு குறிப்பிட்ட அளவு பணம் செலவு செய்கிறது. ஆனாலும் மக்களின் மனம் மாறாவிட்டால் தீண்டாமை ஒரு போதும் ஒழியாது. இந்த நாட்டில் கல்வி மூலம் தீண்டாமை ஒழிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் பாராட்டுகிறேன். தீண்டாமை ஒழிக்கப்படுவதற்கு கலப்பு மணங்கள் பெரிதும் உதவும். ஆகவே அவை மிகவும் அவசியம். ஆனால், ஏறக்குறைய உலகம் உண்டான நாள் முதற்கொண்டு இருந்துவரும் தீண்டாமை கலப்பு மணத்திற்கு இடம் கொடுக்காது. இருந்தபோதிலும், அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆட்களை எடுப்பதையும், அரசாங்க உத்தியோகங்களில் உத்தியோக உயர்வுகள் கொடுப்பதையும் பொறுத்தவரையில், கலப்பு மணத்தை ஒரு தகுதியாக வைத்துக்கொள்ளலாம்.

இன்று எல்லா அரசியல் கட்சியினரும் தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும் என்று இந்த சபையில் பேசியிருக்கின்றனர். அதே அரசியல் கட்சிகள், பொதுஸ்தானங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்சிசார்பாக கொடுக்க வேண்டும். இந்த எண்ணம் தீண்டாமை ஒழிப்பிற்கு உதவியாக இருக்கும்.

தீண்டாமை ஒழிவதற்கு, ஹரிஜன மக்கள் பொருளாதாரத் துறையிலும் படிப்பிலும் முன்னேற்றமடைய வேண்டியது மிகவும் அவசியம். தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார நிலைமையை போதிய அளவிற்கு உயர்த்துவதற்கு அரசாங்கத்திடம் பண வசதி இல்லை. ஆகையால் இப்போது சென்னை மாநிலத்திலுள்ள தரிசுப் புறம்போக்கு நிலங்களை கட்டாயம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று ஒவ்வொரு கிராமத்திலும் நூற்றுக்கணக்கான நிலங்கள் தரிசாகவும் புறம்போக்காகவும் இருக்கின்றன. அவைகளைக் கொடுக்க

[Sri P. Vedamanickam] [20th July 1957

வேண்டும் என்று ஹரிஜனங்கள் அரசாங்கத்திற்கு மனுச்செய்துகொண்டால், அவைகள் குட்டை நிலங்கள் என்ருே, குளத்து நிலங்கள் என்ருே, கண்மாய் நிலங்கள் என்ருே ஏதாவது ஆட்சேபணைகளைக் கிளப்பி அரசாங்கம் கோரிக்கையை நிராகரித்து விடுகிறது. இந்த சபையில் பல கனம் அங்கத்தினர்கள் இதைக் கண்டித்துப் பேசினர்கள். உதாரணமாக, எங்கள் மாவட்டத்தில் எத்தனையோ லட்சக்கணக்கான நிலங்கள் தரிசுப் புறம்போக்காக இருக்கின்றன. ஆனால் ஒரு தாழ்த்தப்பட்ட மகனோ ஒரு பிற்பட்ட மகனோ அவைகளைக்கோரி அரசாங்கத்திற்கு மனுச்செய்துகொண்டால் அந்த கோரிக்கை நிறைவேற்றப்படுவதில்லை. அவைகளில் ஒரு ஏக்கர் நிலம்கூட தாழ்த்தப்பட்டவர்களுக்கோ பிற்பட்டவர்களுக்கோ கொடுக்கப்படவில்லை. மாநிலத்திலுள்ள தரிசு, புறம்போக்கு நிலங்களை ஹரிஜன நல டைரக்டர் மூலமாகவாவது, ஜில்லா ஹரிஜன நல அதிகாரியின் மூலமாகவாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லாக்களிலுள்ள ஆபீஸ்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டும். அரசாங்கத் திட்டங்களிலும், நெய்வேலித் தொழிற்சாலை முதலியவைகளிலும் ஒரு குறிப்பிட்ட பங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டும். தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு யாராவது லைசென்ஸ் கேட்டால், அப்போது அவர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு உத்தியோகங்கள் கொடுக்க ஒத்துக்கொண்டால்தான் லைசென்ஸ் கொடுப்பது என்ற நியதி இருக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் தாழ்த்தப்பட்ட மக்களின் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும்; அவர்களுடைய பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்திலும், சிதம்பரம் தாலூகாவிலும் சில தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. இது வரவேற்கப்படவேண்டியது. ஆனால் தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்தைத்தவிர மற்ற இடங்களில் கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை. அங்கெல்லாம் ஆண் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 6 அணு அல்லது 7 அணுவும், பெண் தொழிலாளருக்கு ஒரு நாளைக்கு 3 அணுவும் கூலி கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் ஹரிஜன சமூகம் முன்னேறவே முடியாது. நல்ல கூலி நிர்ணயிக்கப்படவேண்டும். தஞ்சாவூர் ஜில்லாவில் நிர்ணயித்திருக்கும் அளவிற்கு உயர்த்தாவிட்டாலும், மற்ற மாவட்டங்களிலும் ஓரளவிற்கு உயர்வான கூலியை நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தாலூகாவில் மாஜி குற்ற பரம்பரையினரை முன்னேற்றமடையச் செய்வதற்காக ஒரு 'செட்டில்மெண்ட்'-ஐ அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்து அதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே ஏறக்குறைய 2,000 மக்கள் இருக்கிறார்கள். அங்கே ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரி இருந்தது. அது சென்ற ஆண்டு எடுக்கப்பட்டுவிட்டது. அங்கே ஆஸ்பத்திரியில்லாததால் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே அவசியம் ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் விவசாயம் செய்வதற்கு நல்ல பாசன வசதி இல்லை. ஆகவே அவர்கள் விவசாயம் செய்யக்கூடிய நிலங்களுக்குப் பக்கத்திலுள்ள கண்மாய்களை மராமத்து செய்து அவர்களுக்கு நல்ல நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. C. MUTHUKUMARA SWAMY :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கும் ஹரிஜன முன்னேற்றத்திற்கான மானிய கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER :** ஐந்து நிமிஷங்களுக்குள் கனம் அங்கத்தினர் தமது பேச்சை முடித்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



20th July 1957]

* **Sri M. C. MUTHUKUMARASWAMY :** ஹரிஜனங்கள் சம்பந்தமாக, சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு இந்த சபையில் சில கேள்விகள் எழுந்தன. அவை இங்குள்ள கனம் அங்கத்தினர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நம்புகிறேன். அப்போது, இந்த ஹரிஜன இலாகா பிற்பட்ட இனத்தவர்களுக்கு அதிகம் நன்மை செய்வதாக சில கனம் அங்கத்தினர்கள கூறினார்கள்; 12-47 p.m. ஹரிஜனங்களுக்கு அதிகம் நன்மை செய்வதாக சில கனம் அங்கத்தினர்கள் கூறினர்கள். ஹரிஜன நலக் காரியங்களையும், பிற்பட்டவர்களுக்கான நலக்காரியங்களையும் ஒரே இலாகாவிடம் ஒப்படைத்திருப்பதால்தான் இந்தத் தகராறுகள் எழுவதாக பலருக்கு அப்போது அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டது. நான் ஒரு நாள் ஹரிஜன நல டைரக்டர் ஆபீசுக்கு போனேன். அங்கே "ஹரிஜன நல டைரக்டர் ஆபீஸ்" என்று போர்டு போட்டிருந்தது. ஆனால், ஆபீசுக்கு உள்ளே சென்று ஹரிஜனங்களுக்கு நல்ல உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால், எனக்குத் தெரிந்தவரையில் ஹரிஜனங்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கப்படவில்லை என்றுதான் நான் திடமாகச் சொல்வேன். அங்கே எத்தனை ஹரிஜனங்கள் வேலைபார்க்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கே ஹரிஜனங்களுக்கு ஏன் வேலை கொடுக்கக்கூடாது? அங்கே வேலைபார்ப்பதற்குத் தகுந்த திறமையுள்ள ஹரிஜனங்கள் இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். சென்ற வரவு செலவுத் திட்டக் கூட்டத்தில்கூட இதைப்பற்றிச் சொன்னேன். அப்போது, அந்த இலாகாவை இரண்டாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் இன்றுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஹரிஜனங்களுக்கு என்றும், பிற்பட்டவர்களுக்கு என்றும் இந்த இலாகாவைப் பிரித்து விட்டால் இந்தப் பிரச்னை எழாது என்று நினைக்கிறேன். அதோடு இன்று இருக்கிற ஹரிஜன ஹாஸ்டல்களை நடத்துபவர்கள் அதிலிருந்து கொள்ளை லாபம் அடித்துவிடுவதைப்போல எண்ணி, அவற்றை எல்லாம் சர்க்காரே நடத்தப்போவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு சந்தேகம். அப்படியே கொள்ளையடிப்பதாக வைத்துக்கொண்டாலும் எத்தனை ரூபாய் லாபம் கிடைக்கும். புள்ளிவிவரங்கள் உண்டா? சொல்ல முடியுமா? ஒரு பிள்ளைக்குப் 15 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இதில் கொள்ளையடிக்க எவ்வளவு மிஞ்சும்? ஆனால் இவர்கள் அதிகமான பிள்ளைகளைச் சேர்த்து வருகிறார்கள். சர்க்காரே இவற்றை நடத்த முன் வந்தால் அதைத் தடுப்பதற்கு இல்லை. ஆனால் இன்றைக்கு 50 மாணவர்கள் இருப்பதற்கான ஒரு ஹாஸ்டலை ஏற்படுத்தினால் அதில் இன்னும் வருஷத்திற்கு பத்து மாணவர்கள் வீதம் அதிகம் சேரவேண்டுமென்றால் சேரமுடியுமா? எனக்குத்தெரியும். மாயவரத்தில் ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்தினார்கள். 40 மாணவர்களுக்கு என்று அன்றைக்கு விதித்தார்கள். இன்னும் 40 மாணவர்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அதிகமாக்கப்படவில்லை. அதேமுறையில் ஹரிஜனங்கள் அதிகமாக முன்னுக்கு வந்துவிடக்கூடாது என்கிற எண்ணம் இருந்தால் இவற்றையெல்லாம் சர்க்காரே எடுத்து நடத்தலாம். அதிக மாணவர்கள் முன்னுக்கு வரவேண்டும், ஹாஸ்டல்களில் சேர்ந்து படித்துப் பயன் பெறவேண்டுமென்பது சர்க்காரின் எண்ணமாக இருந்தால் தனிப்பட்டவர்களிடம் தான் ஹாஸ்டல் இருக்கவேண்டும். சர்க்கார் எடுத்துக்கொள்வதாய் இருந்தால் வருந்துகிறேன். தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறோம். எத்தனையோ காலமாகப் பேசிவருகிறோம். தீண்டாமைக்கே அஸ்திவாரமாக இருக்கிற கோயில்கள் இருக்கின்றன. கோயில் நிர்வாகிகளாக ஏன் தீண்டப்படாதவர்களைப் போடக்கூடாது என்று கேட்கிறேன்? இதர இலாகாக்களிலும் அவர்களுக்கு என்று ஒதுக்கியிருக்கிற புள்ளிவிவரப்படி வேலை கொடுக்கப்பட்டு வருகிறதா என்று கேட்கிறேன். கிடையாது. இது வருந்தவேண்டிய விஷயம். இன்னும் எத்தனை காலத்தில் ஹரிஜன என்று ஒதுக்கப்படும் நிலைமை அடியோடு மாற்றப்பட்டு அவர்களும் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராகச் சேர்வார்கள் என்று சொல்லமுடியாது. 150 வருஷ வெள்ளைக்காரன் ஆட்சிகாலத்தில் தீண்டாமை ஒழிப்பு நிலைமை வரவில்லை என்பதைவிட உலகத்திற்கு எல்லாம் வழிகாட்டி என்று பெயர்பெற்ற இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு ஆட்சியில் இருக்கிற காலத்திலேயே தீண்டாமை ஒழிக்கப்படாமல் இன்னும் இருப்பதுதான் வருத்தமாக இருக்கிறது. நம்

[Sri M. C. Muthukumaraswamy] [20th July 1957

முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் ஸ்ரீ கக்கன் அவர்களுடைய காலத்திற்குள்ளாகவாவது தீண்டாமை என்பதை நாட்டைவிட்டு வேரறுத்துவிட வேண்டுமென்று விரும்புகிறேன். ஹரிஜனங்களும் சுதந்திரமாக வாழ வழிவகுத்தாகவேண்டும். கல்வி மாத்திரம் கொடுத்தால் அவர்கள் சீக்கிரத்திலேயே முன்னுக்கு வரமுடியும் என்று சொல்லமுடியாது. அதை நாள் கடத்திப்போனால் அவ்வளவு சரியில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜன ஹாஸ்டல்களில் 15 முற்போக்கு வகுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்று சொல்கிறார்கள். அதனால் ஹரிஜன நலம் ஒரு காலத்தில் தடைபட்டுப் போமோ என்று சந்தேகப்படுகிறேன். ஒற்றுமையை இதில் காட்டுவதில் பிரயோசனம் இல்லை. இன்னும் அதிகமான ஹரிஜனங்களைச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டியதுதான் அவசியம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல சட்டசபையில் மட்டும் ஸ்தானம் கொடுத்தால் போதாது. மேல்சபையிலும் பத்துப் பேர்களாவது இருக்கவேண்டாமா ? தீண்டாதவர்களை முன்னுக்குக் கொண்டுவர எத்தனையோ சலுகைகளைக் கொடுத்து வருகிறோம் என்று சொல்வது பிறர் ஏளனத்திற்குத்தான் காரணமாக இருக்கிறது. தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்று சொல்கிறவர்களுக்கு நான் ஒரு விஷயத்தைச்சொன்னால் வருந்தமாட்டார்கள் என்று நினைக்கிறேன். யார் சாதிகளை உண்டுபண்ணினார்கள் என்று சொல்கிறார்களோ அவர்களால் இன்றைக்கு எங்கள் ஹரிஜன சமூகத்தாருக்கு அதிகத் தொந்தரவு கிடையாது. இன்றைக்கு சாதிகளை உண்டாக்கியவர்கள் திருந்திவிட்டார்கள். நன்றாகப் படித்தவர்கள், உலகின் போக்கைத் தெரிந்துகொண்டு எங்களுக்குச் சேவைசெய்ய வழி இல்லையா என்பதாக முன்னுக்கு வருகிறார்கள். ஆனால் இன்றைக்குப் பிற சாதிக்காரர்களால் தான் சொல்லமுடியாத தொல்லை விளைகிறது. இவற்றை அறவே நீக்க, யார் தீமையை உண்டு பண்ணினார்களோ அவர்களைக்கொண்டே நிவர்த்தி செய்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவர்களை இவ்விலாகாவில்போட்டு தீண்டாமையை ஒழிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

12-55 p.m. * **Sri C. N. ANNADURAI :** கனம் சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்காகக் கோரப்பட்டிருக்கிற மான்யத்திற்குப் பிரேரேபிக்கப்பட்டுள்ள ஒரு வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்துப்பேச முன்வந்திருக்கிற காரணத்தால் இதுவரையில் ஆட்சியாளர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற நல்ல முயற்சிக்கு இடையூறு, உற்சாகத்துக்குக் குறைவு ஏற்பட்டு விடக்கூடாதென்பதை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டாவதாக இந்த நல்ல ஹரிஜன முன்னேற்றத்தை நடத்துவதற்கு இப்போதுள்ள அமைச்சரை விடத் தகுதியானவர்கள் அந்தக்கட்சியிலேயே வேறு ஒருவர் இருக்கிறார் என்கிற நம்பிக்கையின் பேரிலோ, அல்லது எங்கள் கட்சியிலேயே உடனடியாக ஆட்சியை எடுத்து நடத்தக் கூடியவர் இருக்கிறார் என்கிற நம்பிக்கையின் பேரிலோ அதிலுள்ள குற்றங் குறைகளை எடுத்துச்சொல்ல நான் முன்வரவில்லை.

ஹரிஜன முன்னேற்றம் என்பது தேசீயப் பிரச்சனை என்கிற விஷயத்தை—ஹரிஜனங்கள் என்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட பெருங்குடி மக்கள் யாரால் தாழ்த்தப்பட்டார்கள், யாரால் ஒடுக்கப்பட்டார்கள், அவர்களைத் தாழ்த்தி ஒடுக்கினவர்கள் யார் என்று—அலசிப் பார்க்கிற சமயத்தில் ஒவ்வொரு காலத்தில் நாம் எல்லோருமே அந்தப் பெரும் குற்றத்தைப் புரிந்தவர்களாக இருக்கிறோம் என்கிற மனச்சாட்சி உறுத்தல் எல்லா சமூகத்தாருக்கும் இருக்கும். ஆகவே அந்தப் பெரும் குற்றத்திற்கு, அநீதிக்குக் கழுவாய் தேடுகிற வகையில், பரிகாரம் தேடுகிற வகையில் எல்லாச் சமூகத்தினரும் தமது தமது சொந்தப் பிரச்சனையாக ஹரிஜன முன்னேற்றப் பிரச்சனையைக் கவனித்தாகவேண்டும். அந்த வகையில் நானும், என்னைச்சார்ந்த கட்சியினரும், "காங்கிரஸ் கட்சியார் இதில் சாதித்திருப்பதைவிட மற்றவர்கள் சாதித்திருக்கிறார்கள். சாதிக்கமுடியும்" என்று எடுத்துச்சொல்கிற நேரத்தில் "எங்களைத் தவிர இதர கட்சியார்



20th July 1957] [Sri C. N. Annadurai]

என்ன என்ன சாதித்தார்கள் ? " என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்ல இப்படியாக விவாதத்தில் இறங்கிவிடுகிறோமே என்று வருத்தப்படுகிறேன்.

இந்த விவாதத்திற்கு இரண்டு காரணம். ஒன்று காங்கிரஸ் உறுப்பினர்களாக இருக்கிற பல பேர்கள், இன்றைக்கு எதிர்தரப்பில் உட்கார்ந்து கொண்டு நாங்கள் சொன்னவற்றையே இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகச் சொல்லிவந்தார்கள். அவர்களை எல்லாம் அந்தப்பக்கத்திலே இழுத்துப் போட்டுக்கொள்ளும் சக்தி படைத்த கட்சியார், நாளைக்கு இந்தத் தரப்பில் இருக்கக்கூடிய சில பேர்களையும் அந்தப் பக்கத்தில் இழுத்துக் கொள்ளுகிற சக்தியை அபாரமாகப் படைத்திருக்கிறார்கள். ஆகவே இது கட்சிப் பிரச்சினை அல்ல ; சக்திப் பிரச்சினையும் அல்ல என்பதை உணர்ந்தே நாங்கள் நாட்டைப் பிடித்துக்கொண்டிருக்கிற ஒரு கேட்டைக் தீர்ப்பதற்காகத்தான் இந்த விவாதத்தில் கலந்து கொள்கிறோம்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சம் ரூபாய் ஹரிஜன முன்னேற்றத்திற்குச் செலவிடுவதற்காகக் கோரியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க தொகைதான். அதற்கு முன்னால் ஒரு கோடியே அறுபத்தைந்து லட்சம் ரூபாய்தான் செலவழித்தார்கள் என்றும் இப்போது கிட்டத்தட்ட 30 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியோடு அந்தக் குறிப்பேட்டை வாங்கிக்கொள்ளுகிற காலத்தில் எனக்குச் சோகம் தருகிற ஒரு இடம் கண்ணில் பட்டுவிட்டது. அங்கே

**" The increase in the Budget Estimate (Revised) for 1957–58 is mainly due to the provision made for schemes included in the Five-Year Plan relating to the removal of untouchability, welfare of scheduled tribes and scheduled areas, ex-criminal tribes and backward classes."**

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செய்யப்பட இருக்கிற பல காரியங்களுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர சென்ற ஆண்டு செய்யப்பட்ட காரியங்களைவிட இவ்வாண்டு அதிகப்படியான காரியங்களைச் செய்வதற்குச் செலவழிக்கப்பட அல்ல என்று உணருகிறேன். மற்றொன்றையும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். " இவ்வாண்டு ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். சென்ற ஆண்டைவிட 30 லட்சம் அதிகமாக இவ்வாண்டு செலவிடப் போகிறோம்" என்றெல்லாம் சொல்லும்போது உண்மையிலேயே சென்ற ஆண்டு செய்யப்பட்டுள்ள காரியங்களைவிட அதிகமான காரியங்களை இவ்வாண்டு இந்தச் சர்க்கார் செய்யப்போகிறார்கள் என்கிற எண்ணம் உண்டாகிவிட்டால் அது தவறாகக்கூட இருக்கும். காரணம் சென்ற ஆண்டு இருந்த வாழ்க்கைத்தரத்தைவிட, இவ்வாண்டு வாழ்க்கைத்தரம் கடுமையாகப் போனதற்குக் காரணம் விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. " ஒரு கோடி ரூபாயில் சென்ற ஆண்டு என்ன என்ன காரியங்களைச் செய்தோமோ அதே காரியங்களைச் செய்வதற்கு இவ்வாண்டு ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் செலவழித்தாகவேண்டும்" என்று பொருளாதார நிபுணர்கள் எல்லாம் வற்புறுத்துகிறார்கள். ஆகவே "நாமும் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு 30 லட்சம் ரூபாய் அதிகமாகவே ஹரிஜன முன்னேற்றத்திற்காகச் செலவழிக்கப்போகிறோம்" என்று பெருமை பட்டுக்கொள்ளவோ, சந்தோஷப்பட்டுக்கொள்ளவோ அவசியம் இல்லை. அந்தச் சமுதாயத்தைத் திருத்தி அமைப்பதிலே, வளர்ச்சி அடையச் செய்வதிலே நாம் இன்னும் என்ன என்ன புதுக்காரியங்களைச் செய்யப்போகிறோம் என்று கணக்கு எடுத்துக்கொள்வதே உண்மையில் பெருமைக்கு உரியதாகும். அப்படிப் பார்க்கிற காலத்தில், நாட்டுக்குச் சுதந்திரம் வந்து பத்து ஆண்டுகள் கழிந்துவிட்ட பிற்பாடும் அவர்களுடைய முன்னேற்றத் துறையில் பெருமைப்படத்தக்க மாறுதல்கள் இல்லை என்பதை எல்லாக் கட்சியினரும் உணர்வார்கள். ஓரளவு முன்னேற்றம் உண்டு. இந்தப் பேரவையிலும்கூட அந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்கள்—நல்ல ஆர்வம் உடைய இளைஞர்கள், உரிமைக்குரலை எழுப்பக்கூடியவர்கள், உள்ளுணர்ச்சி நிறைந்தவர்கள்—

[Sri C. N. Annadurai] [20th July 1957

ஏராளமாக இருப்பதும் தங்கள் சமூக உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள அவ்வப்போது விழிப்போடு செயலாற்றுவதும் நாம் செலவழிக்கும் ஒரு கோடி நாட்டுக்கு அளிப்பதைவிட அதிகமாக நல்லபலன் அளித்திருக்கிறதென்றே நான் கருதுகிறேன்.

பொதுத் தொகுதி முறையில் சமுதாயத்தில் மக்கள் ஆற்றலும் அறிவும் படைத்து ஏராளமாக மீண்டும் மீண்டும் இங்கு வரவேண்டுமானால் அவர்களின் வாழ்க்கைத் தரம் நன்றாக உயர்த்தப்பட வேண்டும். இந்த தலைமுறைதான் கடைசி ஹரிஜன தலைமுறை. ஹரிஜனம், பிற ஜனம் என்று இருக்கிற சமுதாய அமைப்பை இந்தத் தலைமுறையோடு தீர்த்துக் கட்டிவிடுவதற்கு ஏதாவது ஒரு தீவிரமான நடவடிக்கையை உண்மையிலேயே எடுத்தாலொழிய, உண்மையில் தனித் தொகுதி போய்விட்டால் தனித் தொகுதி கைவிடப்பட்ட பிறகும் இத்தனை மக்கள் பொதுத் தொகுதியிலிருந்து இந்தப் பேரவைக்கு வருவார்களா என்பது ஐயுறுவதற்கு உரியதுதான். இதை எடுத்துச் சொல்ல ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் தங்கள் காலத்திலே செய்யப்பட்ட காரியங்களை எடுத்து விளக்கும் நேரத்தில் பலருக்கு வருத்தமாக இருந்தது. ஆனால் ஒன்று நான் சொல்லிக் கொள்வேன். இந்த காங்கிரஸ் சர்க்கார்—காங்கிரஸ் ஆட்சி—ஏற்பட்ட பிறகுதான் ஹரிஜனங்களைப் பற்றிக் கவனிக்க ஆரம்பித்தார்கள் என்று எடுத்து சொல்லுவது நம்முடைய மாநிலத்தின் அரசியல் வரலாற்றைக் கூர்ந்து பார்க்காத குறையே என்று உணர்கின்றேன்.

சர்க்கார் வெளியிட்டிருக்கிற அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டிருக்கிறது :—

"Madras is one of the earlist Provinces to take up this question on Government level and as early as 1919 an effort was made to make an exhaustive enquiry into the conditions of the depressed and backward classes and the disabilities of improving their conditions. It was in that year that the Commissioner of Labour was entrusted by the Government with the duty of the betterment of the conditions of the depressed and backward classes in the State."

ஆகையினால் இந்த சமூகத்தின் நிலையை மாற்ற வேண்டுமென்ற கருத்து 1919-லிருந்தே சர்க்கார் அளவுக்கு வந்து, அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த முயற்சி எங்கே? இன்றைய தினம் எடுத்துக்கொள்ளுகிற முயற்சிகள் எங்கே என்று ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் மலைக்கும் மடுவுக்கும் ஆக வித்தியாசம் இருப்பதை நான் அறிகிறேன். ஆனால் அப்போது வசூலிக்கப்பட்ட வரித் தொகையையும், இப்போது வசூலிக்கப்பட்டு வரும் வரித் தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அன்றைய நாட்டு நிலைமையையும், இன்றைய நாட்டு நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அன்றைக்கு என்ன என்ன காரியங்களைச் செய்திருக்கிறார்களோ, அதே காரியங்களை இன்றைக்கு இருக்கின்ற வசதிக்கேற்றபடி விரிவாக்கிக்கொண்டு இருக்கின்றோமே தவிர, புரட்சிகரமான மாறுதல் எதுவுமே இல்லை.

ஹரிஜன முன்னேற்றத்திற்கு என்று குறிப்பிட்டுக் கேட்கிற நேரத்தில், ஹரிஜன நலனுக்குச் செலவிட என்று கேட்பதைக் காட்டிலும் ஹரிஜனங்களுடைய நலனுக்காக இன்ன இன்ன காரியங்களைச் செய்திருக்கிறோம், செய்யப் போகிறோம் என்பதாக ஆராய்ந்து அலசிக் காட்டி இருக்கலாம். ஹரிஜனங்கள் பெரும் பெரும் தொழில்களிலும் உயர்ந்த உத்தியோகங்களிலும் இருப்பதாகக் காட்டுகின்ற நேரத்திலே காங்கிரஸ் ஆட்சி ஏற்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, காங்கிரஸ் ஆட்சி ஏற்படுமா என்று காங்கிரஸ்காரர்களே ஐயமுற்றுக்கொண்டிருந்த காலத்திற்கு முன்னால், காங்கிரஸ் கட்சி நாட்டை மீட்குமா என்று அரசியல் உலகத்தில் ஐயப்பாடு இருந்தபோதே, இதே மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி வகுப்பைச் சேர்ந்த M. C. ராஜா மந்திரியாகவும், ஸ்ரீ சிவராஜ் மறை பெருங்குடி மகன் சட்டக் கல்லூரி பேராசிரியராகவும்



20th July 1957] [Sri C. N. Annadurai]

ஸ்ரீ சிவஷண்முகம் வேறு துறையில் நல்ல திறமை பெற்றவராகவும் அகில இந்தியாவுக்கும்—அகில இந்தியா என்ன—உலகம் முழுவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை எடுத்துக் காட்டி அமரராக—டாக்டர் அம்பேத்கார் விளங்கியிருப்பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

ஹரிஜன பிரச்னையைக் கவனித்துப் பார்த்தால், ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொருவருடைய துணையை அவர்கள் நாட வேண்டியிருந்திருக்கிறது. ஆங்கில ஆட்சி வந்தவுடன்தான் ஹரிஜன மக்கள் முதன்முதலில் நாகரீகமாக நடத்தப்பட்டார்கள் என்பதை அக்காலத்தில் வெளிவந்த இலக்கியத்தைப் பார்த்தால் தெரியும். அவர்கள்தான் முதன் முதலில் தாழ்த்தப்பட்டவர்களைத் தொட்டார்கள். தங்கள் வீடுகளில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார்கள். அவர்கள் தொட்டுக் கொடுத்த பண்டங்களை உண்டார்கள். அதன் மூலமாக அந்தச் சமூகத்தைப் பிடித்திருந்த கஷ்டம் அந்தக் காலத்தில் நீங்க வழி ஏற்பட்டது. ஓரளவுக்கு மதிப்பு கிடைத்தது. அதற்குப் பிற்பாடு ஏற்பட்ட வெள்ளைக்கார ஆட்சியில்—நான் முன்பு படித்துக் காட்டியபடி—1919-ல் ஏற்பட்ட லேபர் இலாகாவின் மூலம் அவர்களுடைய குறைபாடுகளைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதற்குப் பிற்பாடு ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, சபாநாயகர் மூலமாக இந்தச் சபைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்—மதுரை மாவட்டத்தில் ஜில்லா போர்டு தலைவராக இருந்த—காலஞ்சென்ற எங்கள் பெரும் தலைவர்களில் ஒருவரான சௌந்திரபாண்டியன் அவர்கள் ஆதித்திராவிடரை பஸ்ஸில் ஏற்றக் கூடாது என்ற ஒரு கொடிய சட்டத்தை நீக்கி, அவர்களை ஏற்றாவிட்டால் மோட்டார்களுக்கு லைசென்ஸ் தரப்படமாட்டாது என்று ஒரு சட்டத்தை வகுத்தார்கள். "அந்தக் காலம் எப்படிப்பட்டது? அந்தக் காலத்தில் போடப்பட்ட சட்டம் எங்கே? இந்தக் காலத்தில் போடுகிற சட்டம் எங்கே" என்று உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரச் சொல்கிறேனே தவிர நாங்கள் ஒன்றும் புதிதாகப் பெரிதாக செய்துவிட்டோம் என பெருமை அடித்துக் கொள்ளச் சொல்லவில்லை. ஆயினும் இன்றைக்குச் செய்யக் கூடியது என்ன என்று பார்த்தால், ஒரு கோடி செலவழிக்கிறோம் என்று சொன்னால் ஒரு கோடி செலவழிக்கப்படுகிறது என்று எடுத்துக்காட்டுகிற அங்கத்தினர்கள் அத்தனை பேரும், "செலவழிக்கின்ற தொகை எப்படிச் செலவழிக்கப்படுகிறது? யார்யாரால் செலவழிக்கப்படுகிறது? அது எந்தெந்த இடத்திற்குப் போய்ச் சேருகிறது" என்பதைப் பார்த்தால்தான் உண்மையிலேயே அவர்கள் வளர்ச்சியைத் தெரிந்துகொள்ள முடியும்.

இந்த நேரத்தில் எனக்கு ஒரு சரித்திர வரலாறு நினைவுக்கு வருகிறது. பேரரசன் Frederic மக்களுக்குத் தேவையான நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வந்தான். பெருந் தொகையைச் செலவிட்டான். மக்களோ ஏழ்மையிலேயே வாடியிருந்தார்கள். ஒரு பெரும் சபை கூடியிருந்த நேரத்தில் பல பிரபுக்கள் வீற்றிருந்த அந்த அவையிலே, "நான் ஏராளமான தொகையை மக்களுக்காகச் செலவிடுகிறேனே! ஆனால் மக்கள் வாட்டத்தோடும் வறுமையோடுமே இருக்கிறார்களே! அதன் காரணம் என்ன?" என்று பெடரிக் பெருமகன் வினவ, பிரபுக்களில் ஒருவர்—முதியவர் "அதற்குப் பதில் நான் அளிக்கிறேன், மன்னா." என்று சொல்லி தன் தட்டிலிருந்த பனிக்கட்டி ஒன்றை எடுத்து 'இதை மன்னரிடத்து அனுப்புங்கள்' எனப் பக்கத்தில் இருந்த ஒரு பிரபுவிடம் கொடுக்க, அந்தப் பிரபு இன்னொரு பிரபுவிடம் கொடுக்க—இப்படியாக அந்தப் பனிக்கட்டி பிரபுக்களின் கை பட்டுப்பட்டு அரசன் கைக்குப் போய்ச் சேர்ந்த காலத்தில் இரண்டு சொட்டு தண்ணீர்தான் மிச்சமாக இருந்தது.' இதுதான் ராஜ நீதி மன்னா" என்று முதியவர் சொன்னதான வரலாற்றுக் கதை நினைவுக்கு வருகிறது.

அக்கதை போல் இன்றைக்கு "ஹரிஜனத் துறை அமைச்சர் அவர்கள் ஹரிஜனங்களுக்காக 1 கோடி ரூபாய் உதவி செய்கிறார்கள்" என்று சொன்னாலும், அந்தத் தொகை பிரபுக்களின் கை பட்டுப்பட்டு பிறர் பணத்தைப் பெறுவதிலே பிரபுத் தன்மையுடைய பிரபுக்களின் கை பட்டுப்பட்டு சேரிக்குப் போகிற நேரத்தில் இரண்டு சொட்டுத் தண்ணீராக மாறிவிடு

[Sri C. N. Annadurai] [20th July 1957

கிறது என்று நினைக்கிறேன். (சிரிப்பு.) ஆகவே உண்மையிலேயே நம்மால் ஒதுக்கப்படுகின்ற இந்தத் தொகை எப்படி செலவழிக்கப்படுகிறது என்பதிலே மிக மிகக் கண்காணிப்பு தேவை என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மற்றொன்று, குடியிருப்பு வசதிக்காக, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பற்றி, பல்வேறு மக்களால் பல்வேறு முறைகள் சொல்லப்பட்டன. பல்வேறு கருத்துக்களைக் கூறவில்லை. ஒரே கருத்தை பல்வேறு கோணங்களிலிருந்து பார்த்தார்கள் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

சிலர் ஹரிஜனங்களுக்கு வீடு தேவை என்கிறார்கள். சிலர் ஹரிஜனங்களுக்கு வீடுகள் சேரியில் தேவை என்றார்கள். வேறு சிலர் சேரியிலேயே இருந்தால் "சேரி" மனப்பான்மை இருக்கும். ஊருக்குள் இருக்கவேண்டும் என்கிறார்கள்.

இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறை இருப்பதாக நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் புரிந்துகொள்ளலாம். "ஹரிஜனங்களுக்கு சேரியில் வீடு வேண்டாம்; ஊருக்குள்ளேயே கட்டித் தரவேண்டும்" என்று சொல்வதில் ஒரு குறையிருக்கிறது. அப்போது பல பேர்கள் ஹரிஜனங்களாக மாறிவிடுவார்கள். ஹரிஜனங்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகளைத் தாங்களும் பெறவேண்டும் என்ற காரணத்திற்காக தங்களை ஹரிஜனங்கள் என்று சொல்லிக் கொள்ளப் பல பேர்கள் தயாராய் இருக்கிறார்கள். சர்க்கார்தான் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஊருக்கு வெளியே ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்துவிடலாம் என்றாலோ பிற சமூகத்தாரோடு கலந்து உறவாடிப் பழகும் நிலைமை இல்லாமல் போய்விடுகிறது. சேரிகள் ஒதுக்கி வைக்கப்படுகிறது.

கனம் அங்கத்தினர் லாஸர் சொன்னபடி ஒதுக்கி வைக்கும் தன்மை தான் காரணம். அப்ரஹாம் லிங்கனின் அறிவு அமெரிக்க நாட்டுக்குப் பயன்பட்டது நீக்ரோ பிரச்னையை ஒழிக்க என்று சரித்திரம் கண்டறிந்தாலும் கூட—அன்றைக்கு அவர்களை ஒதுக்கித் தனியாக வைத்து முன்னேற்றம் காண முற்பட்டதால்தான் இன்றைக்கும் அந்தப் பிரச்னை அந்நாட்டில் முழுக்கத் தீர்ந்தபாடில்லை. ஆங்காங்கே தெளிந்துகொண்டிருக்கிறது என்பதை உணருகிறோம். ஆகவே அவர்களை ஒதுக்கி சேரியில் வைக்கும் மனப்பான்மையும் சரியல்ல. "இந்தத் தலைமுறையினர்தான் கடைசித் தலைமுறை ஹரிஜன மக்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் கடைசித் தலைமுறையினர். இனிமேல் ஏற்படக்கூடியவர்கள் எல்லோரும் தமிழர்கள்—ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்தான்" என்கிற விதத்திலே ஏதாவது செய்ய வேண்டும்.

யார், யார் என்ன என்ன செய்தார்கள் என்பதைப் பற்றி விவாதிப்பதில் பயன் இல்லை. அனைவரும் கூடி ஏதாவது ஒன்றைத் தீவிரமாகச் செய்து இந்தப் பிரச்னையைத் தீர்த்தாலொழிய, கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்தாலும் சரி, மாறி மாறி மந்திரி சபைகள் ஏற்பட்டாலும் சரி, மாற்றுக் கட்சியார் அரசியலை ஆள வந்தாலும் சரி, இந்தப் பிரச்னை அப்படியே நீண்டுகொண்டு போகும். நான் வேண்டுவது ஊருக்குள் வீடு கட்டிக் கொடுக்கும் நல்ல திட்டத்தை தொடர்ச்சியாகச் செய்து வருவதோடு மற்றொன்றையும் கவனித்தாகவேண்டும்.

மாதத்திற்கு ஒரு தடவை ஹரிஜன தினம் என்று கொண்டாடப்படுவதாகக் கூறப்பட்டது. அந்த ஹரிஜன தினங்கள் சிலவற்றை கண்ணுறுகின்ற துர்ப்பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அரசாங்க அதிகாரிகள் தம் தம் பட்டியலைப் படிக்கவும், அதிகாரிகளிடம் சலுகை பெற வேண்டியவர்கள் தாமே புன்னகையை அடிக்கடி வருவித்துக்கொள்ளவும், பக்கத்திலே இருக்கும் ஒருவரிடம் "இவர் யார்" என்று அதிகாரி கேட்க, "இவர்தான் இந்த வேலைக்கு கண்டிராக்ட் எடுத்துக்கொள்ள விண்ணப்பம் போட்டவர்" என்று கவனப்படுத்துவதும் ஆக இந்த முறையில்தான்



20th July 1957] [Sri C. N. Annadurai]

இந்த ஹரிஜன தினம் கொண்டாடப்படுகிறது. இப்படிப்பட்ட தினங்கள் நாம் வாரத்திற்கொருமுறை நடத்தினாலும் கூட நிச்சயமாக ஹரிஜனப் பிரச்னை தீராது எனச் சொல்வேன்.

ஆகையால் கனம் அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ளுகிறேன். ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு ஹரிஜன தினங்களை மிகவும் தீவிரமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயிர் ஊட்டும் வகையில் உள்ளத்துக்கு உறுதியை, வீரத்தை ஊட்டும் வகையில் மாபெரும் தினமாகக் கொண்டாடச் செய்தாலேயே பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுவிடும். ஹரிஜன தினத்தில் சேரியில்—ஊரில் உள்ளவர்கள் அத்தனை பேரும் அன்றைய தினம் பூராவும்—24 மணி நேரமும் ஒன்றாகக் கலந்து உறவாடத் தக்க வகையில், ஒரு ஒட்டுறவை ஏற்படுத்த ஒரு பெரும் கோலாகலத் திருவிழாவாகக் கொண்டாடப்பட ஏதாவது வழி முறைகளை வகுத்துத் தந்தால் அந்தச் சமுதாயத்தின் நிலைமையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்ய முடியும். அன்றைய தினம் ஆண்டவனை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள். வீழ்ந்து வணங்குவோம். வணங்கச் சொல்வோம். நல்ல காரியத்திற்கு வணங்கினாலும் வணங்கலாம். அதை விட்டு இந்த ஹரிஜன தினத்தில் அதிகாரிகள் பட்டியல் படிப்பதும், அவரோடு உள்ளவர்கள் புன்னகை பூப்பதுமாக, சுவையற்ற தினமாக இருந்துவருவதை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் ஒன்று; கலப்பு திருமணத்தைப் பற்றி இங்கே வலியுறுத்தப்பட்டது. என்னைப் பொறுத்த வரையில் கலப்புத் திருமணத்தை நான் ஆதரிப்பேன். 'கலப்புத் திருமணம் செய்து கொள்வதுதானே' என்று கேட்டால் அந்தப் பருவத்தை நான் தாண்டிவிட்டேன். எனக்கு அது அவசியமில்லாமல் இருக்கிறது.

முதலமைச்சர் காமராஜ் அவர்கள் நல்ல வேளையாகத் திருமணம் ஆகாமல் இருக்கிறார்கள். அவர் மட்டும் கலப்புத் திருமணத்துக்கு முன் மாதிரியாக இருந்து வழிகாட்டினால், இந்த மாநிலமே ஆச்சரியத்தில் அதிர்ச்சி உறும்; பாரதமே துள்ளி எழும்; கொள்கைக்காக வாழ்கிறவர் என்று எல்லோரும் பாராட்டுவார்கள். அவர் தலைமையில் இயங்குவதில் நாம் எல்லோரும் பெருமைப் படுவோம். (சிரிப்பு.)

கலப்புத் திருமணத்தை ஆதரிப்பதற்கு முன், மற்றொன்றையும் யோசித்துப் பார்க்க வேண்டும். கலப்புத் திருமணம் செய்துவிட்டு அதற்குப் பிறகு பிறக்கும் குழந்தைகள் சமுதாயத்தில் எப்படி ஏற்றுக்கொள்ளப் படுவார்கள் என்கிற பிரச்னையை நாம் தீர்க்க வேண்டும். சமுதாயத்தில் சாதி மனப்பான்மையை ஒழித்து, சாதி பாகுபாடுகளையும் நீக்க வேண்டும். சாதி பாகுபாட்டை யார் ஆதரித்தாலும் சரி, எந்த உரிமையின் பெயரால் ஆதரித்தாலும் சரி, எத்தனை பழைய ஏடுகளை எடுத்துக் காட்டினாலும் சரி, சாதி பேதம் ஆகாது. இந்த சமுதாயத்தின் சாதி மனப்பான்மை மாற்றப்பட்டாலொழிய கலப்புத் திருமணத்தால் பிறக்கின்ற குழந்தைகள் தாங்கள் மணம் செய்துகொள்ளுகின்ற நேரத்தில் நல்லபடியாக சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். ஆர்வத்தின் காரணமாக கலப்புத் திருமணம் செய்துகொண்டு, பின்னர் அதன் மூலம் பிறக்கின்ற குழந்தைகள் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத நிலைமை நீடித்தால், பிரச்னை தீர்ந்துவிட்டதாகக் கருத முடியாது. ஆகவே, கலப்புத் திருமணம் அதிகமாகப் பரவவேண்டுமானால், அடிப்படையிலே நாட்டிலுள்ள சாதி மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டும் என்பதை அறிவும் ஆர்வமும் உடைய அமைச்சருக்கும், இப்பேரவையின் உறுப்பினர்களுக்கும் சபாநாயகரின் மூலமாக கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கலப்புத் திருமணம் என்பது லட்சியத்துக்காகச் செய்யப்படுவது மாத்திரம் அல்லாமல், நம் சமுதாயத்தையே மாற்றி அமைக்க எடுத்துக் கொள்ளப்படுகிற ஒரு தேசிய முயற்சியாக இருக்க வேண்டும். இந்தத் தேசிய முயற்சி, முயற்சி அளவிலே இல்லாமல் நிச்சயமாகச் செயல்பட வேண்டும். அப்போதுதான் நிச்சயமாக சாதி பேதத்தை ஒழிக்க முடியும்.

[Sri C. N. Annadurai] [20th July 1957

ஆகவே, உடனடியாக சாதி பேதத்தைப் போக்குவதற்காக நல்ல சீர்திருத்தப் பிரச்சாரத்தில் நாட்டை ஆளுகின்ற சர்க்கார்—சகல துறைகளிலும் திட்டங்களிலும்—ஈடுபட்டாகவேண்டும்.

"சாதியை உண்டுபண்ணினவர்கள் திருந்தி விட்டார்கள்—உலகப் போக்கை உணர்ந்து மாறிவிட்டார்கள். ஆனால் இதர சாதிக்காரர்களால் விளையும் தொல்லைதான் அதிகம்" என்பதாக ஒரு உறுப்பினர் குற்றம் சாட்டினார். அது உண்மைதான். சாதிப் புற்று தோன்றிவிட்டதனால், அதிலே தோன்றியவை பலபல இன்றைக்கு கிராமப் புறங்களிலே தம் தம் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்வதற்குப் போராடத்தான் போராடுகின்றன. தூங்கிக்கொண்டிருப்பவனை தேளும் கொட்டும்; பாச்சையும் கடிக்கும். ஏமாந்தால் பாம்புந்தான் காலைச் சுற்றிக்கொள்ளும். இவற்றில் எதற்குக் கொடிய விஷம் அதிகம் என்பது அல்ல பிரச்னை. எந்தப் புற்றிலிருந்து அவை வெளிப்பட்டவை எனக் கண்டு, அந்தப் புற்றையே அழித்தாலொழிய, அதிலிருந்து கிளம்புகின்ற—இந்த விஷ ஜந்துக்கள்—தேள், பாச்சை, பாம்பு—நாட்டிலே பரவிக்கொண்டுதான் இருக்கும். புற்றையே அழிக்கும் வேலையில் மிக மிக துரிதமாக ஈடுபட்டாக வேண்டும்.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். "சமூகம் இன்று ஒரு விதமாக இருக்கிறது. சாதியைப் பற்றிய பற்றுதல் தேர்தல் காலத்தில் வருகிறது"—என்று கனம் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். துரதிர்ஷ்டவசமாக அப்படித்தான் இருக்கிறது. ஆனால் அதிர்ஷ்ட வசமாக அதனால் சில வோட்டுகளும், கிடைக்கின்றன. (சிரிப்பு.) எந்தத் தொகுதியில் எந்த சாதியார் பெருவாரியாக இல்லையோ, அந்தத் தொகுதியில் அவர்களுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. இந்த நேரத்தில் எனக்குத் தமிழில் வழங்கும் ஒரு கொச்சைப் பழமொழி நினைவுக்கு வருகிறது. 'சாதி சோறு போடுமா' என்பர், நம்முடைய சாதியைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக, ஒருவனுடைய வறுமை காலத்தில் பசியால், துன்புறும் காலத்தில், யாராவது அவனுக்குச் சோறு போடுகிறார்களா என்று பார்த்தால், கிடையாது. ஆனால் தேர்தல் காலத்தில் சாதியைச் சொல்லித்தான் வோட்டுக் கேட்கிறார்கள். "நமக்குள் எவ்வளவோ இருக்கலாம்....ஆனால் நாம் எல்லாம்......!" என்று சொல்வதற்குள்ளேயே, "ஆமாம்....ஆமாம்....உங்களைத் தவிர வேறு யாருக்காவது வோட்டுப் போடுவேனா" என அவனும் ஒப்புக்கொள்ளுகிறான். எந்த சாதி பெருவாரியாக ஒரு தொகுதியில் இருக்கிறதோ, அந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள்தான் கவனிக்கப்படுகிறார்கள். ஆகையினாலே, சாதியினால் கிடைக்கக் கூடிய லாபத்தைப் போக்கத் தேவையான அளவில் இந்த அடிப்படை பிரச்னையாகிய சாதி பேதத்தை மாற்றி அமைக்க, நாட்டை ஆளுகின்ற சர்க்கார் நல்ல முறையில் திட்டங்களை வகுத்து தீவிரமான பிரசாரத்தில் ஈடுபட வேண்டும். இந்தப் பிரசாரத்திற்கு ஹரிஜன தினம்தான் மிகப் பொருத்தமானதாக இருக்கும். ஹரிஜன தினத்தில் இதற்கான மனமாற்றத்தை மக்களிடத்திலே ஏற்படுத்த பிரச்சாரம் நல்ல முறையில் நடத்த வேண்டும்.

சாதாரணமாகப் பல விஷயங்களை நாம் கனவு காண்கிறோம். நான் கண்ட அப்படிப்பட்ட ஒரு கனவை சபாநாயகர் மூலமாக இந்தச் சபைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆண்டவன் எத்தனையோ பெரிய திருவிளையாடல்களைப் புரிந்திருக்கிறான் என்பதை புராணங்களைப் படித்து அறிந்து கொள்ளலாம். பல பல திருவிளையாடல்களைப் புரிந்த ஆண்டவன் இந்த நூற்றாண்டிலே ஒரு புதிய திருவிளையாடலைப் புரியமாட்டானா? ஒரு நாள் இரவு தூங்கிக்கொண்டிருக்கும் நேரத்திலே, நம் வீட்டிலிருந்து 4, 5 பேர்கள் அவர்கள் வீட்டிற்கும், அவர்கள் வீட்டிலிருக்கும் 4, 5 பேர்கள் நம்முடைய வீட்டிற்கும் வந்துவிட்டால், விடிந்து பார்க்கும்பொழுது இரண்டு பேர்களும் ஒன்றாகச் சேர்ந்து கலந்துவிட்ட திருவிளையாடலை ஆண்டவன் புரிய, அதைக் காண்பவனில் நான் முதல்வனாக இருக்கமாட்டேனா....என்று கனவு காண்பதுண்டு. ஆனால் அந்த ஆண்டவன் தம்முடைய திருவிளையாடல்களை பத்தோடு நிறுத்திக்கொண்டு விட்டான். மனிதர்கள்தான் அதைப்போல் இப்பொழுது செய்ய வேண்டும். இப்படிச்



20th July 1957] [Sri C. N. Annadurai]

செய்வதற்கு இந்த மந்திரி சபையை விட திறமையான மந்திரி சபை காங்கிரஸ் கட்சியிலே இல்லை என்று சொல்லிக்கொள்ள பெருமைப்படுகிறேன்.

அமைச்சர் அவர்கள் அன்றொரு நாள் ஹரிஜன மக்களின் நிலைமையை எடுத்துக் கூறிய போது "இப்பொழுதுதான் என் தங்கைகளின் கழுத்தில் வெள்ளியையும் தங்கத்தையும் பார்க்கிறேன்" என்று உணர்ச்சி ததும்பச் சொன்னது இன்றும் என்னுடைய செவியிலே ஒலித்துக்கொண்டிருக்கிறது. உண்மையிலேயே இந்தப் பிரச்னையை நன்றாக அறிந்தவர்—பெரிய தலைவர்—என்று பெருமைப்பட்டு, அந்தச் சமுதாயத்தை ஒடுக்கும் வேறு எந்தச் சமுதாயத்தையும் கண்டிப்பதற்கு பூரண உரிமை உடையவர் இன்றைக்கு அந்த இலாகா பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து, இந்த நேரத்தில் நான் சொல்லுவேன்: நீங்கள் எங்களை விரும்பி ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும், ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், மதிப்பளித்தாலும், மதிப்பளிக்காவிட்டாலும்—ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்—'உங்கள் நிழலைப்போல் ஹரிஜன முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம் நானும் என் கட்சியினரும்' என்பதைச் சொல்லி, இந்த மான்யக் கோரிக்கையின் பேரில் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரணையின் மீது என் கருத்துக்களைக் கூறிக்கொண்டு உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri N. R. THIAGARAJAN**: **On a point of order, Sir,** ஸ்ரீ சௌந்தரபாண்டியன் ஜில்லா போர்டு தலைவராக இருந்ததாக ஸ்ரீ அண்ணாத்துரை அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருக்குப் பிறகு மதுரையில் நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்திருக்கிறேன். மதுரையில் பஸ்..

DEPUTY SPEAKER: It is no point **of** order. The hon. Member will please resume his seat. **The hon. Minister will please reply.**

**The Hon. Sri P. KAKKAN**: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜன சேமநல மான்ய விவாதத்தில் அதிகப்படியாக மெம்பர்கள் பங்கெடுத்துக்கொண்டது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதோடு மட்டுமல்ல, இந்த மான்யத்திற்காக அதிகமாக நேரம் ஒதுக்கியதிலிருந்து குறிப்பாக ஹரிஜன மக்களின் முன்னேற்றம் எவ்வளவு முக்கியமானது என்பதை இங்கே எடுத்துக்காட்டி இருக்கிறோம். பங்கெடுத்துக்கொண்டு பேசிய அங்கத்தினர்களில் அதிகப்படியான பேர்கள் நல்ல ஆலோசனைகளைக் கூறியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1-16 p.m.

வெட்டுப் பிரேரணையை முதலிலே பிரேரேபித்து ஸ்ரீமதி சத்தியவாணி முத்து அவர்கள் பேசும்பொழுது ஹரிஜன இலாகாவிலே ஹரிஜன மக்களுக்கும், இதர பின்தங்கிய மக்களுக்கும் தனித் தனி நிர்வாகம் நடத்துவது நல்லது என்று சொன்னார்கள். ஸ்ரீ முத்துக்குமாரசாமி அவர்களும் அந்த அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். இனிமேல் எந்த சமுதாயமும் தனித்திருந்து வாழ முடியாது. எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழ வேண்டிய காலம் இது. சோஷலிஸ பாணியில் சமதர்ம சமுதாயம் அமைக்க வேண்டுமென்று விரும்புகின்ற நாம், இனிமேல் இவ்வாறு பாகுபாடு செய்துகொண்டு போவோமானால், நிச்சயமாக அது நம்முடைய முன்னேற்றத்தைப் பாதிக்கும் என்று முதலிலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஹரிஜன மக்கள், இதர பின் தங்கிய மக்கள், மாஜி குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ஆகியவர்களுடைய நலனைக் கவனிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இந்த இலாகா, பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்டே நடைபெற்றுவருகிறது. அவர்கள் ஹரிஜன சேவையில் அதிகமாக ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஹரிஜன வகுப்பை சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும்கூட ஹரிஜனங்களோடு வாழ்ந்து, ஹரிஜன அன்பர்களோடு பழகி வேலை செய்துவந்திருக்கிற காரணத்தினால்தான் இப்பொழுது இருக்கும்

[Sri P. Kakkan] [20th July 1957

டைரக்டர் அவர்களை ஹரிஜன இலாகாவை நிர்வகிப்பதற்கு அரசாங்கம் நியமித்திருக்கிறார்கள். அதே மாதிரி இந்த ராஜ்யத்தில் அனேக அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஹரிஜன மக்களுடைய க்ஷேமத்திற்காகப் பாடுபட்டு அவர்களுடைய முன்னேற்றமே தங்களுடைய முன்னேற்றமாகக் கருதி அவர்களுக்காகச் சேவை செய்வதை நாம் பாராட்ட வேண்டும். ஹரிஜனங்களுக்காக எந்தவிதமான பாகுபாடும் செய்ய மாட்டார்கள் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அங்கத்தினர்களுக்கும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் பேசிய ஸ்ரீ ச. ஷகஜானந்தா அவர்கள் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களையே அதிகாரியாகப் போடவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது இருக்கிற அதிகாரிகளை அரசாங்கம் வைத்துக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் ஹரிஜன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ஒரு பைசாகூட வீணாகச் செலவு செய்யப்படமாட்டாது என்றும், அந்தப் பணம் வேறு இனத்தவர்களுக்கு போய்ச் சேராது என்றும் வாக்குறுதியை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் மதிப்பிற்குரிய சத்தியவாணிமுத்து அவர்கள் பேசும்பொழுது ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணமானது சரியாக பயன்படவில்லை, நல்ல முறையில் செலவழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதோடுமட்டுமல்ல, கிராமங்களில் இருக்கும் ஹரிஜன மக்களுக்கு உபயோகப்படுத்தப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், ஹரிஜன மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியை கிராம ஹரிஜன மக்களுக்கும் பயன்படக்கூடிய விதத்தில் அவர்களுக்கு உதவி அளிக்கப்படவேண்டுமென்ற நோக்கத்தோடுதான், அரசாங்கம் செலவு செய்துகொண்டு வருகிறது. அரசாங்கம் கட்டிக்கொடுத்த விஷயமாக இந்த அரங்கம் கட்டுவதற்குப் பணம் கடைசி நேரத்தில் தான் கிடைத்தது. இந்த மாதிரியுள்ள அரங்கம் அவசியமில்லை என்று சிலர் சொன்னார்கள். அதே சமயத்தில் முன்பு இருந்த மந்திரி சபையினர் இந்த அரங்கத்தை நல்ல காரியங்களுக்குத்தான் ஏற்படுத்தினார்கள். ஆனால் இப்பொழுது ஒரு அம்மையார் சொன்னது மாதிரி இப்போது அது கருவாடு காய்வதற்குதான் உபயோகப்படுகிறது. இதில் சிலர் நல்ல முறையில் தூங்கிகொண்டிருக்கிறார்கள் என்று சிலர் சொன்னார்கள். உண்மையில் எல்லா நல்ல காரியத்திற்கும் நாலு பேர் முட்டுக்கட்டையாகத்தான் இருப்பார்கள். எவ்விதமிருந்தாலும் இம்மாதிரி அரங்குகள் கட்டினதில் தவறு ஒன்றுமில்லை. முன்னால் எல்லாம் மண்ணில் தான் கருவாடு காயப்போட்டார்கள். இப்பொழுது இந்த அரங்கில் போடுகிறார்கள். அந்த விதத்தில் பார்த்தாலும் இதில் கெடுதி ஒன்றும் இல்லை. ஆனால் இதில் பஜனை நடத்துவது என்று ஏற்பாடு இருந்தது. அதை நான் பாராட்டுகிறேன். பொதுவாக ஹரிஜன மக்கள் மிகவும் தெய்வ பக்தியுள்ளவர்கள். நான் அறிந்த மட்டில் ஹிந்து மதத்தில் இருந்த அவர்களுக்கு அன்று எவ்வளவோ தொல்லைகள் இருந்தன. அன்று மதமாற்றத்திற்கு உட்படமாட்டோம் என்று உறுதியாக நின்று சொன்னார்கள். எவ்வளவுதான் அடித்தாலும் எவ்வளவுதான் உதைத்தாலும் அவர்கள் உறுதியாக நின்றார்கள். அவர்கள் வீட்டின் பக்கம் போனால் நாய்களை மாதிரி ஹரிஜனங்களை விரட்டி அடிப்பார்கள். அந்த சமயத்தில் எல்லாம் ஹரிஜன மக்கள் ஒரே லட்சியமாய் நின்று அதை எதிர்த்து நின்றார்கள். அதோடு எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள் என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன். அம்மாதிரி எல்லாம் அன்று கஷ்டப்பட்டவர்கள் இன்று மற்றவர்களோடு சரிநிகர் சமமாக இருக்கிறார்கள் என்று சொல்லலாம். இன்று எவ்வளவு பெரியவர்களார்க இருந்தாலும் சரி, ஹோட்டல்களில் எல்லாம் ஐயர்காளாக இருந்தாலும் சரி அல்லது யாராக இருந்தாலும் சரி அவர்களோடு சரிநிகர் சமமாக இருந்து சாப்பிடக்கூடிய நிலையில் சரிநிகர் சமமாக இருக்கிறார்கள் என்றால் அதற்கு காங்கிரஸ் மகாசபையும் மகாத்மாஜியும் செய்த சேவையும் உழைப்பும் தான் என்பதை நாம் யாரும் மறக்கமுடியாது. அந்த நிலையில் இந்த ஹரிஜனங்களை முன்னேற்றத்திற்கு கொண்டுவருதவற்குதான் பல திட்டங்களை செய்துவருகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



20th July 1957] [Sri P. Kakkan]

அடுத்தபடியாக ஹரிஜன திட்டங்களைப் பற்றி நல்ல முறையில் பிரச்சாரம் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். மதிப்பிற்குறிய அண்ணாதுரை அவர்கள் இந்த பிரச்சாரங்கள் நல்லமுறையில் பயன்படவேண்டும் என்று சொன்னார்கள். இதற்கென்று ஒரு தினமே நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதை காந்திஜியினுடைய சிரார்த்த தினத்திலேயே நடத்தவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. எல்லோரும் ஒரே நிலையில், மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்ற லட்சியத்தை அந்த நாளில் எல்லோருக்கும் தெரிவித்து அவர்களுடைய மனம் எல்லாம் திருந்தும்படியான ரீதியில் நடத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த தினத்தை மேலும் நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று எல்லா ஜில்லா கலெக்டர்களுக்கும் ஞாபகப்படுத்தப்பட்டிருக்கிறது. எந்த விதத்திலும் இந்த நாளை எல்லா இடங்களிலும் கொண்டாடவேண்டும் என்று கலக்டர் முதல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வரைக்கும் எல்லோருக்கும் வேண்டிய தகவல் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த தினம் சரியாக கொண்டாடப்படவில்லை என்று எங்கிருந்தும் எந்தவிதமான அவச்சொல்லும் வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இந்த பிரச்சாரம் ஹரிஜன மக்களுக்கு மிக மிக அவசியம். மகாத்மா காந்தியும் ஒவ்வொரு நாள் சாயந்திரம் அவருடைய பிரார்த்தனை கூட்டங்களிலும் ஹரிஜனங்களுடைய நிலைமைபற்றியும் தீண்டாமையைப் பற்றியும் பிரச்சாரம் செய்தார்கள். ஹிந்து மதத்தினுடைய மாசு தான் இந்த தீண்டாமை, ஆகவே இதை போக்கடிக்கவேண்டும் என்று பிரச்சாரம் செய்தார்கள். ஆதலால் தான் இன்று நாம் சுதந்திரம் அடைந்ததோடு மட்டுமல்ல, இன்று மற்றவர்களோடு சரிநிகர் சமமாக நிற்கக்ககூடிய நிலை வந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த பிரச்சாரத்திற்காக 1957–58-ல் இரண்டு கோடி எண்பது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1956–57-ல் இருந்ததை விட இப்போது 82 ஆயிரம் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இன்று ஹரிஜன மக்களுக்கு பிரச்சாரம் மிக மிகத் தேவையாக இருக்கிறது. சுவரொட்டிகளைப்பற்றி பலர் குறிப்பிட்டார்கள். சுவரொட்டி பலர் ஆட்சேபித்தது உண்மைதான். ஆனால் ஒரு உண்மையைச்சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் இன்னொரு இனத்தவரை இழிவாக கருதும்படியான நிலையில் அவர்களை மனம் புண்படும் ரீதியில் எந்த காரியமும் செய்யாது என்பதை தெரிவித்கொள்கிறேன். ஒரு இனத்தவரை மாத்திரம் கௌரவக்குறைவாக எண்ணக்கூடிய முறையில் பூணூலை மாத்திரம் போட்டு படத்தை போட்டு விடுவதால் பெரிய பலன் ஒன்றும் ஏற்பட்டுவிட முடியாது. ஆகவே இவ்விதம் ஒரு தனி சமூகத்தினரை மாத்திரம் அகௌரவப்படுத்தும் முறையில் மனம் புண்படுத்தக்கூடிய முறையில் ஒரு காரியத்தை செய்வது நல்லது இல்லை என்று எண்ணித்தான் 10 ஆயிரம் ரூபாய் நஷ்டமானாலும் காரியமில்லை என்றுதான் அதை நிறுத்தப்பட்டது. இதைப்பற்றி போன வருடம் நிதி மந்திரி ஸ்ரீமான் சுப்பிரமணியம் அவர்கள் நன்கு சொல்லியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காகவே மேலும் பிரச்சாரத்திற்காக மூன்று டெப்யூடி சேவக் போட்டிருக்கிறார்கள். பிரச்சாரம் செய்வதற்காகவே இவர்களை நியமிக்கப்பட்டிருக்கிறது. ஏதோ இவர்கள் எல்லாம் காங்கிரசிற்கு வேண்டிதான் பிரச்சாரம் செய்கிறார்களா என்று பலர் கேட்டார்கள். காங்கிரஸ் ஸ்தாபனம் என்பது இன்று நேற்று தோன்றியது அல்ல. காங்கிரஸ் ஸ்தாபனம் என்பது அவ்வளவு பலஹீனமான ஸ்தாபனம் அல்ல. மன்னாதி மன்னர்களெல்லாம், காடுக் கரையும் ஆண்டவர்களையெல்லாம், மக்களுக்கு வாரி வழங்காமல் பணத்தை சேர்த்து வைத்துக்கொண்டிருந்தவர்களையெல்லாம் கீழே இறங்கும்படி அரிய சாதனைகளை செய்த கட்சி காங்கிரஸ் கட்சி. இது அவ்வளவு பலஹீனமான கட்சி அல்ல. இவர்களுடைய பிரச்சாரம் கக்கன் மந்திரி யாவதற்கோ அல்லது காமராஜ் மந்திரி யாவதற்கோ தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அம்மையார் அவர்கள் இந்த நிதி செலவு செய்யும் போது வேறு காரியங்களுக்கு செலவு செய்கிறார்கள் என்றும் நல்லவிதமாக செலவு செய்யப்படவில்லை என்றும் சொன்னார்கள். இதற்காக தனி இலாகா வேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுதே ஒரு டைரக்டர் வைத்துக்கொண்டு நடத்துவதற்கு அதிகம் செலவு

[Sri P. Kakkan] [20th July 1957

செய்யப்படுகின்ற இந்த நேரத்தில் இதற்கென்று தனி டைரக்டர் நியமித்தால் இதற்கென்று செலவு கூடுதலாகும். ஆகவே இலாகா ஒன்ருக இருந்தாலும் சரியாக காரியங்கள் கவனிக்கப்படும் என்று வாக்குறுதியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த மாதிரியுள்ள காரியங்களில் முன்னேற்றம் காணவேண்டும் என்ருல் இந்த நாட்டிலுள்ள மக்களும் நல்ல எண்ணத்தோடு ஹரிஜன மக்களை நடத்தவேண்டும். நண்பர் வேதய்யன் அவர்கள் சொன்ஞர்கள். இப்போது எல்லாம் பிராமண சகோதரர்களால் தொந்தரவு கிடையாது என்று இன்றைக்கு பிராமணர்கள் ஹரிஜனங்களுக்காக பாடுபட்டிருக்கிருர்கள் என்பதை நாம் மறக்க முடியாது. ஹரிஜன முன்னேற்றத்திற்காகவே பாடுபட்டார் மதுரை வைத்தியநாத அய்யர் அவர்கள். அவர்களை நாம் என்றும் மறக்க முடியாது. அன்றைக்கு அவர்கள் ஆலயப்பிரவேசம் கொண்டு வருவதற்காக எவ்வளவோ பாடுபட்டு.........

Sri M. KARUNANITHI : **On a point of order,** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் அங்கத்தினர்களை பார்த்து பேசிக்கொண்டு இருக்கலாமா ?

The Hon. Sri P. KAKKAN : நான் வேண்டுமென்ருல் இந்த பக்கம் பார்த்து பேசுகிறேன்.

Sri M. R. KANDASWAMI MUDALIAR: **On a point of order,** கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது அங்கத்தினர் அம்மையார் அவர்கள் உட்கார்ந்துகொண்டு குறுக்கிட்டு பேசிக்கொண்டு இருக்காலாமா ?

DEPUTY SPEAKER : உட்கார்ந்துகொண்டு அவர்கள் பேசிக்கொண்டு இருக்கவில்லை.

The Hon. Sri P. KAKKAN : அன்று ஆலயபிரவேசம் வேண்டும் என்று கேட்டகாலத்தில் எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தது. இன்றைக்குச் சொல்லலாம். கக்கனை மந்திரியாக்கினதற்காக பெருமை கொள்கிருேம், அர்ச்சகர் ஆக்கிஞலும் பெருமை கொள்வோம் என்றெல்லாம் சொல்லலாம். இதையெல்லாம் பார்த்தால் ஏதோ ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுகிற கதை மாதிரி இது இருக்கிறது. நமக்கு வேண்டியது என்னவென்ருல் நாட்டில் யாரும் யாரையும் அருகில் வராதே என்று சொல்லக்கூடாது. மனிதன் மனிதஞக வாழவேண்டும் என்றுதான் மகாத்மா காந்தி எங்களுக்கு சொல்லியிருக்கிருர்கள். அத்தகைய தன்மையை அரசாங்கம் வளர்ப்பதற்கு பாடுபட்டு வருகிறது என்பதை உங்களிடம் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஆசைதம்பி அவர்கள் பேசும்போது சொன்ஞர்கள் ரொம்ப நாளைக்கு முன்ஞலே ஆலயப்பிரவேசத்திற்காக நாங்கள் பாடுபட்டோம் என்று சொன்ஞர்கள். நாங்கள்தான் ஆலயபிரவேசத்திற்கு மூல காரணமாய் இருந்தவர்கள் என்று கூறிஞர்கள். நான் உபமானம் சொல்லுகிறேன். நான் யாரையும் வருத்தப்படுத்துவதற்காக சொல்லவில்லை. நீங்கள் யாரும் வருத்தப்படக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு வண்டி மாடானது வெகு வேகமாக போய்க்கொண்டிருக்கிறது. அது அந்த வண்டியின் பின்ஞல் தூசியைக் கிளப்பிக்கொண்டிருக்கிறது. அந்த மாட்டின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒரு ஈயானது நான் வண்டியில் இருப்பதால்தான் இந்த மாடானது வெகு வேகமாய் போய் கொண்டிருக்கிறது ; அதஞல்தான் பின்ஞல் தூசியும் வருகிறது என்று அந்த ஈ சொல்வது போல்தான் இருக்கிறது. இவர்கள் எங்களால்தான் அரசாங்கம் நன்கு நடக்கிறது என்று சொல்வது (கரகோஷம்) 1919-ல் இந்த ஹரிஜன பணி ஆரம்பிக்கப்பட்டது என்று அண்ஞதுரை அவர்கள் சொன்ஞர்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. 1919-ல் ஒரு லேபர் கமிஷனரைப் போட்டு அன்றைய வெள்ளைக்கார அரசாங்கம் ஏற்பாடு செய்தது. அடிமை வாழ்வு நாம் வாழ்ந்து கொண்டிருந்தபோது அவர்கள் செய்தார்கள். அன்று நாம் சுதந்திரத்திற்காக் போராடிஞேம். “டூ ஆர் டை” என்றுதான் மகாத்மாஜி அவர்கள் சொன்ஞர்கள். அன்று நாம் பிச்சைக்காசை எதிர்பார்க்கவில்லை. மந்திரி பதவியை பார்க்க இல்லை.



20th July 1957] [Sri P. Kakkan]

மனிதன் மனிதஞக வாழ வேண்டுமென்றுதான் நாம் அன்று சுதந்திரத்திற்காக போராடிஞேம். அன்று நாங்கள் சுதந்திரத்திற்காக போராடிக் கொண்டிருந்தபோது நீங்கள் அவர்களுக்கு பக்கத்துணையாய் இருந்து கொண்டு, நாங்கள் பெரிய நல்ல பாம்பு வருகிறது ; அதை அடிக்க கம்பை எடுங்கள் என்று சொன்னபோது பூராணை அடியுங்கள் என்று அவர்கள் சொன்ஞர்கள். அவர்கள் எங்களோடு அன்று ஒத்துழைக்காத காரணத்தால் ஹரிஜன முன்னேற்றம் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக செய்யவேண்டிய வேலைகள் எல்லாம் தடைபட்டிருக்கிறது. சுதந்திரம் இல்லாமல் ஹரிஜனங்கள் மாட மாளிகை கூட கோபுறங்களில் வாழ்வதைவிட சுதந்திரமாக வாழ வேண்டுமென்றுதான் அன்று போடிஞேம். சுதந்திரம் பெற்ற பின் சமுதாயத்திலே நாங்கள் என்ன நிலைக்கு வர வேண்டுமோ அதை இந்த அரசாங்கம் செய்து வருகிறது, என்று நான் ஆசைத்தம்பி அவர்களுக்கு எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக நேற்றயதினம் மருதாசலம் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றிச் சொன்ஞர்கள். உண்மையில் நாட்டில் இன்று வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்க்கு இப்பொழுது அநேக தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் போன்றவைகளில் இவர்களுக்கு வேலை கொடுக்கலாம். அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துத்தான் வருகிறது. தொழில் துறையில் ஹரிஜன மக்களை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கியவர்கள், இன்றைக்கும் உண்டாக்கிக் கொண்டிருக்கிருர்கள் கம்யூனிஸ்ட் சகோதரர்கள் ஏன்பதை நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். என்ன வேலை நடக்கிறது. உங்களுக்கு என்ன தருகிருர்கள், ஸ்ட்ரைக் செய்யுங்கள் என்று அவர்களை தூண்டி விடுகிருர்கள்.

Sri MARUDACHALAM : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஒரு கட்சியைக் குறித்து பேசலாமா ?

DEPUTY SPEAKER : கட்சியின் பாலிஸியைப்பற்றிப் பேசலாம். **The Hon. Minister will continue his speech. I hope Hon. Members will not interrupt him in the middle.**

The Hon. Sri P. KAKKAN : தஞ்சாவூரில் கம்யூனிஸ்ட் தோழர்கள் விவசாயிகளை உழைக்கப்போகாதீர்கள், கதிர் அறுக்கப்போகாதீர்கள் என்றெல்லாம் சொல்லி அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படும்படி செய்தார்கள். இன்றைக்கு பாடுபட்டால் கூலி கிடைக்கிறது. விவசாயிகளுக்கு வேண்டி 60, 40 சட்டத்தை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாத்தைப் போக்க இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் பாடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்லிகிருேமே அது என்ன ? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கே இந்த இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, மதிப்பிற்குரிய ஜகன்ஞதன் அவர்கள் பேசிஞர்கள். அவர்கள் பேசும்போது, ரொம்ப கொஞ்சமாகத் தான் வீடு கட்ட மனைக்கட்டுகள் இருக்கிறது என்று. வீடு கட்டுவதற்காக, நார்த் ஆற்காடு ஜில்லாவில் 141 மனைக்கட்டுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரையில் 49, தஞ்சாவூரில் 565, திருநெல்வேலியில் 322, திருச்சிராப்பள்ளியில் 78, ராமஞதபுரத்தில் 37, செங்கல்பட்டு ஜில்லாவில் 50, சேலம் ஜில்லாவில் 298, கோயம்புத்தூரில் 124 என்று மனைக்கட்டுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றையதினம் மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் லாலா லஜபதிராயைப்பற்றிச் சொன்ஞர்கள். அது வரவேற்கத்தக்கது. அன்றையதினம் சொன்ஞர்கள். மத்திய அரசாங்க மந்திரியாய் இருந்த அமிர்தகௌரி சொல்கிருர்களே என்று சொன்ஞர்கள். அவர்கள் சொல்லலர்ம். மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெறவில்லை, அது கெட்டுப்போய்விட்டது என்று வேறு யார் சொன்ஞலும் அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப்பற்றி வருந்துகிறேன். மது

விலக்குத் திட்டம் வந்தால்தான் இன்று நாட்டில் நல்ல காரியங்கள் நடைபெருகின்றன என்பதை நான் இங்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். மந்திரியவர்கள், ஹரிஜனங்கள் வெள்ளிப் பாத்திரங்களை அதற்கப்புறம் தான் காண்கிருர்கள் என்று சொல்லும்போது என் மனம் பூரிக்கிறது என்று மதிப்பிற்குரிய அண்ணுதுரை அவர்கள் சொன்ஞர்கள். நான் சிறு பையனுய் இருக்கும்போது, ஒரு கிராமத்தில் ஹரிஜனங்களின் வீடுகளில் 3, 4 சட்டிகளைத்தான் பார்க்க முடியும். அதில்தான் அவர்கள் சமைத்துச்சாப்பிடவேண்டும். ஆனல் இன்றே ? அவர்களது வீடுகளில் பாத்திரங்களைப் பார்க்கிறேம். அவர்கள் இன்று வெள்ளிப் பாத்திரங்கள் வைத்துக்கொண்டிருக்கிருர்கள் என்று நான் சொன்னபோது எல்லோரும் வைத்துக்கொண்டிருக்கிருர்களா என்று கேட்டார்கள். அவர்களிடம் இன்று வெள்ளிப் பாத்திரங்களும் இருக்கிறது என்பதைத்தான் சொல்லுகிறேன். அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் லட்சியம். அதுவே என்போன்ற ஊழியர்களின் லட்சியமாகும் என்பதை நான் இப்பொழுது தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மதுவிலக்குத் திட்டத்தை நன்கு திறம்பட நடத்துவதற்கு சென்னை சர்க்கார் எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது என்று அங்கத்தினர்களுக்கு எடுத்து சொல்ல ஆசைப்படுகிறேன். ஸ்ரீமான் சோமசுந்தரம் அவர்கள் பேசும்போது இந்த இலாகா அதிமாக வாடகை கொடுக்கக்கூடிய இடத்தில் இருக்கிறது. அதனல் பணம் அதிகமாக செலவாகிறது என்று சொன்ஞர்கள். அது உண்மைதான். அதிகமாக பணம் செலவாகிறது என்பது உண்தைான். அரசாங்கம் இந்த இலாகாவை நடத்த ஒரு இடம் பார்ப்பது நல்லதுதான். அடுத்தபடியாக இந்த ஹாஸ்டல் விஷயத்தில், எம். ஜி. ராஜா ஹாஸ்டலில் எவ்வளவு பேர்களை சேர்க்க முடியுமோ அதை விட கூடுதல் 10 பேர்கள் வந்திருக்கிருர்கள். அவர்களையும் அங்கே சேருங்கள் என்று நான் டயரக்டரிடம் சொல்லியிருக்கிறேன். அப்படி அவர்களை அங்கு சேர்த்தால் உடனே, அவர்களை ஆடு மாடுகளைப் போல் அடைக்கிறீர்களே என்று சொல்வார்கள். காலேஜில் படிக்க வந்த பையன்கள் வெளியே போகக்கூடாது. அவர்களுக்கு எப்படியாவது இடம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு வாடகை கட்டிடம் பிடிக்க சொல்லியிருக்கிறேன். ஆகவே, காலேஜிக்கு போகிற மாணவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாதபடி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய சர்க்காரிலிருந்து வரும் ஸ்காலர்ஷிப் பணத்தை முன் கூட்டியே அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. அது கவனிக்கப்படும். அவர்களுக்கு 100 ரூபாயாவது முன் பணமாக கொடுக்கவேண்டுமென்றும் கூறப்பட்டது. நான் சொல்ல விரும்புவது என்னவென்றல், ஹரிஜன மாணவர்களுக்கு வேண்டிய உதவி அளிக்கப்படும். அவர்களுக்கு உதவி செய்வதில் எந்தவிதமான தடங்களும் இருக்காது என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நேற்றையதினம் மதிப்பிற்குரிய நாராயணஸ்வாமி நாயுடு அவர்கள் பேசும்போது தஞ்சாவூர் ஜில்லாவில் சில கஷ்டடங்கள் இருக்கிறது என்று சொன்ஞர்கள். குடியிருக்கும் இடங்களிலிருந்து சிலரைப் போகச் சொல்கிருர்கள் என்று சொன்ஞர்கள். அதைப் பற்றி நான் சில விவரங்கள் சொல்ல விரும்புகிறேன். கிளியூர் என்ற இடத்தில் அனுமதி இல்லாமல் 20 வீடுகள் கட்டிவிட்டார்கள். அப்படிச் செய்தால் பக்கத்தில் இருப்பவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள் என்று உங்களுக்குத் தெரியும். ஆகவே போலீஸ் போய் இந்த குடிசைகளை பெர்மிஷன் இல்லாமல் கட்டியிருக்கிருர்கள், ஆகவே இங்கிருந்து போய்விடுங்கள் என்று சென்னபோது, உடனே 17 குடிசைகளில் இருந்தவர்கள் குடிசைகளைப் பிரித்துக்கொண்டு போய் விட்டார்கள். மீதி மூன்று பேர் முடியாது என்று சொன்னதினல் அவர்களின் மேல் கேஸ் போடப்பட்டது. பின்னர் அவர்களும் பிரித்துக்கொண்டு போக சம்மதித்ததினல் அவர்களின் பேரிலுள்ள கேஸ்கள் வாபஸ் பெறப்பட்டன.

ஒருங்காடி, ஒருமுத்தங்குடி என்ற இடங்களில் குடியிருப்பு விஷயத்தில் ஹரிஜனங்கள் கஷ்டப்படுவதைப் பற்றிச் சொல்லப்பட்டது. அந்த ஊரில் கோவில் இடத்தை ஒரு முஸ்லீமுக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிருர்கள். அந்த இடத்தில் ஹரிஜனங்கள் குடியேறியிருக்கிருர்கள்.





**Sri R. SUBRAMANIAM :** பாய்ண்ட் ஆப் ஆர்டர், ஸார், குத்தகைக்கு விடப்பட்டிருக்கிற இடத்தில் அவர்கள் போய் வீடு கட்டியிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொல்கிருர்கள். அவர்கள் வீடு கட்டியிருக்கும் இடம் குத்தகைக்கு உட்பட்டதல்ல.

**DFPUTY SPEAKER :** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**The Hon. Sri P. KAKKAN :** எந்த இடத்தில் ஹரிஜனங்கள் குடியேறியிருக்கிருர்களோ அந்த இடத்தையும் சேர்த்து குத்தகைக்கு விடப்படவில்லையென்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் சொன்ஞர்கள். அதைப்பற்றிய விவரம் இல்லை. மேற்கொண்டு விசாரிக்கிறேன். ஹரிஜனங்களை அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்த முஸ்லீம்கள் சில குண்டர்களை கொண்டுவர ஏற்பாடு செய்திருந்தார்கள். ஹரிஜனங்கள் இதைப் போலீஸ் ஸ்டேஷனில் சொன்னவுடன் சர்க்கார் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்து அந்தக் குண்டர்களை அரெஸ்ட் செய்திருக்கிருர்கள். ஹரிஜனங்களைத் துன்புறுத்தியதற்காக அவர்கள் மீது கேஸ் போடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

நாகப்பட்டிணம் தாலூகாவிலுள்ள கருங் தட்டாங்குடியைப் பற்றிச் சில அங்கத்தினர்கள் பேசிஞர்கள். போலீஸார் விசாரித்தபோது, கனம் அங்கத்தினர்கள் சொல்லியதுபோல ஒன்றும் நடக்கவில்லையென்று தகவல் வந்திருக்கிறது. அந்த ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்கிறபோது, கனம் அங்கத்தினர்கள் சொன்னது உண்மைதாஞ என்று மேற்கொண்டு விசாரிக்கிறேன்.

மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ சன்ஞசி அவர்கள், "ஹரிஜனங்களுக்குள்ளே பாகுபாடு இருக்கிறது. அதை அகற்றுவதில் கனம் மந்திரி அவர்கள் அக்கறை காட்டவேண்டும்" என்று சொன்ஞர்கள். அந்த மாதிரிப் பிளவை சிலர் உண்டுபண்ணுவது நமக்குத் தெரியும். ஆங்காங்கு சில ஜாதிப் பித்தர்கள் ஹரிஜனங்களுக்குள்ளே பிளவை உண்டுபண்ணக் கூடிய சில காரியங்களைச் செய்து வருகிருர்கள். அம்மாதிரிப்பேர்வழிகளுக்கு இடம் கொடுக்காமல் ஹரிஜனங்கள் எல்லோருக்கும் நாம் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மதிப்பிற்குரிய தி. மு. க. தலைவர் ஸ்ரீ அண்ணுதுரை அவர்களே இந்த வெட்டுப்பிரேரணையைப் பிரேரேபித்திருந்தால், நன்ருக இருந்திருக்கும். அதற்கும் அம்மயாரை உபயோகித்திருக்கிருர். (குறுக்கீடு) பாவம், ஹரிஜனங்கள் சமூகத் துரையில் பின்தங்கியிருப்பதால், சில பேர்கள் எதையாகிலும் சொன்ஞல், அதைச் சுலபமாக நம்பிவிடுகிருர்கள். அதனல்தான் ஹரிஜனங்கள் இன்னும் பிற்பட்ட நிலையிலிருக்கிருர்கள். அந்த நிலைமையை அகற்ற எனது வாழ்நாள் முழுவதும் நான் பாடுபடுவேன். ஹரிஜன மக்களுக்குச் சேவை செய்கிறவர்களில் அவர்களுக்குள்ளேயே பாகுபாடு செய்கிறவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் கிடையாது. அவர்களுக்குள் பாகுபாடு செய்யவேண்டுமென்று எண்ணம் கொண்டவர்கள் அந்த சமூகத்திற்கே நச்சுப் பாம்பாகவும் பாராங்கல் போலவும் இருக்கிருர்கள். அவர்கள் ஹரிஜன சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறவர்கள் என்று சொல்ல மாட்டேன். அப்பேர்பட்டவர்களுக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்று நான் திரிகரண சுத்தியோடு சொல்லுகிறேன்.

**Sri A. VELU :** பலதரப்பட்ட ஜாதியார்களுக்கும் பொருந்துமா அல்லது ஹரிஜனங்களுக்கு மட்டும் பொருந்துமா ?

**The Hon. Sri P. KAKKAN :** ஹரிஜனங்களிடையே பிளவை உண்டு பண்ணுவது நல்லதல்ல. எல்லோரும் ஒன்றுபட்டிருக்கும் காலம் இது. ஹரிஜனங்களும் மற்ற எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளைப்போல இருக்கவேண்டும், அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளைப் பெற வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகையால், இந்தமாதிரிக் குறைகள் இனிமேல் இருக்காதென்று நான் நினைக்கிறேன். ரகசியமாக ஏதாவது நடந்தாலும், அதை என்னிடம் சொன்ஞல், தக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ முனுஸ்வாமி கௌண்டர் வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து வந்தவர். அவர் இப்பொழுது சபையில் இல்லை. ஹரிஜனங்களுடைய நலனைக் கவனிப்பதற்காக ஒரு தனிக்கமிட்டி வேண்டுமென்று சொன்னார். ஹரிஜனங்களுடைய நலனைக் கவனிப்பதற்காக ஒரு அட்வைசரி கமிட்டியும், பின்தங்கிய வகுப்பினருடைய நலனைக் கவனிப்பதற்காக ஒரு அட்வைசரி கமிட்டியும் இருக்கின்றன. அந்தக் கமிட்டிகளின் யோசனைகளின் பேரில் பல நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் நல்ல காரியம் செய்வதற்கு அவர்களுடைய ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படும். அவர்களுடைய சிபார்சுக்குத் தக்கபடி, ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் பணம் செலவழிக்கப்படும். இவ்வாறு அரசாங்கம் ஹரிஜனங்களுக்குப் பணியாற்றும்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ முத்துக்குமாரசாமி அவர்கள் பேசியபோது, " முன்பு இருந்த கனம் மந்திரி அவர்கள் இந்த இலாகாவைப் பிரிப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள் " என்று சொன்னார்கள். நான் கேட்டுப் பார்த்ததில் அவர்கள் அந்தமாதிரி வாக்குறுதி கொடுத்ததாகத் தெரியவில்லை. இனிமேல் இந்த நாட்டில் யாரும் தனித்து வாழ முடியாது. பின்தங்கிய வகுப்பினர். ஹரிஜனங்கள் எல்லோரும் சேர்ந்து வாழவேண்டிய காலம் இது. அதிலும் சமுதாயத்தில் மிகவும் கீழ் தட்டில் இருக்கும் மக்கள் ஒன்று சேர்ந்து வாழவேண்டியது அவசியம். கல்வி அறிவு, சொத்து, சுகம் இல்லாத காரணத்தால், அவர்களுக்குத் தொல்லைகள் கொடுப்பது சுலபமாகயிருக்கிறது. தென்னாற்காட்டில் கள்ளக்குறிச்சியில் சிலர் தங்கள் சொந்தக்காரணத்திற்காக அந்த ஊரையே விட்டுப் போய் விட்டார்கள். அவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் துன்புறுத்தப்பட்டதால், திரும்பிவரமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். வட ஆற்காடு சமூகக் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். இதில் தலையிட்டு அவர்களுக்குள் சமரசம் செய்து வைக்கவேண்டுமென்று நான் ஜில்லா அதிகாரிகளுக்குச் சொன்னேன். இப்போது சமரசம் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். சமூகக் கட்டுப்பாடு என்பது ஒரு கொடிய ஆயுதம் என்று பொது விவாதத்தின்போதே நான் சொன்னேன். அவர்களுடைய எண்ணம் ஈடேற அரசாங்கம் இடம் கொடுக்கமாட்டார்கள். ஜாதி பேதம் இல்லாலாத சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற இந்தக் காலத்தில், அடிமைக்கும் அடிமையாக ஹரிஜன வாழவேண்டும், அவன் தலை நிமிறுவதா என்று எண்ணுகிறவர்களுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கமாட்டார்கள். இப்பொழுது அரசாங்கம் காந்திஜியின் கொள்கையின் அடிப்படையில் ஏழைத் தொண்டர் ஸ்ரீ காமராஜரின் தலைமையில் நடக்கிறது. ஹரிஜனனாயிருந்தாலும் சரி பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவனாயிருந்தாலும்சரி, வேறு எந்த சமூகத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் சரி, எல்லோருக்குமே நன்மையைச் செய்வதற்காக இந்த அரசாங்கம் பாடுபடுகிறது. யாரையும் துன்புறுத்துவதற்கு இந்த அரசாங்கம் இடம் கொடுக்காது. அப்பேர்பட்ட இடங்கள் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கின்றனவா என்று கேட்கலாம். ஒரு சில இடங்கள் அவ்வாறு இருக்கின்றன. இன்னும் அந்தமாதிரி மனப்பான்மை இருக்கக் கூடாது என்று மக்களுடைய பிரதிநிதிகள் சபையில் நான் சொல்லுகிறேன். தேசப் பிதா மஹாத்மா காந்தி பல்லாண்டுகள் இந்த மனக் பான்மையை அகற்றுவதற்காகப் பாடுபட்டார். ஒவ்வொரு நாளும் பிரார்த்தனைக் கூட்டத்தில் இதைப்பற்றிச் சொன்னார். அதற்காக அவர் கஷ்டப்பட்டார், தொல்லைகளும் துயரங்களும் பட்டார். தென்ஆப்பிரிக்காவில் அவர் இருந்தபோது வெள்ளையர்கள் செல்லும் ரெயில் பெட்டியில் அவர் செல்லக்கூடாதென்று அவரை இறக்கிவிட்டுவிட்டார்கள். அந்தக் கஷ்டத்தையும் அவர் அனுபவித்தார். வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டுச் சென்றுவிட்டால், நிலைமையைச் சீர்படுத்தலாம் என்று வெள்ளையனை வெளியேறச் சொன்னார். முன்பு கோவிலுக்குப் போகமாட்டோம். இப்பொழுது போகிறோம். முன்பு ஹோட்டலுக்குள் போகமாட்டோம். இப்பொழுது போகிறோம். முன்பு மற்றவர்களோடு சேர்ந்து சரிசமமாக இருக்கமாட்டோம். இப்பொழுது அவ்வாறு இருக்கிறோம். வோட்டிலே சரி சமத்துவம் வந்து விட்டது. செல்வச் சீமானுக்கும் ஒரே வோட்டுதான்; ராஜாதி ராஜனுக்கும் ஒரே வோட்டுதான்; நமக்கும் ஒரே வோட்டுதான். அது மாதிரி சொத்தில் சமத்துவம் காணவேண்டும். வள்ளுவன் விதிப்படி அரசாங்கத்தின் முதல்வேலை,



குறைகளைப் போக்கி சொத்திலும் சமத்துவம் காணவேண்டும். இதற்கான காரியத்தை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் செய்து வருகிறது. சொற்பநாளிலே நம் லட்சியத்தை நாம் அடைவோம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒன்றும் செய்யவில்லை என்று நினைத்துவிடவேண்டாம். 150 வருஷகாலம் வெள்ளைக்காரன் ஆண்டான். அவன் மேல் அவ்வளவு அன்பு வைத்தோம். அவன் சொன்னதையெல்லாம் " சரி, சரி " என்று சொன்னோம். அவ்வளவு அன்பு வேண்டாம். கொஞ்சமாவது வேண்டும். இந்த வேலையில் அதிக கவனம் செலுத்தி ஒத்துழைத்து, எடுத்துக்கொண்டவேலையானது நல்ல முறையில் சிரத்தையோடு கவனித்து ஒத்துழைக்கவேண்டும். எதிர்கட்சி அங்கத்தினர் அண்ணாதுரை அவர்கள் தானும் தன் கட்சியும் இதில் ஒத்துழைப்பதாகச்சொன்னதை நான் பாராட்டுகிறேன். இது ஒரு தேசிய பிரச்னை. இனி தாழ்ந்தவன் என்றிருக்க இடமில்லை என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தப் பெரிய பணியிலே எல்லா அங்கத்தினர்களும் அந்தக் கட்சி, இந்தக்கட்சி என்று பாராது எல்லா கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து பாடுபட்டு ஹரிஜன மக்கள் முன்னேற வழிசெய்யவேண்டுமென்று உங்களெல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

நான் அன்றைக்கே சொன்னேன், இந்த பட்ஜெட்டிலே 196 லட்சத்து சொச்சம் மானியமாக கோரியிருக்கிறேன். மேலும் இன்னும் 56 லட்சம் ரூபாய் இதற்காக இந்த வருஷத்திலே செலவிடப்படுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த திட்டம் இன்னும் வரவில்லை கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சீக்கிரம் கொடுத்து விடுவார்கள். வீடுகட்டும் திட்டத்திலும் சேரிவாசிகளுக்கு அனுசரணையாக மாடுகள் வாங்கிக்கொடுக்க, விதைகள் வாங்கிக் கொடுக்க, சுகாதாரத்திற்கு, குடி தண்ணீருக்கு, அதிக அக்கரையோடு மத்திய அரசாங்கத்தில் அவர்கள் நாம் கேட்கக் கேட்க வாரி வழங்குகிறார்கள். இன்னும் வழங்குவார்கள் என்று நம்புகிறேன். 2½ கோடி ரூபாய் வரை இந்த திட்டம் நிறை வேற்றும்போது செலவழிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த திட்டத்திலே மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளவைகள் :—

| | 1956–57 [லட்ச ரூபாயில்] | 1957–58 [லட்ச ரூபாயில்] |
|---|---|---|
| வீடுகள்கட்ட .. .. .. | 2·625 | 3·38 |
| குடி தண்ணீருக்காக .. .. | 3·00 | 1·50 |
| தொழில் கல்வி .. .. | 1·20 | 1·81 |
| குடிசைத் தொழில் .. .. | 3·17 | 3·80 |
| விவசாய மானியம் .. .. | 6·40 | 8·12 |
| பழங்குடி மக்களுக்கு வீடுகட்ட .. | 1·00 | 3·00 |
| கிணறுவெட்ட .. .. .. | 0·45 | 1·29 |
| தொழில் கல்வி .. .. | 0·30 | .. |

நேற்றைய தினம் மதிப்புக்குறிய அங்கத்தினர் வேலுச்சாமித் தேவர் பேசும்போது கிருஸ்தவர்களாகிய ஹரிஜனங்களுக்கு அளிப்பது போன்று மாஜி குற்ற பாம்பரையைச் சேர்ந்த கிருஸ்தவர்களுக்கும் இந்த சலுகைகள் அளிக்கவேண்டுமென்று சொன்னார். கிருஸ்தவர்களாக இருந்தாலும் அளிக்கபடும். ஹிந்துக்களானாலும் அளிக்கப்படும். அவர்கள் மதம் மாறினாலும் கூட, என்ன ஜாதி என்று கேட்கிற நிலையில்தான் இருக்கிறார்கள். மதம் மாறினாலும்கூட அதே நிலையில் நான் இருக்கிறார்கள்; ஆகையால் உதவு செய்யவேண்டுமென்று கல்விச் சலுகை அளித்திருக்கிறார்கள்., அங்கத்தினர்கள் கூடச்சொல்லலாம், மீண்டும் அவர்கள் மதம் மாறிப் போனால் அப்போது சமூகம் பாதிக்கப்படும் என்று. இம்மாதிரி இருக்காது. இருந்தால் டார்க்கலாம்.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்த மானியத்தின் விவாதத்தில் கலந்து கொண்டவர்களுக்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்களை மனதில் கொண்டு அரசாங்கம் நல்ல முறையிலே, ஹரிஜனங்களுக்காகவும், ஹரிஜன மக்களுக்காகவும், அதிகம் பாடு படும் என்று சொல்ல ஆசைப்படு

[Sri P. Kakkan] [20th July 1957

கிறேன். நாம் சொல்லும்போது எது சொன்னாலும் பயனளிக்கும் சொல்லாக நன்மை பயக்கும் சொல்லாக இருந்தால் நல்லது. பயன் படாத கருத்துக்களைச் சொன்னால அதில் நமக்கும் நன்மையில்லை, நம் நாட்டுக்கும் நன்மையில்லை, பின் தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்கும் நன்மை இல்லை.

கடைசியாக, இந்த வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்த ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அவர்களை இந்தப் பிரேரணையை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM**: கனம் உதவித் தலைவர் அவர்களே, பின் தங்கிய சமூகத்தைப்பற்றியும் மிகவும் பின் தங்கிய சமூகத்தைப் பற்றியும் ஷெட்யூல்ட் வகுப்பாரை பற்றியும் விரிவாக பதில் தரவில்லை. அதைப் பற்றி கொஞ்சம் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**The Hon. Sri P. KAKKAN**: மிகவும் பின் தங்கிய மக்களுக்கு அதிக அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்கு கனம் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் முக்குலத்தோரை இந்த மிகவும் பின் தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களில் கள்ளர் இந்த மிகவும் பின் தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**Sri T. S. RAMASWAMY PILLAI**: கனம் சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களிடம் அரசாங்கத்தினுடைய கொள்கை ஒன்றைப் பற்றி கேட்க விரும்புகிறேன். ஹாஸ்டல்களில் இடம் பெறாத ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் மாதாமாதம் கிடைக்கும்படியான சலுகைகள் கிடைக்கவில்லை. அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை கேட்கிறேன்.

**The Hon. Sri P. KAKKAN**: கனம் அங்கத்தினர் சொல்வதை நான் கூட உற்று கவனித்து வந்திருக்கிறேன். அது என்னுடைய கவனத்தில் நன்றாக இருக்கிறது. ஹாஸ்டல்களில் சேராதவர்களுக்கு கையில் பணத்தை கொடுத்து விட்டால் அவர்கள் அதை வைத்துக்கொண்டு வேறு இடங்களுக்குச் சென்று பணத்தை விரயம் செய்வார்கள். வீண் செலவு செய்து விடுவார்கள் என்பதனால்தான் அவர்கள் கையில் கொடுப்பது இல்லை. அதனால் தான் ஹாஸ்டல்களில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

**Sri T. S. RAMASWAMY PILLAI**: ஹாஸ்டல்கள் இல்லாத இடங்களில், என்ன செய்வது ?.

**The Hon. Sri P. KAKKAN**: ஹாஸ்டல் வசதி இல்லாவிட்டால் எந்த ஜில்லாவில் ஹாஸ்டல் வசதி இருக்கிறதோ அங்கே சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri K. VINAYAKAM**: The point which I want to have clarified by the Hon. Minister is this. Rightly or wrongly, a misapprehension has been created in this House by certain hon. Members who have spoken on this Demand that out of the money allotted for Harijan Welfare, a portion is diverted to Backward Classes. This is a wrong statement. I believe this kind of misapprehension has been created because one individual, who is the Director of Harijan Welfare, is administering two Departments. Will the Hon. Minister clear this misapprehension and make it very clear that the money allotted for Harijan Welfare is totally spent for it and that if anything remains, it is still there and not diverted to Backward Classes? Will he also make it clear that likewise the money allotted for Backward Classes is spent only on them and not on Harijans? This kind of misapprehension must be dispelled for ever from this House.



20th July 1957]

**The Hon. Sri P. KAKKAN**: கனம் அங்கத்தினருக்கு சொல்லிக் கொள்வது என்னவென்றால் எந்த எந்த சமூகத்தினருக்கு என்று தொகைகள் ஒதுக்கப் படுகிறதோ அந்தத் தொகையை அந்தந்த சமூகத்தினருக்கே தான் செலவழிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஆபீசராக இருந்தாலும் சரி அல்லது கனம் சந்நாசி சொன்னதுபோல் எந்த ஜில்லாவில் எங்கே இருந்தாலும் சரி எந்தக் கிளார்க்காக இருந்தாலும் சரி. எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்கள் பேரில் தப்பபிப்ராயம் இருந்தால் அவர்கள் பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அவர்களை அந்தந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கும் மாற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: Is the hon. Member, Srimathi Sathiyavanimuthu withdrawing her cut motion?

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU**: No, Sir.

DEPUTY SPEAKER: I shall then put the cut **motion to** vote. The question is :—

"That the allotment of Rs. 1,94,17,100 under Demand No. XXII—Harijan Uplift be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER: I will now put the Demand to vote. The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,94,17,100 under Demand No. XXII—Harijan Uplift."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again on Monday, the 22nd July 1957.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

128. *Short review of the activities of the National Employment Organisation from 1st November 1956 to 31st March 1957, issued with Government Order No. 525, Industries, Labour and Co-operation, dated 3rd May 1957.*

129. *Notification issued with Government Order Press No. 2018, Revenue, dated 14th May 1957, framing rules under the Madras Inams (Assessment) Act, 1956.* [Laid on the table of the House under section 10 (3) of the Madras Inams (Assessment) Act, 1956] (Madras Act XL of 1956).

130. *Notification issued with Government Order Ms. No. 1496, Home, dated 31st May 1957, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931), the car bearing Serial No. A.57.T. 143065 imported for personal use of Miss Virginia Ford assigned to work in Madras area under the Technical Co-operation Mission to India.* [Laid on the table of the House under Section 11 (2) of the Motor Vehicles Taxation Act, 1931.]

[20th July 1957

## APPENDIX I.

[Vide answer to starred question No. 172 asked by Sri T. S. Ramaswamy Pillai at the meeting of the Legislative Assembly held on 20th July 1957, page 25 supra.]

*Statement showing the number of centres organized by the Government, for the production and sale of Khadi in each district with their locations.*

(a) PRODUCTION CENTRES.

| *District.* (1) | *Main centres.* (2) | *Sub-centres.* (3) | *Visiting centres.* (4) |
|---|---|---|---|
| 1 Coimbatore | 2 | 21 | 20 |
| 2 Tiruchirappalli | .. | 6 | 5 |
| 3 South Arcot | 1 | 4 | 9 |
| 4 Salem | .. | 2 | 3 |
| 5 Madurai | 1 | 3 | .. |
| 6 Tirunelveli | 1 | 6 | 2 |
| 7 Ramanathapuram | .. | 1* | 1 |
| 8 Tanjore | .. | 1* | .. |
| | 5 | 44 | 40 |

* Independent sub-centres.

DETAILS.

| *District.* (1) | *Main centres.* (2) | *Sub-centres.* (3) | *Visiting centres.* (4) |
|---|---|---|---|
| 1 Coimbatore | 1 Avanasi | 1 Karuvallur<br>2 Vanjipalayam<br>3 Perumanallur<br>4 Cheyur<br>5 Vadugapalayam.<br>6 Tirupur<br>7 Vemandapalayam.<br>8 Karathpalayam<br>9 Kavilipalayam<br>10 Getticheviyur<br>11 Somanur<br>12 Perundurai | 1 Thekkalur.<br>2 Annur.<br>3 Malaikoil.<br>4 Pallagoudanpalayam.<br>5 Goundayampudur.<br>6 Oddapalayam.<br>7 Saliapalayam.<br>8 Alampalayam.<br>9 Vijayapuram.<br>10 Pollikalipalayam<br>11 Ganapathipalayam.<br>12 Kandaswamypalayam. |
| | 2 Vellakoil | 1 Ayyampalayam.<br>2 Chinnamuthur<br>3 Nathakadaiyur.<br>4 Olapalayam<br>5 Kanmaliampatty.<br>6 Puduppai<br>7 Madathukulam.<br>8 Poolavadi<br>9 Pongalur. | 13 Nallasellipalayam.<br>14 Sivagiri.<br>15 Arachalur.<br>16 Kuttrai.<br>17 Veeracholapuram<br>18 Dasan ickenpatty.<br>19 Mailrangam.<br>20 Narikkalpatty. |
| 2 Tiruchirappalli | Nil. | 1 Kodanathur<br>2 Thoddampatty.<br>3 Thennilai<br>4 Kannivadi<br>5 Chinnadharapuram.<br>6 Pasumbalur | 1 Kudalore.<br>2 Karvazhi.<br>3 Thoppampatty.<br>4 Nerukupai.<br>5 V. Kolathur. |



20th July 1957]

| *District.* (1) | *Main centres.* (2) | *Sub-centres.* (3) | *Visiting centres.* (4) |
|---|---|---|---|
| 3 South Arcot | 1 Chinna salem | 1 Kallakurichi.<br>2 Kugaiyur.<br>3 Sirupakkam.<br>4 Tittagudi. | 1 Yeriyur.<br>2 M. Pudur.<br>3 Melur.<br>4 Poondi.<br>5 Alathoor.<br>6 Mudianur.<br>7 Devapandalam.<br>8 Pathangi.<br>9 Nainarpalayam. |
| 4 Salem | Nil. | 1 Puliyankurichi.<br>2 Rasipuram. | 1 Periyeri.<br>2 Rajagopalapuram.<br>3 Poolambadi. |
| 5 Madurai | 1 T. Kallupatti | 1 Vadakkampatty.<br>2 Appakarai.<br>3 Chinnakattalai. | |
| 6 Tirunelveli | 1 Kuruvikulam | 1 Panavadalai.<br>2 Thiruvengadam.<br>3 Ilayarasanandal.<br>4 Valliyur.<br>5 Veeravanallur.<br>6 Kilapavoor. | 1 Keelaneluthanallur.<br>2 Naduvapatty. |
| 7 Ramanathapuram | .... | 1 Rajapalayam. | 1 Sundarapandayam. |
| 8 Tanjore | .... | 1 Vedaranyam. | |

(b) SALES DEPOTS.

| *District.* | *Number of depots.* |
|---|---|
| 1 Coimbatore | 1 |
| 2 Tiruchirappalli | 1 |
| 3 South Arcot | 1 |
| 4 Madurai | 1 |
| 5 Tanjore | 1 |
| 6 Madras | 3 |
| | 8 |

DETAILS.

| *District.* | *Places in which the sales depot is located.* |
|---|---|
| 1 Coimbatore | Coimbatore. |
| 2 Tiruchirappalli | Tiruchirappalli. |
| 3 South Arcot | Cuddalore. |
| 4 Madurai | Madurai. |
| 5 Tanjore | Kumbakonam. |
| 6 Madras | (a) 60, Walaja Road, Madras-2.<br>(b) 3, Pycrofts Road, Madras-5.<br>(c) 22, Thygaraya Road, Madras-17. |

[20th July 1957

## APPENDIX II.

[Vide answer to unstarred question No. 1 asked by Sri M. Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 20th July 1957, page 26 supra.]

*Statement showing the recommendations of the Minimum Wages (State) Advisory Board held on 18th March 1957 and the action takeu by Government thereon.*

| Recommendations of the Minimum Wages (State) Advisory Board.<br>(1) | Action taken by Government.<br>(2) |
|---|---|
| (i) The Board unanimously approved the revised rates of minimum wages recommended by the Advoisory Committees constituted under section 6 of the Minimum Wages Act for the revision of minimum wages fixed previously for the following employments :—<br>(1) Local authorities ;<br>(2) Public Motor Transport,<br>(3) Road construction or in building operations and in stone-breaking or stone-crushing ;<br>(4) Stone-breaking and stone-crushing operations carried on in mines and quarries;<br>(5) Scented and chewing tobacco manufactory; and<br>(6) Plantations. | (i) The Government accepted the recommendations of the Minimum Wages (State) Advisory Board and accordingly revised the minimum rates of wages fixed for the six employments. |
| (ii) The Board unanimously approved the conversion of the present minimum rates of wages in terms of the decimal system of coinage as per the conversion table. | (ii) The matter is under consideration. |
| (iii) The Board recommended that an Advisory Committee under section 6 of the Minimum Wages Act consisting of representatives of employers and employees may be constituted, as soon as the Minimum Wages Act is suitably amended enabling fixation of minimum wages after 31st December 1954, to consider the question of fixing minimum wages for the employment in tobacco (including bidi-making) manufactory and that the report of such Committee may be placed before the Advisory Board for its consideration. | (iii) The matter is under consideration. |



20th July 1957]

## APPENDIX III.

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, கவண்டப்பாடியில் தற்போது ஒரு லோகல் பண்டு ஆஸ்பத்திரி இருககிறது. அந்த ஆஸ்பத்திரி மூன்று தாலூகாக்களின் மத்தியில் இருக்கிறது. ஒன்பது மைல் சுற்றளவிலே வேறு கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி எதும் இல்லே. மூன்று தாலூகாக்களிலுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களிலிருந்து எராளமான வியாதியஸ்தர்கள் அங்கு சிகிச்சைக்கு வரவேண்டியிருப்பதால், அந்த ஆஸ்பத்திரியை சர்க்காரே எற்று. நடத்துமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்போல் பல இடங்கள் இருக்கின்றன. தாலூகா ஆஸ்பத்திரிகளை மட்டும் எடுத்து நடத்துவது என்பது இப்பொழுது சர்க்காருடைய கொள்கை ஆகும்.

### *District Munsif's Court, Krishnagiri*

* 174 *Q.*—SRI M. MUNI REDDI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that on 22nd October 1955 the District Court, Salem, called for figures for five years from the District Munsif's Court, Krishnagiri, for redistribution of territorial jurisdiction; and

[22nd July 1957

(b) if so, what the recommendations of the Krishnagiri District Munsif's Court were and the action taken on these recommendations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) The District Munsif, Krishnagiri, has suggested the opening of a District Munsif's Court at a place in between Krishnagiri and Dharmapuri, viz., at Karimangalam or thereabouts and the redistribution of the jurisdiction of the District Munsif's Courts at Krishnagiri and Dharmapuri. In case the above proposal is not possible, he has suggested that the revival of the circuit Court at Hosur may be considered.

The matter is still under the consideration of the District Judge, Salem.

SRI M. MUNI REDDI: Sir, may I know the number of small causes and original suits filed in the respective areas, viz., Krishnagiri and Hosur taluks, and how many are from Hosur and how many are from Krishnagiri and their corresponding stamp-fee collected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not have the statistics with me. But the whole matter has been examined, and authorities are definitely of the view that there is no justification for locating a court in Hosur.

SRI M. MUNI REDDI: Sir, is it not a fact that on 16th December 1955 in D. No. 139, the District Munsif's Court recommended a circuit court in view of the District Court Proceedings, dated 22nd October 1955?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: That was so, Sir. But since then even the High Court has been of the view that it is not advisable to have a circuit court like that.

SRI K. VINAYAKAM: Sir, since Hosur happens to be the bone of contention between Andhra Pradesh and Madras, will the Government think of the possibility of setting the entire subject at rest without consideration till the future of this area is definitely settled after the report of Sri Pataskar is available?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: These border disputes about certain areas have nothing to do with the present question. I have already said that the Government do not consider it necessary to locate a District Munsif's Court in Hosur.

SRI K. APPAVOO PILLAI: ஹோசூர் தாலூகா வாசிகள் ரோடு வசதி இல்லாத காரணத்தாலும், பஸ் வசதி இல்லாத காரணத்தாலும் நாற்பது மைல் தூரம் நடந்து கோர்ட்டுக்குப் போகவேண்டியிருப்பதால், போவதற்கு இரண்டு நாட்களும், வருவதற்கு இரண்டு நாட்களும்—ஆக, நான்கு நாட்கள் ஆகின்றன. ஆகையால் பழைய மாதிரியாக "மூவிங் கோர்ட்" நடக்க கனம் சர்க்கார் அவர்கள் கூடிய சீக்கிரம் தகுந்த ஏற்பாடுகள் செய்வார்களா ?



22nd July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முன்பு நான் பதிலளித்திருக்கிறேன். இதுவரையில் உள்ள அபிப்பிராயம் அம்மாதிரி "மூவிங் கோர்ட்" வைப்பதற்கு அவசியம் இல்லை என்பதும், அது சரியல்ல என்பதும்.

மேலும், கோர்ட்டுக்குப் போகிறவர்களுக்குக் கொஞ்சம் அசௌகரியங்கள் ஏற்பட்டால் அதனால் வழக்குகளும் ஓரளவு குறையலாம் என்று நான் கருதுகிறேன்.

SRI S. LAZAR: Sir, are the Government aware that redistribution of territorial jurisdiction generally causes undue confusion and difficulty to the litigant public?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Whenever it is found necessary to have a certain distribution of the areas with reference to the jurisdiction of courts, this aspect of avoiding inconvenience to the litigant public is certainly taken into account.

*Land holdings*

* 175 *Q.*—SRI C. MUTHIAH PILLAI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have any proposal for fixing a ceiling on land holding;

(b) whether the Government intend fixing any limit on personal cultivation; and

(c) if so, when?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Yes.

(b) Yes.

(c) The matter is under consideration and decisions will be taken as early as possible.

SRI C. MUTHIAH PILLAI: மக்களுடைய கிளர்ச்சி இதற்கு அவசியமாகத் தேவையா ? அல்லது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், தாங்களாகவே இந்தத் திட்டத்தைச் சீக்கிரம் கொண்டு வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் அங்கத்தினருடைய கேள்வி மிகவும் அதிசயமாக இருக்கிறது. ஏற்கெனவே, இந்த நிலச் சீர்திருத்தம் விஷயமாக சில சட்டங்கள் இங்கே நிறைவேற்றப்பட்டன. மூன்றாவது கட்டமான இந்த மசோதாவையும் நிறைவேற்றுவதற்கு வேண்டிய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. சில நாட்களுக்கு முன்பு ஆந்திர ரெவினியூ அமைச்சரோடு இதைப்பற்றி கலந்தாலோசித்ததில் அவர் இன்னும் சில தகவல்கள் கொடுப்பதாகச் சொன்னார்கள். இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு ஒரு நல்ல வழியிலே இம்மசோதாவைக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் உத்தேசம்.

SRI C. MUTHIAH PILLAI: காலேஜுக்கும் சர்க்கரை ஆலைக்கும் நிலச் சீர்திருத்தத்தைத் தவிர்ப்பதற்காக—ஆயிரம் ஆயிரம் ஏக்கராக்கள் நிலம் ஒதுக்கப்படுகின்றன. அந்தக் காலேஜும் சரிவர நடக்காமலிருக்கிறது. நிலச் சீர்திருத்தத்தைத் தவிர்ப்பதற்கு இம்மாதிரி யாராவது நடவடிக்கை எடுத்தால், இனி அதற்கு அனுமதி கொடுக்காமல் இருப்போம் என்பதாக அரசாங்கம் ஒரு உத்திரவாதம் கொடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: நம் ராஜ்யத்தில் சர்க்கரை பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. ஏராளமாக சர்க்கரை வெளிநாட்டிலிருந்து வரவழைக்கிறோம். ஆகையால், அரசாங்கத்தினுடைய

நோக்கம்—இங்கு சர்க்கரை உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது அந்தக் கொள்கையின்படி இந்த ஆலை ஏற்பட்டிருக்கிறதே தவிர, கனம் அங்கத்தினர் அதற்கு வெவ்வேறு அர்த்தம் கொடுத்து அவர்கள் நினைக்கலாம். ஆனால் அரசாங்கத்தினுடைய கொள்கை, சர்க்கரை உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்பது.

SRI K. SATTANATHA KARAYALAR: நில உடைமைக்கு வரம்பு கட்டுவது எந்த அடிப்படையில் இருக்கும்? திட்டக் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறதே, அந்த அடிப்படையில் இருக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: திட்டம் கமிஷனுடைய அடிப்படையையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கமிஷனே இப்பொழுது இது விஷயமாக ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறது. அதனுடைய முடிவு என்ன என்று தெரியவில்லை. அதையும் ஆலோசித்து மசோதா கொண்டுவரப்படும்.

SRI N. S. RAMALINGAM: நில உடைமைக்கு வரம்பு கட்டுவதை நிர்ணயிக்கும்போது வீண் கிளர்ச்சிக்கு இணங்கிவிடாமல், நியாயத்தையும் உற்பத்திப் பெருக்கத்தையும் அரசாங்கம் கவனத்தில் வைத்துக்கொள்ளுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அரசாங்கம் நியாயத்தை அனுசரித்துத்தான் செய்யும்.

SRI M. JAGANNATHAN: Sir, in several other State ceilings on future acquisitions of land have been fixed. May I know what this Government intend to do in regard to the fixation of ceilings with regard to future acquisitions of land?

THE HON. SRI M. A. MANICKAVELU: இரண்டொரு ராஜ்யங்கள் இந்த வரம்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் எதிர்கால வரம்பு பற்றியும், தற்கால வரம்பு பற்றியும், யோசனை செய்துதான் ஒரு முடிவுக்கு வரும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY: நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவதற்குள் மிராசுதார்கள் விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு எடுத்துவரும் பெரு முயற்சிகளைத் தடுப்பதற்கு, சர்க்கார் என்ன தீவிர நடவடிக்கை எடுப்பார்கள் என்று உறுதி கூற முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சர்க்கார் இது பற்றி ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து, ஒரு சட்டமும் இயற்றியிருக்கிறார்கள்.

SRI S. B. ADITYAN: In fixing the ceiling on land holdings, do the Government propose to exempt co-operative societies and joint stock companies?

THE HON. SRI M. A. MANICKAVELU: இவையெல்லாம் இந்த விஷயத்தில் அடங்கினவைதான். கூட்டுறவு விவசாயம், கூட்டுப் பண்ணைகள், முதலியவற்றைப்பற்றியெல்லாம் யோசித்துத்தான் முடிவு செய்யப்படும்.

SRI M. ALAGIRISAMY: நில உடமைக்கு வரம்பு கட்டும் விஷயத்தில், "ப்ளான்டேஷன்ஸ்"-உம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: அது சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது பிறகுதான் தெரியும். இப்போது அதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு வரும் நிலையில் இருக்கிறது.





SRI K. RAMACHANDRAN: நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். இது ஏதாவது கமிட்டியின் பரிசீலனையில் இருக்கிறதா? எந்த ஸ்திதியில் இருக்கிறது? ஏற்கெனவே கமிட்டி அமைக்கப்பட்டு அதன் மூலம் ஏதாவது முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா? தமிழ் நாடு விவசாயக் கமிட்டி என்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அந்தக் கமிட்டியின் முடிவுகள் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது விஷயமாக அரசாங்கம் ஒரு மந்திரி சபை உப கமிட்டியை ஏற்படுத்தியது; அந்த உப கமிட்டியினர் இந்த விஷயங்களையெல்லாம் தீர்க்க விசாரித்து ஒரு ரிப்போர்டும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சிபாரிசுகள் எல்லாவற்றையும் கொண்ட மசோதாவைக் கொண்டு வரும் தருணத்தில், சில சட்ட அசந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அதன் காரணமாக நிலச்சீர்திருத்தத்தின் இந்த கட்டம்—மூன்றாவது கட்டம்—கொண்டு வரப்படாமல் நிறுத்தப்பட்டது. ஆகையால் அந்த சிபாரிசுகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. இப்போது திட்டக் கமிஷன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு கமிட்டி எல்லா விஷயங்களையும் கவனித்து முடிவு செய்யும்.

SRI R. SWAMINATHA MERKONDAR: நிலவுடைமைக்கு வரம்பு நிர்ணயிக்கப்படும் போது, நிலத்தின் வருமானம், நிலத்தின் அளவு, அதன் மதிப்பு முதலிய விஷயங்கள் எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு, நில உடமைக்கு வரம்பு நிர்ணயிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஆமாம். அந்த விஷயங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்போம். அதாவது, நிலத்தின் பரப்பளவு, அதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் ஆகிய இரண்டு விஷயங்களும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிவு செய்யப்படும்.

SRI K. B. S. MANI: சர்க்கார் நிலவுடைமைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் சட்டத்தைக் கொண்டு வரப்போவதை முன்பாகவே தெரிந்து கொண்டு, சட்டம் வருவதற்கு முன்பே, எச்சரிக்கையாக ஒரு சிலர் தங்களுக்குச் சொந்தமான நிலங்களை தங்கள் குடும்பத்தார் பேரிலும், பெயரளவில் தர்ம ஸ்தாபனங்கள் பேரிலும் எழுதி வைத்து விடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவர்கள் சட்டப்படி இம்மாதிரி நிலங்களைப் பிரிவினை செய்தால் அதில் ஆட்சேபனை இல்லை. அவர்கள் அம்மாதிரிச் செய்தால் அவர்களே நிலவுடைமைக்கு வரம்பு கட்டுவதற்குத் தூண்டுகோலாக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: விவசாயிகளுக்குச் சாதகமாகக் கொண்டு வரப்பட்டிருக்கும் நியாய வாரச் சட்டத்திலிருந்தும், குத்தகை வாரச் சட்டத்திலிருந்தும், தாங்கள் எந்த அளவிற்குத் தப்பித்துக்கொள்ள முடியுமோ அந்த அளவிற்குத் தப்பித்துக்கொள்வதற்காக, நிலப்பிரபுக்கள் ஹைக்கோர்ட்டுகளிலும் இதர கோர்ட்டுகளிலும் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இதிலிருந்து அந்தச் சட்டங்கள் நடைமுறையில் விவசாயிகளுக்குச் சாதகமாக இல்லை என்பதும், அவைகள் காரணமாக விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் இடையே தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதும் சர்க்காருக்குத் தெரிந்திருந்தும், சர்க்கார் இதுவரையில் அவைகளைத் திருத்தியமைக்கவில்லை. சர்க்கார் அவைகளை உடனடியாகத் திருத்தியமைப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: நிலவுடைமைக்கு வரம்பு கட்டுவதைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அவர்களுடைய அபிப்பிராயம் இன்னது என்று நான் தெரிந்துகொண்டேன்.

[22nd July 1957

SRI K. VINAYAKAM: On a point of order, Sir. It is very difficult to catch your eyes. I have been rising in my seat but could not manage to catch your eyes. Your eyes are the most elusive organs that God has ever created on the face of this earth. What is the *modus operandi* that you would suggest to enable me to catch your eyes?

MR. SPEAKER: Please stand up as often as you can. (Laughter.) Some time, you will catch my eye.

*Government Transport buses in Kanyakumari district*

* 176 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Government Transport buses plying in Kanyakumari district at present; and

(*b*) how many of them are new buses?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The fleet strength of the Kanyakumari Branch of the Madras State Transport Department is 76. On an average 53 buses are plying daily on the roads.

(*b*) Twelve.

SRI T. T. DANIEL: Are the Government aware that many of the buses that are now plying in Kanyakumari district are in a very bad condition? Will they be pleased to go into the desirability of replacing these buses with new ones and also starting a workshop there so that the buses can be repaired then and there?

THE HON. SRI R. VENKATARAMAN: We have put 12 new buses into operation and in the course of the month, we will be sending another 12 to Kanyakumari district. We have proposals in this Budget for starting a workshop in Nagerkoil.

*Block Development Scheme*

* 177 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total amount spent on Tiruppur, Kangayam and Palladam in the year 1956–57 under the Block Development Scheme; and

(*b*) out of this, the expenditure incurred on the administrative department towards salaries of the officials and other expenses (with detailed figures for the various items of expenditure)?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Tiruppur Community Development Block—Rs. 2,76,350–6–11, Kangayam Community Development Block—Rs. 2,92,462–11–9, and Palladam Community Development Block—Rs. 2,13,722–1–0.



22nd July 1957]

(*b*)—

| *Details of Expenditure.* (1) | *Tiruppur. C.D. Block.* (2) | | | *Kangayam. C.D. Block.* (3) | | | *Palladam. C.D. Block.* (4) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | RS. | A. | P. | RS. | A. | P. | RS. | A. | P. |
| Pay of Officer .. .. | 2,760 | 0 | 0 | 2,951 | 10 | 0 | 2,343 | 4 | 0 |
| Pay of Establishment .. | 26,204 | 0 | 0 | 26,018 | 4 | 0 | 30,571 | 12 | 0 |
| Dearness allowance .. .. | 11,204 | 1 | 0 | 11,341 | 1 | 0 | 13,074 | 12 | 0 |
| Travelling and other compensatory allowance. .. | 14,584 | 2 | 0 | 13,738 | 5 | 0 | 14,315 | 3 | 0 |
| Training allowance to Social Education Organiser .. .. .. | 238 | 11 | 0 | 181 | 10 | 0 | 176 | 11 | 0 |
| | 54,990 | 14 | 0 | 54,230 | 14 | 0 | 60,481 | 10 | 0 |

SRI K. G. PALANISWAMI GOUNDER: இப்போது நிர்வாகச் செலவு அதிகமாக இருக்கிறது. ஆகவே அதைக் குறைத்து, திட்டங்களுக்கு அதிகப் பணத்தை ஒதுக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்து உத்தியோகஸ்தர்களுக்காக ரூ. 54,000 அல்லது ரூ. 55,000 செலவழிக்கப்படும்போது, மற்றெல்லா செலவுகளுக்கும் சேர்த்து சுமார் ரூபாய் மூன்று லட்சம் (மூன்று லட்சத்திற்குப் பக்கமாக) செலவு செய்யப்படுகிறது. ஆகையால் உத்தியோகஸ்தர்களுக்காக அதிகம் செலவு செய்யப்படுகிறது என்று சொல்வது சரியல்ல.

*Rice mills*

* 178 *Q.*—SRI M. SELVARAJAN (on behalf of Sri S. N. Annamalai): Will the Hon. the Minister for Home be pleased to state the action taken on the mahzar submitted by the public of Kalambur in North Arcot district on 5th April 1957 regarding grant of licence to K. P. Govindaraja Mudaliar Rice Mill?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The matter is under consideration by the local officers.

* 179 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri A. R. Subbiah Mudaliar): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have issued any order prohibiting the issue of licences for the starting of new rice mills;

(*b*) if so, the date from which this order has been in force;

(*c*) the number of new rice mills, which have been exempted from the operation of this order till the end of March 1957, with the reasons therefor; and

(*d*) whether the fee for the licence issued under the "Food Control Act" has been reduced from Rs. 25 to Re. 1 and if so the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A reply[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix I on page 193 *infra*.

[22nd July 1957

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : What is the future policy of the Government? Are they going to stop the issue of licences inasmuch as handpounding is being advocated both at the Central Government and at the Madras Government levels?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I may refer the hon. Leader of the Opposition to the paper placed on the table of the House.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that many people prefer milled rice to hand-pounded rice?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not know whether many people prefer milled rice. It may be some people prefer mill-polished rice because they like it.

Sri V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை. கேள்விகள் போடப்படும் நேரத்தில்தான் 'மேஜை மீது வைக்கப்பட்டுள்ள பேப்பர்கள்' என்பவைகளும் எங்களுககு வந்து சேரு கின்றன. இதன் காரணமாக கேள்வி நேரத்திற்கு முன்பே அவைகளை நாங்கள் படிக்க முடிவதில்லை. ஆகவே அந்த மூலக் கேள்விகளின் விடைகள்பற்றி உப கேள்விகள் போட முடிவதில்லை. ஆகவே ஒரு நாள் முன்னதாக கனம் அங்கத்தினர்களுக்குக் கேள்விகளை கொடுககும்போது 'மேஜைமீது வைக்கப்படும் பேப்பர்களும்' கொடுக்கப்படுவதற்கு தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சட்டசபைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பே 'மேஜைமீது வைக்கப்படும் பேப்பர்கள்' இங்கே வைக்கப்படுகின்றன. ஆகவே கனம் அங்கத்தினர்கள் அவைகளை கேள்வி நேரத்திற்கு முன்பே வந்து பார்த்துக்கொள்ளலாம். ஆனால் பதில்கள் நீண்டதாக இருந்து, மறுநாளும் அவைகளைப்பற்றிச் கேள்விகள் கேட்கவேண்டுமானால் அது கனம் சபாநாயகர் அவர்களுடைய உத்தரவைப் பொறுத்தது ஆகும்.

Mr. SPEAKER : I will give my ruling. I entirely agree with the Hon. Minister for Home. These papers are placed on the table, ten or fifteen minutes before the meeting commences. There is nothing to prevent hon. Members from coming earlier and reading what is placed on the table. If hon. Members, after going through the papers find that there is something in them on which further information is required, I will allow them to put supplementaries. Now, Mr. Vinayakam can put his question.

9-20 a.m. Sri K. VINAYAKAM : From the pamphlet placed on the table of the House, it is evident, that the Government have not given any instructions to the Collectors of districts altogether banning the issue of new licences. Are the Government aware of the fact that this kind of instructions only goad the Collectors to ban the issuing of new licences? For example, in Chingleput district, no licence for a fresh mill was issued after the publication of the Government communique on the matter.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that he is not correct when he says that in Chingleput district the issuing of licences has altogether been banned.



22nd July 1957]

Sri K. APPAVOO PILLAI : ஓசூர் தாலுகாவில் ரைஸ் மில்களை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக கலெக்டருக்கு விண்ணப்பங்களைப் போட்டுவிட்டு, மின்சார இலாகாவுடன் அக்ரிமெண்டு செய்துகொண்டிருக் கிறார்கள். இப்போது கலெக்டர் லைசென்சு கொடுக்க மறுக்கிறார். ஆனால் அக்ரிமெண்டுபடி மின்சார இலாகா மினிமம் சார்ஜ் கட்டவேண்டும் என்பதாக இவர்களைத் தொந்தரவு செய்கிறார்கள். ஆகவே அவர் களுக்கு உடனடியாக லைசென்சு கொடுக்கவேண்டும். இல்லையானால் மினிமம் சார்ஜ் கட்டவேண்டாம் என்பதாகவாவது மின்சார இலாகா வுக்கு உத்திரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஓசூர் மக்கள் அதிக மாக ரைஸ் மில்லைத் திறக்கவேண்டும் என்பதற்காக மின்சாரத்தைக் கோரவில்லை. அந்த நோக்கத்திற்காகவும் அங்கே மின்சாரம் கொண்டு போகவில்லை. மின்சாரத்தை உபயோகிக்க வேண்டும் என்பதற்காக புதிய தாக ரைஸ் மில்கள் அனுமதிக்க முடியாது. கைக்குத்தல் அரிசி சாப்பிடு வது நல்லது என்று உணர்ந்து அதிலும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : From the answer placed on the table of the House, I may point out to the Hon. Minister that no specific instructions have been issued to the Collectors. In certain cases, Collectors issue licences and in certain cases they refuse licences. Will the Government therefore consider the desirability of issuing "hard and fast rules" to enable them to decide in what circumstances licences should be issued and in what circumstances they should not be issued?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : This is exactly the position under which the Government have issued instructions. Collectors have got discretion to decide in what circumstances licence will have to be issued and in what circumstances it would not be necessary to issue them so that hand-pounding might be encouraged.

Sri G. GOMATHISANKARA DIKSHITAR ; சுகாதாரத்தை உத்தேசித்தும், வேலை இல்லாத் திண்டாட்டத்தை நீக்குவது உத்தேசித்தும் கைக்குத்தல் அரிசியை உபயோகிப்பது நலம் என்ற கொள்கையை அர சாங்கம் கொண்டிருப்பதால் மின்சார ரைஸ் மில்களுக்கு லைசென்சு கொடுப்பதை அரசாங்கம் நிறுத்துவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி நிறுத்தி விடலாம். ஆனால் கனம் அங்கத்தினர் போன்றவர்கள் கைக்குத்தல் அரிசி யின் அருமையை உணர்ந்தவர்கள் கைக்குத்தல் அரிசியை மக்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்யவேண்டும்.

Sri M. MUNI REDDI : Arising out of the answer to the supplementary question, may I inform the Government that parties who have entered into agreements previously and who, as a result of such agreements, have agreed to consume 20 h.p. will be put to considerable difficulties as they will be liable to pay minimum charges as per the agreements if licences to run the mills are refused by the Collector subsequently?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : If any commitments had been made in the matter of installation, the Collectors will certainly take that factor into account before they arrive at a final decision in the matter. If the party has any grievance he may appeal to the Board.

[22nd July 1957

SRI S. LAZAR : சர்க்கார் இதுபோன்று ரைஸ் மில்களுக்கு லைசென்சு வழங்கப்படாது என்று சொல்லுவதில் பல கஷ்டங்கள் வருகின்றன. 1951–52-லேயே திருச்சி ஜில்லாவில் ரைஸ் மில் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு, மற்ற சர்டிபிகேட் முதலியன வாங்கப்பட்டு, மின்சார அக்ரிமெண்டு செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னமும் லைசென்சு வழங்கப்படவில்லை. இப்படி கட்டடங்கள் கட்டி சகல ஏற்பாடுகளும் செய்துள்ள ரைஸ் மில்களுக்காவது லைசென்சு கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போதுதான் ஆங்கிலத்தில் பதில் சொன்னேன். அம்மாதிரியாக முன்பே செலவு செய்யப்பட்டு கமிட்மெண்டு இருந்தால் அதைக் கவனிப்பார்.

SRI T. S. RAMASWAMY PILLAI : The Government of India have recently taken a decision on the recommendations of the Rice Mill Enquiry Committee's report. May I know whether the Government have received any communique from the Central Government on this matter?

THE HON. SRI M BHAKTAVATSALAM : I do not know whether any communique has recently been received. But I may tell the hon. Member that what is contained in the paper placed on the table of the House is exactly in accordance with the decisions of the Government of India that are reported in the press.

SRI C. MUTHIAH PILLAI : இப்போது லைசென்சு வழங்கப்படுவதில் கலெக்டருக்கு அதிகாரத்தை நிறுத்திவிட்டு, ரெவின்யூ போர்டுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. திரும்பவும் கலெக்டருக்கே அதிகாரத்தை வழுங்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கலெக்டருக்குத்தான் லைசென்சு வழங்க அதிகாரம். அவர் முடிவின் பேரில் அப்பீல் செய்வதற்குத்தான் ரெவின்யூ போர்டுக்கு ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது.

SRI A. VEDARATHNAM PILLAI : தொன்றுதொட்டு கைக்குத்தல் அரிசியை உபயோகிக்கும் வழக்கம் அனுஷ்டானத்தில் இருந்துவருகிற பிரதேசங்களில் ரைஸ் மில்லுக்கு லைசென்சு கொடுக்கிற வழக்கத்தை நிறுத்த அரசாங்கம் முன்வருமா ? முன்பே வழங்கப்பட்டிருந்தால் மின்சாரத்தை வேறு வகையில் உபயோகப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுவிடுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயம் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அந்த அந்த பிராந்தியங்களில் உள்ள மக்களுக்குத் தேவையான அளவு போதுமான அரிசி கிடைக்கவேண்டும். அப்படி கிடைக்கவில்லை என்ற புகாருக்கு இடம் கொடுக்கக்கூடாது.

*Homoeopathic System of Medicine*

* 180 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to recognize the homoeopathic system of medicine and to start colleges for teaching this system?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.



22nd July 1957]

*Marketing Societies*

* 181 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to open any new Co-operative Marketing Societies in the State; and

(b) if so, how many among them are proposed to be opened in Kanyakumari district?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) It has been decided to organize Co-operative Marketing Societies in Kanyakumari district at the rate of one society for each taluk under the Second Five-Year Plan. During 1957-58 two societies—one at Nagercoil and another at Kalkulam—will be formed. The remaining societies will be formed during subsequent years of the Plan.

SRI T. T. DANIEL : May I know whether the Government have decided upon the exact centres where these co-operative societies are intended to be opened and the principles on which these societies are intended to be opened?

THE HON. SRI R. VENKATARAMAN : The societies will be opened at the rate of one per each taluk. Two places have already been selected, one at Nagarkoil and the other at Kalkulam.

*Local Development Scheme in Bhavani taluk*

* 182 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the amount allotted for the Local Development Scheme in Bhavani taluk in 1956–57; and

(b) the amount spent out of it?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Rs. 3,18,200 (rupees three lakhs, eighteen thousand and two hundred only).

(b) Rs. 1,80,637 (rupees one lakh, eighty thousand six hundred and thirty-seven only).

SRI P. G. MANICKAM : சார், எத்தனை வேலைகளுக்குத் திட்டங்கள் போடப்பட்டன ? எத்தனை வேலைகளுக்கு சாங்ஷன் ஆயின ? சாங்ஷன் செய்யப்பட்ட வேலைகளாவது பூர்த்தியாக முடிந்தனவா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 349 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 198 வேலைகள் முடிக்கப்பட்டிருக்கின்றன.

SRI G. G. GURUMURTHY : 1956–57-ல் செலவு செய்யப்பட்டு முடியாத தொகை இருந்தால் அதை 1957–58-ல் செலவு செய்வதற்கு அனுமதி அளிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சாங்ஷன் செய்யப்பட்ட வேலைகளுக்கு எவ்வளவு தொகை தேவையோ அது அனுமதிக்கப்படும்,

### *Fair Price Shops*

* 183 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total number of Fair Price Shops functioning at present;

(*b*) the number of such shops in (i) the City of Madras, (ii) Madurai, (iii) Tiruchirappalli, (iv) Coimbatore, (v) Tirunelveli, (vi) Tirunelveli district, excluding Tirunelveli town and (vii) Kanyakumari district;

(*c*) the normal off-take per week in each of the above places?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 940 shops.

(*b*)—

| | | |
|---|---|---|
| (i) Madras City | 216 Shops. | |
| (ii) Madurai Town | 14 do. | |
| (iii) Tiruchirappalli | 6 do. | |
| (iv) Coimbatore | 53 do. | |
| (v) Tirunelveli | 5 do. | |
| (vi) Tirunelveli district excluding Tirunelveli town. | 103 do. | |
| (vii) Kanyakumari district | 248 do. | (of this 30 shops sanctioned for Vilavancode taluk have been kept in reserve by the Collector). |

(*c*)—

| | |
|---|---|
| 1 Madras City | 489 tons. |
| 2 Coimbatore town | 84 do. |
| 3 Madurai town | 21 do. |
| 4 Tiruchirappalli town | 15 do. |
| 5 Tirunelveli town | 14 do. |
| 6 Tirunelveli district excluding Tirunelveli town. | 21 do. |
| 7 Kanyakumari district | 190·8 do. |

9-30 a.m. SRI K. SATTANATHA KARAYALAR: சார், இந்த "பேர் பிரைஸ் ஷாப்"-களில் கொடுக்கப்படும் புழுங்கல் அரிசி மிகவும் மோசமாக இருப்பது ஏன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கிடைக்கும் அரிசியைத் தான் கொடுக்க முடியும். கூடிய வரை நல்ல அரிசியாகப் பார்த்துத் தான் கொடுத்து வருகிறோம். இந்த அரிசிதான் நியாய விலை கடைகளில் விநியோகிக்கப்படுகிறது.

SRI N. S. RAMALINGAM: நியாய விலை கடைகளை தஞ்சாவூர் ஜில்லாவிலே மானாவாரிப் பிரதேசங்களில் திறப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஓரளவுதான் நியாய விலை கடைகள் கொடுக்கப்படுகின்றன. முக்கியமாக நகரப் பிராந்தியங்களிலும், போதிய அரிசி கிடைக்காத பிராந்தியங்களிலும் இந்த நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவில் கனம் அங்கத்தினர் கோரும் பிராந்தியங்களில் எல்லாம் இந்த நியாய விலைக் கடைகள் திறப்பது என்பது அசாத்தியம்.

SRI A. A. RASHEED: Will the Hon. Minister consider the supply of rice substitutes in these fair price shops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: That is a different question, Sir. A separate question may be put.





SRI S. B. ADITYAN: திருநெல்வேலி ஜில்லாவிலே தென் பகுதியிலே மழை இல்லாத காரணத்தினாலே பஞ்சம் பரவலாக ஏற்பட்டிருக்கிறது என்று நிதி மந்திரி அவர்களே அறிக்கையில் குறிப்பிட்டார்கள். அங்கு அதிகப்படியாக நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சென்னை நகரத்தைத் தவிர, நான் கொடுத்த விவரங்களிலிருந்து திருநெல்வேலி ஜில்லாவில் தான் அதிகமாக நியாய விலைக் கடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாம்.

SRI A. MARIAPPAN: சேலம் ஜில்லாவில் அவசியமான இடங்களில் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ரொம்பவும் அவசியமான இடங்களில், முக்கியமாக நகர் பிராந்தியங்களில் சில கடைகளை வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

SRI P. S. CHINNADURAI: சபாநாயகர் அவர்களே, தஞ்சாவூர் ஜில்லாவிலே நியாய விலைக் கடைகளில் அரிசி வாங்கும்போது கோதுமையையும் கட்டாயமாக வாங்க வேண்டும் என்று வற்புறுத்துவது உண்மையா? அவ்வாறு வற்புறுத்துவதை அரசாங்கம் கை விடுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தஞ்சாவூர் ஜில்லாவில் நியாய விலைக் கடைகள் ஒன்றும் இல்லை.

SRI P. S. SANTHANAM: வட ஆற்காடு மாவட்டத்திலே எத்தனை நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன? இப்பொழுது இல்லை என்றால் திறப்பதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வட. ஆற்காடு ஜில்லாவிலே நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR: ஹரிஜன ஹாஸ்டல்களிலே உணவின் விலை அதிகமாகி விட்டதால், அவர்களுக்கு வேண்டிய அரிசியை கோவாபரேடிவ் சொசைடி மூலமாக பெறுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஹரிஜனங்கள் ஹாஸ்டல்களுக்கு தனியாக அரிசி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரினால், அது பற்றி கவனிக்கப்படும்.

SRI M. JAGANNATHAN: நியாய விலைக் கடைகளில், சில இடங்களில் அரிசி அநியாய விலைக்கு விற்கப்படுகின்றது. இம்மாதிரி கள்ளச் சந்தையில் அரிசி விற்பதை தடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இம்மாதிரி பொதுவாக குற்றம் சாட்டினால் பயன் ஏற்படாது. கனம் அங்கத்தினர்கள் "கேட்டார்கள்" என்றுதான் போடுவார்கள். குறிப்பாக கனம் அங்கத்தினர்கள் எங்காவது துஷ்பிரயோகம் செய்ததைச் சொல்வார்களானால் அதை கவனித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI N. MARUDACHALAM: கோயம்புத்தூர் ஜில்லாவில் நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும் என்று பல மகஜர்கள் அனுப்பியும் அது விஷயம் ஒன்றும் கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதை அரசாங்கம் கவனிக்குமா?

[22nd July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூர் நகரத்தில் 53 நியாய - விலைக் கடைகள் இப்போது இருக்கின்றன. ஆகவே அரசாங்கம் இது விஷயத்தில் கவனிப்பதில்லை என்று சொல்வது சரி அல்ல.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : சபாநாயகர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் தப்பிதமாக அரிசி வாங்க முயற்சிக்கின்றவர்களின் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பாக புகாரை அனுப்பினால் அது பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI R. SRINIVASA IYER : தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரத்தநாடு போன்ற பஞ்சப் பிரதேசங்களிலே நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தினால் கோதுமை வாங்க வேண்டும் என்று கலெக்டர் "பிரஸ் கான்பரன்ஸ்"-ல் சொல்லப்பட்டதாக பேபரில் போடப்பட்டிருந்தது. இதைப் பார்த்துவிட்டுத் தான் ஸ்ரீ சின்னதுரை கேள்வி போட்டார் என்று நினைக்கிறேன். ஆகையால் இது விஷயத்தில் சர்க்கார் ஏதாவது உத்திரவு போட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுவரை அவ்வாறு திறக்கப்படவில்லை. இனிமேல் திறக்கப்படுவதைப் பற்றி சில யோசனைகள் இருக்கலாம்.

SRI K. N. PALANISWAMI GOUNDER : தலைவர் அவர்களே நியாய விலைக் கடைகளில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் அரிசி வாங்க வரவேண்டும் என்று இருக்கிறது. அதற்கு குறைந்த வயதுள்ளவர்கள் சென்றால் அரிசி கொடுக்க மறுக்கப்படுகிறது. இதனால் ஏழைகள் அவர்கள் வேலைக்குப் போவதை விட்டு விட்டு அரிசி வாங்கச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால் இதில் தகுந்த மாறுதல்கள் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர்கள் புகார் சொல்லக்கூடாது என்ற நோக்கத்துடன்தான் இவைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

SRI D. S. AUTHIMULAM : தமிழ் நாட்டில் அநேக ஜில்லாக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. ஆகையினால் இவைகளுக்கு "ஸ்பெஷல் பிரபரன்ஸ்" கொடுக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் எப்பொழுதும் பஞ்சப் பாட்டைப் பாடக்கூடாது என்று அவரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட பஞ்ச நிலைமை இப்பொழுது இல்லை.

SRI K. PONNIAN : தலைவர் அவர்களே, வால்பாரையிலே 75,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 10 மைல், 15 மைல் சுற்று வட்டாரத்தில் இருக்கிறார்கள். அங்கு இப்பொழுது ஒரு நியாயவிலை கடைதான் இருக்கிறது. இன்னும் அதிகமாக நியாயவிலைக் கடைகளை திறப்பதைப் பற்றி அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கலெக்டர் அவர்கள் அவ்வப்போது இந்த விஷயத்தை கவனித்து நியாய விலைக் கடைகள் அவசியம் என்றால் அதிகப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வார்.

SRI A. VEDARATHNAM PILLAI : தஞ்சாவூர் ஜில்லாவில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டது. அங்கேயும் பஞ்சப்பிரதேசங்கள் சில இடங்களில் இருக்கின்றன என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியும். ஆகையால் தஞ்சாவூர் ஜில்லாவில் அந்த இடங்களிலாவது நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்த முன் வருவார்களா ?



22nd July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு பிராந்தியத்தில் அரிசி கிடைப்பது கஷ்டமாக இருந்தால் மற்ற செழிப்பான இடங்களிலிருந்து அரிசி எடுத்துச் செல்லக்கூடும். இருந்தாலும் அவசியம் ஏற்பட்டால் கடைகள் ஏற்படுத்துவது கவனிக்கப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்கார் அரிசியை "கோடௌனில்" வைத்துக் கொண்டிருப்பதனால் நாற்றம் ஏற்பட்டு மக்கி விடுகிறது. இதனால் நஷ்டம் ஏற்படுகிறது என்பதும் நமக்குத் தெரியும். ஆகையால் வரக்கூடிய அரிசியை நீண்ட நாள் வைத்துக்கொண்டிருக்காமல், உடனடியாக விநியோகம் செய்வதற்கு சர்க்கார் தக்க ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவை உடனுக்குடன் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

SRI P. M. MUNUSAMI GOUNDER : நியாயமான விலைக்கு நியாய விலைக் கடைகளில், சுலபமாகவும், நல்ல முறையிலும், அதிக அளவிலும் ஜனங்கள் அரிசி வாங்கிக்கொள்ள போதுமான அளவு அரிசி சப்ளை செய்யப்படுவதில்லை. ஆகையால் "சப்ளை கோட்டா"-வை அதிகப்படுத்த சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த நியாய விலை கடைகள் ஓரளவு நிவாரணம் அளிக்கும் வகையில்தான் ஏற்படுத்தப்பட்டன என்று நான் முன்பே பதிலில் சொன்னேன். ஆகையால் எங்கெங்கே வேண்டுமோ, எவ்வளவு வேண்டுமோ அங்கங்கே நியாயவிலைக் கடைகளை அதிகரித்துக்கொண்டுபோக முடியாது.

SRI K. SWAMINATHA MERKONDAR : தஞ்சாவூர் தாலூகாவில் செங்கிப்பட்டி, வல்லம் போன்ற வறண்ட தொகுதிகளில் ஏழை மக்கள் அதிக விலையில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வெளியிலிருந்து அரிசி வாங்குவது மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகையால் இந்த இடங்களில் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி எல்லாம் கவனித்து அவசியம் ஏற்பட்டால் வேண்டிய ஏற்பாடுகளை செய்ய கலெக்டருக்கு அங்கீகாரம் இருக்கிறது.

*Madras Cultivating Tenants' Act, 1956*

* 184 Q.—SRI C. MUTHIAH PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the action taken on the representations from the Member from Sirkali Constituency regarding amendment of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, to extend its applicability to joint cultivators and tenants in Sirkali taluk and other areas in Tanjore district ?

THE HON. SRI M. A. MANICKAVELU : In January 1957 a representation was received from hon. Member requesting the Government to amend the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, so as to make it applicable to tenants under the "Karaivazhi" system of tenancy (joint cultivation). The representation was examined by the Government and the Member was informed that the question whether the tenants under the "Karaivazhi" system of tenancy will be governed by the provisions of the Fair Rent Act or not will have to be decided by the Rent Courts and the Rent Tribunals constituted under the Act.

[22nd July 1957

SRI C. MUTHIAH PILLAI : தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களிலே விவசாயிகள் இந்த மசோதாவினால் அதிக கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். இந்த மசோதாவிற்கு சில திருத்தங்கள் கொண்டுவந்தால் நலமாக இருக்கும். ஆகையினால் இந்த சட்டசபையிலேயே சர்க்கார் இந்த திருத்தங்கள் கொண்டுவருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THE HON SRI M. A. MANICKAVELU : இந்தச் சட்ட சபையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரலாம். எந்த எந்த வகையிலே திருத்தம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் பரிசீலனை செய்து அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

SRI C. MUTHIAH PILLAI : இது ரொம்பவும் முக்கியமான பிரச்னையாக இருக்கிற காரணத்தினாலே இதற்கு அரைமணி நேர விவாதம் ஒதுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டம் போட்டிருந்தும் விவசாயிகள் வெளியேற்றப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி பேபரிலும் செய்தி வந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட மந்திரிக்கும் முதல் மந்திரிக்கும் நன்றாகத் தெரியும். உடனடியாக அங்கே இந்தப் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் அமைதி குலைந்துவிடும் நிலையில் இருக்கிறது. ஆகையால் இதற்கு அரைமணி நேரம் விவாதம் ஒதுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : பட்ஜெட் விவாதம் செய்யும் நேரத்தில் அரைமணி நேர விவாதத்திற்கு அவகாசம் ஒதுக்க முடியாது. "அப்ரோபிரியேஷன் பில்" லின்மீது விவாதம் நடக்கும்போது அங்கத்தினருக்கு இதுபற்றி பேச உரிமை இருக்கிறது. பேசலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

### *Simco Match Factory*

*185 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the closure of the Simco Match Factory, Gudiyatham ; and

(*b*) whether the Government have taken any steps to re-open and run it again ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : இதுபோன்று தொழிற்சாலைகளுடைய மூடுவிழாக்கள் தொடர்ந்து நடந்துகொண்டே போனால், வேலையில்லா திண்டாட்டத்தை எப்படி நாம் போக்குவது, வேலையில்லாதவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது ? ஆகவே புதிய தொழிற்சாலைகளை திறந்துகொண்டு போகக்கூடிய அதேநேரத்திலே பழைய தொழிற்சாலைகள் மூடிக்கொண்டே போகப்படுகிறது. இதற்கு தொழிலாளி காரணம் அல்ல....

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கேள்வி நேரத்தின்போது பிரசங்கம் செய்யக்கூடாது. கேள்விதான் கேட்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : மூடப்பட்ட எல்லா தொழிற்சாலைகளையும் மீண்டும் திறந்து நடத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பார்களா ?

MR. SPEAKER : அது " கரெக்ட் ".

THE HON. SRI R. VENKATARAMAN : மூடுகின்ற தொழிற்சாலைகள் எல்லாவற்றையும் சர்க்கார் எடுத்து நடத்துவது என்ற கொள்கையை வரையறுத்துவிட்டால் எல்லோரும் தொழிற்சாலைகள் வைத்து மூடிக்கொண்டே போவார்கள். ஆகவே, எந்தெந்த தொழில்களை சர்க்கார்



22nd July 1957]

நடத்தவேண்டும், எந்தெந்த தொழில்களை தனியார் நடத்தவேண்டும் என்று ஐந்தாண்டுத் திட்டத்தில் " இண்டஸ்டிரியல் பாலிஸி ரிஸல்யூஷனில் " வரையறுக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலுள்ள தொழில்களை சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்துவது அவ்வளவு உசிதம் அல்ல.

SRI K. VINAYAKAM : Sir, what were the causes that prompted the closure of this match factory? Was it due to labour sponsored by the Communist party that was mainly responsible for the unrest in the factory and which culminated in the closure of this match factory ?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member's guess is wrong. It is all a family dispute.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சென்னை சர்க்கார் பெரம்பூரில் தீப்பெட்டி தொழிற்சாலையை ஏற்படுத்தி அதன் மூலமாக வேலையற்றவர்களுக்கு வேலை கொடுத்ததாகத் தெரிவித்தார்கள். ஆனால் குடியாத்தம் தொழிற்சாலை மூடப்பட்டதன் காரணமாக அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் வேலையற்றுப்போய்விட்டார்கள். இம்மாதிரி ஏற்கெனவே தொழிலில் ஈடுபட்ட வேலையற்றுப்போன ஏழை மக்களுக்காக அரசாங்கம் வேறுவகையில் ஒரு புதிய தீப்பெட்டி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களா ? திட்டம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குடியாத்தம் தீக்குச்சித் தொழிற்சாலையில் வேலை செய்தவர்களுக்கு வேறு வேலைகள் கிடைத்துவிட்டன என்று அதிகாரபூர்வமாக சர்க்காருக்கு தகவல் வந்திருக்கிறது. சாதாரணமாக ஒரு தொழிற்சாலை மூடப்பட்டால், அதை உடனே சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்துவது என்பது இயலாத காரியம். அந்தத் தொழிற்சாலை அவசியமாக இருந்தால், அது சர்க்கார் துறையிலே செய்யக்கூடிய தொழிலாக இருந்தால், அதை சர்க்கார் பரிசீலிக்கும்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : தொழிற்சாலைகள் நமது மாகாணத்தில் ஏறக்குறைய பல இடங்களில் மூடப்படுவதற்கு காரணம் பொருளாதார வசதி குறைவா அல்லது அங்கு உள்ள தொழிற்சங்கத் தலைவர்களின் அட்டூழியமா என்பதை கனம் மந்திரி அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது மிகவும் பொதுவாக இருக்கிறது. தொழிற்சாலை மூடிய இடத்தை குறிப்பிட்டுச் சொன்னால், பதில் சொல்லமுடியும். பொதுவாக எந்த அபிப்பிராயமும் சொல்லுவதற்கு இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த பாக்டரி மூடப்பட்டதன் காரணமாக தொழிலாளர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. அது மாத்திரமல்ல. சர்க்கார் பெரம்பூர் பாக்டரியில் ஏற்கெனவே கொடுத்துக்கொண்டிருந்த கூலியையும் குறைத்து ஆட்களையும் குறைத்து விட்டதன் காரணத்தினால் மேற்கொண்டு அதிகமாக வேலையில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமையிலே அதே தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் ஒரு "மாட்ச் பாக்டரி" ஆரம்பிக்க வேண்டுமென்று பணத்தை பாங்கியில் போட்டு, கூட்டுறவு ரிஜிஸ்டிராருக்கு விண்ணப்பித்துக்கொண்டும், இதுவரையிலே கவனிக்கப்படவில்லை. கூட்டுறவு முறையிலாவது ஒரு தீப்பெட்டி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் தக்க ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் பல விஷயங்களைச் சேர்த்து கேள்வி கேட்பதினால், பதில் சொல்லுவது சற்று கஷ்டமாக இருக்கிறது. நான் ஆரம்பத்திலே சொன்னேன். சென்னையில் ஆரம்பித்திருக்கும் பெரம்பூர் தீக்குச்சி தொழிற்சாலை ஏதோ "அண்டர் எம்பிலாய்டு" என்று சொல்லக்கூடிய முழுநேர வேலை கிடைக்காதவர்

களுக்கு சலுகை கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் தீக்குச்சிகளை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்று வீட்டிலேயே வேலைசெய்து திரும்பி கொண்டுவந்து கொடுக்கிறார்கள். இது பாக்டரி மாதிரியில் நடத்தப்படவில்லை. பெரம்பூர் தொழிற்சாலைக்கும், பாக்டரி முறையில் நடத்தப்படுகிற தொழிற்சாலைக்கும் அடிப்படையிலே வெகு வித்தியாசங்கள் இருக்கின்றன.

அடுத்தபடியாக, கூட்டுறவு முறையிலே தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று கனம் அங்கத்தினர் கேட்டுக்கொண்டார்கள். அது விஷயமாக தனி கேள்வி கேட்டால், அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை விசாரித்து சொல்லுகிறேன்.

*Cultivable waste lands*

* 186 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state the extent of cultivable waste lands, districtwar?

The Hon. Sri M. A. MANICKAVELU: The extent of cultivable waste lands in each district is as given below :—

| | Acres. |
|---|---|
| Chingleput .. .. .. | 8,220 |
| North Arcot .. .. .. | 47,289 |
| South Arcot .. .. .. | 1,15,692 |
| Tanjore .. .. .. | 27,458 |
| Tiruchirappalli .. .. .. | 22,530 |
| Madurai .. .. .. | 41,851 |
| Ramanathapuram .. .. | 4,824 |
| Tirunelveli .. .. .. | 1,907 |
| Salem .. .. .. .. | 98,096 |
| Coimbatore .. .. .. | 36,451 |
| The Nilgiris .. .. .. | 355 |
| Kanyakumari .. .. .. | 2,061 |
| | 406,734 |

Sri K. SATTANATHA KARAYALAR: இந்த நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்கு பகிர்ந்துகொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: இது விஷயமாக நடவடிக்கை மிகவும் துரிதமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயத்திற்காக அம்மாதிரி ஒரு லட்சம் ஏகராவுக்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன்.

Sri K. B. S. MANI: இப்பொழுது கிராமத்திலிருக்கும் நல்ல முறையிலே விவசாயத்திற்கு பயன்படக்கூடிய நிலங்களை அங்கு இருக்கும் விவசாயம் செய்யக்கூடிய தியாகிகளும், மாஜி ராணுவத்தினரும் கோரி தாங்களே சகல செலவுகளையும் செய்து சீர்திருத்தம் செய்துகொள்ளுவதற்கு முன்வந்தால், சர்க்கார் அந்த நிலங்களை அவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: இப்பொழுது இருக்கிற கொள்கை நிலம் இல்லாத ஏழைகளுக்கும் நிலத்தை தாங்களே சாகுபடி செய்கிறவர்களுக்கும் நிலம் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் நிலம் கொடுக்கப்படுகிறது.





Sri P. S. CHINNADURAI: விவசாயத்திற்கு பயன்படக்கூடிய தரிசு நிலங்கள் அனைத்தையும் பூதான இயக்கத்தின் கையிலே ஒப்படைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: அப்படி ஒன்றும் அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை.

Sri M. C. MUTHUKUMARASWAMY: அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து, இந்த மாகாணத்தில் "அஸெஸ்டு" புறம்போக்கு நிலம் எவ்வளவு இருக்கிறது என்பதை சொல்லுவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: அதுபற்றி குறிப்பாக என்னிடம் ஒன்றும் தகவல் இல்லை. இந்தப் புள்ளிவிவரங்கள் "டாங்கு புறம்போக்கு" முதலிய எல்லா புறம்போக்கு நிலங்களையும் குறிப்பிடுகிறது. "அஸெஸ்டு வேஸ்ட் லாண்டு" என்பது தனி பிரிவு.

Sri M. P. SUBRAMANIAM: அரசாங்கத்தில் கொடுக்கப்படும் தரிசு நிலங்களை ஏழைகள் பெறுவதன் காரணத்தினால், அவர்கள் அந்த நிலங்களை உடனடியாக விவசாயத்திற்கு கொண்டுவருவதற்கு அரசாங்கம் அவர்களுக்கு ஏதாவது பொருள் உதவி செய்கிறதா அல்லது இனியாவது ஏதாவது அதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: அவர்கள் விவசாயத்தை ஆரம்பிப்பதற்காக கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri M. R. KANDASWAMY MUDALIYAR: ஓமலூர் தாலூகாவில் டேனிஸ்பேட்டையில் பெரிய மரங்கள் இல்லாத காடுகள் 1,500 ஏக்கர் தரிசாக கிடக்கின்றன. அந்த ஊரிலே விவசாயம் செய்வதற்கு நிலம் இல்லாமல் ஆயிரக்கணக்கான மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த பிரயோசனமற்ற காடுகளை ஒழித்து ஏழைகளுக்கு அந்த நிலங்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU: "பாரெஸ்டு" நிலங்களுடைய பிரச்னை இதிலே எழவில்லை. "கல்டிவபில் வேஸ்டு லாண்ட்" பிரச்னையிலும் தகராறு இருக்கிறது. "டாங்கு புறம்போக்கு", "பாரெஸ்டு" புறம்போக்கு போக மிச்ச நிலத்தை விநியோகம் செய்வதற்காக கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது.

Sri N. MARUDACHALAM: இந்த தரிசு நிலங்களில் குடிசை கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். அதையும் இப்போது பிரித்துவிடுகிறார்கள். இது மிகவும் கஷ்டமாய் இருப்பதால் இந்த குடிசைகளையாவது பிரிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: குடிசையை பிரிக்கும் விஷயத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

Sri R. SRINIVASA IYER: இந்த கவர்ன்மெண்ட் தரிசு நிலங்களில் மாடுகள் மேய்ப்பதற்கு என்று ஏதாவது நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: மாடுகள் மேய்ப்பதற்கு என்றுதான் "கிரேஸிங் லாண்ட்ஸ்" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு மாட்டுக்கு ஒரு ஏக்கர் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் நிலங்கள் மிக குறைவாக இருப்பதால் அதிகமாக ஒதுக்க முடியவில்லை.

Sri K. VINAYAKAM: What is the policy of the Government regarding the future of these cultivable waste lands? Have the Government got any rational, well-phased programme for utilizing

[22nd July 1957

these agricultural waste lands so that they may not be lying waste in future and the hungry people who want lands may be provided lands for cultivation?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, Sir; there is a well-laid-out plan in the matter of distributing these waste lands. Formerly, these were allotted only by the Collector. In order to implement this plan quickly, we have now authorized the Revenue Divisional Officers and also Tahsildars, in some cases, to allot these lands to the landless. Lands are at present being allotted as quickly as possible.

SRI T. P. ELUMALAI: சில இடங்களில் ஏழை ஜனங்கள் பல வருஷங்களாக புறம்போக்கு நிலங்களில் பயிர் செய்து வருகிறார்கள். அப்படியிருந்தும் அந்த நிலங்களை அவர்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று மனுக்கள் கொடுக்கப்பட்டிருந்தும், ஜாரி செய்து கொடுக்கப் படவில்லை. ஆகையால் இந்த நில்ங்களை ஜாரி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: எந்த இடத்தில் ஜாரி செய்யப்படவில்லை என்று தெரிந்தால் அதைப்பற்றி ஏதாவது விசாரிக்க முடியும். பொதுவாக ஜாரி செய்து கொடுக்கப்பட்டுவருகிறது.

SRI P S SANTHANAM: தலைவர் அவர்களே, சில ஏரி, புறம்போக்கு நிலங்களில், அதாவது நீர்மட்டத்திற்கு மேலுள்ள நிலங்கள் 40, 50 ஏக்கர் என்று இருக்கிற நிலங்களை ஏழை மக்களுக்கு அடமானம் செய்து கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அம்மாதிரி நிலங்கள் ஏரிகளை பாதிக்குமானால் அந்த நிலங்களை அடமானம் செய்து கொடுக்க முடியாது.

### *Weavers*

* 187 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total number of weavers in the State;

(b) how many of them have handlooms; and

(c) how many among them are members of co-operative societies?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) Accurate figures are not available. Up to 31st May 1957, 447,173 handlooms were registered in this State under the Cotton Textiles (Production by Handlooms) Control Order, 1956, issued by the Government of India. Assuming that each handloom is operated by a weaver, the total number of weavers should be 447,173. But members of the family of a weaver assist him in ancillary operations.

Art silk and silk looms have not been included in the above calculation.

(c) 178,013 weavers are members of weavers' co-operative societies in this State.



22nd July 1957]

SRI T. T. DANIEL: The handloom weavers are so poor in our State that they have not got sufficient money even to purchase shares in co-operative societies and as such are not in a position to get into the co-operative societies which are really a boon to the poor weavers. Will the Government go into the question of devising ways and means to aid these poor weavers to take shares in co-operative societies?

THE HON. SRI R. VENKATARAMAN: May I remind the hon. Member that the weavers are given interest-free loans from the Cess Fund to pay the share capital.

SRI A. MARIAPPAN: இந்த நாட்டிலுள்ள எல்லா நெசவாளர்களும் மாகாணத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? பருத்தி நூலைத் தவிர ஆர்ட் சில்க் நூல் கொண்டு நெசவு செய்யும் நெசவாளர்களையும் பதிவு செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ? கூட்டுறவுக்கு வெளியில் இருக்கக்கூடிய நெசவாளர்களை கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN: ஆர்ட் ஸில்க், "ஸில்க் லூம்" இவைகளை ரெஜிஸ்தர் செய்து வைத்திருக்கிற புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. இரண்டாவதாக அவர்களுக்கும் சொஸைட்டியில் சேர்ந்து வசதியளிக்கப்பட்டு வருகிறது என்பது அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

### *Cholera*

* 188 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government are aware of the deaths that occurred in Kanyakumari district in May 1957 on account of cholera; and

(b) if so, the steps taken by the Government to prevent the spread of the disease?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) There was only one case of death of suspected cholera.

(b) Intensive inoculation, isolation and treatment of cases, chlorination of water sources, disinfection of infected houses and materials and wide educative propaganda were the precautionary measures taken in the affected places. The examination of these cases showed that they were all negative to cholera.

### *Land colonies in Bhavani taluk*

* 189 Q.—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of land colonies existing at present in Bhavani taluk, Coimbatore district;

(b) the extent of land brought under cultivation in these colonies; and

(c) the number of ryots living in those colonies and the number of Harijans among them?

[22nd July 1957

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Three.

(*b*) 1,320·40 acres.

(*c*) The total number of ryots living in all the three colonies is 266 and the number of Harijans among them is 174.

SRI P. G. MANICKAM : ஸார், இந்த காலனிகளை கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு சர்க்காரிடம் ஏதாவது உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசமிருக்கிறது.

*Landless poor*

* 190 *Q.*—SRI M. MUNI REDDI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of landless poor that have applied for the assignment of lands in Hosur taluk, Salem district, during the period 1952 to 1956; and

(*b*) the number of persons that were granted lands and the total acreage so granted?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 701.

(*b*) 565 persons and 4,278·25 acres.

SRI M. MUNI REDDI : May I know whether a large number of landless poor people of Krishnagiri taluk have applied for assignment of land in Hosur taluk, and if so, may I know how many have applied?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am not aware of that. The local officers will enquire into the position. There is a very quick drive going on in that taluk for the allotment of lands to the landless poor.

*Landless poor*

* 191 *Q.*—SRI C. MUTHIAH PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have issued any directions to assign poramboke lands to landless poor;

(*b*) whether the Government have received any representations recently from Sirkali public and the Harijans in particular that their request for assignment of poramboke lands particularly non-communal lands and in unobjectionable cases have been usually turned down by the local officials without even considering the merits of the cases;

(*c*) if so, the action taken thereon; and

(*d*) the number of persons evicted for occupying poramboke lands in Sirkali taluk during 1955 and 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Poramboke lands are lands used for communal purposes. The occupation of such lands is always treated as " prima facie " objectionable. However



22nd July 1957]

in cases where the occupation is not objectionable, the land under occupation is transferred to assessed waste and action is taken for its assignment. By the term " poramboke lands ", the hon. Member presumably refers to lands at the disposal of the Government other than poramboke lands, i.e., waste lands (assessed or unassessed). The Government have issued instructions to assign such lands to landless poor, likely to engage themselves in direct cultivation.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

(*d*) There were 20 cases of eviction in 1955 and 38 cases in 1956.

SRI C. MUTHIAH PILLAI : நிலமில்லாத ஏழைகள் இப்போதிருக்கின்ற புறம்போக்கு நிலங்களிலிருந்து அவர்களை கிளப்பாமல் இருந்தால் நல்லது. அந்த புண்ணியத்தையாவது ரெவன்யூ மந்திரி அவர்கள் எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த புண்ணியத்தை எடுத்துக்கொள்கிறேன். இதனால் மற்றவர்களுக்கு பாவம் ஏற்படுமானால் இந்த புண்ணியத்தை செய்ய முடியாது.

*Landless poor*

* 192 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of lands distributed to the landless poor in Tirunelveli district in 1954-55 and 1955-56; and

(*b*) the number of Harijans among them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The extents are as below :—

| | | ACRES. |
|---|---|---|
| 1954 | .. | 0·30 |
| 1955 | .. | [illegible]8·48 |
| 1956 | .. | 39·90 |

(*b*)—

| | |
|---|---|
| 1954 .. | 1 |
| 1955 .. | 1 |
| 1956 .. | 2 |

SRI K. VINAYAKAM : From the figures read out by the Hon. Minister, is it not clear that the Government are very niggardly and very slow in the assignment of lands to the landless Harijans in Tirunelveli district?

THE HON. SRI M. A. MANICKAVELU : The extents read out previously were in thousands. But here it is not so because of the non-availability of land in the particular district. There may be other difficulties also. For example, the land may come under tank poramboke. Therefore, we cannot judge from figures. It all depends upon the situation there.

Sri G. GOMATHI SANKARADIKSHITAR : ஏழை மக்கள் எவ்வளவோ காலமாக புறம்போக்கு நிலங்களுக்கு மனுச்செய்து இருந்தும் அவர்களுக்கு ஜாரி செய்து கொடுக்கப்படாமல இருந்து வருகிறது. இதற்கு காரணம் இடையில் இருக்கிற சில்லறை அதிகாரிகளினுடைய காலதாமதம் என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே இதை ஜாரி செய்து கொடுப்பதற்கு ஜரூராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : ஜரூராக வேலை செய்யவேண்டுமென்று அரசாங்கம் நினைத்து வேலை செய்து வருகிறது. அதன் காரணமாக அதிகமாக ஜாரி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Sri K. B. S. MANI : சபாநாயகர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் இருக்கிற வெட்டப்பட்ட புது ஆற்றுப் பாசனத்தில் கட்டுப்பட்டு இருக்கிற தஞ்சை, அரந்தாங்கி, பட்டுக்கோட்டை, பாபநாசத்தில் ஒரு பகுதி, இந்த தாலுகாக்களில் சர்க்கார் புறம்போக்குகள் கிட்டத்தட்ட 10,000 எக்கர் மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு, விகிதாசாரப்படி மூன்று எக்கருக்குக் குறையாமல் ஒவ்வொருவரும் சாகுபடி செய்து வருகிறார்கள். இப்பொழுது விவசாயிகள் அதை பயன்படுத்திய பிறகு, சர்க்கார் மார்க்கெட் ரேட்டிற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. அந்தத் தொகையை சர்க்கார் 10 வருட வாய்தாவில் வசூல் செய்து கொள்ள அனுமதிக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அங்கத்தினர் அவர்கள் தனி கேள்வி கேட்டால் விடை அளிக்கிறேன்.

Sri K. ANB. ZHAGAN : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்த புள்ளிவிவரங்களிலிருந்து புறம்போக்கு நிலங்களை பயிர்ச்செலவிற்கு அளிக்கிற முறையில் தாமதம் இருக்கிறது என்பதும் அப்படிக் கொடுக்கப்பட்டது பற்றிய புள்ளிவிவரங்களில் ஆதி திராவிட மக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற சிறு அளவில்தான் தரப்பட்டிருக்கிறது என்பதும் தெரிகிறது. பலருக்கும் பொதுவாக தருகிற காரணத்தால் ஆதி திராவிட மக்களின் தீண்டாமையை ஒழிப்பதற்கும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் இந்தத் திட்டத்தை துணையாகப்பயன்படுத்தவும் அரசாங்கம் உடனடியாக திட்டமிட்டு விரைவில் நிறைவேற்ற முற்படுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : நிலம் கொடுத்ததே குறைவு. ஆகவே ஹரிஜனங்களுக்கு கொடுத்ததும் குறைவாயிருக்கிறது. மற்றபடி பொதுவாக ஏழை ஜனங்களுக்கு கொடுப்பதற்கு திட்டம் இருக்கிறது. அதில் பெருவாரியானவர்கள், ஹரிஜனங்கள் ஏழைகளாக இருப்பதால் அதனால் அவர்களுக்கும் அனுகூலம் கிடைக்கும்.

Mr. SPEAKER : Questions are over.

**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 (1) OF THE ASSEMBLY RULES *RE* LOCK-OUT IN THE TAR FACTORY AT TONDIARPET AND THE ARREST OF 160 PICKETEERS.

Mr. SPEAKER : I have received notice from Sri V. K. Kothandaraman that he wants to call the attention of the Hon. Minister for Industries and Labour under rule 40, to a matter of urgent public importance, viz., lockout in the Tar Factory at Tondiarpet and the arrest of 160 picketeers.

The hon. Member will briefly explain the matter. The hon. Member must be brief while making his statement.



Sri V. K. KOTHANDARAMAN : தார் பாக்டரி என்பது தொண்டையார்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கு பக்கத்தில் இருக்கக்கூடியஒரு தொழிற்சாலை. அங்கு, நான்கு பாக்டரிகள் ஒரே அறையில் வைத்து நடத்தப்படுகிறது. ஒன்று, இந்தியன் மெட்டல் அண்ட் மெட்டலார்ஜிகல் கார்ப்பரேஷன், இரண்டு, ஈஸ்ட் இந்தியா இண்டஸ்ட்ரீஸ், மூன்றாவது, ஓரியண்டல் இண்டஸ்ட்ரீஸ், நான்காவது டி. கெ. கோவிந்தராஜுலு செட்டியார் அண்ட் கம்பெனி என்பவைகளை கோவிந்தராஜுலு செட்டியார் என்பவர் நான்கு பெயரில் நான்கு லைசென்ஸ்கள் வாங்கி ஒரே அறையில் வைத்து நடத்துகிறார் என்பது நம் கனம் அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், அதிகாரிகளுக்கும் அது தெரியும். ஆகவே, இப்பொழுது எப்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்டது என்று நாம் பார்ப்போமேயானால் அது ஆச்சரியமாய்தான் இருக்கிறது. இந்த நிலையிலே அங்கு 10 வருஷம், 15 வருஷம், 20 வருஷ காலமாக சுமார் 600 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்கிற தொழிலாளர்களை டெம்பரரி என்று வைத்துக்கொண்டு அதன் பெயரால் அப்போதைக்கப்போது இரண்டு மூன்று மாதங்கள் என்கிற நிலையிலே, அதாவது, அவர்களுக்கு கிடைக்கக்கூடிய, எந்தவித சலுகையும் பெற முடியாத அளவிற்கு அடிக்கடி மூடப்பட்டு வருகிறது. நான்கு, ஐந்து வருஷங்களுக்கு முன்னால் காங்கிரஸ் தலைமையின் கீழ் ஐ.என்.டி.யூ.சி. தொழிற்சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதை உடைப்பதற்குக்கூட இதே போன்று லாக் அவுட் செய்து அதையும் உடைத்து விட்டார்கள். இப்பொழுது எந்தக் கட்சியிலும் சேராத ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பித்து அவர்கள் அவர்களது கோரிக்கைகளைக் கேட்டார்கள் என்ற காரணத்திற்காக வேண்டி இப்பொழுது அந்த பாக்டரி மூடப்பட்டு இருக்கிறது. மூடப்பட்டதோடு மட்டுமல்ல. நியாயமாக அவர்களுக்கு கிடைக்கக் கூடிய கோரிக்கைகளை கேட்டு அமைதியான முறையில் அவர்கள் அவர்களது போராட்டத்தை நடத்துகிறார்கள் என்பதற்காக வேண்டி அவர்கள் மேற்கொண்டு கைது செய்யப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இதை உடனடியாக சர்க்கார் கவனித்து அதைத் தீர்க்க வேண்டும். இல்லை என்று சொன்னால், இதே போன்ற முறையில் தான் தொழிலாளர்களுக்கு மேலும் மேலும் வேலை இல்லாத நிலை ஏற்படும் என்பது மட்டுமல்லாமல் இன்று மினிமம் வேஜஸ் கமிட்டி அமைத்தாலும் சரி அல்லது வேறு எந்த சட்டத்தைக் கொண்டு வந்தாலும் சரி, அந்த சட்டங்களை எல்லாம் உடைப்பதற்கும், தொழிலாளர்கள் எந்தவிதமான சலுகையும் பெறமுடியாத அளவிற்கு காரியங்கள் செய்யவும், இதேபோன்று சட்ட விரோதமான போக்கிலே போகக் கூடிய ஒரு நிலை இருக்குமானால் அது தொழிலாளர்களை துன்புறுத்துவதோடு அல்லாமல் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய இன்கம்டாக்ஸ் வருமான வரி போன்ற வரிகளை கொடுக்காமல் அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே நாலைந்து பாக்டரிகளுக்கு ஒரே நபர் லைசன்ஸ் வாங்கி இதேபோன்று நடத்தினால் அது அவர்களின் நன்மைக்கு வேண்டி உபயோகப்படுத்தக் கூடிய அளவிற்குத்தான் இருக்கும் என்பதை சர்க்கார் இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு உடனடியாக அதை விசாரித்தாக வேண்டும்.

Mr. SPEAKER : அங்கத்தினர் சுருக்கமாக பேச வேண்டும்.

Sri V. K. KOTHANDARAMAN : சர்க்கார் சொல்லியும் கேட்காத முறையில் லாக்அவுட் செய்யப்படக்கூடிய இந்த சந்தர்ப்பத்தில் போலீஸ் உதவி கொண்டோ அல்லது லைசென்ஸை கான்ஸல் செய்வோம் என்று சொல்லியோ எப்படியாவது அதை சரிப்படுத்தியாகவேண்டும். அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டதா என்று கேட்டால் நஷ்டம் கிடையாது. உண்மையில் நல்ல லாபகரமான முறையில்தான் நடந்து கொண்டு வந்திருக்கிறது. ஆகவே தயவு செய்து உடனடியாக கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இதை கவனிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[22nd July 1957

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the East India Industries, Limited (otherwise known as Tar Factory), the Indian Metal and Metallurgical Corporation, the Orient Industries and Messrs. T. N. K. Govindarajalu Chetty are situated in the Tiruvottiyur High Road, Madras. The Metal Industrial and General Workers' Union, Madras, served on the management of the four concerns notice of strike on 5th June 1957 enclosing demands for confirmation of temporary workers fixation of wages, dearness allowance, etc. The managements of the first three companies discharged all the daily rated workmen employed under them on 18th June 1957 stating that they apprehended breach of peace by retaining them. The dispute regarding the discharge of the workers in the Tar Factory and the two other factories was taken up by the Labour Officer, Madras-1 for conciliation. The managements declined to reinstate the workers. It is understood that some of the workers have been arrested by the Police for picketting in front of the factory. The exact number of workmen so arrested and taken into custody is not known.

The Government will examine the conciliation report in the dispute on its receipt from the Commissioner of Labour and take suitable action.

I wish to add that it is totally unnecessary for the workers to court arrest. The Government are already moving in the matter. They will do everything possible to see that the matter is settled.

## III.—PRESENTATION OF PETITION TO THE ASSEMBLY.

MR. SPEAKER : I have received notice from hon. Member Sri S. Pakkirisami Pillai which reads as follows :—

"I request that I may be permitted to submit a petition to the Assembly through you, to-day, on the floor of the House, on behalf of the Tamilnad Socialist Party."

I would like to invite the attention of the hon. Member to rule 217 which says :

"Petitions to the Assembly must—

(*a*) relate to some matter actually under the consideration of the Assembly;

(*b*) be addressed to the members of the Assembly;

(*c*) be dated and signed by the petitioner or petitioners;

(*d*) be in respectful and temperate language; and

(*e*) must not propose expenditure of public moneys or the imposition of any charge on public revenues."

Rules 218 to 220 state as follows :—

"218. No petition addressed to the Assembly shall be presented except by a member of the Assembly.



22nd July 1957] [Mr. Speaker]

219. Every member offering to present a petition to the Assembly shall confine himself to a statement of the parties from whom it comes, of the number of signatures attached to it and of the material allegations contained in it and to the reading of the prayer of the petition.

220. If a petition is in conformity with rule 217, the Secretary shall, if so required by the Speaker, read it to the Assembly or make an abstract of it and read or circulate the abstract to the Assembly. There shall be no debate or speech in the Assembly on any such petition."

I, therefore, under the powers vested in me under rule 220 request the Member to present the petition to me. If I find it in order, I shall ask the Secretary to make an abstract of it and circulate the abstract to the Members of the Assembly. If it contains any matter which does not come under the purview of this House at present, no action will be taken on the petition. I would request the hon. Member to read the prayer of the petition.

SRI S. PAKKIRISAMY PILLAI : கனம் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கம். இந்த விண்ணப்பத்தை கனம் முதன் மந்திரியாரிடம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம். இன்று 10–30 மணிக்கு வரும்படியாகக் கேட்டிருக்கிறார். அவரிடம் நேரடியாகக் கொடுக்கப் போவதால் இப்போது இந்த சபையில் கொடுக்கும் உத்தேசமில்லை. மன்னிக்கவும்.

SRI S. B. ADITYAN : **On a point of order, Sir,** கனம் அங்கத்தினர் அது சபைக்கல்ல என்று சொல்லுகிறார். அந்த விண்ணப்பம் முதன் மந்திரியாருக்கானால் அதை முதன் மந்திரியிடம் கொடுக்க வேண்டுமே யொழிய இந்த சபைக்கு கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : I quite appreciate the point of order. The hon. Member was told by me that if the petition was to the House, he could present it. Now I find that he has gone back on his request and wants to present the petition to the Hon. the Chief Minister. I wonder why he has wasted the time of the House.

We shall now proceed with the next item in the Agenda.

The Hon. Sri C. Subramaniam, Minister for Finance, will present the Statement of Demands for Grants of Excess Expenditure in the second half of the year 1953–54.

## IV.—PRESENTATION OF STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN THE SECOND HALF OF THE YEAR 1953–54.

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, 1953–54-ம் வருஷத்து இரண்டாவதுபகுதியில் ஏற்பட்ட அதிகச்செலவிற்கான மானியக் கோரிக்கையை இந்தச் சபையின் முன் சமர்பிக்க விரும்புகிறேன். இந்த மாதிரிக் கோரிக்கை இந்த சபையின் முன் முதல் தடவையாக சமர்பிக்கப்படுகிறது. இந்த 1953–54-ம் வருஷத்திய செலவிற்கான மானியக் கோரிக்கையை இப்போது சமர்பிக்கவேண்டியதன் அவசியத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளால் விளக்கிக்கூற விரும்புகிறேன். பட்ஜெட் திட்டம் எப்படி சமர்ப்பிக்க வேண்டும், அந்த சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை இந்த சபை அங்கீகாரம் செய்து பிறகு எந்த முறையிலே செலவழிக்கப்பட வேண்டும், அந்த வருஷத்திலேயே ஏதாவது அதிகச் செலவு ஏற்படுமானால் எப்படி சப்ளி

[Sri C. Subramaniam] [22nd July 1957

சமர்பிக்கப்படவேண்டும் என்று அரசியல் சட்டத்தின்
மெண்டரி கிராண்ட் சமர்பிக்கப்படவேண்டும் விவரித்துக் கூறப்பட்
202-வது விதியிலிருந்து 207-வது விதி வரையில் விவரித்துக் கூறப்பட்
டிருக்கிறது. அதிலே ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால் எந்தச்
செலவு இருந்தாலும் இந்தச் சபையின் அங்கீகாரம் பெற்றுத்தான் செலவு
செய்யப்பட்டிருக்கவேண்டும். இப்போது சர்க்காருக்கு வரக்கூடிய வரும்படித்
தொகை யெல்லாம் கன்ஸாலிடேடெட் பண்ட் என்ற தலைப்பின் கீழ் அந்த
நிதியில் வைக்கப்படுகிறது. அந்த நிதியிலிருந்து ஒரு ரூபாய், ஏன் ஒரு
பைஸா, நாம் எடுக்கவேண்டியிருந்தாலும் இந்த சபையின் ஆதரவு
பெற்றுத்தான் எடுக்க வேண்டும். ஆகையால்தான், இப்போது பட்ஜெட்
சமர்ப்பிக்கப்பட்டு இந்த சபையின் அங்கீகாரம் பெற்று, அப்ரோப்ரியேஷன்
பில் பாஸ் செய்யப்பட்டு அந்த அடிப்படையில்தான் கன்ஸாலிடேடெட்
நிதியிலிருந்து பணம் எடுத்து சர்க்கார் செலவு செய்கிறது. எவ்வளவு
திறமையாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டாலும், அந்த மதிப்பீட்டுக்கும்,
ஆகக்கூடிய செலவிற்கும் முழுதும் ஒத்து வருவது கஷ்டம். சில இனங்
களில் மதிப்பீட்டைவிட ஆகக் கூடிய செலவு குறைவாக இருக்கலாம். சில
இனங்களில் மதிப்பீட்டைவிட செலவு அதிகமாகலாம். குறைவு ஏற்பட்டால்
அதைப்பற்றி கவலை இல்லை. ஏனென்றால் சபை அங்கீகாரம் கொடுத்த
தற்கு கம்மி நிதி எடுப்பதற்கு ஆட்சேபனை சொல்ல முடியாது. ஆனால்
அதைவிட அதிகம் எடுப்பது ஆட்சேபமாகும். அதற்கு மறுபடியும் சட்ட
சபையின் அங்கீகாரம் பெற்றாகவேண்டியது அவசியம். ஆகையால் தான்
அதிகச் செலவாகும்போது அந்த வருஷத்திலேயே சப்ளிமெண்டரி கிராண்ட்
என்று கொண்டு வந்து சபையின் அங்கீகாரம் பெற்று ஒரு சட்டமும்,
அதாவது சப்ளிமெண்டரி அப்ரோப்ரியேஷன் ஆக்ட் பாஸ் செய்கிறோம்.
ஆனால் இப்படி உப மானியக் கோரிக்கை வந்த பிற்பாடும் எதிர்பாராத
அளவுக்கு சில செலவு ஏற்படலாம். இந்த இனங்களைப் பற்றி பப்ளிக்
அக்கௌண்ட்ஸ் கமிட்டி பரிசீலனை செய்து, இந்த அரசியலமைப்புச் சட்டம்
வருவதற்கு முன்பு அந்த பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட்
சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீது விவாதம் நடக்கும். ஆனால் இப்போது
அரசியலமைப்புச் சட்டத்தின் 205-வது விதிப் பிரகாரம், பப்ளிக் அக்கௌ
ண்ட்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடந்தால் போதா
தாது. அதிகச் செலவு நடந்தால் இந்த சபையின் அங்கீகாரத்தை இன்
னொரு சட்டத்தின் மூலமாகப் பெற்றாக வேண்டும் என்று 205-வது விதி
யில் கண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் இப்போது 1953–54-ம்
வருஷத்து இரண்டாவது பகுதியில் நடந்த செலவிற்கான மானியக்
கோரிக்கையை இந்த சபையின் முன் கொண்டுவந்திருக்கிறேன். கனம்
அங்கத்தினர்களுக்கெல்லாம் தெரிந்திருக்கலாம், 1953-ம் ஞு அக்டோபர்
மீ 1உ ஆந்திரப் பிரிவினை ஏற்பட்டது. பிரிவினை ஏற்படுவதை அனுசரித்து
1953-ம் வருஷம் செப்டம்பர் 30-ம் தேதி வரையில் முடிவான பட்ஜெட்டை
பாஸ் செய்யாமல் ஆறு மாதத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று கணக்
கிட்டு, கணக்களவிலே சபையின் முன் வோட் ஆன் அக்கௌண்ட் என்ற
முறையில் கொண்டு வந்த அங்கீகாரம் பெறப்பட்டது. செய்த செலவை
யெல்லாம் ஆந்திரா ஸ்டேட் ஆக்ட், 1953-ல் பார்லிமெண்டில் செய்யப்
பட்டு அதிகச் செலவாக இருந்ததை யெல்லாம் அந்த ஆக்ட் பிரகாரம்
ஒழுங்கு பெறப்பட்டது. ஆகையால் அந்த முதல் பகுதியில் செலவானதை
இந்த சபையின் முன் வைக்க வேண்டியதில்லை. இப்போது சபையின்
முன் இரண்டாவது பகுதி 1953-ம்ஞு அக்டோபர் மீ 1உக்கு அடுத்த ஆறு
மாதத்திற்கு இங்கே சபையின் முன் வைக்க வேண்டியதாயிருக்கிறது.
அதோடு 1953–54 பிற்பகுதியில் அசாதாரண சூழ்நிலை நிலவியதை
அங்கத்தினர்கள் உணரவேண்டும். பிரிவினைக்குப் பிற்பாடு பலசெலவினங்
கள் ஏற்பட்டதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இதை
யெல்லாம் 1956–57 பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி பரிசீலனை
செய்து ரிப்போர்ட் தயார் செய்யப்பட்டு இந்த சபையின் முன் வைக்கப்பட்
டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் அதிகச் செலவு மானியக்
கோரிக்கை இந்த சபையின் முன்னால் கொண்டு வரப்படுகிறது. இந்த
பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட் 1956 அக்டோபரில் சமர்ப்



22nd July 1957] [Sri C. Subramaniam]

பித்தது. அப்போது பொதுத் தேர்தல் வருகிற காரணத்தால் அப்போது எடுத்துக் கொள்ளவில்லை. இப்போது இந்தச் சபையின் முன் கோரிக்கை[a] வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கான விவாதத்திற்கு நாளும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவாதம் நடந்து அப்ரோப்ரியேஷன் பாஸ் செய்யவேண்டும். இந்த அதிகச் செலவு மானியக் கோரிக்கையை இந்த சபையின் முன் சமர்ப்பிக்கிறேன்.

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957–58—*cont.*

### DEMAND XXVI—CIVIL WORKS—GRANTS-IN-AID.

MR. SPEAKER: We shall now proceed with Demands for grants. Civil works—Grants-in-Aid.

*அடுத்தபடியாக 26-வது மானியம், ஸிவில் வொர்க்ஸ்—கிராண்ட்ஸ்—இன்—எய்ட்ன் கீழ் அரசாங்கத்திற்கு 69,74,800 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் பிரேரேபிப்பார்கள்.*

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I beg to move—

"That the Government be granted a sum not exceeding Rs. 69,74,800 under Demand XXVI—Civil Works—Grants-in-Aid."

In moving the Demand, Sir, I wish to say a few words explaining the policy followed by the Government in making grants to local bodies towards construction and improvement of roads and bridges in their charge so that hon. Members may offer their useful suggestions.

Prior to 1st April 1946 all roads except a few ghat roads, canal bank and tank bund roads which were in charge of the Public Works Department of the Government, were under the control of local bodies. The Government were paying annually to the local bodies grants towards maintenance of important roads which were then classified as Trunk roads, important marketing and second class roads besides the usual grants payable for new road and bridge works of a capital nature.

(i) National Highways.
(ii) State Highways.
(iii) Major District Roads.
(iv) Other District Roads and
(v) Village Roads.

With the formation of a separate Highways Department from 1st April 1946 the Government decided as a matter of policy to take over immediately for maintenance all National Highways, State Highways and a major portion of the Major District Roads outside Madras city and to stop the payment of grant to local bodies other

[a]Printed as Appendix II on pages 194–197 infra.

[Srimathi Lourdhammal Simon] [22nd July 1957

than Corporation of Madras for maintenance of roads. The Corporation of Madras is being given a grant of Rs. 32,000 for the maintenance of a portion of National Highways (Poonamallee High Road and Mount Road) within city limits and Rs. 5,11,000 for maintenance of other roads.

The Government have decided to take over the remaining major district roads under the control of district boards which are about 2,500 miles during the Second Five-Year Plan period. The demand provides payment of a total grant of Rs. 7,55,000 payable to the Corporation of Madras towards the construction of the overbridges on the MacNichol's road, Tiruvottiyur High Road and Light House Road and for widening the Harris Bridge, the Basin Bridge, the Wallajah Bridge and the Munroe Bridge over the Cooum and Buckingham Canals. The City Improvement Trust will be given a grant of Rs. 5,00,000 for housing and slum clearance schemes.

It has been the policy of the Government to pay grants to local bodies for provision of dustless surface to roads in built-up areas in order to avoid dust nuisance and in the interest of health of the people. The demand takes into account a provision of Rs. 10,53,000 for this purpose. A provision of Rs. 2,82,800 has also been made for giving grants to local bodies for expenditure on repairs to roads, bridges, buildings, etc., damaged by the cyclone of 1955.

Grants have been proposed separately to the district boards for the construction of new roads and bridges and the improvement of existing roads by way of widening, metalling and providing improved surface with tar or with cement. The works relating to these items have been included in the Second Five-Year Plan and total provision for the District Board Schemes under the Second Five-Year Plan is Rs. 284·39 lakhs. The total to be distributed to the district boards in the budget year 1957–58 is Rs. 30·71 lakhs. Besides this amount it is proposed to distribute to Panchayats a sum of Rs. 3·60 lakhs towards the improvement of roads in Panchayat areas. Both these grants aggregating to Rs. 34·31 lakhs are included in "81. Capital Account" in "Demand XL". Besides these grants payable under separate head a sum of Rs. 88,000 is included in the present Demand which is to be distributed to District Boards for works included in the programme of improvement of Village Communications outside the Five-Year Plan.

Apart from the above items, this Demand includes a grant of Rs. 33,14,700 payable out of the allocation to this State from the Central Road Fund which has been constituted by the Central Government out of the proceeds of an extra customs and excise duty on motor spirit.

With your permission, Sir, I would like to take this opportunity to make a statement regarding the future of District Boards.



22nd July 1957] [Srimathi Lourdhammal Simon]

As hon. Members are aware, a White Paper on Local Administration was placed before the House by the former Minister in charge of Local Administration, outlining the provisional views then held by Government on the whole problem of the reform of the set-up of Local Administration in this State. That White Paper could not be discussed by the Legislature before it was dissolved. The most important among the proposals outlined at that time were the active development of Village Panchayat Oganization, so as to secure the constitution of a Panchayat for every village before the end of the Second Five-Year Plan period and the creation of Statutory Joint Committees of those Panchayats under the name of PANCHAYAT UNIONS. The intention was that these Panchayat Unions should take over all, or nearly all, of the functions at present performed by District Boards. The proposals of Government in respect of the future District Boards were correlated to the proposals regarding Village Panchayats. A transitional period of five years was envisaged during which there would be progressive devolution of functions from the District Boards to Panchayat Unions. The question whether District Boards should be retained or abolished with or without replacement after the transitional period was proposed to be left for decision at the end of that transitional period.

Recently Government have reconsidered this question. They have come to the conclusion that there are serious disadvantages in leaving the future of the District Boards in a state of uncertainty for such a long period. A decision regarding the permanent set-up of Local Administration throughout the State including the important question of whether District Boards should be continued or not will have to be taken without undue delay, in the course of the next year.

It is in the light of this conclusion that Government examined the question of holding elections for the District Boards. The term of Office of the Members of all the District Boards expires on the 1st November next. As it is likely, that, sometime next year, District Boards will have to be abolished altogether or reconstituted in a manner different from that at present in force, it is obvious that the time, labour and expenditure of public funds involved in holding elections during the next few months will not be justified.

Government accordingly propose to introduce a Bill at the next session of the Legislature, in order to authorize postponement of the elections which have now fallen due.

At the same time, Government will also place before the Legislature a White Paper embodying their revised provisional proposals about the reform of the entire set-up of Local Administration of this State including the future of the District Boards. The whole subject will thus be brought up for detailed discussion in the Legislature.

[Srimathi Lourdhammal Simon] [22nd July 1957

Final decisions of Government regarding the future of District Boards will be taken thereafter and embodied in legislation. It is hoped that the administrative preparations necessary for giving effect to the decisions will be carried out in time for the new legislation being brought into effect before the end of next year.

10-20 a.m. MR. SPEAKER: Motion moved :—

" That the Government be granted a sum not exceeding Rs. 69,74,800 under Demand XXVI—Civil Works—Grants-in-Aid."

கனம். மந்திரி அவர்கள் XXVI டிமாண்ட் பிரகாரம் அரசாங்கத்திற்கு 69 லட்சத்து 74 ஆயிரத்து எட்டு நூறு ரூபாய் கொடுக்கவேண்டும் என்று பிரேரணையின் மூலம் கேட்டிருக்கிறார்கள்.

நான் எதிர்கட்சியில் யார் வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறார்கள் என்று கேட்டேன். அதற்கு ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை அவர்கள் தன்னுடைய பிரேரணையை பிரேரேபிக்கிறேன் என்று சொன்னார். இப்பொழுது கனம் அங்கத்தினர் ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை அவர்கள் தன்னுடைய பிரேரணையை பிரேரேபித்து பேசலாம்.

SRI P. S. CHINNADURAI: கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய பெயரால் நான் நோட்டீஸ் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் இந்த சபையின் முன்பாக பிரேரேபிக்கிறேன்.

Sir, I move—

" That the allotment of Rs. 69,74,800 under Demand XXVI Civil Works—Grants-in-Aid be reduced by Rs. 100."

MR. SPEAKER: Cut motion moved :—

" That the allotment of Rs. 69,74,800 under Demand XXVI —Civil Works—Grants-in-Aid be reduced by Rs. 100."

The Demand and the cut motion are now before the House for discussion. Sri P. S. Chinnadurai will now speak.

SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, பண்டைக்கால இந்தியாவில் கிராம பஞ்சாயத்துக்கள் மிக முக்யமான ஸ்தானத்தை வகித்து இருக்கின்றன என்று நாம் அறிகிறோம். கிராம மக்களுடைய கட்டுப்பாடான வாழ்க்கையிலே அதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டு முன்னேறும் பாதையிலே கிராம பஞ்சாயத்துக்கள் அரும் பணி ஆற்றி வந்து இருக்கின்றன என்பதையும் அறிகிறோம். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டிலே அடி எடுத்து வைத்த உடனே, அதிகாரத்தை ஒரே இடத்தில், மத்தியில் குவித்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு பஞ்சாயத்துக்களுக்கு இருந்த செல்வாக்கை குறைத்தாலொழிய தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள முடியாது என்ற எண்ணத்தோடு பஞ்சாயத்தை சீர்குலையச் செய்தார்கள். அதன் பிறகு 1857-ம் ஆண்டில் நடைபெற்ற சிப்பாய் புரட்சிக்கு பின்னால் இந்த நாட்டிலே ஓரளவுக்கு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி அந்த பஞ்சாயத்துக்கள் மூலமாக ஜனங்களுக்கு சிறிது அதிகாரங்களை வழங்கினால்தான் கிராம மக்களின் ஆதரவை பெறமுடியும் என்றும் எல்லா இடங்களிலும் அவைகளின் நிர்வாகத்தை திறம்பட நடத்த உதவியாய் இருக்குமென்றும் நினைத்து பஞ்சாயத்துக்களை ஏற்படுத்த நினைத்தார்கள் என்று சர்க்கார் அறிக்கைகள் கூறுகின்றன. இவ்வாறு ஆலோசித்து, முதன் முதலாக ரிப்பன் பிரபு காலத்தில், 1884-ல் மதராஸ் லோகல் போர்டு ஆக்ட் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த ஆண்டிலிருந்து 1950 வரையில் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்திற்கு வேண்டியும், கிராம பஞ்சாயத்துக்களை



22nd July 1957] [Sri P. S. Chinnadurai]

ஏற்படுத்துவதற்காகவும் பலவிதமான சட்டங்களை அந்த அந்த காலத்திலே அமுலாக்கப்பட்டு வந்து இருக்கின்றன. பஞ்சாயத்துகள் நிர்மாணிப்பதற்கான சட்டங்கள் அன்னிய ஏகாதிபத்திய காலத்திலேயே சிறுகச்சிறுக இடம் பெற்றது. ஆனால் எந்த நோக்கத்தோடு ஆரம்பத்தில் பஞ்சாயத்துக்கள் தங்கள் செல்வாக்கை இழக்கும்படி ஏற்பட்டதோ, அந்த நிலைமை இன்னும் பூர்ணமாக மாறுதல் அடையவில்லை. 1950-ல் நிறைவேற்றப்பட்டு இருக்கும் சென்னை ராஜ்ய பஞ்சாயத்து ஆக்டு-க்கு பிறகு கூட இன்னும் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1955-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் எந்த நிலையிலே இந்த ராஜ்யத்தில் இருந்தன என்று அரசாங்க புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அதன் பிரகாரம் பார்த்தால் 15,000,000 பேர்கள் இருக்கும் பிரதேசங்களுக்கு பஞ்சாயத்துக்கள் நிர்மாணிக்கப்பட்டு இருப்பதாயும், 11,700,000 பேர்கள் இருக்கும் பிரதேசங்களுக்கு—மலபார், தென் கன்னடம் நீங்கலாக—இன்னும் பஞ்சாயத்துக்கள் வர இருக்கின்றன என்றும் தெரிகிறது. 1955 ஜனவரி மாதம் முதல் தேதிக்குப் பிறகு இந்த இரண்டு ஆண்டு காலத்திலே எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்று அறிய ஆதாரங்கள் இல்லை. ஆனால், இன்னும் பெரும்பாலான பிரதேசம், இன்னும் பல லக்ஷக்கணக்கான மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் பஞ்சாயத்துக்கள் ஆரம்பிக்கப்படவேண்டிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1950-ல் நிறைவேற்றப்பட்ட பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ் 500 பேர்களுக்கு மேல் வசிக்கும் கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் நிறுவவேண்டுமென்று கூறுகிறது. ஆனால் அவ்வாறு பஞ்சாயத்துக்களை அமைக்க நாம் என்ன ஏற்பாடுகள் செய்து இருக்கிறோம்? ஏழு ஆண்டுகள் ஆகியும் சட்டத்தின் குறிக்கோளை சரியானபடி நிறைவேற்றவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பஞ்சாயத்துக்களை நிறுவுவதில் தடைகள் இருந்தால், அவைகளை நீக்க சட்டத்தில் அதிகாரம் இருக்கிறது. இவைகளை வைத்துக் கொண்டு, சுதந்திரம் அடைந்த பிறகும் கூட, இம்மாதிரி சட்டங்களை அமலாக்க முடியவில்லை என்றால் நாம் யாரையும் குறைகூற முடியாது. திட்டத்தை நடத்தி வருபவர்கள் ஏழு ஆண்டுகளாக, சட்டத்தின் குறிக்கோளை சரியானபடி நிறைவேற்றிவைக்க தவறி விட்டார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஐந்நூறு பேருக்கு மேல் இருக்கும் பிரதேசங்களில் பஞ்சாயத்துக்கள் அமைக்க வேண்டுமென்று இருந்தும், 15,000 பேருக்கு மேல் இருக்கும் பிரதேசங்களில் கூட இன்னும் பஞ்சாயத்துக்கள் ஆரம்பிக்கப்படாத பரிதாபகரமான நிலைமையை நாம் இப்போதும் பார்க்கிறோம்.

இந்த விஷயத்தில் நான் ஒரு உதாரணம் காட்ட முடியும். பல்லடம் தொகுதியிலுள்ள மதுக்கரை என்பது ஒரு முக்கியமான கிராமம். அங்கு 15,000 பேருக்கு மேல் இருக்கிறார்கள். அங்கு இருக்கும் சிமெண்ட் பாக்டரி மிக பிரசித்தமானது. அப்படிப்பட்ட பகுதியில், 15,000 பேர்களுக்குமேல் அங்கு இருந்தும், எந்தவிதமான முன்னேற்றமும், வசதியும் இல்லாமல், பஞ்சாயத்து அமைக்கப்படாமல் இருக்கிறது. அங்கு 1954-லிலேயே தேர்தல் நடைபெற இருந்தது. ஆனால் தேர்தல், தேர்தல் நடக்க இருந்த தேதி அன்று தந்தி மூலம் நிறுத்திவைக்கப்பட்டது. அதற்கு அடிப்படையான காரணம் ஏ.சி.சி. கம்பெனி முதலாளியின் நேரடியான தலையீடு என்று தெரிகிறது. அண்மையில் இதைப்பற்றி கூறும்போது, நிதி அமைச்சர் சொன்னார்கள், இது விஷயமாக சில தகராறுகள் இருக்கின்றன என்று. நான் கேட்கிறேன், தகராறுகள் என்ன இருக்க முடியும்? ஐந்நூறு பேருக்கு மேற்பட்ட பகுதிகளில் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தலாம் என்று சட்டம் இருக்கிறது. இதில் யார் தகராறு செய்ய வருகிறார்கள்.

கிராமத்து மக்கள் தகராறு செய்யமாட்டார்கள். அங்கே இருக்கும் சிமெண்ட் பாக்டரி முதலாளிகள் சம்பந்தப்பட்ட கிராமம் பஞ்சாயத்திலே சேரக்கூடாதென்றும் பஞ்சாயத்து இல்லாமலேயே தொழிலாளிகளுக்கு பல்விதமான வசதிகள் செய்கிறோம் என்றும் சொன்னார்கள். இதில் அரசியல் காரணம் கூட இருக்கும் என்று நான் நினைக்கிறேன். முதலாளிகள் என்ற வகையிலே அவர்கள் வேறுவிதமான அரசியல் கருத்து கொண்டவர்கள். அப்படி ஒரு வகை கருத்து கொண்டவர்கள் வேறு வகை கருத்துக் கொண்டவர்கள் இதில் இடம் பெறகூடாதென்ற நோக்கத்தில்

பஞ்சாயத்தை நிறுவுவதில் தடைசெய்திருக்கலாம், எ.சி.சி. சிமண்ட் கம்பெனி நிர்வாகம். இந்த ராஜ்ய சர்க்கார் எப்படி அதற்கு இரையாகிக் கொண்டிருக்கிறது என்று அறிய முடியவில்லை. ஐந்நூறுக்கு மேற்பட்ட பகுதியில் பஞ்சாயத்து ஏற்படுத்தலாம் என்று சட்டம் இருக்கும்போது, எவ்வாறு இந்த அரசாங்கம் அந்த முதலாளிகளை தடையாக இருக்க இடம் கொடுக்கலாம் என்று அறிய விரும்புகிறேன். தொழிற்சாலை இருக்கும் பகுதியில் அதிக வரி செலுத்த வேண்டியிருக்கும் என்று தெரிவித்திருப்பதாக சொல்கிறார்கள். மிக பெரிய கவர்னர் மாளிகை இண்டியிலே இருக்கிறது. அதற்கு வரிக்காக 45,000 ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அவர்களே, கார்ப்பரேஷனுக்கு கொடுக்கும் வரி நியாயமென்றால் முதலாளிகள் பஞ்சாயத்துக்குக் கொடுக்க வேண்டிய வரியிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியுமா ? பல இடங்களிலே, முனிசிபாலிடிகள், லோகல் போர்டுகள் இருக்கின்றன. அங்கு தொழிலாளர் காலனிகள் இருக்கின்றன. அவைகளுக்கு இந்தமாதிரியான ஸ்தாபனங்கள் தனியாக வரி செலுத்துகின்றன. ஆகவே அரசியல் நோக்கத்தோடும், வரி கொடுக்காமல் இருக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடும், சிமண்ட் கம்பெனி முதலாளிகள் போட்ட தடைக்கு, ராஜ்ய சர்க்கார் இரையாகிவிடுவது பரிதாபமாக இருக்கிறது. சட்டங்கள் எவ்வளவு இயற்றினாலும், அவைகளை அமல் நடத்துவதிலே இவ்வளவு நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. இவ்வளவு நிர்பந்தங்களையும் முதலாளிகள் கொடுக்க முடிகிறது. இதிலிருந்து சட்டங்கள் இருந்தும் முதலாளிகளின் கை அரசாங்கத்தின் மீது எந்த அளவுக்கு ஒரு பலமான பிடிப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது. ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் ஒரு நல்ல கொள்கை முதலாளிகளால் இந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பது மிகவும் பரிதாபகரமானது என்று நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரியான ஒரு நிலைமை ஏற்பட்டது மிகவும் வருந்துவதற்குரியது. ஆகவே, இன்னும் எந்த எந்த கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படாமல் இருக்கின்றனவோ, அவைகளில் எல்லாம் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட இந்த ராஜீய சர்க்கார் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன். இதிலே முதலாளிகளின் கை குறுக்கிடுவதற்கு ஒரு பொழுதும் அரசாங்கம் இடமளிக்கக்கூடாது. இவ்வாறு இடமளிப்பதானது மிகக் கெட்ட பெயரை அரசாங்கத்திற்கு உண்டாக்கிவிடும் என்று நான் இங்கு சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகிறேன். இம்மாதிரியாக முதலாளிகளின் கை ஓங்குவதற்கு நாம் இடமளிப்போமானால், நம்முடைய கொள்கையிலே மிகவும் தீர்க்க முடியாத நோய் பிடித்துவிடும் என்று நான் எச்சரிக்க ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்துக்களிலே நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். அவ்வாறு நியமிக்கப்படுகிற நிர்வாக அதிகாரிகள் பஞ்சாயத்து போர்டுக்கு உட்பட்டவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என்ற நிலைமையை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தவில்லையானால், பஞ்சாயத்தின் நிர்வாக காரியங்களான ரோடு போடுவது, விளக்கு அமைப்பது போன்ற வேலைகளுக்குப் பலவிதமான குந்தகங்கள் ஏற்பட இடம் உண்டாகும். ஜனநாயக ரீதியில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த பஞ்சாயத்து போர்டுகள் சட்டப்படி தங்கள் வேலைகளை அமுல் நடத்துவதிலே பலவிதமான தடைகள் இந்த அதிகாரிகளால் ஏற்படுகின்றன என்பது கண்கூடு. ஆங்காங்கு இருக்கும் முனிசிபாலிடிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனர்களுடைய அதிகாரத்தையே குறைக்க வேண்டுமென்று பல முனிசிபாலிடிகள் கேட்டுக் கொண்டிருப்பதை இந்த நேரத்தில் நாம் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும். ஆகவே, பஞ்சாயத்து போர்டுகளுக்கு நியமிக்கப்படும் நிர்வாக அதிகாரிகள், பஞ்சாயத்து போர்டுகளுக்கு பூரணமாக உட்பட்டு, தனிப்பட்ட விசேஷமான அதிகாரம் இல்லாமல், இருக்கும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன்.

**Mr. SPEAKER** : இந்த மான்யத்தின் மீது விவாதம் நடத்துவதற்கு இரண்டு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கனம் மந்திரி அவர்கள் பேசுவதற்கு எவ்வளவு நேரம் வேண்டும் என்று சொல்ல முடியுமா ?





**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON** : பதினைந்து நிமிஷங்கள் போதும்.

**Mr. SPEAKER** : இன்றைய தினம் உள்ள நான்கு மணி நேரத்தில், இரண்டு மணி நேரம் 26-வது மான்யக் கோரிக்கைக்கும், ஒரு மணி நேரம் "கூட்டுறவு" மான்யத்திற்கும், கடைசி ஒரு மணி நேரம் "**Labour including Factories**" மான்யத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மான்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மூன்று மணி நேரத்தில், இன்று ஒரு மணி நேரமும், நாளை இரண்டு மணி நேரமும் விவாதம் நடக்கும்.

*** Sri W. P. A. R. CHANDRASEKHARAN** : கனம் சபா நாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யக் கோரிக்கையை நான் முதன் முதலாக ஆதரித்துச் சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். அன்னிய ஆதிக்கம், அதற்கு அடுத்து சமஸ்தானங்கள், அதற்கு அடுத்து முதலாளித்துவம், எந்த வகையில் இருந்தாலும் சரி, அவைகளை ஒழித்துக் கட்டி, அவர்களை மக்களோடு இணைந்து வாழ்வதற்கு மகாத்மா காந்தியடிகள் வகுத்த வழியில் அந்தப் பரம்பரையில் இயங்கும் அரசாங்கம், எந்த வகையிலும் கெட்ட பெயர் ஏற்படும் நிலையில் தன்னை வைத்துக்கொள்ளாது என்று சபாநாயகர் அவர்கள் மூலமாக சபைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன். **10-42 a.m.**

மேலும், நாம் சுதந்திரம் அடைந்தபின் எவ்வளவோ வேலைகள் "ஸிவில் ஒர்க்ஸ்" என்ற தலைப்பின்கீழ் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் கிராமாந்திரப் பகுதிகளுக்கு ஏன் அவைகள் செல்ல முடியவில்லையென்றால், முதலாவதாக எங்கெங்கே போக்குவரத்துச் சாதனங்கள் இருந்தனவோ அங்கிருந்து தான் அவைகள் செல்ல வேண்டியிருப்பதால் கிராமாந்திரப் பகுதிகள் பிற்போக்கான நிலையில் இருக்கலாம்.

"ஸிவில் ஒர்க்ஸ்" என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும், நிறையப் பணம் தேவைப்படுவதாகவும் இருப்பதால், இந்திய சர்க்காரிடம் நாம் எவ்வளவு மான்யம் பெறமுடியுமோ அவ்வளவு மான்யத்தையும் பெறுவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் நான் கூறிக்கொள்கின்றேன்.

**Tourist importance** உள்ளதும், **summer resort** ஆகவும் இருக்கும்படியான உதகமண்டலம், கொடைக்கானல், குற்றாலம் முதலிய இடங்களுக்கு ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும், **ghat road** என்று சொல்லப்படும் சாலைகளையும் மத்திய சர்க்காரின் முழு மான்யத்துடன் நடத்தி வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து, முழு மான்யத்தையும் அடைய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அது மாத்திரம் அல்ல. ஆதி வாசிகள் மலைப் பகுதிகளில் வாழ்ந்தால், "**Economic Importance and Depressed areas**" என்ற தலைப்பின்கீழ் இந்திய சர்க்காரிடமிருந்தும் மான்யம் பெறுவதற்கு அதில் ஏது இருக்கிறதென்றும், இதர மலைப் பிரதேசங்களில் காபி, ஏலம், **Lemon grass oil** இன்னும் இதுபோன்ற அன்னியச் செலாவணி தேசத்திற்கு கிடைக்கக்கூடிய பொருள்களை விருத்தி செய்வதன் நிமித்தம் **Inter-State importance** உள்ளவைகளாக இருப்பதால், மலைப் பிரதேசங்களிலுள்ள எல்லா போக்குவரத்துச் சாதனங்களையும் இந்திய சர்க்காரின் முழு மான்யத்தின் மூலம் அவைகளை நடத்தித் தருமாறு மந்திரி அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அது தவிர, இன்னும் **Coastal erosion—Embankments which do not come under the title of "Irrigation"** என்று இருக்கும் வேலைகளையும் இந்திய சர்க்காரின் மான்யம் பெற்று நடத்தலாம். மேலும், நாண்டிக்குடி மலை ரோடு என்று சொல்லப்படும் கீழ் பழனிப் பகுதிகளுக்கு உதவும் ரோட்டை ஏற்படுத்தி பஸ், லாரி போக்குவரத்து உண்டாக்கியதற்காக சர்க்காரை அப்பிரதேச வாசிகளின் சார்பாக நான் பாராட்டுகின்றேன்.

[Sri W. P. A. R. Chandrasekharan] [22nd July 1957

அது மட்டும் அல்ல. அந்த இடத்தில் இன்னும் உள் மலைப் பிராந்தியத்தில் ரோடுகள் அமைந்தால், மேலும் அங்கே இருக்கும் டகுதிகளில் வாழும் விவசாயிகளுக்கும் ஆதி வாசிகளுக்கும் எவ்வளவோ உபயோகரமாக இருக்கும் என்பதாலும் அந்த விளைபொருள்கள் அதிகம் ஆவதன் மூலம் சர்க்காருக்கு விவசாய வருமான வரி அதிகமாகக் கிடைக்க ஏது இருப்பதாலும் அதற்கு முக்கிய கவனம் கொடுத்து, அதை ஏற்படுத்திக் கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதையும் தவிர, ரோடு அல்லது கட்டிடங்கள், இன்னும் மற்ற சர்க்காருடைய நிர்மாண வேலைகளை கண்டிராக்ட் முறை மூலமாக இப்பொழுது நடத்தி வருவதால், சம்பந்தப்பட்ட வேலையில், எந்த கண்டிராக்டர், எவ்வளவு ரூபாய், எந்தத் தலைப்பின்கீழ், எப்பொழுது முடியும், தேதி முதலிய விவரங்களை பொதுஜனங்களின் நன்மைக்காக தமிழில் போர்டு பலகைகளில் அங்கங்கே குறிப்பிட்டால் அதை வைத்து கண்டிராக்டர்களுக்கும் நன்மை இருக்கும். அரசாங்கத்தாருக்கும் நன்மை இருக்கும். பொதுஜனங்களுக்கும் நன்மை இருக்கும். ஒரு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்றால், அது முடிவாக வேண்டிய தேதியை அதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும். அப்பொழுது அவர்கள் சமாதானம் அடைவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. அதே மாதிரி முடிவாக வேண்டிய தேதியை விட்டு கண்டிராக்டர் தள்ளிப் போவதற்கு ஏது ஏற்படாமலிருப்பதற்குத் தோதாக இருக்கும். ஆகவே, இம்மாதிரி போர்டு பலகைகளில் அந்த விளக்கத்தை அங்கே எழுதிவைக்க வேண்டுமென்றும் சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும், மார்ச்சு மாதம் கடைசியில் வந்தவுடன் கண்டிராக்டர்களின் தயவில் இன்ஜினீர்கள் இயங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஏனென்றால் அந்த வேலைக்கென ஒதுக்கப்பட்ட சர்க்காருடைய மான்யம் பூராவும் செலவானால்தான் இன்ஜினீருக்குச் சரியான பெயர் இருக்கும். ஆகவே, மார்ச் மாதக் கடைசியில் போய் இன்ஜினீர்கள் கண்டிராக்டர்களுடைய தயவை எதிர்பார்க்கும் நிலை ஏற்படுகிறது. இந்த நிலை ஏற்படாமலிருக்க வேண்டுமானால், ஒரு வருஷத்திற்கு இவ்வளவு ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்றால் வருஷம் பூராவும் விகிதாசாரப்படி செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணித்து, அதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தாலொழிய தாமதம் ஏற்படாமலிருப்பதற்கு வேண்டிய எல்லா வகைகளையும் செய்ய வேண்டுமென்று சர்க்காருக்கு நான் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும், **Avenue trees**—சாலைகளின் இரு புறங்களிலும் உள்ள நிழல் மரங்கள்—மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. அவைகளை காட்டிலாகா மூலமாக **Forest Rules and Regulations**-படி கண்காணிக்க முடியும். **Watchman and gang coolies** இருந்தால், அவர்களைக் கவனித்துக்கொள்வதற்கு பொறுப்பாக மேல் அதிகாரிகளை நியமித்தால் சாலை மரங்கள் கட்டாயம் நல்ல நிலையில் இருக்கும். அதன் மூலமாக சாலைகளும் நல்ல நிலையில் இருக்கும். இன்னும் சிறிது அதிகமான வசதியும் செய்யலாம். சாலைகளில், சர்க்காரின் செலவிலேயே, ஆங்காங்கே போரிங் கிணறுகள் மூலம் தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்யலாம். இதைச் செய்தால் தண்ணீர் கொண்டுவருவதற்காக கண்டிராக்டர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை குறையும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். துஷ்பிரயோகமோ, துர்வினியோகமோ ஏற்பட்டுவிடுமோ என்று நினைத்து இந்தக் காரியத்தைச் செய்யாமலிருந்துவிடக் கூடாது. இந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அது மிகவும் சாதாரண விஷயமாகத் தோன்றலாம்:- ஆனால் உண்மையில் அது முக்கியமானது. நமது சாலைகளில், இப்போது, நெல் முதலிய தானியங்கள் காய்வதற்காகப் போடப்படுகின்றன. இந்த நிலையில், அங்கெல்லாம் பஸ்களோ மற்ற வண்டிகளோ போவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த விஷயம் ' சிவில் வொர்க்ஸ் ' இன் கீழ் வருகிறதா, அல்லது வேறு எந்த இலாகாவின் கீழாவது வருகிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அந்த



22nd July 1957] [Sri W. P. A. R. Chandrasekharan]

அந்த ஊர்களில் எல்லா வயல்கள் புஞ்சை இருக்கும் இடங்களில் தானியங்களைக் காயப்போடுவதற்குப் பொதுக் களங்களை அமைத்துக் கொடுத்தால், பொது ஜனங்கள் தானியங்களை காயப்போடுவதற்கு அவைகளை உபயோகித்துக் கொள்வார்கள் ; சாலைகளை உபயோகப்படுத்தமாட்டார்கள் ; வண்டிகளின் போக்கு வரவுக்கு இடைஞ்சல்கள் ஏற்படாது. இந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், லாரிகள் போக்குவரத்தினால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இரவு 12 மணிக்கு மேல் சாலைகளில் லாரிகள் செல்லக்கூடாது என்று உத்தரவு போட வேண்டும் ; அல்லது குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் கார் போக முடியாதபடி அதிலுள்ள ' ஆக்ஸலரேட்டர் ' ஸீல் செய்யப்பட வேண்டும். இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியத்தை முழுமனதுடன் ஆதரித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri C. R. RAMASWAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், கார்ப்பொரேஷனுக்கு அரசாங்கத்தார் அதிகம் உதவியளிக்கவில்லை என்றுதான் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரில் மூன்று ஓவர் பிரிட்ஜுகளைக் கட்டுவதற்காகவும் மற்ற பல வேலைகளுக்காகவும் கார்ப்பொரேஷனுக்கு ரூ. 7,55,000 கிராண்டாகக் கொடுக்கப்பட்டிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் முதன் முதலில் சொன்னார்கள். ஓவர்பிரிட்ஜு மாக்னிக்கல் ரோடிலும், திருவொற்றியூர் ஹை ரோடிலும், லைட்ஹவுஸ் ரோடிலும் கட்டப்படும் என்றும் சொன்னார்கள். லைட்ஹவுஸ் ரோடில் கட்டப்படும் ஓவர் பிரிட்ஜ் என்பது அருகாமையில் உள்ள ரெயில்வே லெவல் கிராஸிங்கில் கட்டப்படும் என்று நான் நினைக்கிறேன். இதை நான் வரவேற்கிறேன். இந்தக் காரியம் துரிதமாகச் செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்த இடங்கள் தவிர மற்ற இடங்களிலும் ரெயில்வே லெவல் கிராஸிங்குகளால் சென்னை நகரிலுள்ள ஜனங்களுக்கு ரொம்ப இடைஞ்சல்கள் இருக்கின்றன. இதன் காரணமாக போக்குவரத்தில் அடிக்கடி தடங்கல் ஏற்படுகிறது. ஆகவே எல்லா இடங்களிலும் ஓவர் பிரிட்ஜையோ ஸப்-வேயையோ அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் கனம் மந்திரி அவர்களுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இவை தவிர, ஹாரிஸ் பிரிட்ஜ், பேஸின் பிரிட்ஜ், வாலாஜா பிரிட்ஜ், கூவம் மேலுள்ள மன்ரோ பிரிட்ஜ் ஆகிய நான்கு பிரிட்ஜுகளும் விஸ்தரிக்கப்படும் என்றும் கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த நான்கு பிரிட்ஜுகளை விஸ்தரித்தால் மட்டும் போதாது. முக்கியமாக விஸ்தரிக்கப்பட வேண்டியது நாஷனல் ஹைவேஸில் இருக்கும் மார்மலாங் பிரிட்ஜ் ஆகும். சென்னை நகருக்கும் சைதாப்பேட்டைக்கும் இடையில் உள்ளது மார்மலாங் பிரிட்ஜ். இந்தப் பெரிய பிரிட்ஜ் வெகு காலமாக மோசமான நிலையில் இருந்து வருகிறது. பணத்தை ஒதுக்கி இந்த பிரிட்ஜையும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அநேக சிறு சிறு பிரிட்ஜுகள் பக்கிங்ஹாம் கால்வாயின் மேல் இருக்கின்றன. தேவையான கடன் தொகைகளை அரசாங்கத்தார் கொடுத்தால் தான் கார்ப்பொரேஷன் அவைகளை நன்றாக ஆக்க முடியும். கார்ப்பொரேஷனுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகை ரூ. 47 லட்சம்தான். அந்தப் பணத்தில் நகரில் ரோடுகளை பராமரிக்கவோ இதர வசதிகளைச் செய்யவோ கார்ப்பொரேஷனால் முடியவில்லை. நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கும் அரசாங்கத்தார் போதிய பணம் ஒதுக்கவில்லை. இந்த நிலையில் சென்னை நகரில் போதுமான வசதிகளை செய்யமுடியவில்லை. கார்ப்பொரேஷனுக்கு அரசாங்கத்தார் போதுமான பணத்தை ஒதுக்கினால்தான் கார்ப்பொரேஷன் சென்னை நகரில் போக்குவரத்து வசதிகளையும் இதர வசதிகளையும் செய்து கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடிசைகள் அபிவிருத்திக்காகவும் வீடுகள் கட்டுவதற்காகவும் நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கு ஐந்து லட்சம் ரூபாய் கிராண்டு அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிறது. இந்தப் பணம் போதாது. சென்னை நகரில் 300-க்கு

[Sri C. R. Ramaswami] [22nd July 1957

மேற்பட்ட குடிசைப் பிரதேசங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தார் இன்னும் நிறையப் பணம் கொடுத்தால்தான் குடிசைப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியும். குடிசைப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு முன்னால் அங்கெல்லாம் உடனடியாகக் குழாய் வசதிகளையும் மின்சார விளக்கு வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். குடிசைகளை சீக்கிரம் அபிவிருத்தி செய்யாவிட்டாலும் அவைகள் உள்ள இடங்களில் குழாய் வசதிகளையும் மின்சார விளக்கு வசதிகளையுமாவது உடனடியாக செய்து கொடுக்க வேண்டும். அங்கே இந்த வசதிகளைச் செய்ய வேண்டும் என்று கார்ப்பொரேஷன் அதிகாரிகளிடம் சொன்னால், அவைகள் இருக்கும் நிலங்கள் சர்க்காரைச் சேர்ந்ததாகவோ, தனிப்பட்டவர்களைச் சேர்ந்ததாகவோ இருக்கிறதென்றும், அவைகளை ஆர்ஜிதம் செய்த பிறகுதான் அங்கே அந்த வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்றும் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் சொல்கிறார்கள். அவைகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அங்கே குழாய் வசதிகளும் மின்சார விளக்கு வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். அதற்கான உத்திரவை கார்ப்பொரேஷனுக்கு அரசாங்கம் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவிர, கார்ப்பொரேஷனுக்கு அதிகமாகக் கடன் உதவி அளித்து அது தன் வேலையை சரிவர கவனிப்பதற்கு உதவ வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த செப்டெம்பர் மாதம் கார்ப்பொரேஷன் தேர்தல் வருகிறது. ஜில்லா போர்டு புனரமைப்பைப்பற்றி அரசாங்கத்தார் ஆலோசனை செய்து வருகிறார்கள். அதேமாதிரி, கார்ப்பொரேஷன் சம்பந்தமான சிடி முனிசிபல் சட்டத்தை சீர்திருத்தம் செய்வதுபற்றி ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சென்னையில் 50 டிவிஷன்கள் இருக்கின்றன. இவைகளை 60 டிவிஷன்களாக மாற்றியமைக்க வேண்டும் என்ற யோசனை இருந்து வருகிறது. கார்ப்பொரேஷன் கவுன்சிலில் பெண்களுக்கும் ஹரிஜன மக்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி ஸ்தானங்கள் ஒதுக்குவது அவசியமா அவசியமில்லையா என்பது பற்றி ஒரு கமிட்டியின் மூலம் ஆராய்ந்து முடிவு செய்தால் நன்றாக இருக்கும். இந்தக் காரணங்களினால் சிடி முனிசிபல் சட்டத்தை அடுத்த செப்டெம்பர் மாதத்திற்குள்ளாவது மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அடுத்த கார்ப்பொரேஷன் தேர்தலுக்குள் வாக்காளர் பட்டியலை சரிபார்த்து, சரியான வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் கார்ப்பொரேஷன் தேர்தல்கள் நன்றாக நடக்கும். இப்போது கார்ப்பொரேஷன் தேர்தல் வாக்காளர் பட்டியல் சரியாக இல்லை. பட்டியலில் ஏதோ "அடிஷன்ஸ்" செய்கிறார்கள். பிறகு அபேட்சகர்கள் பட்டியலை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. வீடு வீடாக விசாரித்து சரியான வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் சரியான பட்டியலைத் தயாரிக்க முடியும். பிரத்யேகமாக கார்ப்பொரேஷனுக்காக, இந்தக் காரியத்தை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கார்ப்பொரேஷனிலுள்ள பூந்தமல்லி ஹை ரோடு நாஷனல் ஹைவேயைச் சேர்ந்தது. அந்த ரோடு வெகு காலமாகச் செப்பனிடப்படவில்லை. அந்த ரோடைச் செப்பனிட்டால்தான் லாரிப் போக்குவரத்திற்கும் இதர போக்குவரத்துகளுக்கும் சௌகரியமாக இருக்கும். பூந்தமல்லி ஹை ரோடுக்கு சிமெண்டு காங்கிரீட் போடப்பட்டு 22 வருஷங்கள் ஆகிவிட்டன. இப்போது அது "காருகேடட் ஸர்பேஸ்" ஆக இருக்கிறது. அது மிக மோசமான நிலையில் இருக்கிறது. அதுவும் செப்பனிடப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, ஜில்லா போர்டுகள் புனரமைப்பைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போதுள்ள நிலையில் ஜில்லா போர்டுகள் சரிவர தங்கள் வேலைகளைப் பார்க்க முடியவில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. அவைகளைத் தவிர வேறு எந்த ஸ்தாபனங்களை அமைத்து ஜில்லாக்களை கவனிக்கலாம் என்பதுபற்றி ஆலோசனை செய்வது மிகவும் அவசியம். அதற்காக, கனம் மந்திரி அவர்கள் சொன்னது



22nd July 1957] [Sri C. R. Ramaswami]

போல், சட்டசபை அங்கத்தினர்களையும் கலந்தாலோசித்து தகுந்த திட்டத்தை வகுத்தால் நன்றாக இருக்கும். ஜில்லா போர்டுகள் எந்த எந்தத் துறைகளை கவனிக்க வேண்டுமென்பதையும், ஜில்லா போர்டுகள் உரியவையாக இல்லாவிட்டால் வேறு எந்த ஸ்தாபனங்களை அமைத்து ஜில்லா விஷயங்களில் கவனிக்கலாம் என்பதையும் ஆலோசித்து முடிவு செய்வதற்கு கூடிய சீக்கிரத்தில் ஒரு குழுவை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் பேசுவதற்கு இரண்டொரு நிமிஷங்கள் கொடுத்ததற்கு தங்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **Sri P. S. SANTHANAM**: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திற்குப் பிரேரேபிக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரே 11-00 a.m.
ரணையை ஒட்டி நான் சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய சர்க்காரின் ஆதரவினாலே நடைபெறும் பஞ்சாயத்து போர்டுகளும், சில முனிசிபாலிடிகளும், சர்க்காருடைய மானியத்தை வாங்கிக் கொள்கிறார்களே தவிர பணத்தை நல்ல முறையில் செலவழிப்பது இல்லை. சில நகராட்சி மன்றங்கள் சரியான முறையில் செலவழிப்பது இல்லை என்பதையும் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

உதாரணமாக திருவண்ணாமலை முனிசிபாலிடியை எடுத்துக்கொள்வோமேயானால் அங்கு அமைந்திருக்கிற ஐந்து விதமான சேரிகளில் ஒன்று பெரிய சேரி. அங்கு குறைந்தது 400 வீடுகள் இருக்கின்றன. இரண்டு கீழ்நாத்தூர் சேரி. அங்கும் 250 குடும்பங்களுக்கு மேல்பட்டு இருக்கும். மூன்றாவது சமுத்திரம் சேரி. 300 வீடுகள் இங்கே இருக்கும். நான்காவது கல் சேரி. இதிலும் 300 வீடுகள் இருக்கும். ஐந்தாவது அருந்திவிர் சேரி. மக்களால் தாழ்த்தப்பட்டு, மற்ற சாதி இந்துக்களால் புறக்கணிக்கப்பட்டு இந்த ஐந்து சேரிகளில் வாழ்கின்றவர்கள் பாமர மக்கள். சர்க்காரையே நாடி வாழக்கூடியவர்கள். செல்வந்தர்களை நாடிப் பிழைக்கக் கூடியவர்கள். இவர்கள் வாழ்கின்ற சேரிகளில் நல்லவிதமான பாதைகள் இல்லை. இவர்களுக்கு சுகாதார விதிகளில் இருந்தே விதிவிலக்குக் கொடுத்துவிட்டார்கள். நானூறு குடி மக்கள் வாழக்கூடிய பெரிய சேரியில் இரண்டு குழாய்கள்தான் இருக்கின்றன. சாதி இந்துக்கள் வாழக்கூடிய பகுதியில் ஒவ்வொரு சாதி இந்துக்கள் வீட்டிலும் கிணறு இருக்கின்றது. விசாலமான இடம் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் வாழக்கூடிய சேரியில் ஜன நெருக்கம் அதிகம். கிணறு வசதியோ, வீட்டு வசதியோ கிடையாது. காலையில் எழுந்தவுடன் வாழ்க்கையை வளப்படுத்த கூலி வேலைக்குப் போய்விடுகிறார்கள். மாலையில் வந்தால் தண்ணீர் பஞ்சம். ஏறத்தாழ நாலாயிரம் பேர்களுக்குத் தண்ணீர் வேண்டும் என்றால் பலருக்கு தண்ணீர் கிடைக்கிறது. மற்றவருக்குத் தண்ணீர் இல்லை. இதனால் பல கஷ்டம், சண்டை, இன்னல்கள் விளைகின்றன. ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் நகராண்மைக் கழகங்களுக்கு வரும்போது அவர்கள் வாசித்தளிக்கிற வரவேற்புப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு வந்து விடுகிறார்களே தவிர ஏழை மக்கள், அந்தப் பகுதியில் வாழ்கின்ற பாமர மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய சேரிகளைப் பார்வையிட்டு நான் பார்த்து அறியேன். அந்தோ! ஏறத்தாழ பத்து வருஷ காலமாக, சுதந்திரம் கிடைத்து, பல ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு பல கோடிப் பணத்தைச் செலவழித்து வருகிறார்கள். அந்தப் பணம் நல்லதொரு முறையில் செலவிடப்படுகிறதா என்பதை ஆங்காங்கே சென்று பார்ப்பது கிடையாது. இவர்கள் போய்ப் பார்வையிடுகிறார்கள் என்கிற நிலைமை இருந்தால்தான் பணத்தை அதிகாரிகள் சரியாகச் செலவழிப்பார்கள். சர்க்கார் பஞ்சாயத்துகளுக்கு ஆயிரம் ஆயிரம் பணத்தை ஒதுக்கினாலும்கூட அவர்கள் சேரியில் வாழ்பவர்களுக்கு யாதொரு திட்டமும் செய்வது கிடையாது. ஆனால் கணக்கில் எழுதிவிடுகிறார்கள். "புலிக்குப் புல் வாங்கி போட்டோம். யானைக்கு அல்வா வாங்கிப் போட்டோம்" என்பதாக அவர்கள் சர்க்கார் ஒதுக்குகின்ற பணத்திற்கு எல்லாம் எதையோ

[Sri P. S. Santhanam] [22nd July 1957

கணக்கு எழுதிக் காட்டி விடுகிறார்களேதவிர சேரியில் வாழ்பவர்களுக்கு அதனால் எவ்வித உபயோகமும் ஏற்படவில்லை. இதற்கு நான் பல உதாரணங்களைச் சொல்ல முடியும்.

குறிப்பாக செங்கம் தாலுக்காவைச் சேர்ந்த கரியமங்கலம் கிராமத்தில் ஏறக்குறைய 150 ஆதித்திராவிட குடி மக்கள் வாழ்கிறார்கள். அந்த மக்களுக்கு நல்லதொரு பாதை கிடையாது. பஞ்சாயத்து போர்டு வீதியில் நடுவில் கல் கிடக்கிறது.. ஏழை பாமர மக்கள் சென்று கேட்டால் " நீங்களே உடைத்துக் கொள்ளுங்களேன் " என்று சொல்கிறார்கள். அந்த பஞ்சாயத்து போர்டுக்கு வருகிற பணம் என்ன ஆகிறது ? அதற்குத் தகுதியான சமாதானம் சொல்வதற்கு ஆள் இல்லை. ஆகையால் ஸ்தல ஸ்தாபன மந்திரி நகராண்மைக் கழகங்களுக்குப் போகும்போது அங்குள்ள சேரிகளையும் பார்வையிட்டு, அபிவிருத்தி வேலைகள் எல்லாம் சேரியிலும் செய்யப்பட்டு வருகின்றனவா என்று கவனிக்கவேண்டும். உண்மையில் அப்போதுதான் இது ஏழையின் சர்க்கார், பாமர மக்களுடைய சர்க்கார், மகாத்மா காந்தி ஹரிஜன மக்கள் முன்னேற வேண்டுமென்று சொன்ன கொள்கையைக் கடைப்பிடிக்கும் சர்க்கார் என எல்லோராலும் போற்றப் படும் தகுதியைப் பெறுவர். அதைவிட்டு " கரையான் புற்றெடுக்க கரு நாகம் குடி புகுவது போல " இவர்கள் ஹரிஜனங்களுக்கு என்று கோடிக் கணக்கான பணத்தை ஒதுக்க, அப்பணம் பிற்பட்ட மக்களுக்குப் பயன் படுவதாகத்தான் அமையும். ஏழை ஹரிஜன மக்கள் நன்மை அடையத் தக்க வகையில் காரியங்கள் நடைபெற வேண்டும். சேரி வாழ் மக்கள் சுகாதார வசதிகளோடு, நல்ல விடுதிகளில் வாழ வகைசெய்ய வேண்டும். நகராண்மைக் கழகங்கள் எல்லாம் சேரியில் வாழ்கின்ற மக்களின் நலனில் அக்கறை கொண்டு திட்டங்களை வகுக்கச் செய்ய வேண்டும்.

நிற்கவும், திருவண்ணாமலை தாலுக்காவில் வேடநத்த கிராமத்தில் பாதை அமைக்க ஒரு ஆண்டுக்கு முன்னரே சர்க்கார் பணம் ஒதுக்கியிருக்கிறது. நாளது வரையில் அந்த வேலை நடைபெறவில்லை. நானும்கூடச் சென்று கேட்டேன். அவர்கள் ஏதோ சமாதானம் சொல்கிறார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை.

இரண்டாவது, சர்க்கார் ஒரு திட்டம் போட்டிருக்கிறது. பஞ்சாயத்து போர்டுகள் இருக்கக்கூடிய இடங்கள்தான் பிளாக் டெவெலப்மெண்டு ஏரியாவாக எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்கிறது. செங்கம், திருவண்ணாமலை தாலுக்காவில் பெரியகளம்பாடி கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் ஏறக்குறைய 300 சாதி இந்துக்கள் வீடும் 100 தாழ்த்தப் பட்ட மக்கள் வீட்டினர் வசிக்கிறார்கள். அங்கே பஞ்சாயத்து நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதாக பல விண்ணப்பங்கள் போடப்பட்டிருக் கின்றன. நானும் ஜில்லா கலெக்டருக்கும், அரசாங்கத்திற்கும் எழுதி இருக்கிறேன். நாளது வரையில் கவனிக்கவில்லை.

தாணியப்பாடி பிர்க்காவை எடுத்துக் கொண்டால், அது மலைப் பிரதேசம். காட்டுப் பிரதேசம். நடப்பதற்குக்கூட தகுந்த பாதை கிடையாது. ஏரி கிடையாது. நிலப்பரப்பு கிடையாது. நஞ்சைப் பயிர் சாகுபடி செய்ய வசதி கிடையாது. அங்கே ஏதாவது வசதியைச் செய்து கொடுக்கவேண்டுமானால் லாண்ட் செஸ் பணம் குறைவாய் இருக்கிறது. வருவாய்க்கே வசதி இல்லை. இம்மாதிரி இடங்களுக்கு சர்க்கார்தான் அதிகப் பணம் ஒதுக்கி, வருவாய் கம்மியாக இருந்தாலும் அதிகமாக மக்கள் இருப்பதைக் கவனித்து பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே சர்க்கார் கொடுக்கின்ற பஞ்சாயத்து போர்டு லாண்டு செஸ் பணத்தில் இருந்து பஞ்சாயத்து போர்டு ஏரியாவில் இருக்கும் சேரிகளுக்கு எவ்வளவு தொகை அவசியமோ அதைக் கொடுத்து உதவி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் ஏழை ஹரிஜன மக்களுக்கு நல்ல வசதிகளைப் பெற வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri T. K. SUBBIAH** : கனம் சபாநாயகர் அவர்களே, முதன் முதலாக கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். பொதுவாக இந்த



22nd July 1957] [Sri T. K. Subbiah]

ஜில்லா போர்டு நிர்வாகமானது மக்களுக்கு இன்றையச் சூழ்நிலையில் தேவையில்லை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். பலவகையான திட்டங்களைப் போட்டு அமுலாக்கும் வசதி இல்லாத நிலையில் தான் இன்றையதினம் ஜில்லா போர்டு நிர்வாகம் அமைந்திருக்கிறது. உதாரணமாக, ஆசிரியர்களை நியமனம் செய்வதைத் தவிர ரோடு அமைத்துக்கொடுப்பதற்கோ தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கோ இயங்கும்படியாக அவர்களின் நிலைமை இல்லை. என்னுடைய ஜில்லா போர்டை—திருச்சிராப்பள்ளி ஜில்லா போர்டை—எடுத்துக் கொண்டால், முக்கியமாக செய்ய வேண்டிய காரியங்களுக்கான நிதி கூட கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இம்மாதிரி திட்டங்கள் கிராம பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் இருக்குமானால் இத்திட்டங்கள் நிறைவேற்ற அவர்கள் வசதி செய்து கொடுக்க முடியும். ஆகையால் தற்பொழுது இருக்கும் நிலையில் ஜில்லா போர்டு தேவையில்லை என்றுதான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கிராமங்களில் ரோடு அமைத்துக்கொடுப்பது மிக மிக அவசியம். அங்கு ரோடு வசதி இல்லாத காரணத்தால் அங்கு இருக்கும் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். தேர்தல் காலத்தில் இத்தகைய ரோடு வசதி இல்லாத காரணத்தால் அங்கத்தினர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது ஞாபகமிருக்கும். எனது தொகுதிகள் அடங்கிய கிராமங்களுக்கு செல்ல வேண்டுமானால், திருச்சி, தஞ்சாவூர் இரண்டு தொகுதிகளிலும் புகுந்து போக வேண்டியிருந்தது. இப்படிப்போகும்போது அதிக கஷ்டங்கள் ஏற்பட்டன. ஆகையால் கிராமங்களுக்கு ரோடு அமைத்துக் கொடுப்பது மிகவும் அவசியம். குறிப்பாக டால்மியாபுரத்திலிருந்து அணைக்கரை கரையில் ரோடு அமைத்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

மற்றும் கொள்ளிடத்தில் ஒரு பாலம் அமையவேண்டும் என்ற திட்டம் ரொம்ப நாளாக இருந்து வருகிறது. குறிப்பாக இது தஞ்சாவூர் ஜில்லாவில் திருவையாறு முதலிய இடங்களுக்கு இது உபயோகப்படுகிறது. இந்தத் திட்டத்தை உடனே எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும். துரதிருஷ்டவசமாக இந்த திட்டம் ஒத்திப்போடப்பட்டு வருகிறது. 1948-லேயே சுமார் 30 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் போடப்பட்டது. 1948-ம் ஆண்டு ஏப்ரல் மீ 20உ இதற்காக 28 லட்சம் ரூபாய் "சாங்கிஷன்" செய்யப்பட்டது. 1950-ல் 38 லட்சம் ரூபாய்க்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டது. 1956-ம் ஆண்டு மே மீ 25உ பாலத்திற்கு அஸ்திவாரம் போடும்போது, ஸ்ரீ கே. கே. நம்பியார் அவருடைய அறிக்கையில் கொள்ளிடத்தில் கிராஸ்வே போடுவதற்கு 15 லட்சம் ரூபாய் சென்டிரல் ரேட் பண்டிலிருந்து நிதி கேட்டிருப்பதாக தெரிவித்தார். 1948-ல் இங்கு பாலம் போடவேண்டும் என்ற திட்டமானது தற்பொழுது கிராஸ்வே அமைக்க வேண்டும் என்று மாறியிருப்பதை குறித்து எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் இதற்காக நிதி கொடுப்பதை தட்டிக் கழித்தால் இந்த அரசாங்கம் இதை தள்ளி போடாமல் இதற்கான வேலையை உடனே செய்யவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மருதையாற்றில் ரயில் விபத்து ஏற்பட்டது எல்லோருக்கும் நன்றாக ஞாபகமிருக்கும். இங்கு சரியான பாலம் இல்லை. 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் ரூபாய் செலவு செய்து தாற்காலிகமாக பாலங்களை அமைத்துக் கொடுக்கிறார்கள். வெள்ளக் காலத்தில் இவை அழிந்து விடுகின்றன. இங்கு ஒரு சரியான பாலம் அமைக்க 8 லட்சம் ரூபாய் எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. இதை உடனடியாக எடுத்துக்கொண்டு, இந்தத் திட்டத்தை முடித்துக் கொடுத்தால் பெரும் நன்மையாக இருக்கும். கொள்ளிடத்தில் பாலம் அமைக்க வேண்டும் என்ற நிலைமையை பல ஆண்டு காலமாக சட்ட சபை அங்கத்தினர்கள் இந்தச் சபையில் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இதற்கான பல கேள்விகளையும் கேட்டிருக்கிறார்கள். ஆகையால் இந்தப் பாலத்தை உடனடியாக செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri M. ALAGIRISAMY**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சபையின் முன் கொண்டு வரப்பட்டிருக்கும், மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியாகிய பெரியகுளத்தில் கொடைக்கானல் ஒரு பகுதி. இந்தக் கொடைக்

[Sri M. Alagirisamy] [22nd July 1957

மலைப் பிரதேசமானது. இரண்டாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று மேல் மலை, மற்றொன்று கீழ் மலை. கீழ் மலைப் பகுதியிலேதான் ஏராளமான காப்பி, ஆரஞ்சு, வாழை, ஏலம் போன்றபொருள்கள் விளைகின்றன. இவைகள் நம் நாட்டுக்குத் தேவையான அந்நிய செலவாணிதொகை கிடைக்க வகை செய்கின்றன. இந்த இடத்தில் ஏலம், காப்பி முதலியன விளைகின்ற பகுதிகளில் ரோடு வசதி இல்லாமல் இருக்கிறது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ. சந்திரசேகரன் அவர்களும் இங்கு மக்கள் ரோடு வசதி இல்லாமல் கஷ்டப்படுவதை பற்றியும் இந்த வசதி செய்து கொடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். 20,000 அல்லது 30,000 ஏக்கர் நிலப் பரப்பு உள்ள கீழ் மலைப் பகுதியிலேயே எந்த விதமான ரோடு வசதியும் இன்று கிடையாது. ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். அங்கு உற்பத்திச் செலவும் அதிகமாக இருக்கிறது. ஆகையால் அங்கு ரோடு போட வேண்டியது மிகவும் அவசியம். கனம் மந்திரி ஸ்ரீ கக்கன் அவர்களும் அங்கு விஜயம் செய்து மக்கள் படும் கஷ்டங்களை நேரில் பார்த்தார்கள். அந்தப் பகுதியிலே ரோடு வசதி அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று பத்து வருஷங்களாக மக்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஆகையால் இதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திண்டுக்கல்–பழனி மார்க்கத்திலிருந்து ஒரு ரோடு அமைத்து ஆண்டலூர், பாச்சலூர், பெரியூர் போன்ற கிராமங்களை இணைத்தால் வசதியாக இருக்கும். ஆகையால் இந்த இடத்திலும் ஒரு ரோடு போட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கொடைக்கானல் லாஸ்காட் ரோடிலிருந்து பூலத்தூருக்கு ஒரு ரோட் போடப்பட்டு பத்து வருஷங்கள் ஆகின்றன. இந்த ரோடு ஜில்லா போர்டாரால் அமைக்கப்பட்டது. இதற்கு ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. பத்து வருஷம் ஆகியும் அந்த ரோடு அதே நிலைமையில்தான் இருக்கின்றது. காரணம் என்னவென்றால், ஒரு விவசாயி இந்த ரோடு தன்னுடைய நிலத்தில் போவதால் கோர்ட்டுக்கு சென்று "ஸ்டே" ஆர்டர் வாங்கிவிட்டான். அந்த "ஸ்டே" ஆர்டர் இப்போது போக்கு வரத்து லாயக்காக செய்வதற்கு கான்சல் ஆகிவிட்டது. ஆனால் இதை தொடர்ந்து சரளை போட்டு ஜில்லா போர்டு நிதி நிலை சரியாக இல்லை என்று காரணம் காட்டுகிறார்கள். ஆகையால் இந்த திட்டத்தை சர்க்கார் தங்களுடைய நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டு அந்த ரஸ்தாவுக்கு சரளை போட்டால் கார், பஸ் போக்கு வரத்துக்கு மிகவும் வசதியாக இருக்கும்.

லாஸ்காட் ரோட்டுடன் தாண்டிக்குடியை இணைப்பதற்கு ரோட் ஒன்று போடப்பட்டு நான்கு வருடங்கள் ஆகின்றன. ஏதோ காரணத்தால் சரளை போட்டு போக்குவரத்துக்கு லாயக்காக செய்யப்படவில்லை. இந்த வருஷத்திலாவது இதை எடுத்துக் கொண்டு முடிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, மேல் மலை பகுதியைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். மேல் மலை பகுதியை என்னுடைய பக்கத்தில் அந்தமான் என்று கூறுவது உண்டு. இந்த மாகாணத்திலே பிற்போக்கான பகுதி இருக்கிறது என்று சொன்னால், அதை மேல் மலை என்று சொல்லலாம். சர்க்கார் திட்டங்களினால் எந்த விதமான நன்மைகளும் அடையாத ஒரு பகுதி இந்த மகாணத்தில் இருக்கிறது என்றால், அந்தப் பகுதி மேல் மலை பகுதி என்று சொல்லுவது மிகையாகாது. இந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள். மிகவும் ஏழ்மையான நிலைமையில் இருக்கிறார்கள். கொடைக்கானல் நகரத்திற்கு வரவேண்டுமானால், 20, 22 மைல்கள் கால் நடையாக வரவேண்டியிருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் இருக்கும் கிராமங்களை இணைக்கும் முறையிலே ஒரு ரஸ்தா அமைக்கப்பட்டால், மக்கள் பொருளாதாரத் துறையிலே முன்னேறுவதற்கு சௌகரியமாக இருக்கும். மலைப் பிரதேசங்களுக்கு ரோடுகள் அமைப்பது என்றால் சாதாரணமாக மிகவும் அதிகமாக செலவு ஆகும். மைல் ஒன்றுக்கு ரோடு போடுவதற்கு ரூபாய் 30,000, 40,000 செலவாகும். மேல் மலைப் பகுதியிலே அம்மாதிரி ஒன்றும் அதிகமாக செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை. இது மண் மலைப் பிரதேசம். பாறைகள் நிறைந்த பிரதேசம் அல்ல. இந்தப் பிரதேசத்தில் கிட்டத்தட்ட 15 மைல் ரோடு வெட்டி விட்டால், இந்தப் பிராந்தியத்திலுள்ள கிராமங்களெல்லாம் இணைக்கப்படும். ஆகவே,



22nd July 1957] [Sri M. Alagirisamy]

கானல் இம்மாதிரி ரோடு அமைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri M. D. RAMASAMI:** கனம் சபாநாயகர் அவர்களே, அறுப்புக்கோட்டை நகரத்திற்கு தண்ணீர் திட்டம் தேவை என்ற முறையிலே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அறுப்புக்கோட்டை ஏறக்குறைய 30 வருஷங்களுக்கு முன்னமேயே முனிசிபல் நகரமாக ஆவதற்கு தகுதியாக இருந்தது. அப்படியிருந்துங்கூட, அங்கே ஏறக்குறைய 100-க்கு 75 பங்கு ஏழை நெசவாளிகள் பிராந்தியமாக இருந்ததால், அவர்களுடைய வற்புறுத்தலின்பேரில் அப்பொழுது நகரசபையாவது தவிர்க்கப்பட்டு, 1948-ல் தான் நகரசபை ஆயிற்று. அதற்கு வேண்டிய வசதிகள் ஒன்றும் செய்யமுடியாத நிலைமையில், அங்கே பஞ்சாயத்து இருந்த காலத்திலிருந்தே பணவசதி இல்லாமல் இருந்துவருகிறது. 1939–40-ல் பஞ்சாயத்து தண்ணீர் வசதி செய்துகொடுப்பதற்காக ஒரு முயற்சி எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அந்த முயற்சியை தணிக்கை செய்ய வந்த "சானிடரி டிபார்டுமெண்டு, அதிகாரிகள் நகரத்திற்குள்ளேயோ அல்லது சமீபத்திலோ எந்தவிதமான நல்ல தண்ணீரும் கிடைக்கக்கூடிய வசதி இல்லை என்று முடிவு கட்டிவிட்டார்கள்" அதற்குப் பின்னால் நகரசபையான பிற்பாடு வசூலித்துவந்த தண்ணீர் வரியின் மூலமாக ஏறக்குறைய ரூ. $2\frac{1}{2}$ லட்சம் பணம் இருந்தது. அதிலிருந்து ஏறக்குறைய $1\frac{1}{2}$ லட்ச ரூபாய் செலவிலே, இந்த நகரத்தின் 11–22 a.m. வடக்கிலும் கிழக்கிலும் நல்ல தண்ணீர் கிடைக்கின்ற பிராந்தியங்களிலே 5 ஆழகுழாய் கிணறுகள் வெட்டி ஓர் அளவு நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு நகரசபையால் காரியங்கள் செய்யப்பட்டு வந்தன. இந்த வகையில் சேர்த்துவைத்திருந்த $2\frac{1}{2}$ லட்சம் ரூபாயில், $1\frac{1}{2}$ லட்சம் செலவாய்விட்டது. இந்த நகரத்தில் தண்ணீர் வசதிக்காக எந்த விதமான முயற்சியும் செய்வதற்கு பண வசதி இல்லாமல் இருக்கிறது. இதுபற்றி பல தடவைகள் சர்க்காருக்கு எழுதப்பட்டிருக்கிறது. தண்ணீர் வசதி செய்ய சர்க்காரிடமிருந்து உதவி கிடைக்கவேண்டுமென்று பல கோரிக்கைகள் நகரசபையிலிருந்து சர்க்காருக்கு அனுப்பப்பட்டபோதிலும், இதுவரையில் அதற்கான உதவி எதுவும் கிடைக்கவில்லை. பஞ்சாயத்து போர்டு காலத்திலே இந்தத் தண்ணீர் சப்ளை திட்டம் 42-வது திட்டமாக இருந்துவந்தது. அதற்குப் பிறகு இப்பொழுது இந்தத் தண்ணீர் திட்டம் எந்த நிலைமையில் இருக்கிறது என்பது தெரியவில்லை.

இப்பொழுது 1955-வது வருஷத்திலே சமீபத்தில் நகரசபை எலெக்ஷன் நடந்தபோது, அரசியல் தலைவர்கள் பலர் வந்திருந்தார்கள். அப்போது தண்ணீர் திட்டத்திற்கான உதவி சர்க்காரால் செய்யமுடியும் என்று பலர் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கவுன்சிலாக இருந்தால் உதவி அதிகமாக கிடைக்கும் என்றுகூட சொன்னார்கள். அதுபோலவே காங்கிரஸ் சர்க்காரை ஆதரிக்கும் கவுன்சில் அங்கு ஏற்பட்டிருந்தும்கூட இதுவரையில் உதவி எதுவும் கிடைக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றன.

சமீபத்தில் பரிசீலனை செய்வதற்காக ஒரு ஆபீசர் அனுப்பப்பட்டதாகவும், அவர் வந்து பார்த்தும் வேறு தண்ணீர் வசதி கிடைப்பதற்கு வழியில்லை என்று சொல்லி ரிபோர்டு செய்திருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். இந்த நகரத்திற்கு நல்ல முறையிலே ஒரு தண்ணீர் திட்டம் அமையவேண்டும். திருப்புவனத்தில் வைகை ஆற்றிலிருந்து கிணறுகள் வெட்டி அதன் மூலமாக தண்ணீர் கிடைக்க வசதி செய்யமுடியும் என்று அவர் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. சர்க்கார் இதில் எந்த அளவு முயற்சி செய்யப்போகிறது என்று தெரியவில்லை. இங்கே 60,000 ஜனத்தொகை இருக்கிறது. பெருவாரியானவர்கள் ஏழை மக்களாய் இருப்பதால் அவர்களிடமிருந்து தண்ணீர் சப்ளைக்கு நிதி வசூலிக்க முடியாது. ஆகவே சர்க்கார் இது விஷயமாக முன்வந்து இந்த நகரத்திற்கு உதவி செய்யவேண்டும். இதில் மக்களுடைய ஒத்துழைப்பும் முயற்சியும் பூரணமாக இருக்கும். சர்க்கார் அவர்களுடைய முயற்சியில் முன்னேற்றம் காட்டவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். வைகையாற்றில் திருபுவனத்தில் கிணறுகள் வெட்டி அதன்மூலம்

இந்த நகரத்திற்கு தண்ணீர் வசதி செய்துகொடுக்கவேண்டும். இது ஏறக் குறைய 20 மைல் தூரம் இருக்கும். இதற்காக சர்க்கார் அளிக்கக்கூடிய உதவி போக, பாக்கியை நீண்ட காலக் கடனாகவாவது அளிக்கவேண்டும். அறுப்புக்கோட் டைக்கு வேண்டிய பண உதவி அளித்து ஒரு நல்ல தண்ணீர் திட்டத்தை கூடிய சீக்கிரத்தில் கொண்டுவரவேண்டும். இதற்கான சகல உதவிகளையும் சர்க்கார் அளிக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri G. ANNAMALAI MUTHURAJA :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை முழுமனதுடன் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருச்சி தாலூகா சுமார் 10 மைல் சுற்றளவுள்ளதாக இருந்தாலும்கூட, திருச்சி முனிசிபாலிடியில் ஒரு இடத்தில்கூட சிமெண்டு ரோடு இதுவரையில் போடப்பட வில்லை. அதை நமது அமைச்சர் அவர்கள் கவனித்து ஒரு உத்தரவு போடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். திருச்சிக்கு பக்கத்திலுள்ள ஸ்ரீரங்கம் சிறிய முனிசிபாலிடியாக இருந்தாலும், அங்கே மூன்று மைலுக்கு "சிமெண்டு கான்கிரீட்" ரோடு போடப்பட்டு பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கிறது. அது சிறிய முனிசிபாலிடியாக இருந்தாலும் அங்கே சிக்கனமான முறையில் நல்ல சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். ஆகவே திருச்சி முனிசிபாலிடியில் கூடிய சீக்கிரம் ஒரு "கான்கிரீட் ரோடு" அமைக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருச்சியில் மாதம் ஒன்றுக்கு 10,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு பெரிய மார்கட் திருச்சி முனிசிபல் நிர்வாகத்தில் நடந்து வருகிறது. அந்த மார்கட்டில் சுகாதார வசதி சரிவர கிடையாது. அங்கே எந்தவிதமான தார் ரோடோ, மெட்டல் ரோடோ கிடையாது. சாதாரண மண் ரோடு தான் இருக்கிறது. நீண்டநாட்களாக அப்படித்தான் இருக்கிறது. காய் கறி வாங்குவதற்கு வரும்போது மக்கள் மழை பெய்தால் நஞ்சை நிலங்களில் நடப்பது போல் நடக்கவேண்டியிருக்கிறது. அங்கே அவ்வளவு அசுத்தமாக இருக்கிறது. இதை திருச்சி சேர்மன் அவர்கள் கூடிய சீக்கிரம் கவனிக்கும் படி சர்க்கார் உத்தரவு போடவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அதோடு மார்கட்டுக்கு பக்கத்தில் வாழைப்பழம் முதலியவைகள் விற்கப் படும் இடத்திற்கு சமீபத்தில் ஒரு பப்ளிக் லெட்ரின் இருக்கிறது. மார்கட் காம்பவுண்டுக்கு அடுத்தாற்போல் இருக்கிறது. வாழைப்பழம் உணவுப் பொருள். அந்த இடத்திற்கு பக்கத்தில் ஆண்களுக்காக ஒரு கக்கூசும் பெண் களுக்காக ஒரு கக்கூசும் இரண்டு பப்ளிக் லெட்ரின்கள் இருக்கின்றன. இதை மாற்றி அமைப்பதற்கு 1955-ம் வருஷத்திய பட்ஜெட்டில் பணம் ஒதுக்கி கவுன் சிலில் தீர்மானம் செய்யப்பட்ட போதிலும் இன்றுவரையில் வேலை ஆரம் பிக்கப்படவில்லை. கூடியசீக்கிரம் இந்த வேலையை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த பிரச்னையில் டிலே ஆகாமல் அதை விரைவில் கவனிக்கும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய ஒட்டத் தெரு என்று ஒரு தெரு இருக்கிறது. அங்கே சுமார் 1,000 மக்கள் தாழ்த்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்த இடத்தில் சாக்கடை வசதி, லெட்ரின் வசதி முதலிய எந்தவிதமான சுகாதார வசதியும் கிடையாது. ஆகவே, இதை உடனடியாக கவனித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் அந்தநல்லூர், குளத்தூரில் 3,000 ஜனங்கள் இருக்கிறார்கள். அந்த இடத்தில் ஒரு ஆஸ்பத்திரி கிடையாது. அங்கே மைனாரிடிகளான, முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். அதில் ஒரு பிரசவ ஆஸ்பத்திரி ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு பக் கத்தில் வசதியாக இருக்கும் ஒரு இடத்தில் மாட்டு ஆஸ்பத்திரி ஒன்றும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக எட்டரை, கோப்பு, அயிலாப்பேட்டை ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. இந்த இடங்களிலெல்லாம் பஞ்சாயத்து போர்டு கிடையாது ஒரு கிராமத்தில் 3,000 க்கு மேல் குடிஜனங்கள் இருக்கிறார்கள். இந்த கிராமங் களிலே குடிதண்ணீர், லெட்ரின் முதலிய சுகாதார வசதிகளே கிடையாது. உடனடியாக இந்த கிராமங்களிலே பஞ்சாயத்து போர்டுகள் அமைக்கப்படவேண் டும். எட்டரை கிராமத்திற்கு தனியாக ஒரு பஞ்சாயத்து போர்ட்டு அமைக்கலாம் ஜாஸ்தியாக ஜனத்தொகை உள்ள கோப்பு கிராமத்திற்கு தனியாக ஒரு பஞ்சாயத்து போர்டு அமைக்கலாம். அயிலாப்பேட்டைக்கும் தனியாக ஒரு பஞ்சா யத்து போர்டு அமைக்கவேண்டும். இந்த கிராமங்களில் பஞ்சாயத்து போர்டு கள் அமைப்பதற்கு மந்திரி அவர்கள் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் கொத்தட்டை போன்ற கிராமங்களில் இருக்கிற தெருவில்—பறையர் தெரு, பள்ளித் தெரு போன்று இருக்கும் இடங்களில்—அங்குள்ள மக்கள் போக்கு வரத்துக்கு நடைபாதையின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையி னால் இதையும் உடனடியாக செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. SELVARAJ :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த சபை முன் வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரிக்கும் முறையில் சில வார்த் தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக தென் ஆற்காடு ஜில்லா மிகவும் பிற்போக்கான ஜில்லாவாக இருக்கிறது. நல்ல ரோடு வசதிகள் அந்த ஜில்லாவில் கிடையாது. சில கிராமங்களுக்கு போவதற்கு கூட வழியில்லாமல், பாலங்கள் இல்லாமல் மழை காலத்தில் அந்த இடங்கள் தீவுகள் போன்று காட்சியளிக்கின்றன. அந்த அளவில் அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள். **11-30 a.m.** மழை காலத்தில் அந்த கிராமங்களிலுள்ள மக்கள் நகரப் புறங்களுக்கு வர வேண்டுமானால் அந்த தண்ணீரில் நீந்திக்கொண்டு தான் வரவேண்டியிருக் கிறது. ஆகவே அங்கு இவ்விதம் இருக்கும் இடங்களில் எல்லாம் பாலங்கள் போட்டுக்கொடுத்தால் இப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் நீங்கும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். மேலும் அங்கு விருத்தாசலத்திலிருந்து ராஜேந்திர பட்டணம் வரைக்கும் போகக்கூடிய பாதையில் வெள்ளார் பாலம் ஒன்று போடு வதற்கு வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி "காஸ்வே" மூன்று லட்சம் ரூபாயில் செலவு செய்யப்பட்டு வேலை நடத்தப்பட்டு வருகிறது. பெரிய மழை வந்தால் இந்த "காஸ்வே" யை எடுத்துக்கொண்டு போய்விடும். ஆதலால் ஸ்திரமாக இருக்கக்கூடிய விதத்தில் ஒரு பாலம் அமைக்கவேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் அது நீடித்து நிற்கும், ஆகவே இந்த விஷயத்தில் மந்திரி அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கூறிக்கொள்கிறேன். அடுத்தபடியாக அங்கு கிராம பஞ்சாயத்துகள் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதுதவிர இன்னும் அநேக கிராமங்களில கிராம பஞ்சாயத்துகள் அமைக்கப்படாமல் இருந்து வருகின்றன. அந்த இடங்களில் எல்லாம் கிராம பஞ்சாயத்துகளை உடனேயே அமைக்கவேண் டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இனி மேல் வரக்கூடிய கிராம பஞ்சாயத்து தலைவர் தேர்தல் முறை அங்கத்தினர்கள் மூலமாக நடைபெறும் என்ற செய்தி நிலவி வருகிறது. இம்மாதிரி இனி வரக்கூடிய தேர்தலில் இருந்தால் இது லஞ்ச ஊழல்கள் அதிகமாகும், அதோடு பெரும் பணக்காரர்கள் தான் அதிகமாக வரமுடியுமே தவிர தொழிலாளர் களும் ஏழைகளும் அதிகமாக வர முடியாது. மேலும் அந்த கிராமத்தின் பேரில் அக்கறைகொண்டு இருப்பவர்களும் அந்த தேர்தலில் வெற்றி பெற்று வர முடியாது. ஆகவே இந்த முறையை மாற்றவேண்டும். ஏற்கனவே மக்க ளால் தேர்ந்தெடுப்பது போன்ற முறையின் மூலம் இந்த தலைவர் தேர்தலும் நடைபெறவேண்டும் என்றும், அவ்விதம் இருந்தால் தான் பணக்காரர்களு டைய ஆக்கிரமிப்பும், ஆதிக்கமும் இருக்காது என்றும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு இதற்காக சட்டம் கொண்டு வரும்பொழுது மந்திரி அவர்கள் இதை கவனத்தில் வைத்து அதற்கேற்றபடி சட்டம் இயற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய செலவுகளில் "ஹெட்" களின் மூலம் இத்தனை சதவிகிதம் என்று நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. இதனால் சில குறிப்பிட்ட செலவு செய்யவேண்டிய இடங்களில்

[Sri M. Selvaraj] [22nd July 1957

செலவு செய்ய முடிவதில்லை. ஆதலால் சில "ஹெட்" களில் அதிகமாக செலவு செய்வதற்காக விதிகளை அதில் வகுக்கவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். அடுத்தபடியாக சில பஞ்சாயத்துகளில் குடிதண்ணீர் வசதியில்லாமல் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு வேண்டிய **Protected Water Supply Scheme** ஏற்படுத்தவேண்டுமென்று அங்கு 1938-ம் வருஷத்திலிருந்து தண்ணீர் வரி வசூலித்து வருகிறார்கள். இதைப்பற்றி அரசாங்கத்தினிடம் முறையிட்டும் பத்து வருடகாலமாக இதுவரையிலும் எந்தவித ஏற்பாடும் செய்ததாக தெரிந்ததில்லை. பஞ்சாயத்தில் இருந்து 2 லட்சம் ரூபாய் கொடுப்பதற்கு முன் வந்தார்கள். இதை கூடிய சீக்கிரமே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது நெய்வேலியில் சுரங்க வேலை ஆரம்பித்திருப்பதால் அங்கு அதிகமாக மக்கள் வந்து குடியேற ஆரம்பித்திருக்கின்றனர். ஆகவே இப்போது தண்ணீர் கஷ்டம் பெரிய கஷ்டமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக இந்த குடிதண்ணீர் திட்டத்தைக்கொண்டு வந்தால் குடிதண்ணீர் இல்லாமல் இருக்கிற குறை நீங்கும். அதோடு விருத்தாசலத்தில் மாற்றம் அடையும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் பாலங்களை எல்லாம் அகலப்படுத்தப் போகிறோம் என்றும் அதற்காக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் மந்திரி அவர்கள் கூறினார்கள். இப்போது புவனகிரியிலிருந்து சிதம்பரம் போகும் போது இருக்கும் பாலம் அகலம் மிகக் குறைவாக இருக்கிறது. அந்த பாலத்தில் ஏதாவது பஸ் போனால் பக்கத்தில் ஆள் போக முடியாத நிலையில் அது இருக்கிறது. ஆகவே இந்த பாலத்தை உடனடியாக அகலப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட சில இடங்களில் பஞ்சாயத்துகளில் இருந்து ரோடு போடவேண்டிய இடங்களில் பஞ்சாயத்துகளால் ரோடுகள் போடமுடியாத நிலை இருக்கிறது. ஆதலால் இம்மாதிரிப்பட்ட வேலைகளை "ஹைவேஸ்" டிப்பார்ட்மென்டிடம் ஒப்படைத்தால் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து ரோடு போடுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இதற்கும் வேண்டிய உத்தரவுகள் போடவேண்டும் என்று மந்திரி அவர்களிடம் கேட்டுக்கொண்டு முடித்துகொள்கிறேன்.

SRI N. MARUDACHALAM: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கும் வகையில் ஒரு சில விஷயங்களை சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று எல்லா இடங்களிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களும் முனிசிபாலிட்டிகளும் சென்னை மாகாண ஆட்சியின் கீழ் தான் நடைபெறுகின்றன. ஆனால் ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திற்கும் என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் அது பூஜ்யம் தான். இன்று ஸ்தலஸ்தாபனங்களிலிருந்து ஒரு ரோடுபோடவேண்டுமென்றால் மெட்டல்தேவை. இவ்விதம் போடவேண்டிய மெட்டல் ஒரு இஞ்சு மெட்டலா அல்லது இரண்டு இஞ்சுமெட்டலா, மதுக்கரை மெட்டலா அல்லது வேறு இடத்திலுள்ள மெட்டலா என்றெல்லாம் அங்கிருந்து இங்குள்ள அதிகாரிகளுக்கு எழுதவேண்டும். இவர்கள் இங்கிருந்து முடிவு செய்து அனுப்பினால்தான் அந்த ஸ்தலஸ்தாபனங்கள் ரோடு போட முடியும். அது மட்டுமல்ல. ஜனத்தொகையை அனுசரித்து பொதுவாக ஒரு குழாய் போடவேண்டுமென்றாலோ, வீடுகளுக்கு தனிப்பட்ட முறையில் தண்ணீர் கனெக்ஷன்வேண்டும் என்றாலோ உடனே ஸ்தலஸ்தாபனங்கள்
11-36 a.m. தீர்மானம்செய்து போட்டு விடமுடியாது. அங்கிருந்து இங்குள்ள மேலதிகாரிகளுக்கு எழுதவேண்டும். அதன் பின் இங்குள்ள உத்தரவின் பேரில் தான் வேலையை ஆரம்பிக்கமுடியும். இந்த மாதிரி உத்தரவில் தேவையில்லை என்று எழுதிவிட்டால் இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒன்றும் செய்யமுடியாது. அதோடுகூட ஏதாவது ஒரு அதிகாரியை நியமிக்கவேண்டுமென்றால் அங்குள்ள "செயர்மென்" க்கு அதிகாரம் கிடையாது. நியமனம் செய்யக்கூடிய அதிகாரம் எல்லாம் கமிஷனருக்குத்தான் இருக்கிறது. ஆகவே இம்மாதிரியான காரியங்களுக்கு எல்லாம் இங்கே எழுதி உத்தரவு வாங்காமல் அவர்களே செய்துகொள்ளுவதற்கு அதிகாரம் இருந்தால் தான் நகரசபை பரிபாலனம் ஜனங்களுக்கும் பொதுவாக நாட்டிற்கும் நன்மை ஏற்படுவதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதோடுகூட இன்று நகரசபையில் இருக்கும் முறைகளை எடுத்துக்கொண்டால் சென்னை நகரசபை எடுத்துக்கொண்டால் வருஷத்திற்கு ஒரு முறை "செயர் மென்" புதிதாக தேர்ந்தெடுக்கப்படுவதுண்டு. இதே மாதிரி எல்லா முனிஸிபாலிட்டிகளிலும் வருஷத்திற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வேண்டிய உத்தரவை பிறப்பிக்கவேண்டும் என்று



22nd July 1957] [Sri N. Marudachalam]

கேட்டுக்கொள்கிறேன். கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் தண்ணீர் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. வேனிற்காலங்களில் கவுன்ஸிலர்கள் யாரும் தெருக்களில் போக முடியாது. அந்த நிலையில் இருக்கிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு சிறுவாணியில் ஒரு அணைகட்டி தண்ணீர் தேங்கவைத்தால் 6 மாதம் சப்ளை செய்யமுடியும் என்று தீர்மானித்து அதற்கென்று ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நமது பொருளாதார மந்திரி அவர்களிடத்தில் கண்டு சொல்வதற்கும் கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

ஆகவே, கடன் கொடுப்பதில் நமது பொருளாதார மந்திரி அவர்கள் அவர்களுக்கு எவ்வளவு தூரம் எவ்வளவு சீக்கிரம் கடன் கொடுக்க முடியுமோ அதை கொஞ்சம் அதிகமாகக் கொடுத்து தண்ணீர் கஷ்டத்தை நீக்கி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இன்று முனிசிபல் தொழிலாளி ஒவ்வொருவரையும் எடுத்துப்பார்த்தால் சர்வீஸ் அடிப்படையில் முனிசிபல் தொழிலாளர்களை தள்ளிவிடுகிறார்கள். அப்படி அவர்களை தள்ளி விட்டால் சர்வீஸ் பண்ட் கொடுக்க ஒன்றிரண்டு வருஷமாகிறது. காரணம், அங்குள்ள முனிசிபல் அதிகாரிகளைக் கேட்டால் நாங்கள் மேலே எழுதியிருக்கிறோம். பதில் வரவில்லை. பதில் வந்தால் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே காலதாமதம் ஏற்படாமல் ஒன்றிரண்டு மாதங்களுக்குள் கொடுக்க அரசாங்கம் அனுமதி அளிக்கவேண்டும். அடுத்தபடியாக, முனிசிபல் சட்டப் பிரகாரம் ஒரு தொழிலாளி 40 வீடுகளுக்கு வேலை செய்யலாம் என்று இருக்கிறது. அப்படி இல்லாமல் இன்று ஒவ்வொருவரும் 60—70 வீடுகளுக்கு வேலை செய்கிறார்கள். நகரம் விரிவு அடைய விரிவு அடைய அதிகம் ஆள்கள் வேண்டுமென்று கேட்டால் கொடுக்க முடியாது. சர்க்கார் உத்தரவுப்படிதான் கொடுக்கமுடியும் என்கிறார்கள். சர்க்கார் உத்தரவு இல்லை என்றால் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். எவ்வளக்கெவ்வளவு நகரம் விரிவு அடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகம் ஆள்கள் தேவை. ஆகவே எவ்வளவு அதிகம் ஆள் தேவையோ அவ்வளவு ஆட்களை எடுக்கும்படி அரசாங்கம் முனிசிப்பாலிட்டிகளுக்கு உத்தர விட்டால் சென்னை அரசாங்கத்திற்கு நலமாயிருக்கும். அடுத்தபடியாக, முனிசிபாலிடிகளில் உயர்ந்த பதவியில் வேக்கன்ஸி வந்தால் வெளியிலிருந்து ஜாதி ஹிந்துக்களையே எடுக்கிறார்களே தவிர முனிசிப்பாலிட்டிகளில் உள்ள தொழிலாளர்களை அந்த வேலைகளுக்கு உயர்த்துவதில்லை. ஆகவே அப்படி முனிசிப்பாலிட்டிகளில் வேலை செய்கிறவர்களுக்கு அந்த வேலை உயர்வைக்கொடுக்கும்படி அரசாங்கம் கௌன்ஸிலர்களுக்கும், செயர்மென்களுக்கும் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, in supporting the Cut Motion, I wish to make a few observations. I am really surprised to know from the announcement made by the Hon. Minister for Local Administration, that the election to local bodies especially to District Boards will be postponed. It is not known why it is so. In the statement of Objects and Reasons, she says that the whole system has to be reorganized and therefore the Government want some time. A few years ago some Committees were appointed to go into the question of reorganization of local bodies. Firstly a Committee presided over by the late Mr. Ratnasabapathi Mudaliar was constituted to go into the whole question and subsequently, I think, Mr. Kuttikrishna Menon, as the head of another Committee, went into the whole question again. None of the hon. Members of this Legislature so far know what has happened to the recommendations of those two Committees. This matter has been before the Government for a very long time and 11-42 a.m.
the Government should have taken some decision long ago but they have not so far done it. Just now on the eve of the elections to District Boards which are to be constituted on or about 1st November, the Hon. Minister now makes a statement before this House

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [22nd July 1957

that another White Paper will be issued and a Committee will be constituted and so on. We, on this side, are really surprised to note that this kind of statement should be issued by the Hon. Minister. Our Indian Prime Minister has been going about telling people that there is no democracy in Pakistan because elections have not been held there for such a long time. What is happening in our State? It is not known why elections to District Boards should be postponed. Is this democracy? My opinion is that the Government should conduct elections immediately if they cannot bring in a comprehensive Bill before the next session and conduct the elections. It is not a very big thing to conduct elections to these local bodies. Elections should be held. Otherwise if the Government for some reason or other do not find that it is possible to hold elections, district boards should immediately be handed over to the Collectors or Special Officers as the case may be.

The same is the case with Panchayat Boards. The elections to these Panchayat Boards were held some seven or eight years ago. Elections should have been held at least 2½ or 3 years ago. Most of the Panchayats do not function as panchayats at all. They cease to be institutions representing the people. I do not know why the Government are contemplating all these things. It is a very serious matter and I would request the Government to conduct the elections to these local bodies, as otherwise they will cease to be representative institutions. That is my submission.

In this connection, I want to make another submission. If the Government want to have District Boards, they must give them adequate powers and adequate money. Otherwise, they cannot function as district boards. There should be decentralization of powers. Without powers they cannot do anything. If however the Government find that they cannot function as representative institutions, there are only two alternatives left open to them. Either they should give District Boards more power and money or they should wind up or close them. That is my submission.

With regard to allotment of grants to these local bodies, there has been much delay. Grants are given at the fag end of the year, with the result that the grants are allowed to lapse in many cases. It is as good as not giving any grant. So the Government must see that the grants are given in time without much red-tapism and that the local bodies spend the money that is given to them in time. We find that at times there is a rush of expenditure in March because the grants are given very late. The Government, at times, say that the Legislature sanction has to be obtained. So for some reason or other, grants are being delayed with the result that the money (i.e.) not even 50 per cent of the grant that is given to these local bodies is spent in time.

Regarding Panchayat Boards, the Government say that before the end of the Five-Year Plan period, almost all villages will be constituted into panchayats or unions. So far as I could see, no prompt action has been taken so far. Here and there and as and



22nd July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

when people apply for the constitution of panchayat boards, the Inspector of Local Boards takes his own time to constitute these panchayats. The Government must see that early action is taken for the constitution of these panchayats and also elections are held.

With regard to audit and check over these Panchayats, the present system is very unsatisfactory. Take for instance the case of the Deputy Panchayat Officers who in many cases happen to be the check-measurement authorities in works that are executed by these panchayats. The Deputy Panchayat Officer happens to be the auditor and he goes and audits his own check-measurement. Further the work assigned to him is very unwieldy. He is in charge of many panchayat boards. He does not find time to go and visit a panchayat area at least once in a year. This is a sorry state of affairs. There have been complaints and abuse in most of the panchayat boards. Here also the Government must take immediate action. In the Travancore-Cochin State for every panchayat constituted an amount of Rs. 2,000 per year to start with is being given. It is also getting a recurring grant of Rs. 200 or Rs. 300 according to the population. Here we find panchayats are constituted and, unless the President is a well-to-do person, he cannot find even the minimum requirements like stationery, Acts, etc., with the result that even though some of the panchayats have been constituted, they are not functioning properly. They do not have even the minimum requirements to function.

In regard to the works that are being executed by these local bodies, there has been widespread complaint. Take for instance the works that are being executed by the district boards. There a lot of difference in the laying of the roads. Further the contractors are not enamoured of taking up these roads, for the one important reason is that their deposit money is not at all refunded to them immediately after the execution of the work. In the case of the Public Works Department, immediately after the check-measurement is over, the deposit money of the contractors is paid to them then and there. But here what do we see? After the works are executed, they are waiting for the receipt of the audit report. Only if the auditor says that everything is all right, the contractors are paid back their deposits, with the result that no contractor comes forward to take up any of these road works. When I was the President of a District Board, many representations were made through the Chamber of Local Boards. But I understand that so far no action has been taken in this regard. I am sure the Minister will pay attention to this question.

I find some allotment for the Transport and Machinery Workshop and so on. The Estimates Committee and also the Public Accounts Committee, I think, made some observations in regard to this. There has been overlapping. When we see that there is a Public Works Department Workshop already, it is not known why there should be a separate workshop for this Transport and Machinery Division. Recently our Chief Minister went and laid

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [22nd July 1957

the foundation stone near Saidapet for the construction of a workshop for the Highways Department at a cost of Rs. 10 lakhs. I do not think we receive any Central grant for this. This I think is a colossal waste. Our projects are nearing completion, and I doubt very much whether the Public Works Department has got sufficient work in its workshops. I would request the Government —even now it is not too late—to close this Transport and Machinery Division and see that the latter merges with the Public Works Department. This will go a long way in making considerable savings.

In regard to the drainage and slum clearance schemes, I would like to make a few observations. The drainage scheme is proceeding at a snail's pace. There are so many important urban areas where this question has not been taken up at all. Take for instance Kancheepuram, which forms part of my district, and which is a tourist centre. The Government are contemplating to improve all the tourist centres and attract as many tourists as possible. The drainage scheme was taken up by the Government long ago. But what happened? Nothing has been done so far. I wish the Government to take up this question immediately and see that the drainage scheme at Kancheepuram is pushed through as early as possible. The same is the case with regard to Saidapet. Though this comes under extended area, though this was taken over by the Corporation long ago, and though house tax and other taxes have gone up considerably, still this area continues to be as bad as it was.

As regards drinking water-supply, I see that even though the department was enlarged and more and more staff appointed for designs, construction, and so on, the drinking water-supply scheme has not been pushed through. I have again to revert to Kancheepuram here. There had been so much of representation about Kancheepuram drinking water-supply scheme. Here also the Government have not been quick enough to push through the scheme, and I hope they will take action immediately.

In Madras City, traffic has been increasing, and it has actually increased to a very considerable extent. The Government must think of getting Central aid and they should see that almost all the level crossings are bridged up. Recently they have taken up one road near Chetput. This is also not being pushed through as expeditiously as it ought to have been. Anyhow I am sure the Government will think about all these things and take quick action. I want to say one important thing here, namely, the condition of the Marmallong Bridge, which is on the Madras-Kanyakumari Trunk Road. This bridge is the oldest bridge, and I do not know when it will collapse. I would request Government to see that almost all the level crossings including this bridge, are bridged up as early as possible, with Central aid.

With these words, I support the cut motion before the House. Thank you, Sir.



22nd July 1957]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நல்ல யோசனைகளைக் கூறிய தற்காக கனம் அங்கத்தினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரோடுகள் அமைப்பதற்காகவும், பாலங்கள் கட்டுவதற்காகவும் அரசாங்கம் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கும் மானியம் சம்பந்தமாக எனது மதிப்பிற்குறிய நண்பர்கள் சில விஷயங்களையும் சில இடங்களில் இருக்கும் குறைபாடுகளையும் எடுத்துரைத்தார்கள். மானியக் கோரிக்கையை சபையில் சமர்ப்பித்த போது அரசாங்கத்தின் பொதுக்கொள்கையை எடுத்துச் சொல்லியதை மீண்டும் ஞாபக மூட்டுகிறேன். 11-53 a.m.

ஸ்ரீ. சின்னதுரை அவர்கள் பேசும்போது எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தவில்லையென்றும், வேறு சில கிராமங்களில் பஞ்சாயத்துகள் சரிவர நடைபெறவில்லையென்றும் கூறினார்கள். அதிலும் மதுக்கரை விஷயமாக பிரத்தியேகமாக எடுத்துக்கூறினார்கள். இப்போது உத்தேசமாக 7,000 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. சென்னை ராஜ்யத்திலுள்ள 11,200 கிராமங்களில், 7,237 இதில் உட்பட்டிருக்கின்றன. இன்னும் மீதியுள்ள கிராமங்களில் 1961-62-ம் வருஷத்திற்குள் எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துக்களை அமைக்கவேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. அதுவுமின்றி இப்போது ஒரு மந்திரி சபை சப்-கமிட்டி நிறுவப்பட்டு, என்ன நல்ல முறையில் பஞ்சாயத்துக்களை அமைக்கவேண்டுமோ, அந்த முறையை சிபாரிசு செய்ய சப்-கமிட்டியும் ஆராய்ந்து திட்டமிட்டு வருகிறது.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ சந்திரசேகரன் அவர்கள் ஆதிவாசிகளைப் பற்றியும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றியும் கூறினார்கள்.

அதற்காக மத்திய அரசாங்கத்தினிடம் மானியம் கேட்டு அவர்களிடமிருந்து உதவி வந்தவுடன் அதை வைத்துக்கொண்டு, எந்த எந்த தேவைகள் வேண்டுமோ அவைகளையெல்லாம் இந்த அரசாங்கம் செய்து கொடுத்து வேண்டிய உதவியைச் செய்யும். அப்படிச் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை நான் சொல்லுகிறேன்.

ஸ்ரீ ராமசாமி அவர்கள் பேசும்போது சென்னையில் இப்பொழுது மூன்று ஓவர்-ப்ரிட்ஜுகள் இருக்கின்றன என்றும் இன்னும் அதிகப்படியான ஓவர் ப்ரிட்ஜுகள் கட்டவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். இப்பொழுது மூன்று ஓவர்-ப்ரிட்ஜுகள் கட்டிப்பட்டிருக்கின்றன, இன்னும் தேவை ஏற்படும்பொழுது அவைகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்கிறேன். மற்றும் அதிகப்படியாகக் கட்ட வேண்டும் என்றால் அதற்கு பொருளாதாரம் தேவையாக இருக்கிறது. பொருளாதார நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டால் அப்பொழுது அவைகளை கட்டுவதற்கும் தயாராக இருக்கிறோம். அப்பொழுது அதைப்பற்றி நிச்சயமாக கவனிக்கலாம்.

இன்னும் கூட்டுறவு டிவிஷன்களில் 50-60-க்கு இன்னும் எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அவைகளுக்கு எல்லாம் இந்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை இந்த சபைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருவண்ணாமலையில் சேரிகளில் வசிப்பவர்களுடைய நிலைமையைப்பற்றி குறிப்பிட்டார்கள். சேரிவாசிகள் மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள் என்று புகாரும் சொன்னார்கள். ஆனால் நான் ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். சேரிகளில் வசிப்பவர்கள் மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள் இல்லை. அவர்கள் அரசாங்கத்தாரால் உயர்த்தப்பட்டவர்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் எங்கு பார்த்தாலும் சரி அரசாங்கம் சேரிகளில் வசிப்பவர்களுக்கு சகல விதமாக வசதிகளையும் செய்துகொண்டு வருகிறார்கள். எந்த விதத்திலும் அவர்களுடைய நிலையை உயர்த்தவேண்டும் என்று அரசாங்கம் நடவடிக்கைகளை வேண்டிய அளவில் எடுத்துக்கொண்டு வருகிறது. அதற்கு பாடுபட்டுக்கொண்டும் வருகிறது. ஒரு காலத்தில் தான் அவர்கள் மக்களால் ஒதுக்கப்பட்டவர்களாக கருதப்பட்டார்கள். இப்பொழுது அவர்களுடைய நிலைமை அப்படி இல்லை என்று சொல்லுவேன்,

[Srimathi Lourdhammal Simon] [22nd July 1957

இது விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். இன்றைய நிலையை எடுத்துக் கொண்டால் அவர்களுடைய நிலை அரசாங்கத்தாரால் உயர்த்தப்பட்டிருகிறது என்று சொல்லலாம்.

ஸ்ரீ சுப்பையா அவர்கள் கிராமங்களில் ரோடுகள் அமைப்பது பற்றி கூறினார்கள். 500 பேர்களோ அல்லது அதற்கு மேற்கொண்டோ வசிக்கக் கூடிய கிராமங்களில் நகரங்களுக்குச் செல்வதற்கோ அல்லது மார்கெட்டுக்குச் செல்வதற்கோ அல்லது டவுன்களுக்குச் செல்வதற்கோ வேண்டிய ரோடு வசதிகள்செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. இது விஷயத்திலும் இந்த அரசாங்கம் தக்க கவனம் செலுத்திவருகிறது. ஸ்ரீ அழகிரிசாமி அவர்கள் பேசும்போது கோடைக்கானல் பகுதிகளில் ரோடுகள் போடுவதைப்பற்றியும் மலைகளில் ரோடுகள் போடுவதுபற்றியும் கூறிவிட்டு அப்படி மலைகளில் ரோடுகள் போடுவது என்றால் அது ரொம்பவும் கடினமாக இருக்கும் என்றும் கூறினார். மற்றும் மலைகளில் ரோடுகள் போடுவது என்றால் பொருள் அதிகமாக செலவழியும் என்பதையும் ஒப்புக்கொண்டார். மற்ற இடங்களில் ரோடுகள் போடுவதற்கு செலவு செய்வதைவிட மலைப் பிரதேசங்களில் ரோடுகள் போடுவது என்றால் ரொம்பவும் கடினமாகவும் அதிகச் செலவு ஆவதாகவும் இருக்கும். ஆனால் அவர்கள் ஒன்று சொல்லுகிறார்கள்; அதாவது அவருடைய பிராந்தியத்தில் அப்படிப்பட்ட கடினமான பாரைகள் கிடையாது. அதனால் சுருக்கமான செலவில் ரோடுகளைப் போடலாம் என்றும் யோசனை சொன்னார். இது முக்கியமான விஷயமாக இருப்பதனால் அரசாங்கம் இதில் கவனம் செலுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு எம். டி. ராமசாமி அவர்கள் பேசும்போது அருப்புக்கோட்டையில் தண்ணீர் வசதி இல்லை என்றும் சொன்னார். அவர் சொன்னதில் குறிப்பாக ஒன்றை மட்டும் நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். அங்கு காங்கிரஸ் ஆட்சி வந்தும் தண்ணீர் தட்டு குறையவில்லை என்று குறிப்பிட்டார். அதனால் காங்கிரஸ் ஆட்சியில் பாரபட்சம் இல்லையென்பது தெளிவாக தெரிகிறது. அதனால் காங்கிரஸ் ஆட்சி தண்ணீர் தட்டுக்கு காரணம் இல்லை என்று தெரிகிறது. (சிரிப்பு.) அங்கு தண்ணீர் தட்டுக்கு காரணங்களில் அங்குள்ள முனிசிபாலிட்டியின் பொருள் நிலையும் ஒன்று எனத் தோன்றுகிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் கூடிய சீக்கிரத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

திருச்சி ஒரு புராதன பிரதேசம் என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அங்கு சுகாதார நிலை நன்றாக இல்லை என்பதை நானே பார்த்திருக்கிறேன். அதைப்பற்றி தனிப்பட்ட முறையில் ஒன்றைச் சொன்னார்கள். பப்ளிக் லட்ரின் பக்கத்தில் பழக்கடை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அந்தப் பழக்கடையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு வேண்டிய கவனத்தை இந்த அரசாங்கம் கூடிய சீக்கிரத்தில் செலுத்தும்.

தென் ஆற்காட்டில் பஞ்சாயத்து ஏற்படவேண்டும் என்று திரு.செல்வராஜ் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்துகள் இல்லாமல் அநேகம் இடங்கள் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துகள் அமைக்க வேண்டும் என்று அரசாங்கம் இப்பொழுது தீவிரமாக ஆலோசித்து வருகிறது. வெகு சீக்கிரத்தில் பஞ்சாயத்துக்கள் கிராமப்பகுதிகளில் அமைக்கப்படும்.

திரு. மருதாசலம் அவர்கள் நகர சபை தலைவர்களுக்கு இன்னும் அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மற்றும் தேர்தல் விஷயத்தைப்பற்றியும், குடி தண்ணீர் விஷயத்தைப்பற்றியும் புகார் சொன்னார். இது சம்பந்தமாக கவுன்சிலர்கள் வெளியே போக முடியவில்லை என்றும் பல குறைபாடுகள் இருப்பதனால் அவர்கள் மக்களுக்கு பதில் சொல்ல முடியவில்லை என்றும் குறிப்பிட்டார். கவுன்சிலர்கள் மட்டும் அல்ல, ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள் மட்டுமல்ல, அரசாங்க உத்யோகஸ்தர்கள் யாரும் எங்கு போனாலும், எந்த கிராமங்களுக்குப் போனாலும் தண்ணீர் குறைபாடுகளைப்பற்றிதான் சொல்லிக்



22nd July 1957] [Srimathi Lourdhammal Simon]

கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தக்க பரிகாரம் இந்த அரசாங்கம் கூடிய சீக்கிரத்தில் தேடித்தரும் என்பதை சொல்லிக்கொள்ளுகிறேன். இந்த விஷயத்திலும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

Then, Sir, I would like to reply to some of the points raised by the hon. Leader of the Opposition, Sri V. K. Ramaswamy Mudaliyar. First and foremost, I thank him for his kind and valuable advice. He has also given some hints and views in the matter of formation of district boards and panchayats. He said that we must take care in doing so. As already stated by me, the term of the district boards expires on the 1st November 1957. Election should be held and the Government have taken up this question very seriously. It is not only the Leader of the Opposition that feels strongly about it. Government are also giving serious thought to this matter. He also said that there were some evils prevailing in the management of district boards and panchayats. If that is so, certainly more care and attention must be given to the matter and he will agree with me when I say that it is the very reason why we are thinking on the lines of reorganizing the whole affair. He will also agree that for a proper decision on the matter, we have to go through everything. The statement I have made to the House is only about the Government proposal to introduce a Bill at the next session of the Legislature. A White Paper will be placed before the House and I am sure all hon. Members will study it and give their valuable suggestions about it. There is nothing to be worried about that I have made a statement without consulting the House. With these words, Sir, I would request the hon. Mover of the cut motion to withdraw the same.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் தன்னுடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறாரா ?

SRI P. S. CHINNADURAI : இல்லை, வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : சபையின் வோட்டுக்காக விடப்படவேண்டிய பிரேரணை என்னவென்றால் "கிராண்ட்ஸ் இன் எய்ட்" மானியத்திற்காக கோரப்படும் ரூ. 69,74,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் என்பது.

பிரேரணை வோட்டுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

MR. SPEAKER : வோட்டுக்கு விடப்படவேண்டிய பிரேரணை என்னவென்றால் "கிராண்ட்ஸ் இன் எய்ட்" மானியத்தின் கீழ் அரசாங்கத்திற்கு ரூ. 69,74,800-க்கு மேற்படாத தொகை அளிக்கவேண்டும் என்பது.

இந்தப் பிரேரணை வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேறி மானியம் அளிக்கப்பட்டது.

## (2) DEMAND XX—CO-OPERATION.

**THE HON. SRI R. VENKATARAMAN : On the recommendation of the Governor, I move—**

**"That the Government be granted a sum not exceeding Rs. 1,70,23,400 under Demand No. XX—Co-operation."**

சபாநாயகர் அவர்களே, இரண்டு மணி நேரம் இந்தக் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான மான்யக் கோரிக்கை மீது விவாதம் செய்யவேண்டும் என்று முதலில் அவகாசம் அளித்திருந்தபோதிலும், கனம் அங்கத்தினர்கள்

[Sri R. Venkataraman] [22nd July 1957

எல்லோரும் அதற்கு ஒரு மணி நேரம் போதுமானது என்று சொன்னதிலிருந்து எவ்வளவு ஒத்துழைப்பு அவர்கள் இந்தக் கூட்டுறவு இயக்கத்திக்குக் கொடுக்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது.

கூட்டுறவு இயக்கத்தில் நமது மாகாணம் இந்தியாவிலிருக்கும் எல்லா ராஜ்யங்களையும்விட முதன்மையில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த இயக்கம் நல்ல முறையிலே வளர்ந்து வருகிறது என்பதற்குச் சில புள்ளி விவரங்கள் மாத்திரம் பத்து நிமிஷங்களில் சொல்லி, அதிகமாக அங்கத்தினர்களுடைய அவகாசத்தைப் பறித்துக் கொள்ளாமல், முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில், கடன் கொடுக்கும் வசதிகள் விஷயமாக எடுத்துக்கொண்டால், மாகாணக் கூட்டுறவு பாங்கு இருக்கிறது. அதற்கு மூலதனம் 20 லட்சம் 89 ஆயிரம் ரூபாய். அதனுடைய **working capital** கடன் கொடுப்பதற்குக் இருப்பது 9 கோடி 32 லட்சம் ரூபாய்.

அதற்கு, கீழ்ஜில்லாவில் இருக்கும் மத்திய கூட்டுறவு பாங்குகளை எடுத்துக் கொண்டால், அவை ஜில்லாவுக்கு ஒன்றாக இருக்கின்றன. ஆனால், திருச்சி ஜில்லாவிலும் தஞ்சை ஜில்லாவிலும் இரண்டு மத்திய பாங்குகள் இருக்கின்றன. ஆக, 14 மத்திய பாங்குகள் இந்த ராஜ்யத்தில் இருக்கின்றன.

இந்த வருஷத்திலே 1956-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ந் தேதிவரையிலும் கடன் கொடுத்த தொகை 14 கோடியே 97 லட்சம் ரூபாய்.

அதற்குக் கீழ் ப்ரைமரி சொஸைடிகள் கிராமங்களில் இருக்கின்றன. கிராமக் கூட்டுறவு சொஸைடிகளின் எண்ணிக்கை 10,701. அவைகளில் இருக்கின்ற அங்கத்தினர்களின் எண்ணிக்கை 11 லட்சத்து 41 ஆயிரம். அவர்கள் செலுத்திய மூலதனம் 1 கோடியே 68 லட்சம் ரூபாய். **Working capital** 9 கோடியே 52 லட்சம் ரூபாய். 5 கோடியே 68 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட தொகையில் 97 சதவிகிதம் விவசாயத்திற்கும், இன்னும் பலன் அளிக்கும் முறையில் செய்யப்படும் செலவுகளுக்கும் மாத்திரம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவற்றைத் தவிர 26 பாங்குகள் **medium loans** என்று சொல்லக் கூடிய தவணைகளில் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. 80 பெரிய கூட்டுறவு சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. **Integrated credit and marketing** என்பதற்காக அவை வேலை செய்து வருகின்றன. நீண்ட காலத் தவணை நில அடமான பாங்குகள் 67 இருக்கின்றன, ஒரு மத்திய பாங்கும் இருக்கிறது. அந்த மத்திய பாங்கினுடைய செலுத்தப்பட்ட மூலதனம் 17 லட்சத்தி 33 ஆயிரம் ரூபாய். அதில் இருக்கின்ற ரிசர்வ் நிதி 16 லட்சத்தி 90 ஆயிரம் ரூபாய். **Debentures** வகையில் நாம் கடன் வெளியில் எழுப்பி நில அடமான பாங்குகளுக்குக் கொடுக்கப்பட்ட தொகை 4 கோடியே 69 லட்சம் ரூபாய். இன்னும் ப்ரைமரி நில அடமான பாங்குகளுடைய அங்கத்தினர்களை எடுத்துக்கொண்டால், ஒரு லட்சத்திற்கு அதிகமாகவே இருக்கிறார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் மொத்தமாக கூட்டிச் சொல்லவேண்டுமானால், கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாக $7\frac{1}{2}$ கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்து வருகின்றோம். மொத்தம் கடன் உதவி வேண்டுமென்று கணக்குப் போட்டதில் 10 பெர்சன்ட் கூட்டுறவு இயக்கம் மூலமாகக் கிடைக்கிறது. இப்பொழுது $7\frac{1}{2}$ கோடி ரூபாய் கொடுப்பதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 18 கோடி ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று திட்டம் இருக்கிறது.

இப்பொழுது கூட்டுறவு சொஸைட்டிகள் 71 பெர்சன்ட் கிராமங்களில் வேலை செய்து வருகின்றன. இதை ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 75 சதவிகிதமாக உயர்த்தவேண்டும் என்பது நோக்கம். அது போலவே, கிராமங்களில் வசிக்கின்ற விவசாய மக்களுக்கு 28 சத விகிதம் உள்ளவர்களுக்கு விவசாயக் கடன் கொடுத்து உதவி செய்யப்பட்டிருக்கிறது. இதை 50 சத விகிதமாக உயர்த்தவேண்டும் என்பது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம்.



22nd July 1957] [Sri R. Venkataraman]

இதைத் தவிர, கம்யூனிடி ப்ராஜெக்ட்டின் கீழ் மொத்தம் 5,352 கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 4,164 கிராமங்களில் கூட்டுறவு சொஸைட்டிகள் நன்றாக வேலை செய்து வருகின்றன. முக்கியமாக, ஈரோடு பிர்க்காவிலும, ஸ்ரீவில்லிபுத்தூர் பிர்க்காவிலும் விவசாயிகளுக்கு வேண்டிய எல்லாக் கடன்களும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே கொடுக்க எற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

விவசாய விளைபொருள்களையெல்லாம் வியாபாரம் செய்வதற்காக 105 மார்க்கெட்டிங் சொசைட்டிகள் இன்றைக்கு நம் ராஜ்ஜியத்தில் வேலை செய்து வருகின்றன. இவைகள் 1 லட்சத்தி 38 ஆயிரம் அங்கத்தினர்களைக் கொண்டவை. முக்கியமாக, பருத்தி, மணிலாப் பயறு, நெல், மிளகாய் வத்தல் போன்ற சரக்குகளையெல்லாம் இவை வாங்கி விற்பனை செய்து வருகின்றன. இவற்றிற்கு ஓரளவு **export permit** கொடுக்கப்பட்டு, பொருள்களை எற்றுமதி செய்வதற்கும் இந்த சொஸைட்டிகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. 1956–57-ம் வருஷத்தில் புதிதாக நான்கு சொஸைட்டிகள் ஆரம்பித்தார்கள். மேட்டுப்பாளையம், அரக்கோணம், காவேரிப்பாக்கம் போன்ற இடங்களில் இந்த சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 1957–58-ம் வருஷத்திலும் நான்கு சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. பவானி, கன்யாகுமரி, மதுரை ஆகிய இடங்களில் இந்த சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. இப்பொழுதிருக்கும் மத்திய கூட்டுறவு சொஸைட்டிகளையெல்லாம் **supply and marketing** சொஸைட்டிகளாக மாற்றுவது என்று திட்டம் இருக்கிறது. அவ்வாறு 12 மத்திய கூட்டுறவு ஸ்டோர்கள் இருக்கின்றன. மொத்தம் 12 ஸ்டோர்களில் 7 **supply and marketing** சொஸைட்டிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

இன்னும் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக மில்களை ஆரம்பிக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலியில் 16 ஆயிரம் கதிர்கள் கொண்ட கூட்டுறவு மில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இராமனாதபுரத்தில் 12 ஆயிரம் கதிர்கள் கொண்ட ஒரு மில்லை ஆரம்பிப்பதற்காக சர்க்கார் எல்லா முயற்சிகளும் செய்துகொண்டிருக்கிறது. அதனுடைய தாமதத்திற்குக் காரணம் கதிர்கள் இப்பொழுது அகப்படாததே தவிர வேறொன்றும் இல்லை.

இன்னும், சர்க்கரை ஆலைகளை கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன. வடஆற்காடு ஜில்லாவிலுள்ள ஆம்பூரில் ஒரு சர்க்கரை ஆலைக்கு கூட்டுறவு இயக்கத்தில் ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. அதுபோல், செங்கற்பட்டு ஜில்லாவில் மதுராந்தகத்தில் ஒரு சர்க்கரை ஆலைக்கு கூட்டுறவு முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. உடுமலைப்பேட்டையில் அமராவதி சர்க்கரை ஆலை என்று கூட்டுறவு முறையில் ஒரு ஆலைக்கும் ஏற்பாடாகிவருகிறது. ஆம்பூரில் இருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 10 லட்சம் ரூபாய் வரையில் சர்க்கார் பங்குகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகத்திலிருக்கும் கூட்டுறவு ஆலையில் 15 லட்சம் ரூபாய் வரையில் சர்க்கார் பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இனிமேல் வருகின்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பங்குகள் எடுத்துக் கொள்வதற்காக 15 லட்சசம் ரூபாய் வரையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இவைகளைத் தவிர, பெண்ணாடம், நாமக்கல், திருநெல்வேலி போன்ற இடங்களிலும் புதிதாக சர்க்கரை ஆலைகளை கூட்டுறவு முறையில் அமைக்க முயற்சிகள் நடந்துவருகின்றன.

**Co-operative Farming** என்ற முறையில் கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் 3, 4 இடங்களில் இப்பொழுது பரீட்சார்த்தமாக வேலை செய்து வருகின்றன. மதுரை ஜில்லாவில் ஒன்றும், செங்கற்படடு ஜில்லாவில் ஒன்றும், கோயமுத்தூர் ஜில்லாவில் ஒன்றும். ஆக இந்த இடங்களில் பரீட்சார்த்தமாக கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் நடந்துவருகின்றன. இதன்படி, இருக்கும் நிலங்களை எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பயிரிட்டு வருகிறார்கள். இந்தச் சமயத்தில், இந்தியாவிலிருந்து சைனாவுக்குச் சென்று அங்கிருக்கும் கூட்டுறவு முறைகளையெல்லாம் பார்த்து வந்தவர்களுடைய யாதாஸ்து வந்திருக்கிறது. அதையும் சர்க்கார் பரிசீலனை செய்து, எந்த அளவுக்கு

[Sri R. Venkataraman] [22nd July 1957

அங்கு கூட்டுறவு இயக்கத்தை நல்ல முறையில் அவர்கள் செய்கின்றார்கள், அதை எந்த அளவுக்கு நம் நாட்டிலும் கூட அனுஷ்டிக்கலாம் என்று பரிசீலனை செய்துகொண்டு வருகிறோம்.

அவகாசம் அதிகமாக இல்லாததால், கைத்தறி சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளையும் "தொழில்கள்" மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வரும்போது அப்பொழுது அதைப்பற்றி விவாதம் செய்யலாம். கைத்தறி கூட்டுறவு சொஸைட்டிகள் இருந்தாலும், அவைகளும் இந்த மானியத்திற்குச் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், அது விஷயத்தை "தொழில்" மானியத்தில் விவாதம் செய்தால், அப்பொழுது பதில் சொல்லலாம் என்று இருக்கிறேன். ஆகவே, அதைப்பற்றி இப்பொழுது அதிகம் விவாதம் செய்வது அவசியம் இல்லை.

அதேபோல், வீடு கட்டும் பிரச்னை "**Industrial housing**" என்ற வகையில் "**Labour**" மானியம் வரும்போது, அதைப்பற்றி விவாதம் செய்யலாம். இந்த மானியத்தின் மீது விவாதம் செய்வதற்கு அவகாசம் குறைவாக இருப்பதால், அதில் இப்பொழுது எந்தவிதமான நேரமும் கழிக்கவேண்டாம் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, நமது உத்தியோகஸ்தர்களுக்கு கூட்டுறவு இயக்கத்தில் பயிற்சி வேண்டும் என்பதற்காக சென்னையில் ஒரு கல்லூரி அமைக்க ஏற்பாடாகி வருகிறது. மதுரையில் ஒரு இன்ஸ்டிட்யூட் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நான்கு இன்ஸ்டிட்யூட்டுகள் சென்னையில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றும், தஞ்சையில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக நடக்கின்றன.

ஆகவே, கூட்டுறவு இயக்கம் நல்ல முறையிலே சென்னை ராஜ்யத்தில் நடந்து வருகிறது. இந்த மானிய கோரிக்கையை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

MR. SPEAKER: Motion moved:—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,70,23,400 under Demand XX—Co-operation."

I understand that all the Opposition Parties have agreed that hon. Member Sri A. Govindasamy will move his Cut Motion.

SRI A. GOVINDASAMY: Sir, I move—

"That the allotment of Rs. 1,70,23,400 under Demand XX—Co-operation be reduced by Rs. 100".

MR. SPEAKER: Cut Motion moved—

"That the allotment of Rs. 1,70,23,400 under Demand XX—Co-operation be reduced by Rs. 100".

Before I call Sri A. Govindasami to speak, I would like to know from the Hon. Minister for Industries and Co-operation how much time he would require for replying to the debate?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I will leave more time for Members and I will require only five minutes.

MR. SPEAKER: That means, the Hon. Minister will begin his reply at one o'clock. I have to make a suggestion. The Members of the House have told me that by the time they receive the proceedings of the Assembly containing the statements of the



22nd July 1957] [Mr. Speaker]

Ministers a long time elapses. In future, if Ministers can give roneoed copies of their statements, I shall place them on the table; or if they send me copies of their statements, I shall get them roneoed in my office and place them on the table for the use of Members. It is only a suggestion I am making and I do not want anything to be done now.

SRI A. GOVINDASAMY: கனம் அவைத்தலைவர் அவர்களே, கூட்டுறவு இயக்கமானது காங்கிரஸ் அமைச்சரவை ஏற்படுவதற்கு முன்னுலேயே சென்னை ராஜ்யத்தில் சிறந்த முறையில் இயங்கி வந்திருக்கிறது என்ப தற்கு பல சான்றுகள் இருக்கின்றன. முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டக் கூடியதாகவும், தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதாகவும் கூட்டுறவு இயக்கம் அமையவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கடன் கொடுத்தால் மட்டும் போதாது. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பல தொழில்களை நடத்தவும் விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் காணவும் வழி வகைகள் காணவேண்டும்.

நம்முடைய நாடு ஒரு பெரிய விவசாய நாடு என்ற முடிவுக்கு வந்த பிறகு, கூட்டுறவு முறையில் விவசாயத்தை நடத்துவதற்கு அரசாங்கம் திறமையாக நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இப்போது சொல்லாமல் இருப்பதற்கில்லை. சில நாட்களுக்கு முன்பு கனம் அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் "மடங்களின் பேரிலும் ஆலயங்களின் பேரிலும் இருக்கின்ற நிலங்களையெல்லாம் கூட்டுறவு விவசாயத்திற்குக் கொண்டு வரப்போகிறோம்" என்ற நல்ல செய்தியைச் சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அந்தத் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அதற்கு எல்லா ஒத்துழைப்பையும் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நான் சார்ந்திருக்கும் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

மடலாய நிலங்களை மாத்திரமல்லாமல், ஆங்காங்கு இருக்கும் புறம் போக்கு நிலங்களையும் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதற்கு வழி வகைகள் காண வேண்டும். பொதுவாக, கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய முன்வருபவர்களுக்கு அதிகக் கடன் வசதி அளிப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது, கூட்டுறவு இயக்கத்தில் போதுமான அளவு கடன் கொடுக்காததால், விவசாயிகளும் மற்ற ஏழை களும் ஆங்காங்கு லேவா தேவிக்காரர்களிடமிருந்தும் சிறிய முதலாளிகளிட மிருந்தும் கடன்கள் வாங்கி பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். வட நாட்டு லேவாதேவிக்காரர்கள் ஆபீஸ்களின் முன்பும், தொழிற்சாலைகளின் முன்பும் நின்றுகொண்டு, ரூபாய்க்கு இரண்டணு வட்டி என்ற விகிதத்தில் ஏழைகளுக்குக் கடன் கொடுத்து அதிக வட்டியை வசூலித்து வருவதை நாம் பார்க்கிறோம். இம்மாதிரி வட நாட்டுக்காரர்கள் இங்கே வந்து சுரண்டு வதைப் பார்த்துக்கொண்டிராமல், ஏழைகளுக்கு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் போதுமான கடன் உதவிகளை அளித்து, இங்கே வட நாட்டுக்காரர் களின் லேவாதேவியை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

கூட்டுறவு இயக்கமானது நல்ல நோக்கத்தாலும், நல்ல திட்டங்களாலும் நல்ல சட்டங்களாலும், வளர்க்கப்பட வேண்டும். அப்படி இல்லாததால், இப்போது நடைமுறையில் கூட்டுறவு இயக்கத்தில் ஊழல்களும் ஓட்டை களும் ஏற்படுகின்றன. கூட்டுறவு ஸ்தாபனங்களின் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்பவர்கள் செய்யும் தவறுகள் காரணமாக இவைகள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக, மக்கள் கூட்டுறவு இயக்கத்தை அதிகமாக ஆதரிப்ப தில்லை. கூட்டுறவு இயக்கத்தில் பூசல்கள் அதிகமாக வளருகின்றன. ஒரு சில இடங்களில், கூட்டுறவு பாங்குகளிலும் கூட்டுறவு ஸ்டோர்களிலும் தனிப்பட்டவர்கள் சேர முன்வந்தால் அவர்களுக்கு இடம் கொடுக்கப்படுவ தில்லை. அவர்களைச் சேர்த்துக்கொண்டால் மறு தேர்தலிலும் அவர்களே

[Sri A. Govindasamy] [22nd July 1957

வெற்றி பெற்று பதவிக்கு வந்துவிடுவார்களோ என்று நினைத்து அவர்களுக்கு அந்த ஸ்தாபனங்களின் நிர்வாகத்திலுள்ளவர்கள் இடம் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, அதிகமான உறுப்பினர்கள் வந்து சேர்ந்துவிடாதபடி வரக்கூடியவர்களுக்கு அவர்கள் இடையூறுகள் செய்கிறார்கள்; அவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பல கட்டிடங்கள் ஆங்காங்கே கட்டப்படுகின்றன. இதைப் பொறுத்தவரையில், பல இடங்களில் பணம் போன இடம் தெரியாமலே இருக்கிறது. பணம் துர்விநியோகம் ஆனதற்கு நிர்வாகத்தில் இருப்பவர்கள் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்கிறார்கள். இதற்கு எடுத்துக் காட்டாக, கடலூர் பில்டிங் ஸொஸைடியில் ஒரு பெரிய தொகை 15,000 ரூபாயோ, 25,000 ரூபாயோ போன இடம் தெரியாமல் இருப்பதை, குறிப்பிட விரும்புகிறேன். இதை எந்தவிதமான தகவலையும் பெறாமல் விட்டுவிட்டார்கள். அந்த ஸ்தாபனத்துடன் சம்பந்தப்பட்டவர்களால்தான் இந்த நிலைமை உண்டாக்கப்பட்டது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கத்தில் பல வீடுகள் கட்டப்படுகின்றன. கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள பல தலைவர்கள் பெரும் பணக்காரர்களாக இருப்பதால், அவர்கள் பேரில் பல நகர்கள் உண்டாக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இவைகள் கட்டப்படுகின்றன. இட நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், வீடில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கும், ஆங்காங்குள்ள நடுத்தர மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் வீட்டு வசதி அளிப்பதற்காகவும், இந்த வீடுகள் கட்டப்படுவதில்லை. கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள தலைவர்கள் தங்கள் உறவினர்கள் பேரிலேயே பல பெரிய பெரிய பங்களாக்களைக் கட்டிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட வீடுகளால் இட நெருக்கடியோ, வீட்டில்லாப் பிரச்னையோ தீர்ந்தபாடில்லை; பெரிய பணக்காரர்களுக்குத்தான் வசதி கிடைக்கிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் சாதாரண மக்களுக்கு இடநெருக்கடி இருந்துகொண்டேயிருக்கிறது. நகரங்களிலும் கூட்டுறவு முறையில், ரூ. 10,000, ரூ. 5,000 மதிப்பீடு உள்ள திட்டங்களில் ஆங்காங்கே வீடுகள் மக்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். இதைப்பற்றி இந்த சந்தர்ப்பத்தில் அதிகம் பேச வேண்டாம் என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லியிருப்பதால், இந்த விஷயத்தை இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

நில அடமான பாங்குகளில் கடன்கள் துரிதமாகக் கொடுக்கபடுவதில்லை. மனுக்கள் கொடுக்கப்பட்டவுடன், 1–3 மாதங்களுக்குள் கடன்கள் கொடுக்கப்படுவதில்லை; ஆண்டுக் கணக்காகக் காலம் கடத்தப்படுகிறது. இந்த நிலைமை ஏற்பாடமல் செய்யவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு ஆகும். குறுகிய காலக் கடன்கள், மத்திய காலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள் என்று மூன்று வகைக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. பின் குறிப்பிட்ட மத்திய காலக் கடன்களும், நீண்டகாலக் கடன்களும் கொடுக்கப்படுவதற்கு அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி, கடன்கள் கொடுப்பதில் காலதாமதத்தைத் தவிர்த்து, கடன்கள் தகுந்த காலத்தில் கொடுக்கப்பட்டு மக்கள் பயனடைவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விவசாயிகளின் நன்மைக்காக, அரசாங்கம் ஆங்காங்கு விவசாய பாங்குகளைத் திறந்து குறைந்த வட்டியில் நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களுக்கு நல்ல கடன் வசதிகளையும், நூல் வசதிகளையும், கூலி உயர்வு வசதிகளையும் அரசாங்கம் அளிக்கவேண்டும். இதைச் செய்தால்தான், இப்போது கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திராத மற்ற நெசவாளர்களும் அவைகளில் சேருவார்கள். திருநெல்வேலியிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலுமாக இரண்டு கூட்டுறவு நூல் நூற்பு மில்கள் ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமது பட்ஜெட் உரையில் கூறினார்கள். அவை எப்போது ஏற்படுத்தப்படும் என்ற உத்தரவாதத்தை அவர்கள் அளிக்கவில்லை. மேலும், இரண்டு–மூன்று இடங்களில் கூட்டுறவு நூல்



22nd July 1957] [Sri A. Govindasamy]

நூற்பு நிலையங்களை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சேலத்தில் ஒன்றையும், தென்னாற்காடு ஜில்லாவில் ஒன்றையும், செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள காஞ்சீபுரத்தில் ஒன்றையும் 2-வது ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கத்தில் பல விழாக்கள் நடத்தப்படுகின்றன. குறிப்பாக கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் கைத்தறி வாரத்தை பொங்கல் பண்டிகைக்கு சிறிது முன்பாகக் கொண்டாடினால் நன்றாக இருக்கும். கைத்தறி வாரத்தை நடத்துவது மத்திய அரசாங்கத்தின் திட்டம் என்ற காரணத்தால் நமது அரசாங்கம் இதைச் செய்வதற்குத் தயங்கலாம். "எங்கள் ராஜ்யத்தைப் பொறுத்தவரையிலும், இந்தக் காலத்தில்தான் கைத்தறி வாரத்தைக் கொண்டாடுவோம்" என்று கண்டிப்பாக வற்புறுத்திக் கூறினால் மத்திய அரசாங்கத்தார் இணங்குவார்கள். நமது ராஜ்யத்தில் பொங்கலுக்குச் சற்று முந்திய வாரத்தில் கைத்தறி வாரத்தைக் கொண்டாடினால் அது நல்ல பலன் அளிக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு முறையில் ஆலைகள் திறக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நேற்று முன் தினம் கனம் நண்பர் ஸ்ரீ கருணாநிதி அவர்கள் "அரசாங்கத்தாரிடமிருந்து ரூ. 10 லட்சம் கடன் வாங்கி விழுப்புரத்தில் ஒரு வனஸ்பதி ஆலை கட்டப்பட்டிருக்கிறது; ஆனால் அங்கே ஒரு வேலையும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது; ஆலையைக் கட்டியவுடன் வேலை நிறுத்தப்பட்டுவிட்டது" என்று சொன்னார்கள். மேலும், வளவனூரில் சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு ஒருவருக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. "யாருக்கு அந்த லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது?" என்ற கேள்விக்கு பதில் சொல்வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் மறுத்தார்கள். ஆகவே லைஸென்ஸ் கொடுக்கப்பட்டவர் வடநாட்டுக்காரரோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

**The Hon. Sri R. VENKATARAMAN**: ஸ்ரீ சிதம்பரம் செட்டியாருக்கு அந்த லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**Sri A. GOVINDASAMY**: லைஸென்ஸ் கொடுக்கப்பட்டவரின் பெயர் ஸ்ரீ சிதம்பரம் செட்டியார் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சந்தோஷம். இந்த ஆலைத் தொழிலைத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்காமல், கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. S. SUBRAMANIA GOUNDER**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கோரி இருக்கும் மானியத் தொகையை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கம் 50 ஆண்டுகளுக்கு எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறதோ அந்த அளவுக்கு சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளில் மேம்பாடு அடைந்து நல்ல முறையில் விருத்தி அடைந்து இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்காக கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களையும், அதை நிர்வகித்து வரும் ரிஜிஸ்ட்ரார் அவர்களையும் நான் போற்ற விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் எல்லாத் துறைக்கும் வளர வேண்டும் என்று பேசுகின்ற காலத்தில் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இன்றையதினம் கூட்டுறவு இயக்கத்திற்கு வேண்டிய பணம் ரிசர்வு பாங்கினால் கொடுக்கப்படுகிறது. அக்ரிகல்சரல் க்ரெடிட் டிபார்ட்மெண்ட் ரிசர்வு பாங்கினால் நிர்வகித்து வரப்படுகிறது. **State Bank of India**-க்கு **Agricultural Credit Department** ஐ மாற்றும் யோசனை இருப்பதாகத் தெரிகிறது. அந்த யோசனையை உடனடியாகக் கைவிடவேண்டுமென்று சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அது விஷயமாக யோசனை செய்வதாய்

[Sri K. S. Subramania Gounder] [22nd July 1957

இருந்தாலும் உத்தியோகப் பற்றற்ற கூட்டுறவாளர்களையும் கலந்து ஆலோசித்தே ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாராயணசுவாமி பிள்ளை கமிட்டியின் சிபார்சுப்படி நிர்வாகத்தையும், ஆடிட்டையும் தனியாகப் பிரிப்பதாய் இருந்தால் ரிஜிஸ்ட்ராரின் கீழ் ஒரு ஜாயின்ட் ரிஜிஸ்ட்ராரை போட்டு இவர்கள் மூலமாக இரண்டு பிரிவாக அந்த இலாகா இயங்கும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிச் செய்தால் நிர்வாகம் நல்ல வகையில் அமைவதற்கு வசதியாக இருக்கும் என்றும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகப் பணம் கொடுப்பதோடு மட்டும் அல்லாமல், மற்ற எல்லா வகையிலும் வளர்ச்சி அடைந்து வருவதால் ஆங்காங்கே போய் தணிக்கை செய்வதற்கு ஒவ்வொரு டெபுடி ரிஜிஸ்ட்ராருக்கும் ஜீப் அவசியமாய்க் கொடுக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் நல்ல முறையில் தணிக்கை செய்ய வசதி ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஒவ்வொரு டெபுடி ரிஜிஸ்டார் ஆபீசிலும் டெலிபோன் இருக்கவேண்டும். தாலுக்காவில் இருந்தும், கிராமங்களில் இருந்தும் நேரில் காரியாலயத்திற்கு வராமலேயே டெலிபோன் மூலமாக விஷயங்களைப் பற்றி விசாரித்து அறிந்துகொள்ள அப்போதுதான் சௌகரியமாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கிடங்கு (Godown) கட்டுவதற்கு கிராமாந்திர சொஸைடிகளுக்கு மாத்திரம் 50 சத விகிதம் சப்ஸிடி கொடுக்கிறோம். மற்றவைகளுக்கு 50 சத விகிதம் கொடுப்பது இல்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் 50 சத விகிதம் கொடுத்து வந்திருக்கிறோம். முன்பு கொடுத்தது போலவே இப்போதும், மத்திய அரசாங்கம் போதிய அளவு பணம் கொடுக்காவிட்டாலும் கூட, நமது அரசாங்கம் 50 சத விகிதம் மானியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைபோல் "ப்ராசசிங் பிளாண்ட்" (processing plant) வைப்பதற்குக் கடன் மாத்திரம் கொடுக்கிறார்கள். சப்ஸிடி கொடுப்பது இல்லை. இதற்கும் 50 சத விகிதம் சப்ஸிடி கொடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகக் கடன் கொடுத்து வந்தாலும் நீண்ட கால, மத்திய காலத் தேவையை பூர்த்தி செய்வது இல்லை. குறுகிய காலக் கடன் வேண்டிய அளவு கிடைக்கிறதே தவிர, மத்திய காலக் கடன், நீண்ட காலக் கடன் ரிசர்வு பாங்கில் இருந்து கிடைப்பது இல்லை. நீண்டகால, மத்திய காலத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய அளவு நீண்டகால, மத்திய காலக் கடன் கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்திய கூட்டுறவு பாங்கில் இருந்து கடன் கொடுப்பது பாரோயிங் பவர் பத்து தடவை இருக்கிறது. நடைமுறையில் போதிய மூலதனம் இல்லாத காரணத்தால் பணம் கொடுப்பதில் மிகவும் கஷ்டம் ஏற்படக் கூடிய நிலைமை இருப்பதால் பத்துத் தடவை என்று இருப்பதை பதினைந்து தடவை என்று மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது மார்க்கெட்டிங் சொஸைடியைப் பொறுத்தவரையில் இப்போது ஒரு கமிட்டியைப் போட்டு "ரெகுலேட் மார்க்கெட்டிங்"-க்கு என்ன செய்யவேண்டும், கூட்டுறவு மார்க்கெட்டிங்குக்கு என்ன செய்ய வேண்டும் என ஆராய்ந்து வருகிறார்கள். இதிலே ரெகுலேட் மார்க்கெட்டிங் அதிகாரம் பூராவையும் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைடிக்கு அப்படியே ஒப்படைத்தால்தான் கூட்டுறவு மார்க்கெட்டிங் நடத்த முடியும். இல்லாவிட்டால் நடைமுறையில் நடத்துவது சிரமமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு மத்தியப் பிரதேசத்தில் நடைமுறையில் இருப்பதாகவும், அது நன்றாக நடப்பதாகவும் தெரிகிறது.



22nd July 1957] [Sri K. S. Subramania Gounder]

அந்த முறையை அனுசரித்து இங்கும் ரெகுலேட் மார்க்கெட்டிங் அதிகாரம் பூராவையும் கூட்டுறவு மார்க்கெட்டிங்குக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடன் கொடுத்துத் திருப்பி வாங்கும் விஷயத்தில் சென்ற எல்லா வருடங்களையும் விட இப்போதுள்ள திட்டம் மாகாண ரீதியில் நல்ல முறையில் பணம் வசூலாகியிருக்கிறது. இருந்தபோதிலும் பணம் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகக் கொடுத்து, அதை வசூல் செய்வதில் முதல் சார்ஜ் (First Charge) என சட்டத்தைத் திருத்தி அதை கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகக் கொடுக்கக்கூடிய எல்லாக் கடன்களுக்கும் இந்த முதல் சார்ஜ் அமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படக்கூடிய அக்ரிகல்சரல் பாங்குகள் நல்ல முறையில் வேலை செய்துவருகின்றன. பொதுமக்களும் ஆதரவு கொடுத்துவருகிறார்கள். விவசாயிகளுக்கு நல்ல பயன் அளித்துவருகிறது. அதைத் தொடர்ந்து வேண்டிய அளவு அதிகமாக அக்ரிகல்சரல் பாங்குகளை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக சர்க்கரை ஆலைகளையும், நூல் ஆலைகளையும் வைப்பது மிக மிக அவசியம். அவ்வாறு நாமக்கல்லில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று வைப்பதாக யோசனை இருந்தால் அதை அரசாங்கத்தார் சீக்கிரம் ஏற்படுத்த வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேசமயத்தில் சேலத்தில் அதிகமாக நெசவாளர்கள் இருக்கிறார்கள். நெசவாளர்களுடைய சொஸைடிகள் இருக்கின்றன. இந்தக் காரணத்தால் சேலம் ஜில்லாவில் சீக்கிரத்தில் ஒரு கூட்டுறவு நூல் ஆலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெசவாளர் சொஸைடிகளைப் பொறுத்தவரையில் துணி விலைகள் ஏறுவதற்குக் காரணமே நூல் விலையில் அடிக்கடி ஏற்றத்தாழ்வு உண்டாவதுதான் என்கிறார்கள். இப்படி நூல் விலை ஏறிக்கொண்டும், இறங்கிக் கொண்டும் இராமல் நிரந்தர விலைக்கு ஏற்பாடு செய்தால் மார்க்கெட்டிலும் ஏற்றத்தாழ்வு இருக்காது. நெசவாளர்களுக்கும் நிரந்தரமான கூலி கிடைக்க வசதியாக இருக்குமென்று கூறிகொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ராஜ்ய பாங்கானது நல்ல முறையில் வேலை செய்து வருகிறது. அது அவசியமா, அவசியம் இல்லையா என்ற பிரச்சனைக்கு இடமே இல்லை. அது மிகவும் அவசியமாக இருக்கிறது. இப்போது ரிசர்வு பாங்கில் $1\frac{1}{2}$ வட்டியிலிருந்து 2 வட்டியாக உயர்த்திவிட்டார்கள். அதே சமயத்தில் அல்டிமேட் $6\frac{1}{4}$ சத விகிதம் பாரோயர் கொடுப்பதை $6\frac{3}{4}$ சத் விகிதம் ஆகச் செய்திருக்கவேண்டும். இந்த உயர்வினால் கன்ஸ்யூமர் கொடுக்கும்படியாகச் செய்வதில்லை.

இப்போது ஸ்டேட் பாங் of India-வை எடுத்துக்கொண்டால் அவர்கள் ரிசர்வு பாங்கில் பணம் கடன் வாங்குகிறார்கள். மிடில்மென் எல்லாவற்றுக்கும் குறையவேண்டும் என்று நாம் சொல்வதால் அக்ரிகல்சரல் க்ரெடிட் டிபார்ட்மெண்டை State Bank of India-க்கு மாற்றும்படி செய்தால் ஸ்டேட் பாங்குக்காரர்கள் ரிசர்வு பாங்கிலிருந்து கடன் வாங்கிக் கொடுக்க வேண்டியிருப்பதால், ரிசர்வு பாங்கி நிர்வாகத்திலிருக்கும் அக்ரிகல்சரல் க்ரெடிட் டிபார்ட்மெண்ட்டை State Bank of India-க்கு மாற்றி நடுவில் மற்றொரு மிடில் மென் ஏற்படுத்தக் கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன். இதுமாதிரியாகச் செய்யக்கூடாது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri V. SUBBIAH : சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு 12-40
மான்யத்தின் மீது பிரேரேபித்திருக்கும் வெட்டுப் பிரேரேணையை p.m.
ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இன்றைய தினம் கூட்டுறவு கிரெடிட் சொஸைடிகள் கிராமங்களில் எப்படி வேலை

[Sri V. Subbiah] [22nd July 1957

செய்கின்றன என்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படு கிறேன். கிராமங்களில் கூட்டுறவு சொசைடிகள் நல்ல முறையில் வேலை செய்தாலும் கூட அதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. ரிசர்வ் பாங்க் 4 சத விகிதம் வட்டியுடன் விவசாயிகளுக்கு கொடுக்கும் பணம் இன்றைய தினம் கிராமங்களில் உள்ள " ரூரல் கிரெடிட் சொசைடிங் " க்கு 6½ சத விகிதம் வட்டியுடன் கொடுக்கப்படுகிறது. இந்த வட்டியை குறைத்துக் கொள்ளவேண்டியது முக்கியமான விஷயம்.

பல கிராமங்களில் இம்மாதிரியான சொசைடிகள் இல்லாமல் இருப்ப தற்குக் காரணம், அவைகளை ஆரம்பிப்பதற்கு 500 ரூபாய் வரை கட்ட வேண்டும் என்று இருப்பதனால்தான். இந்தத் தொகையை 200 ரூபா யாக குறைத்தால் பல கிராமங்களில் சொசைடிகளை ஆரம்பிக்க உதவியாக இருக்கும்.

கிராமங்களிலே இன்றையதினம் கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டங்கள் வேகமாக, துரிதமாக முன்னேறவில்லை. இதற்கென்று ஒரு தனி " டிபார்ட்மெண்டை " ஏற்படுத்தி தாராளமாக நிதி ஒதுக்கினால், கிராம மக்களுக்கு, முக்கியமாக அரிஜனங்களுக்கும் சிறிய விவசாயிகளுக் கும் பயன் உள்ளதாக இருக்கமுடியும்.

கிராம கூட்டுறவு பண்ணைகளுக்கும், கைத்தறிகளுக்கும், " செஸ்பண்டு " இன்னும் ஜாஸ்தியாகக் கொடுக்கப்பட வேண்டும். தற்பொழுது அவை களுக்காக கூட்டுறவு மான்யத்தில் பணம் ரொம்பவும் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. " தமிழ் நாடு கூட்டுறவு பெடரேஷன் " கோயம் புத்தூரில் நடந்தபொழுது இதைப்பற்றி ஒரு முக்கியமான தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதில் ஸ்ரீ ராமசாமி நாயுடுவும், ஸ்ரீ அல்லா பிச்சையும் அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

விவசாயிகளுடைய விளைபொருள்களை, முக்கியமாக மிளகாய் வத்தல், வெங்காயம் போன்றவைகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய " பெர்மிட் " களை, " மத்திய சென்டிரல் ஸ்டோர்ஸ் " க்கு கொடுக்காமல் விவசாய தொடர்புள்ள " மார்கடிங் சொசைடிகளுக்கு " கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**(The Deputy Speaker in the Chair.)**

கூட்டுறவு சொசைடிகள் விவசாயிகளுக்கு தற்பொழுது உதவி செய்து வந்தாலும், உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களின் மதிப்பு வெளிநாட்டில் இருக்கக்கூடிய அளவுக்கு, நம் நாட்டில் இல்லை. இம்மாதிரி இருந்தால் உற்பத்தி பாதிக்கப்பட்டு விவசாயமே அழிந்து விடும் என்று அமைச்சர் அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கிராமப் பகுதிகளில் " ரூரல் பாங்க்ஸ் " அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல ஜில்லாக்களில் 1–2 தான் ஆரம் பித்திருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் 1–2 தான் இருக்கிறது. விவசாயிகளின் நன்மையைக் கருதி எல்லா கிராமங்களிலும் இம்மாதிரி " பாங்குகளை " ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதையெல்லாம் விட மிகவும் முக்கியமானது—கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் சரியான முறையில் வேலை செய்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கிரா மங்களில் இன்றையதினம் வீடு கட்டுவதற்கும், கூட்டுறவு வவிவசாயத் துக்கும், இன்னும் பல திட்டங்களுக்கும் தாராளமாகப் பணம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

12-45 p.m. **Sri R. KRISHNASWAMY NAIDU** : உதவி சபாநாயகர் அவர் களே, அமைச்சரவர்கள் பிரேரேபித்திருக்கும் கூட்டுறவுத்துறை மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.



22nd July 1957] [Sri R. Krishnaswamy Naidu]

முதல் ஐந்தாண்டு திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத் திலும், கூட்டுறவுத்துறையில் நமது மாகாணத்தில் பல நல்ல காரியங் கள் நடைபெற்றிருக்கின்றன என்பதில் என்னுடைய சந்தோஷத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்துவதற் கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதற்காக 11 லக்ஷம் ரூபாய் வரை பங்குத் தொகை இப்பொழுது சேர்த்தாகிவிட்டது. மத்திய சர்க்கார் ஷேர்கள் ஒதுக்குவதைப் பற்றியும் லைசென்ஸ் வழங்குவதைப் பற்றியும் யோசனை செய்துகொண்டிருப் பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இது நீண்ட காலமாக பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறபடியால், சீக்கிரத்திலேயே ஆலை ஏற்படுவதற்கான வழிவகைகளை நாம் காணவேண்டும் என்று மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உரவிநியோகத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் முன்னால் " சென்டிரல் சப்ளை அண்டு மார்க்கடிங் ஸ்டோர்ஸ் " என்று இருந்தது. அவர்கள்தான் விவசாய விளைபொருள்களை எடுத்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால் இந்த உர விநியோகம் தனி வியாபாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையும் இந்த சொசைடிகளே எடுத்துக்கொண்டு நடத்த வசதி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு " மார்கடிங் சொசைடி " இருக்க வேண்டும். அப்படி சில சொசைடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஜில்லா மொத்தத்திற்கும் இருக்கக்கூடிய " **Supply and Marketing Society** " அதனுடைய கிளை ஒன்றை ஒவ்வொரு தாலூகா விலும் வைத்துக்கொண்டு, உரத்தை அவர்களாலே நேரடியாக விநி யோகம் செய்துகொண்டு வருகிறார்கள். இது அவசியம் இல்லை. ஒவ்வொரு தாலூகாவிலேயே இருக்கக்கூடிய " மார்கடிங் சொசைடிகளே " இந்த உர விநியோகத்தை திறமையாக செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு முறைகளில் பயிற்சி அளிப்பதற்காக பல இடங்களில் " இன் ஸ்டிட்யூட் " இருக்கிறது. இன்னும் சில இடங்களில் ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக நான் அறிகிறேன். மதுரை கூட்டுறவு பயிற்சி பள்ளியில் போதிய அளவு ஸ்தானங்கள் இல்லாத காரணத்தால் கூட்டுறவு முறையை பயில முன் வருபவர்களுக்கு இடங்கிடைப்பதில்லை.

ராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு " இன்ஸ்டிட்யூட் " அமைக்க ஏற்பாடு செய்வது மிகவும் அவசியம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பூரண கடன் வசதித் திட்டம் நம் மாகாணத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவிலும், ராமநாதபுரம் ஜில்லாவிலும், ஸ்ரீ வில்லிப்புத்தூரிலும் இருக்கிறது. இதற்கு ரெவின்யூ பிர்க்காக்கள் அளவாக எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்த இடங்களில் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு வேண்டுமானாலும் கடன் வசதி கொடுக்க அரசாங்கம் சித்தமாய் இருந்தும் கூட பூரணமாக அளிப்பதற்கு பணவசதி இல்லாததால், முடிவதில்லை. நானும் இந்த விஷயங்களில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறபடியால் விவ சாயிகளுக்கு இந்த வசதிகள் பூரணமாக கிடைப்பதில்லை என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

சமுதாய நல திட்டப் பிரதேசங்களில் இரண்டு " பிர்க்காக்களை " எடுத்துக் கொண்டிக்கிறார்கள். அங்கே பூரண கடன் வசதி கொடுக்கப்படுகிறது. அதே பிரதேசத்தில், தக்காவி லோன், உரத்திற்காக லோன், மற்றும் பல்வேறு ரூபங்களில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்படுகிறது. அந்த இடங்களில் தகுந்த கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவைகளின் மூல மாகவே எல்லாவிதமான கடன் வசதிகளையும் கொடுக்க ஏற்பாடு செய்தால் சிறந்த முறையில் இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில்

[Sri R. Krishnaswamy Naidu] [22nd July 1957

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு முறையில் விவசாயி களுக்கு கடன் வசதி அளிப்பதற்காக ஒரு உருவான திட்டம் பரீக்ஷார்த்த மாக அமுல் நடத்திப் பார்க்கும் அந்த இடங்களிலே, வேறு கடன் வசதி இல்லாமலே கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாக போதிய அளவு கடன் வசதி அளிக்கப்படவேண்டும் என்று உத்திரவாதம் நேர்ந்திருக்கும் பொழுது, வேறுவிதமான வசதிகள் வேறு ரூபங்களில் ஏற்பட்டால், இந்த பரீக்ஷார்த்த திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றிகரமான பயன் அளிக்குமா என்பது பற்றி தெரிந்துகொள்ளுவதற்கு வசதி இல்லாமல் போய்விடுகிறது. இதுபற்றி அரசாங்கம் கவனித்து ஒவ்வொரு பிளாக் ஏரியாவிலும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாகத்தான் கடன் வசதி செய்து கொடுக்கப்படவேண்டுமென்ற ஏற்பாட்டை செய்யவேண்டும். சமுதாய நலத் திட்ட பகுதிகளிலே ஒரு பிளாக்குக்கு 3 வருஷங்களுக்கு இவ்வளவு பணம் கடன் வசதியாக அளிக்கப்படவேண்டுமென்று நிர்ணயித்து அந்த பிளாக்கில் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாகவே இந்தத் தொகையை அளிப் பதற்கு ஏற்பாடு செய்தால் மிகமிக உபயோககரமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதோடுகூட சமீபத்தில் கூட்டுறவு பாங்குகள், கூட்டுறவு விவசாய பாங்கு கள், ரூரல் பாங்குகள் முதலிய கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டு விவசாயிகளின் உபயோகத்திற்காக கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அந்த ஸ்தாபனங்கள் ஐந்து வருஷம் வரையில் நீண்டகாலக் கடன் கொடுக்கலாம் என்ற விதி, 3 வருஷ காலத்திற்கு மேல் நீண்ட காலக் கடன் கொடுக்கக்கூடாது என்ற நிலைமையில் மாற்றப்பட்டிருக்கிறது. இம்மாதிரி புதிதாக கூட்டுறவு பாங்குகள், ரூரல் பாங்குகள் முதலிய கூட் டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்திவிட்டு, அவர்களுக்கு வேறு ரூபங்களில் "பம்பு செட் லோன்", என்ஜின்கள் வாங்குவதற்கு "லோன்" ஐந்து வருஷங் களுக்கு கிடைக்கும்படி வசதி செய்து கொடுக்கப்படுகிறது. புதிய துறைகளின் மூலம் நாங்கள் வசதி செய்கிறோம் என்று சொல்லி விவசாயி பாங்கு கள், ரூரல் பாங்குகள் முதலியவைகளை ஆரம்பித்துக்கொண்டு அந்த கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் போதிய வசதிகள் செய்யாமல் இருந் தால், இந்தப் புதிய திட்டம் பற்றி கவர்ச்சிகரமாக நல்ல முறையில் நினைப் பதற்கு அற்ற நிலைமையில் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையினால் இந்த ஐந்து வருஷ நீண்டகால கடன்களை கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அதிசீக்கிரம் செய்வது மிகவும் அவசியம்.

அடுத்தபடியாக, கிராம "கோடவுன்களுக்கு" 50 சத விகிதம் உதவி செய்து வந்தார்கள். இனிமேல் 25 சத விகிதம்தான் உதவி தொகை கொடுப்பார்கள் என்று நான் அறிகிறேன். அப்படியானால் மிகவும் கஷ்ட மாக இருக்கும். கிராமப்புறங்களிலே கூட்டுறவு "கோடவுன்கள்" அமைப் பது மிகவும் அவசியம். முன்பு செய்து வந்த உதவியை சர்க்கார் இப்பொழுது குறைத்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மார்கடிங் சொஸைடிகள் போன்று புதியதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சங்கங்களுக்கும் "ஜின்னிங் பாக்டரி" முதலிய ஸ்தாபனங்களுக்கும் 'கோடவுன்களுக்காக', முன்போலவே அதே அளவில் இந்த உதவித் தொகையை கொடுத்துவர வேண்டும். இந்த ஸ்தாபனங்கள் வியாபாரத் துறைக்கு புதியவைகள். இவைகள் வியாபாரமுறையை எதிர்த்து நின்று தங்களுடைய பலத்தை ஸ்தாபிக்க வேண்டியிருக்கிறது. இந்த ஸ்தாபனங் கள் சரியான சுயபலம் பெறும் வரையிலாவது அரசாங்கம் இவைகளுக்கு போதிய உதவி அளித்து ஆதரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கு அரசாங்கம் பல வருஷகாலமாக நல்ல ஆதரவு கொடுத்துக்கொண்டு வருகிறது என்பதில் சந்தேகம் இல்லை. செஸ் நிதியை உண்மையான ரூபத்திலே நெசவாளர்கள் அடையும்படி யான வழியில் அதற்கு வழி வகைகள் காணவேண்டுமென்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுபற்றி விஸ் தாரமாக பேசுவதற்கு நான் விரும்பவில்லை. அனைவருமே, இந்தத் தரப்பில் மட்டுமல்ல, இந்தச் சபையிலுள்ள எல்லாத் தரப்பிலுமுள்ள, எல்லா



22nd July 1957] [Sri R. Krishnaswamy Naidu]

கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் இதுபற்றி அறிவார்கள் என்று நினைக்கிறேன். செஸ் நிதி தொகை உண்மையாக நெசவாளர்களுக்கு போய்ச் சேருவதற்கான நேர்மையான மார்க்கங்கள், வழிவகைகள் என்ன என்பது பற்றி எல்லா கட்சியிலுள்ள அங்கத்தினர்களின் உள்ளங்களிலும் உறுத்திக்கொண்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். எல்லோரும் அவ்வாறே நினைப்பார்கள். இதற்கு எல்லோருமாகச் சேர்ந்து இந்தக் காரியம் நல்ல முறையில் செயல்படுவதற்கு வழிவகைகள் காணவேண் டும், அதற்கான தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

டெப்யூடி ரிஜிஸ்டிரார் ஆபீசிலே வேலைகள் மிகவும் தாமதமாக நடை பெற்று வருகிறது. சங்கங்களின் தொகை அதிகமாக கூடிவிட்டது. டெப் யூடி ரிஜிஸ்டிரார், "லிக்விடேஷன் சப் ரிஜிஸ்டிரார்", "எக்ஸிகியூடிவ் சப் ரிஜிஸ்டிரார்", "ஜெனரல் சப் ரிஜிஸ்டிரார்", "பிராஸிகியூஷன் சப் ரிஜிஸ்டிரார்", போன்ற பல அதிகாரிகள் இருந்தும், ஆபீஸில் ஒரு பகுதியில் வேலை செய்யக்கூடிய 'கிளார்க்குகள்' போதாது இருப்பதால் வேலைகள் மிகமிக காலதாமதமாக செய்யப்பட்டு வருகின்றன. எவ்வ ளவோ நன்மை பயக்கக்கூடிய காரியங்கள் செய்யவேண்டியிருக்கும் பொழுது, ஆபீசுகளில் வேலை செய்யக்கூடியவர்கள் தொகை மிகவும் குறைந்து போனால், எத்தனையோ திட்டங்கள் போட்டாலும்கூட, தக்க வகையிலே திருப்திகரமாக ஆபீசுகளில் வேலை நடக்காமல் போய்விடு கிறது. ஆகையால் இந்த விஷயத்திலே கொஞ்சம் தாராள மனப்பான்மை காட்டி, காரியங்கள் தாமதமில்லாமல் நல்ல முறையில் நடப்பதற்கு வழி வகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தணிக்கை முதலானவைகள் சீக்கிரத்திலே அப்போதைக்கப்போது நடை பெறவேண்டும். சமீபத்திலே சில ரிப்போர்டுகள் வெளிவந்திருக்கின்றன. அந்த யோசனைகளை நான் அறிவேன். கூட்டுறவு துறையிலே தணிக்கை முறையும், நிர்வாக முறையும் ஒன்றுக்கொன்று இணைந்து நேர்மையாக நடப்பதற்கு வழிவகைகள் காணவேண்டும். ஒருவர்மீது ஒருவர் குற்றம் கண்டு பிடிக்கும் முறையில் காரியங்கள் நடந்து கொண்டு போனால், எவ்வளவோ குந்தகங்கள் ஏற்படும், நிர்வாக முறையில் கஷ்டங்கள் ஏற்படும். இதை கவனத்தில் கொண்டு அதி சீக்கிரம் இந்த ஏற்பாடுகளை செய்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**DEFUTY SPEAKFR**: Now the hon. Member Sri M. P. Subramaniam will speak. He must finish his speech within three or four minutes.

*** Sri M. P. SUBRAMANIAM**: அவைத் தலைவர் அவர்களே. . . .

**DEPUTY SPEAKER**: I think the hon. member will finish his speech within three or four minutes.

**Sri M. P. SUBRAMANIAM**: இந்த மான்யத்தின் மீது கொண்டு 12-54
வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதர்த்து ஒரு சில வார்த்தைகள் கூற p.m.
விரும்புகிறேன். நட்டுடைய ராஜ்யம் கூட்டுறவு முறையிலே வெகுவாக முன்னேற்றம் அடைந்திருந்தாலும் விவசாயத் துறையிலே கூட்டுறவு முறை முன்னேறவில்லை. கூட்டுறவு முறையிலே கடன் கொடுப்பது ஒன்று தான் வளர்ச்சியடைந்திருக்கிறது. விவசாயத் துறையிலே கடன் தரப் படுவதற்கு கோவை, மதுரை, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் கூட்டுறவு பண்ணைகள் ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே விவசாயத் துறையில் கூட்டுறவு முறை, வெகுவாக கையாளப்படவேண்டுமென்று பல பெரியவர்கள் வற் புறுத்தியிருக்கிறார்கள். ஆகையால், அந்த முறை வெற்றிகரமாக நடக் குமா என்று ஆராய்வது அவசியமில்லை. உடனே இங்கு விவசாயத் துறை

யில் கூட்டுறவு முறையை கையாளவேண்டும். விவசாயத் துறையில் கூட்டுறவு முறை கையாளப்படுவதற்கு சேலத்தில் அரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களுக்குக் கூறி, அதில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடன் கொடுக்கும் சொஸைடிகளின் மூலமாக பெருவாரியான மக்கள் பயனடையவில்லை. அதிகம் பேர்கள் மெம்பர்களாக சேருவதில் தடைகள் இருக்கின்றன. அதோடு கூட நிர்வாக சபைக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாளை பொது மக்களுக்கு நல்லபடியாக அறிவிப்பதில்லை. ஆகையால், ஹரிஜன தினம் கொண்டாடுவதுபோல், கூட்டுறவு தினம் என்று ஒரு மாதம் அல்லது 2 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டுறவு அதிகாரிகளை வைத்துக் கொண்டு ஒரு தினத்தை கொண்டாட ஏற்பாடு செய்யப்படவேண்டும். அந்த தினத்தில் கூட்டுறவு முறை நோக்கத்தையும், 1, 2 மாத காலத்தில் சொஸைடிகள் எப்படி நடந்திருக்கின்றன என்பது பற்றியும், எப்படி கூட்டுறவு ஸ்தாபனங்களை பொது மக்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது பற்றியும் பிரசாரம் செய்து மக்களுக்கு கூட்டுறவு முறையில் ஊக்கம் அளிக்க வேண்டும். கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கடன் வசதி கிடைப்பதே தெரியாமல்கூட இருக்கிறார்கள். 28 சத விகிதம் விவசாயிகள் கூட்டுறவு மூலம் பயனடைந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டாலும், 28 சத விகிதம் விவசாயிகள் உண்மையான பலனை பெற்றவர்களல்ல. உண்மையான பலன் அடைந்தவர்கள் 10 சத விகிதம் விவசாயிகள் தான் இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய உற்பத்தி பொருள்கள் சிலவற்றை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சில கூட்டுறவு சங்கங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பல கூட்டுறவு விற்பனை சங்கங்கள் தவறான முறையில் நடந்துகொண்டிருக்கின்றன என்று அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தும், தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உதாரணமாக, சேலம் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு சேலம், மாவட்டத்தில் சேலம் ஓமலூர் வட்டங்களில் விளையக் கூடிய மிளகாயை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளிடமிருந்து வாங்கி சிலோனுக்கு ஏற்றுமதி செய்து, அதிலே வரக்கூடிய லாபத்தை விவசாய கூட்டுறவு சங்கமும் விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்று லைசென்ஸ் வழங்கப்பட்டது. இந்த லைசென்ஸ் வைத்துக்கொண்டு தூத்துக்குடியிலிருந்து பெரிய வியாபாரிகளிடமிருந்து மிளகாய் வாங்கி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் தனிப்பட்ட முறையில் ரூ. 80,000 வரையில் லாபம் அடையும் நிலை ஏற்பட்டது. இதுபற்றி அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டதும், அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து கண்டுபிடிப்பதற்கு இரண்டு ஆண்டு காலமாக ரகசிய போலீஸாரை நியமித்து வேலை செய்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் இதுவரை சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. இது சேலம் மாவட்டத்தில் ஒரு பெரிய குறையாக இருக்கிறது. அதைப்போலவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கோபிசெட்டிப்பாளையத்தில் ஒரு ஸொஸைட்டியில் இருந்து 2,000 ரூபாய் கையாளப்பட்டது என்று இங்கு சட்ட சபை உறுப்பினர்களுக்கு கூட அறிவிக்கப்பட்டது. பின்னால் அதைப்பற்றி ஒன்றும் கேஸ் எடுக்காமல் கைவிடப்பட்டுவிட்டதாகவும் கேள்விப்படுகிறேன். இதெல்லாம் கூட்டுறவு சங்கங்களுக்கு ஊக்கம் அளிப்பது ஆகாது. அடுத்ததாக ஒரு விஷயம் கூற விரும்புகிறேன். வீடு கட்டுவதற்கு என்று அரசாங்கத்திலிருந்து பணம் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கமும் வீடு கட்டிக்கொடுக்காமல் தனிப்பட்டவர்களே கடன் பெற்று வீடு கட்டிக் கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. தனிப்பட்ட நபர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு கடன் கொடுக்கப்பட்ட போதிலும் அந்த வீடு பெரும்பாலும் வீடு கட்டி முடிக்கப்படுகிற சமயத்தில்தான் கடன் தொகை கொடுக்கப்படுகிறது. ஆகவே மெம்பர்களுக்கும் சரி, தனிப்பட்டவர்களுக்கானாலும்கூட முன் பணமாக கடன் தொகையில் நாலில் ஒரு பங்காவது முன் கூட்டி கொடுக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.





* **THE HON. SRI R. VENKATARAMAN**: சபா நாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆதரித்து பேசினவர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த மான்யக் கோரிக்கையைப்பற்றி பேசும்போது இதிலுள்ள முறை எல்லாம் சரியாக இருக்கிறது என்று சொன்னேனே தவிர இதிலுள்ள நடை எல்லாம் சரியாக இருக்கிறது என்று சொல்லவில்லை. பல இடங்களில் குறைகள் இருப்பதாக அங்கத்தினர்கள் கூறினார்கள், எந்த இடத்தில் சரியாக இல்லை என்று எழுதினால் நான் அதை கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன், என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக கனம் கோவிந்தசாமி அவர்கள் கூட்டுறவு முறையில் பண்ணைகள் வைக்கவில்லை என்று சொன்னார்கள், மேலும் பழைய முறைகளை மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். இந்த விஷயத்தில் யாருக்கும், கருத்து வித்தியாசம் இருந்தாலும்கூட இதில் எல்லா கட்சிக்காரர்களுக்கும் ஒரே கருத்தாகத்தான் இருக்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம்தான். அந்த அளவில் சர்க்கார் அதற்கு வேண்டிய முறையில் முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக இந்த நில அடமான கடன்கள் கொடுப்பதில் அதிகமாக கால தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இது ஓரளவு உண்மைதான என்று பார்த்தால், இதில் நில அடமானம் வாங்குகிறவர்கள் அவர்களுடைய நிலங்களுக்கு சுத்தமான பத்திரங்கள் வைத்திருக்கமாட்டார்கள். அவைகளை கவனிக்கவேண்டியிருக்கும், இதில் சற்று காலதாமதம் ஏற்படுவதாக தெரிகிறது. இதிலும் துரிதமாக வேலைகள் நடத்தப்படவேண்டும் என்று வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன். அடுத்தபடியாக கைத்தறி நாள் (Handloom day) பொங்கல் நாளன்று கொண்டாடப்பட வேண்டும் என்று சொன்னார்கள். சாதாரணமாக பொங்கல் நாளன்று இந்த நாள் கொண்டாடப்படாமலே கைத்தறி ஆடைகள் அதிகமாக விற்கும்பொழுது இந்த தினம் பொங்கல் தினத்தன்று கொண்டாடப்படாமல் மற்றொரு சமயத்தில் இந்த நாளை கொண்டாடினால் இரண்டு மடங்காக விற்பனையாகும் என்று தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் கடன் வசதி கூடுதலாக அளிக்கப்பட வேண்டும் என்றும்; மார்வாடிகள் போன்றவர்கள் சென்னையிலுள்ள ஆபீஸ்களில் வந்து நின்று கொண்டு அதிகப்படியான வட்டி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று பலர் கண்டித்து பேசினார்கள். வட்டி வாங்குவது மார்வாடிகளாய் இருந்தாலும் சரி, வேறு யாராய் இருந்தாலும் சரி, இம்மாதிரி அதிக வட்டி தொழிலாளர்களிடமிருந்தும் ஏழை மக்களிடமிருந்தும் வாங்குவதை தடுக்க வேண்டியது நம்முடைய கடமை. அதற்காகவே சென்னையில் பல இடங்களில் தொழிலாளர்கள் ஸொஸைட்டிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சமீபத்தில் விம்கோ கம்பெனி தொழிலாளர்கள் ஒரு கோவாப்ரடிவ் ஸொஸைட்டி ஆரம்பித்திருக்கிறார்கள். அதே போன்றுதான் ஸிம்ஸன் கம்பெனி தொழிலாளர்களும் சுமார் 4 லட்சம் ரூபாய் வரவு செலவுள்ள ஒரு கூட்டுறவு சங்கத்தை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள், இதன் மூலம் அவர்கள் கடன் பெற்றுவருகிறார்கள். இந்த சங்கங்களின் மூலம் அவர்களின் கஷ்டங்கள் ஓரளவு நீங்கிக்கொண்டிருக்கிறது. கனம் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையைப்பற்றி சொன்னார்கள். அதாவது "ஆடிட்" டையும் "அட்மினிஸ்ட்ரேஷனை" யும் பிரத்யேகமாக பிரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். இதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். நாராயணசுவாமி பிள்ளை அவர்கள் ரிப்போர்ட்டிலும் இதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்விதம் பிரிப்பதில் முடிவான அதிகாரம் யாரிடத்தில் இருப்பது என்கிற விஷயத்தைத்தான் சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் இதற்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்று நினைக்கிறேன். அதுவும் சீக்கிரம் அறிவிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக விவசாய கடன் பாங்க் கொடுக்கிற கடன் விஷயமாக ரிசர்வ் பாங்கிலிருந்து ஸ்டேட் பாங்குக்கு மாற்றப்படுகிற விஷயத்தைப்பற்றி சொன்னார்கள். சர்க்காருக்கு இது விஷயமாக எந்த விதமான தகவலும் கிடையாது. டெல்லி அரசாங்கத்தின் ராஜ்ய சபையில் மந்திரி அவர்கள் பேசினார்கள் என்ற தகவல்தான் 1-03 p.m.

[Sri R. Venkataraman] [22nd July 1957

உண்டு. அதை வைத்துக்கொண்டு சர்க்கார் தன்னுடைய அபிப்பிராயத்தை இப்பொழுது சொல்வதற்கில்லை. என்றாலும் அங்கத்தினர் அவர்கள் கூறுகின்ற காரணத்தை சந்தர்ப்பம் வருகின்ற சமயத்தில் மத்திய சர்க்காரிடத்தில் சென்னை சர்க்காரால் எடுத்துச் சொல்வேண்டிய கடமை இருக்கிறது. அதை எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் கிருஷ்ணசுவாமி நாயுடு அவர்கள் உரம் விநியோகம் சம்பந்தமாகவும், தக்காவி கடன் கொடுக்கப்படுவது சம்பந்தமாகவும், இவைகள் எல்லாம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொடுக்கப்படவேண்டும் என்று கூறினார்கள். இதைப்பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் மில் தடைப்பட்டு கிடக்கிறது என்பதைப்பற்றி சொன்னார்கள். இப்போது "ஸ்பின்டில்ஸ்" இல்லாததினால் தடைபட்டு இருக்கிறது. இதை கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே மாகாண சர்க்கார் ஒன்றுமே செய்யாமல் இருக்கிறது என்று யாரும் நினைக்கவேண்டாம் என்று தாழ்மையோடு கேட்டு கொள்கிறேன். அடுத்ததாக கனம் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சேலம் கூட்டுறவு சங்கத்திலும் கோபிச்செட்டிப்பாளையத்திலும் ஏதோ கையாடல்கள் நடந்ததாக தெரிவித்தார்கள். இந்த விஷயத்தைப்பற்றி சர்க்கார் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வீடு கட்டும் திட்டத்தில் நாம் நல்ல முறையில் முன்னேறியிருக்கிறோம். இருந்தாலும் நமக்கு இன்னும் எவ்வளவோ அவசியங்கள் இருக்கின்றன. இதைப்பற்றியும் அரசாங்கம் வேண்டிய முயற்சி செய்து வருகிறது. இதற்காக ஒன்றிரண்டு புள்ளி விவரங்கள் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போது 194 "அர்பன் கோவாப்ரடிவ் ஸொஸைட்டி" கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் இருபது லட்சத்தி எண்பத்துமூவாயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள பட்ஜெட்டில் 11 லட்சம் இதற்கென்று அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு குறைந்த வருமானக்காரர்களுக்கு வீடு கட்டுவதற்கென்று சென்ற ஆண்டில் 16 லட்சம் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது பட்ஜெட்டில் 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகள் மாத்திரம் போதாது. இன்னும் உதவிகள் தேவைதான். அதற்கெல்லாம் இந்த சர்க்காரும் இருக்கக்கூடிய குறைகளை ஏற்று மக்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை போக்குவதற்காக சர்க்கார் என்றும் தயாராக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு மீண்டும் என் நன்றியை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு இந்த மான்யத்தை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri N. S. RAMALINGAM : On a point of information, Sir,** ஆடிட்டையும் அட்மினிஸ்ட்ரேஷனையும் பிரிப்பதற்கு சர்க்கார் ஆலோசனை செய்துகொண்டிருப்பதாகவும் சீக்கிரமாகவே முடிவு எடுக்கப்படும் என்றும் மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். இந்த விஷயத்தை உத்தியோகப் பற்றற்ற கூட்டுறவு சங்க பிரதிநிதிகளையும் இந்த சபையையும் கலந்து ஆலோசித்து ஒரு முடிவு எடுக்க சர்க்கார் முன் வருமா என்பதை மந்திரி அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது விஷயமாக இப்போது சர்க்கார் உத்யோகப் பற்றற்றவர்களையும் சங்கங்களையும் சட்ட சபையையும் கலந்தாலோசிக்கவேண்டும் என்று உத்தேசிக்கவில்லை. ஏனென்றால் இதை சாதாரணமாக **administrative function** என்று சொல்லுவார்கள். இதில் ஒரு கொள்கையை ஒத்துக்கொண்ட பிறகு தான் இதை நடைமுறையில் கொண்டு வரும்போது இதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

DEPUTY SPEAKER : Is the hon. Member A. Govindasamy withdrawing his cut motion?

SRI A. GOVINDASAMY : No, Sir. I am pressing my cut motion.



22nd July 1957]

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 1,70,23,400 under Demand XX—Co-operation—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : I now put the Demand to the vote of the House. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,70,23,400 under Demand XX—Co-operation."

The Demand was put and carried and the Grant was made.

(3) DEMAND XXIII—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI R. VENKATARAMAN : Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 28,10,500 under Demand XXIII—Labour including Factories."

உதவி சபா நாயகர் அவர்களே, இது விஷயமாக விரிவாக நான் பதில் சொல்ல நினைத்திருப்பதால் பூர்வாங்கமாக எந்தவிதமான பேச்சும் இப்பொழுது செய்யாமல் முடிவில் எனக்கு முக்கால் அல்லது 1 மணி நேரம் கொடுக்கும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not excee Rs. 28,10,500 under Demand XXIII—Labour including Factor

SRI A. GOVINDASAMY : ஸார் விவாதத்தை ஆரம்பிக்கு மந்திரியவர்களின் கருத்தை தெரிவித்தால் தான் அதைப்பற்றி விவா முடியும். ஆகவே அதைப் பற்றி முதலிலேயே சொல்லவேண்டும்.

DEPUTY SPEAKER : அவரை compel பண்ண உங்களுக்கு அதி கிடையாது. அவருக்கு சொல்ல இஷ்டம் இல்லாவிட்டால் அவரை சொ சொல்ல எனக்கு அதிகாரம் கிடையாது.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

"That the allotment of Rs. 28,10,500 under De XXIII—Labour including Factories be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 28,10,500 under De XXIII—Labour including Factories be reduced by Rs. 100."

The Demand and the cut motion are now before the Hou discussion.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாந அவர்களே, சுதந்திரம் பெற்று 10 ஆண்டுகளாகிறது. இந்த நிலை 10-வது ஆண்டு சுதந்திர விழா கொண்டாடப் போகிறோம். அதேபோல் நூறு ஆண்டு சுதந்திர புரட்சி விழாவும் கொண்டாடப் போகிறோம். இந்த சந்தர்ப்பத்தில்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகாமாக நடக்கவேண்டும். அப்படி அது வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றால் தொழிலாளர்

[Sri V. K. Kothandaraman] [22nd July 1957

களுடைய, விவசாயிகளுடைய, வியாபாரிகளுடைய, சாமான்ய பொதுமக்களுடைய ஒத்துழைப்பு மிக மிக அத்தியாவசியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். இந்த நிலைமையிலே தொழிலாளர்களின் நிலை எப்படியிருக்கிறது என்பதை நாம் பார்ப்போமேயானால், தொழிலாளர்களுடைய பிரச்னைகளையும், அவர்களது குறைபாடுகளையும் உடனுக்குடனே தீர்த்து வைக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு சட்டங்கள் இருக்கிறதா என்று பார்ப்போமேயானால் அதுதான் கிடையாது. நாள் கணக்கில் நீடித்துப் போகக் கூடிய ஒரு நிலைதான் இருக்கிறது. அதற்குக் காரணம் நம் சர்க்காரின் போக்கு, சர்க்காரின் கொள்கைகள் இவைகள்தான் என்பதைத்தான் நாம் இந்த நிலையில் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இன்றைக்கு பார்ப்போமேயானால், சட்டங்கள் எல்லாம் முதலாளிகளுக்கு சாதகமான சட்டங்களாகத்தான் இருக்கிறது. ஓரளவிற்கு தொழிலாளர்களுக்கு சாதகமாக இருந்து வந்த சட்டங்கள்கூட, சமீபகாலமாக, பத்து வருஷ காலமாக இருந்து வந்த சட்டங்கள்கூட சமீபத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. உதாரணமாக சொல்லவேண்டுமானால், இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்டில் இருக்கக்கூடிய 33-ஏ செக்ஷன் மாற்றப்பட்டிருக்கிறது. அதேபோல் ஷாப் ஆக்ட் என்று சொல்லக்கூடிய, ஓரளவிற்கு வர்த்தக குமஸ்தாக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சாதகமாக இருந்து வந்த சட்டமும் மாற்றப்பட்டிருக்கிறது. அதனால் தொழிலாளர்கள் எவ்வளவோ பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதே போன்று எவ்வளவோ சட்டங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. மாற்றப்படுவதோடு மட்டுமல்ல தொழிலாளர்களுக்கு எந்தவிதமான முறையிலும் சாதகமாக இல்லாத நிலையில்தான் இருந்து வருகிறது. அதே நேரத்தில் இன்று கோர்ட்டுகள் மூலம் தீர்ப்பு கிடைக்கக் கூடிய நிலை, அவ்வளவு சீக்கிரத்தில் தீர்ப்பு கிடைத்து விடுவதில்லை. அப்படி கோர்ட் தீர்ப்பு வந்தாலும்கூட அதை உடன் அமுல் செலுத்தக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறதா என்று பார்ப்போமேயானால் அதுவும் கிடையாது. இன்றைக்கு தொழில் கோர்ட்டுகளின் தீர்ப்புகளை மீறக்கூடிய தொழில் அதிகாரிகளுக்கும், முதலாளிகளுக்கும், அவர்களிடம் என்னதான் சொன்னாலும்கூட அவர்கள் கேட்காமல் கதவடைப்பு செய்வதோ அல்லது தொழிலாளர்களை பழி வாங்கவோ இதுபோன்ற நிலைமைதான் இருந்து வருகிறது. அதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது இன்று நம்முடைய சர்க்காரின் பாலிஸி, இன்று இருக்கக்கூடிய சட்டங்கள் முதலாளிகளுக்கு சாதகமாக இருப்பதுதான் அதற்குக் காரணம். இன்றைக்கு உதாரணமாக பார்ப்போமேயானால், இதே சென்னையில் டார் பாக்ரிடயில் ஒரு போராட்டம் நடந்து வருகிறது. போராட்டம் என்று சொன்னால், தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்காமல், கதவடைப்பு செய்து மாதம் ஒன்றாகிறது. அந்தத் தொழிலாளர்களை அரஸ்ட் செய்து ஜெயிலில் வைக்கக் கூடிய நிலையைத்தான் பார்க்கிறோமே தவிர முதலாளிக்குத்தான் போலீஸ் பாதுகாப்பு இருக்கிறதேயொழிய பட்டினி கிடக்கும் தொழிலாளிகளுக்கு ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா என்று பார்த்தால் அதுதான் இல்லை. தொழிலாளர்களை பட்டினி போட்டு பணிய வைக்கக் கூடிய அளவிற்கு இன்று முதலாளிகள் இருக்கிறார்கள். அம்முதலாளிகளுக்குத்தான் சர்க்காரும், சர்க்காரின் சட்டங்களும் பாதுகாப்பு அளிப்பதை நாம் இன்றைய தினம் காண்கிறோம். அதே நேரத்தில் தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் தீர்ப்பு பல வருடங்களுக்குப் பின் வந்தது. அதை அமுல் செலுத்தவேண்டுமென்று கேட்டதற்கு, தேர்தல் காலத்தில் துப்பாக்கி பிரயோகம் செய்து நான்கு பேர்கள் மாண்டு மடிந்ததை நாம் பார்க்கிறோம். இந்த நிலைமை நீடித்துக்கொண்டு போகுமேயானால் எப்படி முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் சுமுகமான உறவு இருக்க முடியும், என்பதை நாம் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். தொழிலாளர்களை வருஷக்கணக்கில் டெம்பரரி தொழிலாளர்களாக பாவிக்கிறார்கள். அவர்களை நிரந்தரமான தொழிலாளர்களாக ஆக்குவதில்லை. காரணம் என்னவென்றால், குறைந்த பட்ச கூலியைக் கொடுத்து பெரிய அளவில் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கம் தான். சர்க்கார் உத்தியோகம் பார்க்கக் கூடிய சர்க்கார் சிப்பந்திகளையே வருஷக் கணக்கில் டெம்பரரியாக வைத்திருக்கக் கூடிய ஒரு நிலைமை இருக்குமானால் முதலாளிகளும் என்



22nd July 1957] [Sri V. K. Kothandaraman]

அந்த மாதிரியான போக்கை அனுஷ்டிக்க மாட்டார்கள் என்பதை நாம் ஆலோசித்துப் பார்க்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். அதோடு மினிமம் வேஜை எடுத்துக்கொண்டால், எல்லா தொழிலாளிகளுக்கும் மினிமம் வேஜ் இல்லை. அவர்களுக்கு அதை கொண்டு வர வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதைக் கொண்டு வந்திருந்தாலும் இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசிகளின் அடிப்படையில், விலைவாசிகள் எந்த அளவிற்கு ஏறியிருக்கிறதோ அந்த அளவிற்கு கூலி உயர்வு கிடையவே கிடையாது. ஆகவே, இன்றைக்கு ஹோட்டல் தொழிலாளி, மாட்ச் பாக்டரி தொழிலாளி, சுருட்டு தொழிலாளி, ப்ரஸ் தொழிலாளி போன்ற தொழிலாளர்களுக்கு இன்று மினிமம் வேஜ் கிடையாது. பீடி பாக்டரி தொழிலாளிகளுக்கும் கிடையாது. இருந்த போதிலும் இன்றைக்கு இருக்கக் கூடிய நமது தொழில் அமைச்சரவர்கள் அதற்கு ஓர் மினிமம் வேஜ் கமிட்டியை இப்போதுதான் போட்டிருக்கிறார்கள். அது வருவதற்கு இன்னும் எவ்வளவு நாட்களாகுமோ தெரியாது. நினைத்தவுடன் கதவடைப்பு செய்து விடுவார்கள், தொழிலாளிகளை பழி வாங்குவார்கள் முதலாளிகள் என்று நான் சொன்னேன். இந்த மாதிரி ஒரு நிலை ஏற்படும்போது சர்க்கார் தைரியமாக முன்னின்று தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ராஜாஜி அவர்கள் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் ஆரணியில் கதவடைப்பு நடந்தது. அப்பொழுது 144 சட்டத்தைக் கொண்டு வந்து அவர்களை சரி பண்ணி வேலைக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய ஒரு நிலையைப் பார்த்தோம். இன்றைக்கு கம்யூனிஸ்ட் தலைமையின் கீழ் இருக்கும் தொழிற் சங்கமானாலும் சரி, அல்லது வேறு எந்த கட்சியின் தலைமையில் நடந்தாலும் சரி, அல்லது கட்சிப் பற்றற்ற சங்கமானாலும் சரி, அத்தொழிலாளர்களை பழி வாங்கி வருகிறார்கள். அதோடு, மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த, இன்றைக்கு கொள்ளை லாபம் சம்பாதிக்கக் கூடிய ஹிந்து பத்திரிகை உதவி ஆசிரியராக இருந்தவரைக் கூட பழி வாங்கப்பட்டு, இன்றைக்கு அதிகாரிகள் தலையிட்டும், மந்திரி தலையிட்டுச் சொல்லியும் அதை எடுத்துக் கொள்ளாத நிலையில் அது தொழில் கோர்ட்டிற்கு விடப்பட்டிருக்கிறது. அதன் தீர்ப்பு வர எத்தனை மாதகாலம் ஆகுமோ தெரியாது. இது போன்ற நிலைமை நீடிக்குமானால், கோர்ட்டு தீர்ப்பு வந்தாலும் அதை உடனடி அமுல் செலுத்தக் கூடிய அளவிற்கு ஏதாவது உத்தரவாதம் இருக்கிறதா என்று கேட்டால் அதுவும் கிடையாது. ஆகவே கதவடைப்பு செய்யக் கூடிய காலத்தில் சர்க்கார் தலையிட்டு அது எவ்வளவு நாட்கள் நீடிக்குமோ அந்த நாட்களுக்கு அவர்கள் வாழ்வதற்குள்ள சம்பளமாவது கொடுக்கும்படி சர்க்கார் நிர்ப்பந்திக்க வேண்டும். அப்படி கொடுக்கவில்லை, தீர்க்கவில்லை என்றால் உடனடி அந்த பாக்டரியுடைய லைசென்ஸை கான்சல் செய்ய வேண்டும். அவர்களுக்கு போலீஸ் பந்தோபஸ்து கொடுக்கக் கூடாது. அந்த அளவிற்கு முறையை கையாண்டால்தான் அவர்கள் சர்க்காரை மதிப்பார்களே தவிர இல்லாவிடில் சர்க்காரின் சட்டங்களுக்கு அவர்கள் மதிப்பு கொடுக்கமாட்டார்கள் என்ற நிலைதான் இன்று இருக்கிறது.

அதே போன்று மினிமம் வேஜஸ் கமிட்டி சம்பந்தமாக சமீபத்திலே; ஜுலை 15-ம் தேதி டில்லியில் அகில இந்திய தொழிலாளர்கள் கான்பரன்ஸில் முடிவு எடுத்திருக்கிறார்கள். மினிமம் வேஜஸ் கமிட்டி முடிவுப்படி வாழ்க்கைத்தரத்திற்குக் குறைந்த சம்பளம் இருக்கிறது என்று சொன்னால், இதற்கெல்லாம் உடனடியாக மீண்டும் மினிமம் வேஜஸ் கமிட்டிகள் அமைக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆகவே, யார் யாருக்குக் குறைந்த சம்பளம் இருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் உடனடியாக மினிமம் வேஜஸ் கமிட்டிகள் அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்க அங்கீகாரம்—ஏற்கெனவேயே, முக்கூட்டு மகாநாடுகள் நடத்தப்பட்டன. அதெல்லாம் என்ன ஆனது என்று தெரியவில்லை. மீண்டும் உடனடியாக சங்கங்கள் அங்கீகாரம் செய்யவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வொர்க்ஸ் கமிட்டி என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அது நாம்-கே-வாஸ்தேயாகத்தானிருக்கிறது. சரியாக வேலை செய்கிறதா என்றால் கிடையாது. அதற்கு மேலும் அதிகாரத்தை விரிவுபடுத்த வேண்டும். அந்தக்

[Sri V. K. Kothandaraman] [22nd July 1957

கமிட்டி எடுக்கக்கூடிய முடிவுகள் முதலாளிகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். இதற்கு வேண்டிய சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது போன்று தீர்ப்புகள் இன்றைக்கு வருகின்றன என்று சொன்னால் உடனடியாக தீர்ப்பை அமுல் செய்ய தொழில் கோர்ட்டுக்கு பரிபூரண அதிகாரம் இருக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

DEPUTY SPEAKER: The hon. Member's time is up. Sri J. Matha Gowder will now speak.

SRI V. K. KOTHANDARAMAN: Two more minutes may be allowed to me, Sir.

DEPUTY SPEAKER: No. I have called Sri Matha Gowder to speak. The hon. Member will resume his seat.

*SRI J. MATHA GOWDER: கனம் சபா நாயகர் அவர்களே, இந்த ”மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்கிறேன். தொழிலாளர்களைப் பொருத்த வரையில் குறைகள் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, எவ்வளவோ துறையில் நமது அரசாங்கம் விரிவான திட்டங்களைச் செய்து அவர்களுக்கு ஆவன செய்திருப்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. ஆனால் முதலாளிகளைப் பொறுத்த வரையில், அரசாங்கம் ஒரு சட்டத்தைப் போட்டுவிட்டால், அந்த சட்டத்திலிருந்து எப்படி தப்பித்துக்கொள்வது என்று சூழ்ச்சி செய்கிறார்களே தவிர, அரசாங்கத்திடம் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக, நம்முடைய பட்ஜெட் உரையிலே மலைத் தோட்டங்களுக்கு அதிகப் படியான அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் போட்டிருக்கிறது. ஆனால் இப்போது நீலகிரியிலே, தோட்ட முதலாளிகள் என்ன செய்கிறார்கள் என்றால், தோட்டங்களை அதிக ஏக்கர் வைத்துக் கொண்டு போனால், அதாவது ஆயிரக் கணக்காக இருந்தால், அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் விஷயத்தில் அதிகம் கொடுக்கவேண்டுமென்று சொல்லி, சர்க்காரை ஏமாற்றவும், தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைக்கவும் தற்போது சூழ்ச்சி செய்து வருகிறார்கள். இப்போது சில தோட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தோட்டங்களை முப்பது ஏக்கருக்குக் கம்மியாகச் செய்து பிளாண்டேஷன் ஆக்டிலிருந்து தப்பிக் கொள்ள எண்ணுகிறார்கள். அதாவது முப்பது ஏக்கருக்குக் குறைவாக்க அந்த தோட்டத்தை மகன் பேரிலும், சம்சாரத்தின் பேரிலும், மற்ற உறவினர்கள் பேரிலும் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நூறு ஏக்கருக்கு மேல் இருந்த நிலங்களைப் பங்கு போட்டிருப்பதைப் பற்றி நீலகிரி தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக கனம் அமைச்சருக்கு விண்ணப்பம் செய்திருக்கிறோம். இதற்கு சர்க்காரிடமிருந்து பிரிவினை ஏற்பட்ட பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று பதில் வந்திருக்கிறது. ஐந்து வருஷங்களுக்குப் பிறகு, எல்லாம் பிரித்த பிறகு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அதற்கு ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கவேண்டும். இதனால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய், கோர்ட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள ஏதுவாயிருக்கிறது. கனம் அங்கத்தினர் கோதண்டராமன் சொன்னது மாதிரி கோர்ட் தீர்ப்பை அமுல் நடத்தவேண்டுமென்று போட்டிருந்தும், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக இடமிருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் விடுகிறார்கள். இதனால் தொழிலாளர்கள் தவிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. தொழில் கோர்ட்டுக்குப் போய் நாலரை வருஷத்திற்குப் பிறகு அந்த கோர்ட் தீர்ப்பை அமுல் நடத்தாமல் பணம் வைத்திருக்கும் முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் இன்னும் 4 வருஷம் இழுத்துவிடும் என்ற காரணத்தால் நீலகிரி தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்தில் மந்திரி அவர்கள் தலையிட்டு சுமுகமான முடிவை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருந்தால் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படக் கூடிய நிலை ஏற்படும். இந்த மாதிரி தோட்டங்களைப் பிரிக்கக் கூடாது என்று நிச்சயமாக செய்யவேண்டும்.



22nd July 1957] [Sri J. Matha Gowder]

இன்றைக்கு இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த சட்டத்திற்கு ஒரு அமெண்ட்மெண்ட் செய்து மூன்று வருஷத்திற்குப் பிறகு பிரிக்கப்பட்டிருந்தாலும் அவைகளை ஒரே தோட்டமாக பாவிக்க வேண்டுமென்று மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு முதலாளிகள் என்ன செய்கிறார்களென்றால், 200 ஆட்கள் இருந்தால் அவர்களில் 40 பேரை பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஏழெட்டு கணக்குகள் வைத்திருக்கிறார்கள். ஒரு முதலாளி எட்டு கணக்குகள் வைத்திருக்கிறார். ஒரு புத்தகத்தில் 40 பேரை வைத்திருக்கிறார்கள். பாக்கி 160 பேரும் டெம்பரெரியாக வைத்திருக்கிறார்கள். இப்படி இருப்பதால் இந்த 160 பேருக்கும் போனஸ், மற்றும் இதர சலுகைகளும் கொடுக்க வேண்டியதில்லை என்று பார்க்கிறார்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்றால், ஒரு ஏக்கருக்கு $1\frac{1}{4}$ ஆள் இருக்கவேண்டுமென்று உபாசி சிபார்சு செய்திருக்கிறார்கள். இதை அமுல் செய்யாமல் ஏமாற்றங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆளாயிருந்தாலும் சரி, அல்லது $1\frac{1}{4}$ ஆள் என்று தீர்ப்பானாலும் சரி, முதலாளிகள், தொழிலாளர்கள், தொழிற் சங்கங்கள் எல்லோரையும் கூப்பிட்டு முடிவு செய்து அந்த அளவு ஆட்களை வைக்கவேண்டுமென்று சட்டத்தை திருத்தினால் நல்லது. அதோடு தொழிலாளர்களுக்கு பிராவிடெண்ட் பண்ட் கொடுப்பதிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். அதாவது 40க்குக் குறைவாக இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம் என்று இம்மாதிரி செய்கிறார்கள். தொழிலாளர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் சட்டம் இயற்றுகிற நேரத்தில், தோட்டங்களைப் பிரிக்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் முதலாளிகள்.

இன்னொன்று. நீலகிரி ஜில்லாவில் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஐ.எல்.ஓ. உத்திரவை வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையில் மூன்றாவது ஆள் இருக்கக் கூடாது என்ற இந்த தீர்மானத்தை சட்டமாக இயற்றவிருக்கிறது. மூன்றாவது ஆள் இருக்கக் கூடாது என்று ஐ.எல்.ஓ. சொல்வதைத் தவிர தோட்டத் தொழிலாளர் யாரும் சொல்லவில்லை. இதனால் தொழிலாளர்களுக்கும் கண்காணி, அதாவது மேஸ்திரிகளுக்கும் ஒற்றுமை இருக்கும் இடத்தில் பிரிப்பதற்கு அடிப்படையாக நிலைமை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த ஐ.எல்.ஓ. தீர்மானத்தை அமுல் நடத்தினால் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் கஷ்டம் அடையும். இந்த மேஸ்திரிகளில் சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களிலிருந்து ஆயிரக் கணக்கானவர்கள் தோட்டத் தொழிலில் மேஸ்திரிகளாக வந்திருக்கிறார்கள். அவர்கள் அங்குள்ள வீடு வாசல்களை விட்டு விட்டு வரவில்லை. அங்குள்ள வீடுகளையெல்லாம் விற்றுவிட்டுத்தான் வந்திருக்கிறார்கள். இதை மனதில் வைத்துக் கொண்டு மந்திரி அவர்கள் நீலகிரி ஜில்லாவைப் பொருத்த வரையில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மேஸ்திரிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தற்போது நமது தொழிலமைச்சராக இருப்பவர்கள் தொழில் சங்கத் தலைவராக இருந்திருக்கிறார்கள். நீலகிரி ஜில்லாவைப் பொருத்தவரையில் அவருக்கு ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அது அவருக்கு நன்கு தெரிந்திருக்கிறது. ஆகையால் நன்கு சீராகப் பார்த்து, அவருடைய செல்வாக்கை உபயோகித்து தீர ஆலோசனை செய்து இவைகளுக்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர லேபர் ஆபீஸர் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவர்கள் கன்ஸிலியேஷன் ஆபீசராக பாவிக்கப்படுகிறார்கள். இந்த லேபர் ஆபீஸர்கள் என்ன செய்கிறார்களென்றால், லேபர் ஆபீஸர்களுக்கு எழுதி, கன்ஸிலியேஷன் வைக்க வேண்டுமென்று கேட்ட பிறகு கன்ஸிலியேஷனுக்கு டேட் பிக்ஸ் செய்து அந்த தோட்டத்திலேயே கன்ஸிலியேஷன் நடத்த ஏற்பாடு செய்கிறார்கள். முதலாளிகள் கோர்ட்டுக்குப் போகவேண்டியதில்லை. முதலாளிகள் காரில் போகிறார்கள். ஆனால் இந்தத் தொழிலாளர்கள் கால் நடையாகப் போய்ப் பார்த்தால் அங்கு முதலாளி

இருப்பது கிடையாது. வேறு அங்கு வேலை செய்கிறவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்களாவென்றால் அதுவும் கிடையாது. அங்கு இருக்கக் கூடிய ஒரு பியூன் முதலாளி வெளியே போய்விட்டார் என்று சொல்லி விடுகிறார். அதனால் அந்தத் தொழிலாளிகள் திரும்ப வேண்டியிருக்கிறது.

இதற்கு நிச்சயமாக நாம் ஒன்று செய்யவேண்டும். இப்பொழுது கோர்ட்டுகளிலிருந்து சம்மன் அனுப்புகிறார்கள். அப்படி அவர்களுக்கும் சம்மன் அனுப்பவேண்டும். அப்படி சம்மனை பெற்றுகொண்டு வரவில்லையானால் அவர்களுக்கு வாரண்ட் அனுப்பி வைக்கவேண்டும். இப்படி ஐந்தாவது முறை லேபர் ஆபீசர்களுடைய சம்மனுக்கு மதிப்புக் கொடுக்க வில்லையானால் அவர் பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இதை நான் என்னுடைய அனுபவ பூர்வமாகச் சொல்லுகிறேன்.

நீலகிரி ஜில்லா ஒரு மலைப்பிரதேசமாக இருக்கிறது. அங்குள்ள லேபர் ஆபீசருக்கு வண்டி வசதியோ அல்லது வாகன வசதியோ கிடையாது. மெயின் ரோடு சுமார் நாலைந்து தான் இருக்கிறது. அவைகளில்தான் பஸ்கள் போய்க்கொண்டிருக்கின்றன. மற்றவைகளில் போக்குவரத்து கிடையாது. இந்த நாலைந்து ரோடுகளில் பஸ்கள் போய்விட்டு அதன் பிறகு தோட்டங்களுக்குச் செல்வதாக இருந்தால் சுமார் 20 மைலுக்கு அவர்களுக்கு போக்குவரத்து வசதி கிடையாது. அவர்களுக்கு ஜீப் கார்கள் கிடையாது. சிக்கனத்தை முன்னிட்டு இப்பொழுது கொடுக்கப்பட்ட ஜீப்களையெல்லாம் திருப்பி வாங்கப்படுவதாகக் கேள்விப்பட்டேன். அப்படி இருந்தால் நீலகிரி ஜில்லாவிற்கு அப்படிச் செய்யாமல் அங்குள்ள லேபர் ஆபீசருக்கு ஒரு ஜீப் கார் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கு லேபர் ஆபீசர் தொழிலாளர்களை அடிக்கடி சந்திக்க வேண்டியதாக இருப்பதாலும் அங்கு போக்குவரத்து வசதி இல்லாமல் இருப்பதாலும் அந்த ஜில்லாவிற்கு மட்டிலாவது ஜீப் கார் ஒன்றை கண்டிப்பாக கொடுத்து உதவும்படியாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் திட்டம் போட்டுக்கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதாக இல்லை. ஐந்து வருஷங்களில் இவ்வளவு வீடுகள் கட்ட வேண்டும் என்று சர்க்கார் சிபார்சு செய்திருக்கிறார்கள். ஆனால் முதலாளிகள் அப்படிக் கட்டிக்கொடுக்காமல் ஐந்தாவது வருஷம் மார்சு மாதம் வரையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்காமல் இருந்துவிட்டு பிப்ரவரி மாதத்திலேயே தங்களுடைய தோட்டங்களை விற்றுவிட்டு போய்விடுகிறார்கள். புது முதலாளிகள் வந்து விடுகிறார்கள். அவரும் அப்படியே செய்கிறார். அதனால் தொழிலாளர்களுக்கு வீடுகள் இல்லாமலேயே போய் விடுகிறது. இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும். ஆகவே வருஷத்திற்கு இவ்வளவு வீடுகள் நிச்சயமாகக் கட்ட வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும். இதை அமைச்சர் அவர்கள் தங்களுடைய காலத்திலேயே செய்வார்கள் என்று நம்பிக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* Sri P. S. CHINNADURAI . மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய ராஜ்யத்தில் அதிருஷ்ட வசமாக தொழிலாளர் இயக்கத்தில் முன்பு தொடர்பு கொண்டிருந்த தலைசிறந்த ஒரு ஊழியர் இப்பொழுது தொழிலாளர் அமைச்சராக நியமனம் பெற்றிருக்கிறார். இந்த நியமனம் சம்பந்தப்பட்ட வரை மாத்திரம் நான் எனது பாராட்டுதலை தெரிவிக்க முடியுமே தவிர இந்த அரசாங்கம் அனுஷ்டிக்கிற தொழிலாளர்களுடைய கொள்கை இருக்கிறதே அதற்காக நான் என்னுடைய பாராட்டுதலை அளிக்க முடியாமல் இருக்கிறேன். என் என்று கேட்டால் புதிய ஒரு சமுதாய அமைப்பை அமைக்க வேண்டும் என்று நாம் உறுதி கொண்டவர்கள். சோஷலிஸ சமுதாய அமைப்பை நம்முடைய காலத்தில் நிறுவ வேண்டும். என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறோம். அதற்கு வழிவகை காண தீவிரமாகவும் வெகு வேகமாகவும் காரியங்களை நடத்திக்கொண்டு போக



வேண்டும். சோஷலிஸ சமுதாய அமைப்பில் தொழிலாளர்களுடைய நிலை உயர்ந்திருக்க வேண்டும். அந்த நிலையில் அரசாங்கம் முன்னேற்றமடையவில்லை. இன்றைக்கு அரசாங்கம் தொழிலாளர்களுடைய நிலையை உயர்த்துவதற்கும் வழிவகை காணவில்லை என்பதை நான் நிச்சயமாகச் சொல்லுவேன். சோஷலிஸ சமுதாய அமைப்பில் உழைப்புக்கு மதிப்பு இருக்க வேண்டும். சுரண்டல் முறையை ஒழிக்க வேண்டும். சுரண்டல் முறையை கையாளுவது யார் என்றால் முதலாளிகளைத் தவிர வேறு யாரும் கிடையாது. அப்படிப்பட்ட எண்ணம் கொண்டவர்கள் தான் முதலாளிகள். அவர்கள் விஷ ஜந்துக்களைப்போல் இருக்கிறார்கள். விஷ ஜந்துக்களைக் கண்டால் மக்களுக்கு எவ்வளவு அருவருப்பு ஏற்படுகிறதோ அவ்வளவு அருவருப்பு சோஷலிஸ் சமுதாய அமைப்பிலே இந்த முதலாளிகளைக்கண்டால் மக்களுக்கு ஏற்படுகிறது. சோஷலிஸ சமுதாய அமைப்பில் முதலாளிகளை கொள்ளைக்காரர்களாக மதிக்கிறார்கள். எப்படி விஷ ஜந்துக்களால் மக்கள் பாதிக்கப்படுகிறார்களோ அதேபோல் இந்த முதலாளிகளால் தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு நிவாரணம் அளிக்க அரசாங்கத்தின் தொழிலாளர் கொள்கையில் ஒரு வழிவகை காண்பிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு ஆதாரமாக சில குறைகளை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தக் குறைகளை களைந்து எறிவது அரசாங்கத்தினுடைய கடமை.

இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் தொழிலாளர்கள் சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கை சரியானதாக இல்லை. தொழிலாளர்களுக்கு நன்மைகளைச் செய்வதாகவே இல்லை. இப்பொழுது அனுஷ்டித்துவரும் கொள்கையினால் முதலாளிகளுக்கு ஆக்கம் வலுக்கிறது. அதன்மூலம் தொழிலாளர்கள் தாழ்ந்துபோகும் நிலை ஏற்படுகிறது. தொழிலாளர்களுக்கு எவ்வளவோ சட்டங்களை அரசாங்கம் அமைத்தாலும்கூட அதை சரிவர அனுஷ்டிக்காமல் முதலாளிகள் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயன்று வருகிறார்கள். அப்படிக்கு இல்லாமல் இருக்கும் சட்டத்தையே வைத்துக்கொண்டு நாம் நல்லபடி முதலாளிகளை கண்காணித்தால்கூட தொழிலாளர்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்யலாம். அப்படிச் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டத்தின் மூலமாக தொழிலாளர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது. இப்போதைய சில சட்டவிதிகளால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு இரண்டொரு உதாரணங்களை மாத்திரம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்களின் சட்டத்தின் 33-எ செக்ஷன்படி ஒரு தொழிலாளியை வேலையை விட்டு நீக்கினாலோ அல்லது தண்டிக்கப்பட்டாலோ அவன் தொழில் கோர்ட்டுக்கு விண்ணப்பித்துக்கொள்ள இயலும். அப்படி நீக்கப்பட்டாலோ அல்லது தண்டிக்கப்பட்டாலோ இந்த 33-எ செக்ஷன்படி அவன் முதலாளிகளின் பேரில் கோர்ட்டில் விண்ணப்பம் செய்துகொள்வதாக இருந்தால் அப்படி ஒரு தொழிலாளியாக இருந்தாலும் சரி அல்லது 100 தொழிலாளர்களாக இருந்தாலும் சரி விண்ணப்பம் செய்துகொள்வதாக இருந்தால் பிரத்தியேகமான விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ஒரு தொழிலாளிக்கு ஒரு ரூபாய் வீதம் ஸ்டாம்பு கட்டணம் கட்டவேண்டும் என்று விதி செய்திருக்கிறார்கள். ஒரு தொழிலாளி விண்ணப்பம் செய்தாலும் ஒரு ரூபாய் ஸ்டாம்பு ஒட்ட வேண்டும் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள் அரசாங்கத்தார். ஆனால் அதே போல் முதலாளிகள் ஒருவருக்காக விண்ணப்பம் செய்து கொண்டாலும் சரி அல்லது கூட்டாக பல பேரில் விண்ணப்பம் செய்து கொண்டாலும் சரி அவர்கள் இப்படி ஸ்டாம்பு ஒட்ட வேண்டியதில்லை என்று விதி இருக்கிறது. தொழிலாளர் மட்டும் இப்படிக் கட்டணம் கட்டவேண்டும் என்று அரசாங்கம் தெரிந்து செய்திருக்கிறதோ அல்லது தெரியாமல் செய்திருக்கிறதோ அதன் விஷயம் ஒன்றும் தெரியவில்லை. இப்பொழுதுள்ள கனம் அமைச்சர் அவர்களை இதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. இதற்கு முன் இருந்த அரசாங்கம் இப்படி தெரிந்தோ தெரியாமலோ செய்திருக்கிறது. முதலாளிகளுக்கு சலுகைகள் காட்ட வேண்டும் என்று அவர்களுடைய கோரிக்கைகளினால் அப்படிச் செய்து விட்டார்களோ என்றுகூட தோன்றுகிறது. இதனால் பாரபட்ச முறையில் சர்க்கார் நடந்து வருகிறது என்று சொல்லுகிறேன். இதற்கு

[Sri P. S. Chinnadurai] [22nd July 1957

முன்பு இருந்த அரசாங்கம் இதைத் தெரிந்து செய்தார்களோ, தெரியாமல் செய்தார்களோ அதைப்பற்றி கவலை இல்லை. இப்பொழுதுள்ள அரசாங்கம் இதை கவனித்து இப்படிப்பட்ட பாரபட்சத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்ல. லேபர் ஆபீசருக்கு விண்ணப்பம் போடவேண்டும் என்றால் தொழிலாளர்கள் கொடுக்கக் கூடிய கடிதங்களுக்கு கூட ஸ்டாம்பு ஒட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதுவும் கோர்ட் பீஸ் ஸ்டாம்பு சட்டப் பிரகாரம் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த மாதிரியான தொல்லைக்கு நானே ஒரு தடவை கஷ்டப்பட்டிருக்கிறேன். ஒரு தடவை இப்படி நான் ஸ்டாம்பு ஒட்டாமல் அனுப்பியதால் தொழிலாளர் இலாகாவிலிருந்து ஸ்டாம்பு ஒட்டி அனுப்ப வேண்டும் என்று கடிதத்தை திருப்பி அனுப்பி விட்டார்கள். இதைப்பற்றி பின்னாடி வாதித்துக் கொள்ளலாம் என்று நினைத்து அதற்கு இரண்டு ரூபாய் ஸ்டாம்பு ஒட்டி அனுப்பி வைத்தேன். லேபர் ஆபீசருக்கு கடிதம் எழுதுவதாக இருந்தாலும் அதற்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டும் என்று சொல்வது சரியல்ல. இந்த முறையையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டும் அல்ல. "பேமெண்ட் அப் வேஜஸ் ஆக்ட்", "வொர்க்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்ட்", இது சம்பந்தமாக தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் கமிஷனர் முன்பாக ஆஜராக வேண்டும் என்றால்கூட கட்டணம் கட்ட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதுவும் சரியல்ல. தொழிலாளர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு ஆஜராவதற்கு கட்டணம் கட்ட வேண்டியது அவசியமில்லை என்று விதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த முறையையும் மாற்றி அமைக்க வேண்டும். அப்படி மாற்றி அமைத்து தொழில் தகராறுகளை சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். லேபர் ஆபீசர்களை அணுகுவதற்கும் நல்லமுறையில் வசதி அளிக்கவேண்டும்.

ஆனால் அப்படிப்பட்ட லேபர் ஆபீசர்களுக்கு ஏதாகிலும் அதிகாரம் இருக்கிறதோ என்று பார்த்தால் அவர்களுக்கு வேண்டிய அதிகாரம் இல்லை. இதைப்பற்றி எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் மாதா கௌடர் அவர்கள் குறிப்பிட்டார். லேபர் ஆபீசர்கள் போதிய அதிகாரம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். முதலாளிகள் லேபர் ஆபீசர்களை வெறும் புழுக்களாக மதிக்கிறார்கள். முதலாளிகள் அவர்களை மதிப்பதைப் பார்த்தால் அவர்களுக்கு எந்த விதமான அதிகாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனக்கு ஒரு விஷயம் நேரடியாகத் தெரியும். ஒரு முதலாளியை ஒரு அஸிஸ்டன்ட் லேபர் கமிஷனர் வரும்படி சொல்லியும் அந்த முதலாளி போகவில்லை. ஆனால் தொழிலாளர்களுடைய நலனை தன்னுடைய நோக்கத்தில் கொண்டு அந்த அஸிஸ்டென்ட் லேபர் கமிஷனர் தன்னுடைய கவுரவத்தையும், அரசாங்கத்தினுடைய கவுரவத்தையும் பாராட்டாமல் முதலாளி இருக்கும் இடத்திற்கு சென்று விசாரணை நடத்தியதாகக் கேள்விப்பட்டேன்.

இம்மாதிரியான முதலாளிகளுடைய பிடிவாதங்களையெல்லாம் கனம் திரு. மாதா கௌடர் அவர்களுடைய பேச்சிலிருந்து அறிந்துகொண்டிருக்கலாம். முதலாளிகள் தம் இடங்களுக்கு அதிகாரிகளை அழைக்கிறார்களே தவிர, அவர்கள் லேபர் ஆபீசர் காரியாலயத்திற்கோ. லேபர் கமீஷனர் காரியாலயத்திற்கோ போவது இல்லை. அப்படிப் போனால் தங்களுக்கு கௌரவக் குறைச்சல் ஏற்பட்டு விடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஒரு சோஷலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதாக நாம் தீர்மானித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே, சோஷலிஸ அமைப்பை உருவாக்க வேண்டும் என்று உறுதிகொண்டிருக்கும் ஆட்களின் மத்தியிலே, இம்மாதிரி சொல்வதற்கு முதலாளிகளுக்கு வாய்ப்பு இருக்கிறதென்றால், அந்த அளவுக்கு அவர்களுக்குத் துணிச்சல் இருக்கிறதென்றால், அந்தத் துணிச்சலை ஒடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தை நான் வேண்டிக்கொள்ளுகின்றேன், இந்த நாளிலே.



22nd July 1957] [Sri P. S. Chinnadurai]

லேபர் அதிகாரிகளுக்கு வாகன வசதிகள் கொடுக்கப்படவில்லை. அதனால், அவர்கள் மிகவும் தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். முதலாளிகளை வாகனம் வேண்டுமென்று அவர்கள் கெஞ்சிக் கேட்கவேண்டியிருக்கிறது, காரியத்தை முடிப்பதற்கு. தொழிலாளர்களுக்கு உதவி புரிவதற்காக கார்களை முதலாளிகளிடம் கோரிப்பெறவேண்டிய மிகவும் பரிதாபமான நிலையில் அவர்கள் வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

உதாரணமாக, கோவையிலுள்ள அதிகாரிக்கு முன்பு ஜீப் இருந்தது. இப்பொழுது அந்த ஜீப் இல்லை. சொந்தக் கார் வைத்துக்கொண்டிருக்கிறார். அதுவும் சரியான காராக இல்லாததால், அடுக்கடி ரிப்பேர் ஆகிவிடுகிறது. அதற்காக இரவல் கேட்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமை போகவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் லேபர் ஆபீசர்கள் நியமிக்கப்படும்போது அந்த ஆபீசர்களுக்குப் பூரண அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும். தொழில் தகராறு தீர்ப்பைப் பொறுத்தவரை, அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தொழிற் கோர்ட்டுகள் என்பது பெரிய விஷயம். அதை விஸ்தாரமாகப் பேசவேண்டுமானால் காலம் போதாது என்று நினைக்கிறேன். தொழில் கோர்ட்டுகளுக்கு நீதிபதி நியமனம் விஷயத்தைப்பற்றி ஒரு புதிய நோக்கத்தை அனுஷ்டிக்கவேண்டும் என்று இந்த ராஜ்ய அரசாங்கத்தை நான் வேண்டிக்கொள்ளுகின்றேன். நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற லட்சியங்களுக்கேற்ப, வழிவகைகளைக் காணக்கூடிய முறையில் தீர்ப்புகளை நல்கக்கூடிய உயரிய நோக்கம் கொண்டு, மனிதாபிமானம் கொண்ட, தொழிலாளர்களையும் மானேஜ்மெண்டாரையும் சமமாக நடத்தவேண்டும் என்ற சமத்துவ நோக்கம் கொண்ட நீதிபதிகளை நியமிப்பதற்குத்தான் இந்த ராஜ்ய அரசாங்கம் முன்வரவேண்டும். அந்த வகையிலே என்ன சில சட்ட நுணுக்கங்கள் குறுக்கிட்ட போதிலும், அவைகளை நிவர்த்தி செய்வதற்காக, அந்தச் சட்ட நுணுக்கத் தடைகளையெல்லாம் தகர்த்தெறிவதற்காக, எப்படியாவது "நாசூக்"காக தகர்த்தெறிவதற்காக, வழிவகைகளைக்கண்டு, அதற்கான நீதிபதிகளைப் போடவேண்டும். அம்மாதிரி நீதிபதிகளைப் போட்டால்தான் புதிய தீர்ப்புகளைப் பெறமுடியும். அம்மாதிரியான புதிய தீர்ப்புகளைப் பெறுவதற்கு உரிய முறையை அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இருக்கின்ற நீதிபதிகள் சில தீர்ப்புகளை அளித்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்புகளைக்கூட சரியானபடி முதலாளிகள் அமுல் நடத்துவது இல்லை. அமுல் நடத்துவதில் எவ்வளவோ காலதாமதம் ஏற்படுகிறது. காலதாமதம் ஏற்படுத்துவதோடு, மேலும் பலவிதமான முறைகளிலே அந்தத் தீர்ப்பை எப்படியாவது ஒன்றுமில்லாமல் செய்வதற்கான முறைகளையெல்லாம் கையாளுகிறார்கள்.

உதாரணமாக, சமீபத்தில் நடந்த ஒன்றைக் குறிப்பிடுவேன். மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, மேட்டூரிலே இம்மாதிரியான ஒரு சம்பவம் ஏற்பட்டது. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் ஒரு தொழிலாளி, தன்னைத் திரும்ப வேலையில் அமர்த்திக் கொள்ளவேண்டும் என்று ஒரு தீர்ப்பைப் பெற்று வந்தார். சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் அந்த தீர்ப்பைப் பெற்று வந்தார் என்ற ஒரே காரணத்திற்காக 8 மணி அவகாசம் மட்டும் அவர் வேலையில் வைத்துக்கொள்ளப்பட்டார். "தீர்ப்பு பிரகாரம் உன்னை வேலையில் வைத்துக்கொண்டுவிட்டோம் ; 8 மணி அவகாசம் தீர்ந்து விட்டது, புதிய குற்றச்சாட்டுக்களைச் சொல்லி உன்னை வெளியே அனுப்புகிறேன்", என்று பலவந்தமாக, வேண்டுமென்றே, இழிவாக, 8 மணி நேரத்திற்கு அப்புறம் வெளியே அனுப்பப்பட்டார் அந்தத் தொழிலாளி என்றால் கோர்ட்டு எங்கே இருக்கிறது ? சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜ்மெண்ட் எங்கே இருக்கிறது? இதைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கும்படி நான் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இன்னொரு உதாரணம். கோவையில் இரண்டு கிளார்க்குகளைத் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பாகியிருந்தது. அந்தத் தீர்ப்புக்கு மதிப்புக் கொடுத்தார்களா, முதளாளிகள்? இல்லை. அவர்கள் தனித்தனியாக அறையில் உட்கார வைக்கப்பட்டார்கள். ஒவ்வொரு

நாற்காலியும் ஒவ்வோரு மேஜையும் போடப்பட்டது. அவர்களுக்கு ஒரு வேலையும் கொடுக்காமல், அப்படியே அவர்களை 8 மணி நேரமும் உட்கார வேண்டுமென்று சொல்லி ஒரு மணி நேரம் இடைவேளைக்கு அனுப்புவது தவிர, பாக்கி நேரங்களில் வேறு ஒரு வேலையும் செய்யக் கூடாது என்று சொல்லி, அவர்களுக்குச் சம்பளம் மாத்திரம் கொடுத்து விடுகிறார்கள். அத்தனையும் செய்துவிட்டு, "இதுதான் நாஜிமுறை. இவர்களை இப்படிக் கொடுமைப்படுத்தி, அவர்களே வேலையை விட்டு வெளியே ஓடும்படியாகச் செய்வதற்கு இதுதான் ஏற்ற முறை. நாஜிசம் என்ற இந்த முறையைத்தான் ஹிட்லரும் கையாண்டார்" என்று பெருமையாக அங்கே சொல்லிக் கொள்ளுகிறார்கள், முதாளிகள். இன்றும் அதே நிலைமை நீடிக்கிறது என்றால் அவர்களுக்குப் பைத்தியம் பிடிக்காமல் என்ன செய்யும்? இந்த நிலைமை நீக்கப்படவேண்டும்.

தொழிற்கோர்ட்டுத் தீர்ப்பை அமுல் நடத்துவதில் இந்தக் கேவலமான முறைகளை அனுஷ்டிக்கிறார்கள், முதலாளிகள். இவைகளுக்கெல்லாம் சரியான பரிகாரம் தேட முற்படவேண்டுமென்று நான் மிகவும்வேண்டிக் கொள்ளுகிறேன். இம்மாதிரி எத்தனையோ உதாரணங்கள் சொல்லமுடியும். இதுமாதிரி விஷயங்களில் அமைச்சர் அவர்களுக்கும் நல்ல பரிச்சயங்கள் உண்டு. அவர்கள் இவைகளை யெல்லாம் பார்த்து, தக்க பரிகாரம் தேடவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இன்னொரு ஆலோசனை தெரிவிக்க விரும்புகிறேன். தொழிலாளர் இலாகாவுக்கு 28 லட்சம் ரூபாய் மான்யம் கோருகிறார்கள். மான்யத்தைக் குறைக்கவேண்டும் என்று வெட்டுப் பிரேரணையை நான் சம்பிரதாய பூர்வமாக ஆதரித்தாலும், இன்னும் அதிகமாக இந்தத் தலைப்பின்கீழ் பணம் ஒதுக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இப்பொழுது இருக்கும் இந்தத் தொழிலாளர் இலாகாவானது இன்னும் திறம்பட நடத்தப்படவேண்டும். புள்ளிவிவர இலாகா (Statistics Department) என்று தனியாக இருக்கவேண்டும். தொழிலாளர் வாழ்க்கை நிலைமையைப்பற்றி, இன்னும் இதுபோன்ற புள்ளி விவரங்கள் ஆகியவற்றையெல்லாம் சேகரித்துக் கொடுக்க ஒரு தனி இலாகா இன்றைக்கு கிடையாது. இதனை ஏற்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன் வந்தால் மிகவும் நன்றாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு, அதிக நேரம் பேசிவிட்டதால், என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன்.

1-46 p.m. * **Sri M. P. SARATHI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழிலாளர் மான்யத்தின் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். வேலூரில் சுமார் பததாயிரம் பேர்களுக்கு மேல் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம். அவர்களுக்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு, அக்கமிட்டியின் சிபார்சின் பேரில் ஒரு சட்டம் வர இருப்பதைத் தெரிந்திருந்த போதிலும், அந்தத் தொழிலாளர்களைப் பற்றி ஒருசில வார்த்தைகளைச் சொல்ல முற்படுகிறேன்.

வேலூரிலுள்ள பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள குறைகளை நேரடியாக நலல முறையில் தீர்த்து வந்தார்கள், பத்து வருஷங்களுக்கு முன்பு. அதன் பிறகு "ப்ராஞ்ச்" முறையாக மாற்றப்பட்டு, முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது. "ப்ராஞ்ச்" சுக்கும் முதலாளிகளுக்குமே ஒரு ஏற்பாடு செய்து கொண்டு தொழிலாளர்களுக்குப் பாத்துகாப்பு இல்லாமல் செய்துவிட்டிருக்கிறார்கள். முக்கியமாக இந்தப் ப்ராஞ்ச் முறை மாற்றியமைக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்படவேண்டும். ப்ராஞ்ச் முறை இருந்து தான் தீரவேண்டுமென்றால், அந்த முறை இருந்தாலும், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுவதற்காக வேண்டிய பிரயத்தனம் செய்யப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.





வேலூரில் பெரிய பெரிய பாக்டரிகளை ஏற்படுத்துவதற்கு வேண்டிய காலி இடங்கள் இருக்கின்றன. பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்கு வேண்டிய இடங்கள் இருக்கின்றன. பத்தாயிரம் பேர்களுக்குமேல் வேலை செய்யக்கூடிய ஒரு பாக்டரியை அங்கு ஏற்படுத்தலாம். பல முதலாளிகளும் ஒன்றுசேர்ந்து கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக பீடித் தொழிலை நடத்தலாம். அப்படி இல்லாத காரணத்தால், சில முதலாளிகள் மாதமொன்றுக்கு லட்சக் கணக்கில் சம்பாதித்துக்கொண்டு தொழிளாளர்களை இம்சை செய்து வருகிறார்கள் என்பதை நான் இங்கு சர்க்காருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முக்கியமாக, அவர்களுக்கு இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. இப்பொழுது பிராஞ்சுகள் வைத்திருக்கும் இடங்களில் கூட சுமார் பத்து பேர்கள் உட்காரும் இடத்தில் 50 பேர்களுக்குமேல் உட்காரவைத்து நடத்துகிறார்கள். அதை யாரும் கவனிப்பது இல்லை. இப்பொழுதாவது கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஸ் தொழிலாளர்களைப்பற்றி குறிப்பிடவேண்டுமானால், அவர்கள் சிறிய குற்றம் செய்தாலும் முதலாளிகள் அவர்களை வேலையிலிருந்து நீக்கி விடுகிறார்கள். யாதொரு காரணமும் இல்லாமல் நிறுத்தி விடுகிறாகள். இரண்டு, மூன்று மாதங்கள் வேலை செய்த பிற்பாடு, வேறொரு தொழிலாளர் வந்துவிட்டால், முதலில் இருந்தவர்களை வீட்டுக்குப் போகச் சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். இம்மாதிரி தொழிலாளர்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லாமலிருக்கிறது. அவர்களுடைய நிலைமையை விசாரிப்பதற்காக ஒரு கமிட்டியை நியமித்து, அவர்களுடைய குறைகளைத் தெரிநது, ஒரு சட்டம் கொண்டுவந்தால்கூட சிலாக்கியமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரண்டு மூன்று குமஸ்தாக்கள் இருந்தாலும் கடையைத் திறந்துவைககலாம் என்று ஷாப் அஸிஸ்டென்டு சட்டத்தைத் திருத்திவிட்டாாகள. இதனால், குமஸ்தாக்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது. ஒன்றிரண்டு முதலாளிகள் இவ்விதமாகக் கடைகளைத் திறந்து வைத்திருப்பதைப் பார்தது மறற வியாபாரிகளும் தங்கள் தங்கள் கடைகளைத் திறந்துவைப்பதற்கு முற்படுகிறார்கள். அங்குள்ள குமஸ்தாக்களும் கடைக்கு வர வேண்டியதாக இருபபதால் சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, மூன்று பேர்கள் உளள கடைகளையும் வாரத்திற்கொரு முறை மூடித்தான் தீரவேண்டும் என்று பழைய படியே ஷாப் அஸிஸ்டென்ட் சட்டத்தைத் திருத்தினால் நலமாக இருககும் என்று நான் தெருவித்துக்கொள்ளுகின்றேன்.

அதைத்தவிர, தோல் பதனிடும் தொழிலாளர்களின் வேலையைப் பொறுத்தவரையில், அடிக்கடி முதலாளிகள் "ஸ்டாக் இருக்கிறது. ஆகவே நீங்கள் வேலைக்கு வேண்டாம். வீட்டுக்குப் போங்கள்" என்று தொழிலாளர்களிடம் ஒரேயடியாகச் சொல்லி விடுகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் அன்றாடம் கூலி வாங்கித் தான் ஜீவித்தாக வேண்டும். இப்படியிருக்கும்போது, அவர்களை முதலாளிகள் அடிக்கடி "ஸ்டாக் இருக்கிறது" என்று சொல்லி வீட்டுக்கு அனுப்பினால் அவர்கள் என்ன செய்வது? அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அன்றாடம் பிழைப்பை நடத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, "ஸ்டாக் இருக்கிறது" என்று சொல்லி அவர்களை முதலாளிகள் வேலையிலிருந்து நீக்கமுடியாதபடி ஏற்பாடுசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல நகரங்களில் நகரசுத்தித் தொழிளாலர்கள் பத்து வருடங்களுக்கு மேலாக அந்த நகரசபையிலேயே பணி செய்திருந்தும் கூட தினக்கூலியாட்களாகவே இருந்துவருகிறார்கள். நகரசபையினர் இவர்களை இன்னும் தினக்கூலியாட்களாகவே என் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. வேலூரைப் பொறுத்த வரையில், 5 வருடங்களுக்கு மேல் பணியாற்றியுள்ள நகரசுத்தித் தொழிலாளர்கள் சுமார் 400–500 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்றும் கூலியாட்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த சம்பளமும் வேண்டிய பாதுகாப்பும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

[22nd July 1957

**Sri P. U. SHANMUGAM :** கனம் தலைவர் அவர்களே, தொழில் துறையில் லேபர்-பாக்டரீஸ் இனத்தின்கீழ் கோரப்பட்டிருக்கும் மானியத்திற்குப் பிரேரேபிக்கப்பட்டுள்ள வெட்டுபிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் எல்லோரும்
1-52 a.m. தொழில் துறையில் அரசாங்கம் செய்யத் தவறியுள்ள சில காரியங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். பொதுவாக, பஸ் தொழிலைப்பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ சாரதி அவர்கள் பேசினார்கள். பஸ் தொழிலாளர்களிடையே மிகவும் பரிதாபகரமான நிலைமை நிலவுவதை இப்போது நாம் காண்கிறோம். பொதுவாக எந்த ஒரு பஸ் முதலாளியை எடுத்துக் கொண்டாலும், அவர் தினக் கூலிகளாகவே தொழிலாளர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் ; அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுப்பது கிடையாது. " எங்களை என் தினக்கூலிகளாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? " என்று கேட்கும் தொழிலாளர்களை பஸ் முதலாளிகள் வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். விரட்டியடித்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமை பஸ் தொழிலாளிகளிடையே நிலவி வருகிறது. பஸ் தொழிலாளர்களுடைய இத்தகைய கஷ்டததைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தார் உடனடியாகப் பரிகாரம் தேடவேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, வர்த்தகத் தொழிற்சாலைகளிலும் கடைகளிலும் உள்ள குமாஸ்தாக்களுக்கு தொழிற்சட்டம் போதிய பாதுகாப்பு அளிக்கவில்லை. அவர்கள் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். தொழிற்சட்டத்தில் சில விதிகள், மூன்று பேர்களுக்கு அதிகமான குமாஸ்தாக்களை வேலையில் வைத்துக்கொண்டிருக்கும் முதலாளிகளைத் தான் கட்டுப்படுத்துகின்றன. அந்த விதிகள் நான்கு பேர்களுக்குக் குறைவான குமாஸ்தாக்களை வைத்துக்கொண்டிருக்கும் முதலாளிகளைக் கட்டுபடுத்தவில்லை. பல முதலாளிகள் உண்மையில் மூன்று பேர்களுக்கு அதிகமான குமாஸ்தாக்களை வேலையில் வைத்துக்கொண்டு, நான்குக்குக் குறைவான குமாஸ்தாக்களையே வைத்துக்கொண்டிருப்பதாகப் பொய்க் கணக்குக் காட்டி விடுகிறார்கள். மூன்று பேர்களுக்கு அதிகமான குமாஸ்தாக்களை வைத்துக்கொண்டிருக்கும் முதலாளிகளை சர்வசாதாரணமாகக் கடைவீதிகளில் காண முடியும். ஆனால் அவர்களில் பலர் நான்கு பேர்களுக்குக் குறைவான குமாஸ்தாக்களை வைத்து கொண்டிருப்பதாகப் பொய்க் கணக்குக் காட்டிவிடுகிறார்கள். இப்படிச் செய்து தொழில் இலாகா அதிகாரிகளை ஏமாற்றியும், தொழிலாளர்களைத் துன்புறுத்தியும் வருகிறார்கள். இப்படிச் செய்து, அவர்கள் தொழிலாளர்களுக்கு நியாமான சம்பளத்தையும் இதர சலுகைகளையும் அளிக்காமல் இருக்கிறார்கள் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நான்கு பேர்களுக்குக் குறைவான குமாஸ்தாக்களை வைத்துக்கொண்டிருக்கும் முதலாளிகள் அவர்களுக்கு 8 மணி நேரத்திற்கும் மேல் வேலை கொடுக்கிறார்கள் ; போதிய ஓய்வு கொடுப்பதில்லை. இப்படிச் செய்பவர்களைத் தட்டிக் கேட்பதற்குச் சட்டத்தில் இடமில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு லேபர் இன்ஸ்பெக்டரே நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த ஒரு லேபர் இன்ஸ்பெக்டரே தாலூகாவிலுள்ள கிராம பகுதிகளுக்கும் சென்று இலாகாவின் வேலையைப் பார்க்கவேண்டும் என்று அரசாங்கத்தார் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் பஸ்ஸின்மூலம் கிராமப் பகுதிகளுக்குச் செல்வார்களா, அல்லது எப்படிச் செல்வார்கள் என்பது பற்றியெல்லாம் அரசாங்கம் சிந்தித்ததாகத் தெரியவில்லை. இந்த விஷயத்தில் லேபர் இன்ஸ்பெக்டர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை அளிக்கவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களைப்பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய உண்மையான நிலைமையைப் பற்றித்தான் நான் சொல்லுகிறேன். அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களில் சிலர் அங்கஹீனம் அடைந்துள்ளார்கள் ; அவர்களுள் விரல் போன சிலர் இருக்கிறார்கள் ; கரம் இழந்த சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு கண்ட்ராக்டர்கள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தும் கூட, அவர்களுக்கு கண்ட்ராக்டர்கள் நஷ்ட ஈடு கொடுக்காமல் இருந்துவிட்டு, அந்த இடத்தை விட்டு வேறு இடங்களுக்கு கண்ட்ராக்டு வேலைக்கு போயிருக்கிறார்கள். இப்படி, தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக அவர்கள் இடம் விட்டு இடம் போய்விடுகிறார்கள். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு எனக்கு அங்குள்ள ஒரு தொழிலாளியிடமிருந்து "என் மனைவிக்கு ஒரு விரல் போயிருக்கிறது. அதற்காக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நஷ்டஈட்டைக் கொடுக்காமலேயே கண்ட்ராக்டர் போய்விட்டார் " என்ற பரிதாபகரமான விஷயத்தைக் குறிப்பிட்டு எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இன்னும் சில தொழிலாளிகளுக்கு கண்டிராக்டர்கள் கூலி கொடுக்காமலேயே ஏமாற்றுகிறார்கள். "எங்களுடைய பில் இன்னும் தீர்க்கப்படவில்லை. ஆகவே உங்களுக்கு இப்போது கூலி கொடுக்க முடியாது " என்று சொல்லி தொழிலாளர்களை பல கண்ட்ராக்டர்கள் ஏமாற்றுகிறார்கள் என்பதை மிகவும் தாழ்மையுடன் சொல்லிக்கொள்ளுகிறேன்.



22nd July 1957] [Sri P. U. Shanmugam]

• சாத்தனூர் அணைக்கட்டுத் தொழிலாளர்கள் சம்பந்தமாக இன்னொரு விஷயத்தையும் சொல்லாமல் இருக்கமுடியாது. அங்கே கற்களைச் சுமந்து வேலை செய்யும் சில தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இராக் காலங்களில் போலீஸ் அதிகாரிகள் அவர்களிடம் சாராயத்தைக் கொடுத்து விற்கச் சொல்லுகிறார்கள் என்பதை இங்கே நான் பகிரங்கமாகச் சொல்கிறேன்." இதை நான் அங்குள்ள எக்ஸிக்யூடிவ் எஞ்சினியரிடம் சொன்னேன். " இதைப் பற்றி நான் விசாரிக்கிறேன் " என்று அவர்கள் சொன்னார்கள் ; ஆனால் இது தடுத்து நிறுத்தப்படுவதில்லை. அங்குள்ள தொழிலாளர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு நாள் அப்படிச் சாராயம் விற்பவனை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ஆனால், சாராயம் விற்றவனைப் பிடித்துக்கொண்டு வந்தவன் மீது தான் வழக்குப் போடப்பட்டதே தவிர, சாராயம் விற்றவன் மீது அல்ல. இது குறித்து சாத்தனூர் திட்டத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களில் 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் என் வீட்டுக்கு வந்து என்னிடம் விஷயத்தைச் சொன்னார்கள். அதன் பேரில் நான் எக்ஸிக்யூடிவ் எஞ்சினீயரை சந்தித்து விசாரித்தேன். அவரிடமிருந்து " இது குறித்து இந்தத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்கிறார்களே. இவர்கள் கூறுவதை கவனித்து உங்களால் ஆனதை நீங்கள் செய்யவேண்டாமா ? இந்தக் காலனிக்கு நீங்கள் தானே பொறுப்பாளி. இந்த தொழிலாளிகளுக்கு நீங்கள்தானே பாதுகாப்பாளராக இருக்க வேண்டும் ? " என்று கூறினேன். அதற்கு அவர் " நான் என்ன செய்வேன் ? இந்த பிரச்னையை போலீஸார் தான் கவனிக்கவேண்டும் " என்று சொல்லி மழுப்பி விட்டார்கள். கடைசியில் நான் தொழிலாளர்களிடம் " சாத்தனூர் திட்ட வேலைகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. ஆகவே நீங்கள் வேலைக்குப் போய் விடுங்கள் " என்று சொல்லி அவர்களை வேலைக்கு அனுப்பி வைத்தேன்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையையும் செய்யவில்லை என்ற காரணத்தால், இந்த வெட்டுபிரேரணையை நான் ஆதரிக்கிறேன்.

மேலும், " ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு தொழிற்சங்கம் தான் இருக்கவேண்டும் " என்று சென்ற மந்திரிசபையில் தொழில் அமைச்சராக இருந்த கனம் ஸ்ரீ பக்தவச்சலம் அவர்கள் அப்போது சொன்னதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. என் நண்பர்களை விசாரித்ததன் பேரில், அது இன்னும் அமலுக்கு வரவில்லை என்று தெரிந்துகொண்டேன். " அத்தகைய ஒரு அபாயகரமான நிலைமையைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தவேண்டாம். இப்படிப்பட்ட கட்டுப்பாட்டைப்போட்டு அவர்களுடைய அருமையான வாய்ப்புகளைக் கொடுக்கவேண்டாம் " என்று தொழிலாளர்களிடையே நல்ல அனுபவம் பெற்றுள்ள கனம் தொழில் அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

[22nd July 1957

DEPUTY SPEAKER : I now adjourn the House to meet again at 9 a.m. tomorrow.

2 p.m. The House then adjourned.

## VI. PAPER LAID ON TABLE OF THE HOUSE.

131. *Notification issued with G.O. Ms. No.* 873, *Revenue, dated* 21*st February* 1957, *amending rule* 14 (2) *of the Madras Sales of Motor Spirit Taxation Rules*, 1939.



22nd July 1957]

## APPENDIX I.

[Vide answer to starred question No. 179 asked by Sri K. Sattanatha Karayalar (on behalf of Sri A. R. Subbiah Mudaliar) at the meeting of the Legislative Assembly held on 22nd July 1957, page 117 supra.]

(*a*) & (*b*) The Government have not imposed a ban on the issue of licences under the Madras Rice Mills Licensing Order, 1955, to new rice mills. The policy of the Government was clearly stated in their Press Note, dated 11th January 1956, which stated as follows :—

"The policy of Government is to encourage the hand-pounding of paddy and to discourage the milling of paddy and the installation of new rice mills. The public are, therefore, informed that, thereafter, no commitment should be made for the installation of new rice mills without the specific approval of the Collector of the district."

The Government reconsidered the matter and issued orders in March 1957. The position is as follows :—

The Collector of the district, who is the licensing authority under the Madras Rice Mills Licensing Order, 1955, will be guided by the following principles, while granting licences for new rice mills—

(i) In granting licences to the new rice mills, the licensing authorities should bear in mind that the future development of the hand-pounding industry should not be hampered by the rapid expansion of rice mills.

(ii) The licensing authorities will also consider the number of rice mills functioning in the locality and the adequacy of the rice mills to hull the paddy produced in the adjacent area.

(iii) Cases of hardship, if any, in the implementation of the instructions in (*a*) and (*b*) above should be dealt with on the merits of each case by the licensing authorities.

(*c*) In view of the answer to clauses (*a*) and (*b*), this question does not arise. There is no question of exempting any rice mill from the operation of the Licensing Order. It is either issued or refused a licence.

(*d*) Prior to 31st May 1956, a fee of Rs. 24 per annum per licence was levied under the Madras Rice Mills Licensing Order, 1955, for the initial issue and subsequent renewal of a licence. The Government of India stated that State Governments should not make any revenue on the issue of licences and that this Government might consider the desirability of fixing Rs. 2 as the fee for the initial issue of licence and Re. 1 for subsequent renewal. As the scales suggested by the Government of India are sufficient to cover the cost of the administration of the Madras Rice Mills Licensing Order, 1955, the reduced scales of levy suggested by Government of India were given effect to from 31st May 1956.

[22nd July 1957

APPENDIX II.

[Vide item IV on page 139 supra.]

## INTRODUCTORY MEMORANDUM TO THE STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN THE SECOND HALF OF THE YEAR 1953-54.

The Andra State was formed with effect from 1st October 1953. Having regard to the impending partition of the Madras State, only a 'vote on Account' was obtained earlier for the period 1st April to 30th September 1953. The expenditure in the Composite State for these six months was regularized by the Andhra State Act, 1953. The detailed budget for the period from 1st October 1953 to 31st March 1954 was presented to the Legislature of the residuary State of Madras on the 14th December 1953.

2. The grants voted by the Legislature were exceeded in six cases. In respect of charged appropriations also, there were excesses in six cases.

3. Article 205 (1) of the Constitution of India requires that if any money has been spent on any service during a financial year in excess of the amount granted for that service and for that year, the Governor shall cause to be presented to the Legislative Assembly a demand for such excess. The procedure prescribed in regard to the presentation, etc., of the annual financial statement and demands for grants will apply to excess demands also.

4. The Public Accounts Committee constituted for the financial year 1956-57 considered the Appropriation Accounts of 1953-54 at its meetings held during October 1956. The appropriations originally provided for in the Budget Estimates can never be expected to tally entirely with the actuals, and excesses under some grants are inevitable. The circumstances of 1953-54 were also exceptional, on account of the partition of the State. After examining the reasons for the excess expenditure, in each case, the Public Accounts Committee has recommended that demands for grants to cover the excess expenditure over the final sanctioned appropriation under each grant in the second half of the year 1953-54 as shown in the statement attached may be presented to the Legislative Assembly.

1st *July* 1957.

T. A. VARGHESE,
*Secreiary to Government, Finance Department.*



22nd July 1957]

## STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN THE SECOND HALF OF THE YEAR 1953-54.

| *Serial number.* (1) | *Original grant. number.* (2) | *Service or Administration to which the grant relates.* (3) | *Head of Account.* (4) | *Excess expenditure.* (5) RS. |
|---|---|---|---|---|
| | | A. VOTED GRANTS. | | |
| 1 | III | Stamps Administration. | 9. Stamps .. .. .. | 73,792 |
| 2 | IX | Head of State, Ministers and Headquarters Staff. | 25. General Administration—Head of State, Ministers and Secretariat and Headquarters Establishments. | 25,241 |
| 3 | XV | Education .. .. | 37. Education.. .. .. | 1,73,183 |
| 4 | XXIX | Pension .. .. | 55. Superannuation Allowances and Pensions and 55-A. Commutation of Pensions financed from Ordinary Revenues. | 6,56,173 |
| 5 | XXX | Stationery and Printing. | 56. Stationery and Printing. | 12,69,031 |
| 6 | XL | Commuted Value of Pensions. | 83. Payments of Commuted Value of Pensions. | 26,654 |
| | | B. CHARGED APPROPRIATIONS. | | |
| 1 | VI | Motor Vehicles Acts—Administration. | 12. Charges on account of Motor Vehicles Acts. | 1,28,086 |
| 2 | X | State Legislature .. | 25. General Administration—State Legislature and Elections. | 225 |
| 3 | XII | Administration of Justice. | 27. Administration of Justice. | 22,474 |
| 4 | XXIX | Pensions .. .. | 55. Superannuation Allowance and Pensions and 55-A. Commutation of Pensions Financed from Ordinary Revenues. | 3,402 |
| 5 | XXXI | Miscellaneous .. | 57. Miscellaneous .. .. | 375 |
| 6 | XL | Commuted Value of Pensions. | 83. Payments of Commuted Value of Pensions. | 8,877 |

### EXPLANATION NOTE.

(Demands for grants for excess expenditure in the second half of the year 1953-54.)

A. VOTED GRANTS.

(1)

| *Name of grant.* (1) | *Final voted grant.* (2) RS. | *Expenditure.* (3) RS. | *Excess.* (4) RS. |
|---|---|---|---|
| III. Stamps Administration .. | 6,86,300 | 7,60,092 | 73,792 |

The excess was due to increased expenditure on stamps supplied by the Central stamp stores for which provision could not be accurately estimated and provided for, in the absence of reliable data.

[22nd July 1957

(2)

| Name of grant. (1) | Final voted grant. (2) | Expenditure. (3) | Excess. (4) |
|---|---|---|---|
| | RS. | RS. | RS. |
| IX. Head of State, Ministers and Headquarters Staff. | 32,08,700 | 32,33,941 | 25,241 |

The percentage of excess to the final grant is only 0·8 and does not call for any special remarks.

(3)

| Name of grant. (1) | Final voted grant. (2) | Expenditure. (3) | Excess. (4) |
|---|---|---|---|
| | RS. | RS. | RS. |
| XV. Education .. .. .. .. | 5,39,12,000 | 5,40,85,183 | 1,73,183 |

The percentage of excess to the final grant is only 0·3 and does not call for any special remarks.

(4)

| Name of grant. (1) | Final voted grant. (2) | Expenditure. (3) | Excess. (4) |
|---|---|---|---|
| | RS. | RS. | RS. |
| XXIX. Pensions .. .. .. | 80,64,500 | 87,20,673 | 6,56,173 |

The excess was due to larger expenditure than anticipated on payment of pensions to Madras Government Pensioners and also to larger number of Commutations sanctioned towards the close of the year than anticipated.

(5)

| Name of grant. (1) | Final voted grant. (2) | Expenditure. (3) | Excess. (4) |
|---|---|---|---|
| | RS. | RS. | RS. |
| XXX. Stationery and Printing .. | 43,20,600 | 55,89,631 | 12,69,031 |

The excess occurred mainly under " b. Purchase of Stationery Stores—A. Stationery Purchased in India " under which a sum of Rs. 12 lakhs had been provided for originally. Based on the progress of expenditure, a supplementary appropriation of Rs. 6,00,000 was obtained in March 1954 to meet the cost of paper and other stationery stores required by the Superintendent, Government Press and other Government departments. But the actual expenditure proved to be as high as Rs. 29·67 lakhs resulting in an excess expenditure of about Rs. 11·67 lakhs. This could not be foreseen earlier and provided for.

(6)

| Name of grant. (1) | Final voted grant. (2) | Expenditure. (3) | Excess. (4) |
|---|---|---|---|
| | RS. | RS. | RS. |
| XL. Commuted value of Pensions. | 6,58,900 | 6,85,554 | 26,654 |

The excess was due to larger payments towards the commuted value of pensions than anticipated.



22nd July 1957]

B. CHARGED APPROPRIATIONS.

(1)

| Name of grant. (1) | Final voted grant. (2) | Expenditure. (3) | Excess. (4) |
|---|---|---|---|
| | RS. | RS. | RS. |
| VI. Motor Vehicles Acts—Administration. | 33,52,500 | 34,80,586 | 1,28,086 |

The excess was mainly due to payment of a larger amount of compensation to local bodies for loss of income from fees for licences granted to motor vehicles and for loss of income from tolls and taxation of motor vehicles. This could not be correctly anticipated and provided for in time.

The excesses under the other items are small and do not call for any special remarks.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 23rd July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—EXPRESSION OF SORROW AT THE DEATH OF DR. P. VARADARAJULU NAIDU, MEMBER, FORMER, LEGISLATIVE ASSEMBLY.

MR. SPEAKER : It is my painful duty to inform the hon. Members of the House of the death at 1 a.m. to-day of Dr. P. Varadarajulu Naidu, a Member of the former Legislative Assembly of this State from 1952 to 1957.

Dr. P. Varadarajulu Naidu was a very prominent Member of the House during the five years he was Member. He was also a Member of the Estimates Committee of the Legislative Assembly. For over 40 years, he had identified himself with the Freedom Movement in our country. A staunch Congressman, a Nationalist to the core, his services to the Nation are very prominently before all of us. I had the privilege of being his medical adviser for many years when I was in actual practice. We were family friends. His death creates a void in the senior ranks of politicians which is difficult to fill. At this juncture, his wise counsel and advice would be of very great use to us. But he is no more. His death removes from the ranks of political workers a very stalwart Congressman, a very powerful Nationalist and a great Indian. May his soul rest in peace!

By way of expressing our sorrow at his death and showing our respect to the departed soul, I request hon. Members of the House to stand in silence for two minutes.

All hon. Members stood in silence in their places for two minutes.

MR. SPEAKER : As a mark of respect, I adjourn the business of the House for half an hour.

The House then adjourned to meet again at 9-30 a.m.

The House re-assembled at 9-30 a.m.

### II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : To-day also there are 20 questions. Therefore, I would like to finish them within the time and would like to have the co-operation of the hon. Members in this regard.

SRI M. JAGANNATHAN : On a point of order, Sir. இன்றைக்கு வைத்திருக்கிற கேள்விகள் எல்லாம் முக்கியமான கேள்வியாக இருப்பதால் கேள்வி நேரத்தை கொஞ்சம் கூடுதலாக ஒதுக்கிவைக்கும்படி கேட்கிறேன்.

[23rd July 1957

MR. SPEAKER : அவ்விதம் கேள்வி நேரத்தை கூடுதலாக்கினால் டிமாண்ட் பற்றி பேசுவதற்கு ஒதுக்கப்பட்டகாலம் கம்மியாகிவிடும். ஆதலால் ஒரு மணி நேரத்திற்குள் கேள்வி நேரத்தை முடிக்கவேண்டும்.

SRI N. R. THIAGARAJAN : On a point of information Sir, தமிழ் நாட்டில் முக்கியமான தலைவர்களில் ஒருவரான வரதராஜுலு நாயுடு அவர்கள் இறந்துபோனதற்கு இந்தச் சபை அனுதாபம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member is late by half an hour. I would like to inform the hon. Member that the House met at 9 a.m. and adjourned for half an hour and has now reassembled. Hon. Member Sri Thiagarajan is perhaps not aware of it.

### *Handpounded rice*

* 193 Q.—SRI A. R. SUBBIAH MUDALIYAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government are aware of the fact that a Central Government Officer (Cottage Industries Officer) toured this State recently and made a recommendation to the effect that hand-pounded rice should be given more encouragement to solve partly the problem of unemployment?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. R. SUBBIAH MUDALIYAR : ரைஸ் மில் அரிசிக்கு செஸ் விதித்து அதன் மூலம் கைக்குத்தல் அரிசிக்கு ஆதரவு கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி ஒரு யோசனை இருந்து வருகிறது. அதைப்பற்றி சர்க்கார் என்ன செய்யக்கூடும் என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

SRI A. VEDARATHNAM PILLAI : கைக்குத்தல் அரிசி தயாராக்குவதற்கு சக்தி இயந்திரங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே அதைப் போதிய அளவு சப்ளை செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் அரிசி கைக்குத்தல் அரிசியாகவே கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நியாய விலைக் கடைகளுக்கு போதிய அளவு கைக்குத்தல் அரிசி சப்ளை செய்ய கைக்குத்தல் அரிசி கிடைப்பது அரிதாய் இருக்கிறது. ஆனால் இதில் ஒரு யோசனை இருந்து வருகிறது. அதாவது ஹோட்டல்களில் தோசை, இட்டிலி இவைகளுக்கு கைக்குத்தல் அரிசியை உபயோகப்படுத்த வேண்டும் என்று ஒரு ஆலோசனை இருந்து வருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, whereas hand-pounded rice has got to be encouraged in preference to milled rice and whereas it is being freely supplied to Hostels and Jails, will the Government consider the possibility of encouraging the hand-pounded rice for Government parties given by His Excellency the Governor and even for ministerial parties given by the Ministers of our State?



23rd July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that the Government do not have their own canteen arrangements and therefore it is not practicable to adopt hand-pounded rice for Government parties.

SRI A. R. SUBBIAH MUDALIYAR : கைக்குத்தல் அரிசியில் ஈடுபட்டிருந்தவர்கள் இப்போது வேலையில்லாமல் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் ஏதாவது சர்க்கார் எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தப் புள்ளி விவரங்கள் என்னிடமில்லை.

SRI A. GOVINDASAMY : கனம் மந்திரி அவர்கள் கைகுத்தல் அரிசி சாப்பிடுகிறார்களா அல்லது மெஷின் அரிசி சாப்பிடுகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எது கிடைக்கிறதோ அதைச் சாப்பிடுகிறேன். கைக்குத்தல் அரிசி கிடைத்தால் அதைச் சாப்பிடுவதற்கும் ஆட்சேபணையில்லை.

SRI S. LAZAR : நமது நாட்டில் அதிகமான ஏழை மக்கள் மில் அரிசியை விரும்புவதற்குக் காரணம் கைக்குத்தல் அரிசி பழையது போடுவதற்கு உபயோகப்படுவதில்லை என்று சொல்லப்படுவது உண்மை தானா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது உண்மை என்று கூற முடியாது. கைக்குத்தல் அரிசியை இன்னும் நல்லதாக்கலாம். இன்னும் கூடுதலாக பாலீஷ் ஆக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். கைக்குத்தல் அரிசியை இன்னும் நல்லதாக்கவேண்டும்மென்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : மிஷன் அரிசியை கொண்டுவந்து கைக்குத்தல் அரிசி என்று விற்றுவருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒரு சில இடங்களில் நடைபெறலாம். அதை தவிர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறது.

### *Construction of houses for lower middle class people*

* 194 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal for the construction of houses for the lower middle class people on a co-operative basis in Perambur area; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The Madras Co-operative House Construction Society has purchased about 95 grounds in Stephenson Road at Vyasarpadi village and the entire area has been parcelled out into 88 plots. The cost of one ground of 5 cents has been tentatively fixed at Rs. 700 excluding the cost of common amenities, which will be about Rs. 450 per ground of 5 cents. The Society has so far received 11 applications for allotment in this locality. The Society will take up the construction work soon after sufficient number of applications are received.

[23rd July 1957

SRI A. GOVINDASAMY : இந்தத் திட்டத்தை எல்லா ஜில்லாக்களிலும் பரப்புவதற்கு ஏதாவது திட்டம் அரசாங்கம் வகுத்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : **Low income group** இருக்கிற திட்டத்தை மாகாணம் பூராவும் கொண்டு வருவதற்குத் திட்டம் இருக்கிறது. இவற்றை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, is there any industrial Housing Scheme for the industrial population of the Perambur area?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. We have already built about a thousand tenements in Erukkancherry and Sembiam areas.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, நடுத்தர வாழ்க்கைத் தரமுள்ள மக்களுக்கு ஏற்றவாறு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருவதாக காணப்படுகிறது. இதில் நடுத்தர மக்கள் அல்லாத உயர்தர மக்களும் உட்புகுந்து சலுகைபெற்று வருவதைத் தடுக்க சர்க்காரிடம் ஏதாவது வழி வகைகள் இருக்கின்றனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் நடுத்தர வாழ்க்கைத் தரமுள்ள மக்கள் என்று குறிப்பிடுவது அதாவது 6000 ரூபாய்க்குக் கீழே வருஷ வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இந்தச் சலுகை கொடுக்கப் பட்டு வருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, apart from the good work turned out by the Madras House Construction Society, did not the Corporation of Madras apply for a loan to construct houses for the middle classes in North Madras and if so, may I know why their request was refused by the Government of Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I want notice for that question.

*Buckingham Canal*

* 195 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given on 16th August 1956 to Question No. 106 whether any investigation for carrying out improvements to the North Buckingham Canal has since been made?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir. The field investigation of the scheme for improvements to North Buckingham Canal has been completed and a preliminary estimate is being drawn up by the Public Works Department.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த பக்கிங்காம் கால்வாய் வட சென்னையில் இருக்கும் பகுதியில் தென் சென்னையில் எவ்வளவு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு இன்னும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதனால் அங்கு துர்கந்தம் அதிகமாக வீசிக்கொண்டிருக்கிறது. இதன் மூலம் ஏழை மக்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் இருக்கும் அவர் களுக்கு உடனடியாகப் பரிகாரம் அளிப்பதற்கு இந்தச் சர்க்காரிடம் ஏதாவது நல்ல திட்டங்கள் இருக்கிறதா ? அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க இந்தச் சர்க்கார் ஏதாவது முயற்சி எடுக்குமா ?



23rd July 1957]

THE HON. SRI P. KAKKAN : இதை வெகு சீக்கிரமாக அபிவிருத்தி செய்வதற்காக ஒரு அஸிஸ்டன்ட் இன்ஜினியர், நான்கு ஜூனியர் இன்ஜினியர் இவர்களை நியமித்து விரைவாக வேலை செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that this Canal has become the breeding ground for many diseases?

MR. SPEAKER : How is it relevant?

THE HON. SRI P. KAKKAN : I don't think so, Sir.

SRI K. ANBAZHAGAN : இந்த பக்கிங்காம் கால்வாய் தெற்கே புதுச்சேரியிலிருந்து வடக்கே நெடுந்தொலைவுவரை கிழக்கு கடற்கரை ஓரமாகச் செல்வதால் சீர்படுத்தி போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்போவ தாக ஒரு யோசனை மத்திய சர்க்காரில் இருப்பதாகச் சில ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்டது. அது குறித்து இப்போதைய நிலைமை என்ன என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த பக்கிங்காம் கால்வாயை சரிப்படுத்துவதற்கு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருந்தது. வடக்கு பக்கிங்காம் கால்வாயையும் சென்னை துறைமுகத் தையும் இணைப்பதற்கு 25 லட்சம் ரூபாய் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வடக்கு பக்கிங்காம் கால்வாயையும்த் ஹார்பரோடு சேர்ப்பதற்கு இப்போது 35 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது. சீக்கிரமே இதை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இந்த பக்கிங்காம் கால்வாயை விருத்தி செய்வதற்கு கார்ப்பொரேஷனிடமிருந்து ஏதாவது திட்டங்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : நோட்டீஸ் வேண்டும்.

SRI A. VEDARATHNAM PILLAI : பக்கிங்காம் கால்வாயோடு நாகப் பட்டிணம் வேதாரண்யம் இவைகளைச் சேர்ப்பதற்கு ஏதாவது திட்டம் சர்க்காரிடம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

SRI K. VINAYAKAM : இந்த பக்கிங்காம் கால்வாய் ஆந்திரா தேசத்திலிருந்து சென்னைக்கு வந்து சென்னையிலிருந்து தெற்கே 9-40 a.m. பாண்டிச்சேரி வரை போகிறது கடலோரமாக. இந்தக் கால்வாயை விருத்தி செய்வதை விட்டு விட்டு, அதற்கு எவ்விதமான பணம் செலவு செய்தும் கூட போக்குவரத்துக்குச் சாதகமாக அதை பயன்படுத்திக்கொள்ள முடியாத அளவிற்கு இருப்பதால் இதைப்பூராவும் மண்ணால் ரொப்பிவிட்டு மேலே ஒரு இருப்புப் பாதையைபோட்டு இப்பொழுது போகிற கட்டை, விறகு, அரிசி போன்றவைகளை ரெயில் மூலம் போவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா ?

MR. SPEAKER : **The Hon. Member may put a separate question.**

*Baby Taxies*

* 196 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether any fresh licences have been issued for plying baby taxies in the City and in the mufassil places during 1956–57?

THE HON. SRI V. RAMIAH : Yes, Sir.

[23rd July 1957

SRI M. S. SELVARAJAN: முக்கியமான டாக்ஸி சென்டர்களில் போன் வசதிசெய்து அதன் மூலம் இந்த டாக்ஸிகளைத் தருவிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI V. RAMIAH : A separate question may be put.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know the number of baby taxies licensed during this period?

THE HON. SRI V. RAMIAH : In 1956, in the districts 110 and in the Madras City 119. In 1957, in the districts 34 and in the Madras City 50.

SRI A. A. RASHEED : May I know whether it is a fact that licences issued have not been utilised by the taxi-owners?

THE HON. SRI V. RAMIAH : Yes, Sir. Though we have issued 50 licences for plying baby taxies, only five taxies have been put on the road. There is still time for the other taxies to be put on the road.

SRI A. GOVINDASAMY : ஜில்லாக்களில் ஓட்டுகிற பேபி டாக்ஸியில் மீட்டர் வைக்கப்படாமல் இருக்கிறது. அதில் மீட்டர் வைக்க அரசாங்கம் வற்புறுத்துமா ?

MR. SPEAKER: I have no objection to the Hon. Minister asking for a separate question to be put on the subject.

THE HON. SRI V. RAMIAH : I know taxies plying in places other than Madras do not have meters. If it is considered necessary, we will take necessary action.

SRI K. B. S. MANI : இந்த டாக்ஸிகளில் நபர்களை ஏற்றுகிற எண்ணிக்கையை குறிப்பாக வைத்திருப்பதால், மற்றைய இல்லீகல் டாக்ஸீஸ் அதிகமாக இருப்பதால் நபர்கள் ஏற்றும் முறையை மாற்றி அதை வெயிட், லோடிங் கப்பாஸிட்டிக்கு அனுசரணையாக வைத்துக் கொடுக்க அரசாங்கம் அனுமதி தருமா ?

MR. SPEAKER : இதற்கும் முதல் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை.

SRI A. VEDARATHNAM PILLAI : பேபி டாக்ஸியில் 4 பேர்களும், பெரிய வண்டியில் 5 பேர்களும் பிரயாணம் செய்ய அரசாங்கம் அனுமதிக்குமா ?

THE HON. SRI V. RAMIAH : இப்பொழுது இருக்கிற முறைப்படி பேபி டாக்ஸியில் 3 பேரும் மற்றதில் 4 பேரும்தான் ஏறலாம்.

SRI M. JAGANNATHAN : May I know whether the Government will consider the desirability of exempting children below 12 years from the seating capacity sanctioned to public taxies?

MR. SPEAKER : The hon. Member's question is not clear. Let him please make it clear for the Hon. Minister.

SRI M. JAGANNATHAN : Will the Government consider the desirability of exempting children below 12 years from the seating capacity sanctioned to public taxies in the City of Madras?

THE HON. SRI V. RAMIAH : It is very difficult to do, Sir. If we give such exemption, any number of children will get into the taxies.



23rd July 1957]

SRI V. SANKARAN : மதுரை போன்ற நகரங்களில் டாக்ஸிகளில் மீட்டர் இல்லாதபடியால் திருவிழா காலங்களிலும் திருமண காலங்களிலும் அவர்கள் நினைத்த வாடகையைக் கேட்கிறார்கள். அதைக் கொடுக்காவிட்டால் போகமுடியவில்லை. ஆகவே அந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க மீட்டர் வைப்பதற்கு அரசாங்கம் வேண்டியது செய்யுமா ?

THE HON. SRI V. RAMIAH : I will take that information from the hon. Member and find out if it is necessary to adopt the suggestion.

*Palmyra tree climbers*

* 197 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of palmyra tree climbers who are members of Palm-Gur Societies districtwise;

(*b*) whether any machine has been invented now to help the climbers to climb up the trees;

(*c*) if so, the cost and the weight of each such machine;

(*d*) the steps taken by the Government to popularise these machines among the public; and

(*e*) the name and the occupation of the inventor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement [1] showing the number of palmyrah tree climbers who are members of Palm-Gur Co-operative Societies is placed on the table of the House.

(*b*) No, Sir.

(*c*) to (*e*) The questions do not arise.

SRI T. T. DANIEL : Sometimes palmyra tree climbers meet their death while climbing palmyra trees. In view of the fact that great risk is involved in this work, will the Government be pleased to make suggestions to the Central Research Department to examine the desirability of inventing some machine to avoid such risks to the climbers? I am told that one of the officers in Tirunelveli district has invented some sort of machine and that is being tested to find out its fitness? May I also know whether that is fact?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. That is under examination.

SRI P. G. MANICKAM : மற்ற ஜில்லாக்களைப் பார்க்கிலும் கோயம்புத்தூர் ஜில்லாவில் 27,674 மாஜி கள் இறக்குபவர்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[1] Printed as Appendix I on page 271 infra.

[23rd July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இப்பொழுது கொடுத்த எண்ணிக்கை இவர்களையெல்லாம் சேர்த்துத்தான். கூட்டுறவு சங்கம் வைத்து வெல்லம் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் அவர்களுக்கு வேலை கொடுக்கும் முறை.

SRI M. WILLIAM : In the Travancore-Cochin State Government have been giving grants with a view to encourage this industry. May I know, therefore, whether this Government will be pleased to pursue the same policy of giving grants so that the industry might be encouraged,

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

SRI K. P. PALANISAMI : எங்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் பனைமரம் ஏறக்கூடியவர்கள் 6 மாதம் ஏறிவிட்டு பாக்கி காலங்களில் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்கள் ஜில்லாவில் தாராபுரம் தவிர பாக்கி தாலூகாக்களில் தென்னை மரத்திற்கு பெர்மிஷன் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை எங்கள் தாலூகாவிற்கும் விஸ்தரிக்க அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் செய்திருந்தோம். அதை அரசாங்கம் உடனடியாக கவனிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது.

*Appointment of Harijans through Employment Exchange*

* 198 *Q*.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Harijans in Coimbatore district that applied to the Empolyment Exchange Office, Coimbatore, in 1956–57 for appointment; and

(*b*) the number of Harijans provided with appointments?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 1,007.

(*b*) 210.

SRI P. G. MANICKAM : இந்தக் கவர்ன்மெண்டாரின் உதவியால் தற்போது ஹரிஜனங்கள் வேலை தேடக்கூடிய அளவிற்காவது முன்னேறி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேலை கிடைப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமானால், கிராம பியூன் வேலையிலிருந்து கெஜெட் பதிவு அதிகாரிகள் வரை காலியாகும் இடங்களில் 50 சத விகிதம் அவர்களுக்கு என்று கொடுக்க அரசாங்கம் முன் வருமா ? அதேபடி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கிற எல்லா தொழிற்சாலைகளிலும் அவர்களுக்கு பெருத்த மேஜர் பங்கு கொடுத்தால் தான் நல்லது. இதை சர்க்கார் கவனிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களுடைய க்வாலிபிகேஷன்சைப் பார்த்து அவரவர்களுக்குத் தகுந்த வேலை தேடி கொடுக்கப்படுகிறது. கோயமுத்தூர் ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 28 ஸ்தானங்களுக்கு 20 பேர்கள்தான் அந்தத் தகுதியுடன் விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். ஆகவே தகுதி எந்தெந்த இடத்தில் இருக்கிறதோ அந்தந்த இடங்களில் அவர்களுக்குச் சலுகை காட்டப்படும்.



23rd July 1957]

*Subsidy for purchase of bullocks and agricultural implements*

* 199 *Q*.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the amount allotted in 1956–57 as subsidy for the purchase of bullocks and agricultural implements for Harijans in Coimbatore district; and

(*b*) the amount spent out of it?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 1,20,000.

(*b*) Rs. 1,12,450.

SRI P. G. MANICKAM : இந்தவிதமாக ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் தொகையானது அவர்களுக்கு எந்தக் காரியத்திற்காக கொடுக்கப்படுகிறதோ அந்தக் காரியத்திற்காக அது செலவழிக்கப்படுவதில்லை. அப்படி அவர்கள் மாடு வாங்குகிறார்களா அல்லது விவசாயக் கருவிகள் வாங்கி இருக்கிறார்களா என்பதை அந்தத் தொகை கொடுத்த பிற்பாடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பதில்லை. ஆகவே விவசாய இலாகா மூலம் அவர்களுக்கு விவசாயக் கருவிகளையோ அல்லது மாடுகள் போன்றவைகள் வாங்கிக் கொடுப்பதற்குரிய வழி வகையை கவர்ன்மெண்டார் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜன மக்களுக்குப் பயன்படும் என்ற முறையில்தான் இந்த மாடு வாங்குவது அல்லது விதை வாங்குவது, உழவு சாமான்கள் வாங்குவது போன்றவைகளுக்குத் தான் இந்த நிதி கொடுக்கப்படுகிறது. அதில் ஏதாவது புகார் இருந்தால் அங்கத்தினர் அவர்கள் இங்கே வெறுமனே சொல்வதை விட்டு உருப்படியாக இன்ன இடத்தில் இன்னது நடக்கிறது என்று புகார் சொன்னால் அதைக் கவனிக்கலாம்.

SRI R. SRINIVASA IYER : இந்தத் தொகை சரியாக பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற புகார் சாதாரணமாக இருப்பதால் ஒரு ஜில்லாவில் ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமித்து சரியான நபர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறதா, காரியங்கள் சரியானபடி நடக்கிறதா என்று பார்க்க ஒரு ஆபீசரை நியமிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு ஒரு ஆபீசரை நியமிக்கத் தேவை இல்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜனங்களின் நன்மைக்காக பாடுபட அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அதைக் கவனிப்பார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : இது போன்ற புகார்கள் எல்லா அங்கத்தினர்களும் சொல்லக்கூடிய நிலைமை இருப்பதால் கண்டிப்பாக ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிய வருகிறது. ஆகவே இது போன்ற சலுகைகளை இனிமேல் கொடுக்கும்போது அந்தந்த தொகுதியில் இருக்கக் கூடிய அங்கத்தினர்களையும் கலந்து கொண்டு கொடுக்கக்கூடிய தன்மையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : சர்க்கார் இப்பொழுது ஒரு புது முறையை கையாளத்தான் நினைக்கிறது. யார் யார் தகுதி உடையவர்களோ அவர்களின் பெயர்களை எடுத்துக் குலுக்குச் சீட்டு போட்டு எடுத்து யாருக்கு விழுகிறதோ அவர்களுக்கு மாட்டைக் கொடுத்து அதில் எச். டபிள்யூ. பெ. அதாவது ஹரிஜன் வெல்பேர் என்று சூடு போட்டுக் கொடுத்தால் அதை விற்க முடியாது.

SRI GOMATHISANKARA DIKSHITAR : ஹரிஜனங்களுக்கு விவ 9.50
சாயத்திற்கும் மாடு வாங்குவதற்கும் கொடுக்கக்கூடிய பணம் நேரடியாக a.m.
அவ்வளவும் போய்ச் சேராமல், ஒரு சிறு பாகம்தான் போய்ச் சேருவதால், அவ்வளவும் நேரடியாகப் போய்ச் சேருவதற்கு கனம் மந்திரி அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போதுதான் நான் சொன்னேன். இனிமேல் செலவழிக்கப்படக்கூடிய பணம் அவ்வளவும் நியாயமான முறையில் செலவழிக்கப்படும். இந்த மாதிரி தனிப்பட்ட புகார்கள் ஏதாவது இருந்தால் கனம் அங்கத்தினர் தனியாகத் தெரிவித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவேயே இந்தமாதிரிப் புகார்கள் ஏதாவது இருந்தால் தெரிவிக்கும்படி ஜில்லா ஹரிஜன் வெல்பேர் ஆபீசருக்குத் தெரிவித்திருக்கிறோம்.

SRI M. P. SUBRAMANIAM : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இதற்காக ஒதுக்கப்பட்ட 1,20,000 ரூபாயில் 1,12,450 ரூபாய்தான் செலவழிக்கப்பட்டதென்று தெரிவித்தார்கள். மீதமுள்ள 8,000 ரூபாய் செலவழிக்கப்படாததற்குக் காரணம் அதற்கான விண்ணப்பங்கள் வரவில்லையா, அல்லது அவர்கள் தகுதியில்லாததாலா?

THE HON. SRI P. KAKKAN : யார் அந்த விதிகளின் கீழ் வருகிறார்களோ, அதாவது புஞ்சையாயிருந்தால் ஒரு ஏக்கரும் அல்லது நஞ்சையாயிருந்தால் ½ ஏக்கரும் இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இந்தக் கடன் கொடுக்கப்படுகிறது.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : இதில் பல புகார்கள் இருப்பதனால் ஹரிஜன சேவா சங்கம் மூலமாக இதை விநியோகிக்க அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர்கள் ஸர்டிபிகேட் கொண்டு வரும்போது ஹரிஜனங்கள் என்று ஹரிஜன சேவா சங்கங்கள், தாழ்த்தப்பட்டோர் சங்கங்கள், எம்.எல்.ஏ., எம்.எல்.சி. அல்லது எம்.பி.க்களிடமிருந்து வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று அரசாங்கம் நியமித்திருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : இப்படிப்பட்ட உதவிக்கு மாடுகளும் வேறு சில விவசாயப் பொருள்களும் தரப்படுவதை வரவேற்றாலும், இந்த மாடுகளைச் சூடு போடுவது அவைகளுக்கு துன்பமாகாது என்று கருதப்படுகிறதா ? இப்படிச் சூடுபோடுவதை விலங்கினங்களைத் துன்புறுத்தக்கூடாது என்று கூறும் அரசாங்கம் அங்கீகரிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இப்படிக் கொடுக்கப்படுகிற மாடுகளை விற்றுவிடுகிறார்கள் என்று அவர்களின் நன்மையைக் கருதியே இந்த அடையாளம் போடப்படுகிறது. தமிழ் நாட்டிலே மாடுகளைச் சுடும் பழக்கம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI R. KRISHNASAMI NAIDU : கடந்த வருஷக் கடைசியில் ஹரிஜனங்களுக்கு இலவசமாக மாடுகள் வாங்க மான்யம் அளிக்கப்பட்டதிலே அநேக புகார்கள் வந்திருக்கின்றன. அதில் உண்மையும் இருக்கின்றன என்று அறிகிறோம். ஆனால் அவைகளை ருசுப்பிக்க முடியாமல் இருக்கிறோம். அந்த ஹரிஜனங்கள் தைரியமாக குறைகளைச் சொல்வதற்குத் தயாராயில்லை. இந்த வருஷத்தில் இம்மாதிரி உதவி செய்யும் திட்டங்களில் ரெவினியூ இலாகா தாசில்தார்களால் மார்ச் மாதம் 31-ம் தேதி கொடுப்பதை விட்டு, காலா காலத்திலே நல்ல நபர்களைப் பொறுக்கி எடுக்க ஏற்பாடு செய்து மாடு வாங்கிக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : காலாகாலத்தில் நல்ல நபர்களை, நல்ல முறையில் உற்பத்தி செய்யக்கூடிய நபர்களைப் பொறுக்கி யெடுக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

SRI M. C. MUTHUKUMARASWAMY: ஹரிஜனங்களுக்குக் கொடுக்கக் கூடிய இந்தத் தொகையை எம்.எல்.ஏ., அல்லது எம்.எல்.சி.க்களிடமிருந்து சர்டிபிகேட் வாங்கிக் கொண்டுவந்த பிறகு தான் கொடுக்கப்படுமென்று அமைச்சர் உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்னார்கள். இது அவர்களுக்கு எந்த முறையிலே தெரியப்படுத்தப்பட்டது. அவர்களுக்குத் தெரியும்படி டாம்-டாம் போடப்பட்டதா ? அல்லது ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள் மூலமாக மக்களுக்குத் தெரியும்படி செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?



THE HON. SRI P. KAKKAN : டாம்-டாம் போட ஏற்பாடு பண்ணவில்லை. அரசாங்கம் செலவழிக்க இதற்கு அதிக ரூபாய் இடையாது. டாம்-டாம் போட்டால் எல்லோரும் வந்து விடுவார்கள். அதற்கு அதிகப் பணம் வேண்டும். இதைத் தாசில்தார் மற்றும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மூலமாக விளம்பரப்படுத்தியிருக்கிறோம்.

(Starred question Nos. 200 and 206 were answered together.)

*Amenities to Electricity Department workers*

* 200 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government have received a memorandum, dated 24th September 1956, from the Madras Operation Subordinate Service Association of the Government Electricity Department workers in regard to granting of rent-free quarters, free lighting, etc. ; and

(b) if so, the steps taken thereon?

THE HON. SRI V. RAMIAH : (a) The Government received a representation, dated 29th April 1956 (and not 24th September 1956) from the Operation Subordinate Service Staff Association, Central Committee, Coimbatore.

(b) The Government have decided to recommend to the Madras State Electricity Board (i) to grant the concession of rent-free quarters and free lighting to members of the Operation Subordinate Service, who have to reside very close to their place of work in the interests of Operational and maintenance needs, on a phased programme to be spread over a period of 4 years, and (ii) to grant daily allowance at an enhanced rate of Re. 1 to those now drawing daily allowance of 75 naye paise (or annas 12) and less. The proposal relating to the supply of free uniforms to the category of Helpers in the Operation Subordinate Service has been deferred for consideration by the Electricity Board.

*Amenities to the employee of Hydro-Electric Power Stations.*

* 206 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether any assurance was given in 1948 to the employees in the Hydro-Electric Power Stations at Pykara, Mettur and Papanasam about-free housing, free dress, etc. ;

(b) whether those employees have made any representation recently in this regard; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMIAH : (a) In 1948, the Government accepted in principle the grant of only rent-free quarters and free lighting but notf ree dress, etc., to those members of the Operation

[23rd July 1957

Branch of the Electricity Department who have to reside very close to their place of work and only where quarters are available.

(*b*) Yes, Sir.

(*c*) The Government have decided to recommend to the Madras State Electricity Board (i) to grant the concession of rent-free quarters and free lighting to members of the Operation Subordinate Service, who have to reside very close to their place of work in the interests of Operational and maintenance needs, on a phased programme to be spread over a period of four years, and (ii) to grant daily allowance at an enhanced rate of Re. 1 to those now drawing daily allowance of 75 naye paise (or annas 12) and less. The proposal relating to the supply of free uniforms to the category of Helpers in the Operation Subordinate Service has been deferred for consideration by the Electricity Board.

SRI S. PAKKIRISAMI PILLAI : அரசாங்கத்தால் நடத்தப்படும் டிபார்ட்மெண்டுகளில் எலெக்ட்ரிசிடி டிபார்ட்மெண்டு நிறைய வருமானத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. வருமானம் நிறைய வருகிற காரணத்தால் அதில் இருக்கும்படியான வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய அத்தனை சலுகைகளையும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலையில் இருக்கும்போது எத்தனை காலமாகும் இந்த வீடுகளைக் கட்டிக் கொடுத்து நல்ல வசதிகளைச் செய்து வைக்க என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI V. RAMIAH : இப்போது வீடு கட்டிக்கொடுக்கும் பிரச்னை இல்லை. வீட்டு இலவச வாடகை, இலவச வெளிச்சம் கொடுக்கும் கோரிக்கை, ஆகிய இந்தப் பிரச்னையை இன்னும் நான்கு வருஷங்களில் தீர்த்துவிட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : எங்கள் மாவட்டத்தில் எலெக்ட்ரிசிடி கம்பெனியை சவுத் ஆர்க்காட் எலெக்ட்ரிசிடி கம்பெனி நடத்திவந்ததை சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு இலவச எலெக்ட்ரிசிடி சூபர்வைசர்களுக்குக் கொடுக்கப்பட்டதானது தடை செய்யப்பட்டிருக்கிறது. அதை நிறுத்தாமல் மீண்டும் விநியோகிக்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

THE HON. SRI V. RAMIAH : கம்பெனியாரிடத்திலிருந்து எடுத்துக் கொண்டிருக்கிறதில் அதிக சிரமம் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கத்தினர் சொல்லும் குறையை கவனிக்கிறேன்.

SRI K. RAMACHANDRAN : 1948-ம் வருஷத்திலே ஏற்பட்ட சர்க்கார் உத்தரவு அமுல் நடத்தாமல் இருக்க அடிப்படையான காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMIAH : நிதி நிலைமை தான் காரணம்.

SRI S. PAKKIRISAMI PILLAI : வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படாது தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகையாக தனியாகக் கொடுக்கப்படுகிறதா ? அப்படிக் கொடுக்கப்படுவதானால், எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI V. RAMIAH : இப்போது வீடு கொடுத்து வாடகை வாங்கி வருகிறோம்.

SRI K. ANBAZHAGAN : இப்போது வீடு வாடகையில்லாமல் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுமென்று தெரிவிக்கும்போது, வீடுகளை வேண்டிய அளவு கட்டலாம், அல்லது இருக்கிற வீடுகளைத் தரலாம், அல்லது வீடுகளை அரசாங்கம் வாடகைக்கு எடுத்துக்கொண்டு அவர்களுக்கு இலவசமாகத்



23rd July 1957]

தரலாம், அல்லது அவர்கள் கொடுக்க நேரும் வாடகையைக் கொடுக்கலாம். இப்போது புதிதாக வீடுகள் கட்டப்படுகின்றனவா அல்லது அத் தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப் பணம் தரப்படுமா ?

THE HON. SRI V. RAMIAH : இது வரைக்கும் டிபார்ட்மெண்டு வீடுகளைக் கொடுத்து வாடகை வாங்குகிறோம். வீடு கட்டவும் திட்டங்கள் இருக்கின்றன.

SRI T. P. ELUMALAI : இம்மாதிரி ஐந்தாண்டு திட்டத்தில் மின்சார இலாகாதான் நல்ல வேலை செய்திருக்கிறது. அதனால் அந்த இலாகா தொழிலாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஏதாகிலும் சன்மானம் வழங்குவதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMIAH : மின்சார இலாகா நல்ல வேலை செய்திருக்கிறது என்பது எல்லோருக்கும் புரிந்திருக்கிறது. அதைப்பற்றி எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லை. அவர்களுக்கு எந்த விதமான சன்மானம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னால் அதைப் பற்றிக் கவனிக்கப்படும்.

SRI M. JAGANNATHAN : மின்சார இலாகாவின் கீழ்த்தர சிப்பந்திகளின் குறைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி நிலைமைதான் காரணம் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். இம்மாதிரி கீழ்த்தர சிப்பந்திகளுடைய குறைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வீடுகள் இலவசமாகக் கட்டிக்கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறார்களா ? அதற்கு சர்க்காருக்கு எவ்வளவு பொருள் செலவாகும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதற்கு வேண்டிய திட்டம் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

THR HON. SRI V. RAMIAH : வருஷம் ஒன்றுக்கு அறுபது ஆயிரம் ரூபாய் ஆகிறது. இன்னும் தாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காக அதை நான்கு வருஷத்திற்குள் பூர்த்தி செய்துவிடவேண்டும் என்று திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திலேயே ஆரம்பித்து இன்னும் நான்கு வருஷங்களில் பூர்த்தி செய்துவிடவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### *Maida*

* 201 *Q*.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received a petition, dated 26th June 1957, from the Persian Bakery, Madras, regarding the difficulties experienced by bakeries in the City of Madras to get supplies of maida from the Flour Mills at the controlled prices; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) This Government took up the matter with the Regional Director (Food), Madras, and the Union Minister for Food and Agriculture, and apprised them of the situation prevailing in Madras City in regard to the availability of wheat products, viz., maida, atta, sooji, etc., at fair prices. The Government of India have since made necessary arrangements for the supply of adequate stocks of wheat to the flour mills for conversion into maida and atta, etc., and the latter have agreed to sell the above wheat products to the bakeries and the public at fair prices.

A 'Press Note' to this effect, dated 8th July 1957, has been issued by the Regional Director (Food), Madras.

SRI M. JAGANNATHAN : சென்னையில் இருக்கிற ஷா வாலெஸ் மாவுமில், செஞ்சுரி மாவு மில், தென் இந்தியா மாவு மில் இந்த மூன்று மில்களிலும் ஏறக்குறைய 45 ஆயிரம் மூட்டை மைதா மாவு தயாரிக்கப் படுகிறது. ஆனால் சென்னையில் இருக்கிற பேக்கரிகளுக்கு 6,000 மூட்டை மைதா கூட கிடைப்பதில்லை. அதே சமயத்தில் கள்ளச் சந்தையில் ஒரு மூட்டை ரூ. 50-க்கு கிடைக்கிறது. இந்த விலைக் கட்டுப்பாடு வந்த பிறகு பேக்கரிகளுக்கு குறைந்த விலையில் போதிய அளவில் மைதா மாவு கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த நெருக்கடியை தீர்ப்ப தற்கு தக்க நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு கூறியது போல் மில்களிலிருந்து மைதா மாவு சுலபமாகக் கிடைப்பதற்கும் குறைந்த விலைக்குக் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு ஆட்டா, சொஜ்ஜி போன்றவைகளுக்கு பம்பாயிலிருந்து இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, is it not a fact that the Government of India have come forward to supply five thousand tons of flour to South India?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there should be no difficulty about the quantity that is required. Any amount of wheat could be got and that could be made into flour.

*Geological survey in Kanyakumari district*

* 202 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have conducted any geological survey of the forest lands and hilly tracts in Kanyakumari district?

THE HON. SRI R. VENKATARAMAN : The systematic geological mapping and mineral survey of the Kanyakumari district has been taken up by the Geological Survey of India only during the last field season.

SRI T. T. DANIEL : Sir, several tons of illuminite and monozite are removed every year in Mavalakurichi in Colachel constituency. It is now stated that at Leepuram, which is near Cape Comorin, we can find deposits of these minerals. It is also believed that thorium deposit is also available in some regions in this district. We can find huge supplies of mica in hilly tracts and some parts of this Kanyakumari district. As a matter of fact there is a tank called ' Mica ' tank. Will the Government be pleased to take the necessary steps to conduct a systematic geological survey of this district?

THE HON. SRI R. VENKATARAMAN : I said that geological survey was being conducted and that it would be continued. We cannot decide on the existence of minerals merely by looking at it. It has to be investigated. It is true there are some traces of illuminite deposit near Leepuram, but there is no indication of the existence of other minerals stated by the hon. Member.

SRI K. ANBAZHAGAN : தமிழ் நாடு முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூலப்பொருள்கள் பல ஏராளமாக குவிந்து கிடப்பதாக தெரியவருவதாலும் தமிழ் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்ற மடையாமல் இருப்பதாலும் தமிழ் நாடு பூராவிலும் ஜியாலாஜிகல் சர்வே



செய்து மூலப் பொருள்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று கண்டு பிடிக்கவேண்டி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துமா ? அதற்கு எதாகிலும் திட்டம் தயாரிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்த எந்த ஜில்லாவில் எந்தவிதமான உலோகப் பொருள்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறதோ அந்த இடங்களில் ஜியாலாஜிகல் சர்வே செய்யும்படியான ஏற் பாடு செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் மூலப் பொருள்கள் இருக்கின்றனவா என்று கண்டு பிடிக்க சர்வே செய்வது என்பது சரியல்ல. மூலப்பொருள்கள் இருக்கும் இடங்களைத் தெரிந்தால் தான் அங்கு சர்வே செய்வது நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த அந்த இடங்களில் தான் சர்வே ஆரம்பிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : Sir, has this Geological Survey party, after its labours, produced any result?

THE HON. SRI R. VENKATARAMAN : Very good results.

SRI M. P. SUBRAMANIAM : நம்முடைய அரசாங்கத்தின் கீழ் ஒரு ஜியாலாஜிகல் டிபார்ட்மெண்டை ஆரம்பிப்பது என்றும் அப்படி ஆரம்பித்து ஜியாலாஜிகல் சர்வே செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்று இதற்கு முன்பு இந்தச் சபையில் அறிவிக்கப்பட்டது. அதே மாதிரி நம்முடைய ராஜ்யத்தில் இப்பொழுது ஆரம்பித்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ஜியாலாஜிகல் சர்வே செய்வ தற்கு நமக்கு ஆட்சேபணை இல்லை. அதற்கு வேண்டிய எக்ஸ்பர்ட்டுகள் நமக்குப் போதிய அளவில் கிடைக்கவில்லை. மத்திய அரசாங்கம் சில எக்ஸ் பர்ட்டுகளை கொடுத்தார்கள். அவர்களை கடனாக நாங்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவேதான் அதில் சற்று தாமதம் இருக்கிறது.

SRI J. MATHA GOWDER: மூலப்பொருள்கள் எந்த எந்த ஜில்லாவில் கிடைக்கிறது என்று தெரிந்த பிறகு அங்கே சர்வே செய்யலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் நீலகிரியில் மைக்கா, தங்கச் சுரங்கம் முதலி யவைகள் இருக்கின்றன என்று நன்றாகத் தெரிய வருகிறது. வெள்ளைக் காரர்கள் இருந்த காலத்தில் தங்கம் இருக்கிறது என்பதை நேராகப் பார்த்திருக்கிறார்கள். அதையும் அங்கிருந்து எடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்ய என் அரசாங்கம் மறந்தது என்பதைக் கேட்கிறேன்.

MR. SPEAKER : இப்பொழுது அங்கத்தினர் கன்யாகுமரியிலிருந்து நீலகிரிக்குப் போய் விட்டார்கள். அடுத்த கேள்விக்குப் போகலாம்.

*Location of the office of the Superintending Engineer*

* 203 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for locating the office of the Superintending Engineer for the Sathanur-Krishnagiri Project at Madras?

THE HON. SRI P. KAKKAN : The Superintending Engineer for Sathanur and Krishnagiri Projects is also in charge of Araniar Project. These three projects are situated in different directions away from rail-heads and there is also no central point from which these projects could be reached conveniently. The question of fixing the headquarters of the Circle either at Tiruvannamalai or at Vellore was considered but dropped as there was not suitable and sufficient accommodation in either of these places for locating the Circle office. These places are also inconveniently situated for proper supervision and control of the Araniar Project. Hence

[23rd July 1957

Madras which is centrally situated from all these three projects was fixed as headquarters for the Circle. Suitable accommodation was also available in Madras at that time due to the closure of special Irrigation Division.

Sri A. R. SUBBIAH MUDALIAR : ஆரணியார் ப்ராஜெக்ட் இப்பொழுது முடிவாகிவிட்டது. சாத்தனூர் ப்ராஜெக்ட் சென்னையிலிருந்து 100 மைல் இருக்கிறது. கிருஷ்ணகிரி ப்ராஜெக்ட் சென்னையிலிருந்து 150 மைல் இருக்கிறது. ஆரணியார் ப்ராஜெக்ட் முடிவடைந்து விட்டபடியால் சாத்தனூர் ப்ராஜெக்ட், கிருஷ்ணகிரி ப்ராஜெக்ட் இந்த 2 projects-க்கு centre ஆக ஒரு இடத்தில் சூப்ரண்டெண்டிங் இஞ்சினீயர் ஆபிஸை வைக்க சர்க்கார் யோசிக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : மூன்று ப்ராஜெக்ட்களும் செப்டெம்பர் மாதம் முடிவடையக்கூடிய தருவாயில் இருக்கின்றன. அதனால் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

*Basin Bridge Power House*

* 204 Q.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there were any accidents in the Basin Bridge Power House during December 1955 and March 1957 ; and

(b) the number of deaths that occurred as a result of these accidents?

The Hon. Sri V. RAMIAH : (a) The answer is in the affirmative.

(b) Two, one in December 1955 and the other in March 1957.

Sri K. SATTANATHA KARAYALAR : இந்த இரண்டு தொழிலாளர்கள் இறந்ததற்குக் காரணம் அந்த பாக்டரி இன்ஸ்பெக்டர் அந்த பாக்டரியை சரியானபடி பார்க்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது அல்லவா ?

The Hon. Sri V. RAMIAH : ஆபத்துகள் எப்பொழுது ஏற்படும் என்று சொல்ல முடியாது. பாக்டரி இன்ஸ்பெக்டர் பார்வையின் குறைவால் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்ல முடியாது. அதிகாரிகளுடைய அஜாக்கிரதையினால் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்பட்டால்தான் அவர்களின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

Sri S. PAKKIRISAMI PILLAI : இம்மாதிரியான நிகழ்ச்சிகள் அநேகம் தடவை இந்த பவர் ஸ்டேஷனில் ஏற்படுகின்றன. அங்குள்ள தொழிலாளி உயிர் துறந்ததற்குக் காரணம் அங்குள்ள ஸ்டீம் பாயிலர் வெடித்து அதனால் இறந்தான் என்று நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஸ்டீம் பாயிலர் ஆக்ட் பிரகாரம் அந்த அந்த காலத்தில் அங்குள்ள ஸ்டீம் பாயிலர்களை சுத்தம் செய்யாத காரணத்தால்தான் அந்த ஸ்டீம் பாயிலர்கள் வெடித்து இருக்கின்றன. இது அந்த அந்த அதிகாரிகளின் அஜாக்ரதையால் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான நிகழ்ச்சி அஜாக்கிரதை காரணமாக ஏற்பட்டதன் காரணமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகளின் பேரில் யார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைத்தான் கேட்கிறேன்.

The Hon. Sri V. RAMIAH : அதிகாரிகளுடைய அசிரத்தையினால் இந்த ஆபத்து ஏற்பட்டது என்று நான் சொல்ல முடியாது. காரணம் எந்த எந்த நேரத்தில் என்ன என்ன ஆபத்து ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. இதெல்லாம் ஆக்ஸிடெண்டாக ஏற்படக்கூடியதுதான். சாதாரணமாக ஏற்படக்கூடியது அல்ல.



23rd July 1957]

Srimathi T. N. ANANDANAYAKI : இப்படி விபத்துக்களுக்குள்ளான தொழிலாளர் குடும்பத்திற்கு ஏதாவது நஷ்ட ஈடு அரசாங்கம் கொடுத்ததா? அப்படிக் கொடுத்திருந்தால், எவ்வளவு கொடுக்கப்பட்டது ? எவ்வளவு குறுகிய காலத்தில் அந்த நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டது ? 10-10 a.m.

The Hon. Sri V. RAMIAH : பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1955-56-ம் வருஷத்தில் ஏற்பட்ட விபத்துக்களுக்காக "ஒர்க்மென்ஸ் காம்பென்சேஷன்ஸ்" சட்டத்தின் பிரகாரம் 2,400 ரூபாயும், 1956-57-ம் வருஷத்தில் ஏற்பட்ட விபத்துக்களுக்காக 1,800 ரூபாயும் நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Handloom Weavers*

* 205 Q.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the amount of loan granted to the Handloom Weavers during 1955-56 and 1956-57 in Tirunelveli district;

(b) the value of cloth produced from the district in 1955-56 and 1956-57 ;

(c) the value of cloth produced from Tirunelveli, Mellappalayam, Ambasamudram, Kadayanallur and Tenkasi taluks respectively ;

(d) of this how much was produced through co-operative societies and how much by Master weavers; and

(e) the quantity and value of cloth in stock at present and the period during which the stock accumulated?

The Hon. Sri R. VENKATARAMAN : The answer [a] is placed on the table of the House.

Sri K. SATTANATHA KARAYALAR : சுமார் மூன்று மாத காலத்திலே, எழு லட்சத்திற்கு அதிகமான ரூபாய்கள் பொருமான "ஸ்டாக்" அங்கே தேக்கம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு, இதைப்பார்க்கிலும் மிக அதிகமாக அங்கு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அந்தக் காலத்தில், திருநெல்வேலி ஜில்லாவில் மாத்திரம் அல்ல, சென்னை ராஜ்யம் பூராவிலும் ஓரளவு கைத்தறி நெசவுத் துணி தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. மில் துணிகளும் தேக்கம் ஏற்பட்டிருந்திருக்கிறது. ஆனால், இப்பொழுது அந்தக் கஷ்டமான நிலைமை இல்லை என்று கலெக்டரிடமிருந்து ரிபோர்ட் வந்திருக்கிறது.

(* 206 question was answered together with starred question No. 200)

*Availability of copper and gold in Salem district*

* 207 Q.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have taken any steps to explore the availability of copper, gold, etc., in Pachamalai and Pavalamalai areas in Salem district?

The Hon. Sri R. VENKATARAMAN : The Department of Geological Survey of India which conducted a survey of the areas in question did not come across any occurrence of gold or

[a] Printed as Appendix II on pages 274-275 infra.

copper in the area. The Department however detected a six-mile long band of iron ore north of Ladapuram, and a few shorter ones near Kanavoy and Elambalar in the Pachamalai.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்திய சர்க்காருடைய "மினரல்" கண்டு பிடிப்பு இலாகாவினர் இவைகளை ஆராய்கிற காரணத்தால் பொதுவாகவே அகில இந்தியாவில் வேறு சில இடங்களில் இந்தப் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்ற காரணத்தால், அங்கு மட்டுமே இவைகளை எடுப்பதற்கான முயற்சியில் ஆர்வங் காட்டி, குறைவாகக் கிடைக்கும் பகுதிகளில் அலக்ஷ்யம் செய்து விடுகிறார்கள் என்ற கருத்துத் தோன்ற இடம் இருக்கிறது. ஆகவே, சென்னை சர்க்கார் தனியாகவே ஒரு இலாகா ஏற்படுத்தி, இக்குறைக்கு இடமின்றி கவனித்துக் கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் 'அங்கத்தினருடைய கேள்வியில் இருக்கிற கருத்தை சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும், கனம் அங்கத்தினர் கேட்கின்றபடியினால் சொல்கின்றேன். இந்த ' சர்வே '-ஐ நடத்தினவர்கள் டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன் அவர்களும் ஸ்ரீ என். கே. என். அய்யங்கார் அவர்களும்தான்.

SRI S. NAGARAJA MONIGAR : கோலாருக்குச் சமீபமாயுள்ள ஹோசூர் தாலூகாவின் வட பகுதியிலும், கிருஷ்ணகிரி தாலூகாவின் வட பகுதியிலும் தங்கம் இருப்பதன் அறிகுறிகள் தென்படுகின்றன என்பது வாஸ்தவமா ? பச்சை மலை, பவளமலை ஆகிய இடங்களைக் காட்டிலும் இந்த இடங்களில்தான் அதிகமாக அவைகள் கிடைக்கின்றன என்பதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : " ஜியாலாஜிகல் சர்வே " பிரகாரம் இந்த இடத்தில் செம்பு, தங்கம் அகப்படவில்லை என்று தான் தெரிகிறது.

*Plantation workers*

* 208 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have effected any settlement during April 1956 between the Plantation Workers' representatives and the managements with regard to wages and other amenities for the workers; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) With a view to bringing about an amicable settlement in the dispute regarding the implementation of the Plantation Award, the Minister for Home, the then Minister in charge of Labour, held during 1956, a series of discussions with the representatives of the estate-owners and the employees. As the parties were unable to come to a settlement themselves, certain terms were suggested by the Government as the basis for a settlement. As a section of labour did not agree to the suggestion, no final settlement has been effected and ratified. However, in estates in which labour has agreed to the terms suggested by the Government, the managements have been persuaded to implement those terms.



SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, "ப்ளான்டேஷன்" தொழிலாளர்களுக்கு தனியாக ஒரு தொழில் கோர்ட் ஏற்படுத்தி, அந்தத் தொழிற் கோர்ட்டும் தீர்ப்பளித்திருந்தது. அந்தத் தீர்ப்பிலே கூறப்பட்டிருந்த சம்பள விகிதங்களைக் காட்டிலும் குறைவான சம்பள விகிதத்தை இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்குத் தெரிவித்ததா ? அவ்வாறு தெரிவித்ததோடு மட்டுமில்லாமல், அந்தக் குறைவான சம்பள விகிதத்தை ஒத்துக்கொள்ளும் படியாகவும் அவர்களை மறைமுகமாய் நிர்ப்பந்தித்ததா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தத் தோட்டத் தொழிலில் இருக்கும் தகராறுகளைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட கோர்ட்டு 3½ வருஷ காலம் நடந்தது. அதன் பிறகு ஒரு சம்பள விகிதமும், இன்னும் பல சலுகைகளும் அந்தத் தீர்ப்பின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பின்பு தோட்ட முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டுக்கு அதை எடுத்துச் சென்று "ஸ்டே" வாங்கி விட்டார்கள். இந்தத் தீர்ப்பின் பேரில் சுப்ரீம் கோர்ட் முடிவு செய்வதற்கு இன்னும் மூன்று நான்கு வருஷங்கள் ஆனால், அதற்குள் தொழிலாளர்கள் பலர் மாண்டு விடுவார்களே என்று பயந்து, கூடிய அளவுக்கு, நல்ல முறையிலே, உடனடியாக, அதிகப்படியான சலுகை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நடுத்தரமாக ஒரு கூலி விகிதத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று சர்க்காருடைய அபிப்பிராயத்தைக் கூறினார்கள். அதைத் தொழிலாளர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இதில் எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லை. நாளைக்கு வருகின்ற பலாக்காயை விட இன்றைக்கு வருகிற களாக்காயே நல்லது என்பது தொழிலாளர் அங்கத்தினர்கள் நன்றாக அறிந்து கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : The Hon. Minister was just now saying that the whole matter was *subjudice* since it was pending before the Supreme Court . . .

MR. SPEAKER : He did not say that. In a way, I was going to suggest myself that in view of the Labour Demand now under discussion, hon. Members, instead of spending time on putting supplementaries, may raise the subject during the discussion on the Demand.

*Assembly Sessions in the Nilgiris*

* 209 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to hold the Assembly Sessions in the Nilgiris during 1958?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. If the House unanimously decides to hold a Session at Ootacamund, steps will be taken to convene a meeting of the Assembly at Ootacamund.

SRI S. LAZAR : Will the Government ascertain the views of the Members individually?

THE HON. SRI C. SUBRAMANIAM : I think it depends on the political parties and if all the parties agree, certainly steps could be taken.

SRI M. P. SUBRAMANIAM : சட்டசபைக் கூட்டத்தை சென்னையில் வைப்பதைவிட உதகமண்டலத்தில் வைத்தால் எவ்வளவு அதிகப்படியாக செலவு ஆகும் என்பதைக் கணக்கெடுத்து கனம் அமைச்சர் அவர்கள் சபைக்கு அறிவிப்பார்களா ?

[23rd July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM: 6 வார காலத்திற்கு சட்ட சபைக் கூட்டத்தை உதகமண்டலத்தில் நடத்தினால் சுமார் 50 ஆயிரம் ரூபாய் அதிகமாக செலவாகும் என்று முன்பே சொல்லப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM: Has any political party given any indication that it does not want that the sessions should be held at Ootacamund?

THE HON. SRI C. SUBRAMANIAM: The political parties are hesitant. If any decision is taken, perhaps they want to exploit that decision. They do not want to take the initiative.

SRI J. MATHA GOWDER: நீலகிரி ஜில்லாவாசிகளுடைய அனு கூலத்திற்காகத்தான் சட்டசபைக் கூட்டத்தை நீலகிரியில் வைக்கவேண்டும் என்று சொல்கிறோம் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அந்த ஜில்லாவின் நன்மையைக் கருதியாவது அங்கு சட்டசபைக் கூட்டத்தை நடத்துவதற்கு முன்வருவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அரசியல் கட்சிகள் இதையும் மனதில்கொண்டு என்ன முடிவுசெய்யவேண்டும் என்பதை யோசிப்பார்கள் என்று நம்புகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR: சட்டசபைக் கூட்டத்தை குற்றாலத்தில் நடத்துவதைப்பற்றி யோசிப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: குற்றாலத்தில் போதிய வசதி கள் ஏற்பட்டால், அந்தக் காலத்தில் யோசிக்கவேண்டும். அது அடுத்த தலைமுறையில்தான் ஏற்படும் என்று நான் நினைக்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: In the Business Advisory Committee, I find almost all the leaders of parties are represented. Will they come to a decision whether to have the sessions at Courtallam or at Ootacamund as early as possible?

THE HON. SRI C. SUBRAMANIAM: I hope the Business Advisory Committee will take note of the suggestion made by the hon. Lady Member.

### *Leprosy*

* 210 Q.—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the incidence of leprosy in the State in 1955 and 1956 districtwise and the present position; and

(b) the steps taken during the course of these two years to check this disease?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Since a regular survey for all the districts has not been conducted, it is not possible to give exact information regarding the incidence of leprosy in each district during 1955 and 1956. The general order of endemicity of the disease in the districts from the highest to the lowest may be taken to be as follows:—

South Arcot, North Arcot, Chingleput, Salem, Tiruchirappalli, Madurai, Ramanathapuram, Tanjore, Tirunelveli, Kanyakumari, Coimbatore and the Nilgiris.



23rd July 1957]

(b) Sulphone-therapy has been introduced in all Government and private medical institutions. Under the Leprosy Control Scheme of the Government of India, one leprosy treatment and study centre and five leprosy subsidiary centres have been established during 1955 and 1956. The Government pay grants to private institutions engaged in the treatment of leprosy. During 1955 and 1956, a total number of 146,000 leprosy patients were treated as in-patients and about 166,000 as out-patients in Government Medical Institutions in the State.

SRI K. SATTANATHA KARAYALAR: இந்த நகரத்தில் எத்தனை 10-20 a.m.
பேர் குஷ்ட நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்? எந்த முறையில் அவர் களுக்கு சிகிச்சை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI M. A. MANICKAVELU: குறிப்பாக இந்த நகரத் தைப்பற்றி சொல்வதற்கு இப்போது என்னிடம் புள்ளி விவரம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால், இதைப் பற்றிச் சொல்லலாம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: தயாசதனைப் போன்ற நல்ல தர்ம ஸ்தாபனங்கள் குஷ்ட நோயைத் தீர்ப்பதற்கும் தடுப்பதற்கும் நல்ல முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். ஆனால் அந்த ஸ்தாபனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மானியம் மிகவும் குறைவு. ஆகவே அந்த மானியத்தை அதிகப்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: அது ஒரு தனிப்பட்டவர் களின் ஸ்தாபனம். சிகிச்சை செய்யும் மற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கக் கூடிய அளவு மானியத்தைத் தான் இந்த ஸ்தாபனத்திற்குக் கொடுக்க முடியும். இந்த ஸ்தாபனத்திற்கு தனிச் சலுகை கொடுப்பதற்கு, கனம் அங்கத்தினர் தகுந்த பிரத்தியேகமான காரணங்களைக் கூறினால் அது பிரத்தியேகமாகக் கவனிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM PILLAI: குஷ்ட நோயைத் தீர்ப்பதில் ஸல்போன் மருந்துகள் மிகவும் அனுகூலமாக இருப்பதால், இந்த ராஜ்யத்தி லுள்ள எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் அந்த மருந்தைக் கொடுத்து, அங்கு வரும் எல்லா குஷ்ட நோயாளிகளுக்கும் உபயோகிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது இந்த ராஜ்யத்தி லுள்ள எல்லா ஜில்லா ஆஸ்பத்திரிகளிலும் ஸல்போன் மருந்தின் மூலம் சிகிச்சை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI M. JAGANNATHAN: Sir, the incidence of leprosy is not only the highest in South Arcot district in this country but in the whole world. Therefore, will the Government consider the desirability of giving increased grants to private bodies like the Hind Kush Nivaran Sangh which are doing very good work in the field?

THE HON. SRI M. A. MANICKAVELU: உலகத்திலேயே தென் னாற்காடு ஜில்லாவில் தான் குஷ்டரோகிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால் அந்தப் பெருமையோ சிறுமையோ அந்த ஜில்லாவிற்கு சார்ந்தது.

SRI T. S. RAMASWAMY PILLAI: Sir, I rise on a point of order. The Hon. Minister has not answered the supplementary put by hon. Member Sri Jaganathan.

MR. SPEAKER: I cannot force the Minister to answer any question. If he likes he may answer a question. If he does not answer a question or if the hon Member is not satisfied with the answer given by the Minister, the hon. Member may put a separate question.

[23rd July 1957

(Sri A. Govindasamy rose.)

MR. SPEAKER : Is the hon. Member rising on a point of order ?

SRI A. GOVINDASAMY : Yes, Sir.

SRI K. VINAYAKAM : Sir, it should be a point of order.

MR. SPEAKER : Yes, yes. I know that. Why should the hon. Member say that?

SRI A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் போடப்படும் கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் தவறான முறையில் அடிக்கடி பதில் சொல்லி வருகிறார்கள்.

MR. SPEAKER : இப்போதுதான் நான் ஆங்கிலத்தில் " கனம் அங்கத்தினர்கள் போடும் கேள்விகளுக்கு கனம் மந்திரிகள் பதிலளிக்க வேண்டுமென்ற கட்டாயம் இடையாது " என்று சொன்னேன். ஆகையால் அவர் கொடுத்த பதில் திருப்திகரமாக இல்லாவிட்டால், கனம் அங்கத்தினர்கள் தனிக் கேள்வி போடலாம்.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I rise on a point of order. Sir, the Hon. Minister can either refuse to answer a particular question or refrain from answering it. But, he was commenting upon the supplementary put by a Member of this House. May I know whether it is in order and whether it is not necessary for him to reply to the question proper?

MR. SPEAKER : The Hon. Minister has given his reply. It is open to an hon. Member to take it or not. If, however, he is not satisfied with the answer, there are other remedies before him. The Minister cannot be forced to give an answer on the floor of the House.

SRI T. P. ELUMALAI : எல்லா ஸ்தாபனங்களிலும் குஷ்ட நோய்க்காகச் செலவு செய்யப்படும் தொகை அவ்வளவும் சர்க்காரால் கொடுக்கப்படுவதா ? அல்லது, தர்மஸ்தாபனங்கள் தாங்களாகவே பணம் வசூலித்துச் செலவு செய்கிறார்களா ? சர்க்காரால் கொடுக்கப்படும் மானியங்கள் அந்த ஸ்தாபனங்களுக்கு குறித்த காலத்தில் கொடுக்கப்படுகின்றனவா, அல்லது தாமதம் ஏற்படுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்க்காரும் அந்த ஸ்தாபனங்களுக்குப் பணம் கொடுக்கிறது. அதுவுமல்லாமல், தனிப்பட்ட ஸ்தாபனங்கள் தாங்களாகவே செலவுசெய்து குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சை செய்துவருகிறார்கள். ஒரு கேள்விபோட்டால் அதற்கு பதில் கொடுக்கலாம். இரண்டு, மூன்று கேள்விகளை ஒரே தடவையில் சேர்த்துக் கேட்டால் ஒரு சில கேள்விகளுக்கு பதிலளிப்பதில் தடுமாற்றம் ஏற்பட்டுவிடும்.

SRI K. ANBAZHAGAN: கனம் தலைவர் அவர்களே, தொழுநோயால் பீடிக்கப்பட்டவர்களைப்பற்றி கேலியாகப் பேசுவதும் குறைவாகப் பேசுவதும் மனித சமுதாயத்திற்கு ஏற்ற பண்பு அல்ல என்று சமுதாயத்தால் கருதப்படுகிறது. அப்படியிருக்கும்போது, " உலகத்திலேயே தென்னாற்காடு ஜில்லாவில்தான் அதிகமாக மக்கள் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், அந்தப் பெருமையோ சிறுமையோ அந்த ஜில்லாவிற்கே உரியது " என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வது இந்த அரசாங்கத்தின் மதிப்பிற்கு ஏற்றதாகுமா என்று அறிய விரும்புகிறேன்.



23rd July 1957]

MR. SPEAKER : I am afraid it has nothing to do with the question before us. It is only the hon. Member's opinion. I pass on to the next question.

*Representation from the Papanasam Electricity workers*

* 211 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have received any representation recently from the Papanasam Electricity Workers of Tirunelveli district;

(*b*) if so, what their demands are; and

(*c*) the action taken on the representation?

THE HON. SRI V. RAMIAH : (*a*) & (*b*) The Government received a representation, dated 26th February 1957 from the Operation and Construction Subordinate Service Association, Papanasam Project, against the transfer of one Kalipudiyavan, Anti-Malarial mazdoor, from Papanasam to Singara.

(*c*) The Government decided not to interfere in the matter, as the transfer was made on administrative grounds.

*Students sent abroad for higher studies*

* 212 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any students were sent abroad under Scholarship Scheme and Fellowship Scheme for higher studies in various fields during 1956?

THE HON. SRI C. SUBRAMANIAM :No students as such were sent abroad for advanced study during 1956. But, seven officers were sent abroad during this period for advanced studies.

SRI K. SATTANATHA KARAYALAR : எந்தத் துறையில் மேல் படிப்புக்கு இவர்கள் அனுப்பப்பட்டார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : They were sent abroad mainly for studying medical subjects. Only one person was sent for studying the Turkish language.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அயல் நாட்டிற்கு மேல் படிப்பிற்கு அனுப்பப்பட்டவர்களில் எத்தனை பேர் எந்த எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மேல் படிப்புக்காக அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களின் பெயர்கள்தான் இங்கே இருக்கின்றன. யார் யார் எந்த எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற குறிப்பு இல்லை. மேல் படிப்பிற்காக அயல்நாடுகளுக்கு அனுப்பப்படுபவர்களையும் ஜாதி அடிப்படையில் தேர்ந்தெடுப்பது என்பது முடியாத காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, did not some students apply for grant from this Government for higher studies in foreign countries and were not their applications rejected on certain grounds? Will

[23rd July 1957

the Government think of the possibility of sending some of the Members of this House if they have a special inclination in some branches of study to foreign countries for higher studies in those branches?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question relates to scholarships and fellowships scheme. We have adopted this scheme for deputing officers in service for higher studies. With reference to the students, the hon. Member may put a separate question.

SRI M. JAGANNATHAN : Out of those who have been sent abroad for higher studies, may I know whether there are any Harijan Officers?

MR. SPEAKER : The Hon. Minister has already answered that he has no details.

SRI K. B. S. MANI : மேல் படிப்புக்கு அயல்நாடுகளுக்குச் செல்வதற்குத் தகுதியுடைய ஹரிஜனத் தோழர்கள் அதற்கு மனுச் செய்து கொண்டால், அவர்களை அதற்காக அயல்நாடுகளுக்கு அனுப்பும் விஷயத்தை சர்க்கார் தனிப்பட்ட முறையில் கவனிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களுக்குத் தகுதியும் இருந்து, அவர்கள் இருக்கக்கூடிய துறையில் நபர்கள் அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டு மேல் படிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டிய அவசியமும் இருந்தால், கவனிக்கிறோம்.

SRI M. P. SUBRAMANIAM : சர்க்கார் உத்தியோகஸ்தர்களை மேல் படிப்பிற்காக வெளிநாட்டிற்கு அனுப்புவதை அரசாங்கம் நிர்ணயிக்கிறதா, அல்லது ஸர்வீஸ் கமிஷன் நிர்ணயிக்கிறதா, அல்லது இலாகாத் தலைவர்கள் நிர்ணயிக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இலாகாவின் சிபாரிசின் பேரில் சர்க்கார் நிர்ணயிக்கிறது.

SRI A. VEDARATHNAM PILLAI : "மேல் படிப்புக்கு அயல் நாடுகளுக்கு அனுப்பப்படுவதற்கு ஸயன்ஸ் பட்டதாரிகள் தேவை" என்று அரசாங்கக் கல்வி இலாகாவினால் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது அல்லவா? அதற்கு எத்தனை பேர் விண்ணப்பம் அனுப்பினார்கள் ? எத்தனை பேர் அனுப்பப்பட்டார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRI S. B. ADITYAN : மேல் படிப்புக்காக வெளிநாடுகளுக்கு நபர்களை அனுப்புவதில் ஏற்படும் செலவை மத்திய அரசாங்கம் ஈடு செய்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில திட்டங்களில், இங்கிருந்து நபர்களை அயல் நாடுகளுக்கு அனுப்பிவைக்கும் வரையில் நாம் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் அயல்நாடுகளுக்குச் சென்ற பிறகு, அந்த நாடுகளில் அவர்கள் செய்ய வேண்டிய செலவை, வெவ்வேறு உதவித்திட்டங்களில் அன்னிய நாடுகளே ஏற்றுக்கொள்கின்றன. ஆகையால் பல திட்டங்கள் இருக்கின்றன. சில திட்டங்களில் மத்திய அரசாங்கம் செலவை ஏற்றுக்கொள்கிறது. நாம் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டிய சில திட்டங்களும் இருக்கின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : வெளி நாட்டுக்குச் சென்று படிப்பதற்காக சலுகை கேட்டு, பிரெஸிடென்ஸி கல்லூரியில் வேலை பார்க்கும் ஸ்ரீ பார்த்தசாரதி ஐயர் என்பவர் . . .



23rd July 1957]

MR. SPEAKER : தனிப்பட்ட நபரைப்பற்றி கேள்வி கேட்கக் கூடாது. அப்படிச் செய்வது இந்தச் சபையின் கௌரவத்தைக் குறைப்பதாகும். பொதுவான கேள்வியாகக் கேட்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : மனுச் செய்திருந்தும் . . .

MR. SPEAKER : திரும்பவும் அதே கேள்வியை அங்கத்தினர் கேட்கிறார்களே.

SRI V. K. KOTHANDARAMAN : அது கவனிக்கப்படவில்லை என்று தெரிகிறது. இதற்கான காரணத்தை நான் அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இந்தக் கேள்வியை நான் 'டிஸலவ்' பண்ணுகிறேன்.

SRI K. ANBAZHAGAN : சில உத்தியோகஸ்தர்களை அயல்நாடுகளுக்கு அனுப்பி அவர்களுக்கு மேல்படிப்பு கொடுப்பதற்கான செலவை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அவர்கள் பெற்ற மேல் படிப்பின் பலனை இந்த அரசாங்கம் பெறுகிறதா ? அவர்களுக்குத் தகுந்த உத்தியோக உயர்வுகள் அளிக்கப்படவில்லை என்று எனக்குத் தெரியவருகிறது. அப்படி இருக்குமானால், அவர்களுக்கு மேல்படிப்பு அளிப்பதற்குச் செய்த செலவுத் தொகை அரசாங்கத்திற்குப் பயன்படாமல் போனதாகாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்த எந்த இலாகாவில் எந்த எந்த உத்தியோகஸ்தர்களுக்கு அயல் நாட்டில் மேல்படிப்பு கொடுக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறதோ, அவர்களைத்தான் அயல்நாடுகளுக்கு அனுப்பி மேல் படிப்பு கொடுத்து வருகிறோம். ஆகையால் "அவர்கள் பெறும் அயல்நாட்டு மேல்படிப்பு அரசாங்கத்திற்குப் பயனில்லாது போகிறது" என்ற செய்தியை கனம் அங்கத்தினர் கேட்டிருந்தால், அது வதந்தியே தவிர ஆதாரபூர்வமானது அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRIMATI T. N. ANANDANAYAKI: அப்படி இலாகாக்களின் சிபார்சின் மேலேயே திறமை வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து வெளிநாட்டுக்கு 10-30 a.m.
அனுப்புகிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னாலும், இது வரையிலும் ஹரிஜனங்கள், பிற்பட்டவர்கள் என்று சாதிவாரியாகப் பிரித்து அனுப்பும் வழக்கம் இல்லை என்று சொன்னாலும், இனிமேல் இலாகாக்கள் சிபார்சு செய்யும்போதே திறமை உள்ளவர்களை ஒவ்வொரு இனத்திலிருந்தும் குறிப்பிட்ட அளவு பொறுக்கி சிபார்சு செய்ய வேண்டுமென்பதாகச் செய்ய முயற்சி எடுக்கப்படுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : : இந்தத் துறையில் தனிப்பட்டு, இந்த இந்த வகுப்பார்களுக்கு என்று ஒதுக்க வேண்டும் என்கிற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XXIII—LABOUR INCLUDING FACTORIES—*cont.*

MR. SPEAKER : We shall now resume the discussion on Demand No. XXIII. May I know, how much time, the Hon. Minister for Industries and Labour will require for replying to the debate?

THE HON. SRI R. VENKATARAMAN : There is a statement to be made under Rule 40 . . .

MR. SPEAKER : I do not have it. Anyhow we will take it up tomorrow. May I know how much time the Hon. Minister will require for replying to the debate?

[23rd July 1957

THE HON. SRI R. VENKATARAMAN : 45 minutes, Sir.

MR. SPEAKER : This Demand should be over by 12-10 p.m. But we are already late by half an hour. So, the Hon. Minister will begin his reply at 12 noon.

* SRI D. S. AUTHIMULAM: Sir, point of information, நான் கேள்விகளைக் கொடுத்தால் சீக்கிரத்தில் இலாகாவிடமிருந்து அதற்குப் பதில் வருவது கிடையாது. நான் முக்கியமாக திருநெல்வேலி ஜில்லாவில் ஆறு லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்ற ஒரு வேலைத் திட்டத்தைப்பற்றி ஒரு கேள்வி ஒரு மாதத்திற்கு முன்பே கொடுத்துவிட்டேன். ஏற்கெனவே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலை முடிந்த விஷயம் அது. அதில் பல குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்கிற தகவலின் பேரில்தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன். செக்ரடேரியட்டில் இருந்தே அதற்கு உடனே பதில் அளிக்க முடியும். அந்தக் கேள்வி விஷயமாக சர்க்கார் நிர்வாகத்தில் சென்ஷூர் மோஷன் கொண்டுவரக்கூடத் தகுதி உடைய விஷயம் அது. அதற்கு இன்னமும் பதில் அனுப்பப்படவில்லை. ஒரு கேள்வியை அனுப்பினால் அதற்கு மூன்று வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என்கிற தன்மையாவது இருந்தால் நல்லது. முக்கியமான விஷயங்களுக்கு இம்மாதிரி காலதாமதம் செய்யப்படுவது இனிமேலாவது தவிர்க்கப்படுமா ?

MR. SPEAKER : I thank the hon. Member for his suggestion. We shall now proceed with the discussion. Hon. Member T. M. Nallaswami will now speak.

10-24 a.m. * SRI T. M. NALLASWAMI : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, "லேபர் இன்க்லூடிங் பாக்டரீஸ்" என்ற தலைப்பின்கீழ், சர்க்கார் கோரியிருக்கும் மானியத் தொகை 28,10,500 ரூபாயை ஆதரித்தும், எதிர்க்கட்சிக்காரர்கள் சம்பிரதாயத்திற்காகவாவது 100 ரூபாய் குறைக்க வேண்டுமென்று கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை எதிர்த்தும் சில விஷயங்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் இந்த மானியக் கோரிக்கையின்பேரில் வெட்டுப் பிரேரணையைக் கொடுக்காமல் இருந்திருப்பார்களானால் அது மிகவும் நல்லதாகக் கூட இருந்திருக்கும். ஏனென்றால் வெளியில் அவர்கள் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதாகச் சொல்லிக்கொண்டு இங்கே தொழிலாளர்களுடைய நலனுக்காக என்று மானியம் கேட்கும் போது அந்தக் கோரிக்கையைக் குறைக்கவேண்டுமென்று சம்பிரதாயத்திற்காகவாவது சொல்லலாமா ? அப்படிச் சொல்லாமல் இந்தக் கோரிக்கையை நான் முழு மனதுடன் ஆதரித்து, அதன்பேரில் என்னுடைய சில கருத்துக்களையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து இந்த நாட்டில் பொருளாதாரத்தை உயர்த்துவதோடு, சமதர்ம சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்ற லட்சியத்தைக் கொண்டு இந்த அரசாங்கம் இயங்கி வருகிறது. மாகாண சர்க்கார் ஆகட்டும், மத்திய சர்க்கார் ஆகட்டும் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற ஒரே ஒரு லட்சியத்தோடு கடந்த காலத்தில் பல அரிய சட்டங்களை எல்லாம் இயற்றி அவர்கள் மேம்பாடு அடையப் பாடுபட்டு வருகிறார்கள். அதோடுகூட சட்டங்களை இயற்றுவதோடு இல்லாமல் அவ்வப்போது அத்தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களையும் கண்டு தெரிந்து கொண்டு அவைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்காக முக்கூட்டுக் கமிட்டிகளை எல்லாம் போட்டு, தொழிலாளர்களுடைய சம்பளம், பஞ்சப்படி, வேலை நேரம், லீவு வசதி, போனஸ், பிராவிடெண்டு பண்டு, முதலியவைகளை எல்லாம் நிர்ணயிக்க முற்பட்டு இருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

நமது சர்க்காராலும் எத்தனையோ சட்டங்கள் இயற்றப்பட்டு இருக்கின்றன. ஷாப் ஆக்ட், மினிமம் வேஜஸ் ஆக்ட், இன்ஷூரன்ஸ் திட்டம் முதலியவைகளை எல்லாம் உண்மையாகவே தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்றுதான் சர்க்கார் செய்திருக்கின்றது.



23rd July 1957] [Sri T. M. Nallaswami]

நல்ல சட்டங்களைப் போட்டிருக்கிறோம். விசாரணைக் கமிட்டிகளை அமைக்கிறோம் என்றாலும் இந்தச் சட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் அமுலாக்கப்பட்டு வருகின்றனவா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். அப்படி ஆராய்ந்து பார்க்கிற காலத்தில் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டங்களினால் என்ன பலன் ஏற்பட வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ அது ஏற்படுவது இல்லை என்பதாக வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய சமுதாய அமைப்பில் பண வசதி உள்ளவர்களும், படிப்பு உள்ளவர்களும் எல்லாத் துறையிலும் இருந்து கொண்டு படிப்பு அறிவு இல்லாத பாமர மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை தொழிலாளர்கள் விஷயத்தில் பெரும்பாலும் அதிகமாக நடைபெறுவதைத் தான் பார்த்து வருகிறோம்.

நாட்டிலுள்ள தொழிலதிபர்கள் தொழில் நுணுக்கங்களை எல்லாம் தெரிந்துகொண்டு பெரிய பெரிய தொழிற்சாலைகளை வைத்து நடத்துகிறார்கள். அதே சமயத்தில் ஏழைத் தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கும், அவர்களுடைய உழைப்பைச் சுரண்டுவதற்கும் தங்கள் அறிவைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய பண வசதியும், தொழில் அறிவும் அதற்கு ஒத்தாசையாக இருக்கிறது. இந்த நிலைமையில் சர்க்கார் இயற்றுகின்ற சட்டங்களால் எத்தனை நல்ல சட்டங்களாக இருந்தாலும் அவற்றினால் தொழிலாளர்களுக்குப் பயன் ஏற்படாதவாறு போய்விடுகிறது.

இப்படிப்பட்ட நிலை ஒரு பக்கத்தில் வளர்ந்து போகும்போது வேறு ஒரு பக்கத்தில் நாட்டிலே குழப்பங்கள் ஏற்படுவதையும் காண்கிறோம். தொழிலதிபர்களுடைய சுரண்டலில் இருந்து தப்ப வேண்டுமென்று விரும்புகிற தொழிலாளர்களை, அரசியல் ஆதிக்கியம் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்படுகின்ற அரசியல் கட்சிகளைச் சார்ந்த தொழிற் சங்க வாதிகள், தங்களுடைய வலையில் சிக்க வைக்கிறார்கள். இந்த நிலைமை இன்னும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. உண்மையிலேயே இன்றையதினம் தொழிலாளர்கள் தொழில் அதிபர்களால் ஏமாற்றப்படுகிறார்கள். தொழிற் சங்கத் தலைவர்களாலும் சுரண்டப்படுகிறார்கள் என்று சொன்னால் இதுவும் மிகையாகாது.

தொழிற்சங்க வாதிகள் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகச் சொல்லி உண்மையிலேயே தவறான வழியில் அவர்களை இழுத்துக்கொண்டுபோய் விடுவதைத்தான் இன்று நாட்டில் பார்க்கிறோம். ஆகவே இரண்டு பிரச்சனை எழுகிறது. ஒன்று தொழிலதிபர்களிடம் இருந்து தொழிலாளர்கள் காப்பாற்றப்பட்டாக வேண்டும். இரண்டாவதாக தொழிற்சங்க வாதிகளிடத்தில் இருந்தும் அவர்கள் காப்பாற்றப்பட்டாக வேண்டும். இதற்குச் சர்க்கார் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு ஏதாவது சட்டம் செய்தாலும் நல்லது. தொழிலதிபர்களிடமிருந்து தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள தொழிற் சங்கங்கள் அமைய வேண்டும். ஆனால் தொழிலாளர்களைக் கொண்டேதான் தொழிற் சங்கம் அமைய வேண்டும் என்பதாகச் செய்தாக வேண்டும். அரசியல் பற்று உடையவர்கள் யாரும் இந்தத் தொழிற்சங்கத்தை நடத்தக் கூடாதென்பதற்கு நன்றாக ஆராய்ச்சி செய்து ஒரு சட்டம் இயற்றினால் மிகவும் பொருத்தமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். தொழிலாளர்கள் தாங்களாகவே தொழில் சங்கங்களை நிர்வகித்து, நியாயமான உரிமைகளுக்காகப் போராடிப் பெரும் அளவு தகுதியுள்ளவர்களாக அவர்களைத் தயாரிக்கும் பொறுப்பை சர்க்கார் ஏற்க வேண்டும். இதில் ஏதாவது குறைகள் இருக்கலாம். ஆனால் சர்க்கார் அதை ஆராய்ச்சி செய்து அதற்கு ஒரு தகுந்த பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களில் நாம் பார்ப்பது என்னவென்றால் அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்தால், அதை எதிர்த்து தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் பல போராட்டங்களை நடத்துகிறார்கள். இந்த நிலையில் உண்மையாகவே அரசாங்கம் தலையிட்டு தொழிலாளர்களை அவர்களிடமிருந்து காப்பாற்ற முடியுமா என்று எனக்கு ஒரு

[Sri T. M. Nallaswami] [23rd July 1957

சந்தேகம் இருக்கிறது. அதே சமயத்தில் இன்று இருக்கக்கூடிய நிலையில், தொழிலாளர்களை, தொழில் நடத்தும் அதிபர்களிடமிருந்து காப்பாற்றுவதிலும் சில குறைபாடுகள் இருப்பதை கனம் ஸ்ரீ சின்னதுரை நேற்று குறிப்பிட்டிருக்கிறார். இன்று இருக்கக்கூடிய நிலையில் நல்ல சட்டங்கள் இருந்தாலும் அவைகளை அமுல் நடத்தப்படுவதில் சில குறைகள் இருக்கின்றன. உண்மையாகவே அவர்கள் சொன்ன விஷயங்களை நான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. தொழிலாளர் இலாகாவுக்கும், அதில் உள்ள அதிகாரிகளுக்கும் போதிய அதிகாரம் வழங்கப்படவில்லை. அப்படி வழங்கப்பட்டிருக்கிற சிறிய அதிகாரங்களையும் சரிவர அமுல் நடத்த முடிவதில்லை. இந்த அதிகாரிகள் ஆங்காங்கு உள்ள தொழில் ஸ்தாபனங்களுக்கு விஜயம் செய்யும்போது அவர்களுக்கு வாகன வசதிகள் முதலியவைகளை முதலாளிகள் செய்து கொடுத்துவிடுகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு இருக்கக்கூடிய சிறிய அதிகாரங்களைக்கூட அவர்கள் பயன்படுத்த முடியாமல், கைவிடும் நிலை இருக்கிறது. இம்மாதிரி எண்ணம் தொழிலாளர்களிடையேயும், மற்றும் பலரிடத்திலும் நிலைபெற்று வருகிறது என்பது நிச்சயம். இன்று தொழிற்சாலைகள் சரியாக நடக்க வேண்டுமானால், ஆங்காங்கு உள்ள கேந்திர ஸ்தானங்களில், தொழில் இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு போதிய அளவு அதிகாரங்களைக் கொடுத்து, தொழிற்சாலை முதலாளிகளிடமிருந்து எந்த விதமான வசதிகளையோ சலுகைகளையோ பெறுமல் இருக்கும் பொருட்டு அவர்களுக்கு வாகனம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் தொழிலாளர்களின் நலனைக் கருதி, மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் எந்த எந்த சட்டங்களையும் உத்திரவுகளையும் பிறப்பித்திருக்கிறார்களோ, அவைகளை யெல்லாம், தமிழ் மொழியிலேயே, தாய் மொழியிலேயே, அச்சிட்டு தொழிலாளர்களுக்கு விநியோகிக்க வேண்டும். இதனால் இரண்டு விதங்களில் அனுகூலம் ஏற்படும். ஒன்று, தொழிலாளர்கள் அவர்களுடைய உரிமைகளையும், நலன்களையும் எளிய முறையில் தெரிந்து கொள்வார்கள். இரண்டாவது சட்டத்திற்குப் புறம்பான காரியங்களில் இறங்காமல் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். ஆகையால் இந்த விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக தொழிலாளர் கோர்ட்டுகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். எதாவது தகராறுகளை இந்த கோர்ட்டுகளுக்கு விட்டுவிட்டால், அது எப்பொழுது ஒரு முடிவுக்கு வரும் என்று தெரியாத ஒரு சூழ் நிலை தற்பொழுது இருக்கிறது. அனாவசியமாகக் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் தொழிலாளர்கள் அதிகம் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி கோர்ட்டுகளில் தகராறுகளை விசாரணைக்கு விட்டால், ஒரு கால வரையறையை நிர்ணயிக்க வேண்டும். ஒரு சில வாரங்களுக்குள்ளாகவோ, அல்லது ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாகவோ, தீர்ப்புக் கூற வேண்டும் என்று ஒரு வரையறையை நிர்ணயித்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். அம்மாதிரி தாமதித்துவரும் தீர்ப்புகளும்கூட பெரும்பாலும் சரியாக அமுல் நடத்தப்படுவதில்லை. கோர்ட்டுகள் அளிக்கும் தீர்ப்புகளை உடனடியாக அமுல் நடத்த வேண்டும் என்று சர்க்கார் தீவிரமாக இருந்தால், நல்ல பலன் காண முடியும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தற்பொழுது நிச்சயமாக கோர்ட்டுகள் அளிக்கும் தீர்ப்புகளை தொழில் அதிபர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. நான் முன்பு குறிப்பிட்டபடி அவர்களுக்கு பண பலமும், வழக்கறிஞர்களின் ஆதரவும் இருக்கிறபடியால் அவர்கள் " சுப்ரீம் கோர்ட் " வரைக்கும் செல்ல முடிகிறது. ஆகையால் தொழிலாளர்கள்தான் சட்டங்களினால் ஏற்படக்கூடிய பலனை அடைய முடியாமல் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் நாம் சொல்லுகின்ற சமதர்ம பாணி லட்சியம் தோற்றுப் போய்விடக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை மற்ற அரசியல் கட்சிக்காரர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். சட்டத்தை மட்டும் போட்டுவிட்டு அதை சரிவர அமுல் நடத்தமுடியாவிட்டால் பின்வரும் மூன்றுவித விளைவுகள் ஏற்படுகின்றன:—

(1) உண்மையிலேயே நாம் எதிர்பார்க்கும் லட்சியம் நிறைவேறுவது இல்லை.



23rd July 1957] [Sri T. M. Nallaswami]

(2) " ஸ்டிரைக் " முதலிய குழப்பங்கள் ஏற்படுகின்றன.

(3) எதிர் கட்சிக்காரர்கள் இதனால் வளர்ச்சி அடைகிறார்கள்.

சட்டத்தின் மூலமாகக் கோரப்படும் அந்த லட்சியம் உண்மையிலேயே பலன் கொடுப்பது இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கோர்ட்டுகளைப்பற்றிக் குறிப்பிடும்போது ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கரூரில் நான்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இங்கு 20, 30, 40, 50 லூம்கள் வைத்து நெசவு சாலைகளை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்குப் போதிய வசதிகள் வேண்டும். அங்கெல்லாம் " பாக்டரி ஆக்ட் " அமுல் நடத்தப்பட வேண்டுமென்று " பாக்டரி ஆக்டை " அங்கு விஸ்தரிக்க ஏற்பாடுகள் செய்தபோது இந்த நெசவு சாலைகள் பாக்டரி ஆக்டில் சேருவதில்லை என்று நெசவுச்சாலை உரிமையாளர்கள் சொல்லிவிட்டார்கள். இதைப்பற்றி ஹை கோர்ட்டிலும் ஒரு ரிட் மனு போட்டிருப்பதாக நான் கேள்விப்படுகின்றேன். தொழிலாளர்களுக்கு எந்த விதமான வசதியும் இந்த நெசவுச்சாலை முதலாளிகள் செய்து கொடுப்பதில்லை என்றும் இவர்களுடைய சிறிய குறைகளையும் " நெசவு ஆலைகளின் அதிபர்கள் சங்கம் " கவனிப்பதில்லை என்றும் விடுமுறை நாட்களுக்கும் இவர்கள் சம்பளம் கொடுக்க மறுக்கின்றார்களென்றும் குறைகள் பல நெசவாளர்களிடத்தில் பரவலாக இருந்து வருகின்றது. அந்நிலை வளராமல் சர்க்கார் தலையிட்டு உரிமையாளர்களுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான உறவு நிலையை நிறுவுவது மிக முக்கியம்.

புகளூரில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. இங்கு உள்ள தொழிலாளர்களுக்கும் நிர்வாகஸ்தர்களுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி " இண்டஸ்டிரியல் ஹவுசிங் ஸ்கீம் " படி வீடு கட்ட நிலம் ஜாரி செய்ய வேண்டும் என்று நிபந்தனையை ஒத்துக்கொண்ட கம்பெனியார் நிலம் கொடுத்துவிட்டார்கள். இங்கு 600க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வீடு கட்ட வேண்டும் என்பதற்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் நீண்ட நாட்களாக இங்கு வேலை ஆரம்பிக்கவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட்டு 600 ஏழை தொழிலாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும்படியான அத்திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடு செய்தார்களானால் மிகவும் நன்றாக இருக்கும். இந்தச் செலவில் 25 சதவிகிதம் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பணத்தை சர்க்காரும், ஆலை நிர்வாகஸ்தர்களுக்கும் நீண்ட கால கடனாக கொடுத்து அதை கட்டி முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் அமைச்சர் ஸ்ரீ வெங்கடராமன் அவர்கள் தொழிலாளர்களிடையே பழகி நிறைய அனுபவம் பெற்றவர்கள். தொழிற் சங்கங்களைப்பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும். பக்கத்து ராஜ்யத்தில் கம்யூனிஸ்ட் சர்க்கார் இயங்கி வருகிறது. அங்கு தொழிலாளர்களுக்கு அவர்கள் என்ன வசதிகளும் சலுகைகளும் செய்து கொடுக்கிறார்கள் என்பதை எல்லாம் ஆராய்ச்சி செய்து தமிழ் நாட்டில் உள்ள தொழிலாளர்களின் நிலைமையை உயர்த்தப் பாடுபடுவார் என்று நம்புகிறேன். இந்த மான்யக் கோரிக்கையை முழுமனதுடன் ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri A. MARIAPPAN :** கனம் சபா நாயகர் அவர்களே, காங்கிரஸ் சர்க் 10-39 a.m.
கார் ஏற்பட்ட பிறகு, தொழிலாளர்களின் கூலியைப்பற்றி சட்டம் செய்து, அவர்கள் நல்ல முறையில் வாழ வேண்டும் என்று வழி வகை செய்திருக்கிறார்கள். அப்படி இருந்தாலும், பீடித் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் சர்க்கார் ஒரு விதமான சட்டமும் இதுவரையில் செய்யவில்லை. ஆகையால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த விஷயத்தில் சர்க்கார் உடனடியாக ஒரு சட்டம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[Sri A. Mariappan] [23rd July 1957

அதோடு ரோடு போடும் தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி கிடைக்கிறபடியால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் சங்கங்கள் நடைபெறும் சில இடங்களில் சங்கத்தார் அங்கத்தினர்களிடமிருந்து—அதுவும் பெண் அங்கத்தினரிடமிருந்து—சந்தாக்கள் வசூலிக்கும்போது மிக கேவலமான முறையைக் கையாளுகிறார்கள். அம்மாதிரி முறைகள் சட்டசபையில் சொல்லக்கூடிய முறையில் இல்லை. இம்மாதிரி அவர்கள் கையாளும் முறைகளை தடை செய்ய தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் தயங்கக்கூடாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

நெசவுத் தொழிலாளர்களுக்கு சவுகரியமாக வீடு கட்டிக்கொடுக்க சர்க்கார் முன்வர வேண்டும். அவர்களுக்கு 3,500 ரூபாயில் வீடு கட்டிக்கொடுக்க இருக்கும் திட்டத்தை ரூபாய் 5,000-த்தில் கட்டிக் கொடுக்க சர்க்கார் மேற்கொள்ள வேண்டும். ஏன் என்றால் இப்போது கட்டிக்கொடுக்கும் ரூபாய் 3,500 வீடுகளில் போதிய வசதிகள் இல்லை. ஆகையால் 5,000 செலவில் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்குமாறு சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன்.

நெசவுத் தொழிலாளர்களுக்கு பாக்டரி சிஸ்டம் இருக்கும் இடங்களிலே ஓரளவு பாக்டரி ஆக்டை தளர்த்தினால்தான் அங்கு இருக்கும் நெசவாளர்கள் நல்ல முறையிலே வாழ முடியும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நெசவாளர்களைப் பொருத்த வரையில், சாதாரணமாக பாக்டரிகளை நடத்துபவர்கள் பெரிய அளவில் பாக்டரிகளை வைத்து நடத்துவது இல்லை. சிறிய அளவு மூலதனத்தைக்கொண்டு சில இடங்களில் பாக்டரிகள் நடத்துகிறார்கள். ஆகையால் சர்க்கார் இடும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பாக்டரிகளை நடத்த முடியவில்லை. ஆகையால் இந்த பாக்டரி சட்டத்தால் நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இம்மாதிரியான இடங்களில் பாக்டரி ஆக்டை தளர்த்தி, நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவுத் தொழில் ஒரு குடிசைத் தொழில் போன்றது. அம்மாதிரியான இடங்களில் பாக்டரி ஆக்டை அமுலுக்குக் கொண்டுவருவதால் நெசவாளிகள் மட்டும் அல்ல எல்லாத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அதிலும் நெசவாளர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இதை மனதில் வைத்து உடனடியாக ஓரளவு சட்டத்தைத் திருத்துவதற்கு உண்டான ஏற்பாட்டை சர்க்கார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் தொழிலாளர்களுக்காக தொழில் கோர்ட்டுகளில் நியாயமாக வழங்கப்படும் தீர்ப்புகளை முதலாளிகள் சரியானபடி அமுல் நடத்துவதில்லை, என்பதைபற்றி. எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். சரியான முறையில் நடத்துவதற்குப் பதிலாக ஹிம்சிக்கும் முறையிலே நடத்துகிறார்கள். இவைகளை சர்க்கார் விசாரித்து தவறு செய்பவர்களைத் தண்டிக்க சட்டம் செய்ய வேண்டும். கூலிதானே கொடுக்க வேண்டும், சம்பளம்தானே கொடுக்க வேண்டும் என்ற முறையிலே தொழிலாளர்களை நசுக்குகிறார்கள். இப்படிப்பட்ட முதலாளிகளிடமிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய அளவில் வசதிகளை சர்க்கார் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரிக்கிறேன்.

10-55 a.m. * **Sri M. JAGANNATHAN** : தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மானியத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதுவரையில், தொழில் துறையிலே நம்முடைய மாநிலத்தில் இண்டஸ்ட்ரியல் வொர்க்கர்ஸ் என்று சொல்லப்படும் இயந்திர சாதனத்தால் இயங்கும் தொழில்களில்தான் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஓரளவு சலுகை செய்யப்பட்டு இருக்கிறதே தவிர விவசாயத் துறையிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒருவிதமான வசதியோ நன்மையோ இந்த அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை. விவசாயத் துறையிலே வேலை செய்யும் நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு ஒன்றும் செய்யவில்லை என்பது அவர்கள் வாழ்க்கை



23rd July 1957] [Sri M. Jagannathan]

நிலையைப் பார்த்தால் தெரியும். நம் கிராமங்களில் அம்மாதிரியான லக்ஷக்கணக்கான ஏழை விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார நிலைமை, வாழ்க்கைத்தரம் மிகவும் கேவலமான நிலையில்தான் இருக்கிறது. அவர்களுடைய வருமானம் மிக மிகக் குறைவு. ஆகையால் அவர்கள் குடும்ப வாழ்க்கையை ஓரளவு வசதியான முறையிலே, சுகபோகங்களை அனுபவிக்கும் முறையிலே, நடத்த நம் மாகாணத்தில் சூழ்நிலை சரியாக இல்லை. ஏன் ? சர்க்கார் அவர்களுடைய நலனை பாதுகாக்க எந்த விதமான முயற்சியையும், நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. **" As far as agricultural workers are concerned, while there is to be no relaxation of efforts in fixing minimum wages, the possibilities of providing additional employment are to be explored."** அதாவது விவசாயத் துறையிலே வேலை செய்யும் நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இதைப்பற்றி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே குறிப்பிட்டிருந்த போதிலும், குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க எந்த விதமான நடவடிக்கையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளவில்லை. இதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. விவசாயத் துறையிலே வேலை செய்யும் ஏழைகளுக்கு இந்த குறைந்த பட்ச கூலி நிர்ணயத்தை செய்துகொடுக்க வேண்டுமென்று குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஏழை தொழிலாளர்கள் பெரும்பாலும் ஏழை ஹரிஜனங்களாகவோ அல்லது பின்தங்கிய சமுதாயத்தை சேர்ந்தவர்களாகவோ இருக்கிறார்கள். அவர்கள் கிராமங்களிலே ஒரு வேளை உணவுக்குக்கூட வழியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வறுமையிலும், பஞ்சத்திலும், பட்டினியிலும் அவர்கள் மடிந்துகொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால் கிராமப்பகுதிகளில் இருக்கும் நிலச் சொந்தக்காரர்கள் ஏழை விவசாயத் தொழிலாளிகளுக்குத் தகுந்த அளவுக்கோ அல்லது போதிய அளவுக்கோ ஊதியம் கொடுப்பது இல்லை. **The Law of supply and demand** என்று சொல்லக்கூடிய ஒரு பொருளாதார விதி விவசாயத் துறையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களிடையிலும் இருந்து வருகிறது. உதாரணமாக நிலச் சொந்தக்காரர்கள் ஏக்கர் நிலத்திற்கு நடவு நட பெண் கூலி ஆட்கள் கூப்பிடுவதாக இருந்தால் சுமார் பத்துப் பெண்கள் தேவைப்படும் வேலைக்கு 100 பெண்கள் காத்து நிற்பார்கள். அப்படி ஒரு குறிப்பிட்ட சிறிய வேலைக்கு ஏராளமான தொழிலாளிகள் வேலைக்கு வருவதால், போதிய அளவு கூலி கிடைப்பது இல்லை. எட்டு அணா அல்லது முக்கால் ரூபாய் கொடுக்கும் இடத்தில் இரண்டு அணா அல்லது நாலு அணாதான் நிலச் சொந்தக்காரர் கொடுப்பார். இதனால் அவர்களுக்கு உயர்ந்தபட்ச கூலி கிடைப்பது இல்லை. இந்த ஏழை ஹரிஜனங்களுக்கும், பின்தங்கியவர்களுக்கும் வேறு பிழைப்புக்கு வழியில்லாததால் இம்மாதிரி அதிகமான முறையிலே வேலை செய்யவருகிறார்கள். இக்காரணங்களால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய சூழ்நிலை இல்லை. இந்த சர்க்கார் பிரமாதமாக சோஷலிச பாணியில் சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று எட்டளவிலே சொல்லிவிட்டார்கள். இது வாயளவில் இருக்கிறதே தவிர நடைமுறையிலே உண்மையில் வருந்தத்தக்க நிலையிலிருக்கிறது. எதிர்கட்சிகள் எல்லாம் அதைப்பற்றி பேச ஆரம்பித்து விட்டார்கள் என்றும், மேல்நாட்டைப் பார்த்து நம் பொருளாதார நிலையை செம்மைப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறார்களே என்றும், அவர்கள் ஆவடியில் நடந்த காங்கிரசில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, சோஷலிச சமுதாயத்தை அமைக்கப்போகிறோம் என்று சொல்லிவிட்டார்களே தவிர நடைமுறையில் ஏதாவது செய்து இருக்கிறார்களா என்றால், இல்லவே இல்லை. நடைமுறையில் கொண்டுவராத தீர்மானமாக இருக்கிறது, ஆவடி காங்கிரஸ் தீர்மானம். கிராமங்களில் உள்ள லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு சர்க்கார் ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டும். குறைந்தபட்ச கூலி நிர்ணய மசோதாவை கொண்டுவந்து, ஏழை விவசாயிகளுடைய கூலியை உயர்த்துவதற்கு வழி செய்தால்தான், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொண்டால்தான், அவர்கள்

[Sri M. Jagannathan] [23rd July 1957

உண்மையிலேயே கொண்டு வந்திருக்கும் சோஷலிச பாணி தீர்மான மானது செயலாற்றப்பட்டு, அது மக்களுக்கு பயன் விளைவிக்கக்கூடிய அளவுக்கு வரும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

காங்கிரஸ் சர்க்கார் குறிப்பாக ஹரிஜனங்களையும், பின்தங்கிய சமூகத்தினரையும் ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெருவாரியான மக்கள் வறுமையில் வாடுகிறார்கள், அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை எந்தக் காலத்திலும் ஏமாற்றலாம், அவர்களை "எக்ஸ்பிளாய்ட்" செய்யலாம் என்ற ஒரு நோக்கத்தோடு இருந்து வருவதைப் பார்க்கும்பொழுது, அதைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. உண்மையிலேயே ஹரிஜன சமூகத்தினரையும், பின்தங்கிய வகுப்பினரையும் கைதூக்கிவிட வேண்டும், வறுமையிலிருந்து விடுதலை செய்ய வேண்டும், வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு ஏதாவது கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்ற அக்கறையும், பொறுப்பும், கடமையும் சர்க்காரிடம் இருக்குமானால், லட்சக்கணக்கான தொழிலாளர்கள், விவசாயத் தொழில்களில் ஈடுபட்டவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு சர்க்கார் ஏதாவது திட்டவட்டமாக செய்திருப்பார்கள். பெரும்பாலான மக்கள் வறுமையில் இருக்கிறார்கள், அறியாமையில் இருக்கிறார்கள், அவர்களால் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற காரணத்தினால் சர்க்கார் லட்சக் கணக்கான ஹரிஜன மக்களையும், பின்தங்கிய வகுப்பினரையும் உதாசீனம் செய்திருக்கிறார்கள், அலட்சியம் செய்திருக்கிறார்கள் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். உலகத்திலே ஏழைகளை நசுக்கியவர்கள், ஏழைகளை உதாசினப்படுத்தியவர்கள், அவர்களுடைய அவல நிலைமையைக் கண்டு ஆனந்தப்பட்டவர்கள், சர்வாதிகார மனப்பான்மையோடு நடந்துகொண்டவர்கள் எந்த நாட்டிலும் இது வரையிலும் பொறுத்துக்கொள்ளப்படவில்லை. மக்களுடைய நலனை கவனிக்காதவர்கள், மக்களுடைய விருப்பத்தை தெரிந்துகொள்ளாமல் அலட்சியமாக இருந்த சுயநலக்காரர்கள் எத்தனையோ பேர் சரித்திரத்தின் பள்ளத்தாக்கில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராமத்தில் வசிக்கின்ற லட்சக் கணக்கான பின்தங்கிய சமூகத்தினர், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த நிலம் இல்லாத ஏழை தொழிலாளர்களுக்கு நன்மை செய்கின்ற முறையில் குறைந்த பட்ச கூலி நிர்ணய மசோதாவைக் கொண்டுவந்து, இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தில் அவர்களுக்கு பயன் அளிக்கக்கூடிய முறையில் செயலாற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்து கொள்ளுகிறேன்.

**Sri T. T. DANIEL** : கனம் மன்றத் தலைவர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை நான் ஆதரிப்பதுடன், சில முக்கிய கருத்துக்களை சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவருவது எனது கடமையாகும். ஒரு மனித சமூகத்தில் பொருளாதார நிலை உயரவேண்டுமென்று சொன்னால், அங்கு இருக்கும் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துதான் இருக்க வேண்டும். இன்று சமூகத்தில் சுமந்து கொண்டிருக்கிறார்கள் தொழிலாளர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. ஒரு மனிதனுடைய முதுகு எலும்பு எவ்வளவு முக்கியமாக இருக்கிறதோ, அதே முறையில் ஒரு சமூகத்தின் முதுகெலும்பாக இருக்கிறார்கள் தொழிலாளர்கள். ஒரு மனிதனுடைய முதுகெலும்பு ஒடிந்து போனால் அவன் எப்படி பலக்குறைவாகப் போய்விடுவானோ, அதே மாதிரி இந்த சமூகத்திலுள்ள தொழிலாளர்களுடைய நிலை பின்தங்கிய நிலைமையில் இருந்தால், இந்த சமூகமே அழிந்துதான் போய்விடும். ஆகவே, தொழிலாளர்களுடைய நிலையை உயர்த்துவது நமது உரிமையும் கடமையுமாகும்.

தொழிலாளர்களுடைய சரித்திரத்தை இரண்டு வரிகளிலே சொல்ல ஆசைப்படுகிறேன். முதலாவதாக, தொழிலாளர்கள் அடிமைகளாக்கப்பட்டு, அவர்கள் தொழில் செய்து வந்தார்கள். ஆங்கிலத்தில் சொன்னால் "**They were in a state of slavery and serfdom.**" ஆனால், இந்த நிலையை



23rd July 1957] [Sri T. T. Daniel]

மாற்றி அமைப்பதற்கு அப்ரகாம் லின்கன் அவர்களைப் போன்ற மாபெரும் தலைவர்கள் மண் உலகில் அவதாரம் எடுத்து அவர்களுடைய ரத்தத்தை சிந்தினார்கள். அம்மாதிரி ரத்தத்தை சிந்தி அந்த நிலைமையை மாற்றினார்கள். அடுத்தபடியாக அவர்களுக்கு ஏற்பட்ட நிலைமை ஜோலி செய்து அன்றாடக் கூலி வாங்கும்படியாக ஏற்பட்டது. ஆங்கிலத்தில் '**Tney were in a state of daily-wage earners**' என்று சொல்லலாம். இந்த நிலையில் தொழிலாளர்கள் தங்களுடைய நிலைமை மாற வேண்டுமென்று உரிமைக் குரலை எழுப்புகிறார்கள். தாங்கள் செய்கின்ற தொழிலில் தங்களுக்கும் ஒரு பங்கு இருக்கவேண்டும், அதில் கிடைக்கும் லாபத்தில் தங்களுக்கும் பங்கு கிடைக்க வேண்டும் என்ற உரிமைக் குரலை தொழிலாளர் சமூகம் இந்த நாட்டிலே எழுப்பிக்கொண்டிருக்கிறது. இந்தக் குரல்தான் இந்த சட்ட சபையிலும் கேட்கப்படுகிறது. அதைக் கொடுக்க சமூகம் ஓரளவு தயக்கம் அடைந்துகொண்டிருக்கிறது. அதற்கான சட்டங்களைக் கொண்டுவருவதில் சமூகம் அல்லது சர்க்கார் ஓரளவு தயக்கம் காட்டுகிறார்கள். கம்பீரமான தொழிற்சாலைகளில் ஜோலி செய்கின்ற தொழிலாளர்கள் அந்தத் தொழிலில் லாபம் வேண்டுமென்ற குரலை எழுப்பியிருப்பதால், நம் மத்திய சர்க்கார் அது சம்பந்தமாக பரிசீலனை செய்து கொண்டு வருகிறார்கள். அதற்குரிய நிலைமை உலகத்தில் ஏற்படக்கூடிய அளவிலே தொழிலாளர்கள் முன் அணியில் வந்துகொண்டிருக்கிறார்கள். எப்படியிருந்தபோதிலும், அவர்களுடைய நியாயமான உரிமைகள் சட்ட பூர்வமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் அபிவிருத்திக்காக ஏற்பட்ட சட்டங்களுள் குறிப்பாக மூன்று சட்டங்கள் உண்டு. தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்ற சட்டமும், குறைந்த பட்ச கூலி கொடுக்க வேண்டுமென்ற சட்டமும், தொழில் தகராறுகளை தீர்த்துவைக்கக்கூடிய தொழில் கோர்ட்டுகள் அமைப்பதற்கான சட்டமும், ஆகிய மூன்று சட்டங்கள் இருந்தபோதிலும், தொழில் கோர்ட்டுகளில் தகராறுகள் ஓரளவுக்கு சுருங்கிய காலத்தில் தீராமல் இருக்கிற காரணத்தினாலே, ஏழைத் தொழிலாளர்கள் பலவிதமான அல்லல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறைந்தபட்சக் கூலி சட்டம் சில முக்கியமான தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரை இன்னும் கொண்டுவரப்படவில்லை. குறிப்பாக பனம் தும்பு, உப்பளம், கயிற்று விவசாய தொழிலாளர்கள் இந்த சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படவில்லை. உப்பளத் தொழிலாளர்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்கள் முழங்காலிலிருந்து கரண்டை வரையிலும் தண்ணீரில் நின்று வெய்யிலில் வேலை செய்யும் காரணத்தினாலே ஒரு விதமான சொரி சிரங்கு அவர்களுக்கு ஏற்படுகிறது. பனம் தும்பு தொழிலாளர்கள் அதே முறையில் பலவிதமான கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். இந்தியாவிலேயே இந்தப் பனம்தும்புத் தொழில் தூத்துக்குடி, குளச்சல் ஆகிய இரண்டு இடங்களில்தான் இருக்கின்றன. பக்கத்திலுள்ள கிராமங்களில் ஏராளமான மக்கள் இந்த பனம்தும்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்குப் பல "பாக்டரிகள்" இருக்கின்றன. அந்த பாக்டரிகளில் அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி கொடுக்கப்படுவதில்லை.

கன்னியாகுமரி ஜில்லாவை பொறுத்தவரையில் ரோடு தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச கூலி கொடுக்கப்படவில்லை. ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்த ரோடு போடும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஸ்திரப்படுத்தப்படாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களை ஸ்திரப்படுத்தி அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிப்பது சர்க்காரின் கடமையாகும்.

மீன்பிடிக்கும் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. ஆண்டுதோறும் சுமார் இரண்டு கோடி ரூபாய் பொறுமான மீன்களைப் பிடித்து கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து அவர்கள் வெளிப் பிரதேசங்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு மீன் பிடித்தாலும், அவர்களுக்கு லாபம் கிடைக்காமல் இருக்கிறது. இடையிலே உள்ள பெரிய முதலாளிகள் குறைந்த விலையில் மீன்களை வாங்கி, ஆதாயத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

[Sri T. T. Daniel] [23rd July 1957

அந்த நிலைமையை ஒழித்து மீன்பிடித் தொழிலாளர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தவேண்டுமானால், அவர்கள் இருக்கக்கூடிய பிரதேசங்களில் கூட்டுறவு பாங்குகள், சங்கங்கள் அமைத்து, அவர்கள் பிடித்துக் கொண்டு வருகிற மீன்களை தகுந்த விலைக்கு வாங்கி, அவர்களுக்கே அந்த லாபம் கிடைக்கக்கூடிய ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும்.

பனையேறித் தொழிலாளர்கள் விறகு கொண்டுவருவதற்கு மைல் தூரம் நடந்து செல்லவேண்டியிருக்கிறது. கருப்புப் பெட்டி உற்பத்தி செய்வதற்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் குறைந்த விலைக்கு சர்க்கார் விறகு கொடுத்தாலும், போதுமான அளவுக்கு விறகு கொடுப்பதில்லை. இதனால் ஏழைத் தொழிலாளர்களுடைய சிறுமிகள் மைல் கணக்கில் நடந்துபோய் விறகு பொறுக்கி தலையிலே சுமந்துகொண்டு வரும் காட்சியை பார்க்கிறோம். அவர்களுக்குத் தகுந்த ஊதியம் கிடைப்பதற்கு உரிய வகையில் சர்க்கார் திட்டம் வகுக்கவேண்டும். இன்னொரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். இந்த பனையேறித் தொழிலாளர்கள் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஜன்மிக்கு பதநீர் கொடுக்கும் வழக்கம் இருக்கிறது. இதை மாற்றி தொழிலாளி நான்கு நாள் பதநீர் இறக்கினால், ஒரு நாளைக்கு ஜன்மிக்கு பதநீர் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு சட்டத்தை சர்க்கார் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் தொழிலாளர்களுக்கு கொஞ்சம் லாபம் கிடைக்கும்.

வீடுகட்டிக்கொடுக்கும் திட்டத்தை சர்க்கார் மனமுவந்து செய்துகொண்டிருக்கிறது. கம்பீரமான. தொழிற்சாலைகளில் ஜோலி செய்கின்ற தொழிலாளர்களுக்கு ஆங்காங்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டும், மருத்துவ வசதி, கல்விவசதி முதலிய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டும் வருகின்றன. ஆனால் ஆயிரக்கணக்கான ஏழை தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கு அவர்கள் ரோடுகளில் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆங்காங்கு குடிசைகூட கட்டிக்கொள்ள வழியில்லாமல் தொழிலாளர்கள் ரோடுகளில் இருந்துகொண்டு உரங்கிக் கொண்டு தங்களுடைய ஜீவனத்தை நடத்திக்கொண்டு வந்தால் அதை ஒரு நாகரீக சமூகத்தின் அவமானச் சின்னமாகவே கருதவேண்டும். இன்று இந்தச் சமூகத்தில் விலங்குகளுக்குக்கூட தங்குவதற்கு இடம் இருக்கிறது, பறவைகளுக்குத் தங்க காடுகள் இருக்கின்றன. ஆனால் மனித குலத்தில் பிறந்த தொழிலாளர்களுக்கு தலை சாய்ப்பதற்கு இடமில்லாமல் இருக்கிறது. ஆகவே இன்று தொழிலாளர்களுடைய பிரச்னை இன்று ஒரு சமூக பிரச்னையாக இருக்கிறது. இது தனிப்பட்ட ஒரு கட்சியின் பிரச்னை அல்ல. சர்க்காரின் பிரச்னையாகவும் இல்லை, இன்றைக்கு அது சமூகப் பிரச்னையாக மாறியிருக்கிறது. தொழிலாளர்களிடத்தில் வேலை செய்த ஊழியன் என்ற முறையில் என் அனுபவத்தைச் சொல்லுகிறேன். இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கும் தொழிலாளர்களிடத்தில் அவர்களுக்கு போய் வேலைகிடைத்திருக்கிறது என்று சொன்னால் அவர்களுக்கு இருக்கும் மகிழ்ச்சியை சொல்ல முடியாது. அவர்கள் பேசாமல் சிரிக்கும் சிரிப்பில் எவ்வளவோ அர்த்தமிருப்பதாக நாம் அறிய முடியும். இந்த விதத்தில் அவர்கள் உள்ளம் உடைந்த தன்மையில் இருக்கிறார்கள். இந்த புனிதமான சிரிப்பின் இன்பத்தை நானும் நீங்களும் அனுபவித்துதான் தீர வேண்டும்.

(The Hon. Speaker sounded the going and the hon. Member resumed his seat.)

**Sri. S. PAKKIRISAMI PILLAI :** கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையின் மீது சில வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இதர நண்பர்கள் தெரிவித்த பிரகாரம் இந்த தொழிலாளர் இலாகாவை எனது மதிப்பிற்குரிய நண்பர் வெங்கட்ராமன் அவர்கள் எடுத்துக்கொண்டு பணியாற்றும்படியான நிலைமையை ஏற்படுத்தி வைத்ததற்கு முதல் மந்திரி அவர்களுக்கு எனது நன்றியை தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தோழர் வெங்கட்ராமன் அவர்கள் இந்த இலாகாவை எடுத்துக்கொண்டதால் தொழிலாளர்களுக்கு



23rd July 1957] [Sri S. Pakkirisami Pillai]

ஒரு நம்பிக்கை இருக்கிறது. "லேபர் லா ஜர்னல்" (**Labour Law Journal**) என்ற பத்திரிகை நடத்திவந்த காரணத்தால் தொழிலாளர்களுடைய சட்டங்களிலுள்ள நுணுக்கங்களையெல்லாம் தெரிந்து, தொழிலாளர்களோடு கூடி பழகி அவர்களுடைய சுக துக்கங்களை எல்லாம் நன்கு அறிந்து, அவர்களோடு அளவளாவி இருந்த காரணத்தால் அவர்களுடைய மனப்போக்கையும் நன்கு அறிந்து இருக்கின்றவர் திரு வெங்கட்ராமன் அவர்கள். அதனால் தொழிலாளர்களுக்கு நேர்மையான நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தொழிலாளர்களுக்கு இருந்துவருகிறது. அதே சமயத்தில் முதலாளித்துவ அமைப்பில் இயங்கும் கட்சியின் கீழ் அவர் செயலாற்றி வருகிற காரணத்தினால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் முதலாளித்துவ சூழ்புனலில் சிக்கி, அந்த மாதிரியான ஒரு நிலைமையில் இருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியும். காலம் போகப் போக சில அபிவிருத்தி அடைந்தாலும்கூட தொழிலாளர்கள் எதிர்பார்க்கிற அளவுக்கு மற்ற தேசங்களில் கிடைத்துக்கொண்டிருக்கும் அபிவிருத்தி கூட இவர்களுக்கு கிடைப்பதில்லை. நம் ராஜ்யத்தில் இங்கு மெதுவாக ஆமை வேகத்தில் நத்தை வேகத்தில்தான் தொழிலாளர்களுக்குண்டான நல உரிமை விஷயங்களில் போகக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்த விதத்தில் பார்த்தால் முதலாவது ஐந்தாண்டு திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் தொழிலாளர்கள் அபிவிருத்தி அடைவதற்கேற்ற முறையில் திட்டங்கள் ஒன்றும் பெரிதாக செய்வதில்லை. இப்போது இருக்கின்ற தொழிலாளர்களுடைய குறைகள் இன்னும் நீடித்துக்கொண்டிருக்கும்படியான நிலைமைதான் இருக்கும் என்பது தெள்ள .தெளிய நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ஆகவே இப்பொழுது பேசிக்கொண்டிருக்கும் சோஷியலிஸ பாணியிலே இன்னும் பேசிக்கொண்டே இருந்தால், இன்னும் ஐந்து ஐந்தாண்டு திட்டங்கள் கொண்டுவருவது வரையிலும் பேசிக்கொண்டே இருக்கலாம். இதனால் ஏழை தொழிலாளர்கள் ஏமாற்றம் அடைந்து வருவார்கள். இதற்கு என்ன செய்ய முடியும். போலீஸை வைத்துக்கொண்டு எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆட்சி செய்துகொண்டிருக்கலாம். இம்மாதிரியான ஒரு நிலைமையை தவிர்ப்பதற்கு தொழிலாளர்கள் உணர்ச்சியோடு ஒன்றுதிரண்டு இருக்கிறார்கள் என்பது நமக்கு தெரிந்த விஷயம்தான். சாதாரண உழைப்பாளிகள், உடல் உழைப்பைக் கொடுத்து ஊதியம் சம்பாதிக்கிறவர்கள், கெஸட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள், பத்திரிகை தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள், இவர்கள் மந்திரிகளோ தந்திரிகளோ எங்கு போனாலும் சரி, வந்தாலும் சரி, அவர்களின் பின்னாலே போய் இரவு பகலாக காக்காய் மாதிரி பறந்துகொண்டு வேலை செய்யக் கூடியவர்கள் இந்தப் பத்திரிக்கைச் செய்திகளைச் சேகரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் இவர்கள் எல்லாம் ஒன்றுபட்டிருக்கிறார்கள். அதே மாதிரி தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், சிறு கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், பீடி தொழிலாளர்கள் இன்னும் பல்வேறு துறையில் வேலைசெய்யும் தொழிலாளர்கள், அத்தனை பேரும் ஒன்றுபட்டு உணர்ச்சியுடன் எழுந்து இப்போது கட்டுப்பாட்டுடன் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவ்விதம் தொழிலாளர்கள் கட்டுப்பாட்டுடன் உணர்ச்சியோடு இருக்கும் தொழிலாளர்களைப் பார்க்கும்பொழுது, இம்மாதிரியாக சோஷியலிஸ பாணியில் வெறும் பேச்சு மாத்திரம் பேசிக்கொண்டு காலத்தை நீடித்துக்கொண்டு போக காலம் வழி விடாது. எவ்வளவு சீக்கிரமாக சோஷியலிஸ வழியில் தொழில்களை நம் நாட்டில் இயங்கும்படியாக செய்யமுடியும் யாரும் சொல்ல முடியவில்லை. சோஷியலிஸம் என்பது நான் தெரிந்துகொண்ட அளவில் தொழிலாளர்கள் ஆட்சியால்தான் அதைக் கொண்டுவர முடியும். சோஷியலிஸ ஆட்சி என்றால் பாடுபட்டு வேலை செய்கின்றவன் அந்த வழியில் வீணாக காலத்தை போக்கிக்கொள்ளாமல் நல்ல வழியில் மற்றவர்களுக்கு உதவிசெய்து சம்பாதிக்கக்கூடிய அத்தனை பேர்களும் இருந்து அதற்கேற்றபடி இருக்கிற ஒரு அரசாங்கம் வருகிறபோதுதான் இந்த சோஷியலிஸம் வர முடியும். அந்த சோஷியலிஸம் மார்க்ஸின் தத்துவத்தை தழுவி இருக்கவேண்டும். மார்க்ஸிஸம் என்பது ஒரு கொள்கை. அது ஒரு சித்தாந்தம். அந்த சித்தாந்தத்தின்படி பார்த்தால் ஒரு நாட்டில் முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாட்டின் கீழ் இருக்கும்போது எந்த

[Sri S. Pakkirisami Pillai] [23rd July 1957

ஏழைக்கும் அங்கு சமத்துவ நிலைமையில் நன்மைகள் கிடைக்காது. அம்மாதிரியான முதலாளித்துவ அமைப்பு மாறி தொழிலாளர்களின் ஆட்சி வரவேண்டும். அம்மாதிரி ஆட்சி நம் நாட்டில் வந்தால்தான் நமது தொழிலாளர்களுக்கு மார்க்ஸிஸ சித்தாந்தத்தின் அடிப்படையிலும் காந்தீய கொள்கை அடிப்படையிலும் நன்மை கிடைக்க முடியும். அவ்விதமான ஒரு அமைப்பை நம் நாட்டுக்குக் கொண்டுவர வேண்டியது நம்முடைய கடமையாகும். நம்முடைய நண்பர்கள் எல்லோரும் சொல்லுகிறார்கள் தொழிலாளர்களுக்கு அரசியல் கூடாது என்று. ஆனால் நம் நாட்டில் அரசியல் பேசாதவன் வெறும் மக்கு, மரக்கட்டையாகத்தான் இருக்க வேண்டியிருக்கிறது அரசியல் உணர்ச்சி இல்லாத தொழிலாளர்கள் இன்று நம் நாட்டில் இருக்கமுடியாது. அவ்விதமில்லாதவர்கள் அடிமைகளாகத்தான் இருக்க முடியும். அரசியல் கூடாது என்று வெளியில் பிரசங்கம் செய்யக்கூடியவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் இவ்விதம் பேசி அவர்களை தங்கள் கட்சியின் பக்கம் இழுத்துக் கொள்கிறார்கள். இது சைத்தான் வேதகீதம் பாடிய மாதிரிதான் **(Devil quoting scripture)** இருக்கிறது. இந்த மாதிரியான நிலைமையில் தொழிலாளர்கள் உணர்ச்சியோடு இருக்கின்ற நம் நாட்டில் சோஷியலிஸத்தை கொண்டுவருவதற்கு நாம் மும்முரமாகவும் அதி சீக்கிரமாகவும் வேலை செய்யவேண்டிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறோம்.

ஆகவே நம் நாட்டில் இரண்டு கட்சிகள்தான் இருக்க வேண்டும். ஒன்று முதலாளித்துவ அடிப்படையில், மற்றொன்று சோஷியலிஸ அடிப்படையில். இந்த இரண்டில் யார் முன்னால் வருகிறார்களோ அவர்கள் ஆட்சி நடத்த வேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டின் நிலையை நாம் உயர்த்திக்கொள்ளமுடியும்.

இது நிற்க பெரிய பெரிய தொழிற்சாலைகளில் இப்பொழுது கம்பெனி லேபர் ஆபீஸர்களை நியமித்திருக்கிறார்கள். அந்த லேபர் ஆபீஸர்களின் ஒத்துழைப்பால் சட்டங்களில் உள்ள சிறிய பிசகுகளை நன்கு ஆராய்ந்து உணர்ந்து, அதன் வழியாக சட்டத்திற்கு அப்புறப்படாமல் இருப்பது மாதிரி பாவனை காண்பித்து அவர்கள் தொழிலாளர்களுக்கு பல கஷ்டங்கள் செய்து வருகிறார்கள். அவர்களின் வழியாக யோசனைகளை ஏற்று முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டுகிறார்கள். தொழிலாளிகளை சுரண்டி, தங்களுக்கு அதிக லாபம் பெறுவதற்குத்தான் இந்த லேபர் ஆபீஸர்களை அதிக சம்பளத்தில் நியமித்திருக்கிறார்கள். அவர்கள் மூலம் தொழிலாளர்களுக்கு நன்மைகள் கிடைப்பது கிடையாது. அவர்களை தடைசெய்ய முடியாது என்பது தெரிந்தாலும் ஒரு குறிப்பிட்ட அளவு, ஆனால் இவ்வளவு ரூபாய்க்கு மேல் எந்த லேபர் ஆபீஸரும் எந்த பாக்டரியிலும் வேலை செய்யக்கூடாது என்று சட்டம் கொண்டு வரவேண்டும். அதேபோன்று பெரிய பெரிய பத்திரிகை முதலாளிகளையும் பார்க்கிறோம். கோயங்கா, ஹிந்து பத்திரிகை முதலாளிகள் இந்தவித முறைகளில் கையாண்டு வருவதை நாம் பார்க்கிறோம். ஹிந்து பத்திரிகை தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசி என்னவானார்? அவர் இன்று டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார். அதைக் கேட்க அரசாங்கம் பயந்து கொண்டிருக்கிறது. என் ஹிந்து முதலாளிக்கு அரசாங்கம் பயப்பட வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. அதற்கு அவசியம் என்ன? சட்டப்படி என்ன இருக்கிறதோ அதை பிரயோகிக்க என் சர்க்கார் பயப்படுகிறார்கள். அவரது தாட்சண்யத்தை சர்க்கார் என் எதிர்பார்க்கிறார்கள் என்பது உள்நாட்டு இரகசியமாகயிருக்கிறது. இந்தமாதிரியான ஆஷாடபூதித்தனம், பல பத்திரிகை முதலாளிகளின் ஆதரவில் சர்க்கார் இருப்பதால், தொழில்லாளர்களுக்கு விமோசனமே கிடையாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Mr. SPEAKER**: The hon. Member has already taken fifteen minutes.

***Sri S. PAKKIRISAMI PILLAI**: ஒரே வார்த்தையில் முடித்துக் கொள்கிறேன். நம் நகரத்தில் பீடித் தொழிலாளர்கள் அநேகமாக முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த



23rd July 1957] [Sri S. Pakkirisami Pillai]

விதமான நன்மையும் இதுவரையில் சர்க்கார் ஸ்பஷ்டமாகக் கொண்டு வரவில்லை. ஏதோ ஒரு புஸ்தகத்தை இப்பொழுது பிரசுரித்திருக்கிறார்கள். சட்டரூபத்தில் குறைந்தபக்ஷ சம்பளம் எப்போது வரும் என்று தெரியாது. ஆனால் இந்த முஸ்லீம் தொழிலாளர்கள் மனதில் என்ன இருக்கிறது தெரியுமா? இந்த காங்கிரஸ் சர்க்கார் இருக்கிற வரையில் முஸ்லீம்களுக்கு நன்மையே செய்யமாட்டார்கள் என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள். நாம் முஸ்லீம்களாக இருப்பதால் தான் நம்மை கவனிக்காமல், நமது சுகதுக்கங்களைப் பாராமல் நம்மைப் புறக்கணிக்கிறார்கள் என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே உடனடியாக பீடி தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கப் படவேண்டும். கடைசியாக....

**Mr. SPEAKER**: I am sorry the hon. Member is still not concluding his speech. Now I call upon Mr. V. Subbiah to speak.

**Sri *V. SUBBIAH**: சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின் மேலுள்ள வெட்டுப் பிரேரணையின் மீது நான் பேசும்போது முதலில் கூற விரும்புவது இன்றையதினம் இந்த நாட்டிலே 100-க்கு 85 சதவிகிதம் இருக்கும் விவசாய கூலிகளின் பிரச்னையை இன்றையதினம் அரசாங்கம் தீர்த்து வைக்காமல் இருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய விவசாய கூலிகளின் நிலைமை மிக மிக பரிதாபகரமான நிலையில்தான் இருக்கிறது. இன்றைக்கு ரெயில்வே தொழிலாளியிலிருந்து நகர சுத்தி தொழிலாளிகள் வரை அவர்களுக்குள்ள கூலி நிர்ணயத்தை நாம் எடுத்துப் பார்ப்போமேயானால், விவசாய கூலிகளின் கூலி மிக மிக குறைவாயிருக்கிறது. நடுத்தர விவசாயி கூலிகள் ஒரு ஸ்தாபனமற்ற நிலையில் இருப்பதுதான் அதற்குக் காரணம். அவர்களுக்கு மாகாண ரீதியிலோ அல்லது அகில இந்திய ரீதியிலோ ஒரு ஸ்தாபனம் இல்லாத காரணத்தினால்தான் அரசாங்கம் அவர்களின் மேல் பராமுகமாய் இருக்கிறது. இந்த நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளருக்கு பாக்டரி ஆக்ட் இருக்கிறது, லேபர் கமிஷனர் இருக்கிறார். ஆனால் விவசாய கூலிகளைப் பற்றி சர்க்கார் கவனிப்பதில்லை. அவர்ளுக்கு வேண்டி ஒன்றும் செய்வதுமில்லை. இந்த நிலை வெகுநாள் நீடிக்க முடியாது என்பதை அமைச்சர்களும், சர்க்காரும் தெரிந்துகொள்ள வேண்டும். இன்று நம் நாட்டிலுள்ள 85 சதவிகிதம் உள்ள விவசாய கூலிகள் இன்று குறைந்த பட்ச கூலி வாங்குகிறார்கள். அவர்களின் கூலி இன்று 6 அணாவாக இருக்கிறது. அதுவும் பணமாகக் கொடுக்கப்படுவதில்லை. எங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் அவர்களுக்கு எப்படி கூலி கொடுக்கப்படுகிறது என்றால், களை எடுப்பது போன்ற வேலைகளுக்கு ஒரு மட்ராஸ் மெஷர் நெல், ராகி, சோளம், தினை போன்ற தானியங்களை கொடுக்கிறார்கள். காலை 6 மணிக்கு வருகிற விவசாய கூலி மாலை 6, 7 மணிக்குத்தான் வீட்டிற்கு போக முடியும். இந்த நிலையில் அவர்கள் வாழ்கிறார்கள். அரசாங்கம் இதைப் பற்றி கொஞ்சம் கவனித்து சிந்திக்க வேண்டும். விவசாய கூலிகளின் வேலை மண் வெட்டக் கூடிய தொழிலாகும். நல்ல கடுமையான வெய்யிலில் அவர்கள் பெரிய பெரிய மேடுகளை பண்படுத்துவதைப் பார்த்தால், அவர்கள் கஷ்டப்படுவதைப் பார்த்தால் இந்த நாட்டிலே உள்ள எல்லா தொழில்களிலும் மிக மிக கஷ்டமான தொழில் விவசாய கூலிகளின் தொழிலாகும். இப்பேர்ப்பட்ட கடினமான தொழில் செய்பவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிப்பதில்லை. அவர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை. அவர்களுக்கு விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டு இந்த நாட்டில் நாம் ஏன் இவ்வளவு கீழ்நிலையில் வாழ வேண்டும் என்று நினைக்கும் நிலை வந்தால் அப்பொழுது அரசாங்கம் எப்படி இயங்கும் என்பதை அரசாங்கம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே அவர்களது எதிர்காலம் நல்ல முறையில் அமைய சர்க்கார் புதிய திட்டம் ஏதாவது கொண்டுவர வேண்டும். எங்கள் பகுதியில் மாட்ச் பாக்டரியில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அங்கு பாக்டரி ஆக்ட் அமுலில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அங்குள்ளவர்களுக்கு காலநிர்ணயம் தெரியவில்லை. கிராமப் பகுதியிலிருந்து காலை 11-24 a.m.

4 மணிக்கு வருகிறார்கள். வந்து மாலை 8 மணி வரை வேலை செய்கிறார்கள். அது மட்டுமல்ல. பெண் தொழிலாளர்கள் இரவில் 8, 10 மணி வரை பாக்டரிகளில் வேலை செய்வதாக தெரிகிறது. பாக்டரி ஆக்ட் அமுலில் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் பாக்டரி இன்ஸ்பெக்டர்களோ அல்லது வேறு அதிகாரிகளோ அதைப் பார்த்து விட்டு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா என்று கேட்டால் அதைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆதலால் தொழிற்சங்க சட்டத்தில் இதை எல்லாம் சேர்த்து அவர்களுக்கும் போனஸ், பிராவிடண்ட் பண்ட் போன்ற வசதிகள் கிடைக்கும்படி செய்து கொடுக்கவேண்டும். இடைவேளை நேரம் இருக்க வேண்டும். மெட்டர்னிட்டி ஆக்ட் படி உள்ள சலுகைகள் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக, தமிழ்நாட்டிலே முதன்முதலாக ஒரு தமிழரால் இயக்கப்பட்ட பெரிய ஒரு நூற்பு மில் கோவில்பட்டியில் இருக்கிறது. அது சமீப காலத்தில் மூடப்பட்டது. வேலை பளுவின் காரணமாக நிர்வாகிகள் அதை மூடிவிட்டார்கள். லேபர் கமிஷனர் அவர்களும், அஸிஸ்டெண்ட் லேபர் கமிஷனர் அவர்களும் அது குறித்து ஒரு சமரஸம் செய்து விட்டார்கள் என்று கேள்விப்படுகிறோம். தமிழ் நாட்டில் வைத்தே எங்கள் இடத்தில்தான் மில் முதலாளிகள் தொழிலாளிகளிடமிருந்து கூடுதல் வேலை வாங்குகிறார்கள் என்று தொழிற்சங்க காரியதரிசி எழுதியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் தைரியமாக கதவடைப்பு போன்றவைகள் சுலபமாக நடக்க முடியாதபடி முதலாளிகளிடம் கடுமையாக நடந்துகொள்ள வேண்டும் முதலாளிகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிப்பது என்பது இருக்கக் கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அதை அரசாங்கம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் விவசாயக் கூலிகளின் நிலைமையைப் பார்த்து ஏதாவது எதிர் காலத்திலே கண்டிப்பாக செய்ய வேண்டும், அதாவது தொழிற் சங்க ரீதியிலே அவர்களுக்கும் ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** இன்னும் ஐந்து அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று சொல்வதனால், ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷம் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-32 a.m. **Sri S. B. ADITYAN :** கனம் சபைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம் மத்தியில் தொழிலாளர் மந்திரியாக வீற்றிருக்கும் வெங்கட்ராமன் அவர்கள் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள். தொழிலாளர் சங்கங்களில் ஈடுபட்டு அல்லும் பகலும் சேவை செய்தவர். தொழிலாளர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். தொழிலாளர் சட்டத்தைத் தெரிந்தவர். தொழிலாளர்களின் உரிமையை தெரிந்தவர். தொழிலாளர்களின் கடமையைத் தெரிந்தவர். இப்படிப்பட்டவர் மந்திரியாக நியமிக்கப்பட்ட பிறகு தொழிலாளர் உலகத்திலே புதியதொரு நம்பிக்கை தோன்றியிருக்கிறது. தொழிலாளர்கள் அவர்களுக்கு ஓரளவு நன்மை கிடைக்குமென்று நம்புகிறார்கள். புதிய முன்னேற்றப் பாதையில் போக வழியேற்படும் என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்துகொள்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல. அரசாங்கத்தில் வேலை செய்கிற தொழிலாளர் மத்தியிலும் புதியதொரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

சொல்லப் போனால், ஆலையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு என்ன நிலைமை இன்றைய தினம் இருக்கிறதோ, அதைவிட அரசாங்கத் தொழிலாளர்களின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது. மிகவும் கீழானதாக இருக்கிறது. அதிக வருந்தத் தக்க நிலையில் இருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்பிகிறேன். உதாரணமாக, சென்னை நகரத்திலே இருக்கிற 13 ஆஸ்பத்திரிகளில் சுமார் 2,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். நர்சிங் ஆர்டர்லி, லச்சீஸ், வாட்ச்மேன், கார்டனர் என்று இதைப் போல





கீழ்தரச் சிப்பந்திகள் என்று சொல்லப்படுகிற 2,000 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு 8 மணி நேரம் வேலை என்ற கட்டுப்பாடு உண்டா ? ஆலையில் வேலை செய்கிறவர்களுக்கு, தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்களுக்கு, ஆபீஸில் வேலை செய்கிறவர்களுக்கு 8 மணி நேர வேலை என்ற கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் அரசாங்கத்திலே வேலை செய்கிற இவர்களுக்கு 8 மணி என்ற கட்டுப்பாடு கிடையாது. இவர்கள் குறைந்த பட்சம் 12 மணி வேலை செய்யவேண்டும்.

நான் மந்திரி அவர்களைக் கேட்கிறேன், நாகரீக அரசாங்கம் நடக்கிற எந்த தேசத்திலாவது 8 மணி நேரத்திற்கு மேல் வேலை இருக்கிறதா என்று கேட்கிறேன். நமது மந்திரி அவர்கள் அமெரிக்கா போயிருக்கிறார்கள். ஆஸ்ட்ரேலியா போயிருக்கிறார்கள். எந்த தேசத்திலாவது, நாகரீக அரசாங்கம் நடக்கிறது என்று சொல்லக்கூடிய எந்த தேசத்திலாவது 8 மணிக்கு மேல் உண்டா என்று அவர்களைக் கேட்கிறேன். அது மட்டுமல்ல நமது நாட்டிலே, தமிழ் நாட்டிலே எந்த ஒரு முதலாளியாவது இம்மாதிரி வேலை வாங்குகிறார் என்று தெரிந்தால் மந்திரி அவர்கள் சும்மா இருப்பாரா ? சட்டத்தை மீறுகிறார் என்று முதலாளிமீது குற்றம் சொல்ல மாட்டாரா ? அந்த முதலாளியை நீதிமன்றத்திற்கு கொண்டுபோக மாட்டாரா ? அந்த முதலாளியை தண்டிக்க மாட்டாரா ? அவரை கைது செய்ய மாட்டாரா ? அப்படி இருக்கும்போது அரசாங்க சிப்பந்திகள் 8 மணிக்கு மேல் 12 மணி நேரம் வரை வேலைசெய்ய வேண்டுமென்றால் அதிலே என்ன நியாயம் இருக்கிறது. சத்தியமேவ ஜயதே, சத்தியமேவ ஜெயம் என்ற கோட்பாட்டைக் கொண்டிருக்கிற அரசாங்கம் மற்றவர்களுக்கு உபதேசம் செய்கிற அரசாங்கம் தன் சிப்பந்திகளை 8 மணிக்கு மேல் வேலை வாங்கலாமா ?

மேலும் அவர்களுக்கு வாராந்திர லீவு கூட கிடையாது. வார விடுமுறை என்று சட்டத்திலே இருக்கிறது. ஏதாவது ஒரு தனிப்பட்டவர், தனிப்பட்ட கடை வியாபாரி 2, 3 தொழிலாளிகளை வைத்திருப்பவர், வாராந்திர விடுமுறை கொடுக்காவிட்டால் அரசாங்கம் சும்மா இருக்குமா ? சட்டத்தைப் பிரயோகிக்காதா ? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காதா ? ஆனால் அரசாங்க சிப்பந்திகளுக்கு வாராந்திர விடுமுறை கிடையாது. இவர்களுடைய அடிப்படைச் சம்பளம் 19 ரூபாய். ராணிப்பேட்டையிலே ஒரு மிருக வைத்தியசாலை இருக்கிறது. அங்கு இருக்கக் கூடிய மஜ்தூர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 15 ரூபாய். அவர்களுக்கு வேலை உறுதி என்பது கிடையாது.

**The Hon. Sri R. VENKATARAMAN :** Sir, I do not want to interrupt the hon. Member, but I have to point out that the conditions of service in ho pitals come under the Public Health Demand.

* **Sri S. B. ADITYAN :** மந்திரி அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதில் அரசாங்கப் பொறுப்புயிருப்பதால் பக்கத்தில் இருக்கிற சக மந்திரிகளுக்கு நிச்சயம் சொல்லமுடியும்.

**Mr. SPEAKER :** The hon. Member wants the Hon. Minister to convey his remarks to the Minister for Health. Am I right, Mr. Adityan?

* **Sri S. B. ADITYAN :** You are right, Sir. அமைச்சர் அவர்கள் ஏனைய தனிப்பட்டவர்கள், தனிப்பட்ட வியாபாரி, தனிப்பட்ட ஒரு முதலாளி இவர்களுக்கு ஒரு சட்டம் செய்திருக்கிறபோது அதே நீதி அரசாங்க சிப்பந்திகளுக்கும் அமுல் நடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு நியாயமான சம்பளம் வேண்டும். அரசாங்க ஊழியர் என்று சொல்லக் கூடியவர்களுக்கு வேலை நிரந்தரம் வேண்டும். சம்பள உயர்வு வேண்டும். வாராந்திர விடுமுறை வேண்டும். இதையெல்லாம் சக மந்திரிகளுக்கு வற்புறுத்திச் சொல்லி அரசாங்கம் ஒரு மாடல் எம்ப்ளாயராக இருக்க வேண்டும். அரசாங்கம் தன் தொழிலாளர்களை நடத்துவதைப் பார்த்து

தனிப்பட்ட முதலாளிகளும் தங்களுடைய தொழிலாளர்களையும் அப்படி நடத்தும்படியாக இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

11-38 a.m. **Sri K.S. ARDHANAREESWARA GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தத் தொழில் மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக அமைச்சரவர்கள் அவருடைய வாழ்நாளிலே தொழிலாளர்களுடன் மிகுந்த தொடர்பு கொண்டவர். அதுவும் தவிர, மேட்டூரிலே மின்சாரத் தொழிலாளர் சங்கத்திற்கும் பி.டபிள்யூ. டி. தொழிலாளர் சங்கத்திற்கும், இந்தப் பதவியை ஏற்குமுன்பு வரையிலும் தலைவராக இருந்து பணியாற்றியிருக்கிறார். அங்கு இருக்கக்கூடிய குறைகள் எந்த அளவில் இருக்கிறது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கு இருக்கக் கூடிய மின்சாரத் தொழிலாளர்களுக்கு, அதுவும் மேட்டூரிலேதான் அதிகமாக மின்சாரம் உற்பத்தியாகக் கூடிய பிரதேசத்தில், வீட்டு வசதி என்பதே கிடையாது என்பது நன்கு தெரிந்திருந்தும் கூட இது வரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது கண்டு மிக மிக வருத்தமடைகிறேன். இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதில் நல்ல வீட்டு வசதி செய்துகொடுப்பார் என்று எதிர்பார்த்திருந்தார்கள். அதுவும் தவிர மேட்டூர் இண்டஸ்ட்ரீஸை எடுத்துக் கொண்டால், மேட்டூர் மில் துணி எவ்வளவு தூரம் நல்ல முறையில் செலவாகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. அவ்வளவு துணி விற்பனை ஆகியும் நல்ல இலாபம் கிடைத்தும் கூட, முன் காலத்திலே, சர்க்கார் அணையைக் கட்டும்போது டெம்பொரரியாக கூலிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தார்களே அந்த வீடுகளை ஏலத்தில் எடுத்து மில் அதிபர் தொழிலாளர்களுக்கு அந்த வீடுகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சர்க்கார் அவைகளை எந்த விதத்திலே ஒப்புவித்தார்களோ, அதற்கு எந்த விதமான ரிப்பேர்கூடச் செய்யாமல், அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு நரகத்திலே இருக்கக்கூடியது போன்ற நிலை இருக்கிறது. அமைச்சர்களிடத்திலும், அந்தத் தொழிலதிபரிடத்திலும் எடுத்துச் சொல்லியும் கூட எந்த வசதியும் செய்துகொடுக்காமல் இருக்கிறார்கள். இதற்கு உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்போது சில வீடுகள் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த வீடுகளுக்கு அதிக வாடகை கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். இந்தமாதிரி அதிக லாபம் வரும்போது தொழிலார்களுக்குக் குறைந்த வாடகைக்கு விட்டால் தான் அந்த வீட்டுக்குப் போவார்கள். முதலாளிகளைக் கேட்டால், வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம் அவர்கள்தான் போகமாட்டேனென்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். வாடகையை கொஞ்சம் குறைத்துக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். அநேக தொழிலாளர்கள் சரியான முறையில் வீடு இல்லாமல் கூறை கொட்டகையில் வசிக்கிறார்கள். அவை சரியான முறையில் மேய்ந்து கொடுக்காமல் மழை காலத்தில் பதுங்கிக் கொண்டு வசிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது.

அதே போலத்தான் அங்கே இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு குடி தண்ணீர் வசதி இல்லமால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மில்களில் இருக்கும்போது குளிப்பதற்கு அவர்களுக்கு பாத் ரூம் வசதி கிடையாது. அவர்களுக்கு பாத் ரூம் வசதி செய்து கொடுத்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும். அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளிகள் பக்கங்களிலுள்ள கிராமங்களிலிருந்து வருகிறார்கள். மில்களில் வேலை செய்து விட்டு அவர் அவர்களுடைய கிராமங்களுக்குச் செல்வதாக இருந்தால் அவர்களுக்கு பஸ் வசதி கிடையாது. அதனால் மில் முதலாளிகளை அவர்களுக்கு பஸ் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் ஏரியாவில் அவர்களுக்கு வீடுகள் கிடைப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது. பக்கங்களிலிருந்து சுமார் 6 அல்லது 7 மைல் தூரத்திலிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு பஸ் வசதி செய்து கொடுத்தால் வந்து போவதற்கு சௌகர்யமாக இருக்கும்.





இரவு நேரத்தில் மில்களில் வேலை செய்யும்போது தொழிலாளிகளுக்கு இலவசமாக டீ மில் அதிபர்களை கொடுக்கும்படியாக இந்தச் சர்க்கார் சிபாரிசு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். மற்றும் அவர்கள் கிராமங்களிலிருந்து வருவதால் நகரங்களில் என்ன நடக்கின்றன வெளி உலகங்களில் என்ன நடக்கின்றன என்பவைகள் தெரியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக அவர்கள் வெளி உலக நடவடிக்கைகளை தெரிந்து கொள்வதற்கு ரேடியோக்களை அமைத்துக்கொடுக்கும்படியான ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு இத்துடன் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri T. P. ELUMALAI** : கனம் சபாநாயகர் அவர்களே, தொழிலாளர் 11-42 a.m.
களுடைய மானியத்தை ஆதரித்து சில ஆலோசனைகளைச் சொல்ல பிரியப்படுகிறேன். இந்த சபையில் சென்ற ஆண்டுகளில் தொழிலாளர்களைப்பற்றி நிறையப் பேசுவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த ஆண்டு அந்த நிலைமை மாறி இந்த மானியக் கோரிக்கையில் மட்டும் தொழிலாளர்களுடைய நிலைமை யைப்பற்றி அதிகமாகப் பேசுவதை நான் பார்க்கிறேன். ஆகவே சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த அரசாங்கம் ஓரளவு நன்மை செய்திருக்கிறது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. உண்மையிலேயே இன்றைக்கு தொழிலாளர்களுடைய அமைச்சராக இருக்கக்கூடிய தொழிலாளர் தலைவர் என்று கூட சொல்லப் பிரியப்படுகிறேன்—அவருடைய தலைமையின் கீழ் இந்த இலாகா வந்த பிறகு தொழிலாளர்களுடைய பிரச்னைகளுக்கு இடமே இல்லை. எந்தக் கேள்விக்கும் இடமே இல்லை என்கின்ற எண்ணம் இந்த சட்டசபை உறுப்பினர்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய அபிப்பிராயமும் அது தான். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் தொழிலாளர்களுடைய இலாகா தொழிலாளர்களுடைய தலைவரின் கீழ் ஏற்பட்டிருப்பது ஒரு நல்ல அறிகுறி. அது மட்டுமல்லாமல் இன்றைக்கு தொழிலாளர்களிடத்தில் இருக்கக் கூடிய குறைகளை அவ்வப்போது அந்த அந்த இலாகாவில் இருக்கிற அதிகாரிகளிடத்தில் எடுத்துச்சொல்லுகிற ஒரு வாய்ப்பு ஒரு நல்ல நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 10 அல்லது 15 வருஷங்களாக நான் தொழில் சங்கங்களில் வேலை செய்து வருகிறேன். சில ஆண்டுக்கு முன் விஜயராகவன், ஐ.சி.எஸ். என்பவர் லேபர் கமிஷனராக இருந்தார். அவரிடம் தொழிற்சங்க தலைவர்களும் தொழிலாளர்களும் சென்றால் அவருக்கு எதிரில் தொழிற் சங்க தலைவர் மட்டும் தான் நாற்காலியில் இடம் பெறுவார். மற்றவர்கள் நின்று கொண்டு தான் பேச வேண்டும். தொழிலாளர்கள் வரிசையாக நின்றுகொண்டு ஒவ்வொருவராகத்தான் பேச வேண்டும் என்ற நிபந்தனை இருந்து வந்தது. வரிசையாக நின்று கொண்டு கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும். அப்படி இரண்டு அல்லது மூன்று மணி நேரம் நின்று கொண்டிருக்கவேண்டும். அந்த நிலைமை இன்றைக்கு மாறி விட்டது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை என்னவென்றால் தொழிலாளர்களே தொழிற் சங்கத் தலைவராக தங்களுடைய குறைகளை நேரடியாகச் சொல்லக் கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட வாய்ப்பை இந்த சர்க்காரே கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்த அரசாங்கத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நல்ல சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை உணர்ந்த தொழிலாளர்கள் தலைவராக வேலை செய்ய வேண்டும் என்று நான் தொழிலாளர் தோழர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குத்தக்சபடி தொண்டு செய்யவும் வேண்டும்.

கனம் அங்கத்தினர் பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் சொன்னார், தொழிலாளர்கள் அரசியல் கட்சியில் சேரக்கூடாது என்று சர்க்கார் சொல்லுகிறார்கள் என்று சொன்னார். ஆனால் நாம் இப்பொழுது பார்க்கிறோம் எவ்வளவோ இளைஞர்கள் அரசியல் கட்சியில் சேர்ந்து கொண்டு பங்கெடுத்துக் வேலை செய்கிறார்கள். அதனால் எவ்வளவோ காரியங்களையும் சாதித்துக் கொள்ளுகிறார்கள். தற்சமயம் அரசியல் கட்சிகளில் தொழிலாளர்கள் ரொம்ப பங்கு கொண்டு வேலை செய்கிறார்கள். அதற்கு ஒரு உதாரணம் கூட என்னால் சொல்ல முடியும். சென்ற பொதுத் தேர்தலில் எல்லா

[Sri T. P. Elumalai] [23rd July 1957

கட்சிகளும் பங்கு எடுத்துக்கொண்டன. சில தொழிலாளிகள் தி.மு.க. பக்கம் சேர்ந்துகொண்டு வேலை செய்து வந்தது சில மெம்பர்களுக்கு நன்றாகத் தெரியும். அச்சு நோட்டீஸ் போட்டு வேலைசெய்ததும் நமக்கு நன்றாகத் தெரியும். இது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்லவா ? சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும், சென்ற பொது தேர்தலில் சர்க்கார் பஸ் போக்குவரத்து இலாகாவில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் பண்டு வைத்து பணம் வசூல் செய்து தி.மு.க. கட்சிக்கு வேலைசெய்து வந்தது எல்லோருக்கும் நன்றாக தெரியும். அதனால் தொழிலாளர்கள் எந்த தலைவரின் கீழ் சேர்ந்துகொண்டும் வேலை செய்யலாம், தங்களுடைய காரியங்களை சாதித்துக் கொள்ளலாம் என்ற வசதிகளை இந்த சர்க்கார் செய்து கொடுத்திருக்கிறார்கள். இதனால் இந்த அளவுக்கு சர்க்கார் தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். எந்தத் தலைவரிடத்தில் தொழிலாளர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ அந்த தலைவர் சங்கத்தில் இருப்பதற்கு இந்த சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். என்பதை இந்த சட்டசபையின் மூலம் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

அடுத்தபடியாக வேலையில்லா திண்டாட்டத்தைப்பற்றி சொல்லப்படுகிறது. அதைப் பார்க்கும்போது ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. திருவொற்றியூர் பகுதியில் பத்து வருஷங்களுக்கு முன்னால் ஒரே ஒரு கம்பெனி விம்கோ மாட்சு பாக்டரிதான் இருந்தது. அப்பொழுது ஏறக்குறைய 1,500 தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். இந்த பத்து வருஷங்களில் அங்கு நாஷனல் கார்பன் கம்பெனி, கார்போரண்டம் கம்பெனி, அசோக் மோட்டார் கம்பெனி, கே. சி. பி. கம்பெனி, ரேடியோ எலக்ட்ரிக் கம்பெனி, ரப்பர் பாக்டரி, கைத்தொழில் மாட்சு பாக்டரி, ரூபி இஞ்சினியரிங் வொர்க்ஸ், அலுமினியம் கம்பெனி (இதில் இரண்டு கம்பெனிகள்), பாட்டரி செய்யும் கம்பெனி, ஆகவே, இதுபோன்ற பதினைந்து கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த பதினைந்து கம்பெனிகளிலும் ஏறக்குறைய ஒன்பதாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பத்து வருஷங்களில் அங்கே எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்து வருவதைப் பார்க்கிறோம். சுதந்தரம் கிடைத்த பிறகு இவ்வளவு தொழிலாளர்களுக்கும் ஒரு பகுதியில் நமது சர்க்கார் வேலை கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அந்த ஊரிலுள்ள ஒரு சிலருக்கு வேலை கிடைக்கவில்லை. அநேகம் தொழிலாளர்கள் வெளியூர்களிலிருந்து அங்கு வந்து வேலை செய்கிறார்கள். அதனால் அந்த ஊரிலேயே இருந்துகொண்டு வேலை கிடைக்காத தொழிலாளர்கள் பெரும் போராட்டத்தை நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட குறைகளும் இருக்கின்றன. நாம் எவ்வளவோ சட்டங்களை தொழிலாளர்களுடைய நலனுக்காகச் செய்தாலும் இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. இவைகளுக்கு வேண்டிய நடவடிக்கைகளை நமது தொழில் அமைச்சர் எடுத்துக்கொள்வார் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறேன். தொழில் இலாகாவை கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவசியம் எடுத்துக்கொள்வார் என்ற நம்பிக்கையுடன் இந்த மானியத்தை ஆதரிக்கிறேன். நமது சர்க்கார் தொழிலாளர்களுக்கு எல்லா வாய்ப்பையும் அளித்திருப்பது போல் வேலையில்லா திண்டாட்டத்திற்கும் ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வைத்திய இன்ஷூரன்ஸ் விஷயத்தில் இருக்கும் சிறிய குறைகளை கவனிக்குமாறு கேட்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : நான் ஏற்கெனவே சொன்னபோது கனம் அம்மையார் (ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து) சபையில் இல்லை. எல்லாரும் ஐந்து நிமிடங்கள்தான் பேச வேண்டும் என்று சொன்னேன். அதன்படிதான் எல்லோரும் பேசி வருகிறார்கள்.

11-94 a.m. ***Dr. Srimathi SATHIYAVANIMUTHU** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களும், தொழிற்சாலைகளும் நிரம்பி இருக்கின்ற பகுதியிலிருந்து வந்திருக்கிற காரணத்தால் அவர்களைப்பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பியிருந்தேன். ஆனால் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்



23rd July 1957] [Dr. Srimathi Sathiyavanimuthu]

நேரம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஆளும் கட்சியிலுள்ளவர்கள் அடிக்கடி பெரம்பூர் தொகுதியிலுள்ள மாட்சு பாக்டரியைப்பற்றியும், கோச் பாக்டரியைப்பற்றியும் வயிற்றெரிச்சல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே மாட்சு பாக்டரியில் நடப்பதைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சர்க்காரால் நடத்தப்பட்டு வரும் பாக்டரியில் எவ்விதம் கூலி கொடுக்கப்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். அப்படி கூலி கொடுப்பதைப் பார்த்தால் உண்மையிலேயே அதை வைத்துக்கொண்டு வாழத்தான் முடியுமா என்பதை கவனிக்கவேண்டும். அங்கு ஆண்களும் பெண்களும் வேலை செய்துவருகிறார்கள். அங்கு குச்சிகளை அடுக்கி வருகிறார்கள். ஒரு பிரேமில் 50 ஸ்கேல் இருக்கும். ஒரு ஸ்கேலுக்கு 50 குச்சுகள் என்று அடுக்கவேண்டும். அப்படி அடுக்கப்படுவதற்கு கூலி $\frac{1}{2}$ அணா. நாலுமணி நேரத்தில் 2,500 குச்சிகளை அடுக்கினால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி $\frac{1}{2}$ அணா. ஒரு க்ரோசுக்கு 144 குச்சுகள். அவர்களுக்கு ஒரு நாளைக்குக் கூலி 7 அணா கிடைக்க வேண்டுமானால் அவர்கள் 14 க்ரோஸ் குச்சிகளை அடுக்கவேண்டியதாக இருக்கிறது.

இன்னும் அதேபோல், 144 பெட்டிகளுக்கு மேலே லேபில் ஒட்டவேண்டுமானால் அதற்கு அரையணா கூலி கொடுக்கபபடுகிறது. 144 பெட்டிகளை (ஒரு குரோஸ்) ஒரு பெட்டியிலே அடுக்க வேண்டுமானாலும், அதற்கு ஒரு அணா கூலி கொடுக்கப்படுகிறது. இப்படி எதற்கெடுத்தாலும் அரையணா அணா கூலியாகவே நான்குமணி நேரம் வேலை செய்கின்ற, குறிப்பாக ஒரு பெரும்பாலான பெண்களுக்கு கூலி தந்தால்—நான் இந்த சர்க்காரை வினயத்தோடு கேட்கின்றேன்—ஏன் இவர்கள் கள்ளச் சாராயம் காய்ச்ச மாட்டார்கள் என்று ? திருட்டுத்தனமாக அரைமணி நேரம் செலவு செய்து காய்ச்சுகிற அந்த முறையிலே, அது ஒரு குடிசைத்தொழிலாகப் பயன்படுத்தினால், அவர்களுக்கு ஏராளமான ரூபாய் கிடைக்கிறது. ஆனால், தீக்குச்சித் தொழிலில் கால் கடுக்க, கை நோவ, கண் சோர்வடைய, வேலை செய்தாலும் கிடைப்பது ஒரு அணா, அரையணா கூலி. இதற்கு மேலே கூலி உயர்வு இல்லையென்றால், அதிலும் சர்க்காரால் நடத்தப்படுகிற மாட்ச் பாக்டரியில் என்றால், அதைக் குறித்து அனைவரும் பெருமைப்படுகிறார்களே, அவர்களுக்கு நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், அடிப்படைச் சம்பளம் அந்தத் தொழிலாளிகள் கேட்டால், உடனே அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவதாக கூறப்படுகிறது. இப்பேர்ப்பட்ட முறை அந்த மாட்ச் பாக்டரியிலே இருப்பது நீங்கவேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னும் செருப்பு தைக்கும் முறையில் கவர்ண்மெண்ட் **Footwear Depot** எனது தொகுதியில் இருக்கிறது. அங்கே ஒரு பெரிய ஜெர்மன் தேசத்து **Expert** என்று சொல்லக்கூடிய ஒரு நிபுணர் இருக்கிறார். அவருக்கு 3 ஆயிரம் சம்பளம், அழகான கார், அழகிய பங்களா. ஆனால், அவரால் அந்தத் தொழிற்சாலைக்கு ஏதாவது லாபமோ, புத்தம் புதிய முறையிலே **Shoes** செய்ய கற்றுத் தருகிறாரா என்று பார்த்தால் கற்றுத்தர முடியவில்லை. அவரால் லாபம் இல்லை என்று சர்க்காரே ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் அங்கே வேலை செய்யக்கூடியவர்களை நினைத்த நேரத்திலே வேலையைவிட்டு நீக்குவதற்கு முடிகிறது. அப்படிப் பல காரியங்களைச் செய்திருப்பதாக நான் ஆதாரபூர்வமாகக் காட்ட முடியும்.

ஒரு ஏழைப் பெண்—அவள் பெயரை நான் குறிக்க விரும்பவில்லை. அமைச்சர் விரும்பினால் நாளைக்கே கூட இந்தச் சட்ட மன்றத்திற்கெதிராக அழைத்து வர முடியும். ஐந்து ரூபாய் சம்பளத்தில் **Sweeper** வேலை செய்துகொண்டிருந்தவளை சூபரிண்டெண்டாக இருக்கும் ஒரு மலையாளித் தோழர் மலையாளப் பெண்ணை, அதே வேலைக்கு ஐந்து ரூபாய் சம்பளம் கொடுத்துவந்ததற்குப் பதிலாக 30 ரூபாய் சம்பளம் கொடுத்து, அவளை அந்த வேலையில் அமர்த்தியிருக்கின்றார். ஐந்து ரூபாய் பெற்று வேலை செய்துவந்த அந்த ஏழைப் பெண்ணை அநியாயமாக வீட்டுக்கு அனுப்பிவிட்டிருக்கிறார். அத்துடன் மாத்திரம் அல்ல. அந்த மலையாள மங்கையின் கணவருக்குக் கூட ஒரு நாளைக்கு ரூ. 1-8-0 குறைந்த சம்பளம்

[Dr. Srimathi Sathiyavanimuthu] [23rd July 1957

கொடுத்து, வேலையில்லாமலேயே சம்பளத்தைக் கொடுகின்ற அளவுக்கு, சலுகை காட்டி வைத்திருப்பதை ஆதாரபூர்வமாகக் காட்ட முடியும். இதை ஏன் சொல்கிறேன் என்று கேட்டால் காரணமில்லாது "டிஸ்மிஸ்" செய்வதற்கு அந்த அதிகாரிக்கு உத்தரவு இருக்கிறது.

அதேபோல், **Skilled Cobbler** என்ற முறையில் திறமையாக வேலை செய்துவந்த ஒருவருக்கு, திறமையான **Skilled Cobbler** என்ற முறையில் அவருக்கு உத்தியோக உயர்வு கொடுத்து, இன்றைக்கு அதிலே இருந்து மேலும் உயர்வு **Mechanical Operator** வேலை கொடுத்து 6 மாதம் ஆகிவிட்டது. அந்த உயர்ந்த பதவிக்கு மிகமிகத் திறமையாக பொருத்தமாக வேலை செய்யக்கூடியவர், வேலையில் குற்றங் குறை காணமுடியாது என்று சூபர்ண்டெண்டு அவர்களே அடிக்கடி பாராட்டி எழுதி வைத்திக்கொண்டிருந்தவர், திடீரென்று அவரை வீட்டுக்கு அனுப்புகிற அளவுக்கு, நினைத்தால் வேலையிலிருந்து வெளியே போ என்று சொல்லக்கூடிய அதிகாரக் குரல் தொனிக்கிறது. இந்த நிலைமை சர்க்காரால் நடத்தப்படும் செருப்புத் தொழிலகத்திலே இருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிகள் சர்க்காரால் நடத்தப்படும் தொழிலகத்திலே காணப்படுகிறதென்றால், சர்க்கார், தொழிலாளர் மக்களுக்காகவும் தொழில் அபிவிருத்திக்காகவும் செய்கிறது என்று சொல்வார்களானால், இது உண்மையிலேயே காகிதக் கப்பல் என்று சொல்வேன். தொழிலாளர் மக்கள் இந்தக் காகிதக் கப்பலை நம்பி ஏறினால், உள்ளபடியே கரை காணமுடியாத கடலில் மூழ்கிச் சாகவேண்டியதுதான். இப்படிபட்ட ஆட்சியிலே நாம் வாழ முடியாது என்று சட்ட மன்றத் தலைவர் அவர்களிடம் நான் சொல்ல விரும்புகிறேன்.

தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் ஆலைகளிலே, அதிலே எல்லாச் சமூகத்தவர்களும் ஒன்றாகச் சேரவேண்டுமென்றும், தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்றும் பேசுகின்ற நேரத்திலே கூட பி. அண்டு ஸி. ஆலையிலே 1947-ம் ஆண்டிலிருந்து இதுவரை இன்னும் ஆதித்திராவிடர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ளவில்லை என்பதை ஆதாரத்தோடு காட்ட முடியும். 1947-ம் ஆண்டிலே பஞ்சாபிகளை நீக்கவேண்டுமென்று வேலை நிறுத்தம் ஏற்பட்ட கலவரத்தினால், ஆதித்திராவிட மக்கள்தான் அதற்குக் காரணம் என்று அனாவசியமாக குற்றத்தைச் சாட்டி, அந்த நாளிலிருந்து இதுவரை இன்னும் ஆதித்திராவிடர்களை அந்த ஆலையில் வேலைக்கு வைத்துக்கொள்ளாமல் இருப்பதை நான் ஆதார பூர்வமாகக் காட்ட முடியும். ரெக்ரூடிங் ஆபீசரிடமுள்ள ரிகார்டிலிருந்து பார்க்க முடியும்.

அதுபோல், பி. அண்டு ஸி. மில்லிலும், அதைச் சேர்ந்த நான்கு லைன்களிலும் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடு கொடுக்காமல் அங்கே அவர்களை ஒதுக்கி வைக்கிறார்கள். கேட்டால், எங்களுக்கு வேறு, அவர்களுக்கு வேறு என்று கூறுகிறார்கள். இன்னும் பி. அண்டு ஸி. சார்பாக கட்டப்படும் வீட்டுக்கு 1-8-0 வாடகை என்றும், சர்க்கார் இப்பொழுது ஆயிரம் ஆயிரம் ரூபாயாகச் செலவு செய்து செம்பியம், எருக்கஞ்சேரி பகுதிகளில் கட்டியிருக்கும் வீடுகளுக்கு $12\frac{1}{2}$ ரூபாய் வீட்டு வாடகை கொடுக்கச் சொல்கிறார்கள். அடிப்படைச் சம்பளம் 30 ரூபாயாக இருக்கும்போது எப்படி $12\frac{1}{2}$ ரூபாய் வீட்டு வாடகை கொடுக்க முடியும்? எனவே, ஏழைத் தொழிலாளர்களுக்கு $12\frac{1}{2}$ ரூபாய் வாடகைக்கு பெரிய வீடு கட்டியதன் காரணம் தெரியவில்லை. அந்த வாடகையை அதிகாரிகள் கொடுக்க முடியுமே தவிர, தொழிலாளர் அல்லாத வேறு பலர் வந்து அங்கு குடியேற முடியுமே தவிர, தொழிலாளர்கள் அங்கே இடம்பெற முடிவது கிடையாது. இப்பேர்ப்பட்ட காரியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, உண்மையிலேயே தொழிலாளர் மக்களுக்கு ஏதும் செய்ய முன் வராதிருப்பது கண்டு நான் வருந்துகிறேன். செய்கின்ற முறை சரியான முறை அல்ல என்று கூறுகின்றேன்.

அதுபோல், தோல் பதனிடும் தொழிலானது தமிழ் நாட்டிலே மிக வளர்ச்சியான தொழில் என்று நமது அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். இப்பேர்ப்பட்ட தொழிலில் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள்



23rd July 1957] [Dr. Srimathi Sathiyavanimuthu]

ஈடுபட்டிருக்கிற காரணத்தாலும், இந்தத் தொழில் இன்னும் தனிப்பட்ட முதலாளிகளின் கையிலே இருப்பதாலும், யாதொரு சலுகையும் கொடுக்கப்படவில்லை என்று வருத்தத்தோடு நான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

(The hon. Member had not concluded her speech when the speaker sounded the gong and called on the Hon. Minister to reply.)

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திலே பங்கெடுத்துக்கொண்டு ஓரளவு என்னிடத்தில் நம்பிக்கை வைத்து, என்னைப்பற்றி சில நல்ல வார்த்தைகள் கூறிய நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, என்னுடைய கடமைப் பொறுப்பு அவர்கள் பேசியதிலிருந்து அதிகரித்து விட்டது என்பதை நான் மிகத் தாழ்மையாக தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்காருடைய தொழில் கொள்கை என்ன என்பதை ஓரிரண்டு வார்த்தைகளில் எடுத்துச் சொல்ல இந்தச் சந்தர்ப்பம் உசிதமானது. நேர்மையான தொழில் உறவு, நியாயமான கூலி விகிதம், திடமாக சட்டங்களை அமுல் நடத்துவது, கூடுமான அளவு தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு அளிப்பது, தொழில் அமைதியைக் காப்பது, ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெற நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவது என்ற நோக்கங்களின் அடிப்படையிலே இந்தத் தொழிலாளர் இலாகா வேலை செய்ய முற்பட்டுள்ளது. சரியான உறவு இல்லாத காரணத்தினால் பெருவாரியான தொழில் தகராறுகள் ஏற்படுகின்றன என்பதை எல்லா கனம் அங்கத்தினர்களும் எடுத்துக் காட்டிவிட்டார்கள். சரியான உறவு ஏற்பட வேண்டுமென்று சொன்னால், தொழில் அதிபர்களிடத்திலும், தொழிலாளர்களிடத்திலும் ஓரளவு சகிப்புத் தன்மையும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் இருந்தால்தான் அந்த நல்ல உறவு ஏற்படும். மனித இயல்பில் அதைக் காணமுடியாத காரணத்தால்தான் சட்டங்கள் தேவைப்படுகின்றன. அதற்கான அதிகாரிகளையும் நாம் நியமித்திருக்கிறோம். எந்த அளவுக்கு சட்டங்கள் மூலமாகவும் அதிகாரிகளின் மூலமாகவும் ஒரு நேர்மையான தொடர்பு ஏற்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு இந்த இலாகா முயற்சி செய்து வருகின்றது என்பதை மிகத் தாழ்மையாக நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். முக்கியமாக, தொழில் தகராறுகள் ஏற்படுகிற காலத்திலே, என்னுடைய தொழிலாளர் சகாக்களுக்கு—சட்ட சபையில் இருக்கின்றவர்களுக்கு மாத்திரம் அல்ல; வெளியில் இருக்கும் நண்பர்களுக்கும்—பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் தகராறுகளை தீர்த்துக் கொள்ளுவதற்கு முறைகள் இருக்கின்றன. அந்த முறைகளின்படி முயற்சி எடுத்துக்கொண்டால் கூடுமான அளவு தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு சட்டத்தில் இருக்கின்றது என்பதை நான் வலியுறுத்துகிறேன். தொழில் தகராறு ஏற்பட்ட உடனேயே, திடீரென்று எந்தவிதமான ஒரு சம்பவமும் உண்டாகாமல் நேரடியான பேச்சு வார்த்தை செய்ய வேண்டியது தொழிற் சங்கத்தின் தர்மமாகும். அவ்வாறு செய்வதற்கு இன்றைக்குத் தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள், அவ்வாறு செய்வதற்கு தொழிற் சங்கங்களும் உண்மையாகவே உறுதியுடன் இருக்கின்றன என்பதில் எனக்குச் சற்றும் சந்தேகம் இல்லை. ஆனால், நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இரண்டு சாரார் வேண்டும். தொழிலாளர்கள் மாத்திரம் அதற்குத் தயாராக இருந்து, அந்த அளவுக்குத் தொழில் அதிபர்கள் தயாராக இல்லாவிட்டால் எந்த முறையும் பயன்படாது. தொழிலதிபர்களில் சிலர், சங்கங்கள் அங்கீகாரம் செய்யபடவில்லை என்ற காரணத்தினால் நேரடியான பேச்சுவார்த்தைகளை நடத்த மறுப்பதாகவும் சர்க்காருக்குப் புகார்கள் வந்துள்ளன. இருபதாவது நூற்றாண்டில், உலகத்திலே தொழிலாளர்கள் வளர்ச்சியடைந்த விவரங்களையெல்லாம் நாம் படித்தறிந்துள்ள இந்தக் காலத்தில், சங்கங்களை அங்கீகாரம் செய்துகொள்ளவில்லை என்ற காரணத்திற்காக தொழில் அதிபர்கள் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தாமல் இருந்துவிடுவார்களேயானால், அப்படிச் செய்தவன் மூலம் அவர்கள் தங்களுக்குத்தான் நஷ்டத்தை விளைவித்துக்கொள்கிறார்கள் என்பதை இங்கே நான்

[Sri R. Venkataraman] [23rd July 1957

பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நேரடிப் பேச்சுவார்த்தைகள் பயனளிக்காவிட்டால், அதற்குப் பிறகு, தகராறைத் தீர்த்துக் கொள்வதற்கு சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சமரசக் கோர்ட்டுகளுக்கோ அல்லது சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் சமரச அதிகாரிகளிடமோ செல்லலாம். நேரடிப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு முதலாளிகள் மறுத்தாலோ, அல்லது நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலம் எந்தவிதமான நன்மையும் ஏற்படாவிட்டாலோ, அதற்கடுத்தபடியாக தொழிற் சங்கவாதிகள் சமரச அதிகாரிகளிடம் செல்கிறார்கள். தகராறைத் தீர்த்துக்கொள்வதற்கு இதுதான் இரண்டாவது வழி.

சமரஸ அதிகாரிகளிடத்தில் பல குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்த அதிகாரிகள் தொழிலதிபர்களுக்கு பாதகமான—ஆனால் நியாயமான—விஷயங்களைச் செய்வதற்குத் தயங்குவதாகவும், அவர்களுக்குப் போதிய வசதிகளை சர்க்காரால் அளிக்கப்படாத காரணத்தினால் தொழிலதிபர்களுடைய வாகனங்களை உபயோகிக்கும் நிலைமையும், அவர்களிடம் இதர சலுகைகளைப் பெறும் நிலையையும் ஏற்பட்டிருப்பதாக கனம் அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். தொழில் சமரச அதிகாரிகள் யாரிடத்திலும் எந்தவிதமான சலுகையும் பெறாமல் இருக்கவேண்டும் என்பதே சர்க்காரின் அடிப்படை கொள்கையாக இருக்கிறது. எந்த எந்த இடங்களில் அவர்களுக்கு வண்டி, வாகன வசதிகள் அவசியமோ அந்த இடங்களில் அவர்கள் அந்த வசதிகளை அடைவதற்காக, அவர்களுக்கு "கன்வேயன்ஸ் அலவென்ஸ்" கொடுப்பதற்கு சர்க்கார் இப்போது ஏற்பாடு செய்திருக்கிறது. இன்னும், அவர்கள் எந்தவிதமான முறையிலும் யாருக்கும் பட்சபாதமாக நடந்துகொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, அவர்களுடைய சம்பள விகிதங்களும் மாற்றியமைக்கப்படவேண்டும் என்ற யோசனையும் இருந்து வருகிறது.

பட்சபாதமற்ற, நியாயமான, ஒரு சிபாரிசை சமரச அதிகாரிகள் செய்திருக்கும்போது, அந்தச் சிபாரிசை தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், சர்க்கார் அதற்கு "அட்ஜுடிகேஷன்" கொடுப்பதில்லை. நியாயமான ஒரு முடிவை லேபர் ஆபீசர்கள் சொல்லும்போது, அதை தொழிலதிபர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி "அட்ஜுடிகேஷன்"-க்கு விடத்தான் செய்கிறோம்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் "ஹிந்து" போன்றவற்றில் பத்திரிகையாளர்களிடத்தில் சர்க்காருக்கு என் பயம்? அவர்கள் விஷயத்தில் சர்க்கார் என் தயங்குகிறார்கள்?" என்றெல்லாம் கேட்டார்கள். நான் திட்டவட்டமாக இந்தச் சட்டசபையில் சொல்கிறேன் "சர்க்காருக்கு யாரிடமும் பயம் கிடையாது. யாராக இருந்தாலும் சட்டப்படி நடத்துவதற்கு சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறார்கள்; நடத்தியே தீருவார்கள்." மேலும், இந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், சமரஸ அதிகாரிகள் சொன்னதை தொழிலதிபர்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், அந்தத் தகராறு கூட கோர்ட்டுக்கு விடப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் தகராறுகள் கோர்ட்டுகளுக்கு விடப்பட்டுத் தீர்க்கப்படுவதில் பலவிதமான சிக்கல்களும் கஷ்டங்களும் இருக்கின்றன என்பதை சர்க்கார் நன்றாக உணரும். கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் "தொழில் கோர்ட்டுகளில் நீதிபதிகளாக இருப்பவர்கள் சட்டம் பயின்றவர்களாக இருப்பதால், அவர்கள் தொழிலாளர்களிடத்தில் அனுதாபமாக இல்லை" என்று சொன்னார்கள். இந்த நிலைமைக்கு நாம் எல்லோரும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தொழிற்சங்கவாதிகள்தான் பொறுப்பானவர்கள் என்பதை அவர்களுக்கு நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன் "1953-ம் ஆண்டில் நைநீடாலில் இந்திய லேபர் காங்கிரஸ் நடந்தபோது, அப்பெல்லேட் கோர்ட்டுகள் வேண்டாம் என்று தொழிலாளர் தலைவர்கள் வாதித்தார்கள். அப்போது, ஜட்ஜுகளை நியமித்தால் அதற்கு முதலாளிகளும் ஒத்துக்கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் பலாபலனை அறிந்தோ அறியாமலோ அந்தத் தீர்மானத்திற்கு ஒத்துக் கொண்டு, எல்லாக் கட்சிக்காரர்களும் "ஜட்ஜுகளை நியமித்து அப்பல்லேட்



23rd July 1957] [Sri R. Venkataraman]

கோர்ட்டுகளை எடுத்துவிடலாம்" என்று சொன்னார்கள் என்பதை ஸ்ரீ சின்ன
துரை அவர்களுக்கு நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். கோர்ட்டார்
அனுகூலமாக இருக்கிறார்களா அனுகூலமாக இல்லையா என்பது பிரச்னை
அல்ல. கோர்ட் நீதிபதிகள் நிச்சயமாக நியாயமாக இருக்கிறார்கள். அதில்
சந்தேகமே இல்லை. கோர்ட்டுகளில் தீர்ப்புகள் கூறுவதில் காலதாமதம்
ஆகிறது என்பது உண்மைதான். ஆனால் காலதாமதத்தின் காரணமாக,
பாரபட்சமாகவோ தவறான முறையிலோ நீதிபதிகள் தீர்ப்புகள் கொடுக்கி
றார்கள் என்று சொல்ல முடியாது.

கோர்ட்டுகள் போதாத காரணத்தினால் தீர்ப்புகள் கொடுப்பதில் கால
தாமதம் ஏற்படுகிறது. ஆகவே மூன்றாவது கோர்ட் அமைக்கப்படவேண்டும்
என்று தீர்மானிக்கப்பட்டு, அதை அமைப்பதற்கு ஏற்பாடும் செய்யப்பட்டு
விட்டது. அந்தக் கோர்ட்டை மதுரையில் அமைப்பதற்கான ஏற்பாடுகள்
முடிவடைந்துவிட்டன. எனவே, பல கோர்ட்டுகளை அமைத்து, தொழில்
தகராறுகள் அதிக காலம் தீர்க்கப்படாமல் தேங்கி நிற்பதைத் தடுத்து,
கூடியவரை வெகு துரிதமாகத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கான
முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த சந்தர்ப்பத்தில், "தங்கள் கடைசி ஆயுதமான வேலை நிறுத்
தத்தை தொழிலாளர்கள் முதல் ஆயுதமாக உபயோகிப்பதால், சர்க்கார்
இயற்றியிருக்கும் சட்டங்களின் மூலம் பெறக்கூடிய அனுகூலங்களை அவர்
கள் பெறமுடியாது போய்விடுகிறது" என்பதை மாத்திரம் நான் பணிவுடன்
தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு வழிகள் வகுக்கப்பட்டிருக்கும்
போது, தொழிலாளர்கள் படிப்படியாக அந்த அந்த வழிகளைப் பிரயோகித்
தால், அவர்கள் கஷ்டமில்லாத முறையில் தாங்கள் பெறக்கூடிய சலுகை
களைப் பெறமுடியும். அதற்கு மாறாக அவர்கள் திடீரென்று வேலை
நிறுத்தங்கள் செய்வதால் தான், அதன் விளைவாக தங்கள் கூலியை
இழப்பதோடல்லாமல் பல கஷ்டங்களுக்கும் ஆளாகிறார்கள். ஆகவே,
தொழிற் சங்கத் தலைவர்கள் இந்த விஷயத்தில் ஒத்துழைப்பார்கள் என்று
நம்புகிறேன். அதே சமயத்தில், தொழில் அதிபர்களும் தாங்கள் செய்ய
வேண்டியதை நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். வேலை நிறுத்தம்
என்ற ஆயுதத்தை தொழிலாளர்கள் கடைசியில் தான் உபயோகிக்கவேண்
டும் என்பதைப் போல, தொழிலாளரை வேலையிலிருந்து நீக்குவது என்ற
ஆயுதத்தை தொழிலதிபர்கள் கடைசியில்தான் உபயோகிக்கவேண்டும்.
அவர்களும், எடுத்ததற்கெல்லாம் தொழிலாளரை வேலையிலிருந்து நீக்கு
வது என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பார்களேயானால், சர்க்காரால்
தொழில் அமைதியைக் காக்க முடியாது என்பதை நான் திட்டவட்டமாகச்
சொல்ல விரும்புகிறேன். தொழில் அமைதியைக் காப்பதில் தொழிலாளி
களுக்குத்தான் பொறுப்பு இருக்கிறது என்று சொல்ல முடியாது.
முதலாளிகள், தொழிலாளிகள் ஆகிய இரு சாராருக்குமே அந்தப் பொறுப்பு
இருக்கிறது. தொழில் அமைதியை காக்கும் கடமையை சர்க்கார் நியாய
மாகச் செய்யவேண்டுமென்றால், தொழிலாளர்கள் முதலாளிகள் ஆகிய
இருசாராரும் ஒத்துழைக்கவேண்டும் என்று பணிவுடன் சொல்லிக்கொள்
கிறேன். இரு தரப்பாரிடத்திலும் ஓரளவு சகிப்புத் தன்மையும், ஓரளவு
தாராள மனப்பான்மையும், ஓரளவு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும்
இல்லாவிட்டால் சுமுகமான தொழில் உறவு காண முடியாது. தொழி
லாளரை திடீரென்று வேலையிலிருந்து நீக்குவது, திடீரென்று கதவடைப்பது
செய்வது முதலிய காரியங்கள் எல்லாம் இரண்டாவது ஐந்தாண்டுத்
திட்டத்தின் குறிக்கோள்களில் ஒன்றான நியாயமான தொழிலாளர்
உறவு என்பதற்கு மாறான செயல்கள் ஆகும். 15 நாட்கள் நோட்டீஸ்
கொடுக்காமல் எந்தத் தொழிலாளரும் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது
என்று சர்க்கார் வற்புறுத்துவதைப் போலவே "பப்ளிக் யுடிலிடி"
ஸெர்வீசாக இல்லாவிட்டாலும், சட்டபூர்வமாக தொழிலாளர்கள் நோட்
டீஸ் கொடுக்காமல் வேலை நிறுத்தம் செய்யலாம் என்ற நிலைமை இருந்
தாலும், சர்க்கார் அதைத் தடுப்பதற்காக 15 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கா
மல் அவர்கள் எந்த விதமான வேலை நிறுத்தமும் செய்யக்கூடாது என்று
வற்புறுத்துவதைப்போலவே எந்த விதமான கதவடைப்பையும், நோட்

டீஸ் கொடுக்காமலோ சமரச அதிகாரிகளுடன் கலந்து பேசாமலோ, முதலாளிகள் செய்யக்கூடாது என்று சர்க்கார் வற்புறுத்தும் என்று தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில், சென்ற வருஷத்தில் எவ்வளவு தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தைப் பார்க்கும் போது, இந்த இலாகா ஓரளவு நன்றாக வேலை செய்திருக்கிறது என்பது தெரிகிறது என்று கூற விரும்புகிறேன். 1956-ம் வருஷத்தில் மொத்தம் **1,142** தொழிற் தகராறுகள் ஏற்பட்டன. அவைகளில் கன்சிலியேஸன் மூலம் தீர்க்கப்பட்டவை மொத்தம் 537. இதைத் தவிர 9,145 சாதாரண சில்லரை பிரச்னைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷம் மொத்தம் 227 வேலை நிறுத்தங்கள் நடந்தன. அவற்றில் 115 சமரசமாகவே தீர்க்கப்பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, தொழில் கோர்ட்டுகளின் தீர்ப்புகளை அமல் நடத்தும் விஷயத்திலும் கூட ராஜ்ஜியத்தில் மனக்கசப்பு இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவைகளை அமல் நடத்துவதில் சர்க்கார் தவறு செய்கிறது என்று யாராவது சொல்வார்களானால் அது சரியல்ல என்பதை மாத்திரம் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தத் தொழில் தீர்ப்புகளை அமுல் நடத்த வேண்டிய பொறுப்பு முதலாளிகளுடையது; தொழிலாளர்களுடையது. அவ்வாறு அவர்கள் செய்யத் தவறினால் முதல் தவறு அவர்களுடையது தான் என்று சொல்ல வேண்டும். அவ்வாறு தவறிவிட்ட பிறகு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் சட்டபூர்வமாக அவர்கள் செய்யவேண்டிய கடமையினின்றும் நழுவி விட்டார்கள் என்று சொல்லவேண்டும்.

அவ்வாறு எடுத்துக்கொண்டு பார்க்கிறபோது எந்த எந்த இடங்களில் கோர்டுகள் தீர்ப்புக் கொடுத்து, அதற்கு மேல் தொழிலாளர்களோ, முதலாளிகளோ அப்பீல் செய்து, அந்தத் தீர்ப்புகளை நிறுத்தி வைக்கவேண்டுமென்பதாக ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்களோ அங்கெல்லாம் சர்க்கார் தலையிட முடியாத நிலைமையில் இருக்கிறது.

உதாரணமாக இரண்டு விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். தோட்டத் தொழிலாளர்கள் (பிளான்டேஷன் லேபரர்ஸ்) விஷயமாக கேள்வி எழுந்தபோது கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் கூடக் கேட்டார்கள், "அந்தத் தீர்ப்பை ஏன் அமுல் நடத்தவில்லை" என்பதாக. பலகாலமாக எந்தவிதமான சலுகையும் பெறாது இருந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு 3, 3½ வருடங்கள் கோர்ட்டில் கேஸ் நடந்து, அவர்களும் தங்களுடைய தீர்ப்பில் கூலி ஓரளவு கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் தோட்ட முதலாளிகள் அதை மறுத்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய, இதுவிஷயமாக சுப்ரீம் கோர்ட்டில் ஒரு முடிவு ஏற்பட மறுபடியும் ஒரு மூன்று நான்கு வருஷம் எவ்விதமான சாதாரண வசதியையும் அவர்கள் பெற முடியாது போய்விடப்போகிறதே என்று கருதித்தான் அவர்களுக்கு உடனடியாக ஏதாவது நிவாரணம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக சமரசம் செய்து வைக்கப்பட்டது. அந்த சமரசத்தில் எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டொரு தொழிற்சங்கங்கள் அதில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்றால் "பிற்காலத்தில் சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பு தொழிலாளர்களுக்குச் சாதகமாகக் கிடைத்துவிட்டால்" என்கிற நினைப்பினால்தான் அவர்கள் சேரவில்லை என்று நினைக்கிறேன்.

அதேபோல் உழைக்கும் பத்திரிகையாளர்களுடைய (ஒர்க்கிங் ஜெர்னலிஸ்டு) நிலைமையை உயர்த்தவேண்டும் என்பதற்காக அளிக்கப்பட்ட தீர்ப்பை அமுல் நடத்த முடியாத நிலைமையில் இன்றைக்கு பத்திரிகை முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டில் தடை உத்திரவு வாங்கியிருக்கிறார்கள். ஆகவே அதையும் சர்க்கார் அமுல் நடத்த முடியவில்லை.





இந்தச் சந்தர்ப்பத்தில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் மேட்டூரில் நடந்த சம்பவம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேட்டூரில் ஒரு தொழிலாளி வேலையில் இருந்து நீக்கப்பட்டான். நீக்கப்பட்ட தொழிலாளி முதலில் டிரிப்யூனலுக்கும், அதன் பிறகு சுப்ரீம் கோர்டு வரையிலும் சென்று மீண்டும் முதலாளி அவனை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்ப்பைப் பெற்றான். ஆனால் மேட்டூர் கம்பெனியார் சட்டத்தை அமுல் செய்வதற்காக என்று ஜூலை மாதம் 13-ந் தேதி காலையில் அந்தத் தொழிலாளியை வேலையில் வைத்துவிட்டு, மாலையில் அன்றைக்கே மறுபடியும் வேலையில் இருந்து நீக்கியிருக்கிறார்கள். இப்படிச் சட்ட வரம்புக்குள் தொழிலதிபர்கள் நடந்து கொண்டதாக—நியாயமாக இருந்தாலும் சர்க்கார் தன்னுடைய அதிருப்தியை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சர்க்கார் தொழிலாளர்களுடைய முன்னேற்றத்தில் நியாயமான கூலியை அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகள் எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாக தொழில்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று ஆர்கனைஸ்டு இண்டஸ்டிரி. மற்றொன்று அன் ஆர்கனைஸ்டு இண்டஸ்டிரி. அதாவது தொழிற்சங்கங்களை அமைத்துக்கொண்டு உழைத்து, நல்ல முறையில் தொழிலும் முன்னேற்றம் அடைந்திருக்கக்கூடிய தொழில்களில் குறைந்தபட்ச கூலியை விட சற்று அதிகமாக வைக்கும் நிலைமை இருக்கிறது. எந்தவிதமான தொழிற்சங்கத்தின் உதவியும் இல்லாமல், நல்ல முறையில் தொழிலும் நடைபெறாமல் இருக்கிற தொழில்களில் எல்லாம் ஓரளவு குறைந்தபட்ச கூலியாவது அமுல் நடத்தும்படியாக சர்க்கார் யோசனை செய்து வருகிறது. அதாவது எல்லாத் தொழில்களுக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச கூலி இருக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் தீர்மானமாக இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது பீடித் தொழிலாளர்கள் தாம் இன்று ஒருவிதமான வசதியும் இன்றி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பீடித் தொழிலாளர் சம்பந்தமாக நண்பர் ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது பெரும்பாலுமாக உள்ள சமூகத்தைச் சேராத வேறு ஒரு சமூகத்தார் இத் தொழிலில் அதிகமாக ஈடுபட்டிருக்கிற காரணத்தால்தான் காங்கிரஸ் சர்க்கார் அவர்களுடைய விஷயத்தையே கவனிப்பது இல்லையோ என்றார். அவருடைய வாதத்தைக் கொஞ்சம் அப்படியே நீட்டினால் கோர்ட்டின் தீர்ப்புப்படி நம்முடைய சட்டத்தின் ஜூரிஸ்டிக்ஷனுக்குள் அவர்கள் வரவில்லை என்று ஏற்பட்டதற்குக் காரணமே, கோர்ட்டாரும் இந்த விதமான தவறான அடிப்படையில்தான் தீர்ப்புக் கொடுத்தார்களோ என்று சொல்லவேண்டி இருக்கும். இப்படி எதற்கும் தவறான காரணங்களைக் கற்பிக்காமல் அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று அரசாங்கம் செய்த ஏற்பாடுகள் எல்லாம் சட்ட நுணுக்கங்கள் காரணமாக தடைபட்டுவிட்டது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். இதை நீக்குவதற்கும் இப்போது முயற்சிகள் நடந்துகொண்டுவருகின்றன.

சமீபத்தில் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்வதற்காக ஒரு கமிட்டியையும் சர்க்கார் நியமித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஆர்கனைஸ்டு இண்டஸ்டிரியைப் பொறுத்த அளவில் கூலி நிர்ணயம், வாழ்க்கை வசதிகளைப் அதிகப்படுத்திக் கொள்ளும் டிமாண்டு ஆக இவற்றின் பேரில் பெருத்த அளவுக்கு முதலாளிக்கும், தொழிலாளர்களுக்கும் தகராறு ஏற்பட்டால், அது நியாயம் என்று சர்க்கார் நினைக்கிறபோது அட்ஜுடிகேஷனுக்கு விடுகிறது; அவ்வாறு அட்ஜுடிகேஷனுக்கு விடுவதன் மூலமாக ஓரளவு கூலி உயர்வு எல்லாத் துறைகளிலும், தொழிலாளர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக திட்டமாக இருக்கிற சட்டங்கள் அமுல் நடத்துவது என்பதைப்பற்றியும் சொல்கிறேன். இப்போது இருக்கிற பாக்டரி சட்டத்தை எடுத்துக்கொள்வார்களேயானால் அதில் பெரிய அளவுக்குக் குறை இல்லாமல் சரியாக நடைபெற்று வருகிறதென்பது தான் கனம் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயமாகவும், தொழிற்சங்கத் தலைவர்களுடைய அபிப்பிராயமாகவும் இருக்கும். கடந்த வருஷத்தில் 14,400 இன்ஸ்பெக்ஷன்கள் செய்து 11 பாக்டரிகளில் போய் பார்த்து இருக்கிறார்கள். 360 பிராசிகியூஷன் செய்திருக்கிறார்கள். நல்ல அளவுக்குத் தொழிற் சங்கங்கள் வளர்ந்து இருப்பதன் காரணமாக, தொழிலாளர்களும் தாங்களே தங்கள் உரிமைகளை உணர்ந்து இருப்பதன் காரணமாக இந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்துவது சாத்தியமாகிறது.

ஆனால் அடுத்தபடியாக ஷாப் சட்டத்தை எடுத்துக்கொண்டோமேயானால் அது சரியாக நடைபெறவில்லை என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ளவேண்டியதுதான். சர்க்கார் ஓரளவு இன்னும் அதிகமாக உத்தியோகஸ்தர்களைப் போட்டு இன்னும் கண்காணிப்பாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், நியாயமாக தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளைக் காப்பாற்றிக் கொடுத்து அடிப்படையில் அவர்களுக்கு உள்ள குறைகளை நிவர்த்திக்க வேண்டுமானால் ஆங்காங்கு திறமையான தொழிற்சங்கங்கள் இருந்து எந்த எந்த வகையில் சட்டத்தை மீறுகிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னால்தான் அந்தச் சட்டத்தைத் திறமையான முறையில், சரியான முறையில் அமுல் நடத்த முடியும். சட்டம் என்றால் ஒரு மிருகம் இல்லை. அது தானாகவே நடந்து சென்று ஆங்காங்கே உள்ள தவறுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்திசெய்யும் சக்தி உடையது அல்ல. எங்கங்கே சட்டத்தை மீறுகிறார்கள் என்பதை அங்கங்கே உள்ள தொழிற்சங்கங்கள் திறமையாகக் கண்காணித்து எடுத்துச் சொன்னால் சர்க்கார் தீவிரமான நடவடிக்கையை எடுத்துக் கொள்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு மேல் ஷாப் சட்டத்திலும் கூட அவர்கள் திடீரென்று வேலையில் இருந்து நீக்கின விஷயமாக 320 அப்பீல்கள் கடந்த வருஷத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. இதே சந்தர்ப்பத்தில் ஷாப் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற ஒரு யோசனையும் கூறப்பட்டது. சட்டங்களை மாற்றுவதன் மூலமாக முன்னேற்றம் இருக்குமென்று நினைத்தால் மாறுதல் எல்லாம் முன்னேற்றம் என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. முன்னேற்றத்திற்காக மாறுதல் என்றால் பயன் அளிக்குமே தவிர மாறுதல் முன்னேற்றமாகாது. நன்மை பயக்காது.

இப்போது இருக்கிற ஷாப் சட்டம் மிகவும் உன்னதமாக இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்தியாவில் இதர பகுதிகளில் இருக்கும் ஷாப் சட்டங்களை எல்லாம் விட உயர்வானது. இன்னும் மத்திய சர்க்கார் கொண்டுவர உத்தேசித்திருக்கும் ஷாப் சட்டத்தோடு இதை ஒப்பிட்டுப் பார்த்தால் பல முறையில் மத்திய சர்க்காருடைய சட்டத்தைவிட நம்முடையது உயர்வானதாக இருக்கிறது. நல்ல முறையில் அமைந்திருக்கிறது. வேண்டுமானால் அதற்கு இரண்டொரு உதாரணங்களை எடுத்துச் சொல்ல முடியும். ஒன்று ஓவர் டைம்முக்கு நம்முடைய சட்டத்தில் இரண்டு மடங்கு கூலி கொடுக்கப்படுகிறது. மத்திய சட்டத்தின் கீழ் $1\frac{1}{2}$ மடங்குதான் கிடைக்கும். இரண்டாவது லீவு வசதிகள் நம்முடைய சட்டத்தில் அதிகம். மூன்றாவது சம்பளம் ஷாப் சட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்படவில்லை. நம்முடைய சட்டத்தில் செக்ஷன் 41-ன் கீழ் நேரடியாக அப்பீல் செய்து கொள்வதற்கு வசதி இருக்கிறது. இப்படிப்பட்ட ஷரத்து மத்திய சட்டத்தில் கிடையாது. ஆகவே இப்படிப்பட்ட உயர்வான உன்னதமான சட்டத்தை மாற்றவேண்டுமா, திருத்தவேண்டுமா என்பதைப் பற்றி தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லோரும் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்பதாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தோட்டத் தொழிலாளர்களைப் பொருத்துக் கொண்டுவந்த சட்டம் 1951-ல் அமுலுக்கு வந்தது. அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு அவர்களுடைய வாழ்க்கை வசதிகளைக் குறித்த ஷரத்துக்களை எல்லாம் எவ்வளவு





துரிதமாக நாம் அமுலுக்குக் கொண்டுவர முடியுமோ அவ்வளவு செய்திருக்கிறோம். இதில் ஒரு பெரிய பிரச்னை என்று ஸ்ரீ மாதா கௌடர் சொன்னார். அதுதான் மேஸ்திரிகளைப்பற்றிய பிரச்னை. உலக சர்வ தேச சம்மேளன கூட்டத்தில், "பிளான்டேஷன் தொழிலாளர்களை"ப்பற்றி விவாதித்தபோது கங்காணி முறையை ஒழித்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. கங்காணி முறை என்பது உலகத்தில் எல்லா நாடுகளிலும், எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி இல்லை. சில இடங்களில் கங்காணி முறையானது—ஆட்களைப் பிடித்துக்கொடுப்பது அவர்கள் தொழிலாகவே இருக்கிறது. அவ்வாறு ஆட்களை பிடித்துக் கொடுப்பதையே தொழிலாக இருக்கின்ற கங்காணி முறையை ஒழித்துவிடவேண்டும் என்பதில் சந்தேகம் கிடையாது. அதை நாம் எல்லோரும் ஆதரிக்கிறோம். ஆனால் தொழிலாளியோடு தொழிலாளியாகக் கூட இருந்து வேலை செய்து வரும் மேஸ்திரியை ஒழிப்பது என்பது அவ்வளவு சுலபம் அல்ல. ஆகவே இது விஷயமாக நான் செப்டெம்பர் மாதத்தில் ஒரு மகாநாடு கூட்ட முடிவு செய்திருக்கிறேன். இந்த மகாநாட்டுக்கு "உபாசி" பிரதிநிதிகளும் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளும் அழைக்கப்படுவார்கள். இந்த மகாநாட்டில் இந்தப் பிரச்னையை முடிவு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக பொதுச் சட்டங்கள்; ஹோட்டல் தொழிலாளர்களுக்குத் தனிச் சட்டம் தயாராகி விட்டது. அடுத்த சட்ட சபை கூட்டத்தில் வந்துவிடும்.

பீடித் தொழிலாளர்களுக்கான ஒரு சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் சிக்கலான பிரச்னைகள் இருக்கின்றன. அதற்கு உதாரணமாக ஒன்றை விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பீடித்தொழிலில் உள்ள 'பிராஞ்ச் மானேஜர்கள்' தொழிலாளர்களா, இல்லையா என்ற பிரச்னை கோர்ட்டுக்கு முன்னால் விடப்பட்டு, அவர்கள் தொழிலாளர்கள் இல்லை, 'இண்டிபெண்டண்ட் கண்டிராக்டர்கள்' என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதே முறையில் எல்லா தொழில்களுக்கும், எல்லோருக்கும் சட்டத்தின் பாதுகாப்பு கிடைக்கவேண்டும் என்பதற்காக முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். சட்டத்தில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டால், அது செல்லுபடியாகாமல் போய்விடும். ஆகையால் கொஞ்சம் கால தாமதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அடுத்த சட்ட சபைக் கூட்டத்திற்குள் தயாராகிவிடும் என்று நினைக்கிறேன். ஆனால் உறுதியாகச் சொல்வதற்கில்லை.

தொழில்சங்கங்களை அங்கீகாரம் செய்வதில் இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன—

(1) தொழிற்சங்கங்களை அங்கீகாரம் செய்வது.

(2) ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம் என்று ஏற்படுத்துவது.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று ஏற்படுத்தும் விஷயத்தில், என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால், தொழிலாளர்களே இந்த விஷயத்தில் ஒன்று சேர்ந்து ஒரே சங்கத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் முதலாளிகளே பல சங்கங்களை ஏற்படுத்திவிட்டு அதில் யாரும் தலையிடக்கூடாது என்று சொல்வார்கள். ஆகையால் தொழிலாளர்களே இந்த லட்சியத்தை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அரசாங்கம் சட்டம் கொண்டு வந்தால் இது தொழிலதிபர்களுக்குத்தான் சாதமாகப் போய் முடியும்.

தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுப்பதில் வேறு ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமா என்று அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது. இந்த மாற்றுச் சட்டம் வேண்டுமா, வேண்டாமா என்பதை அடுத்த "ஸ்டேட் அட்வைசரி கமிட்டி" கூட்டத்தில் வைத்து அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. 1955-ல் 653 தொழிற் சங்கங்கள் இருந்தன. புதிதாக 181 சங்கங்கள் சென்ற வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டன. ரத்தாகி விட்ட சங்கங்களின் எண்ணிக்கை 71.

[Sri R. Venkataraman] [23rd July 1957

பாக்கி இருக்கின்ற சங்கங்கள் 758. புள்ளி விவரங்கள் வேண்டும் என்பவர்களுக்கு இன்னென்றும் சொல்லவிரும்புகிறேன். 1926-ம் வருஷத்திலிருந்து நாளது வரையில் அமைக்கப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 2,080.

இன்னும் சர்க்கார் பல சட்டங்களை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கு முயற்சிகள் செய்து வருகின்றது. "பிராவிடண்ட் பண்ட்", "ஸ்டேட் இன்ஷுயூரன்ஸ்" போன்ற சட்டங்களைக் கொண்டு வருவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு தகுந்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

விவசாய தொழிலாளர்களைப் பற்றி மிகவும் கவலையாக நண்பர் ஸ்ரீ ஜகன்னாதன் பேசினார்கள். தொழிற் சங்கங்கள் எல்லாம் முன்னேற்றம் அடைவதற்குக் காரணம், அந்தத் தொழிற்சங்க இயக்கத்தை நடத்தும் தொழிலாளர்களின் ஊக்கத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. சட்டசபையில் பேசினால் தொழிற் சங்கம் வளர்ச்சி அடையாது. நான் நண்பர் ஜகன்னாதனைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு பல சங்கங்களை அமைத்துக்கொடுத்து அவர்களுடைய குறைகளை போக்குவதற்கு முயற்சிகள் எடுத்தால் அவர்களுடைய நிலைமையில் முன்னேற்றம் காண முடியும்.

இந்த விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிறுவ வேண்டும் என்ற யோசனை இருக்கிறது. 1954-ம் வருஷம், டிசம்பரில் நிறுவவேண்டும் என்கின்ற நிலைமை மாறி, இன்னும் பிற்காலத்திலும் குறைந்த பட்ச கூலி நிர்ணயிப்பதற்காக மத்திய சர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வரப்போகிறார்கள். அது வந்தவுடன் சர்க்கார் அதை எடுத்துக் கொண்டு இந்த விவசாய தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கைகளை அடைய ஏற்பாடு செய்யும். அப்படி செய்தாலும் அவர்கள் கோரும் அளவுக்கு கிடைக்கும்படி செய்ய முடியாது. ஆகவே தொழிற்சங்கமே இதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீமதி சத்தியவாணி அம்மையார் பெரம்பூரில் இருக்கும் தொழிற்சாலையில் உள்ள ஒரு தனி நபரைப்பற்றி குற்றம் சாட்டினார்கள். இதை எனக்கு ஒரு கடிதம் மூலமாக எழுதியிருந்தால் உடனடியாக விசாரித்திருக்க முடியும்.

தனிப்பட்ட நபர் ஏதாவது குற்றம் செய்திருக்கலாம். குற்றம் செய்யக்கூடியவர்கள் என் இலாகாவிலேயே இல்லை என்று பெருமை அடித்துக் கொள்ள நான் தயாராயில்லை. ஏதாவது ஒருவர் தவறு செய்திருக்கலாம். எல்லோரும் தவறே செய்யாமல் இருந்துவிட்டால் எங்களுக்கு வேலை இருக்காது. வேலையில்லாத் திண்டாட்டத்தில் நாங்களும் கலந்து கொண்டு விட நேரிடும். (சிரிப்பு.)

ஒரு நல்ல விஷயத்தைப்பற்றி ஸ்ரீ ஆதித்யன் சொன்னார்கள். ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்றவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி எனது சகா மந்திரி அவர்களுக்குச் சொல்லி அதை எந்த அளவுக்கு திருத்த முடியுமோ அந்த அளவுக்கு திருத்த பரிசீலனை செய்யும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேரமாகிவிட்டபடியால் மற்ற விஷயங்களைப் பற்றி இப்பொழுது சொல்வதற்கில்லை. அங்கத்தினர்கள் ஏதாவது சொல்ல வேண்டியதாக இருந்தால் அதை எனக்கு கடிதம் மூலமாக தெரிவிப்பார்களானால் அதைப் பற்றி பரிசீலனை செய்ய முடியும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். எனக்கு ஆதரவு அளித்து, ஒத்துழைப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ வி. கே. கோதண்டராமன் வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறாரா ?

Sri V. K. KOTHANDARAMAN : இல்லை, வற்புறுத்துகிறேன்.



23rd July 1957]

Mr. SPEAKER : சபையில் வோட்டுக்காக விடப்படவேண்டிய வெட்டுப் பிரேரணை என்னவென்றால் "லேபர் இன்கிலூடிங் பாக்டரீஸ்" மானியத்திற்காகக் கோரப்படும் ரூபாய் 28,10,500-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் என்பது.

வெட்டுப் பிரேரணை வோட்டுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

Mr. SPEAKER : வோட்டுக்கு விடப்படவேண்டிய பிரேரணை என்னவென்றால் இந்த மானியத்தின் கீழ் அரசாங்கத்துக்கு ரூபாய் 28,10,500-க்கு மேற்படாத தொகை அளிக்கவெண்டும் என்பது.

பிரேரணை வோட்டுக்கு விடப்பட்டு, நிறைவேறி, மானியம் அளிக்கப்பட்டது.

## (2) DEMAND XXI—INDUSTRIES AND CINCHONA.

## (3) DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

The Hon. Sri R. VENKATARAMAN : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,11,47,400 under Demand XXI—Industries and Cinchona" and

"that the Government be granted a sum not exceeding Rs. 2,72,27,000 under Demand XXXIX—Capital Outlay on Industrial Development."

I reserve my speech to the end of the debate.

Mr. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,11,47,400 under Demand XXI—Industries and Cinchona" and

"that the Government be granted a sum not exceeding Rs. 2,72,27,000 under Demand XXXIX—Capital Outlay on Industrial Development."

எதிர் கட்சிகள் எல்லாம் 21-ஆவது மான்யத்தின்மீது கனம் ராமசந்திரன் வெட்டுப் பிரேரணையையும் 39-ஆவது மான்யத்தின்மீது கனம் சட்டநாத கரையாளர் கொண்டுவந்திருக்கும் வெட்டுப்பிரேரணையையும் ஆதரிப்பதாகத் தெரிவித்தார்கள். அவைகளைப் பிரேரிக்கும்படி அந்த அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Sri K. RAMACHANDRAN : Sir, I move the Cut Motion standing in my name, viz.,

"That the allotment of Rs. 5,11,47,400 under Demand XXI—Industries and Cinchona be reduced by Rs. 100."

Sri K. SATTANATHA KARAYALAR : Sir, I move the Cut Motion standing in my name, viz.,

"That the allotment of Rs. 2,72,27,000 under Demand XXXIX—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

MR. SPEAKER: Cut Motions moved—

"That the allotment of Rs. 5,11,47,400 under Demand XXI—Industries and Cinchona be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 2,72,27,000 under Demand XXXIX—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

Now, the Motion moved by the Hon. Minister and the Cut Motions moved by the hon. Members are before the House for discussion. In this connection, I have to state that 3 hours are allotted for the discussion of these two Demands, two hours to-day and one hour tomorrow. But, unfortunately, we have only 1½ hours to-day and one hour tomorrow. However, we shall encroach upon the time left for the Speaker to put the Demands to be guillotined. Usually, the Speaker has got one hour for this purpose and I shall give half an hour out of that. To-day, we may rise at 2 o'clock. The Demand, Industries and Cinchona will be discussed for 1½ hours tomorrow, and the Road Transport Demand for one hour. I shall still have half an hour to put to the vote of the House the Demands to be guillotined.

SRI K. RAMACHANDRAN: அவைத் தலைவர் அவர்களே, மந்திரி அவர்கள் கொண்டவந்துள்ள இண்டஸ்ட்ரீஸ் மான்யத்தின் பேரில் பிரேரித்திருக்கும் என் வெட்டுப்பிரேரணையின் முக்கிய நோக்கம் இந்த ராஜ்யத்திலே இருக்கக்கூடிய நாலு லக்ஷத்திற்கும் அதிகப்படியான நெசவுத் தொழிலாளர்களின் நிலையை ஊர்ஜிதப்படுத்தவேண்டும், வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்பதுதான். இதைப்பற்றி பேசுவதற்கு முன்னால், நம் சர்க்காருடைய தொழில் கொள்கையைப்பற்றியும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கனரக தொழிலைப்பற்றிய வரையில் நம் மாவட்டத்தில் எந்தவிதமான தொழிலும் நம் பொருளாதாரத்தை வளப்படுத்தக்கூடிய முறையில் ஆரம்பிக்காதது மிகவும் விசனிக்கத்தக்க விஷயம். இதை மத்திய அரசாங்கத்துடன் வாதாடி கனரக தொழில்கள் இங்கே ஏற்படுத்த் அமைச்சர் அவர்கள் முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறு கைத்தொழில்களை பொருத்த வரையில் ஒரு முக்கியமான விஷயத்தைச் சர்க்காருக்கு அறிவுறுத்த விரும்புகிறேன். ஜனநாயக முறையிலே சர்க்காரை நடத்துகிறோம் என்று சொல்லும் இந்த சர்க்கார், சிறு கைத்தொழில்களை அமைப்பதில் கூட ஒரு நல்ல கொள்கையை கையாள வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். சிறு கைத்தொழில்களைப் பொருத்த வரையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள டிடெயில்டு எஸ்டிமேட்டுகளைப் பார்த்தால், இந்த தொழில்கள் எங்கெல்லாம் இருக்கின்றன என்று பார்த்தால், அநேகமாக இரண்டொரு ஜில்லாக்களில் தான் அதிகமாகக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூர், ஜில்லாவிலோ அல்லது செங்கற்பட்டு ஜில்லாவிலோதான் முக்கியமான சிறு தொழில்கள் குவிந்து கிடக்கின்றன. மற்ற ஜில்லாக்கள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. இதன் காரணம் தெரியவில்லை. ஜனநாயகம் என்றால் எல்லாத் தொகுதி மக்களும் நன்மை அடையும் முறையிலே திட்டங்களைத் தீட்டவேண்டுமேயொழிய, ஒரு சில ஜில்லாக்களில் மட்டும் திட்டங்களைக் குவித்துவிட்டு மற்ற ஜில்லாக்களை கவனிக்காது ஒதுக்கிவிடுவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இரண்டாவது திட்ட மதிப்பீடுகளை இந்தத் கொள்கை அடிப்படையிலே மறு பரிசீலனை செய்து அந்த அந்த ஜில்லாக்களுக்கும் ஒதுக்கவேண்டுமென்று வலியுறுத்திக்கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கும் முறையிலே, கைத்தறி நெசவாளிகளைப்பற்றி இதற்குமுன் பலதடவை பேசியிருக்கிறோம்.





கவர்னர் உரையின்மீது பேசும்போதும், பட்ஜெட் பொது விவாதத்தின் போது பேசும்போதும் வெட்டுப்பிரேரணையில் கண்ட விஷயங்களைப்பற்றி பேசியிருக்கிறேன். கைத்தறித் தொழில் ஒரு பிரதானமான தொழில் என்பதில் சந்தேகம் இல்லை. கி.மு. 4000 வருஷங்களாக இன்றுவரை கைத்தறி முன்னேற்றம் அடைந்து வந்திருக்கிறது. இது ஒரு தனித் தொழில்; உப தொழில் அல்ல. நமக்குத் தெரியும். (Work wind) என்றெல்லாம் நம் நாட்டில் துணி இருந்திருக்கிறது. அந்தக் காலத்தில் எவ்வளவோ அடிகள் கொண்ட 400 கவுண்ட்ஸ் சேலைகள் ஒரு மோதிரத்தில் செலுத்தக்கூடிய அளவில் கைத்தறித் தொழில் நம் நாட்டில் முன்னேற்றம் அடைந்து இருந்தது. ஆனால் அதனுடைய சரித்திரத்தைப் பார்த்தால் ஒவ்வொரு சமயத்திலே அது நலிந்து போகும் நிலையில் இருந்திருக்கிறது. இதை ஏன் என்று கவனிக்கவேண்டும். ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னால், கைத்தறி தொழில் நன்றாக இருந்தது. நெசவாளர்கள் எல்லாம் 100 ரூபாய் நோட்டுகளையும், 10 ரூபாய் நோட்டுகளையும் சுருட்டி காதில் வைத்துக்கொண்டு செலவழித்தார்கள். அதற்கடுத்தாற்போல் தெருத்தெருவாகப் போய் பிச்சை எடுக்கும் நிலை ஏற்பட்டது அதற்குப் பின்னால் சிறிது சீர்திருத்தம் ஏற்பட்டது. இப்போது என்ன நிலைமை? கடந்த இரண்டு மூன்று மாதங்களாக ஜவுளித் தேக்கம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. வெளி நாட்டு மார்க்கெட்டுக்குப் போக வில்லை. உள் நாட்டில் விற்பனை ஆகவில்லை. தேக்கம் ஏற்பட்டு, நெசவாளர்கள், மறுபடியும் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அடிக்கடி அங்கஹீனம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதை கவனிக்கவேண்டும். அப்போதுதான் சர்க்கார் கைத்தறி கொள்கை நன்றாக இருக்கும்.

அப்படிப் பார்த்தால், கைத்தறித் தொழிலில் இருக்கும் கஷ்டங்கள் பல. ஒன்று பண வசதி. கோவாபரேடிவ் முறையிலே செஸ் பண்டிலிருந்து பணம் கொடுக்கிறார்கள். இரண்டாவது, மூலப் பொருள் தேவை. நூல் சம்பந்தப்பட்ட வரையில் நிலைமை சுமாராக இருக்கிறது என்று தெரிகிறது. மூன்றாவது **competition with large scale industries** அல்லது பெரிய தொழில்களோடு, அதாவது மில்களோடு போட்டி போடும் நிலைமை. இந்த மூன்றாவது காரணமாகத்தான் நான்காவது கஷ்டமாகிய **Marketing facilities** அல்லது விற்கக்கூடிய நிலைமை இல்லாமல் தேக்கம் ஏற்படுகிறது. இந்த நான்கு பிரச்னைகளும் சரியாகி விடுமானால் எந்தக் காலத்திலும் கைத்தறித்தொழிலுக்கு கவலை ஏற்படாது. பணம் வேண்டும். காம்பெடிஷன் இல்லாமல், நல்ல ஸ்திரமான நிலை ஏற்பட வேண்டும். இவைகளைப் பார்த்துக் கொண்டால் கஷ்டம் கொஞ்சம் குறையும். இதிலே தான் சர்க்கார் தங்கள் கொள்கையை நல்ல முறையிலே அமைத்துக் கொண்டு கையாள வேண்டும்.

இன்றைக்கு செஸ் ஸ்கீமின் கீழ் பணம் விநியோகிக்கும் முறையைப் பார்த்தால் ஒரு தறியிலிருந்து 200 கஜம் உற்பத்தி செய்தால் ரூபாய் 200 அல்லது 250 கடன் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இதில் எந்த விதமான வித்தியாசமும் கிடையாது. 40, 60, 80, 100-ம் நெம்பர் நூல்கள் இருக்கின்றன. ஒரு மாதத்திலே நெசவாளி தன்னுடைய தறியிலிருந்து ஒவ்வொரு கவுண்டுக்கும் பொருத்த வரையில் இவ்வளவு தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற திட்டம் இல்லை. சகட்டுக்கு 150 அல்லது 200 கஜம் தயாரிக்க வேண்டுமென்றும், அப்போது தான் செஸ் ஸ்கீமிலிருந்து பணம் கொடுக்க முடியும் என்றும் சொல்லப்படுகிறது. இந்த பைனர் வெரைடீஸ், ஒரு மாதத்திற்கு ஒரு தறியில் 60, 70 கெஜம், மிஞ்சிப் போனால் 80 கெஜம் தான் தயாரிக்க முடியும். 40, 20 நெம்பர்களில் 100, 150 கெஜம் தயாரிக்கலாம். இதை சரியான முறையில் பரிசீலனை செய்து என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை உணர வேண்டும்.

**(Deputy Speaker in the Chair.)**

இன்றைக்கு ஒரு தறிக்கு 200 கெஜம் உற்பத்தி செய்தால் தான் ரூபாய் 200 கொடுக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இம்மாதிரி கடன்

[Sri K. Ramachandran] [23rd July 1957

சாங்ஷன் செய்வதற்கு 200 கெஜம் உற்பத்தி செய்வதாக சர்டிபிகேட் வேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். இம்மாதிரி கடன் கொடுக்கப்படாத நிலைமையில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. சர்டிபிகேட் கொண்டு வந்தால் தான் கடன் கொடுக்க முடியும் என்று டிபார்ட்மெண்டு அதிகாரிகள் சொல்லும் நிலைமை இருக்கிறது. ஏற்கனவே வேலை இடைக்காமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமையிலே, அவர்களுக்கு கொடுப்கப்படும் கடனும் நிறுத்தப்பட்டால் அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமை தான் ஏற்படுகிறது. அதை ஓரளவுக்கு சீர்படுத்தினாலும் கூட மில்களோடு போட்டி போட வேண்டிய நிலைமை இருக்கிறது. அதுபற்றி தான் நான் வெட்டுப் பிரேரணை கொண்டு வந்திருக்கிறேன். இந்தக் கருத்து புதிதல்ல. பல முறை பல தலைவர்களால் இந்தப் போட்டி தவிர்க்கப்படவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. சேலைகளையும் வேஷ்டிகளையும் கைத்தறி தொழிலுக்கே ஒதுக்கி விட வேண்டும் என்பதை என்னுடைய வெட்டுப் பிரேரணை குறிப்பிடுகிறது. மில்களில் நூல் தயாரிக்கப்பட்டு அதை வேஷ்டி சேலைகளாக நெய்யக் கூடிய வேலையை கைத்தறிக்கு ஒதுக்கி விட்டால் இரண்டு பெரிய தொழில்களும் (லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்ட்ரி) ஒன்றுக் கொன்று ஒத்தாசையாக (காம்பிளிமெண்டரி)—போட்டியாக அல்ல – (காம்படேடிவ்) இயங்கும். இந்த அவசியத்தைத் தான் என்னுடைய வெட்டுப் பிரேரணை வலியுறுத்துகிறது. நூலும் கண்டிப்பாக கிடைக்கும். துணியும் கண்டிப்பாக கிடைக்கும். அப்படிச் சேலைகளும், வேஷ்டிகளும் நெசவுத் தொழிலுக்கு ஒதுக்கப்பட்டு விட்டால் கண்டிப்பாக அந்தத் தொழில் நசித்துப் போகவேண்டிய அவசியம் இல்லை. போட்டியும் தவிர்க்கப்பட்டு இரண்டு தொழில்களும் நன்றாக முன்னேற்றம் அடையும்.

நான் மற்றொன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்: பட்ஜெட் விவாதத்தின் போது காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஒரு அங்கத்தினர் தன்னுடைய தொகுதியில் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதாக அறைகூவல் விடுத்தார். அது உண்மைக்குப் புறம்பான விஷயம். ஒரு சமயம் அவர் சர்க்காரை பலப்படுத்தவதற்காகவோ, அல்லது சிலாகித்துக் கொள்ளுவதற்காகவோ அம்மாதிரி அறைகூவல் விடுத்திருக்கலாம். நான் இப்பொழுது ஒரு அறைகூவல் விடுக்கிறேன். அதைப் பாருங்கள். என்னுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கும் முறையிலே வேஷ்டி, சேலைகளை கைத்தறிக்கே ஒதுக்கி ஒரு சட்டம் கொண்டு வந்தால் இந்த மாநிலம் பூராவுக்கும் என்னுடைய தொகுதியிலிருந்து மட்டும் வருஷம் பூராவுக்கும் வேண்டிய சேலைகளையும், வேஷ்டிகளையும், சப்ளை செய்யக் கூடிய சக்தி இருக்கிறது. அதை நான் செய்கிறேன். அதற்கான சட்டத்தை சர்க்கார் கொண்டு வருமா? காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதாக அறைகூவல் விடுத்தார். என்னுடைய அறைகூவலை பரீக்ஷித்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்த சட்டம் உடனடியாக கொண்டு வர வேண்டிய ஒரு சட்டம். என்னுடைய வெட்டுப் பிரேரணையை அவசியம் ஆதரிக்க வேண்டும். இதில் கட்சி பேதமே இடையாது. நெசவுத் தொழிலாளர்களுடைய நிலைமையை சீர்திருத்த வேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் உணர்வார்கள்.

அடுத்தபடியாக, பரமக்குடி, எமநேசுவரம் பஞ்சாயத்துகளில் 2, 3 மாதங்களாக கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. மாஸ்டர் வீவர்ஸ் கொண்ட 3 கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட 10 லட்சம் ரூபாக்கு மேற்பட்ட கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அதை உடனே கிளியர் செய்ய வேண்டுமென்று மந்திரி அவர்களைக் கேட்டுக் கொண்டேன். இங்கு இருக்கக்கூடிய கூட்டுறவு சங்கத்திலேயும், அகில இந்திய ரீதியில் இருக்கக்கூடிய ஹாண்டுலூம் ஹவுஸிலும் கேட்டேன். எந்த விதமான நடவடிக்கைகளும் இது வரையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும் சரி, பட்ஜெட் உரையிலும் சரி, நிதி மந்திரி அவர்கள் ஸேல்ஸ் எம்போரியம் திறக்கப்பட்டு கைத்தறித் தொழிலுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் சர்க்கார் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்றைக்கு கூட்டுறவு சங்கத்திலும் சரி, ஹாண்டுலூம் ஹவுஸிலும் சரி, அவைகள் ஒரு சில தனி நபர்களின் கையில் சிக்கிக் கொண்டு தவிக்கின்றன. 5,000 லூம்கள் இருக்கக்கூடிய பரமக்குடி, எமனேசுவரம் பஞ்சாயத்துக்களிலுள்ள கைத்தறித் துணியை வாங்கக்கூடாத நிலைமையில் மாகாண கைத்தறி கூட்டுறவு சங்கமும் "ஹாண்டுலூம் ஹவுஸும்" நடந்தால், அங்கே சில தனிப்பட்ட நபர்கள் முதலைகளாகவும், திமிங்கிலங்களாகவும், வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களுக்கு உண்மையிலேயே தங்களைப் பற்றி கவலையே தவிர, மக்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் பற்றி கவலையில்லை. இது விஷயமாக சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.



23rd July 1957] [Sri K. Ramachandran]

அடுத்தபடியாக . . .

**DEPUTY SPEAKER : The hon. Member's time is up, He is** repeating the same point. He is speaking about handlooms from **the beginning.**

SRI K. RAMACHANDRAN : காந்தி அடிகள் இந்த நாட்டிலே துணிப் பஞ்சத்தை போக்குவது சம்பந்தமாக சொல்லிய ஒரு சில வார்த்தைகளை படித்துக் காட்டி விட்டு நான் முடித்துக் கொள்கிறேன். அதுவும் குறிப்பாக, மந்திரிகளின் " கான்பரென்ஸில் " இதைச் சொல்லியிருக்கிறார்கள்—

" If you feel in your hearts that you have taken office as custodians and representatives of the interests of the masses, everything that you do, your legislation, your executive orders, the instructions that you issue, will breathe concern for the villager. To protect his interests, you do not need the Viceroy's sanction. Supposing you want to protect the hand-spinner and the hand-weaver against the competition of textile mills and solve the problem of cloth shortage for the masses, you will put aside red tape and send for the millowners and tell them that unless they want you to go out of office, they must make their production policy conform to the requirements of the masses whose custodian and representative you are. You will tell them not to send mill cloth to certain areas which are put under hand production and not to produce a certain range of textiles which comes within the handloom weaver's domain. If you are in earnest your word will go home and they will willingly give their co-operation as they did recently when they provided the required textiles for export to Indonesia in return for Indonesian surplus rice for the relief of the Indian famine. But there must be that inner conviction first; everything else will then be all right."

உங்களுடைய மனதிலே இந்தத் தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நினைத்தால், இந்த நெசவுத் தொழிலாளர்களுடைய நிலைமையை சீர்திருத்த முடியும் என்று காந்திஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சில ' வெரைடீஸ் ' அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். திறமையான தொழில் மந்திரி என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆகவே அமைச்சர் உண்மையிலேயே தன் திறமையை இதில் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI K. SATTANATHA KARAYALAR : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்தத் தொழில் மான்யத்திலே என்னுடைய வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல அவா உறுகின்றேன். இது மிக முக்கியமான ஒரு மான்யக் கோரிக்கை என்பது சபை அங்கத்தினர் பலருக்குத் தெரியும். இந்த இலாகாவிலே தொழில் துறை அபிவிருத்திக்காக 12-48 p.m.

இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்திலே ரூபாய் 12 கோடி 95 லட்சம் செலவழிக்க திட்டம் போட்டிருக்கிறோம். இதிலே இந்த ஆண்டிலே டெவலப்மெண்டுக்காக தொழில் வளர்ச்சிக்காக குறிப்பாக ரூபாய் 3 கோடி 52 லட்சம் செலவழிக்க இருக்கிறோம். ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல் அதன் ரொக்கப் பணத் தேவையிலே (வேஸ் அண்ட் மீன்ஸ்) நாட்டிலே பத்து கோடி ரூபாய்க்கு அதிகம் பற்றுக்குறை இருக்கக்கூடிய சூழ் நிலையில், இந்தத் தொழில்களை எல்லாம் நாம் எப்படி நடத்தப் போகிறோம்? எந்த அளவுக்கு தொழில் துறையிலே நாம் நல்ல முறையில் செயல்படப் போகிறோம் என்பதைப் பற்றி ஐயுறுகிறேன். இதிலே தொழில்களுக்கு பணம் கொடுக்கும் முறையிலும், இதர தொழில் வளர்ச்சியிலும் நாம் பெருமளவிற்கு பாதிக்கப்படுவோம் என்று அஞ்சுகிறேன்.

தொழில் துறையிலே குறிப்பாக ஸ்டேட் ஸெக்டரில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செய்ய இருப்பவைகள் 4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், ஒரு வுட் ஸிஸனிங் பிளாண்டு பொள்ளாச்சியிலும், மதுரையிலும் ஆகிய இந்த 3 இனங்கள்தான். எந்த அளவிற்கு இதன் மூலம் தொழிலை வளப்படுத்தலாம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நமது நாட்டை தொழில்மயமாக்கலாம் என்பது மிக ஐயமுறக்கூடிய விஷயம். பிரைவெட் ஸெக்டரில் சுமார் 16 இனங்களில் லைசென்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. அவைகளை நான் விரிவாக எடுத்துக் சொல்ல அவா உறவில்லை. பருத்தி நூல் நூற்பதற்கான ஸ்பின்டில்ஸ் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அகில இந்தியாவுக்கு 30 லட்சம். அதில் நமது ராஜ்யத்திற்கு 13 லட்சம். துரதிர்ஷ்டவசமாக இந்த லைசென்ஸில் சுமார் 12 லட்சம் தான் அகில இந்திய ரீதியில் உபயோகிக்கப்பட்டுள்ளது. அதனால் திரும்பவும் மாற்றி விநியோகிக்கப்படும் என்று சமீபத்தில் ஜூலை 16-ம் தேதி அன்று ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதனால் நாம் இந்தத் துறையிலே எவ்வளவு பாதிக்கப்படுவோம் என்பதைத் தெரிந்துகொள்ள அவா உறுகின்றேன்.

தற்சமயம் தொழிலுக்கும் புதை கனிப் பொருள் எடுக்கவும், லைஸன்ஸ் கோருபவர்களுக்கு எல்லாம் லைஸென்ஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. இம்மாதிரி லைஸன்ஸ் கொடுக்கப்படுகிற விஷயத்தில் லைஸென்ஸ் கொடுக்கப்பட்டவர்களுக்கு தொழிற்சாலையை நடத்துவதற்கு ஆற்றல் இருக்கிறதா என்பதை நாம் சரியாக பரிசீலிப்பது இல்லை. தற்போது சர்க்கரை ஆலை நடத்துவதற்கு 6 "கம்ளீட் பிளாண்ட்"-களுக்கு லைஸன்ஸ் கொடுக்கப்பட்டிருப்பாதாக அறிகிறேன். இதில் இரண்டு பேர்கள், ஒன்று குன்னியூர் சாம்பசிவ அய்யர், மற்றொன்று பூண்டி வாண்டையார் அவர்கள், இரண்டு நில பிரபுக்களுக்கும் லைஸன்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது உண்மையாக இருந்தால் ஒரு விஷயத்தை நாம் பார்க்க வேண்டும். இந்த இரு அன்பர்களும் பெரிய நிலச் சுவான்தார்கள். இவ்விதம் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அவர்கள் அங்குள்ள நிலங்களில் இப்பொழுது உழுது பயிர் செய்யக் கூடிய தொழிலாளர்களை வெளியேற்றி விட்டு அந்த நிலங்களில் எல்லாம் கரும்பு பயிர் செய்வார்கள். இதனால் பல தொல்லைகள் தொழிலாளர்களுக்கு வந்து சேரும். இன்றைக்கு இது போல் அனுமதித்த "ஆரூரான் மில்ஸி"-ல் இருக்கக் கூடிய நிலையை எடுத்துக் கொண்டால் நாம் ஒரு காரியத்தை அறிய முடியும். இந்த மில்லில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 8 லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகிறது என்று கணக்குக் கொடுக்கிறார்கள். உண்மையில் நஷ்டம் ஏற்படுகிறதா என்பதைப் பற்றி நாம் விமர்சிக்க வேண்டிய தேவையில்லை. நஷ்டத்தில் வேலை செய்வதானால் . . .

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஆலையில் இன்னும் வேலை ஆரம்பிக்கப் படவில்லை. இதற்கு முன்னால் எப்படி நஷ்டம் ஏற்படமுடியும்?

*SRI K. SATTANATHA KARAYALAR : தவறல்ல, தவறானால் நான் திருத்திக்கொள்கிறேன். இந்த மாதிரி லைஸன்ஸ் கொடுப்பதற்கு முன்னால், கொடுக்கப்படுபவர்களுக்கு நல்ல மூலதனம் இருக்கிறதா என்பதை நாம் பார்க்கவேண்டும். சில தனிப்பட்ட நபர்கள் சர்க்காரிடமிருந்து இதற்காக பணம் வாங்குகிறார்கள். பின்னால் ஆலைகளை சரியாக நடத்துவது கிடையாது. இவ்விதம் இல்லாத முறையில் ஒவ்வொரு தொழிலுக்கும் அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் பண உதவி செய்யும்போது நல்ல முறையில் அந்த தொழில் நடப்பதற்கு அவர்களுக்குப் போதுமான பணம் இருக்கிறதா என்பதை பார்த்து அதன் பின் பணத்தை வழங்க வேண்டும். அடுத்ததாக "ஜிப்ஸம்" என்ற பொருள் எடுப்பதற்காக கோயம்பத்தூர் மாவட்டாரத்திலும் திருச்சி வட்டாரத்திலும் இருந்து பலர் லைஸன்ஸ் கோரியிருக்கிறார்கள். இதற்கு இந்த சர்க்கார் சம்மதித்திருந்தும் மத்திய சர்க்கார் மறுத்திருக்கிறது. இதனால் துரதிருஷ்டவசமாக லைஸன்ஸ் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. மருமகளின் சிபார்சில் மாமியார் தலையிட்டதாகத் தெரிகிறது. இதே "ஜிப்ஸம்" பொருளை எடுப்பதற்கு சர்க்கார் கவனிக்கும் என்று நம்புகிறேன். எந்த தொழிலுக்கும் லைஸன்ஸ் கொடுப்பதில் ஒரு முறை இருக்க வேண்டும். அதற்கு வழி முறை வகுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக சேலத்திற்கு பக்கத்தில் சுண்ணாம்புகரடு என்கிற இடத்தில் "கிரிப்டோ கிறிஸ்டலைன் மாக்னஸைட்" என்ற பொருள் கிடைப்பதாகத் தெரிகிறது. இந்த பொருள் தங்கத்தை போன்று விலை மதிக்க முடியாதது. இந்தப் பொருளை நல்ல முறையில் பயன் படுத்தலாம் என்று அறிகிறேன். முன்பு இதே சபையில் இதைப்பற்றி கேள்வி வேளையின் போது மந்திரி அவர்கள் சில விவரங்களைக் குறிப்பிட்டார்கள். இந்தப் பொருளை எடுப்பதற்கு இப்போது "மாக்னஸைட் ஸிண்டிகேட் லிமிட்டெட் கம்பெனி"-க்கு 1,573 எக்கர் குத்தகையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 60 ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டது. இதை சமீபத்தில் கல்கத்தாவிலுள்ள "பர்ன் அண்ட் கோ"-க்கு மாற்றி கொடுக்க முயற்சி செய்ததாகவும் தெரிகிறது. இதை நமது சர்க்கார் அங்கீகரிக்க வில்லை என்று குறிப்பிட்டார்கள். அதிலும் ஒரு சிறிய சந்தேகத்தை கிளப்பி விட்டார்கள். ஒரு வேளை திரும்பவும் இந்த லைஸன்ஸ் அதே கம்பெனிக்கு வழங்கப்படலாம் என்ற ஐயத்தையும் குறிப்பிட்டார்கள். இவர்களுக்கு லைஸன்ஸ் கொடுத்தால் இதில் 2 கோடி ரூபாய் மூலதனம் இட்டு "ரிப்ராக்டரி" அமைப்பதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இதை பற்றி சொல்லும்பொழுது வெளி நாட்டு கம்பெனிகளுக்கு கொடுக்கமாட்டோம் என்று தெளிவாக மந்திரி குறிப்பிடவில்லை. இந்த கம்பெனி நிலைமை என்ன? மாக்னஸைட் எடுப்பதில் இங்கேயுள்ள செலவைப் பார்த்தால் இது ரொம்பவும் குறைவாக இருக்கிறது. டன் ஒன்றுக்கு சர்க்கார்க்கு கொடுப்பது ஒன்றரை ரூபாய், அதை நிலத்திலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு 3 ரூபாய் கூலி என்றும் இதர செலவுக்கு 10 ரூபாய் என்றும் இவ்விதமாக டன் ஒன்றுக்கு 15 ரூபாய் அல்லது 20 ரூபாய் செலவு ஆகலாம். அதே நேரத்தில் இப்பொருள் ஜப்பானில் டன் ஒன்றுக்கு 250 ரூபாய் என்று விற்கப்படுகிறது. இவ்விதமாக பெருமளவு லாபம் இவர்களுக்கு கிடைக்கிறது. இந்த கம்பெனி பாலன்ஸ் ஷீட்டை பார்க்கலாம் என்றால் நமக்கு அது கிடைக்கவில்லை. ஆனால் இந்த கம்பெனியின் 2 ஷில்லிங் பங்கு லண்டனில் 200 ஷில்லிங்கிற்கு விற்கப்படுகிறது. இதிலிருந்து எந்த அளவு இந்தக் கம்பெனி லாபம் அடைகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதைப் பார்க்கிறபோது "பார்ன் அண்ட் கோ" இந்த "ரிப்ராக்டரி" அமைத்து இரண்டு கோடி மூலதனம் போட முன் வருவதின் கருத்து புலனாகும். நம் நாட்டில் உருவாக்கப்படுகிற தொழிற்சாலைக்கு வேண்டிய 2,000 டிகிரி வெப்பமுள்ள பெரிய ராட்சஸ அடுப்புகள் அமைப்பதற்கு இந்தப் பொருள் மிக மிக அவசியம். தொழிலை அவர்கள் ஆரம்பிப்பதால் சேலத்தில் சுமார் ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கலாம். ஆனால் அதே சமயத்தில் அந்த கம்பெனிக்கு லாபம் மூலம் நம் நாட்டிலுள்ள செல்வம் எல்லாம் வெளி நாட்டிற்குப் போய்க் கொண்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்தக் குத்தகையை நீட்டினால் இம்மாதிரி இன்னும் 30 வருடத்திற்கு நம் செல்வம் சுரண்டப்படும். இவ்விதமான தங்கத்திற்கு சமமாக மதிக்கப்படும் பொருள் அத்தனையும் வெளிநாட்டுக்குப் போவது என்பது நம் நாட்டின் செல்வத்தை அடகு

[Sri K. Sattanatha Karayalar] [23rd July 1957

வைப்பதுபோலாகும். ஒரு வேளை சர்க்கார் இந்தத் தொழிலின் வழி வகை நமக்கு தெரியாது என்று சொல்வார்கள். இப்பொழுது நெய்வேலியில் இதே ஃபிராக்டரிக்கு " மெஸர்ஸ் சேஷாசாயி அண்ட் கம்பெனிக்கு " லைஸென்ஸ் வழங்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இம்மாதிரிப்பட்ட கம்பெனிகள் நம் நாட்டில் எத்தனையோ இருக்கின்றன. இவர்களுக்கு வழி வகை தெரியும். இவர்கள் நம் நாட்டிலேயே தங்களுடைய மூல தனத்தைப் போட்டு ஆரம்பிப்பதற்கு சர்க்கார் பண உதவி, இதர உதவி செய்ய வேண்டுமென்று விநயத்தோடு சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சிறு கைத் தொழில்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு ஜாபிதா காணப்படுகிறது. அதில் குறிப்பிட்டுள்ள ஒன்றிரண்டு தொழில்களைப் பற்றி கூறுகின்றேன். அதாவது, மதுரை, சாத்தூர், சிவகாசி, முதலிய இடங்களில் அதிகமாக பௌண்டன் பென் நிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. இதை நாம் அதிகமாக உபயோகித்து வருகிறோம். ஆனால் இங்கு செய்யப்படுகிற " நிப் "-களின் " யு.எஸ்.ஏ. "-யில் தயாரிக்கப்பட்டது (made in U.S.A.) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விதம் பொறிக்கப்பட்ட நிப்புகள் மாணவர்களிடையே அதிகமாக செலவாகிறது. ஆனால் இவ்விதம் என் போடுகிறார்கள் என்று கேட்டால் அவர்களுடைய கம்பெனிகளின் பெயர் " உதய சூரியன் அஸோஸியேஷன் " என்று காணப்படுகிறது. அல்லது " யுனைடெட் சர்விஸ் அஸோஸியேஷன் " என்று பெயர் வைத்துக் கொள்கிறார்கள். இவ்விதமாக " ஸிக்னேச்சர் " என்று பொறிக்கப்பட்ட நிப்புகள் கூட தயாரிப்பதாக அறிகிறேன். இவை ஆறு அணா, ஏழு அணா என்று விற்கப்படுகிறது.

உற்பத்தி செய்யுமிடத்தில் ஒரு கிராஸ் நிப்பிற்கு, பித்தளை நிப்பிற்கு ரூ. 2-4-0 ஆகிறது. எவர்சில்வர் நிப், கோல்ட் பிளேட் செய்தது ரூ. 3-14-0 ஆகிறது. ஆனால் இதே நிப் நமது மார்க்கெட்டில் 6, 8 அணாவிற்கு ஒன்று வீதம் விற்கப்படுகிறது. இதை நேரடியாக அங்கு சில குஜராத்திகள் வாங்கி பாம்பேக்கு அனுப்புகிறார்கள். அங்கே விதவிதமான பெட்டியில் வைத்து இம்போர்டர்ஸ் மூலம் நம் சந்தைக்கு மறுபடியும் வருகிறது. ஆக, நம் நாட்டில் திறம்பட செய்யக்கூடிய பொருள்களை கூட வெளி நாட்டிலிருந்து வந்ததாக ஏமாற்றித்தான் மக்கள் முன்னிலையில் விற்க வேண்டியிருக்கிறது. அப்படி விற்பதால் அங்குள்ள வேலையாட்களுக்கும் அதில் பணம் முடக்கி இருக்கக்கூடிய முதலாளிகளுக்கும் லாபம் கிடைக்கிறது என்று யாரும் நினைக்கவேண்டாம். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய இம்போடர்ஸ்க்குத்தான் இந்த லாபம் போய்ச் சேருகிறது என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து அகில இந்திய ரீதியில் எந்தெந்த தொழில்களுக்கு எந்தெந்த முறையில் பாதுகாப்பு அளிக்க முடியும் என்று சிந்தித்துப் பார்த்து, நம் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது என்று தடையுத்தரவு இட வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கை இந்தச் சர்க்கார் எடுக்கவேண்டும். அடுத்தபடியாக, குடிசைத் தொழிலைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு முடித்துக்கொள்ளுகிறேன். நம் நாட்டில் பல்வேறு பகுதிகளில் கத்தாழை நாரிலிருந்து பல்வேறு சாதனங்கள் செய்யப்படுகின்றன. இதில் வேலை செய்யும் தாய்மாருக்கு ஒரு நாளுக்கு இரண்டரை, மூன்றரை அணா தான் கிடைக்கிறது. இந்த அல்லோ பைபர் என்று சொல்லப்படும் கத்தாழை தொழிலுக்கு அரசாங்கத்திலிருந்து பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. அதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யதார்த்தத்தில் இது தொழில் வளர்ச்சிக்கு பயன் தரவில்லை. குளிர்ந்த அறைகளில் விரிக்கும் விரிப்பு, " பைன் கார்பட்ஸ் " செய்ய இந்த நாரைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். இந்த நாரைப் பக்குவம் செய்வதற்கு உள்ள பாக்டரி ஆல்வாய் போன்ற இடங்களில் இருக்கின்றன. யுத்த காலத்தில் நாம் இந்த கத்தாழை நாரை அதிகமான அளவில் உபயோகப்படுத்திக்கொண்டு இருந்தோம். ஆனால் சமீப காலத்தில் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய, குறிப்பாக ஸவுத் ஆப்பிரிக்காவி



23rd July 1957] [Sri K. Sattanatha Karayalar]

லிருந்து இதை இறக்குமதி செய்ய மத்திய அரசாங்கம் அனுமதித்துள்ளது. நமது சர்க்கார் கத்தாழை நாரை வைத்து எப்படி நூற்பது என்பதைப் பற்றி படிப்பிக்க பள்ளிக்கூடங்கள் வைக்கப் போகிறார்கள். அவர்கள், நல்ல முறையில் நூல் நூற்க படித்து அவர்கள் தேர்ச்சி பெற்று தொழில் வளர்ச்சி அடையும் என நினைக்கிறார்கள். பிரச்னை அது அல்ல. நம் நாட்டில் உள்ளதை வாங்காமல் வெளி நாட்டிலிருந்து வருவதைத்தான் வாங்குகிறார்கள். அதனால் முன்பு இத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு 5, 6 அணா கூலி கிடைத்து வந்தது என்றால் இப்பொழுது அவர்களுக்கு இரண்டறை அணாவிற்கு குறைவாகத்தான் கிடைக்கிறது. இதற்கு, வெளி நாடு போட்டிதான் காரணம். பொதுவில் நமது சர்க்காராகட்டும் அல்லது மத்திய சர்க்காராகட்டும். தொழில் துறையில் ஒரு திட்டவட்டமான கொள்கையில்லாமல் ஒன்றுக்கொன்றுதொடர்பு இல்லாத முறையில், மாமியார் மருமகள் என்ற நிலையில் ஒற்றுமை இல்லாத முறையில் பலதும் செய்கிறார்கள், அதனால், நம் நாட்டில் தொழில் வளரப் போகிறதா ? அல்லது இருக்கும் தொழிலும் நினையாமல் போகப்போகிறதா ? என்று நான் ஐயுறுகிறேன். ஆகவே நேர்மையான ஒரு முறையில் திட்டம் வகுக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அதை அறிவுறுத்துவதற்காகத் தான் இந்த வெட்டுப் பிரேரணையை நான் கொண்டு வந்துள்ளேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தொழில் துறை மானியத்தை ஆதரித்துப் பேசுகின்ற நான் ஒரு சில கருத்துக்களை இந்தச் சட்டசபையின் முன்னால் வைக்க விருப்பப்படுகிறேன். இது குறித்து வெட்டுப் பிரேரணைகள் கொண்டு வந்திருப்பதையும், அது குறித்து பேசிய அங்கத்தினர்களின் பேச்சுக்களையும் கேட்டோம். தமிழ் நாடு இது வரையில், குறிப்பாக சென்னை மாகாணம் விவசாயத் துறையில் முன்னணியில் இருந்தது, தொழில் வளத்தில் மிகவும் மங்கி இருந்தது. அதை அதிகப் படுத்துவது அவசியம், அவசரம் என்பதை உணர்ந்து அமைச்சர் குழுவும், ஆளும் கட்சியினரும் உணர்ந்து அதற்காக எவ்வளவுதொகை ஒதுக்க முடியுமோ அவ்வளவு தொகை ஒதுக்கி வைத்து தொழில் துறையில் விருத்தி செய்யபாடுபடும் இக்காலத்தில் இந்த மான்யத்தின் மீது வெட்டுப் பிரேரணைகளை எதிர்க்கட்சியினர் கொண்டு வருகிறார்கள் என்றால் ஒன்றில் அவர்களுக்கு அதன் பேரில் நம்பிக்கை இல்லாமல் இருக்கவேண்டும் அல்லது தொழில் வளத்தை முடக்கவேண்டும் என்ற ஆசை இருக்கவேண்டும் அல்லது வழக்கம் போல அதைச் சாக்காக வைத்துக்கொண்டு இந்தத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இருக்கவேண்டும். எது எப்படியாயினும் இவைகளுக்காக தொழில் வள மான்யக் கோரிக்கையின் மேல் வெட்டுப் பிரேரணை கொண்டு வருவது என்றால் அது அவர்களுக்கு உகந்ததல்ல. ஐந்து கோடி இதற்கு என்று ஒதுக்கி வைத்திருப்பதை, 385 லட்ச ரூபாய் கன ரக தொழில்களுக்காக ஒதுக்கி வைத்திருப்பதை, 78 லட்சம் ரூபாய் குடிசைக் கைத்தொழில்களுக்காக ஒதுக்கி வைத்திருப்பதை, 9 லட்சம் ரூபாய் உதவி கொடுப்பதற்காக ஒதுக்கி வைத்திருப்பதையும் இதற்காக மும்முரமாக பாடுபட்டு ஆளும் கட்சியினர் தங்களுடைய திட்டத்தை நடத்தி வருகிறார்கள் என்பதை நாம் வரவு செலவுத் திட்டத்திலிருந்து புரிந்து கொள்ளுகிறோம். குறிப்பாக, எல்லா ஜில்லாக்களிலும் எப்படி தொழில் வளத்தை உடனடியாக பெருக்க முடியும். அவைகளுக்கு ஆக்கம் அளிக்க முடியுமென்று கருதி அவற்றிற்காக திருநெல்வேலியில் காஸ்டிக் சோடா பாக்டரியையும், மேட்டூரில் காகித உற்பத்தித் தொழிற்சாலையையும், பாபநாசத்தில் ஒரு காகித உற்பத்தி தொழிற்சாலையையும், தேன் இரும்பு தயாரிக்கும் வண்ணம் தேன் இரும்பு உற்பத்தி செய்ய இரண்டு தனியார்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருப்பதும், தஞ்சாவூரில் சர்க்கரை உற்பத்தியை அதிகப்படுத்த ஆறு லைசென்ஸ்களும் கொடுத்து ஜில்லா வாரியாக தொழில் வளத்தை அதிகப் படுத்தவேண்டுமென்ற நோக்குடன், தொழில் துறையை விருத்தி செய்ய வேண்டுமென்று மும்முரமாக அரசாங்கத்தார் மேற்கூறிய திட்டங்களைப் போட்டு இருக்கிறார்கள், இந்த ஆண்டு. சிந்திரி வளர்ந்து விட்டதே, 1-04 p.m.

முந்திரித் தொழிலும் தேய்ந்து விட்டதே என்று வடக்கே தெற்கே என்று இடக்காகப் பேசி மக்களை மடக்க ஆசைப்படும் இச்சந்தர்ப்பத்தில் முந்திரி சாகுபடிக்காக அதிகம் ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரித் திட்டம் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னீர்களே என் இது வரையில் ஆரம்பிக்க வில்லை என்று கேட்கும் கேள்விக்கு ஒன்றைத்தான் சொல்ல வேண்டும். அதற்குள்ள மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை. ஆனால் இந்த மூலப் பொருள்களை கண்டு பிடித்தவுடன், உடனடியாக பழுப்பு நிலக்கரித் திட்டத்தை ஆரம்பித்து அத்திட்டத்தில் இருந்து கிடைக்கும் உப பொருள்களையும் பயன் படுத்திக்கொள்ளும் வகையில் பல தொழிற்சாலைகள் தொடங்க வாய்ப்பு இருக்கிறது. அதே போன்று சிராமிக் இண்டஸ்ட்ரி, வர்ணக் கோப்பைகள், வர்ணப் பூச்சுகள், செயற்கை எண்ணை வகைகள் போன்றவைகள் செய்யும் தொழிற்சாலைகளையும், ஒரு தர்மல் ஸ்டேஷனும் ஆரம்பிக்கப் போகிறோம் என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கும்போது வடக்கை விட தெற்கில் மூலப் பொருள்கள் கிடைத்தவுடன் தொழில்துறை காரியங்கள் விறுவிறுப்பாக முன்னேறுகிறதைப் பார்க்கிறோம். அதை யாராலும் மறுக்க முடியாது. தமிழகத்தை தொழில் வள நாடாக மாற்ற பாடுபட்டு வருகிறோம். ஒன்று மாத்திரம் விடப்பட்டிருக்கிறது. அதுதான் மெழுகு. இங்கிலாந்தில் உள்ள மெழுகிற்கு உலக சந்தையில் எப்படி ஒரு தனி மதிப்பு இருக்கிறதோ அதே போன்று நெய்வேலியில் கிடைக்கும் மெழுகிற்கும் இருக்கும். அந்த மெழுகை ஒரு வர்த்தக பொருளாக்க ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா? ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் பேசும்போது சர்க்கரை தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதால் இப்பொழுதுள்ள நிலங்களை கரும்பு சாகுபடிக்கு மாற்றி விடுவார்கள் என்று சொல்லப்பட்டது. அது உணவுப் பொருள் உற்பத்தியைப் பாதிக்கும் என்று சொன்னார்கள். அதனால் குன்னியூர் ஐயருக்கு லாபம் அதிகம் கிடைக்கும், அதற்குத்தான் அது உபயோகப்படும் என்று சொன்னால், கரும்பு சாகுபடியை வேறு யாருடைய நிலத்திலாவது செய்துதான் ஆக வேண்டும். சர்க்கரை தொழிற்சாலை நடக்க வேண்டுமென்றால் கரும்பு இல்லாமல் முடியுமா? கரும்பு சாகுபடி செய்துதான் தீர வேண்டும். ஆகவே கரும்பு சாகுபடி எந்த நிலத்திலாவது செய்துதான் தீர வேண்டும். கரும்பு சாகுபடி செய்வதினால் உணவுப் பொருள் உற்பத்தி பாதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். உணவுப் பொருள் உற்பத்தி பாதிக்காதபடி கரும்பு சாகுபடி செய்யவேண்டுமென்று இந்த அரசாங்கம் உணர்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்து வருகிறது என்பதை அங்கத்தினர்கள் உணரவேண்டும். தொழிலை வளர்க்கும் மூலதனம் அவர்கள் கையில் இருப்பதால் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவெனில், கேரளத்திற்கு மலபாரை நாம் கொடுத்தவுடனே அங்கிருந்த சோப் பாக்டரியை நாம் இழந்துவிட்டோம். அதேபோல் கொள்ளேகால் பட்டு தொழிற்சாலையையும் நாம் இழந்து விட்டோம். பட்டுத்தொழிற்சாலையை பறிபோகிறது என்று சொன்னால் பெண்களின் உள்ளம்தான் பதைக்கிறது. ஆண்களுக்கு ஒன்றுமில்லை. கொள்ளேகால் பட்டுத் தொழிற்சாலையை பறி கொடுத்து விட்டோமே என்று பதைக்கிற பெண்களுக்கு வேறொரு பட்டுத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இந்த் அரசாங்கம் முன் வர வேண்டும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் அதைப் பற்றி ஒன்றையும் காணோம். ஆகவே ஒரு பட்டு தொழிற்சாலையை நாம் ஒரு இடத்தில் ஆரம்பிக்கவேண்டும். பட்டுப் பூச்சிகள் வளர்ப்பதற்கு வேண்டிய சூழ்நிலை கோபிச்செட்டிப்பாளயத்தில் இருப்பதால் அதைப் பற்றி ஆலோசிப்போம் என்று சென்ற ஆண்டு தொழில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்குவேண்டி ஏதாவது வேலை நடந்ததா? அப்படி அதற்கு வேண்டிய வேலைகள் ஒன்றும் நடக்காவிட்டால் ஏன் தவக்கம் ஏற்பட்டது. அதை நீக்கி இந்த அமைச்சரவர்கள் அதைத் தொடர்ந்து வேலைகள் செய்யப்படும் என்று சொன்னால்



நல்லது. அங்கு மல்பறி ப்ரீஸ்-யை நல்ல முறையில் வளர்க்க முடியும். ஆமணக்கில் பட்டுப்பூச்சியை சுலபமாக வளர்க்கலாமென்று சொல்கிறார்கள். இதற்கு வேண்டிய வழிகளைச் செய்வார்களேயானால் இந்த பட்டுத் தொழிலைப் பறிகொடுத்தோமே என்ற பதைபதைப்பு குறைந்துவிடும்.

அதே மாதிரி சோப் பாக்டரி ஒன்றை கோழிக்கோடில் வைத்து சோப் உற்பத்தி செய்து வந்தார்கள், கோழிக்கோடில் இந்த பாக்டரியை வைத்ததற்குக் காரணம் அங்கு தேங்காயெண்ணை நிறைய இருந்தது. அந்த தேங்காயெண்ணை இங்கேயில்லையே என்று அச்சப்படலாம். ஆனால் தஞ்சையிலிருந்து வரும் அங்கத்தினர் சீனிவாச அய்யர் அவர்கள் பட்டுக்கோட்டையில் கோழிக்கோடோடு போட்டி போடக்கூடிய அளவு தேங்காய் உற்பத்தியாகிறது என்று சொன்னார்கள். ஆகையால் பட்டுக்கோட்டை பகுதியில் கயிறு திரிக்கும் கட்சி கயிறு திரிக்கிறது என்று சொல்வார்கள். கயிறு முறுக்கும் தொழிற்சாலையை பட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். கயிறு முறுக்கும் தொழிற்சாலையையும் சோப் பாக்டரியையும் இணைத்து ஆரம்பித்தால், தொழில் வளத்திலே பிற்போக்கான தஞ்சை மாவட்டம் விவசாயத்தோடு தொழிலையும் வளர்த்து முன்னேற வழியேற்படும். இதனால் இரண்டு பிரச்னைகள் தீர்ந்ததான நிலைமை ஏற்படும்.

குடிசைத் தொழிலாக ராமநாதபுரத்திலே செய்யப்படும் பெண்கள் அழகு பைகளும், தஞ்சை மாவட்டத்திலே செய்யப்படும் நெட்டி நுண்கலை வேலைகளும் அமெரிக்க சந்தைக் கடையில் நன்றாக விற்பதாகவும், இன்னும் அதிகம் தேவை என்று கேட்டபோது நம்மால் முற்றிலும் அனுப்ப முடியாமல் சங்கடம் இருந்தது போலும் தெரியவருகிறது. ராமநாதபுரத்திலே பனை ஓலைகளால் செய்யப்பட்ட கூடைகள், அழகுப் பைகள், தஞ்சையில் செய்யப்படும் நெட்டி வேலைகள் அமெரிக்காவில் இப்படி பான்ஸி பொருள்களாக வாங்குவதற்கு காத்துக் கொண்டிருக்கிறார்களாம் மக்கள். அந்த நிலையை மேலும் மேலும் விருத்தி செய்யவேண்டுமென்றால், தஞ்சையில் ஒரு நுண்கலைக் கூடத்தையும், ராமநாதபுரத்திலே ஒரு நுண்கலைக் கூடத்தையும் ஏற்படுத்தி அதிக உற்பத்தி செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். இப்படி கலைத்திறன் படைத்தவர்களை ஒன்றாகத் திரட்டி அவர்களுக்கு வேண்டிய வேலை கூலிகளைக் கொடுத்து, உற்பத்தி செய்து, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய முன் வருவோமேயானால் நமது அன்னிய செலவாணி நிலைமை முன்னேற வழியேற்படும். இதை அமைச்சரவர்கள் கவனிக்கவேண்டும். 6 அணாவிற்கு பனை ஓலைப்பை ராமேஸ்வரத்தின் சுற்றுப்புரத்திலே விற்கப்படுகிறது. அது இங்கே வந்த பிறகு ரூபாய் கணக்கில் விற்கப்படுகிறது, அதுவே அமெரிக்காவுக்குப் போனால் எத்தனை டாலர் கணக்கில் விற்குமோ தெரியாது. இந்தப் பைகள்போன்ற பொருள்களின் விற்பனை அதிகப்படுமானால் நமக்கு அன்னிய செலாவணியும் செல்வாக்கும் இருக்கும். இதனால் நாமும் முன்னேறலாம்.

சிறு கைத்தொழில்களுக்கு உதவி இந்த மானியத்திலே ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. நாம் இப்போது சிறு சிறு கைத்தொழில்களுக்கு கிராண்ட் கொடுக்கிறோம். கைத்தொழில் ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி, பணத்தை வாங்கி அதைக் கொண்டு வீடு கட்டி அதில் வரக்கூடிய வாடகைப் பணத்தைக் கொண்டு கடனைத் தீர்த்து விடலாம் என்று திட்டம் போடுகிறார்கள். நாம் கொடுப்பது தொழில் வளர்ச்சிக்காக, நல்ல தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று 9 லட்சம் ரூபாயை ஒதுக்கி வைத்திருக்கிறோம். ஆயிரக்கணக்கில் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கொடுத்து அதை தொழிலுக்குப் பயன் படுத்தவேண்டுமே தவிற, தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு உபயோகப்படுத்த வேண்டுமே தவிற, கடனை வாங்கி அதை சொந்த நலனுக்கு உபயோகப்படுத்தினால் நாம் கொடுக்கும் பணம் நல்ல முறையில் பயன்பட்டதாகாது. ஆகவே அமைச்சரவர்கள் 6 மாதத்திற்கொரு முறை கொடுக்கப்பட்ட பணமானது தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறதா, அது நல்ல முறையில் செலவழிக்கப்

[Srimathi T. N. Anandanayaki] [23rd July 1957

படுகிறதா,. அது நல்ல முறையில் பயன் தருகிறதா என்பது பற்றி கண்காணிப்பு வைத்துக் கொண்டால், நன்றாக இருக்கும். அப்படி இருந்தால்தான் நம் பணம் நல்ல முறையில் பயன் படுத்தப்பட்டது என்று சொல்ல முடியும்.

**Industrial housing** என்ற துறைக்கு வரும்போது தொழில்துறையிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக 12 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நாம் உடனடியாக வீடு கட்டிக் கொடுக்காவிட்டாலும் தனித் துறையில் அதாவது பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக் மில் போன்றவைகளின் முதலாளிகளைத் தங்கள் தொழிலாளர்களுக்கு கட்டாயமாக வீடு கட்ட வேண்டுமென்று சொல்லி, அதற்கு வேண்டிய பணத்தை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுவிடலாம். நம் அரசாங்கம் அதில் 4-ல் ஒரு பாகத்தை கொடுக்க வேண்டுமென்று இருப்பதால்தான் தயக்கம் காட்டுகிறார்கள் என்று கூறுகிறார்கள், அந்தத் தயக்கத்தைநீக்கி பணத்தை சம்பாதித்து நல்ல வசதிகளைச் செய்து கொடுப்போமானால் தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலை ஏற்படும், தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கும்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி வருவோமானால் மிக மிக நல்லதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

ஆகவே இந்த வெட்டுப் பிரேரணையை எதிர்த்து, கனம் அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து, இன்னும் அதிகத் தொகையை ஒதுக்கி, செலவழித்து, தொழில்களை வளர்க்க வேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri S. C. SADAYAPPA MUDALIAR:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்தச் சபையிலே தொழில் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். அரக்கோணம் தாலூகாவிலே சுமார் 5 கோடி ரூபாய் செலவிலே, ஆயிரம் எக்கர் விஸ்தீரணமுள்ள இடத்திலே பல கட்டிடங்களிலே தொழிற்சாலைகள் அமைக்கக்கூடிய எல்லாவிதமான வசதிகள் இருந்தும், அந்த இடத்திலே ஒரு தொழிலை ஆரம்பிக்கவேண்டுமென்று பல முறை அமைச்சர்களிடத்திலே தெரிவித்தும், எந்த விதமான தொழில்களும் அமைக்க வேண்டிய வசதிகள் செய்யவில்லை என்பதை அமைச்சரவர்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப் படுகிறேன். ஆனால் தொழில் அங்கு இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை. பல வருஷங்களாக அந்த இடத்திலே கட்டிடங்கள் இருந்தும், தொழிலுக்கு ஏற்ற முறையில் சூழ்நிலை இருந்தும் அங்கு ஒன்றும் ஏற்படுத்தவில்லையே என்று மக்களுடைய நினைப்பு அதிகரித்திருக்கிறது என்று எடுத்துக் காட்டுவதற்காகவே இதனைச் சொல்லுகிறேன். அந்த இடம் மத்திய சர்க்காருக்குச் சொந்தமாக இருந்தும் கூடதொழில்கள் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலைகள் அங்கு இருக்கின்றன என்பதை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துவிட்டு, மற்றும் நெசவாளர்களுடைய நிலைமையைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கனம் அமைச்சர் அவர்களுக்கு தொழிலாளர்களுடைய நிலைமை என்ன என்பது பல வருஷங்களாகத் தெரியுமென்று பல அங்கத்தினர்கள் எதிர்க் கட்சியிலும்கூட ஆதரித்துப் பேசினார்கள். எனவே, ஒரு மாதிரியாக அம்மாதிரியே நெசவாளர்களுடைய நிலையைப் பற்றியும் தெரிந்திருப்பார் என்று நினைத்து அந்த நெசவாளர்களுக்கு இருக்கக் கூடிய குறைகளையும் கஷ்டங்களையும் தீர்ப்பதற்கு வேண்டிய புதிய முறையை அமைத்து, இந்த நாட்டிலே இருக்கிற கைத்தறி நெசவாளர்களுடைய நிலையை மாற்றுவதற்கு ஒரு சரியான முறையை அமைக்கப் பாடுபடுவார் என்று நம்புகிறேன். நெசவாளர்களுக்கு சர்க்கார் பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். அதிலும் கூட்டுறவு முறையில் சேர்ந்தவர்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. இன்றைக்கு கூட்டுறவு சங்கங்களில் $1\frac{1}{2}$ லட்சம் நெசவாளர்கள் சேர்ந்திருக்கிறார்கள். மற்றவர்கள், தனிப்பட்டவர்களிடத்திலே மாஸ்டர்களிடத்திலே வேலை செய்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். $1\frac{1}{2}$ லட்சம் தறிக்காரர்களுக்கு மட்டும் சர்க்கார் பல நன்மைகள் செய்து வருகிறார்கள். அதனால் அவர்களுக்கு தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. இதனால் அவர்களது வாழ்க்கை நிலை ஓரளவு உயர்ந்திருக்கிறது.



23rd July 1957] [Sri S. C. Sadayappa Mudaliar]

என்று நினைக்கிறேன். ஆனால் பெரும்பாலான தறிகள் வெளியிலே இருப்பதைப்பற்றி சர்க்கார் நினைக்காமல், கூட்டுறவு சங்கத்திலே சேர்ந்தபிறகுதான் அவர்களுடைய நிலையை கவனிக்கவேண்டுமென்ற நினைப்பிலே இருப்பதனால் இது அதிர்ச்சி கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இப்படி அவர்கள் கூட்டுறவு சங்கத்திலே சேர்வதற்கு ஏன் கஷ்டப்படுகிறார்கள் என்று சிந்தித்துப் பார்த்தால், எவ்வளவு தூரம் கடன் பட்ட நிலையிலே சங்கத்திலே சேர்வதற்கு மாஸ்டர் வீவரிடமிருந்து விடுபட்டு சங்கத்தில் சேர்வதற்கு முடியாமல் இருக்கிறார்கள் என்று சர்க்காருக்குத் தெரியும்.

இப்பொழுதுள்ள நிலைமையில் சர்க்கார் எவ்வளவு கடன் வசதி செய்து கொடுத்தாலும் நெசவாளிகள் அந்த வசதிகளை அனுபவிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். பல கஷ்டங்களுடன் தான் நெசவாளிகள் வேலை செய்து கெண்டுவருகிறார்கள். அவர்களுடைய நிலை ரொம்பவும் மோசமானதாக இருக்கிறது. அவர்களை தொழிலாளர்களாகவும் கருத முடியவில்லை. அப்படி இருந்தாலும் அவர்களுக்குத் தொழிலாளர்கள் என்ற முறையில் ஏதாகிலும் நிவாரணம் கிடைக்கும், அல்லது அவர்கள் மற்றவர்களாக இருக்கவேண்டும். நெசவாளிகள் என்ன வேலை செய்தாலும் அவர்களுக்கு வேண்டிய ஊதியம் கிடைக்கவில்லை. அவர்கள் ஜீவனம் செய்வதற்குக் கூட அவர்களுக்குக் கூலி கிடைக்கவில்லை. அவர்களுக்குச் சர்க்கார் கடன் வசதி இன்னும் மற்ற வசதிகள் செய்து கொடுத்தாலும் அவர்களுடைய நிலைமை முன்னேற்றமடையவில்லை. ஏதோ ஓரளவு அவர்களுக்குச் சர்க்கார் நன்மை செய்கிறார்கள். கடன் கேட்டால் சங்கங்கள் மூலமாக பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைக்குத் தக்கவாறு அவர்களுக்குக் கூலிகள் கிடைக்கிறதா என்றால் அப்படி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் நாலணாவுக்குக் கூட அவர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை. இது சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய நிலைமையை அறிந்து நாட்டிலுள்ள $3\frac{1}{2}$ லட்சம் நெசவாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **Sri A. GOVINDASAMY:** கனம் உதவி தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசும் காலத்தில் என் பேரால் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையையும் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். நெய்வேலி திட்டத்திற்கு இது வரையிலும் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். இந்த திட்டம் வெற்றி பெருவதற்கு மத்திய சர்க்கார் கொடுப்பது 70 கோடி ரூபாய், அவ்வளவு மத்திய சர்க்கார் செலவு செய்யப் போவதாகவும் சொல்லப்படுகிறது. ஏன் இந்த திட்டத்தை மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன். இந்த திட்டத்தை ராஜ்ய சர்க்காரே எடுத்து நடத்தக் கூடாதா? அதை எடுத்து நடத்த ராஜ்ய சர்க்காருக்கு நிதி இல்லை என்றால் ஏன் மத்திய சர்க்காரிடமிருந்து கடன் வாங்கி அதை நடத்தக் கூடாது என்று கேட்கிறேன். நாங்கள் "வடக்கு வளருகிறது தெற்கு தேய்கிறது" என்று சொன்னால் ஏன் கோபம் வருகிறது. நாங்கள் அடுக்கு மொழிக்காக அப்படிச் சொல்லவில்லை. அழகான வார்த்தைகளுக்காக அப்படிச் சொல்லவில்லை. உண்மையைப் பார்த்து புரிந்து கொண்டுதான் அப்படிச் சொல்லுகிறோம். அதை மறுக்க முடியாது. இந்த சர்க்கார் விரும்பினால் இந்த 70 கோடி ரூபாயை சுலபமாக கடனாகப் பெறலாம். மத்திய சர்க்கார் கொடுக்காவிட்டாலும் மக்களிடமிருந்து சுலபமாக வாங்கலாம். அப்படி வாங்கி ஏன் இந்த திட்டத்தை இந்த அரசாங்கம் எடுத்து நடத்துக்கூடாது என்று கேட்கிறேன். நன்மை அளிக்கக் கூடிய பெரிய திட்டங்களை ஏன் இந்த அரசாங்கம் எடுத்து நடத்தவில்லை? வருமானம் வரக்கூடிய பல திட்டங்களை மத்திய அரசாங்கத்திற்கு விட்டுவிட்டு நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் ஏன் மத்திய அரசாங்கத்தை பிச்சை கேட்க வேண்டும் என்று கேட்கிறேன். எதற்கெடுத்தாலும்

[Sri A. Govindasamy] [23rd July 1957

நாம் என் மத்திய அரசாங்கத்தினிடம் பணத்திற்குப் போக வேண்டும் இதைத்தான் நாங்கள் அடிக்கடி சுட்டிக் காட்டுகிறோம். "வடக்கு வளருகிறது தெற்கு தேய்கிறது" என்று சொல்லி வருகிறோம்.

நாங்கள் எதற்காக வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்து எங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்காகத்தான் வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கிறோம். அதை பயன்படுத்திக் கொண்டுதான் ஆளும் கட்சியிலுள்ளவர்களும் தங்களுடையக் குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வசதியாக இருக்கிறது. இப்பொழுது பட்டுப் புடவையும் பரிமளமும் நம் நாட்டை விட்டுப் பறி போய்விட்டது (சிரிப்பு). கேரளம் போனதால் நமக்கு சந்தனம் போய் விட்டது. கன்னடம் போனதால் பட்டு போய் விட்டது என்று நினைக்க வேண்டாம். சந்தன சோப்பும் போய் விட்டது என்று நினைக்க வேண்டாம். சோப் பாக்டரியை தமிழ் நாட்டில் நிலவுவதற்கு வேண்டிய வசதி இருக்கிறது. இதைப்பற்றி நான் ஏற்கெனவே கனம் மந்திரி அவர்களிடம் சொல்லி இருக்கிறேன். தென்னாற்காடு, வட ஆற்காடு முதலிய இடங்களில் சோப் பாக்டரியை அமைப்பதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. அப்படியே அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பட்டுத் தொழிற்சாலையும் சந்தன சோப்பு பேக்டரியையும் அமைத்து அம்மையார் அனந்தநாயகி அவர்கள் குறைகளைத் தீர்க்க அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கைத்தரி நெசவாளர்களுடைய பிரச்னை. அரசாங்கம் கதர் கொள்கை சம்பந்தமாக அதிகம் செலவு செய்து வருகிறது. அந்த அளவில் நாம் கைத்தறி நெசவாளர்களுடைய விஷயத்தில் செலவு செய்தால் அவர்கள் எவ்வளவோ முன்னேற்றமடைவார்கள். அவர்களுடைய பிரச்னை தீர்ந்து விடும். நெசவாளர்களுக்கென்று 146 லட்சம் ஒதுக்கி விட்டோம் அவர்களுக்கு கடன் வசதிகள் செய்து விட்டோம் என்று சொல்லி விட்டால் மட்டும் போதாது. உள்ளபடியே அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதினால் ஏதாகிலும் அவர்களுக்குத் திட்டம் வகுத்தே தீரவேண்டும். அதற்கு அரசாங்கம் முன் வந்தால் தான் முடியும். இதற்கு முன்பு இருந்த ராஜாஜி மந்திரி சபை கைத்தறிக்கு சேலையும் வேட்டியும் ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை ஏகமனதாக நிறைவேற்றியது. ராஜாஜி கொண்டு வரும் தீர்மானங்களையெல்லாம் எதிர்த்துக்கொண்டு வந்தவர்கள் கூட நெசவாளர்கள் சம்பந்தமான தீர்மானத்தை ஏக மனதாக ஆதரித்தார்கள். 40-ம் நம்பர் கரை போட்ட வேஷ்டியும், புடவையும், கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. அப்படித் தீர்மானம் செய்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டதா என்று கேட்கிறேன். தேசத்தின் ஒப்பற்ற தலைவர், மாஜி கவர்னர்-ஜெனரல், அரசியல் தலைவர் போன்றவர்கள் போட்ட தீர்மானத்தையே மத்திய அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னை எப்படி தீரும் என்பதை யோசிக்கவேண்டும். இன்றைய தினம் மில் முதலாளிகள் அதிகமாக வட நாட்டில்தான் இருக்கிறார்கள். அதிகமான கைத்தறி நெசவாளர்கள் வட நாட்டில் இல்லை. அதனால் தான் நாம் தீர்மானம் செய்து அனுப்பிய தீர்மானத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கைத்தறி தொழில் அதிகமாக வட நாட்டில் இல்லாத காரணத்தினால்தான் கைத்தறி தொழில் அதிகமாக பாதிக்கப்படுகிறது. அதனால்தான் தென்னாடு பாதிக்கப்படுகிறது என்று நாங்கள் அடிக்கடி சொல்லி வருகிறோம். நாங்கள் அடிக்கடி சுட்டிக் காட்டி வருவதில் உண்மை இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இதை கனம் மந்திரி அவர்களும் உணரவேண்டும். ஆகவே இதற்கு அவர்கள் தக்க பதில் சொல்லவேண்டும். மீண்டும் இந்த தீர்மானத்தை வலியுறுத்த வேண்டும். காஞ்சிவரம், குறிஞ்சிப்பாடி, முதலில் முதல் மந்திரி அவர்கள் தேர்தலில் நின்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த இடமாகிய குடியாத்தத்தில், ஆக மூன்று இடங்களில் நூல் ஆலைகளை ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார்கள். அப்படி ஏற்படுத்தினால் நெசவாளர்களுடைய பிரச்னை



23rd July 1957] [Sri A. Govindasamy]

தீர்ந்து விடும் என்றும் குறிப்பிட்டார்கள். அதனால் நெசவாளர்களுக்கு வேண்டிய நூல் கிடைக்கும். ஆகவே இந்த நூல் ஆலைகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

நெய்வேலி திட்டம் சம்பந்தமாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் நெய்வேலியில் கிடைக்கக் கூடிய உப பொருள்களை வைத்துக் கொண்டு வண்ணக்கலவைகள், இன்சுலேட்டர்கள், பீங்கான் சமான்கள் முதலியவைகளைச் செய்யப்போகிறோம் என்று சொல்லி இருக்கிறார். இப்படிப்பட்ட தொழில்களை தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப் போவதாகவும் சொல்லி இருக்கிறார். என் இவைகளை சர்க்காரே எடுத்து நடத்தக்கூடாது என்று கேட்கிறேன். அரசாங்கம் பெரிய தொழில்களை எடுத்து நடத்த முன் வரவேண்டும். அதற்கு பதிலாக ஏதோ செருப்பு தொழிலையும், வத்திப் பெட்டித் தொழிலையும் ஆரம்பித்து நடத்தி வருகிறோம் என்று சொல்லி விட்டால் போதாது. இப்படிப்பட்ட தொழில்களை நடத்தி வருகிறோம் என்று சொல்வதைப் பார்த்தால் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு). பொருப்புள்ளவர்கள் நல்ல தொழில்களை எடுத்து நடத்த முன் வரவேண்டும். சிவகாசியில் இப்பொழுது வத்திப் பெட்டி தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது. அந்த தொழிலை தனிப்பட்டவர்களுக்கு என் கொடுக்க வேண்டும். அரசாங்கம் சிறிய தொழில்களை எடுத்து நடத்தக்கூடாது. இதனால் தனியார் பாதிக்கப்படுவர் ஆகவே பெரிய வருமானம் வரக்கூடிய தொழில்களை எடுத்து நடத்த அரசாங்கம் முன் வரவேண்டும் (ஒரு குரல்: அப்பளத் தொழில்) சிறு தொழிலாகிய அப்பளத் தொழிலை அரசாங்கம் ஆரம்பித்து நடத்துகிறார்கள். அதற்கெல்லாம் அம்மாமிகள் இருக்கிறார்கள். அவர்களிடம் அதை விட்டு விடலாம். அம்மாமிகள் நடத்தும் அப்பளத் தொழிலை அரசாங்கம் நடத்த தேவை இல்லை. 14 சிறுதொழில்களுக்கு விளம்பரப் படுத்துவதற்கு என்று 98,000 ரூபாய் செலவு செய்யப்படும் என்று சொல்லுகிறார்கள். சென்னையில் இண்டஸ்ட்ரியல் மியூசியம் இருக்கிறது. சென்னையில் செய்யப்படுகிற பொருள்களையெல்லாம் அங்கே அனுப்பி விளம்பரமும் விற்பனையும் செய்யப்படுகிறது. அதற்காக அரசாங்கம் 5,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அது நல்ல விளம்பர ஸ்தாபனமாக இருக்கிறது. அதை 20,000 க்கு உயர்த்த வேண்டும். அதற்கு என்று தனியாக ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்றால் 50,000 ரூபாய் மத்ய சர்க்காரிடமிருந்து கிடைத்திருக்கிறது. ராஜாஜி ஹாலுக்கு எதிரில் ஒரு அஸ்திவாரக் கல் நாட்டினார்கள். ஆனால் இன்னும் கட்டிடம் கட்டப்படவில்லை. இதையெல்லாம் தான் அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாளைய தினம் தொழில் மந்திரி அவர்கள் இண்டஸ்டிரியல் மியூசியத்தைப் பார்க்கப் போவதாக தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்த ஸ்தாபனத்தில் எனக்கு தொடர்பும் பொறுப்பும் இருக்கிறது என்று சொல்லுகிறேன். அதனுடைய அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே நல்ல முறையில் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. அரசியலாருடைய பொருள்களுக்கு விளம்பரம் அவசியமாக இருக்கிறது. ஆகவே விளம்பரத்தைத் தனியாக ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்திப் பணம் விரையம் செய்யாமல் இந்த இண்டஸ்டிரியல் மியூசியம் மூலம் நடத்தலாம்—அதற்கு வேண்டிய வசதியை செய்துதர அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் எங்களுடைய மாவட்டத்தில் மணிலாக் கொட்டை அதிகமாக உற்பத்தியாகிறது. அதைக் கொண்டு வனஸ்பதி செய்யலாம் என்று ஒரு ஆலையை அமைத்தார்கள். இதைப்பற்றி கனம் கருணாநிதி அவர்கள் கூட குறிப்பிட்டார். விழுப்புரத்தில் அதற்கு என்று கட்டிடம் கட்டி யந்தரங்கள் முதலியவைகளை வாங்கி வந்து ஆலையை அமைத்தார்கள். அரசாங்கம் உதவியும் செய்தது. இப்படி இருந்தும் ஏதோ காரணத்தால் அந்த ஆலை வேலை செய்யாமல் நின்று விட்டது. இதை மறுபடியும் ஆரம்பிக்க அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER**: The hon. Member has got one

[23rd July 1957

**Sri A. GOVINDASAMY :** அரசாங்கம் இந்த சிறு தொழில் நடத்துகிறவர்களுக்கு மான்யம் வழங்கும்போது கட்சி பாகுபாடு பாராமல் யார் யார் எந்தத் தொழில்களில் உண்மையிலேயே ஈடுபட்டிருக்கிறார்களோ, அதைக் கவனித்து தொழில் முன்னேற்றத்திற்கு வேண்டிய வழியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை இந்த அளவு நிறுத்திக்கொள்ளுகின்றேன்.

**Sri S. LAKSHMANA GOUNDER :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் தொழில் மான்யத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, சேர்வராயன் மலையை அடுத்து அலுமினியம் தயார் செய்வதற்கான மூலப் பொருள்கள் கிடைப்பதை வேறு இடங்களுக்கு எடுத்துக் கொண்டு போய் பரீட்சை செய்து பார்ப்பதற்கு அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது. அது நல்ல முறையிலே வெற்றிபெறும் என்று எல்லோருக்கும் நம்பிக்கை இருக்கிறது, என்பதால் அதற்காக ஒரு பெரிய தொழிற்சாலையை சேலம் ஜில்லாவிலேயே மேட்டூரிலே கட்டுவதாக சர்க்கார் உத்தேசம் செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. சேர்வராயன் மலையிலிருந்து அலுமினியத்தை மேட்டூர் தொழிற்சாலைக்குக் கொண்டு வருவதற்கு 32 மைல் தூரம் இருக்கிறது. அதனால் அதிகச் செலவாகும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, அந்தத் தொழிற்சாலையை சேர்வராயன் மலையை அடுத்துள்ள டேனிஸ்பேட்டை என்ற இடத்தில் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். காரணம், அங்கு அதற்கு வேண்டிய வசதியும் இருக்கிறது. தொழிற்சாலையைக் கட்டுவதற்கு வசதியான நிறைய இடம் அங்கே இருக்கிறது.

"டேனிஸ்பேட்டையில் தொழிற்சாலையைக் கட்டுவதற்கு மின்சார வசதி இல்லை, வேண்டிய ஜல வசதி இல்லை, ஆகவே தான் மேட்டூரில் கட்டுகிறோம்" என்று சொல்லுகிறார்கள். வாஸ்தவம்தான். இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக அங்கு அந்தத் தொழிற்சாலையைக் கொண்டு போவது சரியல்ல என்று நான் சொல்லுகிறேன். காரணம் என்னவென்றால், அங்கு வேண்டிய தண்ணீர் போதவில்லை, மேட்டூரில் தான் அந்தத் தொழிற்சாலையை நடத்த முடியும் என்று சொல்லுகிறார்கள் ஆனால் உண்மையிலேயே தொப்பையார் ஓடி வருகிறது. வரண்ட காலத்திலும் அங்கு தண்ணீர் வருகிறது. தினம் மூன்று லட்சம் காலன் தண்ணீர் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படி வேண்டுமென்றாலும், மூன்று லட்சம் காலனுக்கு அதிகமான தண்ணீர் தொப்பையாற்றிலிருந்து கிடைக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆற்றில் எப்பொழுதும் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. தண்ணீர் இன்மை என்ற காரணத்திற்காக இங்கு வைக்கவேண்டிய தொழிற்சாலையை மேட்டூரில் கட்டுவது கூடாது என்ற என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மேட்டூரில் ஏற்கெனவே ஒரு கெமிகல் தொழிற்சாலையும், ஒரு துணி நெய்யும் ஆலையும் இருக்கிறது. இந்த அலுமினியம் உற்பத்தித் தொழிற்சாலையையும் அங்கு கொண்டு போய் வைத்துக்கொண்டால், அங்கிருக்கும் ஜனங்களுக்கு ஓரளவு உதவுமே யொழிய—அவர்களுக்கு உதவ கூடாதென்பது என்னுடைய நோக்கம் அல்ல—மற்ற இடங்களில் இருப்பவர்களுக்கு உதவ முடியாது. பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் போது, அவைகளைப் பலப்பல இடங்களில் கட்டினால் தான் அந்தந்த இடத்திலுள்ள மக்களுக்கு வசதி இருக்கும். ஏற்கெனவே இங்கு இருக்கும் தொழிலாளர்களுக்கு வசதி வேண்டும். அதோடு சர்க்காருடைய செலவும் குறையும். நிறைய தொழிலாளர்களுக்கும் இடம் கிடைக்கும். மேட்டூரில் கட்டினால் அங்கு உள்ளவர்களுக்கு வேலை கிடைக்கும். வேலை செய்யும் போது கூட அவர்களுக்கு சில வசதிகள் ஏற்படுகின்றன. தொழிலாளர்கள் ஒரே இடத்தில் இருந்தால் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு ரொம்ப சாதகமாக இருக்கும். ஆதலால், தொழிற்சாலைகளை பலப்பல



23rd July 1957] [Sri S. Lakshmana Gounder]

இடங்களில் பிரித்து வைக்க வேண்டும். தண்ணீர் வேண்டுமென்றால், தொப்பையாறு திட்டம் இருக்கிறது. தொப்பையாறு நீர்ப்பாசனத்திற்காக கட்டவேண்டுமென்று முன்பே நமது சர்க்காரிலே ஒரு திட்டம் போடப் பட்டது. 79 லட்சம் ரூபாயில் ஒரு அணையைக் கட்டி முடித்தால், விவசாயிகளுக்கு ஓரளவு தண்ணீர் நிறையக் கிடைக்கும், இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் பாய வசதி இருக்கும். எவ்வளவு காலன் தண்ணீர் வேண்டுமானாலும் தொழிற்சாலையை நடத்துவதற்கு வசதி இருக்கிறது. ஆகையால், தொப்பையாறு திட்டத்தைக் கட்டினால் விவசாயிகளுக்கு நல்ல முறையிலே வசதி ஏற்படுகிறது. தொழிற்சாலைக்கும் வேண்டிய தண்ணீர் கிடைக்கும். அப்பொழுது அந்த வட்டாரத்திலுள்ள தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும். ஆகவே, நான் திரும்பத் திரும்ப வேண்டிக்கொள்வது என்னவென்றால், அலுமினியம் தொழிற்சாலையை டேனிஸ்பேட்டையில் கட்டுவதற்கு சர்க்கார் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சேலம் ஜில்லா கம்பளித் தொழிலுக்கு மிகவும் பேர்போனவை. ரத்னக் கம்பளங்களின் உற்பத்திக்கு சேலம் ஜில்லா மிகப் பிரசித்தி பெற்றது. சேலம் ரத்னக் கம்பளங்கள் என்றால், வெளிநாட்டு மார்க்கெட்டில் அவை மிகப் பிரபலம் வாய்ந்தவை என்று தொழில் நிபுணர்களே சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். ரத்னக் கம்பளத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளிகள் சேலம் டவுனிலும், சுற்றுப்புறக் கிராமங்களிலும் இருக்கிறார்கள். மூவாயிரம் ஆண்கள், பெண்கள் இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ரத்னக் கம்பளத் உற்பத்தித் தொழில் ரொம்ப நல்ல தொழில். விலையுயர்ந்த கம்பளங்கள் தயாரிக்கப்பட்டு மேல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, நம் நாட்டுக்கு வருமானம் வந்துகொண்டிருந்தது. அந்த வருமானத்தைக் கொண்டு அதிகப்படியான தொழிலாளர்கள் நல்ல முறையிலே வாழ்ந்து வந்தார்கள். அந்த வேலை திடீரென்று நிறுத்தப் பட்டு விட்டதன் காரணம் என்னவென்று சொன்னால், வெளிநாடுகளிலேயும் இம்மாதிரி கம்பளங்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்து விட்டார்கள். ஏற்பாடு செய்த போதிலும் தங்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களாகிய ஆட்டு ரோமத்தை அதிகப்படியாக நம் நாட்டிலிருந்து தான் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இங்கிருந்து ஆட்டு ரோமத்தை அவர்கள் பெற்று, அதிலிருந்து நூல்கள் நூற்று, அதிலிருந்து இம்மாதிரியான கம்பளங்களை செய்துகொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டு மார்க்கெட்டு இங்கு உற்பத்தியாகும் கம்பளங்கள் போகாவிட்டாலுங் கூட, இங்கும் பழைய படியே கம்பளங்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். அவைகள் சரியான விலைக்கு உள்நாட்டிலும் போவது இல்லை. லட்சக்கணக்கான ஜனங்கள் இம்மாதிரி கம்பளங்கள் தயாரான போதிலும், அவைகளை வாங்கும் வசதி இங்கு இல்லை. நம் நாட்டிலிருந்து ஆட்டு ரோமங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது கண்டிப்பாக நிறுத்தப்பட வேண்டும். ஆட்டு ரோமங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை நிறுத்தி, அவைகளைக் கொண்டு இங்கேயே கம்பளங்கள் பழையபடி தயார் செய்தால், அவசியம் வெளி நாடுகளில் இவைகளுக்குக் கிராக்கி ஏற்படும். அவர்கள் எப்படியும் நம்மிடம் தான் கம்பளி வாங்கித் தீரவேண்டும்.

நான் அந்தத் தொழிலில் குறைந்தது 20 வருஷ காலம் அனுபவப் பட்டிருக்கிறேன். அதிலே நான் தேர்ச்சி பெற்றிருக்கிறேன். அந்த நெசவு தொழிலின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையுள்ள நுணுக்கங்களை நான் நன்கு தெரிந்திருக்கிறேன். இதைப்பற்றி அமெரிக்காவிலுள்ள பெரிய நிபுணர் எனக்கு சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். ரத்னக் கம்பளத் தொழிலின் நுணுக்கத்தை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை நல்ல முறையில் தெரிந்து கொள்ள பல நிபுணர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். ஐந்து வருஷ காலத்திற்கு முன்பாக சர்க்காருக்கு நான் ஒரு திட்டம் கொடுத்திருக்கிறேன். சேலம் ஜில்லாவில் மாமூலாக இந்த தொழிலைச் செய்துக்கொண்டிருந்த 3,000 தொழிலாளர்கள் இன்று சும்மா இருக்கிறார்கள். சிலர் விவசாயம் செய்கிறார்கள். இன்னும் சிலர் வேறு வேலை செய்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலை சேலம் ஜில்லாவில் நல்ல முறையில் செய்வதற்கு தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும். நம்

[Sri S. Lakshmana Gounder] [23rd July 1957

நாட்டில் இந்தத் தொழிலைச் செய்வதற்கு நிறைய வசதி இருக்கிறது. ஆட்டு உரோமங்களை நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யாமல், அவைகளைக் கொண்டு இங்கேயே சின்ன சின்ன தொழிற்சாலைகளை ஆங்காங்கே ஏற்படுத்தினால், நல்ல முறையில் கம்பளங்களைத் தயாரிக்க முடியும். ஆகவே, சர்க்கார் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் நல்ல வருமானம் கிடைக்கும். தொழிலாளர்களுக்கும் பிழைக்க வழி ஏற்படும். தெரிந்து சொல்கிறேன். உண்மையிலேயே ரத்னக் கம்பளத் தொழிலுக்கு சர்க்கார் எந்த விதமான பாதுகாப்பும் அளிக்காமல் இருப்பதைப்பற்றி சர்க்கார் சிந்தித்துப்பார்க்க வேண்டும். சிந்தித்துப் பார்த்தால், அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டால், ஆயிரக் கணக்கான மக்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

சேலம் ஜில்லாவில் பெரிய இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு 68 கோடி ரூபாய் வரை மதிப்பீடு செய்திருக்கிறார்கள் 52 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால், இன்னும் அது ஆரம்பிக்கபடுவதாகக் காணோம். நெய்வேலியில் நல்ல பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. ஆனால், அது இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு சாத்தியபடாது என்றும் சொல்லப்படுகிறது. பழுப்பு நிலக்கரியை நல்ல எரி பொருளாக மாற்றுவதற்கு அதிகச் செலவு ஆகும் என்று சொல்லப்படுகிறது. நிலக்கரியை உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக மின்சார சக்தியை உபயோகப்படுத்தவேண்டுமென்றாலும் அதற்கும் அதிகச் செலவு ஆகும் என்பதால், இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் விஷயத்தில் மெள்ள மெள்ளத் தான் போகவேண்டுமென்று சொல்கிறார்கள். இருந்தாலும் அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு வழி வகைகளை நாம் காணவேண்டுவது அவசியம். ஏன் நான் இப்படிச் சொல்கிறேன் என்றால், பெரிய பெரிய கனரகத் தொழில்கள் ஏற்படுத்தினால் தான் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கிடைக்கும், நல்ல முறையில் மக்கள் வாழ்வதற்கு முடியும். வேலையில்லாப் பிரச்னையும் அப்போதுதான் தீரும். ஆகவே, சேலம் ஜில்லாவில் கட்சி இருக்கும் இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு உடனடியாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் சொல்லுகின்றேன்.

ஸ்ரீ T. T. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் "சேலத்திலுள்ள இரும்மை கோயமுத்தூரிலுள்ள தனியார் துறையிலுள்ளவர்களைக் கொண்டு பக்குவப்படுத்துவதற்கு பரிசீலனை செய்யப்படுகிறது, அப்படி பரிசீலனை செய்து பார்த்து, அதனுடைய வெற்றியைத் தெரிந்து ஆரம்பிக்கலாம்" என்று சொல்லுகிறார்கள். சேலத்திலே கூட தனியார் துறையினர் முன் வந்தால் கொடுக்கத் தயாராய் இருப்பதாகவும் அவர் சொல்லுகிறார். நான் சொல்லுகின்றேன்—சேலத்திற்கும் கோயமுத்தூருக்கும் வித்தியாசம் இருக்கிறது. கோயமுத்தூர் ஜில்லாவில் நிறைய பாக்டரிகள் இருக்கின்றன. நல்ல முறையிலே பாக்டரிகள் வைத்து நடத்தச் சக்தியுள்ள ஜில்லாவாக இருக்கிறது. ஆனால், சேலம் ஜில்லா அப்படி அல்ல. பின் தங்கிய ஜில்லாவாக இருக்கிறது. கொஞ்சங்கூட பண வசதியில்லாத இடம் என்பதைத் தயவுசெய்து சர்க்கார் உணரவேண்டும். 20 லட்சம் ரூபாய் செலவு செய்து சர்க்காரே இந்த முறையைச் சேலத்திலேயே பரீட்சித்துப் பார்த்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், தனிப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென்றால் காலதாமதம் உண்டாகும். இந்த முறையில் சர்க்கார் ஒரு தொழிற்சாலையை சேலத்தில் ஏற்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலத்திலுள்ள இரும்புப் பொருள்களை வேறு இடங்களுக்கு அனுப்பி பரீட்சை செய்து பார்ப்பதை விட, இரும்பு கிடைக்கும் இடத்திலேயே பரீட்சித்துப் பார்க்கவேண்டும். "மோல்டுகளும்" அங்கேயே தயாரிக்கப்பட வேண்டும். இங்கிருந்து பொருள்களை நாம் வேறிடத்திற்கு அனுப்பி, அவர்கள் "மோல்டு" செய்து அனுப்புவதை நாம் வாங்குவதில் பிரயோசனம் இல்லை. இதைச் சர்க்கார் கவனிக்கவேண்டும். சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி மிகவும் போற்றத்தக்க முயற்சி. இது விஷயத்தில் பரீட்சார்த்தமாகச் செய்வதைச் சீக்கிரம் செய்து முடிக்க



23rd July 1957] [Sri S. Lakshmana Gounder]

உடனடியாக ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த உதவி சபாநாயகருக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. R. VISWANATHAN : கனம் உதவி அவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பிரேரேபித்துள்ள மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இந்த ராஜ்யத்தில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு பல காரியங்களை மேற்கொண்டிருப்பதற்காக, இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். முக்கியமாக, வேலையின்மையைப் போக்குவதற்காக, கிராமக் கைத்தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்கு அதிகமான பணத்தை ஒதுக்கி செயலாற்ற முன்வந்தமைக்கு அரசாங்கத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட சில விஷயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய நாடு முக்கியமாக விவசாய நாடு ஆகும். இந்த விவசாய நாட்டில் நீர்வளம் கொழிக்கும் பகுதியில் விவசாய மக்கள் ஆண்டில் பெரும் பகுதி நாட்களில் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். மற்றப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் ஆண்டில் மூன்றில் ஒரு பகுதி காலத்தில்தான் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள் ; மற்ற எட்டு மாதங்களில் அவர்கள் வேலையில்லாமல்தான் இருக்கிறார்கள். ஆகையால், வரண்ட பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்குத்தான் மிகுதியான நாட்கள் வேலையின்மை இருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. குறிப்பாக உடையார்பாளையம் போன்ற தாலூகாக்கள் மிகவும் வரண்ட பிரதேசங்கள் ; அங்குள்ள நிலங்கள் வானம் பார்த்த நிலங்கள்தான். ஆகவே அங்குள்ள விவசாயிகள் வேலையின்மையால் ஆண்டில் பல திங்கள் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வரண்ட பிரதேசங்களில் ஏதாவது கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுவது மிகவும் அவசியம் என்பதை வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். அவைகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான மூலப்பொருள்களும் இதர வசதிகளும் உடையார்பாளையம் தாலூகாவில் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். உடையார்பாளையம் தாலூகாவில் உபயோகிப்பதற்கு ஏற்ற வகையில், அரியலூருக்குப் பக்கத்திலும் பெரம்பலூருக்குப் பக்கத்திலும் ஜிப்ஸம் அதிகமாக கிடைக்கிறது. இதைக் கொண்டு ஸல்ப்யூரிக் அமிலம் உற்பத்தி செய்யலாம் என்பது இந்த சபையில் பல முறை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அரசாங்கம் முயற்சித்தால், அங்கே சல்ப்யூரிக் அமிலம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்ற யோசனையும் இங்கே பல முறை கூறப்பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல், ஜிப்ஸத்தையும் நெய்வேலியில் கிடைக்கக்கூடிய உப பொருள்களையும் கொண்டு சீமை உரம் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை (பெர்டிலைஸர் பாக்டரி) அங்கே அமைக்க வேண்டுமென்றும் முன்னதாகவே நாங்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அது விஷயமாக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது இதுவரையிலும் தெரிந்தபாடில்லை. அம்மாதிரி அங்கே ஒரு பெர்டிலைஸர் பாக்டரியை ஏற்படுத்தினால், 15,000 மக்களுக்காவது வேலை கொடுக்க வசதி ஏற்படும் என்பதை நான் சர்க்காருக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதுவுமல்லாமல், அங்கே வெள்ளைக் களிமண் போன்ற பொருள்களும், கண்ணாடி சாமான்களைச் செய்வதற்கு வேண்டிய இதர மூலப் பொருள்களும் கிடைக்கின்றன என்று அறிகிறேன். அந்தப் பொருள்களை உபயோகித்துச் செய்யக்கூடிய கைத்தொழில்களை அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சமீபத்தில் ஐந்து ஆறு மாதங்களுக்கு முன், அங்கே வந்து பல இடங்களைப் பார்த்துச் சென்ற பூமி நிபுணர்கள் ஜெர்மன் (ஜியாலஜிஸ்ட்ஸ்) எண்ணெய்ப் பொருள்கள் கிடைப்பதற்கான அறிகுறிகள் அங்கே தென்படுகின்றன என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள்,

அவர்களுடைய கருத்தை திட்டங்களாக வகுத்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குக் கீழக் கரையில் இருக்கும் முந்திரித் தொழிலை விருத்தி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதை நான் வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். முன்பு கேரளப் பகுதிகள் நம் ராஜ்யத்துடன் இணைந்திருந்தபோது, அங்குள்ள முந்திரித் தொழில் நமது ராஜ்யத்தை மிகவும் வளமாக்கிக் கொண்டிருந்தது. அவை பிரிந்து போன பிறகு, இப்போது இந்த ராஜ்யத்தில் தஞ்சாவூர், திருச்சி, தென்னாற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும்தான் முந்திரிப் பயிர் வளர்க்கப்பட்டு வருகிறது. முந்திரிக் கொட்டைகள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. முந்திரிகொட்டகளை வறுப்பது, தோலை நீக்குவதற்கு, எண்ணெய் இறக்குவது, எண்ணெயிலிருந்து பிறபொருள் தயாரிப்பது போன்ற "ப்ரேஸெஸ்"-ஐ இங்கேயே, தென்னாற்காடிலோ, திருச்சிராப்பள்ளியிலுள்ள உடையார்பாளையத்திலோ செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவுமல்லாமல் முந்திரிக்கொட்டையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெயும், பல பொருள்கள் தயாரிக்கப்படுவதற்காக, அமெரிக்காவிற்கு அனுப்பப்படுகின்றது. அந்த எண்ணெயைக் கொண்டு அமெரிக்கர்கள் பிளாஸ்டிக் போன்ற சாமான்களை உற்பத்திசெய்து இங்கே இறக்குமதி செய்கிறார்கள். அந்த எண்ணெயை ஏற்றுமதி செய்யாமல், அதைக்கொண்டு பிளாஸ்டிக் போன்ற பொருள்களை தயாரிப்பதற்கு அவசியமான மற்ற பொருள்களையும் இங்கேயே உற்பத்தி செய்து, பிளாஸ்டிக் போன்ற பொருள்களைத் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை உடையார்பாளையம் போன்ற வரண்டபிரதேசத்தில் அமைத்தால், ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுத்து உதவ முடியும். இதைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

**Sri M. D. RAMASWAMI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே
1-46 p.m. இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து கைத்தறி நெசவுத் தொழிலைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கூட்டுறவு ஸொஸைடிகளை அமைத்து கைத்தறி நெசவாளர்களை சர்க்கார் ஆதரித்திருக்கிறார்கள் என்று பல கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். பொதுவாக, நான்கில் ஒரு பங்கு கைத்தறி நெசவாளர்கள்தான் இப்போது கூட்டுறவு ஸொஸைடிகளில் வேலை செய்கிறார்கள் என்றும் மற்றவர்கள் சேராமலிருப்பதற்குக் காரணம் என்ன என்றும் சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். மாஸ்டர் வீவர்களிடம் அவர்கள் பட்டுள்ள கடன் தொல்லையிலிருந்து மீள முடியாத காரணத்தால்தான் அவர்கள் கூட்டுறவு ஸொஸைடிகளில் சேர முடியவில்லை என்று ஒரு கனம் நண்பர் சொன்னார். அது உண்மை அல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சேரக்கூடிய நிலைமையில் கைத்தறி நெசவாளர் ஸொஸைடிகள் இன்று இல்லை. வியாபார அடிப்படையில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், எப்போது துணிகள் விற்பனையாகிச் செலவாகின்றனவோ அப்போதுதான் நெசவாளர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள் ; மற்ற காலங்களில் நெசவாளர்களிடம் "உங்களுக்கு வேலை இல்லை" என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே நிரந்தரமற்ற இத்தகைய நிலைமையில் கூட்டுறவு ஸொஸைடிகளில் சேருவதற்கு கைத்தறி நெசவாளர்கள் இஷ்டப்படவில்லை. பல கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு ஸொஸைடிகளில் சேராததற்குக் காரணம், கடன்கள் காரணமாக அவர்கள் தங்களுடைய மாஸ்டர் வீவர்களிடமிருந்து தப்பமுடியவில்லை என்று சொல்லியிருப்பதில் "மாஸ்டர் வீவர்கள் உண்மையிலேயே நெசவாளர்களைக் கசக்கிப் பிழிபவர்கள்" என்ற அர்த்தம் தொனிக்கிறது என்று கருதுகிறேன். மாஸ்டர் வீவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு சகாயம் அளிக்க கூடியவர்களே தவிர, அவர்களைக் கசக்கிப் பிழிபவர்கள் அல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் மற்ற வியாபாரிகளைப் போல் அல்லாமல், கைத்தறி நெசவாளர் வகுப்பையே சேர்ந்தவர்கள். அவர்கள் கைத்தறி





நெசவாளர்களின் சுகதுக்கங்களில் பங்கெடுத்துக் கொள்பவர்கள். கையிருப்பிலுள்ள துணிகளுக்கு கிராக்கி இருக்கும் காலத்திலும் சரி, கிராக்கி இல்லாத காலத்திலும் சரி, கைத்தறி நெசவாளர்களால் நெய்து கொடுக்கப்படும் துணிகளை ஸ்டாக் வைத்துக்கொண்டு, மாஸ்டர் வீவர்கள் அவர்களுக்கு வருட முழுவதும் வேலை கொடுத்து ஆதரித்து வருகிறார்கள். ஆகையால் அவர்களிடம் வேலை செய்வதற்கு கைத்தறி நெசவாளர்கள் பிரியப்படுகிறார்கள் என்ற உண்மையை சர்க்கார் உணர வேண்டும். கூட்டுறவு ஸொஸைடிகளில் வருட முழுவதும் வேலை கொடுக்கப்பட்டால் ஏராளமான கைத்தறி நெசவாளர்கள் அவைகளில் சேருவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய எந்தத் திட்டமும் சர்க்காரிடம் இல்லை என்பதுதான் நான் கூறும் குறை.

இன்று கைத்தறி நெசவாளர்களின் நிலைமை உயர்ந்திருக்கிறது என்றும், நெய்யப்படும் கைத்தறித் துணிகள் எல்லாம் நன்றாக விற்பனையாகின்றன என்றும் சர்க்கார் சொல்கிறார்கள். கனம் நண்பர் ராமச்சந்திரன் அவர்கள், பரமக்குடி, யமனேஸ்வரம் போன்ற இடங்களில் கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னார்கள். அந்த இடங்களில் மட்டுமல்லாமல், அருப்புக்கொட்டை போன்ற கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடங்களிலும் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு விதமான கைத்தறித் துணிகள் நெய்யப்படுகின்றன. சில இடங்களில் 40-ம் நெம்பர் துணிகள் நெய்யப்படுகின்றன. மதுரை போன்ற இடங்களில் 100-ம் நெம்பர் கைத்தறித் துணிகள் நெய்யப்படுகின்றன. அதே மாதிரி, தினுசுகளிலும் வெவ்வேறு விதமான கைத்தறித் துணிகள் வெவ்வேறு இடங்களில் நெய்யப்படுகின்றன. துணிகள் தேக்கத்தை தடுப்பதற்கு ஒரு திட்டத்தை வகுக்கலாம். "நமது நாட்டிற்குத் தேவையான தினுசு கைத்தறித் துணிகள் எவை ? அவைகள் எந்த எந்த இடங்களில் உற்பத்தியாகின்றன ? அவைகளை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் ? எந்த தினுசு துணிகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடிகிறது ? அவைகளை எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும் ? எந்த எந்த இடங்களில் எந்த எந்த ரக கைத்தறித் துணிகளை எவ்வளவு எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும் ?" என்பனவற்றை அறிந்து தகுந்த திட்டத்தை வகுத்து நிறைவேற்றவேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்புக் கொடுப்பதற்காக இத்தகைய ஒரு திட்டத்தை வகுத்து நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழில் சம்பந்தமாக ராமநாதபுரம் ஜில்லாவுக்கு எவ்விதமான உதவியும் ஏற்படவில்லை. எல்லா ஜில்லாக்களிலும் பெரும் தொழில்கள் பரவலாக இருக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் ராமச்சந்திரன் சொன்னதை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். ராமநாதபுரம் ஜில்லாவில் பனை ஓலையால் செய்யக்கூடிய தொழில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டாரே தவிர நல்ல தொழில் எதையும் ஆரம்பிக்கும்படியாகக் கோரவில்லை.

ராமநாதபுரம் ஜில்லா ஒரு பிற்பட்ட பகுதி. அந்தப் பிற்பட்ட பகுதி வளம் பெறவேண்டுமென்றால் பல தொழில்கள் அங்கே ஆரம்பிக்கப்பட வேண்டும். 1948-ல் கூட சில தனிப்பட்டவர்கள் அருப்புக்கோட்டையில் ஒரு நூல் நூற்பு ஆலையை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அந்தச் சமயத்தில் மந்திரி சபையார் புதிய ஆலையைத் தென்னாட்டில் ஆரம்பிக்கக்கூடாது என இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள் என்றே அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்கள். இப்போது அம்மாதிரி முயற்சி எடுத்துக்கொள்ளக்கூடிய தனிப்பட்டவர்கள் யாரும் இல்லை. ஆகவே கூட்டுறவு முறையிலேயே அருப்புக்கோட்டையில் ஒரு ஆலை ஏற்பட வேண்டும். அரசாங்கமே அப்படி ஆரம்பிப்பதாக இருந்தது என நான் அறிகிறேன். ஆனால் ஏன் அப்படி ஆரம்பிக்கவில்லை என்பதற்குக் காரணம் சர்க்காருக்குத்தான் தெரியும். அந்த நூற்பு மில்லைத்தான் ஸ்ரீவில்லிப்புத்தூருக்குப் போட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. அருப்புக்கோட்டை

தாலுக்காவில் வேறு எவ்வித தொழிற்சாலையும் இல்லாததனால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நன்மை செய்யும் முறையில் அங்கேயும் ஒரு நூற்பு ஆலை ஆரம்பிக்கவேண்டும். பருத்தி ஏராளமாகக் கிடைக்கக் கூடிய இடம் அருப்புக்கோட்டை. தறிகளும் பத்தாயிரத்துக்கு மேல் இருக்கின்றன. ஆகவே அருப்புக்கோட்டையில் நூல் மில்லை ஏற்படுத்தும் திட்டத்தை மறுபடியும் பரிசீலனை செய்து அம்மாதிரியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI M. R. KANDASWAMI MUDALIAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தொழில் மானியத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல முன்வந்துள்ளேன்.

நம்முடைய ராஜ்யத்தில் இதுவரையில் கனரகத் தொழில்கள் வளர்ச்சி பெறாததற்குக் காரணம் போதுமான கரிப்பொருள் இல்லாததுதான் என்று சொல்லப்பட்டு வந்தது. இப்போது நமது ராஜ்யத்தில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் ஏற்பட்டு விட்டதால் நமது ராஜ்யத்திற்குப் போதுமான நிலக்கரி கிடைக்கும் என்பதனால் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தினால் கிடைக்கக்கூடிய சில பொருள்கள் நம் நாட்டுக்கு மிகவும் தேவையாக இருக்கிறபடியினால் அதற்கு 52 கோடி ரூபாய் செலவு செய்து திட்டம் உருவாக்கியிருப்பதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இதில் உற்பத்தியாகக் கூடிய 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி சேலத்தில் கிடைக்கும். இரும்புகளை உருக்கவும் மற்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யவும் உதவியாகும் என்பதனால் மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டாவதாக 11 ஆயிரம் கிலோவாட் மின்சாரம் இதிலிருந்து கிடைக்கும் என்று சொல்கிறார்கள். இன்றையதினம் மின்சாரம் போதுமான அளவு நமக்குக் கிடைக்காத காரணத்தினால்தான் சின்னஞ்சிறு தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே இப்போது இதிலிருந்து உற்பத்தி செய்ய முடியும் எனச் சொல்கிற 11 ஆயிரம் கிலோவாட் மின்சாரத்தையும் சின்னஞ்சிறு தொழில்களின் வளர்ச்சிக்கும், விவசாயத்திற்கும் மிக அதிகமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். மூன்றாவதாக நெய்வேலியில் 80 ஆயிரம் டன் கரித்தூள், எரிப்பொருள் கிடைக்கும் எனவும் தெரிகிறது. இதனால் இரும்புகளை உருக்கவும், குடிசைத் தொழில்களை வளர்க்கவும் உதவிகரமாக இருக்கும் என்பதனால் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

அதோடு சேலம் ஜில்லாவில் நெசவாளர்கள் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் இன்னமும் கொஞ்சங்கூட உயரவில்லை. மற்ற தொழில்களை எடுத்துக் கொண்டால் முன்பு 20, 25 ரூபாய் மாத வருமானம் வந்து கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு எல்லாம் இப்போது 120 ரூபாய், 125 ரூபாய் வந்து கொண்டிருக்கிறது. வட நாட்டிலுள்ள தொழிலாளர்களுடைய வருமானமும் இப்படித்தான் உயர்ந்திருக்கிறது. ஆனால் நம்முடைய ராஜ்ய கைத்தறியாளர்களுடைய வருமானம் கொஞ்சம்கூட உயரவில்லை. குறிப்பாக இன்றையதினம் கைத்தறியாளர் ஒருவருடைய மாத வருமானம், ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தில் 18 மணி நேரம் உழைத்தால், இருபது ரூபாய் அல்லது பதினைந்து ரூபாய்தான் கிடைக்கும். இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நமது அரசாங்கம் ஆங்காங்கே கூட்டுறவு சொஸைடிகளை ஏற்படுத்திக்கொடுத்து செஸ் நிதியில் இருந்து உதவி செய்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த சொஸைடிகளில் சேர்ந்துள்ள நெசவாளர்களுடைய வருமானம் சற்று உயர்ந்துதான் இருக்கிறது. அதாவது மாதம் 30 ரூபாய், அல்லது 35 ரூபாய் அவருக்கும் கிடைக்கும். ஆனால் இன்றைக்கு சென்னை மாகாணத்தில் ஏழு லட்சத்துக்குக் குறைவு இல்லாமல் நெசவாளர்கள் இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்





சர்க்கார் மதிப்பு ஐந்து லட்சம் தான். இந்த ஐந்து லட்சத்திலும் மூன்றில் ஒரு பங்கினர்தான் சொஸைடியில் இருக்கிறார்கள். இரண்டு பங்கினர் வெளியில்தான் இருக்கிறார்கள். இந்த இரண்டு பங்கினர் வெளியில் இருந்துகொண்டு, மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் சொஸைடியின் மூலம் வசதி ஏற்படும்படியாகத் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடிய காரணங்களில் முக்கியமான ஒரு காரணம் நூலின் விலைதான். நம் ராஜ்யத்தில் இன்னமும் சில பண்டிகைகள் கொண்டாடப்படுவதால் அந்தக் காலங்களினால் கைத்தறித்துணிக்கு கிராக்கி இருக்கிறது. எட்டு முழம் வேஷ்டி, ஒன்பது கஜம் புடவைகள் விற்பனையில் ஒரு நான்கணா, எட்டணா லாபம் வந்தால் அதை அடுத்த நாளே மில் முதலாளி நூலின் விலையை உயர்த்திப் பறித்துக்கொண்டு போகிறான். ஆகவே நூற்பு மில்களுக்கு இத்தனை கஜம் நூல் இன்ன விலையில் நெசவாளர்களுக்கு முதலில் கொடுக்கத்தான் வேண்டும் என நிர்ணயித்தாக வேண்டும். பாக்கியைத்தான் வெளியில் அனுப்ப அனுமதி அளிக்க வேண்டும். மில் முதலாளிகள் தங்களுக்கு வெளியில் அதிக லாபம் கிடைக்கிறது என்றால் நூலின் விலையை உயர்த்தி அனுப்பிவிடுகிறார்கள். இப்படி ஏற்றுமதி செய்துவிடுவதால் இங்குள்ள நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இவர்களுக்கு தேவைப்படும் நூல் போக பாக்கியுள்ளதை தான் ஏற்றுமதி செய்யவேண்டும். அதோடு நூலின் விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும். சொஸைடிகளின் மூலமாகவே நெசவாளர்கள் எல்லோருக்கும் கடன் வசதி, நூல் வசதி, வீட்டு வசதி, மார்க்கெட்டிங் வசதி முதலியன செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வருவாய் உயர்ந்திருப்பது போலவே நெசவாளர்களுடைய வருவாயும் விவசாயிகளின் வருவாயும் உயர தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சீர் அழிந்து வருகின்ற அந்தத் தொழில் வளம் பெறவும், பின்தங்கிய நெசவாளர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவும் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER** : The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned.

APPENDIX I.

[Vide answer to clause (*a*) of starred question No. 197 asked by Sri T. T. Daniel at the meeting of the Legislative Assembly held on 23rd July 1957, page 205 supra.]

*Statement showing the number of palmyrah tree climbers who are numbers of Palm Gur Co-operative Societies—Districtwise.*

| Name of the district. | Number of ex-tapper members of Jaggery Manufacturing Co-operative Societies as on 30th June 1956. |
|---|---|
| (1) | (2) |
| 1 Chingleput .. .. .. | 6,140 |
| 2 Coimbatore .. .. .. | 27,647 |
| 3 South Arcot .. .. .. | 3,329 |
| 4 Salem .. .. .. .. | 16,253 |
| 5 Madurai .. .. .. .. | 1,720 |
| 6 Tanjore .. .. .. .. | 5,498 |
| 7 Madras .. .. .. .. | 357 |
| 8 Tirunelveli .. .. .. | 42,115 |
| 9 North Arcot .. .. .. | 3,673 |
| 10 Tiruchirappalli .. .. .. | 3,287 |
| 11 Ramanathapuram .. .. | 23,885 |
| Total .. | 133,904 |

APPENDIX II.

[Vide answer to starred question No. 205 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 23rd July 1957, page 215 supra.]

(*a*) *to* (*d*) The particulars called for in the several clauses of the question, so far as they relate to weavers in the co-operative fold, are given in the statement below. Particulars relating to the master weavers are not available :—

| | 1955-56. | 1956-57. |
|---|---|---|
| | RS. | RS. |
| (*a*) Amount of loan granted to weavers' co-operative societies in Tirunelveli district .. | 15,10,156 | 21,51,501 |
| (*b*) Value of cloth produced by weavers' co-operative societies in the district .. .. .. | 70,44,264 | 64,46,029 |



| (*c*) *and* (*d*) Value of cloth produced by weavers' co-operative societies in— | 1955-56. | 1956-57. |
|---|---|---|
| | RS. | RS. |
| Tirunelveli taluk including Melapalayam .. .. .. | 14,92,343 | 9,88,272 |
| Ambasamudram taluk .. | 15,63,749 | 11,04,730 |
| Tenkasi taluk including Kadayanallur .. .. | 21,30,015 | 15,08,024 |

(*e*) The quantity and value of accumulated stocks of handloom cloth with the weavers' co-operative societies in the district as on 31st March 1957 were 535,823 yards and Rs. 6,70,674 respectively. These stocks got accumulated during the period from January to March 1957.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 24th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAO) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : இன்றைக்கும் 20 கேள்விகள் இருக்கின்றன. இவற்றை கேள்வி நேரத்திற்குள் முடிக்கவேண்டும். அதற்கு கனம் அங்கத்தினர்கள் அனைவரும் என் கூட ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன்.

*Cars for Ministers and Speaker*

* 213 *Q*.—SRI M. JAGANNATHAN (on behalf of Sri M. Jengal Reddiar and Sri S. Ramaswami Thevar) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of cars purchased by the Government for the use of the Ministers and Speaker in 1956 and up to March in 1957;

(*b*) the makes of the cars and theirs' cost; and

(*c*) the period fixed for changing these cars and the cost of maintenance of these vehicles in 1956 and 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Four cars were purchased for the use of the Ministers during the period.

(*b*) Chevrolet. Total cost of the four cars is Rs. 46,467·81.

(*c*) A car is replaced when it has run not less than 50,000 miles, or earlier for special reasons which will be recorded in writing.

Cost of maintenance for all four cars was Rs. 689·84 in 1956 and Rs. 2,257·20 up to May 1957.

SRI M. JAGANNATHAN : When the Government are preaching austerity drive, why should they purchase luxurious and costly cars for the use of the Ministers? Is it not a clear case of the Government's preaching something and not practising it?

THE HON. SRI C. SUBRAMANIAM : If the hon. Member is aware of the fact, he will find that as far as these cars were concerned, they are more economical. Because, these Chevrolet cars were obtained under special circumstances arising out of the merger of Pondicherry and we were not called upon to pay customs duty on these. On this account we have saved about Rs. 7,500. As a matter of fact, even if we had gone in for a smaller car, we would have to pay a little more than what we paid for the Chevrolet.

[24th July 1957

SRI K. VINAYAKAM : Under the scheme of austerity drive, which is of course good for the country, I find even the National Flag on the Ministers' cars, which used to fly previously, have now disappeared. Do not the Government realize that there is difference between a Minister and an ordinary person? When a Minister goes to a public meeting or some other place, the people are not able to find out who is the Minister as there is no National Flag in the cars used by them. Will the Government restore the flying of the National Flag on the cars used by the Ministers so as to distinguish their cars from the ones used by a member of the public as, after all, the National Flag is not going to cost much and will not be to the detriment of the finances of the State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I don't think in pursuance of the austerity drive the National Flags have been dispensed with. I may tell the hon. Member that almost all the Ministers' cars have National Flags. I think it is only Mr. Venkataraman who is not having the flag and he is very well known in the City.

SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, சிறிய கார் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லும்போது கோவிந்தசாமிக்கு கண்ணை உறுத்துகிறதா என்று முன்பு கேட்டார்கள். நான் அதற்காக சொல்லவில்லை. சிக்கனத்தை அடிப்படையாக வைத்துத்தான் கேட்டேன். 50,000 மைல் போன பிறகு மாற்றம் செய்யவேண்டியதில்லையல்லவா என்று தான் கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 50,000 மைல் என்று கணக்கு வைத்திருக்கிறதே தவிர இப்போது ஓடுவது ஒரு லட்சம் மைல் வரையிலும் ஓடுகிறது. அதன் பின் தான் மாற்றப்படுகிறது. 50,000 மைல் ஓடின உடன் மாற்றம் செய்யவேண்டும் என்பதல்ல.

*Public meeting places in the City*

* 214 *Q*.—SRI S. PAKKIRISWAMY PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have banned the use of the Corporation open maidans, such as Conran Smith Nagar Maidan and Napier Park Maidan, in the City of Madras for public meetings of political parties; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. PAKKIRISWAMY PILLAI : கான்ரான் ஸ்மித் நகர் மைதானத்தையும் நேப்பியர் பார்க் மைதானத்தையும் சாதாரணமாக சிம்ஸன் கம்பெனி தொழிலாளர்களும் பி. அண்ட் ஸி. தொழிலாளர்களும் பொதுக் கூட்டங்களுக்கு வேண்டி உபயோகித்து வருகிறார்கள். கொஞ்ச காலம் முன் வரையில் போலீஸ் அதிகாரியிடமிருந்து மாத்திரம் உத்தரவு வாங்கினால் போதும் என்று இருந்தது. இப்போது கார்ப்பரேஷன் கமிஷனரிடமும் கலெக்டரிடமும் உத்தரவு வாங்க வேண்டும் என்று நிர்பந்தம் இருக்கிறது. இதற்கு காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு நிர்ப்பந்திப்பதற்கு காரணம் அந்த இடங்கள் எல்லாம் நகரசபையின் பரிபாலனத்தின் கீழ் இருக்கிறது. இதிலுள்ள நிலம் சர்க்காரால் கொடுக்கப்பட்டது. அந்த



24th July 1957]

முறையில் அந்த அதிகாரம் கலெக்டர் அவர்களிடம் இருக்கிறது. அதனால் இதை உபயோகிப்பதற்கு கலெக்டர் அவர்களுடைய அங்கீகாரம் வேண்டியிருக்கிறது.

SRI S. PAKKIRISWAMY PILLAI : சில வருஷங்களாக உபயோகித்து வந்த பல மைதானங்கள் வெட்ட வெளியாக கிடப்பதால் அதை உபயோகித்துக் கொள்ளுவதில் சர்க்காருக்கு ஏதாவது தடையிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் தடையொன்றுமில்லை. இதை நடை முறையில் பரிபாலிப்பதற்காகத்தான் இவ்விதம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : பேச்சுரிமைக்காக வேண்டி மிக பெரிய போராட்டங்கள் நடத்தி லட்சக்கணக்காக மக்கள் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள். இந்த நிலைமையில் பொதுக் கூட்டங்கள் போடுவதற்கும் ஒலி பெருக்கி வைப்பதற்கும் அனுமதி பெற ரொம்பவும் கஷ்டமாய் இருக்கிறது. ஆகவே இதில் கட்சி வித்தியாசம் இல்லாமல் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு வேண்டிய உரிமையை சர்க்கார் கொடுக்க முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் கட்சி வித்தியாசம் ஒன்றுமில்லை. எல்லோருடைய பேச்சுரிமையும் கவனிக்கப்பட்டு வருகிறது. இதற்காக மற்ற உரிமைகளும் பாதிக்க வேண்டும் என்பது இல்லை.

SRI A. A. RASHEED : It is not a nuisance to hold public meetings near residential quarters ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may wait for my answer to the next question in which a list of places where public meetings are permitted to be held has been furnished.

SRI A. GOVINDASAMY : ஐலண்ட் கிரௌண்டில் பிரதம மந்திரி நேரு வந்திருந்த பொழுது கூட்டத்திற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. அது மாதிரி மற்ற கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்த கேட்டால் அனுமதி கொடுக்கப்படுமா ?

MR. SPEAKER : It comes only under the next question.

SRI A. GOVINDASAMY : I think we are in question No. 215, Sir.

MR. SPEAKER : No. We are in question No. 214. The hon. Member may put his supplementary question when we take up the next question.

SRI K. VINAYAKAM : Sir, we understand that reasonable restrictions will have to be placed in the matter of holding public meetings. But, what is the object of insisting upon getting the consent from the Collector of Madras and the Corporation authorities? Is it because they happen to be the proprietors of these lands? Will the Government remove such kind of restrictions and leave the matter as it was under the old system?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of proprietorship in this matter. But, since it is under the administrative control of the Corporation, it is possible the Corporation might have fixed it for some other use at the same time. Therefore, it is considered necessary that previous permission of the Corporation should be obtained.

[24th July 1957

* 215 *Q.*—Sri S. PAKKIRISWAMY PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the places in the City where public meetings are allowed to be held; and

(*b*) whether there is any place where facilities such as mike, etc., have been provided either by the Government or by the Corporation for holding public meetings?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) A list is placed on the table of the House.[a]

(*b*) There are no places in the Madras City where facilities such as mikes, etc., have been provided either by the Government or by the Corporation for holding public meetings excepting the Rajaji Hall in Government Estate, Mount Road, Madras.

Sri A. GOVINDASAMY : ஐலண்ட் கிரௌண்ட்டில் நமது பிரதம மந்திரி வந்திருந்த பொழுது கூட்டம் நடத்துவதற்கு அனுமதி தரப்பட்டது. அதே மாதிரி மற்ற கட்சிகளுக்கும் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி தரப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஐலண்ட் கிரௌண்ட் இந்த அரசாங்கத்தினுடைய கையில் இல்லை. ராணுவத்தினிடம் இருக்கிறது. பிரதம மந்திரி வந்த சமயம் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு ராணுவத்தினிடமிருந்து அனுமதி பெற்று தான் கூட்டம் நடத்தப்பட்டது.

Sri V. K. KOTHANDARAMAN : மதுரை போன்ற இடங்களில் குறிப்பிட்ட இடங்களில் மேடை, ஒலிபெருக்கி வசதி, பர்னிச்சர் முதலிய சௌகரியங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். ஒரு கூட்டம் நடத்துவதற்கு 15 ரூபாய் கொடுத்துவிட்டால் போதும். அதே போன்று ராஜ்யத்திற்கு தலை நகரமாக இருக்கக்கூடிய இங்கு சில குறிப்பிட்ட இடங்களில் அம்மாதிரி வசதி செய்து தருவதற்கு சர்க்காரோ அல்லது கார்ப்பரேஷனோ முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நகர சபையாருக்கு வேண்டுமானால் இந்த கோரிக்கையை தெரிவிக்கலாம். அரசாங்கம் இப்போது அவ்வாறு செய்வதற்கில்லை.

Sri M. JAGANNATHAN : Is it a fact that political parties
9-10 a.m. other than the Congress are finding it difficult to get the Rajaji Hall for the use of public meetings?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not think, Sir, it is so.

Sri S. PAKKIRISWAMY PILLAI : இந்த கான்ரான் ஸ்மித் மைதானத்தையும்; நேப்பியர் பார்க் மைதானத்தையும் தொழிலாளர்களுக்கு மாத்திரம் அவர்களுடைய கூட்டங்களை போடுவதாய் இருந்தால் அதற்கு மாத்திரம் தனியாக சலுகை காட்டும் வழியில் அனுமதி கொடுக்க மந்திரியவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கூட்டம் போடும் விஷயத்தில் தொழிலாளர்களுக்கு என்று மட்டும் சலுகை காட்டுவது சரியல்ல. அதோடு, தொழிலாளர்களுக்குள்ளேயே வேறு வேறு கட்சிகள் இருக்கிறது. ஆகவே இதில் எல்லாம் முன் அனுமதி பெற்றுக் கொண்டு ஏற்பாடு செய்வதே நல்லது.

a Printed as Appendix I on pages 360–362 infra.



24th July 1957]

*Eviction of persons in possession of Government lands*

Mr. SPEAKER : The hon. Member Sri M. Muni Reddy is not in his seat, and so, the question and the answer will be printed in the day's proceedings.

* 216 *Q.*—Sri M. MUNI REDDI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the poor persons in possession of lands in S. No. 278 in Beranur village in Denkanikotah sub-taluk, Salem district have been asked by the Revenue authorities to quit the lands; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The hon. Member presumably refers to the land in S. No. 278 of Thinjepalli village. The Assistant Collector, Hosur, has ordered eviction in respect of encroachments in S. No. 278 of Thinjepalli village by persons who own patta lands or more than five acres of dry or two and a half acres of wet. This is with a view to making the land available for allotment to the persons displaced from the Krishnagiri Reservoir Project areas. No landless poor persons have been evicted from the land.

*Employees' State Insurance Act*

* 217 *Q.*—Sri S. PAKKIRISWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to State—

(*a*) whether the Government have received any representation from the workers in Madras City about the bad administration of the Employees' State Insurance Act; and

(*b*) the action taken by the Government on the representation made by the Buckingham and Carnatic Mills workers against the Buckingham and Carnatic Mills authorities in not accepting the recommendations of the Medical Officers of the Employees' State Insurance Dispensaries in the City?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) This was one of the issues that came up for arbitration before Hon. Justice Ramaswami Gounder. He gave an award according to which the worker will in the first instance be examined by the company's doctor and that if that doctor does not grant the certificate then the worker will have the right to get himself medically examined by a Board consisting of three doctors, two of whom shall be nominated by the company and one by the Madras Labour Union. In view of the award, no action was considered necessary.

[24th July 1957

*Conductor's certificate*

* 218 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the issue of conductor's certificate is suspended for sometime past in Tirunelveli district;

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether the re-issue of the certificates issued by the former Travancore-Cochin State authorities, has also been suspended; and

(*d*) if so, the steps taken to make these certificates valid in Madras State?

THE HON. SRI V. RAMIAH : (*a*) Yes, Sir.

(*b*) The issue of fresh conductor's certificate has been suspended under rule 241 (i) (iv) of the Madras Motor Vehicles Rules as the number of conductor's certificates extant is already in excess of the requirements of the district.

(*c*) & (*d*) The re-issue of the certificates issued by the former Travancore-Cochin State authorities has been taken up by the Regional Transport Officer, Kanyakumari, as all the conductor's certificate-holders are permanent residents of Kanyakumari district. The Travancore-Cochin Motor Vehicles Rules are still in force in Kanyakumari district and the conductor's certificates issued by the former Travancore-Cochin authorities are valid until such time as the Madras Motor Vehicles Rules are introduced in Kanyakumari district.

SRI A. A. RASHEED : May I know on what basis these certificates are issued?

THE HON. SRI V. RAMIAH : Qualifications have been prescribed for the same.

*Low Scale Famine Works*

* 219 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the details of the 'Low Scale Famine Works' done in the Kanyakumari district during the last financial year; and

(*b*) the total cost of the works?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) No low scale famine relief work was taken up in Kanyakumari district in 1956–57 as the necessity for it did not arise.

SRI T. S RAMASWAMY PILLAI : May I know whether the Hon. Minister is aware of the fact that this subject was referred to in His Excellency the Governor's Address delivered during the last session? In the last Governor's Address reference was made to starting of "Low Scale Famine Works" in Kanyakumari and



24th July 1957]

Tirunelveli districts. May I know whether the Hon. Minister is aware of the fact that the Governor referred to these works in Kanyakumari district?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Governor may have referred to the works in Tirunelveli and Kanyakumari districts. But the question relates to Kanyakumari district. In Kanyakumari district it was tried whether low scale famine works could be taken up. It was found that labourers there are not accustomed to low scale famine works such as stone cutting, etc. They are not accustomed to hard work which are contemplated under Low Scale Famine Works. Fortunately the monsoon has set in and the situation has improved.

SRI T. S. RAMASWAMY PILLAI : On a point of order, Sir. The Governor's Address is supposed to have been prepared under the advice of the Council of Ministers. In the Governor's Address a specific reference was made to the starting of low scale famine works in Kanyakumari district along with Tirunelveli district. Here, Sir, one Hon. Minister from the Council of Ministers is saying that "no work is done". It is contradicting the statement made in the Governor's Address. May I know whether it is in order or whether it is in conformity with the provisions in the Constitution?

THE HON. SRI M. A. MANICKAVELU : I clearly stated in my reply that reference might have been made to both Tirunelveli and Kanyakumari districts. As far as Kanyakumari district was concerned, I stated that it was not possible to start low scale famine works because the people there were not accustomed to such kind of works and they did not come forward to take up the works.

(Hon. Member Sri T. S. Ramaswamy Pillai rose.)

MR. SPEAKER : I will call the hon. Member when his turn comes.

SRI D. S. ADIMOOLAM : "லோ ஸ்கேல் பாமின் வொர்க்ஸ்" என்று சொன்னால் இவ்வளவு தொகைக்குள் செய்யப்படுகிற வேலை என்று அதற்கு ஏதாவது அர்த்தம் உண்டா அல்லது வேறு என்ன முறையில் சொல்லப்படுகிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : "லோ ஸ்கேல்" என்று சொன்னால் கூலி கொடுக்கிறார்களே, அது ரொம்ப குறைவாய் இருக்கும். இதனால் அநேகம் பேர்களுக்கு வேலை கொடுக்க முடியும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether the Hon. Minister has enquired about starting of low scale famine works in Kanyakumari district?

THE HON SRI M. A. MANICKAVELU : What I have stated is the information that I got.

THE HON. SRI C. SUBRAMANIAM : I will explain the position to the hon. Member. We sanction schemes for being taken up as "famine works". Those works are sanctioned on a lower scale

[24th July 1957

wage. If nobody comes forward to take up such works, that shows that there is not so much intense famine warranting the taking-up of such works. So, this is a test to find out whether really famine conditions are prevailing or not. If really famine conditions are prevailing, then people will come forward to take up such works on a low scale wage. If they do not come then it shows that there is no famine prevailing. Therefore, we have sanctioned schemes both for Tirunelveli and Kanyakumari districts, and as explained by the Hon. Minister nobody came forward for a low wage in Kanyakumari district.

Sri T. S. RAMASWAMY PILLAI : In the Governor's Address it was specifically stated that low scale works had been started. Now, Sir, it has been stated that they have been sanctioned.

Sri S. B. ADITYAN : கவர்னருடைய உரையைப்பற்றிச் சொன்னார்கள் அதில் "the starting of low scale works has been organised" என்று தான் இருக்கிறது. ஆனால், ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டது என்று மந்திரியவர்கள் சொன்னார்கள். இவ்வாறு கன்னியாகுமரி ஜில்லாவில் மட்டுந்தான் கை விடப்பட்டதா ? திருநெல்வேலி ஜில்லாவிலும் கைவிடப் பட்டதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி கன்னியா குமரி ஜில்லாவைப் பற்றித்தான். அங்குள்ள மக்கள் இந்த மாதிரி வேலைகளுக்கு வரப்பிரியப்படவில்லை.

*State Transport*

* 220 Q.—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any stores attached to the Transport Garage in Kanyakumari district; and

(b) the total value of the spare parts kept in the stores usually?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) Rupees 1,29,000 approximately.

Sri T. T. DANIEL : Is the Hon. Minister aware that because there are not sufficient spare parts available in these stores the repairs to buses are not properly attended to? Will the Government, therefore, be pleased to set up "a store" or a workshop there which the Government have already decided to start at a very early date?

The Hon. Sri R. VENKATARAMAN : It is not for want of spare parts but is really due to lack of well-equipped workshop that repairs are not properly attended to then and there. The Government have proposals to open a workshop at a cost of three lakhs at Nagerkoil.

Sri D. S. ADIMOOLAM : ஸார், கன்னியாகுமரி ஜில்லாவில் மொத்தம் எத்தனை சர்க்கார் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கிறது. மதுரையில் எல்லாம் பொதுவாக ஒரு 25 பர்ஸெட், அதாவது 400 பஸ்கள் இருந்தால் 300 பஸ்கள்தான் ஓடிக்கொண்டிருக்கிறது என்று பேசிக் கொள்கிறார்கள், அப்படி அங்கே எத்தனை பர்ஸெண்ட் வொர்க்கிங் கண்டிஷனில் இல்லாமல் இருக்கிறது என்று சொல்ல முடியுமா ?



24th July 1957]

The Hon. Sri R. VENKATARAMAN : I will answer the point when the next question is taken up.

Sri K. VINAYAKAM : May I know whether the value of the stores, mentioned by the Hon. Minister in his reply, represents the legacy which we got from the Travancore-Cochin State Government, or did the Government augment it by adding some more spare parts?

The Hon. Sri R. VENKATARAMAN : We are still claiming the legacy.

Sri R. SRINIVASA IYYAR : கன்னியாகுமரி ஜில்லாவில் பழைய பஸ்களை எடுத்து புதிதாக வாங்கின பஸ்களுக்காக சர்க்கார் எத்தனை ரூபாய் செலவு செய்திருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அது குறித்து தனி கேள்வி வருகிறது. அப்பொழுது சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

Sri A. VEDARATHINAM PILLAI : இந்த கேள்வி கன்னியாகுமரி ஜில்லாவைப்பற்றியதாக இருந்தபோதிலும் நம்முடைய ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களை இரவில் நிறுத்துவதற்கு சரியான ஷெட் இல்லை. மெம்பர்கள் வருகிற பஸ் இரவு எல்லாம் மழையில் நனைந்து பஸ்ஸின் ஸீட்டுகள் எல்லாம் நனைந்திருக்கிறது. அப்படி நனைவதால் பஸ்கள் பாழாகிவிடும். ஆகவே அவைகளை நிறுத்த ஷெட்கள் கட்டுவதைப்பற்றி அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனிப்பார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த மான்ய கோரிக்கை இன்றைக்கு வருகிறது. அதில் கனம் அங்கத்தினர் அவர்களை பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

Sri M. JAGANNATHAN : May I know how long these stored-up spare parts will be kept as spare parts and when they will be used? 9-20 a.m.

The Hon. Sri R. VENKATARAMAN : Apparently the hon. Member does not understand how the spare parts are used. Spares have got to be kept as spares. Even if they are immediately used, further spare parts have got to be kept as spares.

*State Transport*

* 221 Q.—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of routes and the total mileage covered by the State Transport in Kanyakumari district; and

(b) whether the Government propose to nationalize all other routes in the district operated by the private agencies?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) The number of routes served by the Kanyakumari Branch of the Madras State Transport Department is 44. Their total length is 800 miles.

(b) there is no proposal at present.

SRI T. T. DANIEL : Many of the branch routes in the mufassal are more or less feeder routes to the main routes through which transport is now running. If these routes are nationalized, that will be bringing profit to the Government and also will be convenient to the public. So, will the Government be pleased to go into the matter and take a decision to nationalize these routes very soon?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government are aware of the advantages of nationalizing as many routes as possible but limitations of finance preclude any such decision.

SRI R. SWAMINATHA MERKONDAR : கன்னியாகுமரி ஜில்லாவில் பஸ் டிரான்ஸ் போர்ட்டை சர்க்கார் எடுத்துக்கொண்டது போல இதர ஜில்லாக்களிலும் சர்க்காரே எடுத்துக் கொள்ள திட்டம் இருக்கிறதா என்று தெரிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு ஒரு தனிக் கேள்வி வேண்டும்.

SRI D. S. ADIMOOLAM : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், இந்தக் கேள்விக்கு டிரான்ஸ்போர்ட் மந்திரி பதில் சொல்லாமல். . .

MR. SPEAKER : அவர் தானே டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர்.

SRI D. S. ADIMOOLAM : Please excuse me, Sir.

### *State Transport*

* 222 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total income and expenditure in the Government Transport in Kanyakumari district during the period from 1st November 1956 to 31st May 1957 and the percentage of profit; and

(b) whether the Government have any proposal to increase the income and reduce the expenditure?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The gross receipts in the Kanyakumari Branch of the Madras State Transport Department for the period from 1st November 1956 to 31st May 1957 is Rs. 15,70,284. The amount withdrawn for expenditure for the period was Rs. 7,76,001. This figure does not include the cost of stores consumed, repairs and maintenance, tyres and tubes, besides indirect charges such as interest on capital, depreciation, proportionate share of headquarters charges, audit fees, etc. The figures of net receipts can be arrived at only on receipt of the particulars from the Government of Kerala in respect of the value of spares and accessories and other assets transferred to this State consequent on the reorganization of the States. In the absence of figures relating to net revenue and capital it is not possible to work out the percentage of profit.

(b) Proposals for condemnation of some of the old buses and replacing them by new ones with larger carrying capacity during the current year, are under the consideration of the Government.



If the proposals are sanctioned the collections of the branch will increase and there will be lesser number of breakdowns. The cost of maintenance will also be reduced.

SRI T. T. DANIEL : It is stated that many of the buses that are now plying are petrol buses and they go only at the rate of 9 to 10 miles per gallon. As that involves heavy expenditure, will the Government be pleased to fit in these buses diesel engines so that the cost of expenditure can be considerably reduced?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member is right that the cost of the petrol-driven vehicles is high. The Government propose to have all the new buses only with diesel engines.

SRI R. SRINIVASA IYYAR : எத்தனை புது பஸ்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது, சுமாராக எவ்வளவு கிரயம் ஆகும் என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : 12 பஸ்கள் முதலில் அனுப்பப்பட்டன. 12 பஸ்கள் இப்போது அனுப்ப ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்திற்குள் அவைகள் சென்று விடும். இன்னும் இந்த பட்ஜெட்டில் குறைந்தது 14 லட்சம் ரூபாய் புது பஸ்கள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் கன்னியாகுமரி பஸ் டிரான்ஸ்போர்ட் புது பஸ்களால் நடத்தப்படுமென்று நம்புகிறேன்.

SRI M. JAGANNATHAN : May I know how many buses have been condemned in the Kanyakumari district and whether these buses cannot be repaired and made road-worthy once again?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கு இருக்கிற 76 பஸ்களை நான்கு விதமாகப் பிரித்திருக்கிறது—'good buses; fair condition: passable and useless'. அந்த விதமாகப் பிரித்ததில் சுமார் 32 பஸ்கள் உதவாக்கரையாக இருக்கின்றன. அவைகளை புதிதாக மாற்றி அமைக்க வேண்டுமென்றுதான் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

SRI M. MUTHUKUMARASWAMY : ஸார், இந்த மாகாணத்தில் தனியார் நடத்தும் பஸ் சர்விஸ்களில் ஒரு பஸ்ஸின் ஆயுள்காலம் முடிந்தவுடன் அதை நிறுத்துவதற்குப்பதிலாக அந்த பஸ்ஸின் பாடியைப் புதுப்பித்து ஓட்டுகிறது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? அப்படியானல் அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கன்னியாகுமரி ஜில்லாவில் பாடி கெட்டுப் போகவில்லை. என்ஜினே கெட்டுப்போய் விட்டது.

SRI T. S. RAMASWAMY PILLAI கனம் அமைச்சர் அவர்கள் உதவாக்கரையாக 32 பஸ்கள் இருக்கின்றன என்று சொன்னர். அதில் எத்தனை இப்போது ஓடிக்கொண்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: அதைச் சொல்வதற்கு இல்லை. மொத்தம் இருக்கிற 76 பஸ்களில் 53 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

SRI N. R. THIYAGARAJAN : கன்னியாகுமரி ஜில்லாவில் நல்ல நிலையில் ஓடிக் கொண்டிருந்த பஸ்களையெல்லாம் கேரள சர்க்கார் எடுத்துக்கொண்டு விட்டு உதவாக்கரையாக இருந்ததையெல்லாம் விட்டுவிட்டுப் போய்விட்டார்களென்பது வாஸ்தவமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நமக்கு என்ன கிடைத்திருக்கிறது என்பதைத் தான் நான் சொன்னேன்.

*Joint muster roll*

*223 Q.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the records of the Management of the Pressed Metals (Private), Limited, and the Zip Industries (Private), Limited, at Chingleput show a joint muster roll in contravention of the provisions of the Factories Act?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir. Separate muster rolls are maintained in the respective factories.

Sri K. SATTANATHA KARAYALAR : May I know the number of employees employed by the Pressed Metals, Limited, and the Zip Industries, Limited?

The Hon. Sri R. VENKATARAMAN : I have no figures with me now.

*B. & C. Mills, Madras*

*224 Q.—Sri S. PAKKIRISWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there was a lock-out in the B. & C. Mills in the month of February 1957; and

(b) whether there was any report made by the Madras Labour Union about the management having dishonoured the agreement arrived at before the Commissioner of Labour?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) A representation has been made to the Commissioner of Labour. The report of the Commissioner of Labour on this subject is awaited.

*Allowances to Police constables*

*225 Q.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to State whether there is any proposal to increase the batta and travelling allowance of Police constables?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The answer is in the negative.

*Textile mill workers*

*226 Q.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state the action taken on the recommendations of the Tripartite Committee constituted during 1953 with regard to the raising of the emoluments of the textile mill workers?

The Hon. Sri R. VENKATARAMAN : A note [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on pages 362–363 infra.



Sri S. B. ADITYAN : *மந்திரி அவர்கள் கொடுத்த அச்சிட்ட பதிலில்* " The dispute in the Madura Mills Company, Limited, Madurai, Ambasamudram and Tuticorin, was referred for adjudication to Sri K. N. Radhakrishna Mudaliar, a Special Industrial Tribunal constituted for the purpose and the award has been published in the *Fort St. George Gazette* " *என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அவார்டுக்குப் பிறகு தகராறுகள் தீர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா ? இப்போது என்ன நிலையில் இருக்கிறது ?*

The Hon. Sri R. VENKATARAMAN : *மதுரையிலும் அம்பாசமுத்திரத்திலும் தகராறு தீர்ந்து சுமுகமாக வேலை நடக்கிறது. தூத்துக்குடி சம்பந்தப்பட்டவரை இப்போது சமரசம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் முடிவு தெரியும்.*

Sri S. PAKKIRISAWMY PILLAI : *முக்கூட்டுக் கமிட்டி சிபாரிசில் பஞ்சப்படி குறைந்தது* 3¼ *அணாவாக இருக்கவேண்டுமென்றிருக்கிறது. நெசவாலைத் தொழிலாளர்கள் அரசாங்க அங்கத்தினர் இரண்டு சார்பாரும் அதற்கு ஒத்து முடிவு கூறியிருக்கிறார்கள். ஆனாலும் முதலாளிகள் இது வரையில் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இதற்கு அரசாங்கத்தாரால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?*

The Hon. Sri R. VENKATARAMAN : *முக்கூட்டு கமிட்டி தீர்ப்புகள் சட்டப்படி கட்டுப்படுத்தாது. அவர்களுடைய சிபார்சுகள் தான் அவை. ஆகவே இதை நேரடியாக சமரச பேச்சு வார்த்தை நடத்துமாறு இரு சாராரையும் கேட்டுக்கொள்கிறேன்.*

Sri V. K. RAMASWAMY MUDALIAR : Sir, these are all tripartite committees. Will the Government consider the desirability of constituting quadripartite committees so that the consumers' interest may be represented? As it is, there is nobody to represent the consumers point of view.

The Hon. Sri R. VENKATARAMAN : I thought the Government were the consumers. They consume a lot.

Sri P. S. CHINNADURAI : *முக்கூட்டு கமிட்டியின் பஞ்சப்படி பற்றிய சிபாரிசை குறைந்த பட்சம் கோவைப் பகுதியிலாவது அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ராஜ்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? கோவையில் சென்னை விலைவாசி புள்ளி விவரங்களை விட அதிகமாக இருக்கின்றன. ஆகையினால் கோவைப் பகுதியிலாவது உடனடியாக இதை அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா ?* 9–30 a.m.

The Hon. Sri R. VENKATARAMAN : *முக்கூட்டுக் கமிட்டியின் சிபாரிசின்படி தான் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று முன்பே சொன்னேன். இரு சாராரும் மில் முதலாளிகளும் தொழிலாளிகளும் ஏதாவது இதைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்தி முடிவை சர்க்காருக்கு தெரிவிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. ஒன்றை மட்டும் கனம் சின்னதுரை அவர்கள் சரியாக சொல்லவில்லை, என்று நான் நினைக்கிறேன். கோவையில் இருக்கிற விலைவாசி புள்ளி விவரம் சென்னையிலுள்ள புள்ளி விவரத்தை விட அதிகமாக இருப்பதால் கோயம்பத்தூர் விலைவாசி சென்னை விலை வாசியை விட அதிகமாக இருக்கிறது என்ற பொருள் அதிலிருந்து சொல்ல முடியாது.* 1939-*ல் கோயம்புத்தூரில் என்ன விலைவாசியின் புள்ளி விவரங்கள் இருந்ததோ அதைவிட இப்பொழுது* 3½ *அல்லது* 4 *பங்கு அதிகமாக இருக்கிறது.* 1939-*ல் சென்னையிலுள்ள விலைவாசி புள்ளி விவரங்களை விட இப்பொழுது* 3 *அல்லது* 3½ *பங்கு அதிகமாக இருக்கிறது. அதனால் சென்னை புள்ளி விவரங்களையும் கோயம்புத்தூர் புள்ளி விவரங்களையும் ஒப்பிட்டு பார்க்க முடியாது. அதற்கு வேண்டிய ஸ்டாட்டிஸ்டிக்ஸ் இருக்கிறது.*

[24th July 1957

SRI S. NAGARAJA MONIGAR : கனம் சின்னதுரை சொன்னதை வைத்துக்கொண்டால் கோவையின் விலைவாசிகள் சென்னையின் விலைவாசிகளை விட அதிகமாக இருக்கிறது என்றால் அது எதைக் காட்டுகிறது ? கோவையில் பணப் புழக்கம் அதிகமாக இருக்கிறதா அல்லது வியாபாரிகள் பணத்தை முடக்குகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்களைக் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

*Tube-wells*

* 227 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of exploratory tube-wells, programmed to be sunk in Udaiyarpalayam taluk, under the American Aid Programme; and

(*b*) the number so far sunk and the minerals or other elements, if any, so far discovered?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Seven.

(*b*) Six, two completed and four in progress. No minerals have been found except in some cases where lignite has been struck at a depth of 400 feet below ground level.

SRI K. R. VISWANATHAN : இந்த குழாய்க் கிணறுகளில் உலோகங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆகையினால் தான் அவைகளை நீர்ப்பாசனத் திற்கு பயன்படுத்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. ஆகவே இந்த குழாய் கிணறுகளை நீர்ப்பாசனத்திற்கு உப யோகப்படும்படியாக இந்த சர்க்கார் விரைவில் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய முடிவு இன்னும் தெரியவில்லை. மேலும் அதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டு தான் இருக்கிறோம்.

SRI K. R. NALLASIVAM : குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்கு அமெரிக்க அரசாங்கத்தினிடமிருந்து உதவி பெற்றதுபோல் வேறு எந்த அரசாங்கத்தினிடமிருந்தாவது உதவி பெற்றிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறு எந்த அரசாங் கத்தினிடமிருந்தும் உதவி பெற்றதாகத் தெரியவில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, will the Government consider the desirability of taking up large-scale tube-well irrigation on the community basis in dry areas ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தற்சமயம் 51 ட்யூப் (குழாய்) கிணறுகள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதாக இப்பொழுது யோசனை இருக்கிறது.

SRI P. S. CHINNADURAI : பல்லடம் தாலூகாவில் வழக்கமாகவே மழை குறைவாக இருப்பதாலும் நீர்ப்பாசனத்திற்கு வேறு எந்த விதமான ஏற்பாடும் செய்வதற்கு இயலாத முறையில் இயற்கை தடையாக இருப்ப தாலும் அங்கே குழாய் கிணறுகளை அதிகமாக அமைப்பதற்கு ராஜ்ய சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?



24th July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல்லடம் நிலைமையைப்பற்றி கனம் அங்கத்தினர் கூறியது உண்மைதான். ஆனால் அங்கு குழாய்க் கிணறு களை அமைப்பதாக இருந்தால் அதற்குத் தகுதி வேண்டும். அதற்காகத் தான் ஒரு பைலட் புராஜெக்ட் தென் ஆற்காடு ஜில்லாவிலும், திருச்சி ஜில்லாவிலும் ஆரம்பிக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY: தென் ஆற்காடு ஜில்லாவில் விருத்தாசலம், கடலூர், சிதம்பரம் பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைத்து அவைகள் விவசாயத்திற்கு நல்ல பலனை வேண்டிய அளவில் கொடுத்து வருகிறது. அதனால் மீண்டும் அதிகமான குழாய் கிணறுகளை அந்தப் பகுதிகளில் அமைப்பதற்கு இந்த அரசாங்கம் முடிவு செய்யுமா ? குழாய்க் கிணறுகளை அமைப்பதால் அரசாங்கத்திற்கு எந்த விதத்திலும் நஷ்டம் வருவதாக இல்லை. அதனால் அதிகப்படியான குழாய்க் கிணறுகளை அமைக்க இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயத்திலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

*High Schools for Kanyakumari district*

* 228 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to State—

(*a*) whether any permission was granted by the Government to start High Schools after the formation of Kanyakumari district in that area; and

(*b*) if not, why not?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir. But permission has been granted to start higher forms in certain existing schools.

(*b*) No representation has been made to the Director of Public Instruction for the opening of new high schools in the district so far.

SRI T. T. DANIEL : Sir, may I know the number of applications from that district?

THE HON. SRI C. SUBRAMANIAM : The information given by the Director of Public Instruction is that he has not received any representation for starting new high schools.

SRI K. VINAYAKAM : Sir, what are the basic requirements for starting a high school? In these days of vigorous economy drive, will it not be just possible to run these high schools in thatched sheds instead of in well-constructed and pucca buildings?

MR. SPEAKER : How is this supplementary question relevant to the main question? The question relates to the opening of high schools in Kanyakumari district. The hon. Member is putting a supplementary question on some other subject. I rule his supplementary question out of order.

*Appointment of officers in Kanyakumari district*

* 229 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of officers that were appointed in the Kanyakumari district from outside the district after integration;

(*b*) the number of Brahmins among them; and

(*c*) the necessity to appoint officers from outside the district?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have already answered this question.

(*a*) Eighteen Gazetted Officers and 81 Non-Gazetted Officers were appointed in the Kanyakumari district from outside the district.

(*b*) Six out of the 18 Gazetted Officers and 25 out of the 81 Non-Gazetted Officers are Brahmins.

(*c*) Appointment to Gazetted posts is made on a State-wide basis and cannot be limited to the district alone. As regards the non-gazetted posts, the services of experienced and trained officers were required to organize the newly-opened offices in the district and to attend to the work connected with the revision, modification, and adaptation of the laws and procedure in the transferred area so as to bring them in conformity with the pattern of administration in force in the rest of the Madras State. Hence some of the non-gazetted officers had necessarily to be recruited from outside the district by transfer.

SRI T. T. DANIEL : Sir, I did not mean that officers from outside the area should not be appointed or that the posts should be filled by the officers from within the district itself. But I would suggest to the Hon. Minister that the basis of the . . .

MR. SPEAKER : During question-time the hon. Member cannot make a suggestion. He must put his question.

SRI T. T. DANIEL : Will the Hon. Minister be pleased to consider the desirability of either appointing the qualified persons, who are available within the district, in the vacancies as they arise or at least give them promotions and transfer them to places outside the district?

THE HON. SRI C. SUBRAMANIAM : This is only a temporary arrangement. It is not the intention of the Government that the transferees from other districts should get a permanent place here. So, as soon as they finish their work, they will be retransferred, and the persons who are already in the Kanyakumari district would not be affected in any way.

*Scale of pay of Graduate teachers*

* 230 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the scale of pay of graduate teachers in the district board schools and those in the schools under private management in Kanyakumari district?



THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have no information. Particulars have been called for.

*Scale of pay of Graduate trained teachers*

* 231 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the scale of pay of the Graduate trained teachers in the schools under private management in Kanyakumari district and those in district board schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : The particulars have been called for.

SRI T. S. RAMASWAMY PILLAI : I rise on a point of order, Sir. Sufficient notice has been given to the Government to collect this information. After all this question refers to the scale of pay of graduate teachers in the district board schools. This must be ready with the Government, because one month is over since notice of this question was given.

MR. SPEAKER : You cannot raise this question as a point of order. The question has been asked and the Minister has given the answer. If you are not satisfied, you have got other remedies to pursue. You cannot raise this as a point of order.

THE HON. SRI C. SUBRAMANIAM : I do agree that there has been considerable delay in getting the information called for. I have asked the department to be more prompt in future and get the information within ten days.

SRI M. JAGANNATHAN : When answer to a particular question is not available, what is the point in including that question in the agenda for the day?

MR. SPEAKER : It is the same point which Mr. Ramaswamy Pillai raised. I gave one month's time to the Government to answer the questions but if within that time the Minister is not able to answer the questions, what can I do?

SRI K. VINAYAKAM : I would like to know whether after the integration of the area with our State there are institutions there like district boards. If there are no such institutions, what is the type of institutions they have from which the Minister is trying to get the information?

THE HON. SRI C. SUBRAMANIAM : There are only Government schools and aided schools there. As far as Government schools are concerned, there is no difficulty. Only information from the aided schools is to be got.

MR. SPEAKER : As a matter of fact, I am in the same delicate position as my friend. I have not got all the answers myself. But since it is one month now, I thought I might include the questions in the list so that the Minister might give whatever answer he can.

*Provident Fund Scheme for teachers*

* 232 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have any proposal to introduce the Provident Fund Scheme for the teachers in schools under private management in Kanyakumari district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) There is no proposal at present to extend the Teachers Provident Fund Scheme to the Teachers in Kanyakumari district. The question will be considered in due course.

(b) The question does not arise.

MR. SPEAKER: Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER *RE*

### (i) ELECTION OF THREE MEMBERS TO THE SENATE OF THE ANNAMALAI UNIVERSITY.

MR. SPEAKER: I have to announce to the House that the following candidates were nominated for the election of three Members to the Senate of the Annamalai University:—

1. Sri G. Vagheesam Pillai.
2. Sri A. V. P. Asaithambi.
3. Sri M. Kandaswamy Padayachi.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., three, I hereby declare them to have been duly elected to the Senate of the Annamalai University.

### (ii) MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER: I have to announce to the House that I have received the following message, dated 17th July 1957, from the Governor of Madras:—

"In pursuance of Article 207, clause (1), read with Article 199, clause (1), sub-clause (a), of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1957."

### (iii) MESSAGES FROM THE COUNCIL.

MR. SPEAKER: I have also to announce to the House that I have received the following messages from the Hon. Chairman, dated 23rd July 1957:—

"In accordance with rule 115 of the Madras Council Rules, I transmit a copy of the Payment of Wages (Madras Amendment)



Bill, 1957 (L.C. Bill No. 1 of 1957) as passed by the Legislative Council on the 23rd July, 1957 and signed by me for the concurrence of the Assembly.

In accordance with rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Electricity Undertakings (Acquisition) Amendment Bill, 1957 (L.A. Bill No. 2 of 1957) as passed and agreed to by the Council on the 23rd July 1957 without any amendment and signed by me."

SRI K. B. S. MANI: *சபாநாயகர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் "செனட்"டுக்கு சட்ட சபை அங்கத்தினர்கள் நியமனம் பற்றி தாங்கள் சற்று முன்பு அறிவித்தீர்கள். அந்த "செனட்"டுக்கு ஹரிஜன வகுப்பிலிருந்து யாராவது நியமனம் செய்யப்பட்டிருக்கிறாரா? அப்படி நியமிக்கப்பட்டிருந்தால் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.*

MR. SPEAKER: **The hon. member is too late.** *தேர்தல் முடிந்து, யார் வெற்றி பெற்றார்கள் என்று நான் சொன்னேன். மற்ற விவரங்களுக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் அவருடைய தலைவர்களைக் கேட்டிருக்க வேண்டும்.*

### (iv) APPLICATION OF THE GUILLOTINE TO DEMANDS FOR GRANTS.

MR. SPEAKER: Under sub-rule (3) of Rule 154 of the Assembly Rules, at 5 p.m. on the last day of the days allotted for the voting of Demands for Grants, every question necessary to dispose of all the outstanding matters in connexion with the Demands for Grants, including the motion for reduction of a Grant, if any, then under discussion, shall be put. As the House is now sitting from 9 a.m. to 2 p.m. the gulliotine will be applied exactly at 2 p.m.

## III.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES, VIZ., NON-REMISSION OF WET ASSESSMENT AND THE FORCEFUL SEIZURE OF VALUABLE PROPERTIES OF THE VILLAGERS OF KILUMATHUR IN PERAMBALUR TALUK BY THE GOVERNMENT.

MR. SPEAKER: I have received notice from the hon. Member, Sri K. R. Viswanatham, that he will call attention to a matter of urgent public importance, viz., non-remission of wet assessment and the forceful seizure of valuable properties of the villagers of Kilumathur in Perambalur taluk by the Government. He will please explain the matter.

* SRI K.R. VISWANATHAM: *தலைவர் அவர்களே, பெரம்பலூர் தாலூகாவிலுள்ள கீழுமத்தூர் என்னும் கிராமத்தில் உள்ள பாசன ஏரிக்குத் தண்ணீர் வரத்து-வாய்க்கால் 21 ஆண்டு காலமாக சரியில்லாத காரணத்தால், அந்த ஏரிக்குச் சரியாக தண்ணீர் வருவது இல்லை என்று அந்தக் கிராமமக்கள் ரெவினியூ இலாகாவுக்கும் மற்ற இலாக்காக்களுக்கும் புகார் செய்திருக்கிறார்கள். இந்த வரத்து-வாய்க்கால் வெள்ளாற்றிலிருந்து மணல் குரம்பு கட்டி, வெள்ளாற்றின் ஓரத்திலே கொண்டுவந்து, அத்தியூர் செல்லும் வாய்க்காலிலே பிரிவாக எடுத்துச் செல்லப்பட்டு வந்தது. அப்படி அத்தியூர் வாய்க்காலிலிருந்து "ரைட் ஆங்கில்" ஆக, செங்கோணமாகப் பிரிகின்றபோது, அடிக்கடி மணல் தூர்ந்து விடுகிறது. வருஷம் பூராவும் நாள் தோறும் மணல் எடுத்துக்கொண்டிருந்தால்தான் அந்த வாய்க்காலில் தண்ணீர் ஓட வழியிருக்கிறது. அப்படி ஓட முடியாத*

காரணத்தால், 21 ஆண்டுகளாக அந்த வாய்க்கால் தூர்ந்து போயிருக்கிறது. அதனால் கீழ்மத்தூர் ஏரியிலிருந்து அந்த ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசனவசதி இல்லாமல் இருந்தது. இதைப் பலமுறை சர்க்காருக்கு எடுத்துக் காட்டியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இரண்டு ஆண்டு காலமாக அந்த ஊர் வாசிகள், சர்க்காருக்கு கிஸ்தி செலுத்தவில்லை. பாசன வசதி செய்யாமலிருந்து அங்கு புஞ்சைப் பயிர்கள் தான் செய்ய வசதிஇருந்தது: ஆனால் நஞ்சைத் தீர்வை மட்டும் வசூல் செய்து கொண்டிருந்தார்கள். இந்த இரண்டு பசலியிலும் அந்த ஊர் வாசிகள், "எங்களிடமிருந்து புஞ்சைத் தீர்வை வசூலிக்கவேண்டும். அல்லது வாய்க்காலைச் செப்பனிட்டுக் கொடுக்கவேண்டும்" என்று சொல்கிற முறையிலே "நாங்கள் நஞ்சைத் தீர்வை கொடுக்கமுடியாது" என்று இரண்டு ஆண்டு காலமாக கொடுக்காமல் வைத்திருந்தார்கள். கலெக்டர் அவர்கள் சென்று பார்த்து, அவர்களுடைய முறையீடு சரிதான் என்று ஒப்புக்கொண்டு, அதைப்பற்றி சிபார்சு செய்தார்கள். இருந்தாலும், ரெவினியூ போர்ட்டிலே கலெக்டர் செய்த சிபார்சை நிராகரித்துவிட்டார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு அந்த ஊருக்குச் சென்று கிஸ்தி வசூல் செய்யவேண்டுமென்ற முறையிலே அங்கிருந்த கிணறுகளிலே வைத்திருந்த பம்பு செட்டுகளையும், இஞ்ஜின்களையும் தூக்கி லாரியிலே திருச்சிக்குக் கொண்டுபோய் விட்டார்கள். அதனால் அந்தக் கிராம வாசிகள் மிகவும் வருந்துகிறார்கள், மிகவும் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். சர்க்கார் தங்கள் குடிமக்களுக்காகச் செய்து கொடுக்கவேண்டிய இந்த வசதியைச் செய்து கொடுக்காத காரணத்தினால், அவர்களுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்பதை நான் தெரிவித்துக் கொள்வதோடு, இப்பொழுது அவர்களுக்கு முக்கியமாகச் செய்து கொடுக்கவேண்டியது—வெள்ளாற்றிலே ஒரு கல் குரம்பு கட்டிக் கொடுக்கவேண்டும். இரண்டாவது, அத்தியூருக்கு வருகிற வாய்க்காலிலிருந்து கீழுமத்தூர் ஏரிக்கு வருகிற வாய்க்கால் செங்குத்தாகப் பிரிகின்றபடியினால், அதை இரண்டு பர்லாங்கு தூரம் மேற்கே தள்ளிப்போட்டு, இரண்டு வாய்க்கால்களிலுமே மணல் தூர்ந்து போகாமல், தண்ணீர் தானாக ஓடுவதற்கு வேண்டிய வழிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் சர்க்காருக்குச் சொல்லிக் கொள்கின்றேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU: The hon. Member refers specifically to the question of the failure of the Government to grant remission and the refusal of the whole village to pay kist. I would refer to the past background of the whole issue.

The ayacutdars of Kilumathur tank in Kilumathur village, Perambalur taluk, Tiruchirappalli district, put in petitions to the Collector of Tiruchirappalli in the year 1955 requesting the grant of remission of wet assessment on the wet lands registered as such stating that the tank did not get sufficient supply of water in proper time in fasli 1365, with the result that their crops were adversely affected and that they were not able to obtain normal yield from their lands. On this request, the Tahsildar, Perambalur, and the Junior Engineer, Public Works Department, jointly inspected the tank and its ayacut on 3rd February 1956. On that date, the tank had one week's supply of water and the condition of the crops was fair. The Tahsildar reported that the grievances of the ayacutdars, that they were disabled from securing normal yield of wet crop on account of shortage of supply of water, were not borne out by facts, that the cultivation of wet crops was not materially affected



and that the outturn was also normal. As the ayacutdars were not eligible for remission under the Board's Standing Orders, no remission was granted. Subsequently, on a petition presented on behalf of the ayacutdars of Kilumathur tank, they were permitted to pay one-fourth of the kist due from them in respect of their lands immediately and to pay the balance within six months from the date of order. The time granted in the above order expired by 8th January 1957. But the ryots persisted in the non-payment of kist (i.e., the balance of three-fourth due for Fasli 1365) as well as the current instalment of the kist though demanded by the village officers. The Revenue Divisional Officer who visited the village advised the ryots to pay the arrears of Fasli 1365; but the villagers were adamant. Hence the Tahsildar and the Revenue Divisional Officer had no other go but to resort to the coercive processes provided for under the Revenue Recovery Act. Subsequently on 7th June 1957, the villagers requested time for one month to pay the arrears of kist due for Fasli 1365. As the time-limit applied for by them expired by 6th July 1957, the ryots of Kilumathur tank were advised to pay the kist due (arrear and current) without any further delay.

It will be seen from the above facts that remission of wet assessment is not called for, and consequently there has been no unlawful levy of kist in this case. The parties have been given ample time and facilities to pay the kist. When they persisted in non-payment wilfully, coercive steps have been resorted to, to realise the arrears.

## IV.—ADJOURNMENT MOTION *RE* FAILURE OF THE GOVERNMENT TO KEEP LAW AND ORDER IN MUDUKALATHUR AREA.

MR. SPEAKER: I have received notice of an adjournment motion from the hon. Member Sri M. S. Selvarajan. It reads as follows:

"I intend to move the following adjournment motion, viz.:—

'The failure of the Government to keep law and order in Mudukalathur area in general as promised by the Hon. Minister for Home during the last bye-election to the Legislative Assembly at Mudukalathur and the inability of the Government to free nine Harijans from Kadamangalam near Perunali who were kidnapped, badly manhandled and kept in wrongful confinement since 18th July 1957 by the people of Sri Muthuramalinga Thevar.'"

Before I admit the motion, I would like the hon. Member to tell me how the matter is urgent.

SRI M. S. SELVARAJAN: கனம் சபாநாயகர் அவர்களே, மிக அவசர முக்கியத்துவமுள்ள இந்த விஷயத்தை . . .

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் சுருக்கமாகப் பேசவேண்டும். பிரச்னையின் முக்கியத்துவத்தை சுருக்கமாகக் கூறி உணர்த்தினால், பிரேரபணையை ஏற்றுக்கொண்ட பிறகு, கனம் அங்கத்தினர் விவரமாகப் பேசலாம்.

[24th July 1957

* SRI M. S. SELVARAJAN : மிக அவசர முக்கியத்துவமுள்ள இந்த
9-53 a.m. விஷயத்தை சபையின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். 18-7-1957 அன்று காலை சுமார் 10 மணிக்கு, முதுகுளத்தூர் பகுதியிலுள்ள காடமங்கலம் கிராமத்திற்கு சிலர் ஆயுதபாணிகளாக வந்து, அங்கே கழனியில் வேலை செய்துகொண்டிருந்த 9 ஹரிஜனங்களை பத்மனையேந்தலுக்குத் தூக்கிச் சென்று, அங்கே ஒரு காளி கோயிலுக்கு முன்னால் அவர்களை பலியிட யத்தனித்திருக்கிறார்கள். இவ்வாறு இவர்கள் யத்தனித்துக்கொண்டிருக்கும்போது, அங்கே வந்த பக்கத்திலுள்ள வேப்பங்குளம் கிராம அதிகாரிகள், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சித்திருக்கிறார்கள். அந்த கிராம அதிகாரிகள் தடுத்துநிறுத்த முயற்சிக்கும்போது, அவர்கள் அந்த ஹரிஜனங்களின் காதுகளையாவது அறுத்துவிடவேண்டும் என்று விரும்பி அதற்கு யத்தனித்திருக்கிறார்கள். கடைசியில் அந்த நபர்கள் மீது எப்படியாவது வழக்குத் தொடர்ந்து விட்வேண்டுமென்பதற்காக, அவர்களை ஒரு நாள் ரிமாண்டில் வைத்து ஒரு தப்பான வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் பல மக்கள் இவ்வாறு இம்சிக்கப்படுவதற்குக் காரணம், அவர்கள் பல வருஷங்களாக தொடர்ந்து காங்கிரஸுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்பது தான். கடந்த காலத்தில் ஸ்ரீ முத்து ராமலிங்கத்தேவருடையவும் அவரைச் சேர்ந்தவர்களுடையவும் தவறான பேச்சுகளும் தூண்டுதல்களும்தான் இத்தகைய தவறான காரியங்களுக்குக் காரணங்களாக இருக்கின்றன. குறிப்பாக, ஆடுமாடுகளை வளர்த்து அவை சம்பந்தப்பட்ட தொழில்களைச் செய்துவரும் யாதவர்கள் அங்கே ஒழுங்காக வாழ்வதற்கு வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். கடந்த உப தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன்பு முதுகுளத்தூர் தொகுதியில் ஒருவர் தூக்கிச் செல்லப்பட்டு பலியிடப்படவிருந்திருக்கிறார். ஆனால், நல்ல காலமாக, தூக்கிச் சென்றவர் குடி போதையில் இருந்ததால், அவர் அவரிடமிருந்து தப்பி வந்திருக்கிறார்.

MR. SPEAKER : தாங்கள் இப்போது பெயர்களைக் குறிப்பிட்டுப் பேச வேண்டாம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் தவறு செய்தார் என்றும் குறிப்பிட வேண்டாம். அங்கே என்ன நடந்தது என்பதை மட்டும் சுருக்கமாகவும் பொதுப்படையாகவும் குறிப்பிடுங்கள். தங்களுடைய பிரேரபணை சபை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டால் அதற்குப் பிறகு தாங்கள் விவரமாகப் பேசலாம்.

* SRI M. S. SELVARAJAN : மேலும், கிணறு வசதி செய்து கொடுப்பதற்காக அங்கே சென்ற ஒரு ஹரிஜன நல அதிகாரி துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார். அதுபற்றி விசாரிப்பதற்கு அங்கே சென்ற போலீஸ் அதிகாரிகளும் துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில், அங்கே மக்கள் பிழைத்து உயிர் வாழ்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. " தடியெடுத்தவன் தண்டல்காரன் " என்பது அங்கே பிரத்தியட்சமாக இருந்து வருகிறது. அங்கேயுள்ள இத்தகைய கோரமான நிலைமையை நீக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தவறான போக்குகளை ஒழித்து அங்குள்ள மக்களுடைய கஷ்டங்களுக்கு சர்க்கார் இரும்புக்கரங்கொண்டு உடனடியாக விமோசனம் காணவேண்டும். நான் குறிப்பிட்ட 9 ஹரிஜனங்கள் கதி என்ன, மற்றவர்களுக்கு என்ன பாதுகாப்பு என்பதை விசாரித்து அவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக, இந்த சபையை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் ஏதாவது சொல்லவேண்டுமானால் சொல்லலாம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர் குறிப்பிட்ட கிராமத்தில் ஒரு சில ஹரிஜன மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள் என்ற தகவல் கிடைத்ததும், கிடைத்த வரையில் சில விவரங்களைத்தெரிந்து கொண்டேன். அரசாங்கமும்



24th July 1957] [Sri M. Bhaktavatsalam]

போலீஸாரும் அமைதியைக் காக்கத் தவறிவிட்டார்கள் என்று கனம் அங்கத்தினர் தமது வெட்டுப் பிரேரணையில் கூறுவதை நான் ஒருக்காலும் ஒப்புக் கொள்ளமுடியாது. போலீஸார், அப்போதைக்கப்போது கவனம் செலுத்தி, வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள் என்று நான் கூறுவேன். இந்த சம்பவத்தைப்பற்றிய விவரங்களை—எனக்குக் கிடைத்த வரையில்—இந்த சமயத்தில் நான் வெளியிட விரும்புகிறேன்.

On 18th July 1957 one Shenbagam, wife of Chelliah of Kadamangalam complained that her husband and eight other Harijans were attacked by fifteen Thevars at Kadamangalam and carried forcibly to Pommanandal village from where the Thevars took the nine Harijans to Koilangulam Police station fourteen miles away. They gave a complaint of cattle theft against nine Harijans to the village munsif with whose connivance, a complaint was given at Koilangulam Police station the same night. Two Harijans had minor injuries. In the absence of the Sub-Inspector, the station-writer police constable registered a case against the Harijans and remanded them to custody. In the meanwhile the Inspector of Police, Mudukulathur, heard about the complaint of Shenbagam at Perunali Police station and he personally took up the investigation. On Shenbagam's complaint a case was registered under sections 147, 323, 363 and 341, I.P.C., in Perunali Police station and personally investigated by the Inspector. He found the case against the Harijans was false and so he made arrangements for the release of the Harijans and they were released on 20th July 1957 evening. Further investigation was made and eight Maravars concerned in the Perunali case were arrested and remanded to custody. Twenty-seven more Thevars concerned in the above case were subsequently arrested, by 22nd July 1957 afternoon all of whom (35 arrested so far) have been remanded to custody. The Special Armed Police is patrolling the affected villages.

The conduct of the village munsif concerned is under enquiry. I therefore submit that this is not a matter for an Adjournment Motion.

MR. SPEAKER : The Adjournment Motion is for the purpose of discussing (1) the failure of the Government to keep law and order in the Mudukulathur area during the recent bye-election and (2) the inability of the Government to free nine Harijans from Kadamangalam near Perunali who were kidnapped and kept in wrongful confinement since 18th July 1957 by the people of Sri Muthuramalinga Thevar. As regards item (1), it is not a matter of recent occurrence as the poll was held on the 1st July 1957 and the result was declared on the 4th July 1957. As regards item (2), it does not involve more than the ordinary administration and is a matter for the Law and Order Police to take action. I therefore feel that there is no case for an adjournment motion and disallow the adjournment motion.

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை.

[24th July 1957

MR. SPEAKER : அந்த ஒத்திவைப்புப் பிரேரேபணை ஒழுங்கில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி இந்த சபையில் விவாதிக்க முடியாது.

SRI T.L. SASIVARNA THEVAR : நான் அந்தத் தொகுதியிலிருந்து வந்திருக்கிறேன். அங்குள்ள விஷயங்களைப்பற்றி எனக்குத் தெரியும். ஆகவே நான் அதுபற்றிப்பேச விரும்புகிறேன்.

MR. SPEAKER : There cannot be a discussion on this matter. If he wants, the hon. Member may give notice of an adjournment motion or a short notice question. (இப்போது அதுபற்றி நீங்கள் பேசமுடியாது. நீங்களும் ஒரு ஒத்திவைப்பு பிரேரேபணை கொடுத்தால் பேசலாம்.)

## V.—PRESENTATION OF FURTHER DEMAND FOR GRANT FOR THE YEAR 1957-58.

### DEMAND XLV—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 800 lakhs under Demand No. XLV—Loans and Advances by the State Government."

You are aware that under the Electricity Demand, there was a reduction of Rs. 800 lakhs. In view of the formation of the Electricity Board, this amount has to be provided by way of loans to the Board for the working of the Electricity Schemes. That is why this has been transferred from one head to another. But still, a formal motion has to be made for the transfer and so the further demand has been placed before the House.

MR. SPEAKER : Motion moved—

" That the Government be granted a further sum not exceeding Rs. 800 lakhs under Demand No. XLV—Loans and Advances by the State Government."

Normally I would have allowed a discussion on this motion. But I think the other day there was an agreement that this amount may be reduced from the Capital Outlay on Electricity Schemes, and that this amount may be voted upon separately on some other day later. Since this was unanimously agreed to by the House, I shall waive all other formalities and shall put this Demand straightaway to the vote of the House unless any hon. Member wants to speak on this Demand. I personally feel that in view of the discussion that had already taken place on the other Demand, any further discussion is not necessary.

The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 800 lakhs under Demand No. XLV—Loans and Advances by the State Government."

The motion was put and carried and the Grant was **made**.



24th July 1957]

## VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XXI—INDUSTRIES AND CINCHONA.

### (2) DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT—*cont.*

MR. SPEAKER : We shall now continue the discussion on Industries and Cinchona. The discussion on this will continue till 11-30 a.m. May I know how long the Hon. Minister will take to reply to the Debate?

THE HON. SRI R. VENKATARAMAN : Half an hour, Sir.

MR. SPEAKER : We have one more hour for discussion.

* SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் மந்திரி அவர்கள் கோரியிருக்கும் மானியத்தை ஆதரிக்கும் முறையில் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 10-03 a.m.

குடிசைத் தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில் நம்நாட்டின் ஒரு பிரதான தொழில் என்பதையும், அது ஒரு தனித்தொழில் என்பதையும் நாம் அறிவோம். சில காலங்களுக்குமுன் அது நசித்துக்கொண்டு வருகிறது என்பதையும் நாம் எல்லோரும் அறிவோம். அது திரும்பவும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக நமது அரசாங்கம் பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் அது நாம் நினைக்கும்படியான அளவு முன்னேற்றம் அடைந்து வரவில்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. காரணம் மில் துணிகளோடு போட்டி போட கைத்தறித் துணிகளால் முடியவில்லை.

இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் சொல்லவேண்டும். ஸ்பின்னிங் மில்லும், வீவிங் மில்லும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதால், மில் துணிகளுக்கு அடக்கமான விலையில் நூல் கிடைத்து வருகிறது. அதனால் துணியின் விலையும் குறைவாக இருக்கிறது.

கைத்தறித் துணிகளுக்கோ நூல் இரண்டு மூன்று கைகள் மாறி வர வேண்டியிருப்பதால் விலை உயர்ந்துவிடுகிறது. துணியின் விலையும் அதிகமாகிறது. ஆகையால் மில் துணியுடன் போட்டி போட கைத்தறித் துணியால் முடியவில்லை.

மேலும் மில் துணிகளுக்கு வெளிநாடுகளில் அதிகமான கிராக்கி இருக்கிறது. வெளிநாடுகளில் அவ்வளவு அதிகமான கிராக்கி கைத்தறித் துணிகளுக்குக் கிடையாது. ஆகவே வெளிநாடுகளுக்கு அதிகமாக கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றால் அந்நாடுகளுக்கு தேவையான துணிகளை கைத்தறி மூலம் உற்பத்தி செய்வதற்கு நமது அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். இரண்டாவது சில நூற்பாலைகளை கைத்தறிக் கென்று ஒதுக்கி, நூல் அடக்க விலையில் கைத்தறிக்கு [illegible] செய்ய வேண்டும்.

மேலும் நமது சர்க்கார் கொழும்பில் ஒரு கைத்தறித் துணி விற்பனை நிலையம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோல் மற்ற நாடுகளிலும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கு விற்பனை நிலையங்களைத் திறக்க வேண்டும்.

அமெரிக்கா, லண்டன், பிரான்சு போன்ற வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளுக்கு கிராக்கி ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு வியாபார தூது கோஷ்டிகளை சர்க்கார் அந்நாடுகளுக்கு அனுப்பி வருகிறது. ஆனால் அந்த தூது கோஷ்டியில் கைத்தறித் துணியில் நல்ல அனுபவம் உள்ளவர்களை, நல்ல அபிமானம் உள்ளவர்களை அனுப்புவது இல்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர்களை மட்டும் அனுப்புவதனால் இவர்களால் அங்குள்ள மக்களின் தேவை எப்படிப்பட்ட ரகம் என்பதை நன்றாக உணர்ந்து வர முடியவில்லை. அதனால் அவர்களுக்குத் தேவையான ரகத் துணியை

[Srimathi P. K. R. Lakshmikantham] [24th July 1957

இங்கே உற்பத்தி செய்ய முடியாமல் போகிறது. ஆகையால் இனி சர்க்கார் உத்தியோகஸ்தர்களை அனுப்புவதுடன் கைத்தறித் தொழில்களை நன்றாக அறிந்தவர்களை அனுப்பி அவர்களுக்குத் தேவையான துணிகளை உற்பத்தி செய்வதற்கு நாம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக சர்க்கார் கைத்தறியாளர்கள் எல்லோரையும் கூட்டுறவு சங்கங்களின்கீழ் கொண்டுவர நினைத்திருப்பது போற்றத் தக்கது; என்றுலும் எல்லா கைத்தறியாளர்களையும் கூட்டுறவு சங்கங்களில் சேர்த்து வைத்து விட்டால் மாஸ்டர் வீவர்கள் என்ன செய்வார்கள் என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். மாஸ்டர் வீவர்கள் என்று சொன்னாலேயே நாம் அவர்கள் எல்லோரும் பெரிய பணக்காரர்கள் என்று நினைத்துவிடுகிறோம். அப்படி நினைப்பது தவறு. நூறு தறிகளை வைத்துக் கொண்டிருப்பவர்களும் மாஸ்டர் வீவர்கள்தான். ஐந்து தறிகளை வைத்துக்கொண்டிருப்பவரும் மாஸ்டர் வீவர்தான். குறிப்பாக 50 தறிகளில் இருந்து 100 தறிகள் வரையில் வைத்துக்கொண்டிருக்கும் மாஸ்டர் வீவர்கள் 5 சதவிகிதம் தான் இருப்பார்கள். ஐம்பதுக்குக் குறைவாக தறிகள் உடைய மாஸ்டர் வீவர்கள்தான் 95 சதவிகிதம் இருப்பார்கள். இவர்கள் எல்லாம் லோயர், மிடில் கிளாஸ் மக்கள் என்றுதான் நாம் சொல்ல வேண்டும். எல்லா தறியாளர்களையும் கூட்டுறவு சங்கங்களின்கீழ்க் கொண்டுவந்துவிட்டால் இப்படிப்பட்ட மாஸ்டர் வீவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் தொழிலையும் இழந்து, அவர்களும் வேலையற்றவர்களாகப் போய்விடமாட்டார்களா என்பதைத்தான் நாம் சிந்திக்க வேண்டும். ஆகையால் இவர்களுடைய தொழில் நசித்துப்போய்விடாமல் தொடர்ந்து நடந்து வருவதற்கு சில யோசனைகளைச் செய்தாக வேண்டும். குறிப்பாக இன்று கூட்டுறவு சங்கங்கள் பல நேர்மையான முறைகளில் நடைபெறாமல் பல குற்றங்கள் அடங்கியுள்ளதாக இருக்கின்றன. அவைகளில் எல்லா நெசவாளர்களை சேர்த்து விடுவது என்றால் இன்னும் பல தவறுகள் ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கும், மாஸ்டர் வீவர்கள் தங்கள் தொழிலை செய்து வரும்படியாகச் செய்தால்தான் கொஞ்சமாவது அத்தொழில் நேர்மையுடன் நடக்க வழியுண்டு. இவர்களுடைய தொழில் அழிந்துபோய்விடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

அண்மையில் கைத்தறி வாரத்தில் பல நுட்பமான வேலைப்பாடுகளுடன் கூடிய கைத்தறி வேஷ்டிக்கும், சேலைக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. அவ்வமயம் மாஸ்டர் வீவர்கள்தான் அதிகமான பரிசுகளை பெற்றார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவர்களால்தான் இத்தொழிலில் நுட்பமான வேலைப்பாடுகளுடன் கூடிய கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்ய முடிகிறது. மேலும் வெளிநாடுகளுக்கு ஜரிகை வேலைப்பாடுடைய துணிகளை அனுப்புவதற்கு மாஸ்டர் வீவர்களால்தான் முடியும் என்பதை நான் இந்தச் சபையில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதானால் வேண்டிய அளவு துணிகளைத் தயார் செய்வதற்கும் அவர்களால்தான் முடியும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட மாஸ்டர் வீவர்களை நாம் புறக்கணித்து விடலாகாது. அவர்களுடைய தொழில் நசித்துப் போகாது, கைத்தறியாளர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்திருக்கக்கூடிய நெசவாளர்கள் 30 சதவிகிதம்தான் என்று சொல்ல வேண்டும். பாக்கியுள்ள 70 சதவிகிதம் நெசவாளர்கள் வெளியில் இருந்துதான் தொழில் புரிகிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கும் நாம் இறக்கம் காட்டவேண்டும். மற்ற கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்திருக்கும் நெசவாளர்களுக்குக் கொடுப்பது போலவே சகல சலுகைகளையும் கொடுக்க வேண்டும்.

மேலும் எனக்கு முன்பு நேற்று பேசிய அங்கத்தினர்கள் கூறியது போல கைத்தறிகளுக்கு, என்றே சில ரகங்களை ஒதுக்கி வைக்காவிட்டால் கைத்தறித் தொழிலின் முன்னேற்றத்திற்கு கதிமோக்ஷமே கிடையாது என்பது எனது தாழ்மையான கருத்து.



24th July 1957] [Srimathi P. K. R. Lakshmikantham]

இன்னும் ஒரு முக்கியமான தொழிலைப்பற்றிச் சொல்லிவிட்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன். ஜுன்னடித் தொழில் என்று ஒரு தொழில் இருக்கிறது. அநேகமாக இது மதுரையில்தான் அதிகம் இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு வேளை இதைப்பற்றி பல அங்கத்தினர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். இந்தத் தொழிலுக்குப் புள்ளி கட்டுவது என்று கூடச் சொல்வார்கள். கைத்தறியில் புள்ளி புள்ளியாகக் கட்டி பிறகு சாயம் போட்டு, குறிப்பாக வட நாட்டுக்கு மிக அதிகமாக ஏற்றுமதி செய்வார்கள். இதனால் ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வேலை கிடைத்து வந்தது. பெண்கள்தான் மிக அதிகமாக இதில் ஈடுபடுவார்கள். இப்போது மெஷின் பிரிண்டிங் வந்த காரணத்தால் இத்தொழில் நசித்து வருகிறது. அதனால் ஆயிரக்கணக்கான பெண்கள் வேலையை இழக்கிறார்கள்.

அண்மையில் நமது கைத்தறித் தொழில் டைரெக்டரும் சில அங்கத்தினர்களும் மதுரைக்கு விஜயம் செய்தார்கள். அப்போது கைத்தறித் துணிகளையும், ஜுன்னடி ஜவுளிகளையும் பார்வையிட்டார்கள். "இப்போது இந்தத் தொழில் எங்கே நடைபெறுகிறது?" என்று அவர்கள்கூட கேட்டார்கள். இந்தத் தொழில் நசித்துப்போக நாம் விடக்கூடாது. இந்த துணிகளுக்குத்தான் வட நாட்டில் அதிக கிராக்கி இருக்கிறது. புதிய புதிய குடிசைத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கும் நமது சர்க்கார் இந்தத் தொழிலை மறுபடியும் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்பதாக நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் அதனால் ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வேலை கிடைக்கும், கைத்தறிகளை வெளியில் அனுப்பவும் முடியும் என்பதாகச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை நான் முடித்துக்கொள்ளுகிறேன். வந்தனம்.

* **Sri P. S. CHINNADURAI**: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 10-10 a.m.
சோஷலிச சமுதாய அமைப்புக்கு ஏற்ப தங்கள் தொழிலாளர்களை முதலாளிகள் நடத்த வேண்டுமென்று நாம் கூறுகிறோம். அதேமாதிரி அரசாங்கத்தின்கீழ் இருக்கும் தொழிலாளர்களையும் சர்க்கார் நடத்துகின்றதா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதேமுறையில் நடத்துவதில்லை. முதலாளிக் கூட்டம் நம்மைப் பார்த்து "உன் கண்ணில் இருக்கும் உத்திரத்தை எடுத்துவிட்டு வா, என் கண்ணில் இருக்கும் துரும்பை அப்புறம் எடுக்கலாம்" என்று சொல்லும்படி நாம் வைத்துக் கொள்ளலாமா? நம் சின்கோனா தோட்ட தொழிலாளர்கள், பாக்டரியில் வேலை செய்கின்றவர்கள் இவர்களை நாம் எவ்வாறு நடத்துகிறோம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

'பிளான்டேஷன் தொழிலாளர்களுக்கு' என்று ஒரு தொழில் கோர்ட்டை நியமித்து, அவர்களுக்கு என்று சம்பள விகிதங்களை நிர்ணயம் செய்து தீர்ப்பு வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தீர்ப்புக்கு முதலாளிகள் மதிப்பு அளிக்கவில்லை என்று நாம் சொல்லுகிறோம். அவர்கள் ஹை கோர்ட்டுக்கும், சுப்ரீம் கோர்ட்டுக்கும் போகிறார்கள் என்றும் சொன்னோம். சின்கோனா பிளான்டேஷன் தொழிலாளர்களும், மற்ற பிளான்டேஷன் தொழிலாளர்களைப் போன்றவர்கள்தான். ஆனால் அவர்கள் அதேவிதத்தில் நடத்தப்படுவது இல்லை. சின்கோனா பிளான்டேஷன்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இந்தத் தீர்ப்பின்படி சம்பள உயர்வு பெற சர்க்கார் ஏற்பாடு செய்தார்களா? தார்மீக எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டேனும் இதனைச் செய்திருக்க வேண்டாமா? நம்முடைய தொழிலாளர்களின் வாழ்க்கையை உயர்த்த எந்தவிதமான நடவடிக்கையும் நாம் எடுத்துக்கொள்ளவில்லை. சாதாரணமாக மற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு என்ன சம்பளம் முதலாளிகள் கொடுக்கிறார்களோ, அதைவிட குறைவான சம்பள விகிதத்தில்தான் அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுத்து வருகின்றது என்று பொள்ளாச்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் ஸ்ரீ பொன்னுசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இது பெருமை அளிக்கக்கூடியதா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய தொழிலாளர்களை நாம் சரியாக நடத்தாவிட்டால்,

[Sri P. S. Chinnadurai] [24th July 1957.

நம்மிடம் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு சரியான சம்பளம் கொடுக்காவிட்டால், நாம் எவ்வாறு தொழில் முதலாளிகளைப் பார்த்து "உங்கள் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்கவேண்டும்" என்று வற்புறுத்திச் சொல்லுவது சரியாகுமா என்பதை நாம் இந்த நாளிலே சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நம் செயல்களில் தார்மீக பலம் இருக்க வேண்டும், நம்முடைய தொழிலாளர்களை நாம் சரியாக நடத்த முன்வர வேண்டும் என்று இந்த நாளிலே நான் வேண்டிக்கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்ல. சர்க்கார் ஆதிக்கத்திற்கு உட்பட்ட தொழிற்சாலை தொழிலாளர்கள் சம்பள விகிதத்தில் ஏதாவது தகராறு அல்லது பிரச்னை இருந்தால் அதை தொழில் கோர்ட்டுக்கு விடுவதற்கு அரசாங்கம் முன்வருவது இல்லை. தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களும், அரசாங்க தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களும் ஒன்றே என்றுதான் கருத வேண்டும். அநேகமாக இரண்டு வித தொழிலாளர்களுக்கும் இருக்கக்கூடிய பிரச்னை ஒன்றுதான். வாழ்க்கையில் உள்ள பிரச்னைகள் அரசாங்கத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு மட்டும் வேருக இருக்கப்போவதில்லை. அப்படி இருக்கும்பொழுது அரசாங்கத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் பிரச்னைகளை, தகாறுகளை, தொழில் கோர்ட்டுக்குவிட என் தயங்க வேண்டும். நமக்கு மேலே ஹை கோர்ட் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டு இருக்கிறது. நீதி என்பது தொழில் கோர்ட்டுக்கு வேருக இருக்க முடியாது. அப்படி இருக்கும்போது அரசாங்கத்தின்கீழ் இருக்கும் தொழிலாளர்களின் பிரச்னைகளை என் தொழில் கோர்ட்டுக்கு விடக்கூடாது என்று இந்த சமயத்தில் நான் கேட்க விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் கீழே வேலை செய்கின்றவர்கள் இரண்டு வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கிருர்கள். ஒரு வகை, அரசாங்கக் காரியங்களை கவனிக்கும் கிளார்க்கு போன்றவர்கள். மற்ருெரு வகை தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றவர்கள், பொருள்களை உற்பத்தி செய்கின்றவர்கள். தொழிற்சாலைகளில் வேலை செய்கிறவர்களை குமாஸ்தாக்கள் வகையிலிருந்து பிரிக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுப்பதுடன் இவர்களுடைய பிரச்னைகளையும் தொழில் கோர்ட்டுகளுக்கு விட சர்க்கார் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருஷத்து பட்ஜெட்டில் சின்கோனு தொழிலுக்கு அதிகமான மான்யத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறிய தொழில்களுக்காகவும் குடிசைத் தொழில்களுக்காகவும் முந்திய ஆண்டை விட இப்பொழுது அதிகப்படியான தொகை கோரப்பட்டிருக்கிறது. அதோடு கதர் திட்டத்தை தீவிரப்படுத்த என்று பெரும் தொகை கோரப்பட்டிருச்கிறது. அரசாங்கத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற கதர் இலாகாவின் நிர்வாகம் சரியான முறையில் அமைந்திருக்கவில்லை. அதன் கணக்குகளை சென்ற ஐந்து வருஷங்களாக ஆடிட்டர் பரிசோதனைக்கு அனுப்பப்படவில்லை. இதை முன்வைத்துப் பார்க்கும்போது இம்மாதிரியான பெரும் தொகையை இதற்கு ஒதுக்குவது சரியானதுதாஞ என்று நான் கேட்க விரும்புகிறேன். கதர் திட்டத்தை மிகவும் தீவிரமாக நடத்த அகில பாரத சர்வ சேவா சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அது மிகவும் நன்ருக வேலை செய்து கொண்டிருக்கிறது. கதர் திட்டத்தில் வேலை செய்கின்றவர்களுக்கு கதரில் பூரண நம்பிக்கை இருக்க வேண்டும். கதர் பொருளாதாரத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். சேவை செய்யும் மனப்பான்மை இருக்க வேண்டும். சர்வ சேவா சங்கத்தின் நிர்வாகத்திலேயே இந்த தீவிரமான கதர் திட்டத்தை எடுத்துக்கொண்டு நடத்த என் ஏற்பாடு செய்யக்கூடாது என்று நான் கேட்கிறேன். நம்பிக்கையில்லாதவர்களைக் கொண்டு இந்த கதர் திட்டத்தை நடத்திஞல் பணம்தான் வீணுகச் செலவழிக்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் இதற்காக பெரும் மான்யம் கொடுக்கின்றனர். இதை சர்வ சேவா சங்கத்தினிடம் ஒப்படைத்து அவர்களையே இந்த திட்டத்தை நடத்தும்படி செய்தால் அவர்கள் இன்னும் தீவிரமாகவும், திறமையோடும் நடத்துவார்கள்.



24th July 1957] [Sri P. S. Chinnadurai]

எல்லா தொழில்களையும் அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்ற கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. எல்லா தொழில்களையும் அரசாங்கம் உடைமையாக்கிக் கொள்வது என்பது சோஷலிசம் அல்ல. சோஷலிசம் என்பது தொழில்களிலிருந்து வரக்கூடிய ஊதியத்தை சமுதாயத்திற்கு பயன்படும்படி செய்வதேயாகும். தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்து இந்தக் கைத்தொழில்கள் அரசாங்க முதலாளித்துவத்துக்கு வர வேண்டும் என்று நான் கோரவில்லை. அரசாங்க முதலாளித்துவத்தில் சர்வாதிகார போக்கே இருந்துவிடும். இந்தமாதிரி தொழில்களை நடத்தவும் கண்காணிக்கவும் திறமை வாய்ந்த நபர்களைக் கொண்ட ஒரு 'கார்ப்பொரேஷன்' ஏற்படுத்தி அவர்களின் கீழே இந்த தொழில் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். இந்த தொழில்களிலிருந்து வரும் ஊதியத்தை மக்களுக்கு பயன்படுத்துவதே நமது கொள்கையாக இருக்க வேண்டும். இந்தக் கதர் திட்டத்தை சரியாக நடத்த வேண்டும் என்ருல், நல்ல சேவை செய்யக்கூடிய சர்வ சேவா சங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும். அப்பொழுது அரசாங்கம் உண்மையிலேயே இந்த தொழிலுக்கு சேவை செய்தவர்களாக இருப்பார்கள் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri A. MARIAPPAN : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்த மான்யக் கோரிக்கைய ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 10-18 a.m.

கைத்தறி நெசவாளரைப் பொறுத்தவரை நமது சர்க்கார் நல்ல முறையில் உதவி செய்து வருகிருர்கள். இவர்களுக்கு பங்கு பணம் ரூபாய் 200 கடனுக கொடுக்க சர்க்கார் உத்திரவிட்டிருக்கிருர்கள். அப்படியிருந்தும் " டெபுடி ரிஜிஸ்டிரார் " 200 ரூபாய் வரை சிபாரிசு செய்வதில்லை. சென்டிரல் பாங்கும் அந்த அளவுக்கு பணம் கொடுப்பதில்லை. ஆகையால் எல்லா நெசவாளர்களுக்கும் 200 ரூபாய் கடன் பணம் கிடைக்கும்படி வழி வகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாயப்பட்டறைக்கு ஒரு ஆள் இனுமாகக் கொடுக்கப்படுகிறது. இவருக்கு 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்த முறையை ஐந்து வருஷத்திற்கு நீடிக்க வேண்டும் என்றும், அதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பேட்டுப்பெட்டிகள் நெசவாளர்களுக்கு காலாகாலத்தில் உதவி கிடைப்பதில்லை. மார்ச் மாதக் கடைசியில் தான் உதவி கிடைக்கிறது. இதை முன்கூட்டியே கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மகாணத்தில் வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் ஆறு இடங்களில் நடைபெறுகிறது. சிறந்த முறையில் வேலை நடந்துகொண்டு வருகிறது. குறிப்பாக " ஹாண்டுலூம் டிரைக்டர் " இதுபற்றி அதிக ஊக்கம் காட்டி வருகிருர். ஆங்காங்கு வேலை துரிதமாக நடந்து கொண்டுவருகிறது. இப்பொழுது ஒரு வீட்டிற்கு ரூ. 3,500 கொடுக்க ஏற்பாடு செய்யப்படிருக்கிறது. இதை ரூ. 5,000 ஆக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ரூ. 5,000 செலவில் சர்க்காரிலே வீடுகட்டிக்கொடுக்க திட்டம் வகுக்கவேண்டும். இன்னும் பல இடங்களிலும் வீடுகட்டிக்கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டும். வீடுகள் ரிபேர் செய்வதற்காக ரூ. 1,000 கடன் கொடுக்கப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கு இனுமாகவும், இரண்டு பங்கு கடனுகவும் கொடுக்கப்படுகிற திட்டத்தை வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தை பல இடங்களுக்கு விஸ்தரித்து நெசவாளர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேங்கிக்கிடக்கும் கைத்தறி துணிகளை விற்பனை செய்வதற்காக " டெபோக்கள் " திறக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மாகாண சங்கமும், அகில இந்திய கைத்தறி போர்டும் " டெபோக்கள் " திறப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். ஆஞல் அங்கே போதிய அளவுக்கு துணி விற்பனை இல்லை. " பிரைமரி சொஸைடிகள் " எதிர்பார்க்கும் அளவுக்கு

[Sri A. Mariappan] [24th July 1957

துணி விற்பனை ஆகவில்லை. அதற்கு வேண்டிய நல்ல ஏற்பாடுகளை செய்துதரவேண்டுமென்று நமது மந்திரி அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, " ரிபேட் " கொடுக்கப்படுவதை வரவேற்கிறேன். ஆனால் சில " பிரைமரி " " ஸொஸைடிகள் " 6, 8 மாதங்களாக " ரிபேட் " பெறமுடியாத நிலைமையில் இருக்கின்றன. " அம்மாபேட்டை வீவர்ஸ் சொஸைடிக்கு " கிடைக்கவேண்டிய ஒரு லட்சம் ரூபாய் ரிபேட் இன்னும் கிடைக்காமல் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இது சீக்கிரம் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம் மகாணத்தில் நூலைக்கொண்டு நெய்யப்படுகிற தறிகளைத் தவிர, நாட்டுப் பட்டு, செயற்கை பட்டு இவைகளைக்கொண்டு நெய்யப்படும் தறிகளும் இருக்கின்றன. அவைகளையும் பதிவு செய்தால்தான், நம் மகாணத்திலுள்ள நெசவாளர்களுடைய கணக்கு பூர்த்தியாக எடுக்கப்படும். ஆகவே கைத்தறிநூலைக்கொண்டு நெய்யப்படும் தறிகளோடு, ஏனைய நூலைக்கொண்டு நெய்யப்படும் தறிகளையும் பதிவு செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மகாணத்தில் 2 நூற்பு மில்கள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு நூற்பு மில் அமைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கத்திற்கு வெளியே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான உதவியும் அளிக்கப்படவில்லை. கூட்டுறவு இயக்கத்திலுள்ள நெசவாளர்களைப்போல், இவர்களுக்கும் ஏதாவது ஒரு முறை வகுத்து, இவர்களுக்காக ஏதாவது சங்கங்கள் ஏற்படுத்தி உதவி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் வெளியே இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு இயக்கத்திற்குள் வரவேண்டுமானால், கவர்ச்சிகரமாக பல திட்டங்கள் வகுக்கவேண்டும்.

நெசவாளர்கள் சம்பாதிக்கக்கூடிய லாபத்தில் அவர்களுக்கு 40 சதவீதம் போனஸாக கொடுக்கவேண்டியது மிகவும் முக்கியமான விஷயம். இதை உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு உப கருவிகள் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும். " மாஸ்டர் வீவர்களிடமிருந்து " திரும்பி வரும்பொழுது நெசவாளர்கள் தாங்கள் பட்ட கடன்களை திருப்பிக்கொடுக்க முடியவில்லை. அந்தக் கடன்களை அவர்கள் தீர்ப்பதற்கு ஏதாவது வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம் மத்திய கூட்டுறவு பாங்கு நல்ல முறையில் கடன் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில பாங்குகளிலும் ஓரளவு கடன் கொடுக்கிறார்கள். மற்ற மத்திய பாங்குகள் இன்னும் நல்ல முறையில் கடன் கொடுப்பதில்லை. அவர்களும் நல்ல முறையில் கடன் கொடுக்கவழிவகைகள் வகுக்கவேண்டும். அந்தப் பணம் வேறு விதமாகவும் நெசவாளர்களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கைத்தரி துணியைப் பற்றி ஏனைய மாற்றுக் கட்சி அங்கத்தினர்கள் பிரமாதமாகப் பேசினார்கள். அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன். வாயால் மட்டும் பேசிவிட்டுப் போகாமல் அவர்கள் தங்கள் கட்சி அங்கத்தினர்களை கைத்தறி துணையை வாங்கி அணியும்படிச் செய்தால், அது நெசவாளர்களுக்கு செய்யக்கூடிய ஒரு மாபெரும் உதவியாக கருதப்படும். ஆகவே, எல்லா அங்கத்தினர்களும் கைத்தறி துணியை அணிவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



24th July 1957] [Sri A. Mariappan]

அதோடு எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், அங்கே இரும்புத் தொழிற்சாலை மிகவும் அவசியம். சேலம் ஒரு பிற்போக்கான ஜில்லா. அங்கே உடனடியாக இரும்புத் தொழிற்சாலை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கைத்தறி கூட்டுறவு இயக்கத்திற்கு வெளியே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்த வியாபாரிகளுக்கும் " ரிபேட் " அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஏற்கனவே அந்த " ரிபேட் " ஏதோ தவறுதலான முறையில் கொடுக்கப்பட்டது என்று நிறுத்தப்பட்டது. அம்மாதிரி மீண்டும் தவறுதலாகப் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கூட்டுறவு இயக்கத்திலிருந்து வெளியே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு எப்படி உதவி செய்யமுடியும் என்பதை சர்க்கார் நன்றாக தீவிரமாக பரிசீலனை செய்து, அவர்களுக்கும் வேண்டிய உதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக சேலத்தில் இருக்கக்கூடிய " மாஸ்டர் வீவர்கள் " பெரிய பணக்காரர்கள் அல்ல, சிறிய பணக்காரர்கள் கூட இல்லை என்று சொல்ல முடியும். அவர்கள் சாதாரணமாக குறைந்த மூலதனத்தைக் கொண்டுதான் தொழில் நடத்துகிறார்கள். அவர்கள் தொழில் நல்ல முறையில் நடைபெறுவதற்கு அவர்களுக்கு " ரிபேட் " கொடுக்கவேண்டும், மூலதனக் கடன் கொடுக்கவேண்டும், ஏனைய உப கருவிகளும் கொடுக்கவேண்டும். கூட்டுறவு இயக்கத்திற்கு வெளியே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு, இந்தக் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில் அது நல்ல முறையிலே நடைபெறுவதற்கு 40 சதவிகிதம் போனஸ் கிடைக்கச் செய்வது மிகமிக முக்கியம் என்பதை மந்திரி அவர்களிடம் சொல்லிக்கொண்டு, அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரிக்கிறேன்.

* **Sri C. N. ANNADURAI**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, தொழில் துறையிலே ஒதுக்கப்பட்டிருக்கிற மான்யத்தின் பேரில் தரப்பட்டிருக்கிற வெட்டுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகளை நான் பேசுகின்ற காலத்தில், தொழில் துறையிலே இன்னும் அதிகமான அளவுக்கு கவனம் செலுத்தவேண்டுமென்று சர்க்காருடைய திறமையை தூண்டுவதற்காக இந்தக் கருத்துக்களை சொல்லுவதாக சர்க்கார் கட்சியினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தாங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். 10-26 a.m.

பொதுவாக, தொழில்துறையை பொறுத்தவரையிலே, இந்த சர்க்காருக்கு ஒரு நல்ல திட்டம் இல்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அம்மாதிரி குற்றம் சாட்டுகின்ற நேரத்திலே, நான் அவர்கள் சார்பிலே வாதாடி, அவர்களுக்கு ஒரு திட்டம் இல்லாததற்கும் காரணம் திட்டம் வகுக்கின்ற பொறுப்பு அவர்களிடம் இல்லை என்ற சமாதானத்தை அவர்கள் சார்பிலே நான் தேடிக்கொள்ளுகிறேன். அப்படி தேடிக்கொள்ளுகின்ற நேரத்திலே, மாநில ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்கள் திட்டம் வகுக்கின்ற பொறுப்பு வேறு ஒரு இடத்தில் இருப்பது தங்கள் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என்ற கருத்துப்பட,' தங்களுடைய சொல்லையும் செயலையும் ஓரளவுக்கு பக்குவப்படுத்திக் கொள்வார்களேயானால், தொழில் துறையிலே நல்ல திட்டங்கள் வகுப்பதற்கு இந்த மாநிலத்திற்கு நல்ல வாய்ப்புகள் இருக்ககும் என்று நான் கருதுகிறேன். நான் இதற்கு நாட்டுப் பிரிவினையை ஆதாரமாகக் காட்டவில்லை. நான் அப்படி ஆதாரமாகக் காட்டினால் அதனால் ஆட்சியாளர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படலாம். ஆகையால், நாட்டுப் பிரிவினையை நான் ஆதாரமாக வற்புறுத்தாவிட்டாலும்கூட, ஜப்பான் நாட்டில் பொதுவாக நடப்பது பற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன். அந்த நாட்டில் அந்தந்த பிரதேசங்களுக்கு (ரீஜனல் போர்டு) தொழில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாத வகையில் பொதுவான திட்டங்கள் வசதியாக இருக்கின்ற நேரத்தில், அந்தந்த பிரதேசங்களுடைய திறமைக்கும், தட்பவெட்ப நிலைமைக்கும், மக்களுடைய வருவாய்க்கும் உகந்த நிலைமையில் தேவைப்படி திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி வழியில் ஜப்பான் நாட்டில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை ஆட்சியாளரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[Sri C. N. Annadurai] [24th July 1957

தொழில் துறையிலே நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்பது ஒரு கட்சி எடுத்துச்சொல்லி, அதை மாற்றுக் கட்சி மறுக்கும் பிரச்னை இல்லை. எல்லா கட்சியில் உள்ளவர்களும் தொழில் துறையிலே தென்னாடு பின்தங்கியிருப்பதை அறிவார்கள். தொழில் துறையிலே நம் முன்னேற்றத்திற்காக தீட்டப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதனையும்,இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட தென்னாட்டினுடைய வளர்ச்சியை முக்கியமாக கருதாதபடி, நம்முடைய மாநில அரசு கேட்ட தொகையை பெறமுடியாமல் கூட திகைத்து திரும்பியதையும் நாடு பூராவும் நன்றாக அறிந்திருக்கிறது. நம்முடைய பொருளாதார திட்டத்தை அகில இந்திய அடிப்படையிலே வைத்திருக்கிற வரையில், அகில இந்திய திட்டங்கள் நாட்டிலே அமுல் நடத்தப்படுகிற வரையில், உண்மையிலேயே பல பிரதேசங்கள் பஞ்சப் பிரதேசங்களாக வேண்டுமென்று அல்ல, விரும்பினாலும் கூட முன்னேற்றத்துக்கு வழி வகுக்கமுடியாத காரணத்தினாலே, பஞ்சப் பிரதேசங்களாகத்தான் நடத்தப்படும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், எங்கள் கட்சியிலே நாங்கள் எப்பொழுதுமே ஏதோ வேடிக்கையாக எடுத்துக் காட்டுகிறோம் என்று நாட்டை ஆளுகின்ற கட்சி அலட்சியம் காட்ட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உடல் முழுதும் குளிக்க வேண்டுமானால், முதுகுப் புறத்தை தேய்ப்பதற்கு வாலிபர்களாக உள்ளவர்கள் மனைவிமார்களையும், வயதானவர்கள் தங்களுடைய துணைவர்களையும் வைத்துக்கொள்ளுகிறார்கள். சாதாரணமாக நாடுபூராவும் பொருளாதாரத் திட்டம் போடுகின்ற நேரத்தில், சில பகுதிகள் பஞ்சப் பிரதேசங்களாக,வேண்டுமென்றல்ல முடியாத காரணத்தினால் ஆக்கப்பட்டு வருகின்றன.

அகில இந்திய ரீதியில் தரப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்தில் கூட பம்பாய் மாநிலத்தில் சம்பாதிக்கிறவர்கள் 43 பேர்கள் என்றும், அவர்களால் பாதுகாக்கப்படுகின்றவர்கள் 57 பேர்கள் என்றும், சென்னைமாநிலத்தில் சம்பாதிக்கிறவர்கள் 31 பேர்கள் என்றால், அவர்களால் காப்பாற்றப்பட வேண்டியவர்கள் 69 மக்கள் என்றும் கணக்கு போடப்பட்டிருக்கிறது. ஆகையினால் இங்கே சம்பாதிக்கின்றவர்கள் தொகையும் குறைவு. அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தை வைத்துக்கொண்டு, பிழைப்பு தேட வேண்டியவர்களின் தொகையும் அதிகமானதாக இருக்கிறது. பிழைப்பு எந்த அளவுக்கு கிடைக்கின்றது என்று பார்த்தால், தென்னாட்டிலே உழவு நாட்கள் ஆண்டு ஒன்றுக்கு 181 என்றால், அதே உழவனுக்கு வட நாட்டிலே 292 நாட்கள் என்றும், தென்னாட்டிலே • உழவனுக்குக் கிடைக்கின்ற வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 382 என்றால் வட நாட்டிலே உழவனுக்கு கிடைக்கின்ற வருவாய் ரூ. 512 என்று சர்கார் தருகின்ற புள்ளி விவரங்களே சொல்லுகின்றன.

புள்ளி விவரங்களிலுள்ள நன்மை தீமையைப்பற்றி நான் ஓரளவுக்கு அறிந்திருக்கிறேன் என்றாலும் சர்க்கார் தந்திருக்கின்ற புள்ளி விவரங்களிலிருந்து ஒருஉண்மை புலனாகிறது. எந்தவகையில் பார்த்தாலும் வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கின்றது என்பதை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்கு எரிச்சல் ஏற்படும் என்று நினைத்தோ அல்லாமலோ அடிக்கடி வடக்கு தெற்கு என்று கேலிசெய்வது போன்று ஏதோ சொல்ல வேண்டுமென்று நினைத்து இடக்கு பேசி மடக்கி வருகிறார்கள் என்கிறார்கள். நாங்களும் இதைப்போன்று சொல்ல முடியும். இவ்விதம் பேசுவதின் காரணம் அவர்களின் மனதிற்கு நாங்கள் சொல்லும் உண்மையைப் பார்த்து அவர்களின் மனம் ' படக் படக் ' கென்று அடித்துக்கொள்ளுகிறது. மற்றொரு வகையில் பிரச்னையை மழுப்புவதற்காக சொல்லப்படுகிறது. நாங்கள் எல்லாம் ஒன்று, அகில இந்தியா பூராவும் ஒன்று என்று பார்த்து காரியங்களை நடத்துவோம், நீங்கள் பிளவு மனப்பான்மையுடையவர்கள், நீங்கள் பேத புத்தியோடு பிரச்னைகளை பார்க்கிறீர்கள் என்று வாதங்களை சொல்லி பிரச்னையை மழுப்புகின்றார்கள். ஆனால் தெற்கு பகுதியை தாழ்த்திவிட்டு எத்தனை பெரிய தூய்மையான வாதங்களை எந்த பெரிய தலைவர்கள் சொன்னாலும் அதை ஒத்துக்கொள்வதற்கில்லை. தென்னாட்டில் இருக்கின்ற குறைகளை நீக்கினால் ஒழிய தென்னாடு முன்னேற்றம் அடையாது. இதை மறுத்து எந்தவிதமான



24th July 1957] [Sri C. N. Annadurai]

அரசியல் வாதங்களை கூறினாலும் ஒத்துக்கொள்வதற்கில்லை. சென்னையில் பொருளாதார நிபுணராக இருந்த திரு. பி. ஜே. தாமஸ் அவர்கள் சென்ற கிழமையில் குறிப்பிட்டிருப்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் சரி பொதுவாக தென்னாட்டை விட வட நாட்டில் வளம் பெறுகிறது, என்று எடுத்துச் சொல்லி, தென்னாடு முன்னேற வில்லை என்று தென்னாட்டார்கள் பொறுமையின் காரணமாக பேசவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லி ஒரு பகுதியில் மாத்திரம் விலைவாசி ஏறியிருப்பதின் காரணங்களையும் எடுத்துச் சொல்லி இதை மாற்றுவதற்கு தென்னாட்டுக்கு ஒரு திட்டம் தேவை என்பதையும் எடுத்துச்சொல்லி இதற்கு நல்ல பாதுகாப்பு உணர்ச்சியோடு அரசியல் கலப்பு இல்லாதவர்கள் பணியாற்றினால் நல்லது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவு நாங்கள் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்லுகின்றோமோ அதேதான் இன்று நாலா பக்கங்களிலும் பேசப்படுகிறது. ஆதரிக்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்த காற்று எந்த பக்கம் அடிக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும் என்பதை கூற விரும்புகிறேன். இது வெறும் கேலிக்குரியது என்று கருதக்கூடாது. நாட்டுக்கு எது தேவை என்பது எங்களுக்குத் தெரியும், நாட்டில் எவ்விதம் இருந்தாலும் நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை, நாட்டுக்கு உழைத்தவர்கள் நாங்கள்தான், எங்களுக்குத்தான் அந்த உரிமையுண்டு என்று ஆளும் கட்சியிலிருந்து பதில் அளிக்கப்படுகிறது. நாட்டுக்கு உழைத்தவர்களுக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். அவ்விதம் தலைவணங்குகின்ற நேரத்தில் அதை வைத்துக்கொண்டு ஆட்சியில் இருக்கும் அமைச்சர்களால் நாடு எவ்விதம் நடத்தப்படுகிறது என்பதை பார்த்து பரிதாபப்படுகிறேன். நாட்டை மீட்டு நல்வழிக்கு கொண்டு வரவேண்டும் என்றுள்ள உணர்ச்சி, அதன் மூலம் எழுகின்ற நம்பிக்கை அந்த பக்கத்திலுள்ளவர்களுக்கு மாத்திரம்தான் இருக்கும் என்பதல்ல. இந்த புறத்தில் இருப்பவர்களுக்கும் அந்த நம்பிக்கை வரக்கூடும் என்பதை, சபாநாயகர் மூலமாக அவர்களுக்கு பணிவன்புடன் கூறிக்கொள்கிறேன். இந்த சட்டமன்றத்தில் அடிக்கடி கூறப்படுகிறது. நாங்கள்தான் இந்நாட்டுக்கு தியாகம் செய்திருக்கிறோம், நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கப்படுகிறது. என்னுடைய கட்சியை பொறுத்தவரையில் எங்களை சார்ந்திருந்த தலைவர்கள் வேண்டுமானால் நீங்கள் சொல்லுவதை ஏற்றுக் கொள்ளலாம். அவர்களில் ஒரு சிலர் இன்றைய தினம் உங்கள் நண்பர்களாகிவிட்டார்கள். (கைதட்டல்.) எங்களை பொறுத்த வரையில் "ஊருக் கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி " என்பது போன்று நாங்கள் பிரச்னைகளைப் பற்றி சொல்லுகின்ற நேரத்தில் நீங்கள் என்னவேண்டுமானாலும் சொல்லலாம் என்று நினைத்து சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதை விட்டு விட்டு பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் சில யோசனைகளை சொல்லுவதற்கு முன்னால் தொழில் துறையில் எந்த நிலையில் இருந்தது என்பதற்கு 1945–1951-ல் under the Post-War Development Scheme—the industries development-ல் என்னென்ன தொழில்கள் இருந்தன என்பதை இந்த சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்—

1. The Soap Institute and Soap Factory at Calicut ;
2. The Oil Factory and Hydrogenation Unit at Calicut ;
3. Shark Liver Oil Unit at Calicut ;
4. Coir School and Coir Production in Andhra ;
5. Oil Institute at Anantapur ;
6. Ceramic Factory at Gudur ;
7. Bangle Manufacturing Unit at Kalahasti ;
8. Paper Factory at Rajahmundry ;
9. Kollegal Silk Filature Factory ;
10. A Cottage Industrial and Chemical Testing Laboratory at Madras.

[Sri C. N. Annadurai] [24th July 1957

இவைகளில் முக்கியமான பெரும் பகுதியை மொழி வழி மாகாண பிரிவினையின் காரணமாக நாம் இழந்திருக்கிறோம். இதில் இருக்கின்ற வேடிக்கை என்னவென்றால் இந்த திட்டங்கள் இருந்த காலத்தில் இதற்காக எவ்வளவோ அதிகாரிகள் இருந்தார்கள். இப்போது இதே துறையில் அதிகமாக அதிகாரிகள் இருப்பதாக அறிகிறேன். நான் கூறுவதில் தவறு இருக்குமானால் என்னை திருத்தவேண்டிய கடமை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. இந்த விதத்தில் கூடுதலாக அதிகாரிகள் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை இதில் உண்மையிருக்குமானால் அதை கூற வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. இந்த நாடு ஒன்றாக இருந்த காலத்தில் ஒரு டைரக்டரும் ஒரு ஜாயிண்ட் டைரக்டரும் இருந்த அதே இடத்தில், இப்போது ஒரு டைரக்டரும், ஒரு அடிஷனல் டைரக்டரும், மூன்று ஜாயிண்ட் டைரக்டரும் அதன் கீழ் பல கெஜெடட் ஆபீஸர்களும், 20, 30 இன்ஜினியர்களும் இருப்பதாக நான் அறிகிறேன். இவ்விதம் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சர் விளக்க வேண்டும். இதில் உண்மையில்லையென்றால் திருத்தவேண்டிய கடமையும் அவர்களுக்கு இருக்கிறது. அடுத்ததாக சிறிய தொழில்கள் அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்த தொழில்களை சர்க்கார் நேரடியாக நடத்த வேண்டும். இல்லையானால் இதில் அதிக லாபம் கிடைக்கிறதாக இருந்தால் தனிப்பட்டவர்கள் இதை நடத்துவதற்கு வருகிறார்களே தவிர ஏதோ ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்ற தர்ம உணர்ச்சியோடு அல்லது நாட்டுக்கு முன்னேற்றம் அடைவதற்காகவோ பொருளாதார துறையில் முன்னேற்றம் அடைவதற்காகவோ தனிப்பட்டவர்கள் எப்பொழுதும் முன் வரமாட்டார்கள். உடனடியாக லாபம் கிடைப்பதாக இருந்தால் தனிப்பட்டவர்கள் தொழிலை ஏற்று நடத்துவதற்கு முன் வருவார்கள். ஆகவே கீழ்கண்ட தொழில்களை உடனடியாக சர்க்காரை ஏற்று நடத்த வேண்டுமென்று ஒரு யோசனை கூற விரும்புகிறேன்:—

**(1) A paper factory or some factories where bamboo is available.**

நம்முடைய நாட்டில் இன்றைக்கு 600-க்கு மேற்பட்ட பத்திரிகைகள் நடந்து வருவதாக தகவல் கிடைத்திருக்கிறது. இதற்கு வேண்டிய காகிதங்கள் கிடைப்பதற்கு காகித ஆலைகள் அதிகமாக வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய நாணல் காடு, மூங்கில் காடு நமக்கு வசதியாக இருக்கிற காரணத்தால் இதை உடனடியாக ஆரம்பித்து நடத்த முடியும். அடுத்ததாக,

**(2) An oil and soap factory in North or South Arcot.**

**(3) A silk filature factory at Hosur taluk, Salem district.**

இந்த பட்டு விஷயத்தில் இங்கு சபை அங்கத்தினர்களால் உருக்கமாக பேசப்பட்டது. பட்டை கொண்டு பாவையர்களுடைய மனத்தை திருப்தி செய்வதற்காகவாவது இதை உடனடி கொண்டு வரவேண்டும். நமக்கும் சில நேரங்களில் பட்டு தேவைப்படுகிறது. சில நேரங்களில் பட்டு வாங்குவதில் ஆடவர்களுக்கு இதனால் தொல்லை இல்லாமல் இருக்கும். ஆகவே பெண்களின் திருப்திக்கு வேண்டியாவது இந்த பட்டுத் தொழிலை ஆயிரக்கணக்கான ஆண்டு காலமாக மேற்கு நாடுகளுக்கு எல்லாம் அனுப்பிக்கொண்டிருந்த இந்த பட்டை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக இந்த பட்டுத் தொழிலை நடத்துவதற்கே உடனே முயற்சிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக,

**(4) A glue and gelatine factory with the huge quantity of tannery flushings available.**

நம்முடைய நாட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. தோலை பதனிடும் பொழுது அதிலுள்ள கொழுப்பையும் சத்தையும் வீணாக்காமல் இதை உற்பத்தி செய்யலாம் என்று நிபுணர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்ததாக,

**(5) Development of coir industry in Tirunelveli and Ramathapuram districts.**



24th July 1957] [Sri C. N. Annadurai]

**(6) Metal industry with improved alloys.**

இதற்காக இன்று எத்தனையோ இன்ஜினியர்கள் வைத்திருப்பதாக கூறப்படுகிறது. எந்தெந்த உலோகங்களிலிருந்து புதிய உலோகம் கிடைக்கும் என்பதைப் பற்றி ஆராய்வதற்காக இம்மாதிரிப்பட்ட தொழிற்சாலைகளை உடனடி ஏற்படுத்த வேண்டும். அடுத்ததாக,

**(7) Wood industry ;**

**(8) Pigment manufacturing and paint manufacturing and mixing ;**

**(9) Manufacture of musical instruments ;**

**(10) Ink manufacture ;**

**(11) Boot polish making ;**

**(12) Manufacture of parchment paper ;**

**(13) Evolving plastic from materials like cashew kernals, etc.**

சபாநாயகர் அவர்களே, நான் இந்த பிரச்னையிலிருந்து சற்று விலகுவதற்குக் காரணம், இந்த சபையில் பேசப்பட்ட சிலவற்றிற்கு பதில் அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது முந்திரி காடுகளை வளர்ப்பதற்காக நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று அவர்களது வக்கரமான புன்னகையை வீசி என்னைப் பார்த்துச் சொன்னார்கள். சிந்திரி முந்திரி என்று பேசியவர்களுக்கு இது திருப்தி அளிக்கலாம் என்று சொன்னார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஓரளவிற்கு திருப்தி அளிக்கலாம் என்றுதான் சொன்னேன்.

SRI C. N. ANNADURAI : அங்கே தொழில் இங்கே தொழில் அங்கே சிந்திரி இங்கே முந்திரி என்று நாங்கள் அடுக்குமொழி கூறவில்லை. நாங்கள் அடுக்குமொழி பேசுவதில் நல்ல பயிற்சி பெற்ற பிறகுதான் கூறுகிறோம். அவைகள் ஓரளவிற்கு பயன் அளிக்கத் தக்க வகையில் இருப்பதையும் நாங்கள் பார்க்கிறோம். முந்திரித் தொழில் என்று நாங்கள் சொல்வது முந்திரிப் பழத்தை அல்ல. அதிலிருந்து, முந்திரிச் செடியிலிருந்து கிடைக்கும் உப பொருள்களை வைத்துக்கொண்டு பிளாஸ்டிக் போன்ற சாமான்கள் செய்து தொழிலை வளப்படுத்த வேண்டுமென்று கூறுகிறோமேயொழிய, முந்திரி பழத்தை நாங்கள் கூறவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, முந்திரி என்று நாங்கள் சொல்வது, அதிலிருந்து பிளாஸ்டிக் சாமான்கள் போன்றவைகள் செய்யலாம் என்பதை உள்ளடக்கித்தான் சொல்கிறோமே தவிர, முந்திரிப் பழத்தை நாங்கள் கூறவில்லை. முந்திரி பழக்காடுகள் நிதியமைச்சரவர்களின் மாவட்டத்தில் மட்டுமல்ல இருப்பது. நான் சிறு வயதில் ஓடி விளையாடிக்கொண்டிருந்த காலத்தில் கைக்கு எட்டிய தூரத்தில் ஆத்தூரில் முந்திரி பழம் கிடைத்துக்கொண்டிருந்தது, அவைகளை நான் வேண்டிய மட்டில் எடுத்துக்கொண்டிருக்கிறேன். அம்முந்திரி பழங்களை நான் தின்று பழக்கப்பட்டவன்தான். ஆதலால் நிதி அமைச்சரவர்கள் முந்திரிப் பழத்தை வளர்த்துத் தர வேண்டுமென்று நாங்கள் சொல்ல வில்லை. அந்தத் தொழிலை வளப்படுத்த வேண்டுமென்று நாங்கள் சொல்லும்போது சர்க்காரிடம் அதற்கு செலவழிக்க பணம் இல்லை என்று சொல்லக் கூடும். நிதி இல்லை என்றால் வரி போடுங்கள் என்று சொன்னால் காங்கிரஸ் கொறடா அவர்கள் எனக்கே கொறடா கொடுப்பார்கள், நாங்கள் வரி போட்டால் நீங்கள் அதை எதிர்ப்பீர்களே என்று. வரிகளை போட்டுத்தான் நாட்டை ஆளவேண்டும் என்றால் சர்க்காருக்கும், சத்திரம் சாவடிகளுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஒரு சர்க்காருக்குள்ள வருவாய் இரண்டு விதத்தில் தான் இருக்க வேண்டும். ஒன்று, வரி மூலம், இரண்டாவது, வருவாய் தரக்கூடிய எல்லா துறைகளையும் சர்க்கார் கைப்பற்ற வேண்டும். தனியார் கையில் இருக்கிறதே தனவந்தர் கையில் இருக்கிறதே என்ற

[Sri C. N. Annadurai] [24th July 1957

பற்றே பாசமோ குறுக்கிடக்கூடாது. இன்றையதினம், தொழில்களை
பப்ளிக் செக்டர், பிரைவேட் செக்டர் என்று இரண்டாக பிரித்திருக்கிறார்
கள். ப்ரைவேட் செக்டர் என்றால் தனிப்பட்ட முதலாளிகள் பணம்
போட்டு தொழில் நடத்துவதாகும். பப்ளிக் செக்டர் என்றால், சர்க்காரே
பணம் போட்டு நடத்துவதாகும். அதிலே பிரைவேட் செக்டருக்கு நாட்டை
ஆளுகிற சர்க்கார் சில நேரங்களில் அவர்களுக்கு கடன் கொடுக்கிறார்கள்.
உதவியும் அளிக்கிறார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் இத்தொழிலை
நடத்துகிறவர்களுக்கும் உள்ள நெருக்கத்தைப் பொறுத்துத்தான் கட
னும், உதவியும் அளிக்கப் படுகிறது. ஆகவே, நான் சொல்ல விரும்பு
வது என்னவெனில் அந்த முறையை மாற்றி நம் நாட்டில் தொழில்கள்
பப்ளிக் செக்டரில்தான் இருக்க வேண்டும். அதை இரண்டாக பிரித்து,
ஒன்று சர்க்காரே முழு மூலதனம் போட்டு நடத்துகிறது, இரண்டாவது
சர்க்கார் 51 பங்கு போட்டு மற்ற பங்கை பொது மக்களிடமிருந்து பெற்று
நடத்த வேண்டும். பொது மக்கள் தாராளமாக பணம் தர முன் வரு
வார்கள். தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் தொழில்களுக்கே அவர்
களிடமிருந்து பங்குகள் வாங்க பொது மக்கள் முன் வரும்போது சர்க்
காரே தொழிலை நடத்தப் போகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டால் முத
லாளிகளிடம் உள்ள நம்பிக்கையை விட அரசாங்கத்தினிடம் அதிக நம்பிக்கை
வைத்து பங்குகளை வாங்க முன் வருவார்கள். இன்றுள்ள சிறு
தொகை சேமிப்பிற்கு பாடல், ஆடல் மூலமாகவும், நாடக மூலமாகவும்,
நண்பர்களின் ஒத்துழைப்பு மூலமாகவும், கடைசியாக அதிகாரிகள்
மூலமாகவும் நிறைவேற்றலாம் என்று கருதுகிறார்கள். சிறு சேமிப்புத்
திட்டத்தினுடன் நான் சொல்கிற ஒரு சிறிய யோசனையையும் அதனுடன்
இணைக்க வேண்டும். பணத்தை சேமித்து வையுங்கள் 12 ஆண்டில் 100
ரூபாய் 165 ரூபாயாகி விடும் என்று, கூடையில் மாஞ்செடியை வைத்து
விட்டு கூடையை எடுத்து விட்டு மாஞ்செடி இருக்கிறது பாருங்கள் என்று
சொல்வது மாதிரி இல்லாமல், விளம்பரம் கொடுப்பதை விட்டு அதை
மக்களுக்கு பயன்படக் கூடிய முறையில் உபயோகப்படுத்தப்பட வேண்டும்.
அப்பணத்தை சேலம் அலுமினியம் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலை
களுக்கு இயர் மார்க் செய்து அத்தொழில்கள் வளம் பெறச் செய்வதற்கு,
அத் தொழில்களுக்கு இதை பங்காக மாற்றினால் இத்திட்டம் விரைவில்
வெற்றி அடையும் என்று எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அந்த
முறையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் முன் வர வேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால், இவ்வளவு சொன்னாலும்கூட,
கடைசியில் நான் என்னுடைய அதிருப்தியை கூறிக் கொள்ளாமல் இருப்ப
தற்கு இல்லை. அது யாருடைய பேரிலும் இல்லை. எந்தக் கட்சியின்
பேரிலும் இல்லை. காலத்தின் பேரில் தான் என்னுடைய அதிருப்தி அது.
ஒரு காலத்தில் பட்டையும், முத்தையும் உலகத்திற்கெல்லாம் அனுப்பி
வந்த தமிழ் நாடு இன்றையதினம் கூலிகளைத்தான் வெளி நாடுகளுக்கு
அனுப்புகிறது என்று அதற்காக காலத்தைத் தான் நான் நொந்து
கொள்கிறேன். ஆற்றலும், அறிவும், திறமையும் படைத்த அமைச்சர்
கள் எங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தும் டெல்லியால் போதுமான அளவு
அதிகாரம் அளிக்கப்படாததால் அவர்கள் செயல்பட முடியாமல் இருக்
கிறார்கள். ஆகையால்

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இன்று கூலிகளை வெளி
நாடுகளுக்கு அனுப்புவதில்லை. முன் காலத்தில் அப்படி நடந்திருக்கலாம்.

**Sri C. N. ANNADURAI :** வெளி நாடுகளில் கூலிகளை இப்பொழுது
எடுத்துக்கொள்வதில்லை. இங்கிருந்து சிலோனிற்குச் சென்றவர்களை அவர்
கள் துரத்துகிறார்கள். பொருளாதாரத்தை நாம் சரிவர உணர்ந்து பேரா
சிரியர்கள் சொல்லியிருக்கும் கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு,
நமக்குள்ள அதிகாரங்களை நாமே வைத்துக்கொண்டு, தொழில் துறையில்
நல்லபடி முன்னேற்றம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
ஏனென்றால், நம் நாட்டில் வறுமை சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை.
அந்த அளவுக்கு வறுமை இருக்கிற காரணத்தால் தொழில் துறையில்
நல்ல முன்னேற்றம் காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த
வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.



24th July 1957]

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் சபாநாயகர் அவர் 10-47 a.m.
களே, இந்த சபையின் முன்பு இருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து
நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு
பேசிய அங்கத்தினர்கள் நம்முடைய சென்னை மாகாணத்தில், மதராஸ்
ஸ்டேட்டில் கைத் தொழில்கள் விருத்தி அடையாதது பற்றிச் சொன்னார்
கள். சிறிய கைத்தொழில்களும் சரி, பெரிய கைத்தொழில்களும் சரி
நாம் எதிர்ப்பார்த்தபடி அவைகள் விருத்தியாக வில்லை. இந்த ஐந்
தாண்டுத் திட்டத்தின் கீழும் நாம் எதிர்ப்பார்த்தபடி அவைகளுக்கு
மத்திய சர்க்கார் போதுமான உதவியும் கொடுக்கவில்லை என்பதைப்
பார்க்க ரொம்பவும் வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம். முக்கிய
மாக போக்குவரத்தை எடுத்துக்கொண்டால், அதில் மைசூர் மாகாணத்
தை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் வரையில் மத்திய
சர்க்காரிலிருந்து கிடைக்கும் உதவியால் அங்கு இருப்பவர்கள் எல்லோரும்
சேர்ந்து அநேக தொழில்களை ஆரம்பிப்பதற்கு இருக்கிறார்கள். இப்பொ
ழுது பார்க்கப்போனால், அவ்விடத்தில் ஹிந்துஸ்தான் பாக்டரிக்கு சுமார்
10 கோடி ரூபாய், மெஷின் டூல்ஸ்க்கு 7 கோடி ரூபாய், டெலிபோன்
இலாகாவிற்கு சுமார் 7 கோடி ரூபாய், பாரத் எலெக்ட்ரிக்கு 10 கோடி
ரூபாய் என்று கணக்கிட்டுக் கொண்டு போனால் கிட்டத்தட்ட 100 கோடி
ரூபாய் வரையில் அவர்கள் உதவி பெற்று அவர்களின் தொழில் வளர்ச்சி
யை அதிகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அங்கு தொழில் வளர்ச்சி
அடைவதோடு மட்டுமல்லாமல், எனக்குத் தெரிந்த வரையில் சுமார்
50,000 நபர்களுக்கு மேல் வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த இடத்
தில் சில தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் போவதாக வதந்திகள் ஏற்பட்டன.
சில இலாகாக்கள் மூலியமாக. ஆனால் எதிர்பார்த்த தொழிற்சாலைகள்
இவ்விடம் நிறுவப்படவில்லை. சில நாட்களுக்கு முன்பு இந்த இடத்தில்
ஹெவி எலெக்ட்ரிக்கல் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கப்போவதாக இருந்
தார்கள். அதை மக்கள் ஆவலுடன் எதிர்ப்பார்த்துக்கொண்டு இருந்தார்
கள். ஆனால் திடீரென்று அந்தத் தொழிற்சாலை போபாலில் ஆரம்பிக்கப்
பட்டு விட்டது. நமக்கு அந்த உதவி கிடைக்காமல் போய்விட்டது. அது
ரொம்பவும் வருந்தத்தக்க காரியமாகும். அதோடு, மருந்து, பார்மக்
யூட்டிகல் இன்டஸ்ட்ரீஸ், அதுவும் இந்த இடத்தில் ஆரம்பிக்கப் போவதாக
வதந்தி இருந்தது. அதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. அம்மாதிரி தொழிற்
சாலைகள் பம்பாயில் நிறுவப் போவதாக கேள்விப்படுகிறோம். தென்
இந்தியாவில் நெய்வேலி திட்டம் ஆரம்பிக்கிறோம். அதிலிருந்து அநேக
தொழிற்சாலைகள் ஏற்படும் என்று சொல்கிறார்கள். நெய்வேலியை ஒரு
தொழிற்சாலை என்று சொல்வதற்கில்லை. அது ஒரு பெரிய திட்டமாகும்.
மத்திய சர்க்கார் போட்டிருக்கும் திட்டப்படி இன்னும் சுமார் 3, 4
வருஷங்களாகும் அது முடிவதற்கு என்று சொல்கிறார்கள். அது எவ்
வளவு தூரம் வெற்றிகரமாக முடியும் என்பதைப் பற்றி நாம் ரொம்பவும்
யோசனை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்படி முடிந்தால் அநேக வித தொழிற்சாலைகள் ஏற்படும். அதன்
மூலம் அநேக பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள்.
ஆனால் சற்று நிதானித்துப் பார்க்கவேண்டும்.

முக்கியமாக தென்னாட்டை எடுத்துக்கொண்டால், இங்கிருப்பவர்களில்
2 சதவிகிதம்தான் " இன்டஸ்டிரியல் பாபுலேஷன் " அதாவது தொழி
லைச் சேர்ந்திருப்பவர்கள் என்ற புள்ளிவிவரம் கிடைத்திருக்கிறது. அம்
மாதிரி இவ்வளவு குறைவாக இருப்பதைப் பார்க்கப் போனால் மிகவும்
வருந்தத் தக்கதாயிருக்கிறது. இங்கு நிலப் பிரச்னை அதிகம் இருக்கிறது.
அந்த நிலப் பிரச்னையால் கஷ்டப்படுகிறவர்கள் எல்லோரும் தொழிலில்
ஈடுபட வேண்டும். அப்போதுதான் நிலத்திற்கு நிர்ப்பந்தம் இருக்காது.
ஆகவே, தொழில்களை விருத்தி செய்ய நம் சர்க்கார் முன் வந்தால்தான்
இந்த நிலப் பிரச்னையும் கொஞ்சம் தீரும் என்பது என் அபிப்பிராயம்.
முக்கியமாக சேலம் ஜில்லாவில் இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்துவதைப்
பற்றி அநேக திட்டங்கள் வகுத்து மத்திய சர்க்காரும் இதற்கு இலாகா
மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ எல்லாம் நடந்து கொண்டி
ருக்கிறது. ஆனால் அது எப்போது நிறுவப்படும் என்று திட்ட வட்டமாகச்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [24th July 1957

சொல்ல முடியவில்லை. நம் அமைச்சர்கள் எல்லோரும் அதிக ஊக்கம் செலுத்தி சேலத்தில் எவ்வளவு சீக்கிரம் இரும்பு தொழிற்சாலையை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சிக்கிரம் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப்பற்றி அநேகம் பேர் பேசினார்கள். அவைகள் எல்லாம் உண்மை. இப்போது சர்க்கார் எவ்வளவோ செய்திருந்த போதிலும் இன்னும் செய்யவேண்டியது நிறைய இருக்கிறது. இப்போது கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்தவர்களுக்கு மட்டும் உதவி கொடுக்கப்படுகிறது. மற்றவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி ஒன்றும் கொடுக்கப்படவில்லை. கூட்டுறவு சங்கங்களில் சேராதவர்களுக்கும் இந்த உதவி செய்வதற்கு சர்க்கார் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும், புடவை, வேஷ்டிகளை ஒதுக்குவதைப் பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். இதைப் பற்றி அநேக இடங்களில் பேசப்படுகிறது. இவைகளை ஒதுக்கி நெசவாளர்களுக்கு சலுகை கொடுக்காதது மிகவும் விசனிக்கத்தக்க விஷயம். இப்போது துணிகள், தேக்கங்கள் இருந்துகொண்டிருக்கிறது. அவைகள் இன்னும் கிளியர் ஆகவில்லை. இந்த கைத்தறி ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக வேண்டியவை. இதனால் நமக்கு அன்னிய செலாவணி கிடைக்க வழி இருப்பதால் இதைப் பற்றி கவனம் செலுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டில் பம்ப்செட்டுகளும் போரிங்குகளும் இப்போது சில இடங்களில் கொடுக்கப்பட்டு வருகின்றன. பம்ப் செட்டுகள் விவசாய இலாகாவின் மூலமாக வினியோகிக்கப்பட்டு வருகிறது. போரிங்குகள் இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட் மூலமாக வேண்டியவர்களுக்கு கொடுத்து வருகிறார்கள். இவைகள் இரண்டும் ஒரே இலாகாவின் கீழ் இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பதால் அநேக இடையூறுகள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு இவைகள் எவ்வப்போது எவ்வளவு வேண்டுமென்பது மற்ற டிபார்ட்மெண்ட்களுக்கு தெரிவதில்லை. ஆகையால் இவைகளை ஒரே டிபார்ட்மெண்டின் கீழ் வைத்து கூடிய சீக்கிரத்தில் நல்ல முறையில் விநியோகிக்கப் பார்க்க வேண்டும். இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டுக்கும் விவசாய டிபார்டிமெண்டுக்கும் அவ்வளவு ஒற்றுமை இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி குழாய் கிணறுகள் எடுப்பதைப் பற்றி சில அங்கத்தினர்கள் பேசினார்கள். குழாய் கிணறுகள் வறண்ட பிரதேசங்களில் எடுக்கப்படுகிறது. ஒவ்வாரு ஜில்லாவிலும் வறண்ட பிரதேசம் எது என்பதை உடனடியாக ஆராய்ந்து ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய என்ஜினீயர்களையும் மற்ற அதிகாரிகளையும் போட்டு அவை எடுத்துக்கொள்ள சர்க்கார் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது அவசரமான ஒரு சமாசாரம். இதற்கு கூடிய சீக்கிரம் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக ரிஸர்ச் யூனிட். குடிசைத் தொழிலுக்கு ஒரு ரிஸெர்ச் யூனிட் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருந்தால் ரொம்ப சௌகரியமாக இருக்கும். குடிசைத் தொழில்கள் விஷயத்தில் சரியான கவனம் செலுத்தப்படவில்லை. குடிசைத் தொழிலை விருத்தி செய்யலாம் என்று யோசித்து ரிஸர்ச் யூனிட் ஒன்றை கூடிய சீக்கிரம் நிறுவ வேண்டும். அப்படி செய்யாவிட்டால் குடிசைத் தொழில் எவ்வளவு சீக்கிரம் விருத்தியாக வேண்டுமென்று நாம் எதிர்ப்பார்க்கிறோமோ அவ்வளவு சீக்கிரம் விருத்தியாகாது என்று சொல்ல விரும்புகிறேன்.

பின்னிட்டு பாலிடெக்னிக், அதாவது பல தொழில்கள். இதுவும் அநேக இடங்களில் நிறுவப்படவேண்டும். அதிலும் முக்கியமாக பேக்வார்ட் டிஸ்ட்ரிக்ட்ஸ், அதாவது பிற்போக்கான ஜில்லாக்களில் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும். அம்மாதிரியான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டால் நமக்கு அநேக வித அனுகூலங்கள் கிடைக்கும். அந்த பல தொழிற்சாலைகளில் அநேகம் பேர்களுக்கு வேலை கிடைப்பதுமின்றி தொழில்களும் விருத்தியாகுமென்பதில் சந்தேகமில்லை.



24th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

மறுபடியும் இந்த இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டைப்பற்றி இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். முன்பு டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் ஆபீஸர்ஸ் என்று இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் போய் அங்குள்ள பம்ப் செட்டுகள், என்ஜின்கள் இவைகளைப் பார்த்து ஏதாவது ரிப்பேர் செய்து வந்தார்கள். ஆனால் இப்போது அம்மாதிரி இல்லை. அப்போது கம்பௌண்டிங் பீஸ் வாங்கிக்கொண்டு வேலை செய்துவந்தார்கள். அம்மாதிரி பிரத்தியேகமாக உத்தியோகஸ்தர்களைப் போட்டு பார்ட்டிகளிடம் வேண்டிய தொகையை வசூல் செய்து, எல்லோருக்கும் உதவி செய்வதற்கு வேண்டிய முயற்சியை சர்க்கார் எடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

உப்பு உற்பத்தி பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் டியூடி எடை போட்டு வாங்குகிறார்கள். ஆனால் விற்கும் போது அதை படிக்கணக்கில் விற்கிறார்கள். முன்பிருந்த சட்ட சபையில் நான் இதைப் பற்றி பேசியிருக்கிறேன். அப்போது அமைச்சரவர்கள் சொன்னார்கள், அதற்குவேண்டிய உத்தியோகஸ்தர்கள் இல்லாத காரணத்தால்தான் இதை அமுலுக்கு கொண்டு வரமுடியவில்லை என்று. பின் சொன்னார்கள், வெய்ட்ஸ் அண்ட் மெஷர்ஸ் அமுலுக்குக் கொண்டுவருவார்கள், அதனால் ஒரு தனி இலாகா வேண்டியதில்லை என்று. இதன் காரணமாக கன்ஸ்யூமர்ஸுக்கு அதிக நஷ்டம் இருக்கிறது. மத்திய சர்க்காரும், நம் சர்க்காருக்கு அநேக அறிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். இதை நன்றாக யோசித்து எப்படி எடை போட்டு டியூட்டிகளை கட்டுகிறார்களோ அதே மாதிரி உபயோகிப்பவர்களுக்கும் விநியோகிம் செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

காஸ்டிக் சோடா தொழிற்சாலை திருநெல்வேலி ஜில்லாவில் ஆரம்பிக்கப் போவதாக நிதி அமைச்சர் அவர்கள் உரையில் அறிவித்திருக்கிறார். அது போதாது. திருப்போரூர், கோவலம் போன்ற இடங்களில் பிரைவேட் பார்டிகள் முன்பட்டிருந்தார்கள். அதெல்லாம் என்ன ஆனதோ தெரியாது. சென்னைக்கு சமீபத்தில், செங்கல்பட்டில் திருப்போரூரில் ஒரு பாக்டரி ஆரம்பிக்க சர்க்கார் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னிந்தியாவில் சர்க்கரை உற்பத்திக்கு வேண்டிய வசதி இருக்கிறது. அதற்கு வேண்டிய வசதியான பிராந்தியங்கள் இருக்கின்றன. பம்பாய் ராஜ்யத்தில் இப்பொழுது கிட்டத்தட்ட ஆறு பாக்டரிகளுக்கு மேல் லைசென்ஸ் கொடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதைப்போலவே தென் நாட்டில் வேண்டிய அளவுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி எல்லாம் சில தகராறுகள் இருப்பதாகத் தெரிகிறது. பண விஷயத்திலும் இயந்திரப் பொருள்கள் வாங்கிக் கொடுக்கும் வகையிலும் ஏதோ தகராறுகள் இருப்பதாக தெரிய வருகிறது. கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக் கொடுப்பதாகத் தெரிய வருகிறது. அம்மாதிரி வாங்கிக் கொடுத்தால் லட்சக்கணக்கான ரூபாய் அதிகமாகின்றன என்பதைப்பற்றி கேள்விப்படுகிறேன். அதனால் ஆலைகளை அதிகமாகத் திறப்பதற்குவேண்டிய முயற்சிகளை இந்த சர்க்கார் எடுத்துக்கொள்ளும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக கயிறு தொழில். தஞ்சாவூர் ஜில்லாவில் இதைப் பற்றி அதிகமாக ஊக்கம் எடுத்து அங்கே அநேகம் இடங்களில் கயிறு தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம். அதே மாதிரி செங்கற்பட்டு ஜில்லாவில் திருவொற்றியூர், முதலிய இடங்களிலும் தென்னாற்காடு ஜில்லாவிலும் இன்னும் கடற்கரை ஓரங்களிலுள்ள இடங்களிலும் கயிறு தொழிற்சாலைகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிங்கோனா விஷயமாக பேசும்போது இது சம்பந்தமாக எஸ்டிமேட் கமிட்டியார் அநேக விதமான சிபாரிசுகளைச் செய்தார்கள். அந்த சிபாரிசுகள் எல்லாவற்றையும் சர்க்கார் அங்கீகரித்து விட்டதாக உத்தரவு போட்டதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். மற்றும் விலை சம்பந்தமாக கலந்து

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [24th July 1957

பேசி விலையைக் குறைக்க வேண்டும். நாம் உற்பத்தி செய்யக்கூடிய அளவில் விற்பனை ஆவது இல்லை. நாம் உற்பத்தி செய்யக்கூடிய அளவில் விலை போகவில்லை. காரணம் விலை அதிகமாக இருக்கிறது. அதனால் (பெங்கால்) கல்கத்தா சர்க்காருடனும் மத்திய சர்க்காருடனும் கலந்துகொண்டு இறக்குமதியை குறைக்கும்படியாகச் செய்ய வேண்டும். சர்பெண்டினா, டர்பெண்டைன் முதலியவைகளின் உற்பத்திக்கு டிபார்ட்மெண்டு வேண்டிய சலுகைகளைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இவைகள் விஷயமாக பார்க்கும்போது தென்னாடு புறக் கணிக்கப்படுகிறது என்பதைப் பற்றி யாரும் மறுக்க முடியாது. இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நமது தொழில் அமைச்சருக்கு டில்லியில் நல்ல செல்வாக்கு இருக்கிறது. அங்குள்ள பிரதம மந்திரியிடம் அவருக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. நமது அமைச்சருக்கு தொழில் துறையில் நல்ல மதிப்பு இருக்கிறது. அவர் இந்த இலாகாவை எடுத்துக்கொண்டதைப்பற்றி ரொம்பவும் சந்தோஷம். இந்தியா பிரதம மந்திரி இடத்தில் நமது அமைச்சருக்கு நல்ல மதிப்பு இருப்பதால் அதை உபயோகப்படுத்திக்கொண்டு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நமக்கு எவ்வளவு கிடைக்கவேண்டுமோ, எவ்வளவு சலுகைகளை பெற முடியுமோ அவைகளைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி சலுகைகளைப் பெற்று தென்னிந்தியாவில் குறிப்பாக சென்னை ராஜ்யத்தில் எவ்வளவு தொழிற்சாலைகளை அமைக்க முடியுமோ அவ்வளவு தொழிற்சாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**Sri S. NAGARAJA MONIGAR :** On a point of information. சற்று முன்பு இலங்கையிலிருந்து தமிழர்கள் விரட்டப்படுவதைப்பற்றி குறிப்பிடப்பட்டது. அன்று எந்த வெள்ளையர்களுக்கு அடிமைகளாகவும் பக்தர்களாகவும் இருந்து தொண்டு செய்தோமோ அந்த வெள்ளையர்கள் தான் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, கூலிகளாக்கி ப்யூஜி, சிங்கப்பூர், சிலோன் முதலிய இடங்களுக்கு அனுப்பி வந்தார்கள். ஆனால் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த இந்த பத்து ஆண்டுகளாக எவ்வளவோ முன்னேற்றங்களை செய்து இப்படி வெளியேறுவதை நிறுத்தி வருகிறார்கள். அப்படி இல்லாமல் அவர்களை இப்பொழுது துரத்தி விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இலங்கையிலிருந்து துரத்தப்படுகிறார்கள் என்றால் அர்த்தமற்றது, பொருத்தமற்றது. தமிழ்நாடு தமிழருக்கே . . .

**Mr. SPEAKER :** எதிர்க்கட்சியில் ஏதாவது கூறினால் அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். கனம் அங்கத்தினர் அதற்கு பதில் சொல்ல வேண்டியதில்லை. இது பாய்ண்ட் ஆப் இன்பர்மேஷன் அல்ல.

11-04 a.m. **The Hon. Sri R. VENKATARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே, அதிருஷ்ட வசமாக இந்த தொழில் கொள்கை விஷயத்தில் எந்த விதமான மாறுபட்ட கருத்துக்களும் நமது ராஜ்யத்தில் இல்லை, இருக்கவும் முடியாது என்பதை நான் முதலிடத்தில் சொல்ல விரும்புகிறேன். நாட்டில் அதிகப்படியான தொழிலை அமைக்க வேண்டும், நாட்டு மக்களுக்கு அதிகமாக வேலை கிடைக்கச் செய்யவேண்டும், அதன் மூலமாக நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். இதில் எந்த விதமான கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது. அப்படி இருந்தால் அது அரசியல் கட்சியாக நாட்டில் நீடித்திருக்க முடியாது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கிற முறையில் எதை முன்பு செய்யவேண்டும் எதை பின்பு செய்யவேண்டும், எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எதற்கு இரண்டாவது இடம் கொடுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றிய விஷயத்தில் ஓரளவு அபிப்பிராயபேதம் ஏற்படலாம். இந்த நாட்டில் தொழில்களை அமைப்பது பற்றிய விஷயத்தில் அதிகமான அக்கறை ஆளும்



24th July 1957] [Sri R. Venkataraman]

கட்சியில் இருப்பதைவிட எதிர் கட்சியில் இருப்பவர்களுக்கு இருக்கிறது என்று சொன்னால் அல்லது அப்படி நினைத்தால் அது உண்மைக்கு புறம்பானது என்றுதான் நான் சொல்வேன். எதிர்க்கட்சிக்குத்தான் அதிகமாக அக்கறை இருக்கிறது என்று சொல்வது சரியல்ல. மக்களிடத்தில் எதிர்க்கட்சிகளுக்கு எவ்வளவு அக்கறை இருக்கின்றனவோ அதைவிட அதிகமாக ஆளும் கட்சிக்கு இருக்கிறது. இந்தத் தொழில் கொள்கை பொறுத்த அளவில் சென்னை ராஜ்யம் கடைப்பிடிக்கிற முறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக தொழில் கொள்கையில் பெரிய தொழிற்சாலைகளை நமது ராஜ்யத்தில் விஸ்தரிப்பது என்பது. இரண்டாவது சிறு தொழில்கள் மூலமாக அதிகப்படியான இடங்களில் சிறு தொழில்களை ஆரம்பிப்பது. அதன் மூலமாக நாட்டில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஓரளவு வேலை கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது. மூன்றாவதாக கிராமங்களில் வசிக்கிறவர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கிற காலங்களில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேறு வேலைகளில் அவர்களை ஈடுபடச் செய்வது. அவர்களுக்கு பயன் அளிக்கும் முறையில் குடிசைத் தொழில்களை நிறுவுவது. நாலாவதாக கைத்தறிக்கு விசேஷ பாதுகாப்பு அளிப்பது. அதன் மூலமாக நாட்டில் மேலும் மேலும் அதை விஸ்தரிப்பது. அடுத்தப்படியாக தொழில் கல்வியை விஸ்தரிப்பது. அதன் மூலமாக நல்ல இஞ்சினியர்களையும் தொழில் திறமைசாலிகளையும் உண்டாக்குவது. " எபிஷியன்ஸி " என்று சொல்லுவார்களே அதைப்போல திறமைசாலியான தொழிலாளர்களை அதிகரிப்பது என்பது.

நமது ராஜ்யத்தில் உலோகப் பொருள்கள் மூல பொருள்கள் முதலியவற்றிற்கு குறைபாடுகள் இருந்தாலும் நமது ராஜ்யத்தில் நல்ல திறமைசாலிகள் இருக்கிறார்கள். நல்ல இஞ்சினியர்கள் இருக்கிறார்கள். அதனால் பல்வேறு இடங்களுக்கு நமது ராஜ்யத்திலிருந்து திறமைசாலிகளை எடுத்துக் கொண்டு பெரிய பெரிய திட்டங்களில் வேலை செய்ய ஈடுபடுத்துகிறார்கள். இங்கிருந்து வட நாட்டிற்குச் சென்று பல பல திட்டங்களை நிர்வகித்து நடத்துகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் அப்படிப்பட்ட வேலைகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும், அதிகமான வசதிகளை செய்து கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இவைகளுக்கு எந்த அளவில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் கொள்கைகளை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். தொழில் நடத்தும் முறையில் " இன்டஸ்ட்ரியல் பாலிஸி ரெசொலியூஷன் " என்று ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். இதைப்பற்றி அடிக்கடி கேள்விகள் கேட்கிற நேரங்களில் கேட்கிறார்கள். ஒரு வெற்றிலை பாக்குக் கடையை மூடி விட்டார்கள் என்றால் அதை ஏன் சர்க்கார் எடுத்து நடத்தக்கூடாது என்று கேட்கிறார்கள். ஏதாவது ஒரு சிறு தொழிலை மூடி விட்டால் அவைகளை ஏன் சர்க்கார் எடுத்து நடத்தவில்லை என்று கேள்விகள் கேட்கப்படுகின்றன. எந்த எந்த இடங்களில் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றனவோ அவைகளை எல்லாம் ஏன் சர்க்கார் எடுத்து நடத்தவில்லை என்று கேட்கிறார்கள். எல்லாவற்றையும் சர்க்காருடைய பொறுப்பில் நடக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். இதைப்பற்றி நான் அடிக்கடி கூறிக்கொண்டு வந்திருக்கிறேன், நமது தொழில் கொள்கையின் அடிப்படையில் சர்க்கார் எந்த எந்த தொழில்களை எடுத்து நடத்த வேண்டும் என்று திட்டம் வகுத்திருக்கிறார்கள். சில தொழில்களை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும் என்றும் சில தொழில்களை மக்கள் எடுத்து நடத்தவேண்டும் என்றும் சில தொழில்களை தனியார் எடுத்து நடத்தவேண்டும் என்றும் சர்க்கார் கொள்கை வகுத்திருக்கிறார்கள். சர்க்காருக்கு என்று சில துறைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எது எதை எந்தத் துறையில் எடுத்து நடத்த வேண்டும் என்று நான் அடிக்கடி சொல்லி இருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் கனம் சின்னதுரை அவர்கள் சொன்னதை நான் பாராட்டுகிறேன். அவர் சொன்னார், சோஷலிஸம் என்று சொன்னால் எல்லா தொழில்களையும் சர்க்காரே எடுத்து நடத்துவது இல்லை, எந்த ஒரு தொழிலின் மூலமாக கிடைக்கிற ஊதியங்களையும் நியாயமான அடிப்படையில்

[Sri R. Venkataraman] [24th July 1957

மக்களுக்கு பிரிவினை செய்யப்படுகிறதோ அது தான் சோஷலிஸம் என்று சொன்னார். அதுதான் சர்க்காருடைய கொள்கையும் என்பதை சொல்லிக் கொள்ளுகிறேன். எல்லாத் தொழில்களையும் சர்க்காரே எடுத்து நடத்துவது என்றால் மக்கள் எல்லோரும் கூலிகளாக மாறிவிடுவார்கள் என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். அது ஜனநாயக சோஷலிஸ அடிப்படைக்கு உகந்தது அல்ல என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவ்வாறு இப்பொழுது இருக்கிற தொழில் முறையை எடுத்துக் கொண்டு பார்த்தால் கனரக தொழிலை "டிபன்ஸ் இண்டஸ்ட்ரியல் பாலிஸி" அதாவது தேச பாதுகாப்புக்கு வேண்டியதாகக்கருதி அது சர்க்காருடைய தொழிலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. **Monozite**-யை இன்றைக்கு ஒதுக்கி வைத்திருக்கிறோம். அணுசக்தி உற்பத்தியாகும் **Defence Industries**-ஐ சர்க்கார் தரப்பில் செய்யவேண்டுமென்று வைத்திருக்கிறோம். இன்னும் பெரிய தொழில்கள், சாதாரண மக்களால் மூலதனம் போட்டு நடத்த முடியாத தொழில்களை—இரும்பு, எஃகு எண்ணெய்த் தொழில்கள், சுரங்கப் பொருள்கள் போன்றவைகளை—சர்க்கார் தரப்பில் நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அதே போல், இரண்டாவது பிரிவாக அலுமினியம் தயாரிப்பு, உர உற்பத்தி செய்தல் ஆகிய தொழில்களை நடத்த எந்த இடங்களில் அதிகப்படியாக மூலதனம் வேண்டுமோ, எந்த இடங்களில் அதிகப்படியான மூல தனம் கிடைக்காமல் அந்தத் தொழில்கள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றனவோ, அவற்றைத் தனியாரும் நடத்தலாம், சர்க்காரும் நடத்தலாம் என்ற நிலைமையில் அதை அமைத்து வைத்திருக்கிறது.

மூன்றாவதாக, எல்லா இதர தொழில்களையும் தனியார்கள் நடத்த வேண்டும் என்று அவர்கள் நடத்துவதற்கான எல்லாச் சலுகையும் சர்க்கார் செய்துகொடுக்க வேண்டும் என்ற நிலைமையும் இருக்கிறது.

நம் ராஜ்யத்தில் இந்த அடிப்படையிலே நல்ல முறையிலே தொழில் அபிவிருத்தி செய்வதற்காக தொழில் அபிவிருத்திக் கமிட்டி (**Industries Development Committee**) ஒன்றை நியமித்திருக்கிறோம். அந்தக் கமிட்டி இம்மாதம் 30-ந்தேதி கூடும். அதில் பல தொழிலதிபர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். அவ்வாறு அங்கம் வகிக்கின்ற தொழிலதிபர்கள் எல்லோரும் நம் ராஜ்யத்தில் எந்தெந்த முறையில் அதிகமாக பெரிய கன ரகத் தொழில்கள் செய்ய முடியும், சிறுவகைத் தொழில்கள் செய்ய முடியும் என்பதைப்பற்றி எல்லாம் யோசனை கூறுவார்கள். அவர்கள் எந்த விதமான கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்ல. தொழில் துறையில் நல்ல அனுபவம் வாய்ந்த அவர்கள் கொடுக்கும் யோசனையை சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்கள் இந்த நாட்டினுடைய தொழில் முன்னேற்றத்திற்கும் வளப்பத்திற்கும் வழி காட்ட வேண்டும் என்பதற்காக இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அதைச் சபையார் வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

பெரிய தொழில்களை எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால், கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய உரையில், கன ரகத் தொழில்கள் செய்யப் போவதையெல்லாம் விரிவாக எடுத்துக் கூறினார்கள். ஆனால், அங்கத்தினர்கள் கேட்கலாம்—பொதுமக்கள் கூட நினைக்கலாம்—'என் நமது மாகாணம் இவ்வளவு பின்தங்கி விட்டது, தொழில் துறையில்?' என்று. 194 ;-ஆம் வருஷத்திற்கு முன்னால் தொழில் துறையில் எந்த விதமான பிற்போக்கு ஏற்பட்டிருந்தாலும், அதற்கு இன்றைக்கு நிர்வாகம் செய்கின்ற இந்த அரசினர் பொறுப்பு அல்ல. இது மாத்திரம் அல்ல. உலகத்திலேயே தொழில் புரட்சி ஏற்பட்ட பிறகு, விவசாயப் பகுதிகளாக இருந்த நாடுகளெல்லாம்—ஒரு காலத்தில் வளம் பெற்று முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளாக இருந்தாலும்—இயந்திரப் புரட்சிக்குப் பின்னால், பின்தங்கிய நாடுகளாகிவிட்டன. எந்த எந்த இடங்களில் மூலப் பொருள்கள், கனிப் பொருள்கள் கிடைக்கின்றனவோ, அங்கு உற்பத்திப் பெருக்கத்திற்கான இயந்திரங்கள் அமைப்பதற்காக வசதி கொடுத்து, அந்த நாடுகள் முன்னேற்றம் அடைந்த நாடுகளாகவும் மாறிவிட்டன. அந்தத்துறையில்



24th July 1957] [Sri R. Venkataraman]

பார்க்கிறபோது சென்னை ராஜ்யம் நீண்ட காலமாகவே விவசாயத்தில் நல்ல வளம் பெற்ற நாடாக இருந்து வந்தும் தொழில் துறையில் ஓரளவு பின்தங்கிவிட்டது பண்டைகாலத்தில் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நம்மிடத்தில் போதுமான அளவு நிலக்கரி இல்லை என்பது நன்றாகத் தெரியும். அந்த நிலக்கரி இல்லாததன் காரணமாக, உடனடியாக, லாபகரமான தொழில்கள் அமைக்க முடியாத நிலைமையில் நாம் இருந்து வந்தோம். இன்றைக்கு அதிருஷ்டவசமாக, பழுப்பு நிலக்கரி நமக்கு அகப்பட்டு விட்டது. இதை நாம் நிலக்கரி என்று சொல்லாமல் தமிழ்நாட்டின் நிகரில்லாச் செல்வம் என்று சொல்வது சரியாக இருக்கும். அந்த நிலக்கரி அகப்பட்டதன் காரணமாகத்தான் இன்றைக்குப் பல தொழில்களை நாம் செய்ய முடியும் என்ற நிலைமையில் தைரியமாக முன்வந்து சொல்வதற்கு முடிகிறது. அங்கே 30 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கும். அங்கே 2 லட்சம் கிலோவாட் மின்சார சக்தி கிடைக்கும். 70 ஆயிரம் டன் ரசாயன உரம் உற்பத்தி செய்ய முடியும். இவையெல்லாம் 1960-ம் வருஷத்தில் நடைமுறைக்கு வந்துவிடும். இதோடு அங்கு ஒரு இன்சுலேடர் பாக்டரியும்—மின்சாரப் பொருள் செய்யக்கூடிய ஒரு பாக்டரி—ஏற்படுத்துவதற்கு சேஷசாயி அண்டு கம்பெனிக்கு லைசன்சு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, 'சேலத்தில் இரும்பு உற்பத்தி செய்வதற்கு என்ன முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன?' என்று கனம் ஸ்ரீ ராமசாமி முதலியார் கேட்டார்கள். இதற்கு முன்பு நான் கேள்விக்குப் பதிலளிக்கும் போது சொன்னேன் "சேலத்தில் இருக்கும் இரும்பைப் பரிசீலனை செய்வதற்காக ஜம்ஷட்பூரில் இருக்கும் நம்முடைய ஒரு நாஷனல் மெடலர்ஜிகல் லாபரடரிக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது, அதனுடைய பரிசீலனை முடிந்தவுடன் சர்க்கார்த் துறையில் அதை எடுத்துக் கொண்டு நடத்த முடியும்" என்று. இப்பொழுதே பரிசீலனை செய்து நாளைக்கே நடத்த முடியும் என்று அவர்கள் சொன்னால்கூட, நெய்வேலியில் இருக்கும் பழுப்பு நிலக்கரியைக் கண்டெடுத்து பிறகுதான் **low shaft furnace** செய்ய முடியுமே அல்லாமல், உடனடியாகச் செய்ய முடியாது. இந்த நிலைமையில், ஒன்றோடு ஒன்று சார்ந்திருக்கிறது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஏதோ இரும்பு பொருள், உலோகப் பொருள், ஒரு இடத்தில் அகப்பட்டுவிட்டது என்ற காரணத்தால், உடனடியாக அதைச் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறோம். காரணம் என்னவென்றால், எதை வைத்துக் கொண்டு அந்த மூலப் பொருளைத் தொழில் பொருளாக மாற்ற முடியுமோ, அந்தப் பொருள் இல்லாத காரணத்தால், அது கிடைக்கும் வரையிலும் சற்று காலதாமதம் ஆகித்தான் தீரும்.

"பாக்சைட்" டைப்பற்றி கூறினார்கள். சேலத்தில் 6 கோடி டன் பாக்சைட் இருப்பதாக நிபுணர்கள் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை உபயோகப்படுத்தி அலுமினியமாகச் செய்யவேண்டுமென்று சொன்னால், நமது நண்பர் ஸ்ரீ சட்டநாத கரையாளர் அவர்கள் சொன்னது போல், இரண்டாயிரம் டிக்ரி உஷ்ணம் அளிக்கக் கூடிய உலை (**furnace**) வேண்டும். அதற்கு வேண்டிய மின்சாரம் இப்பொழுது இல்லை. அதை உற்பத்தி செய்வதற்காகத்தான் குந்தா திட்டம் போட்டிருக்கிறது. அந்தத் திட்டம் அமுலுக்கு வந்தபின் சேலத்தில் அலுமினியத் திட்டம் ஆரம்பிக்க முடியும். இதையெல்லாம் நான் சொல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற்படுகிறது என்று சொன்னால் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள் "எதை எடுத்தாலும் பார்க்கலாம் என்று இருக்கிறது; செய்யலாம் என்று இருக்கிறது; திட்டவட்டமாக இல்லை என்று". பலவிதமான உபகரணங்கள் இல்லாத சமயத்தில், ஏதோ பெயர் வாங்க வேண்டுமென்றோ, யாராவது கை தட்டுவார்கள் என்றோ, இதைச் செய்து விடுவேன், அதைச் செய்து விடுவேன், இதைச் செய்து விட்டேன், அதை முடித்தாகிவிட்டது என்று சொன்னால் அது நியாயத்திற்குப் புறம்பானது. எனவே, இந்த முறையிலே எந்தெந்த தொழில்கள் செய்வதற்கு என்ன

[Sri R. Venkataraman] [24th July 1957

என்ன உபகரணங்கள் வேண்டும், என்ன என்ன சாதனங்கள் வேண்டும், அந்தச் சாதனங்கள் எப்பொழுது கிடைக்கும், எதனால் தாமதப்படுகிறது என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

" மாக்னிசைட் " உலோகப் பொருளைப்பற்றி ஸ்ரீ சட்டநாத கரையாளர் சொன்னார்கள். இதைச் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்று அவர்கள் யோசனை கூறினார்கள். " மாக்னிசைட் " முக்கியமான உலோகப் பொருள். அதன் மூலமாக " ரிப்ராக்டரி " செய்ய முடியும். அந்த " ரிப்ராக்டரி "யைச் செய்தால்தான் அதை இரும்பு காய்ச்சுவதற்கு உபயோகிக்க முடியும். இல்லாவிட்டால், இரும்பு காய்ச்ச முடியாது. எனவே, இதனுடைய முக்கியத்துவத்தை நன்றாக உணர்ந்துதான் குத்தகையை (lease) தங்களுக்கு மாற்ற வேண்டுமென்று பர்னன் கம்பெனியார் கேட்டுக்கொண்டபோது, அதை அவர்களுக்கு மாற்ற இயலாது என்று சென்னை அரசாங்கம் மறுத்துவிட்டது. இப்பொழுதுள்ள குத்தகை முடிவு ஆனபிறகு வேறு யாருக்காவது குத்தகைக்கு கொடுப்பதா, இல்லையா என்பதைப்பற்றி சர்க்கார் பரிசீலனை செய்துக்கொண்டிருக்கிறது. நமக்கு இருக்கும் உலோகப் பொருளை எந்த முறையில் நாம் உபயோகப்படுத்தினால், அதிகமான மக்களுக்கு வேலை கிடைக்கும், அதிகமாக நமக்குச் செல்வம் வரும், அதிகமாக நம்முடைய நாட்டுக்கு முன்னேற்றம் ஏற்படும் என்பதையொட்டி ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமேயல்லாமல் ஏதோ பர்னன் கம்பெனியாக இருக்கிறார்கள், வேறு யாரோ இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக மாத்திரம் நாம் கொடுக்க முடியாது. எந்த ஒரு முடிவு செய்தாலும், அது சென்னை ராஜ்ய மக்களுக்கு எந்த விதத்தில் அனுகூலம் அளிக்கும், எந்த விதத்தில் அவர்களுக்கு நன்மை பயக்கும் என்ற அடிப்படையை மனதில் கொண்டுதான் செய்வோமேயல்லாமல் வேறு எந்தக் காரணத்தையும் வைத்து செய்வதற்கில்லை.

இதில் ஏதோ மேல் இடத்திலிருந்து குறுக்கீடுகள் இருப்பதாகவும் அக்குறுக்கீடுகளுக்கு நாம் அடி பணிவதாகவும் ஸ்ரீ சட்டநாத கரையாளர் சொன்னார்கள். அவர்கள் சட்டம் படித்தவர்கள். சமஷ்டி அரசாங்கத்திலே, ஐக்கிய ராஜ்ய அமைப்பிலே, ஒவ்வோரு பகுதிக்கும் சில அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே, சென்னை ராஜ்யம், பம்பாய் ராஜ்யம், இம்மாதிரி ராஜ்யங்களுக்குச் சில அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்திற்குச் சில அதிகாரங்களும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த பகுதியைச் சேர்ந்த அதிகாரத்தை நிர்வகிக்கின்ற முறையிலே, அமுல் நடத்துகிற முறையிலே, அந்தந்த பகுதியினர்தான்—ராஜ்யங்களோ, மத்திய அரசாங்கமோ—கடைசி வார்த்தை சொல்ல முடியும். முடிவான, உருவான அபிப்பிராயத்தைச் சொல்வதும், இறுதியான தீர்மானம் செய்வதும் யாருக்கு எந்தெந்த அதிகாரங்கள் பிரிவினையாயிருக்கின்றனவோ, அவர்களையொட்டியதுதான் முடிவு. ஆகவே, அந்த முறையிலே பார்க்கின்றபோது, எதிலாவது மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருந்தால், அதில் 'இவ்வாறு ராஜ்ய அரசாங்கம் செய்யலாம்', என்று அவர்கள் சொல்வதில் தவறு இருக்கும் என்று சட்டம் தெரிந்த ஸ்ரீ சட்டநாத கரையாளர் அவர்கள் சொல்லமாட்டார்கள் என்று நான் விரும்புகிறேன்.

அப்படிச் சொல்வதற்குக்கூட இந்த இடத்தில் இடம் இல்லை. ஏனென்றால், நாம் இந்தக் கனிப் பொருள் விஷயத்தில் சர்க்காரே நடத்துவதா இல்லையா என்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம். முடிவு செய்கின்ற வரையிலும் இதில் எந்தவிதமான மாறுதலும் செய்ய முடியாது என்று சொன்னவுடன் அவர்கள் கூறிய யோசனையை பேசாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஏதோ வெளியார் தலையீடு ஏற்பட்டு, அதற்கு நாம் அடிபணிவதாக எந்த விதமான சந்தேகமும் தமிழ் நாட்டில் இருப்பவர்களுக்கு இருக்கத் தேவை இல்லை. அதில் உண்மையும் இல்லை.

அடுத்தபடியாக திருச்சி ஜில்லாவில் சுமார் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் பெருமான ஜிப்ஸம் இருக்கிறது. இந்தப் பொருள் விவசாயத்திற்குப் பயன்படும். ரசாயன உரம் தயாரிப்பதற்கும், சிமெண்டு உற்பத்தி



24th July 1957] [Sri R. Venkataraman]

செய்வதற்கும் மிகவும் உபயோகமானது. ஜிப்ஸத்தைக் கொண்டுதான் இந்தப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும். ஆகவே, அங்குள்ள ஜிப்ஸத்திற்கு யாருக்கும் சுரங்கக் குத்தகை (மைனிங் லீஸ்) கொடுக்கக்கூடாது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. நெய்வேலித் திட்டத்தில் ஜிப்ஸத்தை உபயோகிக்கலாம் என்று தீர்மானித்து அரசாங்கம் அதற்கு யாருக்கும் சுரங்கக் குத்தகை கொடுக்க வேண்டியதில்லை என்று முடிவு செய்துள்ளது.

நமது ராஜ்யத்தில், சிமெண்டு உற்பத்தி ஓரளவு பெருகிக்கொண்டு வருகிறது. இப்போதுள்ள 3 சிமெண்டுத் தொழிற்சாலைகளிலுமாக மொத்தம் $7\frac{1}{2}$ லட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. சிமெண்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது டால்மியா சிமெண்டுத் தொழிற்சாலையில் 4 லட்சத்து 35 ஆயிரம் டன் சிமெண்டு உற்பத்தி ஆகிறது. இந்த உற்பத்தி சக்தியை அதிகரித்து அங்கே இன்னும் 408,000 டன் அதிகமாக உற்பத்தி செய்வதற்காக, அந்தக் கம்பெனிக்காரர்களுக்கு அவசியமான லைஸென்ஸுகள் வழங்கப்பட்டிருக்கின்றன். அவர்களும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ராமனாதபுரத்தில் புதிதாக ஒரு சிமெண்டுத் தொழிற்சாலையை ஆரம்பித்து அங்கே 2 லட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. சிமெண்டுத் துறையிலும் பெரிய அளவிற்கு முன்னேற்றமடைவதற்கு வழிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில் இருந்த மொத்த சிமெண்டு உற்பத்தி அளவான $7\frac{1}{2}$ லட்சம் டன், மூன்று சிமெண்டுத் தொழிற்சாலைகளின் விஸ்தரிப்பின் விளைவாக $14\frac{1}{2}$ லட்சம் டன்களாக உயர்ந்துவிடும். ஆகவே சிமெண்டுத் துறையில்கூட சர்க்கார் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறினால் அது சரியல்ல, அது உண்மையாகாது.

அடுத்தாற்போல், இந்த ராஜ்யத்தில் மோட்டார் கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான்கூட சென்னை ராஜ்ய தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட " ஸ்டான்டர்ட்"கார் தான் வாங்கியிருக்கிறேன், சென்னை ராஜ்யத்தில் தயாரிக்கப்பட்டது என்ற காரணத்திற்காக. சென்னை ராஜ்யத்தில் 3,000 " ஸ்டாண்டர்ட் வான்கார்ட் கார்கள் " உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், 3,000 டன்கள் எடையுள்ள 4,800 சின்ன ஸ்டான்டர்ட் மோட்டார் கார்கள் தாயரிக்கப்படுவதற்காக இந்தத் தொழில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நிறைய டீஸல் என்ஜின்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அஸோக் ஏஜென்சியில் 3,000 டீஸல் எஞ்சின் " ட்ரக்ஸ் " தயாரிக்கப்படுவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காக லைஸென்ஸு வழங்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர இப்போது ஸிம்ஸன் அண்டு கம்பெனியில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் டீஸல் எஞ்சின்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அவசியமான சிபாரிசு மத்திய சர்க்காருக்குச் செய்யப்பட்டுள்ளது. இப்போது ஸிம்ஸன் அண்டு கம்பெனியில் 3,000 டீஸல் எஞ்சின்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்த அளவை 12,000 ஆக அதிகப்படுத்துவதற்கு மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதே மாதிரி டெக்ஸ்டேல் கம்பெனியில் இப்போது தயாரிக்கப்படும் டீஸல் எஞ்சின்களின் எண்ணிக்கை 600 ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் துறையைப் பொறுத்த வரையில், 5,000 மோட்டார் சைகில்களை என்பீல்ட் கம்பெனியில் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. பைசைகிலைப் பொறுத்த வரையில், இந்தியாவிலுள்ள 20 தொழிற்சாலைகளிலுமாக மொத்த 9 லட்சம் சைகில்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகளில் 2 லட்சம் சென்னையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதை 5 லட்சமாக அதிகரிக்க வேண்டும் என்று சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறது. ஆகவே போக்கு வரத்து சாதனங்களைப் பொறுத்த வரையிலும், நமது ராஜ்யத்தில் இப்போது உற்பத்தியாகும் அளவை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

[Sri R. Venkataraman] [24th July 1957

அடுத்தப்படியாக சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொள்வோம். சர்க்கரை ஆலைகள் சம்பந்தமாகவும் ஸ்ரீ சட்டநாத கரையாளர் அவர்கள் சற்று வருத்தத்துடன் பேசினார்கள். சர்க்கரை ஆலைகள் நமக்கு மிகவும் அவசியம். நமது ராஜ்யத்திற்கு 4 சர்க்கரை ஆலைகள் தேவை. ஆனால் இங்கே அதிகமான சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கு லைஸென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்யும் அளவையும் சேர்த்துக்கொண்டால் நமக்கு 130,000 டன் சர்க்கரை கிடைக்கும். அது மாத்திரமல்ல. 6-க்கு மேற்பட்ட சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பள்ளடம், வளவனூர், நாமக்கல், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களிலும் புதிதாக சர்க்கரைத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் இவை அவ்வளவு வெற்றிகரமாக இருக்குமா என்பது தெரியாது. காரணம், இப்போது இந்த நாட்டில் சர்க்கரை உற்பத்தி செய்வதற்காக லைசென்ஸ் கொடுக்கப்பட்டுள்ள எல்லா சர்க்கரை ஆலைகளுமாக தேவைக்கு அதிகமாக சர்க்கரையை உற்பத்தி செய்துவிடும் என்ற எண்ணத்தால், புதிய சர்க்கரை ஆலைகளுக்கு லைசென்ஸ்கள் வழங்கப்படுவதற்கு சற்றுக் காலதாமதமாகும். சர்க்கரை ஆலைகள் சம்பந்தமாக கனம் எதிர்க் கட்சித் தலைவர் ஸ்ரீ. வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் ஒன்று சொன்னார்கள். புதிதாக அமைக்கப்படும் ஆலைகளுக்கு சர்க்கார் எல்லாவிதமான வசதிகளும் உதவிகளும் அளிக்கவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். மூன்று கூட்டுறவுத் தொழிற்சாலையினர், அவர்களுக்கு லைசென்ஸ் கிடைத்திருந்தும், புதிதாக இயந்திரங்களைக் கொண்டுவரமுடியுமா முடியாதா என்ற மிகக் கஷ்டமான நிலைமையில் இரண்டு மாதங்களுக்கு முன் இருந்தார்கள். சர்க்காருக்கு இந்த அன்னியச் செலாவணியும் தீர்ந்துவிட்டதன் காரணமாக புதிதாக இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து சர்க்கார் வரவழைக்க முடியாமல் இருந்தபோது, யார் யார் வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்களை நீண்ட காலத்தவணையில் வரவழைப்பார்களோ அவர்களுக்கு மாத்திரம்தான் லைசென்ஸ் வழங்குவது என்ற கொள்கையை சர்க்கார் அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். அப்படி இருந்தபோதிலும் கூட, நமது ராஜ்யத்திலுள்ள 3 தொழிற்சாலைகளுக்கும், 'டெபர்ட் பேமண்ட்' முறையில் வேண்டிய இயந்திரங்களை வழங்குவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவை வெற்றிகரமாக முடிவடைந்துவிட்டன என்பதை கனம் நண்பர் ஸ்ரீ. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களே அறிவார்கள். முக்கியமாக, அவர்கள் விரும்பிய இயந்திரங்கள் செகஸ்லோவியாவிலிருந்து, வரவேண்டியிருந்தன. செகஸ்லோவியா பிரதிநிதிகளுடன் இது பற்றி டேசப்பட்டு இவைகளைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும், நமது ராஜ்யத்திலுள்ள பல தொழில்களின் நிலைமையை ஆராய்ந்து பார்த்தால், நாம் மற்றவர்களைப் பார்த்து வருத்தப்படுவதற்கோ அல்லது பொறுமைப்படுவதற்கோ இடமில்லை என்று சொல்லவேண்டும். நமது ராஜ்யத்திலுள்ள பஞ்சாலைகளை எடுத்துக்கொள்வோம். 1957-ல் 77 'ஸ்பின்னிங்' மில்கள் இருந்தன. அவைகளுள் 27 'காம்போஸிட்' மில்கள்; அதாவது அவைகளில் நூல் நூற்பு, துணி நெய்தல் ஆகிய இரண்டும் நடக்கும். இந்த ராஜ்யத்தில் அந்த மில்களில் 2,177,000 கதிர்கள் இருக்கின்றன. 8,000 தறிகள் இருக்கின்றன. இந்தத் தறிகளை நாம் விஸ்தரிப்பதில்லை. கைத்தறி நெசவாளர்களுக்கு வசதியளிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் தறிகளை நாம் விஸ்தரிப்பதில்லை. ஆகவே அதிகமாக மில் தறிகளை அனுமதிப்பதில்லை. மேலும், 25 கோடி பௌண்ட் நூல் இந்த மில்களில் உற்பத்தியாகிறது. இந்த மில்களில் 157 கோடி கெஜம் துணி உற்பத்தியாகிறது. ஆகவே பஞ்சாலைத் தொழிலும் நல்ல முறையில் முன்னேறி வருகின்றது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலைப்பற்றி பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். நமது ராஜ்யத்தில் சுமார் 4½ லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மொத்தம் 20 லட்சம் இருக்கலாம். சென்னை ராஜ்யத்தில் 30 கோடி கெஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்திருக்கிறோம். இதில் சுமார்



24th July 1957] [Sri R. Venkataraman]

**1/3** பங்கு, அதாவது 8½ கோடி கெஜம், கூட்டுறவு முறையில் நெய்யப்படுவது ஆகும். கைத்தறி நெசவுத் தொழில் விஷயத்தில், ஸெஸ் பண்டு கொடுக்கும் முறையைப்பற்றி சில கனம் அங்கத்தினர்கள் குறை கூறினார்கள். ஆனால், ஸெஸ் பண்டு கொடுக்கப்படுவதால், பொதுவாக, கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதையும் நெசவாளர்களின் வாழ்க்கை நிலை ஓரளவு உயர்ந்திருக்கிறது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. இது விஷயமாக ஒரே ஒரு குறைப்பாடு தான் எல்லோராலும் சொல்லப்பட்டது. அதாவது, ஸெஸ் பண்டின் மூலம் தனித் தறிகள் வைக்கப்பட்டிருப்பதாகவும். மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு போதிய சலுகைகள் கிடைக்காமல் இருப்பதாகவும் குறை கூறப்பட்டது. மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்பவர்களுக்கு என் சலுகைகள் கிடைபபதில்லை என்பதை குறை கூறும் கனம் அங்கத்தினர்கள் ஒருவாறு அறிவார்கள். ஏதோ ஒரு சிலர் துஷ்பிரயோகம் செய்த காரணத்தால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று முன்பு இருந்த நிலைமை இப்போது மாறிவிட்டது. இருந்தாலும், சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்களாக இருந்தாலும் சரி, தனித் தறியில் நெய்யும் நெசவாளர்களாக இருந்தாலும் சரி, மாஸ்டர் வீவர்களிடத்தில் வேலை செய்யும் நெசவாளர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லோருக்கும் சலுகை கிடைக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கையாக இருக்கிறது. இதை அகில இந்திய (மத்திய) போர்டில் வற்புறுத்துவதற்கு நமது பிரதிநிதிகள் அவ்வப்போது அங்கே சென்று வந்திருக்கிறார்கள். இதை எப்படி நிறைவேற்றுவது என்று அகில இந்திய போர்டு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதன் முடிவு பிறகு தெரியும்.

MR. SPEAKER : Now the Hon. Minister for Industries will have to move a motion for the extension of time till he finishes his speech.

### VII.—GOVERNMENT MOTION—MOTION FOR SUSPENSION OF RULE 154 (3) OF THE ASSEMBLY RULES.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That rule 154 (3) of the Assembly Rules be suspended till the reply to the Demand XXI—Industries and Cinchona is over."

MR. SPEAKER : The question is—

"That rule 154 (3) of the Assembly Rules be suspended till the reply to the Demand XXI—Industries and Cinchona is over."

The motion was put and carried.

### VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

#### (1) DEMAND XXI—INDUSTRIES AND CINCHONA.

#### (2) DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT—*cont.*

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு மேலாக பல இடங்களில் விற்பனை செய்வதற்கான சேல்ஸ் டெப்போக்கள் ஆரம்பிப்பதற்கு வெகுவாக முயற்சிகள் நடந்து வருகின்றன. புதிதாக 250 டெப்போக்களை ஏற்படுத்துவதற்கு இப்போது திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே துணித் தேக்கம் ஏற்படும் கஷ்டம் இருக்காது. குறிப்பாக கனம் ராமச்சந்திரன் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லாவில் துணித்தேக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதை நான் ஓரளவு ஒத்துக் கொள்ளுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கிறபோது ராமநாதபுரத்தில், அதாவது ஸ்ரீ ராமச்சந்திரன் சொன்ன கைத்தறி தேக்கமானது இந்த ராஜ்யத்தில் விற்பனை ஆகக் கூடிய சேலைகள், வேஷ்டிகள் போன்றவை அல்ல. பம்பாய் ராஜ்ய பிரதேசத்தில் அதிகமாக விற்பனை ஆகக்கூடிய

கைத்தறி துணி சரக்காக இருக்கின்றன. மேலும் அதைப் பூனாவில் விற்பனை செய்வதற்காக ஏற்பாடுகளையும் செய்திருப்பதாக நான் அறிகிறேன். நமது மாகாண விற்பனை டெப்போக்கள் ஏற்படுகிறபோது அதையும் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(Sri K. Ramachandran rose.)

**The Hon. Sri R. VENKATARAMAN :** If the hon. Member wants to speak, he can do so.

**Sri K. RAMACHANDRAN :** கனம் சபாநாயகர் அவர்களே, பம்பாயில் விற்பனையாகும் சரக்குகள் ராமநாதபுரம் ஜில்லாவில் தேங்கிக்கிடக்கின்றன என்பது ஓரளவு உண்மையானாலும் உள்ளூரிலேயே விற்பனை ஆகக்கூடிய ரகங்கள் அதிக அளவில் தேங்கியிருக்கின்றன. கூட்டுறவு சொசைடிகளிலும் தேங்கி இருப்பதற்குக் காரணம் ஒவ்வொரு சொசைடியிலும் குறைவான மூலதனம் தான் இருந்து கொண்டிருக்கிறது.

**Mr. SPEAKER :** The hon. Member can speak only on a point of order. If it is a point of information, he must wait till the Hon. Minister finishes his speech.

**The Hon. Sri R. VENKATARAMAN :** ஆகவே அந்த ரகங்கள் பம்பாயிலும், பூனாவிலும் விற்பனை ஆகும் ரகங்கள் என்று நான் சொன்னது சரி என்று தெரிகிறது. இதற்கு மேலும் தேக்கம் இருக்கும் என்று சொன்னால் அதை எந்தமுறையில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைப்பற்றி ஸ்டேட் கோவாப்ரேடிவ் சொசைடி மூலமாக விற்பனை செய்ய முடியுமா என்பதைப் பற்றியும் யோசிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பெரிய கன ரகத் தொழில்களை வைப்பதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்று யாராது நினைப்பார்களேயானால் அது தவறு என்பதைதான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பெரிய பெரிய கன ரகத் தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலமாக நாட்டில் இருக்கக்கூடிய அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது. உங்களில் யாராவது ஜாம்ஷெட்பூரில் உள்ள இரும்புத் தொழிற்சாலைக்கு சென்று பார்த்திருந்தால் தெரியும். இப்போது தொழிலாளர்களைக் கொண்டு செய்யப்படுகிற வேலைகள் எல்லாவற்றையுமே அங்கே இயந்திரங்கள் செய்கின்றன. கான்வெயர் பெல்டு மூலமாக பொருள்கள் எடுத்துக் கொண்டுபோய் பாலரில் கொட்டப்படுகிறது. எல்லாக் காரியங்களும் இயந்திரங்களாலேயே செய்யப்படுகிறது. கடைசியாகப் பார்க்கிறபோது எவ்வளவு அதிகமாக மூல்தனம் போட்டு கனரகத் தொழில்களை ஆரம்பிக்கிறோமோ அவ்வளவு அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது. அங்கு வேலை செய்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து போகிறது. ஆகவே இந்த நாட்டில் இருக்கக்கூடிய வேலையில்லாத்திண்டாட்டத்தைப் போக்க நாம் பெரிய கனரகத் தொழில்களை நம்பிக்கொண்டிருந்தால் ஏமாற்றம் அடைவோம். ஒருவித பிரயோசனமும் இருக்காது. நாட்டில் உள்ள வேலை இல்லாத் திண்டாட்டம் போக வேண்டும், எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்க வேண்டும் என்று சொன்னால் சிறு சிறு குடிசைத் தொழில்கள் தான் அதிகமாக நாட்டில் பெருக வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி அவர்கள் ஓரளவு இந்தச் சிறு தொழில்களைப்பற்றி குறைவாகப் பேசினார்கள்—பழித்தார்கள் என்று நான் சொல்வதற்கு இல்லை—" சர்க்கார் என்ன பெரிய பெரிய கனரகத் தொழில்களை எடுத்து நடத்தாமல், நெய்வேலி லிக்னைட்டை எடுத்து நடத்தாமல் தீக்குச்சியையும், செருப்பையும், அம்மாமி அப்பளத்தையும் செய்கிறார்களே " என்று சொன்னார்.





நான் சுவிட்ஜர்லாந்திற்குச் சென்றிருந்தேன். அந்த நாட்டில் பெரிய கனரகத் தொழில்கள் இருக்கின்றன. ஆனால் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டு பார்த்தால் அதிகமான தொழிலாளர்கள் சிறு சிறு தொழில்களில் தான் ஈடுபட்டிருக்கிறார்கள். கடியாரம் மாத்திரம் அல்ல, மியூஸிக் பாக்ஸ் என்பதை, திறந்தவுடன் பாடக்கூடிய பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. அங்கே போகிறவர்கள் யாரும் அதை வாங்காமல் வருவது இல்லை. இப்படி பல சிறு தொழில்கள் அந்த நாட்டில் பரவலாக நடைபெற்று வருவதனால்தான் அங்குள்ள தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. எல்லோருக்கும் வேலை கிடைக்கிறது.

ஆகவே நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெரும் அளவு குறைக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடுதான் இந்த நாட்டில் எந்த அளவுக்கு குடிசைத் தொழில்களை அதிகமாக மறுபடியும் வளர்க்க முடியுமோ அந்த அளவு வளர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டு வருகிறது. இதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் 33 லட்சம் ரூபாய் நம்முடைய ராஜ்யத்தில் சிறு தொழில்களை வைப்பதற்குச் செலவிடப்படும். சிறு தொழில் என்றால் ஐந்து லட்சத்திற்குக் குறைவான மூலதனத்துடன் ஆரம்பிக்கப்படும் தொழில். விசை உடைய தொழிற்சாலை என்றால் 50 பேர்களுக்குக் குறைவாக இருக்க வேண்டும். விசை இல்லாத தொழிற்சாலையாக இருந்தால் நூறு பேர்களுக்குள் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட சிறு தொழில்களை அதிகமாக விஸ்தரிப்பதற்கு இந்தச் சர்க்கார் எல்லாத் திட்டங்களையும் போட்டிருக்கிறது.

இந்த சமயத்தில் கனம் அண்ணாத்துரை சொன்ன விஷயத்தை குறிப்பிட வேண்டும். அவர்கள் கேட்டார்கள், " 1946-ம் வருஷத்தில் இருந்த தொழில் இலாகா அதிகாரிகள் எவ்வளவு ? இப்பொழுது இருக்கிற அதிகாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு? " என்பதாக. இப்போது தொழில் இலாகா செய்து வருகின்ற அலுவல்களில் பத்தில் ஒரு பங்கு கூட 1946-ம் வருஷத்தில் நடைபெற்றது இல்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். இப்போதுள்ளதுபோல் சிறு தொழில்களை அதிகமாக வளர்ப்பதற்கு தனி இலாகாவோ, அதிகாரிகளோ அப்போது கிடையாது. இப்போதுதான் நாம் அதிகாரிகளை ஜில்லாக்களில் நியமித்து அவர்கள் மூலமாக அந்தந்த ஜில்லாவில் என்னென்ன சிறு தொழில்களை ஆரம்பிக்கலாமோ அவற்றையெல்லாம் ஆரம்பித்திருக்கிறோம். அத்தொழில்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்துவருகிறோம். இந்த அதிகாரிகளின் மூலமாகத்தான் ஓரளவு இந்நாட்டில் பரவலாக சிறு தொழில்கள் வளர்ந்துகொண்டு வருகின்றன. அதிகாரிகளை நியமித்திராவிட்டால் சிறு தொழில்களின் வளர்ச்சி தடைபட்டுப் போயிருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு தொழில்களைப் பற்றிக் குறிப்பிடுகிற காலத்தில் ஸ்ரீ அண்ணாத்துரை அவர்கள் பல யோசனைகளைச் சொன்னார்கள். அவற்றுள் ஏன் எல்லாத் தொழில்களுமே இப்போது சர்க்காரால் எடுத்துக்கொண்டு நடத்தப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மெடல் இண்டஸ்ட்ரி, பூட்டு செய்யும் தொழிலை எடுத்துக்கொண்டால், திண்டுக்கல்லில் இருக்கிறது. ப்ராஸ்வெயர் என்றால் கும்பகோணத்தில் இருக்கிறது. சர்ஜிகல் இன்ஸ்டிருமெண்டு என்றால் கிண்டியில் உற்பத்தி செய்யப்படுகிறது. சிராமிக் பாக்டரி விருத்தாசலத்தில் நடைபெறுகிறது. கிளாஸ் வொர்க்ஸ் கிண்டியில் நடைபெறுகிறது. ப்ரெஸ்ட் மெட்டல் வால் டாக்ஸ் ரோடு, சென்னையில் நடைபெறுகிறது. இப்படிப் பல சிறு தொழில்களை எல்லாம் ஏற்கனவே சர்க்கார் ஆரம்பித்து நடத்துகிறது எனச் சொல்ல விரும்புகிறேன்.

மேலும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளை சர்க்கார் ஏற்படுத்தி வருகிறார்கள். அவற்றில் சிறு தொழில்களை எல்லாம் செயவதற்கு எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன. இடம், மின்சார சக்தி, தண்ணீர் வசதி,

[Sri R. Venkataraman] [24th July 1957

கம்ப்ரெஸ்டு ஏர் இன்னும் பலவிதமான வசதிகளை அளித்து இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் மூலம் சிறு தொழில்கள் வளருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

கனம் அங்கத்தினர்கள்கூட சென்று பார்த்திருக்கலாம். கிண்டியில் அதற்காகக் கட்டப்படும் கட்டிடம் பூர்த்தியாகின்றது. ஆகஸ்டு-செப்டம்பர் மாதத்திற்குள் நடைமுறைக்கு வந்துவிடும். அதே போல், ஈரோடிலும் விருதுநகரிலும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டு ஆரம்பிக்க கட்டிட வேலை நடந்து வருகின்றன. ஆகவே சிறு தொழில் வளர்ச்சிக்கு சர்க்கார் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவைகளைச் செவ்வையான முறையில்தான் எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இங்கு சோப் பாக்டரிகள் ஆயில் பாக்டரிகள் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். விழுப்புரத்தில் வனஸ்பதி தொழிற்சாலை ஏற்படுத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். சர்க்காருக்குக் கிடைக்க வேண்டிய 10 லட்சம் ரூபாயை வசூல் செய்துவிட தீர்மானித்து அதற்கான முயற்சிகள் செய்துகொண்டு வரப்படுகின்றன. இப்பொழுது நமக்கு கோழிக்கோடு சோப் பாக்டரி போய்விட்டது என்ற காரணத்தால் இந்த பாக்டரியை எடுத்துக்கொண்டு சோப் பாக்டரி ஒன்றை நடத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். தனி நபர் நடத்த முடியாமல் நஷ்டப்பட்டுப்போய் விட்டு விட்டுச் சென்றதை சர்க்கார் எடுத்து நடத்துவது என்றால், ஓரளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நஷ்டப்பட்டாலும் பாதகமில்லை, நமக்கு ஏதாவது தொழில் வேண்டும் என்று அங்கத்தினர்கள் சொல்வார்களானால், அதை சர்க்கார் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ளப்படும். சோப் உற்பத்தி செய்வது சிறிய தொழிலாக, இப்போது அதிகப்பட்டிருக்கிறது. குடிசைத் தொழிலாக பல இடங்களில் பல கிராமங்களில் இப்போது நடந்து வருகிறது. நேஷனல் எக்ஸ்டன்ஷன் ஸர்வீஸ், கம்யூனிடி பிராஜக்ட் போன்ற இடங்களில் ‘ வில்லேஜ் இண்டஸ்டிரிஸ் ’ முறையாக சிறு ‘ பிராஜக்ட்டாக ’ நடத்தப்பட்டு வருகிறது. லோயர் பவானி, சங்கரன்கோவில், திருக்கழுக்குன்றம், மேலூர் போன்ற 14 அல்லது 15 இடங்களில் சோப் செய்வதற்கான ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டு இருக்கின்றன.

கைக்குத்தல் அரிசி தயாரித்தல், எண்ணெ எடுத்தல், பனை வெல்லம் தயாரித்தல் முதலிய தொழில்களை சிறு சிறு தொழில்களாக கிராமங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நண்பர் ராமச்சந்திரன் அவர்கள் ஒரு குற்றம் சாட்டினார்கள். செலவுகளைப் பார்த்தால், செங்கல்பட்டு ஜில்லாவுக்கும், கோயம்புத்தூர் ஜில்லாவுக்கும் அதிகமாகச் செலவு செய்யப்படுகிறது, மற்ற ஜில்லாக்களுக்கு ஒன்றுமே செலவு செய்வதில்லை என்று சொன்னார்கள். மற்றவர்கள் தவறாக எண்ணக்கூடாது என்று நான் புள்ளி விவரங்களைச் சேகரித்திருக்கிறேன்.

| | | ஆயிரங்கள். |
|---|---|---|
| சென்னை .. .. .. .. | 19 | 70,78 |
| மதுரை .. .. .. .. | .. | 22,54 |
| சேலம் .. .. .. .. | 18 | 14,69 |
| வட ஆற்காடு .. .. .. .. | 13 | 10,27 |
| கோயம்புத்தூர் .. .. .. .. | 8 | 8,16 |
| தஞ்சாவூர் .. .. .. .. | .. | .. |
| செங்கல்பட்டு .. .. .. .. | .. | 6,14 |
| ராமநாதபுரம் .. .. .. .. | .. | .. |

இதிலிருந்து எந்த விதமான தப்பபிப்ராயத்திற்கும் இடமில்லை என்று தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பட்டு உற்பத்தியைப் பற்றி ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன்மேல் அதிக விவாதம் நடந்தது. யார் பட்டைக் கட்ட



24th July 1957] [Sri R. Venkataraman].

வேண்டும். அல்லது கூடாது என்பதைப் பற்றி எல்லாம் நான் இப்போது பேசப் போவதில்லை. ஹோசூரில் 50 பேஸின் கொண்ட ஒரு சிறு யூனிட்டை அமைக்க ஏற்பாடாகி இருக்கிறது. அங்கு 1,500 எக்கர் நிலத்தில் மல்பரி பிளாண்டேஷன் விவசாயத்தில் இருந்து வருகிறது. இந்த 50 பேஸின் கொண்ட யூனிட்டை 200 ஆக விஸ்தரிக்க வேண்டும் என்ற நோக்கம் சர்க்காருக்கு இருந்து வருகிறது. இன்னும் எந்தெந்த இடங்களில் மல்பரியை பயிர் செய்யலாம். ஸில்க் உற்பத்தி செய்ய முடியும் என்பதை சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அங்கத்தினர் ஸ்ரீ அண்ணாத்துரை குறிப்பிட்டது போல், ஹோசூரில் வேலை செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சின்கோனா தொழிலாளர்களைப் பற்றி அங்கத்தினர் ஸ்ரீ சின்னத்துரை அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு சரியான ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். இந்த விஷயத்தில் தொழிற்சங்க வாதிகள் எனக்குப் புத்திமதி சொல்வதாயிருந்தால் சர்க்கார் ஊழியர் மாதிரி சம்பளம் கொடுக்க வேண்டும் என்று இந்தத் தொழிலாளர்கள் கோருகின்றார்களா அல்லது இதர தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களைப் போல் நடத்தப்படவேண்டும் என்று விரும்புகிறார்களா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டால், அவர்கள் விருப்பம் போல், சர்க்கார் நடத்த முடியும். சமீபத்தில் சென்னை டிரான்ஸ்போர்ட்டில் இருக்கின்ற தொழிலாளர்களைக் கூப்பிட்டு “ உங்களுக்கு மினிமம் வேஜஸ் கமிட்டி ” தீர்ப்புப் பிரகாரம் சம்பளம் வேண்டுமா, அல்லது சர்க்கார் ஊழியர்களைப்போல சம்பளம் மற்ற சலுகைகள் வேண்டுமா, என்று கேட்டபொழுது, ஒரு மாதமாகியும் அவர்கள் ஒரு முடிவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் ஊழியர்களாக இருப்பதில் சில சலுகைகள் இருக்கின்றன. முக்கியமாக லீவ் வசதி—“நகோஷியபிள் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்டின்படி 21 நாட்கள், காஷுவல் லீவு, [ ஸிக் ] லீவு போன்ற சலுகைகள் இருக்கின்றன. மற்ற சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் பஞ்சப்படி உயர்வு மாதிரி இவர்களுக்கும் கொடுக்கப்படும். இப்பொழுது சின்கோனா தோட்டத் தொழிலாளர்கள் பி.டபிள்யூ.டி. தொழிலாளர்கள்போல் நடத்தப்படுகிறார்கள். இவர்கள் மற்ற தொழிலாளர்களைப்போல் நடத்தப்பட்டால் வேலையிலிருந்து திடீர் திடீரென்று நீக்கப்படுவார்களே என்று பயப்படுகிறேன். சர்க்கார் ஊழியர்களாக இருந்தால், சஸ்பென்ஷனிலிருந்தால் கூட, $\frac{1}{4}$ பங்கு சம்பளம் கிடைக்கும். சர்க்கார் ஊழியர்களின் சம்பளம் குறைவாக இருக்கிறதென்று, அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்ற வாதத்தை எழுப்புவது அவர்களுக்கே சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னையில் இருக்கக் கூடிய ‘ சென்ட்ரல் இன்டஸ்ட்ரியல் மியூசியம் ” என்பதற்கு அதிகப் பணம் உதவ வேண்டும் என்றும் அதை ஒரு பிரசார கர்த்தாவாக வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் ஸ்ரீ கோவிந்தசாமி சொன்னார்கள். நான் டில்லியில் இருக்கின்ற காலத்தில் மத்திய சர்க்காரிடமிருந்து இதற்கு பொருளுதவி வாங்கிக் கொடுத்திருக்கிறேன். இது ஸ்ரீ கோவிந்தசாமி அவர்களுக்குத் தெரியும். இதை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்பதே சர்க்காரின் நோக்கம். ஆகையால் இதைச் சிறந்த முறையில் நடத்த வேண்டிய முயற்சிகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளும்.

இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு நல்ல யோசனைகளைச் சொல்லிய அங்கத்தினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மான்ய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of information.

MR. SPEAKER: Two days ago I gave a ruling that hon. Members could not expect Hon. Ministers to reply to every one of the points raised by them and that I would not allow them to rise on a point of information at the end of the Hon. Minister's speech. The Hon. Minister will take note of all the points raised by them. Unless there is a complaint about misrepresentation or misunderstanding, I would not allow any hon. Member to speak at the end of the Hon. Minister's speech.

SRIMATHI T. N. ANANDANAYAKI: Sir, sometimes even certain facts will cause misunderstanding. I would like to get information from the Hon. Minister only on the following question:—

முந்திரித் தோலிலிருந்து பிளாஸ்டிக் செய்வது சிக்கனமாக இருக்காது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னால் நன்றாக இருக்கும்.

MR. SPEAKER: I shall not allow that question to be answered because that will lead to another question being put.

SRI K. RAMACHANDRAN: Sir, the object of my cut motion is to discuss about the failure of the Government to allot certain refined varieties such as sarees and dhotis for the handloom industry. I request the Hon. Minister to kindly . . .

MR. SPEAKER: As I said, the Hon. Minister need not reply to all the points raised either in the cut motion or in the speech of hon. Members.

SRI K. SATTANATHA KARAYALAR: நான் நேற்று பேசும்போது 'ஆரூரான்' மில்லுக்கு நஷ்டம் ஏற்படுவது பற்றிக் குறிப்பிட்டேன். என் பிரசங்கத்தில் சொன்னதாவது:

"இன்றைக்கு 'ஆரூரான் மில்ஸ்'ல் இருக்கக் கூடிய நிலைமையை எடுத்துக்கொண்டால் நாம் ஒரு காரியத்தை அறிய முடியும். அந்த மில்லில் ஆண்டு ஒன்றுக்கு சராசரி 12 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று கணக்குக் கொடுக்கிறார்கள். இது உண்மையில் நஷ்டம் ஏற்படுகிறதா என்று நாம் விமர்சிக்க வேண்டிய தேவையில்லை. நஷ்டத்தில் வேலை செய்வதானால். . ." என்று நான் ஆரம்பித்த பொழுது கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமன் அவர்கள் "அந்த ஆலையில் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கு முன்னால் எப்படி நஷ்டம் ஏற்பட முடியும்?" என்று கேள்வி கேட்டார்கள். இது உண்மையிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் கேட்பது தமாஷாக இருக்கிறது. ஸ்ரீ ராமச்சந்திரன் கேட்ட கேள்விக்கும் அதே பதில்தான். நீங்கள் கேட்ட கேள்விக்கும் அதே பதில்தான்.

(Sri K. Sattanatha Karayalar and the Hon. Sri R. Venkataraman rose.)

MR. SPEAKER: I want to make it very clear to the Hon. Minister that he must not rise to answer every one of the supplementary questions now raised. I have no objection to his answering the particular point now raised. But, as a rule, it is advisable that Hon. Ministers answer all the points at a time in their replies. Once they finish their reply, I cannot allow a discussion on points of information.





Is the hon. Member Sri K. Ramachandran withdrawing his cut motion?

SRI K. RAMACHANDRAN: I am pressing my cut motion, Sir.

MR. SPEAKER: Then I will put the cut motion to vote. The question is—

"That the allotment of Rs. 5,11,47,400 under Demand No. XXI—Industries and Cinchona—be reduced by Rs. 100."

The cut motion was put and the House divided thus:

*Ayes.*

Sri V. K. Ramaswamy Mudaliyar.
" T. S. Ramaswamy Pillai.
" C. N. Annadurai.
" A. Govindasamy.
" S. Pakkirisami Pillai.
" P. S. Chinnadurai.
" K. Sattanatha Karayalar.
" K. Ramachandran.
" M. Jagannathan.
" M. P. Subramaniam.
" K. Anbazhagan.
" K. R. Nallasivam.
" D. S. Authimoolam.
" M. D. Ramasami.
" M. Karunanithi.
Srimathi Dr. Sathiyavanimuthu.
Sri N. Marudachalam.
" Kr. Rm. Kariamanickam Ambalam.
" S. A. M. Annamalai Odayar.
" A. V. P. Asaithambi.
Sri M. Anandan,
" V. K. Kothandaraman.
" A. V. P. Periavalaguruva Reddy.
" A. Perumal.
" S. Ramasami Thevar.
" B. Doraisami Reddiar.
" P. S. Ellappan.
" M. Selvaraj.
" T. L. Sasivarna Thevar.
" V. Subbiah.
" T. Thirumalaimuthu Veerasakkaya Thiruvenkadasami Naicker.
" K. Gopala Gounder.
" M. P. Sarathy.
" S. M. Annamalai.
" P. Veerappa Kounder.
" T. Irusappan.
" P. U. Shanmugam.
" P. S. Santhanam.

*Noes.*

Sri B. Bhaktavatsalu Naidu.
" C. R. Ramaswami.
" M. Alagirisamy.
" G. Annamalimuthuraja.
" P. Appavu.
" K. S. Ardhanareeswara Gounder.
" M. A. B. Arumughasami.
" V. S. Arunachalam.
" V. Arunachala Thevar.
" W. P. A. R. Chandrasekaran.
" A. E. Chandrasekhara Nayagar.
" R. Chidambara Bharathi.
" V. Chinniah.
" N. P. M. Chinniah Kavundar.
" A. Chinnasami.
" T. T. Daniel.
The Hon. Sri K. Kamaraj.
" C. Subramaniam.
" M. Bhaktavatsalam.
" M. A. Manickavelu.
" P. Kakkan.
Sri P. G. Karuthiruman.
" N. Ekambara Mudali.
" G. Gomathi Sankara Dikshitar.
" V. Govindaswami Naidu.
" G. G. Gurumurthy.
" P. Jayaraj.
" T. M. Kaliannan.
" M. Kandasami Kandar.
" M. Kandasami Padayachi.
" Karuthappa Gounder.
Sri S. Khadar Sheriff.
" P. Kolanda Gounder.
" V. K. Krishnamurthy.
" R. Krishnasami Naidu.
" P. Kuppusami.
" S. Lazar.
" K. B. S. Mani.
" V. S. Manickasundaram.
" K. Marappa Gounder.
" A. Mariappan.
" M. K. Mariappan.
The Hon. Sri V. Ramiah.
The Hon. Srimathi Lourdhammal Simon.
Srimathi T. N. Anandanayaki.
" Hemalatha Devi.
" Kamalambuja Ammal.
" Kolanthai Ammal.
" P. K. R. Lakshmikantham.
" A. S. Ponnammal
" Rajathi Kunchithapatham.
Sri J. Matha Gowder.
" C. Muthiah Pillai.
" M. C. Muthukumaraswamy.
" M. Muthuswamy Nayagar.
" S. Nagaraja Monigar.
" G. Narayanaswami Naidu.
" A. Nesamony.
" K. G. Palaniswamy Gounder.
" K. Ponnian.
" A. Raja Gounder.

[24th July 1957

*Noes*—cont.

Sri P. Ramachandran.
" M. Ramachandra Reddiyar.
" S. Ramalinga Padayachi.
" T. R. Ramamirtha Thondaman.
" A. Chidambaranatha Nadar.
Srimathi A. Suares.
Dr. Srimathi T. S. Soundaram Ramachandran.
Sri K. L. Ramaswami.
" A. A. Rasheed.
" A. Rathnavel Gounder.
" S. Sadasivam.
" S. C. Sadayappa Mudaliar.
" A. Sahajananda.
" T. Sampath.
" S. Sangili.
" V. Sankaran.
" T. V. Sannasi.
" M. S. Selvarajan.

Sri M. K. Somasundaram.
" R. Srinivasa Iyer.
" A. S. Subbaraj.
" T. K. Subbiah.
" A. R. Subbiah Mudaliar.
" K. S. Subramania Gounder.
" N. S. Sundararaan.
" R. Swaminatha Merkondar.
" T. S. Swaminatha Odayar.
" N. R. Thiagarajan.
" P. Urkavalan.
" G. Vagheesam Pillai.
" K. Vasudevan.
" A. Vedarathnam Pillai.
" V. Vedayyan.
" K. Vinayakam.
" K. R. Viswanathan.
" M. Kulandaisami Gounder.
" P. Vedamanickam.

*Neutral*—Nil.

*Ayes*—38. *Noes*—98. *Neutral*—Nil.

The cut motion was lost.

Mr. SPEAKER : I now put the original motion to the vote of the House. The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 5,11,47,400 under Demand No. XXI—Industries and Cinchona."

The Demand was put and carried and the Grant was made.

Mr. SPEAKER : Is the hon. Member Sri K. Sattanatha Karayalar withdrawing his cut motion to Demand No. XXXIX—Capital Outlay on Industrial Development?

Sri K. SATTANATHA KARAYALAR : I am pressing my cut motion, Sir.

Mr. SPEAKER : The question is—

" That the allotment of Rs. 2,72,27,000 under Demand No. XXXIX—Capital Outlay on Industrial Development—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

Mr. SPEAKER : I now put the original motion to the vote of the House. The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 2,72,27,000 under Demand No. XXXIX—Capital Outlay on Industrial Development."

The Demand was put and carried and the Grant was made.



(3) DEMAND XXXIII—ROAD TRANSPORT SCHEMES—WORKING EXPENSES.

(4) DEMAND XLII—CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,71,44,400 under Demand No. XXXIII—Road Transport Schemes—Working Expenses."

" That the Government be granted a sum not exceeding Rs. 1,31,52,600 under Demand No. XLII—Capital Outlay on Road Transport Schemes."

Mr. SPEAKER : I understand that all Opposition parties are agreed that so far as Demand No. XXXIII is concerned, Sri P. S. Chinnadurai will move his cut motion and that in respect of Demand No. XLII, Sri T. S. Ramaswamy Pillai will move his cut motion. I would like them to move their respective cut motions.

Sri P. S. CHINNADURAI : Sir, I move—

" That the allotment of Rs. 1,71,44,400 under Demand No. XXXIII—Road Transport Schemes—Working Expenses be reduced by Rs. 100."

Sri T. S. RAMASWAMY PILLAI : Sir, I move the cut motion standing in my name, viz. :—

" That the allotment of Rs. 1,31,52,600 under Demand No. XLII—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100."

Mr. SPEAKER : The original motion and the cut motions are before the House. How long will the Hon. Minister take for reply?

The Hon. Sri R. VENKATARAMAN : Half an hour.

Mr. SPEAKER : Now, whether the Hon. Minister finishes his reply or not, I have to apply the guillotine at 2 of the clock. I would like hon. Members to so arrange their speeches. The House has no choice and I must apply the guillotine at 2 of the clock.

Sri P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 12-08 p.m.
சமூகத்தினுடைய செல்வ நிலையை அபிவிருத்தி செய்யக் கூடிய, சமூகத்தை சுபிட்சமான லட்சியத்தை நோக்கி இழுத்துச் செல்லக் கூடிய வருவாய் இனங்கள் எல்லாம் இன்று தனிப்பட்டவர்கள் கையில் இருந்துகொண்டிருக்கிறது. இவற்றை மாற்றி தனிப்பட்டவர்களின் கையில் இருக்கும் இந்தத் துறையை சமூக உடைமையாக்கிக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகத்தான் இந்த வெட்டுப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறேன். இந்தத் துறையில் இந்த ராஜ்ய அரசாங்கம் இப்போதுதான் அடியெடுத்து வைத்திருக்கிறது. இவ்விதம் அடியெடுத்துவைத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர முன் நோக்கிச் செல்ல தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வகையில் சென்னை நகரிலும் கன்னியாகுமரி பகுதியிலும் பஸ் போக்குவரத்து அரசாங்க உடைமையாக்கப்பட்டிருந்த போதிலும் மாகாணம் முழுவதிலும் பல ஆயிரக்கணக்கான

பஸ் போக்குவரத்துக்கள் தனிப்பட்டவர்களின் கையில் இருந்து வருகிறது. இவ்விதம் தனிப்பட்டவர்களின் கையில் இருப்பதினால் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் சமூகத்திற்கு நஷ்டமாகிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு பொதுவாக இருக்கின்ற பணம் முழுவதும் ஒரு சிலரின் கையில் போய் குவிந்துகொண்டிருக்கிறது. இவ்விதமான ஒரு நிலைமையின் கீழ் நாம் போய்க்கொண்டிருப்போமானால் நம் நாடு சோஷலிஸத்தை நோக்கிச் செல்ல முடியாது என்பதை நினைவுறுத்த விரும்புகிறேன். இவ்வாறு சோஷலிஸ் லட்சியத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் கூட ஆங்கிலேயன் காலத்தில் ரயில் போக்குவரத்து அரசாங்க உடைமையாக்கப்பட்டது. அதன் மூலமாக இன்று பல கோடிக்கணக்கான ரூபாய் மக்கள் நிர்வாகச் செலவுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறு மக்களுக்காக வந்துசேருகிறது என்பதைப் பார்க்கும்போது, இது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இதிலுள்ள அவசியத்தைப் பார்த்தால் இந்த ரோடு போக்குவரத்தை இந்த ராஜ்ய சமூக உடைமையாக்குவது எவ்வளவு அவசியமானது என்பது புலனாகும். ஆகவே நம்முடைய ராஜ்ய சர்க்கார் விரைவில்—விரைவில் என்று சொல்லும்போது உடனடியாக என்று குறிப்பிடும்பொழுதும் பல ஆண்டுகள் ஆகிறது. அவ்விதமில்லாமல் உடனடியாக இதைச் செய்யவேண்டும். உடனடியாகச் செய்யவேண்டும் என்று சொல்லும்போது இவ்வளவு காலத்திற்குள் செய்வோம் என்று குறிக்கவேண்டும். அதிலும் உடனடியாக பஸ், லாரிப் போக்குவரத்து நடத்துவதில் பல கோடிக்கணக்கான ரூபாய் சமூகத்திற்கு வந்து சேருவதற்கு பல ஏற்பாடுகள் செய்ய முடியும் என்பதை சொல்லிக்கொள்ளுகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

பற்றாக்குறை பட்ஜெட்டை நாம் தயாரித்திருக்கிறோம். இன்னும் எத்தனையோ துறைகளில் மக்களின் நலனிற்காக பல பணிகளைச் செய்ய நாம் விரும்புகிறோம். இவ்வளவிற்கும் பணம் வேண்டும். பணம் இல்லை என்று சொல்கிறோம். புதிய வரிகள் போடுவதைப்பற்றி ஆலோசிக்கிறோம். புதிய வரிகளைப் போட்டு அதன் மூலம் மக்களுக்குத் தொல்லை அளிப்பதைக் காட்டிலும் இத்தகைய வருவாய் ஊற்றுக்களை எடுத்துக் கொள்ள அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை ஏன் நாம் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இதில் கட்சிப் பிணக்குகள் உண்டா என்று பார்த்தால் அத்தகைய பிணக்குகள் ஒன்றும் கிடையாது. ஒருகால் ஆளும் கட்சியில் உள்ள ஒரு சிலர் இதை எதிர்க்கக் கூடுமா என்று எனக்குத் தெரியாது. அப்படி எதிர்ப்பவர்கள் இருந்தாலும் கூட அவர்கள் தனி மரங்களாக இருப்பார்களே தவிர அவர்களுக்குப் பின் மக்கள் இருக்க மாட்டார்கள். எதிர்க்கட்சிகளைப் பொறுத்தமட்டில் நான் நம்புகிறேன். எதிர்க்கட்சிகள் அனைத்தும் இந்த ஒரு விஷயத்தில் இணக்கமான, ஒரு ஒற்றுமையான கொள்கையை உடைத்ததாக இருக்கின்றன. ஆகவே இந்த ஒத்துழைப்பை ஏற்றுக்கொண்டு இந்த ராஜ்ய அரசாங்கம் உடனடியாகப் பஸ் போக்குவரத்தை சமூக உடைமையாக்க முன்வர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். சமூக உடைமையாக்க வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அரசாங்க முதலாளித்வத்தை நான் விரும்பவில்லை. தனி முதலாளித்வத்தை விட அரசாங்க முதலாளித்துவம் அதிக தீங்கைத்தான் விளைவிக்கும். இந்த ரோடு போக்குவரத்தின்கீழ் உள்ள, பஸ், லாரிகள் எல்லாம் அந்தந்த ஜில்லாவில் உள்ள மக்கள் நிர்வாகக் குழுவின் கையில் ஒப்படைக்கபடவேண்டும். அதில் மக்கள் பிரதிநிதிகள் இருப்பார்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் இருப்பார்கள், அரசாங்கப் பிரதிநிதிகள் இருப்பார்கள். அவர்கள் அதை நிர்வகித்து அதன் லாபத்தை அரசாங்கத்தினிடம் கொடுத்துவரக் கூடியவர்களாக இருக்கவேண்டும். இம்மாதிரி முறையைக் கொண்டுவருவதற்குரிய வழிவகைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.



மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இவ்வாறு ரோடு போக்குவரத்தை சமூக உடைமையாக்கும் விஷயத்தில் தனிப்பட்டவர்கள் கையிலிருந்து அதைப் பறித்து எடுத்துக்கொண்டால் மட்டும் போதாது. அவ்வாறு சமூக உடைமையாக்கும்போது அந்தத் தொழிலின் திறமை காப்பாற்றப்பட வேண்டும். அந்தத் திறமை அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு திறமை அதிகரிக்கப்பட்டால்தான் அதன் மூலம் ஏற்படுகிற வருவாயை அதிகரிப்பதற்கு வகை காணமுடியும். - தனிப்பட்டவர்களிடம் இந்த பஸ் போக்குவரத்து இருக்கும்போது என்ன லாபம் கிடைக்கிறதோ அந்த லாபம் அரசாங்கம் ஏற்று நடத்தினால் கிடைப்பதில்லை என்று ஒரு குறை காணப்படுகிறது. உதாரணமாக சென்னை நகரப் போக்குவரத்தில் 401 பஸ்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் சேர்த்து 1957–58-ல் 5 லட்சம் ரூபாய்தான் நிகர லாபம் இறுதியில் கிடைக்கும் என்று உத்தேசமாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த சபையில்கூட பஸ் முதலாளிகள் இருக்கிறார்கள். இப்படி இவ்வளவு பஸ்களுக்கு நிகர வருமானம் 5 லட்சம் ரூபாய்தான் வரும் என்றால் எந்த முதலாளியாவது அதை ஒத்துக் கொள்ள முன்வருவாரா ? பம்பாய் நகரத்தை பொறுத்த வரையில் பஸ் போக்குவரத்து முழுவதையும் பம்பாயில் கார்ப்பரேஷன் எடுத்து நடத்துகிறது. அங்கு 416 பஸ்கள் ஓடுகின்றன. அந்த 416 பஸ்ஸிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம், சகல செலவுகளும் போக, 36 லட்சம் இறுதியாகக் கிடைப்பதாக அவர்கள் மதிப்பீடுக் கணக்குகள் சொல்கிறது. ஆனால் இங்கு 5 லட்சமாகக் குறைவானேன் என்று சர்க்கார் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. இப்பொழுது பஸ்களின் ரூட்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. பஸ் ஓடுகிற மைலேஜும் அதிகரிப்பட்டிருக்கிறது. பஸ் பிரயாணிகளும் அதிகரிக்க ஏது இருக்கிறது, என்று சொல்லப்படுகிறது. நயா பைசா ரூபத்தில் கட்டண வசூல் இருப்பதினால் அதிலும் வேறு அதிகமான தொகை வர இருக்கிறது. இவ்வளவு இருந்தும் கூட 5 லட்சம் ரூபாய்தான் இறுதியாக நிகர லாபம் கிடைக்கும் என்ற முறையில் கணக்கிட்டு இருப்பார்களேயானால் அது குறைவு அல்லவா ? இது எந்த இடத்தில் எப்படி நேர்ந்தது என்பதை விசாரித்து கண்டு பிடிக்க வேண்டாமா ? என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடத்துகிற தொழில்களின் திறமையை அதிகரித்து அது ஒரு சரியான எடுத்துக் காட்டாக விளங்க வேண்டாமா ? இந்தக் கணக்குகள் அரசாங்கத் தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்றால், அரசாங்கத்தின் மேற்பார்வையில் இயங்கும் தொழிற்சாலைகளின் கணக்குகளை தனிப்பட்ட தணிக்கையாளர்களைக் கொண்டு, அரசாங்கத்துடன் சம்பந்தப்படாத பிரத்யேக தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்படவேண்டும். அப்படிச் செய்தால், இப்பொழுது தணிக்கையாளர்கள் எந்த அளவுக்கு விஷயத்தைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்களோ, அதை விட அதிகப்படியான விஷயத்தை நாம் தெரிந்துகொள்ள முடியும் என்று நான் ஊகிக்கிறேன். ஆகவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, இப்பொழுது அரசாங்கத்திலிருந்து பெரிய பஸ்கள் விடப்படுகின்றன. அதில் ஒரே கண்டக்டரை வைத்துக்கொண்டு இருப்பது அவர்களுக்கு உபத்திவரமாய் இருக்கிறது. இரண்டு கண்டக்டர்கள் இருந்தால்தான் ரொம்ப திறமையாக அந்த வேலையைச் செய்ய முடியும். ஒரே கண்டக்டர் இருக்கிற காரணத்தினால் ஒரு சமயம் அவர்களை அறியாமல் கூட கட்டணம் வசூலிக்க முடியாமல் போகிற நிலை ஏற்பட்டுவிடும் என்று அஞ்சுகிறேன். ஆகவே பெரிய பஸ்களில் இரண்டு கண்டக்டர்களைப் போட ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆக, ரோடு போக்குவரத்தை சமூக உடைமையாக்க வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்தியும், அவ்வாறு சமூக உடைமையாக்கப்படும்போது தொழில் திறமையை அதிகரிப்பதற்கு சரியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்திக்கொண்டும் நான் எனது வெட்டுப் பிரேரணையை செய்கிறேன்.

12-17 p.m. Sri T. S. RAMASWAMY PILLAI : உதவி சபாநாயகர் அவர்களே, நான் எனது வெட்டுப் பிரேரணையை பிரேரித்துக் கொண்டு ஒரு சில வார்த்தைகள் சொல்லலாமென்று நினைக்கிறேன். நான் டிரான்ஸ்போர்ட் தொழிலாளிகளுடன் நெருங்கிப் பழகக் கூடியவன். கன்னியாகுமரி ஜில்லா சென்னையுடன் இணைந்ததற்குப் பின்னர் பல புதிய விஷயங்களை தொழிலாளர்கள் சார்பிலும், புதிதாக தேசீய மயமாக்கப்பட்ட டிரான்ஸ்போர்ட் இலாகாவிலிருந்தும் பல புதிய விஷயங்களை அறிந்தேன். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் தொழில் சங்க இயக்கத்தில் சிறந்த அனுபவம் பெற்றவர் என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். அவர்கள் உணர்வார்கள், இப்பொழுது கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களின் நிலை என்ன என்பதை. அவர்களுக்கு அது தெரியும், கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரையிலே இங்கு நம்முடைய ராஜ்யத்தில் மட்டுமல்ல, இந்தியா தேசத்தில் வைத்தே அதிக அனுபவம் பெற்ற தொழிலாளிகள் அங்குதான் இருக்கிறார்கள் என்பதை. தேசீய மயமாக்கப்பட்ட இத்தொழிலிலே அதிக அனுபவம் பெற்றவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஏறக்குறைய 20 வருஷங்களுக்கு முன்பு இத்தொழில் அங்கு தேசீய மயமாக்கப்பட்டது. திருவிதாங்கூரில் இருக்கும்போது. அங்குள்ள நிலைமைக்கும் இங்குள்ள நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. கன்னியாகுமரி ஜில்லா சென்னையோடு சேர்ந்த பிறகு அங்குள்ள தொழிலாளர்கள் படும் அவஸ்தையையும் பற்றி நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்களுடைய பே ஸ்கேல்ஸ் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர்கள் திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்துடன் இருந்தபோது தங்கள் சம்பளம் போதாது என்று போராடினார்கள். 1954-ல் ஒரு விசாரணை கமிஷனை ஏற்படுத்தி அந்த கமிஷன் அரசாங்கத்திடம் அதன் ரிப்போர்ட்டை சமர்பித்த பின்தான் சென்னையுடன் கன்னியாகுமரி ஜில்லா இணைந்தது. மொழிவாரி மாகாணம் ஏற்பட்டவுடன் அந்தக் கமிஷன் சிபார்சு பிரகாரம் கேரள சர்க்கார் தொழிலாளர்களுக்கு சலுகைகள் வழங்கி இருக்கிறது. உதாரணமாக சொல்கிறேன், அங்கு டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்டில் உள்ள ஒரு கண்டக்டருக்கு 40 முதல் 100 ரூபாய் வரையுள்ள ஸ்கேல் கிடைக்கிறது. ஆனால் இங்கு நான் அறிகிறேன், கண்டக்டர்களுக்குள்ள ஸ்கேல் 30 முதல் 50 வரையாகும். அதே போல் டிரைவர்களுக்கு அங்கு 50 முதல் 120 வரையாகும். ஆனால் இங்கு நான் அறிகிறேன், 40 முதல் 60 வரையாகும். இங்குள்ளதை விட இரண்டு மடங்கு அதிகமாக அங்கேயிருக்கிறது. அதேபோன்று அங்குள்ள தொழிலாளர்களின் சம்பளத்தையும் இங்குள்ள தொழிலாளர்களின் சம்பளத்தையும் எடுத்துப் பார்த்தால் இங்கு அவர்களுக்கு கிடைக்கும் சம்பளம் மிக மிக குறைவாய் இருக்கிறது. ஆகவே, இங்குள்ள டிரான்ஸ்போர்ட் தொழிலாளிகளுக்கு சம்பளத்தை எவ்வளவு தூரம் உயர்த்த முடியுமோ அவ்வளவு தூரம் உயர்த்த வேண்டுமென்று வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இங்கு இருக்கிறார்கள். சென்னையில் வாழ்க்கை நிலை, விலைவாசிகள் மிகவும் உயர்ந்திருக்கிறது. ஆகையால் அவர்களுடைய நிலை நிச்சயமாக உயர்த்தப்படவேண்டும். சில நண்பர்கள் கூறினார்கள். நமது மதிப்பிற்குறிய அமைச்சர்கூடக் கூறினார்கள் "ஸ்ரீதனம்" என்று. அந்த ஸ்ரீதனத்தைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நான் அதைப் பற்றி முன்னாலேயே குறிப்பிட்டேன். இப்போது இன்னும் சில விஷயங்களையும் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீதனத்தைப்பொறுத்த வரையில் என் குற்றசாட்டெல்லாம் சென்னை அரசாங்கத்தின் மீது தான். ஏறக்குறைய 70 சத விகிதம் தமிழர்கள் இருக்கக் கூடிய தேவிகுளம், பீர்மேட்டையும் நாம் அடையாவிட்டாலும், மொழிவழி மாகாண கமிஷன் ரிப்போர்ட்படி செங்கோட்டை முழுதும் சென்னைக்குச் சேரவேண்டுமென்று சொன்ன பிறகு அதை அடையாவிட்டாலும், பத்பநாபபுரம் கொட்டாரம் விஷயத்தில் சரியாக பங்கு போடாவிட்டாலும்கூட, பஸ்களை எடுத்துக் கொள்வதிலே நிச்சயமாகத் தவறி விட்டது சென்னை அரசாங்கம் தன் பங்கைக் கேட்க



என்று குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. இப்போது இங்கு கொடுக்கப்பட்ட பஸ்களெல்லாம் ஒரு வியப்பாக இருக்கும். அந்த பஸ்களிலே, இன்று அமைச்சர் காலையில் பதிலளிக்கும் போது சொன்னார் 36 பஸ்கள் உதவாக்கரையென்று. அங்கு கொடுக்கப்பட்ட பஸ்களிலே கே-1 முதல் கே-37 வரையில் விலையில்லாமல் கொடுக்கப்பட்டது. 39, 40, 41 எல்லாம் ஏறக்குறைய 40 பஸ்கள் விலையில்லாமல் கொடுக்கப்பட்டன. விலையற்று வாங்கிய அந்த பஸ்களும் இப்போது ஓடுகின்றன. அந்த பஸ்களும் அங்கு பணம் சம்பாதித்துக் கொடுக்கின்றன என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கு இருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நல்ல ஸ்டாண்டர்ட் இருக்கிறது. குறைந்த பட்சம் ஸ்கூல் பைனல் பரீட்சை தேறியிருக்கவில்லையென்றால் அங்கு இடம் கிடையாது. கண்டக்டர்களாக பி.ஏ., பி.எல்., எம்.ஏ., பி.எல்., போன்ற லா கிராஜுவேட்டுகளெல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் டிஸ்ட்ரிக்ட் ஆபீஸராக வருவது உண்டு. அந்த அளவில் இங்கேயும் கொண்டு வந்தால் நலமாக இருக்குமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். இவ்வளவு தூரம் கொடுத்ததன் பின்னரும்கூட அங்கு இலாபத்தை காண்கிறோம். இங்கு பார்க்கும் போது, எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல, இலாபத்தைக் காணவில்லையென்பதை எல்லா கட்சிகளும் பார்க்க வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் பம்பாயை சுட்டிக் காட்டினார்கள். திருவாங்கூர்-கொச்சியில் 300 பஸ்கள் இருந்தபோது இதைவிட இலாபம் இருந்தது; அதிலும் தேசீய மயமாக்க வேண்டுமென்ற கொள்கையை ஒத்துக்கொண்டிருக்கிற நாம், நிர்வாகம் சரியல்லவென்றால் நமது லட்சியத்தை அது வெகுவாக பாதிக்கும். இதை நிச்சயமாகப் பார்க்கவேண்டும். நன்றாகப் பரிசீலனை செய்து ஓட்டைகள் எங்கு இருக்கின்றன என்று பார்த்து அவைகளையெல்லாம் சீர் செய்து நமது இலாபத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கூறுகிறேன். இது மிகவும் அத்யாச்சரியமாயிருக்கிறது. அங்கு அதிகச் சம்பளம் கொடுக்கும் போதே அதிக இலாபம் கிடைக்கிறது. இங்கு அதிக பாஸஞ்ஜர்கள் இருக்கிறார்கள். பீக் ஹவரில் நெருக்கடி இருக்கிறது. இப்படி இருக்கும்போதும் இலாபம் குறைவாகவிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. இதையெல்லாம் விசாரணை செய்ய ஒரு கமிட்டி போட்டால் கூட உபயோகமாகவிருக்கும். இவ்வளவு குறைந்த சம்பளம் கொடுத்து, இவ்வளவு குறைந்த இலாபம் அடைவது வியப்பாக இருக்கிறது.

அங்குள்ள நிலைமையைப் பார்க்கும்போது அங்கு நல்ல அனுபவப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இங்கு இருக்கக் கூடிய டிக்கெட் ஸிஸ்டம் நிச்சயமாக பல ஊழல்களுக்கு இடம் கொடுக்கிறது என்று கூறுகிறார்கள். அங்குள்ள தொழிலாளர்கள் கூறுகிறார்கள், ஒரு அணா டிக்கட் எடுத்துக் கொண்டு 3½ அணா அல்லது 4 அணா தூரம் ஒருவர் போகக்கூடும் சென்னை ஏற்பாட்டின்படி என்று. இது போலவே இன்னும் எத்தனை எத்தனையோ. உதாரணமாக கன்னியாகுமரி ஜில்லா இங்கு சேர்ந்த பிறகு கண்காணிப்பதற்காக ஜீப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஜீப்புகள் எதற்கென்றால் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டிலே ஏதாவது திருட்டோ அல்லது செக்கிங்கிக்காகவோ உபயோகிக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்று வெபன் கேரியர் என்றும் மற்றொன்று ஜீப் என்றும் பெயர். அந்த இரண்டு வண்டிகளுக்கும், 1956 நவம்பரில் ஒன்றுக்கு 102 காலனும், மற்றொன்னுக்கு 76 காலனும் செலவாயிருக்கிறது. டிஸம்பரில் வெபன் காரியருக்கு 89 காலனும் மற்றொன்றுக்கு 69 காலனும் ஆகியிருக்கிறது. 1957-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் வெபன் காரியருக்கு 124 காலனும் மற்றொன்றுக்கு 82 காலனும் செலவாகியிருக்கிறது. மார்ச் மாதத்தில் வெபன் காரியருக்கு 130 காலனும் மற்றொன்றுக்கு 108 காலனும் ஆகியிருக்கிறது. 200 காலன் 300 காலன் என்று இதற்கு செலவழிக்கப்படுகிறது. அங்குள்ள மேலதிகாரிகள் தங்கள் குடும்பத்தை அழைத்துக்கொண்டு திருவனந்தபுரத்திற்கும், மற்றுமுள்ள பிராஜெக்ட்களையும் பார்ப்பதற்காகவும் இவைகளை உபயோகப்படுத்தினால், நமது தேசீயமயமாக்கும் கொள்கை எப்படி வெற்றியாகும் என்று கேட்க

ஆசைப்படுகிறேன். அங்கு இருந்த நிலையைப் பற்றி நான் பெருமையுடன்
கூறிக்கொள்வேன். அங்குள்ள செக்கிங் இன்ஸ்பெக்டர்களுக்கு கொடுக்கக்
கூடிய சம்பளம் 150 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை. அஸிஸ்டெண்ட்
இன்ஸ்பெக்டர்களுக்கு கொடுக்கக்கூடிய சம்பளம் 80 ரூபாய் முதல் 150
ரூபாய் வரையில். அதிகப்படியான சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையைப்
பார்த்துப் பெருமை கொள்கிறேன். அதனுல் அவர்கள் திருட்டுத்தனம்
கள்ளத்தனம் எதுவும் ஏற்படாமல் பார்க்கிருர்கள். இங்கு இருக்கக்கூடிய
செக்கிங் இன்ஸ்பெக்டருடைய ஸ்கேல் மிகவும் பரிதாபகரமானது, 35
ரூபாய் முதல் 55 ரூபாய் வரை. டிரைவரைவிட கேவலமான ஒரு நிலை.

அந்த நிலைமைக்கு இங்கு ஆகவேண்டுமென்று கூறுகிறேன். உதாரண
மாக, நான் பெருமைப் பட்டுச் சொல்கிறேன். அங்கு கல்வி உயர்ந்த
நிலையில் இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் பெருமைப்படுகிற அளவு உயர்ந்த
நிலையில் இருக்கிறது. இன்னும் பல விஷயங்களில் உயர்ந்திருக்கிறது. சில
நண்பர்கள் ஏன் இங்கு வந்தீர்கள், அங்கு போவது தானே என்று
கேட்கலாம். நாங்கள் நன்ருக உணர்ந்துதான் வந்திருக்கிருேம்.
இங்குள்ள நிலையை நன்ருக தெரிந்துதான் வந்திருக்கிருேம். இவ்வள
வெல்லாம் இருந்தும் எங்கள் தமிழ் நாட்டுக்கு வர வேண்டுமென்று
தான் வந்தோம். வந்ததன் பின்னர் அங்கிருக்கும் நிலையை பெற்ருக
வேண்டுமென்று கருதுகிருேம். அங்குள்ள நிலைமையை, மாற்ருந்தாயிடம்
கிடைத்து வந்ததை விட கீழ் நோக்கி விட வேண்டாமென்று பிரார்த்தித்துக்
கொள்கிறேன். 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதி இருந்ததற்குக்
குறைவு இல்லாது இருந்தால் கோடிப் புண்ணியம் செய்தவர்கள் ஆவார்கள்
என்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அது போலவேதான் அங்குள்ள தொழிலாளர்களுடைய நிலைமை.
நிர்வாக ஊழல்கள் பலயிருக்கின்றன என்று சொன்ஞர்கள். இவைகளை
சரிக்கட்டிஞல் இந்த வருஷத்திலேயே நல்ல முறையிலே நமது வருமா
னத்தை அதிகரித்திருக்கக் கூடும். அங்கு கன்னியாகுமரி ஜில்லாவைப்
பொறுத்த வரையில் நாகர்கோவில்-திருநெல்வேலி ரூட் அதிக வருமானம்
வரக்கூடியது. அதை தனிப்பட்டவர்களிடம் விட்டு விட்டு கன்னியா
குமரி-நாகர்கோவில் ரூட்டை வைத்திருப்பதால் என்ன ஆதாயம் இருக்கிறது.
அதை நாம் எடுப்பதாக இருந்தால் ஒரு யூனிட்டாக வைக்க முடி
யும். ரூபாய் 20 லட்சம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்ஞர்கள். நமது மந்திரி
அவர்கள் அங்குள்ள நிலைமையைப் பார்க்க வந்தார்கள். நேரில் பார்த்து
உண்மையை அறிந்தார்கள். நாங்களும் அங்குள்ள நிலைமையைப் பற்றி
கூறிஞேம். கன்னியாகுமரி ஜில்லாவிலும் இதர ஜில்லாக்களிலும்
அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் நல்லுறவு இருந்தது.

ஒருவருக்கொருவர் தோளோடு தோள் உரசிக்கொண்டு இருக்கிருர்கள்.
முக்கியமாக உத்தியோகஸ்தர்களும் தொழிலாளர்களும் ஒற்றுமையாக இருக்
கிருர்கள். அவர்கள் தோளோடு தோள் சேர்ந்து வேலை செய்வதைப்
பார்த்தால் அது பெருமையாக இருக்கும். அப்படி அல்லவா இருக்க
வேண்டும் என்று தோன்றும். ஆனுல் இங்கு அப்படி இல்லை. அங்கு
பெரிய அதிகாரிகளும் இன்ஸ்பெக்டர்களும், கண்டக்டர்களும், டிரைவர்
களும் ஒன்ருக நின்று வேலை செய்வதைப் பார்த்தால் பெருமையாக
இருக்கும். ஆனுல் இங்கு மோசமாக இருக்கிறது என்பதை வருத்தத்
துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட மோசமான நிலைமை
அங்கு இருந்தால் அவர்கள் அதை அனுமதிக்க மாட்டார்கள். நிச்சயமாக
மாக அங்கே இருந்து படித்தவர்கள் அதாவது பி.ஏ., எம்.ஏ., பட்டம்
பெற்றவர்கள் இங்கு வந்தால் இங்கு இருப்பதைப்போல் அவர்கள் இருக்க
விரும்ப மாட்டார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தால் கூட இங்குள்ள
நிலைமைக்கு உட்பட மாட்டார்கள். அவ்வளவு மோசமான நிலைமையில்
இங்கு நிர்வாகம் நடைபெற்று வருகிறது. இங்குள்ள " ட்ரான்ஸ்போர்ட் "
இலாகாவிற்கு அங்கிருந்து வந்தவர்கள் இப்படிப்பட்ட குறைகளைச்





சொன்ஞர்கள். அங்கிருந்து வந்தவர்கள் இங்கே மிருகத்தை போல் மதிக்கப்
படுகிருர்கள் என்றும் சொல்லுகிருர்கள். மற்றும் இங்குள்ள " அட்
மினிஸ்ட்ரேஷன் " அதாவது நிர்வாகம் " டாப் ஹெவி "-யாக இருக்கிறது
என்றும் சொல்லுகிருர்கள். அதிகாரிகளுக்கு அதிகப்படியாக ஆயிரக்
கணக்காக சம்பளம் கொடுக்கிருர்கள். ஆனுல் தொழிலாளர்களுக்கு அவர்
களுடைய உழைப்புக்குத் தக்கபடி சம்பளம் கொடுக்கவில்லை என்று சொல்
லுகிருர்கள். அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமாஞல்
பயப்படுகிருர்கள். ஏனென்ருல் கனம் கோபால் ரெட்டி ட்ரான்ஸ்போர்ட்
மந்திரியாக இருந்த காலத்தில் அடக்குமுறை பிரயோகித்ததால் அவர்கள்
பயப்படுகிருர்கள் என்றும் சொல்லுகிருர்கள். இந்த முறையை சீக்கிரத்
தில் இந்த அரசாங்கம் மாற்றி அமைக்க வேண்டும். எவ்வளவு அதிகப்
படியான பஸ்களை விட வேண்டுமோ அவ்வளவு அதிகமாக பஸ்களை விடு
வதற்கு முன் வரவேண்டும். மற்றும் பஸ் போக்குவரத்தை தேசீய மய
மாக்குவதை எவ்வளவு துரிதமாக்க வேண்டுமோ அவ்வளவு துரிதமாக்கப்
பட வேண்டும். இதன் மூலம் வருமானத்தை அதிகப்படுத்த வேண்டும்.
டி.வி.எஸ். கம்பெனி எவ்வளவு அழகாக போக்குவரத்தை நடத்துகிருர்
கள். அதைப் போலவே ஏன் நாமும் நடத்தக் கூடாது என்று கேட்கி
றேன். நமக்கு அப்படி நடத்துவதற்கு திறமை இல்லையா, வசதி
இல்லையா ? சௌகரியங்கள் இல்லையா ? இது விஷயத்தில் எவ்வளவு கவனம்
செலுத்த வேண்டுமோ அவ்வளவு கவனம் செலுத்த வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது அவ்வளவு கவனம் செலுத்தப்பட
வில்லை என்று தான் தோன்றுகிறது. அதற்கு என்று ஒரு தனி கமிஷனை
நியமித்தாலும் நியமித்து அதற்கு அதிகப்படியான கவனம் செலுத்த
வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஹைதராபாத்தில் எவ்வளவு
அழகாக நடத்துகிருர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். பம்பாயிலும் எவ்
வளவோ அழகாக நடத்துகிருர்கள். அவ்வளவு தூரம் நம்முடைய
" ட்ரான்ஸ்போர்ட் " இலாகாவும் முன்னுக்கு வரவேண்டும். அப்படி முன்
னுக்கு வர முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஹைதரா
பாத்தில் மற்ற எந்த இடத்திலும் இல்லாத அளவில் அதிகபடியாக சம்
பள ஸ்கேல் இருக்கிறது. நிர்வாகம் ரயிலுடன் தொடர்பு இருந்ததால்
அப்படி சம்பள விகிதம் இருக்கிறது. அதைப் போலவே நாம் ஏன்
சம்பளம் கொடுக்கக் கூடாது ? ஆந்திரப்பிரிவினைக்கு முன்னதாக ஹைதரா
பாத் பிரதேசத்தில் நடத்தப்பட்ட பஸ் போக்குவரத்து எவ்வளவோ நல்ல
முறையில் நடைபெற்று வந்தது என்பதை மிகவும் கனிவுடன் தெரிவித்
துக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: I would like to know on what basis the hon. Member is making this statement. The Minister in charge of Transport there has asked for the services of somebody here so that he may advise the Transport Department on how to run their bus services efficiently. He knows the position and he has been a Minister here in charge of the Transport Department. Having gone there, he wants some advice from us. That being the case, I do not know on what basis the hon. Member is making that charge.

Sri T. S. RAMASWAMY PILLAI: மதிப்பிற்குரிய மந்திரி அவர்களுக்கு
நான் நன்றி செலுத்துகிறேன். நான் சொல்லும்போது பொறுப்பு இல்லா
மல் சொல்ல மாட்டேன். 1947–48-ல் அங்குள்ள சம்பள ஸ்கேலைப் பற்றி
எனக்கு நன்ருகத் தெரியும். அங்குள்ள ரயில்வேயுடன் தொடர்பு இருந்த
போது அங்குள்ள சம்பள ஸ்கேலைப்பற்றி எனக்கு நன்ருகத் தெரியும்.

(The Hon. Sri C. Subramaniam rose.)

Sri T. S. RAMASWAMY PILLAI: I am not yielding, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM : Pay-scale is not the criterion.

SRI T. S. RAMASWAMY PILLAI : சம்பள ஸ்கேல் மட்டும் அல்ல. அங்குள்ள தொழில் நிர்வாகம் ரொம்பவும் நன்ருக நடந்தது. இங்குள்ள "ட்ரான்ஸ்போர்ட்" இலாகாவுக்குக் கூட பெரிய அதிகாரி அங்கிருந்து தான் வந்தார் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே போலத் தான் அங்கிருந்து இங்கேயுள்ளவர்களை சந்தேகம் கேட்க வந்திருப்பார்கள் என்பதை சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். அந்தப் பிரதேசத்தில் சம்பளம், அதிகமாக இருக்கிறது என்பதை நான் ஆணையிட்டுச் சொல்ல முடியும். உண்மைகள் வேண்டுமாளுலும் கொடுக்க முடியும். இங்குள்ள நிலைமைக்கும் அங்குள்ள நிலைமைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் எதாகிலும் இங்குள்ளவர்களைக் கேட்டால் நிச்சயமாக சம்பளத்தைப்பற்றி கேட்டிருக்க மாட்டார்கள். ஆகவே 20 அல்லது 25 ஓட்டை ஓடசல் பஸ்களை எடுத்துவிட்டு கூடிய சீக்கிரத்தில் புதிய பஸ்களை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இங்குள்ள நிர்வாகத்தைப் போல் வேறு எந்த ராஜ்யத்திலும் இல்லை என்பதை சொல்லிக் கொண்டு எங்களுடைய ராஜ்யத்திற்கு இன்னும் அதிகப்படியான பஸ்களைக் கொடுப்பதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

12-35 p.m. SRI N. R. THIYAGARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழகத்தில் தெற்கு புறக்கணிக்கப் படுகிறது வடக்கு வாழ்கிறது அந்த முறையில் அரசாங்கம் வேலை செய்கிறது என்று பத்து வருஷங்களாக கூறிக்கொண்டு வந்தவன் நான். எங்கள் நாடான பாண்டிய நாட்டில் பஸ் போக்குவரத்து முற்றிலும் மிகவும் நன்ருக நடைபெறுகிறது. அதைப் பற்றி சந்தோஷத்துடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஐந்தாறு மாதங்களுக்கு முன்னதாக பஸ் சம்பந்தமான ஒரு சினிமாப் படத்தைப் பார்த்தேன். அந்தப் படத்தில் ஒரு பஸ் வெகு அழகாக வளைந்து ஓடிக்கொண்டிருந்தது. அதற்குள் ஒரு கதை அற்புதமாக நடைபெற்றது. அதைப் பார்த்தபோது இதைப்போன்று நம் பாண்டிய நாட்டில் தவிர வேறு எங்கும் இப்படி நடைபெற முடியாது என்று நினைத்தேன். ஆனுல் இப்படிப்பட்ட பஸ் போக்குவரத்து மதுரையிலும், ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களிலும் தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதிலும் எங்கள் பகுதியில் தான் பஸ் போக்குவரத்து வெகு அற்புதமாக நடந்துகொண்டு இருக்கிறது. இந்தியாவிலேயே எந்தப் பகுதியில் நல்ல பஸ் போக்குவரத்து நடைபெற்று வருகிறது என்று கேட்டால் அது எங்கள் பகுதியாகிய பாண்டிய நாட்டில் தான் என்று சொல்லலாம். பொதுக் கூட்டங்களில் பேசும்போதெல்லாம் நாங்கள் ஒன்று சொல்வது வழக்கம். அதாவது ஒரு நாடு முன்னேற்றமடைத்திருக்கிறது என்பதற்கு அடையாளம் அங்கே நல்ல ரோடுகள் இருக்க வேண்டும், ரோடு மாத்திரம் அல்ல அங்கே ஓடிக்கொண்டிருக்கக்கூடிய பஸ்கள் எல்லாம் ஓட்டை ஓடசல் இல்லாமல் பழைய பஸ்களாக இல்லாமல் இருக்க வேண்டும் என்பது. நாடு முன்னேற்ற மடைந்திருக்கிறது என்பதற்கு இது ஒன்று போதும் என்று நாங்கள் சொல்லிக்கொண்டு வருவது உண்டு. இதைப்போன்றுதான் நல்ல ரோடு கள் நல்ல பஸ்கள் எங்கள் பகுதியில் இருக்கின்றன. மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்கு ரயில் போட வேண்டும் என்று ஒரு தூது கோஷ்டி டில்லிக்குச் சென்றது. அதில் நானும் ஒருவனுகச் சென்றேன். அப்படிச் சென்று நாங்கள் அங்கு ரயிலைக் கொண்டு வந்து விட்டோம். ரயில் வந் தாலும் அங்கு ஓடிக்கொண்டிருக்கிற பஸ்களைப் பார்த்தால் பஸ்களில் பிரா யாணம் செய்தால் நல்லது என்று தான் தோன்றுகிறது. நானும், ரயில் வந்தாலும்பஸ்களில் தான் பிரயாணம் செய்கிறேன். எனென்ருல் அவ் வளவு நன்ருக பஸ்கள் வேலை செய்கின்றன. இதற்கு முன்பு பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் அங்கே 15 பேர் 20 பேர் கொண்ட பஸ்கள் ஓடிக் கொண்டிருந்தன. அவைகள் எல்லாம் திறந்து கிடக்கும். அப்பொழு துள்ள பஸ்களில் பிராயணம் செய்வது ரொம்பவும் கஷ்டமாக இருக்கும்.



மதுரை வந்தவுடன் சட்டை வேஷ்டிகளை மாற்றி கட்டிக்கொள்ளும்படியாக இருக்கும். அந்த நிலைமை இப்பொழுது மாறி துரிதமாக சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒழுங்காக நல்ல முறையில் நடை பெற்று வருகின்றன. அதைப்போலவே சென்னை ராஜ்யத்திலும் நடை பெற வேண்டும் என்பது என்னுடைய அவா. மற்றும் எல்லா இடங்களி லும் அப்படி நடைபெற வேண்டும். சோழ நாட்டில் பழைய பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கவில்லை. கொங்கு நாட்டிலும் நல்ல பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. பல்லவ நாட்டில் பஸ்கள் படு மோசமாக இருக் கிறது. நான் பார்த்த மட்டில் பத்து அல்லது பதினைந்து வருஷங்களுக்கு முந்தையமாடல் பஸ்கள் லொட லொட என்று ஓடிக்கொண்டிருக்கிறது. அதனுல் பல்லவ நாட்டுப் பகுதியில் பஸ்களை சீர்திருத்தியாக வேண்டும். அதற்கு ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது, புதிய பஸ்கள் பர்மிட் புதுப்பிக்க வரும்போது அதாவது, மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை பர்மிட் வாங்க வரும்போது, பழைய பஸ்களாக இருந்தால் அதற்கு பர்மிட் கொடுக்க முடியாது என்று நோட்டீஸ் கொடுத்து விட வேண்டும். நல்ல முறையில் பஸ்கள் இருக்க வேண்டும் என்றும் சொல்ல வேண்டும். அதன் பிறகுதான் பஸ் பர்மிட் கொடுக்க முடியும் என்று நிர்ணயம் செய்ய வேண்டும்.

THE HON. SRI R. VENKATARAMAN : பல்லவ நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்ருல் ஒன்றும் புரியவில்லை. ஜில்லாக்களின் பெயரைச் சொன்னுல் நன்ருக இருக்கும். அதனுல் ஜில்லாக்களின் பெயரைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI N. R. THIYAGARAJAN : சரித்திரத்தில் உள்ள பெயரைத்தான் சொல்லுகிறேன். சரித்திரத்தில் இல்லாத நாடுகளைப் பற்றியெல்லாம் மற்ற வர்கள் தவருகக் கூறும் பொழுது பாண்டிய நாட்டிற்கு தலை நகரான மதுரையிலிருந்து வந்த நான் என் கூறக்கூடாது. அங்கு பெரிய அரண் மனையும், கோவிலும், கொத்தளங்களும் இருக்கின்றன. அந்த நாட்டி லிருந்து நான் வந்தவனுனபடியால் அதன் பெருமையைப்பற்றி சொல்லிக் கொள்ளுகிறேன். அப்படி கூறித்தான் ஆக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே புதிய பஸ்களுக்கு பர்மிட் வாங்க வரும்போது 1950-ம் வருஷத் திற்கு முன் இருந்த மாடலாக இருந்தால் அந்த பஸ்களுக்கு பர்மிட் கொடுக்கக் கூடாது, இருக்கும் பர்மிட்டுகளையும் ரத்து செய்து விட வேண்டும். அப்படி நோட்டீஸ் கொடுத்து விட்டால் நன்ருக இருக்கும். இந்த விதத் தில் பஸ் போக்குவரத்தை சீர்திருத்தம் செய்ய வேண்டும். மலைப்பகுதி யிலுள்ள ரோடுகள் பாராமரிக்கப்படாமலிருக்கிறது. உதாரணமாக எனது தொகுதி கடமலைக்குண்டு. அது வைகை உற்பத்தியாகும் இடம். பத்து வருஷங்களுக்கு முன்னதாக அங்கு ஜனங்கள் வாழ்ந்தது இல்லை. இப் பொழுது அங்கு ரோடு வசதிகள் ஏற்பட்டு விட்டபடியால் ஜனங்கள் வசித்து வருகிருர்கள். அங்கு பஸ் சர்வீஸ் அமைத்துக்கொடுக்க வேண்டும். அப்படி பஸ் சர்வீஸ் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று மனுக்கள் போட் டார்கள். அவைகள் கவனிக்கபடவே இல்லை. கவனிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி பல கிராமங்கள் இருக்கின்றன. நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்த காலத்தில் எழுமலை மங்கல்ரேவு 14 மைலுக்கு ரோடு வசதி போட்டுக் கொடுக்கப்பட்டது. அங்கெல்லாம் இன் னும் பஸ் சர்வீஸ் ஆரம்பிக்கப்படவில்லை. சுமார் 30 அல்லது 40 மைல் தூரம் கூட எனது தொகுதி மக்கள் நடந்து செல்கிருர்கள். அங்கெல்லாம் பஸ் சர்வீஸ் நடத்தாமல் இருந்து கொண்டிருக்கிருர்கள். அங்கெல் லாம் சீக்கிரமாக பஸ் போக்கு வரத்து அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், பஸ் போக்குவரத்து சிறப் பாக இருக்கிறது என்று கூறலாம். ட்ராம் வண்டிகள் எடுக்கப்பட்ட பிறகும் பஸ் போக்கு வரத்தைக்கொண்டே ஜன நெரிசலைச் சமாளிக்க முடியுமா என்று சந்தேகப்பட்டவர்களில் நானும் ஒருவன். இருந்தாலும், பஸ்

[Sri N. R. Thiyagarajan] [24th July 1957

போக்குவரத்து செவ்வையாக ஜனநெரிசலைச் சமாளித்து வந்ததன் காரணமாக, ட்ராம் வண்டிகள் ஓடிக்கொண்டிருந்தன என்ற எண்ணமே மக்களுடைய மனதிலிருந்து அகன்று விடக்கூடிய நிலையில், பஸ் போக்குவரத்து துரிதமாக முன்னேறியிருக்கிறது.

பஸ் போக்குவரத்தைத் தேசீய மயமாக்கிவிட வேண்டும் என்று நண்பர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் கூறினார்கள். அப்படிக் கோரியவர்களில் நானும் ஒருவன். பெரும் கூச்சலிட்டு, ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் நானும் ஒருவன். ஆனால், சர்க்கார் சென்னை நகரத்திலுள்ள பஸ் போக்குவரத்தை தேசீய மயமாக்கியதற்கு பின், நான் அவைகளில் பல முறை பிரயாணம் செய்த அனுபவத்தை வைத்துக்கொண்டு பார்க்கும் போது, தேசீய மயமாக்குவதற்கு இந்த நாடு தகுதியாகி விட்டதா என்று யோசிக்க வேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது. எங்கள் ஊரிலிருந்து லாரி முதலாளிகளும் பஸ் முதலாளிகளும் சென்னைக்கு வந்து மூர் மார்கெட்டில் சுற்றிக் கொண்டிருப்பார்கள். "என்ன காரணமாக நீங்கள் இப்படி மூர் மார்க்கெட்டில் சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள் ?" என்று கேட்டால், "சென்னை கவர்ன்மெண்ட் ட்ரான்ஸ் போர்ட் இலாகாவிலிருந்து பஸ்ஸினுடைய சில பாகங்கள் திருட்டுத்தனமாக மூர் மார்க்கெட்டில் டில் கொண்டு வந்து சிலர் விற்பதாகக் கேள்விப்படுகிறோம். அவைகளை வாங்குவதற்காகக் காத்திருக்கிறோம்", என்று சொல்கிறார்கள். அப்படி வாங்கிக் கொண்டும் சிலர் போயிருக்கிறார்கள். சென்னை நகரத்திலேயே இத்தகைய நிலை இருக்கும்போது எல்லா இடங்களிலும் தேசீய மயமாக்குவதில் லாபம் இருக்கிறதா என்று யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். பம்பாய் கார்ப்பரேஷனுக்கு 30 லட்சம் ரூபாய் லாபம் வந்ததே, சென்னையில் 5 லட்சம் ரூபாய்தானே லாபம் வந்திருக்கிறது என்று ஒரு அங்கத்தினர் கேட்டார். இப்படி சம்பவம் நடந்து கொண்டிருந்தால் ஏன் லாபம் குறையாது என்று நான் கேட்கின்றேன்.

ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக கள்ள டிக்கட்டு அச்சடித்து புழங்கிக் கொண்டிருந்தது, குற்றம் செய்தவர் கண்டுபிடிக்கப்பட்டு அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு, அதற்காக பிரமாதமாக வேலை நிறுத்தம் செய்தார்கள். சில கட்சித் தலைவர்கள் தங்களுக்கு சாதகமாக பயன் படுத்திக் கொண்டார்கள். அதையெல்லாம் அரசாங்கம் கவனித்துப் பார்த்து, இத்தகைய விஷயங்களுக்கு கொஞ்சங்கூட இடம் தராத முறையில், பஸ் போக்குவரத்தை நன்றாகச் சீர்திருத்த வேண்டும். திருட்டுத் தனமாக காரியங்கள் செய்பவர்களைத் தண்டிக்கும் விஷயத்தில் எத்தனை கட்சித் தலைவர்கள் எதிர்த்தாலுங்கூட, சர்க்கார் பின்வாங்கக் கூடாது. நாங்கள் பக்கபலமாக இருக்கிறோம்—அத்தகையவர்கள் மீது சர்க்கார் பலமான நடவடிக்கைகள் எடுத்து, அவர்களை நீக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பஸ் போக்குவரத்துக்கு வேண்டிய புதிய ரூட்டுகள் திறக்கப்படவேண்டும். புதிய பஸ்கள் கொடுத்தால்தான் ஜன நெரிசலைப் போக்க முடியும். பெரியார் ப்ராஜெக்ட் பத்து கோடி ரூபாய்ச் செலவில் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஏற்கெனவே எத்தனை பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தனவோ அத்தனை பஸ்கள்தான் இப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கின்றன. அங்கே அதிக பஸ்கள் விடவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேபோல், வைகைப் பகுதியில் அணைக்கட்டு வேலை நடக்கிறது. அங்கு ஒன்றிரண்டு பஸ்கள்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஜன நெரிசலை அவைகளினால் சமாளிக்க முடியாமலிருக்கின்றன. அங்கும் அதிகமான பஸ்கள் விடப்படவேண்டும்.

ஹரிஜன இலாகா மான்யத்தின் மீது நண்பர் திரு. அண்ணாதுரை அவர்கள் பேசியபோது, "மதுரை ஜில்லாவில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு பஸ்களில் ஹரிஜனங்களை ஏற்றிச் செல்வதற்கு திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் அனுமதித்தார்கள்" என்று கூறினார்கள். 1943-ம் வருஷத்திலிருந்து 1946-ம் வருஷம் வரை அவர் ஜில்லா போர்டு தலைவராக இருந்தார். 1949-ம் வருஷத்திலிருந்து 1953-ம் வருஷம் வரையில் நான் தலைவராக இருந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில், வேறு எங்கு வேண்டுமானாலும் ஜாதி வித்தியாசம் இருக்கலாம்; ஆனால், பஸ் போக்குவரத்தில் ஜாதி வித்தியாசம் இருந்தது என்று என்னுடைய 31 வருஷ அரசியல் வாழ்விலே எனக்குத் தெரியவே தெரியாது. அப்படி இருந்ததே இல்லை.



24th July 1957] [Sri N. R. Thiyagarajan]

"பஸ்ஸிலே ஹரிஜனங்களை அனுமதித்தால்தான் பஸ் பர்மிட் கொடுப்போம்" என்று ஜில்லா போர்டு தலைவர் திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் கூறினார்கள், அவர்தான் ஹரிஜனங்களை பஸ்களிலே அனுமதித்தார்கள் என்று கூறப்பட்டது. சென்ற 20 ஆண்டு காலத்தில் ஜில்லா போர்டு பஸ் பர்மிட் கொடுக்கும் வழக்கம் கிடையாது. ஜில்லா போர்டு பஸ் பர்மிட் கொடுக்கும் காரணத்தால்தான் நாங்கள் ஏதோ பஸ்களில் ஹரிஜனங்களை ஏற்றிச் செல்ல அனுமதித்தோம் என்று கூறியது ஒரு பெரிய அறிஞர் என்ற பட்டம் பெற்றிருந்தும் அறியாமல் கூறிய சிற்றுரை ஆகும் என்று வருத்தத்துடன் கூறிக்கொள்ளுகின்றேன்.

(Sri A. Govindasamy rose.)

DEPUTY SPEAKER : The hon. Member is not yielding.

**Sri N. R. THIAGARAJAN :** கலைஞர், கவிஞர்களாக இருப்பவர்கள் ஒருவேளை கற்பனைக் கதையாகச் சொல்லலாம் என்றாலும், அறிஞராக இருப்பவர் ஆராய்ந்து பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மான்யக் கோரிக்கையை நான் ஆதரித்து என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகின்றேன். 12-44 p.m.

**Sri G. ANNAMALAI MUTHURAJA :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அந்தனல்லூர் தொகுதியில், திருச்சி டவுனிலிருந்து சோமரசன் பேட்டை வரைக்கும் இரண்டு பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அங்கு போக்குவரத்து மிக நெரிசலாக இருக்கிறது. ஏராளமான ஜனங்கள் பிரயாணம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வழியில் நிறைய கிராமங்கள் இருக்கின்றன. ஜனத்தொகை அதிகமாக உள்ள இடம். அந்தப் பாதையில் இரண்டு பஸ்கள் மட்டும் ஓடுவதால் பொதுஜனங்கள் பஸ்ஸில் ஏறவேண்டுமென்றால், அடிபிடியும், சண்டை சச்சரவும் செய்ய வேண்டியிருப்பதோடு, திருட்டுக்களும், ஜேப்படித் திருடுகளும் (பிக்-பாக்கெட்டுகள்) அதிகமாக இருக்கின்றன. இந்தப் பாதையில் மேலும் இரண்டு பஸ்கள் ஓடுவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சோமரசன்பேட்டையிலிருந்து (தோகைமலை வரைக்கும்) 15 மைல் தூரமுள்ள ரோடு புதிதாகப் போட்டு சர்க்காரால் நல்ல முறையிலே சீர்திருத்தம் செய்யப்பட்ட நல்ல ரோடுகள் இருக்கின்றன. ஆனால், அந்த ரோட்டிலே எந்தவிதமான பஸ் போக்குவரத்தும் கிடையாது. ஆகையால், அந்தப் புதிய ரோட்டில் இரண்டு பஸ்கள் ஓடுவதற்கான பர்மிட் கொடுத்தால் சர்க்காருக்கும் வருமானம் வரும், பொதுஜனங்களுக்கும் சௌகரியமாய் இருக்கும்.

சோமரசன்பேட்டையிலிருந்து வயலூர் வரையில் உள்ள பாதையில் நிறைய கிராமங்கள் இருக்கின்றன. வயலூர் ஒரு விசேஷமான முருகன் ஸ்தலம். அங்கு ஏராளமான ஜனங்கள் போய் வருகிறார்கள். குழுமணி, எட்டுமாந்திடல் போன்ற அனேக கிராமங்கள் இருக்கின்றன. அந்த ரோடு பத்து மைல் நீளம் இருக்கிறது. அந்தக் கிராமங்களிலெல்லாம் விவசாயிகள் அதிகமாக வசிக்கிறார்கள். பஸ் போக்குவரத்து இல்லாததால் விவசாயிகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போக முடியாமல் இருப்பதுடன் சாமான்களைக் கொண்டுவருவதற்கும் இடையூறாக இருக்கிறது.

[Sri G. Annamalai Muthuraja] [24th July 1957

அந்தப் பாதையில் பஸ்கள் விடுவதற்குப் புது பர்மிட் கொடுத்து, பஸ் போக்குவரத்து ஏற்படச் செய்தால் அதனால் பொதுஜனங்களுக்கு சௌகரியம் கிடைக்கும். அதைக் கூடியசீக்கிரம் செய்து கொடுக்கும்படி அரசாங்கத்தை ரொம்பத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

**Sri M. SELVARAJ :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபைமுன் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக, அரசாங்கம் சென்னை நகரத்தைத் தவிர இதர எல்லாப் பகுதிகளிலும் உள்ள பஸ் போக்குவரத்தை தேசீய உடைமையாக்குவதில் தாமதம் காட்டிக்கொண்டு வருகிறார்கள். இதனுடைய காரணம் எனக்கு விளங்கவில்லை. முக்கியமாகப் பார்க்கும்போது, ஆளும் கட்சியில் பெரிய பெரிய பஸ் முதலாளிகளும் பெரிய பெரிய மிராசுதார்களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், பஸ் போக்குவரத்தை தேசீய உடைமையாக்குவதில் அரசாங்கம் கொஞ்சம் பின்னோக்கம் கொண்டதாக இருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன். குறிப்பாக, இந்தக் காரணங்களினால்தான் தேசீய உடைமை ஆக்குவதிலே அரசாங்கம் தாமதித்துக் கொண்டுவருகிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

தேசீய உடமை ஆக்குவதில் சில கஷ்டங்களையும், நிர்வாகத்தில் சில குறைகளையும் நாம் பார்க்கின்றோம். ஆனால், அந்தக் குறைகளை எந்த முறையில் களையவேண்டும் என்பதில் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறிப்பாக நமக்குக் கொடுத்திருக்கும் பட்ஜெட் விவரத்தின்படி, 1955–56-ஆம் ஆண்டில் 401 பஸ்களை ஓட்டியதில் 38 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதே பஸ்கள் சொந்த முதலாளிகளின் கையில் இருக்குமானால் அதிகப்படியாக 15 முதல் 20 லட்சம் ரூபாய் வரையில் வரவு அதிகரித்துக் காட்ட முடியும். இந்தக் குறைவுக்குக் காரணம் திறமைக் கோளாறு என்று இந்த நேரத்தில் கூற ஆசைப்படுகிறேன். இம்மாதிரி நிர்வாகத்தை எடுத்து நடத்தும்போது, அந்தத் துறையில் முக்கியஸ்தர்களை அதில் கௌரவ டைரக்டராகப் போடவேண்டும். முக்கியமாக, தென் பகுதியிலே டி.வி.எஸ். அண்டு சன்ஸ் கம்பெனியாரும், ஜி. டி. நாயுடு போன்றவர்களும் இந்தத் துறையில் மிக்க ஆர்வம் காட்டி, அதிலுள்ள சிக்கல்களைப் போக்கி, நல்ல முறையிலே பஸ் ட்ரான்ஸ்போர்ட் நடத்தி வருகிறார்கள். இவர்களைப் போன்றவர்கள் அட்வைசரி கமிட்டியில் அங்கம் வகிக்கச் செய்து, அவர்கள் கூறுகிற யோசனையைப் பார்த்து, பஸ் போக்குவரத்தை நடத்துவார்களானால் இப்பொழுது கிடைத்திருக்கக்கூடிய லாபத்தை அதிகரிக்க முடியும். அப்படிச் செய்தால்தான் பஸ் ட்ரான்ஸ்போர்ட்டில் உள்ள குறைகளைத் தீர்க்க முடியும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நமது சென்னை நகரில் ஓடக்கூடிய பஸ்களில் 1942-வது, 1944-வது மாடல் பஸ்களும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இதுவே சொந்த முதலாளிகள் (**Private owners**) நடத்தக்கூடியதாக இருந்தால், அந்தப் பஸ்களை ஓட்டக்கூடாது என்று **Condemn** செய்துவிடுவார்கள். **Condemn** செய்த பஸ்களை ஓட்டக்கூடாதென்று சட்டம் கொண்டுவந்து அவைகளை நிறுத்திவிட்டார்கள். ஆனால், சென்னை அரசாங்கம் அந்தப் பழைய மாடல் பஸ்களை இன்னும் ஓட்டிக்கொண்டு, அதனால் வருமானம் பெறக்கூடிய நிலைமையைப் பார்க்கும்போது, கன்யாகுமரியில் ஓடிக்கொண்டிருக்கும் அந்த முறையிலே நமது அரசாங்கம் சென்னை நகரிலும் ஓட்டிக்கொண்டிருப்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்பேர்ப்பட்ட பஸ்களையும் இன்னும் அரசாங்கம் **Condemn** செய்யாமல் வைத்துக்கொண்டிருப்பது ஆச்சரியப்படக்கூடிய விஷயமாக இருக்கிறது. நமக்கு ஒரு சட்டம், பிறருக்கு ஒரு சட்டம் என்ற முறையில் இருக்கிறது என்றும் இந்த நேரத்துல் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



24th July 1957] [Sri M. Selvaraj]

அரசாங்கம் வாங்கும் பஸ்களெல்லாம் ஒரேவிதமான மாடல் உள்ள பஸ்களாக வாங்குவது நல்லது. இப்பொழுது **Leyland** பஸ்கள் வாங்குகிறோம். அந்த மாடல் பஸ்களுக்கு வேண்டிய மெக்கானிக்குகளும், உபகரணங்களும் நமது மாகாணத்தில் இல்லை. இதற்காக நாம் வெளிநாட்டை நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. அந்த பஸ்களை ரிப்பேர் செய்ய வேண்டுமானால், இங்கிருந்து ஆட்களை வெளிநாட்டுக்கு அனுப்பி, அவர்கள் அங்கு பயிற்சிபெற்று, வேலையைக் கற்றுக்கொண்டு இங்கு வந்தபிறகு, அவர்களைக்கொண்டு இந்த பஸ்களை ரிப்பேர் செய்யவேண்டுமென்று சொன்னால், அதனால் அதிகமான செலவு உண்டாகிறது. கால. தாமதமும் ஏற்படுகிறது. ஆகவே, ஒரேமாதிரியான மாடல் உள்ள பஸ்களை நாம் வாங்கவேண்டும். அப்படி ஒரேமாதிரியான பஸ்களை வாங்குவதோடு கூட, இந்தியாவிலேயே ஸ்பேர் பார்ட்டுகள் சுலபமாகக் கிடைக்கக்கூடிய மாடல்களாகவும், இங்குள்ள மெக்கானிக்குகள் அவைகளைப் பழுதுபார்க்கக் கூடியவைகளாகவும் இருக்கவேண்டும். ஏனென்றால் இந்தியாவில் மிகத் திறமையான மெக்கானிக்குகள் இருக்கின்றார்கள். இப்படிச் செய்தால், போக்குவரத்து இலாகாவை நிர்வகிப்பதில் நாம் சிக்கனத்தைக் கையாளமுடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், சென்னை நகரில் ஓடும் பஸ்கள் அனேக சமயங்களில் சுத்தமாக இல்லை. மழை காலங்களில், பஸ்களில் உட்காரும் இடங்களில் மழைத் தண்ணீராக இருக்கிறது. இந்தக் குறைகளை பிரயாணிகள் எடுத்துச்சொன்னால், பஸ் கண்டக்டர்களுக்கும் பிரயாணிகளுக்கும் இடையே சச்சரவு ஏற்படுகிறது. பஸ்கள் சுத்தமாக இருக்கும் படியும், அவைகளுக்குள் மழை காலங்களில் தண்ணீர் வராதபடியும் கவனிக்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பஸ் இலாகாவில் வருஷத்தில் ஒரு தடவை மரியாதை வாரம் கொண்டாடுகிறார்கள். ஆனால், மரியாதை வாரம் பேச்சளவில்தான் இருக்கிறதேயொழிய, பஸ் கண்டக்டர்களும் டிரைவர்களும், பிரயாணிகளிடம் மரியாதையாக நடந்துகொள்ளவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பஸ் ரூட்டுகளுக்கு அனுமதிகள் கொடுப்பதைப் பொறுத்த வரையிலும், முன்பே நிறைய அனுமதிகள் கொடுக்கப்பட்டவர் களுக்குத்தான் அனுமதிகள் மறுபடியும் கொடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக, சில பஸ் முதலாளிகள் 20—30 ரூட்டுகளில் பஸ் விடுவதற்கு அனுமதி வைத்திருக்கிறார்கள். நாம் சோஷலிஸ பாணி சமுதாயத்தை அமைக்க விரும்பும்போது, இப்படிச் செய்வது கூடாது. ஆகவே, ஒவ்வொரு முதலாளிக்கும் இரண்டு-மூன்று ரூட்டுகளுக்கு மேல் அனுமதிகள் இல்லாதபடி "ப்ளீட்"களைப் பிரித்துக்கொடுக்க வேண்டும். மேலும், பஸ்களை தேசீய உடமையாக்குவதில் தாமதமேற்பட்டாலும், சில ஜில்லா போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் பஸ் தொழிலை நடத்துவதற்கு ரூட்டுகளுக்கு அனுமதிகளை இப்போது வழங்கினால், அந்த ஸ்தல-ஸ்தாபனத்தினர் அந்தத் தொழிலை நடத்தி ஆதாயம் அடைந்து, அந்த வட்டாரங்களிலுள்ள மக்களுக்கு நன்மை செய்வார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

லாரிகளைப் பொறுத்த வரையிலும் சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. லாரிகளுக்கு "ஆன் லோட்-வெய்ட்" அனுமதிப்பதில் சென்னை நகரத்திற்கும் மற்ற ஜில்லாக்களுக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது. சில குறிப்பிட்ட லாரிகளுக்கு மற்ற ஜில்லாக்களில் 18,000 பவுண்டுகள் அனுமதிக்கப்பட்டால், அதே லாரிகளுக்கு சென்னையில் 19,800 பவுண்டுகள் அனுமதிக்கிறார்கள். ஆகவே, கிட்டத்தட்ட 2,000 பவுண்டுகள் வித்தியாசமாக இருக்கிறது. இதன் காரணமாக, லாரிக்காரர்கள் சென்னையிலிருந்து மற்ற இடங்களுக்குச் சென்றால், அங்கே 2,000 பவுண்டுகள் குறைவாக சுமையை ஏற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால், லாரிச் சொந்தக்காரர்களுக்கு பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இந்த அசௌகரியத்தை நீக்குவதற்கு ஏற்றவகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், லாரிகள் சென்னையிலிருந்து ஆந்திர ராஜ்யப் பிரதேசத்திற்கும் மைசூர் ராஜ்யப் பிரதேசத்திற்கும் போகும்போது, ஆந்திராவில் ஆறில் ஒரு பங்கு அதிகமாக வரி கட்டினால் "பெர்மிட்" வழங்கி விடுகிறார்கள்; ஆனால் மைசூரில் இரண்டு பங்கு வரி வாங்குகிறார்கள். ஆந்திர ராஜ்யத்தில் பின்பற்றும் முறையே மைசூரிலும் பின்பற்றப்படுவதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டும். இதற்காக நமது அரசாங்கத்தார் மைசூர் அரசாங்கத்தாருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிடி"-கள் ஜில்லாவாரியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முன்பு அதில் ஜில்லா போர்டு பிரசிடெண்ட், ஜில்லா போலீஸ் சூப்பரின்டென்டென்டு, ஜில்லாக் கலெக்டர் முதலியவர்கள் மெம்பர்களாக இருக்கிறார்கள். இப்போது அதில் ஜில்லாக் கலெக்டரையும் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீஸரையும் மட்டும் வைத்துக்கொண்டு மற்றவர்களை நீக்கிவிட்டார்கள். இந்த முறையை மாற்ற வேண்டும். அவர்கள் மட்டுமே இருப்பதால், இப்போது அவர்கள் ஏதேச்சாதிகாரிகளாக இருக்கிறார்கள். அதில், எம்.எல்.ஏ.-க்களும், எம்.எல்.சி-க்களும், ஜில்லா போர்டு தலைவரும் அங்கம் வகித்தால், போக்குவரத்துகள் நல்ல முறையில் நடப்பதற்கும், பஸ் ரூட்டுகளுக்கான பெர்மிட்டுகள் தகுந்த விகிதாசாரத்தில் அவரவர்களுக்கு வழங்கப்படுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், விழுப்புரம் தாலுகாவில் இப்போது மதுரப்பாக்கத்திலிருந்து மாம்பலப்பட்டி வரையில் பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. அதை அன்னியூர் வரையிலும் விஸ்தரிக்க வேண்டும். அப்படிச் செய்தால் அங்குள்ள ஏராளமான மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். அன்னியூர் கிராமத்தில் ஏராளமான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விழுப்புரத்திற்கும் மற்ற இடங்களுக்கும் வருவதில் தாமதம் ஏற்படுகிறது. இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்காகவும் தகுந்த புதிய பஸ் ரூட்டுகளுக்கு அனுமதி அளித்தால் ஏராளமான பொதுமக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னை நகரில் ஓடும் ஆட்டோ-ரிக்ஷாக்களைப்பற்றி சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பல ஆட்டோ-ரிக்ஷாக்கள் மீட்டர்கள் இல்லாமல் ஓடுகின்றன. டிரைவர்கள் சொல்லும் மைலேஜைக் கேட்டு அதன்படிதான் பிரயாணம் செய்பவர்கள் கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக, சில சமயங்களில் ஆட்டோ-ரிக்ஷா டிரைவர்களுக்கும் அதில் பிரயாணம் செய்பவர்களுக்கும் இடையில் தகராறு முற்றி அவர்கள் போலீஸுக்குப் போகவேண்டிய நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது. டாக்ஸிகளில் போல, எல்லா ஆட்டோ-ரிக்ஷாக்களிலும் மீட்டர்கள் பொருத்தப்பட்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இவைகளுக்கு வசூலிக்கப்படும் வரியையும் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், லாரிகளுக்கு வசூலிக்கப்படும் வரி விகிதமுறையில் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. பொதுவாக, 15,900-லிருந்து 16,800 பவுண்டுகள் வரை சுமக்கக்கூடிய லாரிகளுக்கு ரூ. 360-ம், 16,800-லிருந்து 20,160 பவுண்டுகள் வரை சுமக்கக்கூடிய லாரிகளுக்கு ரூ. 427-ம், 20,160 பவுண்டுக்குமேல் சுமக்கக்கூடிய லாரிகளுக்கு ரூ. 467-ம் வரியாக விதிக்கப்பட்டிருக்கிறது. சில லாரிகள் உண்மையிலேயே இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ள அளவை விட அதிகம் சுமக்கக்கூடியவையாக இருக்கின்றன. ஆனால், குறைவான சுமையே அனுமதிக்கப்பட்டுள்ளது. அவைகளுக்கு உள்ள சரியான உயர்ந்தபட்ச சுமையை அனுமதித்து வரி விகிதத்தையும் அதிகமாக்கலாம். சரியான உயர்ந்த பட்ச சுமையை அனுமதித்தால் அதிக வரியைக் கொடுப்பதற்கு லாரிச் சொந்தக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள்.





லாரிகளுக்கு தகுந்த உயர்ந்த பட்ச சுமையை அனுமதித்து தகுந்த அதிக வரியையும் விதித்தால், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் அதிகமாக வருவாய் வரும் என்று சொல்லிக்கெள்கிறேன். இதைச் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தாரை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், விபத்துகளைத் தடுப்பதைப் பொறுத்தவரையில், "டிரைவிங்"-க்கு லைசென்ஸ் வழங்குவதற்கு உள்ள இப்போதைய முறையை மாற்ற வேண்டும். நல்ல "டிரைவிங் டெஸ்ட்" வைக்கவேண்டும். குறைந்தது மூன்று அல்லது ஆறு மாதகாலம் அரசாங்கத்தின் மூலம் பயிற்சி பெற்ற பிறகுதான் வண்டியோட்ட வேண்டும் என்று நிர்ணயித்தால், விபத்துக்களைக் குறைக்கலாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**Sri R. CHITHAMBARA BARATHI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த போக்குவரத்து மானியக் கோரிக்கையை ஆதரிக்கும் முகமாக நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சில குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்வதற்கு இப்போதுள்ள 100 அல்லது 150 மைல் பஸ் பாதைகளுக்கு பதிலாக 35 அல்லது 50 மைல் பஸ் பாதைகளுக்கு ஏற்பாடு செய்தால் பிரயாணிகளுக்கு பிரயாண நேரமும் பஸ் கட்டணச் செலவும் குறையும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, மதுரையிலிருந்து ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நரிக்குடி என்ற ஊருக்கு ஒருவர் போக விரும்பினால், அவர் பார்த்திபனூர் வழியாக 58 மைல்கள் சுற்றிக்கொண்டு அங்கே போக வேண்டியிருக்கிறது. ஆனால், அதற்கு பதிலாக, மதுரை வழியாக போகும் ரோடில் இரண்டு மைல்கள் பஸ் பாதை அமைத்தால் 22 மைல்களே பிரயாணம் செய்து அதே இடத்திற்குச் செல்லமுடியும். மேலும், மானாமதுரையிலிருந்து அருப்புக்கோட்டைக்குச் செல்வதற்கு, குறைந்தது 97 மைல்கள் மதுரை வழியாகச் சுற்றிப்போக வேண்டியிருக்கிறது. மானாமதுரைக்கும் அறுப்புக்கோட்டைக்கும் இடையில் பல கிளை ரோடுகள் இருக்கின்றன. அந்த ரோடுகளை தகுந்த முறையில் இணைத்து ஒரு குறுக்குப் பாதையை அமைத்தால் அருப்புக்கோட்டைக்கு மானாமதுரையிலிருந்து 38 மைல்களே பஸ்ஸில் பிரயாணம் செய்து செல்லலாம். இந்த இடங்களில் குறுக்குப் பாதைகளை ஏற்படுத்தலாம் என்பது எனக்குத் தெரிந்திருக்கிறது. இதுபோன்று பல இடங்களில் குறுக்கு பஸ் பாதைகள் அமைக்கக்கூடும். நமது போக்குவரத்து இலாகா அவைகளை ஆராய்ந்தறிந்து அந்த இடங்களில் பஸ் வசதிகளைச் செய்துகொடுத்தால், பஸ்ஸில் பிரயாணம் செய்யும் ஏராளமான பேர்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்; அவர்களுக்கு பிரயாண நேரமும் பிரயாணச் செலவும் குறையும்.

12-57 p.m.

இன்னொரு விஷயத்தையும் போக்குவரத்து இலாகா மிக முக்கியமாக கவனிக்கவேண்டும். அதை என்னுடைய கனம் சக அங்கத்தினர்களும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ராஜ்ய அரசாங்கத்தை நான் ஒரு சமுதாயமாகவே கருதுகிறேன். அப்படி எல்லோரும் கருத வேண்டும் என்று விரும்புகிறேன். சென்னையில் உள்ள அரசாங்க பஸ் போக்குவரத்து இலாகாவைப் பற்றி மக்களின் அபிப்பிராயமும் அரசியல் கட்சிகளின் அபிப்பிராயமும் எவ்விதம் இருக்கிறது என்று பார்த்தால் 'அந்த இலாகா சமுதாயத்தைச் சேர்ந்தது' என்ற அபிப்பிராயம் அவர்களுக்கு இல்லை என்று தெரிகிறது. அந்த உணர்ச்சி அவர்களுக்கு இல்லை. மேலும், அந்த இலாகாவை நிர்வகிக்கும் ஆளும் கட்சி இதர அரசியல் கட்சிகளுக்குப் பிடிக்கவில்லை என்றால், அதற்காக "அரசாங்க பஸ் போக்குவரத்து இலாகாவிற்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, அந்த இலாகாவைப் பற்றி மக்களுக்கு குறைவான அபிப்பிராயம் ஏற்படவேண்டும், அதன் காரணமாக அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகள் நடந்தால் போதும்" என்ற எண்ணத்துடன் அவைகள் செயலாற்றி வருகின்றன. ஹிருதயபூர்வமாக சிந்தித்துப் பார்க்கும்போது, இதை எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். அரசியல் கொள்கைகளில் பல அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும், "அரசாங்க இலாகாக்கள்

சமுதாயத்தைச் சேர்ந்தவை. அவை பொதுவுடைமையானவை. நமது சொத்தின் மீது எடுத்துக்கொள்ளும் அளவு அக்கறையை அவைகள் விஷயத்திலும் எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகளுக்கு எந்தவிதமான கெடுதலையும் நினைக்கக்கூடாது" என்ற எண்ணம் அரசியல் கட்சிகளுக்கும் மக்களுக்கும் ஏற்பட வேண்டும். அந்த எண்ணம் ஏற்பட்டால், வெகு சீக்கிரத்திலேயே சமதர்ம சமுதாயத்தை ஸ்தாபிப்பதற்கு காங்கிரசு சர்க்காருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கும் நாம் உதவியாக இருப்போம்; அது மட்டுமல்லாமல், எல்லோருடைய அபிப்பிராயமும் போன்று, சமதர்ம சமுதாயத்தை வெகு சுலபமாக அமைப்பதற்கு ஹேதுவாக, பல தொழில்களையும் தேசீயமயமாக்க முடியும். அவற்றை எல்லாம் எடுத்துக்கொள்வதற்கு முன்னால் பஸ்களை எடுத்து நடத்துவதற்கு நமக்குச் சக்தி இருக்கிறது. திறமை இருக்கிறது. சுமார் பத்து வருஷத்திற்குள் சென்னை நகர பஸ் சர்விஸ் படிப்படியாக எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இந்த நிலைமையில் சபை அங்கத்தினர்களும் பஸ்களில் பிரயாணம் செய்திருக்கலாம். பொதுமக்களும் பிரயாணம் செய்திருப்பார்கள். அங்கு என்ன நடக்கிறதென்றால், கண்டெக்டர்களும் டிரைவர்களும் பொது மக்களிடத்தில் எவ்வளவுதான் சுமுகமாக பழகவேண்டும் என்று விரும்பினாலும் அவர்களுக்குக் கோபம் உண்டாகும்படியாக சில மக்கள் நடந்து கொள்கிறார்கள். அதனாலே அவர்கள் கோபம் அடைந்து விடுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை சில கட்சிக்காரர்கள் பயன்படுத்திக்கொண்டு "காங்கிரஸ் சர்க்கார் நடக்கிறதடா? டிரைவர் அப்படித்தான் பேசுவான். கண்டெக்டர் இப்படித்தான் நடப்பான்" என்பதாக சர்க்காரையே தாக்கிப் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். காங்கிரஸ் சர்க்கார் கண்டெக்டர் இல்லை. காங்கிரஸ் கட்சி டிரைவர் இல்லை. பொது ஸ்தாபனத்தை, பொதுச் சொத்தை பாதுகாக்க வேண்டியது நம் எல்லோருடைய பொறுப்புதான் என்கிற உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த உணர்ச்சியோடு பொதுமக்கள் பஸ்களில் நடந்து கொள்ள ஆரம்பித்தார்களானால் கண்டெக்டர்களும் சுமுகமாக வேலை செய்வார்கள். அரசியல் கட்சிகளுக்கும் எதிர்ப்பிரசாரம் செய்வதற்கு வாய்ப்பு இருக்காது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பெரிய பஸ்களில்—70 பேர்களுக்கு மேல் அமர்ந்து கொள்ளக் கூடிய இடவசதி உள்ள பஸ்களில் இரண்டு கண்டெக்டர்கள் போடுவது அவசியமாகும். ஐந்து நிமிஷம் அல்லது பத்து நிமிஷத்திற்குள் ஒரு மைல், இரண்டு மைல்களுக்குள் இருக்கும் நான்கைந்து பஸ் ஸ்டாப் நிலையங்களைக் கடக்க வேண்டியதாக இருக்கும். அதற்குள் ஒரு கண்டெக்டர் முப்பது நாற்பது பேர்களிடம் இருந்துதான் கட்டணம் வசூல் செய்ய முடியும். இரண்டு கண்டெக்டர்கள் இருந்தால் சுலபமாக சீக்கிரத்திலேயே டிக்கெட் கொடுத்துவிட முடியும். மேலும் நின்றுகொண்டு பிரயாணம் செய்வதை சென்னை நகர பஸ்களில் அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் இத்தனை பேர்தான் நின்றுகொண்டு பிரயாணம் செய்யலாம் எனக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை. பெருங்கூட்டமாக ஏறி நிற்கிறார்கள். இதனால் ஏறுபவர்களுக்கும் நேரமாகிறது, இறங்குபவர்களுக்கும் நேரமாகிறது. கண்டெக்டரால் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நகர்ந்து டிக்கெட் கொடுக்க முடிவதில்லை. இதனால் பிரயாண நேரமும் அதிகமாகிறது. கண்டெக்டரால் டிக்கெட்டு கொடுத்து காசு வாங்கவும் முடியவில்லை. மக்களால் காசைக் கொடுத்து டிக்கெட் வாங்கிக்கொள்ளவும் முடியவில்லை. ஆகையால் இப்பேர்ப்பட்ட பெரிய பஸ்களுக்கு, 70 பேர்களுக்கு மேல் கபாஸிடி உள்ள பஸ்களுக்கு இரண்டு கண்டெக்டர்களைப் போடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **SRI D. S. ADIMOOLAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தைப்பற்றி திடீரென்று தான் பேசவேண்டும் என்று நினைத்தேன். தாங்களும் தயவு கூர்ந்து எனக்குப் பேச நேரம் அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





பஸ் போக்குவரத்து சம்பந்தமாக எல்லோரும் சர்க்கார் அதை தேசியமாக்கிவிட வேண்டும் என்றுசொன்னார்கள். எதிர்க்கட்சி மெம்பர்களிலும் சில பேர்கள் சொன்னார்கள். நானும் இந்தக் கொள்கையை ஆதரிக்கின்றேன். தேசீயமாக்க வேண்டுமென்றால் ரெவின்யூ அக்கவுண்டில் பணம் இருக்காது. மற்றும் நிர்வாகத் திறமை இருக்குமா என்று சர்க்கார் தயங்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பணம் இல்லை என்று சொன்னால் "இந்த குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக எங்களுக்குச் சில கோடி ரூபாய்கள் வேண்டியிருக்கிறது. ஆகவே நீங்கள் அதைக் கடனாக கொடுத்து உதவவேண்டும்" என்பதாக ஜனங்களிடம் இருந்து கடனாக வாங்கிக்கொண்டு பின்னர் திருப்பிக் கொடுக்கும்படியாக இந்திய சர்க்கார் அனுமதியுடன் வாங்கி, அதைச் செய்வதற்கு அடுத்த வருஷத்திற்குள்ளாவது இந்தச் சர்க்கார் முன்வர வேண்டும். நிர்வாகத் திறமையைப் பற்றிக் கவலை இல்லை. காரணம் நிர்வாகத்தில் மிகவும் திறமை வாய்ந்த, அனுபவசாலியாக இருக்கக்கூடிய ஒருவர்தான் இப்போது இந்த இலாகா மந்திரியாக இருக்கிறார். ஆகவே இவருடைய காலத்திலேயே இது கவனிக்கப்படவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் லாரி விஷயமாக இப்போது ஒரு கொள்கையும் இல்லாத முறையில் ரொம்பவும் தாராளமாகப் பர்மிட்டுகள் வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கிக்கொண்டு போகிறதால் மோட்டார், மோட்டார் சம்பந்தமான பிற கருவிகள் முதலியவற்றை வாங்குவதிலே பல கோடி ரூபாய்கள் அந்நிய நாட்டுக்கு வியர்த்தமாகப் போகிறது. "அந்நிய நாட்டுச் செலாவணி போதுமானதாக இல்லை", என்று ஒவ்வொரு அம்சத்திலும் நமது சர்க்காரும், இந்திய சர்க்காரும் சொல்லிக்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில், லாரி விஷயத்தைக் கொஞ்சம் கவனித்து அத்தியாவசியம் இல்லாத லாரி ஓட்டத்தைக் குறைக்க முன்வந்தாலேயே பல கோடி ரூபாய் அந்நிய நாட்டுக்குப் போவது தடைபடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது இருக்கப்பட்ட லாரிகளில் 50 சதவிகிதம்தான் ஓட வேண்டும். மற்ற பர்மிட்டுகளை எல்லாம் நாளாவட்டத்தில் குறைத்துவிடுவதற்கும் முயற்சி எடுக்கப்படவேண்டும்.

லாரி போக்குவரத்து இவ்வளவு அதிகமாக ஏற்படுவதற்கு முன்னால் கிராமங்களில் உள்ளவர்கள் மாட்டு வண்டிகளை சாதாரணமாக வைத்துக் கொண்டு பிழைப்பு நடத்திவந்தார்கள். கால்நடைகளும் நன்றாகப் பராமரிக்கப்பட்டன. லாரி போக்குவரத்து அதிகமாக ஏற்பட்டபிறகு அவர்களுடைய பிழைப்பு எல்லாம் பாதிக்கப்பட்டுவிட்டன. சிறுசிறு கிராமத்திற்கும் கூட லாரி போகிறது. வண்டிக்காரர்களுக்குப் பிழைப்பு இல்லை. மாடுகளையும் இரட்சிக்க வசதி இல்லை. ரயில் நெருக்கடி இருப்பதனால் ஓரளவு சென்னையில் இருந்து திருநெல்வேலி வரையில் லாரி போக்குவரத்து இருக்கிறது. அவசியம் என்றாலும் சின்னஞ்சிறு கிராமங்களுக்கு எல்லாம் லாரி போவதைத் தடுக்க வேண்டும். லாரி போக்குவரத்து கிராம வாசிகளுக்கு இடஞ்சல் இல்லாத வகையில் இருக்கவேண்டும். வண்டி மாடுகளை வைத்துக் கொண்டிருப்பவர்களின் பிழைப்பு பாதிக்கப்படாத வகையில் இருக்க வேண்டுமென்றால் அதிகமான லாரிகளுக்குப் பர்மிட் கொடுக்கக்கூடாது. இதுவிஷயத்தில் கண்டிப்பான ஒரு கொள்கையை சர்க்கார் வகுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை நகர மோட்டார் சர்விஸைப் பொறுத்த வரையில் இங்கே 400 பஸ்கள் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் இதில் கிட்டத்தட்ட 25 சதவிகிதம் பஸ்கள் ஏதாவது ஒரு காரணத்தால் ஓடாமல் இருக்குமென்று கேள்விதான் படுகிறேன். அது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. அது உண்மையாயின் மிகவும் வருந்தத்தக்க நிலை அது. நமது ராஜ்யத்திலே உள்ள சில தனிப்பட்ட கம்பெனிகளில், நிர்வாகம் நன்றாக நடக்கும் ஸ்தாபனங்களில் மொத்தமுள்ள பஸ்களில் 5 சதவிகிதம் ஓடாமல் இருந்தால் இருக்குமென்று சொல்லப்படுகிறது. இங்கே 25

சதவிகிதம் பஸ்கள் ஓடுவது இல்லை என்றால், ஐடிலாக இருக்கிறதென்றால் "கருப்பெட்டி மிச்சத்தை எரும்பு தின்றுவிடும்" என்பார்களே அதுபோல் நமக்கு இதர பஸ்களால் எத்தனை லாபம் என்றாலும் அதை இவைகள் விழுங்கிவிடும். எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளலாமே தவிர ஜனங்களும் நெரிசலில் பஸ்களில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே கனம் மந்திரி அவர்கள் இவ்விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். டி.வி.எஸ். போன்ற திறமைமிக்க நிர்வாக ஸ்தாபனங்களுடைய அநுபவத்தைக் கேட்டறிய வேண்டும். அவசியமானால் அந்நிய நாட்டு நிபுணர்களை அழைத்து வந்தாவது அவர்களினால் பெறக்கூடிய நன்மைகளைப் பெறவேண்டும். இவ்விஷயத்தில் பணச் செலவு ஏற்படுவதாயிருந்தாலும் தவறு இல்லை. இது விஷயமாக வெள்ளைக்காரர்களைக் கொண்டு வந்து இங்கே உத்தியோகத்தில் நியமிப்பது என்றாலும் பரவாயில்லை. அதனால் பஸ் நிர்வாகம் நல்ல முறையில் அமையும் என்றால் அப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் ஜில்லா போர்டு நிர்வாகத்திலுள்ள ரோடுகள் இப்போது மிகவும் மோசமாக இருக்கின்றன. ஏனென்றால் அந்த ரோடுகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கு வேண்டிய பணம் அவர்களுக்கு சர்க்காரிடமிருந்து கிராண்டாகக் கிடைப்பது இல்லை. அதனால் பல ரோடுகள் மிகவும் மோசமான நிலையில், நாளுக்கு நாள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. பஸ் போக்குவரத்தினால் ஜனங்களுக்கு சௌகர்யம் ஏற்படவேண்டுமென்று சொன்னால் ஜில்லாபோர்டு நிர்வாகத்திலுள்ள மேஜர் ரோடுகளை எல்லாம் நல்ல முறையில் பரிபாலனம் செய்வதற்கும், அவர்களால் பெரிய பாலங்களைக் கட்ட முடியாவிட்டாலும், சிறு சிறு பாலங்களையாவது கட்டுவதற்கும் டிரான்ஸ்போர்ட் இலாகா கூடுமான வரையில் அவர்களுக்கு யோசனைகளைக் கூறி, போதிய கிராண்டு தொகையையும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

1-10 p.m. * **Sri P. U. SHANMUGAM**: சட்ட மன்றத் துணை தலைவர் அவர்களே, போக்கு வரத்து மான்யத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பிரேரணையைப்பற்றிப் பேசும் நண்பர்கள் சிலர் ஆதரித்தும், சிலர் கண்டித்தும் பேசினார்கள். போக்கு வரத்து நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதற்காக நான் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறேன்.

போக்குவரத்துகளில் அளிக்கப்படும் பஸ் பர்மிட்டுகளில் சர்க்கார் "மார்க் ஸிஸ்டம்" என்கிற ஒரு முறையை கொண்டுவந்திருக்கிறார்கள். இது மிகவும் வேடிக்கையாகவே இருக்கிறது.

புதிதாக ஒரு பாதையில் பஸ் போடுவது என்றால், பிரசுரித்து, பஸ் முதலாளிகளுக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்று கேட்கிறார்கள். பஸ் முதலாளிகள் இந்தப் புதிய பாதைக்கு ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். இந்தப் புதுப் பாதையில் பஸ் போவதற்கு ஏற்படுத்தினால், மக்கள் ஏற மாட்டார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அப்படியும் அந்தப் புதுப் பாதையைத் திறந்து விடுவதாக வைத்துக்கொள்வோம். இந்தப் பாதையை போடுவதற்கு ஆட்சேபித்தவர்களே யார் யாரையோ சிபாரிசு பிடித்து இந்தப் பாதையில் பஸ் ஓட்டுவதற்கு மனுப் போடுகிறார்கள். இது மிகவும் வேடிக்கையாகவே இருக்கிறது.

இந்த மார்க் ஸிஸ்டம் உண்மையிலேயே வேடிக்கையாகத்தான் இருக்கிறது. மூன்று பஸ்கள் வைத்திருந்தால் 2 மார்க். ஒர்க்ஷாப் வைத்து நடத்தினால் அதற்கு தனி மார்க். "செக்டார் குவாலிபிகேஷன்" இருந்தால் தனி மார்க்குகள் கொடுக்கிறார்கள். இந்த மார்க் ஸிஸ்டத்திலே இரண்டு ஜில்லா கலெக்டர்கள் ஒருவருக்கொருவர் முரணாக அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கு உதாரணம் காட்டும் சமயத்தில் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை.



குறிப்பிட்ட ஒருவருக்கு செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் பஸ் பர்மிட் கொடுப்பதற்கு எந்த விதமான தகுதியும் கிடையாது என்று சொல்லி விட்டார். ஒரு மாதத்திற்கு பிறகு, அதே நபருக்கு வட ஆற்காடு ஜில்லா கலெக்டர், பஸ் பர்மிட் கொடுப்பதற்கு எல்லா தகுதிகளும் உடையவர் என்று சொல்லி, அவருக்கு பஸ் ரூட்டும் கொடுக்கப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டத்திலே ஒருவருக்கு பஸ் ரூட் கொடுக்க முடியாது, தகுதியில்லை என்று சொன்னவருக்கு, ஒரு மாதத்திற்கு பிறகு, வட ஆற்காடு மாவட்டத்திலே, அதே நபருக்கு பஸ் பர்மிட் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் இந்த மார்க் ஸிஸ்டம் ஊழல் நிறைந்ததுதான் என்று சொல்லத் தேவையில்லை. இந்த மார்க் ஸிஸ்டம், தொழிலுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக இருக்கிறதா அல்லது பஸ் முதலாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்க இருக்கிறதா என்று புரிந்துகொள்ள முடியவில்லை. 10, 12 பஸ்கள் வைத்துக்கொண்டிருக்கிற முதலாளிகளுக்கு இந்த பெர்மிட் கொடுப்பது சர்வ சாதாரணமாகவே இருக்கிறது. சிலர் தங்கள் பேரிலுள்ள பெர்மிட்டுகளை சொந்தக்காரர்கள் பேருக்கு மாற்றிவிட்டு, தாங்கள் புதிதாக பெர்மிட்டுக்கு மனுப் போடுகிறார்கள்.

பாண்டிய நாட்டிலே பஸ்கள் திறமையாக ஓடுகின்றன என்று அங்கத்தினர் ஸ்ரீ தியாகராஜன் பெருமைப்பட்டுக் கொண்டார். அம்மாதிரி பெருமைப் பட்டுக் கொள்ளக் கூடிய நிலையில் என்னுடைய மாவட்டத்தில் பஸ்கள் ஓடவில்லை. என்னுடைய மாவட்டத்திலே ஓடுகின்ற பஸ்கள், பஸ்களா அல்லது லாரிகள் வேறு ரூபத்தில் ஓடுகின்றனவா என்று கேட்கத் தோன்றும். ஆனால் இந்த பஸ்களில் மக்களுக்கு பாதுகாப்பு ஒன்றும் கிடையாது. இந்த பஸ் ஓடுவதை தூரத்திலிருந்து பார்த்தாலே வேடிக்கையாக இருக்கும். அது நடனமாடிக்கொண்டே வரும். எந்த சமயத்தில் எந்த பாகம் பிய்த்துக்கொண்டு போகுமோ என்று சொல்ல முடியாது. இவ்வாறுதான் அங்கு தற்பொழுது ஓடும் பஸ்களின் நிலைமை இருக்கிறது.

இதைவிட சில முக்கியமான சம்பவங்கள் நிகழ்கின்றன. இரண்டு ஊர்களுக்கு மத்தியில் நான்கு ஐந்து மைல் தூரத்திலுள்ள கிராமத்தில் இறங்க வேண்டும் என்றால் இறங்க முடியாது. தானிப்பட்டிக்குப் போகும் பஸ்ஸில், நான்கு ஐந்து மைல் தொலைவிலுள்ள கிராமங்களுக்கு செல்ல வேண்டுமானால் இடம் கிடைப்பதில்லை. பஸ் முதலாளிகள் முன் கூட்டியே அந்த பஸ்ஸுக்குத் தேவையான 40 டிக்கட்டுகளை கிழித்துவிடுகிறார்கள். இடையில் நாலு மைல் தூரத்தில் உள்ள கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் டிக்கட் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். சிறுவாக்கம் கிராமத்திற்குச் செல்ல கட்டணம் நாலணாதான். அந்த ஊருக்குச் செல்ல வேண்டுமென்றாலும் தானிப்பட்டிக்குக் கொடுக்க வேண்டிய கட்டணம் 14 அணா கொடுக்கவேண்டும். இன்னும் இம்மாதிரியே நடந்துக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி ஜில்லா கலெக்டரிடம் நான் புகார் செய்தேன். அதைப்பற்றி அவர் கவனிப்பதாகச் சொன்னாரே தவிர இதுவரையில் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த பஸ் போக்குவரத்தை சர்க்கார் தேசியமாக்கினால் இந்தச் சிக்கல்களுக்கு இடமிருக்காது என்று கருதுகிறேன். ஆகையால் இந்த பஸ்களை சர்க்கார் எடுத்து நடத்தவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி சர்க்கார் எடுத்து நடத்த முடியவில்லை என்றால் டி.வி.எஸ். கம்பெனியிடமாவது கொடுத்தால் நல்லமுறையில் நடத்துவார்கள் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR**: சட்டமன்றத் துணைத் 1-15 p.m.
தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல முன்வருகிறேன்.

இந்த பஸ் பர்மிட் கொடுப்பதைப் பற்றி பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். இப்பொழுது கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஷண்முகம் அவர்களும் விரிவாக சொன்னார்கள். ஒரு பஸ்பர்மிட் வேண்டும் என்று கேட்டால், சுமார்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [24th July 1957

ஆறு மாதம், அல்லது ஒரு வருஷம் டைம் ஆகிறது. அது முடிந்தால் அதற்கு அப்பீல் வேறு இருக்கிறது. இதை எல்லாம் பார்த்தால், பஸ் ரூட் பர்மிட் வாங்க வேண்டும் என்பதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுகின்றது. இந்த "புரொசீஜரை சிம்பிளிபை" செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இந்த பஸ் பர்மிட்களைக் கொடுப்பதில் பல தூஷணைகளும் அவதூறுகளும் வந்துகொண்டே இருக்கின்றன. ஹோம் டிபார்ட்மெண்டில் மார்க் ஸிஸ்டம் என்று ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். அந்த மார்க் ஸிஸ்டம் சரிவர நடப்பதில்லை என்பதை ஒவ்வொரு ஜில்லா "ஆர்.டி.ஏ." வும் மற்ற அமைச்சர்களும் நன்றாக யோசித்துப்பார்க்க வேண்டும். யார் யார் சிபாரிசு பிடித்துக் கொண்டுவருகிறார்களோ அவர்களுக்குத்தான் இந்த பர்மிட்டுகள் கிடைக்கின்றன. இந்த மார்க் ஸிஸ்டத்தை சரிவர நடத்தி அதன் பிரகாரம் எந்த கலெக்டரும் பர்மிட் கொடுத்ததே கிடையாது. இதன் காரணமாகத்தான் கோர்ட்டில் அனேக ரிட் பெடிஷன்கள் நடந்திருக்கின்றன. ஹைக்கோர்ட் ஜட்ஜுகள் நன்றாகப்படித்தவர்கள். ஆகையால் நிறைய "ஸ்டிரக்சர்ஸ்" **(strictures)** பாஸ் பண்ணியிருக்கிறார்கள்.

அதே மாதிரிதான் வேரியேஷன் ஆப் பஸ் ரூட்ஸ் என்ற முறையும். செங்கல்பட்டிலிருந்து திருவண்ணாமலைக்குப் போக வேண்டுமென்று கேட்டால், சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்குப்போக ரூட் கொடுக்கப்படுகிறது.

செங்கல்பட்டிலிருந்து சென்னைக்கு ஒரு பஸ் 15 அல்லது 16 தடவை போய் வரும். அதை திருவண்ணாமலைக்குப் போகும்படி ரூட் கொடுத்தால் டிரிப் குறைந்து ஜனங்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த வேரியேஷன் என்பதைக் கொடுக்கக்கூடாது என்று நான் வற்புறுத்தி சொல்லுகிறேன். அப்படி சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கு பஸ் போக வேண்டுமென்றால் அதை ஒரு புது ரூட்டாக வைப்பதற்கு பரிசீலனை செய்து தகுந்தவர்களுக்கு பர்மிட் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தவிர சென்னையிலிருந்து தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு இம்மாதிரியான ஜில்லாக்களுக்கு பஸ்போக வேண்டுமென்றால், அதுசம்பந்தமாக உத்தரவு போடுவதற்கு வருஷக்கணக்கில் ஆகிறது. ஒவ்வொரு ஜில்லா கலெக்டரும் ஒவ்வொருமாதிரியாக எழுதுகிறார்கள். செங்கல்பட்டுக் கலெக்டர் ஒரு மாதிரியாக எழுதுகிறார், தென் ஆர்காடு ஜில்லா கலெக்டர் ஒரு மாதிரியாக எழுதுகிறார், வட ஆர்க்காடு ஜில்லா கலெக்டர் ஒருமாதிரியாக எழுதுகிறார். இதில் பெரிய ஊழல்கள் நடக்கின்றன. இதுபற்றி ஒரு "க்ளியர் கட் பாலிசி" இருக்க வேண்டும். எந்தெந்த விதத்தில் எப்படி எப்படி இருந்தால் லைசன்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று உடனடியாக ஒரு திட்டவட்டமான உத்தரவு போட்டால் நன்றாக இருக்கும்.

பெரிய முதலாளிகளுக்கு பஸ் ரூட் லைசன்ஸ் கொடுக்கக்கூடாது என்று சில பேர்கள் சொன்னார்கள். நான் முக்கியமாக ஒன்று சொல்லவிரும்புகிறேன். ஐந்து "ஆபரேடர்ஸ்" வரைக்கும் லைசன்ஸ் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். அதிலும் ஆர்.டி.ஏ.-க்கள் சரிவர நடந்து கொள்வதில்லை. இரண்டிலிருந்து மூன்றாக்க வேண்டும் என்றார்கள். பிறகு மூன்றிலிருந்து நான்கு ஆக்க வேண்டும் என்றார்கள். இப்பொழுது ஐந்து என்கிறார்கள். ஆனால் அவர்கள் அம்மாதிரி நடப்பதில்லை. அவர்கள் சரிவர நடந்தால் நன்றாக இருக்கும். அப்படியில்லாமல் 25, 30, 35, பஸ்கள் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் எல்லோருக்கும் மறுபடியும் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். யாருக்குக் கொடுக்க வேண்டும், புது ரூட்டுகள் ஓபன் செய்தால், அது எந்த முறையில் கொடுக்க வேண்டும் என்று சட்டபூர்வமாக அரசாங்கத்தார் ஒரு உத்தரவு **பிறப்பிக்க** வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



24th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

கனம் அங்கத்தினர் ஷண்முகம் அவர்கள் பஸ்களெல்லாம் மிகவும் பழைய பஸ்களாக இருக்கின்றன என்று சொன்னார்கள். 1942 "வார் மாடல்" "வார் குவாலிடி" பஸ்கள் இன்னும் ரோட்டில் போய்க்கொண்டிருந்தால், ஜனங்களுக்கு அது எந்தவிதத்தில் அனுகூலம் என்று புரியவில்லை. என்னுடைய ஜில்லாவில் பஸ்கள் இவ்விடங்களில் நல்ல படியாகப் போய்ச் சேருமோ என்று அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. அம்மாதிரி ஆபத்தான நிலைமையில் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பஸ்கள் 24 மணி நேரத்தில் "பிட்னஸ் ஸர்டிபிகேட்" வாங்கிக்கொண்டு ரோடுகளில் ஓட்டப்படுகின்றன. இது என்ன விசித்திரம் என்பதை அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும். 1942-வது மாடல்க்கு இப்பொழுது "பார்ட்ஸ்" கிடைக்கவே கிடைக்காது. அப்படி இருக்கும்பொழுது 15 வருஷத்துக்கு முந்திய மாடல் பஸ்களுக்கு 24 மணி நேரத்தில் "பிட்னெஸ் ஸர்டிபிகேட்" கொடுக்கப்படுகிறது என்பதை "ரிகார்டு" பூர்வமாக அமைச்சர் அவர்களுக்கு சொல்லுவதற்கு தயாராக இருக்கிறேன். இதை எல்லாம் பரிசீலனை செய்வதற்கு, எவ்வளவு நாட்களில் என்னென்ன ரிப்பேர் செய்யப்பட்டது என்பதை எல்லாம் பரிசீலனை செய்வதற்கு ஒரு ஆபீசரை உடனடியாக நியமிக்க வேண்டும். இம்மாதிரி பஸ்களை "கண்டெம்" செய்வது பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். இம்மாதிரி பஸ்களில் கர்ப ஸ்திரீகள் பிரயாணம் செய்கிறார்கள். ஆகையால் ஜனங்களுக்கு ஆபத்து நேரக்கூடாத வகையில் நல்ல பஸ்களை ரோடுகளில் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

செங்கல்பட்டிற்குப் போகிற பஸ்ஸில் இடையே உள்ள சைதாப்பேட்டைக்கு "டிக்கட்" கொடுக்க மறுப்பதாக சில புகார்கள் வந்திருக்கின்றன. அது உண்மைதான். என்னிடமும் சிலர் இம்மாதிரி புகார் சொல்லியிருக்கிறார்கள். பஸ்களில் இடம் இருந்தால் வழியில் இருக்கக்கூடிய குறைந்த தூரத்திலுள்ள இடங்களுக்கும் கண்டிப்பாக பஸ்காரர்கள் "டிக்கட்டுகள்" வழங்க வேண்டும் என்று ஒரு உத்தரவு போட்டு, அது சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்பதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, "ஓவர்லோட்" இப்பொழுது சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. "ஓவர் லோட்" இல்லாத "ரூட்டே" இல்லை என்று நினைக்கிறேன். அநேக பஸ் முதலாளிகள் போலீஸ்காரர்களுக்கும், மற்ற இலாகாவினருக்கும் ஏதோ "எல்லாம்" கொடுத்துவிட்டு, 32, 40 "ஸீட்டுகள்" இருக்கக்கூடிய இடத்தில் 60, 70, 100, "பாஸெஞ்ஜர்களை" ஏற்றிக்கொண்டு போகிறார்கள். 100, 150, பேர்களை ஏற்றிக்கொண்டு போவதை நான் பிடித்திருக்கிறேன். வேண்டுமானால் நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். இதுபற்றி அநேக "பெடிஷன்கள்" போடப்பட்டும் நாளதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

உலகத்திலே இல்லாத ஒரு பஸ் ஸ்டாண்டு சென்னை நகரத்தில் இருக்கிறது. "பார்லிமெண்ட்டரி அஸோசியேஷன்" மெம்பர்கள் அநேகம் பேர்கள் வெளிநாடுகளிலிருந்து வரப்போகிறார்கள். சென்னை பஸ் ஸ்டாண்டுக்கு ஏதாவது ஒரு விமோசனம் உண்டா என்று அமைச்சர் அவர்களை கேட்கிறேன். கர்ப ஸ்திரீகள், வயோதிகர்கள் வெய்யிலிலும், மழையிலும் அங்கே பஸ்களுக்காக காக்க வேண்டியிருக்கிறது. கோவை நகரில் ஜி. டி. நாயுடு அவர்கள் ஒரு அழகான பஸ் ஸ்டாண்டை அமைத்திருக்கிறார்கள். அதுபோல சென்னை ராஜ்யத்தின் தலைநகராகிய சென்னை நகரத்திலும் சர்க்கார் "அய்லண்டு கிரௌண்டு" போன்ற இடத்தில் பஸ்காரர்களிடமிருந்து ஏதாவது பீஸாவது வாங்கிக்கொண்டு ஒரு நல்ல அழகான பஸ் ஸ்டாண்டை அமைப்பதற்கு முன்வரவேண்டும். அப்படி ஒரு பஸ் ஸ்டாண்டு அமைத்து அங்கே ஜனங்களுக்கு வேண்டிய சகலவிதமான "அமெனிடீஸ்" செய்து கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை சர்க்கார் கூடிய சீக்கிரம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் சில இடங்களில் உள்பாகத்தில் இருக்கக்கூடிய கொஞ்ச தூரத்திலுள்ள இடங்களுக்கு அதிக கட்டண டிக்கட் கொடுக்கப்படுவதாகச் சொன்னுர்கள். அப்படியிருந்தால் அதைத் தவிர்ப்பதற்கு கண்டிப்பாக அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

புதிதாக மனு போட்டவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளுவதாக அதிகாரிகளுக்கு தெரிந்தால், மேலும் அவர்களுக்கு புதிய ரூட்டுகளில் பஸ் ஓட்ட வசதி செய்து கொடுக்கவேண்டும்.

நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபொழுது, நான், கலெக்டர், டி.எஸ்.பி. மூன்று பேர்களும் சேர்ந்து பஸ்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருவது வழக்கம். ஆனுல் இப்பொழுது அந்த அதிகாரத்தை கலெக்டர் அவர்களுக்கே கொடுத்திருக்கிருர்கள். அவர்கள் எந்த விதத்தில் நல்ல முறையில் லைசென்ஸ்கள் வழங்குவார்கள் என்பது விளங்கவில்லை. முக்கியமாக ஒரு ஜில்லாவைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். ஆனுல் அவர் பெயரை சொல்லுவதற்கு விரும்பவில்லை. நாங்களெல்லாம் ரூமிலிருந்து வெளிவந்த உடனேயே ஒருவருக்கு ரூட், உண்டா, இல்லையா என்று முடிவை உடனுக்கு உடன் சொல்லிவிடுவோம். நாங்கள் அப்பொழுது எல்லாவற்றையும் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்துவிடுவோம். ஆனுல் ஒரு ஜில்லாவில் கலெக்டர் அவர்கள் அவ்வப்பொழுது ஒருவித தீர்மானத்திற்கும் வருவதில்லை. " பார்டிகள் " வக்கீல்கள் வாதத்தை கேட்டுக்கொள்ளுகிருர். பிறகு, 10, 15 நாட்கள் கழித்துத்தான் முடிவு வெளியிடப்படுகிறது. இது ரொம்பவும் கண்டிக்கத்தக்கது. இதை சர்க்கார் கவனித்து இது விஷயமாக பரிசீலனை செய்து உடனுக்குடன் அதிகாரபூர்வமாக தீர்ப்பு சொல்லவேண்டுமென்று அவர்களுக்கு தெரிவிக்கவேண்டும். கலெக்டர் அவர்கள் மட்டும் இதில் ஒன்றும் செய்ய முடியாது. ஒரு " நாண்-அபிஷியல் ", " டி.எஸ்.பி.", "டிவிஷனல் என்ஜினியர்" ஆக முக்கியமாக 4, 5 பேர்கள் கொண்ட ஒரு "ஆர்.டி.ஏ." அமைக்கவேண்டும். கலெக்டர் அவர்களிடத்தில் மாத்திரம் இந்த அதிகாரத்தை ஒப்படைக்கக்கூடாது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**(Mr. Speaker in the Chair)**

லாரிகளை குறைக்கவேண்டுமென்று சில பேர்கள் சொன்னுர்கள். இது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதிகமான லாரிகளுக்கு சர்க்கார் எவ்வளவு தூரம் போகவேண்டுமோ அவ்வளவு தூரத்திற்கு உடனுக்குடன் லைசென்ஸ் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். லாரி லைசென்ஸ் சம்பந்தப்பட்ட வரையில் " இண்டர் டிஸ்டிரிக்ட் " ஆபீஸ் ஒன்று சென்னையிலே அமைத்து, கன்னியாகுமாரி வரையில் லாரிகள் போவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் போய் அதற்கு வேண்டிய "ப்ரொஸீஜர் " படி நடந்து ஆங்காங்கே மாமூல்கள் கொடுத்தாலும்கூட லைசென்ஸ்கள் காலாகாலத்தில் கிடைப்பது இல்லை என்ற புகார். சர்க்கார் இதுபற்றி யோசித்து சென்னையிலேயே ஒரு ஆபீஸ் ஏற்படுத்தி மாகாணம் பூராவுக்கும் லைசென்ஸ் ஒரே இடத்தில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நான் மேல் நாடுகளில் பார்த்திருக்கிறேன். 2, 3 மணி நேரத்தில் இவர்களுக்கு லைசென்ஸ்கள் வழங்கப்படுகின்றன. ஆகையால் இதுபற்றி சர்க்கார் உடனடியாக கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்னையைப் பொறுத்த வரையில் இப்பொழுது சமீபத்தில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பஸ் ஸ்டாப்புகளில் சில மாறுதல்கள் செய்யப் போவதாக சொல்லப்படுகிறது. இப்போது " மொபஸில் பஸ்ஸுக்கும் " "ஸிட்டி பஸ்ஸுக்கும்" தனி தனி ஸ்டாப்புகள் இருக்கின்றன. " கான்ஸ்டிடியூஷன் " படி கூட "டிஸ்டிங்ஷன் " வருமா என்பதுபற்றி யோசனை செய்யவேண்டியிருக்கிறது. உதாரணமாக, செங்கல்பட்டு, திண்டிவனம் வட ஆற்காடு இந்தப் பக்கம் போகும் பஸ்களை சைதாப்பேட்டையில் நிறுத்





தாமல் " பிராட்வே " யில்தான் நிறுத்தினுல், அதனுல் ஜனங்களுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கும். இம்மாதிரி புகார் உண்மையாக இருந்தால், பஸ் ஸ்டாப்புகளை எவ்வளவு நெருக்கமாக வைக்கவேண்டுமோ அவ்வளவு நெருக்கமாக்க பரிசீலனை செய்து வைக்கவேண்டும்.

சென்னையிலுள்ள பெரிய டாக்ஸிக்காரர்கள் அவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை என்று சொல்லுவதாக கேள்விப்படுகிறேன். அப்படியிருந்தால், அவர்களுக்கு 4 ஸீட்டுகளுக்கு பதிலாக 5 "ஸீட்டுகள்" அனுமதிக்கவேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் இன்னும் சில ஜனங்களை ஏற்றிக்கொண்டு போவதற்கு சௌகரியமாக இருக்கும். " பேபி டாக்ஸிகளை " ஒரு பக்கம் " என்கரேஜ் " செய்வது இருந்த போதிலும், பெரிய டாக்ஸிகளுக்கும் ஏதாவது வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக "பஸ் பாடி" கட்டுவதுபற்றி நான் கேள்விப்பட்டதை குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய சில " சேஸிஸ்கள் ", " பாடி " கட்டப்படுவதற்காக ஹைதராபாத் முதலிய இடங்களுக்கு கொண்டுபோகப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். அது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியவில்லை. " பாடி " கட்டுவதற்கு இங்கே நிபுணர்கள் இருக்கிருர்கள். அரசாங்கத் தொழிற்சாலையில் " பாடி " கட்டுகிருர்கள். " சேஸிஸ்", 500, 600, மைல் தூரம் ஹைதராபாத் போவதற்கும், அங்கிருந்து "பாடி" கட்டிக்கொண்டு இங்கு திரும்புவதற்கும் எவ்வளவு செலவு ஆகிறது என்பது பற்றி சர்க்கார் யோசிக்கவேண்டும்.

நான் முடிவாக சொல்லுவது என்னவென்ருல், எவ்வளவு சீக்கிரம் " பெர்மிட்கள் " கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமும், எவ்வளவு நியாயமான முறையில் கொடுக்கவேண்டுமோ அந்த முறையில் கொடுப்பது பற்றி சட்டபூர்வமாக எப்படிச் செய்ய வேண்டுமென்பதை எல்லாம் சர்க்கார் நன்ருக யோசித்து, " பாஸெஞ்ஜர்களுக்கு " பயனளிக்கக்கூடிய முறையில் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN** : சபாநாயகர் அவர்களே, நான் 1-30 p.m.
பிரேரேபித்த இரண்டு மான்யக் கோரிக்கைகளில் ஒன்று சென்னையில் சர்க்கார் நடத்துகின்ற பஸ் போக்குவரத்து, இரண்டாவது கன்னியாகுமரியில் சர்க்கார் நடத்துகின்ற பஸ் போக்குவரத்து. இந்த இரண்டும் பஸ் போக்குவரத்து இலாகாவை பொறுத்தவை. பஸ் போக்குவரத்து சம்பந்தமாக பலர் பலவிதமான அபிப்பிராயங்களைச் சொன்னுர்கள். கனம் ராமய்யா அவர்கள் அவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பிக்கொண்டு, என்னுடைய மான்யக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் சில விஷயங்களை சொல்லவிரும்புகிறேன். இப்பொழுது சென்னை நகரத்தில் 445 பஸ்கள் ஓடுகின்றன. அவற்றில் 1956–57-ம் வருஷத்தில் 150 பஸ்கள் புதிதாக கட்டப்பட்டிருக்கிறது. அடுத்ததாக சென்னையில் இருக்கின்ற நெருக்கடியை எடுத்துப் பார்ப்போமானுல், நெருக்கடியான நேரத்தில் எவ்வளவு கூடுதல் பஸ்கள் விட்டிருந்தாலும் இதை சமாளிக்க முடியவில்லை. இதைப்போலவே பல நாடுகளிலும் இந்த **Peak hours** நேரத்தில் நெருக்கடியை தவிர்க்க முடியவில்லை என்றுதான் நாம் அறிகிருேம். நியூயார்க் நகரத்தில் 30 லட்சம் வண்டிகள் இருக்கின்றன. இதைத் தவிர பூமிக்கு அடியில் போகும் இரண்டு மூன்று ரயில் பாதைகளும் இருக்கின்றன. இவ்வளவு வசதிகள் இருந்தும் அங்கு 8 மணியிலிருந்து 9 மணிக்குள் எங்காவது போக வேண்டியிருந்தால் பஸ்ஸில் உட்கார்ந்து போகமுடியாது. ஆகவே இது எல்லா தலை நகரங்களிலும் இருந்து வருகிறது. இதனுல் சென்னையிலும் இந்த நிலைமை நீடிக்கவேண்டும் என்று நான் சொல்வதாக கருதக்கூடாது. இதைச் சமாளிப்பது என்பது மிக முக்கியமான முற்போக்கு நாடுகளில் கூட இயலாத காரியமாக இருக்கிறது என்பதைத்தான் எடுத்துச்

சொல்ல விரும்புகிறேன். இதுவரையிலும் மொத்த பஸ்களின் எண்ணிக்கை ஓரளவு கூடுதலாக இருந்தாலும் இப்போது ரோடுகளில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை 320, 330 ஆக இருக்கிறது. சிலர் நினைக்கலாம், இவ்வளவு பஸ்கள் இருந்தும் குறைவாகத்தானே பஸ்கள் ரோடுகளில் ஓடுகின்றன என்று. அது, ஏனென்றால் ஒவ்வொரு பஸ்ஸையும் மாதத்திற்கு ஒரு முறை சர்வீஸ் பண்ணவேண்டும். பெயின்ட் செய்ய வேண்டும், அடிக்கடி பழுது பார்க்கவேண்டும். இவ்விதம் கண்காணிப்பு இருந்தால்தான் நீண்டகாலமாக அந்த பஸ் சேவை செய்யமுடியும். ஆகவேதான் மொத்தம் அதிகமாக பஸ் இருந்தாலும் ரோடுகளில் 320, 330 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கிறது. அடுத்தபடியாக கண்டக்டர்களைப்பற்றி சொல்லப்பட்டது. இப்போது நெருக்கடியான சமயங்களில் ஸ்டாண்டுகளில் கண்டக்டர்களை நிற்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் ஸ்டாண்டில் வைத்தே டிக்கட் எடுத்துவிடலாம். பஸ்ஸில் ஏறினபிறகுதான் டிக்கட் எடுக்கவேண்டுமென்றில்லை. கன்னியாகுமரியிலுள்ள பஸ் போக்குவரத்தை பொறுத்தளவில் நிலைமை அங்கு சரியாக இல்லை என்று சொல்லப்பட்டது. அங்கு நமக்கு கிடைத்த பஸ்கள் எல்லாம் நல்ல பஸ்களாக கிடைக்கவில்லை. அன்பர் ராமசாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள். அங்கு சுமார் 30 பஸ்கள் **(nil value)** வில் இருப்பதாகச் சொன்னார்கள். சாதாரணமாக ஒவ்வொரு வண்டிக்கும் வருஷத்திற்கு 20 சதமானம் **Depreciation** போட்டு 5 வருடத்திற்கு கணக்காக்கப்பட்டு வருகிறது. இதை நல்ல முறையில் வைத்திருந்தால் 7 வருஷத்திற்கு சேவை செய்யும். ஆகவே எல்லாம் உதவாக்கரை **(nil value)** பஸ்களாக இருக்கிறது என்று சொல்வது சரியாகாது. அங்குள்ள நெருக்கடியை தவிர்ப்பதற்கு முதலாவது 12 பஸ்கள் அனுப்பப்பட்டது. இப்பொழுது 12 பஸ்கள் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் 4 அல்லது 5 பஸ்கள் போய்ச் சேர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். இன்னும் இந்த வகையில் பட்ஜெட்டில் 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் கன்னியாகுமரி ஜில்லாவில் 3 லட்சம் ரூபாய் செலவில் ஒரு **work shop**-ம் சென்னையிலுள்ள **work shop**-யை விஸ்தரிக்க 3 லட்சம் ரூபாயும், பாக்கியிருக்கின்ற 14 லட்சம் ரூபாயைக் கொண்டு பஸ்களை அதிகரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பஸ் போக்குவரத்து முறையில் சென்னையை பொறுத்தவரையில் ஓரளவு குற்றச்சாட்டு குறைந்திருக்கின்றன. அதே அளவில் கன்னியாகுமரி பிரதேசத்தில் இந்த நிலைமை ஓரளவு சீர்படும் என்று நம்புகிறேன். மூன்றாவதாக நாம் நடத்துகின்ற தொழிற்சாலையைப் பற்றி சொல்லப்பட்டது. கனம் ராமசாமி முதலியார் அவர்கள் நம்முடைய ராஜ்யத்திலுள்ள பஸ்கள் எல்லாம் ஹைதராபாத்தில் கட்டப்படுவதாக சொன்னார்கள். இவ்விதம் முன்னால் நடந்தது. அவ்விதம் நடந்ததற்கு காரணம் "டிராம்வே" நிறுத்தப்பட்ட சமயத்தில் நமக்கு 150 பஸ்கள் உடனடியாக வேண்டியிருந்தது. அதன் பிறகு பஸ்கள் எல்லாம் நம்முடைய **work shop**-ல் தான் கட்டப்படுகிறது. இப்போது மாதம் ஒன்றுக்கு 5 பஸ்கள் கட்டப்பட்டு வருகிறது. மேலால் மாதம் ஒன்றுக்கு 6 பஸ்கள் கட்டித்தருவதாக அங்குள்ள தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விவரத்தை நான் சந்தோஷத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மான்யக் கோரிக்கையின் மீது பேசும்போது பலர் இதில் ஏன் நஷ்டம் வந்து கொண்டிருக்கிறது ? என்றும் லாபம் ஏன் குறைவாக இருக்கிறது என்றும் கேட்டார்கள். இந்த இலாகாவில் இப்போது 150 பஸ்கள் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் வருஷத்திற்கு வருஷம் **Depreciation** போட்டு கணக்காக்கப்படுகிற பொழுது நிகர லாபம் **(Net Profit)** குறைந்து விடுகிறது. 1954–55-ல் ஓடின பஸ்கள் எல்லாம் ஓட்டை பஸ்களாக இருந்தது என்று சொல்லப்பட்டது. அதனால் தான் அந்த சமயத்தில் நிகர லாபம் 20 லட்சம் என்று கணக்கு இருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே நிகர லாபத்தை பஸ்களை வைத்துக்கொண்டு சொல்ல முடியாது. இவ்விதம் அடிக்கடி பஸ்கள் மாற்றிக் கொண்டிருந்தால் அதிகமாக நிகர லாபம் காண முடியாது. இவ்விதம் **Depreciaiton** போடுவதின் மூலமாக ஒரு **Phased Programme** போட்டு அதன்படி நிர்வகிக்கப்





பட்டு வருகிறது. இவ்விதம் **Depreciation** அதிகமாக போட்டு கொடுப்பதின் மூலம் வரும் வருஷத்தில் அதாவது பட்ஜெட் வருஷத்தில் 5 லட்சம் ரூபாய் நிகர லாபம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக ஊதியத்தைப் பற்றி ராமசாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள். இங்குள்ள ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகிற ஊதியத்தைவிட திருவிதாங்கூர்-கொச்சி பகுதியில் உள்ள ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் கூடுதல் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அங்குள்ள ஊழியர்களின் **qualification** கூடுதலாக இருக்கிறது. பி.ஏ., பி.ஏ.பி.எல்., படித்தவர்கள் கூட கண்டக்டர் வேலைக்கு முன் வருவதாக ராமசாமி பிள்ளை அவர்களே சொன்னார்கள். ஆனால் நாம் இங்கு வைத்துக்கொண்டிருக்கின்ற கண்டக்டர்களின் தகுதி 3-வது பாரம் என்று இருக்கிறது. இங்கு இதே தகுதியிலுள்ள வேறு ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியத்தை விட கூடுதலாக இவர்கள் ஊதியம் பெற்று வருகிறார்கள். வேலை ஒன்றாக இருந்தாலும் **qualification**-யை வைத்து ஒப்பிட்டுப்பார்த்தால் இங்கு கொடுக்கப்படும் ஊதியம் குறைவு என்று சொல்ல முடியாது. ஆனால் இங்கு தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பஸ் போக்குவரத்து கம்பெனிகளில் கொடுக்கப்படும் ஊதியத்தை விட இவர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் கூடுதல் தான் என்பதை எனக்கு திட்டவட்டமாக கூற முடியும். ஏனென்றால் தனிப்பட்ட கம்பெனிகளிலுள்ள தொழிலாளர்களுக்கு, சர்க்காரில் கொடுக்கப்படுகிறதைப் போன்று எங்களுக்கு வேண்டுமென்று அவர்களின் பிரதிநிதிகளே சமீபத்தில் என்னிடத்தில் வந்து சொல்லியிருக்கிறார்கள்.

காரணம் என்னவென்று சொன்னால் ஒரு இடத்தில் முதலாளிகள் அதிகமாக சம்பளம் கொடுக்கிறார்கள். மற்றொரு துறையில் குறைத்து விடுகிறார்கள். டி.வி.எஸ். போல் எல்லோரும் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதை நம் பஸ் தொழிலாளிகள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். டி.வி.எஸ்.-ல் கொடுக்கிற படி, 12 அணாவாகும். சர்க்கார் கொடுக்கும் படி 1–1–0 ஆகும். ஆகவே சர்க்காரில் மொத்த வருவாய் அதிகமாக இருக்கிறது என்பதை நம் தொழிலாளர்கள் ஒத்துக்கொள்வார்கள். நம் தொழிலாளிகளுக்கு குறையே இல்லை என்று நான் சொல்லவில்லை. நியாயமான கூலி விகிதம் கொடுக்கப்படுகிறது. திறமையாக வேலை செய்தால் மேற்கொண்டு ப்ரொடக்‌ஷன் போனஸ், எபிஷியன்ஸி போனஸ் இவைகள் கொடுக்க திட்டம் செய்திருக்கிறோம். சமீபத்தில் இந்தியன் லேபர் கான்பரன்ஸ் நடந்தது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கலாம். அந்த கான்பரன்ஸில், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை அவர்கள் விவாதித்தார்கள். அப்பொழுது சென்னை சர்க்கார் சார்பாக நான் சொன்னேன், சென்னையில் இருக்கிற தனி நபர்கள் நடத்துகிற நிர்வாகத்திலும், சர்க்கார் நடத்தும் நிர்வாகத்திலும் இவர்களுக்கு பங்கு கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை அனுஷ்டித்து பரிசீலனை செய்து அது எந்த அளவிற்கு நன்கு வேலை செய்கிறது என்பதை பரீட்சார்த்தமாக செய்கிறோம் என்று சொன்னேன். அவ்வாறு நாம் இப்போது எடுத்துக்கொள்ளப்போகிறது, சென்னையில் நடக்கும் பஸ் போக்குவரத்தையாகும். கூலி, சம்பளம் போன்ற பிரச்னைகள் வரக் கூடிய எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு நிர்வாகம் எந்த முறையில் நடத்தினால் தொழிலாளர்கள் அந்தத் தொழிலை நல்ல முறையில் நடத்த முடியும், அவர்களின் ஒத்துழைப்போடு இன்னும் இதை எப்படி சீரமைக்க முடியும், வேலையை எப்படி திறம்பட நடத்த முடியும், எப்படி நஷ்டம் இல்லாமல் காக்க முடியும் என்பதை எல்லாம் பற்றியும், நிர்வாகத்தில் அவர்களுக்கு பங்கு கொடுக்கக் கூடிய ஒரு திட்டத்தைக் தயாரித்துகொண்டு இருக்கிறோம். அதை கூடிய மட்டும் அக்டோபர் மாதம் 2-ம் தேதி மஹாத்மா காந்தி பிறந்த தினத்தன்று அதை அமுலுக்கு கொண்டுவரலாம் என்று நம்புகிறேன். ஓரளவில் நம்முடைய நிர்வாகத்தில் ஸ்பெயர் பார்ட்ஸ் களவு போவதாக என் காதிலும் பட்டது. ஆனால் விசாரணை செய்ததில் அதற்கு வேண்டிய சாட்சியம் கிடைக்கவில்லை. ஆனாலும் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சர்க்கார் வாச்மென்

போடுவதை நிறுத்தி விட்டு போலீஸ் பந்தோபஸ்து போட்டுவிடுவது என்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்வதின் மூலமாக இந்த விதமான தவறுகள் ஏற்பட இடமிருக்காது. அடுத்தபடியாக, ஸ்டோர்ஸ்க்கு எந்த விதமான உத்தியோகஸ்தரையும் போடவில்லை என்பது. இப்பொழுது காஸ்ட் அக்கவுண்ட்ஸ் படித்தவர், பம்பாயில் பல வருஷங்கள் வேலை செய்தவர் ஒருவரை நியமித்திருக்கிறோம். ஸ்டோர்ஸ் விஷயத்தில் சரியான முறையில் அவர் கண்காணிப்பார் என்று நம்புகிறேன். ஒரே விதமான பஸ்களை ஓட்ட வேண்டும், பலவிதமான பஸ்களை ஓட்டுவதின் மூலம் சர்க்காருக்கு கஷ்டம் ஏற்படுகிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். இனி வாங்குகிற பஸ்கள் ஒரே ரகமாக இருக்கும். ஆனால் அப்படி வைத்துக் கொள்வதை விட இரண்டு ரகங்கள் வைத்துக் கொள்வது மேல் என்று தோன்றுகிறது. ஒரே ரக பஸ்கள் கிடைக்காவிட்டால் அதற்காக காத்துக்கொண்டு இராமல் இரண்டு ரக பஸ்கள் வாங்கினால் அவைகளை வைத்துக் கொண்டு நமது தேவையை பூர்த்தி செய்ய முடியும். கடைசியாக நான் முடிப்பதற்கு முன்னால் இந்தபோக்குவரத்து இலாகாவில் வேலை செய்கிற பஸ் தொழிலாளர்கள் மாத்திரம் இல்லாமல் இன்னும் இதர வொர்க்ஷாப்பில் வேலை செய்கிற எல்லா தொழிலாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் ஏதோ கோபமாகவும், தவறாகவும் பேசுவதாக புகார்கள் சொல்லப்படுகிறது. நெருக்கடியான நேரத்தில் கூட்டம் அதிகமாக இருக்கிறபோது அவர்களின் கஷ்டத்தை பிரயாணிகளும் ஓரளவு உணர்ந்து பொது மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பார்களேயானால் அவர்களும் மனித இயல்புபடி அவர்கள் மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே அவர்கள் மீது குறைகள் இருந்தாலும், அதை சர்க்கார் கவனிக்கிறது என்ற நிலை இருந்தபோதிலும் பொது மக்களும் அவர்களுடன் நன்கு ஒத்துழைத்து அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற எல்லா ஊழியர்களும் செவ்வையான முறையில், திறமையான முறையில் வேலை செய்து சர்க்கார் நிர்வாகத்திற்கு நல்ல பெயர் சம்பாதித்துக் கொடுப்பார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இத்துடன் இந்த மான்யக் கோரிக்கையை பிரேரேபிக்கிறேன்.

**Mr. SPEAKER** : ஸ்ரீ சின்னதுரை அவர்கள் அவர்களது வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக் கொள்கிறார்களா ?

**Sri P. S. CHINNADURAI** : இல்லை.

**Mr. SPEAKER** : I shall now put the cut motion to the vote of the House. The question is—

"That the allotment of Rs. 1,71,44,400 under Demand No. XXXIII—Road Transport Schemes—Working Expenses, be reduced by Rs. 100."

The motion was put and lost.

**Mr. SPEAKER** : I shall now put the original motion to the vote of the House. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,71,44,400 under Demand No. XXXIII—Road Transport Schemes—Working Expenses."

The Demand was put and carried and the Grant was made.

**Mr. SPEAKER** : The question is—

"That the allotment of Rs. 1,31,52,600 under Demand No. XLII—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100."

The motion was put and lost.



**Mr. SPEAKER** : I shall now put the original motion to vote.

The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,31,52,600 under Demand No. XLII—Capital Outlay on Road Transport Schemes."

The Demand was put and carried and the Grant was made.

## VIII.—VOTING ON OTHER DEMANDS.

**Mr. SPEAKER** : I shall now apply the guillotine by putting to the vote of the House the various Demands that have not been discussed.

### (1) DEMAND III—STAMPS ADMINISTRATION.

**Mr. SPEAKER** : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 16,39,900 under Demand No. III—Stamps Administration."

The Demand was put and carried and the Grant was made.

### (2) DEMAND V—REGISTRATION DEPARTMENT.

**Mr. SPEAKER** : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 39,09,100 under Demand No. V—Registration Department."

The Demand was put and carried and the Grant was made.

### (3) DEMAND VI—MOTOR VEHICLES ACTS ADMINISTRATION.

**Mr. SPEAKER** : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,56,100 under Demand No. VI—Motor Vehicles Acts Administration."

The Demand was put and carried and the Grant was made.

### (4) DEMAND XII—ADMINISTRATION OF JUSTICE.

**Mr. SPEAKER** : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,08,67,600 under Demand No. XII—Administration of Justice."

The Demand was put and carried and the Grant was made.

### (5) DEMAND XXIV—CIVIL WORKS—WORKS.

**Mr. SPEAKER** : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,09,33,000 under Demand No. XXIV—Civil Works—Works."

The Demand was put and carried and the Grant was made.

(6) DEMAND XXV—CIVIL WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,28,15,800 under Demand No. XXV—Civil Works—Establishment and Tools and Plant."

The Demand was put and carried and the Grant was made.

(7) DEMAND XXVIII—FAMINE.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 29,09,200 under Demand No. XXVIII—Famine."

The Demand was put and carried and the Grant was made.

(8) DEMAND XXIX—PENSIONS.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,42,68,100 under Demand No. XXIX—Pensions."

The Demand was put and carried and the Grant was made.

(9) DEMAND XXX—STATIONERY AND PRINTING.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 90,69,500 under Demand No. XXX—Stationery and Printing."

The Demand was put and carried and the Grant was made.

(10) DEMAND XXXI—MISCELLANEOUS.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,40,39,700 under Demand No. XXXI—Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

(11) DEMAND XXXIV—COMPENSATION TO ZAMINDARS.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 47,30,000 under Demand No. XXXIV—Compensation to Zamindars."

The Demand was put and carried and the Grant was made.

(12) DEMAND XL—CAPITAL OUTLAY ON CIVIL WORKS.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,50,26,900 under Demand No. XL—Capital Outlay on Civil Works."

The Demand was put and carried and the Grant was made.



(13) DEMAND XLIII—COMMUTED VALUE OF PENSIONS.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,05,000 under Demand No. XLIII—Commuted Value of Pensions."

The Demand was put and carried and the Grant was made.

(14) DEMAND XLIV—CAPITAL OUTLAY ON SCHEMES OF STATE TRADING.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,84,71,300 under Demand No. XLIV—Capital Outlay on Schemes of State Trading."

The Demand was put and carried and the Grant was made.

(15) DEMAND XLV—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 7,92,14,300 under Demand No. XLV—Loans and Advances by the State Government."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. on Thursday, the 25th July 1957.

The House then adjourned.

## APPENDIX I.

[Vide answer to starred question No. 215 asked by Sri S. Pakkiri-swamy Pillai at the meeting of the Legislative Assembly held on 24th July 1957, page 280 supra.]

*Statement showing the names of places in the City where public meetings are allowed to be held.*

1. High Court Beach.
2. Lingha Chetty street in front of Mallikeswarar temple.
3. Asirvathapuram.
4. Annamalai Hall, Esplanade Road.
5. St. Mary's Hall, Armenian street.
6. Gokhale Hall, Armenian street.
7. Memorial Hall, Broadway.
8. Junction of Acharappan street and Acharappan lane.
9. Rasappa Chetty street (between Devaraja Mudali street and Nainiappan Naicken street).
10. Memorial Hall.
11. Junction of Jesson street and Stringers street.
12. Pilliar Kovil street.
13. Anaikara Konar street.
14. Samayavarathamman Koil street.
15. Nattu Pilliar Koil street.
16. Varathamuthiappan street (near Udayavar temple).
17. Milab Sahib street.
18. Perumal Koil Garden street.
19. Junction of Pattabiramaier street and Peddu Naicken street.
20. Corporation playground near Barracks street.
21. Lawyer Chinnathambi Mudali street.
22. Marina Beach Opposite to Senate House.
23. Tilak Ghat.
24. Old Congress Grounds, Royapettah.
25. Gangai Kondan Mandapam.
26. Rajaji Hall.
27. Ground attached to Chitrakulam Corner near T.U.C.S., Mylapore.
28. Mandavalli Maidan.
29. Napier Park Maidan.
30. Ritchie street near Home for Homeless.
31. Olagappamastri street and Mangapathi Naicken street junction.
32. Nagappa Mudali street and Chandrabanu street junction.



33. Subban Maidan, Varadarajapuram.
34. Rangachari Park, Egmore.
35. Lakshminarayanaperumal Koil street, Egmore.
36. Sathiamoorthy Road open space.
37. Azeez Mulk street, Thousandlights.
38. Rangoon street, Thousandlights.
39. Mangalapuram open space.
40. Ramanaicken street, Nungambakkam.
41. Tank Square, Nungambakkam.
42. Avenue Road Maidan, Nungambakkam.
43. Corporation Stadium, Periamet.
44. S.I.A.A. Grounds, Periamet.
45. Poloo Naicken Street Maidan.
46. Magazinopuram.
47. Kannigapuram Maidan.
48. T.V.K. Maidan.
49. Maidan at Gantz Road, Mohana Mudali Garden.
50. Maidan attached to Pallam street.
51. Old Slaughter-House Road Maidan.
52. Pensioners Line Maidan.
53. Conran Smith Maidan.
54. Open space near Edward Park, Chellappa Mudali street.
55. Maidan on the north of Krishnadoss Road.
56. Karaneeswarar Koil street, Saidapet.
57. Maidan near T. Nagar Bus-stand.
58. Maidan near Kodambakkam Railway station.
59. Perambur Lake Maidan.
60. Madavaram High Road near Leather Tannery.
61. Sundararaja Perumal Koil street (in front of temple).
62. Gramany Garden near Watkins street.
63. Maidan behind the Nehru Park in Poonamallee High Road.
64. Eastern side of the Kilpauk Water Works, entrance near New Avadi Road.
65. Northern side of Bala Vihar in Thandavaraya Pillai Chattaram.
66. Shenoy Nagar open space.
67. Ground attached to Nelson and Company at Nelson Manicka Mudaliar Road.
68. Ground attached to Thandavaroya Pillai street.
69. Near Elementary School at Arambakkam.
70. Market Maidan, Ayanavaram.
71. Ground near Warden's Line.

72. Railway Quarters Maidan.
73. Karunakara Cafe maidan on the Monegar Choultry Road.
74. Nagappa Nagar Maidan in Stanley Nagar.
75. Model Lines Maidan.
76. Lalagunta Maidan
77. Burial Ground Maidan.
78. Pudumanai Kuppam Maidan.
79. Maidan opposite to Poor House in S.N. Chetty street.
80. Maidan next to Flag Staff street.
81. Periapalayathamman Koil street Maidan.
82. Seniamman Koil Street Maidan.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 226 asked by Sri K. Sattanatha Karayalar (on behalf of Sri N. K. Palanisami) at the meeting of the Legislative Assembly held on 24th July 1957, page 288 supra.]

*Recommendations of the Tripartite Committee constituted during 1953 in the matter of raising the emoluments of textile mill workers.*

The recommendations of the Tripartite Textile Enquiry Committee constituted in 1953 are only recommendatory in nature and are not statutory. The position has been explained by the Government in a Press Note, dated 21st December 1954, wherein it was stated that the ability to implement the measures recommended by the Committee depended on the financial capacity of each mill. The workers were also advised to have recourse to the normal channels under the Industrial Disputes Act, 1947, for redressing their grievances.

Based on the recommendations of the Tripartite Textile Enquiry Committee, the mill-owners and the employees in the Coimbatore district have entered into an agreement on 25th September 1956. The agreement provides, among other things, for a minimum wage of Rs. 30-1-0 and fixation of work-loads and the duties of the workers in the several departments. The managements and workers of Sree Meenakshi Mills, Madurai, the Loyal Textile Mills, Limited, Kovilpatti, and the Mettur Industries, Limited, Mettur Dam, also settled their dispute in their mills on similar lines. The management of the Jawahar Mills, Limited, Salem, proposed to hold discussions with workers with a view to arriving at a settlement on the lines of the Coimbatore agreement. The dispute in the Rajendra Mills was referred for adjudication. The award given by the Industrial Tribunal was confirmed



by the Labour Appellate Tribunal. However, the management have filed an apppeal in the Supreme Court. The dispute in the Buckingham and Carnatic Mills, Limited, was referred for arbitration to Justice Sri K. Ramaswamy Gounder, Judge of the High Court, Madras, who has given an award. The dispute in the Madura Mills Company, Limited, Madurai, Ambasamudram, and Tuticorin, was referred for adjudication to Sri K. N. Radhakrishna Mudaliar, a Special Industrial Tribunal constituted for the purpose and the award has been published in the *Fort St. George Gazette.*

Thus, the main issues relating to the wages and work-loads in important textile mills in the State have been settled either by direct negotiation or arbitration or adjudication.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 25th July, 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*" The Hindu "*

*4 *S.N. Q.*—SRI K. SATTANATHA KARAYALAR, SRI K. ANBAZHAGAN AND SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any information that the Madras Union of Journalists have served strike notice on the *Hindu* management consequent on the dismissal of the General Secretary of the Union for his trade union activities; and

(*b*) if so, what action Government propose to take to settle this dispute?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) The dispute regarding the termination of services of Sri R. Narasimhan, Sub-Editor of *The Hindu*, and the relief to which he is entitled, has been referred to the Labour Court, Madras, for adjudication.

MR. SPEAKER: Mr. Sattanatha Karayalar . . .

SRI S. B. ADITYAN: Sir, the matter has already gone before a Court . . . . .

MR. SPEAKER: Labour courts are generally not considered equivalent to ordinary courts. This has gone up for some arbitration. So though I may permit supplementaries I do not want hon. Members to go deep questioning into this matter.

SRI K. SATTANATHA KARAYALAR: Is it a fact, Sir, that the Minister attempted a conciliation and may I also know what was the attitude of the management?

THE HON. SRI R. VENKATARAMAN: It is a fact that the Minister tries to bring about a conciliation as a last resort, but now that the matter has gone to court, the court will decide on the merits of the case.

SRI R. SRINIVASA IYER: Is it the idea of the Government to take away all the powers of punishment of any subordinate for insubordination or disobedience of orders?

THE HON. SRI R. VENKATARAMAN: Government do not take away powers. Wherever an industrial dispute exists, Government refer that dispute for adjudication by a competent and independent authority.

[25th July 1957

*Report of the Minimum Wages Advisory Committee*

* 5 *S.N. Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Minimum Wages Advisory Committee constituted to go into the question of wages of the employees under the local bodies has submitted its report;

(*b*) if so, whether a copy of same will be placed on the table of the House; and

(*c*) the action taken or proposed to be taken thereon by the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A copy of the proceedings of the Advisory Committee has been placed in the Library of the Legislature.

(*c*) The recommendations of the Advisory Committee have been accepted and the minimum wages fixed for the employment under any local authority have been accordingly revised.

*Block Development Officers in Kanyakumari district*

* 233 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Chief Minister be pleased to state how many vacancies arose in the posts of Block Development Officers after 1st November 1956 in Kanyakumari district?

THE HON. SRI C. SUBRAMANIAM : Three vacancies.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether the vacancies have been filled up?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

SRI T. T. DANIEL : May I know, Sir, the minimum qualification for these posts and whether the officers promoted possess the qualification and whether they were actually holding the post of Block Development Officer prior to their appointment.

MR. SPEAKER : These come under the day-to-day administration of the Government. They cannot form part of the question. If the Hon. Minister is willing to answer the question I have no objection.

THE HON. SRI C. SUBRAMANIAM : I would only say, properly qualified persons have been appointed.

*Policemen union*

* 234 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have allowed the City Policemen to revive their old Policemen Union?



25th July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is in the negative.

SRI S. PAKKIRISAMY PILLAI : How is it that the Government are not coming forward to give their own employees, the right to organize their own union?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This Union had been in existence for some time and then it had been mostly dorment are not coming forward to give their own employees, the contributed towards indiscipline in the Police ranks. And the hon. Members will appreciate that the maintenance of discipline is very essential. Therefore Government do not propose to permit the revival of this union.

*Officers drawing over Rs. 500*

* 235 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of officers getting salary over Rs. 500 a month during 1956–57;

(*b*) the expenditure incurred towards travelling allowance of these officers during 1956–57; and

(*c*) the number of officers among them that were sent to foreign countries, for higher studies at Government expense during 1956–57?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 753.

(*b*) Rs. 9,77,790.

(*c*) 15.

SRI S. B. ADITYAN : May I know whether the Government have advised these officers to make any voluntary cut in their pay?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI A. A. RASHEED : Have the Indian Government contributed anything towards this expenditure, that is on foreign tours?

THE HON. SRI C. SUBRAMANIAM : These are officers who get their salaries from the Madras Government.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Cannot the Hon. Minister tell us whether they were sent for higher studies or on deputation?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question is specifically about higher studies. The answer therefore relates only to that.

[25th July 1957

*Cultivable waste lands*

* 236 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of cultivable waste lands in the State fit to be reclaimed and brought under cultivation;

(*b*) the steps taken to bring them under plough; and

(*c*) the number of acres distributed to the landless poor during the last four years?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) 406,734 acres. It is presumed that the hon. Member wants only the extent of cultivable waste lands owned by the Government.

(*b*) The Government have directed that where dry cultivation is possible without much expenditure by way of reclamation, the lands may be assigned to landless poor and that lands requiring considerable reclamation and provision of irrigational facilities should wait till funds required for the execution of irrigation works are provided for. The Government have also sanctioned special staff in several districts to deal promptly with the increasing number of applications for assignment of lands received from landless poor persons. With a view to watching the progress of assignment work in several districts, the Board of Revenue gets a monthly report from the Collectors and reviews the progress. The Government also review the progress made in the matter.

(*c*) 77,261 acres.

SRI T. SAMPATH: இந்த நிலங்களிலே கூட்டுறவு விவசாய முறையை (கோவாபரேடிவ் பார்மிங்) அனுஷ்டிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தப் பிரச்னை நிலங்களே இல்லாத ஏழைகளுக்கு நிலங்களைக் கொடுக்கிற விஷயம். சேலம் ஜில்லாவில் ஒரு பெரிய விஸ்தீரணத்தில் கூட்டுறவு விவசாய முறையை செய்யவேண்டும் என்ற உத்தேசம் இருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Is it a fact that many of the lands assigned have not been brought under cultivation by the ryots because of their economic condition and if so, will the Government give them any financial aid to bring the lands under the plough?

THE HON. SRI M. A. MANICKAVELU: For those who are economically poor and who could not afford to take to cultivation, Government advance loans also. That much only can be done by the Government. We can only take the horse to the pond to drink water, but we cannot force the horse to drink water. (Laughter.)

SRI S. LAZAR: ஸார், இந்த நிலங்களை எல்லாம், நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கப்படுவதால், அவர்கள் ஏழ்மையின் காரணத்தால் இந்த நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வர முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சாகுபடிக்கு கொண்டு வருகிற காலம் வரைக்கும், 5 வருஷங்கள் அல்லது 10 வருஷங்களுக்கு, வசதி உள்ளவர்களுக்கு நிலம் கொடுப்பது என்ற முறையை சர்க்கார் கையாளுமா?



25th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU: வசதி உள்ளவர்களுக்கு நிலங்கள் இருக்கும். நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுத்து அவர்கள் ஜீவனம் நடத்துவதற்காகவும், விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகவும்தான் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. R. NALLASIVAM: நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலம் கொடுக்க சர்க்கார் வழி வகை செய்திருந்தும் கூட, தாலுகா ஆபீஸ்களில் ஒரு வருஷம், இரண்டு வருஷங்கள் அல்லது ஐந்து வருஷங்கள் கூட தாமதம் ஏற்படுகிறது. நிலம் இல்லாதவர்களுக்கு சீக்கிரம் நிலம் வழங்குவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு விசேஷ அதிகாரியை நியமித்து துரிதமாக வேலை முடிவடைவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சில வருஷங்களுக்கு முன் தாமதம் இருந்திருக்கலாம். சென்ற இரண்டு, மூன்று வருஷங்களாக அதிக ஜரூராக வேலை நடந்துகொண்டிருக்கிறது.

SRI M. C. MUTHUKUMARASWAMI: கனம் அமைச்சர் சொல்லிய பதிலிலிருந்து நான்கு லட்சம் சொச்சம் ஏக்கர்கள் வீணாகக் கிடக்கிறது என்று தெரிகிறது. இந்த நிலங்களை அடமானமாக செய்து கொடுக்காவிட்டாலும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு, சர்க்காருக்கு எப்பொழுது தேவையோ அப்பொழுது கொடுக்கவேண்டும் என்ற "கண்டிஷன்" பேரில் இந்த நிலங்களை உழுபவர்களுக்கு விட்டுக்கொடுக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: குறிப்பிட்ட விஸ்தீர்ணத்திலுள்ள எல்லா நிலங்களும் சாகுபடிக்கு லாயக்கு இல்லை. ஏரி புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு இவைகளையெல்லாம் பார்த்துத் தள்ளிவிட்டு மற்ற விவசாயத்துக்கான நிலங்களை கொடுக்கவேண்டும். இதற்கு கொஞ்ச காலம் ஆகிறது. இதை தவிர்க்க முடியாது.

SRI M. P. SUBRAMANIAM: அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலிலிருந்து சேலம் ஜில்லாவில் கூட்டுறவு விவசாயப் பண்ணை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிகிறது. அது எங்கே ஆரம்பிக்கப்படும், அதன் விவரம் அமைச்சர் அவர்கள் கையில் இருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் அங்கத்தினர் தொகுதியான ஆத்தூரிலேயே இதை செய்ய வேண்டும் என்ற உத்தேசம் இருந்துகொண்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM: Sir, has the Government got in its 9-15 a.m. possession any plan or method for disposing of these waste lands to the land hungry people, instead of depending on the usual course of Collectors who are very slow and who cause inordinate delay in disposing of these lands? For this purpose, will the Government come forward with a legislation to dispose of these lands to the landless poor?

THE HON. SRI M. A. MANICKAVELU: In order to expedite the work in addition to the Collector who was alone authorized to assign these lands, now the Revenue Divisional Officers and even Tahsildars are authorized to assign lands. Further, a special staff has also been sanctioned and the work is now going on very quickly.

SRI M. JAGANNATHAN: Sir, may I know whether these cultivable lands are assigned to the landless poor tree of cost or

[25th July 1957

whether any market value are collected from them? In respect of Harijans atleast will the Government consider the desirability of assigning these lands to them free of cost?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is being assigned free of cost only. But in the case of lands abetting cities and big towns and if the lands are valuable, then only the market value is demanded; but even then the cases of Harijans are specially dealt with.

SRI R. KRISHNASAMI NAIDU: நிலம் இல்லாத ஏழைகளுக்கு சர்க்கார் நிலம் வழங்குவதைக் கொண்டு அந்த நிலத்தில் சாகுபடி செய்யவோ அல்லது அதை அபிவிருத்தி செய்யவோ அவர்களுக்கு வசதி இல்லாமல் இருக்கிறது. சர்க்கார் தக்காவி கடன் கொடுப்பது கூட நிலத்தின் மதிப்பை பொறுத்துத்தான் கடன் கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் தகுந்த கடன் வசதி பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் சர்க்கார் இது விஷயத்தில் வேறு முறைகளை கையாண்டு அவர்கள் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக கடன் அதிகமாக கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வேறு முறைகள் என்ன என்பது இப்பொழுது எனக்கு தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அதுபற்றி ஏதாவது வேறு முறைகளைச் சொன்னால், அதுவும் கவனிக்கப்படும்.

SRI K. RAMACHANDRAN : தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் கொள்கை இருக்கும்போது ராமநாதபுரம் ஜில்லாவில் சில இடங்களில் நிலங்களிலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படுவது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி இருந்தாலும் இருக்கலாம். அதற்கு என்ன காரணம் என்றால், ராமநாதபுரம் ஜில்லாவில் ஜமீன் நிலங்கள் இருந்தன. ஜமீன்தார்கள் காலத்திலே இஷ்டம்போல் சிலபேர்கள் நிலத்தை வசப்படுத்திக்கொண்டிருக்கலாம். அவர்கள் அறியாமலே சிலபேர்கள் நிலத்தை சாகுபடி செய்துகொண்டிருக்கலாம். பொதுவாக அம்மாதிரி இருப்பது எல்லா குடிஜனங்களுக்கும் இடைஞ்சலாக இருக்கும். ஏரி புறம்போக்கு போன்ற நிலங்களாக இருக்கலாம். அம்மாதிரி இருந்தால் அவர்களை அந்த நிலங்களை விட்டு வெளியேற்ற வேண்டியது அவசியம் என்று தெரிகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI: According to the definition of the Government, should the landless poor be absolutely poor or could they hold patta lands up to five acres?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am sorry, Sir, I have to educate the hon. Member who is a Law Graduate "Landless poor" means those who have no land. But in stepping up any efficiency a limit is observed.

SRI V. K. KOTHANDARAMAN : 1952–53-வது ஆண்டில் "ஸீசனல் கிராப் ரிபோர்ட்டில்" "கல்டிவபில் வேஸ்ட் லாண்ட்ஸ்" 2,393,548 ஏக்கர் என்றும், "பாலோ லாண்ட்ஸ்" 4,849,021 ஏக்கர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கேரளா, ஆந்திரா நீங்கலாகத்தான் இந்த புள்ளிவிவரம் என்று அதிலிருந்து தெரியவருகிறது. ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவது சரியா அல்லது இது சரியா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



25th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியில் பெரிய அளவில் 40, 50 லட்சத்தில் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி தனியாக கேள்வி கேட்டால் அதை நன்றாக ஆராய்ந்து பதில் சொல்லுவேன்.

SRI P. G. MANICKAM : சர்க்கார் தெரிவித்த இந்த விவசாய நிலங்கள் எந்தெந்த பகுதியில் இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தை அந்தந்த ஜில்லாவின் கலெக்டர் மூலமாக சம்பந்தப்பட்ட எம். எல். ஏ.-க்களுக்கு அறிவிக்கும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : சில ஜில்லாவிலே அதிகமாக இருக்கிறது. உதாரணமாக சேலம் ஜில்லாவிலே ரொம்ப அதிகமாக இருக்கிறது. மற்றப்படி இம்மாதிரி நிலங்கள் இருப்பது அங்கு இருக்கிற ஜனங்களுக்கு நன்றாகத் தெரிந்து இருக்கிறது. வேறுவிதமாக கனம் அங்கத்தினர் கோருவது போல ஏதாவது செய்யவேண்டுமானால் தனியாக அவர் கோரிக்கையை ஒரு கேள்வி மூலமாக தெரிவித்தால், அதை பரிசீலனை செய்கிறேன்.

SRI K. P. PALANISAMI : ரிஸர்வ் பாரெஸ்ட் பக்கத்தில் முன்பெல்லாம் ஒரு சங்கிலி நிலம் புறம்போக்கு நிலம் விட வேண்டுமென்று இருந்தது. இப்பொழுது மூன்று சங்கிலி விட வேண்டுமென்று சொல்லப்படுவதால் சில விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். முன்போலவே ஒரு சங்கிலி விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக்கேள்வியிலிருந்து இது எழவில்லை. இருந்தாலும் நான் பதில் சொல்லுகிறேன். காட்டு செல்வத்தை வளர்க்கவேண்டுமென்பது கொள்கை. ஒரு சங்கிலி விட்டால் காடு வளர்வதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. மாட்டுக்கும் இடைஞ்சலாக இருக்கிறது, உழவு முடிந்தவுடன் மாடு அங்கே மேய்வதற்கு வருவதால் அதைப் பிடிக்கிறார்கள். இம்மாதிரி தொந்தரவு ஏற்படுகின்றன. மூன்று சங்கிலி விட்டால் காட்டுக்கும் நல்லது, மாட்டுக்கும் நல்லது.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சில கணக்குபிள்ளைகளுக்கு லஞ்சம் கொடுக்காத காரணத்தினால், மேய்ச்சல் புறம்போக்கு அல்லாத நிலங்களையும் மேய்ச்சல் புறம்போக்கு என்று தவறாக புள்ளிவிவரங்கள் கொடுக்கிறார்கள். ஆகையால் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை பக்கத்தில் வைத்துக்கொண்டு அந்த நிலங்களை அடமானம் செய்வதற்கு அரசியலார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பொதுவாக கேள்வி கேட்டால் பதில் சொல்லுவதற்கு இல்லை. ஏதாவது குறிப்பாக ஒரு தகவலைச் சொன்னால் அதை விசாரித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வரும்.

SRI R. SRINIVASA IYER : தரிசு நிலங்களைப்பற்றி சில தினங்களுக்கு முன் ஜில்லாவாரியாக புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டன. அடிக்கடி அதுபற்றி கேட்பதற்கு நாங்களும் சளைப்பதில்லை. சர்க்காரும் பதில் சொல்வதற்கு ஆட்சேபிப்பது இல்லை. தரிசு நிலங்கள் தங்களுக்கு வேண்டுமென்று நிலம் இல்லாதவர்கள் மனுக்கள் போட்டிருக்கிறார்களா ? அப்படி மனுக்கள் போட்டிருந்தால் கொடுக்கப்படும் நிலங்களை ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் சாகுபடி செய்யாவிட்டால், அவைகளை திரும்பவும் வாங்கி பிறருக்குக் கொடுக்கப்படும் என்று சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மனுக்கள் ஏராளமாக கொடுக்கிறார்கள். அப்படி ஒரு குறித்த காலத்திற்குள் சாகுபடி செய்யாவிட்டால் அந்த நிலங்கள் வேறு ஒருவருக்கு கொடுக்கப்படும் என்று உத்தரவு போடுவது, இன்னும் ஏதாவது கொஞ்சகாலத்திற்குள் அவர்கள் சாகுபடி செய்கிறார்களா, இல்லையா என்று பார்த்துத்தான் செய்யவேண்டும். பூனை சாவதற்குக் கூட 7 'சான்ஸ்' இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

SRI R. SWAMINATHA MERKONDAR : நிலம் இல்லாத ஏழை ஹரிஜனங்கள் தரிசு நிலங்களை 14 வருஷங்களாக சீர்திருத்தம் செய்து அனுபவித்து வந்திருந்தும் அவர்கள் அந்த நிலங்களை இப்பொழுது சாகுபடி செய்வதிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுபற்றி எனக்குத் தெரியாது.

SRI T. KARIA GOUNDER : கனம் தலைவர் அவர்களே, நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பல ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு பட்டாக்கள் கொடுக்காமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? உடனே அவர்களுக்கு பட்டாக்கள் கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பட்டா உடனடியாக கொடுக்க வேண்டுமென்பதுதான் விதி. ஆனால் அது தடைபடுவதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. சில காரணங்கள் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அரசாங்கம் கூடியவரையில் அதை எவ்வளவு துரிதப்படுத்தவேண்டுமோ, அதைச் செய்துகொண்டுதான் இருக்கிறது.

## *Slums*

* 237 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of slums improved in the City and in the mufassals during the year 1956–57; and

(*b*) the amount spent thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) In the Madras City, the City Improvement Trust carried out improvement works in three slums which were taken up for improvement in the previous years at a cost of Rs. 71,233.

The Corporation of Madras carried out improvement works in 68 slums at a cost of Rs. 1,31,850.

In the mufassal areas improvement works were carried out in seven slums at a cost of Rs. 3,935.

SRI A. A. RASHEED : Sir, what is the number of private slums in the City and will the Government improve them also?

THE HON. SRI R. VENKATARAMAN : The scheme is to improve the private slums also in the City. As regards the total number, I do not think I have them here with me.

SRI K. ANBAZHAGAN : சென்னை நகரத்திலுள்ள " ஸ்லம்களில் " கூவம் ஆற்றுப் படுகையில் குடிசை போட்டுக்கொண்டுள்ளவர்கள் மழை காலத்தில் மிகவும் துன்பம் அனுபவிக்கக்கூடிய நிலையில் இருப்பதால் நல்ல இடத்தில் குடிசை கட்டித்தந்து அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க உடனடியாகத் திட்டம் இடப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்தெந்த சேரிகளில் நெருக்கம் அதிகமாக இருக்கிறதோ, அவைகளை முதலில் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு வேறு இடத்தில் வசதிகள் செய்து பிரித்துக் கொடுப்பதற்கு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் கூவம் நதிக்கரையில் இருக்கின்றவர்களுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.



SRI S. PAKKIRISAMY PILLAI : மெட்ராஸ் ஸ்லம் இம்புரூவ்மெண்டு சட்டத்தின் கீழ் எத்தனை பிரத்தியேக குடிசை பிரதேசங்களை இதுவரையிலே சர்க்கார் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள் ? அப்படியில்லையானால் அம்மாதிரி ஆர்ஜிதம் செய்வதற்கு அங்கே இருக்கும் குடிசைப் பிரதேசவாசிகளே முன்வந்தால், கூட்டுறவு ஸ்தாபனத்தில் மூலமாக அவர்களுக்கு உதவி செய்வதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : " ஸ்லம் இம்ப்ரூவ்மெண்டு " சட்டப்பிரகாரம் இதுவரையிலே எந்தவிதமான நிலத்தையும் நாம் ஆர்ஜிதம் செய்யவில்லை. அங்கு இருக்கும் குடிசை வாழ்வோர் ஏதாவது கூட்டுறவு முறையில் ஏற்பாடுகள் செய்வதானால், அதை சர்க்கார் வரவேற்கும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : According to the information given by the Hon. Minister, the City Improvement Trust has improved only three slums whereas the Corporation has improved 68 slums. That shows the marvelous work done by the Corporation of Madras. Will the Government, therefore, hand over all the slums entrusted to the City Improvement Trust to the Corporation of Madras for effecting improvements? 9-20 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : Well, the assumption is incorrect. Slums in the north of Madras are assigned for effecting improvements to the Corporation of Madras while slums situated south of Madras are assigned to the City Improvement Trust. In 1956–57, attention was given more to the slums in north of Madras and therefore the Corporation has improved more slums.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that there are more than 260 slums belonging to Government, Corporation and private agencies of which only a negligible fraction, about 50 slums, have been improved on the whole. At this rate, how long will the Government or the Corporation of Madras or the City Improvement Trust will take to improve the slums? Is it the intention of the Government to put the Madras Slums Improvecent Act into cold storage or is it merely for satisfying the slum dwellers that, that Act has been passed in their favour?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the Government are fully and painfully aware of the immensity of the problem. That is why, when the Second Five-Year Plan was framed, the Government of Madras suggested that a sum of rupees seven crores and thirty-five lakhs should be allotted for this purpose. But owing to financial difficulties, actually a sum of rupees one crore and sixty-eight lakhs have been allotted for this purpose. The Government of India have also promised to render such assistance as they can over and above this allocation. Improvements will be effected to the extent finances are available.

(Hon. Members Sri M. P. Subramaniam and Sri M. Jagannathan rose.)

MR. SPEAKER : This question mainly refers to City slums. Therefore I am giving preference to City M.L.As.

[25th July 1957

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : No doubt the Government are doing something for the improvement of slums. We find fresh slums are coming in large numbers every year. So, what steps the Government propose to take to prevent the creation of new slums?

THE HON. SRI R. VENKATARAMAN : If we are hard on these poor people, it will lead to their greater suffering. Therefore we are trying to see that all those who are occupying the slums are taken out of those slums and given better habitation.

SRI K. PONNAIYAN : ஸார், இந்த "ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் ஆக்ட்" மட்ராஸ் சிட்டிக்கு மாத்திரம்தான் இருக்கிறதா அல்லது மாகாணத்திலுள்ள மற்ற முனிசிபாலிட்டிகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் இந்த ஆக்ட் பொருந்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மாகாணம் முழுவதுக்கும் பொருந்தும்.

SRI K. S. G. HAJA SHERIFF : In addition to clearing the slums in a hygienic manner, will the Government consider the possibility of introducing cottage industries side by side so that the slum people will also lead a convenient life?

THE HON. SRI R. VENKATARAMAN : The improvement of slums itself is a very great problem and preference is given in the first instance to improvement of slums. There are also other schemes for starting small-scale and cottage industries in Madras City and in other areas. That could also be utilized for the improvement of the living conditions of slum dwellers.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இத்தகைய சேரிகளைச் சீர்ப்படுத்துவதற்காக அங்கிருந்து மற்றொரு இடத்திற்கு மக்களை குடியேறச் செய்துவருவதாகத் தெரிகிறது. இது ஒரு கொள்கையாயிருந்தாலும், சேரிகளில் இருக்கக்கூடிய நோய்களைப் பரப்பிக்கொண்டிருக்கக்கூடிய சாக்கடை, கக்கூஸ் இவைகளை சீர்த்திருத்தி உடனடியாக அவர்களுக்கு அவசியமான சுகாதார வசதிகளை செய்து கொடுப்பதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அப்படி இருக்கிறதென்றால் அவை யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : "ஸ்லம் க்ளியரன்ஸ்" என்பது அதுதான். சேரிகளில் பொதுவாக நெருக்கடி அதிகமாக இருக்கின்ற காரணங்களால்தான் நோய் பரவுகிறது. அதனால்தான் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறது. மேலும் அந்த இடங்களில் தண்ணீர் வசதி, குழாய் போடுதல், லைட் போடுதல், சாக்கடையை மாற்றுவதற்கு "அண்டர் கிரௌண்ட் ட்ரெயினேஜ்" முதலிய வேலைகள் எல்லாம் இதில் அடங்கியுள்ள திட்டங்கள்.

SRI V. SANKARAN : மதுரை போன்ற நகரங்களிலும் இம்மாதிரிப்பட்ட மோசமான நிலையில் சேரிகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே சென்னையில் நடத்தப்படுவது போன்ற சேரிகள் அபிவிருத்தி திட்டங்களை மதுரை போன்ற நகரங்களிலும் கொண்டுவருவதற்கு சர்க்கார் அதே அளவு அக்கரை காட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்காகத்தான் "லோ இன்கம் க்ரூப் ஹௌஸிங் ஸ்கீம்" ஆரம்பிப்பதற்கு அங்குள்ள முனிசிபாலிட்டிகளி லிருந்து கடன் கேட்டு சர்க்காருக்கு எழுதப்படுகிறது. இந்த வகையில் அங்கேயும் இத்தகைய திட்டங்களை கொண்டுவரலாம்.



25th July 1957]

SRI S. LAZAR : "ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட்"-க்கு ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த பணம் முழுவதும் சென்னையில் செலவழிக்கப்படுகிறதாக தெரிகிறது. இதற்காக திருச்சி நகர சபையிலிருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அவ்விதம் வந்திருக்கிறதென்றால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : குடிசை வாழ்வோர் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து சென்னையிலும் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஆனால் முனிசிபாலிட்டிகளுக்கும் அவசியப்படுகிற நகரங்களுக்கும் Low Income Group Housing Scheme மூலம் உதவி அளிக்கப்படும்.

*Vedaranyam-Nagapattinam Canal*

* 238 Q.—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state— 9·30 a.m.

(a) whether the Government have any proposal to improve the Vedaranyam-Nagapattinam Canal; and

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes. A scheme for effecting improvements to the Vedaranyam Canal at an estimated cost of rupees seven lakhs was sanctioned in 1951. The estimate has since been revised to Rs. 6·10 lakhs. The scheme was approved by the Working Group of the Planning Commission which recommended to the Government of India that the expenditure on the scheme might be met from the provision under the plan of the Ministry of Transport, Government of India. The Government of India have since replied that as the Central Government is already hard pressed, it would not be possible to make any grant available for this scheme. The question will be further examined.

(b) The scheme provides for : (1) widening the canal to a bed width of 30 feet with side slopes 1 foot to 1 foot and bed level at 3·00 feet.

(2) forming banks on either side of the canal with a view to prevent salt water and flood water entering and spoiling the lands;

(3) improvements to cross masonry works, and drainage sluices in the canal and for provision of two-path bridges; and

(4) the purchase of two dredgers for widening and deepening the canal.

SRI A. VEDARATHNAM PILLAI: இந்த (கனால்) கால்வாய் அபிவிருத்திக்கு 1951-ல் ஒதுக்கப்பட்டு ஸாங்ஷன் செய்யப்பட்ட ஏழரை லட்சம் ரூபாய் என்னவாயிற்று ? அந்தத் தொகையைக் கொண்டு இந்த கால்வாய் அபிவிருத்தி வேலை செய்வதற்கு இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுமா ? அப்படியில்லையென்றால் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : 1951-ல் இந்த ஏழு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது வாஸ்தவம்தான். இருந்தாலும் உப்பு சம்பந்தப்பட்டவரையில் மத்திய சர்க்காரால் எல்லா வேலைகளும் நடத்தப்படுவதால் இந்த வேலையையும் மத்திய சர்க்காரிலிருந்து நடத்தப்படவேண்டும் என்று எழுதப்பட்டது. அப்போது மத்திய சர்க்காரால் சம்மதிக்கப்படாததால் அது கைவிடப்

[25th July 1957

Sri A. VEDARATHNAM PILLAI : இப்பொழுது படித்தவர்களிடையே வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிற காரணத்தினால் இந்த போட்டோ சிஸ்டத்தை ஏற்படுத்தினால் அதனால் இன்னும் அதி வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்ற காரணத்திற்காக இனி எந்தக் காரணத்திற்காகவும் எடுத்துக்கொள்ளமாட்டார்கள் அல்லவா ?

The Hon. Sri V. RAMIAH : போட்டோ சிஸ்டத்தை எடுத்து கொள்ள அரசாங்கத்திற்கு நோக்கம் எதுவும் இல்லை.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : The Hon. Minister has stated in his answer to clause (c) of the main question that negatives have been destroyed and some others were reduced to powder. What will the Government do if the persons who have registered the original documents want a copy of them?

The Hon. Sri V. RAMIAH : Only negatives have been destroyed.

Sri S. LAZAR : கோர்ட்டுகளில் நடக்கக்கூடிய தாவாக்களில் பெரும்பாலானவை, இப்பொழுது வரக்கூடிய் தஸ்தாவேஜ்கள் " நாட் ஜெனிவின் " என்ற முறையில் தாக்கல் செய்யப்படுகின்றன. அந்த முறையைக் கவனிக்கும்போது அதனுடைய போட்டோ காப்பி இருந்தால்தான் அதை சரிவர செய்ய முடியுமேயொழிய மற்ற எந்த முறையிலும் கோர்ட்டார் நீதி வழங்க முடியாதபடி இருக்கிறார்கள். ஆகவே இந்த சிஸ்டத்தை மறுபடியும் ரிவைவ் பண்ண சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்குமா ?

The Hon. Sri V. RAMIAH : We are not going to do it.

Sri K. RAMACHANDRAN : Atleast in special cases, where the parties are willing to pay, why not the Government specially arrange for giving photo-stat copies when the parties want them for reasons of their own?

Mr. SPEAKER : The Government have already told the House that they are not going to do it. So, there is no point in asking for it again. If the Hon. Minister is prepared to answer it, I have no objection.

### *Palm-gur Co-operative Societies*

*240 Q.—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of Palm-gur Co-operative Societies functioning in the State, districtwar; and

(b) the amount invested by the Government so far in these societies districtwar?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) A statement(a) showing the number of Palmgur Co-operative Societies functioning in this State, districtwise is placed on the table of the House.

(b) The Government have not invested any amount in these Societies.

Sri T. T. DANIEL : May I know whether these Co-operative Societies maintain a separate register to show the actual number of the palmyra climbers and if they do not maintain such a register, will the Government be pleased to issue instructions to these societies to maintain it so that we can understand how far this scheme is beneficial to the poor tree climbers?

[a] Printed as Appendix I on pages 449 infra.



25th July 1957]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would like to have a separate question.

### *Rural dispensaries*

*241 Q.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of rural dispensaries closed in the past two years;

(b) the number among them that were under the management of district boards; and

(c) the number closed for want of qualified medical officers?

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) Ninety-one.

(b) Ninety-one.

(c) Thirty-six at present.

Sri K. SATTANATHA KARAYALAR : இப்பொழுது நடத்திக் கொண்டிருக்கிற ரூறல் டிஸ்பென்ஸரிகள் டாக்டரின் மேற்பார்வையில் இருக்கிறதா ? அல்லதுஅங்கு கம்பௌண்டர்கள் மாத்திரம்தான் இருக்கிறார்களா ? அப்படியானால் அது எத்தனை ?

The Hon. Sri M. A. MANICKAVELU : பொதுவாக வைத்தியர்கள் கிடைக்கிறதில்லை. ஆகையால் சில ஆஸ்பத்திரிகள் அங்கே மூடப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் டாக்டர்கள் இல்லாவிட்டாலும் ஏதோ மருந்து கொடுக்க கம்பௌண்டர்கள் இருந்தாலும் பரவாயில்லை என்று சிலர் சொல்கிறார்கள். ஆகவே சில இடங்களில் அப்படி இருக்கலாம்.

Sri T. L. SASIVARNA THEVAR : சமீபத்தில் நடந்த தேர்தலிலே நம் மாட்டுக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ராமனுதபுரம், நெல்லை மாவட்டங்களில் வோட்டு பெறுவதற்காக ஜில்லா போர்ட் ஆஸ்பத்திரிகளை திறக்க உத்தரவு போட்டதாகக் கேள்விப்படுகிறோம். அப்படி திறக்கப்பட்ட ஆஸ்பத்திரிகள் எத்தனை ?

Sri N. R. THIAGARAJAN : மாட்டுக் காங்கிரஸ்காரர்கள் என்றால் என்னவென்று எனக்குப் புரியவில்லை.

Sri T. L. SASIVARNA THEVAR : எங்கள் பகுதியில் காங்கிரஸை மாட்டு காங்கிரஸ் என்றும் சீர்திருத்த காங்கிரஸை யானைக் காங்கிரஸ் என்றும் கூறுவார்கள்.

Mr. SPEAKER : உங்கள் ஊரில் இருக்கிற ப்ராக்டிஸ் மற்றவர்களுக்கு எப்படி தெரியும். ஆகவே கேள்வியை சரியானமுறையில் கேட்க வேண்டும்.

Sri N. R. THIAGARAJAN : இது எங்களுக்கு கௌரவக் குறைச்சலாகும். இதை வாபஸ் வாங்கவேண்டும்.

Mr. SPEAKER : The hon. Member has explained what has happened and I have told him that he should properly frame his questions in future.

[25th July 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : தேர்தல் நடந்து நாலைந்து மாதங்களாகிறது. தேர்தல் கால சம்பவங்கள் இப்பொழுது மறந்து கொண்டு வருகிறது. அரசாங்கம் அதிகப்படி கிராமங்களில் வைத்தியசாலைகள் ஏற்படுத்துவதற்கு, தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ப்ரைமறி சென்டேர்ஸ் என்றும் ஸப்ஸிடியரி சென்டேர்ஸ் என்றும் ஆங்காங்கே ஆஸ்பத்திரிகள் வைக்க ஏற்பாடு செய்து கொண்டு இருக்கின்றது.

SRI P. S. CHINNADURAI : வைத்திய கல்லூரிகளில் பட்டம் பெற்ற டாக்டர்கள் கிராமங்களில் வசிப்பதற்கு விருப்பம் அற்றவர்களாக இருப்பதால் கிராம டிஸ்பென்ஸரிகளுக்கு போதிய டாக்டர்கள் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, பட்டம் பெற்று வெளி வருகிற டாக்டர்களை கட்டாயமாக இரண்டு அல்லது மூன்று வருடங்கள் என்று ஒரு காலவரையறை ஏற்படுத்தி அந்தக் காலத்தில் கிராமங்களில் வைத்திய சேவை செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்ய இந்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தமாதிரி யோசனை சொல்லப்பட்டுவருகிறது. அதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

9-45 a.m. DR. (SRIMATHI) T.S. SOUNDARAM RAMACHANDRAN : காலவரையறையில்லாமல் 4, 5, 6 வருஷங்களாக இந்த டிஸ்பென்ஸரிகளை மூடி வைத்திருப்பதை நோக்கும்போது, இவைகளைக் கடைசியாக, அதாவது ஒன்ஸ் பார் ஆல்-ய் மூடிவிட்டு அந்த இடங்களில் மெடர்னிடி அஸிஸ்டென்டுகளை நியமித்து அவைகளை மெடர்னிடி சென்டர்களாக மாற்றுவதற்கு யோசிக்கலாமா ? அல்லது மொபைல் வான் இருக்கிறாற்போல், சமீபத்திலுள்ள ஆஸ்பத்திரியிலிருந்து விஸிடிங் டாக்டர்ஸ் நியமித்து அவர்கள் அந்த கிராமங்களுக்கு வாரத்திற்கு இரண்டு தடவையோ அல்லது மூன்று தடவையோ போகிறாப்போல ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தால் ஏற்பாடு செய்ய முடியுமா ?

THE HON. SR. M. A. MANICKAVELU : நான் சொன்னேன், 90 ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டன என்று. சுமார் 60 ஆஸ்பத்திரிகள் மறுபடியும் திறக்கப்பட்டுவிட்டன. இப்போது 36 ஆஸ்பத்திரிகள்தான் மூடிக்கிடக்கிறது. இம்மாதிரி வைத்தியர் கிடைக்காததால், கனம் அங்கத்தினர் சொன்ன யோசனையையும் கவனிக்கலாம். கனம் அங்கத்தினரோடு கலந்து பேசி என்ன செய்யமுடியும் என்று பார்க்கிறேன்.

SRI T. M. NALLASWAMI : கிராம ஆஸ்பத்திரிகள் அதிகப்படியாக மூடப்பட்டிருப்பதற்குக் காரணம் சர்க்கார் கொடுக்கக் கூடிய சப்ஸிடியும் அல்லது ஜில்லா போர்ட் கொடுக்கக் கூடிய சப்ஸிடியும் மிகவும் குறைவாக இருப்பதால் நல்ல டாக்டர்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இந்த சப்ஸிடியை அதிகப்படுத்தினால் டாக்டர்கள் கிடைக்க வசதியாயிருக்கும். இப்படி அதிகப்படுத்த சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்குமா ?.

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது கொடுக்கிற சப்ஸிடி மெடிகல் கிராஜுவேட்டுகளுக்கு 900 ரூபாய். லைஸன்ஷியேட்டுகளுக்கு 750 ரூபாய். இதை அதிகப்படுத்த வேண்டுமென்ற திட்டமும் இருக்கிறது. அதை இந்த ஆண்டிலேயே கொண்டுவரவிருந்தோம். ஆனால் முடியவில்லை. இப்போது யோசனையில் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : In these days when people are suffering very much for want of sufficient medical facilities, does it not redound to the discredit of the Government to close down as many as 90 Rural Dispensaries? Will the Government therefore take sufficient steps to manufacture new doctors and put them in service?

MR. SPEAKER : I would like to remind the hon. Member that during question-time, when putting questions, insinuations are not permitted. I should like to warn hon. Members that they may put supplementaries for eliciting information but they should not insinuate anybody. The Hon. Minister may reply to that part of the question which does not contain the insinuation.





THE HON. SRI M. A. MANICKAVELU : Doctors cannot be manufactured. They can be educated and trained and the Government are taking all steps to do that.

SRI A. GOVINDASAMY : போதுமான டாக்டர்கள் இல்லாததால் தான் இந்த ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுவிட்டன என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள் அதனால் மீண்டும் எல்.எம்.பி. கோர்ஸை கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது வேறு பொதுப் பிரச்னை. இப்போது இந்த வைத்தியம், சுகாதாரம் இதையெல்லாம் கவனித்து என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யலாம்.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த கிராம ஆஸ்பத்திரிகள், இந்த மாகாணத்தில் உள்ளதில் 50 சத வீதம் கூட ஒழுங்காக நடக்கவில்லை. அவைகளில் பல வருஷக்கணக்காக மூடிக் கிடக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் திறந்து நடத்த செகண்ட் பிளானில் ஏதாவது திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ?

MR. SPEAKER : இப்பொழுதுதான் அதில் திட்டம் இருக்கிறதென்று சொன்னாரே.

THE HON. SRI M. A. MANICKAVELU : செகண்ட் பிளானில் வைத்திய விஸ்தரிப்பிற்காக அநேக திட்டங்கள் இருக்கின்றன.

SRI N. R. THIAGARAJAN : ஸார், டாக்டர் வேலைக்குப் படித்துவிட்டு அந்த வேலையைப் பார்க்காமல் வேறு வேலைக்குப் போய்விடுகிறார்கள். உதாரணமாக, வேலையை விட்டுவிட்டு இங்கு கூடப் பல டாக்டர்கள் வந்துவிட்டார்கள். நிஜ டாக்டர்களை ஆஸ்பத்திரிகளில் நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

MR. SPEAKER : இப்போதுதான் சொன்னேன். இன்சினுவேஷன் இருக்கக்கூடாது என்று. அரசாங்கத்தை மாத்திரமல்லாமல் டாக்டர்கள் மீதுகூட இன்சினுவேஷன் இருக்கக்கூடாது. (சிரிப்பு.)

*Cashewnut Plantation*

* 242 Q.—SRI K. R VISWANATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the steps taken for the extension of cashewnut plantation in the East Coast districts like Tanjore, Tiruchirappalli and South Arcot; and

(b) whether the Government propose to start one cashewnut processing factory in South Arcot district?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) (i) A scheme for encouraging large scale planting of cashew in the districts of Chingleput, South Arcot, Tiruchirappalli, Tanjore and Kanyakumari through conducting crop competition has been recently sanctioned by the Government. Under the scheme, cash prizes are proposed to be awarded for the ryots who plant cashew in their

lands and whose holdings are adjudged to have either established or planted the maximum number or the maximum percentage of cashew plants at the end of one year. An area of about 2,000 acres is expected to be planted with cashew in the above districts during 1957-58, as a result of the operation of this scheme.

(ii) A proposal for procurement and distribution of cashew seednuts in the east coast districts on a " no loss no profit basis ", by the extension wing of the Agricultural Department to enable large scale planting of cashew to be taken up by ryots on their own, is also under consideration.

(iii) The Forest Department has also taken up large scale planting of cashew in forest areas in Chingleput, South Arcot and other districts. In the Second Five-Year Plan period, the Forest Department proposes to raise cashew over an area of 42,750 acres out of which it is reported that 9,060 acres have already been planted in 1956-57.

(b) No, Sir.

**Sri P. G. KARUTHIRUMAN :** சபாநாயகர் அவர்களே, நேற்று திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் பேசும்போது தேர்தலில் அடுக்கு மொழிக்காக முந்திரி தேய்கிறது என்று சொல்லவில்லை, முந்திரியிலிருந்து பிளாஸ்டிக் செய்யலாம் என்று சொன்னார். ஆகையால் பிளாஸ்டிக் தொழிலை நடத்தலாம் என்பதில் ஏதாவது உண்மை இருக்கிறதா ?

Mr. SPEAKER : How does it arise from this question? I rule it out of order.

(Sri K. Anbhzhagan rose.)

Mr. SPEAKER : I have ruled that question out of order. If the hon. Member has got any other question he may put it.

**Sri K. R. VISWANATHAN :** முந்திரிக் கொட்டையிலிருந்து இறக்கப்படும் எண்ணெயில் பிளாஸ்டிக் சாமான்கள் செய்யப்படுகின்றன. அமெரிக்காவுக்கு அந்த எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கு செய்யப்பட்ட பிளாஸ்டிக் சாமான்கள் இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இனி இந்த எண்ணெயைப் பயன்படுத்தி பிளாஸ்டிக் சாமான்கள் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அப்படி செய்வதானால் திருச்சியில் உடையார்பாளையம், தென்னாற்காடு தஞ்சைமாவட்டங்களுக்கு மத்திய பாகமாயிருப்பதால் அங்கு அந்தத் தொழிற் சாலையை அமைக்க முடியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** சபாநாயகர் அவர்களே, சர்க்கார் செய்கிற காரியங்கள் என்னென்ன என்பதை கேள்விக்குப் பதில் சொல்லுகிறோம். என்னென்ன பொருளிலிருந்து என்னென்ன செய்ய முடியுமென்று நிபுணர்கள் கண்டுபிடிக்கவேண்டும் எனக்கு அந்த ஆற்றல் இல்லை. இந்த முந்திரி எண்ணெயிலிருந்து பிளாஸ்டிக் சாமான்கள் செய்ய முடியுமா என்பதற்கு ஒரு தனிக் கேள்வி கேட்டால் அதைப் பரிசீலனை செய்து நிபுணர்கள் மூலமாக பதில் தெரிவிக்கிறேன்.

**Sri N. S. RAMALINGAM :** தஞ்சை முந்திரி குணத்திலும் தரத்திலும் சிறந்ததாயிருப்பதால் அங்கு இந்தத் தொழிலை ஆரம்பிக்க அரசாங்கம் முன் வருமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** என்ன தொழில் என்று கனம் அங்கத்தினர் குறிப்பிட்டால் தேவலை.





*Hostels for Harijans*

* 243 *Q*.—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of hostels run by the Government and by private individuals for the benefit of Harijans and the number of hostels for Harijan girls among them; and

(b) the number of Harijan boarders residing in those hostels and the number of Harijan girls among them?

The Hon. Sri P. KAKKAN : (a) Twenty-five hostels were run by the Government and 242 hostels were run by private individuals during 1956-57 for the benefit of Harijans. Among them 10 hostels were run by the Government and 43 hostels were run by private individuals for Harijan girls.

(b) Eight thousand eight hundred and thirty-seven Harijan boarders were residing in those hostels of which 1,674 were Harijan girls.

**Sri P. G. MANICKAM :** சபாநாயகர் அவர்களே, ஹரிஜன ஹாஸ்டல்களிலுள்ள காலேஜுகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு போர்டிங் கிராண்ட் கொடுக்கப்படுவதை போன்று உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும் போர்டிங் கிராண்ட், அதாவது பாக்கெட் மணி கொடுக்க ஹரிஜன் வெல்பேர் டைரக்டரால் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் புள்ளி விவரம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை சர்க்கார் எப்போது அமுலுக்குக் கொண்டு வருவார்கள்.

**The Hon. Sri P. KAKKAN :** கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

**Sri A. GOVINDASAMY :** என்னுடைய தொகுதியாகிய வளவனூர், வழுதாவூர் முதலிய இடங்களிலுள்ள ஹைஸ்கூலில் சுமார் 100 மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கு ஒரு ஹாஸ்டலை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ? 9-50 a.m.

**The Hon. Sri P. KAKKAN :** கனம் அங்கத்தினர் கேட்டுள்ள கேள்வியைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**Sri K. RAMACHANDRAN :** ஹாஸ்டல்கள் நடத்துவதில் சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்கள் என்றும் தனியார் நடத்தும் ஹாஸ்டல்கள் என்றும் இரண்டு விதமாகச் சொல்லப்பட்டது. சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்களில் எவ்வளவு ரூபாய் ஒரு பையனுக்குச் செலவு செய்யப்படுகிறது. தனியார் நடத்தும ஹாஸ்டல்களில் ஒரு பையனுக்கு எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்படுகிறது. தனியார் நடத்தும் ஹாஸ்டல்களில் ஏதாவது சிரமம் இருந்தால் அவைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN :** தனியார் நடத்தும் ஹாஸ்டல்களில் படிக்கும் மாணவர்களுக்கு 15 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதே போல் சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்களிலும் செலவு செய்யப்படும். அதிகமாகச் செலவு ஏற்பட்டால் அதையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும். தனியார் நடத்தும் ஹாஸ்டல்களில் அதிகமாக செலவு ஏற்பட்டால் ரூபாய் 15-க்கு அதிகமாகக் கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. C. MUTHUKUMARASWAMI :** சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்களில் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 15 சத விகிதமும், முற்பட்ட வகுப்பினருக்கு 10 சத விகிதமும் இடம் ஒதுக்க வேண்டும் என்று ஒரு உத்திரவு இருக்கிறது, முற்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்

[25th July 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : The scheme was investigated I admit. Now all the schemes to be taken up under the Five-Year Plan in that district are being considered.

*Zip Industries (Private), Limited, Chingleput*

* 246 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to settle the dispute between the workers and the management of Zip Industries (Private), Limited, Chingleput, due to the retrenchment of some workers?

THE HON. SRI R. VENKATARAMAN : The Labour Officer, Madras II who held conciliation, reported that no settlement could be reached between the management and the workers in respect of the dispute. Government have, referred the following two issues to the Labour Court, Madras for adjudication :—

(1) whether the closure of the factory is *for bona fide* reasons, and

(2) fixation of the quantum of compensation due to the workers affected by the closure.

*Mattu varagam*

* 247 Q.—SRI P. S. SANTHANAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) what amount is being given to each agriculturist as *mattu varagam*; and

(*b*) whether this amount is given to the persons who actually cultivate the land or to the landholders?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The maximum amount of loan admissible for the purchase of cattle for agricultural work is Rs. 1,000 per individual.

(*b*) The above cattle loan is given to any agriculturist whether he is landholder or cultivating tenant, provided the application is bona fide and also provided the applicant offers adequate security for the loan.

SRI K. VINAYAKAM : Sir, what is the process that is adopted by the Government to find out whether the receipient has actually purchased the cattle? Is any follow-up method adopted to find out whether it has been usefully utilized or utilized for other purposes than that for which it is granted?

THE HON. SRI M. A. MANICKAVELU . It is now proposed to implement some method of follow-up and see whether it is actually utilized for purchasing cattle because allegations are made that it is not utilized for the purchase of cattle but for other purposes.



25th July 1957]

*Fertilizer Commission*

* 248 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the report of the Fertilizer Commission of India headed by Shri Mukherji that visited the Tiruchirappalli district in particular in 1956 for the find of Gypsum; and

(*b*) if so, the findings of the Commission?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) No Fertilizer Commission sponsored by the Government of India visited Tiruchirappalli district in the year 1956. The hon. Member presumably refers to the visit in May 1956 of Dr. S. K. Mukherji, the then Superintending Engineer (Chemical) of the Lignite Investigation Organization, along with Shri D. P. Garge, Gypsum Development Officer of Sindhri and his staff, for a comprehensive study of the gypsum deposits in the district. The investigation was made at the instance of the then Chief Executive Officer, Lignite Investigations. A copy of the report submitted by Shri Garge was received by this Government. The contents of that report are however 'confidential'.

*Fertilizer plant*

* 249 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any proposal to start a Fertilizer Plant at Neyveli; and

(*b*) if so, wherefrom the required quantity of Gypsum will be supplied for the manufacture of fertilizers?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. The Government of India have agreed, in principle, to the establishment of a fertilizer plant at Neyveli for producing fertilizers with a Nitrogen content of 70,000 tons per annum in the shape of Urea.

(*b*) No gypsum will be required for the manufacture of Urea.

SRI N. R. THIAGARAJAN : *'சிந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூறினார்களே. அது அடுக்குமொழிதான், ஆனால் சரியாகச் சொல்லவேண்டுமானால், "சிந்திரியில் தொழில் சிறக்கிறது" என்று கூறியிருக்கவேண்டும்* . . .

MR. SPEAKER : Where is 'Sindri' here? May I ask the hon. Member where is the word 'Sindri' in this question? I would make a request to hon. Members to confine their supplementary questions to the main question. I rule the hon. Member's supplementary question out of order.

*Monozite Companies in Kanyakumari district*

* 250 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state— 10-00 a.m.

(*a*) how many companies are at present working in Kanyakumari district for collecting monozite, etc.;

[25th July 1957

களுக்கு பணம் கிராண்ட்டாகக் கொடுப்பதாக இருந்தால் அதை ஹரிஜன மான்யத்திலிருந்து ஹரிஜன டைரக்டர் மூலமாக கொடுக்கப்படுகிறதா அல்லது அவர்களுக்கு என்று சர்க்கார் தனியாக ஒதுக்கி இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்தால் பின்தங்கியவர்களுக்கும் கொடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : ஹரிஜன ஹாஸ்டல்களில் சக்கிலியர், குறவர் குழந்தைகள் ஆண், பெண்கள் ஒன்று அல்லது இரண்டு பேர்கள் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். பிற்போக்கான சமூகத்தில் மிகவும் பிற்போக்கானவர்கள் இருந்தால் அவர்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டும். அப்படி சக்கிலியர்களிலும் குறவர்களிலும் மிகவும் பிற்போக்கானவர்கள் இருந்தால் அவர்களையும் ஹரிஜன ஹாஸ்டல்களில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கை வகுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜனங்களில் எந்த விதமான பாகு பாட்டையும் அரசாங்கம் விரும்பவில்லை. யார் யாரைக் கவனிக்க வேண்டும் என்று அரசாங்கத்துக்குத் தெரியும். அப்படியே எல்லா ஹாஸ்டல்களுக்கும் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது.

SRI N. MARUDACHALAM : கிராமங்களில் இருக்கக் கூடிய ஹரிஜன ஹாஸ்டல்களில் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு இடம் கிடைக்கிறது. அதேபோல் நகரங்களில் இருக்கக் கூடிய மாணவர்களுக்கு அங்கே இடம் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அங்கங்கே இருக்கக் கூடிய ஹரிஜன மாணவர்களுக்கு ஒரு பகுதி கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அப்படி ஒதுக்கிவிட்டு மற்றவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM : ஹரிஜன ஹாஸ்டல்களில் பிற்பட்ட வகுப்பினர்களில் இவ்வளவு சத விகிதத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது என்று சொன்னார்கள். சர்க்காரால் நடத்தப்படும் மறவர் ஹாஸ்டலில் ஏன் ஹரிஜனங்கள் சேர்க்கப்படவில்லை. அப்படிச் சேர்க்க வேண்டும் என்று சொல்ல அரசாங்கம் முன்வருமா என்பதைக் கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : எந்தத் தனிப்பட்டவர், எந்தத் தனி ஜாதியார் நடத்தும் ஹாஸ்டல்களிலும் ஹரிஜனங்களில் இவ்வளவு பேர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதில் ஏதாவது விவகாரங்கள் இருந்தால் அதைப் பற்றி கவனிக்கப்படும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : 225 ஹாஸ்டல்களை நடத்திவருவதாக கனம் அமைச்சர் கூறினார். கன்னியாகுமரி ஜில்லாவில் ஏதாவது ஹாஸ்டல்கள் திறக்கப்பட்டிருக்கிறதா ? அங்குள்ள ஹரிஜன மாணவர்களுக்கு என்ன உதவி செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கன்னியாகுமரி ஜில்லா சென்னையுடன் இணைக்கப்பட்ட பிறகு இரண்டு ஹாஸ்டல்களை 1957-58-ல் நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*Assistant Government Pleader's post in Kanyakumari district*

* 244 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to abolish the Assistant Government Pleader's post in Kanyakumari district; and



25th July 1957]

(b) whether the Government have taken any steps to give help to the advocates of the ex-Travancore-Cochin State High Court belonging to the Kanyakumari district to get themselves enrolled in the Madras High Court?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Such a proposal was considered in connection with the reorganization of the set up of Law Officers in the district, but according to the orders issued in the matter, the post is being continued temporarily under a different designation, viz., "Public Prosecutor".

(b) The answer is in the affirmative.

*Kuzhithurai Drinking Water Scheme in Kanyakumari district.*

* 245 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the total cost of the Kuzhithurai Drinking Water Scheme in Kanyakumari district; and

(b) whether the Government propose to take up this scheme for execution in the current year?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Rupees 6·7 lakhs.

(b) The question of drawing up a list of water-supply schemes to be taken up in the Kanyakumari district during the remaining years of the Second Five-Year Plan period is under consideration.

SRI A. NESAMONY : அங்கே கம்யூனிடி டெவலப்மெண்ட் ப்ராஜக்ட் அதிகாரிகள் இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து கவர்ன்மெண்ட்டுக்கு சமர்ப்பித்து அந்தத் திட்டங்களில் ஏதாவது இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா ? அதற்கு டெக்னிகல் சாங்ஷன் கொடுத்து அட்மினிஸ்ட்ரேடிவ் சாங்ஷன் மாத்திரம் கொடுக்க வேண்டி இருந்ததாக தெரியவருகிறது. அந்தத் திட்டம் இந்த பிரதேசத்தில் உண்டா என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது இப்போது எனக்குத் தெரியாது. அங்கே முன்பு இருந்த அரசாங்கத்தினுடைய திட்டம் அது. அது அங்கே இருக்கக் கூடிய ஜில்லா கலெக்டரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அவர் ரிபோர்ட் அனுப்பும்போது அதைப் பற்றி விவரங்கள் எல்லாம் வரும்.

SRI A. NESAMONY : இந்த கம்யூனிட்டி டெவலப்மெண்ட் ப்ராஜக்ட் அதிகாரிகள் எவ்வளவோ திட்டங்களைத் தயாரித்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் இந்த அரசாங்கத்தினிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது கலெக்டரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப் பற்றிச் சொல்வதற்கு எனக்கு நோட்டீஸ் வேண்டும்.

SRI T. T. DANIEL : Sir, are the Government aware that this scheme was completely investigated by the erstwhile Travancore-Cochin State, that it was recommended to the Planning Commission, that it was finally dropped and also that it is now ripe for execution?

[25th July 1957

## II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGES FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House that I have received the following messages, dated 23rd and 24th July 1957 from the Governor of Madras :—

1. " In pursuance of Article 207, clause (1) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax and Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957.

2. " In pursuance of Article 207, clause (1) read with Article 199 (1) (d) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Appropriation Bill, 1957, and in pursuance of clause (3) of Article 207, I also recommend to that Assembly the consideration of the said Bill."

## III.—CALLING ATTENTION TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES, VIZ., THE LOCKOUT IN THE LOYAL TEXTILE MILLS, KOVILPATTI.

MR. SPEAKER : The hon. Member, Sri P. S. Chinnadurai, has given notice that under rule 40 of the Assembly Rules, he will call attention of the Hon. Minister to a matter of urgent public importance, viz., the Lockout in the Loyal Textile Mills, Kovilpatti. He will now explain the matter.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கோவில்பட்டியிலுள்ள "லாயல் டெக்ஸ்டைல்ஸ்" என்ற பஞ்சாலையை அதன் நிர்வாகிகள் சென்ற இரண்டு வாரங்களுக்கு முன்பு கதவடைப்பு செய்துவிட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. நமது ராஜ்யத்தின் இன்றைய நிலைமையில் இத்தகைய கதவடைப்புக்களைப் பற்றி அதி முக்கியமாகவும் அவசரமாகவும் கவனிக்க வேண்டும். அந்தக் கதவடைப்பை நீக்குவது சம்பந்தமாக இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளை நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : The management of Loyal Textile Mills, Limited, Kovilpatti, entered into an agreement with the Kovilpatti Labour Union before the Commission of Labour on 25th February 1957 regarding workload and wages for the different categories of workers. This settlement was in force from 1st March to 16th May 1957. During this period, workers belonging to rival unions, viz., Kovilpatti Labour Union and Kovilpatti Textile Workers' Union did not give full co-operation for the implementation of the settlement.

The working of the settlement was consequently suspended from 15th May 1957 and the management reverted to old workload and wages from 16th May 1957.

Meanwhile the Unions which were not parties to the dispute represented to the Labour Officer, Tirunelveli and the Commissioner of Labour regarding the difficulties experienced during the implementation of the settlement.



25th July 1957] [Sri R. Venkataraman]

The Labour Officer held discussions on the 1st, 2nd and 3rd June 1957 and persuaded the parties to come to a settlement. While the Unions insisted that the management should rectify the defects pointed out by them in the various departments before implementing the settlement, the management persistently refused to consider any such representation and asked the representatives to agree to the terms of settlement in toto. The discussions were not, therefore, fruitful.

On 29th June 1957, the management informed the Labour Officer that they would introduce the new workloads and wages as per the terms of settlement with effect from 9th July 1957, as the workers assured full co-operation in the matter. However, the management did not give effect to the settlement but carried on as usual with the old workloads and wages. Some of the workers are reported to have stages a stay-in-strike and disturbed others also. The management subsequently declared a lock-out at 11-45 a.m. on 10th July 1957.

The Labour Officer held discussions with the parties on 11th July 1957. The two Unions (which were not parties to the settlement) stated that they had no connection with the disturbances on 9th July 1957 and assured that they were prepared to agree to the implementation of the terms of settlement provided the management would rectify the defts pointed out by them.

The management and the I.N.T.U.C. Union however insisted upon the implementation of the settlement in toto.

The Labour Officer thereupon suggested that the terms of settlement might be implemented with an assurance for the formation of a Standing Committee which would go into the difficulties brought to its notice.

The Government meanwhile deputed the Assistant Commissioner of Labour to proceed to Kovilpatti and resolve the dispute amicably. The Assistant Commissioner of Labour accordingly left for Kovilpatti on 15th July 1957 and as a result of the conciliation taken up by him with the parties an amicable settlement has been effected. The two unions, Kovilpatti Labour Union (Chandravilas Buildings) and Textile Workers' Union have ratified the agreement, dated 25th February 1957, between the management and Kovilpatti Labour Union (I.N.T.U.C.) subject to certain modifications indicated in the memorandum of settlement. The management have also reopened the mills on 19th July 1957. The mills are now running smoothly.

(b) the value of the share held (i) by the Government; and (ii) by private individuals;

(c) how many tons of monozite, etc., have been collected during the last five years; and

(d) the approximate value thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Two.

(i) The Travancore Mineral Concern No. 2.

(ii) Messrs. Hopkin & Williams (Travancore), Ltd., Manavalakurichi.

(b) *The Travancore-Mineral Concern No.* 2 is owned by the Government of Madras. There are no private share-holders.

*Hopkin and Williams, Ltd.*, is a limited concern having its registered office in London. There are no Indian (Government or private) share-holders in it.

(c) These details are available in respect of the Travancore-Mineral concern only.

Monozite—3,077 tons.

Illmenite—36,403 tons.

(d) Monozite—about £25 per ton.

Illmenite—about £4–5–6 per ton.

SRI T. T. DANIEL : Is it a fact that there was a Board for the Travancore Mineral Concern No. 2 on which there were three representatives of the erstwhile Travancore-Cochin State and three representatives of the Central Government? Will the Madras Government be pleased to move the Central Government to have some of our representatives on the Board?

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under negotiation.

**SRI A. NESAMONY :** மணவாளக்குறிச்சியில் மானஸைட் கம்பெனிகள் வேலை செய்யும் இடத்தில், திருவிதாங்கூர் மினரல் கம்பெனியின் கட்டிடத்திற்குள்ளே ' ரூட் ஆயில் ' தயாரிப்பதற்காக ஒரு ' மெஷனரி ' நிறுவுவதற்கு ஸ்தலம் ஒதுக்கப்பட்டதுடன் அஸ்திவாரமும் இடப்பட்டதும், அதற்குப் பிறகு 'மெஷினரி'-யை அன்று அந்தப் பிரதேசத்திற்கு இருந்த திருவிதாங்கூர்-கொச்சி சர்க்கார் சவரைக்கு கொண்டுபோனதும் இந்த சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால், அந்த மெஷனரியை திரும்பவும் வரவழைத்து மணவாளக்குறிச்சியில் ஸ்தாபித்து அங்கே ரூட் ஆயில் தயாரிப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put.

*Madras Union of Journalists*

* 251 *Q.*—SRI T. S. RAMASWAMI PILLAI : Will the Hon. the Minister for Industries, be pleased to state—

(a) whether the Government have decided not to refer the dispute raised by the Madras Union of Journalists with the



management of " Swadeshamitran, Limited " in regard to the payment of arrears of increments to the working Journalists employed in the concern to adjudication;

(b) if so, the reasons therefor;

(c) whether it is a fact that the management refused to allow the union representatives to examine their balance sheets during the conciliation proceedings; and

(d) what action the Government propose to take to rectify this injustice?

THE HON. SRI R. VENKATARAMAN : (a), (b) & (d) The Government have now referred the dispute to the Labour Court for adjudication.

(c) No demand was made on behalf of the Union to examine the balance sheets of the Company.

*District Planning Board, Tirunelveli*

* 252 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the District Planning Board, Tirunelveli has submitted any proposals to open a Polytechnic school in Tirunelveli district during the Second Five-Year Plan period; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

**SRI T. SAMPATH :** தஞ்சாவூரில் ஒரு பாலிடெக்னிக் பள்ளியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.

**SRI S. B. ADITYAN :** இப்போது . . . .

MR. SPEAKER : This is with regard to Tirunelveli. If hon. Members ask questions about every district, how is it possible to answer. They may confine their supplementaries to the main question.

**SRI S. B. ADITYAN :** திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு பாலிடெக்னிக் பள்ளியை இந்த வருஷத்திலேயே அமைப்பதற்கும், அதற்கு வேண்டிய பணத்தைக் கொடுப்பதற்கும் இந்தியா சிமெண்டு கம்பெனியார் தயாராயிருக்கிறார்கள். ஆகையால், இது விஷயத்தில் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கொஞ்சம் அவசரப்படுத்தி, இந்த ஆண்டிலேயே ஆரம்பிப்பதற்கு அந்த அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பாலிடெக்னிக் பள்ளியை ஏற்படுத்துவதற்கு பணம் அவசியம் என்றாலும், பணத்தை வைத்துக்கொண்டு அதை உடனடியாக ஏற்படுத்திவிட முடியாது. அதை எவ்வளவு துரிதமாக ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு துரிதமாக ஏற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER : Questions are over.

**IV.—GENERAL DISCUSSION ON THE STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN THE SECOND HALF OF THE YEAR 1953-54.**

MR. SPEAKER : Now we shall take up the Statement of Demands for Grants for Excess Expenditure in the second half of the year 1953-54. We shall now proceed with the general discussion and at 1-30 p.m. I shall take the vote. Does the Hon. Finance Minister want to make any statement now?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

MR. SPEAKER : The Statement is already before the House. If any hon. Member wants to take part in the general discussion he is welcome. Otherwise, I shall proceed to the next item on the agenda. The Hon. Finance Minister laid the Statement before the House on the 22nd of this month. The discussion on it is scheduled to take place to-day. At the end of the discussion, I shall take the vote on the six items mentioned in the Statement. But I have to point out that the Public Accounts Committee which examined these Demands felt that it was not correct to incur this excess expenditure without the sanction of the Legislature and that the sanction of the House should be obtained. Therefore the statement is before the House. Of course it relates to items for the year 1953-54. All the same this has got to be discussed by both Houses. The Council will discuss this to-day at 10-30. There is no point in taking votes here before the Council discusses the demands. I propose to wait for the Council to finish the discussion. I will take up voting at 1-30 p.m. By then I hope the Council would have finished discussion. Unless these are passed here, they cannot be included in the Appropriation Bill that will come up here to-morrow. There cannot be much for hon. Members to say. The expenditure was incurred some three years ago. But, if hon. Members want to say anything, I have no objection to call upon hon. Members to speak. Otherwise, I shall proceed to the next item on the agenda.

10-10 a.m. SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உபரிமான்யக் கோரிக்கையைப் பற்றி சில வார்த்தைகள் கூறலாம் என்று நான் கூறுகின்றேன். 1953-54-ம் வருஷத்திற்காக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள மான்யக் கோரிக்கைகளுக்கு அப்பாற்பட்ட செலவுகளுக்காக இந்த உபரி மான்யம் கோரப்படுகிறது என்று நான் நினைக்கின்றேன். அந்த வருஷம் ஒரு அசாதாரணமான வருஷம். ஆந்திர பிரதேசம் பிரிந்த பின்னர், அந்த வருஷத்திலேயே ஒரு சப்ளிமெண்டரி பட்ஜெட்டும் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். இருந்த போதிலும் ஆறு தலைப்புக்களில் அதிகமாக தொகை செலவழிப்பதற்கு சட்ட சபையினுடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இப்பொழுது முன்வந்திருக்கிறார்கள்.

இதிலே ஒரு விஷயத்தை மாத்திரம் நான் குறிப்பாகக் கூற விரும்புகிறேன். பட்ஜட்டிலே கூடியவரை வரவும் செலவும் சரியாக இருக்கவேண்டும் என்ற தத்துவம் இருந்தாலும், எப்பொழுதுமே அப்படி நிச்சயமாக இருந்துவிட முடியாது என்பதையும் நான் அங்கீகரித்த போதிலும், "**XL. Commuted value of pensions**" என்ற தலைப்பில் ரூபாய் 26,654 அதிகமாகச் செலவழிக்கப்பட்டதாக குறிப்பில் காணப்படுகிறது. பென்ஷன் என்பதை நிச்சயமாகக் கணக்கிட்டிருக்க முடியும். இதில் சந்தேகமே இருப்பதிற்கில்லை. அது மட்டிலும் அல்ல. சப்ளி



மெண்டரி பட்ஜெட்டிலே இதைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள். அதிலேயே கூட சில மான்யம் கொண்டு வந்திருக்க வேண்டும். அவ்வாறு ஏன் கொண்டுவரவில்லை என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்களை விளக்கும்படியாக நான் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆந்திரப் பிரிவினைக்குப் பின்னரும் சப்ளிமெண்டரி கிராண்டில் பணம் ஒதுக்கிய இனங்களில் அனேகம் நிறைவேற்றப்பட வில்லை என்றாலும், வேறு எந்த வருஷங்களிலே நம்முடைய எஸ்டிமேட்டுக்கு அப்பால் செலவழிந்தபோதிலும் "**Commuted value of pensions**" பொறுத்த அளவிலே எப்படி அது கணக்குக்கு அப்பாற்பட்டுவிட்டது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதை விளக்கும்படியாகவும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

உதாரணமாக, "**IX. Head of State, ministers and Headquarters staff** என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 25,241 அதிகமாக செலவு ஏற்பட்டதற்கு விளக்கம் "**The percentage of excess to the final grant is only 0·8 and does not call for any special remarks**" என்று பொதுவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை ஏன் உயர்ந்திருக்கிறது என்பதைப் பற்றியும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் விளக்கக் கடமைப்பட்டவர்கள். ஆனால், விளக்கப்படாமல், "**does not call for special remarks**" என்று எழுதியிருக்கிறது.

அடுத்தபடியாக, "கல்வி" என்னும் தலைப்பில் ரூபாய் 1,73,183 செலவு அதிகமாயிருக்கிறது. அதற்கும் அதிகமான விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். அப்படிக் கொடுக்கப்படவில்லை. அதைப் பற்றியும் நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குறிப்பாக, "**Commuted value of pensions**" என்ற தலைப்பைப் பொறுத்த அளவிலே, முன்னாலேயே அவர்கள் தெரிந்திருக்க வேண்டிய ஒரு இனமாகும். பென்ஷன் இவ்வளவுதான் கொடுக்க வேண்டி வரும் என்ற கணக்கு இருக்கும்போது, அதற்கு அப்பாலும் ஏன் செலவு ஏற்பட்டிருக்கிறது. உபரி மான்யக் கோரிக்கை பற்றிய அறிக்கையில் சரியான விளக்கம் கொடுக்கப்படவில்லை என்று கூறிக்கொண்டு, என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியினுடைய சிபார்சின் பேரிலே இந்தச் செலவுகள் விவரம் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியினுடைய சிபார்சுகள் சபையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியவேண்டும். அப்படி அந்தக் கமிட்டியினுடைய சிபார்சுகள் என்ன என்பதை சபையின் முன்னால் வைத்த பிறகு விவாதம் செய்வதுதான் நலமாக இருக்கும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : முன்னாலேயே வைத்தாய் விட்டது.

SRI V. K. KOTHANDARAMAN : ரொம்ப நாளைக்கு முன்னாலேயே வைத்தாய் விட்டதா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் புதிதாக வந்திருக்கிறார்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் நண்பர் ஸ்ரீ ராமசாமிப் பிள்ளை அவர்கள் சொன்னது போல், "பென்ஷன்" என்ற வகையில் ஆறு லட்சம்ரூபாய்க்கு அதிகமாகச் செலவு ஆகியிருப்பதைப் போல், இதர இனங்களிலும், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகி இருக்கிறது. அவைகளுக்கும் என்ன காரணம் என்று தெரிந்தால் நன்றாக இருக்கும்.

[25th July 1957

Sri D. S. AUTHIMOOLAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தில் ஜாஸ்தி ஒன்றும் நான் படித்துத் தெரிந்துகொள்ள வில்லை. ஆனால், இப்பொழுது அசெம்பிளியினுடைய அங்கீகாரம் கிடைத்தால்தான் இந்தத் தொகைகள் ஒப்புக்கொள்ள முடியும் என்று ஆடிட்டர் ஜெனரல் கேட்டுக்கொண்டிருக்கிறபடியினால், இந்த சபை முன்பு அதன் விவரம் வைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அப்பொழுது காங்கிரஸ் சர்க்கார் இருந்து செலவு செய்தவைகளை இப்பொழுது ஒரு சமயம் **Non-Congress Government** அமைந்து, இந்த மான்யங்களுக்கு வோட்டு கொடுக்க வில்லை என்றால் நிலைமை என்ன ஆகும் என்பதை மந்திரி அவர்களுடைய முடிவுரையில் தெரியப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Mr. SPEAKER : Shall I call on the Hon. Minister to speak?

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : I want to speak, Sir.

Mr. SPEAKER : Even the Hon. the Leader of the Opposition must catch the Speaker's eye.

10-18 a.m. Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I have to make some observations here. My submission is this : The Heads of Departments do not plan properly and do not foresee things and put them up to the Finance Department. The Finance Department also in turn do not care to scrutinize these estimates of expenditure properly with the result that so many irregularities take place as can be seen from the audit reports of many years. The Public Accounts Committee has made several observations as can be seen from some of the paragraphs of its report. It is also regrettable to note that many of the departments do not take proper and prompt action on these. This is a question which requires very serious consideration. In the Public Accounts Committee Report, in paragraph 4, it is stated—

"The Finance Department has stated that most of the recommendations of the Committee in its Report on the Accounts for the year 1952–53 are still under consideration in the respective Departments of the Secretariat and that orders passed in regard to them will be communicated to the Legislature Department in due course."

This is the position.

In regard to unnecessary supplementary grants, re-appropriation, and cases of non-surrender, there are so many irregularities about which in several cases no action has been taken. The Public Accounts Committee in one of its paragraphs (paragraph 31) has made a remark like this, namely, "The Committee found that the Secretaries to Government in a number of Departments had not appeared before it when the items relating to their departments were being considered, on the ground that they were detained by pressure of work elsewhere. The Committee desires to point out that the Secretaries, including the Chief Secretary, should not, if sufficient notice had reached them, allow the mere pressure of work to stand in the way of their presence at the meetings."



25th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

In another paragraph of its report (paragraph 32), the Public Accounts Committee has stated—

"The Committee hopes that the departments will not give room for any criticism in this regard in future."

These are some of the remarks made by the Public Accounts Committee. In spite of that, we find a lot of delay in rectifying the irregularities pointed out. The Departments do not plan properly and foresee things. At least, hereafter the Finance Department should take proper care to see that such mistakes do not recur. Then, Sir, we find several cases of irregularities and misappropriation of funds in several departments. But the most surprising of these is, recently even in the Central Cash Bureau in the Secretariat, some misappropriation took place. I do not know whether this has been brought to the notice of the Government. If such is the case with the Finance Department itself, nobody can say what will happen in other Departments and in the subordinate offices. The Government must look into these cases very carefully. The Finance Secretary should plan. He should indulge in policy planning. But as far as I can see he does not do any original work. That should not be the case. He should be the watchdog of the State's finances in the real sense. He should not unnecessarily encroach upon the work of other Departments of Government. Nor should his work be done by others. In this connection, one instance comes to my mind. The work relating to Contributory Provident Fund is now being attended to by the Finance Department. It is said, it will be transferred to the Pay and Accounts Office which is meant for internal audit and payment. This is shirking of the work meant to be done by the Finance Department. I have nothing personally to say against the Finance Secretary. He is one of the best officers we have. But his post is a tenure post and still he has been holding it for over seven years or so. I would request the Finance Minister to see whether the same person can be continued in the department for such a long time. As I said, he is one of our very good officers and I have nothing to say personally about him. I would request the Finance Minister to see that strict orders are issued to the departments to take action on the Audit Reports without undue delay. Otherwise, there is no point in placing the Year's Audit Report so late before the House. The very object of discussion is frustrated. Sir, hon. Members have been putting forth many suggestions about the working of other departments of Government. I do not know whether quick and effective action has been taken on these suggestions by the Government. If early action is not taken, there is no point in discussing these on the floor of the House. So, I would request the Finance Minister to see that strict instructions are issued to the departments concerned to enunciate their policy clearly, plan properly and take appropriate and immediate action on the Audit Reports so that the Assembly may discuss the action taken as early as possible.

[25th July 1957

MR. SPEAKER: I see several hon. Members rising to speak. There is nothing in the Rules prohibiting them from speaking now, But there is a convention that the Leader of the Opposition should be given the courtesy of being the last speaker before the Hon. Minister replies. So, it is that I suggest, once he has spoken, no hon. Member should speak on the same subject. This is courtesy that should be shown to him. If hon. Members ask me to quote any rule in support, I cannot. There is a convention that this courtesy should be shown to the Leader of the Opposition as an individual.

SRI K. SATTANATHA KARAYALAR: I rise on a point of order. The Constitution says:

"202. (1) The Governor shall in respect of every financial year cause to be laid before the House or Houses of the Legislature of the State a statement of the estimated receipts and expenditure of the State for that year, in this Part referred to as the 'annual financial statement'."

இந்த மான்ய கோரிக்கை 1953–54-ம் வருஷம் அதிகம் செலவு செய்த தொகைக்காக கொண்டு வரப்பட்டுள்ளது. 1953–54 என்று சொல்லும்போது இந்த சட்டசபையல்ல அன்று செயலற்றது. அன்று இருந்த சட்டசபையே வேறு. அன்றைய "மட்ராஸ்" என்று சொல்லும்போது, ஆந்திர பிரிவினைக்குப் முன்பு, ராஜ்யப் பிரிவினைக்கு முன்பு இருந்த சட்டசபையே ஆகும். சமஸ்தானம் அல்லது [ஸ்டேட்] என்று சொல்லும்போது ஆர்டிகள் 202 பிரகாரம் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது:

"202 (1) The Governor shall in respect of every financial year cause to be laid before the House or Houses of the Legislature of the State a statement of the estimated receipts and expenditure of the State for that year, in his part referred to as the 'annual financial statement.'"

ஆகையால், 1953–54-ம் வருஷக் கணக்கானது ஆந்திர பிரிவினைக்கு முன்பு, ராஜ்ய புனரமைப்புக்கு முன்பு மாகாணத்தைச் சேர்ந்ததே. அந்த அடிப்படையில் பார்த்தால் இந்த 'டிமாண்டை' இந்தச் சபையின் முன்னால் கொண்டுவருவது சரியா என்று பரிசீலிக்க சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

* MR. SPEAKER: The hon. Member will remember that in the States Reorganization Act, it is clearly stated that the Madras State of to-day is as good as the undivided Madras State. Therefore, it is perfectly in order that this House should consider any variations or excess in expenditure that was incurred in 1953–54. Further, this House is the final body to pronounce on all these matters and it is perfectly in order to give its verdict. I rule out the point of order raised by Mr. Sattanatha Karayalar.

11-30 a.m. THE HON. SRI C. SUBRAMANIAM: சபாநாயகர் அவர்களே, இந்த விவாதம் ஒரு குறுகிய அளவில் தான் நடத்த முடியும் என்பதை அங்கத்தினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கோட்டையும் மீறி—உணர்ந்தோ அல்லது உணராமலோ எனக்குத் தெரியவில்லை—பேசினார்கள். அப்ராப்ரியேஷன்



25th July 1957] [Sri C. Subramaniam]

பில்-லில் பல விஷயங்களைப் பற்றிப் பேசலாம். ஆகையால் நான் இப்போது அவர்கள் சொல்லியதற்கெல்லாம் பதில் சொல்லப்போவதில்லை. இதில் நான் அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் இந்தக் கணக்கு ஆயிரக்கணக்கான இனங்களைக் கொண்டது. ஒரு வருஷத்திலே பல இனங்களிலே பணம் செலவழிக்கப்பட்டாலும், எந்த இனங்களிலே குற்றங்கள் இருக்கின்றனவோ அவைகளை மட்டும்தான் ஆடிட்டர் ஜெனரல் தன்னுடைய ரிப்போர்டில் குறிப்பிடுவார். அந்த மாதிரி குற்றங்கள் ஒரு வருஷத்தில் 20 அல்லது 30 ஏற்படலாம். ஆனால் அந்த ரிப்போர்டில் குற்றங்கள் மட்டும்தான் இருக்கும். அந்த ரிப்போர்ட்டை மட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால், "நிர்வாகமே சரியில்லை" என்று அங்கத்தினர்கள் மனதிலே சந்தேகம் தோன்றிவிட இடமிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ரிப்போர்ட்டில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால், அதை மட்டும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். பெருவாரியான தவறுகள் மிகவும் குறைவு என்பதை இந்தச் சபை முன்பு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

எவ்வளவு திறமையாக நிர்வாகம் நடத்தினாலும், நம்மையும் அறியாமல் சில குற்றங்கள், தவறுகள் ஏற்பட்டுவிடும் என்பதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நடந்த குற்றங்கள், தவறுகள் திரும்பத் திரும்ப நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அம்மாதிரி நடந்த குற்றங்களே திரும்பவும் நடந்திருந்தால் அந்தக் குற்றங்களைச் சுட்டிக்காட்ட அங்கத்தினர்களுக்கு அதிகாரம் உண்டு. அப்பொழுது அவை நியாயமானவை என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். அது மாதிரி குற்றங்கள் இருக்கின்றனவா என்று அங்கத்தினர்கள் முக்கியமாக பார்க்க வேண்டும்.

இந்தச் சபையில் விவாதிப்பதற்கு முன்பு ஏற்படக் கூடிய விஷயங்களையும் அங்கத்தினர் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த சபையால் ஏற்படுத்தப்பட்ட 'பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி' இம்மாதிரி தவறான இனங்களைப் பற்றி, அந்தந்த இலாகாவிலிருந்து எழுத்து மூலமாக சமாதானத்தை வாங்கி, அதைப் பரிசீலனை செய்து ஓர் அறிக்கை தயாரித்து சபையின் முன் வைக்கிறது. இந்தத் தவறுகள் எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றிப் பூராவும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் ஆடிட்டர் ரிப்போர்ட்டையும், அந்த ரிப்போர்ட்டுக்கு என்ன சமாதானம் சொல்லப்பட்டது என்பதையும், அதன்மேல் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியில் இதைப்பற்றி என்ன விவாதம் நடந்தது என்பதையும் படிக்க வேண்டும். இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல், 'பப்ளிக், அக்கௌண்ட்ஸ் கமிட்டி' ரிப்போர்ட்டு வந்ததா இல்லையா என்று பேசுவது என்றால், இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்பது முடியாத காரியம். அந்த அறிக்கைகளைப் படித்துக்கொண்டுவந்து இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டால் தவறுகள் இருக்கின்றதா என்பதைப் பற்றி சபையின் முன்பு நன்றாக எடுத்துச் சொல்ல முடியும். ஆகையால் இந்த விவாதத்தில் யாராவது பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று பிரியப்படுவார்களானால், இதற்கு முன்பு சமர்ப்பித்த ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டையும், அதற்குமேல் இலாகா சமாதானம் சொன்னதையும் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியில் நடந்த விவாதத்தையும் நன்றாகப் படித்தால்தான், குற்றம் என்ன, சமாதானம் என்ன என்று புரிந்துகொண்டு, இந்த விவாதத்தில் கலந்துகொள்ள சௌகரியமாய் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதற்கு அடுத்தபடியாக இந்த விவாதத்திலே இரண்டு விஷயங்கள் முக்கியமாக குறிப்பிடப்பட்டன. 'கம்யூடட் வால்யூ ஆப் பென்ஷன்' கூட எதிர்பார்த்திருக்கக்கூடிய பென்ஷனைச் சேர்ந்த விஷயம்தானே என்று கனம் ஸ்ரீ ராமசுவாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள். சில அதிகாரிகளுக்கு மாதாமாதம் பென்ஷன் பெறுவதற்கு பதிலாக ஒரு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அவர்கள் பென்ஷனில் ஒரு பகுதியை

'காபிடலைஸ்' பண்ணி 'காபிடலைஸ்டு' தொகையை ஒரேயடியாக பெற்றுக் கொள்வதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அவர்கள் 'மெடிகல் ஸர்டிபிகேட்' முதலியவைகளெல்லாம் கொடுக்கவேண்டும். அவர்கள் எந்த சமயத்திலும் இம்மாதிரி விண்ணப்பம் கொடுக்கலாம். அந்த விண்ணப்பத்தையும் 'மெடிகல்' ஸர்டிபிகேட்டையும் வைத்துக் கொண்டு அவர்களுக்கு எவ்வளவு கொடுப்பது என்பதை முடிவு செய்ய வேண்டும். 'கம்யூடட் வால்யூ ஆப் பென்ஷன்' ஒரு வருஷத்தில் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது, அதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை பொறுத்திருக்கிறது. விண்ணப்பம் எப்பொழுது வேண்டுமானாலும் கொடுக்கலாம். காலத்தை மீறி இம்மாதிரி விண்ணப்பங்கள் வந்தால், 'கம்யூடட் வால்யூ ஆப் பென்ஷனை' 'சப்ளிமெண்டரி டிமாண்டில்' கூட சேர்க்க முடியாமல் போய்விடுகிறது. அப்படி நம்மையும் மீறி ஏற்பட்ட செலவுத் தொகைதான் இந்த ரூ. 26,000. அந்தப் பணம் ஒரு ஆபிஸருக்குத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். சாதாரணமாக ஒரு ஆபிஸருக்கு 50,000 ரூபாய் வரை கூட கொடுக்கும்படியாக ஏற்படலாம். அம்மாதிரி விண்ணப்பங்கள் காலத்தை மீறி வந்தால், அந்தக் காலத்திற்கு பிற்பாடு கொடுக்கும்படியாக ஏற்பட்டால், அதை இம்மாதிரி கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மற்ற இனங்களைப்பற்றியும் போதுமான சமாதானங்கள் சொல்லப்படவில்லை என்று ஸ்ரீ ராமசுவாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள். முந்தியே அந்த இனங்களுக்கெல்லாம் சமாதானங்கள் கூறி அவைகள் ஆலோசிக்கப்பட்டு அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. ஆகையால் இந்த இனங்களுக்கெல்லாம் சமாதானம் கொடுக்காமல் இங்கே கொண்டுவரப்படவில்லை. இவைகளெல்லாம் முன்பே பரிசீலனை செய்யப்பட்டு சமாதானங்களெல்லாம் கேட்டதற்கு பிற்பாடு, 'பப்ளிக் அக்கௌண்ட்ஸ்' கமிட்டியின் அறிக்கையின் அடிப்படையிலே சபையின் முன்னாலே சபையின் ஆதரவுக்காக கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ ஆதிமூலம் அவர்கள் ஒரு சமயம் இதற்கு வேண்டிய ஆதரவு கிடைக்கவில்லை என்றால், என்ன ஆகும் என்று கேட்டார்கள். ஒன்றும் ஆக முடியாது. பணமெல்லாம் செலவழித்தாய் விட்டது. இருந்தாலும், அதில் ஏதாவது குற்றம் இருந்தால் அதைப் பற்றி பேசிவிட்டு பிறகு வோட்டுக்கு விடப்படும். இதில் ஒன்றும் முடிவு செய்யவில்லை என்றால் அப்படியே இருக்கவேண்டியதுதான். வேறு ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு.) ஜில்லா போர்டில் 'ஸர்சார்ஜ்' செய்யலாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஜில்லா போர்டில் வேண்டுமானால் செய்யலாம். அம்மாதிரி இங்கு ஒன்றும் ஸர்சார்ஜ்' கூட செய்ய முடியாது.

அடுத்தபடியாக, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த ரிப்போர்ட்டிலே வந்திருக்கக்கூடிய பல குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ரிப்போர்டில் இருப்பது வாஸ்தவம்தான். அதன் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா, இல்லையா என்ற முறையில் பார்க்க வேண்டும். சர்க்கார் அதன்பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. திரும்பவும் அதேபோல் குற்றங்கள் நடக்கின்றனவா என்பதை இப்பொழுது இருக்கக்கூடிய 'பப்ளிக் அக்கௌண்ட்ஸ்' கமிட்டி பார்க்கவேண்டும். எனக்குத் தெரிந்தவரையில், ஏ.ஜி.-யிடமிருந்து தெரிந்துகொண்டவரையிலே மேலும் நாம் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறோம். இருக்கக்கூடியு குறைகளெல்லாம் ஓரளவு மாறிக்கொண்டுதான் இருக்கிறது என்று தெரியவருகிறது. நம்மையும் மீறி இதுவரையில் ஏற்படாத புதிய குறைகள் தோன்றினாலும் தோன்றலாம். அப்படித் தோன்றும்பொழுது, அவைகள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், திருத்திக்கொள்வதற்கு வேண்டிய முயற்சிகள் செய்கிறோம். 1952 ஆரம்பத்திலிருந்து இதுவரையிலும் 'பப்ளிக் அக்கௌண்ட்ஸ்' கமிட்டி செய்த பரிசீலனையின் மூலமாக, அவர்கள் செய்த சிபார்சுகள் மூலமாக பட்ஜெட் தயாரிப்பதிலும், பட்ஜெட்டிற்கு பிற்பாடு செலவழிப்பதிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும் இந்தச் சபை



முன்பு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னும் அதிகமாக முன்னேற்றம் ஏற்படுவதற்கு இடம் இருக்கிறதா என்றால், எப்பொழுதும் முன்னேற்றத்திற்கு இடம் இருக்கிறது. அதனால்தான் முன்னேற்ற கட்சி என்று கூட பெயர் வைத்துக்கொள்ளப்படுகிறது. முன்னேற்றம் ஏற்படுவதில் எப்பொழுதும் முடிவு இல்லை, எப்பொழுது வேண்டுமானாலும் முன்னேற்றம் அடைந்து கொண்டே இருக்கலாம் என்ற காரணத்தினால்தான், முன்னேற்றம் என்று எப்பொழுதும் சாசுவதமாக பெயர் வைத்துக்கொள்ளக்கூட இடம் ஏற்படுகிறது. இன்னும் முன்னேற்றத்திற்கு இடம் இருக்கிறது. தொடர்ந்து முன்னேறுவதற்கு முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறோம்.

எதிர்கட்சி தலைவர் அவர்கள் இந்தத் தலைப்பிலே இல்லாத பல பிரச்னைகளை எழுப்பினார்கள். ஆனால் இப்பொழுது நான் இந்தத் தலைப்பிலே வரும் விவாதத்திற்கு மட்டும் பதில் சொல்லுகிறேன். அப்படியில்லையென்றால் இந்தத் தலைப்பின்கீழ் வரக்கூடாத விவாதத்திற்கு நான் பதில் சொல்லவேண்டியிருக்கும். ஆகையினால் இந்த விஷயங்களை எதிர்கட்சித் தலைவர் அவர்கள் 'அப்ராபிரியேஷன் பில்' விவாதத்தின்போது மறுபடியும் கிளப்பினால், நான் பதில் சொல்லுவதற்கு தயாராக இருக்கிறேன். இந்த விவாதத்திற்கு வேண்டிய சகல விஷயங்களையும் சபை முன்பு வைத்திருக்கிறேன். பின்னாலே இந்த ஆறு இனங்களுக்கும் அங்கத்தினர் தங்களுடைய வோட்டுக்களை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** இப்பொழுது இந்தக் கோரிக்கையின்பேரில் பொது விவாதம் முடிந்தது. இந்த ஆறு கோரிக்கைகளையும் 1½ மணிக்கு வோட்டுக்கு விடுவதில் அங்கத்தினர்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இருக்காது என்று நினைக்கிறேன். இப்போது மற்ற ஐடம்களை எடுத்துக்கொள்வோம்.

## V.—GOVERNMENT MOTIONS.

### (1) AMENDMENT TO RULES ISSUED UNDER SECTION 40 (1) OF THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT, 1948.

**The Hon. Sri M. A. MANICKAVELU :** Sir, I move—

"That the following draft amendment to the rules published with Revenue Department Notification, dated the 21st December 1949, at pages 397–398 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 27th December 1949, as subsequently amended, which it is proposed to make, in exercise of the powers conferred by section 40 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), be approved.

DRAFT AMENDMENT.

To rule 3 of the said rules, the following Explanation shall be added at the end, namely :—

'*Explanation.*—The date of completion of the settlement operations in respect of a Zamindari estate, the assets of which consisted immediately before the notified date, entirely of jodi, kattubadi or other amount, if any, payable to the landholder thereof, whether in cash or in kind, or in both cash and kind, by the landholders of inam villages or undertenure estates, shall be deemed

to be the date on which the settlement operations are completed in respect of all the said undertenure estates and such of the said inam villages as have been notified under the Act as inam estates' "

MR. SPEAKER: Motion moved—

" That the following draft amendment to the rules published with Revenue Department Notification, dated the 21st December 1949, at pages 397-398 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 27th December 1949, as subsequently amended, which it is proposed to make, in exercise of the powers conferred by section 40 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), be approved.

DRAFT AMENDMENT.

To rule 3 of the said rules, the following Explanation shall be added at the end, namely:—

'*Explanation*.—The date of completion of the settlement operations in respect of a Zamindari estate, the assets of which consisted immediately before the notified date, entirely of jodi, kattubadi or other amount, if any, payable to the landholder thereof, whether in cash or in kind, or in both cash and kind, by the landholders of inam villages or undertenure estates, shall be deemed to be the date on which the settlement operations are completed in respect of all the said undertenure estates and such of the said inam villages as have been notified under the Act as inam estates.' "

The motion is now before the House. If any hon. Member wants to speak on the motion, he may do so.

SRI S. PAKKIRISAMY PILLAI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தில் சில வார்த்தைகள் சொல்லுவதற்கு எனக்கு அனுமதி கொடுத்ததற்கு உங்களுக்கு என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். செங்கல்பட்டு ஜில்லாவிலே, சத்தியவேடு என்ற ஒரு பிர்க்காவிலே பல கிராமங்கள் திருப்பதி தேவஸ்தானத்திடமிருந்து எடுத்துக் கொண்டு இப்பொழுது ரயத்வாரி நிலங்களாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கும் கிராமவாசிகள் எந்த விதமான சீர்திருத்தத்தையும் இது வரையிலே பார்க்க முடியவில்லை. அதற்குக் காரணம் அந்தக் கிராமங்கள் ஆந்திரப் பிரதேசத்தின் பக்கமாக இருக்கும் எல்லைப் பகுதியில் இருக்கின்றன. ஆந்திரப் பிரதேசத்தில் இருக்கும் மக்கள் இதை தங்கள் பாகத்திலே சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கூறுகிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கும் மக்கள் அது சென்னையை சேரவேண்டுமென்று அங்கே வாதித்துக்கொண்டிருக்கிறார்கள். இருசாரார்களிடையே சிக்கிக்கொண்டு இருக்கும் இந்தப் பகுதியானது மிகவும் கேவலமான நிலைமையிலே எந்த விதமான அபிவிருத்தி இல்லாமலும் இருந்து கொண்டு வருகிறது. ஆனால் கிஸ்தி மாத்திரம் விவசாயிகளிடமிருந்து வாங்கப்பட்டு வருகிறது. மேலும் தேவஸ்தானத்திடமிருந்து ஜமீன்தாரி முறை பிரகாரம் எடுத்துக்கொண்டுள்ள நிலங்களை அங்கே இருக்கும் அனுபோகத்தில், இன்றும் அனுபவித்து வருகிற, ரயத்துக்களுக்கு பட்டா செய்து கொடுக்கவில்லை. அநேக ரயத்துகள் பட்டா இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அநேக நிலங்களை அவர்கள் பயிரிட்டு





ஊதியம் பெற முடியாமல் அதற்கு மேலே கிஸ்தி கட்டும்படியான நிலைமையிலே நிலைமை இருந்துகொண்டு வருகிறது. பஞ்சப் பிரதேசம் என்று சொல்லக்கூடிய நிலைமையில் அவ்வளவு பிற்போக்காக இருக்கிறது இந்தப் பிரதேசம். ஆகையால் இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களை காப்பாற்ற அரசாங்கம் முன்வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI V. SANKARAN: Are Members to speak only on the actual motion before the House? Or can they speak even on the original Act, rules made thereunder, etc.? Can they talk anything under the realm . . .

MR. SPEAKER: Correctly speaking, hon. Members should speak on the actual amendment before the House. I thought that what the hon. Member spoke had some relation to the amendment before the House. Therefore I have permitted him.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I myself wanted to rise on a point of order. But I thought that the hon. Member may come to the point. I am afraid he has only said things which do not pertain to the motion before the House.

* SRI R. SRINIVASA IYER: Sir, I think no elaborate discussion is necessary on this Motion. It is only intended for fixing the date of completion of the settlement operations. The draft amendment states—

" The date of completion of the settlement operations in respect of a Zamindari estate, the assets of which consisted immediately before the notified date, entirely of jodi, kattubadi or other amount, if any, payable to the landholder thereof, whether in cash or in kind, or in both cash and kind, by the landholders of inam villages or undertenure estates, shall be deemed to be the date on which the settlement operations are completed in respect of all the said undertenure estates and such of the said inam villages as have been notified under the Act as inam estates."

So, the issue of patta and other things are outside the purview of this amendment. This is an innocuous amendment which can be passed without any discussion. That is my respectful submission to the House.

MR. SPEAKER: It is good to have lawyer Members in this House.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, the amendment of the rule relates to a particular provision. As the rule stands, it refers only to the zamindari estates. But there are zamindari estates which have only undertenures. So, as the amendment stands, it cannot apply. When there is no land in the zamindari, that provision will not apply. It is a technical amendment so that it can refer to undertenures also. Therefore we have brought in this amendment. As the hon. Member has pointed out, there is nothing controversial. It is a technical difficulty that is being got over.

MR. SPEAKER : The question is—

"That the following draft amendment to the rules published with Revenue Department Notification, dated the 21st December 1949, at pages 397–398 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 27th December 1949, as subsequently amended, which it is proposed to make, in exercise of the powers conferred by section 40 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), be approved.

DRAFT AMENDMENT.

To rule 3 of the said rules, the following Explanation shall be added at the end, namely :—

'*Explanation.*—The date of completion of the settlement operations in respect of a Zamindari estate, the assets of which consisted immediately before the notified date, entirely of jodi, kattubadi or other amount, if any, payable to the landholder thereof, whether in cash or in kind, or in both cash and kind, by the landholders of inam villages or undertenure estates, shall be deemed to be the date on which the settlement operations are completed in respect of all the said undertenure estates and such of the said inam villages as have been notified under the Act as inam estates."

The motion was put and carried.

(2) AMENDMENT TO SCHEDULE II OF THE MADRAS MOTOR VEHICLES TAXATION ACT, 1931 (MADRAS ACT III OF 1931).

THE HON. SRI V. RAMIAH : Sir, I move—

"That the following draft of a rule proposed to be made by the Government under section 17 (1) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931), amending Schedule II to the said Act, be approved :—

DRAFT RULE.

In Schedule II—

(1) for sub-clause (*k*) to clause 3, the following sub-clause shall be substituted, namely :—

| | Maximum quarterly tax | |
|---|---|---|
| | For vehicles fitted with pneumatic tyres. (1) RS. | For other vehicles. (2) RS. |
| 3. (*k*) Tax payable in respect of trailers used for carrying goods other than trailers falling under clauses 7 and 8 of this schedule— | | |
| (i) For each trailer not exceeding 20 cwt. in weight, laden .. | 33.50 | 50·50 |



| | Maximum quarterly tax | |
|---|---|---|
| | For vehicles fitted with pneumatic tyres. (1) RS. | For other vehicles. (2) RS. |
| (k) Tax payable in respect of trailers used for carrying goods other than trailers falling under clauses 7 and 8 of this schedule—*cont.* | | |
| (ii) For each trailer exceeding 20 cwt. but not exceeding 30 cwt. in weight, laden .. .. | 66·50 | 100·00 |
| (iii) For each trailer exceeding 30 cwt. but not exceeding 45 cwt. in weight, laden .. .. | 80·00 | 120·00 |
| (iv) For each tailer exceeding 45 cwt but not exceeding 60 cwt. in weight, laden .. .. | 100·00 | 150·00 |
| (v) For each trailer exceeding 60 cwt. but not exceeding 85 cwt. in weight, laden .. .. .. | 120·00 | 180·00 |
| (vi) For each trailer exceeding 85 cwt. but not exceeding 110 cwt. in weight. laden .. .. | 146·50 | 220·00 |
| (vii) For each trailer exceeding 110 cwt. but not exceeding 150 cwt. in weight, laden .. .. | 180·00 | 270·00 |
| (viii) For each trailor exceeding 150 cwt. but not exceeding 180 cwt. in weight, laden .. .. | 213·50 | 320·00 |
| (ix) For each trailer exceeding 180 cwt. in weight, laden .. .. | 233·50 | 350·00 |

(2) for clause 6, the following clause shall be substituted, namely :—

'6. Motor vehicles not themselves, constructed to carry any load (other than water, fuel, accumulators and other equipment used for the purpose of propulsion, loose tools and loose equipment), used for haulage only :—

| | Maximum quarterly tax | |
|---|---|---|
| | For vehicles fitted with pneumatic tyres. (1) RS. | For other vehicles. (2) RS. |
| (*a*) Weighing not more than 50 cwt. in weight, unladen .. .. | 50 | 75 |
| (*b*) Weighing more than 50 cwt. unladen .. .. .. .. | 70 | 105' " |

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL, 1957.

THE HON. SRI V. RAMIAH : Sir, I beg to leave to introduce the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill[a] 1957, and move—

"That the Bill be taken into consideration.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 4th July 1957.

[Sri V. Ramiah] [25th July 1957

In moving this Bill, I wish to say that this is a very simple measure seeking an extension of the life of the Act for a further period of two years from 1st October 1957. In this connection, I may recall the fact that, in the course of the discussions on the floor of this House in August 1955, on the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1955 which was subsequently passed as the Madras Buildings (Lease and Rent Control) Amendment Act, 1955, some members wanted that certain provisions of the principal Act should be amended so as to remove the difficulties experienced in the working of the Act and that, in compliance with the assurance given on that occasion, an amending Bill, viz., the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1956, was introduced in this House on the 26th December 1956 by my predecessor and its consideration was postponed till after the general elections. Consequent on the dissolution of the Legislature, that Bill lapsed and the question of re-introducing it in the House is under the active consideration of the Government separately. In the meanwhile, the life of the principal Act, as last extended in 1955, is fast approaching the deadline and it has, therefore, become necessary to give priority to this Bill. Shortage of accommodation, both residential and non-residential, still exists and housing position has not improved even after the reorganization of the States on linguistic basis. It is thus necessary to extend the life of the principal Act for a further period of two years from 1st October 1957. As the House is aware, the Government have power to withdraw at any time the application of the Act from any municipality where the need for control may cease to exist. In the circumstances, I trust that the House will accept the motion.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1957, be taken into consideration."

10-45 a.m. SRI A. GOVINDASAMY: தலைவர் அவர்களே, இந்த சட்டம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு வேண்டி அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் இந்த திருத்தத்தை வரவேற்கிறேன். அதே நேரத்தில் இந்த சட்டமானது சென்னையிலும் இதர முனிசிபாலிட்டிகளிலும் இப்போது இருக்கிறது. இதை மேஜர் பஞ்சாயத்துகளிலும் அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக விருத்தாசலம் தாலூகாவில் இந்தத் திட்டத்தை கொண்டுவரவேண்டுமென்று நானும் நண்பர் செல்வராஜ் அவர்களும் மந்திரி அவர்களிடம் சொன்னோம். நெய்வேலி திட்டம் அமுலுக்கு வந்துகொண்டிருக்கின்ற காரணத்தால் இட நெருக்கடியின் காரணமாக வீட்டுப் பிரச்னை அதிகமாகிக் கொண்டு வருகிறது. வீட்டுச் சொந்தக்காரர்கள் எல்லாம் தங்கள் இஷ்டப்படி வாடகையை ஏற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே நெய்வேலி பகுதியிலும் அதன் சுற்றுப் புறத்திலும், விருத்தாசலத்திலும் இந்தத் திட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரிதான் நெல்லிக்குப்பத்திலும் இந்தத் திட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கு சர்க்கரை ஆலை இருக்கின்ற காரணத்தினாலும் இட நெருக்கடி அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும் வீட்டு வாடகை அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை மேஜர் பஞ்சாயத்து ஏரியாக்களிலும், இண்டஸ்டிரீஸ் ஏரியாக்களிலும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



25th July 1957]

SRI V. K. KOTHANDARAMAN: இந்த சட்டத்தை மேலும் இரண்டு வருடத்திற்கு நீடிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இந்த திட்டம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று ஒரு திருத்தத்தை கொண்டு வரலாம். 10.47 a.m.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு திருத்தம் கொடுக்கவில்லை. அதனால் அதன் பேரில் ஒன்றும் பேச முடியாது.

SRIMATHI T. N. ANANDANAYAKI: கனம் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தை நான் வரவேற்கிறேன். நாடு பிரிவினை (States Reorganization) செய்யப்பட்டுவிட்டதால் மேலும் இந்த சட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்பது நல்லதுதான். ஆனால் இதில் என்ன குறை இருக்கிறது என்றால் இவ்வாறு சட்டங்கள் இருந்தும் வீட்டுச் சொந்தக்காரர்கள் தொல்லை கொஞ்சநஞ்சமல்ல. இதைப்பற்றி "அக்காமடேஷன் கண்ட்ரோல்" ஆபீஸரிடத்தில் கேட்டால் எங்களுக்கு நியாயமான வாடகை ஒன்றும் வைக்க முடியாது, வீட்டுச் சொந்தக்காரர்கள் என்ன வாடகைக்கு கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்களோ அந்த வாடகையைத்தான் நிச்சயிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். அவ்வாறு வாடகை அதிகமாக இருந்தால் fair rent-க்காக கோர்ட்டில் போய் வாதாடிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கோர்ட்டுக்கு வந்தால் அதிகமான செலவு ஆகும். இந்த செலவையெல்லாம் அரசாங்கம் கொடுக்கப் போவதும் இல்லை. இவ்விதமாக அதிக சிக்கல்கள் இதில் இருக்கின்றன. ஒரு வீட்டில் 130 ரூபாய் வாடகை கொடுத்து ஒருவர் இருந்துவிட்டு மாறிப் போகும் பொழுது அந்த வீட்டுச் சொந்தக்காரர் 150 ரூபாய் வாடகை என்று சொன்னால் அதைதான் "அக்காமடேஷன் கண்ட்ரோல்" ஆபீஸரும் நிச்சயிக்கிறார்கள். இந்த விதமாக இருக்கக்கூடிய சிக்கல்களை கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக பரிசீலித்து குடக்கூலிக்கு கொடுக்கப் படுகிற வீடுகளுக்கு குடக்கூலிக்கு கொடுக்கப்படுவதற்கு முன்னாலேயே fair rent நிச்சயிக்க வேண்டும். அதற்கான வழிமுறைகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவ்விதம் நிர்ணயம் செய்தால்தான் இந்த நிலைமையை சமாளித்ததாக இருக்கும் என்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI M. JAGANNATHAN: இந்த வீட்டு வாடகை சம்பந்தமான இந்த மசோதாவை நான் ஆதரித்த போதிலும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வீடுகள் வாடகைக்கு கிடைப்பது ரொம்பவும் கஷ்டமாய் இருக்கிறது. கிராமப் புறங்களிலும் சரியான வாடகைக்கு கிடைப்பதில்லை. நம்முடைய மாநிலத்தை எடுத்துக்கொண்டால் இப்பொழுது எங்கு பார்த்தாலும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் Development Activities அதிகமாக நடந்து வருகிறது. இதனால் அதிகமான உத்யோகஸ்தர்களும் சிப்பந்திகளும் வீடு கிடைக்காமல் பல இடங்களிலும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த திட்டத்தை இரண்டு வருஷத்திற்கு நீடிக்க வேண்டுமென்றிருப்பதை ஐந்து வருடத்திற்கு நீடிக்க வேண்டும் என்றிருந்தால் நல்லது என்றுள்ள கருத்தோடுதான் இந்த திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறேன்.

அது மாத்திரமல்ல. அந்த ரெண்ட் கண்ட்ரோல் அக்காமடேஷன் ஆபிஸருக்கு, வீடுகள் எப்பொழுது காலியாகிறதோ அந்த காலியாகிற வீடுகளைப்பற்றி சரியானபடி அவர்களுக்கு தகவல் போவதில்லை. ஆனால் வீட்டு சொந்தக்காரர்கள் அந்த வீடுகளை ரகசியமான முறையில் பிறருக்கு வாடகைக்கு விட்டு அதிகமான வாடகை வசூலிக்கிறார்கள். அந்தச் சட்டம் அமுலில் இருப்பதில், நடைமுறையில் இருப்பதில் பலவிதமான ஊழல்கள் இருக்கின்றன. இதை சர்க்கார் நல்ல முறையில் கவனித்து இதை அமுல் நடத்த முன்வரவேண்டும். இதை இரண்டு வருஷத்திற்கு நீடிப்பதற்கு பதிலாக குறைந்தது ஐந்து வருஷத்திற்காவது நீடித்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

[25th July 1957

* Sri S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வாடகை வீடு கட்டுப்பாடு சட்டத்தை ஆதரித்துக்கொண்டு நான் ஒன்றிரண்டு முக்கிய கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சட்டத்தின்கீழ் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. ஆனால் பொதுவாக பார்க்கும்போது இந்த சட்டத்தை உபயோகப்படுத்திக் கொண்டு கோர்ட்டுகளில் அவர்களுடைய வாடகைப் பாக்கியை வசூல் செய்யும் ஒரு முறையாகத்தான் இது இருக்கிறது. இப்பொழுதுள்ள சட்டப்படி ரெண்ட் கண்ட்ரோலர் முன் பதிவு செய்யப்படும் மனுக்களில் கண்டிப்பாக ஒரு சட்டம் இருக்கிறது. அது, வாடகை பாக்கி உள்ளவர்கள் வாடகை பாக்கியை கட்டினால்தான் அவர்கள் அந்த தாவாவை தொடர்ந்து எதிர்த்து நடத்த முடியும். இந்த சட்டப்படி வாடகை பாக்கி உள்ளவர்கள் வாடகை பாக்கியை கட்டித்தான் அவர்கள் மேற்கொண்டு அந்த மனுவை கொடுத்து அவர்கள் கட்சியை வாதாட வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது இந்த பாக்கியை பூராவுமே இந்த வீட்டு சொந்தக்காரர்கள் பெற்று விடுகிறார்கள். ஆனால் முறைப்படி சர்க்காருக்கு சேரவேண்டிய ஸ்டாம்ப் ட்யூட்டி சர்க்காருக்கு கிடைப்பது கிடையாது. இந்த வாடகை பாக்கிக்காக ஸ்மால் காஸ் கோர்ட் போன்ற மற்ற கோர்ட்டுகளில் தாவா தாக்கல் செய்வார்களேயானால் அதற்கு அவர்கள் கண்டிப்பாக 100 ரூபாய்க்கு 7 ரூபாய் வீதம் ஸ்டாம்ப் ட்யூட்டி கொடுக்க வேண்டும். அதைக் கொடுக்காமல் ரெண்ட் கண்ட்ரோலர் முன்பு வாடகை பாக்கியை வசூல் செய்து கொள்கிறார்கள். ஆகவே அந்த முறையில் கண்டிப்பாக ஸ்டாம்ப் ட்யூட்டி கொடுக்க வேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். அடுத்தபடியாக, இந்த சட்டத்தை அமுல் நடத்தக்கூடிய நேரத்தில் சாதாரணமாக வீடு இல்லாதவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது சட்டம் இருக்கக்கூடிய நிலைமையில் பார்க்கும்போது, சர்க்கார் சிப்பந்திகளுக்கு மட்டுந்தான் கண்ட்ரோலர் வீட்டை அலாட் செய்ய முடியுமே தவிர மற்றவர்களுக்கு அலாட் செய்ய முடியாது. இந்தக் காரணத்தால் வீட்டு சொந்தக்காரர்கள் வாடகையை அதிகமாக நிர்ணயித்து, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூட ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் வீட்டு வாடகையை உயர்த்தி வைத்திருக்கிறார்கள். அப்படி சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அதிகம் கொடுக்க முடியாத நிலை ஏற்படும்போது அந்த வீட்டு சொந்தக்காரரின் இஷ்டப்படி வாடகைக்கு விடும் நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படும்போது வீட்டு சொந்தக்காரர்கள் அவர்கள் இஷ்டப்படி வாடகையை உயர்த்தி விடுகிறார்கள். ஆகவே, இதை சரியானபடி அமுல் நடத்த வேண்டுமானால், வாடகையை நிர்ணயிப்பதோடு மட்டுமல்லாமல், ரெண்ட் கண்ட்ரோலர் அல்லது அக்காமடேஷன் ஆபீஸர் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் அல்லாமல் மற்றும் இன்னும் வீடு வேண்டுமென்று சொல்லக் கூடிய ஏனையோருக்கும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அல்லாதாருக்கும் வீடு அலாட் பண்ண அதிகாரம் அவர்களுக்கு இருக்குமானால்தான் உள்ளபடியே நாம் ஒரு நல்ல திட்டத்தை கொண்டு வருவதாக இருக்கும். ஆகவே, ரெண்ட் கண்ட்ரோலர் அல்லது அக்காமடேஷன் ஆபீஸர் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் இல்லாமல் ஏனையோருக்கும் ப்ரயாரிட்டி பிரகாரம் வீடு அலாட் செய்ய அதிகாரம் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை சொல்லிக்கொண்டு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த நீடிப்பு சட்டத்தை முழு மனதுடன் வரவேற்கிறேன்.

10-54 a.m. * Sri R. SRINIVASA IYER : Sir, while supporting this Bill, I appeal through you to the Government to look into the working of the Act and the difficulties experienced both by the owners of houses and tenants. My friend, Mr. Lazar, pointed out that there was loss of Court-fee because the tenant was asked to pay arrears of rent due to the owner before he contested a petition for eviction. It is true. At the same time, I desire to point out that civil courts



25th July 1957] [Sri R. Srinivasa Iyer]

have now been invested with jurisdiction to try cases of eviction and that they say that they have no jurisdiction to go into the question whether there is tenancy or not. Certain civil suits have been dismissed by civil courts on the ground that there is dual jurisdiction. They say : " You go to the Revenue Divisional Officer ". That is the experience of landlords who file petitions for eviction. At the same time, the tenants take up the question that the court has no jurisdiction in matters like fixation of fair rent and we have to go to the Rent Controller, if there is no agreement between the owner and the tenant as regards rent. That is the trouble. If the civil court is vested with jurisdiction in all matters, then the question of court-fee raised by Mr. Lazar will also be solved. Now there are two officers exercising jurisdiction, the Revenue Divisional Officer or the Rent Controller and the District Munsif. The Revenue Divisional Officer is the officer for allotment of houses and fixation of fair rent. Therefore, it is better that one officer is invested with jurisdiction over the entire thing.

The other point that I desire to raise is this. The life of the Act has been extended from time to time and it is not likely that we will be able to solve the problem of housing for some years to come. The life of the Act can be extended without any limitation being fixed to it, since the position is not going to ease in the next two years or after. Of course, the Act, so far as it goes, has helped both the landlord and the tenant because one is assured of regular payment of rent and the other is assured of regular tenancy if only he is regular in the payment of rent. Till the Government are assured that the position has eased and that the Act is not necessary, it is better to extend the life of the Act without fixing any period such as two years. When no longer required, the Legislature then in existence will repeal the whole Act. That is my humble submission.

* Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, வாடகை வீட்டுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இன்று கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்தத்தையொட்டி சில கருத்துக்களைச் சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த வாடகை வீடு கட்டுப்பாட்டுச் சட்டம் சில பல ஆண்டுகளாகவே ஏறத்தாழ போர்க்காலத்திலிருந்தே தொடர்ந்து இன்று வரையில் நீடித்து வருகிறது. இனியும் சில ஆண்டுகள் நீடிக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதி இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருகிறது. இந்தச் சட்டம் கொண்டுவந்த நாள்முதலாக இதனாலே ஓரளவு சாதாரண மக்களுக்கு வாடகை வீடு கிடைக்கக்கூடிய வாய்ப்பு உண்டாயிற்று என்று சொன்னாலும் ஏற்பட்ட சிக்கல்கள் மேலும் மேலும் வளர்ந்துகொண்டு இருக்கிறதேயொழிய குறைந்தபாடில்லை. பொதுவாக இந்த வாடகை வீடு கட்டுப்பாடு சட்டம் அதிகமான அளவு உயர்ந்த முறையில் வளம் பெற முடியாத வக்கீல்கள் பலருக்கு பிழைப்பு அளிக்கும் முறையாக அமைந்திருக்கிறது. 10-57 a.m.

Srimathi T. N. ANANDANAYAKI : It is an insinuation against the lawyers. Will the hon. Member withdraw the statement?

Mr. SPEAKER : He has not spoken disparagingly of lawyers. He says it only serves to give them work.

SRI K. ANBAZHAGAN : நான் சொன்ன கருத்து பொதுவாகவே நாட்டிலுள்ள நிலைமை. இந்நிலைமை பாராளும் மன்றத்திலேயே பேசப்பட்டதாகும். கான்ஸ்டிட்யூஷன் என்று சொல்லப்படுகிற அரசியல் நிர்ணய சட்டம் கொண்டுவரப்பட்டபோதுகூட, வக்கீல்களுக்கு வாழ்வு அளிக்கக்கூடிய சட்டமாக இருக்கிறது இது என்று சொல்லப்பட்டது. ஆகவே இதில் குற்றம் ஒன்றுமில்லை.

SRI S. LAZAR : வாழ்வு பெறமுடியாத வழக்கறிஞர்கள் என்று சொல்லப்பட்டதை வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டும். வழக்கறிஞர்கள் வாழ்வு உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் வேறு எந்தத் துறையிலும் வாழ்க்கை நடத்த தகுதி உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே அவர் அந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I have given my ruling. I do not think there is anything objectionable in the statement made by the hon. Member. I rule out the point of order.

SRI K. ANBAZHAGAN : வாழ்க்கையில் வளம் பெற முடியாத வழக்கறிஞர்கள் . . .

MR. SPEAKER : Please do not try to explain it. (Laughter.) I have already given my ruling.

SRI S. LAZAR : It is still worse.

MR. SPEAKER : I have asked the hon. Member to proceed with his speech. He may continue.

(Several hon. Members rose.)

MR. SPEAKER : Order, order. When the Chair is on its legs, it is a wholesome convention, hon. Members should not stand. I hope this will be observed. Mr. Anbazhagan will now speak.

* SRI K. ANBAZHAGAN : இத்தகைய சட்டத்தால் வழக்கறிஞர்கள் வாதாடுவதற்கு அதிகம் வாய்ப்புக் கிடைக்கிறதே தவிர பொது மக்கள் தங்களது குறைகளை எளிதாகத் தீர்த்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. இந்தச் சட்டத்தை நீடித்துக்கொண்டு போகப்போக எப்படியிருந்தாலும் வசதியுள்ளவர்கள், வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் பயனுற வாய்ப்பு இருக்கிறதே தவிர, வீடு கிடைக்காத ஏழை மக்கள் ஒரு வீட்டில் 10 அல்லது 20 குடிகளாகக் குடியிருப்பவர்களுக்கு எந்த வீட்டு வசதிகளும் எளிதாகப் பெற முடியவில்லை. இந்தச் சட்டத்தால் ஏழை மக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையில் தகராறு ஏற்படும்போது—சட்டத்தை முதலாளிகள்—தங்களுக்குத் துணையாக ஆக்கிக்கொள்வது போன்றே இங்கும் நிலைமை யுள்ளது. ஏழைக் குடிகள் இந்தச் சட்டத்தால் தங்களுக்குத் தேவையான நன்மையைப் பெறமுடியாமலிருக்கிறது. ஏழைகள், மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் மிகுந்த தொல்லைக்கு ஆளாகிறார்கள். இந்தச் சட்டத்தினால் சாதாரணமாகவே சிலர் அதற்குரிய நீதி மன்றத்திற்குச் சென்று வாடகை வீட்டை விட்டுக் குடியிருப்பவர் வெளியேற வேண்டுமென்று தீர்ப்புக் கிடைத்த பின்னர், மூன்று மாதத் தவணை தரப்படுமானால், வாடகை கொடுக்காமல் வீட்டைக் காலி செய்துவிட்டு போவதும், அதனால் தொடர்ந்து வழக்கு ஏற்படுவதும் ஆகிய நிலைமை யிருக்கிறது. சிக்கலை வளர்க்கிறது இந்தச் சட்டம். ஆகவே அரசாங்கம் கூடிய சீக்கிரம் இதைக் கைவிடக் கூடிய வழிபற்றிக் கவனம் செலுத்தினாலொழிய, இந்த அடிப்படை பிரச்னை தீராது. எவ்வளவு வீடுகள் கட்டினாலும் இச்சட்டத்தின் மூலம் மக்களின் தேவை நிறைவேற முடியாது. அரசாங்கத்திற்கும் ஒரு பெரிய தொல்லையாகவே இருக்கும். இதிலுள்ள அடிப்படையான பிரச்னையை



எண்ணிப் பார்க்க விரும்புகிறேன். சட்டத்தைத் திருத்தினால் மட்டும் போதாது. எதிர் காலத்தில் இந்நிலையை மாற்றுவதற்குத் தேவையான அளவிலும் முறையிலும் திட்டமிட்டாக வேண்டும். குறிப்பாகச் சென்னை நகரில் ஆந்திர மாகாணப் பிரிவினைக்குப் பிறகு, குடியிருப்பு வசதி பெருகும், அப்போது இந்தச் சட்டம் தேவைப்படாது என்ற கருத்து நிலவிற்று. இங்குள்ள சில அலுவலகங்கள் சென்ற பின்னர், அதில் வேலை செய்யக்கூடியவர்கள் சென்னையை விட்டுப் போகும்போது, குடியிருப்பு வசதி அதிகம் இருக்கும் என்று சொல்லப்பட்டது. அப்படிச் சென்ற பின்னரும் இந்த நெருக்கடி குறையவில்லை. அதற்குக் காரணம் சென்னை நகரத்திலே அலுவலகங்கள் பெருகி கொண்டிருக்கின்றன. புதுப் புதுத் துறையிலே அலுவலகங்கள் அதிகமாகப் பெருகுகின்ற காரணத்தால் அந்த அரசாங்க பணியாளர்களுக்கு வீடுகள் தேடித்தர வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அதனால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. அரசாங்க பணியாளர்களுக்கும் தக்க வசதியுள்ள வீடுகள் கிடைப்பதில்லை. இதே போலத்தான், பெரிய நகரங்களின் நிலை இருக்கிறது. இந்த நிலையில் அந்தச் சட்டத்தை நீடிக்க விடாது நீக்க வேண்டிய நினைப்பை மனதில் கொண்டு சென்னை போன்ற நகரங்களில் உள்ள அலுவலகங்களில் எந்தெந்த அலுவலகங்கள் சென்னையில் அன்றாட உடனடி பணிக்குத் தேவை யில்லையோ அவ்விதமான அலுவலகங்களை வேறு நகரங்களுக்கு மாற்ற வேண்டும். ஆயிரக் கணக்கானவர்கள் வேலை செய்யக்கூடிய அலுவலகங்கள், ஒரு மாதம் அல்லது இரண்டு மாத அளவு தவணையில் தமக்குரிய அலுவல்களை நிறைவேற்றக்கூடிய அலுவலகங்கள் சென்னையினின்றும் மாற்றப்படுவதன் மூலம் வாடகை வீட்டுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழிகாண அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டுமென்றும், அதற்கான வழி முறைகளை வகுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

* SRI V. SANKARAN : எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் சொன்னார்கள். வாழ்க்கையில் வளம்பெற முடியாதவர்கள் . . .

MR. SPEAKER : The hon. Member will please sit down. I would like to tell the hon. Member that I have already given a ruling in the matter and he should not pursue it. If the hon. Member is going to pursue the matter, I shall not give him the chance to speak. However, if he wants to speak on the merits of the Bill, I have no objection.

SRI V. SANKARAN : Sir, I am only saying that advocates are not so bad . . .

MR. SPEAKER : I have already given my ruling on the matter.

SRI V. SANKARAN : That statement is not correct . . .

MR. SPEAKER : Let the hon. Member proceed. I shall see how far the hon. Member conforms to my point.

SRI V. SANKARAN : ஏதோ வாழ்க்கையில் வளம்பெறவில்லை என்று சொன்னார்கள். அது முற்றிலும் விரோதமானது. வக்கீல்கள் சட்டங்களில் உள்ள சிக்கல்களை எடுத்துச் சொல்லி, நல்ல முறையில் வாழ்க்கை நடத்துகிறார்களே தவிர, ஒரு சில நண்பர்களைப்போல இயற்கைக்கு விரோதமான காதற் சித்திரங்களை சித்தரித்து . . .

MR. SPEAKER : I am afraid the hon. Member is exceeding the limits. I can also understand some Tamil. The hon. Member should confine himself to the subject under discussion. I have

already given my ruling. If, however, the hon. Member persists further on a matter on which I have given my ruling, I will have to ask him to sit down.

SRI V. SANKARAN : அந்த முறையில் இயற்கைக்கு விரோத மில்லாமல் அவர்கள் வாழ்க்கை நடத்தவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையிலே வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போகிறதைப் பற்றிச் சொன்னார்கள்; வக்கீல்கள் இல்லாவிட்டால் வீட்டுக்கு வாடகை கொடுப்போர்களுக்கும், வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் . . .

SRI A. GOVINDASAMY : On a point of order, தலைவர் அவர்களே, கனம் சங்கரன் அவர்கள் பேசியது out of order என்று சொல்லிய பிறகும் . . .

(ஸ்ரீ வி. சங்கரன் நின்றுகொண்டிருந்தார்.)

SRI K. VINAYAKAM : Sir, can two Members stand at the same time?

MR. SPEAKER : All the Members including Sri Vinayakam may please sit down.

SRI A. GOVINDASAMY : அவர்கள் தொடர்ந்து பேசுகிறார்கள் . . .

MR. SPEAKER : அந்த சென்டன்ஸ் முடியவில்லை, அதை இப்போது முடித்துவிட்டார்கள்.

* SRI V. SANKARAN : இன்றைக்கு வக்கீல்களும் கோர்ட்டும் இல்லாவிட்டால் எந்த நிலையில் இருப்பார்கள் என்றால் ஏற்படக்கூடிய தகராறுகளை **Might is right** என்று நேரடியாகத் தீர்த்துக் கொள்ளவேண்டியிருக்கும். சட்டங்களும் வக்கீல்களும் கோர்ட்டும் இருப்பதால் அவ்வாறின்றி சுமுகமாக தீர்த்துக்கொள்ள முடிகிறது. அந்த முறையில் இந்த சட்டத்தை நீடிப்பதில் நன்மை இருக்கிறது என்று கருதுவதால் இந்த சட்டத்தை வரவேற்று, இந்த திருத்தத்தை வரவேற்று என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI T. SAMPATH : சபாநாயகர் அவர்களே, இந்த திருத்த சட்டத்தை ஆதரிக்கிற முறையில் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் ஒருவர் இந்த சட்டத்தை பஞ்சாயத்துகளுக்கும் நீடிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இந்த சட்டம் பஞ்சாயத்துக்களுக்கும் நீடிக்கப்பட்டிருந்தது அங்கத்தினருக்கு ஞாபகமிருக்கும். மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் இச்சட்டம் நீடிக்கப்பட்டு இருந்தது. பஞ்சாயத்துக்களில் தற்பொழுது நிலைமை மாறியிருக்கிறது. அத்தியாவசியமான நிலைமை ஏற்படுமானால் பஞ்சாயத்துக்களுக்கும் இச்சட்டத்தை நீடித்துக்கொள்ளலாம் என்ற அபிப்பிராயத்தின் பேரில் பஞ்சாயத்துக்களை இச்சட்டத்தில் இருந்து நீக்கிவிட்டார்கள். ஏதாவது நெருக்கடி இருந்தால் அப்போது மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு நீடிக்கலாம். அமைதியான நிலைமை இருக்கும்போது, சட்டத்தைப் போட்டு நெருக்கடியான நிலைமையை உண்டு பண்ணக்கூடாது. அதனால் இப்போது மேஜர் பஞ்சாயத்துக்களுக்குத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது, கனம் லாஸர் அவர்கள் சொன்னதை ஆமோதிக்கிறேன். இந்தச் சட்டத்தின் காரணமாக கோர்ட்டுக்குக் கட்டணம் செலுத்தாமல் பழைய வாடகைகளை வசூலித்து வருகிறார்கள். இதனால் சிவில் கோர்ட்டுகளில் ஸ்மால் காஸ் (**small cause**) வியாஜ்யங்கள் குறைந்துவிட்டது. கோர்ட்டு கட்டிணங்களும் பாதிக்கும்படியாக இருக்கிறது. இதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி ஒரு திருத்தம் கொண்டுவந்தால் சௌகரியமாயிருக்குமென்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



* SRI K SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா ஜூலை 4-ம் தேதி எக்ஸ்ட்ராடினரி கெஜட்டில் வெளியானது. ஆனால் அதே நாளில் நமது சட்டசபையும் இங்கு நடந்துகொண்டிருந்தது. சாதாரணமாக சட்டசபை நடந்துகொண்டிருக்கும்போது எது ஒரு மசோதாவும் சபையின்முன், அதாவது லீவ் ஆப் தி ஹவுஸ் கேட்டு அதை வெளியிடுவதுதான் முறையாக இருக்கும். நமது சட்ட சபை விதிகளின் 91-வது விதிப் பிரகாரம் அதற்கு விதி விலக்கு இருப்பினும் அந்த சம்பிரதாயத்தை அப்படி பாரம்பரியமாக வைத்துக் கொள்வது தவறாக இருக்கும். மேலும் இரண்டொரு மசோதாக்களை நேரடியாக கெஜட்டில் பிரசுரம் செய்திருக்கிறார்கள். அதற்கு கவர்னர் உத்திரவு பெற்றிருக்கிறோம் என்று சொல்லலாம். ஆனால், இந்த முறையை அனுஷ்டிக்காமல் இருப்பது நல்லதாக இருக்கும் என்ற யோசனையை சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், இன்று வீடு வாடகைக்குக் கிடைப்பது என்பது ஒரு மிகப் பெரிய பிரச்னை. ராஜ்யப் புனரமைப்புக்குப் பின் கூட இந்த மசோதாவின் ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸில் சொன்னதுபோல நிரந்தர நெருக்கடி நீடிக்கிறது. நான் இரண்டு மாதங்களாக ஒரு வீட்டுக்காக பல்வேறு இடங்களில் சுற்றி அலைந்தேன். அதனால் எனக்கு வீடு கிடைப்பதில் எத்தனை கஷ்டம் இருக்கிறது என்று தெரியும். எத்தனை இடங்களில் ஒண்டுக் குடித்தனம் நடக்கிறது என்று தெரியும். நிரந்தரமாக வீட்டுக்கு நெருக்கடி ஏற்பட்டிருப்பதை நாம் சமாளிக்க வேண்டும். சில வீடுகளில் தண்ணீர் வராது. சில இடங்களில் வேறு வசதி கிடையாது. ஐந்நூறு, 1,000, 2,000 என்று முன் பணம் கொடுத்தால் வீடு கிடைக்கும்.

ஆனால் சட்டசபை அங்கத்தினர் என்று தெரிந்து விட்டால் இருக்கக் கூடிய சந்தர்ப்பமும் போய் விடுகிறது. ஆகவே இந்த மசோதாவுக்கு காலவரை என்று இல்லாமல் அதாவது இரண்டு வருஷங்களுக்கு நீடிக்க வேண்டும் என்று இல்லாமல் நிரந்தரமாகவே இதை சட்டமாக்கி விடுவது நன்மையாக இருக்கும். இன்னும் இரண்டு வருஷங்களில் இந்த வீட்டுப் பிரச்னை தீர்ந்து போய் விடும் என்பது இல்லை. திரும்பவும் இப்படிப்பட்ட ஒரு மசோதாவை இன்னும் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு இதே சட்டசபைக்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படும். அதனால் நிரந்தரமாகவே இதைக்கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுத்திருக்கலாம். தற்காலிகமாக என்று இருப்பது இந்தப் பிரச்னையை இரண்டு வருஷத்தில் சமாளித்து விடுவோம் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் இது ஊட்டுவதாக இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் இந்த பிரச்னையை சமாளிக்க தகுந்த திட்டமில்லை. ஆகவே இரண்டு வருஷங்களுக்குள் சமாளிக்க முடியும் என்பது இல்லை. நிரந்தரமாக இந்த சட்டத்தைக்கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கலாம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, I have already spoken in this subject during the budget discussion. Still, I want to emphasize the same point here. I do not know whether there is any need for this accommodation control at all. There has been a lot of abuse and my impression is that neither the landlord nor the tenant stand to gain and it is only the middlemen who stand to gain. My submission is that if this should be of some advantage to the middle-class people who are in real need of it, there is no point in having this accommodation control only for the benefit of the Government servants. This should be applied to the benefit of all the middle-class people. All these poor people should be helped. Accommodation should be provided strictly in the order of priority. It is really a very big question and has to be carefully gone into. Meanwhile, instead of extending this Bill for

11-12 a.m.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [25th July 1957

two years, I would request the Hon. Minister to extend it for a period of six months and in the meantime to constitute a Select Committee to go into the whole question and then bring forward a comprehensive measure so far as fair rent is concerned. If he does that, it will be very beneficial to many poor people. So, instead of extending it for two years, the Government may extend it for six months and in the meantime may bring forward a comprehensive Bill which may be considered by a Select Committee.

11-14 a.m. * THE HON. SRI V. RAMIAH : Sir, as I said while introducing the Bill, this is a simple Bill and I hope none will be against it. I find that almost all the Members who took part in the discussion, have supported the extension of the life of this Act. Because, they know the difficulties which the middle-class people are experiencing and even the lower middle-class people are experiencing. They also know, I am sure, that those poor people will find it very difficult if the Act is not extended. My friend Sri Anbhazhagan—who was also called Ramaiah as myself—said that the poor and the lower middle-class sections should be helped. If this Act is not in force, I can definitely tell him that the poor lower middle-class people will be greatly affected. I am sure that the complaint which Mr. Sattanatha Karayalar made will be still worse if there was no such Act. I am really sure that this Act is really helping the middle and the lower middle classes. The hon. Leader of the Opposition stated that the benefits of this Act should not be restricted to Government servants alone and the benefits should be extended to all middle-class people. Well, as I told you, the whole matter is under consideration and a comprehensive Bill is to be brought forward by the Government very soon. All the points raised by the various hon. Members will be taken into consideration when we prepare that Bill and if it is necessary the suggestion of the hon. Leader of the Opposition to send that Bill to a Select Committee for further consideration will be considered. As far as this particular amendment is concerned, I find there is no opposition at all.

Sir, my friend Sri Govindasamy Nayagar wanted this Act to be extended to all the major Panchayats. There are number of major Panchayats which are benefited by this Act. The hon. Member wants this Act to be extended to Neiveli, Vridhachalam and Nellikuppam. I shall ask this suggestion of the hon. Member to be examined and I may tell him that necessary action will be taken.

All the other points raised are not quite relevant to this particular amendment, but they may be relevant to the comprehensive measure which I will be bringing forward in the near future before this House. The difficulty felt by the hon. lady Member Srimathi T. N. Anandanayaki will also be set right. As it is, as soon as a tenant vacates a controlled building, immediately the landlord can raise the rent. The poor tenant who occupies the building later will have to go to the Court for fixation of fair rent. This position will also be set right in the coming Bill. All the other points raised by the hon. Members will be considered.



25th July 1957]

MR. SPEAKER : The question is—

" That the Madras Buildings (Lease and Rent Control) Bill, 1957, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

*Clause 2.*

MR. SPEAKER : The motion is—

" That Clause 2 do stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the amendment standing in my name, viz.—

" In sub-section (3) of section 1 of the principal Act, *delete* the words ' and shall remain in force up to and inclusive of the 30th September 1957 '."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI M. JAGANNATHAN : Sir, I move the amendment standing in my name, viz. :—

" In lines 15 and 16 *for* the expression ' 30th September 1959 ', *substitute* the expression ' 30th September 1962 '."

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

MR. SPEAKER : Amendments moved—

" In sub-section (3) of section 1 of the principal Act, *delete* the words ' and shall remain in force up to and inclusive of the 30th September 1957 '."

" In lines 15 and 16 *for* the expression ' 30th September 1959 ', *substitute* the expression ' 30th September 1962 '. "

SRI M. JAGANNATHAN : Sir, my amendment is a very simple one. Instead of extending the life of the Act piecemeal, it is better to extend its life by five years. I have already explained that considerable difficulty is experienced in obtaining housing accommodation not only in the City of Madras but in the various mufassal areas. Therefore, it is rather desirable to extend the life of the Act by five years. As pointed out in my previous speech, on account of the developmental activities going on every year under the Second Five-Year Plan, a number of people require more and more accommodation and the accommodation problem is becoming more and more acute.

It has not solved the difficulty properly and satisfactorily. Therefore the enforcement of the Act must be strict. The life of the Act must be extended not for two years, but for five years. This is my amendment, Sir.

[25th July 1957

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தை 30-9-1957-லிருந்து மேலும் இரண்டு வருஷங்களுக்கு நீடிக்கவேண்டும் என்று இந்தத் திருத்த மசோதா கோருகிறது. இரண்டு வருஷங்களுக்கு இந்தச் சட்டத்தை நீடிப்பது மட்டும் போதாது, இந்தச் சட்டம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. எதற்காக நான் இப்படிச் சொல்கிறேன் என்றால், எந்த நோக்கத்தோடு இந்தச் சட்டத்தை நாம் கொண்டுவந்தோமோ, அதாவது நியாயமான வாடகையில் வீடுகள் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வந்தோமோ அந்த நோக்கம் ஈடேறியிருக்கிறதா, அந்த அளவுக்கு வீடுகள் நியாயமான வாடகையில் கிடைத்திருக்கிறதா, அந்த அளவுக்குப் பெறக்கூடிய நிலைமை இருந்திருக்கிறதா என்று பார்க்கும்போது இல்லை என்று தான் சொல்லவேண்டும். நியாயமான வாடகைக்கு வீடுகள் கிடைக்கவேண்டியதற்குப் பதிலாக, மேலும் அதிகப்படியான வாடகைகளைக் கொடுத்தும் வீடு கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது என்பதைத்தான் நாம் பார்க்கிறோம். ஆகையால், இப்படி, ஒரு வருஷம், இரண்டு வருஷம் என்று நீடிப்பதைவிட, மொத்தமாக ஐந்து வருஷ காலத்திற்கு இந்தச் சட்டத்தை நீடித்துவிட்டால், எப்பொழுது இந்தச் சட்டம் அவசியம் இல்லை என்ற நிலைமை ஏற்படுகிறதோ, அப்பொழுது நாம் அதைக் "கான்சல்" செய்து கொள்ள முடியும். ஆகவே, இந்தச் சட்டம் தொடர்ந்து நீடித்திருக்கவேண்டும். நமக்கு அவசியம் இல்லாத போது நாம் அதை ரத்து செய்துவிடலாம். இந்தச் சட்டத்தைத் தொடர்ந்து நீடிப்பது நல்லது என்ற எண்ணத்தோடு இந்தத் திருத்தத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன்.

THE HON. SRI V. RAMIAH : Sir, though the two amendments are really helpful, I am not accepting them, because the whole idea of the Government is to keep control as long as there is scarcity. So we review the position from time to time, and when we come to a definite understanding that there is no scarcity, then the Act automatically goes. Coming to the House once in two years gives at least an opportunity to the Hon. House to review the position and take steps. So, I do not accept the amendments.

11-22 a.m.

MR. SPEAKER : I now put the amendment of Sri V. K. Kothandaraman to vote. The question is—

"In sub-section (3) of section 1 of the principal Act, *delete* the words 'and shall remain in force up to and inclusive of the 30th September 1957'."

The amendment was put and lost.

MR. SPEAKER : I now put the amendment of Sri M. Jagannathan to vote. The question is—

"In lines 15 and 16, *for* the expression '30th September 1959', *substitute* the expression '30th September 1962'."

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMIAH : Sir, I move—

"That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1957, be passed."



25th July 1957]

MR. SPEAKER : The question is—

"That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1957, be passed."

The motion was put and carried and the Bill was passed.

**(2) THE MADRAS GENERAL SALES TAX AND SALES OF MOTOR SPIRIT TAXATION AMENDMENT) BILL, 1957: (L.A. BILL NO. 6 OF 1957).**

**THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras General Sales Tax and Sales of Motor Spirit Taxation (Amendment) Bill [a] 1957, and move—**

"That the Bill be taken into consideration."

கனம் சபா நாயகர் அவர்களே, இந்த பட்ஜட் விவாதத்தின்போது, விற்பனை வரியானது 1-9/16 என்று பின்னத்தில் இருப்பதை 2 நயா பைசாவாகத் திருத்தி அமைத்திருப்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த விகிதத்தை நாம் **Indian Coinage Act** பிரகாரம் முதலிலே கொண்டுவந்திருக்கக் கூடுமானாலும், வரி விதிக்கும் போது பட்ஜட்டின்போது விவாதித்து விதிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன்தான், அப்பொழுது அந்தக் காலண என்பதை எந்த அளவுக்கு நயா பைசாவாக மாற்ற முடியுமோ அந்த அளவு மாற்றி, முதல் மசோதா கொண்டுவரப்பட்டது.

இடைக்காலத்திலே, 1-9/16 நயா பைசா விகிதம் அமுலில் இருக்கின்ற போது சில இடங்களில் வர்த்தகர்கள், குறிப்பாக சில்லரைக் கடைக்காரர்கள், 1-9/16 என்ற விகிதம் அவர்களுக்குக் கணக்குப் போடுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது என்ற காரணத்தால் 1-9/16 என்ற விகிதத்தில் விற்பனை வரி வசூலிக்காமல், 2 நயா பைசா என்ற விகிதத்தில் வசூலிப்பதாகவும் சர்க்காருக்குத் தகவல் கிடைத்தது. ஆகையால், அரசாங்கத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தொகை கிடைக்காமல், அதைச் சில்லரைக் கடைக்காரர்கள் பெற்றுவிடுவதைத் தடுப்பது இத் திருத்த மசோதா கொண்டுவந்திருப்பதன் நோக்கமாகும். அதே சமயத்தில், நம்முடைய ராஜ்ய வரவு செலவுக் கணக்கில் ஓரளவு துண்டு விழுந்ததாலும், அதை இது ஈடு கட்டும் என்ற காரணத்தாலும் இம்மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு மோட்டார் எண்ணெய்களைப்பற்றி வரி விதிக்கின்றபோது ஒரு திருத்தம் நான் கொண்டுவந்தேன். அந்தத் திருத்தத்தில், "இதுவரையில் அவர்கள் ட்ரஷரியில் சலான் மூலம் பணம் கட்டவேண்டும் என்ற நிலைமையை மாற்றி, அவர்கள் செக் மூலமாகவோ வேறு எந்தவிதமாக சர்க்கார் நிர்ணயிக்கிறார்களோ அந்த முறையிலோ பணம் கட்டலாம்" என்று கூறப்பட்டது. அந்தத் திருத்தம் செய்ததால், அடுத்த "செக்ஷனி" லும் கூட ஒரு சிறு மாறுதல் செய்திருக்கவேண்டும். அதாவது, "பணம் முழுவதும் கட்டிய பிறகு" என்று இருந்ததற்குப் பதிலாக, "எந்த முறையில் சர்க்கார் கட்ட வேண்டுமென்று நிர்ணயிக்கிறார்களோ அந்த முறையில் கட்டிய பிறகு" என்று **consequential amendment** செய்திருக்க வேண்டும். அது தவறிவிட்டது. அதை இப்பொழுது செய்வதற்கு முன்வந்திருக்கிறோம். இந்த ஷரத்துக்களை சட்டசபை ஏற்றுக் கொள்ளும் என்று நம்பி இந்த மசோதாவை நான் பிரேரிக்கின்றேன்.

MR. SPEAKER : Motion moved—

**"That the Madras General Sales Tax and Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957, be taken into consideration."**

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 16th July 1957.

[25th July 1957

* SRI M. P. SUBRAMANIAM : தலைவர் அவர்களே, விற்பனை வரி 1-9/16 ஆக இருந்ததை, புது காசு வந்ததன் காரணமாக, 2 சதவிகிதமாக உயர்த்தப்போவதாக நிதி அமைச்சர் அவர்களுடைய உரையில் காணப்பட்டு, அதற்கு வேண்டிய சட்டம் சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்தச் சபையில் நான் குறிப்பிட்டிருக்கின்றேன். இந்த
11-27 a.m. 1-9/16 என்பதை 2 புதுக் காசாக மாற்றுவதினால், பார்ப்பதற்குக் கொஞ்சமாகத் தெரிந்தபோதிலும்கூட, மொத்தத்தில் பார்க்கும்போது, சில்லறை வியாபாரிகளும் மற்றவர்களும் மூன்றிலொரு பங்கு அதிகமாகப் பணம் செலுத்த வேண்டியிருக்கிறது என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். சாதாரணமாக ஒரு வியாபாரி மூவாயிரம் ரூபாய் இதுவரை வரி செலுத்திவருபவராக இருந்தால், இனி நாலாயிரம் ரூபாய் செலுத்தவேண்டும். புதுக் காசுக் கணக்குப் போடும்போது சுமார் அரை தம்படிதானே உயருகிறது என்று சொல்வதைப் பார்க்கும்போது, தம்படிக்குத் தம்படி வட்டி வாங்குவதுபோல் இருக்கிறது. பார்ப்பதற்கு வேண்டுமானால், அரைப் பைசாதானே என்று சொல்ல முடியுமேதவிர, மொத்தமாகப் பார்க்கும்போது மூன்றிலொரு பங்கு அதிகமாகக் கட்ட வேண்டி ஏற்படுகிறது என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இதைப் பொதுமக்கள்தான் வாங்கும்பொழுது கொடுக்கவேண்டும். ஏற்கெனவே விலைவாசிகள் அதிகமாக இருக்கின்றன. அதன் காரணமாக அரசாங்க உத்தியோகத்தில் இருக்கக்கூடிய கீழ்த்தர சிப்பந்திகள், “ செலவு புள்ளி உயர்ந்துவிட்டது, சம்பள உயர்வு வேண்டும் ” என்று கிளர்ச்சிகள் செய்துவருகிறார்கள். மத்திய அரசாங்க ஊழியர்களும் மற்றவர்களும் கிளர்ச்சி செய்யும் நிலைமையைப் பார்த்து, அம்மாதிரி மாநில அரசாங்கத்துக்கும் பரவுமா என்ற அச்சம் இருக்கிறது. 1–9/16 ஆக இருந்த விற்பனை வரியை 2 சத விகிதமாக உயர்த்தினால் நிச்சயமாக விவசாயமற்ற பொருள்களின் விலை அதிகமாக உயரும். ஆகவே, ஊதிய உயர்வு கோருவதிலே உண்மையான நியாயம் இருக்கும் என்ற அளவுக்கு நிலைமை வந்துவிடும்.

அதோடு மட்டுமில்லாமல், விற்பனை வரி விதிப்பதைப்பற்றி நல்ல முறையிலே பரிசீலனை செய்து, என்ன செய்யவேண்டும் என்பதற்காக டாக்டர் லோகநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக சபையிலே அடிக்கடி அறிவிக்கப்படுகிறது. ஒரு முனை விற்பனை வரி போடுவதா, அப்படிப் போடுவதென்றால் என்னென்ன பொருள்களுக்குப் போட முடியும் என்று இன்றைக்கு ஆராய இருக்கிற காரணத்தால், இந்தப் புது காசு அமுலுக்கு வந்து இவ்வளவு நாளாகிவிட்டாலும் இன்னும் அவருடைய ரிபோர்ட் வரும் வரையில் காத்திருக்கவேண்டும். அதற்குள் எந்தவிதமான ஆபத்தும் வந்துவிடாது. அவருடைய ரிபோர்ட் வரப் பல ஆண்டுகள் ஆகும் என்று சொல்லிவிட முடியாது. மிக விரைவிலே அனுப்பிவிடுவார்கள். அதுவரை பொருத்திருந்து, அதையும் மனதிலே வைத்து அவசியப்பட்டால் எந்தெந்த பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதிக்கலாம் என்று யோசித்து ஒரு சதவிகிதமோ இரண்டு , சதவிகிதமோ அப்பொழுது செய்துகொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டம் கூடாது என்று நான் அடியோடு மறுக்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற விற்பனை வரி திருத்த மசோதாவைப் பொருத்தவரை இரண்டு விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவது, கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய பட்ஜெட் உரையை நிகழ்த்தும்போது, உணவு தான்யங்களுக்கு விற்பனை வரி விதிப்பது சம்பந்தப்பட்டவரை, அது ஒரு சதவிகிதமாக குறைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதுசம்பந்தமாக ஏதாவது திருத்தம் கொண்டு வரப்படும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அந்த வரியை உயர்த்துவதற்கான திருத்தம்தான் சபை முன்பு பிரேரபணை செய்யப்பட்டிருக்கிறதே தவிர, அந்த வரியைக் குறைப்பதற்கான திருத்தம் பிரேரபணை செய்யப்படவில்லை. அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன செய்யவிருக்கிறது என்பது தெளிவாக வேண்டும் ; மீண்டும் திருத்தப் பிரேரபணை



25th July 1957] [Sri P. S. Chinnadurai]

கொண்டுவரப்போகிறார்களா அல்லது வேறு என்ன செய்யப்போகிறார்கள் என்பது தெளிவாகவேண்டும். இல்லையானால், பொது மக்கள் மத்தியில், கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிடப்பட்டதைப் பற்றியும், அரசாங்கத்தின் சார்பில் செய்யப்படும் இத்தகைய திருத்தங்கள் பற்றியும், தீவிரமான கருத்துகள் ஏற்படுவதைக் காணமுடியும். இது ஒரு குழப்பத்தில்தான் கொண்டுபோய் விடும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே இதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவில் உள்ள “ ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸ் ”-ல் “ சிறிய வியாபாரிகள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களிடமிருந்து அதிகமான தொகையை வரியாக வசூலிப்பதைத் தடுப்பதற்காகவும், அவர்கள் சரியான தொகையை வரியாக வசூலித்து சரியான அளவு வரியை அரசாங்கத்திற்குக் கொடுக்கும்படி செய்யவேண்டும் என்பதற்காகவும், 1-9/16 சதவிகிதம் வரி 2 சதவிகிதமாக மாற்றப்பட்டிருக்கிறது ” என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான பின்னக் கணக்குகளில் ஏதோ சிறிது சிரமம் இருப்பதாகக் கருதி, அந்தக் கணக்குகளைப் போடுவதிலுள்ள சிரமத்தைத் தவிர்ப்பதற்காக மக்கள் மீது வரிச் சுமையை உயர்த்துவதை நாம் எப்படி நியாயம் என்று ஒப்புக்கொள்ள முடியும் ? அது நியாயம் என்று கனம் அமைச்சர் அவர்கள் எப்படிக் கருதுகிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இப்போதுதான் ஒவ்வொரு தபாலாபீஸ்களிலும் நயா பைசா அட்டவணைகள் இருக்கின்றனவே. அரசாங்க விளம்பர இலாகா, விரிவான நடவடிக்கை எடுத்து, இவ்வளவு அணாக்களுக்கு இவ்வளவு நயா பைசாக்கள் என்றும், இத்தனை காலணாக்களுக்கு இத்தனை நயா பைசாக்கள் என்றும் தெரிவிக்கும் பட்டியல்களை அச்சிட்டு ஆங்காங்கே வெளியிட்டிருக்கிறது. அந்தக் கணக்குகள் சாதாரணமாக பொது மக்களிடையே நன்றாகப் பழக்கத்திற்கு வந்திருக்கின்றன. விற்பனை வரியை ரூபாய்க்குக் காலணா என்று அதே அளவில் வைத்துக்கொண்டு 16 ரூபாய்க்கு சாமான் வாங்கினால் வரி 4 அணா ஆகிறது. 4 அணா என்றால், 25 நயா பைசா என்று விற்பனை வரியைப் போடமுடியாதா ? எதற்காக 25 நயா பைசாவிற்கு பதிலாக புதிதாக 32 நயா பைசா கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட வேண்டும் ? இம்மாதிரியான ஒரு உயர்வை ஏற்படுத்துவதற்கு, என்ன சரியான தார்மீக காரணத்தை அரசாங்கம் மக்கள் முன்பு சொல்ல முடியும் ? நயா பைசா புகுத்தப்பட்டவுடனேயே அதனால் ஏற்படக்கூடிய அபாயங்களைச் சுட்டிக்காட்டி பெரிய பேரறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். மதிப்பிற்குரிய ஸ்ரீ ராஜாஜி கூட நயா பைசாவினால் மக்கள் வீண் சிரமங்களுக்கு ஆளாக நேரிடும் என்று எச்சரிக்கை செய்தார்கள். அந்த சிரமங்களை நாம் இப்போது உண்மையிலேயே காண்கிறோம். அகாரணமாக, தாங்களாக ஒரு குற்றமும் செய்யாமல் இருக்கும்போது, மக்கள் 1/3 பங்கு அதிகமாக வரி செலுத்த வேண்டிய நிலைமை இப்போது இந்த நயா பைசாவினால் ஏற்பட்டிருக்கிறது. இது சரியானதுதானா என்று பார்க்கவேண்டும். சரியானது இல்லை என்றால், இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் உடனடியாக முயற்சிக்க வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன். நயா பைசா என்று வரி விகிதம் மாற்றப்பட்ட ஒரே காரணத்திற்காக அதிகமான வரி செலுத்தும்படி மக்களைக் கோருவது நியாயம் அல்ல. எனவே இம்மாதிரி இந்த மசோதாவின் மூலம் விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துவதை அரசாங்கத்தார் விட்டுவிடவேண்டும். ஏற்கெனவே உள்ளவாறு இந்தச் சட்டம் இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதா நிறைவேறினால் இந்த அரசாங்கத்தார் விற்பனை வரியின் மூலம் இன்னும் கொஞ்சம் அதிகமான வருவாய் அடைவார்கள் என்ற காரணத்தினால் இந்த மசோதாவிற்கு நான் மறுப்புக் கூறுவதாக யாரும் கருத வேண்டாம் என்று நான் முதலில் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்

தாரின் வருமானம் பெருகக்கூடிய துறைகளில் குறுக்கிடுவது அல்ல, எதிர் கட்சியினராகிய எங்களுடைய நோக்கம். அதன் வருமானத்தைப் பெருக்கக்கூடிய வழிதுறைகள் அரசாங்கத்தால் கண்டுபிடிக்கப்படும்போதும், சில நிலைமைகளினால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கக்கூடிய முறைகள் அரசாங்கத்தால் கண்டுபிடிக்கப்படும்போதும், அந்த வழிதுறைகள் பொது மக்கள் மனதில் சந்தேகத்தையும் அருவெறுப்பையும் வெறுப்புணர்ச்சியையும் உண்டு பண்ணுபவையாக இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட வெறுப்புணர்ச்சி இந்த மசோதா சட்டமாவதால் ஏற்பட்டால், அன்றாடம் மக்கள் ஒவ்வொரு பொருளை வாங்கும்போதும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்து அவர்கள் மனதிலே அமையும். உண்மையிலேயே, இப்போது வந்துள்ள புதிய காசானது—அரசாங்கத்தார் வழங்குகின்றபடி,—நயா பைசாவானது மக்களுக்கு புதிய சிக்கல்களையும் தொந்தரவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் உணர்வோம். இந்தப் புதிய காசால் விளைந்த சிக்கல்கள் காரணமாக, இப்போதைய விற்பனை வரி விகிதமாகிய 1-9/16 என்ற சதவிகிதத்திலுள்ள 9/16 என்ற பின்னத்தை 16/16 என்று திருத்தி முழு எண்ணாக மாற்றிக் கொள்ளலாம்—பின்னத்தை முழு உருவமாக ஆக்கிகொள்ளலாம். விற்பனை வரியை 2 சதவிகிதமாக ஆக்கிவிடலாம் என்று அரசாங்கம் இந்தத் திருத்த மசோதாவில் குறிப்பிட்டுள்ளது. 9/16 என்ற பின்னம் கணக்குகளுக்குக் கடினமாக இருக்குமேயானால், அதையொட்டிய ½ என்ற பின்னத்தை எடுத்துக்கொள்வது சரியான முறையே தவிர முழு எண்ணாக மாற்றி அதிகமான விற்பனை வரியை விதிப்பது சரியான முறையல்ல. இப்போதைய விற்பனை வரி விகிதத்திலுள்ள 9/16 என்ற பின்னத்தை ½ என்ற பின்னமாக மாற்றாமல் ஒரு முழு எண்ணாக அரசாங்கம் மாற்றியிருப்பதிலிருந்து, இந்த அரசாங்கம் இதிலும் தனது லாபத்தைத்தான் முக்கியமாகக் கருதுகிறதே தவிர, மக்களுடைய சிக்கலைத் தீர்ப்பதை முக்கியமாகக் கருதவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. 9/16 என்ற பின்னத்தை ½ என்ற பின்னமாக மாற்றவேண்டுமென்றால், அரை நயா பைசாவிற்கு எங்கே போவது என்று அரசாங்கத்தார் கேட்கலாம். உணவுப் பொருள்களின் விலைகளையும் மக்களின் தேவையான மற்ற இன்றியமையாத பொருள்களின் விலைகளையும் கவனிக்கும்போது விலை உயர வழி வகுப்பதைவிட அரை நயா பைசாக்களைத் தயாரித்து வழங்கும்படி இந்த அரசாங்கத்தார் மத்திய அரசாங்கத்தாரைக் கேட்டிருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகவே அரை நயா பைசா இன்மையால் ஏற்படும் சிக்கலைவிட முழு நயா பைசா ஆக்குவதால் வரும் சிக்கல் அதிகமானது என்பது என் கருத்து. (Sri M. Jagannathan in the Chair.) மற்றொரு வகையில், நிதர்சனமான உண்மை—கண்கூடாகக் காணப்படுவது இது. அதிகமான விற்பனை வரி விகிதத்தால், சில்லரை வியாபாரிகளால் பொருள்கள் விற்கப்படும்போது அவைகளின் விலை உயர்த்தப்படுகிறதே தவிர, அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு விற்பனை வரியின் மூலம் வரவேண்டிய வருமானம் உயரவில்லை. சாதாரண சில்லரை வியாபாரிகள் 4 அணாவிற்கோ, 8 அணாவிற்கோ, 12 அணாவிற்கோ—அல்லது புதிய பைசா முறையில் 25 நயா பைசாவிற்கோ, 50 நயா பைசாவிற்கோ, 75 நயா பைசாவிற்கோ—சாமான்களை விற்கின்ற ஒவ்வொரு நேரத்திலும், அவைகளின் விலை உயர்கிறதேயொழிய அரசாங்கத்தின் விற்பனை வரி வருமானம் உயர்வதில்லை. பொருள்களின் விலை உயரும் அளவுக்கு—"ப்ரொபோர்ஷனேட்" ஆக இந்த வரியால் விகிதாச்சாரப்படி அரசாங்கத்திற்கு விற்பனை வரி மூலம் வரும் வருவாய் உயர்வதில்லை. சில்லரை வியாபாரிகளுக்குக் கிடைக்கும் லாபத்திற்கு ஏற்ப அரசாங்கத்திற்கு விற்பனை வரி மூலம் வருவாய் வருவதில்லை. பெரிய வியாபாரிகள் விற்பனை வரிக் கணக்குகள் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யலாம். ஆனால் ரூ. 5,000 அல்லது ரூ. 10,000 அளவிற்கு வியாபாரம் செய்யும் வியாபாரிகள் கூட சில்லரை வியாபாரிகள் தரத்தில் சேர்ந்திருப்பதால், அவர்களுக்குப் பொருள்களின் விலை உயர்வால் வரும் லாபத்திற்கு ஏற்ப அரசாங்கத்திற்கு விற்பனை வரியின் மூலம் வருவாய் உயருவதில்லை. அந்த வியாபாரிகள் இன்று விற்பனை வரியைக் கைவிடாமல் லாபம் தேடி வருகிறார்கள். இந்த நிலையில், விற்பனை வரி விகிதத்திலிருந்த 9/16



என்ற பின்னத்தை முழு எண்ணாக மாற்றுவது நல்ல மாற்றம் இல்லை. ஆகவே இந்தத் திருத்தம் அரசாங்கத்திற்கும் வியாபாரிகளுக்கும் இடையே விற்பனை வரி சம்பந்தமாக உள்ள கணக்கு முறையை மாற்றியமைக்கிறதே தவிர—சாமான்களின் விலையை வியாபாரிகள் மேலும் உயர்த்துவதற்கு ஒரு கருவியாக இருக்கிறதே தவிர—வியாபாரிகள் வரி உயர்வு விகிதத்திற்கு மேல் விற்பனை வரி காரணமாக விலையை உயர்த்தக் கூடாது என்று கட்டுப்பாடு விதிப்பதாக இல்லை என்பதை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

உண்மையிலேயே, இந்தத் திருத்தம் நிறைவேறினால், இதனால் மக்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளினால் மக்களிடையே அரசாங்கத்தைப் பற்றிய எண்ணத்தில்தான் மாறுதல் ஏற்படுமேயொழிய, அரசாங்கத்தின் வரவுக் கணக்கில் பெரிய லாபம் ஏற்பட்டு விடாது. ஆகவே, மக்களுக்குப் பல தொந்தரவுகள் ஏற்படக் கூடியவாறும், மக்களுடைய, மனப்பான்மை மாறக்கூடியவாறும், அரசாங்கம் விற்பனை வரி சம்பந்தப் பட்ட மட்டில் 1½ நயா பைசாவினை 2 நயா பைசாவாக உயர்த்துகின்றது. இதைக் குறிப்பிடும்போது சில நடைமுறை நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூற விரும்புகிறேன். ஏறத்தாழ ரூ. 10,000-க்கு விற்பனை செய்யும் வியாபாரிகள் கூடச் சில்லரை வியாபாரிகள் என்ற தரத்தில் சேர்ந்திருப்பதால்—அவர்கள் பெரிய வியாபாரிகளிடமிருந்து பொருள்களை வாங்கி விற்பவர்கள் என்ற காரணத்தால், சில்லரை வியாபாரிகள் தரத்தில் சேர்ந்திருப்பதால்—அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்திற்கு ஏற்ப அரசாங்கத்திற்கு விற்பனை வரியின் மூலம் வருமானம் அதிகரிப்பதில்லை. ஆனால் நடைமுறையில், அவர்கள் விற்பனை வரிவிகித உயர்வை தாங்கள் லாபம் தேடுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். விற்பனை வரிவிகிதம் உயர்ந்தால், அந்த வியாபாரிகளிடம் சாதாரண மக்கள் சாமான்கள் வாங்கும்போது, முன்பு 4 அணாவிற்கு வாங்கி வந்த பொருளுக்கு வரி விகிதம் உயர்ந்த பிறகு 4½ அணா கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த வியாபாரிகளிடம் சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட அளவு வெல்லத்திற்கு நாலணா கொடுக்கவேண்டியிருக்குமானால், விற்பனை வரி விகிதம் உயர்த்தப்பட்டால் நாலரையணா கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே விற்பனை வரியை எந்தக் காரணத்தைக்கொண்டு உயர்த்தினாலும், வியாபாரத்தில் சூது நடத்துபவர்கள் அந்த வரி உயர்வை, தாங்கள் லாபம் தேடுவதற்கு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் ; அதன் காரணமாக மக்களுக்கு அரசாங்கத்தைப் பற்றி இருக்கும் மனப்பான்மையும் அரசாங்கத்திற்குப் பாதகமாக மாறுகிறது.

இப்போது விற்பனை வரிச் சட்டத்தில் வரி விகிதம் சம்பந்தமாகச் செய்யப்படும் திருத்தம், சூது செய்யும் வியாபாரிகளுக்குத்தான் பயன்படும். இந்தத் திருத்தம் நல்ல முறையில் செய்யப்படும் திருத்தமாகாது. கணக்கு போடுவதற்குக் கடினமாக இருக்கிறது என்பதற்காக 9/16 என்ற பின்னத்தைத் திருத்த வேண்டுமென்றால், அதற்கு நெருங்கிய பின்னமாகிய ½ என்ற பின்னமாகத் திருத்திக்கொள்ளலாம். அப்படிச் செய்து, இந்த அரசாங்கம் நல்லதொரு திருத்தத்தை மேற்கொள்ளலாம், அதையே மக்கள் வரவேற்பர் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

11.40 a.m.

**Sri S. LAZAR :** கனம் தலைவர் அவர்களே, ஏதோ எனக்கு முன்பு பேசிய அன்பர்கள் ஓரளவுக்கு விற்பனை வரி அதிகரித்திருக்கிறது, ஆகவே பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் எல்லோரும் வியாபாரிகளுக்குத்தான் வக்காலத்து பேசுகிறார்கள் என்று உண்மையிலேயே சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், நடைமுறையில் பார்க்கும்போது சாதாரணமாக வியாபார ஸ்தலங்களுக்குச் சென்று பார்க்கும்போது அங்கு 50 நயா பைசாவுக்கு வாங்கக் கூடிய சரக்குக்கோ, 75 நயா பைசாவுக்கு வாங்கக் கூடிய சரக்குக்கோ, இன்றைய தினம் வியாபாரிகள் வரி வசூலிப்பதில்லை. பெரும் அளவுக்கு, வியாபாரிகள் ஒரு ரூபாய்க்கு மேற்பட்ட சாமான்கள் வாங்கக் கூடிய நேரத்தில்

[Sri S. Lazar] [25th July 1957

மட்டும் பொது மக்களிடமிருந்து விற்பனை வரி வசூலிக்கிறார்கள். 50 பைசாவுக்கோ 40 பைசாவுக்கோ சாமான்கள் வாங்கினால் கூட அவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்படுகிறது என்று சொல்வது உண்மைக்கு மாறாகவே இருக்கிறது.

3,000 ரூபாய் வரி கொடுக்கும் ஒருவர் 4,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது அவர்கள் அதை எதிர்த்துப் பேசுகிறார்கள். பொது மக்களுக்கு வரி விதிப்பது சரி அல்ல. பெரும் பணக்காரர்களுக்கு வரிகள் விதிப்பதில் தடை ஒன்றும் இல்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு பணக்காரரோ அல்லது வியாபாரியோ 3,000 ரூபாய் கொடுப்பதற்கு பதில் 4,000 ரூபாய் கொடுக்க ஏற்பட்டால் அவர்கள் அதை எதிர்க்கிறார்கள். இது அவர்கள் எண்ணத்துக்கு மாறாக, சொல்லுவதற்கு விரோதமாக நடைமுறையில் இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு நண்பர் ஒருவர், உணவுப் பொருள்களுக்கு வரி விதிப்பது சரியில்லை என்று சொன்னார். இதற்கு மந்திரி அவர்கள் தக்க பதில் சொல்வார் என்று நினைக்கிறேன். ஒரு சட்டத்துக்கு விதி விலக்கு அளிக்கக் கூடிய அதிகாரம் சர்க்காருக்கு இருக்கிறது. ஆகையால் இது அமுலுக்கு கொண்டு வரும்போது தவிர்க்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொது மக்களுக்கு ஏராளமான உரிமைகள் வேண்டும் என்று பேசுகிறார்கள். ஏராளமான நன்மைகள் வேண்டும் என்று பேசுகின்றனர். அதே நேரத்தில் உரிமை வேண்டும் என்று சொல்லும் ஒருவர் கடமையையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். நாட்டில் ஒரு சிலர் மட்டும்தான் வரி கொடுக்கவேண்டும், ஆனால் அரசாங்கம் மட்டும் அதன் கடமையை செய்ய வேண்டும் என்று சொல்வது நல்ல முன்னேற்றத்துக்கு அறிகுறி அல்ல. ஒரு நாட்டின் 'சப்ஜெக்ட்', பிரஜைக்கு அரசாங்கத்துடன் தொடர்பு இருக்க வேண்டியது அவசியம் என்ற முறையில் அமைய வேண்டும். ஏதாவது ஒரு சிறு கட்டணம் வரி செலுத்தினாலும் கடமையை செய்கின்றவர்களாவோம். அந்தக் கடமையை செய்யக்கூட வரிவிதிப்புக்கு விலக்கு வேண்டும் என்று எதிர்த்துப் பேசுவது முறையல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சட்ட சபையில் திருத்தம் கொண்டு வரும்போது ஒரு சிலர் நையாண்டி செய்கிறார்கள். இந்த பின்னக் கணக்கில் எத்தனையோ ஆயிரக் கணக்கான நபர்கள் சர்க்கார் அலுவலங்களில் வேலை செய்ய வேண்டியதாயிருக்கிறது, என்பதை நான் அவர்கள் கவனத்துக்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நாடுகள் முன்னேறிக்கொண்டு வருகின்றதைப் பார்க்கும்போது அவர்கள் கையாளக்கூடிய முக்கிய தத்துவம், "**Time is precious**" காலத்தை வீணாக்கக்கூடாது என்பது தான். இதை மனதிலே வைத்துப் பார்க்கும்போது, இந்தத் திருத்தம் கொண்டுவரும் போது அதை எதிர்த்துப் பேசுவது முன்னேற்றத்துக்கு குறுக்கீடாக, முட்டுக் கட்டையாக இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது நல்ல வாதமாக அமையவில்லை. திருத்தம் கொண்டு வந்த அமைச்சரை பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, any discussion
11-45 a.m. about the conversion of three pies into two n.P. would be out of place at this time. The introduction of the n.P. system was decided by the Parliament and Act XXXI of 1955 has been passed. A joint reading of sub-sections (2) and (3) of section 14 of the Decimal Coinage Act of 1906 will show that this Government should have introduced this n.P. system in the administration of sales



25th July 1957] [Sri R. Srinivasa Iyer]

tax also and allowed calculation of the tax at 2 n.P. instead of three pies under the old Coinage Act even on 1st April 1957. The Hon. the Minister for Finance has very well stated the position in paragraph 30 of his Budget Speech. He has stated :—

"The ordinary rate of General Sales Tax was three pies in the rupee or 1-9/16 per cent till 31st March 1957. With the introduction of the decimal coinage from the 1st April 1957, this should normally have been rounded to 2 per cent. But the Government have continued the old rate till now, so as to give the matter full consideration."

Therefore, I beg to submit that if the Government did not introduce this N.P. system on the 1st April 1957, it was with a view to giving this House the right of discussion. He goes on :

"Calculation of sales tax in fractions of the percentage is inconvenient and may give unscrupulous dealers an advantage over customers in small transactions. It is now proposed to fix the rate at 2 per cent in the case of commodities other than foodgrains and to reduce the rate to 1 per cent in the case of foodgrains (paddy, rice, wheat and millets). It is also proposed to exempt books from the levy of sales tax."

So, this amendment was suggested even at the time the Budget was introduced and the matter was discussed threadbare then. Again it was discussed when the Demand relating to the subject was considered. I, therefore, beg to submit that the discussion as to the question of reducing it to 1½ per cent is out of place. It is impossible because the Central Coinage Act as amended says :

"It shall be calculated in respect of any such single coin or number of such coins, tendered at one transaction, to the nearest new coin, or where the new coin above and the new coin below are equally near, to the new coin below."

So, it cannot be reduced. It should be rounded to a full coin. There can be no half of a coin. Therefore, this amendment which has been discussed threadbare at the time of the discussion on the Budget has to be passed.

Another important point that I desire to suggest is this. Reference has been made to Dr. Lokanathan's report which is likely to be received in the near future. A long questionnaire had been sent to the Members of this House by Dr. Lokanathan and I hope those who oppose multi-point levy and advocate single-point levy would have given their answers with reasons for their stand and the commodities in respect of which they desire one or the other form of levy.

The impracticability of that suggestion has been pointed out during the general discussion. If the hon. Members should oppose the levy of multi-point tax and things like it, I am sure their suggestions will be considered by the Government. I think the Special Officer's report will be considered by the Government and it will also be placed before the House. There will be time enough

[Sri R. Srinivasa Iyer] [25th July 1957

to discuss all those points at that time. So, the Bill may be taken into consideration. I have given notice of an amendment which I shall move when we take up the clauses. For the present, I support the motion moved by the Hon. Minister.

**SRIMATHI KAMALAMBUJAMMAL :** கனம் அவைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்தத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக 2 நயா பைசா வரி விதிப்பது கணக்குப்போடுவதற்கு மிகவும் சுலபமாக இருக்கும் என்ற முறையிலே இம்மாதிரி விதிக்கப்படுகிறது. அதிலே 1–9/16 என்பதை 1–8/16 நயா பைசாவாக ஆக்கிக்கொள்ளலாம் என்று நமது சகோதர அங்கத்தினர் ஸ்ரீ அன்பழகன் குறிப்பிட்டார். அவர் பள்ளியில் ஆசிரியராக இருந்ததை மறந்துவிட்டார் என்று நினைக்கிறேன். எப்பொழுதும் பாதிக்கு மேற்பட்டதை, அதாவது 9/16 என்பதை, 8–க்கு மேல் இருப்பதால் ஒன்று என்று கொள்ளுவது வழக்கம். ஸ்ரீ அன்பழகன் அவர்கள்தான் ஆசிரியராக இருந்ததைக்கூட மறந்து இங்கே அதை 8-ஆக அதாவது 1–8/16 ஆக குறைத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டார். இதற்கு நான் என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. அவர் எந்த முறையிலே இம்மாதிரி குறிப்பிட்டார் என்று எனக்கு புரியவில்லை. சாதாரணமாக 9/16 என்பதை ஒன்று என்று கொள்ளலாம் என்பதாக வகுப்பிலே ஆரம்பத்தில் படித்த பாடத்தைத்தான் அரசாங்கம் இன்று கைக்கொண்டு இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. மேலும் இம்மாதிரி செய்வதால் வாங்குகிறவர்களும், விற்பவர்களும் வெகு சுலபமாக கணக்குப்போட முடியும். அதோடு அல்லாமல், 1–8/16-ஆக குறைத்தால், அரசாங்கத்தார் முன்பு குறிப்பிட்டதுபோல் ரூபாய்க்கு 3 பைசா என்ற விகிதத்தை குறைத்துக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆனால் அரசாங்கத்திற்கு வருமானம் குறைந்தால்கூட இதை குறைக்கவேண்டுமென்று உள்ளே இருக்கும்பொழுது கோரி, வெளியே பேசும்பொழுது அரசாங்கம் நன்மை செய்யவில்லை என்று சொல்ல தயாராக இருக்கிறோம் என்ற நிலையிலேதான் அங்கத்தினர் பேசுகிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இரண்டு நயா பைசா என்று விகிதத்தில் வரி விதிப்பதை நான் முழு மனதுடன் வரவேற்று, இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன் என்பதை கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI K. RAMACHANDRAN :** கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இரண்டு அடிப்படையிலே இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதாக "ஸ்டேட்மெண்டு ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸ்" ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று, பட்ஜெட்டில் பற்றாக்குறையை ஓரளவுக்கு சரிப்படுத்துவதற்காக இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. இரண்டாவது, "நியூ காயினேஜ்" "இண்ட்ரடியூஸ்" செய்ததின் விளைவாக இப்பொழுது இந்த மசோதா கொண்டுவரப்படுவதாக சொல்லப்படுகிறது. இந்த இரண்டு அடிப்படையும் இப்பொழுது எழவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. சர்க்கார் கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் வியாபாரிகளுக்காக பிறர் பரிந்து பேசுவதாகச் சொல்லுவது ஒப்புக்கொள்ளக்கூடாத விஷயம். வியாபாரிகளும் பொதுமக்கள்தான். ஆகையால் அவர்களுக்கு பரிந்து பேசுவதில் தவறு ஒன்றுமில்லை. இந்தத் திருத்தத்தினால் வியாபாரிகள் மட்டும் பாதிக்கப்படவில்லை. வாங்கிச் சாப்பிடுகின்ற மக்களும் ஓரளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள்.

1-9/16 என்று வைத்துக்கொண்டால், கணக்குப் போடுவதில் கஷ்டம் ஏற்படும் என்று ஒரு சிலர் வாதாடுகிறார்கள். கணக்குப் போடுவதில் எந்தவிதமான கஷ்டமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், சிறு வியாபாரிகளாக இருக்கக்கூடியவர்களும், விற்பனை வரித் தொல்லைகளால் பாதிக்கப்படக்கூடியவர்கள் எல்லோரும் ஒரு கணக்குப் பிள்ளையை வைத்துக்கொண்டுதான் கணக்கு எழுதுகிறார்கள் என்பது



25th July 1957] [Sri K. Ramachandran]

நிதர்சனமான உண்மை. இது எல்லோருக்கும் தெரியும். எல்லா வியாபாரிகளும் சொந்தமாக கணக்கு எழுதுவதில்லை. சம்பளம் கொடுத்து ஒரு கணக்குப் பிள்ளையைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 1–9/16 என்று இருப்பதால் கணக்குப் பார்ப்பதில் எந்தவிதமான கஷ்டமும் வந்துவிடப்போதில்லை. அதனால் எந்தவிதமான தொந்தரவும் வராது. அதற்கு மாறாக பொது ஜனங்களுக்கு நன்மை இல்லாத முறையிலே இந்த வரிவிகிதத்தை அதிகப்படுத்தியிருப்பதால் இந்த திருத்தத்தை எதிர்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பட்ஜெட் பற்றாக்குறையை " கவர் " செய்வதற்கு இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட கனம் அங்கத்தினர் சீனுவாசய்யர் அவர்கள் பட்ஜெட் உரையில் ஒரு பகுதியை படித்தார்கள். அந்தப் பகுதி பூராவும் அவர் படித்தது திருப்தியாக இருந்தது. இரண்டு சத விகிதமாக வரியை அதிகப்படுத்தும் அதே சமயத்தில் உணவுப்பொருள்கள் மீதுள்ள வரி ஒரு சதவிகிதமாக குறைக்கப்படும் என்று அதில் கண்டிருக்கிறது. வரி விகிதத்தை உயர்த்துவதற்கு மசோதா கொண்டுவந்த சர்க்கார் அதே சமயத்தில் "ஸைட் பை ஸைடாக" உணவுப்பொருள்கள் மீதுள்ள வரியை ஒரு சதவிகிதமாக குறைப்பதற்கும் ஒரு மசோதா கொண்டுவந்திருந்தால், உண்மையிலேயே அது பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடிய விஷயமாகும். பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் காரியத்தை விட்டுவிட்டு, வரியை அதிகப்படுத்துவதற்கு மட்டும் உடனடியாக மசோதா கொண்டுவருவதற்கு அவசியமில்லை. ஸ்ரீ லோகநாதன் அவர்கள் ரிபோர்டு கொடுத்ததும் கூடிய சீக்கிரம் "காம்பரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்" கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டது. 1–4–1957 முதலே இரண்டு சதவிகிதமாக உயர்த்துவதற்கு அப்பொழுதே மசோதா கொண்டு வந்திருக்கவேண்டுமென்றும், ஆனால் அப்பொழுது கொண்டுவரவில்லை, இப்பொழுதுதான் கொண்டுவருகிறோம் என்று சொல்லக்கூடியவர்கள் 1–4–1957-லிருந்து இதுவரை காத்திருந்தவர்கள், ஏன் லோகநாதன் அவர்கள் ரிப்போர்ட்டு சமர்ப்பிக்கும் வரையில் காத்திருந்து ஒரு "காம்பரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்" கொண்டுவரக்கூடாது ? அப்படிச் செய்திருந்தால் அது லோகநாதன் அவர்களின் ரிப்போர்ட்டையும் துரிதப்படுத்தும், விரிவான சட்டமும் துரிதமாக வருவதற்கு ஹேதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த விகிதம் 1–9/16 என்றே இருக்கலாம் என்றும், அதோடுகூட பட்ஜெட் உரையிலே சொல்லியிருக்கிறபடி, லோகநாதன் அவர்கள் ரிப்போர்ட்டு சமர்ப்பித்த பிற்பாடு, இரண்டு விஷயங்களையும் சேர்த்து சீக்கிரமாக ஒரு சட்டம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI A. MARIAPPAN :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை ஆதரிப்பதோடு, விற்பனை வரியைப் பொறுத்தவரையில் வியாபாரிகள் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள், ஆனால் உத்தியோகஸ்தர்கள் அவர்களை சரியான முறையில் நடத்துவதில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த விஷயத்தில் உத்தியோகஸ்தர்கள் வியாபாரிகளை நல்ல முறையிலே நடத்துவதற்கு தயாராக இருக்கவேண்டுமென்று மந்திரி அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

விற்பனை வரியால் உணவுப்பொருள்களின் விலையும் மற்ற பொருள்களின் விலையும் ஏறிவிட்டது. வியாபாரிகள் விலையை அதிகமாக உயர்த்திவிட்டார்கள் என்று சொல்லுவது சரியானதல்ல. பெரிய வியாபாரிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு கொடுக்கும் சரக்குகளுக்கு சரியான அளவு விற்பனை வரி வசூலிக்கிறார்கள். ஆனால் சிறிய வியாபாரிகளும் குறிப்பிட்ட அளவு விற்பனை வரி சேர்த்து விற்பனை செய்கிறார்கள். விற்பனை வரியின் காரணமாக ஏதோ விலை ஏறிவிட்டது என்று கூறுவது சரியல்ல. வியாபாரிகளை பொறுத்தவரையில் அவர்கள் சரியான முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிறிய வியாபாரிகளை பொறுத்தவரையில் அவர்கள் சரியான முறையில் விற்பனை வரியை செலுத்துவதற்கு உண்மையான ஏற்பாடுகள் அல்லது கண்காணிப்பு இல்லை. அதனால் பல சிறிய வியாபாரிகள் விற்பனை வரி

செலுத்தாததால் குறைந்த விலைக்கு சரக்குகளை விற்பதற்கு ஹேதுவாக இருக்கிறது. ஆனால் மற்ற வியாபாரிகள் விற்பனை வரி செலுத்துவதால் குறைந்த விலைக்கு விற்பதற்கு கஷ்டப்படுகிறார்கள். அதனால் விற்பனை வரியை ஏமாற்றுவதற்கு விற்பனையை கணக்கில் கொண்டுவராமல் இருப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். இதைத்தடுக்க சர்க்கார் நல்ல முறையில் ஏற்பாடு செய்தால், விற்பனை வரியை யாரும் ஏமாற்றமாட்டார்கள், அதனால் சர்க்காருக்கு ஓரளவுக்கு லாபம் வரும் என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒருமுனை விற்பனைவரி முறையைக் கொண்டுவந்தால் வியாபாரிகள் இன்னும் நல்ல முறையில் வரியை செலுத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகையால் ஒருமுனை வரியாக மாற்றுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வியாபாரிகளைப் பொறுத்த வரையிலும், எல்லோரும் வரி செலுத்தக்கூடிய முறையில் விற்பனைவரி முறை இருந்தால், ஏமாற்றக்கூடிய ஒரு சிலர் இருக்கமுடியாது. ஆகவே, ஏமாற்றும் ஒரு சாராரை தவிர்ப்பதற்கு உண்மையான வழிவகைகள் செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, மந்திரி அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

12 noon **Sri K. SATTANATHA KARAYALAR :** இந்த மசோதாவின் விவாதத்தில் பங்கு எடுத்துக்கொள்ளும்போது நான் ஏற்கெனவே இதற்கு முந்திய விவாதத்தில் குறிப்பிட்ட விஷயத்தையே மீண்டும் இதில் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மசோதா ஒரு அசாதாரணமான கெஜட் மூலம் **16–7–57**-ல் வெளியிடப்பட்டது. இவ்விதம் அசாதாரணமான கெஜட் மூலம் வெளியிடப்படவேண்டிய அவசியமிருப்பதாக தோன்றவில்லை. இந்த மசோதாவிற்கு இந்த சட்டசபையில் அனுமதிகோறி அதை பெற்றபிறகு கொண்டு வந்திருக்கமுடியும். அது இல்லாமல் கொண்டுவரும் இந்த குறை சர்வ சாதாரணமாகிவிட்டது. இவ்விதமான முறை சட்டத்திற்கு புறம்பாக இல்லையாயினும் சபையின் சீரிய பழக்கத்திற்கு உகந்ததுதானா என்பதைதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்ததாக இந்த மசோதாவை இரண்டு பிரிவாக தனித்தனியாக கொண்டுவந்திருந்தால் நல்லதாக இருந்திருக்கும். ஒன்று ஒரு **Verbal change**-க்காக மாத்திரம் கொண்டுவரப்பட்டுள்ளது. மோட்டார் ஸ்பிரிட் ஆக்ட் என்ற இந்த மசோதா சமீபத்தில் திருத்தம் செய்தது. திரும்பியும் கொண்டுவந்து அதிலும் இவ்வளவு குறுகிய காலத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது வருந்தத்தக்கது. எனக்கு முன்னால் பேசிய பல நண்பர்கள் விற்பனைவரி மசோதாவில் இரண்டு சதமானம் என்று திருத்தம் கொண்டுவந்திருப்பதன்மூலம் வரிப் பணத்தை உயர்த்துவதாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த திருத்தத்தின்மூலம் அரசாங்கத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வருமானம் கிடைப்பதாக இருக்கிறது. மேலும் இதில் ஒருமுனை விற்பனைவரி கொண்டு வரவேண்டும் என்றும் பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இதற்குமுன் அமைச்சர் அவர்கள் இன்னும் பல விஷயங்களையும் சேர்த்து ஒரு "காம்ப்ரிஹென்ஸிவ் பில்" (**Comprehensive Bill**) கொண்டு வரப்போவதாக சொன்னார்கள். அதற்குமுன் மீண்டும் "ஸேல்ஸ் டாக்ஸ்" ஆக்டில் திருத்தம் வருமோ என்று நான் ஐயுறுகின்றேன். அது இல்லாமல் சீக்கிரமாகவே இந்த "காம்ப்ரிஹென்ஸிவ் பில்" கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். இந்த சட்டத்தின் விதி திருத்தம் மூலம் உணவு தான்யங்களுக்கு எல்லாம் விதிவிலக்கு அளிக்கக்கூடிய் சட்டங்கள் திட்டவட்டமாக ஏற்படும் என்று எதிர்பார்க்கிறேன். அதோடு பால் போன்ற பொருள்களுக்கும் விதிவிலக்கு அளித்து திருத்தம் கொண்டுவருவார்கள் என்று நம்பிக்கொண்டு, அதை சீக்கிரமே கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்

12-03 p.m. **Sri V. K. KOTHANDARAMAN :** கனம் தலைவர் அவர்களே, "ஸேல்ஸ் டாக்ஸ்-ஸை குறைக்கவேண்டுமென்று சொல்லி சென்ற காலத்தில் பொது மக்கள் மத்தியிலும் வியாபாரிகளுடைய மத்தியிலும் எவ்வளவோ





பெரிய கிளர்ச்சிகள் நடந்தது. பல இடங்களிலிருந்தும் வியாபாரிகளும் பொது மக்களும் தூதுகோஷ்டியாக மந்திரிகளையும் அதிகாரிகளையும் வந்து பார்த்தார்கள் என்பது நம் எல்லோருககும் தெரிந்த விஷயம். அந்த நிலைமையில் இன்றைக்கு காலணாவாக இருக்கக்கூடியதை இரண்டு நயா பைஸாவாக மாற்றவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் சொட்டையாக இருக்கக்கூடியதை வட்டமாக ஆக்கவேண்டுமென்றுதான் இதை கொண்டுவந்திருக்கிறோம் என்று காரணமும் சொல்லுகிறார்கள். அது வரவேற்க வேண்டியதுதான். ஆனால் நான் கேட்பது என்னவென்றால் இப்படி சொட்டையாக இருப்பதாக சொல்லப்படுவதை வட்டமாக மாற்றுவதற்காக காலணா என்றிருப்பதை ஒரு நயா பைஸாவாக ஏன் மாற்றக்கூடாது என்றுதான் நான் கேட்கிறேன். ஆகவே இரண்டு நயா பைஸா என்றிருப்பதை மாற்றி ஒரு நயா பைஸாவாக மாற்றவேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்தி கூறிக்கொள்கிறேன். இந்த ஸேல்ஸ் டாக்ஸின் காரணமாக பொது மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அரசாங்கத்தின் வருமானம் கூடுதலாக இருக்கிறது என்பது உண்மைதான். என்றாலும் விற்பனைவரியை குறைக்கவேண்டும் என்று பட்ஜெட்டின் பேரில் பேசப்பட்டபோதும் இந்த சபையில் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விற்பனைவரி குறைக்கப்படவேண்டும். அதிலும் குறிப்பாக உணவுப் பொருள்களின்மேல் விற்பனைவரி இருக்கக்கூடாது, அதை முழுக்க முழுக்க தள்ளிவிடவேண்டும். அதே நேரத்தில் வருமானத்தை அதிகரிப்பதற்காக "ப்ளாண்டேஷன்" பேரில் வரியை அதிகப்படுத்தலாம், இப்போது ஓரளவு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றாலும் இன்னும் அதிகப்படுத்தலாம், அதே நேரத்தில் விவசாய வருமானத்திற்கு வரிபோடலாம், அதேமாதிரி நில சொத்துக்கும் வரி அதிகப்படுத்தவேண்டும் என்று பல ஆலோசனைகளை எடுத்துச்சொல்லியிருக்கிறோம். இதை நான் மட்டும் சொல்லவில்லை. நமது பிரதம மந்திரியாக இருக்கக்கூடிய ஜவஹர்லால் நேரு அவர்களே ஒவ்வொரு ராஜ்ய சர்க்கார்களும் நில சொத்தின்பேரில் வரி போடவேண்டும், விவசாய வருமானத்தின்மீது வரி போடவேண்டும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் இப்போது கொண்டுவந்திருக்கும் மசோதாவில் இரண்டு நயா பைஸா என்றிருப்பதை ஒரு நயா பைஸாவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த வரிக்கு "ஸேல்ஸ் டாக்ஸ்" என்ற பெயர் பொருத்தம்தானா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. இந்த வரியை யார் கொடுக்கிறார்கள் என்று பார்த்தால் யார் பொருள்களை வாங்குகிறார்களோ அவர்கள்தான் இந்த வரியை கொடுக்கிறார்கள். ஆகவே இந்த வரிக்கு "பர்ச்சேஸ் டாக்ஸ்" (**Purchase Tax**) என்பதுதான் பொருத்தமாகும். ஆகவே இதையும் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த இரண்டு நயா பைஸா என்றிருப்பதை ஒரு நயா பைஸா என்றாக்கவேண்டுமென்று "அமெண்ட்மெண்ட்" கொடுத்திருக்கிறேன். ஆளும் கட்சியிலுள்ளவர்கள் எதிர் கட்சியிலிருந்து எந்த திருத்தம் வந்தாலும் எதிர்ப்பது என்றில்லாது இதுபோன்ற மக்களுக்கு அவசியமான திருத்தங்கள் வரும்போது அதை ஆதரிக்க வேண்டும்ன்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஸேல்ஸ்டாக்ஸ் பில் சம்பந்தமாக முன்பே இதில் பலவிதமான 12-06 p.m.
கோளாறுகள் இருக்கின்றன. மறுபடியும் இன்னும் திருத்தம் கொண்டு வந்து பல கோளாறுகள் ஏற்படுவதற்கு இடமிருக்கின்றன. அதனால்தான் இதை சொல்ல ஆசைப்படுகிறேன். இதில் அனேக அங்கத்தினர்கள் பேசினார்கள். "ஸிங்கிள் பாயிண்ட்" டாக்ஸ் கொண்டுவரவேண்டுமென்று பலர் சொன்னார்கள். இன்னும் இந்த நயா பைஸாவில் இப்போது நிர்ணயித்திருப்பதை குறைக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். இவ்விதமான பல பிரச்னைகள் இருக்கிறது. அதிலும் அழிவு பதார்த்தங்களுக்கும் பால் போன்ற பொருள்களுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்பதைப் பற்றி சொன்னார்கள். அவ்விதம் பார்க்கும்போது இது பலவழிகளிலும் தொல்லை தருவதாய் இருக்கிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக

டாக்டர் லோகநாதன் அவர்களை போட்டிருக்கிறது. இது எல்லோருக்கும் சந்தோஷம்தான். அவருடைய ரிப்போர்ட் வந்த பிறகாவது இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விட்டு நன்றாக பரிசீலித்து ஒரு "காம்ப்ரிஹென்ஸீவ் பில்" கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் கரையாளர் அவர்கள் சென்ற தடவையும் இந்த மசோதா வந்த போதும் ஒரு விஷயத்தை குறிப்பிட்டு சொன்னார்கள். இப்போதும் அதையே வற்புறுத்தி மீண்டும் சொன்னார்கள். ஏதோ சட்டசபைக்கு கௌரவக்குறைவான முறையில் இந்த மசோதா சட்டசபைக்குமுன் வரா
12-07 p.m. மல் கெஜட் மூலம் இதை வெளியிட்டு கொண்டுவந்தது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு அஸெம்பிளி ரூல் 92-வது பிரிவை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக இரண்டு முறையில் ஒரு பில்லை கொண்டுவரக்கூடும். ஒன்று அஸெம்பிளியில் கொண்டுவருவதற்கு முன் அதை கெஜட்டில் பிரசுரம் செய்துகொண்டு வருவது....

**SRI K. SATTANATHA KARAYALAR:** I stated the rule also.

**THE HON. SRI R. VENKATARAMAN:** Then it seems to have been of no use to yourself இரண்டாவது ஒரு பில்லை பார்லிமெண்ட் முறைப்படி ஒரு முறை கொண்டுவந்து அங்கீகாரம் கொடுப்பது, அதன் பிறகு இரண்டாவது முறை விவாதிக்கப்படும், மூன்றாவதாக "ரீடிங்" ஆன பிறகு நிறைவேற்றப்படுவது வழக்கம். இதில் எல்லாம் மக்களுக்கு அதில் இருக்கின்ற காரியங்கள் தெரியவேண்டும் என்பதற்காகத்தான் இவ்விதமெல்லாம் முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அல்லாமல் இங்கு கொண்டுவந்து அதில் எல்லா மெம்பர்களும் எழுந்து எழுந்து உட்கார்ந்து கொண்டிருக்கவேண்டுமென்று அல்ல. எவ்விதத்திலும் இதைப்பற்றி மக்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்பதுதான் இதன் கருத்து. ஆகவே இது உகந்தமுறையில்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதுதான் பிரச்னை. நமது சட்டத்தின்படி 92-வது விதியின்படி கெஜட்டின் மூலம் பிரசுரம் செய்தால் அங்கத்தினர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெளிவாக இதை தெரிவிப்பதற்காக இவ்விதம் கெஜட்டில் பிரசுரம் செய்யலாம் என்று திட்டவட்டமாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம்தான் இவ்விதம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர சட்டசபையின் கௌரவத்திற்கு குறைவான முறையிலோ அல்லது ஜனநாயகத்திற்கு புறம்பாகவோ கொண்டுவரவில்லை என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் அவர்கள் சொல்லுகிறபடி எல்லா மசோதாக்களையும் சட்டசபையில் கொண்டுவரவேண்டுமென்ற நிலைமையிருந்தால் இந்த ஷரத்து இருக்கவேண்டிய அவசியமேயில்லை. இந்த முறை இங்கு மாத்திரமல்ல, லோக் சபையிலும், நம்முடைய சட்டசபைகளின் முறைகளுக்கு எல்லாம் தாயகமாக இருக்கக்கூடிய பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் இதே முறைதான் இருந்து வருகிறது என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே சட்டசபையின் முறைகளுக்கு எதிராக எங்களுக்கு தவறான முறையில் எதையும் கொண்டுவரவேண்டுமென்ற விருப்பம் கிடையாது. ஆகவே இம்மாதிரியான அபிப்பிராயத்தை பரப்பக்கூடாது என்பதற்காகத்தான் கொஞ்சக் காலத்தையும் எடுத்து இதை நான் விளக்கிச்சொன்னேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில் நான் விவாதம் இருக்குமென்று எதிர்பார்க்க வில்லை. காரணம் என்னவென்று சொன்னால் இந்தியன் காயினேஜ் சட்டப்படி எப்ரல் மாதமே இந்த வரி விகிதம், நயா பைஸாவாகமாற்றி அமைத்திருக்கக் கூடும் என்றாலும், மக்களுக்கு அந்த விதமான வரி பளு அதிகரிக்கும் நிலைமையில் அதை நன்றாக சட்டசபையில் விவாதத்திற்குப் பின்னால் பிறகு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற நிலையில், அன்றிருந்த நிலைமையில் ஒன்றரை வீசம் என்ற விகிதத்தை வைத்துவிட்டு பட்ஜட் வரும் வரையில் காத்





திருந்தது. நிதி மந்திரி அவர்கள் அவர்களது உரையில் முதன் முதலாகச் சொன்னார்கள், இதை மாற்றி அமைக்கப் போகிறோம் என்று. அதற்குள்ள காரணங்கள் என்ன என்றும் சொன்னார்கள். இதைப் பற்றி நன்றாக விவாதம் செய்யப்பட்டிருக்கிறது. சேல்ஸ் டாக்ஸிலும் கூட இதைப்பற்றி விவாதம் செய்து அந்த டிமான்டும் ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது.

**SRI K. ANBAZHAGAN:** அதை நாங்கள் எதிர்க்கத்தான் செய்தோம்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** அன்பழகன் அவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். ஜனநாயகத்திலே, ஜனநாயக முறைப்படி எதிர்க்கட்சியினர் எதிர்த்து, அது நிறைவேறாமல் போய் மெஜாரிடி அங்கத்தினர்கள் ஒருதீர்மானத்தைக் கொடுத்துவிட்டால், அது அவர்களுடைய அபிப்பிராயமுமாகும் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அது அவருடைய முடிவாயும் இருக்கிறது. இதில், ஏதோ நாம் தெரியாத முறையிலே, தவறான முறையிலே இந்த மசோதாவைக் கொண்டுவந்ததாகச் சொல்வது சரியாகாது. இரண்டாவதாக, ஸ்ரீமான் சின்னதுரை அவர்கள் சொன்னார்கள், இந்த மசோதா, வியாபாரிகளுக்கு ஏதோ கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்திற்காக ஒன்றரை வீசம் நயா பைசாவை இரண்டாகச் செய்ததாகச் சொல்லவில்லை. அவர்கள் சொன்னது என்னவென்றால், ஒன்றரை வீசம் என்பதை இரண்டு நயா பைசாவாக வாங்கி வியாபாரிகள் லாபம் அடைந்துவிடுவார்கள். அது அவர்களுக்கு சேரவேண்டிய தொகை அல்ல, மக்களுக்குச் சேர வேண்டிய தொகையாகும் அது என்று சொல்லி சர்க்கார் வாங்கிக் கொள்வதாக அவர்கள் சொன்னார்கள். அவர்கள் இந்த ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸ்ஸைப் படித்துப் பார்த்தால் தெரியவரும்.

"Calculation of sales tax in fractions of the percentage is inconvenient and may give unscrupulous dealers an advantage over customers in small transactions."

(Sri K. Anbazhagan rose.)

**THE HON. SRI R. VENKATARAMAN:** Yes, the hon. Member may speak. I shall reply to it also.

**MR. SPEAKER:** It would not be correct. The hon. Member Sri Anbazhagan may speak during the third reading stage if he wants to speak. Now, the Hon. Minister may proceed.

**THE HON. SRI R. VENKATARAMAN:** அதனால் அவர்கள் தாங்கள் எடுத்துக்கொள்வார்கள் என்ற காரணத்திற்காக இதை நாம் மாற்றியமைக்கும்படிச் செய்திருக்கிறோம். மூன்றாவதாக, மான்யக் கோரிக்கைகளை இந்த சட்டசபை ஏற்றுக்கொண்டாகிவிட்டது. அதற்கு வேண்டிய செலவுத் தொகைகள் என்ன என்பதை ஒருவாறு குறிப்பிட்டு அந்த மான்யத் தொகைகளின் போது தெளிவாகச் சொல்லப்பட்டது. இந்த மான்யத் தொகைகள் ஏற்றுக்கொண்டபோது கூட நமக்கு துண்டு விழுந்திருக்கும் தொகையை ஈடுகட்டுவதற்கு இந்தச் சிறு தொகை, இரண்டு நயா பைசாவாக ஓரளவிற்கு உயர்த்தியிருக்கும் இந்தத் தொகை, உபயோகப்படும் என்பதையும் சட்டசபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. புதிதாக ஒரு மாறுதல் செய்வதாகச் சொல்வது சரியாகாது. அடுத்தபடியாக சின்னதுரை அவர்கள் சொன்னார்கள் "நீங்கள் வரி வசூலை மாத்திரம் சந்தோஷமாக சட்ட பூர்வமாக கொண்டு வந்து விட்டீர்கள்" என்று. அந்தச் சந்தர்ப்பத்தில் உணவுப் பொருள்களுக்கெல்லாம் குறைக்கிறோம் என்று சொன்னதை ஏன் கொண்டுவரவில்லை என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன், விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறவைகளைப்பற்றி 6 செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. காய்கறி போன்றவைகளுக்கு

எல்லாம் நோடிபிகேஷன் மூலம் கொடுக்கப்படுகிறது. அதன்படி இதற்கும் கொடுக்கப்படும். பட்ஜட் பிரசங்கத்தில், உணவுப் பொருள்களுக்கு 1 சத விகிதகமாக குறைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நோடிபிகேஷன் மூலம் செய்யப்படும். இந்த மசோதா எந்த தேதியிலிருந்து அமுலிற்கு வருகிறதோ அந்தத் தேதியிலிருந்து இது ஒரு சத விகிதமாகக் குறைக்கப்படும். செயில்ஸ் டாக்ஸ் பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்தபோது சில நண்பர்கள் பாலிற்கு சலுகை காட்டவேண்டுமென்று சொன்னார்கள். பாலிற்கும், இந்த உணவுப் பொருள்கள் மாதிரி ஒரு சத விகிதமாகக் குறைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக இந்த வரியையே குறைத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் கோதண்டராமன் அவர்கள் ஏன் ஒரு பைசாவாகச் குறைக்கக் கூடாது என்று சொன்னார்கள். அவர்களுக்குத் தெரியும், நம் நிதி நிலைமை பற்றி. ஏன் ஒரு நயா பைசாவாகக் குறைக்கவில்லை என்றால் அதனால் நமது வருமானம் குறைந்துவிடும், என்ற காரணத்தைத் தான் சொல்ல முடியும். ஆகவே இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மசோதாவை திருத்திபமைப்பதற்கு டாக்டர் லோகநாதன் அவர்களிடம் கொடுத்திருக்கிறபோது ஏன் அந்த மாறுதலைச் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். லோகநாதன் அவர்கள் செய்யப்போகிற பரிசீலனை, எந்தெந்த முறையில் வியாபாரிகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது, எந்தெந்த முறையில் சட்டப் பிரச்னைகள் எழுந்திருக்கின்றன, எந்த முறையில் சட்டத்தைத் திருத்தி அமைத்தால் மக்களுக்கு அதிகம் தொல்லை இல்லாமல் செய்ய முடியும் என்பதைத்தான் அவர்கள் தீர்மானம் செய்ய முடியுமே தவிர, ஒரு முனை வரி வேண்டுமா, பல முனை வரி வேண்டுமா, எந்த ரகமான சரக்குகளுக்கு ஒரு முனை வரி விதிக்க வேண்டும் எந்த சரக்குகளுக்கு பல முனை வரி விதிக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லலாமே யொழிய என்ன வரி விதிக்க வேண்டும் என்பது சர்க்காரின் பொறுப்பாகவே இருக்க முடியும். அதை வேறு யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது. அன்பழகன் அவர்கள் சொன்னார்கள், 1 9/16 நயா பைசாவை 2 நயா பைசாவாக மாற்றினால் விலைவாசிகள் அந்த இரண்டு நயா பைசா அளவிற்கு உயர்வதில்லை, இன்னும் அதிகமாக ஏறுகிறது என்று சொன்னார்கள். அன்பழகன் அவர்கள் பொருளாதாரம் படித்தவர்கள் என்று நம்புகிறேன். ஒரு பண்டத்தின் விலை விதிக்கிற வரியைப் பொறுத்ததல்ல. அது, சப்ளை அன்ட் டிமான்டைப் பொறுத்தது. எலாஸ்டிஸிட்டி ஆப் டிமான்டைப் பொறுத்தது. அதாவது, பண்டங்களின் தேவை அதிகமாகி மார்க்கெட்டில் அது குறைவாய் இந்தால் அதன் விலை ஏறும். மார்க்கெட்டில் பண்டங்கள் அதிகமாகி அதற்கு தேவை குறைவாயிருந்தால் அதன் விலை இறங்கும். ஆகவே அதைப் பொறுத்துத்தான் விலைவாசிகள் இருக்கிறதேயொழிய சர்க்கார் போடுகிற வரி மூலாமாக விலை வாசிகளில் பெரிய ஏற்றத்தாழ்வு ஏற்படும் என்பதை பொருளாதாரம் படித்த எவரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்று நம்புகிறேன். எந்த அளவிற்கு வரி போடுகிறார்கள் என்ற அளவிற்குத்தான் சர்க்காரின் பொறுப்பு. அதற்கு மேலுள்ளதற்கு சர்க்கார் பொறுப்பாளி அல்ல. அதற்கு சமூகம்தான் பொறுப்பு. அடுத்தபடியாக கரையாளர் அவர்கள் சொன்னார்கள், இந்த மோட்டார் ஸ்பிரிட் டாக்ஸேஷன் ஆக்டில் இப்பொழுது திருத்தம் கொண்டு வந்தது பற்றி. அப்பொழுது அவர் இங்கு இல்லை என்று நினைக்கிறேன். அப்பொழுது நான் சொன்னேன், 6 வதைத் திருத்தும்போது, 7-யையும் திருத்தவேண்டும் அது ஓவர்சைட் என்று. ஆகவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras General Sales Tax and Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957 be taken into consideration."



**The motion was put and carried and the Bill was taken into consideration.**

*Clause 2.*

MR. SPEAKER: The motion is:—

"That clause 2 do stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move the amendment standing in my name, viz.—

"In line 18 *for* the words 'two per cent' *substitute* the words "one per cent."

SRI N. MARUDACHALAM: I second the amendment, Sir.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I am unable to accept the amendment for the reasons which I have already explained.

MR. SPEAKER: The question is—

"In line 18 *for* the words 'two per cent' *substitute* the words 'one per cent.'

The amendment was put and lost.
Clause 2 was put and carried.
*New Clause* 3.

SRI R. SRINIVASA IYER: Sir. I move the amendment standing in my name, viz.—

"*Add* the following as Clause 3 and renumber the existing Clause 3 as Clause 4:

'3. *Transitory provision.*—The tax payable by a dealer under sub-section (1) of section 3 of the principal Act on his total turnover for the year 1957–58 shall be calculated at one and nine-sixteenth per cent of his turnover from the 1st April 1957 to the 31st July 1957 and at two per cent of his turnover from the 1st August 1957 to the 31st March 1958'."

Shall I say what I have got to say on this amendment? I believe that this amendment will be accepted by the Government for this reason that in paragraph 30 of the Finance Minister's budget speech . . .

MR. SPEAKER: The correct procedure will be for the hon. Member to move his amendment first. The amendment will then have to be seconded by some one. Why does the hon. Member presume that his amendment is going to be accepted.

SRI R. SRINIVASA IYER: I have moved my amendment Sir.

SRI T. SAMPATH: I second the amendment, Sir.

THE HON. SRI R. VENKATARAMAN: I cannot accept the amendment.

[25th July 1957

MR. SPEAKER: Amendment moved—

"*Add* the following as Clause 3 and renumber the existing Clause 3 as Clause 4:—

'3. *Transitory provision.*—The tax payable by a dealer under sub-section (1) of section 3 of the principal Act on his total turnover for the year 1957–58 shall be calculated at one and nine-sixteenth per cent of his turnover from the 1st April 1957 to the 31st July 1957 and at two per cent of his turnover from the 1st August 1957 to the 31st March 1958.' "

* SRI R. SRINIVASA IYER: Sir, this amendment only follows the budget speech of the Hon. the Finance Minister. In paragraph 30 of his speech, this is what he says—

"It is now proposed to fix the rate at 2 per cent in the case of commodities other than foodgrains and to reduce the rate to 1 per cent in the case of foodgrains (paddy, rice, wheat and millets). It is also proposed to exempt books from the levy of sales tax. The net effect of these proposals is expected to be an additional revenue of Rs. 170 lakhs in a full year but we may realise only Rs. 125 lakhs in the rest of the current year."

In the present Bill also, this amendment takes effect from the 1st August 1957. Section 3 (1-A) of the Act says—

"The tax for each year may be assessed, levied and collected in advance during the year in monthly or quarterly instalments, and for that purpose a dealer may be required to furnish either an advance estimate of his turnover for the year or periodical returns of the actual turnover as may be prescribed. The assessing authority may determine the amount of tax payable in respect of any period and on such assessment the dealer shall pay the sum demanded within such time as may be fixed by such authority."

Under the main Act, the tax is collected on the annual turnover. If this amendment comes into force on the 1st August 1957, in consonance with what is stated by the Finance Minister in his budget speech, the calculation for the first four months must be at the lower rate of 1-9/16 per cent and the calculation for the subsequent months should be at 2 per cent. During the first four months of the year, the dealer would have calculated and collected the tax only at 1-9/16 per cent from the customer and he would have paid it even in advance. If he is asked to pay at the rate of 2 per cent, after the year is over, or from 1st August 1957, on the actual turnover for the whole year from 1st April 1957 to 31st March 1958, he will be put to loss. Generally traders are getting about six per cent on their sales, and this covers a number of things. Out of this the dealer has to meet the trade. If they have got to pay more than what they have really collected dealers are only collectors of revenue on behalf of the Government, and they have got to pay whatever they assess and collect from the purchasers—they will suffer very much. I submit, Sir, that this amendment is necessary to mete out



25th July 1957] [Sri R. Srinivasa Iyer.]

justice to the dealers in accordance with the spirit of the Hon. the Finance Minister's speech. I, therefore, commend this amendment to the House.

MR. SPEAKER: Is the Hon. Minister going to say anything in respect of Sri R. Srinivasa Iyer's amendment?

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, Sri R. Srinivasa Iyer's amendment is typical of the lawyer's apprehensions. If we look at Clause 1 (2) of the Bill, it will be seen that it definitely says that it shall come into force on the 1st day of August 1957. So, up to 31st July 1957 nobody can collect more than 1-9/16 per cent as tax. If any excess has been collected, they have to refund it to the persons concerned. From 1st August 1957, the tax will be collected at 2 per cent. Therefore, there is absolutely no apprehension whatsoever of any person being charged or assessed to tax at 2 per cent from 1st April 1957.

SRI R. SRINIVASA IYER: Sir, on the assurance of the Hon. Minister, I withdraw my amendment.

The amendment was, by leave, withdrawn.

*Clause 3.*

MR. SPEAKER: The motion is:—

"That clause 3 do stand part of the Bill."

SRI M. JAGANNATHAN: Sir, I move the amendment standing in my name, namely:—

"In lines 4 to 6 on page 2 of the Bill *for* the words 'without paying the full amount of the tax due in the manner prescribed' *substitute* the words 'without paying the full amount of the tax due in the manner prescribed by rule'."

SRI K. RAMACHANDRAN: I second the amendment, Sir.

SRI M. JAGANNATHAN: Sir, this is a verbal amendment. Therefore I do not think the Government will have any difficulty in accepting it.

MR. SPEAKER: Amendment moved—

"In lines 4 to 6 on page 2 of the Bill *for* the words 'without paying the full amount of the tax due in the manner prescribed' *substitute* the words 'without paying the full amount of the tax due in the manner prescribed by rules'."

[25th July 1957

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the definition section in the Madras General Sales Tax Act contains the usual definition of the word 'prescribed'. It says, 'prescribed' means 'prescribed by rules under this Act'. Therefore, there is no need for this amendment.

SRI M. JAGANNATHAN : I withdraw my amendment.

The amendment was, by leave, withdrawn.

Clause 3 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras General Sales Tax and Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957, be passed."

MR. SPEAKER : Motion moved—

That the Madras General Sales Tax and Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957, be passed.

* SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரியைக் குறித்துப் பேசும்போது, இந்த் வரியால் ஏற்படுகிற இடையூறுகளைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி விற்பனை வரியால் ஏற்படுகிற இடையூறுகளை எடுத்துச் சொல்லும்போது, பொருள்களின் விலை என்பது மக்களுடைய தேவையை ஒட்டியும், பொருள்களின் உற்பத்தியை ஒட்டியும், சமுதாயத்தில் ஏற்படுகிற விளைவை ஒட்டியும் ஆகும். இதற்கு அரசாங்கம் பொறுப்பல்ல என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். விலை ஏற்றத்துக்கு இந்த வரி பொறுப்பல்ல. அரசாங்கம் வரி போட்டாலும் அவர்கள் நேரடியாக பொறுப்பல்ல என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. நாம் உண்மையாகவே அரசாங்கத்திடம் எதிர்பார்ப்பது சமுதாயத்தில் ஏற்படுகிற விளைவுகளுக்கான பொறுப்பை அரசாங்கம் ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது. சமுதாயத்தில் ஏற்படுகிற விளைவுகளை கட்டுப்படுத்துகிற ஆற்றல் ஒரு அரசாங்கத்துக்கு இருந்தால்தான், அது ஜனநாயக அரசாங்கம் என்ற பெயருக்குரிய பெருமையுடையது என்று ஒத்துக்கொள்ள முடியும். அரசாங்கத்தின் பொறுப்பல்ல என்று சொல்லப்பட்டது போல, அப்படிக் கருதப்படுமானால், அரசாங்கம் அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தயங்குகிற நேரத்தில், எதிர்க்கட்சியினர் அதை எடுத்துச் சொல்லி வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், "உண்மையில் விலை உயர்வு இந்த வரியால் அல்ல என்று தெரிவிக்கப்பட்டது. வியாபாரிகள் ஏற்கனவே இருந்துவந்த நாணய முறை நயா பைசா நாணயமாக மாறிவிட்டதால், நயா பைசா முறையால், அதிகமாகவே வசூலித்து விடுகிறார்கள். அதிகம் வசூலித்த பணத்தைப் பொதுமக்களுக்கு வாங்கித் தருவதற்காகவே நயா பைசா முறையிலே விற்பனை வரி 1-9/16 என்று வரும்போது அதை 2 நயா பைசாவாக ஏற்றியுள்ளோம். வியாபாரிகள் ஏமாற்ற இடமில்லாமல் அந்தப் பணத்தை வரியை ஏற்றுவதால் வாங்கிப் பொது மக்களுக்குத் தருவதற்குத்தான் இந்தச் சட்டம்" என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த அளவும் வரியினைப் பொது மக்களிடத்தில் வாங்கி விடுகிறார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்கள். உண்மையிலேயே அமைச்சரவர்கள் கணக்குப்படி பார்க்கிறபோது இந்த வாதம் உண்மையாகக் கூடத் தோன்றலாம். இன்றையதினம் நயா பைசா முறைக்கு பழைய காசுகள் மாறிவிட்டதால் காலணாவிலிருந்து பைசாவாக மாற்றும்போது 2 பைசா வசூலித்துவிடுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்வேன். நயா பைசா என்ற புதிய காசுகள் இன்று மக்களிடை பழக்கத்திற்கு



25th July 1957] [Sri K. Anbazhagan]

வந்து, காலணா, அரையணா, ஓரணா என்பவை இன்னும் புழக்கத்தை விட்டுப் போகவில்லை. காலணாவும், அணாக்களும் நயா பைசாவாக மாறுகிற காரணத்தால், பொருள்களின் விலை முன்னிருந்ததை விட உயர்ந்து விடுகிறது. அணாக்களைக் கொடுத்து சாமான்கள் வாங்குகிறவர்கள் திரும்ப நயா பைசாவிற்கு பதில் அணாக்களை வழங்கும்போது பொது மக்கள் திரும்பவும் ஏமாறுகிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நயா பைசாவாக கையிலே கொடுப்பவர்கள் வேண்டுமானால், இத்தனை நயா பைசாக்கள் என்று கணக்குப் போட்டு அதைக் கொடுத்து வியாபாரிகளிடத்திலிருந்து ஏமாறாமல் இருக்க முடியுமே தவிர, கிராமத்து மக்கள் நயா பைசாவை இன்னும் கண்ணால் கூட கண்டு அறியாதவர்கள்—ஏமாறாமல் இருக்க முடியாது. நயா பைசாவை நகரத்திலுள்ளவர்களே இன்றைய தினம் பயன்படுத்த அஞ்சுகிறார்கள், ஒதுங்குகிறார்கள். சட்டசபை உறுப்பினர்கள்கூட காப்பி வாங்கிவரக் கூறும்போது நயா பைசாக் கணக்குப் போட திண்டாடுகிறார்கள் என்ற அளவுக்கு நிலைமை இருக்குமானால், நயா பைசா மக்களிடத்தில் வழங்காதபோது, காலணா அரையணாவைப் பயன்படுத்தி வியாபாரிகளிடத்தில் சாமான்கள் வாங்க நேருமாதலால் வியாபாரிகளிடத்தில் மக்கள் சாதாரணமாக ஏமாறுவார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். எனினும் வரியை உயர்த்துவது என்பது ஒரு பழமொழியையே நினைவூட்டுகின்றது. அதாவது "பழைய குருடி கதவைத் திறடி" என்பது. அதுபோல ஒரு முறை ஏமாந்தவன் மறு முறையும் ஏமாற்றத்திற்காளாவது என்ற முறையிலே, காலணா, அரையணா என்பதற்குப் பதிலாக நயா பைசா வந்ததால் எப்படி வியாபாரிகள் பொது மக்களை ஏமாற்ற நேரிடுகிறதோ அல்லது பொது மக்களிடமிருந்து அதிகமாக வசூலிக்க நேரிடுகின்றதோ, அதே மாதிரி நயா பைசா முறையில் அரசாங்கம் கணக்கு வைத்தாலும் கூட காலணா, அரையணா, ஒரு அணா நடமாடும் வரை பழைய காசுகளின் புழக்கம் நீங்காத வரை, அந்தக் காசுகள் அடியோடு மாறாத வரை மறுபடியும் பொதுமக்கள் அந்த வியாபாரிகளிடத்தில் ஏமாறத்தான் செய்வார்கள். ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு இல்லாமல் பல ஏமாற்றங்கள் நேரிடுவதற்கு இதனால் இடம் ஏற்படுகிறது. உண்மையிலேயே இன்றிலிருந்து மற்றொரு ஏமாற்றம் தொடர்ந்து வளருகிறது. அதற்குப் பொருளாதாரம் கற்றுத் தேர்ந்த அமைச்சர், நாட்டு நிலைமையைத் தெரிந்து சொல்லுகிற அமைச்சர், மற்றவர்களுக்குத் தாம் படித்த பொருளாதாரப் படிப்பு மறந்திருந்தாலும் அதை மறக்கக் கூடாத அமைச்சர், இதையும் எண்ணிப் பார்த்து, இதற்கும் சேர்த்து சிறந்த திட்டம் தயாரிக்க வேண்டும். அப்படித் திட்டம் தீட்ட முடியாவிட்டால், பல இடையூறுகள் ஏற்படும் என்பதை ஏற்றுக்கொண்டு, இன்று உள்ளபடியே இருக்கிற இடத்திலேயே இருக்க வேண்டும், புதிய சட்டம் என்ற பெயரால் புதிய அடி எடுத்து வைக்கக் கூடாது, புதிய முயற்சியில் ஈடுபடக் கூடாது, அதனால் தொல்லை வளரும், மத்திய சர்க்கார் நயா பைசாவைப் புகுத்தி சட்டம் செய்துவிட்டார்கள், அந்த வழிதானே நாமும் செல்ல வேண்டும் என்ற வகையில் இந்தத் திருத்தம் கொண்டுவருவது உண்மையிலேயே வரவேற்கக் கூடியதாக இல்லை என்ற கருத்தை தெரிவித்துக்கொள்ள வேண்டியது எங்களுடைய கடமை. அதைப் போலவே கனம் அமைச்சர் அவர்கள் இந்தச் சிக்கல் குறித்து அரசாங்கத்தினுடைய கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. A. RASHEED : Sir, the hon. Member said that even Members of this honourable House get confused while paying their bills in hotels in terms of *naye paise*. This is a reflection on the members. Is this in order, Sir ?

MR. SPEAKER : It may be his experience. Why should the hon. Member bother ?

[25th July 1957

12-34 p.m. **Sri P. S. CHINNADURAI :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி திருத்த மசோதாவின் மீது நான் வெளியிட்டுள்ள கருத்துக்களை கனம் அமைச்சர் அவர்களும் ஆட்சியாளர் தரப்பிலுள்ள சில அங்கத்தினர்களும் சரியாகப் புரிந்துகொள்ளும்படியாக நான் சொல்லவில்லை என்றே நான் கருதுகிறேன். மீண்டும் அதனைக் குறித்து ஒரு விளக்கம் சொல்ல முற்படுகிறேன். இந்த விற்பனை வரியால் பாதிக்கப்படுகிறவர்கள் மக்களே தவிர வியாபாரிகள் அல்ல என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவ்வாறு பாதிக்கப்படுகிற மக்கள் நகர மக்கள் மாத்திரமல்ல, கிராமங்களில் இருக்கும் மக்கள் கூடத்தான் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். வியாபாரிகள் இந்த விற்பனை வரியால் நேரடியாக பாதிக்கப்படுவதில்லை என்பதை நிர்வாகத்திலுள்ளவர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த விற்பனை வரி 1-9/16 நயா பைசாவாக இருந்தாலும் அல்லது இரண்டு நயா பைசாவாக இருந்தாலும் அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் உண்மையிலேயே மக்கள் தான். ஆகவேதான் அதைப்பற்றி வலியுறுத்த விரும்புகிறேன். இந்த புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது மக்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் அதனால் இந்த மாற்றத்தை ஏற்படுத்தக் கூடாது என்றும் கெஞ்சிக் கேட்க வேண்டியதாக இருக்கிறது. எங்களை விட்டுவிட்டு மக்களிடத்தில் உண்மையிலேயே அதிகப்படியான அக்கறை ஆட்சியாளர்களுக்குத்தான் இருக்க வேண்டும். இந்த ராஜ்ய நிர்வாகத்தை ஏற்று நடத்துகிறவர்களுக்குத் தான் இருக்க வேண்டும். அவர்கள்தான் பெருவாரியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். மூன்றில் ஒரு பங்கு கிட்டத்தட்ட விற்பனை வரியை உயர்த்த வேண்டும் என்று இந்த விற்பனை வரி மசோதாவைக் கொண்டுவரவேண்டியது சரியானதுதானா, கொண்டுவரவேண்டியதற்கு அவசியம் இருக்கிறதா ? என்று ஒன்றுக்குப் பல தடவை இதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுதுள்ள மதிப்பிற்குரிய கனம் அமைச்சர் அவர்களா இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டும். இந்த அமைச்சர்தானா இதைக்கொண்டு வந்து மக்களுடைய எதிர்ப்புக்கு உள்ளாக வேண்டும். துர்ப்பாக்கியவசமாக அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வரும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நான் ஒன்று மனதார விரும்புகிறேன். இந்த மசோதாவைக் கொண்டுவரும்போது அவர் இந்த சபைக்கு வராமலேயே இருந்திருந்தால் ரொம்பவும் நன்றாக இருந்திருக்கும். உண்மையிலேயே அவர் இங்கு இல்லாமல் வெளியூருக்குப் போயிருக்கலாம். அப்படிப் போயிருந்தால் வேறு யாராகிலும் இதைக் கொண்டு வந்திருப்பார்கள். இதை நிறைவேற்றுவதற்கு அவர் பொறுப்பாளியாக இருந்திருக்க மாட்டார். இன்னொரு விஷயத்தையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். இப்பொழுது கூட காலம் தாழ்ந்துவிடவில்லை. இந்த மசோதாவை இப்போழுது கூட நிறைவேற்றாமல் விட்டு விடலாம். அப்படியே விட்டு விட வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போழுது கூட காலம் தாழ்ந்துவிடவில்லை என்று கூறிக்கொண்டு இதனால் உண்மையிலேயே பாதிக்கப்படுகிறவர்கள் மக்கள்தான் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இதற்குப் பின்னால் ஆட்சியாளர்கள் குறிப்பாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள், காங்கிரஸ் கட்சியினர் இதற்குப் பதில் சொல்ல வேண்டியதாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

12-37 p.m. * **The Hon. Sri R. VENKATARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே சில கஷ்டங்கள் புது நாணய முறையால் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. புது நாணய முறை அமுலுக்கு வந்து பழைய நாணயங்கள் எல்லாம் முழுவதும் பின்வாங்கிவிட்ட பிறகுதான் நிலைமை தெளிவாகும். எனக்குத் தெரிந்த ஒரு அனுபவத்தை நான் சொல்லுகிறேன். ஏதாவது பணம் கொடுக்க வேண்டியதாக இருந்தால் காலணாவாகக் கொடுங்கள் என்று இப்பொழுது பலர் கேட்டு வருகிறார்கள். அதாவது காலணாவை வைத்துக்கொண்டு இரண்டு நயா பைசாவாக



25th July 1957] [Sri R. Venkataraman]

மாற்றிக்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் அப்படி கேட்கிறார்கள். இதனால் அப்படிக் கேட்கிறவர்களுக்கு லாபம் ஏற்படுகிறது என்ற காரணத்தால் அப்படிக் கேட்கிறார்கள். சாதாரணமாக சமூகத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படுகிறபோது அதுவும் அத்தியாவசியமாக ஏற்படக் கூடிய மாறுதல்கள் ஏற்படும்போது கஷ்டங்கள் ஏற்படுவது சகஜம்தான். நம் நாட்டிற்கு தசாம்ச முறை வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைப் பற்றி தீர ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். நம்முடைய பல பிரதிநிதிகள்தான் அங்கு பார்லிமெண்டில் இருந்துகொண்டு முடிவு செய்திருக்கிறார்கள். இதனால் ஏற்படக் கூடிய விளைவு சில காலத்திற்கு இருக்கத்தான் இருக்கும். நான் சொன்னது என்னவென்றால் இந்த விலை வாசி உயர்வுக்குக் காரணம் இந்த வரி இல்லை என்று தான் சொன்னேன். வரி அளவுக்கு விலை வாசிகள் உயர்ந்திருந்தால் அது வரியினால்தான் என்று சொல்லாம். ஆனால் அதை விட அதிகமாக உயர்ந்திருப்பதால் அதற்குக் காரணம் வரி இல்லை என்றுதான் நான் சொல்வேன். அதற்கு மேல் உயர்வதற்கு சர்க்கார் காரணம் அல்ல என்றுதான் சொன்னேன். விலை வாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு சர்க்காருக்கு இடம் இருக்கிறது. அப்படி இல்லை என்று சொல்ல மாட்டார்கள். அப்படிச் சொல்லி இருக்க மாட்டார்கள், இருக்கவும் இல்லை. கனம் சின்னதுரை அவர்கள் சொன்னார் : என்னை வெளியில் போய்விடுங்கள் என்று. ஒன்றை மட்டும் நான் தாழ்மையுடன் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலுள்ள மக்கள் வரியே கொடுக்கக் கூடாது என்ற கொள்கை இருக்குமானால் கனம் சின்னதுரை அவர்கள் கூட அதை ஏற்றுக்கொள்ள மாட்டார். மக்களுடைய சக்திக்குத் தக்கவாறு வரியைக் கொடுக்க வேண்டியதுதான். அவர்களுடைய சக்திக்கு அப்பால் வரி கொடுக்க வேண்டியது அவசியம் இல்லை. அப்படி அவர்கள் வரி கொடுக்கவில்லையானால் இப்படிப்பட்ட ஒரு வெல்பேர் ஸ்டேட் நடக்க முடியாது. ஒரு வெல்பேர் ஸ்டேட் நடக்க வேண்டுமானால் வரி கொடுத்துத்தான் ஆக வேண்டும். சாதாரண மக்கள் ஓரளவுக்கு வரி கொடுத்துத்தான் ஆக வேண்டும். அப்படிக் கொடுக்கும்படியான நிலைமை இந்த விற்பனை வரிமூலம்தான். இதுதான் உகந்த முறை என்று உலகத்திலுள்ள எல்லா நாட்டினரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே விற்பனை வரியே முழுதும் வேண்டாம் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. இந்த வரி விதிக்கும் முறையில் ஏதாகிலும் தவறுகள் நடந்தால் அதைத் தவிர்க்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். அப்படி எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதை முன்பே கூறியிருக்கிறேன். ஆகவே இந்த மசோதாவை இந்த சபை ஏற்றுக்கொள்ளும்படியாக பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : The question is—

"That the Madras General Sales Tax and Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957, be passed."

The motion was put and carried and the Bill was passed.

## (3) THE MADRAS PLANTATIONS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1957.

* **The Hon. Sri M. A. MANICKAVELU :** Sir, I beg leave to introduce the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill [a], 1957, and move—

"That the Bill be taken into consideration."

சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா வரும் என்று பட்ஜட் சமர்ப்பித்த அந்தக் காலத்திலேயே கூறப்பட்டது. அதாவது இந்த வரி விகிதாசாரத்தை ஓரளவுக்கு உயர்த்தவேண்டும் என்ற நோக்குடன்

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 20th July 1957.

[Sri M. A. Manickavelu] [25th July 1957

இந்தத் திருத்த மசோதா வந்திருக்கிறது. முதல் இரண்டு கட்டத்திலும் மாறுதல் ஒன்றும் கிடையாது. மற்ற ஐந்து கட்டங்களிலும் மாறுதல் இருக்கிறது. அதாவது, ஒவ்வொரு கட்டத்திலும் ஐந்து நயா பைசா அதிகம் ஆக்கிக்கொண்டு வந்து, கடைசி கட்டத்தில் பத்து நயா பைசா அதிகப்படுத்தவேண்டும் என்பதுதான் கொள்கை. இதனால் சுமார் 25 லட்சம் ரூபாய் சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கனம் அங்கத்தினர்களை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இத்திருத்த மசோதாவைப்பற்றிய கருத்துக்களை அவர்கள் இப்பொழுது தெரிவித்தால், அவைகளையெல்லாம் கவனித்து இன்னும் வேறுவிதமான மற்ற மாறுதல் ஏற்படுகிற காலத்திலே அவைகளை யோசிக்கலாம். இப்பொழுது ஒரு திருத்தமும் கொண்டுவராமல் இந்த மசோதாவை கனம் அங்கத்தினர்கள் நிறைவேற்றுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Plantations Agricultural Incom-tax (Amendment) Bill, 1957, be taken into consideration."

12-41 p.m. *SRI M. P. SUBRAMANIAM: தலைவர் அவர்களே, இப்பொழுது அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தோட்ட வருமானத்தின்மேல் போடப்படும் வரியை உயர்த்துவதற்கான திருத்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்று, அதற்கு ஆதரவு தர விரும்புகிறேன். ஏற்கெனவே நாங்கள் இந்தச் சபையில் பல முறை அறிவித்ததுபோல், இது மாதிரி வரி கொடுக்கச் சக்தி உடையவர்கள் மீது வரி விதிப்பதை எப்பொழுதும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கும் என்பதை நான் சுட்டிக் காட்டுகின்றேன். இந்த மசோதாவில் காணப்பட்டபடி, முதல் இரண்டு கட்டங்களிலும் உயர்த்தாமல், மூன்றாவது கட்டத்திலிருந்து ஐந்து சதவிகிதம் வரியை உயர்த்தினது உண்மையிலேயே வரி கொடுப்பவர்களுக்குப் பெரும் பாரமாக இருக்காது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பெரிய கூக்குரல் எழுப்பியவர்கள், நடைமுறையில் பார்க்கும்போது, இந்தச் சட்டம் அவர்களைப் பாதிக்கவில்லை என்பதையும், வரி உயர்வினால் இப்பொழுது எந்த விதமான பிரச்னையும் எழுப்பவில்லை என்பதையும் சபை நன்றாக உணரும். இன்னும் அதை உயர்த்தினால்கூட திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்திருக்கும் என்று இதை வரவேற்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

12-42 p.m. SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, வரி போட்டால் எதிர்க்கட்சிக்காரர்கள் அதனை எதிர்க்கிறார்கள், வருமானத்திற்குரிய வழிகளையெல்லாம் அடைப்பதற்கு இங்கே வகை செய்கின்றார்கள் என்று ஆட்சியாளர்கள் அடிக்கடி குறைப்பட்டுக் கொள்வதைக் கேட்க நேர்ந்த இந்தச் சபையிலே எதிர்க் கட்சியினர் இப்பொழுது கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த வரி உயர்வை மனப்பூர்வமாக ஆதரிப்பதுமாத்திரம் அல்ல, அதனை இன்னும் அதிகரிக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய ஒரு ஆலோசனையையும் கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுது மலைத் தோட்டங்களுக்குப் போடப்பட்டிருக்கிற வருமான வரி உயர்வானது போதுமான அளவிலே இல்லை, இன்னும் அதனை அதிகரிக்க வேண்டுமென்று பல அங்கத்தினர்கள் பட்ஜட் விவாதத்தின்போது சொன்னார்கள். இதன் மூலம் வருகிற தொகை உத்தேசமாக 25 லட்சம் ரூபாய் இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் இதைவிட அதிகமாக இந்த வரி விகிதங்களை உயர்த்தி, அதிகப்படியான வருமானத்தை நாம் நம்முடைய கஜானாவுக்குக் கொண்டுவருவதற்கு வகை செய்யலாம் என்று எதிர்க் கட்சிக்காரர்களே அழைக்கிறார்கள். அதற்கு ஏன் அரசாங்கம் தயங்க வேண்டும்? இந்த ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடாதா? நாற்பத்தைந்து நயா பைசா என்று இருப்பதை 50 நயா பைசா என்றோ வேறு இம்மாதிரி மாற்றுவதற்கோ முன்



25th July 1957] [Sri P. S. Chinnadurai]

வரக்கூடாதா? ஐம்பது நயா பைசாவுக்கு வரியை உயர்த்த வேண்டுமானால் நான் ஏன் திருத்தம் கொடுக்கவில்லை என்று என்னைக் கேட்கலாம். நான் திருத்தம் கொண்டு வந்தால், நிச்சயமாக அது தோற்கடிக்கப்பட்டுவிடும் என்பது எனக்குத் தெரியும். 'ப்ரெஸ்டிஜ்' க்காக அது தோற்கடிக்கப்பட்டாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன். கடைசி கட்டத்தில் 45 நயா பைசா என்று இருப்பதை 50 என்று அரசாங்கத்தினர் தாமாகவே ஆக்கிக்கொண்டால், கணக்குப் போடுவதற்கு இன்னும் சுலபமாக இருக்கும் அல்லவா என்பதை கொஞ்சம் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு பூர்த்தியாகி, அடுத்த ஆண்டிலாவது அமைச்சர் அவர்கள் வரி உயர்வைக் கொண்டுவரவேண்டும். நான் அமைச்சர் அவர்களை மிகப் பணிவாக வேண்டிக் கேட்டுக்கொள்ளுவேன்—நிச்சயமாக இந்த வரியை எந்த அளவுக்கு அதிகமாக நாம் பிழிய முடியுமோ மலைத் தோட்ட முதலாளிகளிடமிருந்து அந்த அளவுக்குப் பிழிந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்று.

SRI J. MATHA GOWDER : சபாநாயகர் அவர்களே, இந்த வரியை அதிகமாக சர்க்கார் உயர்த்தினாலும், அதற்கு ஆதரவு தருவதாக எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுகிறார்கள். அதே நேரத்தில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால் தொழில் நல்ல விதமாக நடக்க வேண்டும் என்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரேயடியாக முழுக்குப் போட்டுவிட முடியாது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பெறக்கூடிய லாபம் அத்தனையையும் வரி மூலமாக சர்க்கார் எடுத்துக்கொண்டு விட்டால் அந்தத் தொழில் சரியாக நடக்க முடியாது என்பதையும் நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். தொழில் வளம் நல்ல விதமாக நடக்க வேண்டுமென்றால் . . . 12-45 p.m.

MR. SPEAKER : அங்கத்தினர் தொழிலைப்பற்றி பேசுகிறார்கள். இங்கே விவாதத்திற்கு இருப்பது "ப்ளான்டேஷன்" விவசாய வருமான வரி பற்றி.

SRI J. MATHA GOWDER : காபி, டீ தொழிலைப்பற்றி நான் பேசினாலும், அவைகளும் 'ப்ளான்டேஷன்' தான். அந்தத் தொழில் நல்ல முறையில் நடக்காவிட்டால் அதிலிருந்து வரியும் இல்லை என்ற முறையில் பேசுகின்றேன். நம்முடைய தொழில் துறையும், ப்ளான்டேஷன் தொழில் துறையும் நல்ல விதமாக முன்னேறிக் கொண்டிருக்க வேண்டுமென்றால் அவர்களுக்கும் ஊக்கம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தால்தான் அவர்களும் நல்ல விதமாகப் பயன்படுத்துவார்கள். அவர்கள் அந்தப் பயிர்களை நன்றாக விளைவிப்பார்கள். அதிகமாக உற்பத்தி செய்வார்கள். அந்த விளைபொருள்களை அன்னிய நாட்டுக்கு அனுப்பி, அன்னியச் செலாவணி கூட ஓரளவு அதிகமாக பெறக்கூடும். அப்படி முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொழில் மீது ஒரே அடியாக அதிகமா வரி போடுவதை நான் மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

பட்ஜட் உரையிலேகூட இதைப்பற்றி சொல்லும்போது, முதல் 1,500 ரூபாய்க்கு வரி ஒன்றும் இல்லை. அடுத்த ரூ. 3,500-க்கும் வரி இல்லை. அதற்குமேல்தான் வரி உயர்த்தப்படுகிறது. இந்த விகிதம் யாரையும் பாதிக்காது. இப்பொழுது போட்டிருக்கும் வரி விகிதம் தற்சமயத்திற்கு ஓரளவு சரியாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ளுகின்றேன். மேற்கொண்டு அதிகமாகப் போடுவது என்றால், இந்த வருஷம் போடக்கூடாது. இந்த வருஷம் ப்ளான்டேஷனிலே எந்த அளவுக்கு லாபம் அடைந்திருக்கிறார்கள் என்பதைக் கவனித்து, அதிகமாக லாபம் அடைந்திருக்கிறார்கள் என்று தெரிந்தால் மாத்திரம் நாம் வரியை அதிகமாக அந்த அளவுக்கு உயர்த்துவது ஓரளவு சரியாக இருக்கும். அப்படியில்லாமல் தற்போதே அதிகமாக உயர்த்திக்கொண்டு போவது சரியல்ல. காபி, டீ முதலிய ப்ளான்டேஷன்களுக்கு வரியை இப்பொழுது உயர்த்தியிருப்பது கனம் அமைச்சர் அவர்களால் நன்றாக யோசனை செய்து நிர்ணயித்திருக்கக் கூடியது என்று நான் நினைக்கிறேன். மேற்கொண்டு உயர்த்த

[Sri J. Matha Gowder] [25th July 1957

வேண்டுமானால், இந்த வருஷம் பூராவும் நிலைமையை நன்கு கவனித்துதான் அடுத்த வருஷத்திற்கு யோசனை செய்யலாம் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறிய தோட்டக்காரர்களுக்கு விவசாய வருமான வரி ஆபீஸ்களினால் ஏற்படும் கஷ்டத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்ன தேதிக்குள்ளாக அவர்கள் கணக்கு கொடுக்க வேண்டும் என்ற தேதி நிர்ணயிக்கப்படாமல் இருக்கிறது. ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வருமானம் பெறுபவர்கள் கணக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாமலிருக்கிறது. அவர்களுக்கு எக்கருக்கு இவ்வளவு ரூபாய் என்று விதித்துவிடுவார்கள் விவசாய வருமான வரி அதிகாரிகள். அவர்கள் இந்தத் தேதியில் கணக்கைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்புவது இல்லை. இந்தத் தேதியில் ஆபீசுக்கு வரவேண்டுமென்று சம்மன் வருவது இல்லை. அவர்களுக்குக் குறிப்பிட்ட வரி போட்டுவிடுகிறார்கள். கணக்கு வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. யாரும் கணக்கு வைப்பது இல்லை. சிறிய தோட்டக்காரர்கள் கணக்கு வைக்காமல் இருக்கும்போது, "இந்தத் தேதியில் நீங்கள் கணக்குச் சமர்ப்பிக்கவில்லை" என்ற காரணத்தை வைத்துக்கொண்டு விவசாய வருமான வரி அதிகாரிகள் அவர்களைக் கணக்குக் கொண்டு வரும்படி சொல்லுகிறார்கள். ஏப்ரல் மாதம் வரையில் கணக்கு வைக்காமல் இருக்கும்போது, ஏப்ரல் மாதம் முடிந்தவுடன் கணக்குகளையெல்லாம் அவர்கள் குறிப்பிட்ட தேதியில் தாக்கல் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டால், அவர்கள் பொய்க் கணக்கு வேண்டுமானால் தயாரிக்க முடியுமே தவிர, உண்மையான கணக்குத் தயாரிக்க முடியாது. இதை நான் அனுபவ பூர்வமாகச் சொல்கிறேன். போடும் வரியை அவர்கள் கட்டி விடுகிறார்கள். ஏப்ரல் வரையில் கணக்கு வைக்காமல் இருந்து, ஏப்ரல் கழிந்த பிறகு, விவசாய வருமான வரி அதிகாரி, கணக்குக் கொண்டுவர வேண்டுமென்று தோட்டக்காரர்களுக்குச் சம்மன் அனுப்பினால், எந்தக் கணக்கை அவர்கள் கொண்டு வருவார்கள் என்று நான் கேட்கின்றேன். ஆகையால், இப்பேர்ப்பட்ட சில சிக்கல்களைப் பார்த்து, சிறு தோட்டக்காரர்களுக்கு முன்னதாக சம்மன் அனுப்ப வேண்டும். "உங்களுக்கு அசெஸ்மெண்ட் செய்திருக்கிறோம். நீங்கள் இந்தத் தேதிக்குள் கணக்குக் கொண்டுவர வேண்டும்" என்று முன்னதாகவே சம்மனோ நோட்டீசோ அனுப்பி, வாய்தா கொடுத்த பிறகு அசெஸ்மெண்ட் செய்ய வேண்டுமே தவிர, இஷ்டப்படி போடக்கூடாதென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேற்கொண்டும் இந்த வரியை இந்த வருஷத்திற்கு உயர்த்தக் கூடாதென்று நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

12–50 p.m. SRIMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, the Hon. the Minister for Revenue has introduced the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill very successfully. The very fact that the Opposition has supported this Bill shows that the Hon. the Minister can be assured of a very easy passage of the Bill. The very fact that the Opposition has agreed to the introduction of the Bill shows that the Government have devoted a lot of thought to the subject before inflicting this tax on the planters in our State whose taxable capacity is well-known. If at all there is any section in the community that could be taxed, it is the planters, especially the tea planters. In this connection, I would like to place certain facts before the House for the information of the hon. Members and the Hon. Minister. There may be some teasing on the part of the officials while collecting the income-tax from the planters. Of course, the work of collection of this tax is being done satisfactorily. But, certain people are put to lot of difficulty



25th July 1957] [Srimathi T. N. Anandanayaki]

on account of the teasing tendency of some of the Income-tax officials. I can even quote instances in this regard where Income-tax Officials have acted even on anonymous petitions and put the assessees to lot of difficulties. This Agricultural Income-tax department has recently been started and as pointed out by the hon. Member representing the Nilgiris, the planters will not be in a position to submit their accounts perfectly. Because, it is a new field and while collecting the tax from the planters, the officials concerned may tease them. I would request the Hon. Minister to take into consideration all these difficulties of the planters and ask the department to be liberal in collecting the tax from the assessees Not that I encourage evasion of the income-tax and I will be the last person to do it. We are all anxious that we must get as much as possible from them and they should not be allowed to evade the payment of the tax. At the same time, I would like to point out that it is a new field and the difficulties experienced by the planters may also be taken into consideration and the officials may be informed that they should not tease the planters. With these suggestions, I close my speech, Sir.

SRI T. S. RAMASWAMY PILLAI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நானும் ஆதரித்து ஒரு சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த மசோதாவுக்கு ஏகதேசம் எல்லா இடங்களிலிருந்தும் ஆதரவு வருவது குறித்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அதோடுகூட, ஒரு சில யோசனைகளையும் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கலாம் என்று நினைக்கிறேன். நமது சென்னை ராஜ்யத்தில் இப்போது இரண்டு விதமான விவசாய வருமானச் சட்டங்கள் இருக்கின்றன ; ஒன்று 'ப்ளான்டேஷன்ஸ்' (தோட்டங்கள்) மட்டும் பற்றியது, இன்னொன்று இதர நில புலன்கள் பற்றியது. சாதாரணமாக, கன்னியாகுமரி ஜில்லாவில் சாதாரண விவசாயத்திற்கும் கூட வருமான வரி கொடுக்கப்பட்டு வருகிறது ; இப்போது அல்ல, சென்ற 10—12 ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இங்கே தோட்டங்களுக்கான வருமான வரிச் சட்டம் கூட இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் இயற்றப்பட்டது என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்தை இதர விவசாய வருமானங்களுக்கும் விஸ்தரித்தால் நன்றாக இருக்கும். அதோடுகூட, வேறு நிலபுலன்கள் வருமான வரியையும் கொண்டுவரும்போது நமக்கு நிச்சயமாக அதிக வருமானம் கிடைக்கும். அப்போது சாதாரண விவசாயிகளுக்கு, அவர்கள் தாங்கக்கூடிய அளவிற்கு அதிக வரி போடலாம். அவரவர்கள் தாங்கக்கூடிய அளவுக்கு எல்லா விவசாயிகளுக்கும் வருமான வரி போட்டால், ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பு இருந்த நல்ல நிலைமை நமது ராஜ்யத்தில் ஏற்படும். ஆகவே அப்போது எல்லா விவசாயிகளுக்கும் அவரவர்கள் தாங்கக்கூடிய அளவிற்கு அதிகபட்ச வரி விதிக்கலாம் என்று கருதுகிறேன். இந்த இரண்டு யோசனையையும் கூறிக் கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, 12–54 p.m.
இந்த வரியைப்பற்றி அநேக கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். ஒரு தினப் பத்திரிகையின் நேற்றைய இதழில் ஒருவர் இந்த வரியைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். மற்ற எல்லா ராஜ்யங்களிலும் 'ப்ளான்டேஷன்ஸ்' மீது உள்ள வரி விகிதம் ரொம்பக் குறைவாக இருக்கிறது என்றும், சென்னை ராஜ்யத்தில் இந்த வரி ரொம்ப அதிகமாக இருக்கிறது என்றும், இதன் காரணமாக நமக்கு 'எக்ஸ்போர்ட் மார்க்கெட்' ஒன்றும் இருக்காது என்றும், கிழக்கு ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் தேயிலைத் தோட்டங்கள் அதிகமாகியிருக்கின்றன என்றும், இன்னும் பல விஷயங்களைப்பற்றியும், அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதைப்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [25th July 1957

பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. இப்போது தோட்டத் தொழிலாளிகளுக்கு தோட்ட முதலாளிகள் அநேக விதமான சலுகைகளைக் கொடுத்து வருகிறார்கள் என்றும், இன்னும் கொடுப்பதற்கு முன்வருவார்கள் என்றும் சொல்லப்பட்டது. தோட்ட முதலாளிகள் வரி கொடுப்பதற்கு ஆட்சேபணை செய்யாமலிருந்தபோதிலும், மற்ற ராஜ்யங்களில் எவ்வளவு தோட்ட வரி வசூலிக்கிறார்கள் என்பதையும், நாம் எவ்வளவு வசூலிக்கிறோம் என்பதையும், நாம் எவ்வளவு வசூலிக்க வேண்டும் என்பதையும் நன்றாக ஆலோசித்து, நமது 'எக்ஸ்போர்ட் மார்க்கெட்' கெடாதபடி எவ்வளவு வரி விதிக்கலாமோ அவ்வளவு வரி விதிக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தோட்ட வருயான வரி மசோதாவின் முக்கிய கருத்து இப்போதிருக்கும் வரி விகிதத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான். அநேக கனம் அங்கத்தினர்கள் இப்போதைய வரி விகிதம் போதாது என்றும் அதை அதிகப்படுத்த வேண்டும் என்றும் சொன்னார்கள். கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள், ஏற்றுமதிக்கு பாதகம் இல்லாமல் இந்த வரி விகிதத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலும், இது புதிதாக விதிக்கப்பட்டுள்ள ஒரு வரி ஆகும். ஆகையினால், நாங்கள் இந்த வரி இந்தத் தொழிலையோ மற்ற எதையோ பாதிக்காதபடி, ஜாக்கிரதையாகத்தான், வரி விகிதத்தை நிர்ணயித்திருக்கிறோம். அடுத்தாற்போலுள்ள கேரள ராஜ்யத்தில் உள்ள அளவை விட இங்கேயுள்ள வரி விகிதம் அதிகமாக இருக்கிறது என்று சொல்வதற்கில்லை என்று நான் நினைக்கிறேன்.

இன்னொரு விஷயம் சொல்லப்பட்டது. நிர்வாகத் துறையில் ஏதேதோ கஷ்டங்களும் இடுக்கண்களும் இருப்பதாக கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அது வேறு விஷயம். அது நிர்வாகத் துறையில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். அதற்கும் இந்த மசோதாவிற்கும் சம்பந்தமில்லை.

இந்த மசோதாவின் தாய் மசோதா மீது இங்கே விவாதம் நடந்தபோது பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அப்போது ஒரு உபமானம் கூட சொல்லப்பட்டது. பொன் முட்டையிடும் பாத்திடமிருந்து ஒரே சமயத்தில் ஏராளமான பொன் முட்டைகளைப் பெற வேண்டும் என்ற பேராசையினால் அந்த பாத்தைக் கொல்ல விரும்புவது தவறு என்பது போல், சீக்கிரம் ஒரேயடியாக ஏராளமான வரிப் பணத்தைப் பெறுவதற்காக அரசாங்கம் தவறான வரி விதிப்புகளைச் செய்யக்கூடாது என்று அப்போது சொல்லப்பட்டது. அது வாஸ்தவம்தான். பாத்து உயிருடன் இருந்தால்தான் பொன் முட்டையிட்டுக் கொண்டிருக்கும். (குறுக்கீடு : அது பாத்து அல்ல. அது வாத்து.) பாத்து என்றும் சில பிராந்தியங்களில் சொல்வதுண்டு. வாத்தைக் கொன்றுவிட்டால் அது முட்டையிட முடியாது என்று சொன்னார்கள். ஆமாம். முட்டை வேண்டுமென்றால், வாத்தை தாஜாப் பண்ணி, அதற்கு நன்றாகத் தீனியெல்லாம் கொடுத்து, அது சாகாமல் பார்த்துக்கொண்டால்தான் அது முட்டை கொடுக்கும். அந்த மாதிரி, வரி கொடுக்கும் இந்தத் தொழிலே அழிந்துவிட்டால் அதற்குப் பிறகு வருமானத்திற்கு இடமில்லை. இப்போது, இந்தத் தொழிலில், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் அநேக நிபந்தனைகள் இருக்கின்றன. தொழிலாளிகளுக்கு அநேக சலுகைகள் கொடுக்கப்பட வேண்டியிருக்கின்றன. நமது 'எக்ஸ்போர்ட் மார்கெட்' பாதிக்கப்படாதபடி வரி விதிக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தொழில்களால் மக்களுக்குக் கிடைக்கும் பொருள்களின் விலைகளின் ஏற்றமோ தாழ்வோ யாரையும் பாதிக்காமல் இருக்கும் அளவுக்குத்தான் வரி விதிக்கவேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் கவனித்துத்தான் வரி விகிதத்தை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில், இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள வரி விகிதம் இப்போதைக்குப் போதும் என்று தெரிகிறது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை சொன்னது போல் வரி விகிதத்தை மாற்றுவதை பிறகு



25th July 1957] [Sri M. A. Manickavelu]

பார்த்துக்கொள்ளலாம். இப்போது இந்த வரி விகிதம் போதும் என்று நினைக்கிறேன். ஆகையால், கனம் அங்கத்தினர்கள் எந்த மாறுதலும் இல்லாமல் இந்த மசோதாவை அங்கீகரித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1957, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

*Clause 2.*

MR. SPEAKER : The motion is—

"That clause 2 stand part of the Bill."

* SRI M. JAGANNATHAN : Sir. I move the amendment standing in my name, viz.,

"In sub-clause (2), *for* the words 'may be re-opened' occurring in line 18 *substitute* the words 'shall be re-opened'."

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN : Sub-clause (2) says—

"Any assessment completed before this Act is published in the *Fort St. George Gazette* may be re-opened and assessment made at the rates applicable to such a case under the Madras Plantations Agricultural Income-tax Act, 1955 (Madras Act V of 1955) as amended by this Act."

Though my amendment seeks to effect a verbal change, there is a point for consideration which I would like to explain.

Sir, reading between the lines, I could see the policy of the Government in its true colours. Sub-clause (2) of clause 2 reads as follows :—

Any assessment completed before this Act is published in the *Fort St. George Gazette* may be re-opened and assessment made at the rates applicable to such a case under the Madras Plantations Agricultural Income-tax Act, 1955 (Madras Act V of 1955), as amended by this Act.

This means it may be re-opened or it may not be re-opened. The Government are rather hesitant, and I hear that they are also trying to approach the plantations which were already assessed before the publication of this Act in the *Fort St. George Gazette*. In this matter, I would submit that though I welcome the policy of the Government in taxing the plantations, the Government are adopting the policy of running with the hare and hunting with the hound. In other words, they are trying to support the rich people on the one hand and placate the poor people on the other. They cannot serve two masters at the same time. They cannot serve the interests

[Sri M. Jagannathan] [25th July 1957

of both. Therefore, it is necessary that the Government should take up a definite stand in this matter. Even those assessments of the assessees who had already been assessed before this Act is published in the *Fort St. George Gazette*, must be re-opened and re-assessment must be made without fear or favour. Therefore, I say that this amendment is a very good amendment, and the Government may not feel any difficulty in accepting it.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I humbly submit that there is no necessity to accept this amendment. Not only there is no necessity, but it would not be proper also to accept it. Because, as it is, even cases which had been completed, can be re-opened, and there may be cases which need not be re-opened at all. There is also the interpretation that 'may' means 'shall'. Therefore, as it is, there is no necessity for accepting this amendment. It is a hair-splitting argument on the part of the hon. Member.

MR. SPEAKER : I now put the amendment to the vote of the House. The question is—

"In sub-clause (2) *for* the words 'may be re-opened' occurring in line 18 *substitute* the words 'shall be re-opened'."

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1957, be passed."

MR. SPEAKER : The question is—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1957, be passed."

The motion was put and carried and the Bill was passed.

## (4) THE PAYMENT OF WAGES (MADRAS AMENDMENT) BILL, 1957 (L.C. BILL NO. 1 OF 1957), AS PASSED BY THE COUNCIL.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Payment of Wages (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 1 of 1957 [a] ), as passed by the Legislative Council, be taken into consideration."

சபாநாயகர் அவர்களே, சம்பள பட்டுவாடா சட்டம்—தொழிலாளருக்கு கொடுக்க வேண்டிய ஊதியத்தில், நியாயமற்ற முறையில் எந்த குறைபாடும் செய்யக்கூடாது என்பதற்காக 'பேமெண்ட் அப் வேஜஸ் ஆக்ட்' நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தில் எந்த எந்த காரணங்களுக்காக முதலாளிகள் சம்பளத்தைக் குறைக்கலாம் என்று திட்ட வட்டமாக கூறப்பட்டிருக்கிறது.

[a] Printed as Appendix II on pages 449-450 infra.



25th July 1957] [Sri R. Venkataraman]

உதாரணமாக, "**Fine**" வேலைக்கு வராததற்காக டிடக்ஷன்ஸ் இது போன்ற காரியங்களுக்கு சம்பளத்தைக் குறைக்க முடியும். அதே போல வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். வீட்டு வாடகையை சம்பளத்தில் பிடிக்கலாம்.

1936-ல் இந்தச் சட்டம் நிறைவேறிய காலத்தில், சர்க்கார் வீடு கட்டும் திட்டம் ஒன்று ஏற்படும் என்ற நிலைமை மனதில் தோன்றவில்லை. அந்தக் காலத்தில், சர்க்கார் வீடுகள் கட்டினால் அதற்கு வாடகையை சம்பளத்தில் பிடிக்கலாம் என்ற ஷரத்து இல்லை. இப்பொழுது செம்பியத்தில் கிட்டத்தட்ட 1,000 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பது கனம் அங்கத்தினர்களுக்கு தெரிந்து இருக்கும். அங்கு தொழிலாளர்களுக்கு சீக்கிரத்தில் வீடுகள் கொடுக்கப்படும். அவ்வாறு தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் வீடுகளுக்கு, வாடகையை முதலாளிகள் பிடித்து சர்க்காருக்கு கொடுப்பதற்கு சட்டத்தில் அனுமதி வேண்டும். அதற்காக இந்த சட்டத்திலே 7-வது செக்ஷன் திருத்தியிருக்கின்றது. பதினொருவது செக்ஷனில், எந்த முறையில் பிடித்துக் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டு, அந்த முறையில் பிடித்துக் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு அதிகாரத்தைக் கூறி, 11-வது செக்ஷன் திருத்தப்பட்டிருக்கிறது. இந்த மசோதா அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது. ஜூலை மாதத்திய சம்பளத்தில் குடக்கூலியை வசூல் செய்ய வேண்டியிருப்பதால் இந்த மசோதாவை நிறைவேற்றும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The motion moved—

"That the Payment of Wages (Madras Amendment) Bill, (L.C. Bill No. 1 of 1957), as passed by the Legislative Council, be taken into consideration."

SRI S. PAKKIRISAMY PILLAI : தலைவர் அவர்களே, இந்த சம்பள பட்டுவாடா திட்டத்தில் இம்மாதிரி திருத்தம் அவசியம். அரசாங்கத்தாரே வீடு கட்ட முனைந்து, அதற்கு உண்டான குடக்கூலியை தொழிலாளர்களிடமிருந்து முதலாளிகள் மூலமாக வசூல் செய்வதற்கு வசதி செய்து கொள்வதில் யாருக்கும் ஆட்சேபணை கிடையாது. ஆனால் இந்த மாதிரியான வேறு பல காரணங்களுக்கு அந்த 'சம்பள பட்டுவாடா சட்டப்' பிரகாரம் வசூல் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறது. இதிலே மிகவும் அக்கிரமமாக, கோர்ட் டிக்ரி வாங்கிக் கொண்டு வரும் கடன்காரர்கள் தம் பணத்தை, அவர்களுக்கு, இந்த தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய போனஸ் தொகை பணத்தை கொடுக்கபடாமல் தடை செய்து, கடன் காராகள் வாங்கிக் கொள்ளுகிறார்கள். இது எந்த ஷரத்தின் கீழே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது இதில் காணோம். 1-05 p.m.

அதே சமயத்தில் இவர்கள் கொடுக்கப்படும் குடக்கூலி விகிதம் அக்கிரமமாக இருந்தால், அம்மாதிரி வசூலிப்பதை அரசாங்கத்தார் தடை செய்வதற்கு அந்தச் சட்டம் இருக்கிறது என்றும் தெரியவில்லை.

தொழில் கோர்ட்டு தீர்ப்புகளில், தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி அல்லது சம்பளம் நிர்ணயிக்கும்போது, இந்தத் தொழிலாளர் குடும்பத்தில் உள்ள மக்களின் எண்ணிக்கை மூன்று பேர்தான் என்று கணக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தொழிலாளி, அவனுடைய மனைவி, அவனுடைய இரண்டு குழந்தைகள் எல்லாம் சேர்த்து மூன்று முழு பேர்கள்தான் என்று கணக்கு போட்டுத்தான் ஒரு வீட்டின் குடக்கூலி நிர்ணயிக்கப்படுகிறது. அதன் பிரகாரம் கணக்குப் பார்த்தால் ஒரு ஆளுக்கு எட்டு அணா குடக்கூலி என கணக்கிட்டு மூன்று பேருக்கு அரை ரூபாய் வீதம் ஒன்றரை ரூபாய்தான் குடக்கூலியாக வசூல் செய்திருக்கவேண்டும். ஒன்றரை ரூபாயை மூன்று ரூபாயாக இப்பொழுது வசூல் செய்யலாம். 1939-ல் இருந்த குடக்கூலி தொகை 1957-ல் இரண்டு மடங்காக ஆகியிருக்கிறது, என்று சர்க்கார் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அதன் பிரகாரம் மூன்று ரூபாய் குடக்கூலிதான் இருக்க வேண்டும். எருக்கஞ்சேரியில்

[Sri S. Pakkiriswamy Pillai] [25th July 1957

கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்கு 12 ரூபாய் குடக்கூலி மிகவும் அதிகம். அன்றொரு நாள் கேள்வி கேட்ட போது இந்த வீடுகளுக்கு தொழிலாளர்களிடமிருந்து நிறைய அப்ளிகேஷன்கள் வந்திருக்கின்றன என்றும், "நான் முந்தி, நீ முந்தி" என்று தொழிலாளர்களிடம் போட்டியிருப்பதாகவும் மந்திரி அவர்கள் சொன்னார்கள். இது உண்மையல்ல. பி அண்டு ஸி மில் தொழிலாளர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகளுக்கு சாதாரணமாக ஒன்றரை ரூபாய் குடக்கூலி வசூல் செய்யப்படுகிறது. கம்பெனிக்காரர்களே இவ்வளவுதான் வசூல் செய்கிறார்கள். அதைவிட சிறிய அளவுள்ள இந்த வீடுகளுக்கு 12 ரூபாய போட்டிருப்பது மிகவும் அதிகம். இந்த 12 ரூபாய் எப்படி கணக்குப் போட்டிருக்கிறார்கள், எந்த அடிப்படையின்கீழ் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. இப்படிச் செய்வதில் "எகனாமிகல் ரெண்ட்" என்று சொல்லி இவ்வளவு பெரிய தொகை வசூலிப்பது மிகவும் நியாயமற்றது. அரசாங்கம் இந்த உயர்ந்த குடக்கூலியை வசூலிக்கக் கூடாது. அப்படி அதிகப்படியாக வசூலிக்க வேண்டும் என்றால், தொழிலாளர்களுக்கு அதிகப்படியான குடக்கூலி விகிதமும், பஞ்சப்படி கணக்கிலே சேர்த்தோ அல்லது தனியாகவோ கொடுக்க தொழில் கோர்ட்டுகளில் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி ஆலோசனை இருந்தால் ஒழிய அதிகக் குடக்கூலியைக் கேட்பது நியாயமில்லை என்று தெரிவித்துக்கொண்டு இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

**Sri J. MATHA GOWDER :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். வீடு கட்டிக் கொடுத்து தொழிலாளர்களிடமிருந்து ஏதோ வாடகை வசூல் செய்வதாக இருக்கிறது. ஆனால் இங்குள்ள நிலைமை பற்றி எனக்குத் தெரியாது. 'பிளாண்டேஷன்' தோட்டங்களிலே முதலாளிகளே வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். அந்த வீடுகளுக்கு தொழிலாளிகளிடமிருந்து எந்த விதமான குடக்கூலியும் வாங்குவது வழக்கமில்லை. அது அமைச்சர் அவர்களுக்கே தெரியும். நான் அறிந்துகொள்ளுவதற்காக கேட்கிறேன். அங்கு அப்படி சர்க்கார் வீடுகள் கட்டிக்கொடுப்பது கிடையாது. முதலாளிகள்தான் கட்டிக்கொடுக்க வேண்டும். முதலாளிகள் இத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நாம் 'ரெகமெண்டு' செய்கிறோம். அதன் பிரகாரம் கட்டிக்கொடுக்கிறார்கள். இங்கு வாடகை வசூல் செய்வது போல சட்டம் திருத்தப்படுகிறது. இந்தத் திருத்தத்தை அங்கு இருக்கும் முதலாளிகள் ஒருவேளை பயன்படுத்திக்கொண்டு விடுவார்களோ என்று அஞ்சுகிறேன். ஆகவே, இந்தத் திருத்தத்தில் 'பிளாண்டேஷனை' நீக்கி வேறு துறையிலே உள்ள தொழிலாளர்களுக்கு கட்டிக் கொடுக்கும் வீடுகளுக்கு மாத்திரம் என்று கூறப்பட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது மாத்திரமல்ல. இங்கு மாதம் ஒரு முறை சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது. ஆனால் 'பிளாண்டேஷன்' தொழிலாளர்களை பொறுத்த வரையில் அவர்களுக்கு வாரம்தோறும் சோத்துப்படி என்று ஒரு கணக்கு இருக்கிறது. மாதத்திற்கு ஒரு தொழிலாளருக்கு ரூ. 100 சம்பளம் என்று வைத்துக் கொண்டால் அவர்கள் வாரத்திற்கு ரூ. 20 வாங்கிக்கொண்டு ஜீவனத்தை செய்துகொண்டு வருகிறார்கள். வாரக் கடைசியில் மீதியுள்ள தொகையையும் கொடுத்துவிடுவார்கள். அதன் பிரகாரம் இப்பொழுது நடைமுறையில் நடந்து கொண்டு வருகிறது. இங்கு இருப்பதைப் பார்த்து அங்கும் மாதா மாதம் சம்பளம் பட்டுவாடா செய்வதாக முதலாளிகள் சொல்லிவிட்டால் 'பிளாண்டேஷன்' தொழிலாளர்களுக்கு பாதகம் ஏற்பட்டுவிடும். இது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதையும் பரிசீலனை செய்ய வேண்டும். இம்மாதிரி திருத்தங்கள் கொண்டுவரும்பொழுது 'பிளாண்டேஷன்' தொழிலாளர்கள் சம்பந்தமாக சில பிரச்னைகள் எழுந்துவிடுகிறது. இங்குள்ள தொழிலாளர்களுக்கும் மலைப்பிரதேசத்திலுள்ள 'பிளாண்டேஷன்' தொழிலாளர்களுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. சட்டம் இயற்றும்போதோ அல்லது திருத்தங்கள் கொண்டுவரும்போதோ, இங்குள்ள தொழிலாளர்களையும் மலைப் பிரதேசங்களிலுள்ள 'பிளாண்டேஷன்' தொழிலாளர்களையும் சமமாக வைத்துக்கொண்டு செய்யக்கூடாது.



25th July 1957] [Sri J. Matha Gowder]

'பிளாண்டேஷன்' தொழிலாளர்களுக்கு சௌகரியமாக இருக்கும் முறையில் செய்யவேண்டும். இந்த வீட்டு விஷயத்திலே, 'பிளாண்டேஷனைத் தவிர' என்று இருந்தால் நல்லது. இதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ பக்கிரிசுவாமி பிள்ளை அவர்கள் வீட்டிற்கு அதிகமாக தேவையில்லை என்று சொன்னார்கள். குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு என்னிடத்திலே பெருவாரியான தொழிலாளர்கள் வந்து, 'தேதி தாண்டிவிட்டது, எங்களுடைய அப்ளிகேஷன்களை எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று கேட்டார்கள். ஆனால் குறிப்பாக இந்த வீடுகள் 'பி அண்டு ஸி மில்' தொழிலாளர்களுக்கும், ஸிம்ப்ஸன் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, நான் வேறு யாரையும் அப்ளிகேஷன் கொடுப்பதற்கு அனுமதிக்கவில்லை. அந்த இடங்களிலே அந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் தேவையில்லை என்று சொன்னாலும், சென்னையில் இருக்கிற ஏராளமான தொழிலாளர்கள் அதை விரும்பிக் கேட்கிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படியாக இருக்கும் என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1-13 p.m.

அடுத்தபடியாக அதனுடைய வாடகை அதிகம் என்று சொன்னார்கள். இந்த வீடு ஒன்றுக்கு ரூ. 3,300 செலவு ஆகிறது. ரூ. 3,300-க்கு நாம் 4 சதவிகிதம் வட்டி போட்டாலும் கூட ரூ. 10-க்கு மேலாகும். வட்டி மாத்திரம் அவ்வளவு ஆகிறது. அதோடுகூட ஒரு வீடு கட்டிய பின் 50 வருஷத்திலே அழிந்துவிடும் என்ற அடிப்படையிலே தேய்மானமும் போட்டு பணம் வசூல் செய்வதுதான் சரியாக இருக்கும். இருந்தாலும், கூடுமான அளவுக்கு குறைந்த தொகையே அதாவது ரூ. 10-தான் வசூல் செய்யப்படும். பாக்கி ரூ. 2 'எலக்டிரிஸிடி' 'வாட்டர் சார்ஜ்' இவைகளுக்காக வசூலிக்கப்படும். அந்த இனங்கள் வாடகையைச் சேர்ந்தது அல்ல. எனவே விலைவாசிகள் இருக்கிற நிலைமையிலே இதைவிட குறைவான வாடகையில் வீடு கட்டிக்கொடுப்பது சாத்தியமல்ல என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதனால் வேறு ஏதாவது பிரச்னை எழுமானால், அது தனியாக கவனிக்கப்பட வேண்டுமே அல்லாமல், அதற்காக வீடு கட்டுவதில் ஏதாவது தாமதம் செய்வது சரியாக இராது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, 'பிளான்டேஷன்ஸை' பொறுத்த வரையில் வீடுகள் கட்ட வேண்டியது முதலாளிகள் பொறுப்பு என்று சட்டம் போடப்பட்டிருக்கிறது. நாமும் அவர்களை ஏன் கட்டவில்லை என்று அடிக்கடி வற்புறுத்தி கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் சட்டத்தில் ஐந்து வருஷத்திற்குள் கட்டலாம் என்று காலவரை இருப்பதால் அவர்கள் சற்று தாமதமாக அடுத்த வருஷத்தில் கட்டிக்கொள்ளலாம் என்று இருக்கிறார்கள். கடைசியில் கட்டுவதாயிருந்தால் மிகவும் கஷ்டமாக இருக்கும் என்று 'பிளாண்டேஷன்' முதலாளிகளுக்கு எடுத்துக்கூறி, எவ்வளவு சீக்கிரம் வீடுகள் கட்டிக்கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கட்டிக்கொடுப்பதற்கு அவர்களை தூண்டி வருகிறோம். இந்த மசோதாவுக்கு ஆதரவு கொடுத்த அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** The question is—

"That the Payment of Wages (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 1 of 1957), as passed by the Legislative Council be taken into consideration."

The motion was put and carried, and the Bill was taken into consideration.

[25th July 1957

*Clauses 2 and 3.*

Clauses 2 and 3 were each separately put and carried.

*Clause 1.*

Clause 1 was put and carried.

*Preamble.*

The Preamble was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Payment of Wages (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 1 of 1957), as passed by the Legislative Council be passed."

MR. SPEAKER : The question is—

" That the Payment of Wages (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 1 of 1957), as passed by the Legislative Council be passed."

The motion was put and carried and the Bill was passed.

## VII.—VOTING ON THE STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN THE SECOND HALF OF THE YEAR 1953-54.

### (1) DEMAND III—STAMPS ADMINISTRATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 73,792, under Demand III—Stamps Administration."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 73,792, under Demand III—Stamps Administration."

The Demand was put and carried and the additional Grant was made.

### (2) DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 25,241, under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."



25th July 1957]

MR. SPEAKER : The question is—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 25,241, under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."

The Demand was put and carried and the additional Grant was made.

### (3) DEMAND XV—EDUCATION.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 1,73,183, under Demand XV—Education."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 1,73,183, under Demand XV—Education."

The Demand was put and carried and the additional Grant was made.

### (4) DEMAND XXIX—PENSIONS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 6,56,173, under Demand XXIX—Pensions."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 6,56,173, under Demand XXIX—Pensions."

The Demand was put and carried and the additional Grant was made.

### (5) DEMAND XXX—STATIONERY AND PRINTING.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 12,69,031, under Demand XXX—Stationery and Printing."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 12,69,031, under Demand XXX—Stationery and Printing."

The Demand was put and carried and the additional Grant was made.

(6) DEMAND XL—COMMUTED VALUE OF PENSIONS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 26,654, under Demand XL—Commuted Value of Pensions."

MR. SPEAKER : The question is—

" That the Government be granted an additional sum not exceeding Rs. 26,654, under Demand XL—Commuted Value of Pensions."

The Demand was put and carried and the additional Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow, the 26th July 1957.

The House then adjourned.

VIII.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

* 132. *The Payment of Wages (Madras Amendment) Bill,* 1957 *(L.C. Bill No.* 1 *of* 1957), *as passed by the Legislative Council.*



APPENDIX I.

[Vide answer to clause (*a*) of the starred question No. 240 asked by Sri T. T. Daniel at the meeting of the Legislative Assembly held on 25th July 1957, page 378 supra.]

*List of palm-gur co-operative societies functioning in the State of Madras—Districtwar.*

| Serial number and district. | Number of societies. |
|---|---|
| 1 Salem .. .. .. .. .. | 177 |
| 2 Tirunelveli .. .. .. .. | 398 |
| 3 Tiruchirappalli .. .. .. .. | 54 |
| 4 South Arcot .. .. .. .. | 59 |
| 5 Madurai .. .. .. .. .. | 23 |
| 6 Tanjore .. .. .. .. .. | 89 |
| 7 Ramanathapuram .. .. .. | 172 |
| 8 North Arcot .. .. .. .. | 101 |
| 9 Coimbatore .. .. .. .. | 251 |
| 10 Chingleput .. .. .. .. | 77 |
| 11 Madras City .. .. .. .. | 2 |
| 12 Kanyakumari district .. .. .. | 29 |
| Total .. | 1,432 |

APPENDIX II.

[Vide item VI (4), page 442 supra.]

L.C. BILL No. I OF 1957.

(As passed by the Council.)

*A Bill further to amend the Payment of Wages Act,* 1936, *in its application to the State of Madras.*

WHEREAS it is expedient further to amend the Payment of Wages Act, 1936 (Central Act IV of 1936), in its application to the State of Madras, for the purposes hereinafter appearing;

BE it enacted in the Eighth Year of the Republic of India as follows :—

1. *Short title and extent.*—(1) This Act may be called the Payment of Wages (Madras Amendment) Act, 1957.

(2) It extends to the whole of the State of Madras.

2. *Amendment of section* 7, *Central Act IV of* 1936.—In section 7, sub-section (2) of the Payment of Wages Act, 1936 (Central Act IV of 1936) (hereinafter referred to as the principal Act), after clause (*d*), the following clause shall be inserted, namely :—

" (*dd*) Deductions for payments to the State Government or any Statutory Housing Board or such agency as the State Government may notify in the *Fort St. George Gazette,* for house-accommodation supplied to the employed person.".

[25th July 1957

3. *Insertion of new section 11-A in Central Act IV of 1936.*—After section 11 of the principal Act, the following section shall be inserted, namely :—

" 11-*A*. *Deductions in respect of house-accommodation.*—The employer shall make the deductions authorized under clause (*dd*) of sub-section (2) of section 7 from the wages of the employed person and remit the amount so deducted in such manner as the State Government may, by general or special order, specify."

STATEMENT OF OBJECTS AND REASONS.

Under section 7 (2) (*d*) of the Payment of Wages Act, 1936 (Central Act IV of 1936), deductions for house-accommodation can be made only when the accommodation is supplied by the employer. One of the resolutions adopted at the Conference of the Housing Ministers held at Simla in June 1955 was that the Payment of Wages Act should be suitably amended to enable the State Governments to recover the rent directly from the wages of the workers concerned when they provide housing accommodation for the workers. Under the Subsidized Industrial Housing Scheme, the Government of Madras are building colonies at Sembium and Erukanchery for the industrial workers, and the houses will be ready shortly for allotment to industrial workers. It has, therefore, become urgently necessary to amend section 7 (2) of the Payment of Wages Act, with a view to authorize the employer to make deductions from the wages of workers on behalf of the State Government, or a Statutory Housing Board or such other agency as the State Government may notify, for house-accommodation provided by such authorities.

Consequent on the above proposal, it is also proposed to introduce a new provision in the Payment of Wages Act (section 11-A) to empower the State Government to direct the employer, by general or special order, to make deductions from the wages of employees and to remit the amounts deducted in such manner as may be specified in the order.

M. BHAKTAVATSALAM,
*Minister-in-charge of Agriculture.*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 26th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : *ஷார்ட் நோட்டிஸ் கொஸ்டின் கோதண்டராமன் அவர்களின் பேரில் இருக்கிறது. ரூல் 40-ல் விவாதித்த பிறகு இதைக் கேட்க வேண்டாமென்று நினைக்கிறேன். கேட்க வேண்டாமென்று சொல்லவில்லை. மந்திரியவர்கள் ரூல் 40-ல் சொன்னார்களே என்று சொல்கிறேன்.*

* Short Notice questions 6 and 7 were not put up by the Members.

*Harijan Member for the Madras Public Service Commission*

*253 Q.—SRI M. C. MUTHUKUMARASWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to appoint a Harijan Member to the Madras Public Service Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI K. VINAYAKAM : Are not appointments to these high offices like Membership of the Public Service Commission made on grounds of integrity, efficiency and capacity to hold such offices and such persons should be above suspicion and not appointed community-war or religion-war even?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member has stated it correctly.

SRI M. C. MUTHUKUMARASWAMY : *பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மெம்பர்கள் பொறுக்கும் முறை எந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது ? இந்த மெம்பர்களை பொறுக்கும்போது எத்தனை தடவை, எத்தனை ஹரிஜன மெம்பர்கள் பொறுக்கப்பட்டிருக்கிறார்கள் ? மெம்பர்களுக்கு என்ன யோக்கியதாம்சங்கள் தேவை ?*

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to have notice with regard to statistics he asked for with reference to the number of Harijans appointed. As for qualifications, he should have had administrative experience.

SRI M. JAGANNATHAN : In view of the fact that the reservations of posts in Government services guaranteed by the Constitution is not strictly enforced by the Government, will the Government consider the desirability of appointing a Harijan Member in the Public Service Commission so that he will be the custodian and champion of the interests of the Scheduled Castes?

THE HON. SRI C. SUBRAMANIAM : The first allegation made by the hon. Member that the reservation made under the Constitution or under any law not being strictly followed, is not

[26th July 1957

correct. It is being strictly followed and it is wrong to assume that a Harijan alone can protect the interest of the Harijan Community. It is wrong to think so.

MR. SPEAKER : I was also about to add that it would be advisable for the hon. Member not to insinuate against such a body as the Public Service Commission. It is above all parties, and politics.

SRI K. RAMACHANDRAN : Was there any Harijan Member so far all these years on this body?

THE HON. SRI C. SUBRAMANIAM : For a similar question I wanted notice.

SRI S. LAZAR : Is there any age restriction?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, there is age restriction. I think the age-limit is sixty.

*Agricultural Colleges*

* 254 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Agricultural Colleges in the State with the number of students studying in each, community-war?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is only one Agricultural College in this State and it is at Coimbatore. Admissions to the First year class are in progress. One hunderd and thirty-seven students are studying in the Second-Year of whom one belongs to a Schedule Caste and forty-nine to Backard Classes. Ninety-nine students are studying in the third year class of whom two belong to the Scheduled Castes and thirty-nine to Backward Classes.

SRI A. A. RASHEED : Is there any proposal to start another Agricultural College in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is at present no such proposal. But this College is being extended.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த கல்லூரிகளில் பல ஆண்டுகளாக பி. எஸ். ஸீ. மாணவர்களுக்கு செகண்ட் கிளாஸ் மாத்திரம் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்தியாவில் உள்ள இதர கல்லூரிகளில் எல்லாம் பல பஸ்ட் க்ளாஸ் வந்திருக்கின்றன. இதனால் மேல் படிப்பிற்கு போகும்போது அகில இந்திய நிலையில் நமது மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் அல்லவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது, யூனிவர்ஸிட்டி கவனிக்கிற விஷயம். இதைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

SRI S. LAZAR : மாகாணத்தின் மத்தியில் அமைந்திருக்கிற திருச்சி இதுபோன்ற இடங்களில் தொழிற் கல்லூரி ஏற்படுத்த சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தற்காலம் அம்மாதிரி யோசனை ஒன்றுமில்லை.



26th July 1957]

SRI M. KALYANASUNDARAM : பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களும் பெரும்பாலும் விவசாயத்தில் நேரடியான தொடர்புள்ள சமூகத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். அப்படி இருந்த போதிலும் விவசாய கல்லூரிகளில் அந்த வகுப்புகளில் உள்ள மாணவர்கள் மிக குறைவாயிருக்கிறார்கள் என்பது மந்திரி அவர்களின் புள்ளி விவரங்களில் இருந்து தெரிகிறது. அதற்குக் காரணம் மனுக்கள் அதிகமாக வராததா அல்லது வந்திருந்தும் புறக்கணிக்கப் பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனு செய்து புறக்கணிக்கப்படுவது ஒன்றுமில்லை. மனு கொடுத்ததில் இருந்துதான் பொறுக்க வேண்டியிருக்கிறது. என்ஜினியரிங் கல்லூரி, வைத்திய கல்லூரி போன்றவைகள் சிறந்தது என்று அங்குபோய் விடுகிறார்கள். மனு குறைவாய் வந்தால் ஒன்றும் செய்யமுடியாது.

SRI K. RAMACHANDRAN : விவசாய கல்லூரிகளில் இரண்டாவது கிளாஸ்காரர்கள் மாத்திரம்தான் வருகிறார்கள் என்று கரயாளர் அவர்கள் சொன்னார்கள். முதல் வகுப்புக்காரர் ஏன் வருவதில்லை. அதற்குக்காரணம் நல்ல லெக்சரர்ஸ் இல்லையா என்பதுபோன்ற விஷயங்களைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து குறைகள் ஏதாவது இருந்தால் அவைகளை நிவர்த்திக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கல்லூரியின் திறனைப் பற்றி சர்க்காருக்கு சந்தேகம் ஒன்றும் இல்லை. நன்றாகவே இருக்கிறது.

*Tourism*

* 255 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the schemes included under Part III of the programme drawn up by the Government of India for the development of tourism in this State;

(*b*) the schemes that are to be executed in 1957–58; and

(*c*) when a rest-house at Courtallam is likely to be completed under the above programme?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The following schemes are included under Part III of the programme of the Government of India :—

| | RS. IN LAKHS. |
|---|---|
| 1. Extension of rest houses at Rani Mangammal Chatram at Madurai ... ... ... | 0·65 |
| 2. Rest house at Chidambaram ... ... ... | 0·50 |
| 3. Rest house at Tirunelveli ... ... ... | 0·50 |
| 4. Rest house at Tiruchendur ... ... ... | 0·50 |
| 5. Rest house at Kumbakonam ... ... ... | 0·50 |
| 6. Rest house at Courtallam ... ... ... | 1·70 |
| 7. Rest house at Tiruvannamalai ... ... | 0·40 |
| 8. Rest house at Mudumalai ... ... ... | 0·50 |
| 9. Development of Golf courses at Ootacamund and Kodaikanal ... ... ... ... | 0·60 |
| | 5·85 |

(*b*) & (*c*) Of these schemes, the proposal for a Rest house at Courtallam is now under active consideration.

[26th July 1957

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த ரெஸ்ட் ஹௌஸில் போர்டிங், லாட்ஜிங் இரண்டும் கொடுக்கப்படுகிறதா ? அல்லது லாட்ஜிங் மாத்திரம்தானா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பெரிய ஊர்களில் போர்டிங் அன்ட் லாட்ஜிங் இரண்டிற்கும் ஏற்பாடு செய்வதாக உத்தேசம்.

SRI K. RAMACHANDRAN : ராமேஸ்வரம் ஒரு சிறந்த ஸ்தலமாக இருப்பதாலும் வட இந்தியாவிலிருந்து பலர் அங்கு வருவதாலும் அங்கு ஏதாவது டூரிஸ்ட் ஹோம் ஏர்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I think there is a scheme for Rameswaram also. But this is under Part III where the entire responsibility is that of the State Government.

SRI K. VINAYAKAM : Since Conjeevaram happens to be an ancient Capital of the Pallavas . . .

MR. SPEAKER : The hon. Members are asking . . .

SRI K. VINAYAKAM : I am making a pertinent point. I am not . . .

MR. SPEAKER : I am saying that hon. Members are asking questions, each one about his own district.

SRI K. VINAYAKAM : The answer covers the entire State, Sir. Since Conjeevaram happens to be an ancient Capital of the Pallavas and the architectural efficiency of the Pallava days could be seen there, will the Government think of the possibility of recommending that town as a tourist centre and try to get whatever amount they can from the Central Government to construct a tourist home and rest house there?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, Conjeevaram has been included as a tourist centre and I think it is either in Part I or Part II.

SRI M. KALYANASUNDARAM : சேர்வராயன் மலை ஏற்காடு ஏழை மக்களின் உதகமண்டலமாகக் கருதப்படுகிறது. அந்த நகரத்தில் இந்த மாதிரி ஒரு விடுதி கட்ட சர்க்காருக்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஏற்காடு உதகமண்டலமாக வேண்டியதில்லை. அதற்கு நல்ல பெயர் இருக்கிறது. வேறு ஒன்றையும் அதனுடன் இணைக்க வேண்டியதில்லை. அங்கு ஒரு விடுதி கட்டுவது பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

*Poramboke lands in Tirunelveli district*

* 256 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state the extent of poramboke and barren lands in Tirunelveli district, taluk-war?

THE HON. SRI M. A. MANICKAVELU : The particulars required by the Member are not available with the Government. They have been called for from the Collector of Tirunelveli.



26th July 1957]

*Minor Engineering Industries*

* 257. Q.—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have taken any steps to implement the recommendations of the Tripartite Committee constituted in 1954 for Minor Engineering Industries?

THE HON. SRI R. VENKATARAMAN : A note on the steps taken by Government to implement the recommendations of the Tripartite Committee constituted in 1954 for Minor Engineering Industries is placed on the table[a] of the House.

SRI S. PAKKIRISAMI PILLAI : எந்தெந்த சிபார்சுகள் மீது அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டு இருக்கிறார்களோ அந்த சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவரும்படியான ரீதியில் அரசாங்கத்தார் பாக்டரி இன்ஸ்பெக்டர்களையும் லேபர் ஆபீஸர்களையும் அந்தந்த தொழிற்சாலைகளுக்கு அனுப்பி அவர்கள் அதை அமுல் செய்யும்படி ஆர்டர் போடுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் எதைக்குறித்து என்று சொன்னால் தேவலை. ஏனென்றால் மைனர் என்ஜினியரிங் இன்டஸ்ட்ரீஸ் கமிட்டியானது சுமார் 75-க்கு மேல் சிபார்சு செய்திருக்கிறது. சில, தொழில் கல்வி, தொழில் பயிற்சி போன்றவைகள். அதை எல்லாம் சர்க்கார் அமுலில் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறது. சில கூலி சம்பந்தப்பட்டவைகளை அந்த ரெக்கமென்டேஷனையொட்டி அதிகாரிகளை கொண்டு சமரஸம் செய்து தீர்க்க சர்க்கார் கூறிக்கொள்ளமுடியும்.

*Mordhana Dam*

* 258 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state— 9-10 a.m.

(a) whether there is any proposal to construct a dam named Mordhana across the Gowntinya Mahanadhi river in Gudiyatham taluk of North Arcot district;

(b) if so, the details thereof;

(c) when the work will be taken up; and

(d) whether it will be included in the schemes for the Second Five-Year Plan?

THE HON. SRI P. KAKKAN : (a) to (d) A scheme at an estimated cost of Rs. 75 lakhs for the construction of a reservoir across the river Kavundinya at Mordhana in Gudiyatham taluk of North Arcot district has been considered recently. The scheme, when executed, would submerge about 500 acres of dry land, 100 acres of double crop wet land and two villages, while it would irrigate an extent of 6,000 acres of which about 5,400 acres would be new. Further it would cause hardship to the existing ayacut under the Palar system which is already over burdened beyond its capacity. There is also a decision that no new irrigation works and no extension of existing works should be executed in Palar Basin. For the above reasons the scheme has not been found to be feasible for execution and therefore it has been dropped.

[a] Printed as Appendix I on pages 535 infra.

[26th July 1957

SRI V. K. KOTHANDARAMAN : இந்தத் திட்டம் 1938-வது ஆண்டிலேயே, அன்றைக்கு இருந்த பிரிட்டிஷ் சர்க்காரால் கவனம் செலுத்தி, ஆரம்பிக்க முயற்சி செய்யப்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இப்போது அந்த டாம் கட்டுவதன் மூலமாக தாலூகா பூராவுக்குமே தண்ணீர் வசதி ஏற்படும். மழை காலமாக இருந்தாலும் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத தாலூகா என்பது முதல் மந்திரி மட்டுமல்ல, அமைச்சர் பி. கக்கனுக்குக் கூடத் தெரியும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : It should be a supplementary question and not a lecture.

SRI V. K. KOTHANDARAMAN : காரணம் காட்டியாகவேண்டியிருக்கிறது. மீண்டும் உடனடியாக கட்ட ஏற்பாடு செய்யவேண்டும்.

MR. SPEAKER : ஒரு தடவை ஒரு கேள்விதான் போடவேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தக் காரணங்களால் இந்த ஆண்டிலே இல்லையென்றாலும் அடுத்த ஆண்டில் கட்டுவதற்கு முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இந்தத் திட்டத்தை நன்கு பரிசீலனை செய்து பார்த்ததில் பாலாறு பகுதியில் உள்ள ஆயக்கட்டுகள் பாதிக்குமாறு யிருப்பதால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தத் தண்ணீர் பாலாற்றில் விழக்கூடிய தண்ணீர். எட்டு வருஷங்களாக மழை இல்லாத காரணத்தால் நீர் ஊற்று இருந்த இடம். அப்படிப்பட்ட இடத்தில் டாம் கட்டுவதால் பாலாற்றுக்கு எந்தவிதமான கெடுதலும் ஏற்படாது. இந்தத் தண்ணீர் . . .

MR. SPEAKER : மந்திரி அவர்கள்தான் சொன்னாரே, அது முடியாது என்றும் பரிசீலனை செய்து கைவிடப்பட்டது என்றும் நீங்கள் வேறு ஏதாவது கேட்டால் நல்லது.

### *Fair rent*

* 259 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Srimathi T. N. Anandanayaki) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Accommodation Controller has to offer vacant houses for an amount of rent stipulated by the landlord;

(b) whether a Government servant who occupies such a house has got to go to the court to fix the fair rent at his own expenses or whether the Government will meet his court expenses; and

(c) whether there is any proposal to amend the Rent Control Act suitably so as to fix up the fair rent as soon as a house falls vacant?

THE HON. SRI V. RAMIAH : (a) Yes.

(b) If a Government servant occupying an allotted house desires to get fair rent fixed for the house, he should move the appropriate court, through the authorized officer, at his (allottee's) own expense.



26th July 1957]

(c) There is a proposal to amend section 3 (5) of the Madras Buildings (Lease and Rent Control) Act, 1949, so as to empower the authorized officer to determine tentatively the reasonable rents of all buildings which he may take over and allot for Government purposes, where fair rent has not been fixed under the provisions of the Act. The reasonable rent so fixed by the authorized officer shall be subject to such fair rent as may be determined by the court later.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know, Sir, the basis on which the fair rent is fixed?

THE HON. SRI V. RAMIAH : It is fixed by the Court.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that usually the fair rent fixed by the court or any other agency is in conflict with the prevailing rents in the surroundings which are considerably higher when compared to the fair rent that is fixed which is considerably lower with the result that the landlords are put to great hardship?

THE HON. SRI V. RAMIAH : The fair rent is fixed on the basis of capital involved and other considerations.

SRI M. JAGANNATHAN : Sir, is it a fact that new buildings which are coming up are exempted from fixation of fair rent?

THE HON. SRI V. RAMIAH : Yes, Sir.

SRI T. T. DANIEL : Sir, as there is no rent control in Kanyakumari district, will Government consider extending the Act to that district also?

THE HON. SRI V. RAMIAH : Yes, will consider.

### *Forest lands in Kanyakumari district*

* 260 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. Minister for Home be pleased to state—

(a) the extent of private forest lands, reserve forest lands and other forest lands in Kanyakumari district;

(b) tax due to Government for the year 1956–57 from private forest lands;

(c) the amount realized by the Government by sale of timber from the forests in the year 1956–57;

(d) whether the Government have sold this year the right of collecting honey from forest lands; and

(e) the amount obtained by such sale during the year 1956–1957?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There are 3,29,281 acres of private forests, 170 square miles and 252 acres of reserved forests, 22 square miles and 114 acres of other forest lands are proposed for reservation.

[26th July 1957

(b) Details are not available for Shencottah taluk; in other areas it is nil.

(c) The amount realized by the sale of timber is Rs. 3,41,139.

(d) Honey was not sold as a separate item, but it was included as one of the items of minor forest produce which were sold in auction with lease period up to 31st December 1957.

(e) A sum of Rs. 2,901 was obtained for the collection of minor forest produce including honey.

SRI T. T. DANIEL : Sir, may I know whether this data is as per recent survey or as per old survey in that district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I cannot tell the hon. Member exactly when the survey was made.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, may I know whether rattan and bamboo are also included in minor forest produce?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

SRI A. A. RASHEED : Is there any proposal to nationalize the private forests?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal with the Government, Sir.

*House rent allowance to Government employees in Kanyakumari district*

* 261 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the house rent allowance and other allowances are now being given to all the Government employees in the Kanyakumari district;

(b) if not, the reasons therefor; and

(c) the departments in which the house rent allowance is not given yet?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The Government employees in the Kanyakumari district were not in receipt of house rent allowance when they were under the former Travancore-Cochin Government. The Madras Scheme of House Rent Allowance has since been extended to them with effect from 1st November 1956. As regards dearness allowance, they draw the allowance at the rates in force under the former Travancore-Cochin State as long as they continue to hold the same posts after the merger. On promotion to higher posts in the Madras State on or after 1st November 1956, the Madras rates of dearness allowance will apply.

(b) Does not arise.

(c) Nil.



26th July 1957]

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether the Government are aware of the fact that a considerable section of the Government servants in Kanyakumari district have not received these allowances?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, my answer stands.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், ஜில்லா போர்டில் வேலை பார்கிறவர்கள் கவர்ன்மெண்ட் எம்ப்ளாயீஸாக கருதப்படுவார்களா ? அப்படி கருதப்பட்டால், தாலூகா ஹெட்க்வார்டர்ஸில் இருப்பவர்களுக்கு இந்த அலவன்ஸ் கொடுக்கப்படுமா ?

MR. SPEAKER : இந்தக் கேள்வி கன்னியாகுமரி ஜில்லாவைப் பற்றியது.

THE HON. SRI C. SUBRAMANIAM : கன்னியாகுமரி ஜில்லாவில் ஜில்லா போர்டே இல்லை.

SRI M. JAGANNATHAN : Sir, instead of giving dearness allowance on promotion, will the Government consider the desirability of giving dearness allowance even during the period when they are holding the same post?

THE HON. SRI C. SUBRAMANIAM : Dearness allowance is being paid on the scale prevalent in the former Travancore-Cochin Government. The question of integrating the services is under consideration and as soon as that integration takes place, whatever is applicable to the Madras Government servants would be paid to them also.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, in regard to the dearness allowance an increase was given to the Madras State servants in the last financial year, and an increase in the dearness allowance was given to Kerala Government servants in the last year. May I know whether the Government are aware of the fact that Non-Gazetted Officers in Kanyakumari district were not treated either as Madras Government servants or as Kerala Government servants? If so, will the Government order that the increase in dearness allowance should be given to the Non-Gazetted Officers of the Kanyakumari district also?

THE HON. SRI C. SUBRAMANIAM : What we have now got to see is, taking into account the cadre to which they belong, whether they receive higher emoluments when compared with the Madras cadre or they receive anything lower on the whole, taking into consideration their pay and dearness allowance. After such a comparison was made, we found that the Non-Gazetted Officers in Kanyakumari district were receiving higher emoluments than that which the officers of the rest of the Madras State were receiving. That is why till the integration it was found necessary not to give any increment in the dearness allowance to the Non-Gazetted Officers of Kanyakumari district, because they are receiving even now more than what their corresponding officers in Madras State are receiving.

[26th July 1957

SRI M. KALYANASUNDARAM : கன்யாகுமாரி ஜில்லாவில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு மற்ற பகுதியில் இருக்கக் கூடிய அதிகாரிகளைவிட அதிகமாக சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று கனம் மந்திரி கூறினார். அவர்கள் செய்யும் வேலையைப்பற்றியா அல்லது அவர்களுடைய கடமையைப்பற்றியா அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Taking the same cadre here and the same cadre there. So the responsibilities and duties will almost be the same.

*Cheris affected by the flow of water in the Lower Bhavani Community Project area.*

* 262 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to State—

(*a*) the amount allotted by the Government in 1956–57 for the construction of houses for Harijans in cheris affected by the flow of water in the Lower Bhavani Community Project area; and

(*b*) the amount spent and the number of houses built out of the allotment?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Particulars have been called for from the Collector of Coimbatore.

SRI P. G. MANICKAM : கட்டப்பட்ட வீடுகள்கூட அநேகம் விழுந்து விட்டன என்று சென்ற அசெம்ப்ளி கூட்டத்தில் சொன்னபோது கம்யூனிட்டி ப்ராஜெக்ட் திட்டம் முடிந்த பிறகு அதைப்பற்றி கவனிக்கப்படும் என்று கனம் மந்திரி தெரிவித்தார். வீடுகள் கட்டும் திட்டத்தில் இது வரைக்கும் எதாகிலும் கவனம் செலுத்தப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கும்போது சில தகவல்களையும், புள்ளி விவரங்களையும் அவர் கேட்டார். அவைகள்தான் இன்னும் வரவில்லை என்று பதில் சொன்னேன். இப்பொழுது வேறு தனியாக புது கேள்வி கேட்கிறார். இதைப்பற்றி தனியாகக் கேட்டால் அதற்கு பதில் சொல்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : I rise on a point of information, Sir. When particulars have not been received either from the Collectors or from the respective departments, there is no point in placing the question before the House.

MR. SPEAKER : I waited sufficiently long and then put it on the order paper. It is open to the Government to say that they have no information.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Then are we to understand, Sir, that members will have to renew their questions or that the particulars, when received, will be placed on the table of the House.

MR. SPEAKER : The hon. Member will have to [a] renew his question.

[a] Vide further remarks of Speaker no page 467 infra.



26th July 1957]

SRI K. R. NALLASIVAM : இது சம்பந்தமாக 24-ம் தேதியன்று நான் ஒரு ஒத்திவைப்பு பிரேரணைக் கொடுத்தேன். கட்டப்பட்ட வீடுகள் பல விழுந்துவிட்டன. அதனால் இது சம்பந்தமாக விவாதிக்க கனம் சபாநாயகர் அரைமணி நேரம் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

MR. SPEAKER : பட்ஜெட் விவாத நேரத்தில் எப்படி கொடுக்க முடியும் ? அப்ரோப்ரியேஷன் பில் விவாதம் வரப்போகிறது. அப்பொழுது இதைப்பற்றி பேசலாம்.

SRI M. KALYANASUNDARAM : பட்ஜெட் கூட்டம் இன்று முடிவாகி நாளையும் சபை கூடப்போவதாகத் தெரியவருகிறது. அதனால் நாளைக்காவது இது சம்பந்தமாக விவாதிக்க அரை மணி நேரம் கொடுக்க முடியுமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : அப்ரோப்ரியேஷன் பில் சம்பந்தமாக பேசும போது இதைப்பற்றி பேசலாம். கனம் நல்லசிவம் அவர்களும் அந்த சமயத் தில் இதைப்பற்றி பேசலாம். அப்பொழுது கனம் மந்திரி அவர்கள் அதற்கு பதில் அளிப்பார்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தக் கேள்வி சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னதாக கொடுத்திருக்கப்படவேண்டும். 410-வது கேள்விக்கு முன்னதாகவே இது கேட்டிருக்கவேண்டும். இதற்கு பதில் சொல் வதற்கு இவ்வளவு காலதாமதம் ஆனதற்குக் காரணம் என்ன என்பதை கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லவேண்டும். அப்படி பதில் சொல் வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சில புள்ளி விவரங்கள் கேட் கப்பட்டிருக்கிறது. எவ்வளவு பணம் செலவாகி இருக்கிறது, எந்த வகையில் செலவாகி இருக்கிறது என்ற புள்ளி விவரங்கள் கேட்கப்பட்டிருப்பதால் அவைகளைச் சேகரிக்க வேண்டியதாக இருந்தது. அவைகளை சரியானபடி சேகரிக்கவேண்டும். ஹேஷ்யமாக சொல்லக்கூடாது. அவைகளைப்பற்றி சேகரிப்பதற்கு தாசில்தாருக்கும் சம்பந்தப்பட்ட ரிவினியூ இன்ஸ்பெக்டர்களுக் கும் தகவல் கொடுத்து அவர்களிடமிருந்து தகவல் வரவேண்டியதாக இருந்தது. அதனால்தான் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் நல்லசிவம் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்பு பிரேரணை இன்று கேள்வி நேரம் முடிந்தபிறகு எடுத்துக் கொள்ளப்படும். அதற்கு கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம். இல்லாவிட்டால் அதன்பிறகு தீர்ப்பு கூறு கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : புள்ளி விவரங்களைக் கேட்டு கேள்விகள் கேட்டால் அதற்கு பதில் சொல்வதற்கு இரண்டு மாதங்கள் வேண்டுமா அல்லது இரண்டு வருஷங்கள் வேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : I disallow this question.

SRI M. JAGANNATHAN : When did the Minister actually call for the particulars from the Collector concerned and how long does he propose to tolerate this kind of red-tapism.

MR. SPEAKER : I do not want the Hon. Minister to reply. I disallow the question.

[26th July 1957

*Cheris affected by the flow of water in the Lower Bhavani Community Project area.*

* 263 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of cheris affected by the flow of the Mettur Right Bank Canal water in the lower level areas of Bhavani taluk, Coimbatore district, with the number of houses in each; and

(*b*) the relief measures adopted during the three years?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Particulars have been called for from the Collector of Coimbatore.

SRI G. G. GURUMURTHY : ஹரிஜனங்கள் அல்லாத மற்ற ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்திற்கு ஏதாவது தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அதைப்பற்றி ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா ?

MR. SPEAKER : இந்தக் கேள்வி மேட்டூர் தேக்கத்தைப்பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினருடைய கேள்விக்கு பதில் சொல்வதற்கு இல்லை.

SRI P. G. MANICKAM : வேண்டிய புள்ளி விவரங்கள் கவர்ன்மெண்டுக்கு கிடைக்கவில்லை என்று கனம் மந்திரி அவர்கள் கூறினார். அப்படி புள்ளி விவரங்கள் கிடைத்தவுடன் அவைகளைப்பற்றி கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவிப்பார்களா ? நான் அந்தத் தொகுதியிலிருந்து வந்திருப்பதால் அந்த புள்ளி விவரங்களைப்பற்றி எங்களுக்கு அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி அறிவிக்கப்படும். ஆனால் கனம் அங்கத்தினர் புதியதாக அதற்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

MR. SPEAKER : In this connexion I have to state that in other countries and in other States, answers to questions are available within a period shorter than one month. Whether that is possible here or what is the cause of the delay, is a matter for the Government to consider and rectify. I am not making any charge, but I am putting a wholesome principle which the Government may consider.

*Teak trees in Kanyakumari district*

* 264 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the extent of forest land in Kanyakumari district wherein Government have planted teak;

(*b*) the approximate cost of planting teak per acre;

(*c*) how many seedlings are planted on an average in one acre; and

(*d*) the approximate value of teak trees grown in one acre of land after forty years?



26th July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The extent of teak plantation in Kanyakumari forest is 720 acres.

(*b*) The approximate rate is Rs. 3 per acre. It represents the cost of planting materials supplied to the taungyadars or contractors. The cost of raising Teak plantation if hired labour is employed would be about Rs. 70 per acre.

(*c*) About 1,210 seedlings are planted in one acre.

(*d*) The total financial return from one acre of teak plantation with a rotation of 40 years would be about Rs. 17,520 as reported by the Chief Conservator of Forests.

SRI T. T. DANIEL : May I know, Sir, the extent of forest land where the teak trees have been planted, which are now ripe for cutting?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the ages of the plantations vary from three years to 36 years and their annual areas vary widely from five to ninety-six acres. There has not been proper attention paid to the thinning aspect of the teak plantations in the past and now the Chief Conservator of Forests proposes to take annually 200 acres and also take up the thinning programme.

SRI A. VEDARATHNAM PILLAI : கேரளம் பிரிந்துபோனதால் நமக்கு மரங்களின் தேவை அதிகமாக இருக்கிறது. அதன் காரணத்தால்—இங்கே ஏராளமான தேக்கு பயிரிடுவதற்கு வசதிகள் இருக்கின்றன—அவற்றை அதாவது தேக்கு பயிரிடுவதை விருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எங்கெங்கே தேக்கு உற்பத்தி செய்வதற்கு முடியுமோ அங்கேயெல்லாம் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. முக்கியமாக தஞ்சை ஜில்லா காவேரி ஆற்றின் கரையில் அதிகமாக வளரும் என்று அரசாங்கத்திற்குக் தெரியவருகிறது. ஆகையினால் அந்த திட்டம் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

SRI T. T. DANIEL : Will the Government be pleased to extend financial help to private estate owners to grow teak trees in their areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I want notice Sir.

*Pine trees in Kodaikanal hills*

* 265 *Q.*—SRI K. RAMACHANDRAN AND SRI K. VASUDEVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any pine trees belonging to the Government in Kodaikanal hills were sold recently;

(*b*) if so, to whom;

(*c*) the number of trees that were sold; and the method by which they were sold; and

(*d*) the average estimated price of a tree?

[26th July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The pine trees in Gundar Valley between Kodaikanal and Berijam in the Kodaikanal area except in certain bungalow compounds such as *Green hut and Boombarai* were sold to Messrs. T.I. Cycles of India, Limited, Madras.

(c) The entire plantation of about 375 acres has been divided
9-30 a.m. into five compartments. The trees in compartments I and II only have been enumerated and their number is as follows :—

| | |
|---|---|
| Compartment I ... ... ... ... ... | 3,444 |
| Compartment II ... ... ... ... ... | 6,341 |
| Total ... | 9,785 |

The sale was effected by a negotiated offer with the T.I. Cycles of India, Limited.

(d) Rs. 3 per tree.

SRI K. RAMACHANDRAN : "நெகோஷியேஷன்" மூலமாகவே இந்த விற்பனையை முடித்ததாக மந்திரி அவர்கள் பதில் சொன்னார்கள். அப்படியில்லாமல், ஏலம் மூலமாக விட்டிருந்தால் அதிகமாகத் தொகை கிடைத்திருக்கும் அல்லவா ? "லாட்", "லாட்" ஆகப் போடாமல், ஒரு மரம், இரண்டு மரம், மூன்று மரம் என்று பிரித்து, அந்தப் பக்கத்தில் உள்ளவர்களுக்கே ஏலம் விட்டிருந்தால், அதிகமாகப் பணம் கிடைத்திருக்கும் என்பதை மந்திரி அவர்கள் அறிவார்களா ? அப்படிச் செய்யாமல் "நெகோஷியேஷன்" மூலமாக விற்பனை செய்ததால் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதனால் சர்க்காருக்கு நஷ்டம் இல்லை. லாபம்தான். சாதாரணமாக, பைன் மரங்களை விற்பதென்றால், அந்த மரங்களை விறகுக்காகத்தான் வாங்குகிறார்கள். இதற்கு முன்பு பல ஆண்டுகளாக சேர்த்து ஏலம் விட்டபோது சராசரி எவ்வளவு கிடைத்தது என்பதைப்பார்த்து, அதற்குமேலே கிடைக்கவேண்டும் என்றுதான் இவ்வாறு விற்கப்பட்டது. ஏலத்திற்கு விட்டால், சாதாரணமாக விறகுக்காகத்தான் வாங்குவார்களாகையால் இப்பொழுது கிடைத்த விலைகூட கிடைக்காது என்று சர்க்காருக்கு உறுதியாகத் தெரிந்ததன் பேரில்தான் இந்த முறை கையாளப்பட்டது.

SRI K. VINAYAKAM : What were the reasons that goaded this Government to sell away these pine trees? Did the pine trees pine away due to old age?

MR. SPEAKER : "Goaded" is not a desirable word. I rule it out of order, though it is not unparliamentary.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Even the pine trees are aged and they pine away. The trees were planted between the years 1906 and 1915. It was found that they were ripe and silviculturally mature. It was estimated that about 37 per cent of these trees were dead and that those dead trees had only fuel value. Therefore, it was thought that when the other trees were about to die, they could be sold as pine trees so that they could be used for manufacturing packages in factories.



26th July 1957]

SRI K. RAMACHANDRAN : பக்கத்துக் கிராமங்களிலிருந்து பல பேர்கள் இந்த மரங்கள் ஏலத்தில் விடப்படவேண்டுமென்று சர்க்காருக்கு மனுச்செய்திருக்கிறார்களே, அந்த மனுக்கள் என்ன ஆயின ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் இல்லை. கேட்கின்றவர்கள் விறகுக்குத்தான் கேட்கின்றார்கள்.

SRI K. VASUDEVAN : இந்த ஏலம் விடும்போது ஏதாவது இதிலே "கண்டிஷன்" உண்டா ? இவ்வளவு நாட்களுக்குள்ளே இந்தக் "கூப்" "க்ளியர்" பண்ணவேண்டும் என்ற "கண்டிஷன்" உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி நிபந்தனையோடுதான் இது விற்கப்பட்டது.

SRI M. JAGANNATHAN : Sir, even though the Government have fixed the price of pine trees at Rs. 3 each and that the purchaser of these trees is selling them in the open market at the rate of Rs. 50 and above per tree?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The information that is with the Government is that the purchaser got this wood at Rs. 3 only for his own requirements—for the requirements of his factory. Government have no information that these are sold at a higher price outside.

### *Encroachments in tank-bed areas*

* 266 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number and the extent of encroachments in tank-bed areas in Tirunelveli, Ramanathapuram and Madurai districts respectively; and

(b) the number of persons evicted during 1957 for such encroachments and the number under orders of eviction in these districts respectively?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) The particulars required by the Member in respect of Madurai are not available with the Government. They have been called for from the Collector. As regards Tirunelveli district, the number and extent of encroachments in tank-bed areas are 899 and 877 acres respectively. The number of persons evicted during 1957 is 7 and the number ordered to be evicted is 194.

With regard to Ramanathapuram, the number of encroachments in tank-bed areas is 4,872 and the extent of encroachments is 6,692 acres. The number of persons evicted during 1957 is 146 and the number ordered to be evicted is 6.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த ஆட்களையெல்லாம் வெளியேற்றவேண்டும் என்று சர்க்கார் நினைக்கிறதா ? அல்லது தண்ணீர் எந்தக்காலத்திலும் கட்டாத இடம் என்று கருதுவதால் அவர்கள் மேலும் தொடர்ந்து விவசாயம் செய்ய அனுமதிக்கப்படுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : "டாங்க் பெட்" டிலே விவசாயம் செய்ய அனுமதிப்பது அந்த ஆயக்கட்டுக்கு ரொம்ப பாதகம் ஏற்படும். நான்கு, ஐந்து வருஷங்கள் அந்தப் பிராந்தியத்திலே மழை

இல்லை என்றால் அங்கே தண்ணீர் இருக்காது. அந்த சமயத்தில் விவசாயிகள் அங்கே ஏன் பயிர் பண்ணக்கூடாது என்று நினைக்கலாம். மழை பெய்தால் தண்ணீர் நிறைய வரும்.

SRI K. RAMACHANDRAN : இராமனாதபுரம் ஜில்லாவிலே 4,872 கேஸ்கள் இம்மாதிரி இருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். இப்படி அதிகமாக இருப்பதிலிருந்து இது வெகு காலமாக இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. நூற்றுக்கணக்கான வருஷங்களாக விவசாயிகள் "டாங்க் பெட்" நிலங்களை உழுதுகொண்டிருக்கிறார்கள். இத்தனை வருஷமாக இல்லாத ஆபத்து இப்பொழுது என்ன வந்துவிட்டது என்பதை "என்ஜினீரிங் ஸ்கில்" உள்ளவர்கள் மூலமாக நன்றாக ஆராய்ந்து, இந்தக் காரியத்தில் நடவடிக்கை எடுக்கிறார்களா ? அல்லது "ஆர்பிட்ரரி" ஆக இந்தக் காரியத்தைச் செய்வதாக சர்க்கார் கொள்கை இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு நான் சொல்கிற காரணம் வேறு. இராமனாதபுரம் ஜில்லாவிலே ஜமீன் பிராந்தியம் அதிகம். அங்கே தக்க மேற்பார்வை "இல்லாததால் "டாங்க் பெட்"டிலே கூட ஜமீன் பிராந்தியங்களில் இஷ்டப்படி யாகவே பயிர் செய்துகொண்டிருந்தார்கள்.

SRI R. SRINIVASA IYER : பொதுவாக, குளம் புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்தால், சாகுபடி செய்கிறவர்கள் குளம் நிரம்பினவுடன் அதில் தண்ணீர் நிரம்பவிடாமல் கரையை வெட்டிவிடுவதால் ஆயக்கட்டுக்குச் சேதம் விளைவிக்கப்படுவதால் குளத்தின் எப்.டி.எல்.ஐ சரியானபடி fix செய்து, அதற்குள் யாரும் சாகுபடி செய்யக்கூடாது என்று சர்க்கார் திட்டம் வகுக்க முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : திட்டம் வகுக்க முன்வர வேண்டியதில்லை. திட்டம் ஏற்கெனவே இருக்கிறது. கனம் அங்கத்தினர் சொன்னதை மற்ற அங்கத்தினர் அந்த வகையிலே அவர்கள் புரிந்து கொள்ளாமல் "அவர்கள் அங்கேயும் சாகுபடி செய்யவேண்டும்" என்று சொல்கிறார்கள்.

SRI M. P. SUBRAMANIAM : இராமனாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 6,692 ஏக்கரிலே இம்மாதிரி தவறான முறையில் விவசாயம் செய்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதில் விளையக்கூடிய உணவு தான்யங்களின் வருமானம் அந்தக் கண்மாய்களினால் பயன்பெறக்கூடிய வருமானத்தை விட அதிகம் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியானால், உணவு உற்பத்தியை முன்னிட்டாவது, அவர்கள் மேலும் தொடர்ந்து அங்கேயே விவசாயம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை அனுமதித்தால் ஏற்கெனவே இருக்கின்ற ஆயக்கட்டுகளுக்குக் கட்டாயம் பாதகம் ஏற்படும். ஆகையால், அந்தப் பிராந்தியத்தில் உணவு உற்பத்தி குறையும். இதிலே அதிகம் குறையுமா, அதிலே அதிகம் குறையுமா என்று சொல்வதற்கில்லை. நாளடைவிலே ஆயக்கட்டிலே உணவு உற்பத்தி வெகுவாகக் குறையத்தான் செய்யும். ஆகையால், இதைத் தடுப்பது அவசியம்.

SRI K. RAMACHANDRAN : ஜமீந்தார்கள் காலத்தில் குடிகள் அவரவர் இஷ்டம்போல் இந்த நிலங்களில் உழுது பயிரிட்டு வந்திருப்பார்கள் என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். நூற்றுக்கணக்கான வருஷங்களாக பட்டா பெற்று இந்த நிலங்களை அந்த ரயத்துக்கள் அனுபவித்து வந்தும், ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் மூலம், ஜமீன் நிலங்களை எடுத்த நேரத்தில், மற்றவர்களுடைய பட்டாக்களை ஒப்புக்கொண்ட அரசாங்கம் இவர்களுடைய பட்டாக்களை நிராகரித்தது அவ்வளவு சரி என்று தோன்றுகிறதா ? உணவு உற்பத்தியை உத்தேசித்தாவது, ஜனங்களுடைய நன்மையை உத்தேசித்தாவது தற்காலிகமாக இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்து, ஒரு கமிட்டி மூலமாகவாவது இதைப் பரிசீலனை செய்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா ?



THE HON. SRI M. A. MANICKAVELU : ஜமீந்தார் காலத்திலே பட்டா எப்படி எப்படியோ கொடுத்திருக்கலாம். ஆனால், எஸ்டேட் அபாலிஷன் சட்டத்தின் விதிகளின்படி யாருக்குப் பட்டா கொடுக்கவேண்டுமோ அவருக்கு கொடுத்து, யாருக்குக் கொடுக்கக் கூடாதோ அவர்களுடைய பட்டாவை ரத்து செய்து, அதற்கான காரியங்களை சிப்பந்திகள் செய்துவருகிறார்கள்.

SRI K. SATTANATA KARAYALAR : கீழ் நிலத்திலே—குளத்திலே சாகுபடி செய்வதற்கும் கரைக்கப்பால் உள்ள—நிலத்திலே சாகுபடி செய்வதற்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? தண்ணீர் உயர உயர கதிரும் உயர்ந்துகொண்டே வரும். அதிலே தோணியிட்டு அறுப்பார்கள் சில இடங்களிலே. அப்படி உள்ள இடங்களிலாவது அனுமதிக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்கே அப்படி இருக்கிறதாகத் தெரியவில்லை.

MR. SPEAKER : ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஒரு கனம் 9-40
அங்கத்தினரின் கேள்விக்கு பதிலளிக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள், a.m.
பதில் சேகரிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அந்தக் கேள்வியை மறுபடியும் புதிதாகப் போடவேண்டுமா என்று அந்த கனம் அங்கத்தினர் அப்போது கேட்டார். அப்போது, புதிதாகக் கேள்வி போடவேண்டும் என்று நான் சொன்னேன். நான் அப்படிச் சொன்னது தவறு, புதிதாகச் கேள்வி போடவேண்டாம். ஏனென்றால், In the summary of recommendations accepted by the Assurances Committee, there is a standard list of forms constituting assurances as approved by the committee. Item 20 reads "Efforts are being made to collect the necessary data." அந்த "டேடா" வந்த பிறகு, அந்தக் கேள்வியைப் புதுப்பிக்காமல்[a] இருந்தாலும் பதில் சபை முன்பு வைக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*Protected water-supply to Rasipuram.*

* 267 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any scheme before the Government to provide protected water-supply to Rasipuram Municipality from Cauvori river at Mohanur in Salem district ; and

(*b*) if so, the present stage of the scheme ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Government have sanctioned the investigation of a water-supply scheme for the Rasipuram Municipality, with Cauveri river as the source.

(*b*) The Investigation report is awaited from tbe Chief Engineer, P.W.D. (General).

SRI M. P. SUBRAMAIAM : சேலம் மாவட்டத்திலுள்ள ராசிபுரத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் தண்ணீர் பஞ்சம் வருகிறது என்பது அரசாங்கத்தாருக்குத் தெரியுமா ? அங்கே 70—90—100 அடி ஆழமுள்ள கிணறுகள்தான் இருக்கின்றன. அங்கே தண்ணீரில்லாத சித்திரை, வைகாசி மாதங்களில் தண்ணீர் குடம் ஒன்று ஒன்றரை அணா, இரண்டு அணா வீதம் விற்கப்படுகிறது. ஆகவே அங்கே தண்ணீர் வசதிக்கான திட்டத்திற்கு முதலிடம் (பர்ஸ்ட் ப்ரையாரிடி) கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ராசிபுரத்தில் குடிதண்ணீர் வசதி அவசியம் செய்துகொடுக்கப்படவேண்டும் என்ற காரணத்தினால்தான் அங்கே "இன்வெஸ்டிகேஷன்" செய்வதற்கு உத்தரவு போடப்பட்டது.

a Vide Speaker's remarks on page 460 supra.

ஆனால் நகரக் குடிதண்ணீர் வசதிக்கான பணத்தை ரூ. 170 லட்சம் திட்டக் கமிஷன் குறைத்திருக்கிறது. நமக்கு 865 லட்சம் ரூபாய் தேவை. ஆகையால், இந்த 865 லட்சம் ரூபாயையும் கொடுக்கவேண்டுமென்று திட்டக் கமிஷனுக்கு எழுதியிருக்கிறோம். அந்தப் பணம் நமக்குக் கிடைத்தால் இந்தக் காரியங்களையெல்லாம் நாம் சுலபமாகச் செய்யலாம். இல்லாவிட்டால் " ப்ரையாரிட்டி "-ப் பிரகாரம் எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

### *Ex-tappers*

***268 *Q*.—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—**

**(*a*) the number of tappers who were in the State, districtwar before the introduction of Prohibition throughout the State ; and**

**(*b*) the steps taken for the rehabilitation of the ex-tappers in Tirunelveli district ?**

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) and (*b*) The answer is placed on the table[a] of the House.

Sri M. S. SELVARAJAN : மதுவிலக்கு இலாகாவின் பொறுப்பில் இருந்த முந்தைய அமைச்சர் அவர்கள் அப்போது, திருநெல்வேலி ஜில்லாவில் சில இடங்களில், குறிப்பாக நாங்குனேறி, திருச்செந்தூர் தாலுகாக்களில், " எக்ஸ் டாப்பர்ஸ் "-க்காக தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்—குறிப்பாக திருச்செந்தூர் தாலுகாவில் ஒரு இடத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்—என்று ஒரு தகவல் கொடுத்தார்கள். ஆனால் அப்படி ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த யோசனை என்னவாயிற்று ? அதை கனம் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைப்பதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டது. பிறகு அதை நிறைவேற்றுவதற்கில்லை என்று அறிந்து அது கைவிடப்பட்டது.

Sri S. B. ADITYAN : அச்சிட்டு மேஜை மீது வைக்கப்பட்டுள்ள பதிலில், திருநெல்வேலி ஜில்லாவில் 398 பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பதனீர் அல்லது நீரா இறக்குகிறவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்வது தவிர வேறு உருப்படியான வேலை எதையும் இச்சங்கங்கள் செய்யவில்லை. ஆகையால், பனைவெல்ல உற்பத்தி ஸொஸைடிகளை அரசாங்கம் ரத்து செய்யுமா ? அல்லது, இந்த ஸொஸைடிகளில் மெம்பர்களாக இருந்தால்தான் லைசென்ஸ் உண்டு என்ற நிர்ப்பந்தம் இல்லாமல் எல்லோருக்கும் பதனீர் அல்லது நீரா இறக்குவதற்கு அரசாங்கம் லைசென்ஸ் கொடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நீரா இறக்குவது என்று வெல்லம் உற்பத்தி செய்வது வேறு விஷயம். வெல்லம் உற்பத்தி செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் வேலைகள் பற்றி கூடியவரையில் கவனிக்கப்பட்டு வருகிறது.

Sri P. G. MANICKAM : திருநெல்வேலி ஜில்லாவில் பனை ஓலையிலிருந்து பல பொருள்களைத் தயாரிக்கும் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கும் நிலையத்திலிருந்து 500 குடும்பங்களுக்கு அந்தத் தொழிலைச் செய்வதற்கான கருவிகள் இலவசமாக அளிக்கப்படும் என்று பதிலிலிருந்து தெரிகிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் மாஜி மரமேறிகள் அதிகமாக இருப்பதால், அந்த ஜில்லாவில் அவர்களுக்கு இந்தத் தொழிலில் பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கத்தார் நடவடிக்கை எடுப்பார்களா ?

---

[a] Printed as Appendix II on pages 536–537 intra.





The Hon. Sri M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூர் ஜில்லாவிலும் இவர்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. எங்கெங்கே இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு வசதி இருக்கிறதோ அந்த இடங்களில் பயிற்சியளிப்பதும் கவனிக்கப்பட்டுவருகிறது.

Sri M. S. SELVARAJAN : பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கும் சங்கங்கள் எல்லா "எக்ஸ் டாப்பர்ஸ் "-க்கும் பொருந்துமா ? அதாவது, எல்லா மாஜி மரமேறிகளுக்கும் அரசாங்கம் அதே உதவியை அளிக்க முடியுமா ? இப்போதுள்ள மாஜி மரமேறிகளின் கூட்டுறவுச் சங்கங்களில் கருப்பட்டி உற்பத்தி சரியான முறையில் நடைபெறுவதில்லை. காரணம், அவைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ஒழுங்காக ஒதுக்கப்படுவதில்லை. இப்போது, கருப்பட்டியிலிருந்தும் கரும்புச் சாற்றிலிருந்தும் குடிசைத் தொழில் முறையில் அஸ்கா சர்க்கரையைப் போன்ற சர்க்கரையைத் தயாரிக்கும் முறை புதிதாக சில கூட்டுறவுச் சங்கங்களில் புகுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய சிறிய இயந்திரங்கள் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அஸ்கா சர்க்கரையைப்போன்ற சர்க்கரையை உற்பத்தி செய்வதற்கான அந்தச் சிறிய இயந்திரங்களை பிற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொடுப்பதற்கு கனம் மந்திரி அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஈரோடு தாலூகாவில் பல கருப்பட்டி உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் நன்றாகவே வேலை செய்துவருவதை நான் பார்த்திருக்கிறேன். மேலும் சர்க்கரையை உற்பத்தி செய்வதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri R. KRISHNASAMY NAIDU : அகில இந்திய காதி கிராமக் கைத்தொழில் திட்டங்களின் கீழ், தீப்பெட்டிக் குடிசைத் தொழில் செய்யும் இடங்களில் ஒரு குரோஸ் தயாரித்தால் எட்டு அணா வீதம் ரிபேட் கொடுக்கப்படுகிறது. கருப்பட்டி உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கங்களில் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் 25 குரோஸ் வீதம் உற்பத்தி செய்ய இந்தத் தொழிலைப் புகுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அகில இந்திய கிராமக் கைத்தொழில் போர்டாரின் உதவியைப் பரிபூரணமாகப் பெற்று, இந்தத் தொழில் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri A. GOVINDASAMY : நகரங்களில் பதனீர் விற்கும் தாய்மார்களை போலீஸார் பிடித்துக்கொண்டுபோய், அவர்களுக்கு அபராதம் போடும்படி செய்கிறார்கள். ஆகவே அவர்கள் பதனீர் விற்பதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பதனீரைப் பதனீராக விற்றால் போலீஸார் தலையிட மாட்டார்கள்.

Sri M. C. MUTHUKUMARASWAMY : மதுவிலக்கு அமலுக்குவந்த பிறகு எத்தனை மரமேறிகள் அந்தத் தொழிலிலிருந்து விலகியுள்ளார்கள், எத்தனை பேர்கள் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஸொஸைடிகளால் பயனடைந்திருக்கிறார்கள் என்பதையும் எத்தனை பேர்கள் உத்தியோகம் பெற்றுப் பயனடைந்தார்கள் என்பதையும் மீதம் உள்ளவர்கள் எத்தனை பேர்கள் என்பதையும் அவர்களுக்கு சர்க்கார் என்ன திட்டம் வகுத்திருக்கிறது என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மதுவிலக்குச் சட்டம் வந்ததும், 178,106 பேர்கள் வேலையை இழந்தார்கள். அவர்களில் 133,904 பேர்கள் வெல்லம் உற்பத்தி செய்யும் கூட்டுறவுச்சங்கங்களில் சேர்ந்தார்கள். மேலும், லாண்ட் காலனைஸேஷன் ஸொஸைடி, மில்க்சப்ளை ஸொஸைட்டி, லேபர் காண்ட்ராக்ட் ஸொஸைடி, காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஸொஸைட்டி முதலிய ஸொஸைடிகளில் மொத்தம் 42,552 பேர்கள் வேலை பெற்றார்கள்.

[26th July 1957

Sri M. JAGANNATHAN : I find in the answer placed on the table of the House that the Government have sanctioned a demonstration centre for palmyra fibre extraction in Tiruchendur. In South Arcot district there are also 6,532 ex-tappers. Most of them are unemployed for want of alternative avenues of employment. Will the Government, therefore, consider the desirability of opening a demonstration centre for palmyra fibre extraction in South Arcot district for the benefit of ex-tappers living there?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no such proposal so far as South Arcot district is concerned. But co-operative societies are being formed to enable these ex-tappers to make jaggery and have a living in that way.

Sri A. VEDARATHNAM PILLAI : பதனீரிலிருந்து சாக்லட், பெப்பர்மிண்ட் முதலிய பொருள்கள் செய்யும் குடிசைத் தொழில்களை நடத்த அரசாங்கத்தார் முன்வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை இன்னும் கொஞ்சம் விஸ்தரித்து, எல்லா இடங்களிலும் இந்தக் குடிசைத் தொழில்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சில சென்டர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டு, அங்கே ஆதரவையும் உதவியையும் அளித்து இந்தத் தொழில்களை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

Sri M. JAGANNATHAN : On a point of order, Sir. The Hon. Minister has not answered my question. I asked about the opening of a demonstration centre for palmyra fibre extraction. The Hon. Minister spoke about the opening of co-operative societies.

Mr. SPEAKER : I have already told hon. Members that Ministers may answer or may not answer a question. Hon. Members cannot raise a point of order on that score. However, I shall allow this time a question to be put; but if any hon. Member raises any such point of order in future, I will not allow it. According to the statute, Ministers may answer a question or may not answer a question. They may withhold answer to a question and they need not tell the reason for that.

Sri M. JAGANNATHAN : While it is true that the Hon. Minister need not answer my question, it is my duty to explain things if the Hon. Minister has misunderstood my question.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The hon. Member says that I have not answered his question. But, it is not a matter for a point of order. I may, however, submit that I did answer his question. When he referred to the fibre-making business, I said that there is no such proposal. Perhaps I said it in Tamil and the hon. Member could not understand what I said. (Laughter.)

9-50 a.m. Sri T. M. NALLASWAMI : மாஜி மது இறக்கும் தொழிலாளர்களுக்கு குளித்தலை தாலுக்காவில் நிலம் கொடுக்கப்பட்டது. இன்னும் அந்த நிலம் அவர்களுக்கு நிரந்தரமாகக் கொடுக்கப்படவில்லை என்ற புகார் வந்துகொண்டிருக்கிறது. ஆகையால் கனம் அமைச்சர் அவர்கள் உடனே அந்த நிலங்களை அவர்களுக்கு நிரந்தரமாகக் கொடுக்க உத்திரவு போடுவார்களா ? மேலும் கோயம்புத்தூர் ஜில்லா பகுதியில் உள்ளவர்களுக்கு



26th July 1957]

தென்னைமரத்திலிருந்து பதனீர் இறக்க உத்திரவு கொடுத்திருப்பதாகவும், திருச்சி ஜில்லாவில் தென்னை மரத்திலிருந்து பதனீர் இறக்க அனுமதிக்கப் படவில்லை என்ற புகாரும் இருக்கிறது. இந்தப் புகார்களுக்கு இடம் இல்லா மல் உத்திரவு போடுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வப்போது புகார்கள் வரும்போது உடனே அதைக் கவனித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுதான் வருகிறது. கனம் அங்கத்தினருடைய பிற்பகுதி கேள்வி தனிக்கேள்வியாகப் போட்டால் பதில் அளிக்கமுடியும்.

Sri K. RAMACHANDRAN: அச்சிட்டு சர்க்கார் கொடுத்திருக்கிற பதிலில் ராமநாதபுரம் ஜில்லாவில் 25,073 எக்ஸ் டாபர்ஸ் இருக்கிறார்கள் எனச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிராந்தியத்தில் பனை ஓலையைக்கொண்டு அழகான வேலைப்பாடு அமைந்த கூடைகள் முடைதல், பான்சி பாக்ஸ் செய்தல் முதலியவற்றில் திறமையுடைய தொழிலாளர்கள் இருப்பதால் அந்தப் பகுதியிலே வெகுவாக இந்தத் தொழிலை ஏற்படுத்த அரசாங்கம் முனையுமா என்று கேட்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ராமநாதபுரம் ஜில்லாவில் என்ன என்ன செய்யப் படுகின்றன என்பதற்குத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

Sri A. GOVINDASAMY : கடலூர் பகுதியில் " பாம்கர் " சொஸைடிகள் மத்திய சர்க்காரால் நடத்தப்பட்டு வந்தது. அதை மூடிவிட்டார்கள். அவற்றை ராஜ்ய சர்க்கார் ஏற்று நடத்த முன்வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்விக்கு தனி நோட்டீஸ் வேண்டும்.

Sri A. VEDARATHNAM PILLAI : பனை மட்டையில் இருந்து பிரஷ்கள் செய்யப்படுகின்றன. அதை நம் ராஜ்யத்தில் அபிவிருத்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : திருநெல்வேலி ஜில்லாவில் அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

*Harijan Hostel at Jayankondan*

* 269 Q.—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether any complaint was made to the Collector of Tiruchirappalli and to the Director of Harijan Welfare, Madras, by the inmates of the Harijan Hostel at Jayankondan in June 1956 about the mismanagement of the hostel and whether any enquiry was made thereon; and

(b) if so, the action taken against the persons responsible for the mismanagement?

The Hon. Sri P. KAKKAN : (a) No complaint was received either by the Director of Harijan Welfare or by the Government about the mismanagement of the hostel at Jayankondan. The report from the Collector of Tiruchirappalli is awaited. The Government have, however, decided to take over the management of this hostel under their control from the current year, in pursuance of their policy decision to take over the managements of all subsidized hostels by stages.

(b) Does not arise.

[26th July 1957

(Sri K. Ramachandran rose.)

MR. SPEAKER : When the Hon. Minister has stated that the Government have decided to take over the management, I do not know what supplementary the hon. Member is going to ask.

SRI K. RAMACHANDRAN : சர்க்கார் இந்த வருஷத்தில் எல்லா ஹாஸ்டல்களையும் எடுத்துக்கொண்டுவிட்டார்களா ? அல்லது இன்னும் ஏதாவது எடுத்துக்கொள்ளவேண்டியது பாக்கி இருக்கிறதா ?

THE HON SRI P. KAKKAN : எல்லா ஹாஸ்டல்களையும் எடுத்துக் கொள்ளவில்லை. சில ஹாஸ்டல்களைத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

### *Anantapur Engineering College*

* 270 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the students of Madras who came out successful from the Anantapur Engineering College have been employed in the Madras State; and

(*b*) if so, the number of applicants and the number so far employed?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Such students have been employed in the Public Works, Highways and Electricity Departments.

(*b*) The particulars in respect of the Public Works and Electricity Departments are as follows :—

| Year. (1) | Number of applications received. Public Works Department. (2) | Number of applications received. Electricity Department. (3) | Number of applicants employed. Public Works Department. (4) | Number of applicants employed. Electricity Department. (5) |
|---|---|---|---|---|
| 1953 .. | 10 | Nil. | 8 | Nil. |
| 1954 .. | 24 | Nil. | 21 | Nil. |
| 1955 .. | 5 | 3 | 4 | 2 |
| 1956 .. | 4 | 3 | 3 | 2 |

Details in respect of candidates appointed in the Highways Department called for are still awaited from the Chief Engineer (Highways).

SRI K. R. VISWANATHAN : இன்னும் தமிழ்நாட்டு மாணவர்கள் அனந்தப்பூரில் படித்துக் கொண்டிருக்கிறார்களா ? அல்லது தமிழ் நாட்டு மாணவர்களுக்குப் படிப்பு முடிந்துவிட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : My impression is that the last year batch was the final batch. I don't think any further students are there now.



26th July 1957]

### *Re-employment in Government departments*

* 271 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the names of persons re-employed, departmentwar during the year 1956–57; and

(*b*) the period of re-employment and the emoluments drawn by each?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The particulars are being collected.

### *Tripartite Study Team*

* 272 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tripartite Study Team which visited European countries during 1956 has submitted any report to this Government with regard to conditions of workers in those countries; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No Tripartite Study Team was sent to the European countries in 1956 to study conditions of workers in those countries. A study team was, however, sent by the Government of India to European countries in October and November 1956 to study the workers participation in management. The team submitted its report to the Government of India.

(*b*) A copy of the report is placed in the library.

SRI M. KALYANASUNDRAM : இந்த கோஷ்டியார் மத்தியசர்க்காராலே அனுப்பப்பட்டதனுலே மத்திய சர்க்காருக்குத்தான் தங்கள் ரிப்போர்ட்டை சமர்ப்பித்திருக்கிறார். அவர்கள் செய்திருக்கக்கூடிய சிபார்சுகள் எவற்றையாவது மத்திய சர்க்கார் நம் சர்க்காருக்கு அனுப்பிவைத்து அதன்பேரில் நம் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார்களா ? அப்படி இருந்தால் அந்தச் சிபார்சுகள் என்ன ? அவற்றுக்கு நமது சர்க்கார் கொடுத்திருக்கும் அபிப்பிராயம் என்ன என்பதையும் சேர்த்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த அறிக்கையின் பேரில் ராஜ்ய மந்திரிகள் எல்லோரும் சேர்ந்த மகாநாட்டுக்கூட்டம் டெல்லியில் நடந்தது. இந்தியன் லேபர் கவுன்சில் கூட்டமும் சில வாரத்திற்கு முன்னால் டெல்லியில் நடந்தது. இந்த இரண்டு கூட்டங்களிலும் " The workers participation in management " என்பது பற்றி விரிவாக விசாரிக்கப்பட்டது. ஆகவே எந்த எந்த இடங்களில் அதைப் பரிட்சார்த்தமாக நடத்தக் கூடுமோ அங்கெல்லாம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த முறையில் இங்கும்—கனம் அங்கத்தினர் இதுவரையில் ஊரில் இல்லாத காரணத்தால் சொல்கிறேன்—பரிட்சார்த்தமாக நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்குகொள்ள தனியார் துறையில் ஒரு கம்பெனியையும், சர்க்கார் துறையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

SRI M. KALYANASUNDARAM : அந்த அறிக்கையின் பிரதிகள் லைப்ரரியில் போதுமான அளவில் வைக்கப்பட்டிருக்கிறதா ? இங்கு மொத்தம் 205 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் படிப்பதற்குப் போதுமான பிரதிகள் அவசியம் இருக்கவேண்டும், அவ்வாறு இருக்கிறதா ?

[26th July 1957

THE HON. SRI R. VENKATARAMAN: லைப்ரரியில் உள்ள பிரதிகள் போதாவிட்டால் கனம் சபாநாயகரிடம் அங்கத்தினர்கள் சொன்னால் போதும் அவருடைய வேண்டுகோளின் பேரில் சர்க்கார் அதிகமான பிரதிகளை எப்போதும் கொடுப்பார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : ஆமாம். கேள்விகள் முடிந்துவிட்டன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER *RE.*

### (1) MESSAGES FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House that I have received the following messages, dated 25th July 1957, from the Governor of Madras :—

"In pursuance of Article 207, clause (1), read with Article 199 (1) (*d*) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly, of the Madras Appropriation (No. 2) Bill, 1957, and in pursuance of clause (3) of Article 207, I also recommend to that Assembly the consideration of the said Bill."

I have further to announce to the House that I have received the following message, dated 23rd July 1957, from the Governor of Madras :—

"In pursuance of Article 207, Clause (1) read with Article 199, Clause (1), sub-clause (*a*) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Amendment) Bill, 1957."

### (2) MESSAGES FROM THE COUNCIL.

MR. SPEAKER : I have also to announce to the House that I have received the following messages from the Hon. Chairman, dated 24th July 1957 :—

"In accordance with rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 4 of 1957) as passed and agreed to by the Council on the 24th July 1957 without any amendment and signed by me."

"In accordance with rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 3 of 1957) as passed and agreed to by the Council on the 24th July 1957 without any amendment and signed by me."



26th July 1957]

## III.—CALLING ATTENTION TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES.

### OUTBREAK OF CHOLERA IN MADRAS CITY AND STEPS TAKEN BY GOVERNMENT.

MR. SPEAKER : I have received notice from the hon. Member Sri S. B. Adityan under Rule 40 calling the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, outbreak of cholera in Madras City and the steps taken by the Government.

SRI S. B. ADITYAN : சபாநாயகர் அவர்களே, சென்னை நகரத்திலும் தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட எல்லா ஜில்லாக்களிலும் காலரா நோய் தோன்றி இருக்கிறது என்பது இந்த சபையில் உள்ள எல்லா மெம்பர்களுக்கும் அநேகமாக தெரிந்து இருக்கும். சென்ற வருஷத்தில் இந்த தொத்துநோய் ஆஸ்பத்திரிகள் காலியாககிடந்தன. ஆனால் இப்போது சென்னை நகரத்திலும், கிட்டத்தட்ட எல்லா ஜில்லாக்களிலும் இருக்கும் தொத்துநோய் ஆஸ்பத்திரிகளும் நிறைந்து வழிந்தோடிக் கொண்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கொடிய நோயால் ஏற்படுகின்ற திடீர் சாவுகள் அநேகம். குழந்தைகளை இழந்த பெற்றோர்களும், பெற்றோர்களை இழந்த குழந்தைகளும், குடும்பங்களும் பரிதவிக்கின்ற நிலையும் நேரிட்டிருக்கிறது. இது ஒரு தொத்துநோய் என்பது உண்மை. ஆனால் அதேசமயத்தில் இது தடுக்கக்கூடிய நோய் என்பதை கவனத்தில் வைக்கவேண்டும் (proventible disease). 10-02 a.m.

சமீபத்தில் விஷக்காய்ச்சல் வந்தது. அதைத் தடுக்கமுடியாது. ஏனென்றால் அது காற்று மூலமாக பரவுகிறது. 'Tuberculosis' காற்று மூலமாக சுவாசத்தினால் ஏற்படுவதால் அதையும் தடுக்கமுடியாது. ஆனால் இந்த காலரா தொத்துநோய் தடுக்கக்கூடியது. இந்த நோயை அநேக நாடுகளில், மேல் நாடுகளில் தடுத்திருக்கிறார்கள். பல தலைமுறைகளாக காலரா நோய் வராதநாடுகள் அநேகம் இருக்கின்றன. மேல் நாடுகளில், காலனி நாடுகள் என்று இகழும் மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் இந்த காலரா நோயை ஒழித்துக்கட்டியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஏன் நம்முடைய நாட்டில் அது திரும்பிவரவேண்டும் ? அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் ஏன் எடுத்துக்கொள்ளவில்லை ? முன்பு வெள்ளைக்காரன் நம் நாட்டை ஆண்டுவந்தபொழுது, நாம் அவர்களைப் பழித்துக்கொண்டிருந்தோம். ஆனால் இப்பொழுது சுதந்திரம் வந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. ஆகையால் இந்த நோய் வராமல்தடுக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று சொல்லவிரும்புகிறேன்.

சமீபத்தில் விஷஜுரம் வந்தபோது, சிங்கப்பூரிலிருந்து வந்த கப்பலில் வந்தவர்கள் சென்னை துறைமுகத்தில் இறங்கக்கூடாது என்று சொல்லப்பட்டது. சென்னை நகரிலிருந்து வெளியூருக்கு, சிங்கப்பூருக்கு செல்லும் பிரயாணிகள், சிங்கப்பூர் துறைமுகத்தில் இறங்கக்கூடாதென்று அங்குள்ள அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறார்கள். இலங்கைக்கு செல்லும் பிரயாணிகளும் 'quarantine' செய்யப்படவேண்டும் என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. வெளி நாடுகளிலிருந்து இங்கு சுற்றுப்பிரயாணம் செய்யவரும் பிரயாணிகளும் 'tourists' சென்னைக்கு வரக்கூடிய நிலைமை இல்லை. அதிகப்படியாக சுற்றுப்பிரயாணம் செய்பவர்கள் வரவேண்டும் என்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரி தொத்துநோய் இருப்பதன் காரணமாக வெளிநாட்டிலிருந்து சுற்றுப்பிரயாணம் செய்யவருபவர்கள் இங்கு வருவதற்கு தயங்குகிறார்கள். ஆகையால் இப்போது ஏற்பட்டிருக்கும் வியாதியை தணிப்பது மட்டும் இல்லாமல், இனிமேல் வராமல் இருப்பதற்கும் தக்க நடவடிக்கைகள் எடுத்து சென்னை நகரத்துக்கும், தமிழ் நாட்டுக்கும் நல்ல பெயரை தேடிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : The question raised in the notice is only about cholera and cholera only. So I will confine my remarks to that.

The City of Madras was free from cholera during the years 1955 and 1956. Stray cases were reported during the year 1957 as will be seen from the statement furnished below :—

| Month. (1) | Attacks. (2) | Deaths. (3) |
|---|---|---|
| January 1957 .. .. .. | 3 | 1 |
| February 1957 .. .. .. | 2 | Nil. |
| March, April 1957 .. .. | Nil. | Nil. |
| May 1957 .. .. .. | 11 | 2 |

A sudden outbreak of the disease occurred on 22nd June 1957 in Kuppams in the Tondiarpet area where mostly fisherfolk reside. The infection was confined to this area. The number of attacks and deaths reported in the city during each week since the outbreak is as follows :—

| Week-ended. (1) | Attacks. (2) | Deaths. (3) |
|---|---|---|
| 29th June 1957 .. .. | 108 | 17 |
| 6th July 1957 .. .. | 54 | 8 |
| 13th July 1957 .. .. | 68 | 6 |
| 14th to 18th July 1957.. .. | 18 | 5 |

Almost all the cases were among fisherfolk living in Kasipuram, Pudumanai Kuppam, Bower Kuppam, etc., in the Tondiarpet area. The disease has also been prevalent in Kuppams in Tiruvottiyur area on the northern border of the City and a few cases among fisherfolk were removed to the Infectious Diseases Hospital on the 22nd June 1957 and some of them were reported to be positive for cholera. On an investigation for the source of infection for the outbreak in Tondiarpet area it was found that the disease was most likely imported from Tiruvottiyur due to constant movement outside of the population from the infected area.

Statutorily, it is the responsibility of the Local Authority to take necessary steps to combat the infectious disease. Accordingly the Corporation of Madras took prompt preventive measures in the infected area and also kept the Government and the Department of Public Health informed of the situation.

The Health staff who were alerted made house to house inspection and removed all cases to the Infectious Diseases Hospital and carried out preventive inoculations in all slums, hutting grounds and in the vulnerable areas where cholera was likely to occur. Sanitary Inspectors were instructed to seize and destroy unwholesome food, rotten fruits and food stuff sold exposed to dust and flies. They were also instructed to keep the markets and public latrines well disinfected and clean and free from fly nuisance. The wells in the infected area and in the extended areas were chlorinated and protected water-supply was made available in tanks in these areas. The water mains in the infected areas were chlorinated with chlorine injector. The Conservancy Officer was also requested to keep the divisions, particularly slums, hutting grounds, etc., well conserved, clean and tidy. De-flying squad was also appointed and necessary preventive measures were adopted in the infected areas. The Malaria staff sprayed with swing fog in infected areas and their surroundings.





More than 60,000 persons have been protected against cholera since the outbreak. The Director of Public Health, Madras, has inspected the Infectious Diseases Hospital and the infected areas in Rayapuram area. The situation is being closely watched by the Government.

## IV.—ADJOURNMENT MOTION *RE.*

### DAMAGE TO HOUSES ON ACCOUNT OF SEEPAGE WATER IN LOWER BHAVANI PROJECT AREA.

MR. SPEAKER : I have received from the hon. Member Sri K. R. Nallasivam notice of a motion to adjourn the House to discuss a matter of urgent public importance. Before I give my ruling in the matter I should like to hear the hon. Member and also the Hon. Minister concerned if he has anything to say on the motion.

SRI K. R. NALLASIVAM : சபாநாயகர் அவர்களே, இப்போது ஒரு வாரத்திற்கு முன்னால் ஈரோடு தாலுகாவில் சில இடங்களில் கீழ் பவானி தண்ணீர் செல்லும் பள்ளமான இடங்களில்—உள்ள வீடுகள் அநேகம் விழுந்துகொண்டிருக்கின்றன. நான் போய்ப் பார்த்தபோது பல வீடுகள் விழுந்துவிட்டன. இன்னும் விழுந்துகொண்டிருக்கின்றன என்று தகவல் வந்துகொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், இதே போல் தண்ணிர் வந்ததால் பல வீடுகள் விழுந்துபோயின. சுமார் 1,450 வீடுகள் விழுந்து போயின. அந்த வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதித்தது. அப்படிக் கட்டிக்கொண்ட வீடுகள்கூட இப்பொழுது விழுந்துவிட்டன என்பதை இங்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். தண்ணீர் வரக்கூடிய காலங்களில் இந்த வீடுகள் திடீர் திடீரென்று விழுந்துவிடுகின்றன. தண்ணீர் நின்றுவிட்டால் அவைகள் கொஞ்சம் கொஞ்சமாக பொடிந்துவிடுகின்றன. இதைப்பற்றி அங்குள்ள அதிகாரிகளிடம் சொன்னோம். ஆனால் அவர்கள் எந்த விதமான நடவடிக்கை எடுக்கவும் அவர்கள் சக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள். முன்பு இந்த பிரதேசம் சமுதாய நலஅபிவிருத்தி திட்டப் பிரதேசத்தில் இருந்தது. அப்போது ஒருவருக்கு 200 ரூபாய் கடனாகவும் 100 ரூபாய் மான்யமாகவும் கொடுக்கப்பட்டது. (10-08 p.m.)

சில நாட்களுக்கு முன்னால் கருக்கம்பாளையம் என்ற இடத்தில் நீர் கசிவு ஏற்பட்டது. இதை அதிகாரிகளிடத்தில் சொன்னபோது அவர்கள் அங்கு வந்து பார்த்தார்களே தவிர வேறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களுக்கு அதற்குத் தேவையான பண வசதியும் கிடையாது. இதற்கு முன்னால் வீடு கட்டிக் கொடுப்பதற்காகவே ஒரு அதிகாரி, 'Development Deputy Collector இருந்தார். ஆனால் இப்போது அம்மாதிரி தனி அதிகாரி ஒருவரும் இல்லை. ஹரிஜனங்களும் ஏழை விவசாயிகளும் பள்ளத்தில் வீடு கட்டிக்கொண்டிருந்தவர்களும் வீடுகள் இழந்து நடுத் தெருவில் இருக்கிறார்கள். ஒன்று அல்லது இரண்டு வீடுகள் இல்லை. சுமார் 1,200 வீடுகள் இந்தப் பாசனப் பிரதேசத்தில் விழுந்துவிட்டன என்பதை மந்திரி அவர்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

முன்பு சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசத்தில் இருந்த பொழுது 15 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. ஆனால் இப்போது தேசீய விஸ்தரிப்புப் பிரதேசத்தில் 50,000 ரூபாய்கூட மொத்தமாக செலவழிக்கப்படுவதில்லை. ஆகவே இதற்காக விசேஷ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேட்டூர் கால்வாய் பிரதேசத்திலும் இது போன்ற நிலைமைதான்.

ஆகவே இதைக் கவனித்துத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காக, இந்த சபையை ஒத்தி வைத்து, இதைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஒத்திவைப்பு பிரேரணை சம்பந்தமான விதியின் கீழ் வராது. ஆனால் அங்கத்தினர் அவர்கள் சொன்ன விஷயத்தை எவ்வளவு கூடிய சீக்கிரத்தில் விசாரிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விசாரித்து, 'அப்ரோபிரியேஷன் பில்' விவாதத்திற்கு வரும்பொழுது நான் அதற்குப் பதில் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : On hearing both the hon. Member and the Hon. Minister, I am satisfied that the urgency is not so much as to call the attention of the House, leaving aside all other items of business; the relief in regard to this comes under the day-to-day administration of the Government. I, therefore, do not give permission for this adjournment motion.

## V.—STATEMENT *RE* ENQUIRY INTO ALLEGATIONS AGAINST THE INSPECTOR-GENERAL OF POLICE.

MR. SPEAKER : The Hon. the Home Minister has told me that he would like to make a statement and I am permitting him to do so.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, with your permission, I would like to make the following statement :—

During the debate in this House on the Police Demand on 17th July 1957, the hon. Member, Sri Anbazhagan, made certain allegations against the Police impugning the conduct of an unnamed high official. Sir, the Inspector-General of Police whose attention was drawn to the hon. Member's allegations has submitted his remarks on them. He feels that the allegations are directed against him personally and wants that the matter should be set right before his retirement. He has himself stated that an impartial enquiry may be made on those allegations. Government appreciate the voluntary offer of the Inspector-General to have an enquiry made on the allegations. Sir, it is now proposed to appoint, in consultation with the Hon. Chief Justice, an Hon. Judge of the High Court to conduct an enquiry into the allegations of misconduct made by the hon. Member.

## VI.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS APPROPRIATION BILL, 1957.

MR. SPEAKER : The next item is the consideration of the Madras Appropriation Bill, 1957.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to introduce the Madras Appropriation Bill [a], 1957 and move—

" That the Bill be taken into consideration."

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 25th July 1957.





இந்தச் சமயத்திலே நான் எதுவும் பேசுவதாக இல்லை. அங்கத்தினர்கள் பேசியதற்கு பிற்பாடு, அந்த விவாதத்திற்குப் பதில் சொல்லும் முறையிலே ஏதாவது சொல்லுவதற்கு அவசியம் ஏற்பட்டால் நான் பேசுகிறேன்.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Appropriation Bill, 1957, be taken into consideration."

The motion is before the House for discussion.

* SRI R. KRISHNASAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தை இந்தக் கூட்டத்திலே சமர்ப்பித்து, இந்தக் கூட்டத் தொடரிலேயே அது சம்பந்தமாகப் போதிய அவகாசத்தையும் அங்கத்தினர்களுக்குக் கொடுத்து, இந்த வரவு செலவு நிதி ஒதுக்கல் மசோதாவையும் இப்பொழுது முடிவாக இந்தச் சபை முன்பு சமர்ப்பித்து இருக்கிறார்கள். இதற்கு முன்னால் இந்த மாகாணம் ஆந்திரம் மலையாளம், தென் கன்னடம் முதலிய பகுதிகளெல்லாம் இணைந்து ஒரு மாகாணமாக இருந்த காலத்திலும்கூட, வரவு செலவுத்திட்டத்தை சட்டசபையில் சமர்ப்பித்து அதன் மீது சபை அங்கத்தினர்கள் பேசுவதற்கு இத்தனை மணி நேரம் அவகாசம் கொடுக்கவில்லை என்பதை என்னுடன் எல்லா அங்கத்தினர்களும் ஒப்புக்கொள்ளுவார்கள். இதற்காக மந்திரி சபையைப் பாராட்டுவார்கள் என்று நினைக்கிறேன். அவ்வளவு அவகாசம் கொடுத்து, எல்லோரும் ஒவ்வொரு துறையிலும் மான்யத்தை அங்கீகரிக்கும் விதத்திலேயோ, அல்லது குறைக்கும் விதத்திலேயோ விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு சர்க்காருக்கு சிறந்த ஆலோசனைகளைக் கூறினார்கள். அவர்கள் கூறிய ஆலோசனைகளுக்கும் அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் பதில்சொல்லும் முகத்தில் மந்திரிகள் அவைகளுக்கு மட்டும் பதில் சொல்லாமல் அதிகமாகப் போதிய விவரங்களை சபைக்குக் கொடுத்தார்கள் என்பதையும் அனைவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். அந்த வகையில் இந்த வருஷத்திய பட்ஜட் விவாதம் மிகவும் நல்ல முறையிலே நடைபெற்றது. அதற்காக நான் அமைச்சர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். அதோடுகூட 'சீப் விப்பாக' இருந்து இந்த சபைக்கு உதவிய இளைஞர் அங்கத்தினர் ஸ்ரீ கருத்திருமன் அவர்களையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர் மிகவும் சுருசுருப்பாக செயலில் ஈடுபட்டார் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே மற்றும் சில விஷயங்களையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். விவாதங்கள் மிகவும் உயர்ந்த முறையில் நடைபெறவேண்டுமென்று எதிர்பார்த்த அளவுக்கு சபையின் விவாதம் உயர்ந்த ரகத்தில் நாளுக்கு நாள் நல்ல முறையில் உருவாகிக்கொண்டு வருகிறது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. 10-14 a.m.

ஆனால் மனதில் உறுத்திக்கொண்டிருக்கக் கூடிய சில குறைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளாமல் இருக்கமுடியாது. அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் அன்று ஒரு நாள் ஏதோ விவாதத்திற்குப் பதில் சொல்லும்பொழுதோ அல்லது கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுதோ மிகவும் பொறுமையாக நடந்துகொண்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் கேள்வி பதில்கள் ரொம்ப மனதை உறுத்தக் கூடிய வகையில் உள்ளத்தைப் பாதிப்பதாக இருந்தது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அது பற்றி நான் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன்.

ஒரு காட்டு ராஜா இருந்தார். அவருடைய பிள்ளை கண்ணப்பர். அவர் வேட்டைக்குச் சென்று வரும் பாதையிலே ஒரு கோயில் இருந்தது. அதில் ஒரு லிங்கம் இருந்தது. பக்கத்திலுள்ள கிராமத்திலிருந்து ஒரு அர்ச்சகர் அந்தக் கோவிலுக்கு தினமும் வந்து லிங்கத்திற்குப் பூஜை செய்துவிட்டுப் போவது வழக்கம். லிங்கத்திற்குத் தண்ணீர்விட்டு அபிஷேகம் செய்து புஷ்பங்களைச் சொரிந்து பூஜை செய்துவிட்டுப் போவார். காட்டு ராஜா

மகன் கண்ணப்பர் வரும்போது தான் வேட்டையாடி சம்பாதித்த இறைச்சி, மாமிசம், இவைகளை எல்லாம் தோளில் போட்டுக் கொண்டு லிங்கத்தைப் பார்த்து ‘இன்றைக்குச் சாப்பிடுவதற்கு நல்ல இறைச்சி’ மாமிசங்களெல்லாம் கிடைத்திருக்கிறது. நான் பக்தியோடு பூஜை செய்யும் கடவுளுக்கு வெறும் புஷ்பங்கள்தானா ? வெறும் தண்ணீர் மேலே தெளிப்பதுதானா என்று சொல்லி மனமுருகுவார். அவ்வளவு பக்தியோடு கூடிய அவருக்குப் படிக்கத் தெரியாது. அவர் காட்டு ராஜா மகன்தானே. அதன் பின் அவர் அங்கு போகும்போது தான் வேட்டையாடிய விலங்குகளின் மாமிசத்தையும், இறைச்சியையும், லிங்கத்தின் பேரில் போட்டுவிட்டு வணங்கிப் போவது வழக்கம். அந்தக் கோயிலுக்கு வரும் அர்ச்சகர் தினமும் அதைப் பார்த்துக்கொண்டு வந்தார். நாம் தினந்தோறும் தண்ணீர்விட்டு அபிஷேகம் செய்து, புஷ்பங்களைச் சொரிந்து பூஜை செய்துவிட்டுப் போகிறோம். யாரோ ஒருவன் வந்து காட்டிலே கிடைக்கிற வனவிலங்குகளின் மாமிசத்தை வேண்டுமென்றே அசுத்தப் படுத்த வேண்டுமென்ற முறையில் லிங்கத்தின் மேல் சமர்ப்பித்து விட்டுப்போகிறான்” என்று மன வருத்தத்துடன் தினந்தோறும் அர்ச்சகர் சென்றுகொண்டிருந்தார். அப்படி இருக்கும்பொழுது கடவுள் அர்ச்சகர் கனவிலே ஒருநாள் தோன்றி, ‘அவர் உன்னை விட ரொம்ப நல்ல பக்திமான். அவர் ஹிருதயத்திலே பக்தி நிறைந்திருக்கிறது. நான் அவரைச் சோதிப்பதை நாளை நீர் லிங்கத்திற்குப் பக்கத்தில் மறைவாக இருந்துகொண்டு பாரும்’ என்று சொன்னார். மறுநாள் வழக்கம்போல் கண்ணப்பர் அங்கே வந்தார். லிங்கத்தின் ஒரு கண்ணிலே ரத்தம் வழிந்துகொண்டிருந்ததைக் கண்டார். இது கடவுளுடைய பரிசோதனை. பதைபதைத்த கண்ணப்பர் உடனே தன்னுடைய கையில் இருந்த வாளினால் தன் ஒரு கண்ணைத் தோண்டி எடுத்து, ரத்தம் வழிந்து கொண்டிருந்த லிங்கத்தின் கண்ணில் ஒத்தினார். ஆனால் பிறகு லிங்கத்தின் மறு கண்ணிலும் ரத்தம் வழிவதைக் கண்டார். இதற்கும் வேறு ஒருவருடைய உதவி தேவை இல்லை, தன்னுடைய மற்றொரு நல்ல கண்ணையும் கொடுத்துவிடலாம் என்ற எண்ணம் கண்ணப்பருக்கு ஏற்பட்டது. இருக்கிற ஒரு கண்ணையும் தோண்டி எடுத்துவிட்டால், பின் தோண்டி எடுத்த அந்த கண்ணை லிங்கத்தின் சரியான இடத்தில் பார்த்து வைப்பதற்கு கண் தெரியாமல் போய் விடும் என்கிற காரணத்தினால், செருப்புப் போட்டுக்கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் கூட இல்லாமல் கடவுளின் மீது அந்த செருப்புக் காலை எந்த இடத்தில் கண்ணை வைக்கவேண்டுமோ அந்த இடத்தில் கண் இருக்கும்பொழுதே பார்த்து வைத்துக்கொண்டு தன் இரு கைகளாலும் மற்றொரு கண்ணையும் தோண்டி எடுத்து, தான் கால் வைத்திருக்கும் இடத்தில் அந்தக் கண்ணை வைத்தார். கடவுள் உடனே அங்கே பிரத்தியட்சமாகி கண்ணப்பருக்குத் தரிசனம் அளித்தார் என்பது தான் கருத்து. கேள்வி நேரத்தின்பொழுது நடந்த ஒரு விஷயத்தை மனதிலே வைத்துக்கொள்ளாமல் இப்படி மனதிலிருந்து வெளியே விட்டு ஆற்றிக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். மேலும் நம்முடைய விவாதத்தின் தரம் உயரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த விஷயத்தைச் சொல்லுகிறேன். இதுதான் கண்ணப்பருடைய சரிதம். கடவுள் அந்தச் சமயத்தில் அர்ச்சகரிடத்தில் ஏதோ பூஜை செய்துவிட்டுப் போகிறோம், அந்தக் கடமையை நிறைவேற்றுகிறோம் என்ற அளவில் உங்களுடைய பக்தி இருந்தது. கண்ணப்பருடைய பக்திக்கும் உங்களுடைய பக்திக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. பக்தி ஞானத்தை விடமிகவும் சிறந்தது என்று தெரிவித்தார்.

**(The Deputy Speaker in the Chair.)**

இதற்கு முன் ஒரு நாள் நம்முடைய சபையில் அறநிலய பாதுகாப்பு சம்பந்தமாகக் கேட்ட கேள்வியின்போது, நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் விஷயத்தில் பக்தி சிரத்தை உள்ளவர்களாகவும், கடவுள் வழி பாட்டில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் என்றும் காலில் செருப்புப் போட்டுக்கொண்டு கோவிலுக்குள் போவேன் என்கிறவர்களை எல்லாம் நியமிக்கமுடியாது என்றும் சொன்ன சமயத்தில் இன்னொரு அன்பர் அவர்கள் என்னைப் போன்ற சதா படித்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் இதற்கு உபமானமாக கண்ணப்பர் செருப்புப்



போட்டுக் கொண்டு லிங்கத்தின் மீது காலை வைக்கவில்லையா என்று கேட்டார்கள். இவ்விதம் ஒப்பு, இடம், சந்தர்ப்பம், எடுத்துக் காட்டும் முறை எல்லாம் எப்படி இருக்கிறது என்று பாருங்கள். நான், இதைச் சொன்னவர்கள் வருந்தவேண்டும் என்ற நினைப்போடு சொல்லவில்லை. இந்தக் கேள்வி முறையைப் பார்த்து வெட்கப்படுகிறேன். இவ்வாறு இந்தச் சபையில் முன் காலத்தில் இயற்றிய சரித்திரங்களை எல்லாம்

. . . . .

**DEPUTY SPEAKER : May I know from the hon. Member how it is relevent to the Appropriation Bill. I want him to speak on the Bill and he need not give advice to the House.**

Sri R. KRISHNASAMI NAIDU : ஆகவே இந்த பில்லை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தில் மற்றும் சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமங்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி ஒரு சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மகாத்மா காந்தி அடிகள் நம்மிடையே வாழ்ந்த காலத்தில் கிராம முன்னேற்றத்திற்காகவே அதிகக் கவனம் செலுத்தி வந்தார்கள். நம்முடைய அரசாங்கமும் இதில் கவனம் செலுத்தி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சிறிய கைத்தொழிலுக்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதே சந்தர்ப்பத்தில் பெரிய பெரிய நகரங்களில் எல்லாம் பெரிய இண்டஸ்ட்ரிஸ் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இதனால் நகரப்புறங்களில் வாழ்வது நல்லது என்று நினைத்து மக்கள் எல்லாம் கிராமப் புறங்களிலிருந்து நகரப்புறங்களுக்கு வந்து வாழ்க்கை நடத்துவதற்கு வருகிறார்கள். இது ஒரு பெரிய தலைவலியை உண்டாக்கி இருக்கிறது. இந்த நிலைமையை நிறுத்துவதற்கு அரசாங்கம் திட்டவட்டமான ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். முக்கியமாக சென்னைபோன்ற நகரங்களை இன்னும் மேலும் இம்மாதிரி நெருக்கடிக்கு இடமாக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பெரிய நகரங்களில் எல்லாம் தொழிற்சாலைகள் மேலும் மேலும் விரிவடைந்துகொண்டு போகின்றன. நகரப் புறங்களிலும், பெரம்பூர் போன்ற இடங்களிலும் தீக்குச்சி தொழிற்சாலை, தோல் தொழிற்சாலை இப்படிப்பட்டவைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான தொழிற்சாலைகளை கிராமப் புறங்களில் ஆரம்பித்தால் சௌகரியமாக இருக்கும். இது தவிர, காலேஜ்களையும், தொழிற்சாலைகளையும், ஆலைகளையும், பள்ளிகளையும் நகரப் புறங்களில் ஏற்படுத்தாமல் கிராமப் புறங்களில் ஏற்படுத்தவேண்டும். அதேபோன்று சர்க்கார் காரியாலயங்களையும் கிராமப் புறங்களில் ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் ஏற்படுத்தினால் கிராமப் பகுதிகளுக்கு பெரும் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்ததாக குடியேற்ற வசதிகள் நகரங்களில்தான் பெருகிக்கொண்டிருக்கிறது. இம்மாதிரி குடியிருப்பு வசதிகளை மேலும் மேலும் அதிக ஜனத் தொகையுள்ள எல்லா நகரசபைகள் மூலமாக செய்து கொடுக்கவேண்டும். இதர கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை போன்ற இடங்களில் அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் ஆலைகள் இவ்விடங்களில் இருப்பதற்கு அந்தந்த இடங்களில் மூலப்பொருள் கிடைக்கிறதா என்று பார்த்தாலும் அதையும் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. ஆகவே இவ்விதம் ஒரே இடங்களில் ஆலைகளை ஏற்படுத்தாமல் எங்கும் பரவலாக பல பகுதிகளிலும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் நகரப் புறங்களிலுள்ள செழிப்பு கிராமப் புறங்களிலும் பரவும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அரசாங்கம் ஊக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுதவிர நூற்புமில் பல இடங்களில் ஆரம்பிக்கப்படுகிறது. கிராமப் புறத்தில் கூட்டுறவு முறையில் இயங்கக் கூடிய சிறிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம். இது தவிர இந்த நூற்கும் கதிர்களை அரை குதிரைவேகம் உள்ள இயந்திரத்தைப் பொருத்தி 16 கதிர்களை இயக்கும்படியாக அமைத்துக் கொடுத்தால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் போதுமான வருமானத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். இதையும் எடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று

கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது எவ்விதம் இருக்கிறதென்றால் எங்கு புதிதாக பெரிய மில்கள் ஆரம்பிக்கப்படுகிறதோ அந்த இடங்களுக்கு வேலை இல்லாதவர்கள் குடும்பம் குடும்பமாக குடியேறி வருகிறார்கள். நான் கூறினபடி இவ்விதம் ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்படுத்திக் கொடுத்தால் அதில் நூற்ற நூலை சேகரித்து அங்கு ஒரு ம்த்திய பாகத்தில் மில் நடத்துவதற்கு சௌகரியமாக இருக்கும். இவ்வாறு ஜப்பானில் இயங்கி கொண்டிருப்பதாக அங்கு போய் வந்தவர்களும் பெரிய தொழில் நிபுணர்களும் சொல்லுகிறார்கள். ஆகவே எந்த கிராமங்களில் இவ்விதம் ஆரம்பிக்க சாத்தியக் கூறுகள் இருக்கிறதோ அந்த கிராமங்களில் எல்லாம் இதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரிதான் பஞ்சாயத்துக்களை நல்ல முறையில் உருவாக்கவேண்டும். அதற்குப் போதிய அதிகாரிகளைக் கொடுக்கவேண்டும். ஒரே இடத்தில் சேர்ந்திருக்கும் அதிகாரங்களை எல்லாம் கீழேயுள்ள அதிகாரிகளுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டும். இவ்விதம் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்ற ஆலோசனை ஏற்கனவே அரசாங்கத்தின் கவனத்தில் இருந்துவருகிறது என்றும் நான் அறிகிறேன். அடுத்ததாக ஆசிரியர்கள் சமுதாயத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள்கூற ஆசைப்படுகிறேன். ஆசிரியர்கள் மேலும் மேலும் பயிற்சிக்குச் செல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் போதிக்கும் சக்தியுடையவர்களாக இருக்கிறார்களா என்பதைப் பார்க்கவேண்டும். அவர்களுடைய போதனா சக்தியை அதிகமாக்கும்படியான நூல்களை படிப்பதற்கு வசதிகள் இல்லாதது ஒரு பெரும் குறையாகவே இருந்துவருகிறது. ஆசிரியர்கள் எந்த முறையில் போதிக்கிறார்கள் என்பதைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டியது மிகவும் அவசியம். ஒரு காலத்தில் மாணவர்களுடைய தேர்ச்சிக்காக கிராண்ட் கொடுக்கப்பட்டு வந்தது. இதனால் அவர்கள் பொறுப்போடும், ரொம்பக் கவலையோடும் பணியாற்றி வந்தார்கள். இப்போது பொறுப்பு குறைந்துவருகிறது மாத்திரமல்ல, படிப்பின்தரமும் மிகக் குறைவாக இருந்துவருகிறது. உயிரெழுத்து எத்தனை, மெய்யெழுத்து எத்தனை என்று கேட்டால் தெரியாத நிலையில் இருந்துவருகிறது. தாங்கள் எந்த ஜில்லாவில் இருந்து வருகிறார்களோ அந்த ஜில்லாவில் எத்தனை தாலுக்காக்கள் இருக்கிறது என்று கேட்டால் தெரியாத நிலைமையில் இருக்கக் கூடிய நிலைமையை ஒரு சில தினங்களுக்கு முன்னால்வரை கண்டேன். இதற்கும் ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கிராமங்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

10-30 a.m. * **Sri A. CHIDAMBARANATHA NADAR** : தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சரவர்கள் கொண்டுவந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒருசிலவார்த்தைகள் பேச நான் ஆசைப்படுகிறேன். உண்மையாகவே, இன்று சென்னை சர்க்காரும், இங்கு இருக்கும் மந்திரிகளும் நாட்டிற்கு நல்ல சேவை செய்யவேண்டுமென்ற அவாவோடு இருக்கும்போது இந்த நாட்டில் இருக்கும் சில அதிகாரிகள் நல்ல முறையில் அந்தத் திட்டங்களை உருவாக்காமல் இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றைக்கு கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த அளவில் நீர்ப்பாசனத்தை நாம் எடுத்துக்கொண்டால் முன்னர் ஏழு அணைக்கட்டுகள் கட்டவேண்டுமென்ற ஒரு திட்டம் இருந்தது. அதில் மூன்று அணைக்கட்டுகள் 50 வருடங்களுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. சித்தார் 1 ஆண்ட் 2 என்றும், பொய்கை டாம் கட்ட வேண்டுமென்றும், மாம்பழத்தாறு அணைக்கட்டைக் கட்டவேண்டு மென்றும், ஒரு திட்டம் இன்று நடைமுறையில் இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால், அதை எந்த முறையில் கட்டவேண்டும், எந்த முறையில் செய்யவேண்டுமென்பதைப்பற்றி அங்கிருக்கும் மேல் அதிகாரிகளுக்கு எந்த விதமான அபிப்பிராயமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், அவர்கள் ஐந்தாண்டும் திட்டம் என்றால், தங்களுக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும். தங்கள் சொந்தக்காரர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்ற அவா இருக்கிறதேயொழிய, வேறு ஒன்றும் அங்கு நடப்பதாகத் தெரியவில்லை. ஒரு மாதத்திற்கு முன்னர் ஸ்ரீமான் கக்கன் அவர்கள் எங்கள் இடத்திற்கு





வந்திருந்தபோது, அங்கிருக்கிற பின்னேக்கு சமுதாயத்தாரை அங்கிருக்கிற ரெவின்யூ அதிகாரிகள் மிகவும் கஷ்டப்படுத்துகிறார்கள் என்று அவர்களிடம் நான் சொன்னேன். பின்னேக்கு சமுதாயத்தில் உள்ளவர்கள் உண்ண உணவு இல்லாமல், படுக்க வசதி இல்லாமல், இருப்பதற்கு இடமில்லாமல், மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னால், அது ஒரு நாளும் மிகையாகாது. அவர்களின் வசதிகளைக் குறித்து, அவர்கள் நல்ல முறையில் நல்ல எண்ணத்தோடு பார்க்கவில்லை என்று சொல்லும்போது மிகவும் சங்கடமாயிருக்கிறது. இன்றைக்கு அவர்கள் இருப்பது சர்க்கார புறம்போக்குகளில். அந்தப் புறம்போக்குகளிலிருந்து அவர்களைப் பிடித்து அப்புறப்படுத்துவதற்கு வேண்டுமென்று எண்ணுகிறார்களே தவிர அவர்களை நல்ல முறையில் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்திலும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. இன்று இரிகேஷன், அதாவது தண்ணீர் பாய்ச்சும் திட்டத்தைப்பற்றி பேசும்போது, மாம்பழத்தாரைப் பற்றிச் சொன்னேன். அந்த அணையைக் கட்டி முடித்தால் இன்றைக்கு கன்னியாகுமரி ஜில்லாவில் எந்த விதமான தண்ணீர் கஷ்டமும் இல்லாமல் போய்விடும் என்று எனக்குத் தெரியும். மேலும் மழை காலத்தில் பழயாறு என்ற ஆற்றில் பாயப்பட்ட தண்ணீரைத் தேக்கி, அணை கட்டினால் நாங்குனேரி தாலுக்காவில் கொண்டுவந்து பல குளங்களை நிறைத்துவிடலாம். அதையும் சர்க்கார் ஆலோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று மிக மிக தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் திருவிதாங்கூரில் திவானாக இருந்த காலத்தில் அங்குள்ள பின்னேக்கு சமுதாயத்தார் கோவிலுக்குப் போக முடியாது. குளத்திற்கும் போக முடியாது. கோவில்களில் திருநாள் ஆரம்பித்துவிட்டது என்று சொன்னால், என்னை உள்ளிட்டு, நான் எந்த சமுதாயத்தைச் சேர்ந்திருக்கிறேனோ, அந்த சமுதாயம் உட்பட கோவில்களுக்கும் போக முடியாது, குளங்களுக்கும் போக முடியாது. ஒரு மறைப்பு வைத்து இன்ன இன்ன ஜாதியார் இந்த தெருவில் வரக்கூடாது என்று சட்டம் இருந்தது. அந்த நாட்டிலுள்ள பெருவாரியான ஹிந்து சமுதாயத்தினர் அதனால் கிருஸ்துவ மதத்தில் சேரத்திட்டம் இட்டார்கள். அப்படி யிருக்கும்போது, ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் டெம்பிள் என்ட்ரி ப்ராக்ளமேஷனைக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டுவந்ததின் காரணமாக அன்றிருந்த மத மாற்றம் கொஞ்சம் குறைந்தது மிக மிக சரியாகும். அப்பொழுது கோவில்களுக்குப் போகலாம் என்று இருந்தாலும் அந்த நிர்வாகத்தில் சரியான உத்தியோகங்கள் யாருக்கும் கொடுத்ததாகத் தெரியவில்லை. இன்று கன்னியாகுமரி ஜில்லாவில் ஹிந்து நாடார்கள் கிட்டத்தட்ட 375,000 பேர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் இரண்டு கிளார்க்குகள்தான் இருக்கிறார்கள். பறையர் ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஒன்றரை லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கிடையிலும் இரண்டு பேர்கள் தான் இருக்கிறார்கள். இந்த நிலைமை இன்றும் இருக்கிறது என்று சொன்னால் அது மிக மிகப் பரிதாபகரமான நிலைமையாகும். ஆகவே சர்ககார் இதை நல்ல முறையில் ஆலோசித்து உத்தியோகங்களிலும் வரப்போகிற போர்டிலும் சரியானபடி பிரதிநிதித்வம் கொடுத்து இந்தத் தாழ்த்தப்பட்ட ஜாதியாரை ஆதரிக்க வேண்டுமென்று இன்னொரு முறையும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, நாகர்கோவில் நகரசபை. அதைப் பொறுத்தளவில் நாகர்கோவில் நகரசபையில் விஸ்தரிக்கப்பட்ட இடம் என்ற ஒரு இடமுண்டு. விஸ்தரிக்கப்பட்ட இடம என்று சொன்னால், 30, 32 கிராமங்கள் உண்டு. அந்தக் கிராமங்களில் இன்று குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. குடிக்கத் தண்ணீர் கொடுக்காமல் அந்த ஜனங்களிடமிருந்து அவர்கள் வரி வசூல் செய்கிறார்கள். வரி வசூலிக்கிறார்களே தவிர, நல்ல முறையில் அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்து அவர்களை ஆதரிக்க வேண்டுமென்ற மனப்பான்மையாவது உண்டோ என்றால் அதுவும் கிடையாது. சர்க்காரை லோன் கேட்டுச் செய்யலாம் என்றால் அந்த முறையும் கிடையாது. இந்த முறையில் இருக்கிறது எங்கள் முனிசிபாலிட்டி. விஸ்தரிக்கப்பட்ட இடத்தில் லைட்டும் கிடையாது, குடிக்கத் தண்ணீரும் கிடையாது. ஒரு கிணறு வெட்டினால் 100, 150 அடி ஆழத்தில் வெட்ட வேண்டும். அந்தக் கிணறு

களில் 5, 6 மாத கர்ப்பம் உள்ள ஸ்த்ரீகள் தண்ணீர் எடுக்கவேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று நான் சொல்லாமலேயே எல்லோருக்கும் தெரியும். ஆகவே சர்க்கார் இதை நல்ல முறையில் பரிசிலனை செய்து கூடிய சீக்கிரம் அங்கு தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று விநயபூர்வமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, எங்களுக்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் இருக்கிறார். அது பழைய ப்யூரோகராட்டிக் டைப்தான். ஒரே நாளில் ஒரே சமுதாயத்தில் உட்பட்ட நான்கு பேர்களை நியமனம் செய்தார்கள் என்று சொன்னால் அது மிக மிக வருந்தத்தக்கது. இந்த நாட்டில் எத்தனையோ சமுதாயத்தார் இருக்கிறார்கள். உத்தியோகம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிற சமுதாயத்தார் இந்த நாட்டில் இருக்கிறார்கள். ஆகவே தனது சொந்தக்காரர்களையும், தனது சமுதாயத்தில் உட்பட்டவர்களையும மாத்திரம் உத்தியோகத்தில் நியமிப்பது என்ற நிலை இந்த நாட்டை விட்டு மாற வேண்டும். ஏனென்றால், நாங்கள் திருவிதாங்கூர்-கொச்சியில் இருந்தபோது, அங்கு அன்றிருந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஒரு லிஸ்டைத் தயாரித்துத் தந்தது. ஒன்று அதை அனுசரித்து ஆட்களை நியமிக்க வேண்டும். அல்லது பாளையங்கோட்டையில் உள்ள எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸர் யார் யாரை எல்லாம் நியமிக்க வேண்டுமென்று அதிகாரப்படுத்துகிறாரோ அவர்களை நியமிக்க வேண்டும். ஒன்றும் இல்லாமல் இரண்டும் கெட்டான் நிலைமையில் அவர்களின் கையில் கிடைத்தபடி அவர்களுக்கு இஷ்டப்படி ஆட்களை நியமிப்பது என்றால் அது மிகவும் வருந்தத் தக்கதாகும். அடுத்தபடியாக, தேசிய விஸ்தரிப்புத் திட்டம். தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்கு டிஸ்ட்ரிக்ட் போர்ட் இல்லை. ஆனால் ஒரு கேள்வி கேட்ட இடத்தில் மந்திரி அவர்கள் நீங்கள் மூன்றில் ஒரு பங்குதான் கொடுக்க வேண்டுமென்று சொன்னதை அறிந்து சந்தோஷப்படுகிறேன். சென்னை சமஸ்தானத்தில் எல்லா இடங்களிலும் நல்ல முறையில் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் ஒழுங்காக நடைபெறுகிறது. அதே மாதிரி கன்னியாகுமரி ஜில்லாவில் அது சந்தோஷகரமாக நடக்கிறதா என்றால் இல்லவே இல்லை. எங்கள் இடத்தில் உள்ள அந்த அதிகாரி வெளியே செல்லமுடியாமல் இருக்கிறார்கள். நான் குறை கூறவில்லை. அவருக்கு ஒரு கால் முடம். அப்படிப்பட்ட ஒரு ஆசாமியைப் பிடித்து எங்கள் தலையில் கட்டி இவரை நீங்கள் ஆதரிக்க வேண்டும், இவரைத்தான் நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அது மிகவும் கஷ்டம். ஆகவே அந்த அதிகாரியை அங்கிருந்து மாற்றி உற்சாகமாக, நல்ல முறையில் நாட்டிற்கு சேவை செய்யவேண்டுமென்ற மனப்பான்மை உள்ள அதிகாரிகளை அங்கு நியமிக்க வேண்டுமென்று மிக மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லா ஜில்லாக்களிலும் பலவிதமான திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆனால், கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த அளவில், தொழிலைப் பொறுத்த அளவில் ஒன்றுமே கிடையாது. இன்றைக்குக் கன்னியாகும்ரி ஜில்லாவில் ஒரு ரப்பர் பாக்டரியை சரியானபடி நடத்த முடியுமானால் அது வெற்றிகரமாக நடந்து போகும் என்பது எங்களுக்கும் பொதுமக்களுக்கும் நன்கு தெரியும். ஆகவே ஒரு ரப்பர் பாக்டரியை அங்கு வெற்றிகரமாக நடத்துவதற்குள்ள நடவடிக்கைகளை இந்தச் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கடைசியாக ஒரு பாலிடெக்னிக் எங்களுக்கு வேண்டுமென்று சொன்னால் அது ஒரு நாளும் மிகையாகாது. சாதாரணமாக ஒரு கேள்வியின்போது எல்லாம் கன்னியாகுமரியைப் பற்றியே பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். தட்டினால் திறக்கப்படும், கேட்டால் கொடுக்கப்படும் என்று சொல்வார்கள். அதை அனுசரித்து கேட்கப்படும் உரிமை எங்களுக்கு இருக்கிறது. கொடுக்கப்படும் உரிமை உங்களுக்கு இருக்கிறது. அழுத்தந்திருத்தமாக, பொது மக்களின் பிரதிநிதியாக இங்கு வந்து உங்களிடம் கேட்கப்படும் காரியங்களில் நியாயமாக காரியங்களை மட்டும் செய்தால் போதும். எல்லாவற்றையும் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யவில்லை. எதெல்லாம் மிக மிக அத்தியாவசியமானது என்று உங்களுக்குத் தோன்றுகிறதோ, அதையெல்லாம் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மேலும் தண்ணீர் பிரச்னை, டவுனைப்பற்றி சொன்னேன். நமது மந்திரி அம்மாள் பிறந்த ஊர் மணக்குடி. அதன் பிரதிநிதி நான்தான் அங்கு குடிதண்ணீர் கிடையாது. தண்ணீர் வேண்டுமென்றால் கடலிலிருந்துதான் குடிக்கவேண்டும். எலெக்ஷன் வந்தால் ஆயிரம் வோட்டர்கள் கூடக்கூடிய இடம். இந்தமாதிரி இடங்களுக்கு நன்மைகள் செய்து வசீகரம் செய்யும் தத்துவம் இந்த சர்க்காருக்கு உண்டு என்பது எனக்குத் தெரியும். எங்கெல்லாமோ கிணறுகள், போரிங் வெல்கள் எல்லாம் வெட்டுகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அந்த மாதிரிக் கிணறுகளை எங்கள் தொகுதியிலும், அவர்களுடைய தொகுதியிலும், நேசமணி அவர்களின் தொகுதியிலும் வெட்டினால் அங்குள்ளவாசிகளுக்குச் சௌகரியமாயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தண்ணீர் பிரச்னையானது எங்களைப் பொருத்த அளவில் மிகவும் கஷ்டமாயிருக்கிறது. அதை இந்த சர்க்கார் நல்ல முறையில் ஆலோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு விண்ணப்பம். இந்த ஐந்தண்டுத் திட்டத்தைப் பொருத்தவரையில் அங்கு இருக்கிற அதிகாரிகள் பொதுஜனபிரதிநிதிகளை வரவழைத்து அவர்களைக் கலந்து எதுவும் செய்வதில்லை, ஒன்றும் கேட்பதில்லை. நான் ஒரு நாள் போனில் டிஸ்டிரிக்ட் கலெக்டரைக் கூப்பிட்டு என்னென்ன போட்டிருக்கிறது என்று கேட்டேன். அவர் அதற்கு எனக்குத் தெரிந்தமாதிரி செய்தேன் என்று சொன்னார். அப்படியானால் என்னைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் ஏன் இருக்கவேண்டுமென்று கேட்டேன். அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. மக்கள் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு வரவழைத்துக் கொண்டு அவர்களை என்னென்ன செய்யவேண்டும், தண்ணீர் வேண்டுமா, லைட் வேண்டுமா, ரோடு வேண்டுமா, என்னென்னவேண்டும் என்று கேட்கிறதை மறந்துவிட்டு இந்த அளவில் அதிகாரிகள் நடப்பது மிக மிகத் தவறு. இவைகள் நல்ல முறையில் கவனிக்கப்படுமென்ற நம்பிக்கையோடு, இந்தப்பிரேரணையை ஆதரித்து என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன் ; வணக்கம்.

SRI M. JAGANNATHAN : மதிப்புக்குரிய துணைத்தலைவர் அவர்களே . . . . . . . .

DEPUTY SPEAKER : I have to inform hon. Members that only ten minutes are allowed for each hon. Member and they should not take more time.

SRI M. JAGANNATHAN : மத்திப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கும் மசோதா நிறைவேற்றப்படவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு சில வார்த்தைகளைக்கூற விரும்புகிறேன். ஏறக்குறைய கடந்த மூன்று வாரங்களாக நம் மாநில பட்ஜெட் விவாதம் மிகவும் நல்ல முறையில் நடந்தது. நாட்டின் பட்ஜெட்டானது, நாட்டின் நிலையைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இம்மாதிரி ஒரு உயரிய பண்பாடுடைய நம் சபையில் இந்த பட்ஜெட்டானது நல்ல முறையிலே விவாதிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திலே பல மான்ய கோரிக்கைகள் சர்க்கார் தரப்பிலே கொண்டுவரப்பட்டு, அதற்கெல்லாம் வெட்டுப் பிரேரணைகள் எதிர்க் கட்சிகள் தரப்பிலே தரப்பட்டன. அப்போது நல்ல விவாதங்கள் நடத்தப்பட்டன. அப்படி விவாதிக்கப்படும் சந்தர்ப்பத்திலே ஆளும் கட்சி அங்கத்தினர்களாலும், எதிர்க் கட்சி அங்கத்தினர்களாலும் பல நல்ல கருத்துரைகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு அங்கத்தினர்களின் தொகுதியின் நிலைமை பற்றியும், நாட்டு மக்களின் நிலைமை பற்றியும், பிறகு இந்த நாட்டில் இருக்கிற சட்டங்கள் எந்த அளவு மக்களுக்குப் பயன்பட்டு வருகின்றன என்பது பற்றியும் நல்ல கருத்துரைகள் சொலலப்பட்டன. அந்தந்த மான்யத்திற்கு அந்தந்த அமைச்சர்கள் பதிலளிக்கையில் அங்கத்தினர்களால் என்னென்ன குறைப்பாடுகள் இந்தச் சபையிலே எடுத்துச்சொல்லப்பட்டனவோ, அவைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய முறையில் அரசாங்கம் செயலாற்ற முன்வருமென்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை அமைச்சரவர்கள் ஒவ்வொருவரும் மனதில் வைத்துக்கொண்டு

10-44 ந.ம.

[Sri M. Jagannathan] [26th July 1957

நல்ல முறையில் பூர்த்தி செய்து, மக்களுடைய குறைபாடுகளைத் தீர்த்து வைத்து, அவர்களுடைய சுபீட்ச வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் தொழிலமைச்சர் அவர்கள் தொழில் மான்யக் கோரிக்கைக்கு பதில் அளிக்கும் முறையில் விவசாயத் தொழிலாளிகளின் நிலைமை பற்றிய விவாதத்திற்கு பதில் சொன்னார்கள். இந்த நாட்டில் விவசாயத் தொழிலாளிகளின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமென்று சட்டசபையில் பேசினால் போதாது, கிராமப்புறங்களில் சென்று அங்குள்ள விவசாயத் தொழிலாளிகளிடையே தொழில் சங்கங்கள் ஏற்படுத்துவது, அவர்களுடைய உயர்ந்த பட்ச கூலி பெறுவதற்கு அங்கத்தினர்கள் பாடுபடவேண்டுமென்று ஒரு நல்ல கருத்தை வெளியிட்டார்கள். ஆனால் மந்திரி அவர்கள் எந்தப் புத்திமதியை இங்கு சொன்னாரோ, அதே புத்திமதியை அவர்களுக்குத் திருப்பிச்சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். சட்ட சபையில் மந்திரிமார்கள் பேசிவிட்டால் போதாது, அரசாங்கத்தரப்பில் அவர்கள் கொடுக்கிற வாக்குறுதியை நல்ல முறையில் நிறைவேற்ற முன் வரவேண்டும். விவசாயிகள் மத்தியிலே தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கவேண்டுமென்ற அறிவுரை வழங்கிய மந்திரி அவர்கள் ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயிகள் மத்தியிலே தொழிற் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, உயர்ந் பட்ச கூலிக்காக தொழிற் சங்கங்கள் மூலமாக கோரிக்கைகளைக் காட்டும்போது, அந்த நிலச்சுவான்தார்கள் உடனடியாக அந்தத்தொழிற் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களையெல்லாம், 'நீங்களெல்லாம் கம்யூனிஸ்டுகள்' என்று திருநாமம் சூட்டி, சிறையில் தள்ளி, சுட்டுத் தள்ளும் வழிகளில் இறங்கியிருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில், குறிப்பாக தஞ்சை ஜில்லாவில் நடைபெற்ற சம்பவங்கள். அப்போதெல்லாம் அரசாங்கம் என்ன செய்து கொண்டிருந்தது. சட்டசபையில் அங்கத்தினர்கள் சொல்லும்போது அவைகளையெல்லாம் அரசாங்கம் கவனிக்குமென்று வாக்குறுதி கொடுத்தால் போதாது. அரசாங்கத்தின் தரப்பிலே தொழிலாளர்களின் நிலையைப் பாதுகாக்க முன் வருவோமென்று அமைச்சரவர்கள் உறுதிமொழி கொடுக்க வேண்டும். தொழிலாளர்களின் அவல நிலையைப் பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு வாளாவிருந்தால் போதாது என்று சொல்ல விரும்புகிறேன். பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவல் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அந்தப் பழமொழிக்கேற்ப இந்த அரசாங்கமானது நிலச்சுவான்தார்களுக்கு அனுகூலமாக இருந்துகொண்டு, மற்றொரு பக்கத்தில் ஏழை விவசாயிகளைப் பாதுகாக்க முன் வருகிறோம் என்று சொல்கிறார்களே தவிர, குறிப்பாக விவசாயத் துறையில் உள்ள ஏழைத் தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்க, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சர்க்கார் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைப் பார்க்கும் போது உண்மையிலேயே வருத்தமாகத்தான் இருக்கிறது.

(Sri M. C. Muthukumaraswamy rose.)

DEPUTY SPEAKER : The hon. Member is not yielding.

SRI M. JAGANNATHAN : ஹரிஜன முன்னேற்றத்தைப் பற்றி, அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த சர்க்கார் கொண்டிருக்கும் திட்டங்களைப் பற்றியும், சட்டங்களைப்பற்றியும், கொள்கைகளைப்பற்றியும் நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கொள்கைகள் அதிருப்திகரமான கொள்கைகளாக இருக்கிறது. அந்தத் திட்டங்களும் சட்டங்களும் நல்ல முறையிலே அமுலாக்கப்பட்டு அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப்பயன்படவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுடைய அடிப்படையான தேவைகள், அதாவது ஆங்கிலத்தில் "எலிமென்டரி நெசசிட்டி" என்று சொல்வார்கள். அடிப்படையான அவர்களுடைய ஜீவாதார பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு சர்க்கார் இது வரைக்கும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஏதோ சிலருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து விட்டால் போதாது. சில



26th July 1957] [Sri M. Jagannathan]

குறிப்பிட்ட இடங்களில் சிலருக்கு உணவு விடுதிகளை அமைத்து மாணவர்களுக்கு உணவு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. மனைக்கட்டுகள் கொடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவைகளைப்பற்றிய புள்ளி விவரங்கள் தான் கொடுக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் பார்த்தால் அரிஜனங்களுடைய வாழ்கை முறையைப் பார்த்தால் அவர்களுடைய அவல நிலை, சீர்கேடான நிலை அப்படியே தான் இருக்கிறது. எந்த விதமான மாறுதலும் ஏற்படவில்லை என்பதை அரசாங்கம் நன்றாக அறிந்திருந்த போதிலும் அவைகளை அகற்றுவதற்கு இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அரிஜனங்களுடைய குறைபாடுகளை நீக்குவதற்கும், அவர்களுடைய பிரச்னைகளை நல்ல முறையில் தீர்த்து வைப்பதற்கும் அரிஜனங்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் எந்த விதமான உருப்படியான திட்டமோ சட்டமோ இயற்றவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக தீண்டாமை ஒழிக்கும் கொள்கையில் சர்க்கார் கடைப்பிடிக்கிற கொள்கையானது மிகமிக விந்தையாக இருக்கிறது. தீண்டாமை ஒழிப்புச் சட்டம் 1955ம் வருஷம் ஜூன் மாதம் முதல் தேதி பிறப்பிக்கப்பட்ட போதிலும் அந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கு சர்க்கார் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வில்லை என்று நான் சொல்லுவேன். ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் ஒரு விதமான நல்ல எண்ணத்துடன் எந்த விதமான அக்கறையுடன் அந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு அக்கறை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் சர்க்கார் தரப்பில் ஒரு விதமாகச் சொல்லப்படுகிறது. இந்த தீண்டாமை கொள்கையானது பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக நம் நாட்டில் இருந்து வருகிறது, அதை சட்டத்தினால் உடனடியாக மாற்றி விடமுடியாது, மனிதர்களுடைய மனப்பான்மை கொஞ்சம் கொஞ்சமாக மாறி அது ஒழிய வேண்டும், மக்களிடத்தில் மனம் மாறவேண்டும் என்று தான் அவர்கள் சொல்லி வருகிறார்கள். இப்படிச் சொல்லி காலத்தின் மேல் பாரத்தைப் போடுகிறார்கள்.

THE HON. SRI P. KAKKAN : நான் எப்பொழுதும் அப்படிச் சொன்னது கிடையாது.

SRI M. JAGANNATHAN : இப்படிச் சர்க்கார் எண்ணிக்கொண்டிருந்தால் இந்தத் தீண்டாமைப் பிரச்னை எந்தக் காலத்திலும் ஒழியாது. ஆயிரம் வருஷம் ஆனாலும் கூட இந்தப் பிரச்னை நீங்காது. இது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். காலத்தின் மேல் பாரத்தைப் போடாமல் சட்டம் மூலமாக அதை அமுல் நடத்த சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரிஜனங்களிலுள்ள பெரிய ஸாஸ்திரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் காலத்தினால் தீண்டாமையை நீக்க முடியாது என்றும் சட்டதிட்டங்களினால்தான் அதை ஒழிக்கமுடியும் என்றும் சொல்லுகிறார்கள். மற்றபடி மக்களுடைய மனப்பான்மையை மாற்றி இதை ஒழிக்க முடியாது என்றும் சொல்லுகிறார்கள். காலத்தின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நாம் சும்மா இருந்துவிடக் கூடாது என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே சர்க்கார் இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு நல்ல முறையில் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படித் தீண்டாமையை ஒழிப்பதற்கு முன் வரவேண்டும்.

அடுத்தபடியாக இந்தச் சட்டசபையில் பல அங்கத்தினர்கள் தங்களுடைய தொகுதிகளைப்பற்றி நாட்டிலுள்ள பல பிரச்னைகளைப்பற்றி பல கேள்விகள் கேட்கிறார்கள். அப்படிக் கேள்விகள் கேட்டு இரண்டு மாதங்களானாலும் பதில் கிடைப்பது இல்லை. பதில் வராமல் இருக்கும்போது கேள்விகளை சட்டசபையின் முன் வைத்து கேள்விக்குப் பதில் கலெக்டரிடமிருந்து இன்னும் வரவில்லை, பதில் கிடைத்தவுடன் கேள்விக்குப் பதில் கொடுக்கமுடியும் என்று பதில் சொல்லுகிறார்கள். இப்படியே பதில் சொல்லக் கூடிய அளவில் இந்தச் சட்டசபை நடந்துவருகிறது. கடந்த ஐந்து வருஷங்கள் நடந்த சட்டசபையில் இப்படி நிகழ்ந்தது இல்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் தங்களுக்குப் பெரிய மெஜாரிட்டி கிடைத்து, விட்டது. ஆகவே நாம் வெகு சுலபமாக இந்தச் சர்க்காரை நடத்திக்கொண்டு போகலாம் என்ற

சர்வாதிகார மனப்பான்மையில் இருப்பதாகத் தெரிகிறது. இது ஜனநாயகத்திற்கும் ஜனநாயகப் பண்பாட்டிற்கும் முரணானது. இந்த முறை தவறான முறை. இரண்டு மாதங்களுக்கு முன்னால் கேட்ட கேள்விக்கு இது வரையில் என் பதில் சொல்லப்படவில்லை. இதற்குச் சர்க்கார் தரப்பிலிருந்து நல்ல காரணம் கொடுத்தும் பதில் சொல்வது இல்லை. சதாரணமாக "ப்ளூ" என்ற விஷஜுரத்திலிருந்து . . . .

(Deputy Speaker sounded the gong and the hon. Member resumed his seat.)

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : கனம் சபாநாயகர்அவர்களே On a point of information; இதற்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் தஞ்சை ஜில்லாவில் விவசாயிகள் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள் என்று சொன்னார். நான் தஞ்சை ஜில்லாவாசி. அந்த மாதிரி அங்கு சுட்டுவீழ்த்தப்படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER** : This is no point of information. Sri V. Sankaran will now speak.

10-50 a.m. ***Sri V. SANKARAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத் திட்ட சம்பந்தமான மானிய கோரிக்கைகள் எல்லாம் நல்ல விதத்தில் விவாதம் செய்யப்பட்டு அநேகமாக எல்லா வாதங்களுக்கும் பதில் அளிக்கப்பட்டு நல்ல முறையில் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன. ஆனால் ஒரே ஒரு விவாதத்திற்கு மட்டும் நான் இப்பொழுது பதில் அளிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் வரி விதிக்கப்படவேண்டும் என்ற கொள்கையைப்பற்றி அதிக வரி விதிப்பை ஆட்சேபிக்கவில்லை என்றும் ஆனால் அதே சமயத்தில் யார் பேரில் வரி விதிப்பது என்பதுதான் கேள்வி என்றும் கூறினார்கள். அப்படி வரி விதிக்கும்போது யாருக்கு வரி விதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சொன்னார்கள். அதாவது இன்றைக்கு நாட்டில் இருக்கக் கூடியவர்களில் அதிகமாகப் பணம் படைத்தவர்களுக்கும் அதிகமான நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் அதிகமாக ஆஸ்தி வைத்துக்கொண்ருக்கிறவர்களுக்கும் அதிகப்படியாக வரி விதித்து வசூலிக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது அதிகப்படியான ஆஸ்தி வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கும் அதிகமாக நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் அதிகமாக வரி விதிக்காமல் இல்லை. அதிகமாக ஆஸ்தி வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு மரண வரி என்று இருக்கும் போதும் இறந்த பின்னும் வரி விதித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே ஒரு வர்க்கத்தினருக்கு என்று வரி விதிக்கவேண்டும் என்று சொன்னால் அது பொருந்தாது என்று தான் நான் சொல்வேன். அப்படிப்பட்ட கொள்கையில் ஒன்றை மட்டும் அடிப்படையாக வைத்து வரி விதித்தல் அதில் நிரந்தரமான வருமானம் எதிர்பார்க்கமுடியாது. அதன் மூலம் சர்க்காருக்கு நிரந்தரமான வருமானம் கிடையாது. நிரந்தரமாக சர்க்காருக்கு வருமானம் கிடைக்கவேண்டுமானால் நிரந்தரமாக வரக்கூடிய முறையிலும் கடைப்பிடிக்கவேண்டும். அதிகமாகப் பணம் படைத்தவர்களுக்கு வரி விதிக் வேண்டும் என்று சொல்லி அப்படி விதித்தால் பணம் படைத்தவர்கள் தங்களுடைய பணத்தை எடுத்து தன்னுடைய பந்துக்களில் நாலைந்து பேர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டு வரி கொடுக்காமல் இருப்பார்கள். அப்பொழுது நாம் எதிர்பார்த்த அளவில் வரி அவரிடமிருந்து கிடைக்காமல் போய்விடும். அதனால் அந்த ஒரே கொள்கையின்படி வரி விதிப்பது என்பதும் சரியல்ல. மற்றும் அதிகப்படியான நிலம் படைத்தவர்களுக்குக் அதிகப்படியான வரி விதிக்கவேண்டும் என்று சட்டம் செய்தால் அதிக நிலம் படைத்தவர்கள் தங்களுடைய நிலத்தை தங்களுடைய சுற்றத்தார்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக பங்கிட்டுக் கொடுத்து விட்டு குறைந்த பட்ச நிலத்தை வைத்துக்கொண்டு சட்டத்தின்படி வரி கொடுப்பதிலிருந்து தப்பித்துக்கொள்ளுவார்கள். அப்பொழுதும் நாம் எதிர்பார்த்தபடி அவர்களிடமிருந்தும் வரி வசூலிக்க முடியாமல் போய்விடும். ஆகவே இந்தக் கொள்கையும் சரியல்ல. ஆகவே நாம் வரி விதிக்க





வேண்டுமானால் அது நிரந்தரமாக வரக்கூடிய முறையையும் கையாள வேண்டும். ஆகவே சாதாரணமாக ஜனங்கள் அத்தியாவசியமாக உபயோகப்படுத்தக் கூடிய பொருள்களின் மீது வரி விதிக்கும்படியான கொள்கையையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். அந்த தத்துவத்தையும் ஏற்றுக் கொண்டுதான் நாம் வரி விதிக்கவேண்டும். அப்போதுதான் அதிக ஏற்றத்தாழ்வின்றி எப்போதும் நாம் எதிர்பார்க்கின்றபடி ஒரே அளவாக நிரந்தரமான வரி வருமானம் கிடைக்கும். குறிப்பாக பணக்காரர்களுக்கும் அதிக நிலம் படைத்தவர்களுக்கும் வரி விதிக்கவேண்டும் என்று சொன்னால் நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவில் ஏற்றத்தாழ்வின்றி வரிப் பணம் கிடைக்காது. ஆகவே ஒரு வகுப்பினர் என்ற முறையில் மட்டும் வரி விதிக்கவேண்டும் என்பது கூடாது. அந்தக் கொள்கையை மட்டும் நாம் வைத்துக்கொள்ளக்கூடாது. எந்தப் பொருள்மீதும் வரி விதிக்கவேண்டும் என்ற கொள்கையும் அடிப்படியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக இந்தச் சட்டசபையில் நிலத்தில் உழுகிறவர்களுக்கும் விவசாயிகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வருகிறார்கள். அவர்களுக்கு என்று நியாயவார மசோதாவையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். விவசாயிகள் நன்மைக்கும் பாதுகாப்பிற்கும் இந்தச் சபையில் அதிகம் பேசப்பட்டது. ஆனால் சிறுசில நிலச்சுவான்தார்களின் பாதுகாப்பிற்கு அதிகம் பேசப்படவில்லை. சட்டத்தில் சிறு நிலச்சுவான்தாரர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் அளிக்கவில்லை. அவர்களுக்கு எந்த விதமான விதி விலக்கும் அளிக்கவில்லை. எந்த விதிக்கும் விலக்கு இல்லாமல் இருக்கமுடியாது. அந்த முறையில் இவர்களுக்கு நியாயமாக சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும். சிறு நிலச்சுவான்தார்கள் தங்களுடைய நிலத்திலிருந்து மாதம் சுமார் 100 அல்லது 150 ரூபாய் வருமானம் அடைந்து அதை வைத்துக்கொண்டு தங்களுடைய காலத்தை கழித்துக்கொண்டுவருகிறார்கள். முக்கியமாக எவ்வளவோ விதவைகள் சிறு நிலத்தை அதாவது இரண்டு அல்லது மூன்று ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு—அதுவே அவர்களுடைய மொத்த ஆஸ்தியாக இருக்கும்—அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்துக்கொண்டு தங்களுடைய ஜீவனத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்களும் இந்த நியாய வார சட்டப்படி வாரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அது நியாயம் அல்ல. சாதாரணமாக, ஒரு குடும்ப வாழ்க்கைக்கு 150, 200 ரூபாய் வேண்டிய இந்தக் காலத்தில் அவர்களுக்கு வரக்கூடிய 100 அல்லது 150 ரூபாய் வருமானத்தில் 20 அல்லது 30 ரூபாய் மற்றொருவனுக்கு—அவன் எவ்வளவு ஏழையாக இருந்தாலும்—கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல, மக்கள் க்ஷேமநல அரசாங்கத்தில், இம்மாதிரி ஏற்படவிடுவது முறையல்ல. அதனால் அவர்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் அப்படிக்கொடுப்பதால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் இப்படிப்பட்ட சிறு நிலச்சுவான்தார்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே இப்பொழுது கிண்டி, இன்னும் மற்ற இடங்களில் தொழில் நுணுக்கக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, தொழில் நுணுக்கப் பயிற்சி அளிப்பதற்கு மத்திய அரசாங்கம் உதவியளிக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். தொழில் நுணுக்கப் பயிற்சிகளில் துணி உற்பத்திவகையில் எல். டி. எம். படிப்பு முக்கியமானது. நாட்டிலே பல நூற்பு ஆலைகளும், பஞ்சாலைகளும் அதிகமாக ஏற்பட்டிருக்கும் இந்தக்காலத்தில் எல். டி. எம். படிப்பு முக்கியமானது. தமிழ்நாட்டில் கோவை, சென்னை ஆகிய இரண்டு இடங்களில்தான் இந்த வகுப்பு இருக்கிறது. மதுரையில் பஞ்சாலைகள் பெருகிக்கொண்டு வருகிறது. அதுபோல் மதுரையைச்சுற்றி திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சி ஆகிய ஜில்லாக்களிலும் பஞ்சாலைகள் பெருகிக்கொண்டு வரும்போது, எல். டி. எம். வகுப்பை மதுரையில் ஏற்படுத்தவேண்டும். மதுரையில் தொழில்நுணுக்கப் பள்ளியில் (பாலிடெக்னிக்) அடுத்த ஆண்டிலாவது எல். டி. எம். வகுப்பைத் துவக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri V. Sankaran] [26th July 1957

மதுரை நகரசபையின்கீழ் சுகாதார வசதி என்ற முறையில் பாதாள சாக்கடைத்திட்டம் 8-ல் இருந்து 12-வது திட்டம் வரையில் நடந்திருக்கிறது. சர்க்கார் இதுவரை பங்கு செலுத்தி வந்தும், இப்பொழுது திடீரென்று நிறுத்திவிட்டது. அதனால், மேற்கொண்டு அந்த வேலையைத் தொடர்ந்து நடத்த முடியாமலிருக்கிறது. சர்க்கார் மேற்கொண்டு முன்போல் அந்த வேலைத் திட்டத்திற்கு உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுகொள்ளுகிறேன்.

ஸ்லம் க்ளியரன்ஸ் விஷயத்திலும் மதுரை நகரசபை இதுவரைக்கும் சர்க்காருடைய உதவியையும் பங்கையும் பெற்று வேலை செய்துவந்தன. சர்க்கார் அந்த வகையிலும் உதவியை நிறுத்திவிட்டதால் அந்த வேலையும் இப்பொழுது நின்றுவிட்டது. சர்க்கார் மறுபடியும் தொடர்ந்து உதவி கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மதுரையில் குடிதண்ணீர் வசதி மிகவும் பற்றுக்குறையாக இருக்கிறது. ஐந்து லட்சம் ரூபாய்ச் செலவில் 10 லாரியை வைத்துக்கொண்டு, ஒரு நாளைக்கு 200 லாரி தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. காரணம், குழாய்மூலம் தண்ணீர் வசதி போதாமல் இருக்கிறது. பரணி அணை கட்டினதால் நீர் ஊற்றுக்கள் ஏற்கனவே ஆழத்தில் போய்விட்டது. வைகை ரிசர்வாயர் கட்டி முடியும் தருவாயில் இருக்கிறது. அதனால் மேற்கொண்டு ஊற்றுக்கள் கீழே போய்விடும். நாங்கள் ஒரு திட்டம் சர்க்காருக்குச் சமர்ப்பித்திருக்கிறோம். வைகை ரிசர்வாயரிலிருந்து ஒரு அளவு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று. ஏற்கனவே மகஜர் போட்டிருக்கிறது. முனிசிபாலிட்டியும் தீர்மானம் நிறைவேற்றி சர்க்காருக்குச் சமர்ப்பித்திருக்கிறது. பிரதம என்ஜினியரும் சர்க்காருக்குச் சிபார்சு செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதையும் சர்க்கார் கவனித்து, நகர சபை அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரத்திற்குள்ளே லாரிகள் இரவு நேரங்களில் கண்ட இடங்களில் நிறுத்தப்படுவதால் மக்களுக்குப் பெரும் இடையூறுகவும் தொந்திரவாகவும் இருக்கிறது. லாரிகள் முக்கியமாக "காஸ்" லாரிகளாக இருப்பதால் இரவெல்லாம் ஒரே சப்தமும் இரைச்சலுமாக இருந்து, தூக்கத்திற்கு ஹானி ஏற்பட்டு, சுகாதாரத்திற்கும் இடைஞ்சலாக இருக்கிறது. முனிசிபல் எல்லைக்கு வெளியேதான் லாரிகள் இரவு நேரங்களில் நிறுத்தப்படவேண்டுமென்ற யோசனையை பொதுவாக எல்லா முனிசிபாலிட்டிகளும் சர்க்காருக்குத் தெரிவிக்கலாம். நகரத்திற்கு வெளியே லாரிகள் தங்குவதற்காக ஒரு "ஷெட்" கட்டிக்கொடுத்து, அங்கு லாரிகள் இரவில் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று நான் கெட்டுக்கொள்ளுகின்றேன்.

ஷாப் அஸிஸ்டெண்ட் சட்டம், அனேகமாக எங்கள் மதுரை போன்ற நகரங்களில் நடுத்தரமான பாங்க்களிலும் கடைகளிலும் சரிவர அனுசரிக்கப்படுவதில்லை. எட்டு மணி நேரம் வேலை என்பது அனேக இடங்களில் அனுசரிக்கப்படாமல், கடை சிப்பந்திகளிடமிருந்து அதிக நேரம் வேலை வாங்கப்படுகிறது. அதிகாரிகள் நல்ல முறையிலே கண்காணித்து, சரியான முறையில் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வெற்றிலைப் பாக்குக் கடைகள் போன்ற "பெட்டி ஷாப்பு"-களுக்கு உருமான வரி விதிப்பதற்கான புகையிலைச் சரக்குகளையும் மதிப்பீட்டில் சேர்த்துகொண்டு வருஷத்தில் பத்தாயிரத்திற்கு மேல் வருமானம் வந்தால் வருமான வரி விதிக்கின்றார்கள். அது மிகவும் வியாபாரிகளுக்குக் கடுமையாக இருக்கிறது. அவர்கள் அதற்காக வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நடைமுறையில் அவர்கள் வியாபாரம் எல்லாம் காலணா, அரையணா முதல் இரண்டணா வியாபாரம் தான். அவர்கள் கணக்கு வைத்துக்கொள்வதென்றால் பெரிய தொல்லையாக இருக்கிறது. உத்தியோகஸ்தர்கள் தொல்லையையும் அதிகமாக இருக்கிறது. பத்தாயிரம் ரூபாய் வரையில் மதிப்பு இருக்கிறதா இல்லையா என்று கணக்கிடுவதற்கு புகையிலைச் சரக்குகளின் மதிப்பையும் சேர்த்துக்கொண்டு வரி விதிக்கிறார்கள்



26th July 1957] [Sri V. Sankaran]

1955-ம் வருஷம் நவம்பர் மாதம்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்தத் திருத்தத்தை ரத்து செய்துவிட்டால்தான் சிறு கடைக்காரர்களுக்கு அனுகூலமாக இருக்கும். அப்படிச் செய்யவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

**DEPUTY SPEAKER** : The hon. Member's time is up. The hon. Member must finish his speech within the time allotted.

**SRI V. SANKARAN** : One minute more, Sir. I will finish my speech within that time.

வறு கடலை, அவல் போன்ற பொருள்களுக்கு இப்பொழுது விற்பனை வரி விதிக்கப்படுகிறது. அது சம்பந்தமாக சர்க்காருக்கு விண்ணப்பம செய்ததின் பேரில், கூட்டுறவு சங்கங்கள் அமைத்தால் விதிவிலக்கு அளிக்கப்படும் என்று நான் கேள்விப்படுகிறேன். வறு கடலை, அவல் போன்ற வியாபாரங்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நடைபெறுவதென்பது சாத்தியமாக இருக்காது. காலணா முதல் நாலணா வரையில் வியாபாரம் ஆகக்கூடிய இச்சிறு விற்பனைக்கு வரி விதிப்பது நல்லது அல்ல. அதிலும் உடனுக்குடன் சூடு ஆறுவதற்குள் விற்க வேண்டிய பொருள்களாதலால் ஈடுபட்டிருப்பவர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக்கொண்டு விதிவிலக்கு பெறுவது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லாத காரியம். ஆகவே, இதை ஒரு சிறு குடிசைத் தொழிலாக ஏற்றுக்கொண்டு, அவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய வார்த்தையை நான் முடித்துக்கொள்ளுகின்றேன்.

**SRI P. M. MUNUSAMI GOUNDER** : டெபுடி ஸ்பீக்கர், ஸார், இன் 11·0 a.m.
றையதினம் நம்முடைய சபையில் விவாதத்திலிருக்கும் இந்த மசோதாவை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த ஒரு மாதகாலமாக நம்முடைய சர்க்காரால் கொண்டுவரப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டத்தின்மீதும், அதிலுள்ள மான்யங்களின்மீதும் அங்கத்தினர் ஒவ்வொருவரும் அதில் நல்ல முறையிலே பங்கெடுத்துக்கொண்டு, சர்க்காருக்கு எல்லாக் காரியங்களையும் வெற்றிகரமாக நடத்தி, கோரியிருந்த மான்யத்தையும் நாம் வெற்றிகரமாக அவர்களுக்கு அனுமதி அளிப்பதைப் பற்றி ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

ஹரிஜன நல இலாகா மான்யம் சபை முன் விவாதத்திற்கு வந்த போது, பல ஹரிஜன அங்கத்தினர்கள் அந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்ட சமயத்தில், ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையானது இந்த இலாகாவிலிருந்து பிற்போக்கான சமூகத்தினருக்கும், அதிலும் Most Backward என்று சொல்லப்படும் சில பகுதியினருக்கும் போய்விட்டது என்று சொல்லப்பட்டது. அதனால், ஹரிஜன மக்கள் பெற வேண்டிய பகுதியைப் பெற முடியாமல் போகிறது என்ற குற்றச் சாட்டுகளைப் பல நண்பர்கள் எடுத்துச் சொல்லியபோது என் போன்றவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை. நம் மாகாணத்தில் ஹரிஜனங்களை விட பிற்போக்கான சமூகங்களும் இருக்கின்றன என்பதை ஹரிஜன நண்பர்களும் மற்றவர்களும் மனதில் கொள்ள வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஒட்டர்கள், நாவிதர்கள் போன்றவர்களும், வன்னிய குல க்ஷத்திரியர்களும் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. அவர்களுக்குச் சாதாரணமாக தொழில் கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை. அதனால்தான் அவர்கள் Most Backward என்று கருதப்பட்டு, ஸ்காலர்ஷிப் வழங்குவதில் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கொடுக்க வேண்டுமென்ற விதி வந்ததிலிருந்து அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கிறது. ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் சலுகைகளைப் போல் இவர்களுக்கும் ஏன் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம் என்றால், அவர்களுக்கும் 5, 10, வருஷங்கள் வரை தொழில் கல்லூரிகளில் இடம் கொடுத்

தோமானால், அவர்களும் ஏதோ ஒரு அளவுக்கு முன்னேறி வர வழி ஏற்படும். கடந்த வருஷத்தில் Most Backward என்ற வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு இடம்கூட தொழில் கல்லூரியில் கிடைக்கவில்லை என்பதை அங்கத்தினர்கள் மனதில் கொள்ளவேண்டும். அதே மாதிரி இந்த வருஷத்தில் கூட அனேகருக்கு இடம் கிடைக்கவில்லை. அது மிகவும் கஷ்டத்தை அளிக்கிறது. Most Backward வகுப்பினருக்கு ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து கொடுக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஹரிஜனங்களுக்கு எப்படி ஒதுக்கப்பட்டதோ, அதேமாதிரி இவர்களுக்கும் இடங்கள் ஒதுக்கவேண்டுமென்று நம்முடைய சர்க்காரை வற்புறுத்திப் பெற வேண்டுமென்றுதான் சொல்லிக்கொள்ளுகிறோமே தவிர, வேறொன்றுமில்லை. இவர்களுக்குக் கொடுப்பதால் ஹரிஜனங்கள் பெற்றுவரும் சலுகைகள் எந்த விதத்திலும் பாதகம் அடையாது என்பதையும் அங்கத்தினர்கள் அறியவேண்டும். அதை அறிந்து, மிக பிற்போக்காக இருப்பவர்களுக்கு அவசியம் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் சலுகை போன்றே சர்க்கார் கொடுக்கும்படியாக ஒவ்வொரு அங்கத்தினரும் கோரவேண்டுமென்று இந்தச் சமயத்தில் வற்புறுத்த விரும்புகிறேன். இதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து அவர்களுடைய பகுதியைக் கொடுப்பதில் கஷ்டம் ஏதும் இருப்பதற்கில்லை. நிதி அமைச்சர் அவர்கள் இது விஷயத்தைக் கவனித்து, அடுத்த வருஷத்திலாவது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் இருக்கிறதென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் கல்லூரிகளில் மாணவர்களைப் பொறுக்கி எடுப்பதில் செய்யப்பட்டுள்ள மாறுதலைப் பற்றிப் பேச ஆசைப்படுகிறேன். முன்பு, ஜில்லாவாரியாக மாணவர்கள் பொறுக்கியெடுக்கப்படுவது கிடையாது. முன்பு, பொதுவாக யார் யார் அதிகமான மார்க்குகள் வாங்கியிருப்பார்களோ அவர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டார்கள். இப்போது ஜில்லா வாரியாக மாணவர்களைப் பொறுக்கியெடுப்பதால், எல்லா ஜில்லா மாணவர்களும் பொறுக்கியெடுக்கப்படுகிறார்கள். இதே மாதிரி தாலுகா வாரியாக மாணவர்களைப் பொறுக்கியெடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது, ஹோசூர், கிருஷ்ணகிரி, ஹரூர் போன்ற தாலுக்காக்களின் மாணவர்கள் பொறுக்கியெடுக்கப்படுவதே கிடையாது. அந்தத் தாலுக்காக்கள் பிற்போக்காக இருப்பதால், அவைகளைச் சேர்ந்த மாணவர்கள் குறைவான மார்க்குகள் வாங்கும் நிலைமை இருக்கிறது. ஆகையால் எஞ்சினீரிங் கல்லூரியிலும், வைத்தியக் கல்லூரியிலும் தாலுக்கா வாரியாக மாணவர்களைப் பொறுக்கி யெடுத்தால் எல்லாத் தாலூக்காக்களிலிருந்தும் தகுந்த விகிதாசார மாணவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தப்படியாக, கிருஷ்ணகிரியில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் ஒரு கோடி 87 லக்ஷம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. அது சீக்கிரம் முடிந்து அடுத்த மாதம் 15-ம் தேதி திறந்து வைக்கப்படக் கூடிய நிலையில் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகைக்குக் குறைவாகவே பணம் செலவாகி இருக்கிறது. ஆதலால் அதில் ஒரு பகுதி பணம்—சுமார் ரூபாய் 20 லட்சம்—மீதியாகும் என்று தெரிகிறது. கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு இந்த விஷயம் நன்றாகத் தெரியும். கிருஷ்ணகிரியைப் பொறுத்த வரையில், நீர்த்தேக்கம் மூன்று மைல் தூரத்தில் இருந்தாலும் கூட, கிருஷ்ணகிரி மக்கள் குடிதண்ணீர் வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பெரிய நகரத்தில், வெய்யில் காலத்தில் குடிதண்ணீர் என்பதே இல்லாமல் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. ஆங்காங்கு கிணறுகள் வெட்டியிருந்தாலும் அவை வறண்டுபோய் விடுகின்றன. கனம் அமைச்சர் அவர்கள் அங்கே வந்தபோது கூட, நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணகிரிக்கு நேரடியாக குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டோம்.

அப்போது அவர்கள் "லெவல்" சரியாக இல்லாததால் அந்த முறையில் தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்வது சாத்தியமல்ல என்றும், பம்பு செட்டுகளை வைத்துத்தான் குடிதண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்யமுடியும்



என்றும் சொன்னார்கள். எப்படியாவது கிருஷ்ணகிரிக்கு குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், ஹரூர் தாலுகாவிற்கு வாணியாறுத் திட்டம் என்ற நீர்ப்பாசன திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் அனேக வருடங்களுக்கு முன்பே உருவானது. அந்தத் திட்டம் 4—5 வருடங்களுக்கு முன்பே பரிசீலனை செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் பிறகு என்ன காரணத்தாலோ நின்றுவிட்டது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். பேனும் பாம்பாறுத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். இவை தவிர, ஹோசூர் தாலுகாவில் சாமனப்பள்ளித் திட்டம் சேர்க்கப்பட்டு, வேலை செய்யப்படவில்லை என்பதால் கைவிடப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் தெரியவில்லை. சாமனப்பள்ளித் திட்டத்தை பெரிய அளவில் இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது நிறைவேற்ற வேண்டும். எஞ்சினீயரிங் இலாகாவினருடன் கலந்தாலோசித்து சிறிய அளவிலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உடனடியாக முயற்சிக்க வேண்டும். இந்தத் திட்டத்தை சிறிய அளவில், 50 ஏக்கர்கள் பயனடையும் அளவிலாவது நிறைவேற்றினால், அந்தப் பகுதியில் நல்ல நீர்ப்பாசன வசதி ஏற்பட்டு நிலங்கள் நல்ல வளத்துடன் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும். அருகில் உள்ள பகுதிகளில் பெரிய பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, இந்தத் தாலூகாவில் சிறிய திட்டங்களைக் கூட நிறைவேற்றாவிட்டால், இந்தத் தாலூகாவிலுள்ள மக்களுக்கு ஒரு அருவருப்பு ஏற்படும். அது ஏற்படாதபடி செய்ய வேண்டும். நம் நாட்டில் உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்காகவும், தென்னாட்டின் முன்னேற்றத்திற்காகவும், வாணியாறுத் திட்டம், பாம்பாறுத் திட்டம், சாமனப்பள்ளித் திட்டம் ஆகிய திட்டங்களை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து சிறிய அளவிலாவது நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மைசூர் ராஜ்யத்துடன் சமீபத்தில் கொள்ளேகால் சேர்ந்துவிட்டதால் அங்கிருந்த கொள்ளேகால் சில்க் பாக்டரியும் அந்த ராஜ்யத்திற்குப் போய்விட்டது. நமது ராஜ்யத்திற்குப் பட்டுத் தொழிற்சாலை இல்லை. முசுக்கொட்டைச் செடிகள் ஹோசூர் தாலூகாவில் நிறைய இருக்கின்றன. மேலும் அந்தத் தாலூகாவில் முசுக்கொட்டைச் செடிகள் வளருவதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை இருக்கிறது. ஹோசூரிலும், பேரிகையிலும், கிருஷ்ணகிரியிலும் அத்தகைய சீதோஷ்ண நிலை இருக்கிறது. ஆகையால் கொள்ளேகாலில் இருப்பதைப்போன்று ஒசூரிலாகிலும் அல்லது கிருஷ்ணகிரியிலாகிலும், பட்டுத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI M. SELVARAJ : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள நெய்வேலித் திட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் நிலை சம்பந்தமாக நான்கு-ஐந்து நாட்களுக்கு முன்பு இந்தச் சபையில் கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரேபணை நிராகரிக்கப்பட்டது. ஆதலால் அது சம்பந்தமான சில குறிப்புகளை இப்போது இங்கே தர விரும்புகிறேன். நெய்வேலித் திட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் திட்டத்திற்காகத் தங்கள் நிலங்களை அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு மார்க்கெட் நிலவரப்படி போதிய நஷ்ட ஈடு கொடுப்பதில்லை. இதுசம்பந்தமான சட்டம் 1953-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. 1947-ம் ஆண்டில் நிலங்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த நஷ்ட ஈட்டின்படி அந்தச் சட்டத்தில் நஷ்ட ஈடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இன்று நிலங்களின் மதிப்பு மாறியிருக்கிறது. இன்று ரூ. 1,000—1,500 பெறக்கூடிய நிலங்களுக்கு அந்தச் சட்டப்படி ரூ. 250-தான் நஷ்டஈடு கொடுக்கப்படுகிறது. இதை அந்த வட்டார மக்கள் பலமுறை மகஜர்கள் மூலமாகவும் நேரிலும் கனம் மந்திரிகளுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இது வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 11-16 a.m.

[Sri M. Selvaraj] [26th July 1957

மேலும், அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் அதிகாரிகள், அந்த வட்டார மக்களுக்கு ஒரு நோட்டிஸும் கொடுக்காமல் திடீரென்று வந்து ஆர்ஜிதம் செய்துவருகிறார்கள். அவர்களுக்காக ஒரு "அவார்ட் ஆன் என் குயரி" வைத்து, அதிகாரிகள், தாங்கள் இருக்கும் இடத்திற்கு—அதாவது "அவார்ட் ஆன் என்க்குயரி" செய்யப்படும் இடத்திற்கு—அவர்களை வரவழைத்து, "இவ்வளவு நஷ்டஈடு கொடுக்கிறோம்" என்று சொல்லிக் கொள்ளாமல், அவர்களிடம் கையெழுத்துக்களை வாங்கிக்கொண்டு அதன் பிறகு, ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் கழிந்ததும் செக் "வாங் கிக்கொண்டு போ" என்று உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்கள். மேலும், அந்த வட்டாரத்தில் விவசாயம் செய்யும் மக்கள் தங்கள் நிலங்களில் மணிலாப்பயிரையும் புகையிலையையும் சாகுபடி செய்துவருகிறார்கள். மகசூல் சமயத்திலேயே அதிகாரிகள் அவர்களைக் கேட்காமல் டிராக்டர் களையும் புல்டோஸர்களையும் கொண்டுவந்து மகசூல்களை அழித்து விடு கிறார்கள். இப்படி அழிக்கப்படும் மகசூல்களுக்காகவும் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படுவதில்லை.

அரசாங்க அதிகாரிகளிடத்தில் அந்த வட்டார மக்கள் இந்தக் குறைகளை யெல்லாம் சொன்னால் அவைகளை அவர்கள் கவனிப்பதில்லை. கவனிக்க வேண்டும் என்று மக்கள் வற்புறுத்தி மறுபடியும் குறைகளைக் கூறினால், அதிகாரிகள் "வேண்டுமானால், உங்கள் மந்திரிகளிடமும், எம்.எல்.ஏ. க்களிடமும், எம்.பி.க்களிடமும் போங்கள். அவர்களிடம் குறைகளைச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே அந்த மக்கள் எங்களிடம் வந்து முறையிடுகிறார்கள். அவர்களுடைய குறைகளை அரசாங் கத்திற்குத் தெரிவித்தும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், அந்த வட்டாரத்தில் ஒரு பெரிய குழப் பத்தையும், அமைதிக்கு பங்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய நிலைமை நிலவி வருகிறது. அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருந்தால் அந்த வட்டாரத்தில் ஒரு பெரிய குழப்பம் ஏற்படும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அந்த வட்டாரத்தில் வீடுகளை அரசாங்கத்தார் எடுத்துக் கொள்வதற்காக அந்த வீட்டுக்காரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும்போது, அவைகள் 20–30 வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளாக இருந் தால், "டெப்ரீஸியேஷன் வால்யூ" போட்டு, சிறிது தொகையைக் கழித்துக் கொண்டுதான் நஷ்டஈட்டைக் கொடுக்கிறார்கள். ஆனால், நஷ்டயீடு கொடுக் கும்போது, 20–30 வருஷங்களில் வீட்டுக்காரர்கள் அந்த வீடுகளுக்கு ரிப்பேர் செய்திருந்தால், ரிப்பேர் செலவுகளை அரசாங்கத்தார் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. இது வீட்டுக்காரர்களுக்கு மிகவும் அதிருப்தியாக இருக்கிறது. மேலும், விவசாயிகளின் நிலங்களை அரசாங்கத்தார் எடுத்துக் கொள்ளும்போது, பயிரிடுவதற்கு அவர்களுக்கு வேறு இடத்தில், ஒரு நபருக்கு 2 ஏக்கர்கள் வீதம் நிலங்களை ஒதுக்கிவைக்கிறார்கள். அவர்கள் 5 செண்ட் நிலத்தில் குடியிருந்துகொண்டு 2 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டுக் கொண்டிருக்கட்டும் என்று அரசாங்கத்தார் திட்டம் வகுத்திருக்கிறார்கள். குடியிருப்பதற்கு 5 செண்ட் நிலம் அவர்களுக்குப் போதவே போதாது. மேலும், அவர்கள் வீட்டைக் காலிபண்ணிக்கொண்டு போகும்போது, அவர் களுக்கு வேண்டிய வசதி செய்து தருவதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் வீடுகளைக் காலிபண்ணிக்கொண்டு போனவுடன் வேறு இடத்தில் வீடுகளைக் கட்டிக்கொண்டு குடும்பம் நடத்துவதற்கு ஏற்ற வசதி இல்லை. ஆகையால் அவர்கள் தங்கள் வீடுகளைக் காலிபண்ணுவதற்கு முன்பு அவர்களுக்கு கூட்டுறவு முறையில் வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும். அவர்களுக்கு கூட்டுறவு முறையில் வீடுகளைக் கட்டிக்கொடுத் தால், அதற்கான பணத்தை சில வருஷத் தவணைகளில் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக் குக் கூட்டுறவு முறையில் வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

(Sri T. L. Sasivarna Thevar walked into the Chamber between the Chair and the member speaking.)

DEPUTY SPEAKER: Order, order.



26th July 1957]

Sri M. SELVARAJ: அடுத்தபடியாக விருத்தாசலம் டவுனைப் பொறுத்த வரையில் 1938-ம் வருஷத்தில் இருந்து தண்ணீர் திட்டம் ஒன்றை வகுத்து அதற்கு வரிவசூல் செய்து கொண்டு வருகிறார்கள். அந்தத் திட்டத்திற்கு 1953-ம் வருஷத்திலேயே சர்க்காருக்கு மனுச் செய்து கொண்டார்கள். அதை கூடியசீக்கிரத்தில் எடுத்துக்கொள்வதாகவும்.அதற்காக 50 சத விகிதம் லோன் கொடுப்பதாகவும் ஒரு திட்டம் இருந்தது. ஆனால் இன்றுவரையில் அந்தத் திட்டத்திற்கு எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அது அந்தப் பிராந்தியத்தில் மிகவும் பெருங்குறையாக இருக்கிறது. மேலும் பக்கத்தில் நெய்வேலி சுரங்கம் ஏற்பட்டு அதனால் அதிகப்படி யான மக்கள் குடியிருப்பு வசதியை நாடி இந்த நகரத்திற்கு வருகிறதால் இந்தத் தண்ணீர் திட்டத்தை இந்த ஆண்டிலாவது சர்க்கார் எடுத்து நடத் திக்கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். அத்திட்டத்திற்கு மொத்தம் ஐந்து லட்சமாகும். அங்குள்ள பஞ்சாயத்து போர்டில் இரண்டு லட்சம் ரூபாய் கொடுப்பதற்குத் தயாராய் இருக்கிறார்கள். மேலும் மூன்று லட்சம்தான் தேவை. அந்த மூன்று லட்சத்தையும் அரசாங் கத்தாரே கொடுத்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள் ளுகிறேன்.

அடுத்தபடியாக திருச்சி ஜில்லாவில், பெரம்பலூர் தாலூக்காவில் கீழ் முத்தூர் கிராமத்தில் 1,500 ஏக்கர்களுக்கு நீர் பாய வசதி உடைய ஏரி ஒன்று இருந்தது. ஆனால் அது உடைந்துபோய்விட்டதன் காரணமாக அங்கு நஞ்சையாக இருந்த நிலங்கள் இப்போது புஞ்சையாகத்தான் பயிரி டப்படுகின்றன. ஏரியில் இருக்கும்படியான தண்ணீர் 40 நாட்களுக்குத் தான் வருகிறது. அங்குள்ளவர்கள் அந்தத் தண்ணீருக்குள்ளேயே பயிர் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் புஞ்சை தான் பயிர் செய்கிறார்கள். ஆனால் அவர்களிடமிருந்து இன்னமும் நஞ் சைப் பயிர் வரி வசூல்தான் செய்யப்படுகிறது. சர்சார்ஜ் உள்பட ஏக் கருக்கு 16 ரூபாய் வசூல் செய்து கொண்டு வருகிறார்கள். இதுசம் பந்தமாக கடந்த இருபது வருஷ காலமாகவே மகஜர்கள் அரசாங்கத் தாருக்கு சமர்ப்பித்துக்கொண்டு வருகிறார்கள். போன மாதத்திலும் கூட முதல் மந்திரி இடத்தில் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதிகாரி களும் கூட "அங்கெல்லாம் விளைவு இல்லை. ரிமிஷன் கொடுக்கத்தான் வேண்டும்" என்று சொல்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் எந்த விதமான கிஸ்தி ரிமிஷனும் கொடுக்கப்படவில்லை. அந்த ஏரியை உடனடி யாக மராமத்து செய்து, கரைகளை உயர்த்தி, வளப்படுத்தி, தொழுதூர் வாய்க்காலில் இருந்து ஒரு வாய்க்காலை இந்த ஏரிக்குத் திருப்பிவிட்டால் 1,500 ஏக்கராக்களில் நஞ்சை பயிரிட முடியும். அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கும் மிகுந்த பிரயோசனம் ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நமது அரசாங்கத்தில் நடக்கும் நடவடிக்கைகளை பார்க்கும்போது அவர்கள் எந்த வட்டாரத்தில் யார் யார் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவரவர்களுடைய வட்டாரத்தில்தான் நல்லவேலைகள் நடக்கின்றன. உதாரணமாக தென்னாற்காடு ஜில்லா பலமுறையிலும் பிற்போக்கு ஜில்லாவாக இருக்கிறது. ஐந்தாண்டு திட்டம் என்பதாக நமது சர்க்கார் வெளியிட்டிருக்கும் புத்தகத்தில் பார்த் தாலும் தெரியும். தென்னாற்காடு ஜில்லாவில் 72 கிராமங்களுக்குத்தான் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மின்சாரம் விஸ்தரித்துக் கொடுத்து இருக்கி றார்கள். ஆனால் செங்கல்பட்டு ஜில்லாவில் 263 கிராமங்களுக்கு விஸ்த ரிக்கப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு ஜில்லாவில் நீர்ப்பாசன வசதிக்காக 31 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் சொச்சம் செலவாகியிருக்கிறது. செங்கல் பட்டு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் 62 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கிறது. விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவு வதிலும் தென்னாற்காடு ஜில்லாவுக்கு 14 லட்சம் சொச்ச ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். செங்கற்பட்டு ஜில்லாவுக்கு 81 லட்சத்துக்கு மேல் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு ஜில்லாவிற்கும் இன்னொரு ஜில்லாவிற்கும் இந்த மாற்றாந்தாய் வித்தியாசம் எதற்காகக் காட்டப்படுகிறது என்று தான் எனக்குத் தெரியவில்லை. நம்முடைய அரசாங்கம் ஜனநாயக முறையில்

[Sri M. Selvaraj] [26th July 1957

செயல்படுகிறது. எல்லா ஜில்லாக்களுக்கும் பாரபட்சமின்றி உதவி செய்கிறோம், அவற்றை அபிவிருத்தி செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அடுத்தடுத்து உள்ள இரண்டு ஜில்லாக்களிலேயே மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கும் தென்னாற்காடு ஜில்லாவிற்கு அதிக உதவி அளிக்கவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகவே இனியாவது இப்படிப்பட்ட முறை இல்லாமல், தென்னாற்காடு ஜில்லாவில் மிகவும் பிற்பட்ட சமூகத்தவர்கள் இருப்பதனாலே, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துகொடுக்கவேண்டும். இனிமேலாவது வரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சில ஜில்லாக்களுக்கு முன்பே அதிகமாகச் செலவிட்ட காரணத்தால் அவற்றுக்குக் கொஞ்சம் குறைத்து, முன்பு குறைவாக செலவு பண்ணியுள்ள ஜில்லாக்களில் அதிகமாகச் செலவு செய்ய நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

11-19 a.m. SRI R. SRINIVASA IYER: Mr. Deputy Speaker, Sir, while supporting the motion before the House, I desire to say a few words with reference to the several demands for grants considered and voted upon by this House. We heard a number of hon. Members on each demand. Although every Member cannot be expected to speak on every demand, the distribution of speakers by the Chief Whip of the Government has been equitable and many Members have taken part in the discussion in spite of complaints against the Chief Whip. Hon. Ministers have also replied to the several points raised by hon. Members both of the Opposition and of the ruling party. In this connexion, I desire to point out one thing. If we want to find fault with anything with an intention to find fault, we can certainly find some fault on scrutiny. Even the sun has got spots. During discussion over such demands, it would be better if we—I include the Opposition also—give constructive suggestions rather than generalize and repeat what we have been repeating outside. When I say this, I do not criticise any particular speech. But I desire to point out that more constructive suggestions were expected but were not given. As I said, the Hon. Ministers have promised to look into the suggestions that have been given by the hon. Members.

I had no opportunity to speak on the demand under Land Revenue. I desire to say something about the working of the Estates Abolition Act. The Pattukkottai and Arantangi taluks abound in zamins and inams. More than two-thirds of the area is either zamins or inams and most of this has been taken over by the Government under the Abolition Act—Act XXVI of 1948. Several of the villages are not surveyed and yet settlement operations are going on. Of course, they have got to go on. But one difficulty that is felt by many ryots of the area in getting patta for their lands has to be brought to the notice of the Government. In unsurveyed villages they depend upon crude methods of measurements, old boundaries, etc. The old documents mention all sorts of names and boundaries and these are often changed. Applications for pattas in the manner prescribed in the old documents are rejected for want of correlation. Sir, the Minister for Revenue of this State who moved the main Bill in 1948—Mr. Kala Venkata Rao—said, when referring to the acquisition of buildings of landholders on the estates, that when the cow was purchased, the calf would go with the cow. In this respect, I desire to point out that the rights of



26th July 1957] [Sri R. Srinivasa Iyer]

the ryots are said to have been taken away by the Act and the ryots who have had pattas from zamindars are refused pattas on the ground, on the mere ground, that they have not traced their title. Another important matter that I wish to point out is that the ryots are asked to trace how they got the lands. Many of these persons are recognized pattadars but they are refused patta on this ground. Litigation which had ended is now restarting. All kinds of antediluvian documents are referred to and the pattas are refused. There is a conflict between civil courts and the Settlement Officers as to the jurisdiction they have got. On the one hand, civil courts refuse to exercise jurisdiction even with regard to title and possession while the Settlement Officers are not entitled to go into the question except to trace under section 15 the history of the tenure of the land for which the title is applied for. This question has been taken even to the High Court and still we are not in a position to do anything even though it is eight years since the Act was passed. It is time the Government went into the working of Act XXVI of 1948 with reference to the claims of the ryots and their disputes and settled the question of jurisdiction, in order to avoid more disputes.

With reference to the working of the Act itself, there is a great disparity between the land revenue collected in respect of private lands and that in respect of ryoti lands in the same estate. Then there is difference in the rate of assessment in respect of ryoti lands in one estate and that in respect of those in another estate. This is because of the wrong interpretation of the language of the Rent Reduction Act which is applied in consonance or in collaboration with section 23 of Act XXVI of 1948. In the same estate there is divergence in respect of land revenue which creates hardship to the ryots on the one side and private landholders on the other side. In the same village, for private lands much less land revenue is paid than what is paid by the ryots. This heart-burning on the part of the ryots should be removed either by framing rules under the Act or by amending the Act itself. I need not say much more than this that granting of pattas with old numbers given at random by karnams and correction of the old numbers into new ones after survey are a cumbrous proposition which results in many difficulties in many cases. I, therefore, request that in spite of the fact that there may be some delay, settlement operations may be postponed in villages which have not yet been surveyed and in villages where the survey has not yet been completed, new numbers may be given so that the ryots or the landholders who apply for pattas may adopt new survey numbers in order to avoid disputes later on.

The Budget discussions are all over and we are now at the stage of passing the Appropriation Bill. The Government, with a view to effect economies in the running of the various departments, have proposed to appoint a Special Officer to make an enquiry into the structure and staff requirements of each department and make suitable recommendations. I desire to state, in this connection, that some non-official members of experience may also be associated with this enquiry. Some Members of the House, during question hours

[Sri R. Srinivasa Iyer] [26th July 1957

and during discussions, have referred to the existence of a large number of highly-paid officials in every department. Sometimes when new projects are taken up, retired personnel are employed and when they are so employed they are given the same official position which they occupied prior to retirement and the same pay which they were getting at the time of retirement. I do not oppose the policy of employing experienced and very good retired Government servants, whose services we cannot afford to lose. But it will be good if they are appointed on a contract basis just like Sri L. Venkatakrishna Ayyar, retired Chief Engineer of our State, who has been appointed on a contract basis by the Andhra Government, so as not to prejudice the chances of junior officials aspiring for promotions. Otherwise, this may develop in the officials " a sense of forgetfulness of duty on the part of Government ". Rather, we must create a sense that if they really do their work properly and efficiently and in the manner we expect them to do, they will get full appreciation for their work and will be promoted to superior posts. As a person who has some knowledge of the working of this department at the higher levels, I am mentioning these facts. I, therefore, make an appeal to the Government through you, Sir, that in future whenever Government employ experienced retired officials—we have got very good retired Government servants whose services we cannot afford to lose because we have still good projects to be executed—they should be employed on a contract basis without prejudice to the chances of lower officials aspiring for promotion.

DEPUTY SPEAKER: The hon. Member has got only one minute more.

SRI R. SRINIVASA IYER: Hon. Ministers have placed before them a very ambitious programme. They have got the sanction for all the demands that they have made from the Legislature. It is up to Members of this House to co-operate with the Government in a friendly manner. Let us not try always to pick holes in the administration of the Government without regard for the result. It is for all of us to create an atmosphere of peace, an atmosphere of friendliness in our constituencies and outside between the people and the Government so that the former may co-operate with the latter in fulfilling this very ambitious programme in every respect. I wish to appeal to all the Members belonging to both the Opposition and the ruling parties to help the Ministers to implement the very ambitious programme which they have drawn up for the development of the country and for the welfare of the people at large.

11-35 a.m. SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த சபையில் மான்யக் கோரிக்கைகள் பேரில் விவாதம் முடிந்து, பல அங்கத்தினர்கள் பல அபிப்ராயங்களை சொல்லி இருந்தபோதிலும் ஆடுதுறை விவசாயப் பண்ணை சம்பந்தமாக நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஆடுதுறையில் இருக்கும் விவசாயப் பண்ணை நல்ல முறையில் வேலை செய்கின்றது. அது விவசாயத்தை நவீன முறையில் நடத்தவும் உற்பத்தியை பெருக்கவும் நல்ல எடுத்துகாட்டாக இருக்கிறது. பக்கத்தில் உள்ள



26th July 1957] [Sri T. R. Ramamirtha Thondaman]

கிராமங்களில் உற்பத்தி செய்தவற்கு ஆக்கமும் உணர்ச்சியும் நல்லமுறையில் காட்டப்படுகிறது. பசுந்தாள் உரமான தாவளை முதலிய விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். சென்ற வருஷம் இவைகள் மூட்டைக்கு 40-50 ரூபாய் என்று விற்றன. அப்பொழுது விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்பட்டார்கள். அந்தச் சமயத்திலும் இந்த பண்ணை அவர்களால் கூடுமான வரை எல்லா ரேஞ்சுகளுக்கும் விதைகள் சப்ளை செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆக்கம் கொடுத்து வந்தார்கள். ஆடுதுறையில் இருக்ககூடிய விவசாயப் பண்ணை இரண்டு மூன்று ரேஞ்சு களுக்குத்தான் பயன்படுகிறது. நிரந்தரமாக ஜில்லா பூராவும் பயன்படும் படியாக அந்த பண்ணையை சரியான முறையில் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த பண்ணைக்கு வேண்டிய நிலங்கள் சுற்றுப் புரத்தில் இருக்கிறது. இந்த ஜில்லாவில் உள்ள நிலங்கள் எல்லாம் மடங்களையும், கோவில்களையும் சேர்ந்தது. அங்கெல்லாம் ஒரு மாக்கு 4-5 கண்டு முதல் ஆகிறது. ஆனால் இந்த ஆடுதுறைப் பண்ணையில் 80 அல்லது 95 கண்டு முதலாகிறது. இங்கே பொறுக்கு விதைகளை உபயோகிப்பதினால் உற்பத்தி பெருகுகிறது. இது நான் நேரில் கண்ட அனுபவம். சர்க்காருக்கு வந்திருக்கும் கணக்கு மூலமாகவும் நன்றாகத் தெரிந்திருக்கும்.

ஆகையால் அங்கு இருக்கக்கூடிய மடங்கள், கோவில்கள்,. இவர்களுக்கு சொந்தமான கிராமங்களிலும், நிலங்களிலும், ரேஞ்சு வழியாக, இந்த விவசாயப் பண்ணைகள் எற்படுத்தி உற்பத்தியைப் பெருக்கலாம். 20 வேலி நிலம் இருக்கக்கூடிய இடத்தில் விவசாயப் பண்ணையை எற்படுத்தலாம். நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பசுந்தாள் உரத்தை உபயோகப் படுத்தி விவசாயத்தை பெருக்குவதற்கு வழிகாட்டியாக இருக்கும் எருக்களை வினியோகம் செய்வதற்கு இந்த விவசாயப் பண்ணைகளை பயன் படுத்திக் கொள்ளலாம். விவசாயப் பண்ணைக்கு வேண்டிய நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு 30 அல்லது 40 வருஷங்களுக்கு எடுத்துக் கொள்ளலாம். அவசியமிருந்தால் சர்க்காரே இந்த நிலங்களை எடுத்துக் கொள்ளலாம். பிரயோசனமில்லாத நிலங்களை 20 அல்லது 30 வருஷ குத்தகைக்கு எடுத்துக் கொண்டு இந்த மாதிரியான பண்ணைகள் மூலம் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம். அப்பொழுது ஜில்லா பூராவுக்கும் மாகாணம் பூராவுக்கும்கூட இந்த நல்ல விதைகளை சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்ய முடியும்.

இப்பொழுது ஆடுதுறையில் ஒரு விவசாய கல்லூரிகூட ஆரம்பித் திருக்கிறார்கள். இதற்காக $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கே கட்டடம் கட்டுவதற்கு போதிய இடம் இல்லை. அங்குள்ள மடாதிபதிகளையும், மற்றுமுள்ளவர்களையும் கேட்டாலும் கட்டடம் கட்ட தகுந்த இடமில்லை என்று சொல்லும் நிலைமைதான் இருக்கிறது. இதனால் நாட்டின் நனமையும் பொதுமக்களின் சௌகரியமும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகையால் இம்மாதிரி நிலங்களை எடுத்துக்கொள்ள எந்த வித காரணமும் இல்லாமல், அவசரமாக, அவசியமாக, உடனடியாக ஒரு சட்டத்தை சர்க்கார் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அவசியமானால் இதில் சர்க்காரே விவசாயம் செய்து நல்ல முறையில் பயன்படும்படி செய்யலாம்.

விவசாய காலேஜ் கூட இங்கு இருக்க வேண்டும் என்று நான் சொல்லு வேன். அதற்கு போதுமான பணம் இல்லை என்று சொல்லுவார்கள்.

சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த மிராசுதார்களின் மகா நாட்டில் அவர்கள் என்ன பேச்சு பேசியிருக்கிறார்கள் என்று பத்திரிகை படித்தவர் களுக்கு நன்றாகத் தெரியும். பண்ணையாள் பாதுகாப்பு சட்டம், நியாய வார சட்டம் இவைகளை ஒழித்துக்கட்டி விடுவோம் என்று தப்புப் பிரசாரம் செய்கின்றனர். அங்கு இருப்பவர்களை பயமுறுத்தி எழுதிக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். மிராசுதார் சங்கக் காரியதரிசி வெளியிட்ட அறிக்கையிலிருந்து இதை நன்றாகத் தெரிந்து கொண்டிருக் கலாம். அதோடுகூட, ' இந்த சட்டம் வருவதற்கு முன்னால் நாங்கள் அனுபவித்து வந்த லாபத்தைவிட இப்பொழுது எங்களுக்கு குறைவாகத்தான்

வருவாய் வருகிறது. அப்பொழுது விலை குறைவாக இருந்தது இப்பொழுது விலை அதிகமாயிருப்பதால் வருமானம் அதிகமாக வருகிறது' என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமை என் தோன்றுகிறது ? 1918–19-ல் கலம் ஒன்றுக்கு ரூபாய் 3, அல்லது ரூபாய் 4 விற்ற காலத்தில், அப்பொழுது நெல் விற்ற விலையையும் நிலத்தின் வளத்தையும் அனுசரித்து கிஸ்தி போடப்பட்டது. இன்று மேட்டூர் முதலிய அணைக்கட்டுகள் கட்டி அதன் மூலம் தண்ணீர் வசதி செய்து கொடுத்து, உரம் முதலியவைகள் வாங்குவதற்கு கடன் கொடுத்து இம்மாதிரி பல வசதிகள் செய்து கொடுத்து மேலும் அவர்களின் நிலம் வளப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்பொழுது ஒரு கார் வைத்துக் கொண்டிருந்தவர்கள் இப்பொழுது பல கார்கள் வாங்கியிருக்கிறார்கள். அப்பொழுது ஒரு வீடு வைத்துக்கொண்டிருந்தவர்கள் இப்பொழுது பல பங்களாக்கள் கட்டியிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அப்பொழுது இருந்த குறைந்த நெல் விலையையும் நில வளத்தையும் அனுசரித்து நிர்ணயிக்கப்பட்ட அதே கிஸ்தியைத்தான் இப்பொழுதும் வசூலிக்கிறார்கள். அப்படியில்லாமல் இப்பொழுது இருக்கக்கூடிய நெல் விலையையும் நில வளத்தையும் பொறுத்து ஒன்றுக்கு நான்கு மடங்கு நிலவரியை அதிகப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாததால்தான் அவர்களுக்கு விவசாயிகளை ஏளனமாகப் பேசுவதும், பரிகாசம் செய்வதும் தொழிலாக இருக்கிறது என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மேலும், மிராசுதார்கள், சாகுபடியாளர்கள் என்ற பிரிவினை தஞ்சை ஜில்லாவில் மிகவும் அதிகம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். நியாய வாரச் சட்டம் வருவதற்கு முன்னால், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் வருவதற்கு முன்னால், தங்களுடைய உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருந்தார்கள். வேலைக்குரிய கூலி இல்லை. பயிரிடுவதற்கு வேண்டிய வசதி இல்லை என்று கூக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்கள். கால் வயிற்று கஞ்சிக்கு இல்லாமல் பஞ்சாகப் பறந்துகொண்டு பட்டினி கிடந்தார்கள். அந்த சமயத்தில் எஸ். எ. பி. போலீஸ், மற்றும் அதிகாரிகளும் மிராசுதார்களுக்குத்தான் பாதுகாப்பு அளித்தார்கள். அப்பொழுது சாகுபடியாளர்கள் மிராசுதார்கள் செய்வது தவறு என்று தங்கள் உரிமைக்காக போராடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது வேண்டுமானால் மிராசுதார்களுக்கு போலீஸார் பாதுகாப்பு அளித்ததை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இப்பொழுது சட்டம் வந்த பிறகு, சாகுபடியாளர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்ட பிறகு, கூலியாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு, எவ்வளவு கலாட்டாக்கள், எவ்வளவு அடிதடிகள், எவ்வளவு கேஸ்கள் நடக்கின்றன ? ஆயிரக்கணக்கான கேஸ்கள் உயர் நீதி மன்றத்திற்கு போய்கூட சாகுபடியாளர்களுக்கு சாதகமாக முடிந்திருக்கின்றன. மிராசுதார்கள் செய்தது தவறு என்று நன்றாக புரிந்தும்கூட, அந்தக் காலத்தில் சாகுபடியாளர்களை அடித்த அதே போலீஸார், இன்றைக்கு அட்டகாசம் செய்யும் எத்தனை மிராசுதார்களை அடித்திருக்கிறார்கள், எத்தனை மிராசுதார்கள் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், ஒருவர்கூட கிடையாது. இந்த நிலைமை நீடித்துக்கொண்டு போகவிடக் கூடாது. சாகுபடியாளர்களுக்கு சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளித்திருந்தும், மிராசுதார்கள் தவறு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது இடையாது. யார் தவறு செய்தாலும், எந்த மிராசுதார் தவறு செய்தாலும், சமுதாயத்தில் யார் தவறு செய்தாலும் பாரபட்சமில்லாமல் அவர்களுக்கு தக்க தண்டனை விதிப்பதற்கு வேண்டிய வசதியைச் செய்ய வேண்டுமென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, குடியிருப்பு மனைகள் சம்பந்தமாக..............

DEPUTY SPEAKER : The hon. Member's time is up. Sri K. Ramachandran will now speak.

11-44 a.m. **Sri K. RAMACHANDRAN**: கனம் உப தலைவர் அவர்களே, எற்கெனவே கவர்னர் பெருமான் பேருரையின் பேரிலும் பட்ஜெட்டின் பேரிலும் நடந்த விவாதத்திலும், பின்னால் ஒவ்வொரு மான்யத்தின் பேரில் நடந்த விவாதத்திலும் பொதுவாக செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றி நானும் என்





கட்சியைச் சேர்ந்தவர்களும் பலவிதமாக எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். இருந்தாலும் கூட்டம் முடிந்து நாங்கள் தொகுதிக்குச் செல்ல வேண்டிய நிலைமையிலே அமைச்சர்கள் சொன்னவைகளை மறந்துவிடாமல் இருப்பதற்காக மறுபடியும் சில விஷயங்களைப் பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, இன்றைக்கு அனுஷ்டிக்கப்படுகின்ற ஒரு கொள்கையில் ஒரு சிறிய மாற்றம் இருக்க வேண்டுமென்பது தான் என்னுடைய அபிப்பிராயம். இந்த ஐந்து வருஷத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் சரி, அல்லது ராஜ்ய அபிவிருத்தி திட்டங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கும் பொழுது பல தொகுதிகள் சரியாக கவனிக்கப்படாத முறையில் 'அலாட்மெண்டுகள்' செய்யப்பட்டிருக்கின்றன என்பது ஆதாரபூர்வமான உண்மை. சில பகுதிகளில் குறைவான திட்டங்களும், சில பகுதிகளில் அதிகமான திட்டங்களும் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு அதையும் எடுத்துக் கொண்டு பரிசீலனை செய்து பார்த்தால், மிகவும் பின் தங்கி யிருக்கக்கூடிய பகுதிகளில் எந்தவிதமான திட்டமும் அமுலாக்கப்பட்டிருப்பதாக நமக்குத் தெரியவில்லை. உதாரணமாக ராமனாதபுரம் ஜில்லாவில்—அது பின்தங்கிய பகுதி என்று நான் சொல்லாமலேயே தெரியும்—எற்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்தி திட்டங்கள் என்ன என்பதை பார்க்கப்போனால், மிகச் சில திட்டங்கள்தான் என்று நான் சொல்லவேண்டும். அந்த மிகச் சில திட்டங்கள் கூட ஒரு சில தாலூக்காக்களில் குவிந்து கிடக்கின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் இந்த இடங்களில் தான் இந்த அபிவிருத்தி திட்டங்கள் அமுல் நடத்தப்படுகிறதே தவிர, பெருவாரியான கிழக்குப் பகுதியான பரமக்குடி, சிவகங்கை, திருப்பத்தூர், திருவாடானை, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளில் கண்ணால் பார்க்கக்கூடிய அல்லது காதால் கேட்கக்கூடிய உருப்படியான எந்த விதமான திட்டங்களும் அமுல் நடத்தப்படவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்துவிட்டது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் இருக்கிறோம். வேறு ஜில்லாக்களில் நிலைமை எப்படி இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு மாநிலம் முழுவதும் முன்னேற வேண்டுமானால், பொதுவாக உள்ள தொகையை எல்லா ஜில்லாக்களுக்கும் பங்கிட்டு, பூரா ஜில்லாவும் முன்னேற்றம் அடையும் வகையிலே நல்ல திட்டங்களை கொண்டுவரவேண்டுமென்று மிகவும் வற்புறுத்திச் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த அடிப்படையிலே ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையை மறு பரிசீலனை செய்து பங்கிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ராமனாதபுரம் ஜில்லாவிலே நில வெளியேற்றத்தைப் பற்றி பல முறை பேசி யிருக்கிறேன். நில வெளியேற்றத்தைப் பற்றி கேள்வி நேரத்தின்போது பதில் சொல்லும் பொழுது அமைச்சர் அவர்கள் ஏதோ ஜமீன்தார்கள் தங்கள் இஷ்டம்போல் 'ஹைஹாண்டெட்' ஆக விவசாயிகளுக்கு நிலங்களை கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார். அவர்கள் வேறு யாறுக்கும் கொடுத்துவிடவில்லை. விவசாயிகளுக்குத்தான் கொடுத்தார்கள். விவசாயிகள் பயன் அடைவதற்குத்தான் கொடுத்தார்கள். சொந்த நன்மைக்காக அல்ல. ஜமீன் ஒழிப்பு சட்ட மூலமாக ஜமீன்தார் செய்ததை எல்லாம் ஒப்புக்கொண்ட சர்க்கார், இதை மட்டும் ஏன் ஒப்புக்கொள்ள வில்லை ? இதனால் ஒன்றும் பெரிய பிரச்னை எழுந்து விடவில்லை. நூறு வருஷங்களாக பட்டாக்களோடு அனுபவித்து வந்திருக்கிற விவசாயிகளின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. மந்திரி அவர்கள் இம்மாதிரி விவசாயிகளை வெளியேற்றி மீட்கப்பட்ட நிலங்கள் 6,000 ஏக்கர் என்று குறிப்பிட்டார்கள். அது பூரணமான புள்ளி விவரமல்ல. வெளியேற்ற நடவடிக்கை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. ராமனாதபுரம் ஜில்லாவில் ஜமீன் பகுதி பூராவும் எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட 20,000 மக்கள் நிலவெளியேற்றத்தினால் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நான் இதுபற்றி பல முறை சொல்லி யிருக்கிறேன். ஆகையால், மந்திரி அவர்கள் ஏதோ ஒரு விதமாக பதில் சொல்லிவிட்டு அதோடு திருப்தி அடைந்துவிடாமல் தயவு செய்து இந்த மந்திரி சபை அதற்கு என்று கமிட்டியை அல்லது ஒரு நிபுணரை நியமித்து இந்த வெளியேற்றம் எந்த முறையில் நடக்கிறது என்பதை பரிசீலனை செய்ய

வேண்டும். இந்த வெளியேற்றத்தை உடனடியாக நிறுத்திவைத்து இந்தக் கமிட்டியின் முடிவு தெரிந்து பிற்பாடுதான் இதை அமுல் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் மந்திரி கக்கன் அவர்கள் இந்தப் பகுதியிலே விரிவான சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். தேர்தலின் போது. அவர்களுக்கு இந்தப் பகுதியிலிருக்கக்கூடிய விவசாயிகளின் நிலைமையைப் பற்றி, இந்தப் பிரச்னையைப் பற்றி நன்றாகத் தெரியும். இந்தப் பிரச்னையை சரியாக தெரிந்து கொள்ளாத முறையில் தான் சென்னை அரசாங்கம் தற்போழுது ஒரு ' லியூக் வர்ம் பாலிஸியை அடாப்ட் ' செய்கிறார்கள். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் : அவருக்குத்தான் நன்றாகத் தெரிந்திருக்கிறதே ?) இந்தப் பிரச்னையை மறு பரிசீலனை செய்து ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். ஏதோ தெரிந்தும் செய்யவில்லை என்பது உண்மையானால், அது மக்களுடைய குரலை புறக்கணிப்பதாகும். நமக்குள்ள அதிகாரம் மக்களால் கொடுக்கப்பட்டது என்பது சர்வ சாதாரணமான தத்துவம். இந்த தத்துவத்தை மறந்து, மக்களுடைய குறைகளை நீக்குவதற்கு முற்படவில்லை என்றால், சர்க்காருக்கு மக்களுடைய ஆதரவு, குறையும், குன்றும். அதிகார இயந்திரம் அந்தப் பகுதி மக்களிடையே முடங்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையினால் இது ஒரு சாதாரணமான பிரச்னை அல்ல. விவசாயிகளுடைய வாழ்க்கை நிலையை பாதிக்கக்கூடிய பிரச்னை இது. மிகவும் கடுமையான பிரச்னை இது. ஆகவே இந்தப் பிரச்னையை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தப் பகுதியிலே விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இப்பொழுது விவசாய ஆரம்ப காலம். இந்த சமயத்தில் ஐந்து வருஷமாக வசூல் செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்ட கிஸ்தி, புயல் நிவாரணத்திற்காகக் கொடுத்த கடன், உரம் முதலியவைகள் வாங்குவதற்காக கொடுத்த கடன், கிணறு தோண்டுவதற்காக கொடுத்த கடன் ஆகிய எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்ய முயற்சிக்கப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் விவசாயிகளின் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இப்பொழுது தான் விதைக்கக்கூடிய நாள். சாப்பாட்டுக்கு வழி தேடவேண்டிய நாள். இப்பொழுது வயலில் தூவவேண்டிய விதைகள் தான் அவர்கள் வீடுகளில் இருக்கும். ஜப்தி செய்தால் அந்த விதைகளை அள்ளிக்கொண்டு வரவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

ஆகையினால் எல்லா பாக்கிகளையும் ஒன்று சேர்த்து அவர்களிடமிருந்து வசூலித்தால் அது மிக பரிதாபகரமான விஷயமாகும். இப்பொழுது வசூல் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. இவ்வாறு வரிகளை பிரிக்காமல் நிர்வாகத்தை நடத்த முடியாது என்று சொல்லுவார்கள். நான் வரியை பிரிக்க வேண்டாம் என்று சொல்ல வில்லை. ஆனால் வசூலிக்கக்கூடிய முறையில் ஒரு நல்ல தன்மையிருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எப்படியும் அவர்களிடம் வரி வசூலிக்காமல் விட்டு விடப்போவதில்லை. ஆகவே அவர்களுக்கு மூச்சு விடுவதற்கு சமயம் கொடுத்து அவர்களை திணறடிக்காமல் கொஞ்சம் காலம் கொடுத்து கொஞ்சசம் கொஞ்சமாக அந்த பாக்கி வரிகளை வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை அரசாங்கம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கல்வி திட்டத்தை பொறுத்தவரையிலும் பட்ஜெட் திட்டத்தில் நாங்கள் எதிர்பார்த்தோம். அதாவது எஸ்.எஸ்.எல்.ஸி. வரைக்கும் கண்டிப்பாக இலவச கல்வி கொடுக்க வேண்டும் என்றில்லாவிட்டாலும் மூன்றாவது பாரம் முதல் நான்காவது பாரம் வரையாவது இலவச கல்வி அளிப்பதற்கு சலுகை அளிக்கப்பட்டிருக்கும் என்று நினைத்தோம். இதைப்பற்றி நான் சென்ற தடவையும் சொல்லியிருக்கிறேன். ஆகவே இதில் இப்போது உடனடியாக குறைந்தது 4-வது பாரம் வரைக்கும் கல்வி சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக சர்க்காரால் நடத்தப்படும் கல்வி ஸ்தாபனங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சர்க்கார் கல்வி ஸ்தாபனங்களில் எல்லாம் ரிசல்ட் ரொம்பவும் மோசமாக இருக்கிறது. தனியார் நடத்தும் கல்வி ஸ்தாபனங்களிலுள்ள மாணவர்



களின் தேர்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது சர்க்கார் கல்வி ஸ்தாபனங்களில் மாணவர்களின் தேர்ச்சி மிக குறைவாகவே இருக்கிறது. அப்படியே தேறியிருந்தாலும் சர்க்கார் கல்வி ஸ்தாபனங்களிலுள்ள மாணவர்கள் குறைந்த மார்க்குகளில் தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன வென்று பார்த்தால் வருஷக் கணக்காக சில கல்வி ஸ்தாபனங்களில் வாத்தியாயர்கள் சரியாக நியமிக்கப்படுவதில்லை. இது நிர்வாக இயந்திரத்தில் இருக்கக்கூடிய ஒரு விஷயம். ஆகவே சர்க்கார் கல்வி ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் உயர் தரமான படிப்பு ஏற்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக தொழில் துறை முன்னேற்றத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கைத்தறி நெசவுக்காரர்களை எடுத்துக் கொண்டால் இன்று கைத்தறி சரக்குகள் எல்லாம் விற்பனை தேங்கிக் கிடக்கிறது. ஆகவே இந்த சரக்குகளுக்கு எல்லாம் விற்பனை செய்து அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்காக ஒரு திட்டம் தேவசமுத்திரம் பகுதியில் ஆரம்பிக்கப் போவதாக தெரிகிறது. அதை உடனே நிறைவேற்றித்தர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். தொழிற்சாலைகள் முதலியவை இல்லாத காரணங்களால் கிழக்கு ராமனாதபுரம் பகுதி முன்னேற்றம் அடையாமல் இருக்கிறது, ஆகவே அந்த பகுதியின் முன்னேற்றத்திற்கு வேண்டிய திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri S. T. SUBBAYYA GOUNDER** : உப தலைவர் அவர்களே இந்த பட்ஜெட் விவாதத்தில் என்னுடைய தொகுதியை பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதாவது இப்போது எலக்ஷன் முடிந்து நான்கு மாதங்கள் ஆய்விட்டது. எங்களுடைய உடுமலைப் பேட்டை தாலூகாவை பொறுத்த வரையில் அங்குள்ள சில முக்கியமான காங்கிரஸ் கட்சியை சார்ந்தவர்கள், அங்குள்ள கமிட்டியில் இடம் பெற்றிருப்பவர்கள் சில போலீஸ் அதிகாரிகளின் உதவியை வைத்துக்கொண்டு அங்கு சில தகராறுகளை உண்டு பண்ணி அதில் சம்பந்தப்படாத சில் ஆட்களின் பேரில் குற்றம் சுமத்தி கேஸ் போட்டு இப்போது கோர்ட்டில் கேஸ் நடந்து வருகிறது. ஆகவே இம்மாதிரி சம்பவங்கள் இனிமேல் ஏற்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று ராஜ்ய சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் எங்கள் தாலூகாவில் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அங்குள்ள கிராம பகுதிகளுக்கு ரோடுகள், பள்ளிக்கூடங்கள் இவைகள் எல்லாம் அதிகமாக வேணடியிருப்பதனால் அதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் போக்குவரத்தைப் பொறுத்த அளவில் அங்கு ரோடுகள் எல்லாம் மோசமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த ரோடுகள் எல்லாம் பழுதுபார்க்கப்பட்டு பத்து வருடகாலமிருக்கும். அங்கு இருக்கின்ற இரண்டு முக்கியமான ரோடுகளில அகலம் குறைவாக இருக்கிறது. அதை அகலப்படுத்தி நல்ல "மெட்டல்" அல்லது "டார்" போட்டு போக்குவரத்து சௌகரியத்திற்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் அங்கு பொம்பிலி பக்கம் என்ற இடத்திலிருந்து அமராவதிக்குப் போகும் போது இருக்கும் கல்கட்டு மிகவும் ஒடுங்கியதாக இருப்பதால் போக்கு வரத்துக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. ஆகவே அதை அகலப்படுத்தி தரவேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கூட உடுமலைப்பேட்டை தாலூகாவை சேர்ந்த கடத்தூர் என்ற கிராமம் அமராவதி ஆற்றுக்கு அப்புறம் இருக்கிறது. அந்த கிராமவாசிகள் பக்கத்திலுள்ள கணியூர் வந்துதான் சில விவசாயப் பொருள்கள் வாங்கவேண்டும். இந்தப்பகுதி மதுரை பார்டரில் இருகிறது. அங்குள்ள கிராமவாசிகள் அதிகமாக நெல் பயிர் செய்கிறவர்கள். சில சமயங்களில் விளைச்சலை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வர இது இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே இந்த அமராவதி ஆற்றுக்கு குறுக்கே ஒரு கல்கட்டு கட்டித்தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் சாதாரணமாக இரண்டு அடி, மூன்று அடி தண்ணீர் போய்க்கொண்டிருந்தாலும் போக்கு வரத்துக்கு ரொம்ப இடைஞ்சலாகத்தான் இருக்கிறது. ஆகவே இதற்கு ஒத்தாசை செய்வதற்கு அங்குள்ள மிராசுதார்களும் 11.55 a.m.

விவசாயிகளும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில ஜில்லா போர்டு ரோடுகளில் சரியாக மண் ஒன்றும் போடாமல் இருப்பதினால் மிக மோசமாக இருக்கிறது. இவ்விதம் அங்குள்ள கிராமப் புறங்களில் முற்போக்கான காரியங்கள் ஒன்றும் செய்யப்படாமல் இருக்கிறது. இதற்காக சர்க்கார் எவ்வளவோ பணம் ஒதுக்குகிறார்கள். சர்க்காருக்கு கிராமப் புறங்களை பிற்போக்கடைய செய்யவேண்டுமென்ற எண்ணம் கிடையாது. அந்த முறையில் பார்த்தாலும் இந்த கிராம புறங்களுக்கு வேண்டிய சலுகை செய்து தரப்படவில்லை. இதனால் அங்குள்ள வேலைகள் எல்லாம் தடைப்பட்டு கிடக்கிறது. எந்தெந்த இடங்களில் வேலை செய்ய வேண்டுமென்று தகவல் சேகரிக்கும்போது ரெவன்யூ அதிகாரிகள் இதைப்பற்றி விசாரிக்கும் பொழுது அந்தந்த தொகுதியிலுள்ள சட்டசபை அங்கத்தினர்களுக்கு தகவல் கொடுத்தால் என்னை போலுள்ளவர்கள் அந்தந்த இடங்களிலுள்ள வேலைகளைப்பற்றியுள்ள தகவல்களை சேகரம் செய்து கொடுப்பார்கள். இது அவர்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

அத்துடன் கேரள ராஜ்யம் தனியாக பிரிந்து போனதால் இந்த விலை உயர்ந்த மரங்கள், யானைமலை ரேஞ்சிலுள்ள விலை உயர்ந்த தேக்கு மரங்கள் ஓரளவு கேரள ராஜ்யத்திற்குப் போய் விட்டது. தேக்கு மரம் ஒரு கன சதுர அடி மூன்று ரூபாய்க்கு கிடைத்தது, இப்பொழுது 17, 20 ரூபாய்கு விற்கிறது. ஆகவே இப்பொழுது நம் மாகாணத்தில் உள்ள தேக்கு மரம் போன்ற விலை உயர்ந்த மரங்களை நாம் கூடுதல் உற்பத்தி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். ரூபாய் 17, 20 கொடுத்தாலும் கூட இப்பொழுது தேக்கு கிடைப்பதில்லை என்று இருக்கிறது. ஆகவே வால்பாறைக்கும் யானைமலை தொடர்ச்சிக்கும் மையத்தில் ஒரு ரோடு ஏற்படுத்தினால், போக்குவரத்து சௌகரியம் ஏற்படுத்தினால் அம்மரங்களை வைத்துச் சாகுபடி செய்யலாம். அதனால் நம் சர்க்காருக்கும் நல்ல ஆதாயம் கிடைக்கும். நமக்கும் மரம் இல்லை என்ற குறையும் நீங்கிவிடும். எங்கள் கிராமத்தை எடுத்துக் கொண்டால் 8, 10 மைல்கள் நடந்துதான் போக வேண்டும்.

**DEPUTY SPEAKER :** தங்கள் டைம் ஆகிவிட்டது. தயவு செய்து உட்காருங்கள். **HON. Member Sri Nallasivam will now speak.**

12-02 p.m. **SRI K. R. NALLASIVAM :** உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நம் தேசத்தில் அநேக மாகாணங்களை விட நம் மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் ஓரளவிற்கு பலப்பட்டு இருக்கிறது. ஆனால் அதைப் பொறுத்த வரையிலே பெரிய குறை ஒன்று இருக்கிறது. அது, நீண்ட நாட்களாக யார் யார் இந்த கோவாப்பரேட்டிவ் இயக்கத்தில் பங்கு எடுத்துக் கொண்டிருந்தார்களோ அவர்கள்தான் இன்னும் பெருவாரியாக அதில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். இளைஞர்களோ அல்லது முன்னேற்ற நோக்கம் கொண்டவர்களோ அதில் புகுவது என்றால் அது முடியாத ஒரு காரியமாக இருக்கிறது. ஏனென்றால் இப்பொழுது நீண்ட நாட்களாக இருக்கக்கூடியவர்கள் ஒரு வேலி போல் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள், வேறு யாரும் அதில் புக முடியாத மாதிரி. அவர்கள் நீண்ட காலமாக அந்த இயக்கத்தை தங்கள் ஏக போக இயக்கமாக வைத்துக்கொண்டு இருந்தார்கள். அதைக் கொண்டு கூட சில இடங்களில் அரசியல் செய்யப்படுகிறது. கூட்டுறவு சொஸைட்டி பைலாவில் சில திருத்தங்கள் தேவை. அதில் முக்கியமானது, கூட்டுறவு இயக்கத்தின் தலைவர்களாக இருக்கக் கூடியவர்களை இரண்டு தடவைக்கு மேல் தேர்ந்து எடுக்கக்கூடாது என்று ஒரு விதி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் புதியவர்கள் அதில் புக இடம் கிடைக்காது. இதை நன்கு பரிசீலனை செய்து பார்த்தால் அதை புரிந்து கொள்ள முடியும். கூட்டுறவு இயக்கம் மூலமாக சிறு கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அவைகளுக்கு இந்த இயக்கங்கள் மூலம் கொடுக்கக் கூடிய உதவிகள் ஆமை வேகத்தில்தான் போகிறது. உதாரணமாக, என் தாலூக்காவில் சமுதாய நலத்திட்டத்தின் கீழ் நடத்தப்படுகிற தொழில் பிரிவிலே கூட்டுறவு முறையில் சிறு சிறு கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் கடனாகவும், மான்யமாகவும் தொகைகள் கொடுக்க சர்க்கார் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் மான்யமாகவும்,





கடனாகவும் கொடுக்கப்படுவதாகச் சொன்ன தொகையை நம்பி சிறு சிறு கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டது. அவற்றில் சிலவற்றிற்கு வருடங்கள் ஒன்று இரண்டாகியும் சர்க்கார் வாக்கு அளித்தபடி கடனோ மான்யமோ கொடுக்கவில்லை. அதன் காரணமாக அங்குள்ள இளைஞர்கள் உற்சாகம் இழந்து இந்தத் தொழிலையே விட்டுவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை கவனித்து, அந்தப் பொறுப்பை அவர்கள் தலையில் தள்ளி அதை நசுக்கி விடக்கூடாது. கரும்பாலைகளை கூட்டுறவு முறையில் நடத்த நம் மாகாணத்தில் சில ஆலைகளை ஆரம்பிக்கப் போவதாக பத்திரிகைகளில் பார்த்தேன். நஞ்சைப் பிரதேசத்தில் கரும்பு வைக்க விரும்புகிறவர்கள் கரும்பாலைகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். நான் ஒரு சிறிய கருத்தை சொல்ல விரும்புகிறேன். கரும்புக் கட்டியிலிருந்து சர்க்கரை செய்ய, நவீன முறையில் செய்ய வார்தாவிலிருந்து ஒரு புதிய திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த சர்க்கரையை நான் நேரடியாகப் பார்த்தேன். ஆலைகளில் எப்படி உற்பத்தி செய்யப்படுகிறதோ அதுமாதிரி இதுவும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஜனங்களும் அதை அதிகமாக வாங்குகிறார்கள். கரும்புக் கட்டி உற்பத்தி சங்கம் இன்று தூங்கிக் கொண்டிருக்கிறது. அவைகளை நிர்வகிப்பதற்கு அதிகம் செலவு ஆகிறது. மரமேறிகள் தங்கள் பணத்தைக் கொடுத்து அதை முன்னுக்கு கொண்டுவர கஷ்டப்படுகிறார்கள். கூட்டுறவு சங்கங்கள் என்றாலே மரமேறிகள் பயப்படுகிறார்கள். ஆகவே, கரும்பிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்வதானாலும் சரி, கருப்பெட்டியிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்வதானாலும் சரி இரண்டையும் நான் சொன்ன மாதிரியுள்ள இயந்திரத்தை வைத்து செய்து சிறு சிறு கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகித்தால் கூட்டுறவுத் தொழில் பரவலாகும் நிலை ஏற்படும். அடுத்தபடியாக இந்த விசைத் தறியைப் பொறுத்த வரையில் ஒரு ஆபத்தான வேலை நடந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றிய அரசாங்கத்தின் நிலையோ, கொள்கையோ எதுவாகவும் இருக்கலாம். ஆனால் மூன்று நான்கு வருடங்கள் கழிந்த பின்னர் இதன் விளைவை சம்பந்தப்பட்ட நெசவாளர்களும், சர்க்காரும், பொதுமக்களும் அதன் கொடுமையை உணர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும், என்று நினைக்கிறேன். இப்பொழுது ஏராளமானவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது உண்மை அல்ல. அவர்கள் மிகவும் கஷ்டந்தான் படுகிறார்கள். விசைத்தறியைப் புகுத்துவதால் நிச்சயமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகி அவர்கள் பிற்போக்கான நிலையை அடைவார்கள். இந்த மாகாணத்தில் பட்டு நூலிற்கு விசைத்தறியைப் புகுத்துகிறோம் என்று தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காஞ்சிபுரத்தில் பட்டு நூல் நெசவு செய்து கொண்டு இருக்கிறார்கள். விசைத்தறியை அங்கு புகுத்தினால் நிச்சயம் அங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் வந்துதான் தீரும். ஆகவே அதற்கு விசைத்தறியைப் புகுத்தக்கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, விசைத் தறியைப் பொறுத்த மட்டில் சர்க்கார் நல்ல முறையில் பரிசீலனை செய்து இன்னும் கொஞ்ச நாளுக்கு விசைத் தறியே இல்லாமல் இருப்பதற்கு சர்க்கார் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்தபடியாக, சில நாட்களுக்கு முன்னர் முதல் அமைச்சர் அவர்களிடம் இந்த கீழ் பவானியில் ஆகஸ்டு மாதம் 1-ந்தேதி தண்ணீர் விடவேண்டுமென்று ஒரு மகஜர் கொடுத்திருக்கிறோம், முதல் அமைச்சர் அவர்களிடம். அன்று மராமத்து இலாகா மந்திரியவர்கள் இங்கு இல்லாததால் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. இப்பொழுது கீழ் பவானி அணையில் தண்ணீர் நிரம்பி வழிந்துக்கொண்டிருக்கிறது. அப்படிச் செய்தால் இன்னொரு போகம் விளையும். ஒரு போகத்திற்கு தண்ணீர் விட்டு விட்டு இரண்டு போகத்திற்கு வரி வசூல் செய்கிறார்கள். அங்குள்ள விவசாயிகள் அதனால் அதிருப்தியுற்றிருக்கிறார்கள். தண்ணீர் வீணாகபாழாகி கடலில் போய் விழுகிறது. ஆகவே, ஆகஸ்ட் 1-ம் தேதி அந்தத் தண்ணீரை விட்டால் இரண்டு போகம் விளைவிக்க முடியும். அதனால் நமது உற்பத்தியையும் பெருக்கிக் கொள்ள முடியும். ஆகவே ஆகஸ்ட் 1-ம் தேதி தண்ணீர் விட வேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, "இன்ட்ரொடக்ஷன் டு தி பட்ஜெட்" என்ற பிரசுரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தமிழில் இருந்தால்,

இன்னும் விரிவான முறையில் இருந்தால் எங்களைப் போன்ற ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்கள் நல்ல முறையில் பட்ஜெட்டைப் புரிந்து கொண்டு நல்ல முறையில் ஜனங்களுக்கு வேண்டிய காரியங்களை எடுத்துச் சொல்ல முடியும். பட்ஜெட் தமிழில் இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதைப்பற்றிய விவரணம் தமிழில் கொடுக்க வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன். வருகிற வருஷத்திலாவது அப்படிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

DEPUTY SPEAKER : The hon. Member has got one minute more.

SRI K. R. NALLASIVAM : அடுத்தபடியாக, சட்டசபை நடவடிக்கைகள் பற்றி தமிழிலே ஒரு மாதப்பத்திரிகை வெளியிட்டால் எல்லா சட்ட சபை அங்கத்தினர்களுக்கும் அது பிரயோஜனமாயிருக்கும் என்று சொல்லிக் கொண்டு இந்த ஜெயில் சீர்திருத்தத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். ஜெயில் சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் சர்க்கார் ஏதோ ஒரு கமிட்டியை நியமித்து இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இப்பொழுது ஜெயில்கள் இருக்கும் முறை, மனிதனை மிருகமாக ஆக்கித்தான் வெளியில் அனுப்புகிறது. வெளியே இருந்து தவறு செய்துவிட்டுப் போகிறவன், ஜெயிலில் இருந்து மீண்டும் வெளியே வரும்போது சிறந்த மனிதனாக, நல்ல மனிதனாக, நான் ஒரு இந்திய பிரஜை என்று சொல்லிக் கொண்டு பெருமையோடு வெளி வரத் தக்க முறையில் இந்த ஜெயில்களைச் சீர்திருத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் தலைவர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகளைச் சொல்லும் வகையில் இரண்டொரு விஷயங்களைச் சொல்லாமல் இருக்க முடியாது. சென்னை ராஜ்யத்திலே ராஜ்ய சுகாதார பாதுகாப்பு சட்டம் சில இடங்களில் அமுலில் இருந்து வருகிறது. அதற்கு பொறுப்பாக தொழில் மந்திரி, சுகாதார மந்திரி இரண்டு பேரும் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் வகையில் தொழிலாளர்களுக்கு, அந்தந்த மாறுதல்களை ஏற்படுத்தும்படியான நிலைமையிலே, அதனுடைய பலாபலன்களை அனுபவித்து வருகிறார்கள் என்பதை சீர்தூக்கிப் பார்க்கும்போது, சென்னையைப் பொருத்தவரையில் பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக் மில்லில் வேலை செய்யக் கூடியவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச்சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். இந்த சுகாதாரச் சட்டம் வருவதற்கு முன்னால் பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக் மில் தொழிலாளர்களுக்கு, அவர்களில் ஏதாவது ஒரு தொழிலாளி நீண்ட நாட்கள் சீக்கில் இருக்க ஏற்பட்டால் 140 நாட்கள் சம்பளத்தோடு சிக் லீவ் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது இந்த சுகாதாரச் சட்டம் வந்த பிறகு அதில் இருக்கும்படியான 56 நாட்களை அவர்களும் கணக்கு எடுத்துக்கொண்டு அந்த 56 நாட்களுக்குப்போக பாக்கி நாட்களுக்கே இந்த சம்பளத்தைக் கொடுக்கும் நிலையை இந்த பி.அண்ட்.ஸி. முதலாளிகள் கொண்டிருக்கிறார்கள். முன்பு இருந்த பழக்கத்தை கைவிடக்கூடாது. சுகாதார சட்ட அதிகாரிகள் எவ்வளவு கொடுக்கிறார்களோ அதற்கு மேற்கொண்டு கொடுக்கிற பணத்தை மில் முதலாளிகளே கொடுக்கவேண்டுமென்றிருந்தாலும் கூட பி. அண்டு ஸி. மில் முதலாளிகள் கொடுக்காமலிருந்து வருகிறார்கள். அதே சமயத்தில் எம்ப்லாயீஸ் ஸ்டேட்ஸ் இன்ஷ்யூரன்ஸ் டிஸ்பென்ஸரியிலே எந்தெந்த தொழிலாளர்கள் லீவு கொடுக்கும்படியான நிலையிலிருக்கிறார்களோ, பி. அண்டு. ஸி. டாக்டர்களைப் பார்க்கும்போது அந்த டாக்டர்கள் "உனக்கு கொடுத்த லீவு நியாயமில்லை, உனக்குச் சம்பளம் கொடுக்க முடியாது, அதற்கு சிபாரிசு செய்ய முடியாது. லீவில் வேண்டுமானால் இரு. சம்பளம் கிடைக்காது" என்று சொல்லும் அளவில் இந்த அரசாங்க டாக்டர்களின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்து அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்கும் நிலையில் இருக்கிறார்கள். இதில் நாம் பார்க்கவேண்டும், அரசாங்க டாக்டர்கள் உயர்ந்தவர்களா, அவர்களது அபிப்பிராயம் உயர்ந்ததா, அல்லது மில் முதலாளிகளின் சம்பளத்தை வாங்கிக்கொண்டு ஒரு தலைப் பட்சமாக இருக்கக்கூடியவர்களின் அபிப்





பிராயம் உயர்ந்ததா, அதில் எது நியாயம் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அதைப்பற்றி அநேக தடவை எடுத்துச் சொல்லும்போது கவனிக்கிறோம், விசாரணை செய்கிறோம், என்று சொல்லும்படியான நிலையில் தான் இருக்கிறதே தவிர அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட டாக்டர்களின் கௌரவத்தைக் காப்பாற்ற அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பதுதான் என்னுடைய புகார். அந்த நிலையில் பி.அண்டு.ஸி. தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நமக்கு சமீபத்தில் இன்புளுவென்ஸா வந்தது. அதிலே சுமார் 2,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த 2,000 பேர்களுக்கும் வெவ்வேறு ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்ஸரியால் லீவு கொடுக்கப்பட்டது. லீவு கொடுக்கப்பட்ட தொழிலாளர்களில் 50 சத வீதத்திற்கு மேல் மில் அதிகாரிகளால் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அந்த மில் தொழிலாளர்களுக்குத்தான் அதிகப்படியான லீவு சம்பளம் கொடுக்கப்பட்டதே தவிற ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்ஸரியிலிருந்து அநேகமாக கொடுக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. இதைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்று எழுதினோம். அந்த ஈ. எஸ். ஐ. டாக்டர்கள் எந்த விதத்திலும் நடவடிக்கை எடுக்கவில்லை, அதைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். தொழிலாளர்களுக்கான ஆஸ்பத்திரியை பூந்தமல்லியில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது மிக நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. மிக நெருக்கிப் போட்ட படுக்கைகளில் சிகிச்சை செய்கிறார்கள். சிகிச்சையைப் பொருத்தவரையில் ஒன்றும் சொல்லாவிட்டாலும்கூட, ஆஸ்பத்திரியில் மிகவும் சின்ன இடம், நெருக்கடியான இடம் என்று சொல்லவிரும்புகிறேன். ஏதோ குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்டு அந்த இடத்தில் ஆஸ்பத்திரியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். போதுமான அளவு, க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை கிடையாது. அவர்களை வெளியே போகும்படி சொல்லி வெளி பேஷண்டாக சிகிச்சை செய்யும்படியான நிலை இருக்கிறது. தொழிலாளர்கள் தங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியை கொடுத்த பின்னும் வேண்டிய அளவு சிகிச்சை இல்லையென்றால் அவர்கள் மனதில் ஒரு கசப்பு இருக்கிறது. ஈ.எஸ்.ஐ. திட்டத்தால் தொழிளாளர்களுக்கு, முக்கியமாக பி.அண்டு.ஸி. தொழிளாளர்களுக்கு எந்த விதத்திலும் கிடைக்கவில்லை, இதை ஏற்றுக்கொண்டது மிகவும் தப்பு என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நமது ராஜேந்திர பிரசாத் அவர்கள் முதலில் இந்தத் திட்டத்தை திறக்கும்போது இந்தத் திட்டத்தைப்பற்றி அவர்கள் சொன்னார்கள், இது ஒரு பெரிய வரப்பிரசாதமென்று. ஆனால் பி.அண்ட்.ஸி. தொழிலாளர்களைப் பொருத்த வரையில் இது ஒரு சாபக்கேடாகத்தான் இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே மாதிரி ஈ.எஸ்.ஐ. கார்பொரேஷன் அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற லோகல் ஆபீஸ்கள் மிகவும் நெருக்கடியாக சின்னஞ்சிறு இடங்களில் இருக்கிறது. இவைகளையெல்லாம் விசாரித்து அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் இந்த எலெக்ட்ரிசிடி டிபார்ட்மென்டைப்பற்றி எந்த சமயத்திலே அவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டாலும் அவர்களுடைய கவனம் பி.அண்டு.ஸி. மில் பேரில்தான் போகிறது. ஏறக்குறைய 14,000 தொழிலாளர்கள் வேலைசெய்யக்கூடிய இடம், நிறைய மின்சாரத்தை உபயோகிக்கிறார்கள், அதை கம்மிபடுத்தி மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கலாம் என்ற எண்ணம் ஓடுகிறது. முதலில் அதே எண்ணத்துடன் ஒரு திட்டம் கொண்டுவந்தார்கள். ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தார்கள். அதன் மூலமாக இரவு நேரத்தில் 7 முதல் 8 மணி சாப்பாட்டு நேரத்தை குறைத்து, அதிகமாக 6 முதல் 8 வரை ஓய்வு இருக்கவேண்டுமென்று சொல்லி எலெக்டிரிஸிடியை மற்றவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தாலும் கூட, அதன் மூலமாக அவர்களுடைய சாப்பாட்டு நேரத்தை ½ மணி, ¼ மணியாகக் குறைத்து மிகவும் கஷ்டப்பட்டிருந்தார்கள். இப்போதும் இருக்கிறார்கள். இப்போது இன்னொரு கட்டுப்பாடு. ஞாயிற்றுக் கிழமை வேலை செய்யவேண்டுமென்று பி.அண்டு.ஸி. தொழிலாளர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

DEPUTY SPEAKER : Hon. Member's time is up.

[26th July 1957

**Sri S. PAKKIRISAMI PILLAI**: பி.அண்டுவி. மில் மட்டும் வேலை செய்யவேண்டும், மற்றவர்களெல்லாம் வேலை செய்யவேண்டாமென்று ஏற்பாடு செய்யப்படவில்லை. ரெயில்வே தொழிலாளர்களுக்கு இந்த கட்டுப்பாட்டை போட்டார்கள். ஆனால் அவர்கள் எதிர்க்கவே அதை கைவிட்டு விட்டார்கள். பி. அண்டு. வி. மில் தொழிலாளர்களை நிர்ப்பந்தித்து ஞாயிற்றுக்கிழமை வேலை செய்யவேண்டுமென்று சொல்லி கஷ்டப்படுத்துகிறார்கள். இதையெல்லாம் கவனித்து அரசாங்கம் வேண்டிய வழிகளில் சலுகை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-20 p.m. **Sri M. KALYANASUNDARAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக நம்முடைய ராஜ்யத்தின் வரவு செலவு திட்டங்கள் இந்த சபையின் முன்பு பொதுவாகவும் பிறகு ஒவ்வொரு கோரிக்கையின் மீது குறிப்பாகவும் விவாதிக்கப்பட்டு ஒட்டு மொத்தமாக செலவழிக்க வேண்டிய தொகை பூராவுக்கும் அதிகாரம் கோரும் இறுதியான கட்டத்தில் நான் பேச எழுந்திருக்கிறேன். கடந்த மூன்று மாத காலமாக இந்த சபையின் நடவடிக்கைகளையும் சரி, நம் ராஜ்யத்தின் நடவடிக்கைகளையும் சரி, நம் ராஜ்யத்தின் நிலைமையையும் சரி, தெரிந்து கொள்ளாத நிலைமையில் நான் பேச எழுந்திருப்பதால் அதில் ஏதாவது குறைபாடுகள் இருக்கலாம். அப்படி ஏதாவது இருந்தால் அது எனக்கு வருத்தத்தைத்தான் கொடுக்கும். இருப்பினும் இந்த மூன்று மாத காலத்திற்குள் நான் சொல்லக் கூடிய விவரங்களில் அடியோடு பெரிய மாறுதல்கள் அல்லது தவறுகள் ஏற்படக்கூடிய முறையில் நமது மந்திரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட காரியங்களில் செய்து இருக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த சமயத்தில்தான் நான் பேச எழுந்து இருக்கிறேன்.

154 கோடிக்கு அதிகமான ரூபாயை எடுத்துச் செலவழிக்கக் கூடிய அதிகாரத்தை நாம் இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்போகிறோம். இந்தத் தொகை பூராவும், ரூபாய்க்கு உள்ள 100 நயா பைசா மதிப்பு பூராவும் ஜனங்களுக்குப் போகக் கூடிய முறையில் நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்பது மந்திரிகளுடைய கவலையும், கனம் அங்கத்தினர்களுடைய கவலையும், அரசியல் கட்சியினுடைய கவலையும் ஆக இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான எண்ணம். ஏனென்றால் எந்த ஒரு தனிப்பட்ட கட்சியைப்பற்றியோ அல்லது மந்திரியைப்பற்றியோ நான் குறை கூறவில்லை. மந்திரிகள் செலவுச் செய்யப் போகும் தொகையானது கிராமத்தில் இருக்கக் கூடிய மணியகாரர் முதற்கொண்டு சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் இருக்கக்கூடிய காரியதரிசி வரைக்கும் இந்தத் தொகை செலவாகப் போகிறது என்பதை நாம் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படி நான் சொன்னால் நான் ஒன்றையும் புதியதாகக் கண்டுபிடித்துச் சொல்லவில்லை. ஆகையால்தான் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்தத் தொகையின் முழு பலனை ஜனங்கள் அடையும்படியாகச் செலவு செய்யப்படவேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு உதாரணமாக மந்திரிகள் இருக்க வேண்டும் என்பதை நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுதுள்ள நிர்வாக யந்திரம் வெகு விரிவானது. இன்னும் நாளடைவில் விரிந்துகொண்டே போய்க்கொண்டிருந்து இன்னும் விரிவு அடைந்துகொண்டே போகக் கூடியதாகவும் இருக்கிறது. இந்த நிர்வாகம் திறமையாகவும் சுறுசுறுப்பாகவும் ஊழல் இன்றி நடைபெறுவதற்கு வேலை செய்வதற்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும். அதற்கு என்று பெரும் இயக்கம் நடத்தவேண்டும், என்பதை இந்த சமயத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிச் சொல்லிக்கொள்வது பொருத்தமாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த நிர்வாகத்திற்கு மூன்று வித நோய் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த நோய் இந்த நிர்வாகத்தை நல்ல முறையில் பிடித்துக் கொண்டிருக்கிறது என்றுகூட நான் சொல்வேன். இந்த நோயைப் போக்குவதற்கு தக்க பரிகாரம் தேடாவிட்டால் இந்த 154 கோடி ரூபாயும்,



26th July 1957] [Sri M. Kalyanasundaram]

ஏன், கிட்டத்தட்ட 155 கோடி ரூபாய் என்றுகூட சொல்லலாம், ஜனங்களுக்கு நல்ல வகையில் போய்ச் சேராமல இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இது மிகவும் கொடுமையான நோய். அவைகள் லஞ்ச ஊழல், வீண் செலவு, அதிகாரவர்க்க முறை, இந்த மூன்றும் நம்முடைய நிர்வாக யந்திர வாழ்வில் புகுந்துகொண்டு இருக்கிறது. இவைகள் வெகு கடுமையான நோய். இந்த மூன்று நோயையும் புற்று நோய் என்றுகூட சொல்லலாம். இவைகளை எதிர்த்து கடுமையான நடவடிக்கை எல்லோரும் சேர்ந்து எடுத்தாக வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இந்த மூன்று நோயையும் எதிர்த்து இயக்கங்களை நடத்துவதற்கு ஆளும் கட்சிக்கு எங்களை விட அதிகமாக பொறுப்பு இருக்கிறது. எதிர் கட்சியில் இருப்பவர்களுக்கும் பொருப் பிருக்கிறது. எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இந்த சபையில் எடுத்துச் சொல்லலாம், வெளியில் எடுத்துச் சொல்லலாம். அரசியல் கட்சிக்கு இதில் பங்கு இருக்கவேண்டும். நாங்கள் எடுத்துச் சொல்வதை வைத்துக்கொண்டு வந்தால் நல்ல அனுபவம் ஏற்படும். அதனால் நாங்கள் சொல்வதை எடுத்துக்கொண்டு ஆளும் கட்சியினரும் அங்கத்தினர்களுக்கு அவைகளைப் பற்றி பரிசீலனை செய்து நிர்வாக யந்திரங்களை நல்ல முறையில் அமைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்தப் பிரச்னையை அணுகவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சில பிரச்சனைகளை இந்த மூன்று வித நோய்களுக்கும் உதாரணமாக காட்ட விரும்புகிறேன்.

நான் இங்கு வந்து சேர்ந்தவுடன் என் கை முன்னால் 1955–56-ம் வருஷத்திய ஆடிட் ரிப்போர்ட்டை கொடுத்தார்கள். அது கடந்த ஐந்து வருஷத்திய ஆடிட் ரிப்போர்ட். அதைப் பார்த்து விரிவாக பரிசீலனை செய்வதற்கு அவகாசம் இல்லை. இருந்தாலும் சில பக்கங்களை பிரட்டிப் பார்த்தேன். அப்படிப் பிரட்டிப் பார்த்தபோது சிலவற்றை கண்டு அதிர்ச்சி அடைய வேண்டியதாக இருந்தது. இந்த ஐந்து வருஷ காலத்தில் நிர்வாக யந்திரத்தில் எவ்வளவு ஊழல்களும் திறமையின்மையும் இருந்திருக்கிறது என்பது நன்றாக தெரிய வந்தது. நிர்வாகம் ரொம்பவும் மோசமாக இருக்கிறது. அரசாங்க நிர்வாக யந்திரம் பூராவும் மிகவும் மோசமாக இருக்கிறது என்பது நன்றாகத் தெரியவந்தது. இதைப் பார்க்கும்போது இந்த சபையில் இருக்கக்கூடிய அங்கத்தினர்களும் சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மந்திரியாக இருந்தாலும் சரி, அதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

குடியரசு ஏற்படுவதற்கு முன்னதாக எடுத்துக்கொள்வோம், அதாவது 1950-ம் வருஷம் முதற்கொண்டு எடுத்துக்கொள்வோம். 1950-லிருந்து 1956-ம் வருஷம் வரைக்கும் நிர்வாக யந்திரம் படிப்படியாக மோசமாகிக்கொண்டே வந்திருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். இதுவரையிலும் அதைப் படிக்க கனம் அங்கத்தினர்களுக்கு அவகாசம் இருந்திருக்காது என்று நினைக்கிறேன். இனிமேலாவது கனம் அங்கத்தினர்கள் அதைப் படித்து பார்த்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இயக்கம் நடத்தவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்குவேண்டி சில உதாரணங்களை மட்டும் சொல்லுகிறேன். குறிப்பாக ஒன்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சிங்கோனாவுக்காக 20 லட்சம் ரூபாய் திட்டம் போட்டு கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. மூன்று வருஷங்களுக்குப் பிறகு அந்தக் கட்டிடத்தை உபயோகமாக்குவதற்கு 28 லட்சம் ரூபாய் செலவு செய்யவேண்டும் என்று கேட்கப்பட்டு அந்தச் செலவு செய்யவேண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 20 லட்சம் ரூபாய் செலவு செய்த கட்டிடத்திற்கு 28 லட்ச ரூபாய் செலவு செய்ய வேண்டியதில்லை என்று அந்தப் பணத்தை ஒதுக்கவில்லை. இந்த 20 லட்ச ரூபாயில் கட்டிய கட்டிடத்தின் கதி என்ன, இந்த 20 லட்சம் ரூபாயின் நிலைமை என்ன? பிற்பட்டு 28 லட்சம் ரூபாய் ஒதுக்காமல் இருந்ததை நான் வரவேற்கிறேன். இருபது லட்சம் ரூபாய் செலவு செய்து கட்டிய கட்டிடம் என்னவாயிற்று. அந்த அதிகாரிகளின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கட்டிடம் லாயக்கு அற்றது என்று அதில் எழுதி விட்டார்கள். இதில் எவ்வளவு பணம் வீண் செலவு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

[Sri M. Kalyanasundaram] [26th July 1957

அதே சமயத்தில் இன்னொரு உதாரணத்தையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஒரு சாதாரண குமாஸ்தா கஜானாவில் வேலை செய்யும் போது ஏழு வருஷ காலத்தில் 3½ லட்ச ரூபாய்க்கு பொய்க்கணக்கு தயாரித்து மோசடி செய்திருப்பதாக தெரிய வருகிறது. ஒரு குமாஸ்தா இவ்வளவு சாமார்த்தியமுள்ளவனாக இருக்க முடியாது. நிர்வாக தரப்பில் பலர் சேர்ந்துதான் மோசடி செய்திருக்கிறார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்படி ஒவ்வொரு உதாரணத்தையும் எடுத்துச் சொல்லி இந்த சபையில் நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. மற்றவைகளை கனம் அங்கத்தினர்களே படித்துப் பார்த்துக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஆகவே நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், வலியுறுத்துவது என்னவென்றால், லஞ்ச ஊழலை எதிர்த்து, வீண் செலவை எதிர்த்து, அதிகார வர்க்கத்தை எதிர்த்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு சட்ட சபை அங்கத்தினர்களும், அரசியல் கட்சியும் உறுதியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைதான் இந்த ரிப்போர்ட் வலியுறுத்துகிறது. இப்பொழுது இருக்கும் மந்திரிகள் இதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் போகிறார்கள் என்பதை அறிவதற்கு நான் இந்த உதாரணங்களை எடுத்துக் காட்டுகிறேன்.

திருச்சி ஜில்லா மணப்பாரை கூட்டுறவு சொசைடி மோசடியைப்பற்றி கனம் அங்கத்தினர்களும் பொதுமக்களும் நன்றாக அறிந்த விஷயம். அந்த நிர்வாகத்திலுள்ள தலைவரின் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு கடுமையான தண்டனையும் கொடுக்கப்பட்டது. சமீபத்தில் அதற்கு மாறுதல் ஏற்பட்டிருக்கலாம். அப்பீல் தொடரப்பட்டிருந்தது என்பது எனக்குத் தெரியும். அந்தக் கூட்டுறவு தலைவர் கிட்டத்தட்ட மூன்று லட்சம் ரூபாய் வரையில் மோசடி செய்திருந்தார். ஹைக்கோர்டில் ஒருக்கால் அந்த தண்டனையை குறைத்திருக்கலாம். ஆயுள் தண்டனை என்பதை குறைத்திருக்கலாம். அதைப்பற்றி கவலை இல்லை, ஹைக் கோர்ட் தீர்ப்பைப்பற்றியும் கவலை இல்லை. ஹைக்கோர்ட்டு தீர்ப்புப்படி மோசடி நடந்திருப்பது தெளிவாகிறது. அந்த அதிகாரிகளை என்ன செய்தார்கள்? அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இல்லாமல் அந்த தலைவர் திருடியிருக்க முடியாது. அப்பொழுதுள்ள திருச்சி ஜில்லா டிபுடி ரிஜிஸ்தரார் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது என்ற விவரம் தெரியவில்லை. அவர்மேல் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது தெரிய வேண்டும். என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? எப்படி அதிகாரிகளுக்குப் பயம் ஏற்படும் ? சில சமயம் பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டியிலே இதுபோன்ற விஷயம் எடுத்துக்கொள்ளும்போது மந்திரி என்ன பதில் சொல்வார் என்றால், அதிகாரிகளை ஆதரித்தே இருக்கும். அவர்களை விட்டுக்கொடுக்காமல் பேசுவது உண்டு. அந்தக் கமிட்டியின்போது வெளிவரும் குற்றங்களுக்குப் பொறுப்புள்ள அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தால் அல்லவா அவர்களுக்குப் பயம் இருக்கும் ? மோசமாக நடந்துள்ள அதிகாரியின் பேரில் கண்டிப்பான நடவடிக்கை இதுவரை எடுத்தார்களா என்றால் கிடையாது.

கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைடி விஷயத்தை எடுத்துக்கொள்வோம். பதினாறாயிரம் ரூபாய் வரை டெபுடி ரிஜிஸ்தராரும், கூட்டுறவு சொஸைடியினரும் சேர்ந்து மோசடி செய்ததாக சர்க்காருக்குப் பல மனுக்கள், விண்ணப்பங்கள், என் கையெழுத்துப் போட்டு கடிதங்கள் மந்திரிகளுக்கு வந்திருக்கின்றன. அதிகாரிகளுக்கும் போயிருக்கின்றன. இன்னும் அந்த நிர்வாகிகள் அப்படியே இருக்கிறார்கள். அதில் கலாட்டா ஏற்பட்ட பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவரை மாற்றினார்கள்.

இன்னும் ஜில்லா போலிஸ் சூபரிண்டெண்ட் விஷயம் இருக்கிறது. அவர் மீது இருக்கக்கூடிய கடுமையான குற்றச்சாட்டுகள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அந்த மனிதருக்கு நாணயம் இருந்து, மான வெட்கம் இருந்தால் இதற்குள் ராஜினாமா செய்து விட்டுப் போயிருக்கவேண்டும். அல்ல இன்றைக்கு இன்ஸ்பெக்டர்-ஜெனரல்



26th July 1957] [Sri M. Kalyanasundaram]

ஆப் போலீஸ் கேட்டிருக்கிற மாதிரி, தானே ஒரு விசாரணைக்கு உட்பட்டிருக்க வேண்டும். அந்த ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்ட் விஷயமாக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? 1956-ஆம் வருஷம் ஜனவரி மாதம் பிறந்தது. கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ? என்று கேட்பார்கள். அதுபோல், இவருக்கும் ஜனவரி பண்டிகைக்கும் என்ன சம்பந்தம் ? இவர் என்ன சீமையிலிருந்து வந்தவரா ? 1956-ம் வருஷம் என்பதற்காக 56 பவுன் சன்மானம் பெற்றதாகவும் இன்னும் பல குற்றச்சாட்டுகளும் அந்த ஜில்லா போலீஸ் அதிகாரி மீது இருந்திருக்கின்றன. சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? அவருக்கு ஓய்வு கொடுத்து இரண்டு மாத கெடு கொடுக்கப்பட்டது. சாட்சிகளைக் கலைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது அவரை மாற்றியாய்விட்டது என்று அறிகிறேன். அவருக்கு ஓய்வு கொடுத்து, அங்கேயே இருந்துகொண்டு சாட்சிகளைக் கலைக்க வசதி அளித்ததைப்பற்றி கிளர்ச்சி ஏற்பட்டதால், திருச்சி ஜில்லாவிலே இருக்கக்கூடிய போலீஸ் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக போடப்பட்டிருக்கிறார். இப்பேர்ப்பட்ட ஒரு அதிகாரியின் கையிலே இந்த வேலையைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அதைப்பற்றி என்ன சொல்வது ? நான் ஊரில் இல்லாத இந்த மூன்று மாத காலத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதோ என்னவோ. இந்த மோசமான மனோபாவம் எதைக்காட்டுகிறது ? இப்பேர்ப்பட்ட ஒரு போலீஸ் அதிகாரியிடம் பயிற்சி பெறக்கூடிய போலீஸ் கான்ஸ்டபிள்கள் என்ன செய்வார்கள் என்பதைப் பாருங்கள். இம்மாதிரி அதிகாரியை டிபார்ட்மெண்டிலேயே வைத்துக் கொள்ளலாமா ? அதிலும் பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்குள் அனுமதிக்கலாமா ?

(Mr. Speaker in the Chair.)

THE HON. SRI C. SUBRAMANIAM : The enquiry is still pending. I do not think that the honourable Member is entitled to cast aspersions on him that he is guilty, before the enquiry is completed. But we have taken steps to see that malpractices do not take place before the enquiry.

SRI M. KALYANASUNDARAM : But the charges are sufficiently serious. இம்மாதிரி அவர்கள் மீது எடுத்த நடவடிக்கையின் தயக்கத்தைப் பாருங்கள். குற்றச்சாட்டு ஏற்பட்டு இரண்டு வருஷம் ஆகப் போகிறது. இரண்டு வருஷகாலமாக இன்னும் ' டிபார்ட்மெண்டல் என்க்வையரி ' ' பெண்டிங் ' ஆய் இருக்கிறது, என்பதே அதிகாரிகளுக்கு எவ்வளவு தெம்பைக் கொடுக்கும் என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நிர்வாகம் திறமையாக நடக்கவேண்டும் என்பதிலே மந்திரிக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதென்று சொன்னார்களோ, அவ்வளவு அக்கறை எனக்கும் இருக்கிறது. அவ்வளவு பொறுப்போடுதான் நானும் பேசுகின்றேன். அதிகாரிகளை அவதூறு செய்வதால் எனக்கு என்ன லாபம் வந்துவிடப் போகிறது ? அவர்களும் நம் நாட்டில் பிறந்த சகோதரர்கள் தான். அவர்கள் திறமையாக நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயமே தவிர யாரையும் குறைசொல்ல வேண்டும் என்பது அல்ல. அவர்கள் திருந்தவேண்டும் என்பதற்காகத் தான் நான் எடுத்துக் காட்டுகிறேன். மந்திரிகளுடைய பொறுப்பு சற்று அதிகமாக இருக்கிறது. அவர்கள் இப்பேர்ப்பட்ட விஷயங்களில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இன்னொரு உதாரணம். சமீபத்தில் நடந்தது. இந்த வருஷத்தில் நடந்தது. ஒரு ஹரிஜன காலனி கட்டுவதற்காக ஒரு லட்சம் 15 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு திட்டம். அங்கே ஸ்தலத்திலே சில தொகை வசூலித்துக் கட்டவேண்டும் என்பதும் திட்டம். மார்ச் 31-ந் தேதிக்குள்ளாக பணம் செலவழிக்கப்படவேண்டும் என்பதற்காக இரவு 12 மணி

வரைக்கும், என் விடியற்காலை 3 மணி வரைக்குங்கூட, ஸ்தல அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான ' வவுச்சர்கள் ' ' பாஸ் ' செய்யப்படுவதைப் பார்க்கலாம். இம்மாதிரி கஜானா திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கஜானாவை ரெவினியூ அதிகாரியின் கீழ் வைக்கக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். தொகை பூராவும் வாங்கப்பட்டு விட்டது, கஜானாவிலிருந்து. ஆனால், நம்முடைய முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்கள் எப்ரல் 27-ந் தேதியோ, 28-ந் தேதியோ அந்தக் காலனியைத் திறந்து வைக்கச் செல்கிறார். 31-ந்தேதிக்குள் பூராவும் செலவு செய்தாகவேண்டும் என்ற கணக்கில் அதிகாரிகள் இருக்கிறார்கள். ஜனங்கள் ஒத்துழைப்பு கொடுக்காமல் பகிஷ்கரிப்பு செய்கிறார்கள். இன்னும் கட்டப்படாத கட்டிடங்களை அவர் திறந்து வைத்திருக்கிறார். நூற்றுப் பதினைந்து கட்டிடங்களுக்கான பணம் கிட்டத்தட்ட செலவு செய்யப்பட்டது. ஒரு கட்டிடம் ரூ. 700 செலவில் கட்டப்படவேண்டும் என்பது திட்டம். மூன்று மாத காலமாக தொடர்பு இல்லாததால் சில விவரங்களில் தவறு இருக்கலாம். அதைப்பற்றி பரவாயில்லை. முதல் அமைச்சர் போய்த் திறந்து வைக்கும் காலத்திலாவது,' மார்ச் 31-தேதிக்குள் பணம் செலவாய்விட்டதே, இந்தக் கட்டிடங்கள் பூர்த்தியாகியிருக்கிறதா ?' என்று கேட்டிருக்காலாம். ஒரு மாதம் சென்ற பிறகு கட்டிடத்தை திறந்து வைக்கும் காலத்திலாவது கேட்டிருக்கலாம். ஒன்பது கட்டிடங்கள் பூர்த்தியாகி, மற்ற எதுவும் பூர்த்தியாகாமல் இருக்கின்றன என்று நான் சொல்ல முடியும். ஒரு வேளை இந்த மூன்று மாத காலத்திலே பூர்த்தியாய் விட்டதோ என்னவோ எனக்குத் தெரியாது.

THE HON. SRI P. KAKKAN : நானும் கூட வந்திருந்தேன். எல்லாக் கட்டிடங்களும் கட்டிப் பூர்த்தியாய்விட்டன. நானே அத்திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்தேன்.

MR. SPEAKER : While I admit that the hon. Member Sri Kalyanasundaram has not spoken during this Budget session still we are anxious to stick to time and I am bound by limitations of time. I particularly do not want to ring the bell when a leader of a party is speaking. May I therefore request the hon. Member Sri Kalyanasundaram to finish as early as possible. Next to him other leaders of parties have got to speak and the Hon. the Leader of the House has got to reply to the debate. The hon. Member should not also forget the fact that there is another Bill to pass through this House to-day. So I would request him to finish soon. I pray he may be given long life and good health so that he will have opportunities to speak on other occasions also.

SRI M. KALYANASUNDARAM : May I know how much time is allowed to me, Sir.

MR. SPEAKER : The Deputy Speaker was in the chair. The list left by him is here. According to it the hon. Member has been given time from 12-20 to 12-35, the hon. Member Sri Annadurai from 12-35 to 12-50, the hon. Leader of the Opposition from 12-50 to 1-10 and the Hon. Minister from 1-10 to 1-40 and the Bill to be taken up at 1-45. The hon. Member should therefore realise my difficulty.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : It is only formal.

MR. SPEAKER : Of course it is formal. But if the hon. the Leader of the Opposition would cut short his time and give it to the hon. Member Sri Kalyanasundaram I have no objection.



SRI M. KALYANASUNDARAM : மந்திரி அவர்கள் கலெக்டர் சொன்ன
தை வைத்துக்கொண்டு சொல்லலாம். நானும் அதே தேதியில் அந்த வீடு
களைப் பார்த்திருக்கிறேன். மேலே கூரைபோட்டு இருக்கிறது. ஆனால்,
பல ஓட்டைகள் இருக்கின்றன. நான் சொல்வதின் உண்மையை என்னோடு
கூட மந்திரி அவர்கள் வந்தால் நானே நேரில் காட்டுகிறேன். மேலே
கூரை போட்டதைக் காண்பித்திருப்பார்கள். அதை மந்திரி அவர்கள்
பார்த்துவிட்டு வந்திருக்கலாம். பந்தல் போட்டிருந்த இடத்திற்குச்சென்று,
அங்கே மாலையைப்போட்டுக்கொண்டு, திரும்ப காருக்குள் வந்து ஏறிக்கொண்
டிருக்கலாம். (குறுக்கீடு.) நீங்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது.
விசாரணை செய்து பார்க்கட்டும். அப்பொழுது உண்மை தெரியும். நான்
சொல்வது தவறு என்று தெரிந்தால், நான் மன்னிப்புக் கேட்கக்கூட
தயாராயிருக்கிறேன். ஏதோதாசில்தார் கிரேடில் ஹரிஜன வெல்பேர் அதிகாரி
இருக்கலாம். அவரைப் பற்றி தவறாகப் பேசவேண்டிய கவலை எனக்கு இல்லை.
115 வீடுகளுக்கும் உள்ள தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்பட்டு கட்டிடங்கள்
ஒழுங்காக பூர்த்தியாகியிருக்கவேண்டுமே என்பதுதான் எனக்குக் கவலை.
ஆனால், அதிகாரிக்கு இவ்வளவு பாதுகாப்பு கொடுப்பது சரியல்ல என்பது
என் அபிப்பிராயம். (குறுக்கீடு.) உண்மைக்கு விரோதமாக நான் பேச
மாட்டேன். நானும் பொறுப்புள்ளவன் தான். உண்மையைப் " ப்ரூவ் "
செய்ய நான் தயாராயிருக்றேன். " டெம்பர் "ஐ நான் " லூஸ் "
பண்ணவில்லை. சற்று உரக்கப் பேசுகின்றேன், அவ்வளவுதான். (குறுக்கீடு.)
என்னுடைய வியாதியினுடைய கோளாறாய் இருக்கலாம்.

MR. SPEAKER : உங்களுக்கு heart பலஹீனமாக இருக்கும்போது, இவ்வளவு உரக்கப் பேசுகிறீர்களே என்று நினைத்தேன். சற்று நிதானமாகப் பேசச் சொல்லலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

SRI M. KALYANASUNDARAM : நிர்வாக இயந்திரத்தைப் புனரமைப்
புச் செய்வதற்குப் பல கமிட்டிகள் போட்டு, சிபார்சுகள் இருக்கின்றன.
அந்தச் சிபார்சுகளையெல்லாம் ஒரு ஸ்பெஷல் கமிட்டியைக் கொண்டு பரிசீலனை
செய்யச் சொல்லி, நிர்வாக இயந்திரத்தில் நல்ல மாறுதல் செய்யலாம்.
குறிப்பாக கஜானாவை ஒரு அக்கவுண்டெண்டு தலைமையில் வைக்கக்கூடாது.
அவர் போடச்சொன்ன இடத்தில் ஆர்.டி.ஓ. கையெழுத்துப் போடக்கூடிய
நிர்பந்தம் இருக்கிறது. கையெழுத்து அதிகமாக இருக்கிறது. இம்மாதிரி
விஷயங்களுக்கு தனி சூபரின்டென்டிங் என்ஜினீர் நியமிக்கப்பட்டு, தனி
டிவிஷன் ஆக்கி, ஸ்தல அபிவிருத்தித் திட்ட வேலைகள், மைனர் இர்ரி
கேஷன் வேலைகள் முதலியவைகளை அவர்களுடைய பரிசீலனைக்கு விட்டு
நிர்வாக இயந்திரத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு உறுதியான நட
வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை
முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

SRI C. N. ANNADURAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தச் 12-39 p.m.
சபையின் முன்னாலே நீண்ட நாட்களாக, மிகச் சிறந்த ஆர்வத்தோடு,
பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு, இன்றையதினம் இறுதிக் கட்ட
த்தில், " ஒப்படைத்தல் " (Appropriation) என்ற சம்பிரதாயம் நடை
பெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு பெரிய தொகையை ஒப்படைப்பதற்கு
வேண்டிய நம்பிக்கையைப் பெற்ற ஒரு அமைச்சரவை இன்றையதினம்
இருக்கிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்லிக்கொள்கி
றேன். அந்த அமைச்சரவை நல்ல எண்ணம் படைத்தது என்பதையும்
இந்த மன்றத்திலே நான் பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆற்
றல்படைத்தது என்பதையும் நான் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன்.
ஆனால், நல்ல எண்ணமும் ஆற்றலும் படைத்தவர்கள் தங்களுடைய சிந்தனா
சக்திக்குத் தடை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒரு துர்ப்பாக்கியமான
அரசியல் சூழ்நிலைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பது தான் எனக்கு இருக்
கும் முக்கியமான குறைபாடு. ஆற்றல் இவர்களுக்குக் குறைவாக
இருந்திருக்குமானால், அதற்கான அளவுக்கு இவர்களுக்கு அதிகாரம்
இல்லாததைப்பற்றி நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். வேண்டிய
ஆற்றலுள்ளவர்களும் நல்ல மனம் படைத்தவர்களும் நம் மாநில அரசாங்
கத்திற்குக் கிடைத்திருந்தும், அவர்கள் மக்களின் குறைபாடுகளை அறிந்து

கொள்வதற்கு நல்ல அக்கரை எடுத்துக்கொண்டிருந்தும், மக்களின் குறைபாடுகளை நீக்குவதற்கான வழிவகைகளைக் காண்பதில் திறமை பெற்றிருந்தும், அந்தத் திறமையைத் தூண்டுவதற்கு எதிர்த் தரப்பிலுள்ளவர்கள் எடுத்துச்சொல்லும் கருத்துக்களைப் பெருமையோடு ஏற்றுக்கொள்ளும் பெருந்தன்மை கொண்டிருந்தும், அவர்கள் சுயசிந்தனையோடு காரியங்களைச் செய்ய முடியாத அளவிற்கு இன்றைய அரசியல் சூழ்நிலை இருப்பதைப்பற்றி நான் உண்மையிலேயே கவலைப்படுகிறேன். நிர்வாக இயந்திரத்திலுள்ள கோளாறுகளைப்பற்றி பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட விஷயங்களை ஆளும் கட்சியாளர்கள் அடியோடு மறுக்கிறார்கள் என்று நான் கருதவில்லை. ஆட்சியாளர்கள் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவும், அந்த நடவடிக்கைகளில் எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறவும் தயாராக இருக்கிறார்கள் என்றுதான் நான் உண்மையிலேயே நம்புகிறேன். ஆட்சியாளர்களுடைய கொள்கைகளில் இருக்கின்ற முரண்பாடுகளைப்பற்றித்தான் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

ஆட்சியாளர்களின் கொள்கைகளைப் பொதுப்படையாகப் பார்க்கும்போது, மக்களின் நலன்களை வளர்க்கத்தக்க ஒரு நல்ல நிர்வாகத்தை நாட்டுக்கு அளிக்கவேண்டும் என்ற பொதுக் கொள்கை அவர்களிடத்தில் இருந்தாலும், அந்தக் கொள்கை நடைமுறைக்கு வரும் நேரத்தில் பல கொள்கை முரண்பாடுகள் அவர்களுடைய நிர்வாகத்தில் காணப்படுகின்றன என்பது தெரிகிறது. அந்தக் கொள்கை முரண்பாடுகளை எடுத்துச்சொல்லுவதற்கு எனக்கு உறுதுணையாக இருப்பது நான் அறிந்த உண்மைகள் மட்டுமல்ல ; கனம் சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொன்ன பல்வேறு கருத்துக்களை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் அந்த முரண்பாடுகளை நான் எடுத்துச்சொல்கிறேன்.

உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையை ஆட்சியாளர்கள் மதித்துப் பறைசாற்றுகின்ற இதே நேரத்தில் " மெகனெஸ்ட் அக்ரிகல்சர்—பெரும் பெரும் விவசாயப் பண்ணைகள் விஞ்ஞான முறையில் வளர்க்கவேண்டும்—என்ற கொள்கையையும் ஆட்சியாளர்கள் வலியுறுத்துகிறார்கள். இந்த இரண்டும் முரண்பட்ட கொள்கைகள் என்பதையும், உழுபனுக்கு நிலம் என்ற திட்டமும் " மெகனெஸ்ட் அக்ரிகல்சர்" என்ற திட்டமும் ஏககாலத்தில் நிறைவேற்றப்பட முடியாது என்பதையும் சாதாரண பொருளாதார சாஸ்திரத்தைப் படித்தவர்கள் உணர்ந்துகொள்வார்கள். அவர்களுடைய கொள்கையில் இந்தப் பெரிய முரண்பாடு இருக்கின்ற காரணத்தால்தான், நம் ஆட்சியாளர்கள் உழுபவனிடத்தில் பரிவும் பாசமும் காட்டினாலும், பெரிய நில முதலாளிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஆட்சியாளர்கள் பெரிய நில முதலாளிகளைக் கட்டுப்படுத்துவார்கள், கட்டுப்படுத்துவார்கள் என்று இலவு காத்த கிளி போல், இந்த நாட்டு மக்கள் பன்னெடுங்காலமாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். "தேர்தல்கள் முடிந்த பின் ஆட்சியாளர்கள் புதிய வலிவைப் பெறுவார்கள் ; அடுத்த தேர்தல் வரட்டும் ; அது வந்து முடிந்ததும் ஆட்சியாளர்கள் மறுபடியும் புதிய வலிவைப் பெறுவார்கள் " என்று எண்ணி " நிலச் சீர்திருத்தம் வரும், வரும் " என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதற்குள், இடைக்காலத்தில், ஆச்சர்ய விநோபா பாவே அவர்கள் அருமையாகச் சுட்டிக்காட்டியது போல, நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டம் வந்தாலும் அது தங்களைக் கட்டுப்படுத்தமுடியாதபடி பெரிய நில முதலாளிகள் பல்வேறு சூழ்நிலைகளை உருவாக்கிக்கொண்டார்கள் என்பது இந்த நாட்டு மக்கள் அறிந்த ரகசியம் ஆகும்.

அடுத்தபடியாக, தொழில் துறையை எடுத்துக்கொண்டால், அந்தத் துறையிலும், விவசாயத் துறையில் போலவே, இந்த ஆட்சியாளர்கள் தனியார் துறையையும் பொதுத் துறையையும் ஆதரிக்கிறார்கள். காரணம் கேட்டால் ஆட்சியாளர்கள் சொல்லக்கூடும் : " எங்கள் கொள்கையே ' கோ-எக்ஸிஸ்டென்ஸ் ' கொள்கை தானே ? தொழில் துறையிலும் ' கோ-எக்ஸிஸ்டென்ஸ்'-ஐக் கடைப்பிடிக்கிறோம்.' ' கோ-எக்ஸிஸ்டென்ஸ்'



கொள்கையானது உலகப் பூசலைத் தடுப்பதற்காக—ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காக—கடைப்பிடிக்கப்பட்டால், அப்போது அது வரவேற்கக்கூடியதாக இருக்கும். ஆனால், ஒரு பக்கத்தில் கொழுத்த முதலாளிகளும் மற்றொரு பக்கத்தில் ஏழைத் தொழிலாளிகளும் இருக்கும் நிலைமையிலும், ஒரு பக்கத்தில் பெரிய மடாதிபதிகளும், மற்றொரு பக்கத்தில் அவர்களுக்கு அடிமையாக வாழ்கின்ற ஆண்டிகளும் இருக்கும் நிலைமையிலும், ஒரு பக்கத்தில் ஆலை முதலாளிகளும் மற்றொரு பக்கத்தில் அவர்களால் கசக்கிப் பிழியப்படும் தொழிலாளிகளும் இருக்கும் நிலைமையிலும்—இப்படிப்பட்ட முரண்பாடுகளை வைத்துக்கொண்டு—' கோ-எக்ஸிஸ்டென்ஸ் ' கொள்கையைக் கடைப்பிடித்தால், அப்போது ஆட்சியாளர்களுக்கு எவ்வளவு நிர்வாகத் திறமையும், அறிவும், ஆற்றலும் இருந்தாலும், மக்களிடத்தில் அவர்களுக்கு எவ்வளவு அன்பும் அக்கரையும் இருந்தாலும், தேவைப்படும் அளவுக்கு அவர்களால் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் மக்களுக்கு எவ்வளவோ நன்மை செய்யவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டிருந்தாலும் அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. இதனை நான் விளக்கவேண்டுமானால், கனம் சபாநாயகர் மூலமாக இந்த சபைக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆட்சியாளரை நான் ஒரு டாக்டருக்கு ஒப்பிடுவதற்கில்லை ; ஒரு கம்பவுண்டருக்கு ஒப்பிட்டால் அதனால் ஆட்சியாளர்கள் வருத்தமடைய மாட்டார்கள் என்று நான் எண்ணுகிறேன். இந்த ஆட்சியாளர்கள் நல்ல கம்பவுண்டர்கள். அவர்களிடம் நோயாளி வரும் நேரத்தில் நோயாளியை அவர்கள் பரிவோடு பார்க்கிறார்கள். நோயாளியிடமுள்ள நோயைக் கண்டுபிடிக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். கண்டுபிடித்த நோயைத் நீக்க விரும்புகிறார்கள். ஆனால், எந்த டாக்டரிடம் வேலை செய்கிறார்களோ, அந்த டாக்டர் கொடுக்கும் மருந்து பாட்டில்களில் தண்ணீர் அதிகமாகவும் மருந்து குறைவாகவும் இருப்பதால் தங்களுக்கு உண்டாகும் வருத்தத்தைப் புன்னகையாக மாற்றிக்கொண்டு, கிடைக்கும் மருந்தை நோயாளிகளுக்குக் கொடுக்கிறார்கள். இந்த நிலைமையில் இன்றைய ஆட்சியாளர்கள் இருக்கின்ற காரணத்தினால்தான் நான் குறிப்பிட்ட முரண்பாடுகளும் குறைபாடுகளும் இருக்கின்றன என்று நான் உண்மையிலேயே கருதுகின்றேன். அதனால்தான் போலும், இந்த மாமன்றத்தை ஒரு காலத்தில் நேரில் அலங்கரித்துக்கொண்டிருந்தவர்களும், இப்போது படரூபமாக அலங்கரித்துக்கொண்டிருப்பவர்களுமான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் " இந்த மாநில அரசாங்கங்கள் **Grant receiving corporation** டெல்லியிலிருந்து கிராண்டுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் ; நன்கொடைகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களைப் போல் இந்த அரசாங்கங்கள் இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். நாட்டில் வளர்ந்து வரும் இந்தப் புதிய கருத்தை ஆட்சியாளர்களுக்கு நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம். இந்தக் கருத்து மிகப் பிற்பட்ட மக்கள் தொகுதியிலிருந்து வருகிறது என்ற காரணத்தினால் இதை ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்தினால், ' சாதாரணமாக, ரெயில்வே ஸ்டேஷனிலுள்ள செவிடர்கள் ரெயில் போகும்போது மணி அடித்ததைக் கேட்காமல் உறங்கிக்கொண்டிருந்துவிட்டு, ரெயில் போனவுடன் பதைபதைக்கும் அவல நிலையை அடைவது ' போல, நல்ல திட்டங்களைத் தீட்டினாலும் அவை நிறைவேற்றப்படாமல் இருக்கும் நேரத்தில், மக்கள் அல்லோலகல்லோலப்படும்போது, ஆட்சியாளர்கள் அவல நிலையை அடைவார்கள் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

இப்போது, ஆட்சியாளர்கள் தொழில்துறையில் எவ்வளவு நல்ல திட்டங்களைத் தீட்டினாலும் நாட்டு மக்கள் நலனடைய முடியவில்லை. சென்ற பத்தாண்டு காலமாக, நாட்டு மக்களின் மனக்கண் முன்னால், ' பழைய மாஞ்செஸ்டர்கள் போய் புதிய மாஞ்செஸ்டர்கள் வருவதும், பழைய லங்காஷயர்கள் போய் புதிய லங்காஷயர்கள் வருவதும், பழைய ஷெப்பீல்டுகள் போய் புதிய ஷெப்பீல்டுகள் தோன்றுவதும் ' நிகழ்ந்து வந்திருக்கின்றன. பாலைவனங்கள் எல்லாம் சோலைவனங்களாக ஆக்கப்

[Sri C. N. Annadurai] [26th July 1957

பட்டுவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். "பாலைவனம் எல்லாம் சோலைவனமாக வேண்டும்" என்று ஒரு தமிழ்ப் புலவர் பாடியது போல், பாலைவனங்கள் எல்லாம் சோலைவனங்கள் ஆகும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் நடந்துவருவது என்ன? சோலை வனங்கள் எல்லாம் பாலைவனங்களாக மாறி வருகின்றன. இந்தக் குற்றத்திற்கு யார் உடந்தை என்று பார்த்து குற்றவாளியை அவர்கள் தேடிக் கண்டிபிடிக்க விரும்புகிறார்கள். குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய ஆற்றலும் திறமையும் அவர்களுக்கு இன்று போதாமல் இருக்கலாம். ஆனால், என்றைக்காவது ஒரு நாள் வேண்டிய ஆற்றலைப்பெற்று, இந்த ஆட்சியாளர்கள்தான் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டு விட்டால், "இவ்வளவு நல்லவர்களா இவ்வளவு பெரிய கெட்ட காரியத்தில் ஈடுபட்டார்கள்" என்று அவர்கள் உண்மையிலேயே வருத்தப்படுவார்கள்.

இன்றைய ஆட்சியாளர்களின் ஒரு பெரிய செல்வத்தை நான் மதிக்கின்றேன். தேசீய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அளித்த நல்லெண்ணத்தை ஆட்சியாளர்கள் தேசீய பாங்கில் போட்டுவைத்திருக்கிறார்கள். அந்த பாங்கில் அவர்கள் பத்து வருஷ காலத்தில் லட்சகணக்கான ரூபாய்களைப் பெற்று விட்டார்கள். இனியும் அவர்கள் அவ்வளவு தொகையைப் பெறமுடியாது. ஸ்ரீ நேரு பண்டிதர் தேடித்தரும் புகழும்கூட பாங்கில் பணத்தைச் சேர்க்காது. ஆகவே நல்ல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்க வேண்டும்.

முன்னேற்றத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முரண்பாடற்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். ஆட்சியாளர்கள் நல்ல திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவார்கள் என்ற பரிபூரண நம்பிக்கையுடன் மக்கள் இருக்கிறார்கள். நாட்டை முன்னேற்றமடையச் செய்வதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்களுக்கு, கோடிக்கணக்கான ரூபாயும், விலை மதிக்கத்தக்க பொருள்களும், இயற்கை வளங்களும், அவை எல்லாவற்றையும்விட மக்களின் உழைப்பும் இருக்கின்றன. இந்த நிலையில் நல்ல திட்டங்களை வகுத்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இந்த ஆட்சியாளர்களுக்கு இருக்கும்போது, தூய்மையான உணர்ச்சியுடன் செயலாற்று வதற்கேற்ற நிர்வாகத்தை ஆட்சியாளர்கள் பெறவேண்டும் என்பதுதான் இந்தத் தரப்பில் உள்ளவர்களின் கோரிக்கை
12-48 a.m. என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri V.K. RAMASWAMY MUDALIYAR:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சபை முன் ஒரு மாத காலமாக விவாதத்திற்கு வைக்கப்பட்ட பட்ஜெட்டின் மீது கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் பேசி, தங்களுடைய கொள்கைகளைப்பற்றியும் தங்கள் பிராந்தியங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். கனம் அமைச்சர்களையும் தங்களையும் சேர்க்காமல் சுமார் 196 கனம் அங்கத்தினர்கள் இந்த விவாதங்களில் கலந்து கொண்டார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் சொற்பொழிவாற்றியபோது கோரிய எல்லா விஷயங்களையும் இந்த சர்க்கார் நிறைவேற்றுவார்களா என்பது பற்றி நாங்கள் எல்லோரும் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். காரணம், ஒவ்வொரு பட்ஜெட் கூட்டத்திலும் அனேக கனம் அங்கத்தினர்கள் சொற்பொழிவாற்றி பல விஷயங்களைக் கோருகிறார்கள்; ஆனால் அவர்கள் கோரும் அனேக காரியங்கள் நன்றாக நிறைவேற்றப்படுவதே கிடையாது. இது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயம். கனம் அமைச்சர்கள் எல்லோரும், கனம் அங்கத்தினர்கள் தங்கள் சொற்பொழிவில் குறிப்பிட்ட ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாக ஊன்றிப்பார்த்து, அந்த அந்த இலாகாக்களுக்கு அந்த அந்த விஷயங்களைத் தெரிவிப்பதுடன், வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கும் அவைகளுக்கு உத்தரவிடவேண்டுமென்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி நாங்கள் முன்பு சொற்பொழிவு ஆற்றியபோதும் புது வரி போட வேண்டிய அவசியம் இல்லை. இருக்கும் நமது வருமானத்தைக்கொண்டே வரவுசெலவுகளை திட்டமாக நடத்திக்



26th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

கொண்டு போகலாம்" என்று சொல்லியிருக்கிறோம். அதையே தான் நான் இப்போதும் சொல்லவிரும்புகிறேன். முக்கியமாக சிக்கனத்தை எல்லாத் துறையிலும் கையாண்டால் புது வரிகள் போடவேண்டிய அவசியம் இருக்காது. அநேக அங்கத்தினர் சிக்கனத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சிக்கனத்தை எப்படிக் கையாளலாம் என்பதைப்பற்றி நானும் முன்பே சொல்லியிருக்கிறேன். இரண்டொன்றைமட்டில் இப்போது சபைமுன்பு சொல்லவிரும்புகிறேன்.

முக்கியமாக ஆந்திர பிரதேசத்தில் போர்டு மெம்பரைக் குறைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம் ராஜ்யம் பிரிவினைக்குப் பிறகு சிறியதாய் குறைந்துவிட்ட பிறகும், "இந்த போர்டு இருக்கவேண்டுமா? இருக்கவேண்டுமென்றால் அதற்கு இத்தனை மெம்பர்கள் இருக்க வேண்டுமா?" என்பதாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர நிர்வாகமானது—'டாப் ஹெவி' என்று சொல்வார்கள்—நன்றாக நடக்கவேண்டும் என்றாலும் மேலதிகாரிகளை இப்போது அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இலாகாவுக்கும் இவ்வளவு அதிகாரிகள் தேவையா என்று பரிசீலனை செய்ய வேண்டும். சில இலாகாக்களை ஒன்றோடு ஒன்று இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உதாரணமாக—டைரெக்டர் ஆப் மெடிசின், டைரெக்டர் ஆப் ஹெல்த், ஐ.ஜீ. டிபார்ட்டுமெண்டு இங்கெல்லாம் எவ்வளவுதூரம் சிக்கன முறையைக் கையாளவேண்டுமோ அவ்வளவுதூரம் சிக்கனத்தைக் கையாளவேண்டும் என்பதாக நிதி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் சிக்கனத்தை எந்த எந்த வகையில் செய்யலாம் என்பதைப் பரிசீலனை செய்ய ஒரு உத்தியோகஸ்தரைமட்டும் போட்டால் பிரயோஜனம் இல்லை. ஆந்திர மாகாணத்தில் எப்படிப் போட்டார்கள் என்று பார்க்க வேண்டும். உயர்தர உத்தியோகஸ்தரைப் போடுவதோடுகூட 'நான் அபிஷியல்' ஆக பொறுப்புள்ள சட்ட மன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்து ஒரு கமிட்டியாக கூடிய சீக்கிரத்தில் போட்டு, அவர்கள் சிபார்சுகளை உடனுக்குடன் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது சர்க்கார் போட்டிருக்கும் ஆபீசர் கூட லீவில் இருப்பதாகக் கேள்வி. எப்போது வந்து இந்தப் பணியை ஏற்றுக்கொள்வாரோ தெரியவில்லை.

தவிர நிர்வாக ஊழலைப்பற்றி அநேகம் பேர்கள் பேசினார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதை எடுத்துக்கொண்டால் மணிகணக்கில் ஒவ்வொரு இலாகாவிலும் இருக்கும் ஊழல்களைப்பற்றி பேசிக்கொண்டே போகலாம். முக்கியமாக நேற்றும் நான் சொன்னேன். நிதி இலாகாவிலேயே சில தவறுகள் நடந்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன். 'சென்டிரல் காஷ் பீரோ' என்று அதைச் சொல்வார்கள். அங்கேயே தவறு ஏற்பட்டதற்கு வருந்துகிறேன். நிதி இலாகாவிலேயே இம்மாதிரி ஏற்படுவதானால் மற்ற இலாகாக்களில் ஏன் ஏற்படக்கூடாது? அதுவும் ஜில்லாக்களில் உள்ள கீழ்தர உத்தியோகஸ்தர்களிடையே இம்மாதிரி தவறுகள் சாதாரணமாக ஏற்படலாம். இந்த விஷயம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தெரியுமானால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இனிமேலாவது அக்கவுண்டண்டு ஜெனரல் மூலமாக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர நிதி இலாகாவுக்கும் மற்ற இலாகாவுக்கும் ஒரு 'கோவார்டினேஷன்' இருக்கவேண்டும். முன்பே சொல்லியிருக்கிறேன். ஸ்ரீ ராஜகோபாலச்சாரியார் முதல் அமைச்சராக இருந்தபோது இலாகாக்களுக்குள் 'கோவார்டினேஷன்' இருக்கவேண்டும் என்பதற்காகவே அடிக்கடி மாதத்திற்கு ஒரு முறையோ, இரண்டு முறைகளோ கூடிப்பேசி எல்லா விவகாரத்தையும் எவ்வளவு சீக்கிரம் செய்யமுடியுமோ அப்படிச் செய்தார்கள். அந்த முறை இப்போது கைவிடப்பட்டுவிட்டதால் உடனே அதை ஏற்படுத்தவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [26th July 1957

தவிர ஆடிடர்கள் எல்லாம் முக்கியமாக நிதி இலாகாவில் இருந்து இதர இலாகாக்களுக்கு அனுப்பி வைக்கிருர்கள். (கனம் ஸ்ரீ வி. சுப்பிர மணியம்—அக்கவுண்ட்ஸ் ஆபிசர்.) ஆம், இந்த அக்கவுண்ட்ஸ் ஆபீசர் களுக்கு நல்ல தேர்ச்சி கொடுத்து ஒவ்வொரு இலகாவுக்கும் அனுப்பி நல்ல முறையில் கணக்குகளை எல்லாம் பரிசிலனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதர இலாக்காவில் நடைபெறும் நிர்வாக ஊழலைத் தடுப்ப தற்கு நிதி இலாகா ஒரு முக்கியமான கருவியாக இருக்கவேண்டும். நேற் றும் சொன்னேன். இன்றும் சொல்ல விரும்புகிறேன்.

நிதி இலாகா காரியதரிசியைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனல் அநேக ஆண்டுகளாக அவர் அந்த இலாகாவிலேயே இருந்து வருகி ருர் என்றுதான் சொல்லவேண்டும். அம்மாதிரி இருந்தால் டென்யூர் போஸ்ட் ஆகிவிடும்.

முன்பு வெள்ளையர் காலத்தில் ஒரு அதிகாரியை செக்ரடேரியட்டில் மூன்று வருஷம்தான் வைத்திருப்பார்கள். இப்போது செக்ரடேரியட்டிலேயே ஒரு இலாகாவில் இருந்து இன்னெரு இலாகாவிற்கு மாற்றுகிருர்கள். அது எப்படி இருந்தபோதிலும் ஒரே இலாகாவில் ஒரு அதிகாரி அதிக காலம் இருப்பதனுல் ஊழல் அதிகரித்துவிடும். இதைத் தடுக்க கனம் அமைச்சர் அவர்கள் தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்று போலீஸ் அதிகாரி ஒருவரைப்பற்றியும் பேச்சு வந்தது. பி.டபிள்யூ.டி.-ஐ. எடுத்துக்கொண்டால் லஞ்சம் அதிகமாகத் தாண்டவ மாடுகிறது. முக்கியமாக மணிமுத்தாறு பிராஜெக்டை எடுத்துக்கொண்டால் ஒரு அதிகாரி இருந்தார். அவர் பேரில் மூன்று நான்கு வருஷங்களா கவே புகார் சொல்லப்பட்டு வருகிறது. அவர் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் ? அவர் இன்னும் சர்வீஸில் இருக்கிருரா ? அவர் லட்சக்கணக்கான ரூபாய் மோசடியில் சம்பந்தப்பட்டவர் என்பது தெரி யாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : You mean Sri A. R. Srinivasan? He has been sent out.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : எனக்கு அது தெரியாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : You should know things before you speak.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : நிற்க, இது மாதிரியாக ஜில்லாக்களைப் பிரிப்பது பற்றியும் ஒரு கமிட்டிபோட்டு, அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட் சபையில் வைக்கப்பட்டிருக்கிறது. அது இப்போது தான் வைக்கப் பட்டதனுல் அநேகம் அங்கத்தினர்களுக்கு அதைப் படிக்க அவகாசம் இல்லாமல் இருந்திருக்கும். எனக்கும் படிப்பதற்கு அவகாசம் இல்லை. நல்லமுறையில் ஜில்லாக்களைப் பிரித்து பரிபாலனம் செய்யவேண்டும். முன்பே அடிஷனல் மாஜிஸ்டிரேட் இருக்கவேண்டுமா என்பதாக ரெவின்யூ அமைச்சரிடம் கேட்டிருக்கிறேன். ஒரு ஜில்லாவை இரண்டு மூன்ருகப் பிரிக்கக்கூடாது. அப்படிப் பிரிக்கிற காலத்தில் சப்-கலெக்டர்கள் போடவேண்டுமா என்பதும் பரிசீலிக்கவேண்டும். எவ்வளவு நல்ல முறை யில் குறைந்த செலவில் நிர்வாகம் நடக்குமோ அதற்கு ஏற்றபடி ஜில்லாக் களைப் பிரிக்க வேண்டும்.



26th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

மற்றென்று ; ஜில்லா அதிகாரிகளும், இலாகா தலைமை அதிகாரிகளும் இருக்கிருர்கள். அவர்களுடைய சுற்றுப்பிரயாணத்தைக் குறைக்கவேண் டும். மாகாணம் பிரிந்த பிறகும் இவ்வளவு தூரம் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டுமா? அப்படிச்செய்வதனுல் முதல் நாற்பது மைலுக்கு சில கட்டணமும் பின்னுக்கு சில கட்டணமும் போட்டிருந்தாலும்கூட அவர்கள் அதிகப் பணம் வரும் என்பதற்காக நேர் அடிக்கடி போய்விடுகிருர்கள். அப்படி போவதில் ஒரு பிரயோஜனமும் ஏற்படுவது இல்லை என்று குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆபீசர்கள் அந்த இடங்களுக்குப் போவதற்கு முன்னல், அவர்களுடைய ' பெர்சனல் அஸிஸ்டன்டோ ' அல்லது "ஹெட் கிளார்கோ" அங்கு போய், '**Question enquiry**' தயாரித்து வைத் விடுகிருர்கள். இவர்கள் அங்கு போகிருர்களோ இல்லையோ—அல்லது முசா பரி பங்களாவில் இருந்துவிடுகிருர்களோ தெரியாது—சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு வந்துவிடுகிருர்கள். இம்மாதிரியான காரியங்கள் அநேக டிபார்ட்மெண்டுகளில் நடந்து வருகின்றன. மக்களோடு அவர்களுக்கு தொடர்பு இருக்கவேண்டும். உதாரணமாக வைத்திய வசதியை எடுத்துக் கொள்வோம். **Director of Medical Services Headquarters** ஆஸ்பத்திரிகளை மட்டும் பார்த்துவிட்டு . வந்து விடுகிருர் கள். ' ரூரல் ' டிஸ்பென்ஸரியையோ அல்லது ' லோகல் பண்டு டிஸ்பென் சரியையோ ' அவர்கள் சரியாக பார்ப்பது கிடையாது. அங்கெல்லாம் மருந்து சரியாக வருகின்றதா, சரியான முறையில் மருத்துவ வசதி அளிக்கப்படு கின்றதா என்று பார்ப்பது இல்லை. இவர்களை அவர்கள் கவனிக்க வேண்டும். இவர்கள் சென்னையில் இவ்வளவு நாள் இருக்கவேண்டும், மற்ற நாட்களில்தான் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கை அனுப்பி, நல்ல முறையில் மக்களுடைய குறைகளை நிவர்த் திக்க வேண்டியதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதே மாதிரி அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதைப்பற்றி ஏற்கனவே விவாதம் நடந்தபடியால் நான் ஒன்றும் அதிகம் சொல்லப் போவது இல்லை. இவர்கள் சென்னையில் அதிக நாட்கள் தங்கியிருந்தால் காரியங்களை இன்னும் சரியாக துரிதமாக கவனிக்கலாம். வெளியூரிலிருந்து வரும் ஜனங்கள் "சென்னையில் மந்திரியைப் பார்க்கலாம்" என்று வருகி ருர்கள். இங்கு அவர்கள் இல்லாமல் இருக்கும்போது அவர்களைக் காணமுடிவதில்லை என்ற கூக்குரல் இருக்கிறது. சுற்றுப்பிரயாணத்தை குறைத்துக்கொண்டு தக்கபடி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது "லிவிங் காஸ்ட்ஸ்" அதிகமாக இருக்கிறது. இதை குறைப் பதற்கு ஏதேதோ நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிருர்கள் சர்க்கார். அப்படியும் விலைவாசிகள் தாறுமாருக ஏறிக்கொண்டே இருக்கின்றன. அதன் காரணம் '**vicious circle**' என்று சொல்கிருர்கள். இந்த விலைவாசிகளை குறைக்க சர்க்கார் எந்த விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த விதத்தில் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன்.

இப்பொழுது கருப்பு மார்க்கட்டு இருந்து கொண்டிருக்கிறது. இதில் ஈடுபடுகிறவர்களை விசாரித்து தக்க தண்டனை கொடுத்து இந்த கருப்பு மார்க்கெட்டை அறவே ஒழிக்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமங்களிலும், சென்னை நகரத்திலும், குற்றங்களெல்லாம் அதிக மாகிப் போய்விட்டன. இதில் போலீசார் சரிவர நடக்கவில்லை என்ற புகார் கள் நிறைய வருகின்றன. சில பிராந்தியங்களில் குற்றங்கள் அதிகமாக இல்லை என்று சொல்லப்படுகிறது. ஜனங்களின் மனப்பான்மையால் இம் மாதிரி குற்றங்கள் குறைவாக இருக்கின்றனவே தவிர போலீசார் ஒன்றும் பெரிய நடவடிக்கை எடுக்கவில்லை. போலீசாரினுல்தான் அங்கே குற்றங் கள் குறைவாக இருக்கின்றன என்பதை நான் சொல்வதற்கு தயாராக இல்லை. குற்றங்கள் புரிகிறவர்களின் மேல் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [26th July 1957

ஜில்லா போர்டுகளின் நிலைமையைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி வருகின்றது. அதைப் பற்றி நாம் எல்லோரும் முன்பு பேசினோம். ஜில்லா போர்டுகளை எடுப்பதைப்பற்றி யோசித்து வருகிறார்கள். அதைப்பற்றி சீக்கிரம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்த ‘ பிளாக்குகள் ’ அமைப்பது ஒரு பெரிய பிரச்னை. பிற்போக்கான இடங்களில் இந்த ‘ பிளாக்குகளை ’ அமைக்க வேண்டும் என்ற கிளர்ச்சி இருந்து வருகிறது. இந்த “பிளாக்குகளை” நல்ல முறையில் நடத்தவேண்டும் என்று தான் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிக்கன முறையை எவ்வளவு தூரம் கையாள வேண்டுமோ அவைகளை கையாள வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆரம்பத்திலேயே அங்கத்தினர்கள் சொன்னார்கள். நானும் அப்படியே அபிப்பிராயப்படுகின்றேன். இரண்டு அல்லது மூன்று அமைச்சர்கள்கூட இருந்தால் அதனால் செலவு அதிகமாய் போய்விடப்போவதில்லை. இப்பொழுது மந்திரிகளுக்கு அநேக டிப்பார்ட்டுமெண்டுகள் இருக்கின்றன. உதாரணமாக நிதி மந்திரி அவர்களுக்கு நிறைய வேலை இருக்கிறது. அவர்களுக்கு இவ்வளவு வேலையும் பார்ப்பதற்கு திறமை உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. அவருக்கு நிதி இலாகா மட்டும் இருந்தால் நன்றாக இருக்கும். அதை நன்றாக கண்காணிக்க வசதி இருக்கும். இவருக்கு கல்வி இலாகாவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில டிபார்டுமெண்டுகளுக்கு ‘ **partial treatment** ’ என்ற குறை இருக்கும். என்னுடைய அபிப்பிராயம் அவருக்கு 10 இலாகாக்கள் கொடுத்தாலும் பார்ப்பதற்கு திறமை உண்டு என்பதே. அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் ஒரு இலாகாவுக்கு ஒருவரை போட்டுக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இதற்காக இன்னும் நாலு பேர்களை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம். இவர்கள் முக்கியமாக செண்டிரல் கிராண்டை நல்ல முறையில் வாங்கவேண்டும். மத்திய சர்க்கார் செலாவணித் தொகையை வாங்க ஏற்பாடு செய்யவேண்டும். ஜில்லா போர்ட்டை நடத்துவது போல் நம்முடைய மாகாணத்தை மத்திய சர்க்கார் நடத்துகிறார்கள் என்றுசொல்லப்படுகிறது. இதை ஒரு பக்கம் உண்மையிலேயே நம்ப வேண்டியிருக்கிறது. அமைச்சர்கள் நல்ல முறையில் வாதாடி மத்திய சர்க்காரிடமிருந்து சன்மானம் பெற வேண்டும், இதன்மூலம் ஐந்து ஆண்டு திட்டம் வெற்றி பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1-00 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM : சபா நாயகர் அவர்களே, இந்த வரவு செலவு சட்டத்தை இந்த சபை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதில் கடைசி கட்டத்தில் நாம் இருக்கிறோம். இந்தச் சட்டம் இங்கு நிறைவேற்றப்பட்டவுடன் இந்த பட்ஜெட் விவாதம் இங்கே பூர்த்தியாகும். இந்தக் கடைசி கட்டத்திலும் பல நண்பர்கள் நல்ல யோசனைகளை, சர்க்கார் நல்ல முறையில் நடப்பதற்காக, நல்ல எண்ணத்தோடு எடுத்துக்கூறினார்கள். அவர்கள் எல்லோருக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் இரண்டு மூன்று மாதங்களாக, வெளியூருக்கு—வெளி நாட்டுக்கு—சென்று, அங்கே உடம்பு கொஞ்சம் அசௌகரியம் ஏற்பட்டு, இப்பொழுது பூரண சுகத்துடன் திரும்பியிருப்பது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. தொடர்ந்து நம்முடைய சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அவருக்கு வரவேற்பு கூறுவது என்பது பொருத்தம் அல்ல. அவர் நம்முடன் இருப்பதைக் குறித்து என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். “நாம் கோடிக் கணக்கான ரூபாய் செலவழிக்க இப்போது திட்டமிட்டிருக்கின்றோம். இந்த திட்டங்களின் மூலமாக ரூபாய்க்கு ரூபாய் நமக்கு பலன் கிடைக்க வேண்டும். அதன்மூலமாக மக்கள் நன்மை பெற முடியும்” என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அது எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய கருத்து. அதற்காகத்தான் நாம் முழு முயற்சி செய்யவேண்டும். ஆனால் எவ்வளவு முயற்சிகள் செய்தாலும் மனிதன் பரிபூரணமாக ஒரு லட்சியத்தை அடைந்து விட முடியாது என்ற ஒரு கருத்தையும் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். எவ்வளவு முயற்சி செய்தாலும்—அந்த முயற்சி இருந்தும்—சிலதவறுகள் நம்மையும் அறியாமல் ஏற்பட்டு விடுகின்றன என்பதை இந்த சபை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அந்த முறையில் தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள இயந்திரத்திலேயே பல்வேறு அம்சங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த சட்டசபையில் விவாதம் அதன் மூலமாக மக்களுடைய அபிலாஷைகளை பிரதிபலிக்கக்கூடிய முறையிலேயே, அவர்கள் மனதிலே இருக்கக்கூடிய கருத்தை இங்கு எடுத்துச்சொல்வதற்கும் தவறுகள் நடந்தால் கண்டிக்கவும், திட்டங்களை எவ்வாறு அமைப்பது என்று யோசனை சொல்லவும் இந்த சட்டசபை அமைந்திருக்கிறது. இந்த சபையின் பிரதிநிதிகள் என்ற முறையில் மந்திரிகள் நிர்வாகத்தை ஏற்று நடத்துகின்றனர். இந்த சபையின் ஆதரவு இல்லாதபோது மந்திரிகள் நீங்கிவிட வேண்டியதுதான். நாங்கள் இன்றைக்கு மந்திரி பதவியில் இருந்து நிர்வாகத்தை நடத்துகிறோம் என்றால் இந்த சபையின் பிரதிநிதிகளாக, இந்த சபைக்கு ஜவாப்தாரியாகத்தான் இருந்து, பொறுப்பை ஏற்று நடத்துகிறோம்.



26th July 1957] [Sri C. Subramaniam]

இந்த நிர்வாகத்தை நடத்துவதற்காக நிர்வாக இயந்திரம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிர்வாக இயந்திரம் நல்ல முறையில் நடக்கிறதா என்று நாம் எல்லோரும் கண்காணிப்பது போக, நல்ல முறையிலே பணம் செலவழிக்கப்படுகிறதா என்று கணக்குகளை கண்காணிப்பதற்காக தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ‘ ஆடிட் டிபார்ட்டுமெண்டுக்கும் ’ நிர்வாக இயந்திரத்திற்கும் தொடர்பு இருக்கக்கூடாது. அது தனிப்பட்ட ஒரு இயந்திரமாக இருந்தால்தான், அது குற்றங்களை சரியான முறையில் எடுத்துக்காட்டமுடியும். தெரியாமல் குற்றம் செய்தவர்களே அந்தக் குற்றத்தை கண்டுபிடிக்க முடியாது. உதாரணமாக நாம் எழுதும்போது ஒரு எழுத்து விட்டுப்போகிறது. அதை நம்மால் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் மூன்றாவது ஒரு மனிதர் அதைப்பார்த்தால் அந்தக் குற்றம் தெரிந்துவிடும். ஆகவே தான், குற்றங்களை கண்டுபிடிப்பதற்கு தனிப்பட்ட இயந்திரம் வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அதற்கு மேலாக நியாய ஸ்தலங்கள் இருக்கின்றன. அநியாயம் நடக்காமல் பார்த்துக்கொள்ளுவதற்காகவும், சட்டத்திற்கு மீறி, வரம்புக்கு மீறி காரியங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளுவதற்காகவும், நியாய ஸ்தலங்கள் நிர்வாக இயந்திரத்திற்கு அப்பாற்பட்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த எல்லா அவயவங்களும் நல்ல முறையிலே இயங்கும்போது தான், நிர்வாகம் நல்ல முறையிலே நடைபெற்று, மக்களுக்கு நன்மை ஏற்படும். அதற்காகத்தான் முயற்சிகள் செய்கிறோம். அந்த அடிப்படையிலேதான் அரசியல் அமைப்பும் ஏற்படுத்தியிருக்கிறோம்.

திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் ஸ்ரீ அண்ணாதுரை அவர்கள் எங்கள் பேரிலே நம்பிக்கை வைத்திருப்பதாகவும், எங்களுக்கு ஆற்றலும் அறிவும் இருப்பதாகவும் சொன்னார்கள். இந்தச் சபையிலாவது அவர் இதை ஒப்புக்கொண்டதற்காக நான் மிகவும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அது உண்மை என்றே எடுத்துக்கொள்ளுவதற்கு தயாராக இருக்கிறேன். ஆனால் இத்தனை நல்ல திறமை இருந்தாலும், அறிவு இருந்தாலும் எங்கள் கைகள் கட்டிப்போடப்பட்டிருக்கின்றன, ஆகையினால் எங்களால் எந்த காரியத்தையும் செய்ய முடியாது என்று சொன்னார்கள். உண்மையிலே சில பேர்கள் சொல்லுவது உண்டு, “இதெல்லாம் விதி அப்பா, முன் காலத்திலே எழுதிவைத்து விட்டு போனது, அதைமீறி ஒன்றும் செய்யமுடியாது” என்று. விதிப்படி தான் எந்தக் காரியமும் நடக்கிறது என்று விதியையே நினைத்துக்கொண்டிருக்கிற மனப்பான்மை இருந்தால் “நாங்கள் அரசியல் சூழ்நிலையில் கட்டிப்போடப்பட்டிருக்கிறோம், அதனால்தான் ஒன்றும் நடக்கவில்லை ” என்று வெகு சுலபமாக சாக்கு போக்கு சொல்லிவிடலாம். அம்மாதிரி சாக்குபோக்கு சொல்லக்கூடிய ஒரு முறையில் தான் அவர்கள் இதை எடுத்து சொன்னார்கள். எப்படி விதியின்பேரில் மூடநம்பிக்கை வைக்கிறவர்கள் விதியையே நம்பி பேசுவார்களோ அதேமாதிரி தீவிர கொள்கை உடையவர்கள் தீவிர கொள்கை அடிப்படையில் தான் பேசுவார்கள். அதைப்பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அவர்கள் அப்படி பேசுவது அதை அவ்வளவு தீவிரமாக நம்புகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அதே கொள்கையைத்தான்

அவர்கள் மற்ற விஷயங்களிலும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். வடக்கும் தெற்கும் கூடிவாழ முடியாது ; உழவனுக்கு நிலம் என்று சொன்னால் 'மெகனைஸ்டு கல்டிவேஷன்' அங்கே வரமுடியாது என்று சொல்லுகிறார்கள். ஒன்று இருந்தால், மற்றொன்று இருக்கமுடியாது என்கின்ற முறையில் தான் பேசுகிறார்கள். 'பப்ளிக் ஸெக்டார்' இருந்தால் "பிரைவேட் ஸெக்டார்" இருக்கமுடியாது ; ஹிந்தி இருந்தால் தமிழ் இருக்கமுடியாது ; பிராமணர்கள் இருந்தால் பிராமணர் அல்லாதார் இருக்கமுடியாது, ஒன்று இருந்தால் இன்னொன்று இருக்கமுடியாது என்ற மனப்போக்கில் தீவிரக் கொள்கை ஏற்பட்டிருக்கிறது. அது எல்லா இடங்களிலும் பரந்து செல்கிறது. அப்படிப்பார்க்கப் போனால், படித்தவர்கள் இருந்தால் படிக்காதவர்கள் இருக்கமுடியாது. அறிஞர்கள் இருந்தால் அறியாதவர்கள் இருக்கமுடியாது ; என்ற இதே கொள்கை பரவிக்கொண்டே போகும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

உழவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்லுவதற்கும், 'மெகனைஸ்ட் கல்டிவேஷன்' ஏற்படுத்துவதற்கும் ஒன்றும் முரண்பாடு கிடையாது. இதே தத்துவத்தைக்கொண்டு 'மெகனைஸ்ட் கல்டிவேஷன்' செய்யமுடியும் என்பதை உணரவேண்டும். இல்லாவிட்டால் உழுகின்றவனுக்கு நிலம் என்ற ஒரு அடிப்படையிலே எந்தக்காரியத்தையும் நாம் செய்யமுடியாது என்பதை அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காகத் தான் கூட்டுறவு முறையிலே 'ஜாயின்டு கோவாபரேடிவ் பார்மிங்' அவசியம் என்று சொல்லுகிறோம். சிறுசிறு பகுதிகளாக நிலங்களை பிரித்துக் கொடுத்து விட்டோமானால், அந்த நிலத்தை உழமுடியாது, நிலத்தை நல்ல முறையிலே பண்படுத்தி உற்பத்தியை பெருக்க முடியாது என்ற அடிப்படையில் தான்,'ஜாயின்டு கோவாபரேடிவ் பார்மிங்' அமைக்கவேண்மென்று சொல்லுகிறோம். நிலத்தை உழுபவனுக்கு உரிமை வேண்டுமென்று சொல்லும் பொழுது, தனித்தனியாக நிலத்தை பிரித்துக் கொடுத்துவிட்டால் மட்டும் நிலத்தை உழுபவனுக்கு முழுப்பலன் கிடைக்கும் என்று சொல்லுவதற்கில்லை. ஒரு அங்குல நிலத்தை பிரித்துக்கொண்டு விட்டு, அதில் உழுபவனுக்கு உரிமை இருக்கிறது என்று எடுத்துக்காட்டிவிட்டால், அவனுக்கு ஒரு பைசா லாபம் கூட வராது. அதனால் தேசத்திற்கே ஒரு பெரிய பாதகம் வந்துவிடும். ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருக்கும் என்று சொல்லுவதில் அவர்களிடத்திலே இருக்கிற ஒரு தீவிர நம்பிக்கையும் மனப்பான்மையும் பிரதிபலிக்கிறது. அந்தத் தீவிர கொள்கையைவைத்துக் கொண்டு, அந்தக் கொள்கை எல்லாவற்றிலும் பரவவேண்டுமென்ற மனப்பான்மை ஏற்பட்டிருப்பதால் தான், ஒன்றுக்கொன்று முரணாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். தனிப்பட்டவர்கள் துறை இருக்குமானால், அரசியல் துறையிலே தொழில் வளர முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அனுபவத்தில் பார்த்தால் அம்மாதிரி கிடையாது. 'பப்ளிக் ஸெக்டார், பிரைவேட் ஸெக்டார்' இரண்டும் இருக்க முடியும். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையிலே தொழில் வளம் அதிகமாக வளர வேண்டுமென்று நினைக்கிறோம். தொழில் வளம் பெருகவேண்டுமென்று நினைக்கும்பொழுது யார் எந்தத் தொழிலை நல்ல முறையில் நடத்தமுடியும் என்று தெரிகிறதோ அவர்கள் அந்தத் தொழிலை நடத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களால் சுரண்டுதல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே அதை தடுப்பதற்கு வேண்டிய சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் போட்டிருக்கிறோம். அதை தடுக்க முடியும் என்பதையும் நிரூபித்துக்கொண்டிருக்கிறோம். ஆகையினால் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல் இன்றைக்கு இரண்டும் இருக்க முடியும். நன்றாக இயங்க முடியும் என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறதே, நாங்கள் என்ன செய்வோம் ? எங்களுக்கு 184 கோடி ருபாய் கொடுத்திருக்கிற சூழ்நிலையிலே நாங்கள் கட்டுண்டு கிடக்கின்றோம். நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று சாக்குபோக்கு சொல்லுவதற்காக நாங்கள் இங்கு இருக்கவில்லை. ஒரு காரியத்தை திறமையாகச் செய்வது என்றால் என்ன? திறமையாகச் செய்வது என்றால், இருக்கக்கூடிய வசதிகளை வைத்துக் கொண்டு காரியத்தை திறமையாகச் செய்வதுதான் திறமை என்பதே ஒழிய, "எந்தக் காரியம் கைகூடும், இருக்கும் சூழ்நிலையில் ஒன்றையும் செய்யமுடியாது' என்று சும்மா இருந்துவிடுவது திறமையல்ல. ஆனால் நாங்கள் ஏதோ கட்டுண்டு கிடக்கிறோம், எங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டால், அந்த அபிப்பிராயத்தை அவர்கள் வைத்துக் கொள்ளட்டும். இருக்கின்ற 184 கோடி ரூபாயை, கொடுக்கின்ற 184 கோடி ரூபாயை நாங்கள் சரிவர உபயோகிக்கின்றோமா, திறமையாக உபயோகிக்கின்றோமா, மக்களுடைய நன்மைக்காக உபயோகிக்கின்றோமா, என்று பரிசீலனை செய்து பார்ப்பது, சோதனை செய்து பார்ப்பது இந்த சபையின் கடமை. இதை நல்ல முறையிலே செலவழிப்பது எங்களுடைய கடமை. அதற்காக நாங்கள் முயற்சி செய்வோம். நாங்கள் கட்டுண்டவர்கள் அல்ல. இந்த முயற்சிக்கு நீங்கள் போதிய ஒத்துழைப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுகொள்ளுகிறேன்.





இந்த நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்கு, அதில் ஊழல்கள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்பதுபற்றி ஸ்ரீ கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ஊழல்கள் இருக்கின்றன என்பதை தெரிவிப்பதற்கு, அவருடைய கட்சியின் தனி சிறப்பாக இருக்கக்கூடிய முறையிலே ஒரு விஷயத்தைப்பற்றி பாதி சொல்லியும், பாதி சொல்லாமலும் எடுத்துச்சொல்லி தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணியிருக்கிறார்கள். சின்கோனாவுக்காக 20 லட்ச ரூபாய் வீணாக்கப்பட்டது என்றும், மறுபடியும் 28 லட்ச ரூபாய் செலவுக்காக திட்டம் போடப்பட்டது என்றும், அதற்கு மந்திரிகள் இடம் கொடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். ஏதோ 20 லட்ச ரூபாயை இந்த நிர்வாகம் வீணாக செலவழித்துவிட்டு, உடனே அதை திருத்தி அமைப்பதற்காக 28 லட்ச ரூபாய் வேண்டுமென்று திட்டமிட்டு, பிறகு அந்தத் திட்டத்தை வேண்டாமென்று நிறுத்திவைத்து விட்டதாக, அந்த தொனியில் அவர்கள் பேசினார்கள். விஷயம் தெரியாதவர்கள் அம்மாதிரிதான் புரிந்து கொள்ளுவார்கள். (SRI M. KALYANASUNDARAM : ஆடிட் ரிபோர்ட்டில் அம்மாதிரி சொல்லியிருக்கிறது). ஆடிட் ரிபோர்டை பூராவும் படித்துப் பார்க்க வேண்டும். 20 லட்ச ரூபாய் செலவில் எப்பொழுது அந்தக் கட்டிடம் கட்டப்பட்டது என்பதைப் பார்க்கவேண்டும். யுத்த காலத்தில் அதை அவசரமாக கட்டவேண்டியிருந்தது. யுத்தகால காண்டிராக்டில் 1940–1945-ல் 20 லட்ச ரூபாய் செலவில் இந்தக்கட்டிடம் கட்டப்பட்டது. பிறகு சுதந்திரம் வந்தபொழுது அந்தக் கட்டிடத்தை நம்மிடம் விட்டுபோனார்கள். ஆகையால் இப்பொழுது அந்த கட்டிடம் இடிந்து விழக்கூடிய நிலைமையில் இருக்கிறது. அதை சரி செய்வதற்கு என்ன செலவு ஆகும் என்று பார்த்ததில் 28 லட்ச ரூபாய் ஆகும் என்று தெரிந்தது. 20 லட்ச ரூபாய் போட்டு கட்டிய கட்டிடத்திற்கு மறுபடியும் 28 லட்ச ரூபாய் செலவழிப்பது சரியா, அவசியமா என்பதை யோசித்து, அது அவசியம் இல்லை என்று நிறுத்திவைத்தோம். அப்படியிருக்கும்பொழுது ஏதோ இந்த சர்க்காரால் அல்லது சுதந்திரம் ஏற்பட்டதற்கு பிற்பாடு 20 லட்ச ருபாய் செலவழித்து கட்டப்பட்ட கட்டிடம் இது என்ற முறையிலே அவர் எடுத்துச் சொன்னது மிகவும் தவறு என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : குறுக்கு வழியிலே நான் எதையும் எடுத்துச்சொல்லி தாக்கவேண்டுமென்பது அவசியமில்லை. உண்மையைச் சொல்லி அதனால் என் கட்சி நிலைக்காமல் போய்விட்டால்கூட நான் வருத்தப்படமாட்டேன் என்பதை மந்திரி அவர்களுக்கு நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த விவரம் "ஆடிட் ரிபோர்டில்" இருக்கிறது. யுத்த காலத்தில் கட்டப்பட்டதாக மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். 1945 ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியுடன் கிழக்குப் பகுதியில்கூட யுத்தம் முடிந்துபோய்விட்டது. கட்டிடம் 1944-ல் ஆரம்பிக்கப்பட்டு 1948 வரையில் கட்டப்பட்டிருக்கிறது. அதாவது சுதந்திரம் அடைந்த பிற்பாடு கூட இந்தக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மந்திரி சபை இதற்கு பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. சுதந்திரம் அடைந்த பிற்பாடு இந்தக் கட்டிடத்தை நாம் என் எடுத்துக்கொண்டிருக்கவேண்டும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : 1944-ல் ஆரம்பித்தாலும் இதற்கு வேண்டிய "காண்டிராக்ட்" 1942-ல் கொடுக்கப்பட்டது. வேலை 1944-லோ அல்லது 1947-லோ முடிந்து இருக்கலாம். இந்த காண்டிராக்ட் யுத்த

காலத்தில் கொடுக்கப்பட்டது. ஆகவே அதை நாங்கள் கட்டவில்லை என்பதை அங்கத்தினர் அவர்களுக்கு தெரிவித்து கொள்கிறேன். 1944-ல் ஆரம்பிக்கபட்டது என்றுவது ஒப்புகொண்டதற்கு சந்தோஷப்படுகிறேன். அதேமாதிரி 3½ லட்சம் ரூபாய் பறிபோய்விட்டது என்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். இது தென் கன்னட ஜில்லாவில் ஏற்பட்ட ஒரு ஊழல். வாஸ்தவம்தான். இம்மாதிரியான ஊழல்கள் தடுப்பதற்கு பல விதிகளை ஏற்படுத்தியிருக்கிறது. இத்தனைக்கும் மேல் ஒரு கெட்டிக்காரன் வருகின்றான், திருடி கொண்டு போகின்றான். சட்ட விதிகளை பொறுத்தவரையில் சரியாக அனுசரிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கின்ற "ட்ரஷரி டெப்யூட்டி கலெக்டர்" அவரது வேலையை சரியாக செய்திருக்கிறார்கள். இவ்விதமெல்லாம் இருந்தும் சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டையைக் கண்டுபிடித்து அதன் வழியாக கிடைத்ததை எல்லாம் சுருட்டிக் கொண்டுபோகின்றார்கள். இம்மாதிரி இதில் மாத்திரமல்ல. இவ்விதம் பல பாங்குகளில் நடந்திருக்கின்றன. பல பெரிய ஸ்தாபனங்களிலும் நடக்கின்றது. குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டும் வருகின்றன. அதன் பின் பல புதிய விதிகளை புகுத்தப்படுகிறது. அதற்கும் மிஞ்சி கெட்டிக்காரன் ஒருவன் வந்து சேருகிறான், அவன் இவ்விதம் செய்துவிடுகிறான். ஆகவே இம்மாதிரிப்பட்ட காரியங்களை தவிர்ப்பதற்கு வேண்டிய விதத்தில் விதிகளை கொண்டு வந்திருக்கிறோம். இதற்காக நாங்கள் ஏதாவது விதிகள் கொண்டு வரவில்லை என்றால் நீங்கள் குற்றம் சொல்லலாம். பரவலாக இருக்கக்கூடிய விதிகளை தவிரவும், ஏன், இதை தவிர்ப்பதற்காக விதிகளை கொண்டு வரவில்லை என்று கேட்கலாம். அதற்கு நாங்கள் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். நாங்கள் இதற்கெல்லாம் விதிகளை செய்திருக்கிறோம். ஆகவே இவ்விதம் உள்ள ஒரு ஊழல் வெளியான உடன் கேஸ் போடப்பட்டது. அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் அக்கறையில்லாத முறையில் (Careless) இருந்திருப்பார்களா என்றெல்லாம் விசாரிக்கப்பட்டது. அவர்கள் எல்லாம் தங்கள் பொறுப்பின்படி நடந்திருக்கிறார்கள். இதை நாங்கள் அங்குசென்று பார்த்தோம். இதில் இருக்கின்ற விதிகளிலுள்ள ஓட்டையை எல்லாம் கண்டுபிடித்து மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரி இரண்டொரு விஷயங்களை மாத்திரம் பார்த்துவிட்டு நிர்வாகத்தில் முழுவதுமே இவ்விதமான ஊழல்கள் இருக்கின்றன என்ற முறையில் சொல்லுவது நியாயமல்ல என்பதை தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த "ஆடிட் ரிபோர்ட்" "பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி"யின் முன்னால் வரப்போகிறது. அந்த கமிட்டி இதைப் பற்றி நன்றாக விவாதித்து தீர்ப்பு சொல்லப்போகிறார்கள். அதற்கு முன்னால் இதற்கு எதிரான விஷயங்களை சொல்லுவதில் அர்த்தமில்லை. ஆனால் ஒரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியின் அங்கம் வகித்தவன் என்ற முறையிலும் நாலைந்து வருடங்களாக இந்த கணக்குகளை பரிசீலனை செய்த வகையிலும் சரியாகவே நிர்வகிக்கப்பட்டு வருகிறது, இதை கமிட்டியிலுள்ள பல அங்கத்தினர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மேலும் குறைகளை சொல்லும்பொது அவற்றை தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது. குற்றங்களை நன்றாக தெரிந்து கொண்டு அதில் காணுகின்ற குறைகளை கூறவேண்டியது தான். இவ்விதம் குறைகள் காணும்போது அதிலுள்ள தவறை கண்டுபிடித்து அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் அனேகமாக குறைகள் வரக்கூடாது என்ற முறையில்தான் நாங்கள் முயற்சி செய்கின்றோம். இதிலும் இன்னொரு முக்கியமான விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். இந்த புஸ்தகம் வெறும் குற்றங்களை மாத்திரம் எடுத்துச்சொல்லக்கூடிய புஸ்தகம் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு நிர்வாகத்தில் லட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்யும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் நூற்றுக்கணக்கான குற்றங்களை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த புஸ்தகத்தை திருப்பின உடனேயே இருக்கும் இரண்டு மூன்று குறைகளை மாத்திரம் எடுத்துச் சொல்லிவிட்டால், இந்த நிர்வாகத்தில் பூராவும் இப்படித்தான் இருக்கிறது என்று நினைத்துவிடக் கூடாது. இம்மாதிரி பெரிய நிர்வாகத்தில் இம்மாதிரியான குறைகள் ஏற்படத்தான் செய்யும். ஆகவே இதில் சொல்லப்பட்டிருக்கும் குறைகளை வைத்துக்கொண்டு நிர்வாகம் பூராவும் இவ்விதம் இருக்கும், இது ஒரு சாம்பிளாகும் என்று பொதுமக்கள் எண்ணக்கூடாது, அம்மாதிரியான



ஒரு தப்பபிப்பிராயத்தை பரப்பக்கூடாது என்றுதான் அனுபவம் மிகுந்த நண்பர் கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் மேலும் சொல்லும்பொழுது மணப்பாறை "கோவாப்பரேடிவ் ஸொஸைட்டி"யில் நடந்த ஊழலைப்பற்றி சொன்னார்கள். இதைப்பற்றி கேஸ் எடுக்கப்பட்டு இதில் சம்பந்தப்பட்டவர்களை தண்டித்திருக்கிறது. ஆனால் இதில் ஒரு காரியத்தை நாம் கவனிக்க வேண்டும். அதிகாரிகளை எல்லாம் உடனடியாக தண்டித்துவிட முடியாது. அந்த ஸொஸைட்டியில் பல விதிகள் இருக்கின்றன. அதையும் மீறி இது நடந்திருக்கிறது. இதில் இருக்கின்ற எல்லா அதிகாரிகளை தண்டியுங்கள் என்று திடீரென்று சொல்லி விட முடியாது. அவ்விதம் தண்டனை கொடுக்கவேண்டுமென்றால் யார் யார் எல்லாம் குற்றம் செய்தார்களோ அவர்களை எல்லாம் கொண்டுவந்து Peoples' Court கூட்டுவித்து அதில் விசாரணைசெய்து தூக்கு தண்டனை விதிக்கவேண்டியதுதான். ஆனால் நம்முடைய அரசியல் முறை அப்படியல்ல. அதிகாரிகளுக்கும் சுதந்திரம் இருக்கிறது. அவர்களுக்கும் சரியான நியாயம் வழங்குவதற்குள்ள கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. தனிப்பட்டவர்களின் சுதந்திரம் பறி போகாமல் இருக்க வேண்டும். அதை பாதுகாக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. நம்முடைய அரசியல் அமைப்பு அவ்விதம் இருக்கிறது. ஒரு அதிகாரியின்மேல் குற்றம் சுமத்தப்பட்டால் அதை தீர விசாரித்து அதன் பேரில்தான் நடவடிக்கை எடுக்க முடியும். அவ்விதம்தான் இதிலும் செய்யப்பட்டிருக்கிறது. அவ்விதம் இல்லாமல் உடனே தூக்கில் போட வேண்டும் என்று சொல்லிவிட முடியாது. நாம் இப்போது இருக்கின்ற முறையில் இவ்விதம் தான் செய்ய முடியும். கல்யாணசுந்தரம் அவர்கள் வரக்கூடிய காலத்தில் வேண்டுமானால் வேறு முறையை கொண்டுவரலாம். இப்போது இருக்கின்ற அரசியல் அமைப்பு முறையில் இப்படிதான் செய்ய முடியும். அதன்கீழ் தான் வேலை செய்து கொண்டிருக்கிறோம். அடுத்தபடியாக ஒரு டி.எஸ்.பி.யைப்பற்றி சொல்லப்பட்டது. அவர் பேரில் புகார் வந்த உடனேயே அவரை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பின் அவர் லீவ் போட்டுக் கொண்டிருந்தார். அவர் மெடிக்கல் சர்டிபிக்கேட் கொடுத்து லீவ் வேண்டுமென்று கேட்டால் நாம் கொடுத்துதான் தீரவேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவருடைய பேரில் புகார் வந்த உடன் அவரை உடனே இடம் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே இம்மாதிரி குறைகளை சொல்லும்போது அதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை பார்க்க வேண்டும். ஆகவே இதில் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்கிறேன். கனம் அன்பழகன் அவர்கள் பேசினார்கள். மிகவும் ஆவேசத்துடன் பேசினார்கள். இது மாதிரி போலீஸ் அதிகாரிகள் குற்றங்கள் செய்கிறார்கள், என்றெல்லாம் சொல்லப்பட்டது. இந்த சபையில் சொல்லப்படுகிற குற்றங்களை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஏனென்றால் இங்கு எதை வேண்டுமானாலும் பேசலாம். இந்த சபை பாதுகாக்கப்பட்ட இடம். ஆனால் இதில் இதைப்பற்றி பேசும் பொழுது யாரும் பொறுப்பற்ற தன்மையில் பேசக்கூடாது. தனிப்பட்டவர்களின் பேரில் குற்றச்சாட்டை சொல்லும்போது அதை நிரூபிக்கக்கூடிய காரியங்களையும் சொல்ல வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, அரசாங்க அதிகாரிகள் செய்கின்ற தவறுகளை பொது மக்களால் வெளியில் சொல்லப்படும் குறைகளை எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் எடுத்துச்சொல்லும் போது அதை அவர்களால் நிரூபிக்க முடியாது. அரசாங்கத்திற்குதான் அதை நிரூபிக்க முடியும். அரசாங்க அதிகாரிகளின் பேரிலுள்ள லஞ்சங்களையும் குற்றங்களையும் கூறி குற்றம் சாட்டுகிற பொழுது அவற்றை நிரூபிக்கப்படாவிட்டாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதி அரசாங்கத்தால் தரப்பட்டிருக்கிறது. ஆகவே எதிர்கட்சியை சார்ந்த நாங்கள் நாட்டுமக்களால் வெளியில் கூறப்படும் குற்றச் சாட்டுகளை இந்த சபையில் எடுத்துச் சொல்லுவதை பொறுப்பற்ற தன்மையோடு பேசுவது என்று எதிர்க்கட்சிக்காரர்களை குறிப்பிடுவது அவையின் மேன்மைக்கும் அமைச்சருடைய பொறுப்புக்கும் ஏற்றது தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

[26th July 1957

**THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன வாதத்தை ஒப்புக் கொள்கிறேன். தனிப்பட்ட அதிகாரிகளைப் பற்றி குற்றம் சாட்டும்பொழுது அதனுடைய பொறுப்பை உணர்ந்துதான் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**SRI A. GOVINDASAMY :** இன்று காலையில் இந்த போலீஸ் அதிகாரியைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு குழு நியமித்தாகி விட்டது. அந்த அதிகாரிக்கு பரிந்து பேசுவது போல் இப்பொழுது மந்திரியவர்கள் பேசுகிறார்கள். ஆகவே அதைப்பற்றி பேசாமல் அந்த முடிவு தெரிகிற வரையில் அதைப் பற்றிச் சொல்வதை நிறுத்திவைக்கும்படி சபா நாயகர் வழி மந்திரியவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** நான் யாருக்கும் பரிந்து பேசவில்லை. யார் குற்றம் செய்திருந்தாலும் அவர்களை உடனடி தண்டிக்க வேண்டும். யாராயிருந்தாலும் அதற்காக தயங்குவது கிடையாது. நான் இப்பொழுது சொல்வது, "குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்தீர்கள். அதற்காக ஜட்ஜ் ஒருவரை நியமிக்கிறோம். உங்கள் பொறுப்பை உணர்ந்து நீங்கள் அதை நிரூபிக்கத் தயாராயிருக்க வேண்டும்." என்று.

**SRI K. ANBAZHAGAN:** தலைவர் அவர்களே, எதிர்கட்சியைச் சார்ந்தவர்கள் பேசுகிற கருத்துக்களைப் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறபோது பொறுப்பை உணர்ந்து பேச வேண்டும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்துவது எதிர்கட்சியினர் பொறுப்பற்றவர்கள் என்ற கருத்தைத் தெரிவிப்பதாகும். அப்படி எதிர்கட்சியினர் மீது குற்றம் சாட்டுவது இந்த அவைக்கு உகந்ததா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** அவர்கள் பொறுப்பற்றவர்கள் என்று சொல்ல நான் தயாரில்லை. அவர்கள் பொறுப்பை உணர்ந்துதான் பேசுகிறார்கள் என்ற காரணத்திற்காகத்தான் ஒருவரை நியமித்திருக்கிறோம். இல்லாவிடில் அப்படி நியமித்திருக்கவே மாட்டோம். இதுமாதிரி தனிப்பட்டவர்களைப் பற்றி புகார் சொல்லும்போது அது எவ்வளவு தூரம் நாம் சொல்லுவதில் ஆதாரம் இருக்கிறது என்பதைத் தெரிந்து பேச வேண்டியது அவசியம். அதற்காகத்தான் இதை ஒரு குறிப்பாக எடுத்துக் காட்டினேனே யொழிய வேறு ஒன்றுமில்லை. இதைப்பற்றி விசாரிக்கப் போகிறார்கள். அதில் அவர்கள் அக்கரை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். யாராவது தவறாக நடக்கிறார்கள் என்றால் அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள சர்க்கார் தயங்காது என்பதை நான் இன்றும் மறுபடியும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அது மாதிரித்தான் எங்கு எங்கு ஊழல்கள் இருக்கிறது என்று எடுத்துக் காண்பிக்கப்பட்டாலும், அல்லது நாங்களாகவே கண்டு பிடித்தாலும், அப்படி எங்களுக்குத் திறமையில்லை என்றால் வேறு யாராவது கண்டு பிடித்துச் சொன்னாலும் அதற்காக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நிர்வாகம், லஞ்சம், ஊழல்கள் இவைகள் இல்லாமல் நடக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் அதோடு இதிலே வீண் செலவுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்கள். அது, எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய கருத்தாகும். மார்ச் 31-ம் தேதி பற்றி முக்கியமாக குறிப்பிட்டார்கள். அதிலே இருக்கக்கூடிய கருத்தை நான் முழுக்க முழுக்க ஒப்புக் கொள்கிறேன். மார்ச் 31-க்குள் பணம் எடுத்தாக வேண்டும். அதற்குள் வேலையை முடிக்க வேண்டுமென்ற விதியின் காரணமாக வீண் செலவு ஏற்படுகிறது. செலவு செய்வது வீணாகப் போகிறது என்பதை நானும் உணர்ந்திருக்கிறேன். ஆகவே பெப்ரவரி, அல்லது மார்ச் மாதம் இந்த வேலைகளை முடிப்பது என்ற திட்டத்தை விட்டு விட்டு, மாணவர்கள் மார்ச் மாதம் பரீட்சைக்கு படிக்கிறது போல், அதை விட்டு விட்டு, வருஷம் முழுவதும் திட்டம் இட்டு வேலை செய்யவேண்டுமென்ற [illegible] திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது, இப்பொழுது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. 31-ம் தேதி முடிவடையவில்லை என்றாலும் அதற்குத் தொடர்ந்து பணம் கொடுக்கப்படும்.



26th July 1957] [Sri C. Subramaniam]

அடுத்த வருடத்தில் போனாலும், அதே முறையில் பலவித வீண் செலவுகள் ஏற்படலாம். அந்த வீண் செலவுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள பலவிதமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இன்னும் பலவித நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதையும் உணருகிறோம். அவ்வப்போது இந்த சட்டசபையில் சொல்லக்கூடிய ஆலோசனைகளை வைத்துக் கொண்டு இந்த நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முயற்சி செய்து வருகிறோம் என்று இங்கு உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிதி இலாகாவைப் பற்றி இன்றும் குறிப்பிட்டார்கள். இதற்கு முன்பும் இன்னொரு சமயத்திலும் குறிப்பிட்டார் எதிர் கட்சித் தலைவர். முக்கியமாக நிதி இலாகா காரியதரிசி தொடர்ந்து அந்த இலாகாவில் இருப்பது தவறு என்ற முறையில் சொன்னார்கள். ஒரு இலாகாவிலே தொடர்ந்து ஒரு அதிகாரியை வைப்பதில்லை மூன்று நான்கு வருஷத்திற்குள் மாற்றுவது அவசியம். ஆனால், நம் ராஜ்யத்தில் ஏற்பட்ட சூழ்நிலையை அவர்கள் அறிவார்கள். 1953–54-ல் ஆந்திரா பிரிவினை ஏற்பட்டது அவர்களுக்குத் தெரியும். அதன் காரணமாக நிதி நிலையில் ஏற்பட்டிருக்கக் கூடிய பல சிக்கல்களையும் நீக்கி அதை சரி செய்ய வேண்டியதாய் இருந்தது. அதற்கு, முன் அனுபவம் உள்ள அதிகாரி இருந்தால்தான் அச்சிக்கல்களை எளிதில் நீக்கி சரிசெய்ய முடியும். சிக்கல் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு கட்டத்தில் அனுபவம் உள்ளவரை வைத்துக் கொண்டு அதை எளிதில் தீர்ப்பது நல்லதா அல்லது அனுபவம் இல்லாத ஒருவரை புதிதாகப் போட்டு அக்காரியங்களை முதலில் அறிந்து கொண்டு பிற்பாடு அதை, அச்சிக்கல்களை நீக்குவது சரியா? ஆகவே, நான்கு வருஷங்கள் ஆனவுடன் அவரை அங்கிருந்து நீக்கிவிட வேண்டுமென்ற பிடிவாதக் கொள்கையைக் கொண்டு அவரை மாற்றாமல் அவர் அங்கு தொடர்ந்து வருகிறார். நம்முடைய சர்க்காரில் இன்று வேலை செய்யக்கூடிய சிறந்த திறமையான அதிகாரிகளில் அவரும் ஒருவர். அவருக்கு நிதி அனுபவமும், இதில் இருக்கிற சிக்கல்களும் தெரிந்து இருக்கிற காரணத்தால், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற பிரிவினையால் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களைத் தீர்க்க அவர் அங்கே வைக்கப்பட்டிருக்கிறார். மற்ற இலாக்காக்களில் அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கிறோம். இவரையும் மாற்றி விட முடியும். ஒரு உத்தரவு இட்டால் போதும். அதனால் நிர்வாகத்தில் தான் தடை ஏற்படும். அதனால் சிக்கல்கள் தொடர்ந்து இருக்குமே தவிர அதனால் நன்மை ஒன்றும் ஏற்பட்டு விடாது என்ற காரணத்திற்காகத்தான் அவரை அங்கு வைத்திருக்கிறோம். அவர்பேரில் எனக்கோ அல்லது மற்ற மந்திரிகளுக்கோ உள்ள தனி அன்பின் காரணமாக அவரை இந்த இலாகாவில் வைத்திருக்கவில்லை. அவருக்கு எந்தவிதமான சலுகையும் காட்டுவதற்காகவல்ல. இங்கிருந்தாலும், வேறு எங்கு போனாலும் சம்பளம் ஒன்றுதான். இதே மாதிரி நிர்வாகத்தில் இருக்கும் குறைகளைத் தீர்க்க நாங்கள் முயற்சித்து வருகிறோம். அதற்கு அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பு பெரும் அளவில் இருக்கிறது, இருக்கும் என்பதை கேள்விப் படும்போது அது எங்களுக்கு புதிய உற்சாகத்தையும், பலத்தையும் கொடுக்கிறது. ஆகவே இந்த ஐந்து வருட காலம், எல்லோரும் நிர்வாகம் திறம்பட நடப்பதற்கு சர்க்காருக்கு எல்லா அங்கத்தினர்களும் போதுமான ஆதரவு கொடுக்க தயாராய் இருப்பார்கள் என்று நம்பு கிறேன்.

முடிப்பதற்கு முன்னால். ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ராமச்சந்திரன் அவர்கள் திரும்பத் திரும்ப அந்த விஷயத்தை கிளப்பி வருகிறார்கள். ராமனாதபுரத்தில், அதிலும் முக்கியமாக இந்த புயல் வந்தபோது நான் போய் பார்த்தேன். அந்த வெள்ளத்தினால் பெரிய சேதம் ஏற்பட்டு ஏரிகளின் கரைகள் உடைபட்டுக் கிடந்தன. இயற்கை யாகவே சில பாகத்தில் கிடந்தன. செயற்கையாக பல பாகத்தில் கிடந்தன. அதற்குக் காரணம் என்ன வென்று விசாரித்த போது, அங்கு ஆயிரக் கணக்கான சிறிய குளங்கள் இருக்கின்றன. மழை காலத்தில் தண்ணீர் நிறைந்து கீழ் உள்ள நிலங்களில் பாயும். ஜமீன்தாரி முறை இருந்த காலத்தில் கூடுதல் பட்டாக்கள் இருந்தால் அதிகம் வரி வரும் என்று

[Sri C. Subramaniam] [26th July 1957

அப்பொழுது அதிகம் பட்டாக்கள் கொடுத்தார்கள். தண்ணீர் வரும்போது அவர்கள் சொல்கிற மாதிரி நெல் போட்டு விளைவிக்கவில்லை. புஞ்சைதான் விளைவிக்கிறார்கள். அருகாமையில் இருப்பவர்கள் தங்களது வெள்ளாமை கெட்டுப் போய்விடும் என்று பார்க்கிறபோது அதை வெட்டி விடுகிறார்கள். தண்ணீர் வீணாகப் போகிறது. ஒரு சிலர் செய்வதின் காரணத்தினால் அநேக ஏக்கர்களுக்கு தண்ணீர் பாய்ச்சக்கூடிய தண்ணீர் இருந்தும் உப யோகமில்லாமல் போய் விடுகிறது. ராமனாதபுரத்தில் இவ்வளவு குளங்கள் இருந்தும் ஏன் விவசாயம் நல்ல முறையில் நடைபெறவில்லை என்று பார்க்கும்போது இது தெரிய வந்தது. அங்கு தண்ணீர் நல்ல முறையில் தேங்க ஏற்பாடு செய்து எல்லா நிலங்களுக்கும் பாய்வதற்கு வழி செய்ய வேண்டுமா, இல்லை ஜமீன் பட்டா கொடுத்து வந்தது போல் மழை வரும் போது கரைகளை உடைத்துவிடுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டுமா என்பதை யோசித்து முடிவு செய்ய வேண்டும். உழுகிறவர் களை அப்புறப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் பரிசீலனை செய்து பார்த்ததற்குப் பிறகு, பெரும்பாலான மக்களின் நன் மைக்காக 6,000 ஏக்கராக இருந்தாலும் சரி, 20,000 ஏக்கராக இருந்தாலும் சரி, அப்புறப்படுத்தினால்தான் குளத்துப் பாசனம் ஏற்படும் என்று தெரிந் தது. அதுவும் இரண்டு, மூன்று கோடி செலவு செய்து புயலுக்குப் பிறகு கரை போட்டிருக்கிறோம். அப்படி அவர்களை மேலும் அனுமதித்தால் அந்த மூன்று கோடி ரூபாய் வீணாகும். இதை நன்கு தீர ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். ஏதோ அவர்களுக்கு நன்மை செய்துவிடுகி றோம், நாம் அவர்கள் கட்சியை எடுத்துப் பேசினோம் என்று ஆரம்பித்தால் நல்ல முறையில் குறைகளைத் தீர்க்க வேண்டு மென்ற நிலைமை மாறி யார் யாருக்கு எது நன்றாக இருக்கிறதோ அம்மாதிரி செய்வது என்ற நிலைமை ஏற்படும். இதை கனம் அங்கத்தினர் ராமச்சந்திரன் அவர்கள் நன்றாக உணர்ந்து இந்த அடிப்படையான பிரச்னை இருப்பதால் அதை தீர ஆலோ சனை செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக முடிப்பதற்கு முன்னால் இந்த சபையின் முன் ஒரு முக்கிய மான, சந்தோஷமாயிருக்கிற ஒரு விஷயத்தை தெரிவித்துக் கொள்கிறேன். சிலர் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்களோ என்னவோ தெரி யாது. அதாவது தியாகிகள் பிரச்னை. தியாகிகளைப் பொருத்த வரையில் அவர்கள் சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள். அவர்கள் இன்றைக்கு எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்ற கவலை கிடையாது. சுதந்திரத்திலே யார் யார் பங்கெடுத்துக் கொண்டார்களோ அவர்களெல்லாம் தியாகிகள். அவர்கள் இன்றைக்கு எந்த அரசியல் கருத்தை வேண்டுமானாலும் கொண்டிருக்கலாம், எந்த கட்சியில் வேண்டுமானாலும் இருக்கலாம். அதில் பல பேர் ஏழைகள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் செய்ய வேண்டுமென்று அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் வழங்க வேண்டுமென்ற ஒரு திட்டம் வந்தது. அது சரிவர நடை பெறவில்லை என்பதை எல்லோரும் உணருவார்கள். அப்படி நிலத்தைப் பெற்றதற்குப் பிறகும் பல கஷ்டங்கள் இருந்தன. ஏழைகள் கடன் வாங்கி கூட இருக்கிறதையே இழக்கும் நிலை ஏற்பட்டது. இதை யெல்லாம் ஆலோசனை செய்து சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. சுதந்திர இயக்கத் தில் ஈடுபட்டவர்களின் குழந்தைகள் எந்த அளவுக்குப் படிப்பதாயிருந் தாலும், 10-வது வரை படிப்பதாயிருந்தாலும், காலேஜுகளில் படிப்பதா யிருந்தாலும், அல்லது தொழில் கல்லூரிகளில் படிப்பதாயிருந்தாலும், அந்தக் குழந்தைகள் எதுவரை படிக்கிறார்களோ அதுவரை இலவசக் கல்வி கொடுப்பதென தீர்மானித்திருக்கிறோம். (பலத்த கைதட்டல்.) (ஒரு மெம்பர் : அவர்களுக்கு இடம் கிடைக்குமா ?) இடம் கிடைக்குமா என்று கேட்கிறார்கள். அதுவும் இதுவும் ஒன்றாகாது என்று தெரிவித்துக் கொள் கிறேன். ஆகவே இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொண்டு இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(Sri K. Ramachandran and Sri M. Kalyanasundaram rose.)

MR. SPEAKER : I already said yesterday that once the Hon. Minister has replied, I would not allow any further questions on points of personal explanation or information.



26th July 1957] [Mr. Speaker]

The question is—

" That the Madras Appropriation Bill, 1957, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That the Madras Appropriation Bill, 1957, be passed."

MR. SPEAKER : The question is—

" That the Madras Appropriation Bill, 1957, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1957.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to introduce the Madras Appropriation (No. 2) Bill [a], 1957, and move—

" That the Bill be taken into consideration."

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Appropriation (No. 2) Bill, 1957, be taken into consideration."

SRI A. GOVINDASAMY : அவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையில் தியாகிகளுடைய குழந்தைகளுக்கு அரசாங்கம் கல்விச் சலுகையைக் கொண்டுவந்து நிறைவேற்றியதற்கு நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் உண்மைத் தியாகிகளுடைய மனதெல்லாம் புண்பட்டு இருக்கிறது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு காலத்தில் நானும் காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தவன், பாடுபட்டவன் என்று வலியுறுத்திச் சொல்லுகிறேன். காங்கிரஸ்ஸில் தியாகி என்ற பேரால் அதிக நிலம் பெற் றிருக்கிறார்கள். நூறு ஏக்கர், நூற்று இருபது ஏக்கர் என்று வாங்கியிருக் கிறார்கள். ஏழைகளுக்கு ஐந்து ஏக்கர் கூட கிடைக்கவில்லை. இப்படி பெருவாரியாகக் கொடுத்ததை வாங்கி அதை ஏழைத் தியாகிகளுக்குக் கொடுக்க வேண்டியதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென் றும் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் இலவசக் கல்வி வசதியை கொடுத் தால் மட்டும் போதாது. கல்லூரிகளில் இடம் கிடைப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தால்தான் நன்மையாக இருக்குமென்று கனம் கல்வி அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு திருத்தம். இந்தச் சலுகை ஏழைத் தியாகிகளுக்கு மட்டும்தான். பணக்காரர்களுக்கல்ல.

SRI M. KALYANASUNDARAM : இந்த மசோதா சம்பிரதாயத்தை உத்தேசித்து வரக்கூடியது. பணம் ஏற்கெனவே செலவு செய்யப்பட்டுவிட்டதை நாம் ஆமோதித்தாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மந்திரி அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்பு கிறேன். அவர் அதை எந்தக் கண்ணாடி போட்டுக் கொண்டு வேண்டு மானாலும் பார்க்கட்டும், அதைப்பற்றி கவலை இல்லை. எனக்குக் கிடைக்கும்

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 25th July 1957.

[Sri M. Kalyanasundaram] [26th July 1957

சந்தர்ப்பம் மிகவும் குறைச்சல். மந்திரி என்ற முறையில் அவருக்கு விசேஷமான சந்தர்ப்பங்களும் விசேஷமான அந்தஸ்தும் கிடைக்கும். இதையும் அவர் அரசியல் காரணத்திற்காக என்று சொல்லி திருப்பிவிட்டு அதை நன்றாகப் பயன்படுத்தட்டும். என் நிலை அதனால் பாதிக்கப்படாது என்பதை தெரிவித்துக் கொண்டு, எனக்கு ஒரு விஷயம், நல்லெண்ணம் இருக்கிறது என்பதைக்கூட ஒப்புக் கொள்ளவில்லையே என்றுதான் வருத்தம். அதனால் அவருக்குத்தான் குறைபாடே தவிர எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஒரு விஷயத்தை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எக்ஸெஸ் எக்ஸ்பெண்டிசர் ஒரு வருஷத்தில் எவ்வளவு செலவாகலாம் என்ற நிர்ணயம் இல்லையென்றால் பட்ஜெட் முறையில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணமாக இந்த ஸ்டேஷனரி அண்ட் பிரிண்டிங்கை எடுத்துப் பார்ப்போமானால் அதுவே ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும். இப்போது 12 லட்ச ரூபாய் அதிகப்படியாக செலவாகியும்கூட சர்க்கார் பாரம் கிடைக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. கிராம அதிகாரிகளிடம் போய்க் கேட்டால் பென்ஸில் இல்லை, காகிதம் இல்லை என்கிறார்கள். முன்பெல்லாம் மூன்று குயர் கொடுத்த இடத்தில் இப்போது ½ குயர் கொடுக்கிறார்கள், இரண்டு பென்ஸில் கொடுத்ததற்கு இப்போது ஒரு பென்ஸில் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ரூபாய் 12 லட்சம் எக்ஸெஸ் செலவாகக் காரணம் பட்ஜெட்டில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்றுதான் அர்த்தம். இதை மாற்றி இதிலுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்குப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று, அட்மினிஸ்ட்ரேஷன் அப் ஜஸ்டிஸ் என்ற இனத்திற்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதில் 22 ஆயிரத்திற்கு அதிகமாக திட்டத்திற்கு மேல் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அந்த வருஷத்தின் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால் ஆந்திர பிரிவினையாகி இருக்கிறது. அப்பொழுது 11 ஜில்லாக்கள் நம்முடைய ராஜ்யத்தை விட்டு ஆந்திராவுக்குப் போயிருக்கிறது. அப்படி 11 ஜில்லாக்கள் நம் பிரதேசத்தை விட்டு சென்றாலும் நம்முடைய விஸ்தீரணம் குறைந்து விட்டாலும் நம்முடைய செலவு குறைய வில்லை. அப்பொழுது நம்மிடம் 15 ஜட்ஜுகள் இருந்தார்கள். அவர்கள் மூன்று ஜட்ஜுகளைத்தான் எடுத்துக் கொண்டார்கள். அதிகப்படியான ஜட்ஜுகளை அவர்கள் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். மூன்று ஜட்ஜுகளை எடுத்துக் கொண்ட பிறகு நாம் பாக்கி 12 ஜட்ஜுகளை வைத்துக்கொண்டிருந்தோம். பதினொரு ஜில்லாக்கள் குறைந்தும்கூட அதிகமான செலவு அந்த வருஷத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? இனியாவது ஹைக்கோர்ட்டின் செலவு என்ன ஆகிறது என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். இவ்வளவு செலவு செய்யக் கூடிய ஹைக்கோர்ட்டின் நிலைமை என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். 1952-ம் வருஷம் முதற்கொண்டு அங்கே அநேகம் அப்பீல்கள் பெண்டிங்காக இருக்கின்றன. இதுவரையிலும் சுமார் 4,000 கேஸ்கள் பெண்டிங்காக இருப்பதாக தெரியவருகிறது. ஹைகோர்ட் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்று நாம் எவ்வளவோ செலவு செய்கிறோம். நாலாயிரம் வழக்குகள் 6 வருஷத்திற்கு அதிகமாக ஹைக்கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கிறது. அப்படி இருக்க வேண்டிய காரணம் என்ன ? ஜட்ஜுகள் பொறுப்புள்ளவர்கள், வேலையை உணர்ந்து வேலை செய்யக்கூடியவர்கள். அப்படி இருக்கும்போது இவ்வளவு கேஸ்கள் பெண்டிங்கில் இருப்பதில் அர்த்தம் இல்லை. அந்தக் கேஸ்கள் முடிவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அரசாங்கம் நல்லெண்ணத்துடன் பரிசீலனை செய்வதாகச் சொல்லுகிறார்கள். இதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, பாக்கி விஷயங்களுக்கு நான் பதில் சொல்வதற்கு இல்லை. கனம் கலியாணசுந்தரம் அவர்கள் ஹைக்கோர்ட்டைப்பற்றி கூறினார். அதைப்பற்றிதான் பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. சமீபத்தில் நம்முடைய



26th July 1957] [Sri C. Subramaniam]

ஹைக்கோர்ட்டைப்பற்றியும் மற்ற ராஜ்யங்களிலுள்ள ஹைக்கோர்ட்டுகளைப்பற்றி விசாரணை செய்யப்பட்டது. அப்பொழுது நம்முடைய ஹைக்கோர்ட்டின் நிலைமை நல்ல முறையில் இருக்கிறது, நல்ல முறையில் வேலை செய்யப்பட்டு வருகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது என்பதை நான் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவிலேயே நம்முடைய நீதி மன்றம்தான் முதல் ஸ்தானத்தில் இருக்கிறது என்பதை நான் பெருமையுடன் சொல்லிக்கொள்ளுகிறேன். ஒருக்கால் வெள்ளைக்கார நிர்வாகம் இருந்தாலும் சரி அல்லது ரஷ்யா நிர்வாகம் இருந்தாலும் சரி, அல்லது வேறு யாராவது இருந்தாலும் சரி இதைவிட அதிகப்படியான நல்ல முறையில் இருக்க முடியாது. வெள்ளைக்காரர்கள் இருந்தபோது இருந்த தரத்தைவிட இப்பொழுது ஒன்றும் குறைந்துவிடவில்லை. அப்படி இருக்கும் என்று நினைத்தால் அவர்களைக் கொண்டுவந்து வைத்துக் கொள்ளலாம். இப்பொழுது இருப்பவர்களை வைத்துக்கொண்டுதான் நாம் சொல்லலாம். ஒன்று மட்டும் நான் சொல்லுகிறேன். தூக்கு தண்டனை விதிக்கக் கூடிய எந்த கேஸும் ஆறு வாரத்திற்கு மேல் நம்முடைய நீதி ஸ்தலத்தில் பெண்டிங்கில் இல்லை. அதே மாதிரி க்ரிமினல் அப்பீல்களும் ஆறு மாதத்திற்கு மேல் ஒன்றும் பெண்டிங்கில் இல்லை, அப்படி இருப்பதும் கிடையாது. கிருமினல் வழக்குகளை எடுத்துக்கொண்டால் அவைகள் எல்லாம் அவ்வப்போது தீர்க்கப்பட்டு வருகிறது. அதே மாதிரிதான் சிவில் கேஸ்களிலும். அவர் வக்கீலாக இருந்தால் அதைப்பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும், சிவில் கேஸ்கள் ஹைக் கோர்ட்டுக்கு முன்னால் விசாரணைக்கு வருவதாக இருந்தால் இப்பொழுதுள்ள முறைப்படி—எல்லாம் தமிழில் வந்தால் அப்பொழுது இன்னும் சீக்கிரமாகவே முடிந்து விடும். எல்லா தஸ்தாவேஜுகளும் ஆங்கிலத்தில் இருப்பதால் அவைகளை " ட்ரான்ஸ்லேட் " செய்து அவைகளையெல்லாம் அச்சடித்து அதன் பிறகு தான் கேஸ்களை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதனால் தான் காலதாமதம் ஏற்படுகிறது. முதல் அப்பீலாக இருந்தால் அதற்கு 2½ அல்லது 3 வருஷங்களாகிறது. இதுதான் முதல் அப்பீலைப் பொருத்த வரைக்கும் கால தாமதத்திற்குக் காரணம். மற்ற மாகாணங்களில் இருக்கக்கூடிய நிலைமையை எடுத்துப் பார்த்தால் 12 அல்லது 13 வருஷங்கள் கூட கால தாமதமாவது தெரியும். இவ்வளவு காலமாகியும் மற்ற மாகாணங்களில் இன்னும் எவ்வளவோ சிவில் அப்பீல்கள் தீர்க்கப்படாமல் இருப்பதும் தெரியும். அப்படிப்பட்ட நிலைமை மற்ற மாகாணங்களில் இருக்கிறது. ஒருக்கால் வெள்ளைக்காரர்கள் வந்தால் காலதாமதம் குறையுமோ என்னவோ ? என்னுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டுதான் இதைச் சொல்லுகிறேன். இதை தெரிந்துகொண்டுதான் சொல்லுகிறேன். அதிகமாகவோ அல்லது குறைத்தோ நான் ஒன்றும் சொல்லவில்லை. மற்ற ராஜ்யங்களில் 25 ஜட்ஜுகள் இருந்து செய்யக்கூடிய வேலையை நம்முடைய ராஜ்யத்தில் ஒன்பது ஜட்ஜுகள் இருந்துகொண்டு வேலை செய்கிறார்கள் என்பது புள்ளி விவரங்களுடன் இருக்கிறது. இந்த 22 ஆயிரம் ரூபாய் அதிகமாக செலவழித்திருப்பதை ஒரு எச்சாக வைத்துக்கொண்டு ஒரு தாக்கு தாக்கலாம் என்கின்ற முறையில் பேசக் கூடாது என்பதை தாழ்மையுடன் அடி பணிந்து அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Madras Appropriation (No. 2) Bill 1957, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

*Clause 2.*

MR. SPEAKER : The motion is—

" That clause 2 do stand part of the Bill."

Sri M. KALYANASUNDARAM : நான் பேசுவதற்கு விரும்பி இருக்க மாட்டேன். கனம் மந்திரி அவர்கள் பேசியதில் ஒரு விஷயம் என்னுடைய மனதைப் புண்படுத்தியது அதற்கு பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அவருக்கு சரியான முறையில் பதில் சொல்ல முடியவில்லை என்பதற்காக . . .

Mr. SPEAKER : Are you rising on a point of order or on personal explanation.

Sri M. KALYANASUNDARAM : I am speaking on the clause, Sir.

Mr. SPEAKER : There is no amendment to the clause.

Sri M. KALYANASUNDARAM : Excuse me, Sir. I have no intention to differ from you. But when the motion is before the House, I am entitled to speak on it.

The Hon. Sri C. SUBRAMANIAM : I also would like to point out that in speaking on clause 2, the hon. Member can refer to the sum of Rs. 22,000 being the extra expenditure which occurred in that year and the reason for that. He cannot speak about pendency or the general state of affairs now in the High Court.

* Sri M. KALYANASUNDARAM : இருபத்தியிரண்டாயிரம் ரூபாயை செலவு செய்தது அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லும் போது வரம்புக்கு மீறி பேசப்பட்டது என்று சொல்வது சரியல்ல. அவர் சொன்னதற்கு பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் பதில் சொல்ல விரும்புகிறேன். அவருக்கு பதில் சொல்வதற்கு சரியான காரணம் இல்லை அதனால்தான் ரஷ்யாவையும் பிரிட்டனையும் அழைக்கிறார். அப்படி அழைக்க வேண்டியதில்லை. ரஷ்யாவாக இருந்தாலும் சரி, பிரிட்டனாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி அவர்கள் வந்து போகட்டும். ஆனால் அவர்களுக்கு உடன்பட்டு அவர்கள் சவாரி பண்ணுவதை அவர் ஒப்புக்கொண்டாலும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

The schedule was put and carried.

Clause 1 and the preamble were put and carried.

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I move—

"That the Madras Appropriation (No. 2) Bill, 1957, be passed."

Mr. SPEAKER : Motion moved—

"That the Madras Appropriation (No. 2) Bill, be passed."

Sri K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, இப்படிச் சில அதிக தொகைகள் செலவழிக்கப்பட்ட முறையிலேயும், செலவழிக்கப்பட வேண்டி தேவைப்படும் முறையிலேயும் கொண்டு வரப்படுகிற சில மசோதாக்கள் மீது கருத்துக்களை தெரிவிக்கிறபோது ஏற்கனவேயுள்ள (ஆடிட் ரிப்போர்ட்) கணக்குத் தணிக்கை விவரத்தைப்பற்றி பல உறுப்பினர்கள் பேச நேரிடுகிறது. அந்தக் கணக்குத் தணிக்கை விவரம் அரசாங்கத்தாராலேயே தங்களுடைய ஒரு கூற்றினாலேயே தயாரிக்கப்பட்டு இங்கேயுள்ள சட்ட சபை



உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுவதாகும். அந்தக் கணக்குத் தணிக்கை குழுவானது ஏதாவது தவறுகள் இருந்தால் அதைக் கண்டு பிடிப்பதற்காக அமைந்த ஒரு பகுதியே தவிர செய்ய வேண்டியதை ஒழுங்காக செய்து விட்டார்கள் என்பதற்காக பாராட்ட வேண்டிய ஒரு முறையிலோ அல்லது, லாலி பாடவேண்டிய ஒரு முறையிலோ அமைந்தது அல்ல. அந்தத் துறையிலே கணக்கில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் காட்டப்பட்டபடி நாங்கள் எடுத்து வைத்துப் பேசுகிறபோது "அதை வைத்துக்கொண்டு பேசுகிறீர்களே அது முறையா ? பாராட்ட வேண்டிய பகுதிகளை பாராட்டாமல் இருக்கிறபோது குற்றங்குறைகள் உள்ள பகுதிகளைப்பற்றியே பேசலாமா ?" என்ற கருத்தைக் கனம் அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறார். நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்—ஆடிட் ரிப்போர்ட் என்பதே குற்றம் சாட்டுவதற்காக, தவறுகள் நடந்திருந்தால் அதை எடுத்துக் காட்டுவதற்காக அன்றி வேறு எதற்காக அமைந்தது என்று ? ஆனால் ஆடிட் ரிப்போர்ட்டில் கண்டுள்ள தவறுகளை மட்டும் அல்ல சட்ட சபை உறுப்பினர்கள் என்ற முறையில் எடுத்துச் சொல்வது. அந்தத் தணிக்கை விவரம் புள்ளிக் கணக்கைத் தணிக்கை செய்ததே தவிர கணக்கில் வராமல் நடைபெறுகிற தவறுகளுக்கு அந்தத் தணிக்கை போதுமானது அல்ல. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கணக்கை ஒழுங்காகத்தான் வைத்திருப்பார்கள். இதற்கு இவ்வளவு ரூபாய் கொடுத்தோம், அதற்கு இவ்வளவு ரூபாய் கொடுத்தோம் என்று கொடுத்ததற்குக் கணக்கு எழுதி வைத்திருப்பார்கள். ஆனால் கையூட்டு லஞ்சம் வாங்கியதற்கான கணக்கைத் தணிக்கை அதிகாரியிடம் ஒப்படைப்பதில்லை. சர்க்கார் பணத்தைச் செலவு செய்ததற்கான கணக்கு மட்டுமே வருகிறது. சுயலாபம் தேடிய கணக்கு வருவதில்லை. அவற்றை யெல்லாம் எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்பு எதிர் கட்சிக்கு இருக்கிறது என்றாலும் அவற்றை நாங்கள் திட்டமாக சுட்டிக்காட்ட முடிவதில்லை. இன்னார் இன்னாருக்கு இவ்வளவு கொடுத்தார்கள், இன்னார் இவ்வளவு வாங்கினார்கள் என்று சுட்டிக்காட்டி, இவ்வளவு ரூபாய் வரவு செலவு நடைபெற்றது என்று எம்மால் எடுத்துக் காட்ட முடியவில்லை. ஆனால் நாட்டில் நடைபெறும் எல்லா தவறுகளும் நிர்வாகத்திலேயுள்ள எல்லா கோளாறுகளும் தணிக்கை அதிகாரியால் கண்டு பிடிக்கப்பட்டு இந்த கணக்குத் தணிக்கை விவரத்திலும் அடங்கி விடுவதில்லை. இதில் அடங்கியுள்ள தவறுகள்தான் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிகிறதே தவிர இதில் கண்டிராத தணிக்கை அதிகாரி கண்டுபிடிக்க முடியாத குற்றங் குறைகளும் நாட்டிலே நிலவி வருகிறது. அவைகள் கனம் அமைச்சர் அவர்களுடைய காதுக்கு வந்து சேர்ந்திராது. அப்படி வந்து சேராத வரை நாட்டு மக்களுக்கு நல்ல நியாயம் கிடைக்காது. இந்த நிலைமையில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் குறைகளைப்பற்றி பெரும்பாலும் பேச முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். அமைச்சர்கள் வேண்டுமானால் சட்ட மன்றத்திலே சொல்லலாம், நாட்டு மக்களுக்கு தாங்கள்தான் உண்மையுடன் உழைக்கிறோம் என்று. ஆனால், எதிர்க்கட்சியினர் எடுத்துக் காட்டுகிற அளவுக்கு நாட்டு மக்களுடைய பரிதாப நிலைமையைப் புரிந்துக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள், ஆளும் கட்சியினர். ஆகையால், இந்த நிலைமையில் குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்டி நாங்கள் பேசுகிறபோது, ஆடிட் ரிப்போர்ட்டிலே கண்டிராததும், நாட்டிலே நடமாடுவதுமான பல கருத்துக்களைச் சொல்லுகிறோம் என்பதை அமைச்சர்கள் எண்ணிப் பார்த்து, குற்றங்குறைகள் சொல்வது எதிர்க் கட்சியினுடைய வேலை, கடமை என்பதை கருத்தில் கொண்டு, நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதைப் புரிந்து, அதற்கேற்ற முறையிலே இந்த மசோதாவை நிறைவேற்றி, நிர்வாக நடவடிக்கையிலே பயன்படுத்துமாறு நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, 2-01 p.m.
கனம் அன்பழகன் அவர்கள் நான்சொன்னதாகச்சொல்லிய கருத்தை நான் தெரிவிக்கவில்லை. குற்றங் குறைகளைத் தெரிவிக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. நான் பேசின தமிழிலிருந்து ஒரு வேளை அவர் அப்படி நினைத்துக் கொண்டாரோ என்னவோ. நான் பேசின தமிழில் என்

MR. SPEAKER : I have received from the hon. Member, Sri M. S. Selvarajan, notice of a Privilege Motion in respect of a news item in a City Tamil Daily. But the hon. Member gave it to me at a short notice. Therefore, I have no time to discuss it nor have I the time to allot a day to discuss this matter and refer it to the Committee of Privileges. I have to tell the hon. Member that I shall contact the Editor of that newspaper and get his views on the matter. In this connection, I shall read Rule 187 of the Assembly Rules which says—

> 'Notwithstanding anything contained in these rules, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation or report.'

So, if the explanation of the Editor is not satisfactory, under the powers vested in me under Rule 187, I shall refer it to the Committee of Privileges. To-day I shall not allow any discussion on this matter.

10-20 a.m. SRI K. S. ARDHANAREESWARA GOUNDER : கனம் சபா நாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை. 40-வது விதியின் பிரகாரம் நான் 17-ந்தேதியன்று தங்கள் மூலமாக சர்க்காரிடமிருந்து தகவல் கேட்டிருந்தும் இதுவரையில் தகவல் கிடைக்கவில்லை. அது மறுபடியும் அடுத்தக் கூட்டத்தின் போது எடுத்துக்கொள்ளப்படுமா அல்லது இத்துடன் அதன் ஆயுள் முடிந்து விடுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question whether the urgency of the subject-matter of a statement to be made under Rule 40 will be existing three months hence, is a matter which the hon. Member and I will have to decide. When the Assembly meets again, let him renew the question under Rule 40. Then I shall consider it.

## V.—ADJOURNMENT MOTION *RE* REFUSAL TO ACCOMMODATE NINE STUDENTS IN THE ANNAMALAI UNIVERSITY HOSTEL AND FAST UNDERTAKEN BY SOME OF THEM.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from Sri M. P. Subramaniam. I am not sure I have time to discuss it. He gave it to me in my chamber at 8-45 a.m. to-day. I am not sure if the Hon. Minister will be in a position



27th July 1957] [Mr. Speaker]

to answer it. But anyway, before I give a ruling, I request the hon. Member Sri M. P. Subramaniam to state his case briefly. Then I will ask the Hon. the Education Minister if he can give any answer. Otherwise I shall decide what action I should take.

SRI M. P. SUBRAMANIAM : கனம் அவைத்தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழக உணவு விடுதியில், இந்த மாதத் துவக்கத்தில், சுமார் ஒன்பது மாணவர்களுக்கு, அவர்கள் அந்த விடுதியிலிருந்து வெளியேற்றப்படுவதாக அந்த உணவு விடுதியின் பாதுகாப்பாளர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். எதற்காக அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்ற காரணம் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எதற்காகத் தாங்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்ற காரணத்தை அந்த ஒன்பது மாணவர்கள் மீண்டும் வற்புறுத்திக் கேட்டும் அது தெரிவிக்கப்படாத காரணத்தினாலும், இது விஷயமாக சம்பந்தப்பட்ட பல அதிகாரிகளை அந்த மாணவர்கள் சந்தித்துக் கேட்டும் இதுவரையில் எந்த பதிலையும் சொல்லாத காரணத்தினாலும், அந்த ஒன்பது மாணவர்களுள் உபகாரச்சம்பளம் பெற்று வந்த ஏழு மாணவர்களின் உபகாரச் சம்பளச் சலுகை இந்த வெளியேற்றத்தால் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தினாலும், கடந்த ஆண்டு இறுதியில் அடுத்த ஆண்டும் உணவு விடுதியில் தங்குவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்று சொன்னதால் கட்டிய முன்பணத்தை இப்போது திரும்பக் கேட்டும் பதிலளிக்காத காரணத்தினாலும், அந்த ஒன்பது மாணவர்களில் ஸ்ரீ சிவப்பிரகாசம், ஸ்ரீ சுப்பராமன், ஸ்ரீ. கணபதி, ஸ்ரீ. ராமசுப்பையா, ஸ்ரீ. சுந்தரேசன் என்ற ஐந்து மாணவர்களும் 24–7–1957-ம் தேதி காலை எட்டு மணி முதல் அந்த உணவு விடுதியின் முன்பு உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். ஸ்ரீ. சிவப்பிரகாசத்தின் உடல் நிலை மிகவும் மோசமாக இருந்ததால் அவர் சிதம்பரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார் என்றும், அவருடைய நிலை இப்போது கவலைக்கிடமாக இருக்கிறது என்றும் எனக்குத் தகவல் வந்துள்ளது. இதுவிஷயமாக இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

MR. SPEAKER : The hon. Member should not make a long speech. I requested him to state his case only briefly.

SRI M. P. SUBRAMANIAM : **I am coming to the point, Sir.** அந்த வட்டாரத்தில் அந்த ஒன்பது மாணவர்களும் மாணவர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஆசிரியர்களால் உணவு விடுதி நிர்வாகிகளாலும், ஒரு குற்றமும் செய்யாமலிருக்கும்போது பழிவாங்கப்படுவது தடுக்கப்படவேண்டும். பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தில் அரசாங்கம் நேரிடையாகத் தலையிட முடியாவிட்டாலும், அந்தப் பல்கலைக் கழகத்திற்கு அரசாங்கம் மானியம் கொடுத்துவருகிறது என்ற காரணத்தால் இதில் தலையிட்டு, எந்தவிதமான குற்றச்சாட்டுமில்லாமல் மாணவர்கள் பழிவாங்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான காரியங்களை அரசாங்கம் செய்வதற்காக, இந்த சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தைப்பற்றி எனக்கு ஒரு தகவலும் இன்னும் வரவில்லை. ஏதாவது தகவல் இருந்தால் அதை சேகரிக்கும்படி இலாகா அதிகாரிகளிடம் நான் சொல்லியிருக்கிறேன். இது பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட விஷயமாதலால் இதில் அரசாங்கம் தலையிடுவது கஷ்டமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். உண்மையிலேயே, இன்றைய சூழ்நிலையில், நியாயம் யார் பக்கம் இருக்கின்றதோ, அவர்கள் அந்த நியாயத்திற்காகப் பட்டினி கிடக்கவேண்டிய அவசியமே இல்லை. நியாயம் தங்கள் பக்கம் இல்லை என்று நினைப்பவர்கள் தான் பட்டினி கிடந்தாவது காரியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டும் என்று நினைப்பார்கள்.

[Sri C. Subramaniam] [27th July 1957

இன்றைக்கு யாராவது பட்டினி இருந்து காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்று நினைத்தால்; அவர்கள் பட்டினி கிடப்பதை நிறுத்தும் வரையிலும் அந்தப் பிரச்னையைப் பரிசீலனை செய்வதில்லை—அந்த விஷயத்தை கவனிப்பதில்லை—என்று முடிவு செய்துவிடவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அந்தக் கொள்கையைத்தான் நான் அனுசரித்தும் வருகிறேன். ஆகையால், இந்தக் குறிப்பிட்ட பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்று கனம் அங்கத்தினர் விரும்பினால், அந்த மாணவர்கள் பட்டினி கிடப்பதை விட்டுவிட்டு சாதாரணமான முறையில் விவரத்தையும் நியாயத்தையும் எடுத்துச்சொல்ல முன்வந்தால் சர்க்கார் இதை கவனிக்கும் என்று அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். எந்த விஷயமானாலும், அதற்காக யாராவது பட்டினி கிடந்தால், அவர்கள் பட்டினி கிடப்பதை நிறுத்தும் வரையிலும், அந்த விஷயத்தை அரசாங்கம் கவனிக்காது என்று உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Mr. SPEAKER : In view of the statement made by the Hon. Minister that he is not aware of any of the facts mentioned by the hon. Member, I rule the adjournment motion out of order.**

## VI.—POINT OF INFORMATION *RE* ENQUIRY AGAINST A POLICE OFFICER.

**Sri K. ANBAZHAGAN : On a point of information, Sir.** கனம் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஒரு முக்கியமான அறிவிப்பை கனம் போலீஸ்துறை அமைச்சர் அவர்கள் இந்தஅவையில் தெரிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்குக் காரணமாக இருந்தது, சில நாட்களுக்கு முன்பு போலீஸ் துறையைப்பற்றி நான் இங்கே பேசிய பேச்சு என்பதையும் அந்த அறிவிப்பின்போது கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி. தன்னைப்பற்றி விசாரணை நடத்தவேண்டும் என்று போலீஸ் தலைமைத்துறைத் தலைவர் அவர்கள் கேட்டதை—அந்தப் பெருந்தன்மையான அந்தப் போக்கினை—நான் உண்மையிலேயே ஏற்றுக் கொள்ளுகிறேன். அந்த நியாய விசாரணையை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வந்ததையும் நான் பாராட்டுகிறேன். அந்த நியாய விசாரணையை நடத்துவதற்கு ஒரு நீதிபதியை நியமித்து, அதற்கான செலவினையையும் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் நேரத்தில், அந்த நியாய விசாரணையின் முடிவு முழு அளவிற்கு உண்மையைப் பிரதிபலிப்பதாக—நீதியை எடுத்துச் சொல்லுவதாக—இருக்கவேண்டுமானால், ஒன்று செய்யப்படவேண்டும். மிகப் பெரிய துறைகளின் மிகப்பெரிய தலைவர்களைப்பற்றிய விசாரணைகள் நடக்கும்போது அவர்கள் விடுமுறை பெறாமல்—லீவ் எடுக்காமல்—இருந்தால், அவர்கள் அதிகாரத்தில் இருக்கும் நிலைமையில் நடக்கும் விசாரணையின் முடிவில் நியாயம் பாதிக்கப்படும் என்பது அரசியலறிந்த, நாடறிந்த உலகமறிந்த மிகப்பெரிய உண்மை ஆகும். இந்த நியாய விசாரணையில் சம்பந்தப்பட்டுள்ளவர் மிகப் பெரிய அதிகாரி ; அவர் போலீஸ் தலைமைத் துறையின் பெரிய அதிகாரி மட்டுமல்ல, " கரப்ஷன் " குற்றங்களைக் கண்டு பிடிக்கவேண்டிய துறையின் தலைமை அதிகாரியும்கூட. ஆகவே, இந்த நியாய விசாரணை நியாயமாக நடப்பதற்காக, போலீஸ் தலைமைத் துறையைச் சேர்ந்த இந்தப்பெரிய அதிகாரியை, விசாரணை நடந்து முடியும் வரையிலும் விடுமுறை அல்லது ஓய்வு—விடுமுறை அல்லது ஓய்வு என்று சொல்லும் போது "ரிடையர்மெண்ட்"-ஐ நான் குறிப்பிடவில்லை : நான் குறிப்பிடுவது "லீவ்"—எடுத்துக்கொள்ளும்படி அரசாங்கம் பணிக்குமா ? அல்லது, விடுமுறை எடுத்துக்கொள்ள அவரே முன்வருவாரா ? நியாயம் காப்பாற்றப் படுமா ? இந்த விஷயத்தை நான் இங்கே " இன்பர்மேஷன் " (தகவல்) என்ற முறையில் அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் அதிகாரிகளைப்பற்றி விசாரணை செய்வதிலுள்ள அடிப்படையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கே சில அதிகாரிகளைப்பற்றி புகார் வந்து விசாரணை நடத்தவேண்டுமென்ற நிலைமை அரசாங்கத்திற்கு



27th July 1957] [Sri M. Bhaktavatsalam]

ஏற்பட்டால், அப்போது விசாரணைக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது. அப்படி விசாரணை நடத்தப்படும்போது, அங்குள்ள சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்து, குற்றங்களைப்பற்றி ஆராய்ந்து, அதிகாரிகளை வைத்துக்கொண்டே, விசாரணை நடத்தப்படுகிறது. அதிகாரிகளை "ஸஸ்பெண்ட்" செய்து விசாரணை நடத்தப்படுகிறது : அதிகாரிகளை "லீவ்" எடுக்கச்சொல்லியும் விசாரணை நடத்தப்படுகிறது. இந்தக் குறிப்பிட்ட விசாரணைக்கு, கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த சபையில் சில புகார்கள் சொன்னதையொட்டி, இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விசாரணையில், சம்பந்தப்பட்ட அதிகாரி "லீவ்" எடுத்துக்கொள்ளவேண்டுமோ, வேலையில்லாமல் இருக்கவேண்டுமோ, என்ற ஏற்பாட்டை செய்யவேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை.

(Sri K. Anbazhagan rose.)

Mr. SPEAKER : No. I shall not allow any discussion.

இது முக்கியமான தீர்ப்பாக இருப்பதால் இதை நான் ஆங்கிலத்தில் சொல்லுகிறேன்.

Hon. Member Sri K. Anbazhagan made certain statements during the budget discussion. The Hon. the Home Minister told me yesterday that in reply to the allegations in view of the name of the officer being practically implied in the allegations, he would like to make a statement. He made a statement about a certain enquiry. To-day the hon. Member Sri K. Anbazhagan wants to make another remark on that statement of the Hon. Minister. Normally, this should not be allowed, but in view of the fact that Sri K. Anbazhagan is concerned, I allowed both the Home Minister and Sri K. Anbazhagan to make their statements. No further discussion will take place. I am sure the Hon. the Home Minister will take all necessary precautions and will conduct the enquiry in a manner fair to this House, fair to the hon. Member Sri K. Anbazhagan, and fair to the officer concerned. I am sure the report of that enquiry will be placed before this House, when it will be open for any hon. Member to get up and say that the enquiry was faulty, or that it was correct, or that the finding was correct or not, but not now in the middle or before the enquiry. While giving Sri K. Anbazhagan a chance on this matter, I will not allow any further discussion on this matter.

## VII.—GOVERNMENT MOTION *RE* CONSTITUTION OF A RULES COMMITTEE.

Mr. SPEAKER : I have received notice of two or three amendments proposed by the hon. Member, Sri K. Sattanatha Karayalar to the Madras Legislative Assembly Rules. The Business Advisory Committee at its meeting yesterday considered these and resolved that they be referred to a Committee of the House. The Hon. Leader of the House will move the motion. 10.30 a.m.

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I move—

" That a Committee consisting of the following Members be appointed to make suggestions for the amendment of the Madras Assembly Rules :—

1. The Hon. Dr. U. Krishna Rau, Speaker (Chairman),
2. Sri B. Bhaktavatsalu Naidu, Deputy Speaker,
3. The Hon. Sri C. Subramaniam,

4. The Hon. Sri M. Bhaktavatsalam,
5. Sri P. G. Karuthiruman,
6. ,, V. K. Ramaswamy Mudaliyar,
7. ,, M. Selvaraj,
8. ,, K. Sattanatha Karayalar,
9. ,, T. S. Ramaswamy Pillai,
10. ,, R. Srinivasa Iyer,
11. ,, S. B. Adityan,
12. ,, P. S. Chinnadurai,
13. ,, M. Kalyanasundaram,
14. ,, S. Pakkirisami Pillai,
15. ,, M. P. Subramaniam,
16. ,, S. Lazar,
17. ,, T. T. Daniel,
18. Srimathi T. N. Anandanayaki,
19. Sri K. Vinayakam."

MR. SPEAKER: The question is—

"That a committee consisting of the following members be appointed to make suggestions for the amendment of the Madras Assembly Rules: —

1. The Hon. Dr. U. Krishna Rau, Speaker (Chairman),
2. Sri B. Bhaktavatsalu Naidu, Deputy Speaker,
3. The Hon. Sri C. Subramaniam,
4. ,, M. Bhaktavatsalam,
5. Sri P. G. Karuthiruman,
6. ,, V. K. Ramaswamy Mudaliyar,
7. ,, M. Selvaraj,
8. ,, K. Sattanatha Karayalar,
9. ,, T. S. Ramaswamy Pillai,
10. ,, R. Srinivasa Iyer.
11. ,, S. B. Adityan,
12. ,, P. S. Chinnadurai,
13. ,, M. Kalyanasundaram,
14. ,, S. Pakkirisami Pillai,
15. ,, M. P. Subramaniam,
16. ,, S. Lazar,
17. ,, T. T. Daniel,
18. Srimathi T. N. Anandanayaki,
19. Sri K. Vinayakam."

The motion was put and carried.

MR. SPEAKER: Under Rule 223 of the Assembly Rules, the Select Committee shall consist of the Speaker, Chairman, the Deputy Speaker, the member giving notice of the amendment and, in case he is a non-official member, the Minister concerned also and a member to be nominated by the Speaker from the current panel of Chairman of the Assembly shall be members. I accordingly nominate Sri M. Jagannathan, a member of the current panel of Chairmen, to be a member of the Committee.





## VIII.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1957.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I beg to introduce the Madras General Sales Tax (Amendment) Bill [*], 1957, and move—

"That the Bill be taken into consideration".

SRI M. KALYANASUNDARAM: I would like to make one submission. It is not exactly a point of order.

MR. SPEAKER: Not now. Let him finish his speech.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, this is a Bill which has been published under Rule 90 of the Assembly Rules in the Gazette and, therefore, no leave to introduce is necessary.

At the outset, I beg to submit for the consideration of the House the urgent necessity for introducing this Bill at this stage. The Central Sales Tax Act 74 of 1956 is expected to come into operation on 1st October 1957. The Central Act has also been amended recently by Act XVI of 1957. If these amendments are not carried out in our General Sales Tax Act, our levy of sales tax in accordance with the existing Act would become invalid. Therefore it is that I venture to come forward to move this Bill in an urgent way.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களுக்கு பார்லிமெண்டு விதிகள், யுனைடெட் ஸ்டேட்ஸ் விதிகள் நன்றாகத் தெரிந்திருக்கும். இந்தச் சபையினுடைய விதிகளை இன்னும் தெரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். இந்த மசோதா 90-வது விதியின். கீழ் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னார். 90-வது விதியின் கீழ் பிரசுரிக்க முடியாது. 92-வது விதியின் "ப்ரொவைஸோ" படி..

THE HON. SRI R. VENKATARAMAN: 92-வது விதி ப்ரோவைஸோவின் படிதான் பிரசுரிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னேன்.

SRI M. KALYANASUNDARAM: இல்லை. 90-வது விதி என்றுதான் சொன்னீர்கள்.

THE HON. SRI R. VFNKATARAMAN: ஒருக்கால் தவருதலாய்ச் சொல்லிவிட்டேனோ என்னமோ. 92-வது விதியின்படிதான்

**MR. SPEAKER: I ta'e it the motion has been made under Rule 92. Is there still any point of order?**

92-வது விதி ப்ரோவைஸோவின்படி பிரசுரிக்கப்பட்டிருப்பதாக அவர் சொன்னார். இப்பவும் ஏதாவது "பாயின்ட் ஆப் ஆர்டர்" இருக்கிறதா?

SRI M. KALYANASUNDARAM: இருக்கிறது. 92-வது விதி ப்ரோவைஸோவின்படி கவர்னரே நேரிடையாக இந்த மசோதாவை பிரசுரித்திருக்கிறார்கள். சாதாரண வழக்கம் என்னவென்றால் இங்கே அனுமதி வாங்கவேண்டும். சபாநாயகருக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அனுமதி கொடுத்தபிறகுதான் சபாநாயகர் பிரசுரிக்க உத்திரவு இடவேண்டும். ப்ரோவைஸோ எதற்காக இருக்கிறதென்றால் ஏதாவது எதிர்பாராத சந்தர்ப்பத்தில் அவசரமாக பிரசுரிக்கப்பட இது கண்டிருக்கிறது. கடந்த ஐந்து

---

* **Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 23rd July 1957.**

வருஷ காலமாகவே பார்த்துவிட்டேன். இந்தப் ப்ரோவைஸோ அமுலில் இருக்கிறதே தவிர சட்டசபை விதி 90, 91, 92 படி எந்த மசோதாவும் கொண்டுவரப்படுவதில்லை. நான் இந்த மசோதா கொண்டுவருவதை எதிர்ப்பதாக நினைக்கவேண்டாம்; நேற்றே ஒப்புக்கொண்டோம், சர்க்கார் கட்சிக்கு பூர்ண மெஜாரிடி இருக்கிறது. அந்தப் பொறுப்பையும் அவர்களே ஏற்றுக் கொள்ளட்டும்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை, இந்த மசோதா காப்பிகள் சட்டசபை காரியாலயத்திற்கே நேற்று இரவு பத்து பத்தரை மணிக்குத்தான் வந்திருக்கும் என நினைக்கிறேன். அதற்குப்பிறகு அங்கத்தினர்களுக்கு இரவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹாஸ்டலில் நேற்று கொடுக்கப்படாதவர்களுக்கு இன்று காலையில்தான் கொடுக்கப்பட்டிருக்கும். என்னுடைய பெருமுயற்சியினாலே இது சம்பந்தமாக நான் பல சட்டங்களையும் தேடிப் பார்த்தும் மத்திய பார்லிமெண்டு திருத்தச் சட்டம் எனக்குக் கிடைக்கவில்லை. லைப்ரரியிலும் இல்லை. இப்படி அங்கத்தினர்களை ஒரு சங்கடமான நிலைமையில் சர்க்கார் வைப்பது இது முதன்முறை அல்ல. இவ்வளவு அவசரமாகக் கொண்டுவரவேண்டிய அவசியமும் இல்லை. இந்தச் சட்டசபையை அவமதிக்கும் மனப்பான்மையில், எப்போதுமே "லாடிபார்ட்டுமெண்டு" இப்படித்தான் நடந்து வருகிறது. தூங்கும்போது எல்லாம் தூங்கிவிட்டு கடைசியில் அவசரம் அவசரமாக இப்படிக் கொண்டுவருவது என்பது சரியல்ல. இந்தமாதிரி அதிருப்திகரமான நிலைமையை உண்டாக்கவேண்டிய அவசியம் இல்லை. சர்க்கார் கட்சியைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் இனிமேல் இதுமாதிரியாகச் செய்யக்கூடாது. சட்டசபை விதி 90, 91, 92 ஐ அனுசரித்தே மசோதாக்கள் கொண்டுவரப்படவேண்டுமே தவிர, 92-வது விதி ப்ரோவைஸோவையே உபயோகித்துக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER**: The hon. Member quoted the procedure in the Lok Sabha. He is right. There it is the Speaker that authorises publication of Bills. But here it is the Governor. To change this procedure, Sri K. Sattanatha Karayalar has suggested an amendment to the Rules. It will be considered by the Committee on Rules. As things stand, it is the Governor that authorises publication here; desirable or undesirable it may be, I am not prepared to say anything. Therefore, I feel there is not much substance in Mr. Kalyanasundram's argument.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் 92-வது விதி ப்ரோவைஸோ அசாதாரணமான சந்தர்ப்பத்தில்தான் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டார். அசாதாரணமான காலங்களில்தான் அது உபயோகப்படுத்தவேண்டும் என்கிற அவசியம் இல்லை. இதுவும் நடக்கலாம். அதுவும் நடக்கலாம். ரூல் சரியில்லை என்றால் ரூலைத் திருத்தவேண்டும். ரூல் இருக்கிற வரைக்கும் அதன்படி நடக்கக்கூடாது என்று சொல்ல முடியாது. நான்கூட அவர் பேச்சில் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன இருக்கிறதென்று மிகவும் உன்னிப்பாக கவனித்தேன். அவர் சொன்னவற்றை மெயின் மோஷனை எதிர்த்துப் பேசும்போதே சொல்லியிருக்கலாம். நல்ல அநுபவம் உள்ள ஒருவர், சட்டசபை விதிகளை நன்றாக உணர்ந்து இருக்கக்கூடியவர், கனம் அமைச்சருக்கே சட்டசபை விதி தெரியவில்லையே என்று எடுத்துக்காட்டக் கூடியவர், இப்படி முறை இல்லாமல், கனம் அமைச்சர் பேசும்போது பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று குறுக்கிட்டு சம்பந்தமில்லாதவற்றைக் குறிப்பிட்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை.

**Mr. SPEAKER**: அவர் பேசியதைக் கேட்ட பிற்பாடுதானே நான் அது ஒழுங்கா, அல்லவா என்று தீர்ப்புச் சொல்ல முடியும். இப்போது சொல்லுகிறேன். அவர் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒழுங்கற்றது. கனம் அமைச்சர் அவர்களைத் தொடர்ந்து பேச அழைக்கிறேன்.





I have given my ruling. The motion is in order. If the hon. Member has any other point of order, he may raise it. As it is, I shall call the Hon. Minister to speak.

**The Hon. Sri R. VENKATARAMAN**: Mr. Speaker, Sir, if my Friend Sri Kalyanasundaram had waited for one more sentence from me probably he would have agreed with me that if we have not introduced this Bill now and if the House is adjourned and if it does not meet again before 1st October, we would have been obliged to bring in an Ordinance, in order to carry out the Sales Tax Administration, which I am sure the House would not have liked. It is exactly for that purpose, I would like to take the House into confidence and place the Bill before it rather than resort to a more unhealthy practice of legislating through Ordinance which is done under a grave necessity. I am quite sure that my hon. Friend Sri Kalyanasundaram will now appreciate why the Bill is brought forward in such a great urgency. If this Bill is not now enacted, it will have to be enacted as an Ordinance.

Sir, I will now proceed to explain the salient features of the Bill. Chapter IV of the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956), declared certain goods which are in the nature of raw materials, to be of special importance in inter-State trade or commerce and lays down the restrictions and conditions as to the rate, system of levy and other incidents of tax subject to which the States may impose tax on the sale or purchase of such goods. Section 15 of the Central Act as originally enacted restricted the levy of the tax under the State law to only one stage and left it to the State to select the point of levy. This section as amended by the Central Sales Tax (Amendment) Act, 1957 (Central Act 16 of 1957), provides for the levy of tax under the State law on the declared goods only at the stage of last sale or purchase inside the State and at a rate not exceeding two per cent. It also provides that no tax shall be levied in respect of the last sale or purchase inside the State if the declared goods purchased are intended for sale in the course of inter-State trade or commerce. By the amending Act, 'cotton yarn but not including cotton yarn waste' has been included in the list of declared goods. It is necessary to bring the provisions of the Madras General Sales Tax Act, 1939, into conformity with those of the Central Sales Tax Act, 1956, as now amended.

The tax under the Madras General Sales Tax Act, 1939, on cotton yarn is now leviable at half per cent of the turnover. In addition, licence fees are payable by dealers who are not liable to tax. As cotton yarn has been included among the declared goods specified in section 14 of the Central Sales Tax Act, 1956, the State Government cannot continue to levy the licence fees which they now collect from dealers in cotton yarn. It is proposed to increase the rate of tax under the Madras General Sales Tax Act, 1939, on cotton yarn to one per cent of the turnover.

At present, under section 5-A of the Madras General Sales Tax Act, 1939, cotton and hides and skins are taxable at a single

[Sri R. Venkataraman] [27th July 1957

point to be prescribed by rules. Groundnut is taxable at the point of first purchase and other declared goods are taxable at the point of first sale. Under Section 15 of the Central Act as now amended, the " last sale or purchase inside the State " can alone be taxed. Hence it is proposed not to restrict the tax under the State law only to a dealer who is not exempt from taxation under section 3 (3) of the Madras General Sales Tax Act, 1939, as at present but to provide that the liability of the declared goods to tax under the Madras General Sales Tax Act, 1939, will be on the actual turnover of the dealer, i.e., whether it is more or less than the minimum of Rs. 10,000 specified in section 3 (3) of the Act.

The Bill seeks to give effect to the above proposal.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras General Sales Tax (Amendment) Bill, 1957, be taken into consideration."

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

" That the Madras General Sales Tax (Amendment) Bill, 1957, be referred to a Select Committee."

SRI M. JAGANNATHAN : Sir, I second the amendment.

MR. SPEAKER : Both the main motion and the amendment are now before the House for discussion. Hon. Member Sri M. Kalyanasundaram will now speak.

SRI M. KALYANASUNDARAM : நான் இந்தமாதிரி ஒரு மசோதாவை அவசரப்பட்டு கொண்டுவருவதையே எதிர்த்திருப்பேன். அதற்கு அனுமதி கோருவதையே எதிர்த்திருப்பேன். ஆனால் நேற்றைய "பிஸினஸ் அட்வைசரி கமிட்டி" கூட்டத்தில் சர்க்கார் கட்சித் தலைவர் சொன்ன சில சமாதானங்களின் பேரிலும் மற்ற எதிர் கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் சொல்லிய யோசனைகளுக்கு மதிப்பு கொடுக்கவேண்டும் என்ற முறையிலும் நான் இதை ஒப்புக்கொண்டேன். அப்படி இருந்தும் நான் இருக்கக்கூடிய நிலைமையை எடுத்துச் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். சர்க்கார் கட்சித்தலைவர் அவர்கள் இந்த விதியை தவருக அர்த்தம் செய்வதைப்பற்றி வருந்துகிறேன். அவருக்குத் தெரியாமல் அப்படிச் செய்யவில்லை. அவர் ஒரு திறமையான வக்கீல். கேசுகளில் தன்னுடைய தரப்பில் நீதிபதியின் முன்பு வாதித்து, தனக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளும் திறமை உள்ளவர். அதனால்தான் கோவையில் ஏழு வருடங்களுக்குள்ளேயே பிரபல வக்கீலானார். அவருக்கு சட்டம் நன்ருகத் தெரியும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் ஸ்பீகரை ஏமாற்றுகிறேன் என்று சொல்வது சரியல்ல.

SRI M. KALYANASUNDARAM : என்னைப்பற்றி சபாநாயகருக்கு நன்ருகத் தெரியும். நான் அவருக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை கொடுப்பேன் என்று அவருக்கு நம்பிக்கை உண்டு. எனக்கும் சபாநாயகருக்கும் இடையே தகாறு உண்டாக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The hon. Member must proceed on the merits of the case.



27th July 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : சபையில் இருப்பவர்களும், வெளியில் உள்ளவர்களும் அங்கத்தினர் மரியாதை கொடுத்து பேசுகிருர் என்பதை உணரவேண்டும். அங்கத்தினருக்கும் ஸ்பீகருக்கும் இருக்கும் தொடர்பை வைத்துக்கொண்டு என்ன வேண்டும் என்ருலும் பேசக்கூடாது.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர் கொடுத்திருக்கும் திருத்தத்தைப்பற்றிப் பேசலாம்.

SRI M. KALYANASUNDARAM : நம்முடைய அசெம்பளி விதிகளை இவர்கள் புறக்கணிக்கிருர்கள் என்பதை ஒன்றிரண்டு நிமிஷங்களில் சொல்லிவிடுகிறேன்.

இந்த மசோதா சம்பந்தமாக ஒழுங்கு பிரச்னையின்போது பேசும் போது உங்களுக்கு அடங்கி நான் நிறுத்திக்கொண்டேன்.

MR. SPEAKER : நீங்கள் வேறு என்ன செய்யமுடியும் ? மேற் கொண்டு பேசமுடியாது.

SRI M. KALYANASUNDARAM : எப்படி பேசமுடியும் என்பதை இன்ெருரு சந்தர்ப்பத்தில் காண்பிக்கிறேன்.

MR. SPEAKER : அப்படி மீறிப் பேசினுல் தக்க நடவடிக்கைகளை சபாநாயகர் எடுப்பார் என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : சபா நாயகர் மெம்பர் என்ன பேசுவார் என்று முன்கூட்டியே எதிர்பார்க்கக்கூடாது. (The Chair cannot anticipate a Member.)

THE HON. SRI C. SUBRAMANIAM : Because of your threat . . .

MR. SPEAKER : The hon. Member must proceed with his speech.

SRI M. KALYANASUNDARAM : அசெம்பிளி விதி 92-ன் கீழுள்ள புரோவிசோபடிதான் இந்த மசோதா பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. 92-வது விதி என்ன சொல்லுகிறதென்ருல் :

" Rule 92. As soon as may be after leave to introduce a Bill has been granted, the Bill with the Statement of Objects and Reasons shall be published in the Gazette :

Provided that the Governor may order the publication of any Bill with the Statement of Objects and Reasons in the Gazette although no motion has been made for leave to introduce the Bill and in such a case it shall not be necessary to move for leave to introduce the Bill and, if the Bill is afterwards introduced, it shall not be necessary to publish it again."

92-வது விதியின்படி ஸ்பீகர் காரியாலயம்தான் இந்த மசோதாவைப் பிரசுரிக்கவேண்டும். சட்டசபை கூடாமல் இருக்கும்போது எதிர்பாராத சந்தர்ப்பங்களினுல் நோட்டீஸ் கொடுத்து அனுமதி பெறமுடியாமல் இருக்கும் போதும், கால தாமதம் ஏற்படுவதை தடுப்பதற்கு இந்த proviso படி இந்த மசோதாவை பிரசுரிக்கலாம். Proviso-வில் அப்படித்தான் கூறப்பட்டிருக்கிறது. அது பின் வருமாறு :—" It shall not be necessary to publish it again " என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக மசோதாவை பிரசுரிப்பது சபாநாயகரின் காரியாலயம்தான் என்று விதி கூறுகிறது. சர்க்கார் கட்சித் தலைவர் சொல்லுவது சரியாக இருந்தால் 90-வது இரண்டு பிரிவுகளுக்கும், 91-வது விதிக்கும் அவசியமே இருந்திருக்காது. இந்த மசோதா பிரத்தியேக விதிப்படி கொண்டுவரவேண்டுமா என்று ஆலோசிக்கவேண்டும்.

[Sri M. Kalyanasundaram] [27th July 1957

நாம் இங்கு காரியம் செய்ய வந்திருக்கிறோம். அங்கத்தினர்கள் இந்த மசோதாவை படித்து புரிந்துகொள்ள போதிய சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. எதிர் கட்சியிலும் ஆளும் கட்சியிலும் உள்ள 100-க்கு 90 அங்கத்தினர்கள் இந்த மசோதாவை பார்ப்பதற்குச் கூட சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. சர்க்கார் கட்சித் தலைவரே என்னை விட இந்த விஷயத்தில் கவலை கொள்ளவேண்டும்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இந்த மாதிரி குற்றச்சாட்டு வருமென்ற சூழ்நிலை தெரிந்துதான் இதை "பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில்" வைத்து ஆலோசனை செய்தோம். அதில் அங்கத்தினர் அவர்கள் சரி என்று ஒப்புக்கொண்டார்கள். "நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் ஆர்டினன்ஸ் போட்டு விடலாம்" என்று நான் சொன்னேன். ஆனால், கடைசியில் அவர்கள் வாதாடிய பிறகு ஒப்புக்கொண்டார்கள். இப்பொழுது சர்க்கார் கட்சித் தலைவர் இதைச் செய்தார், அதைச் செய்தார் என்று சொல்வது சரியல்ல. இப்பொழுது பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்யப்பட்டதை சர்க்கார் கட்சித் தலைவர் செய்தார் என்று சொல்வது பிஸினஸ் அட்வைசரி கமிட்டியின் தீர்ப்பை அலட்சியம் செய்வதாகும்.

11-50 a.m. **SRI M. KALYANASUNDARAM** : வார்த்தைக்கு வார்த்தை சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. "பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி" முடிவுப்படி நான் நடக்கிறேன் என்று முதலிலே சொல்லித்தான் ஆரம்பித்தேன். இன்று காலையில் ஒன்பது மணிக்கு இந்த மசோதாவை "ஸர்குலேட்" செய்ய வேண்டுமென்று கமிட்டி முடிவு செய்யவில்லை. "பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி" எதிர்பார்த்தது என்னவென்றால் நேற்று மாலை ஐந்து மணிக்காவது இந்த மசோதா "ஸர்குலேட்" செய்யப்படும் என்றுதான். அது கூட நடக்கவில்லை. இதை சர்க்கார் கட்சித் தலைவரே எடுத்துக்காட்டுவது கடமை. அவர் என்ன மிரட்டினாலும் நான் பயப்படப் போவதில்லை. அவசரச் சட்டம் கொண்டுவந்தால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. அவசரச் சட்டம் கொண்டுவருவதில் அவசியம் அந்த சட்டத்தின் நோக்கத்தைப் பொறுத்திருக்கிறது. சட்டத்தின் நோக்கம்தான் பிரதானம். நல்ல காரியத்திற்காக நியாயமான முறையில் அவசர சட்டம் கொண்டுவரப்பட்டால் அதை நாங்கள் வரவேற்போம். ஜனங்களுக்கு விரோதமாக அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டால் அந்த சட்டத்தை நாங்கள் எதிர்ப்போம். இதுதான் எங்களுடைய கொள்கை.

இந்த மசோதா சம்பந்தப்பட்ட வரையில், இதை சபை முன்பு கொண்டு வருவதற்கு அனுமதி பெற்றுவிட்டார்கள். சபை முன்பு தீர்மானம் இருக்கிறது. என்னுடைய திருத்தமும் இருக்கிறது. நான் சொல்லவேண்டிய கருத்துக்களை சொல்லிவிடுகிறேன். ஆளும் கட்சியினருக்கு "மெஜாரிடி" இருப்பதால், "ஓட்டு", எடுத்தால்கூட தீர்மானம் நிறைவேற்றப்படலாம். இருந்தாலும், நான் சொல்லவேண்டியதை சொல்லியாகிவிட்டது.

இப்பொழுது மசோதாவின் விஷயத்திற்கு வருவோம். மத்திய பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட....

**THE HON. SRI C. SUBRAMANIAM** : சர்க்கார் சார்பிலே ஒரு விஷயத்தைச்சொல்ல விரும்புகிறேன். இது கொஞ்சம் நுணுக்கமான சட்ட "பாயிண்டுகள்" உள்ள ஒரு மசோதா என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். சபையிலே எதிர்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் இந்த மசோதாவை நன்றாக ஆழ்ந்து படித்தபிறகுதான் "பாஸ்" செய்யவேண்டுமென்று விரும்பினால் அவர்கள் சொல்லுகிற பிரகாரம் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பலாம். பொறுக்குக் கமிட்டி முடிவு செய்த பிறகு, அப்பொழுது சட்டசபை கூடவில்லையென்றால், அந்த முடிவின் பிரகாரம் ஒரு அவசரச் சட்டம் போடவேண்டியதாக இருக்கும். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று விரும்பினால், சர்க்கார் அதற்கு தடையாக நிற்க விரும்பவில்லை.



27th July 1957]

(For some time no member stood up to speak.)

MR. SPEAKER : If nobody is speaking, I shall put the motion to the vote of the House. The House cannot be inactive. I cannot wait for somebody to get up and speak. If anybody wants to speak, he must get up and speak on the motion. Otherwise, I shall put the motion to the vote of the House.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, we welcome the suggestion of the Hon. Leader of the House to refer the Bill to a Select Committee and we entirely agree with it.

SRI M. KALYANASUNDARAM : Sir, the motion of the Hon. Minister and the amendment moved thereto are now before the House for discussion. So, I am entitled to speak on them. The Hon. Leader of the House just now intervened and made a proposal to refer the Bill to a Select Committee and it has been accepted by us. I have already moved my amendment. Now, we must have general discussion.

THE HON. SRI C. SUBRAMANIAM : If the House is in favour of a Select Committee, we can have general discussion even now. Because, the Select Committee also will be guided by the general discussion which might take place here. So, if the hon. Members want to have a general discussion even at this stage, there can be no possible objection. But, in view of the fact that it is being referred to a Select Committee, I am sure the discussion will be restricted and limited.

MR. SPEAKER : I want to make the position of the Chair very clear. Yesterday, when I was told that it was necessary to consider this important enactment, I told the Government that this was an important measure and in the normal course, it ought to have gone through the various stages, but if the Government think that it was a very important and urgent measure, I have no objection to consult the opinion of the Business Advisory Committee. Accordingly, it was consulted and the Committee was told that either they should refer the matter to a Select Committee in which case owing to administrative difficulties an Ordinance will have to be issued or the objections must be waived and the matter must be considered as such by the House. It was agreed to and as per the resolution of the Business Advisory Committee, I have included it in the Agenda for to-day and so the Bill is now before the House. If at this stage, hon. Member Sri Kalyanasundaram who was a party to that agreement yesterday, wants to move for the reference of the Bill to a Select Committee, I have no objection. But, it means that consultation with the Business Advisory Committee in such matters would be futile hereafter. While I say this, I must also take this opportunity to tell the Government that they should be more careful in future to give sufficient time for the hon. Members to read the Bill and suggest amendments wherever necessary. It is the duty of the Government to give enough notice to Members. In fact, many Members came to me and told that they have not received copies of the Bill. It is not my fault. Because,

we received copies of the Bill from the Press only at about 5 o'clock last evening. We have circulated the Bill copies with special messengers as quickly as possible to the Members. The annexure reached us as late as 8 o'clock and it was not physically possible for them to reach the Members before 8 or 8-30 p.m. last night. So, the difficulties are there. In view of the extraordinary importance of the matter, I agreed to this procedure. If at this stage, the hon. Member wants to go back on what was discussed and agreed to in the Business Advisory Committee, well, I have no objection. But, I must plainly state that I shall not consult the Business Advisory Committee in future in such matters.

SRI M. KALYANASUNDARAM: Sir, I rise on a point of order. Kindly excuse me. Please don't think that I am questioning your ruling or any such thing. I shall abide by your ruling whatever it be. If I speak now, it is only to make my position clear. Otherwise, I may have to resign my membership of the Committee. It is better if we have an idea of the scope of the Business Advisory Committee. Sir, when we admit a certain thing or agree to a certain procedure in the Business Advisory Committee, does it mean that we give up our right to move amendments and speak on them in the House? Certainly not, Sir. We only agreed to give permission to the Government to introduce the Bill in the House. We reserved our right to move amendments for referring the Bill to a Select Committee, or for public opinion or even to oppose the motion. We have got all the rights. The fact that I agreed to the Bill being moved and introduced in this House does not bind me to a particular course of action and does not prevent me from moving any amendments or take away my rights to move further amendments. I have to submit that unless this matter is cleared, I shall have to resign from the Business Advisory Committee.

MR. SPEAKER: Yesterday, hon. Member Sri Kalyanasundaram raised this point. It was understood that he agreed to the procedure. I thought, I gained that impression that any amendment which he might give notice of will be only to alter certain provisions contained in the Bill. I never had the impression that the intention of the hon. Member was to move that the Bill as such should be referred to a Select Committee. If only this point had been made clear in the Committee, viz., that consideration of the Bill will be opposed to-day and a motion will be moved for referring the Bill to a Select Committee, there was no point in introducing the Bill in the House to-day. I could have very well postponed the matter and the Government would have published an Ordinance. Anyway, I have given the impression that I had gained and nobody need correct me as to the impression that I should have gained. I have now made the position clear. If the hon. Member, however, wants that the Bill should be referred to a Select Committee, I have no objection. I am in the hands of this House. I only wanted to make clear what my impression was in the Business Advisory Committee and I have done it. If I remember right, hon. Member Sri Annathurai wanted that no





Ordinance should be issued. He preferred the lesser of the two evils, viz., consideration of the Bill by this House and we have agreed to it. (Sri Annathurai tried to catch the eye of Mr. Speaker) I do not want to draw the hon. Member into a controversy over this subject. So, he need not reply me. I leave the matter entirely to the House. I have no objection to the House considering the motion 'that the Bill be referred to a Select Committee.'

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, kindly give me a chance to say a few words. While respecting the decisions of the Business Advisory Committee, we can still accept the amendment of hon. Member Sri M. Kalyanasundaram in view of the further happenings after the decision was taken, viz., there was late circulation of copies of the Bill as you yourself have explained and Members did not have sufficient opportunity to study the Bill. I do agree that it requires some time to study and understand the provisions of the Bill. Even though the Business Advisory Committee has taken a decision in the matter, we can accept the amendment. Still, I want to impress upon the Members one thing. Once a decision is taken by the Business Advisory Committee, it is morally binding on everybody. It does not mean that we restrict the freedom of Members to speak on the floor of the House. But, the decisions of that Committee are morally binding on all of us. In view of the circumstances explained by the Hon. Speaker, the Government are prepared to accept the amendment for reference of the Bill to a Select Committee. The Business Advisory Committee is only representative of the Members of this House. We are meeting there for the purpose of taking certain decisions on behalf of the Members of the House. So, under the present circumstances, without infringing and violating any of the obligations of the Members of that Committee, we can refer the Bill to a Select Committee. I do not think any further purpose will be served by pursuing this point. I do not mind if there is general discussion on the provisions of the Bill.

MR. SPEAKER: The discussion will now proceed on the lines 11-00 a.m.
of the hon. Member Sri Kalyanasundaram's amendment. He can talk on the merits of the amendment.

SRI M. KALYANASUNDARAM: சபாநாயகர் அவர்களே, இந்த விவாதம் இவ்வளவு கடுமையாகப் போகாமல் தடுத்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். நான் இதைப்பற்றி ஏதோ உஷ்ணமாக பேசிவிட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன். நான் இவ்விதம் உஷ்ணமாக பேசியதை யாரும் தவராக எடுத்துக்கொள்ள வேண்டாம். இதைப்பற்றி இங்கு எவ்வளவு நேரம் விவாதிக்கலாம் என்று தெரிந்தால் நல்லது. அல்லது எனக்கு இதைப் பற்றி பேசுவதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவித்தால் நான் அதற்குள் நின்று என் கருத்தை வெளியிடமுடியும்.

MR. SPEAKER: Ten or fifteen minutes.

SRI M. KALYANASUNDARAM: இப்போது இந்த மசோதா மிக முக்கியமான ஒரு மசோதா என்பதை நான் முதலில் சொல்லிக்கொள்கிறேன். இதைப்பற்றி பார்லிமெண்டில் நடந்த விவாதத்தைப்பற்றி நான் படித்தபோது வெளிநாடுகளுக்கு இங்கு இருந்து அனுப்பப்படுகிற பொருள்களுக்கும்

[Sri M. Kalyanasundaram] [27th July 1957

வெளியிலிருந்து வரும் பொருள்களுக்கும் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த சட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதில் முக்கியமான பொருள் என்று சொல்லப்படும்பொழுது, இந்த சட்டத்தில் குறிப்பிட்ட பொருள் மீது வரி போடுவது கடைசி கட்டத்தில்தான் இரண்டு சதவிகிதத்திற்கு மேற்படாமல் வரி விதிக்க வேண்டுமென்று ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரத்தை கட்டுப்படுத்தியிருப்பதாக தெரிகிறது. அதற்குமேல் விதிக்கக்கூடாது என்பதுதான் அதன் நோக்கம். இப்பொழுது நம்முடைய ராஜ்யத்திற்கு அதிகமாக வெளியிலிருந்து அமோனியம் சல்பேட் வருகிறது. இதை வேண்டுமானால் ரூபாய்க்கு இரண்டு அணா என்று போட்டு தடுத்துவிடலாம். அதேபோல் நம்முடைய ராஜ்யத்திலிருந்து வெளியிடங்களுக்கு உணவுப்பொருள் போகவேண்டியிருக்கும். அதன் மீதும் விற்பனைவரி அதிகரிக்கும். ஆகவே இம்மாதிரியான ராஜ்யங்களிடையே இருக்கும் நல் உறவை கெடுத்துவிடும் என்று நினைத்து அதை தவிர்ப்பதற்காக இந்தவிதமாக வரியை கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அதை தொடர்ந்துதான் நம்முடைய ராஜ்யத்திலும் இதை கொண்டு வந்திருப்பதாக நான் கருதுகிறேன். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் வந்திருக்கும் இந்த மசோதாவில் இருக்கிற நோக்த்தைபார்த்தால் இதில் வருகின்ற மொத்த தொகை அதிகமாகும் என்பது இதில் அடங்கியிருக்கிறது. இதில் உண்மையிருக்கிறது. இதை வேண்டுமானால் மந்திரி அவர்கள் மறுக்கலாம். அவர்கள் சத்தம்போட்டு சொல்வது எல்லாம் உண்மையாக இருக்கும் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். அதேபோல்தான் நூலுக்கு இதுவரை அரை சதமானம் இருந்தது. இப்போது ஒரு சதமானம் என்ற முறையில் ஒரு நயா பைஸா என்று அதிகரித்திருக்கிறார்கள். மந்திரி அவர்கள் சொல்லலாம், இதில் அரை சதமானம் என்றிருப்பதை ஒரு சதமானமாக அதிகரித்தாலும் இதற்கு வேண்டிய லைஸன்ஸ் பீஸ்களை எல்லாம் ரத்து செய்திருக்கிறோம் என்று. இதை பொறுத்தவரையில் லைஸன்ஸ் கட்டணத்தை விட இது அதிகமான கஷ்டத்தை தருவதாகும் என்று இதில் ஈடுபட்டிருக்கக்கூடிய வியாபாரிகளே கூறுகிறார்கள். அதேபோல்தான் கைத்தறி நூலுக்கு இப்பொழுது அதிக கிராக்கி இருக்கிறது. அதிகமாக இந்த நூல் கிடைக்கவேண்டும் என்று கைத்தறி நெசவுக்காரர்களும் வியாபாரிகளும் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இதில் அவ்வளவு கஷ்டம் இருக்கிறது. ஆகையால் இது கைத்தறி துணிகளுக்கு கொடுக்கப்படும் சலுகையை ரகசியமாக பறிப்பதாகும். எல்லா நூல்களுக்கும் இல்லாவிட்டாலும் மோட்டா ரகமுள்ள நூல்களுக்காவது வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும். இதனால் நன்மை செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்கப்படுகிறது ; அதேபோல்தான் மோட்டா ரக நூலுக்கு மட்டுமின்றி நடுத்தா ரகத்திற்கும் வரியை உயர்த்தப்பட்டிருக்கிறது. இவ்விதமாக ஏன் உயர்த்தவேண்டும் என்று பார்த்தால் மத்திய சர்க்காரிலிருந்து ராஜ்ய சர்க்கார்களுக்கு நிபந்தனை கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். மந்திரி அவர்கள் வேண்டுமானால் இல்லை என்று மறுக்கட்டும், அதைப்பற்றியும் கவலையில்லை, ஆனால் இதைப்பற்றி பார்லிமெண்ட் விவாதத்தில் இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு விற்பனைவரியின் மூலமாக மட்டும் எல்லா ராஜ்யங்களிலிருந்தும் 112 கோடி ரூபாய் வரிவிதித்து வசூல் செய்து கொடுக்கவேண்டுமென்று திட்டவட்டமாக சொல்லப்பட்டிருக்கிறது. இது நேஷனல் விஸ்தரிப்பு திட்டத்திலோ அல்லது வேறு ஏதாவது திட்டத்திலோ உட்படுத்தியிருக்கிறது என்று சொல்லமுடியும். இதை வருவாயின உதவி மந்திரி எம். ஸி. ஷா அவர்கள் பேசிய பேச்சிலிருந்து எனக்கு எடுத்துக்காட்டமுடியும். இந்த 112 கோடி ரூபாய் எல்லா ராஜ்யங்களிலிருந்தும் கொடுக்கவேண்டும் என்று வரும்போது சென்னை ராஜ்யத்திலிருந்தும் இவ்வளவு ரூபாய் என்று ஒதுக்கியிருக்கவேண்டும்.

Sri S. NAGARAJA MONIGAR : On a point of order, Sir. கனம் அங்கத்தினர் அவர்கள் "மந்திரி அவர்கள் உண்மையை பேசுகின்றபோது சத்தமிட்டு பேசுவார்" என்று கருத்துபடும்படி சொன்னார்கள். அப்படியானால் மந்திரி அவர்கள் சத்தம் குறைந்து பேசுவதெல்லாம் பொய் என்று நாங்கள் எடுத்துக்கொள்வதா என்பதை சபாநாயகர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.



27th July 1957]

Mr. SPEAKER : I did not understand there was any insinuation. The Hon. the Finance Minister is clever enough to answer these charges.

Sri M KALYANASUNDARAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதிலிருந்து என்ன தெரிகிறது என்றால். . .

Mr. SPEAKER : Never mind about it. Don't bother about it. The hon. Member need not reply to that.

Sri M. KALYANASUNDARAM : . . . சரி அதை விட்டுவிடுகிறேன். இந்த 112 கோடி ரூபாய் அதிகரிக்க வேண்டுமென்ற உத்தரவு அல்லது யோசனை (மரியாதையோடு சொல்லுகிறேன்) அந்த யோசனையை நிறைவேற்றுவதற்கு நமது ராஜ்யசர்க்கார் எவ்வளவு தொகையை பொறுப்பேற்றுஇருக்கிறது என்று எனக்கு தெரியாது. சுமார் 10 அல்லது 12 கோடி ரூபாய் பொறுப்பேற்றிருக்கவேண்டும். இதை நான் உத்தேசமாகத்தான் சொல்லுகிறேன். நிச்சயமாகச் சொல்லவில்லை. அதன்படி பார்த்தால் இந்த ஐந்து வருடத்தில் வருடம் ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் அதிகரிக்கவேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருந்திருக்கவேண்டும். இந்தவிதமான ஒரு நிபந்தனை மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காரை பயமுறுத்தி, அப்படியென்றால் பலாத்காரவழியில் பயமுறுத்தி என்று அர்த்தமல்ல, இந்த வரியை உயர்த்துமாறு நிபந்தனை கொடுத்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. அதற்குரிய ஆதாரங்கள் இருக்கின்றன. எனக்கு உடல் நலம் சரியாக இல்லையாதலால் அதையெல்லாம் நான் இப்போது விவரிக்கப்போவதில்லை. இதை ஒத்துக்கொண்டாலும் இல்லையானாலும் சரி எப்படியும் வரி இவ்விதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது உண்மை. இந்த மாதிரி சில்லறை சில்லறையாக ஒவ்வொரு மசோதாவையும் கொண்டு வந்து அதன் மூலமாக மறைமுகமாக வரியை உயர்த்திக்கொண்டு வருகிறார்கள். இதற்கு முன்னால் நான் அப்போது இங்கு இல்லை, இரண்டு மூன்று மசோதாக்கள் இவ்விதமாக நிறைவேற்றப்பட்டிருப்பதாக பத்திரிகை மூலம் பார்த்தேன். இதற்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவில் "ரௌண்ட் ஆப்" செய்வதற்காக இரண்டு நயா பைஸா என்று உயர்த்தியிருக்கிறார்கள். இவ்விதம் மறைமுகமாக வரியை உயர்த்திக்கொண்டே போகிறார்கள் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். விற்பனை வரியை மாற்றவேண்டும் என்று கிளர்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்ற இந்த சமயத்தில் இம்மாதிரி சிறு சிறு மசோதாக்களை கொண்டுவந்து வரிகளை உயர்த்திக்கொண்டு போவது சரியல்ல என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த சபையின் ஆரம்ப காலத்தில் மந்திரி அவர்கள் பேசும்போது "நாங்கள் இப்பொழுதுதான் பொறுப்பேற்று இருக்கிறோம்." இந்த "ஸேல்ஸ் டாக்ஸ் விதிகளைப் பார்த்தால் அமரத்தின் விழுதுகளை போல் ஒரு விரிவான புஸ்தகமாக இருக்கிறது, ஆகவே இதையெல்லாம் சேர்த்து ஒரு சட்டமாக்கப் போகிறோம்" என்று சொன்னார்கள். இதற்காக ஒரு தனி அதிகாரியை நியமித்திருப்பதாக தெரிகிறது. இப்போது அதன் வேலை, அதன் நிலைமை எந்தவிதத்தில் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. அவருடைய விசாரணையின் தன்மை என்ன ? இப்போது விசாரணை எப்படி இருக்கிறது என்கிற விவரங்கள் எனக்கு தெரியாது. மந்திரி அவர்கள் இதைப்பற்றி இங்கு சொல்லியிருப்பார்கள் என்று நம்புகிறேன். இதுவரை சொல்லியிருக்காவிட்டால் அதை தயவுசெய்து அந்த விவரங்களை தெரிவித்தால் நல்லது என்று அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதா "செலக்ட் கமிட்டிக்கு" வரப்போகிற காரணத்தால் இனியும் இதைப்பற்றி கூடுதலாக பேச சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்புகிறேன். ஆதலால் இதைப்பற்றி இன்னும் கூடுதலாக பேச விரும்பவில்லை. ஆகவே இதை "செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்கிற என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்களானால் நான் திருப்தி அடைவேன் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

Sri K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, இந்த புது சபை கூடிய பிறகு மூன்றாவது தடவையாக விற்பனை வரியில் திருத்தம் 11-10 a.m.

கொண்டுவரப்பட்டுள்ளது. நேற்று முந்திய தினம் நான் பேசும்போது இன்று காரசாரமாக விவாதம் நடந்த இதே சட்டசபையின் 92-வது விதியைப் பற்றித்தான் குறிப்பிட்டேன். துரதிர்ஷ்டவசமாக நான் முன்பு இருந்த திருவிதாங்கூர்-கொச்சி சட்டசபையிலே இப்படி ஒன்று இல்லை. இங்கே இப்படி ஒரு விதி இருப்பது மிக தவருனதாகும், என்று நான் அன்றே சுட்டிக்காட்டினேன். அப்படி துரதிர்ஷ்டவசமாக ஒரு விதி இருப்பதால் தான் இந்த முறையில் இம்மாதிரி நடந்துகொண்டிருக்கிறது. இதை மாற்றி நல்லதொரு முறையில் ஒரு நல்ல, ஒரு சீரிய பாரம்பரியத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அன்று நான் குறிப்பிட்டேன். அதன் அடிப்படையில்தான் சில தினங்களுக்கு முன்பு சட்டசபை விதியில் திருத்தம் கொண்டுவந்தேன். இந்த மசோதாவைப் பொறுத்த மட்டிலே எனக்கு முன்பு பேசிய நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு பொறுக்கு கமிட்டிக்கு அதை அனுப்புவது மிக மிக ஒருநல்ல காரியமாகும் என்று நினைக்கிறேன். சர்க்கார் தரப்பில் அதை ஒத்துக்கொண்டு இருப்பது மிகவும் நல்ல காரியம். இந்த மாதிரி ஒரு மசோதா வரும்போது சாதாரணமாக அங்கத்தினர்களுக்கு எல்லாம் தகுந்த சந்தர்ப்பம் கொடுக்கவேண்டியது மிக மிக அவசியம். நான் நேற்று முந்திய தினம் குறிப்பிடும்போது ஒரு வேளை இனியும் ஒரு திருத்தம் அதி சீக்கிரத்தில் விற்பனை வரிக்கு வரலாம் என்று குறிப்பிட்டேன். ஆனால் அது இன்றே வந்து விடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு வேளை அடுத்த சட்டசபை கூட்டத்தில் மேலும் ஒரு திருத்தம் கொண்டுவரலாம் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இவ்வளவு அவசர அவசரமாக ஒரு திருத்தம் வரப்போகிறது என்று நான் நேற்று பத்திரிகையில் பார்த்தபோதுதான் தெரியும். இன்று காலையில்தான் இந்த மசோதாவின் ஷரத்துக்கள் என் கையில் கிடைத்தது. இப்படி ஒரு குறுகிய கால அளவில் இனிமேலாவது ஒரு திருத்தம் கொண்டுவர மாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த விற்பனை வரி சட்டத்தைப் பொறுத்தமட்டிலே ராஜ்யத்திற்கு ராஜ்யம் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதற்குள்ள பல விதிகள் இருக்கின்றன. நம் மாகாணத்தில் உள்ள விற்பனை பொருள்கள் என்ன? "லாஸ்ட் ஸேல்ஸ் பாயிண்ட்" எப்படி எந்தெந்த வியாபாரிகளை எந்தெந்த தொழில்துறைகளை எப்படி எப்படி பாதிக்கும் என்பதைப் பற்றி எல்லாம் நல்ல முறையில் பேச ஒரு சந்தர்ப்பம் இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவது மூலம் கிடைக்குமென்று நினைக்கிறேன். அந்த முறையில் பொறுக்குக் கமிட்டிக்கு இதை அனுப்புவதை வரவேற்றுக்கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* Sri A. A. RASHEED : Mr. Speaker, Sir, it is a well-known fact that we are earning foreign exchange to the extent of 35 or 40 crores of rupees by the export of hides and skins. In spite of this the Government have brought in a measure by which they are going to levy an additional one per cent sales tax on these. Although it is not going to the cofers of the Madras Government, I wish to state we are already paying two per cent tax to the Madras Government and now we have to pay one per cent more which will go to the Union Government. In addition to these we are already paying 3 per cent commission to foreign buyers, 10 per cent duty on wattle extract and 5 per cent duty on wattle bark. If we take into account all the duties and taxes and commissions, the levy on hides and skins comes to 7 per cent. Will any one buy our stuff if they have to pay so much tax and other things? If we want to earn more foreign exchange our duty must be to try to export more and more. If that is accepted by the Government, they must give more and more incentive to the industry to increase exports. Instead of that, by these levies we are curbing their incentive.





If the Government cannot take away this additional levy, I would request them at least to exempt the tanned skins exported to foreign countries from this levy. By this we will not only get more foreign exchange but also we will give the needed incentive to this industry to increase the exports. That is my view, Sir, in the matter.

Sri V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரி விதிப்பின் மூலமாக, பருத்தி நூலிற்கு விதிக்கப்பட்டு இருப்பதின் காரணமாக கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி கல்யாண சுந்தரம் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று "ஹைட்ஸ் அன்ட் ஸ்கின்ஸ்", தோல் ஷாப்புகளில் உற்பத்தி செய்யக்கூடிய தோல்களின் பேரிலும், உப்புத்தோல்களின் பேரிலும் போடக் கூடிய ஒரு நிலை ஏற்படுமானால் ஏற்கனவே இந்த தோல் மார்க்கெட் வெள்ளையன் காலத்திலிருந்து, லெண்டனிலிருக்கிறது. இன்றுவரையில் அவர்கள் கையில்தான் இருக்கிறது. கமிஷன், "ப்ரோக்கரேஜ்" என்ற பேரில் பலவிதமான வரி ரூபத்திலே பாதிக்கப்பட்டு, சென்னைக்கே மாற்றப்படவேண்டும் என்று சொல்லி வரக் கூடிய இந்த சந்தர்ப்பத்தில் இந்த வரிகளையும் கட்டிக் கொண்டு பல விதத்திலும் பாதிக்கக்கூடிய நிலைமை இருப்பதினால் இந்நாட்டிலே, குறிப்பாக சென்னை ராஜ்யத்திலே வட ஆற்காடு ஜில்லாவில்தான் தோல் ஷாப்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகளின் நிலைமை என்ன என்று பார்க்கும்போது அந்த ஷாப்கள் மூடப்பட்டிருக்கின்றன. அந்த ஷாப்கள் அப்படி மூடப்பட்டு இருப்பதின் காரணமாக முதலாளிகள் மட்டும் பாதிக்கப்படவில்லை. அதன் காரணமாக பெரிவாரியான தொழிலாளர்கள் வேலை இல்லாத நிலைமையில் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள்தான் தோல் ஷாப்புகளில் இன்று அதிகமாக வேலை செய்யக் கூடியவர்கள். ஹரிஜன முன்னேற்றம் என்ற பெயரால், ஹரிஜனங்களை முன்னேற்ற வேண்டும் என்று கோடிக்கணக்கான ரூபாய் ஒரு பக்கத்தில் ஒதுக்கிக் கொண்டு போகக் கூடிய இந்த சந்தர்ப்பத்தில் இதுபோன்ற வரிகளைப் போடுவதின் மூலமாக மேலும தாழ்த்தப்பட்ட மக்களைத்தான் பாதிக்ககூடிய அளவில் இருக்கிறது, இந்த தோலின் பேரில் வரி போடக்கூடிய நிலைமை. ஆகவே இந்த நேரத்தில் விவாதிக்க போதுமான அவகாசம் இல்லாததால் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(The hon. Member Sri P. S. Chinnadurai rose.)

Mr. SPEAKER : You want to speak? You are in the Select Committee, where you can express your views. However, if you want to speak, you can.

Sri P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய தொழில் துறை இலாகாவை நிர்வகிக்கிற அமைச்சர் அவர்கள் மீண்டும் மக்களைப் பாதிக்கிற ஒரு வரிப் பிரேரணையை இந்த சபையின் முன்பு சமர்பிக்க நேர்ந்தது குறித்து நான் உண்மையிலேயே மறுபடியும் எனது ஆழ்ந்த வருத்த உணர்ச்சியை வெளியிட்டுக் கொள்கிறேன். எந்த வரி உயர்வாக இருந்தபோதிலும் விற்பனை வரி சம்பந்தப்பட்ட வரையில் அதனால் உண்மையாகவே இறுதியாக பாதிக்கப் படுகிறவர்கள் மக்கள்தான். இதிலே இந்த மாறுதல் செய்வதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்தபோதாவது கனம் அமைச்சர் அவர்கள் **including coal in all forms** என்ற அந்தப் பொருளைப் பொறுத்த வரையில் இரண்டு சதவிகிதம், முன்பு இருந்ததைப் போலவே, இப்பொழுதும் இரண்டு சத விகிதமாகவே போடுவதற்குரிய ஒரு ஏற்பாட்டை இந்த மசோதாவிலே சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக அதனை அடியோடு இல்லாமல் செய்வதற்காகவோ அல்லது அதைச் சற்று குறைப்பதற்காகவோ ஏற்பாடு செய்யப் பட்டிருக்குமானால், சிறு என்ஜினியரிங் தொழிற்சாலைகள் மூலம் பயன் அடையும் விவசாயிகள் அதைப் பெரிதும் பாராட்டி இருப்பார்கள், என்று சொல்லிக்

[P. S. Chinnadurai] [27th July 1957

கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, Iron and Steel என்ற பகுதி விஷயமாக, அதில் உற்பத்தி செய்கிற பல்வேறு பொருள்கள் மீது விற்பனை வரி விதிக்கப்படுகிறது. நம் ராஜ்யத்தில், "கோல்", "கோக்," "அயர்ன் அண்ட் ஸ்டீல்" இன்று அதிகமாக இல்லை. நாம் அவைகளுக்கு பிற ராஜ்யங்களைத்தான் நம்பியிருக்கிறோம். நம் ராஜ்யத்தின் விவசாயத் தேவைக்கும், சிறிய தொழில்களின் தேவைக்கும் இது மிகவும் அத்தியாவசியமானது. இவைகளால்தான் நமது விவசாயம் வளர்ச்சி அடையவேண்டும். இவைகளால்தான் நம் நாட்டில் சின்னத் தொழில்கள் வளர்ச்சி அடையவேண்டும். இதை உத்தேசித்தாவது அமைச்சர் அவர்கள் பாராட்டத்தக்க மாறுதலை செய்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்குமானால் நன்றாக இருந்திருக்கும் என்பது எனது அபிப்பிராயம். எப்படியும் ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மசோதாவை பொறுக்குக்கமிட்டிக்கு விடவேண்டுமென்று ஒப்புக் கொண்டிருக்கிறபடியால் பொறுக்குக் கமிட்டி இதைப் பற்றி நன்கு ஆலோசனை செய்வதற்கும், உரிய மாறுதல்கள் செய்வதற்கும் வசதி ஏற்படும் என்று நம்புகிறேன். இதை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று இந்த வேளையில் இந்த இடத்தில் ஒப்புக்கொண்டது கண்ணியம் வாய்ந்தது, பெருமை வாய்ந்தது என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறாமல் இருக்க முடியாது. இந்த சந்தர்ப்ப சூழ்நிலையை வைத்துப் பார்க்கும்போது. இதை பொறுக்கு கமிட்டிக்குவிட்ட கனம் அமைச்சரவர்கள் ஒப்புக் கொண்டதற்கு மறுபடியும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI M. J. JAMAL MOIDEEN : Mr. Speaker, Sir, as the Bill has been referred to the Select Committee it will be out of the way for me to say anything now but as the tanning industry has been dragged into the debate, I think, I should clear one or two points before it is referred to the Select Committee.

When the sales tax was originally levied, the Government at that time did appreciate the difficulties of the industry and also the fact that it was an export industry and a good foreign exchange earner. So it was given the facility of single point taxation. It was enjoying that privilege. When the Central Government declared this as an essential article it was done with the view that it should be subjected only to single point taxation and that too it should be subjected to a very small percentage of tax. Now after the Central Government's Inter-State Sales Tax and the Local Sales Tax, it has come in effect to double point or I am not
11-20 a.m. sure, multi-point taxation. When the commodity has a single-point taxation, and that single-point taxation is in one hand, that means the Inter-State taxation. But the State is another hand. If we say the commodity itself should suffer one single-point taxation, then the commodity suffers the Inter-State taxation and it should not suffer again the State taxation. But as the rule stands to-day, there is every possibility that a commodity will suffer more than one taxation at more than one point.

As far as the industry is concerned, the taxation appears to be not on the sales point or purchase point, but it is on the industry point. Because, as long as I even as a tanner buy raw skins, on the purchase of raw skins I do not come under the operation of sales tax. Only when I put the skins into the soaks, I am liable for the tax. Therefore, the industry is liable to taxation and not at the point of sales or purchase. So, I hope the Government will consider these matters while the Bill is in the Select Committee stage or even after that stage.



27th July 1957] [Sri M. J. Jamal Moideen]

Another point I wish to refer to is this : there is 2 per cent taxation on skins and hides produced and tanned in the State and not on the skins and hides which are imported from outside the State, tanned and exported from here; they suffer only one per cent taxation. The skins and hides which are produced in the State, tanned and sold locally or exported suffer 2 per cent taxation. Well, that is a little too much. Whether they are sold here or they are exported, they suffer taxation because tax is paid on the point of soak and not on the point of sale or purchase. It is a hard case on the industry itself. As my hon. Friend pointed out, of course, this industry is manned wholly by backward classes and most Scheduled Castes. I hope the Government will bear all these things in mind when they are reviewing the Act and they will exempt the industry from the operation of sales tax. Because, as it stands only 10 per cent of total production would come under the purview of the 2 per cent taxation and the rest will not and that 10 per cent will yield at the most about Rs. 10 lakhs per annum. For this 10 lakhs or so I do not think it will be good to submit the industry to this taxation, especially when we have to depend upon foreign market and when the price is fixed by the world market. For it is a world commodity and we have nothing to fix the price. We have to sell at the price fixed. Thus, the tax is paid by the tanner or the industry.

With these few words, I welcome the Government referring the Bill to Select Committee. Thank you very much.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, விற்பனை வரி சட்டத்தை ஆய்வுக் குழுவுக்கு விடவேண்டுமென்ற திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற ஆளும் கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியோடு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இதை ஆய்வுக் குழுவுக்கு விடுவதன் நோக்கம், இன்றைய தினம் விற்பனை வரி சட்டமானது மிகப் பெரிய சிக்கலான சட்டமாக வளர்ந்திருக்கிறது என்பதும், இந்த சிக்கல்களைக் குறைத்து இதன் அடிப்படையில் சில தவறுகள் இருப்பதை உண்மையிலேயே சிந்திக்கப்படவேண்டியது என்பதும் ஆகும். இந்த விற்பனை வரியானது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு காமதேனுவாகவோ அல்லது கற்பக விருட்சமாகவோ காணப்பட்டாலும் பொது மக்களைப் பொறுத்த வரையில் அது அவர்களை தாக்கிக் கொண்டிருக்கிற வரியாக, பல்வேறு கட்டங்களில் பாதிக்கக்கூடிய ஒரு வரியாக இருக்கிறது என்பதை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனால் இன்றைய தினம் உலகத்தில் பொதுவாக பொருளாதாரக் கருத்து, விற்பனை வரி மூலமாக எல்லா மக்களும் கொஞ்சம் அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் முறையில் செயல்படுகிறது என்பதன் கருத்து என்பதை அமைச்சரவர்கள் சில நாட்களுக்கு முன்பு தெரிவித்தார்கள். பொது மக்கள் ஒவ்வொருவருக்கும் ஆட்சியில் பங்கு இருக்கவேண்டுமென்று சொன்னால், பொது மக்கள் ஆட்சிக்கு வரி கொடுப்பதில் பங்கு இருக்கவேண்டுமென்று சொன்னால், பொது மக்கள் ஒவ்வொருவரிடத்திலும் விற்பனை வரிதான் தரவேண்டுமென்று சொல்லுவது சரியான முறையென்று நான் கருதவில்லை. எல்லா மக்களும் வரி செலுத்தத்தான் வேண்டும். அவரவர்களுக்கு அளவான முறையில் வரி செலுத்தும்படியாக இருக்கவேண்டும். தாங்கக்கூடியவர்கள் பேரில் இந்த அரசாங்கம் அதிக வரியை விதிக்கட்டும். தாங்கக்கூடியவர்கள் எவரெவர்கள் என்பதை இந்த அரசாங்கம் ஆராய்ந்து பார்க்கட்டும். தாங்கக்கூடியவர்களா, இல்லையா என்ற அடிப்படை கருத்து இல்லாது, வழியில் போகிறவர்கள் எல்லாம் வரி கட்டுங்கள், கடையில் சாமான்கள் வாங்குகிறவர்கள் எல்லாம் வரி தரவேண்டும் என்று சொல்லுவது ஒரு

[Sri K. Anbazhagan] [27th July 1957

நல்ல முறையல்ல. நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், இதனால்தான் இந்தச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எல்லா வியாபாரிகளும், ஏறத்தாழ 10,000 ரூபாய்க்கு மேல் வரவு செலவுள்ள அத்தனைபேர்களும், அத்தனை வியாபாரிகளும் வரி கட்ட வேண்டுமென்று, அந்த விற்பனை வரியை வசூலித்துக்கட்டவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டதிலிருந்துதான் இந்தச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. பல வியாபாரிகள் சரியான கணக்கு வைத்துக் கொள்ளாமல் குழப்பவும், அந்த வியாபாரிகள் வரி வாங்குகிறார்கள் என்ற அடிப்படையை உணர்ந்து பார்த்து, அவர்களிடத்திலே வரி வாங்குவதில் தவறு இருக்கும் என்ற தனிப்பட்ட கருத்தைப் பயன்படுத்தி, அப்படி தனிப்பட்ட கருத்து பயன்பட இடமிருப்பதால், 15,000 என்றிருந்தால் இன்னும் ஐயாயிரத்திற்கு வரி செலுத்தவேண்டுமென்று அந்த அதிகாரி சொல்லவும், அதனால் சிக்கல்கள் பெருகிக் கொண்டேயிருக்கிறது. சட்டங்கள் வரி வசூலிப்பதற்கு இயற்றப்படுகிற நேரத்தில் அதில் எந்த அளவு ஓட்டைகள் இருக்கிறதால் பெரிய தீமைதான் ஏற்பட முடியும். சிக்கலான பிரச்னைகளை வளர்ப்பதற்கு அது பயன்படுமே யொழிய அது சீராக அரசாங்கத்திற்கு நன்மை செய்ய பயன்படாது. இந்த விற்பனை வரி சட்டம் மிகப் பெரிய சிக்கல் அளிக்கக்கூடியதாயிருக்கிறது. நான் உதாரணமாகச் சொல்வேன். இன்றைய தினம் தையல் தொழிலாளர்களில் அதிக வருமானம் வருகிற தையல் தொழிலாளர்களிடம் கூட விற்பனை வரி என்ற பெயரால் வரி வசூலிக்கப்படுகிறது. அவர்களிடம் வாங்குகிற வரியை இன்கம்டாக்ஸ் என்ற பெயரால் வாங்கினால் தவறு என்று நான் சொல்லமாட்டேன். அல்லது தொழில் வரி என்ற பெயரால் வாங்கினால் அது தவறு என்று சொல்லமாட்டேன். அல்லது வேறு ஏதாவது ஒரு பெயர் வைத்து வரி வாங்கினால் அது தவறு என்று சொல்லமாட்டேன். தொழில் செய்கிறவர்கள் லாபம் செய்கிறார்கள். அதனால் அவர்களுக்கும் வியாபார வரி இந்த நாட்டிலே தரப்படுகிறது. அதே போலத்தான் கைத்தறித் துணிகளை தையல் மெஷினில் கைக்குட்டை தைத்தால் அதற்கும் விற்பனை வரி இருக்கிறது என்று அந்தத் துறையில் இருப்பவர் சொன்னார்கள். அதே போல கருணைக் கிழங்கிடம் கருணை காட்டப்படவில்லை. ஏனென்று கேட்டால், அது ஏன் அழுகிப் போகாமல் இருக்கிறது, அழுகாத கிழங்கிற்கு ஏன் வரி விலக்கு என்று கேட்கிறார்கள். இந்த நிலைமைகளில் பார்க்கும்போது அதில் சிக்கல்கள் வளர்ந்துகொண்டுதான் வருகிறது.

நேற்றோ, அதற்கு முன்னாளோ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், பாலுக்குள்ள விற்பனை வரியை போக்குகிறேன் என்று. பாலுக்கு, பக்கத்தில் இருக்கிற பூனைக்கு அக்கரை இருப்பதுபோல், பாலுக்கு வரி விதித்துவிட்டார்களே என்று மக்கள் கூக்குரல்கள் எழுப்புவார்கள் என்று அதன் மீதுள்ள வரியைப் போக்க அரசாங்கத்திற்கு நல்லெண்ணம் ஏற்பட்டதற்கு அரசாங்கத்தைப் பாராட்டினாலும்கூட அந்த முறையிலே சில வரிகளை விலக்குவதற்கு அரசாங்கத்தார் முன் வந்தாலும்கூட இதனால் ஏற்படுகிற சிக்கலை வளர்த்துக்கொள்ளாமல் இருக்க அதை முழு அளவுக்கு பரிசீலிக்கிற வரையில், முழு அளவுக்கு மாற்றாமல், 1-9/16 என்று இருந்ததை 2 ஆக மாற்றியோ, அல்லது அது போன்ற சிறு திருத்தங்கள் செய்துகொண்டிருப்பது அந்தச் சிக்கல்களை தீர்ப்பதற்கான முறை ஆகாது. ஆகவே இப்படிப்பட்ட பொருக்குக் குழு அல்லது ஆய்வுக் குழு ஆராய்வதற்கு, ஒரு முனையில் விற்பனை வரி போடுவதா, பல கட்டங்களில் வசூல் செய்யப்படவேண்டுமா என்பதையும், கொள் முதல் செய்கிறவர்களுக்கு தரவேண்டுமா, அல்லது வரி விலக்கு அளிக்கவேண்டுமா, என்ற இப்படிப்பட்ட பல துறைகளில் ஆராய்ந்து ஆயுவுக் குழு அதைப் பயன்படுத்திக்கொள்ளும்படியான அந்த நிலைமையில் நன்றாக சிந்திக்க வேண்டும். அதற்குப் பின்னர் வியாபாரிகளையும் கலந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு இப்பொழுது நியமிக்கப்பட்டுள்ள கனம் லோகநாதன் அவர்களுக்கு நல்ல கருத்துக்களைக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் உண்மையிலேயே விற்பனை வரி முறைக்கு அதிகமான வழி காட்டுவதாக இருககும். இடைக்காலத்தில் விற்பனை வரியை அமுல் நடத்தாமல் இருப்பது அரசாங்கத்தினுடைய கடமை என்பதை நான் சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.



27th July 1957]

SRI M. SELVARAJ: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டியதாக இருப்பதால் குறிப்பாக எண்ணை வித்துக்கள் சம்பந்தமாக ஒரு பிரச்னையை இந்த இடத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். குறிப்பாக மணிலா பயிர்களுக்கு 'பர்சேஸ் பாய்ண்ட்' ல் விற்பனை வரி வசூலித்துக் கொண்டு வருகிறார்கள். அதை 1939-ம் வருஷத்திலிருந்து வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இப்பொழுதுள்ள நிலைமை வேறு. இந்த மணிலாப் பயிர்கள் வெள்ளைக்கார கம்பெனி மூலமாக வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இப்படி பத்து வருஷங்களுக்கு முன்பாக நடைபெற்று வந்தது. இப்படி பயிர்கள் ஏற்றுமதியாகிவிட்டால் அதிலிருந்து அவர்கள் வரி கொடுக்க தப்பித்துக்கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் கொள் முதலிலேயே வரியை விதிக்க வேண்டும் என்று அப்பொழுது இருந்த முதல் மந்திரி ராஜாஜி அவர்கள் விதித்தார். அந்த நிலைமை இப்பொழுது மாறிவிட்டது. குறைந்தது 99 சத விகிதம் உள் நாட்டிலேயே மில்களிலும் செக்குகளிலும் எண்ணையாக ஆட்டப்படுகிறது. அதற்காக உள் நாட்டு வியாபாரிகள் எண்ணையாக ஆக்கி விடுவதால் ரிபேட் பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஏற்கெனவே வரியை வாங்கி விடுவதால் அந்த ரிபேட் வாங்குவதில் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ரிபேட்டைக் கழித்துக்கொடுத்தாலும் அதனால் பல தொல்லைகள் வியாபாரிகளுக்கு ஏற்படுகின்றன. ஆகவே இம்மாதிரி தொல்லைகளுக்கு வியாபாரிகளை உள்ளாக்காமல் இருக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். வரி கட்டும்போது எண்ணை வித்துக்களுக்கும் வரி கட்டும்படியான நிலைமை ஏற்படுகிறது. உபரியான பயிர்கள் உள்நாட்டிலேயே செலவு செய்யப்படுகிறது. அதனால் மணிலாப் பயிருக்கு வரியை விற்பனை கட்டத்திலேயே வசூலிக்க வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி அங்கே இதைப் பற்றி தீர ஆலோசனை செய்து அதன் பிறகு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வியாபாரிகளிடத்திலிருந்தும் அசோசியேஷன்களிலிருந்தும் மகஜர்கள் வந்திருக்கின்றன. அவைகளையும் நல்ல முறையில் பரிசீலனை செய்து அதன் பிறகு நல்ல முறையில் விற்பனை வரியை வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதையும் விற்பனை கட்டத்திலேயே வசூலிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, I support the motion to refer this Bill to a Select Committee. Both the Government and the public are well aware that there has been a great deal of violation of the provisions of the Act. There has also been a lot of abuse and also so much of complaint on the part of the authorities with regard to the collection of the sales tax. There are many mistakes in the old Act but anyhow the Government have recently appointed an Economic expert in Dr. Loganathan, who is an authority on Economics, to go into the whole question of sales tax. The Government would have done well if they had waited till they had received the report of the expert, Dr. Loganathan. In this connection, I must say that the Central Sales Tax has to be regularized.

There is also another point involved in this matter. Instead of bringing in legislations like this day-in and day-out, the Government would have done well if they could have brought a very comprehensive legislation for an important matter like this. Any way, as the matter has been referred to the Select Committee, I have nothing to say except to support the motion before the House. I am sure the Government will seriously consider the points I have

பிக்கப்பட்டது. இதை ஒரு விசேஷ கமிட்டி விசாரணை செய்ய வேண்டும் என்று சொன்னதால் அதையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டு இதையும் ஒரு விசேஷ கமிட்டிக்கு அனுப்புவதற்கும் ஒத்துக்கொண்டிருக்கிறோம். அதைப் பரிசீலனை செய்து அதற்குள் மீண்டும் சட்டசபை கூடாவிட்டால் இந்த சட்டத்தை அவசர சட்டமாக பிரகடனம் செய்ய வேண்டியதாக இருக்கும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கனம் கலியாணசுந்தரம் சொன்னார், இப்பொழுது இந்த சட்டத்தையெல்லாம் நன்றாக பரிசீலனை செய்யவேண்டும் என்று. இதைப்பற்றி விசாரணை நடத்த அதிகாரி ஒருவரை நியமிக்கப்போவதாக பத்திரிகையில் படித்ததாகச் சொன்னார்கள் என்றும் சொன்னார். இதை யெல்லாம் சட்டசபையில் சொல்லப்பட்டதாக தெரியவில்லை என்றும் சொன்னார். சட்டசபையில் விற்பனை வரி சம்பந்தமாக விரிவான விவாதம் நடந்த போது என்ன விசாரணை செய்யப்போகிறோம், என்ன என்ன காரியங்களைச் செய்யப் போகிறோம், ஸ்ரீ லோகநாதனுடைய பொறுப்பு என்ன, என்பதைப்பற்றி யெல்லாம் கூறப்பட்டது. அந்த முறையில் இந்தச் சட்டத்தை நன்றாக பரிசீலனை செய்து அதில் இருக்கிற நுணுக்கங்களையெல்லாம் பார்த்து ஒரு சிறப்பான வழியை அவர் சொல்வார். அது மாத்திரம் அல்ல, இந்நாட்டில் இருக்கிற வியாபாரிகள் அனைவரும் இதை ஆதரிக்கிறார்கள். அவ்வாறு இந்த நியமனத்தைக் குறித்து தங்களுடைய சந்தோஷத்தைத் தெரிவித்து பல கடிதங்களை சர்க்காருக்கும் எழுதி இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக இப்படிப்பட்ட இரண்டு மூன்று சட்டங்கள் இந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் வந்து விட்டன என்று கனம் கனரயாளர் வருத்தப்பட்டார். முதலில் ஏப்ரல் மாதம் முதல் தேதி புது நாணயம் வந்தவுடன் அதற்காக புது சட்டம் இயற்ற வேண்டிய கடமை ஏற்பட்டது. அந்த சட்டத்தை நாம் இயற்றுகிறபோது புது நாணயச் சட்டத்தின்படி வரியை Round off "ரவுண்டு ஆப்" செய்கிற முறையில் அதிகப்படுத்தியிருந்தால் இந்த இரண்டாவது சட்டம் வந்திருக்காது. ஜனநாயக முறையில் பட்ஜெட்டில் விவாதம் செய்யவேண்டும் என்று நாங்கள் நினைக்க தவறினால் இப்பொழுது குற்றச் சாட்டு கேட்கும்படியாக இருக்கிறது, இரண்டு மூன்று சட்டங்களைக் கொண்டு வந்தோம் என்று. 1–9/16 என்பதை இரண்டாக உயர்த்துவதற்கு புது நாணயச் சட்டமே அந்த அதிகாரத்தைக் கொடுத்தது. அந்த புது நாணயச் சட்டத்தின்படி செய்திருந்தால் அது தவறாக இருந்திருக்காது. அப்பொழுது யாரும் கோபித்துக்கொண்டிருக்க மாட்டார்கள். அதன் மூலம் ஒரு கோடி ரூபாய் சர்க்காருக்கு வரும்படி வரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்று இருப்பதால் அதை நன்றாக பரிசீலனை செய்ய சட்டசபைக்குக் கொண்டு வந்து விவாதிக்கவேண்டும் என்று தள்ளிவைத்து பின்னால் இந்த சட்டத்தை இந்த சட்டசபைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம், ஏதோ சர்க்கார் இதில் பொருள் ஈட்டிவிடவேண்டும் என்ற காரணத்திற்காக அல்ல. நம்முடைய சட்டமானது அமுலில் இருக்கவேண்டுமானால், நாளைக்கு செல்லுபடியாகாது என்ற நிலைமை ஏற்படாமலிருக்க வேண்டுமானால், மத்திய சட்டத்திற்குகந்த அளவில், அந்த முறையில்தான் இதைத் திருத்தி அமைக்க வேண்டும். அதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவந்திருக்கிறது.

இதில் ஒரு மாறுதல் இருக்கிறதென்பதை கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சுட்டிக் காண்பித்தார்கள். இப்பொழுது நாம் நூலுக்கு அரை சதவிகிதம் விற்பனை வரி விதித்து வருகிறோம். இதை இனி ஒரு சதவிகிதமாக்க வேண்டுமென்று உத்தேசிக்கின்றோம். இப்பொழுது நூல் விற்பவர்களிடமிருந்து லைசன்சு கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இனி, அவர்களிடமிருந்து லைசன்சு கட்டணம் வசூல் செய்யப் போவதில்லை. லைசன்சு கட்டணம் மூலமாக எவ்வளவு ரூபாய் கிடைக்கும், அரை சதவிகிதம் விற்பனைவரியைக் கூட்டுவது மூலமாக எவ்வளவு ரூபாய் கிடைக்கும் என்பதையெல்லாம் கணக்குப் போட்டுப் புள்ளி விவரம் கணக்கெடுத்துச் சொல்வதற்கு இப்பொழுது முடியவில்லை. இனி அரை சதவிகிதம் விற்பனை வரியைக் கூட்டுவதினால், வியாபாரிகள் நூல் விலையை

[Sri R. Venkataraman] [27th July 1957

அதிகப்படுத்திவிடுவார்கள் என்று சொன்னால், லைசென்சு பீஸ் கொடுத்த போதும் விலையைக் கூட்டித்தானே வைத்திருக்கவேண்டும்? கூட்டாதிருக்க மாட்டார்கள் அல்லவா? அந்த முறையிலே லைசன்சு கட்டணத்தை ரத்து செய்து, அதற்குப் பதிலாக விற்பனை வரியை ஒரு சதவிகிதம் பண்ணுவதில் ஏதோ ஏறத்தாழ இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதுவும் அதுவும் சரிக்கட்டிப் போகும் என்று சொல்வதிற்கில்லை என்றாலும், ஏதோ திடீரென்று ஒரு பெரிய விலை உயர்வு நாலுக்கு ஏற்பட்டுவிடும் என்று தயவு செய்து கைத்தறி நெசவாளர்களைப் பயமுறுத்திவிடவேண்டாம் என்று நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, தோல் விற்பனைக்கு விற்பனை வரி விதிப்பது குறித்து ஸ்ரீ ரஷீத் அவர்களும், ஸ்ரீ ஜமால் மொய்தீன் அவர்களும் பேசினார்கள். தோலுக்கு விற்பனை வரி போடுவது பல முறை முயற்சி செய்து பார்த்து, இப்பொழுதிருக்கும் முறையில் விதி. 16-ஐப் பார்த்தால், முதலில் தோல் பதனிடப்படாதபோது வரி கொடுத்துவிட்டு, பிறகு அதை பதனிட்டு அதாவது "dress" செய்து விற்கும்போது, அப்பொழுது முதலில் கொடுத்த விற்பனை வரியின் அளவுக்கு "ரிபேட்" கொடுக்கப்படுகிறது. ஆகவே, இதில் அதிகப்படியான, இரட்டிப்பு வரி விதிப்பதாகவில்லை.

அதே போல்தான், கனம் அங்கத்தினர் ஒருவர் மணிலாப் பயிறு பற்றிச் சொன்னார்கள். முதலில் மணிலாப் பயிறு வாங்குகிறபோது கொடுக்கிற வரியின் அளவுக்கு, பின்னால் அந்த மணிலாப் பயிரை எண்ணெய்ப் பொருளாக மாற்றி விற்கிறபோது, முதலில் கொடுத்த வரியின் அளவுக்கு "ரிபேட்" கொடுத்து வந்தோம். இப்பொழுதிருக்கும் சட்டத்தைப் பார்த்தால், இனி அந்த முறையையும் நீக்கி, கடைசி விற்பனை (last sale)-இன் போது விற்பனை வரி வாங்கப்படும் என்று அந்த விற்பனை வரி அவர்கள் எந்த விதத்தில் வேண்டுமென்று விரும்பினார்களோ அந்த முறையில் திருத்தி யமைக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் ஒரு விஷயத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இது உள்நாட்டில் விதிக்கும் விற்பனை வரி பற்றியது அல்ல. ராஜ்யங்களுக்கிடையே நடக்கிற வியாபாரத்தினைப் (Inter-State Sales Tax) பற்றியது. இது எதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதென்றால், மூலப் பொருள், அத்தியாவசியமான பொருள், ஏதாவது ஒரு ராஜ்யத்தின் கையில் இருக்குமானால், அவர்கள் பிற ராஜ்யத்தில் இருக்கும் வியாபாரத்தின் முறையிலே அல்லது தங்களுக்கு லாபம் கிடைக்க வேண்டுமென்ற முறையில் அதிகமாக வரியை விதித்துவிடப் போகிறார்கள், அதனால் வேறு ராஜ்யங்களுக்கு இந்தப் பண்டம் விலை அதிகமாகப் போய், வாங்கும் ராஜ்யங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதைத் தடை செய்வதற்காகப் போடப்பட்ட சட்டம் இது. அந்த முறையிலே பார்க்கும்போது, இந்த வரி வேறு ராஜ்ய மக்களை எந்த விதத்திலும் பாதிக்காது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். Inter-State Sales மூலமாக, நம் ராஜ்யத்தை விட்டு வெளி ராஜ்யத்திற்குச் செல்வதால், அந்த ராஜ்யத்தில் இருக்கின்றவர்கள் 2 சதவிகிதம்தான் விற்பனை வரி கொடுக்க போகின்றார்கள். நமது ராஜ்யத்தில் இருக்கின்றவர்கள் கொடுக்கப் போவதில்லை. பிற ராஜ்யங்களிலிருந்து நமக்கு வரும்போது, அவர்களிடத்திலும் ஏகபோக உரிமை (Monopoly) இருக்கிற காரணத்திற்காக 5 சதவிகிதம், 10 சதவிகிதம் என்று போட்டுவிடாமல் இருப்பதற்காக 2 சதவிகிதத்துக்குமேல் அவர்கள் வாங்கக் கூடாது என்ற திட்டத்தை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த முறையில் பெரிய நஷ்டம் இல்லை.

சட்டம் சிக்கல் என்பதை ஒத்துக்கொள்கிறேன். கடைசி விற்பனை மீது வரியை எப்படி வாங்கப் போகிறோம் என்பதில் இன்னும் சிக்கல் அதிகமாகும் என்று அஞ்சுகிறோம். இருந்தாலும், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் நமது ராஜ்யத்தில் சரியான விற்பனை வரிச் சட்டம் அமுலில் இருக்க முடியும் என்ற காரணத்தால் இதைக் கொண்டு வந்தோம். பொறுக்குக் கமிட்டி விசாரணை செய்து அவர்கள் முடிவு கட்டும்படியாக நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.



27th July 1957]

MR. SPEAKER: The question is—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1957, be referred to a Select Committee consisting of the following hon. Members:—

1. The Hon. Sri R. Venkataraman.
2. ,, C. Subramaniam.
3. Sri P. G. Karuthiruman.
4. ,, R. Srinivasa Iyer.
5. ,, K. S. G. Haja Sheriff.
6. Srimathi T. N. Anandanayaki.
7. Sri R. Subramaniam.
8. ,, R. Krishnasami Naidu.
9. ,, V. S. Manickasundaram.
10. ,, G. Annamalai Muthuraja.
11. ,, K. Ramachandran.
12. ,, K. Sattanatha Karayalar.
13. ,, M. P. Sarathi.
14. ,, M. Kalyanasundaram.
15. ,, P. S. Chinnadurai."

The motion was put and carried.

MR. SPEAKER: Under Rule 98 (1) of the Assembly Rules, I nominate the Hon. Sri C. Subramaniam as the Chairman of the Committee.

## (2) THE MADRAS TENANTS AND RYOTS PROTECTION (AMENDMENT) BILL, 1957.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I beg to introduce the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill [a], 1957, and move—

"That the Bill be taken into consideration."

சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவினுடைய கருத்து, இப்பொழுது இருக்கிற சட்டத்தை இன்னும் இரண்டு வருஷங்களுக்கு நீடித்து வைக்க வேண்டும் என்பதுதான். அதனால், பழைய எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தினால் பாதிக்கப்படாத எஸ்டேட்டுகளிலும், 1936-ம் வருஷத்திய இனும் எஸ்டேட்டுகள் என்று சொல்லப்படுகிற அந்த எஸ்டேட்டுகளிலும் இருக்கிற ரயத்துக்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு இது தடுப்புச் சட்டம். மற்ற ரயத்துவாரிப் பிரதேசங்களிலுள்ள ரயத்துக்களுக்கு வேறு சட்டம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலங்களிலே இருக்கிறவர்களுக்கு இந்தச் சட்டம் தான். ஆகையால், இன்னும் இரண்டு வருஷங்கள் இதை நீடிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. எல்லா கனம் அங்கத்தினர்களும் இதை ஒத்துக்கொள்வார்கள் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. அப்படியே ஒத்துக்கொள்ளும்படியாகவும் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1957, be taken into consideration."

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 23rd July 1957.

[27th July 1957

Sri M. KALYANASUNDARAM : சபாநாயகர் அவர்களே, இம்மாதிரி மசோதா கொண்டுவருவது கடந்த பத்து வருஷமாக, அதாவது 1947 முதல் 1957 வரைக்கும் நடந்து வந்திருக்கக்கூடிய ஒரு விஷயம். முதலிலே ஒவ்வொரு வருஷமாக நீடித்து, பிறகு இரண்டு இரண்டு வருஷமாக நீடித்து வேலையைச் சுலபமாக்கிக் கொண்டார். இன்னும் எத்தனை வருஷங்களுக்கு இதை நீடிக்கப் போகின்றார்கள் என்பதைப்பற்றி நாங்கள் பல முறை சபையில் கேட்டிருக்கிறோம். இன்று காலையிலேகூட, 1936-ம் வருஷ இனாம்களை யெல்லாம் எடுக்க வேண்டும் என்று சிலர் பேசினார்கள். ஆனால், ஒரு அங்கத்தினர் மட்டும், அந்த இனாம்களை ஏன் எடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஒரு வேளை, அவர் ஜில்லாவில் இந்த இனாம் பிரச்னை அதிகமாக இல்லை என்று நினைக்கிறேன். இனாம்தார்களில் 100-க்கு 90 பேர்கள் ஏழைக் குடியானவர்களாக இருக்கக் கூடியவர்கள். நூற்றுக்கு 12 பேர்கள் அந்தக் குடியானவர்கள் சண்டை போட்டுக் கொண்டு நிலங்களைப் பயிரிடாமல் விட்டு வைத்திருக்கிறார்கள். இந்த உண்மையைப் பலமுறை வற்புறுத்தியிருக்கிறோம். பெரிய ஜமீந்தார்கள், மிட்டாதார்களுடைய எஸ்டேட்டுகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளும் விஷயமாக துரிதமாக நடவடிக்கை எடுத்தார்கள். இந்த இனாம்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் 100-க்கு 90 பேர் சிறு சிறு இனாம்தார்கள் ; கஷ்டப்படக் கூடியவர்கள். அவர்களுக்கு ஏக்கர் விஸ்தீரணம் இருக்கலாம். ஐந்து வருஷங்களுக்கு ஒரு தடவை ஏதோ மழை பெய்தால்தான் அவைகளில் பயிரிட முடியும். இவர்களுக்கு நிலம் இருந்தாலும், குடியானவர்கள் எப்படி கஷ்டமான நிலையில் இருக்கிறார்களோ அப்படித்தான் இவர்களும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கையில், இன்னும் இந்தப் பிரச்னையை நீடித்து வைக்கக் கூடாது.

மந்திரி அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தின்படியே, 1936-ம் வருஷத்திய இனாம்கள் மட்டும் 1,600 இருக்கின்றன. மைனர் இனாம்கள் என்ற வகையில் சிறு சிறு இனாம்கள் ஏராளமாக இருக்கின்றன. புள்ளி விவரத்தோடு நான் பேசுவதற்கு நேரம் இல்லை. ரயத்துவாரி பகுதிகளுக்கும் இனாம் பகுதிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இங்கே சிக்கல் அதிகம். இனாம் பகுதியில் ஒற்றுமைக் குறைவு, உற்பத்திக்குத் தடை போன்ற பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்னையில் சீக்கிரமாக முடிவு காண வேண்டியிருக்கிறது. இப்பொழுது இரண்டு வருஷ அவகாசம் கேட்கிறார்கள். கொடுக்க ஆட்சேபனை இல்லை. அதைப்பற்றி குறை சொல்லவில்லை. இரண்டு வருஷம் என்பதற்குப் பதிலாக ஒரு வருஷத்திற்கு நீடித்தால் போதும் என்று நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கலாம். அவசியம் இல்லை என்று நினைத்துத் திருத்தம் கொடுக்கவில்லை. மூன்று மாதத்திற்குள்ளேயே தகுந்த சட்டம் கொண்டுவந்து, இந்த இனாம்களை ஒழித்துக்கட்டி, ரயத்துவாரிப் பட்டா செய்து, இனாம்தார்களுக்கும் நஷ்ட ஈட்டைக் கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்தால்தான் இந்தப் பிரச்னையை நியாயமாகத் தீர்க்க முடியும். இதை ஆலோசிக்கும் சர்க்கார் ரயத்துக்களிடமிருந்து காலணாக் கூட நஷ்டயீடு வாங்கக் கூடாது. இனாம்தார்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்குப் போதிய வசதிகளை அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டியதுபோல, அவர்களுக்கு தொழிலை நடத்துவதற்கும் வசதிகளும் அவசியமான நஷ்டயீடும் கொடுத்து, இனாம்களுக்கு முடிவுகட்டி அந்த நிலங்களை ரயத்துக்களுக்குப் பட்டா செய்வதற்கு அரசாங்கம் சீக்கிரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விஷயத்தை மூன்று முறைகள் சொல்லியிருக்கிறேன். இதை இப்போது மீண்டும் வற்புறுத்தி, இந்த முறையும் நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்துகொண்டு, இந்த மசோதாவை நான் ஆட்சேபிக்க வில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri K. RAMACHANDRAN : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா அதன் மூலச் சட்டத்தின் ஆயுளை மேலும் இரண்டு வருஷங்களுக்கு நீடிக்க வேண்டும் என்பதை நான் ஆதரிப்பதுடன், இன்றுள்ள நிலைமையைப் பார்க்கும்போது, இரண்டு வருஷங்களுக்கு மட்டுமல்லாமல் 1936-ம் வருஷத்திய இனாம் நிலங்களை யெல்லாம் எடுக்கும் வரையிலும்



27th July 1957] [Sri K. Ramachandran]

இந்தச் சட்டத்தின் ஆயுளை அப்போதைக்கப்போது நீடிக்க வேண்டியது அவசியம் என்று தெரிகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த நிலங்களெல்லாம் எடுக்கப்படும் வரையிலும் கால வரையறையின்றி இந்தச் சட்டம் நீடிக்கப்பட வேண்டும் என்றுதான் நான் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சட்டத்தை நாம் நீடித்துக்கொண்டே போகிறோம். சட்டம் எப்படி அமுலில் இருக்கிறது (working of the Act) என்பதை நாம் அடிக்கடி பரிசீலனை செய்து, அதனால் ஏற்படக்கூடிய குற்றங்களையும் குறைகளையும் நீக்குவதற்காக, சட்டத்திலுள்ள தவறுகளை நிவர்த்திக்கும் வகையில் அதைத் திருத்த வேண்டியது அவசியம் என்பது நாம் சாதாரணமாக உணரவேண்டிய ஒரு விஷயம். Tenants and Ryots Protection Act ஆனது ரயத்துக்களைப் பாதுகாக்கும் சட்டம் என்று சொல்லப்பட்டிருந்தாலும் உண்மையில் இந்தச் சட்டம் ஜமீன், இனாம் நிலங்களின் ரயத்துக்களுக்கு அதிகமாகப் பயன்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலங்கள் சம்பந்தமாக, ரயத்துக்களை, அதாவது உழுபவர்களை பொறுத்த வரையில் ஒரு முக்கியமான பிரச்னை இருக்கிறது. தகராறுகளில், ரயத்துக்களை இனாம்தார்கள் வெளியேற்ற முடியாது என்ற நியாயத்தைப் பெறுவதற்கு, கோர்ட்டுக்குச் சென்று விஷயங்களை நிரூபிப்பது கஷ்டமாக இருக்கிறது. சாதாரணமாக, இனாம் நிலங்களின் ரயத்துக்களிடத்தில், அவர்களுடைய உரிமைகளை நிரூபிக்கும் தஸ்தாவேஜிகள் அதிகமாக இருக்காது. அம்மாதிரியாக நிலங்களின் பாத்தியதையை அனுபவித்து வரும் ரயத்துக்கள் தாங்கள்தான் அவைகளின் உடைமையாளர்கள் என்பதை எப்படி நிரூபிக்க முடியும் ? சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கும் கணக்குகளின் மூலமாகவும் ஒவ்வொரு நிலத்திலும் யார் விவசாயம் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. சாதாரணமாக, உண்மையாக நிலத்தில் உழுது பயிரிட்டு விவசாயம் செய்து நிலத்தின் பாத்தியதையை அனுபவிக்காத, ஜமீந்தாரின் பெயரோ, இனாம்தாரின் பெயரோதான் இன்றைக்குக் கணக்குகளில் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, தாங்கள்தான் உழுபவர்கள் என்பதற்கு எந்த விதமான ரிக்கார்டும் ரயத்துக்களுக்கு இல்லாத நிலைமையிலும், சர்க்காரின் கணக்குகளும் அவர்களுக்கு உதவி செய்ய முடியாத நிலைமையிலும், இப்போது இந்தச் சட்டம் சரியான நிலைமையில் அமல் நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டம் பயனளிக்காத நிலைமையில் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ரயத்துக்களிடமிருந்து எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன என்பதையும், இந்தச் சட்டத்தினால் உண்மையில் என்ன பயன் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அடிக்கடி அறிந்து, சட்டத்தினால் ஏற்படக்கூடிய சிக்கல்களை நீக்கும் முறையில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது மாதிரியான நல்ல சட்டங்களை அரசாங்கம் அடிக்கடி பரிசீலனை செய்து நல்ல திருத்தங்களைக் கொண்டுவந்தால்தான், சட்டங்களை எந்த நோக்கத்தோடு இயற்றுகிறோமோ அந்த நோக்கம் நிறைவேறும் என்றும், மக்களும் பயனடைவார்கள் என்றும் சொல்லிக்கொண்டு, சட்டத்தின ஆயுள் நீடிப்பை நான் ஆதரிக்கிறேன்.

* Sri R. SRINIVASA IYER : Sir, while all members who have spoken so far support this Bill and welcome it, I join with them, but at the same time when other representations had been made with reference to minor inams, the 1936 inams, and ryots in those inams, I desire to make one or two observations. We have got several Acts for protecting the tenants as also the interests of the landholders. Until the question of ceiling of land holdings (which is a knotty problem as admitted by all inside the House and also outside) is settled once for all, we have got to continue protection to tenants. At the same time, we have got to protect the interest of small landholders and minor inamdars, till they are abolished and till compensation is paid to them, and till some

method is evolved to protect them and make them live the life which they ought to live. To protect the tenants in Estates Act XXIV of 1949 was passed. Before that there was the ordinance. To protect the interest of the tenants and ryots—the tenants in abolished inams and zamindaris, we have got Act XXVI of 1948. To protect the interest of the tenants in inams not taken over, Act XXX of 1947 is there. There is absolutely no connection between the landholder and the ryot except where the question of private land comes in, with reference to which also a recent enactment has been passed and rules have been framed empowering Collector to decide what are private lands, and if no application is made to decide what are private lands, the lands are deemed to be automatically ryoti lands. Act XXX of 1947 will apply to these lands. So far as the minor inams are concerned, these are part inams, which are of very small extent in each village. Even here the landholders are not now allowed to personally cultivate their lands. In the interests of the well being of all concerned (whether they are landholders or ryots) so that they may live amicably and lead a happy life, I appeal to the Government, in any legislation that is brought forward, to protect the small inamdars also and to allow a minimum acreage for personal cultivation and also to see that they get the minimum income to make their families live, though not very happily, at least an ordinary, equable life. It is stated in the Statement of Objects and Reasons—

'This does not, however, protect the ryots of ryoti lands in the estates against the sale of their holdings for arrears of rent'.

This does not seem to be quite appropriate, because in estates which have not been taken over, the ryots are protected. The Estates Land Act has been rendered inoperative in estates which have been taken over. Act XXVI of 1948 is not applicable to estates governed by Act XXX of 1947, because the Government are the landholders. They collect the rents under the Act XXX of 1947 and the rules framed thereunder. The rent payable to the landholder is fixed by the Collector. There is the provision for appeal. There is the provision for a further appeal to the Board of Revenue. The collection is made under the Revenue Recovery Act of 1864. No sale of a holding comes in the way of the provisions of Act XXIV of 1949, which is now sought to be extended for two years more. Let them be there, innocuous as they are, not very useful as they are, except perhaps in minor inams which do not come under the purview of the estates.

Therefore I commend this Bill to this House and request the House to pass it without any further discussion.

(Sri M. Jagannathan in the Chair).

**Sri S. M. ANNAMALAI**: கனம் தலைவர் அவர்களே, இந்தப் பயிரிடுவோர் பாதுகாப்புச் சட்டமானது உண்மையிலேயே மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதானே ஒழிய, பயிரிடுபவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது அல்ல. எந்த எந்த நிலத்தில் யார் யார் பயிரிடுகிறார்கள் என்ற கணக்குகள் இல்லாமலும், பயிரிட்டு வரும் விவசாயிகளுக்கு அனுகூலமான





எந்த ரிக்கார்டும் இல்லாமலும் இருக்கும் நிலைமையில், அவர்களை இந்தச் சட்டத்தின் மூலம் மிராசுதார்கள் வெளியேற்றி வருகிறார்கள். நான் முன்பே கூறியுள்ளதுபோல், மிராசுதார்கள் 444-வது சட்டத்தை உபயோகித்து, அந்த உழவர்கள் தங்களுடைய நிலங்களில் 'ட்ரெஸ்பாஸ்' செய்திருக்கிறார்கள்—துராக்கிருதமாக நிலங்களுக்குள் புகுந்திருக்கிறார்கள்—என்று கூறி அந்த உழவர்களை வெளியேற்றுகிறார்கள். ஆகையினால் இந்தச் சட்டம் பயிரிடுவோரை வெளியேற்றும் மிராசுதார்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறதே தவிர, பயிரிடுவோருக்குப் பாதுகாப்பாக இல்லை. இதைத் தடுப்பதற்காக, எந்த எந்த நிலங்களில் யார் யார் பயிரிடுகிறார்கள், என்ற அடிப்படைப் புள்ளி விவரத்தை சென்னை அரசியலார் கொடுக்க வேண்டும் என்று நான் முன்பே மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

அப்படித் திருத்தங்கள் கொண்டுவராமல் இந்தச் சட்டத்தை மேலும் மேலும் நீடித்துக் கொண்டே போவதில் உண்மையில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கிடைப்பதைவிட பாதகம்தான் ஏற்படும். "உங்களுக்கு வேண்டிய பாதுகாப்பைத் தேடிக் கொள்ளுங்கள்" என மிராசுதார்களுக்கு அறிவிப்பு செய்யத்தான் இந்தச் சட்டம் பயன்படும். உண்மையில் எந்த எந்த நிலங்களில் அவர்கள் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுக்கும் முறையில் இந்தச் சட்டம் அமையவில்லை. நானூற்றி எழுபத்தேழாவது செக்ஷன்படி மிராசுதார்கள் தங்களை நிலத்தைவிட்டு அப்புறப்படுத்த நீதி மன்றங்களுக்குப் போகாதவாறு சென்னை அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கும் என எண்ணி வாழ்ந்த விவசாயிகளுக்கு இது ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. நேரிடையாக அதைச் செய்யாமல் மறை முகமாக இந்தச் சட்டத்தை இன்னும் இரண்டாண்டுள் நீடிப்பதன் பயன் அதுவாகத்தான் இருக்கும். இப்போது மின்சாரம் நாட்டில் வளர்ந்து வரும்போது மின்சார பம்பு செட்களை எல்லாம் பிடுங்கி எறிந்துவிட்டு, விவசாயிகளையும் நிலத்தைவிட்டு அப்புறப்படுத்த இந்தச் சட்டம் பயன்படப் போகிறது என்ற காரணத்திற்காக இந்தச் சட்டத்தை இன்னும் இரண்டாண்டு நீடிக்க வேண்டும் எனச் சட்டம் கொண்டுவருவதைவிட இதை அப்படியே நீடிக்காமல் இருந்துவிடலாம் என்று சொல்லிக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு என் வார்த்தை முடித்துக்கொள்கிறேன்.

**Srimathi T. N. ANANDANAYAKI**: கனம் சபாநாயாகர் அவர்களே, இப்படி திருத்த மசோதாக்களைக் கொண்டுவரும்போது, ஆளும் கட்சியினர் அங்கத்தினர்களுக்கு அதிக நேரம் கொடுக்காமல், திடீர் திடீர் என்று அத்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வருவது மிகவும் சங்கடமாக இருக்கிறது. அங்கத்தினர்கள் அதைப்பற்றி நன்கு வாசித்தறிந்து விவாதத்தில் பங்கு கொள்ள இயலாமல் போகிறது என்பதாக ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அதை முழுமனதுடன் நான் வரவேற்கிறேன். அதுமட்டுமல்லாமல் மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இங்கு திருத்த மசோதாக்கள் வரும்போது மூலச் சட்டத்தில் எந்த எந்த ஷரத்துக்களைத் திருத்துகிறார்களோ, அந்த அந்த ஷரத்துக்களையும், திருத்தத்தையும் மாத்திரம் அச்சடித்து இப்போது மேசையின் மேல் வைக்கிறார்கள். அதனால் இந்தச் சட்ட சபையில் விவாதம் வரும்போது எப்படி சட்டத்திற்கும், விவாதத்திற்குமே சம்பந்தம் இல்லாமல் போய்விடுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குச் சற்று முன்பாக கனம் தொழில் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் மாகாணத்திற்கு மாகாணம் நடைபெறுகின்ற வர்த்தகத்தின் மேல் விற்பனை வரி விதிக்கும் மசோதாவைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த மசோதாவின் மேல் பேசும்போது கனம் அங்கத்தினர் அன்பழகன் நம்முடைய ராஜ்யத்தில் கருணைக்கிழங்குக்கு வரி விதிப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். இப்படி அவர்கள் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல், திருத்த மசோதாவின் மீது பேசுவது . . .

SRI A. GOVINDASAMY: "ஆன் எ பாய்ண்ட் அப் ஆர்டர்". "மெட்ராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ்" திருத்த மசோதாவின்மீது பேசும்போது திரு. அன்பழகன் கருணைக்கிழங்கைப்பற்றிக் குறிப்பிட்டதாக, "மெட்ராஸ் டெனன்ட்ஸ் அண்டு ரயட்ஸ் ப்ரொடெக்ஷன் பில்" லின் (திருத்த மசோதா) மீது கனம் அங்கத்தினர் பேசுவது, இதற்கும் அவருடைய பேச்சுக்கும் பொருத்தம் உண்டா என்று கேட்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: **The hon. Member need not be in a hurry. I shall come to his point.** அதே முறையில்தான் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் எஸ்டேட் ரயத்துகளைப்பற்றிய மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு அங்கத்தினர் ரயத்துவாரி "ரயட்டு" களைப்பற்றிப் பேசினார். இதை அவருடைய குற்றமாக எடுத்துக் காட்ட நான் பேச முன்வரவில்லை. திருத்த மசோதா ஒன்றாக இருக்க, அங்கத்தினர்கள் அது சம்பந்தப்படாத வேறு வாதங்களை இந்தச் சபையில் எழுப்புவதற்கு முக்கியமான காரணமே மூலச் சட்டம், அங்கத்தினர்களுக்கு திருத்த மசோதா வரும்போது கொடுக்கப்படுவது இல்லை. இங்குள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் முழுச் சட்டம் கொடுப்பது என்பது இயலாத காரியமாக இருந்தாலும் திருத்த மசோதாக்கள் வரும்போது அதுபற்றிய மூலச் சட்டத்தை ஒவ்வொரு "ரோ" வுக்குமாவது ஒன்றாக வைக்கலாம். அதைப் படித்துப் பார்த்து இந்தத் திருத்தம் எந்தக் காரணத்திற்காக எந்த ஷரத்துக்குக் கொண்டுவரப்படுகிறது என்பதை அங்கத்தினர்கள் பூர்ணமாக உணர்ந்து அறிந்து கொண்டால்தான் சபை விவாதம் மிகவும் உயர்ந்த வகையில் அமையும். இந்தச் சட்ட "காப்பிகள்" லைப்ரரியில் இருக்கின்றன எனச் சொல்ல முடியாது. லைப்ரரியில் இருக்கும் காப்பிகளும் மிகவும் குறைவு. நானே இரண்டு மூன்று முறை சில சட்டங்களை வாங்கிப் பார்க்க வேண்டுமென்று போய்க் கேட்டாலும் அது எனக்குக் கிடைக்கவில்லை. சதா சர்வ காலமும் சட்டங்களோடு மன்றாடி, சட்டங்களோடு உழன்று கொண்டிருக்கும் வக்கீல்களும்கூட நாளைக்கு ஒரு கேஸ் கோர்ட்டில் எடுத்துக் கொள்ளப்படுகிறது என்றால், அந்தக் கேஸ் சம்பந்தமான சட்டப் புத்தகத்தை முதல் நாள் படித்துக் கொண்டு போக வேண்டும். ஒரு முறையாவது முதல் நாள் திருப்பிப் பார்த்தால்தான் மறு நாள் நீதி மன்றத்திலே வழக்காட முடியும். அவர்களிடமே திடீரென்று ஒரு சட்டத்தைப்பற்றிக் கேட்டால் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. ஆகையால் சட்டம் செய்கின்ற நாம் சட்டத்தைப்பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றால், சபையில் உள்ளவர்கள் தங்கள் கருத்துக்களை நன்றாகத் தெரிவித்து, அதிலுள்ள குறைபாடுகளை அகற்றி, நீதி மன்றத்திலே அது செல்லத் தக்கதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைய வேண்டுமென்றால் அங்கத்தினர்கள் அதைப் படித்தறிய போதிய அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். ஆகவே இனிமேலாவது எந்தத் திருத்த மசோதாக்களைக் கொண்டு வருவதாக இருந்தாலும் அந்தத் திருத்த மசோதா சம்பந்தப்பட்ட முழுச் சட்டத்தையும் மேசையின் மேல் வைத்து, அதைப் படித்துணரப் போதிய காலவரையும் அளித்து மசோதாவை சபையில் விவாதித்து நிறைவேற்ற தக்க நடவடிக்கையும், முன்னேற்பாடும் செய்ய வேண்டும் என்பதாகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: I welcome the hon. Member Srimathi T. N. Ananthanayaki sitting on the Treasury Bench. (Laughter). I have to state that I am told by my Secretariat that sufficient copies of the Act have not been received by the Secretariat itself. Therefore, the hon. Member would be well-advised to fight this case out with the Government Departments themselves. In that effort, my wholehearted and complete co-operation will be available.





SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, I entirely agree with the sentiments expressed by hon. Members in this House and I do not know why the comprehensive legislation promised by the Government has not so far been brought in. It has been delayed unduly. There have been so many evictions. Further, so far as my district is concerned, many of the inams have not been taken over. Complaints were made two years ago about this and no action has been taken so far with the result many evictions have taken place. I would, therefore, request the Hon. Minister to bring in a comprehensive legislation as early as possible and see that the whole thing is pushed through quickly. That is my submission.

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் சபாநாயகர் அவர்களே, பெண் அங்கத்தினர் ஒருவர் இந்த மசோதாவின் விவாதத்தில் கலந்து கொண்டதில் இருந்து இந்த விவாதம் ரொம்ப ருசிகரமாக ஆகிவிட்டது. ஆனால் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஏதோ இருக்கிற சட்டத்திலேயே சில குறைபாடுகள் இருக்கின்றன என சுட்டிக் காட்டினார்கள். சில கஷ்டங்கள் இருக்கின்றன எனவும் சொன்னார்கள், ஆனால் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்த மசோதா இருக்கிற சட்டத்தில் எந்த விதமான மாறுதலையும் செய்யவில்லை. அந்தச் சட்டம் குற்றங்குறை இல்லாமல் இருக்கிறதோ, குறைபாடு உடையதாக இருக்கிறதோ அதைப் பற்றி இங்கே பேச்சே இல்லை. அந்த சட்டத்தை அப்படியே இன்னும் இரண்டாண்டு நீடிக்க வேண்டும் என்பதுதான் இந்த மசோதா. இதில் வேறு விவாதம் இல்லை. ஆகையால் இதற்காக சட்டத்தை கொண்டுவந்து வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதாக பெண் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருக்கிறதை அப்படியே நீடிக்க வேண்டியதை தவிர வேறு உள் அடங்கிய விவாதம் ஒன்றும் இல்லை. வேறு மசோதாக்களுக்கு மூலச் சட்டம் தேவை என்றாலும் இந்த மசோதா சம்பந்தப்பட்ட வரையில் தேவை இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

